ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் விடயமொன்று விற்கப்படுகையில் அல்லது அதன் பாவனை அல்லது விற்பனையின் மூலம் எதிர்கால பொருளாதார நன்மைகளை வழங்காது என எதிர்பார்க்கப்படும் போது அது அங்கீகரிப்பிலிருந்தும் நீக்கப்படுகின்றது. அச்சொத்தின் அங்கீகரிப்பு நீக்கப்படுவதன் மூலம் உருவாகின்ற ஏதாவது இலாபம் அல்லது நட்டம் (தேறிய விற்பனைப் பெறுகைக்கும் சொத்தின் எடுத்துச் செல்லும் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாகக் கணிக்கப்பட்டது) சொத்தின் அங்கீகரிப்பு நீக்கப்பட்ட ஆண்டின் வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படுகிறது. பொருத்தமானவிடத்து சொத்தின் எஞ்சிய பெறுமதிகள், பயனுள்ள ஆயுட் காலங்கள் மற்றும் முறைகள் கிரமமாக மீளாய்வு செய்யப்படுகின்றன.

மூலதன நடப்பு வேலைகள் கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன. இவை கட்டிடங்கள், பாரிய பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் முறைமை அபிவிருத்திகளின் கட்டுமானத்தின் போது நேரடியாக ஏற்படும் மூலதனத்தன்மை கொண்ட செலவுகளாகவும் மூலதனவாக்கத்தை எதிர்நோக்கியிருப்பனவாகவும் காணப்படுகின்றன.

### 5.22 குத்தகைகள்

ஒப்பந்தமொன்றை ஆரம்பிக்கும் போது வங்கியானது அவ்வொப்பந்தம் குத்தகையா அல்லது அவ்வொப்பந்தம் குத்தகையைக் கொண்டிருக்கின்றதா என்பதை மதிப்பிடுகின்றது. ஒரு ஒப்பந்தமானது, வெகுமதி ஒன்றிற்கு பரிமாற்றாக, குறிப்பிட்ட சொத்தொன்றின் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான உரிமையை குறிப்பிட்ட காலப்பகுதிக்குக் கொண்டிருக்குமாயின், அது குத்தகையாக அல்லது குத்தகையைக் கொண்டிருப்பதாகக் கருதப்படும். ஒரு ஒப்பந்தமானது குறிப்பிட்ட சொத்தொன்றின் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான உரிமையைக் கொண்டிருக்கின்றதா என்பதனை மதிப்பிடுவதற்கு, வங்கியானது ப.நி.அ.நி 16இலுள்ள குத்தகையின் வரைவிலக்கணத்தைப் பயன்படுத்துகின்றது.

#### குத்தகையாளராக வங்கி செயற்படுதல்

வங்கியானது சொத்துப் பாவனை உரிமை மற்றும் குத்தகைப் பொறுப்பினை குத்தகையை ஆரம்பிக்கும் திகதியில் அங்கீகரிக்கிறது. சொத்துப் பாவனை உரிமையானது ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுவதுடன் இது ஆரம்பத் திகதியில் அல்லது அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஏதாவது குத்தகைக் கொடுப்பனவிற்கான குத்தகைப் பொறுப்புச் சீராக்கத்தின் ஆரம்பத் தொகையுடன் ஏற்பட்ட ஏதாவது ஆரம்ப நேரடிச் செலவுகள் மற்றும் அகற்றுவதற்கான செலவின் மதிப்பீட்டைக் கூட்டி காணி அல்லது அலுவலகப் பணிமனைக்கு மேற்கொள்ளப்பட்ட மேம்படுத்தல்களை நீக்கிய தொகையை உள்ளடக்கியிருக்கும்.

சொத்துப் பாவனை உரிமையானது பின்னர், ஆரம்பத் திகதியிலிருந்து குத்தகைக் கால முடிவு வரைக்கும் நேர்கோட்டு முறையைப் பயன்படுத்தி பெறுமானத்தேய்வு செய்யப்படும். மேலும், சொத்துப் பாவனை உரிமையானது காலக்கிரமத்தில் பெறுமதியிழப்பு நட்டங்களினால், ஏதுமிருப்பின், குறைவதுடன் குத்தகைப் பொறுப்பின் சில மீள்மதிப்பீடுகளுக்காகச் சீராக்கப்படுகிறது.

ஆரம்பத்தில் பொறுப்பானது, ஆரம்பத் திகதியில் செலுத்தப்படாத குத்தகைக் கொடுப்பனவுகளை குத்தகையில் குறிப்பிடப்பட்டிருக்கும் வட்டி வீதத்தினால், அல்லது அந்த வீதம் தீர்மானிக்கப்பட முடியாதவிடத்து, வங்கியின் அதிகரித்துச் செல்லும் கடன்பாட்டு வீதத்தினால் கழிவிட்ட தற்போதைய பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

குத்தகை பொறுப்பின் அளவீட்டில் உள்ளடக்கப்பட்ட குத்தகைக் கொடுப்பனவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்:

- தவிர்க்க முடியாத நிலையான கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக நிலையான கொடுப்பனவுகள்;
- சுட்டெண் ஒன்றில் அல்லது ஒரு வீதத்தில் தங்கியிருக்கும் மாறுபடக்கூடிய குத்தகைக் கொடுப்பனவுகள் ஆரம்பத் திகதியிலுள்ளவாறான சுட்டெண் அல்லது வீதத்தைப் பயன்படுத்தி ஆரம்பத்தில் அளவிடப்படுகின்றன;
- எஞ்சியிருக்கும் பெறுமதி உத்தரவாதத்தின் கீழ் செலுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகைகள்; அத்துடன்
- செயற்படுத்துவதற்கு உறுதியான போதுமான ஆதாரங்களை வங்கி கொண்டிருக்கும் போது கொள்வனவுத் தெரிவின் கீழ் செயற்பாட்டு விலை, நீட்டிப்பதற்குரிய தெரிவை செயற்படுத்துவதற்கு உறுதியான போதுமான ஆதாரங்களை வங்கி கொண்டிருக்கும் போது தெரிவுக்குரிய புதுப்பித்தல் காலப்பகுதியிலான குத்தகைக் கொடுப்பனவுகள் மற்றும் வங்கி உரிய காலத்திற்கு முன்னர் முடிவுறுத்தாதென உறுதியாக நம்புவதற்குரிய போதுமான ஆதாரங்கள் இருந்தாலொழிய, குத்தகையினை உரிய காலத்திற்கு முன்னர் முடிவுறுத்துவதற்கான தண்டப் பணம்

குத்தகைப் பொறுப்பானது பயனுறு வட்டி முறையைப் பயன்படுத்தி பதிவழிக்கப்பட்ட செலவில் அளவிடப்படுகின்றது. இது, சுட்டெண் அல்லது வீதத்திலான மாற்றத்தினால் எதிர்காலக் குத்தகைக் கொடுப்பனவுகளில் மாற்றமொன்று ஏற்படுகையில், எஞ்சிய பெறுமதி உத்தரவாதத்தின் கீழ் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகை தொடர்பில் வங்கியின் மதிப்பீட்டில் மாற்றமொன்று ஏற்படுகையில், வங்கி நீட்டிப்புத் தெரிவைச் செயற்படுத்துவது தொடர்பில், அதன் மதிப்பீட்டை மாற்றுகையில் மற்றும் உரிய காலத்திற்கு முன்னர் முடிவுறுத்துவதற்கான தெரிவிற்கான தண்டப்பணம் தொடர்பிலான வங்கியின் மதிப்பீடுகளில் மாற்றங்கள் ஏற்படுகையில் அல்லது தவிர்க்க முடியாத நிலையான குத்தகைக் கொடுப்பனவுகள் திருத்தப்படுகையில் மீள அளவிடப்படுகின்றது.

குத்தகைப் பொறுப்பு இம்முறையில் மீளஅளவிடப்படும் போது, இதற்கு ஒத்திசைவான சீராக்கமானது சொத்துப் பாவனை உரிமையின் கொண்டு செல்லும் பெறுமதிக்கு மேற்கொள்ளப்படுகின்றது, அல்லது சொத்துப் பாவனை உரிமை கொண்டு செல்லும் பெறுமதி பூச்சியத்திற்குக் குறைவடைந்திருப்பின் வருமானக் கூற்றில் பதியப்படுகிறது.

வங்கியானது நிதியியல் நிலைமைக் கூற்றில் சொத்துப் பாவனை உரிமையினை “ஆதனம், பொறி மற்றும் உபகரணம்” (குறிப்பு 20) இனுள்ளும் குத்தகைப் பொறுப்புக்களை “நானாவிதப் பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள்” (குறிப்பு 33) இனுள்ளும் சமர்ப்பிக்கிறது.

### 5.23 அருவச் சொத்துக்கள்

கணனி வன்பொருள்களில் ஒருங்கிணைந்த பகுதியாக உள்ளடங்காதுள்ள கணனி மென்பொருட்கள் அருவச் சொத்துக்களாகக் காட்டப்பட்டு கிரயத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. ஆரம்ப அங்கீகரிப்பைத் தொடர்ந்து இவ்வருவச் சொத்துக்கள் கிரயத்திலிருந்து ஒன்றுசேர்ந்த பதிவழிப்பு மற்றும் ஒன்றுசேர்ந்த பெறுமதியிழப்பு கழிக்கப்பட்ட தொகையில் கொண்டு செல்லப்படுகின்றன. கணணி மென்பொருள் சொத்துக்கள் மீதான தொடர்ந்துவரும் செலவுகள், அவை குறித்த சொத்துடன் தொடர்புடைய எதிர்காலப் பொருளாதார நன்மைகளை அதிகரித்தால் மட்டுமே மூலதனமாக்கப்படுகின்றன. ஏனைய அனைத்துச் செலவுகளும் ஏற்படும்போது செலவாக அங்கீகரிக்கப்படுகின்றன.

பதிவழிப்பானது, சொத்து பாவனைக்குரியதாகவுள்ள திகதியிலிருந்து 4 ஆண்டு பயனுள்ள ஆயுட்காலத்திற்கு நேர்கோட்டு முறையில் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுவதுடன் இம்முறையானது சொத்துடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மைகளின் எதிர்கால நுகர்வுக் கோலத்தை மிகச் சரியாகப் பிரதிபலிக்கின்றது.

### 5.24 ஏனைய சொத்துக்கள்

ஏனைய சொத்துக்கள் எதிர்பார்க்கப்பட்ட தேறத்தக்க பெறுமதியில் முன்கொண்டு செல்லப்படுகின்றன.

### 5.25 நிதியியல்லாச் சொத்துக்களின் பெறுமதியிழப்பு

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் வங்கி அதன் நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதியிழந்திருக்கலாம் என்பதற்கான அறிகுறிகள் உள்ளதா என்பதைத் தீர்மானிப்பதற்காக அவற்றின் முன்கொண்டு

செல்லும் பெறுமதியை மீளாய்வு செய்கின்றது. அத்தகைய அறிகுறிகள் காணப்படின், சொத்துக்களின் மீளப் பெறக்கூடிய தொகையின் மதிப்பீடொன்றை வங்கி மேற்கொள்கின்றது.

பெறுமதியிழப்பு பரீட்சிப்பிற்காக, ஏனைய சொத்துக்களின் காசுப்பாய்ச்சல்களினால் பெருமளவிற்குப் பாதிக்கப்படாத, தொடர்ச்சியான பாவனையின் மூலம் காசுப்பாய்ச்சல்களை உருவாக்கக்கூடிய சொத்துக்களின் மிகச் சிறிய வகைக்குள் சொத்துக்கள் ஒன்று திரட்டப்பட்டன.

ஒரு சொத்தின் "மீளப்பெறக்கூடிய பெறுமதி" என்பது அதன் "பயன்பாட்டிலுள்ள பெறுமதி" மற்றும் அதன் சீர்மதிப்புப் பெறுமதியிலிருந்து விற்பதற்கான செலவைக் கழித்த பெறுமதி என்பவற்றில் கூடிய பெறுமதியாகும். பயன்பாட்டிலுள்ள பெறுமதியானது பணத்தின் காலப்பெறுமதியின் தற்போதைய சந்தை மதிப்பீடு மற்றும் சொத்துக்கு உரித்தான இடர்நேர்வுகளைப் பிரதிபலிக்கும் வரிக்கு முன்னரான கழிவு வீதம் ஒன்றைப் பயன்படுத்தி தற்போதைய பெறுமதிக்கு கழிவிடப்பட்ட மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச்சல்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

ஒரு சொத்தின் கொண்டு செல்லல் பெறுமதி அதன் மீளப்பெறத்தக்க தொகையை விஞ்சும் சந்தர்ப்பத்தில் பெறுமதியிழப்பு நட்டம் அங்கீகரிக்கப்படுகின்றது.

பெறுமதியிழப்பு நட்டமானது, சொத்தின் கொண்டு செல்லும் பெறுமதியானது, பெறுமதியிழப்பு நட்டம் அங்கீகரிக்கப்படாத சந்தர்ப்பத்தில், தேய்மானம் அல்லது பெறுமதியிழப்பு நீங்கலாக தீர்மானித்திருக்கக்கூடிய கொண்டு செல்லும் பெறுமதியை விஞ்சாத அளவுக்கு மாத்திரமே மறுதலையாக்கப்படுகின்றது.

### 5.26 ஏற்பாடுகள்

கடந்த கால நிகழ்வொன்றின் விளைவாக, வங்கி தற்போதைய கடப்பாடொன்றினை (சட்ட ரீதியான அல்லது அமைப்பு ரீதியான) கொண்டிருந்து அக்கடப்பாட்டைத் தீர்ப்பதற்காக பொருளாதார நன்மைகளை உள்ளடக்கியிருக்கும் வளங்களின் வெளிப்பாய்ச்சல் தேவைப்படுவதுடன், இக்கடப்பாட்டுத் தொகையை நம்பத் தகுந்த மதிப்பீடொன்று மூலம் அறிய முடியுமாயின் ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. ஏற்பாடொன்று மீளளிக்கப்படும் என வங்கி எதிர்பார்க்குமிடத்து அந்த மீளளிப்பு இறுதியில் நிச்சயமாக ஏற்படும் வேளையில் மட்டும் தனியான சொத்தாக அங்கீகரிக்கப்படுகின்றது.

### 5.27 சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் அதனை வைத்திருப்பவரின் சார்பாக வங்கி மீதான கோரலைக் கொண்டிருப்பதனைக் காட்டுகின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்துக்கான பொறுப்பு நிதியியல் நிலைமைக் கூற்றில் முகப்புப் பெறுமதியில் பதியப்பட்டுள்ளது.

### 5.28 நிர்ணயிக்கப்பட்ட நன்மைத்திட்டங்கள்

நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்களானவை, நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பு திட்டங்கள் தவிர்ந்த ஏனைய தொழிலுக்கு பின்னரான நன்மைத் திட்டங்களாகும். ஓய்வூதியம், விதவைகள் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியம், விதுரர் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியம், இளைப்பாற்றுப் பணிக்கொடை மற்றும் வேலைக் காலத்திற்குப் பின்னரான மருத்துவ நலன்கள் போன்ற நிர்ணயிக்கப்பட்ட நன்மைகள் திட்டங்களை வங்கி தொழிற்படுத்துகின்றது. முதல் மூன்று திட்டங்களையும் பொறுத்தவரையில் வங்கியும் தகுதியுள்ள பயனாளிகளும் தனித்தனியாக நிர்வகிக்கப்படும் நிதியங்களுக்குப் பங்களிப்பினைச் செய்கின்றனர்.

நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் நன்மைகளின் கிரயமானது எறிவு செய்யப்பட்ட அலகு கொடுகடன் ஆயுட்கால மதிப்பீட்டு முறையை உபயோகித்து ஒவ்வொரு திட்டத்திற்கும் தனித்தனியாகத் தீர்மானிக்கப்படுகின்றது. நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள் தொடர்பாக வங்கியின் கடப்பாடு, ஒவ்வொரு திட்டத்திற்கும் தனித்தனியாக, ஊழியர்கள் அவர்களுடைய தற்போதைய மற்றும் முன்னைய காலங்களில் வழங்கிய பணிகளுக்கு பிரதிபலனாக ஈட்டிய எதிர்கால நன்மைகளை மதிப்பீடு செய்வதன் மூலம் கணிக்கப்படுவதுடன், அந்நன்மை அதன் தற்போதைய மதிப்பினை நிர்ணயம் செய்வதற்காக கழிவீடு செய்யப்படுகின்றது. அங்கீகரிக்கப்படாத ஏதாவது கடந்த காலச் பணி செலவுகள் மற்றும் திட்டச் சொத்துக்களின் சீர்மதிப்புப் பெறுமதி என்பன கழிக்கப்படும். கழிவீடு செய்யப்படும் வீதமானது, சராசரி மீதமுள்ள பணிக் காலத்திற்கு ஏறத்தாழ முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட அரச பிணையங்களின் மதிப்பீட்டுத் திகதியன்றுள்ள விளைவு வீதமாகும். குறிப்பு 32இல் வெளிப்படுத்தப்பட்டுள்ள அனைத்து முதன்மையான ஆயுட்கால மதிப்பீட்டு அநுமானங்களும் வருடாந்தம் திருத்தப்படும்.

### 5.29 நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள்

ஊழியர்கள், ஏற்புடைய நியதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கிணங்க ஊழியர் சேம நிதியப் பங்களிப்புக்களுக்கும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புக்களுக்கும் தகுதியுடையவர்களாவர். வங்கியானது ஊழியர்களின் மொத்தச் சம்பளத்தில் ஊழியர் சேம நிதியத்திற்கு 24 சதவீதத்தினையும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3 சதவீதத்தினையும் முறையே பங்களிப்புச் செய்கிறது. இவை தனித்தனியாக நிருவகிக்கப்பட்டு வரும் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களாகும்.

நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களின் பங்களிப்பிற்கான கடப்பாடுகள், வருமானக் கூற்றில் அவை ஏற்படும் போது செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றன.

### 5.30 கொடைகள்

கொடைகள் (பெறப்படும் என்பதற்கும் அத்துடன் அவற்றுடன் இணைந்த நிபந்தனைகள் ஏதுமிருப்பின் அவை இணங்கியொழுகப்படும் என்பதற்குமான உறுதிப்பாடு இருக்குமிடத்து) அவற்றின் சீர்மதிப்புப் பெறுமதியில் அங்கீகரிக்கப்பட்டு, பங்குரிமை மூலதனத்தின் கீழ் காட்டப்படும். கொடைகள் செலவின விடயங்களுடன் தொடர்பானதாக இருக்கும் பொழுது, ஒழுங்குமுறையானதொரு அடிப்படையில் இழப்பீடு செய்வதற்கெனக் கருதப்பட்ட செலவினங்களுக்கு அவற்றை ஈடுசெய்வதற்குத் தேவையான காலப்பகுதிக்கு வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும். கொடைகள் சொத்தொன்றுடன் தொடர்பானதாக இருக்குமிடத்து, சீர்மதிப்புப் பெறுமதி பிற்போடப்பட்ட அரச கொடைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு ஏற்புடைய சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக் காலம் வரை, ஏற்புடைய சொத்தின் தேய்மானக் கொள்கையுடன் இசைந்த விதத்தில் ஒழுங்குமுறையான அடிப்படையில் வருமானக்கூற்றுக்கு விடுவிக்கப்படும்.

### 5.31 எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்

எதிர்பாரா பொறுப்புக்களானவை, நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிகழ்காலக் கடப்பாடுகளின் மூலம் மட்டும் உறுதி செய்யப்படுகின்ற சாத்தியமான கடப்பாடுகளாகக் காணப்படுவதுடன், இங்கு எதிர்காலப் பொருளாதார நன்மைகளின் மாற்றல் நிச்சயமற்றதாக அல்லது நம்பத்தகுந்த முறையில் அளவிடமுடியாததாகக் காணப்படுகின்றது. நிதியியல் நிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்படாத படுகடன்களின் அனைத்து உத்தரவாதங்கள், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் ஏனைய கடப்பாடுகள் என்பன எதிர்பாராத பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளாக உரிய தலைப்புகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. தேவைப்படுமிடத்து அவ்வாறான தொகைகள் மிகச்சிறந்த மதிப்பீடுகளில் அளவிடப்படுகின்றன.

### வருமானக்கூற்று மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று

### 5.32 வருமானங்களும் செலவினங்களும்

வங்கிக்குப் பொருளாதார நன்மைகளைக் கொண்டு வரக்கூடிய சாத்தியம் காணப்பட்டு அவ்வருமானத்தினை நம்பகமான முறையில் அளவிடக்கூடியதாகவுள்ள போது வருமானமானது அங்கீகரிக்கப்படுகின்றது.

மேற்கொள்ளப்பட்ட செலவிற்கும் வருமானத்தின் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் வருவாய்க்குமிடையிலான நேரடி இணைப்பொன்றின் அடிப்படையில் வருமானக்கூற்றில் செலவுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. வியாபாரத்தைக் கொண்டு நடத்துவது தொடர்பாகவும் ஆதனம், பொறி, உபகரணங்களை வினைத்திறனுள்ள விதத்தில் பேணுவதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட அனைத்துச் செலவினங்களும் ஆண்டிற்கான பெறுபேற்றினைக் கணிக்கும் போது வருமானத்தில் கழிக்கப்படுகின்றன.

வருமானத்தையும் செலவினத்தையும் அங்கீகரிப்பதற்கு முன்னர் பின்வரும் குறித்துரைக்கப்பட்ட பிரமாணங்களும் நிறைவேற்றப்பட வேண்டும்:

**5.32.1 வட்டி வருமானம் மற்றும் செலவினங்கள்**

சேகரித்தல் ஐயத்திற்கிடமில்லாதவிடத்து உண்மைக் கொள்வனவு விலையை அடிப்படையாகக் கொண்ட பயன்தரு விளைவு முறையைப் பயன்படுத்தி அட்டுறு அடிப்படையில் அனைத்து வட்டி உழைக்கும் சாதனங்களுக்கான வட்டி வருமானமும் செலவினங்களும் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. வட்டி வருமானமானது, நிலையான வருமான முதலீடு மற்றும் பிணையங்கள் என்பன மீதான வட்டி வருவாய்களையும் திறைசேரி உண்டியல் மற்றும் ஏனைய கழிவிடப்பட்ட கருவிகளின் அட்டுறு கழிவுகள் மற்றும் வட்டங்களையும் உள்ளடக்குகிறது. கடன்களின் சேகரிப்பு ஐயத்திற்கிடமாகும் பொழுது வட்டி வருமானம் இடைநிறுத்தப்படுகிறது. அத்தகைய வருமானம் பெறப்படும் வரை வட்டி வருமானத்திலிருந்து நீக்கப்படுகிறது.

**5.32.2 பங்கிலாபங்கள்**

வங்கியின் கொடுப்பனவைப் பெறுவதற்கான உரிமை நிறுவப்படும் போது பங்கிலாப வருமானம் அங்கீகரிக்கப்படுகிறது.

**5.32.3 நானாவித வருமானம் மற்றும் செலவினங்கள்**

நானாவித வருமானமும் செலவினங்களும் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

ஆதனம், பொறி, உபகரணங்களின் விற்பனை மீதான வருமானத் தன்மையான தேறிய இலாபங்களும், நட்டங்களும் விற்பனை மூலம் பெற்ற பெறுகைகளிலிருந்து சொத்தின் கொண்டு செல்லும் பெறுமதியையும் அது சார்ந்த விற்பனைச் செலவுகளையும் கழித்த பின்பு வருமானக்கூற்றில் காட்டப்பட்டுள்ளன.

முக்கிய வருமானத்தை உருவாக்குகின்ற நடவடிக்கைகளுக்கான தற்செயலான நடவடிக்கை மூலம் எழும் இலாபங்களும் நட்டங்களும் மற்றும் பொருண்மைத்தன்மை இல்லாத ஒரேமாதிரியான கொடுக்கல்வாங்கல் தொகுதியிலிருந்து எழும் இலாபங்களும் நட்டங்களும் தேறிய அடிப்படையில் திரட்டப்பட்டு அறிக்கையிடப்பட்டு சமர்ப்பிக்கப்படுகின்றது.

**5.32.4 ஆளணிச் செலவுகள்**

ஆளணிச் செலவுகள் அனைத்து அலுவலர் நன்மைகளினதும் முழுச் செலவினையும் உள்ளடக்குகின்றது. ஆண்டின் இறுதியில் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்கள் மற்றும் தொடர்பான செலவுகள் என்பன மற்றைய உள்நாட்டு கொடுபடத்தக்கனவற்றுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**5.32.5 வருமான வரிச் செலவு**

வங்கியின் வருமானமானது, திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 118ஆம் பிரிவு மற்றும் 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு அரசிறைச் சட்டத்தின் பிரிவு 9(1) அத்துடன் 2021ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டு அரசிறை (திருத்தம்) சட்டத்திற்கமைவாக அதன் பின்னரான திருத்தம் என்பவற்றின் கீழ் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. திருத்தப்பட்டவாறான 2017ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பொருளாதார பணிக் கட்டணச் சட்டத்தின் நியதிகளில், 2017.04.01 இலிருந்து ஆரம்பித்து இலங்கை மத்திய வங்கி பொருளாதாரப் பணிக் கட்டணத்திற்கு ஏற்புடையதாகும். எனினும், திருத்தப்பட்டவாறான 2018ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க பொருளாதார பணி கட்டணச் சட்டத்தின்படி, 2018 ஒத்தோபரில் இருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் செலாவணி வீதம் மீதான தேறல் செய்யப்படாத இலாபங்களும் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மீதான தேறல் செய்யப்படாத சந்தைப் படியான இலாபங்களும் பொருளாதார பணிக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. மேலும், 2013ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (திருத்தப்பட்ட) சட்டத்தின்படி நிதியியல் பணிகள் வழங்கல்கள் மீதான பெறுமதிசேர் வரியிலிருந்து வங்கி விலக்களிக்கப்பட்டது.

பொருளாதாரப் பணிக் கட்டணம் 2020 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இடைநிறுத்தப்பட்டது.

**5.33 அறிக்கையிடும் திகதிக்குப் பின்னர் இடம்பெறும் நிகழ்வுகள்**

அறிக்கையிடும் திகதிக்குப் பின்னர் நிகழும் அனைத்து பொருண்மைத் தன்மை வாய்ந்த நிகழ்வுகளும் கருத்தில் எடுக்கப்படுவதுடன், பொருத்தமானவிடத்து நிதியியல் கூற்றுக்களுக்கான தொடர்பான குறிப்புக்களில் சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**காசுப்பாய்ச்சல் கூற்று**

காசுப்பாய்ச்சல் கூற்றானது பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 7 - காசுப்பாய்ச்சல் கூற்றிற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்றின் தயாரிப்பில் "நேரடி முறை" யைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டுள்ளது.

காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக, காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் மேலே வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, காசு/ கொடுப்பனவுக் கட்டளைகளின் வெளிப்பாய்ச்சல் நீங்கலான, காசு மற்றும் காசிற்குச் சமமானவற்றை உள்ளடக்கியுள்ளன.

**6. விடுக்கப்பட்டிருந்தும் அறிக்கையிடும் திகதியில் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படாதுள்ள புதிய கணக்கீட்டு நியமத் திருத்தங்கள் மற்றும் விளக்கக் குறிப்புக்கள்**

பின்வரும் புதிய கணக்கீட்டு நியமத் திருத்தங்கள் பற்றிய புதிய தொடர்பான விளக்கக் குறிப்புக்கள் 2021 சனவரி 1 இற்குப் பின்னர் ஆரம்பிக்கும் நிதியியல் காலப்பகுதிகளுக்குப் பிரயோகிக்கத்தக்கதாகும் என்பதுடன் முன்னரான பிரயோகம் அனுமதிக்கப்பட்டது. எனினும் வங்கி இந்த நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது திருத்தப்பட்ட நியமங்களை முன்னரே பிரயோகிக்கவில்லை. மேலும், இத்தகைய நியம திருத்தங்களும் பொருள்கோடல்களும் வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் மீது பொருண்மயமான தாக்கமொன்றைக் கொண்டிருக்கும் என்பதை வங்கி எதிர்பார்க்கவில்லை.

**6.1 வலுவான ஒப்பந்தங்கள் - ஒப்பந்தமொன்றை நிறைவேற்றுவதற்கான கிரயம் (ப.க.நி 37 இற்கான திருத்தங்கள்)**

'ஒப்பந்தமொன்றை நிறைவேற்றுவதற்கான செலவுகள்' பின்வரும் இரு செலவுகளையும் உள்ளடக்குகின்றது என்பதை திருத்தங்கள் தெளிவுபடுத்துகின்றன:

- அதிகரித்துச் செல்லுகின்ற செலவுகள் - உ-ம்: நேரடி தொழிலாளர் மற்றும் மூலப்பொருட்கள்; அத்துடன்
- ஏனைய நேரடிச் செலவுகளின் ஒதுக்கீடு - உ-ம்: ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் பயன்படுத்தப்படும் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் பெறுமானத்தேய்வின் ஒதுக்கீடு.

இத்தெளிவுபடுத்தல்களானது 'பூரண செலவு' அணுகுமுறையை ஏற்கனவே பிரயோகித்த கம்பனிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது, ஆனால் 'அதிகரித்துச் செல்கின்ற செலவுகள்' அணுகுமுறையை பிரயோகிக்கும் கம்பனிகளானது பெரியதும் சாத்தியமானதுமான மேலதிக ஏற்பாடுகளை அங்கீகரித்தல் வேண்டும்.

திருத்தங்கள் முதலாவதாக பிரயோகிக்கப்படுகின்ற போது நடைமுறையிலுள்ள ஒப்பந்தங்களுக்கு 2022 சனவரி 01ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆரம்பிக்கப்படும் வருடாந்த அறிக்கையிடல் காலப்பகுதிக்காக திருத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றது. ஆரம்பமாக பிரயோகிக்கப்படும் திகதியன்று, திருத்தங்களை பிரயோகிப்பதன் ஒன்றுசேர்ந்த விளைவானது பொருத்தமுடையவாறான நிறுத்தி வைக்கப்பட்ட இலாபங்கள் அல்லது பங்குரிமை மூலதனத்தின் வேறு கூறுக்கான ஆரம்ப மீதி திருத்தமாக அங்கீகரிக்கப்படுகின்றது. ஒப்பீடுகள் மீளக் கூறப்படவில்லை.

### 6.2 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்: உத்தேசிக்கப்பட்ட பயன்பாட்டிற்கு முன்னரான பெறுகைகள் (ப.க.நி 16 இற்கான திருத்தங்கள்)

திருத்தங்களின் கீழ், பயன்பாட்டிற்கு கிடைப்பனவாகவுள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணத்துடன் தொடர்புடைய பொருட்களுக்கு முன்னதாக விற்பனைசெய்கின்ற பொருட்களிலிருந்தான பெறுகைகளானது அத்தகைய பொருட்களை உற்பத்தி செய்யும் போது ஏற்படுகின்ற செலவுகளுடன் கூடிய இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். இத்தகைய உற்பத்திச் செலவுகளைக் கண்டறிந்து அளவிடுவதில் ப.க.நி. 2இன் இருப்புக்கள் பிரயோகிக்கப்பட வேண்டும்.

ஆகவே, கம்பனிகள் பின்வருவனவற்றை வேறுபடுத்திக் காட்டுதல் கட்டாயமாகும்:

- பயன்பாட்டிற்கு கிடைப்பனவாகவுள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணத்துடன் தொடர்புடைய பொருட்களுக்கு முன்னதாக விற்பனைசெய்கின்ற பொருட்களிலிருந்தான பெறுகைகளானது அத்தகைய பொருட்களை உற்பத்தி செய்யும் போது ஏற்படுகின்ற செலவுகளுடன் ஒருங்கிணைந்த செலவுகள்; அத்துடன்
- உத்தேசிக்கப்பட்ட பயன்பாட்டிற்காக கிடைப்பனவாகவுள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணப் பொருட்களை உற்பத்திசெய்வதுடன் ஒருங்கிணைந்த செலவுகள்.

அனுமதிக்கப்பட்ட முன்னைய பிரயோகத்துடன் 2022 சனவரி 01ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆரம்பிக்கப்படும் வருடாந்த அறிக்கையிடல் காலப்பகுதிகளுக்காக திருத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றது. திருத்தங்கள் பின்னோக்கி பிரயோகிக்கப்படுகின்றன, ஆனால் வங்கிகள் திருத்தங்களை முதலாவதாக பிரயோகிக்கின்ற நிதியியல் கூற்றுக்களில் முன்வைக்கப்படும் முன்னைய காலப்பகுதியின் ஆரம்பத்தில் அல்லது அதன் பின்னர் பயன்படுத்துவதற்காக ஆதனம், பொறி மற்றும் உபகரணப் பொருட்கள் மாத்திரம் கிடைப்பனவாக மேற்கொள்ளப்பட்டன.

### 6.3 கணக்கீட்டு கொள்கைகளை வெளிப்படுத்துதல் (ப.க.நி 1 மற்றும் ப.நி.அ.நி நடைமுறைக் கூற்று 2 இற்கான திருத்தங்கள்)

ப.க.நி 1 இற்கான முக்கிய திருத்தங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- கம்பனிகளின் குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகள் தவிர்ந்த அவர்களின் பொருண்மிய கணக்கீட்டுக் கொள்கைளை வெளிப்படுத்துவதற்கு கம்பனிகளைக் கோருதல்;
- பொருண்மியமற்ற கொடுக்கல்வாங்கல்கள், வேறு நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் போன்றவற்றுடன் தொடர்புடைய கணக்கீட்டுக் கொள்கைகள் தாமாகவே பொருண்மியமற்று காணப்படுகின்றன அத்துடன் அவ்வாறான வெளிப்படுத்தல் அவசியப்பாடாது; அத்துடன்
- பொருண்மியமற்ற கொடுக்கல்வாங்கல்கள், வேறு நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் போன்றவற்றுடன் தொடர்புடைய அனைத்துக் கணக்கீட்டுக் கொள்கைகளும் கம்பனியின் நிதியியல் கூற்றுகளுக்கு தாமாகவே பொருண்மியத்தன்மையைக் கொண்டுள்ளன.

திருத்தங்கள் 2023 சனவரி 01இலிருந்து நடைமுறைக்கு வரும் ஆனால், முன்னதாக பிரயோகிக்கப்படலாம்.

### 6.4 கணக்கீட்டு மதிப்பீடுகளின் வரைவிலக்கணம் (ப.க.நி 8 இற்கான திருத்தங்கள்)

திருத்தங்கள் கணக்கீட்டு மதிப்பீடுகளிற்கான புதிய வரைவிலக்கணமொன்றை அறிமுகப்படுத்துகின்றன: அளவீட்டு நிச்சயமற்றத்தன்மைக்கு உட்பட்டு காணப்படுகின்ற நிதியியல்கூற்றுக்களிலுள்ள நாணயத் தொகைகள் இவை என்பதை தெளிவுபடுத்துதல்

கணக்கீட்டு கொள்கையொன்றினால் தீர்மானிக்கப்பட்ட குறிக்கோளை அடைவதற்கு கணக்கீட்டு மதிப்பீடொன்றை வங்கி உருவாக்குகின்றது என குறிப்பிடுவதன் மூலம் கணக்கீட்டு கொள்கைகளிற்கும் கணக்கீட்டு மதிப்பீடுகளிற்குமிடையிலான தொடர்பை திருத்தங்கள் தெளிவுபடுத்துகின்றன.

கணக்கீட்டு மதிப்பீடொன்றை உருவாக்குதல் என்பது பின்வருவனவற்றை இரண்டையும் உள்ளடக்குகின்றது:

- அளவீட்டு நுட்பமொன்றை தெரிவு செய்தல் (மதிப்பிடல் அல்லது பெறுமதியிடல் நுட்பம்) - உ-ம் ப.நி.அ.நி 9: நிதியியல் சாதனங்களை பிரயோகிக்கும் போது எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களிற்கான இழப்பு படியொன்றை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் மதிப்பீட்டு நுட்பம்; அத்துடன்
- தெரிவுசெய்யப்பட்ட அளவீட்டு நுட்பத்தை பிரயோகிக்கும் போது பயன்படுத்தப்பட வேண்டிய உள்ளீடுகளைத் தெரிவுசெய்தல் - உ-ம் ப.க.நி 37 ஏற்பாடுகள், எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் எதிர்பாரா சொத்துக்கள் என்பனவற்றை பிரயோகிக்கப்படும் போது, உத்தரவாதமளிக்கப்பட்ட கடப்பாடுகளுக்கான ஏற்பாடொன்றை தீர்மானிப்பதற்கான எதிர்பார்க்கப்பட்ட காசு வெளிப்பாய்ச்சல்கள்.

அனுமதிக்கப்பட்ட முன்னைய பிரயோகத்துடன் 2023 சனவரி 01ஆம் திகதியன்று ஆரம்பிக்கின்ற அல்லது அதற்கு பின்னரான காலப்பகுதிகளுக்கு நடைமுறைக்கு வருவதுடன் மேலும் திருத்தங்களை வங்கி பிரயோகிக்கும் முதலாவது வருடாந்த அறிக்கையிடல் காலப்பகுதியின் ஆரம்பத்தில் அல்லது அதற்கு பின்னர் இடம்பெறுகின்ற கணக்கீட்டு மதிப்பீடுகளிலுள்ள மாற்றங்கள் மற்றும் கணக்கீட்டு கொள்கைகளிலுள்ள மாற்றங்கள் என்பனவற்றிற்கு எதிர்காலத்தில் பிரயோகிக்கப்படும்.

### 6.5 ப.நி.அ.நி நியமங்களுக்கு 2018 - 2020 வருடாந்த மேம்பாடுகள்

### 6.6 2021 யூன் 30ஆம் நாளிற்கப்பாலான கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய வாடகைச் சலுகைகள் (ப.நி.அ.நி.16)

## 7. நடவடிக்கைகளின் தன்மை மற்றும் அளவு

### 7.1 வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள்

வெளிநாட்டு நாணயத் தொழிற்பாடுகள் முக்கியமாக மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களை வைத்திருப்பதன் மூலமாக ஏற்படுகின்றது. வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ சொத்துப்பட்டியலானது வெளிநாட்டுச் செலாவணி தலையீட்டு நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் வர்த்தக நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் ஏனைய வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் உள்ளடக்குகிறது.

வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் பல்வேறு நாணயங்களில் வைத்திருக்கப்படுகின்றன. முக்கியமான நாணயங்களாக ஐக்கிய அமெரிக்க டொலர், அவுஸ்திரேலிய டொலர், யூரோ, ஸ்டேர்லிங் பவுண், யப்பானிய யென் மற்றும் நியூசிலாந்து டொலர் என்பன காணப்பட்டன. இவ்வெளிநாட்டு நாணயச் சொத்துக்களில் வைத்திருக்கப்பட்ட நிதியியல் சாதனங்கள் முக்கியமாக இறைமைப் பிணையங்கள், நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் கீழ் வைத்திருக்கப்படும்

பிணையங்கள் அல்லது ஏனைய மத்திய வங்கிகள், வர்த்தக வங்கிகள் மற்றும் கட்டுக்காப்பு நிறுவனங்களுடன் வைத்திருக்கப்படும் நிலுவைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

இலங்கை மத்திய வங்கி காலத்திற்குக் காலம் பன்னாட்டுச் சந்தைத் தொழிற்பாடுகளிலிருந்து எழும் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கூட வைத்திருக்கின்றது.

### 7.2 உள்நாட்டு நாணய நடவடிக்கைகள்

உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் பின்வருமாறு தோன்றுகின்றன.

(i) திரவத்தன்மை முகாமைத்துவத் தொழிற்பாடுகள்: திரவத்தன்மை முகாமைத்துவமானது வங்கித்தொழில் முறைமைக்கு நிதியங்களை முற்பணமாக வழங்குதல் மூலம் அல்லது வங்கித்தொழில் முறைமையிலிருந்து நிதியங்களை மீளப்பெறல் மூலம் அரசுக்கான அல்லது சந்தைக்கான நாளாந்த தேறிய பாய்ச்சல்களையும் அல்லது அரசிடமிருந்து அல்லது சந்தையிடமிருந்து தேறிய நாளாந்தப் பாய்ச்சல்களையும் இலங்கை மத்திய வங்கி நாளாந்தம் எதிரீடு செய்வதுடன் பெருமளவிற்கு தொடர்புடையதாகவுள்ளது. இத்தொழிற்பாடுகளில் பெரும்பாலானவை நாளாந்த திறந்த சந்தைத் தொழிற்பாடுகளூடாக மேற்கொள்ளப்படுகின்றன.

(ii) சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் பொறுப்பிற்கு உதவுவதற்காக இலங்கை அரசாங்கத்தின் பிணையங்களை உள்ளடக்கியதாக முதலீட்டுப் பட்டியலொன்றை வைத்திருத்தல். வர்த்தக நோக்கத்திற்கன்றி நாணயத் தொழிற்பாடுகளுக்காக இம்முதலீடுகளை வைத்திருப்பதே வங்கியின் கொள்கையாகும்.

### 7.3 நம்பிக்கை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள்

கட்டுக்காப்பு மற்றும் நிர்வாக ஒழுங்குமுறைகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் நிர்வகிக்கப்பட்ட தொகை, அவை வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் ஆக்கக் கூறுகளில் ஒரு பகுதியாக அமையாததால் இந்நிதியியல் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை.

### 8. காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்

| | 2021 ரூ. 000 | 2020 ரூ. 000 |
|---|---|---|
| வங்கியிலுள்ள காசு நிலுவைகள் | **23,385,534** | 93,379,318 |
| வங்கிகளுடனான கால வைப்புக்கள் | **49,430,045** | 270,722,623 |
| ஓரிரவு வைப்புக்கள் | **124,669,823** | 39,462,616 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் மீது பெறவேண்டிய வட்டி | **19,084** | 13,085 |
| **காசுப்பாய்ச்சல் நோக்கத்திற்கான காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்** | **197,504,486** | **403,577,642** |
| மட்டுப்படுத்தப்பட்ட பாவனைக்காக கிடைப்பனவாகவுள்ள காசு மற்றும் காசுக்கு சமமானவை **(குறிப்பு 8.1)** | **315,343,334** | **-** |
| **கழிக்குக:** காசு மற்றும் காசுக்கு சமமானவை மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புகள் (குறிப்பு 8.2) | **(85,368)** | (270,338) |
| **மொத்தம்** | **512,762,452** | **403,307,304** |

**8.1** குறிப்பு 25.6 இல் விளக்கப்பட்டவாறான இலங்கை மத்திய வங்கிக்கும் சீனா மக்கள் வங்கிக்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட இருபுடை நாணய பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையின் கீழ் பெறப்பட்ட ரென்மென்பி 10 பில்லியன் தொகையை மட்டுப்படுத்தப்பட்ட பயன்பாட்டிற்கு கிடைப்பனவாகவுள்ள காசு மற்றும் காசுக்கிற்குச் சமமானவை பிரதிபலிக்கின்றன. இவ்வுடன்படிக்கையின் கீழ் பெறப்பட்ட தொகையை இரண்டு நாடுகளுக்குமிடையிலான நிதியியல் வியாபாரம் மற்றும் நேரடி முதலீடு என்பவற்றிற்கும் அத்துடன் இரு தரப்பினர்களும் ஒப்புக்கொண்டதற்கமைய வேறு நோக்கங்களுக்கும் பயன்படுத்த முடியும்.

### 8.2 காசு மற்றும் காசுக்கு சமமானவை மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களிலான அசைவு

| | 2021 | | | 2020 | | |
|---|---|---|---|---|---|---|
| | கட்டம் 1 ரூ. 000 | கட்டம் 2 ரூ. 000 | மொத்தம் ரூ. 000 | கட்டம் 1 ரூ. 000 | கட்டம் 2 ரூ. 000 | மொத்தம் ரூ. 000 |
| சனவரி 1இல் உள்ளவாறான நிலுவை | 90,277 | 180,061 | 270,338 | 219,331 | 2,627 | 221,958 |
| ஆண்டு காலப்பகுதியிலான விதிப்பு/ (மீளளித்தல்) | (38,268) | (146,702) | (184,970) | (129,054) | 177,434 | 48,380 |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை** | 52,009 | 33,359 | 85,368 | 90,277 | 180,061 | 270,338 |

### 9. வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடுகள்

| | 2021 ரூ. 000 | 2020 ரூ. 000 |
|---|---|---|
| **இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான பிணையங்கள்** | | |
| - வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடுகள் **(குறிப்பு 9.1)** | - | 40,564,323 |
| | - | 40,564,323 |
| **ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்பு பெறுமதியிலான பிணையங்கள்** | | |
| - வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடுகள் | **8,818,244** | 703,435,463 |
| | **8,818,244** | 703,435,463 |
| **வெளிநாட்டுப் பிணையங்களிலான மொத்த முதலீடுகள்** | **8,818,244** | **743,999,786** |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்பு பெறுமதியிலான பிணையங்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்கள் **(குறிப்பு 9.2)** | **995** | **2,098,721** |

**9.1** இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான பிணையங்களாக வகைப்படுத்தப்பட்ட வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடுகளானவை, உலக வங்கியினால் முகாமைப்படுத்தப்படும் ஒதுக்கு ஆலோசனை முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தில் வங்கியினால் செய்யப்பட்ட முதலீடுகளை உள்ளடக்கியுள்ளது.

**9.2 ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் மீதான எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களிலான அசைவு**

| | 2021 | | | 2020 | | |
|---|---|---|---|---|---|---|
| | கட்டம் 1 ரூ. 000 | கட்டம் 2 ரூ. 000 | மொத்தம் ரூ. 000 | கட்டம் 1 ரூ. 000 | கட்டம் 2 ரூ. 000 | மொத்தம் ரூ. 000 |
| சனவரி 1இல் உள்ளவாறான நிலுவை | **36,546** | **2,062,175** | **2,098,721** | 81,259 | 19,635 | 100,894 |
| ஆண்டு காலப்பகுதியிலான விதிப்பு/ (மீளளித்தல்) | **(35,551)** | **(2,062,175)** | **(2,097,726)** | (44,713) | 2,042,540 | 1,997,827 |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை** | **995** | **-** | **995** | **36,546** | **2,062,175** | **2,098,721** |

**10. பெறுதி நிதியியல் சாதனங்கள்**

**10.1** கீழேயுள்ள அட்டவணை, சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களாக அவற்றின் பெயரளவுத் தொகையுடன் சேர்த்து பதிவு செய்யப்பட்டுள்ள பெறுதி நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதியினைத் தருகின்றது. மொத்தமாகப் பதிவு செய்யப்பட்ட பெயரளவுத் தொகையானது பெறுதியின் அடிப்படையான சொத்து, குறிப்பீட்டு வீதம் அல்லது சுட்டெண்ணின் தொகையாகும் என்பதுடன் பெறுதிகளின் பெறுமதிகளில் ஏற்படும் மாற்றங்களை அளவிடுவதற்கான அடிப்படையாகவும் காணப்பட்டது. பெயரளவுத் தொகை ஆண்டின் இறுதியில் வெளிநின்ற கொடுக்கல்வாங்கல்களின் அளவினை எடுத்துக்காட்டியதுடன் இது சந்தை இடர்நேர்வுகளையோ அல்லது கொடுகடன் இடர்நேர்வுகளையோ எடுத்துக்காட்டவில்லை.

| | 2021 | | | 2020 | | |
|---|---|---|---|---|---|---|
| | சொத்துக்கள் ரூ. 000 | பொறுப்புக்கள் ரூ. 000 | கருத்துத் தொகை ரூ. 000 | சொத்துக்கள் ரூ. 000 | பொறுப்புக்கள் ரூ. 000 | கருத்துத் தொகை ரூ. 000 |
| நாணய பரஸ்பர பரிமாற்றல்கள் | **54,022,803** | **1,130,519** | **197,002,554** | 3,368,784 | 573,774 | 281,690,071 |
| முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி | **33** | **8,804** | **229,487** | 1,569 | 408 | 1,025,245 |
| **மொத்தம்** | **54,022,836** | **1,139,323** | **197,232,041** | 3,370,353 | 574,182 | 282,715,316 |

10.2 மேலே குறிப்பிட்ட பெறுதிகளானது வெளிநாட்டு ஒதுக்குகளை பேணும் நியதிச்சட்ட குறிக்கோள்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் வங்கியினால் வைத்திருக்கப்படும் சந்தை மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வுகளை முகாமை செய்யும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் நாணய பரஸ்பர பரிமாற்றல்களையும் வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய ஒப்பந்தங்களையும் உள்ளடக்குகின்றன. இலங்கை ரூபாவின் பன்னாட்டு உறுதிப்பாட்டை பேணுவதற்கும், நாட்டின் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை வலுப்படுத்துவதற்கும், பிராந்திய நாடுகளிற்கு மத்தியில் பொருளாதாரத்தையும் நிதியியல் ஒத்துழைப்பையும் மேம்படுத்துவதற்கும் நாட்டிற்குள் வெளிநாட்டு செலாவணி உட்பாய்ச்சல்களை அதிகரிப்பதற்கும் வங்கியானது உரிமம்பெற்ற வங்கிகள், வெளிநாட்டு மத்திய வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடன் பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொண்டது.

10.3 பெறுதிகள் என்பது வட்டி வீதங்கள், நிதியியல் சாதனங்களின் விலைகள், பண்ட விலைகள், வெளிநாட்டுச் செலாவணி வீதங்கள், கொடுகடன் இடர்நேர்வு மற்றும் சுட்டெண்களில் ஏற்படும் மாற்றங்களுக்குப் பதிலிறுத்தும் விதத்தில் அவற்றின் பெறுமதியினைப் பெற்றுக்கொள்ளும் நிதியியல் உடன்படிக்கைகளாகும்.

10.4 வங்கியின் பெறுதிகளினது சொத்துப்பட்டியலின் குறிப்பிடத்தக்க பகுதி செலாவணி வீத இடர்நேர்வு மற்றும் குறுங்கால திரவத்தன்மை தேவைப்பாடுகள் என்பனவற்றை முகாமைப்படுத்துவதற்கானதொரு உபாயமாக மேற்கொள்ளப்பட்ட நாணய பரஸ்பரபரிமாற்றத்தினை உள்ளடக்குகின்றது. நாணய பரஸ்பர பரிமாற்றலில் வங்கியானது இணங்கப்பட்ட வீதங்களில் மற்றொரு நாணயத்தின் பரிவர்த்தனையாக இணங்கப்பட்ட திகதியில் நாணயத்தின் குறிப்பிட்ட தொகையினை செலுத்துகிறது/ பெறுகிறது.

10.5 வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய ஒப்பந்தத்திலிருந்து, வங்கியானது இணங்கப்பட்ட எதிர்காலத் திகதியொன்றில் இணங்கப்பட்ட வீதமொன்றில் வெளிநாட்டு நாணயத்தின் குறிப்பிட்டதொரு தொகையினை வாங்குவதற்கு அல்லது விற்பதற்கான கடப்பாடுகளை பெற்றிருக்கிறது.

**10.6** பெறுதி உடன்படிக்கைகளுக்கு வங்கியின் வெளிப்படுத்துகைத் தன்மையானது, அத்தகைய பெறுதிகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் நன்மைகள் வங்கிக்கு திடமாகக் கிடைக்கும் தன்மை கொண்டவை என்பதனை உறுதிப்படுத்துவதற்காக வங்கியின் ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவத்தின் ஒரு பகுதியாக நெருக்கமாகக் கண்காணிக்கப்படுகிறது.

**11. ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள்**

| | 2021 ரூ. 000 | 2020 ரூ. 000 |
|---|---|---|
| **இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டவை** | | |
| ப.நா.நிதிய அனுமதிப் பங்கு (குறிப்பு 11.1) | **162,603,548** | 157,793,346 |
| | **162,603,548** | 157,793,346 |
| **பதிவழிக்கப்பட்ட பெறுமதியில் அளவிடப்படடவை** | | |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் உடமைகள் (குறிப்பு 11.2) | **24,800,563** | 491,874 |
| ப.நா.நிதியத்துடனான வைப்புக்கள் (குறிப்பு 11.3) | **216,785** | 208,077 |
| முற்செலுத்தப்பட்ட விதிப்புக்கள் - ப.நா.நிதியக் கடன்கள் | **424,944** | 464,890 |
| **கழிக்குக:** ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்கள் (குறிப்பு 11.4) | **(3)** | (2) |
| | **25,442,289** | 1,164,839 |
| | **188,045,837** | 158,958,185 |

**11.1 ப.நா. நிதிய அனுமதிப் பங்கு**

ப.நா.நிதிய அனுமதிப் பங்கானது (மூலதன சந்தாக்கள்) அதன் அங்கத்துவ நாடுகளிலிருந்து கிடைக்கின்ற ப.நா.நிதிய வளங்களின் முதன்மை மூலமாகும். பரந்தளவில் ஒரு நாட்டின் ஒப்பீட்டளவிலான பொருளாதார நிலைமை கருத்தில் கொள்ளப்பட்டு ஒவ்வொரு நாட்டினதும் அனுமதிப் பங்கு தீர்மானிக்கப்படுகின்றது. ப.நா. நிதியத்தில் இணைகின்ற சந்தர்ப்பத்தில் ஒரு நாடு அதற்குரிய அனுமதிப் பங்குத் தொகையில் நூற்றுக்கு 25 வீதத்தினை பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டு நாணயத்தின் மூலம் அல்லது சிஎஉ யில் செலுத்துதல் வேண்டுமென்பதோடு, எஞ்சிய 75 வீதத்தினையும் தம் நாட்டுப்

பணத்தின் மூலம் செலுத்துதல் வேண்டும். வங்கியொன்றின் ப.நா. நிதியத்துடனான அதன் கொடுக்கல்வாங்கல்கள், ப.நா.நிதியத்தின் உறுப்புரையின்படி, அரசாங்கத்தின் சார்பில் அதன் சொந்தக் கணக்கின் மீது இடம்பெறுவதனால் ப.நா.நிதியத்தின் அனுமதிப் பங்கு வங்கியின் சொத்துக்களைப் பிரதிபலிக்கிறது.

ப.நா. நிதியம், பொது அனுமதிப் பங்கு மீளாய்வு உடன்படிக்கைக்கு அமைவாக, ப.நா. நிதியத்தின் 189 அங்கத்தவர்களினதும் அனுமதிப் பங்கினையும் 2016 சனவரியில் அதிகரிக்க முடிவு செய்தது (தற்பொழுது இதில் 190 ப.நா.நிதிய அங்கத்துவ நாடுகளுள்ளன). இதன் விளைவாக, இலங்கையின் ப.நா. நிதிய அனுமதிப்பங்கு 2016 பெப்புருவரி 17இல் முன்னைய அனுமதிப்பங்கு தொகையான சிஎஉ 413.40 மில்லியனிலிருந்து சிஎஉ 578.80 மில்லியனுக்கு அதிகரித்தது.

ப.நா. நிதியத்தின் அனுமதிப் பங்கு தொடர்பில் செலுத்தப்படத்தக்க தொகை குறிப்பு 24இல் அனுமதிப் பங்கு பொறுப்பு என்ற தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது. அங்கத்தவரொருவரின் அனுமதிப் பங்கு பின்வருவன உட்பட ப.நா. நிதியத்துடனான நாட்டின் நிதியியல் மற்றும் அமைப்பியல் ரீதியான தொடர்புகளை நிர்ணயிக்கின்றது:

(i) **சந்தாக்கள்:** ப.நா. நிதியத்திற்கான அங்கத்தவரின் சந்தாவானது அங்கத்தவரின் அனுமதிப் பங்குக்குச் சமமாகும் என்பதோடு அதன் மூலம் அங்கத்தவர் ப.நா. நிதியத்திற்கு வழங்குவதற்கு கடப்பாடுடைய அதிகபட்ச நிதி வளங்களின் தொகை தீர்மானிக்கப்படுகிறது. அங்கத்தவர் பங்களிப்பை முழுமையாகச் செலுத்துதல் வேண்டும். 25 சதவீதத்தினை ப.நா.நிதியம் தீர்மானிக்கின்ற ஒதுக்குச் சொத்துக்களிலிருந்தும் (சிஎஉ அல்லது பயன்படுத்தக்கூடிய நாணயங்களில்) மற்றும் எஞ்சிய தொகையை அங்கத்தவரின் சொந்த நாணயத்தின் மூலமும் செலுத்துதல் வேண்டும்.

(ii) **வாக்களிக்கும் அதிகாரம்:** ப.நா.நிதியத்தின் தீர்மானங்களின் போது அங்கத்தவரின் வாக்களிக்கும் அதிகாரமானது அனுமதிப் பங்கின் மூலம் தீர்மானிக்கப்படுகிறது. ஒவ்வொரு ப.நா.நி. அங்கத்தவரும் அடிப்படை வாக்குகளுடன், அனுமதிப் பங்கின் ஒவ்வொரு சிஎஉ 100,000 க்கு ஒரு மேலதிக வாக்கு வீதமும் உரித்துடையவராவர். 2008 சீர்திருத்தமானது மொத்த வாக்குகளின் 5.50 சதவீதத்தில் அடிப்படை வாக்குகளின் எண்ணிக்கையினை நிர்ணயித்துள்ளது.

(iii) **நிதியிடலை பெறுவதற்கான வசதி:** அங்கத்தவரால் ப.நா. நிதியத்திடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய நிதி வசதிகளுக்கு (வசதியின் எல்லை) அங்கத்தவருடைய அனுமதிப் பங்கு அடிப்படையாய் அமைகிறது. துணைநில் ஒழுங்குகள் மற்றும் நீடிக்கப்பட்ட ஒழுங்குகளுக்கேற்ப அங்கத்தவரால் தற்காலத்தில் வருடாந்த அனுமதிப் பங்கின் 145 சதவீதமும் (கொவிட் -19 பதிலிறுப்பு நிதியத்தின் பகுதியாக 2021ஆம் ஆண்டின் இறுதியை நோக்கி பங்கின் 245 சதவீதத்திற்கு தற்காலிகமாக அதிகரித்தது) திரண்ட ரீதியில் 435 சதவீதம் வரையிலும் கடன் பெறலாம். அசாதாரணமான சந்தர்ப்பங்களில் இவ்வசதி இதை விட அதிகரிக்கலாம்.

(iv) **சிஎஉ ஒதுக்கல்:** அங்கத்தவருடைய அனுமதிப் பங்குகளின் விகிதாசாரப்படி இவர்களுக்கான சிஎஉ ஒதுக்குகளின் பங்கு தீர்மானிக்கப்படுகிறது. ஐ.அ டொலர் 650 பில்லியனுக்குச் சமமான பொது சிறப்பு எடுப்பனவு உரிமை ஒதுக்கீடானது பன்னாட்டு நாணய நிதியத்தில் 2021 ஓகத்து 23 அன்று நடைமுறைக்கு வந்த சிறப்பு எடுப்பனவு உரிமைகள் திணைக்களத்திலுள்ள பங்கேற்பாளர்களின் தற்போதுள்ள பங்குகளின் விகிதத்தில் பன்னாட்டு நாணய நிதிய உறுப்பினர்களுக்கு மேற்கொள்ளப்பட்டது. இதில் பொது சிறப்பு எடுப்பனவு உரிமைப் பங்கில் இலங்கையின் சிறப்பு எடுப்பனவு உரிமைப் பங்காக 554.8 மில்லியன் காணப்பட்டது.

### 11.2 சிறப்பு எடுப்பனவு உரிமை உடமைகள்

சிறப்பு எடுப்பனவு உரிமை (சிஎஉ) என்பது ப.நா.நி. அங்கத்தவர்களின் எவ்வித் தடைகளுமின்றிப் பயன்படுத்தக்கூடிய நாணயங்கள் மீதான கோரலாக இருப்பதுடன், இதில் சிஎஉ உடமையாளர்கள் தமது சிஎஉரிமைகளை இந்நாணயங்களுக்காகப் பரிமாறிக் கொள்ள முடியும். ஒதுக்குச் சொத்தொன்றாக சிஎஉரிமையின் பெறுமதியானது சிஎஉரிமையை வைத்திருப்பதற்கும் ஏற்றுக்கொள்வதற்குமான அங்கத்தவர்களின் கடப்பாடுகள் மற்றும் சிஎஉரிமை முறைமையின் தொழிற்பாடுகளுடன் தொடர்புபட்ட பல்வேறுபட்ட கடப்பாடுகளுக்கு மதிப்பளிக்க வேண்டிய பொறுப்பு என்பவற்றிலிருந்து தோன்றுகின்றது. தடையின்றிப் பயன்படுத்தக்கூடியதான நாணயங்கள் மீதான சிஎஉ கோரலானது மதிப்பளிக்கப்படுவதை ப.நா.நி. இரண்டு விதங்களில் உறுதி செய்கின்றது. அதாவது, பலவீனமான வெளிநாட்டு நிலைமையிலுள்ள அங்கத்தவர்களிடமிருந்து சிஎஉ வைக் கொள்வனவு செய்வதற்குப் பலம் வாய்ந்த வெளிநாட்டு நிலைமையைக் கொண்ட ப.நா.நி அங்கத்தவர்களைப் பெயர் குறித்துரைப்பதன் மூலமும் அத்துடன் முகாமைக்குட்படுத்தப்பட்ட சந்தையினுள் பங்கேற்கும் அங்கத்தவர்களுக்கிடையிலான தாமாக முன்வந்து பரிமாற்றிக் கொள்ளும் ஒழுங்கின் மூலமுமாகும். மேலே காட்டப்பட்ட தொகையானது தொடர்பான அறிக்கையிடும் திகதிகளிலுள்ளவாறான வங்கியின் மொத்த உடமைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

### 11.3 ப.நா. நிதியத்துடனான வைப்புக்கள் - பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கை நிதிய வைப்பு

பன்னாட்டு நாணய நிதியத்தில் நிர்வகிக்கப்படும் விசேட எதிர்பாரா நிகழ்வுக் கணக்கு-2 (வி.எ.நி.கணக்கு-2) இற்குப் பிந்திய கணக்கில் இலங்கையின் வைப்பிலிருந்து சிஎஉ 788,783 இனை மாற்றியதன் மூலம் 2000 ஏப்பிறல் 21ஆம் திகதி இலங்கை அரசாங்கத்திற்கும் பன்னாட்டு நாணய நிதியத்திற்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் கீழ் பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கை வைப்பு மேற்கொள்ளப்பட்டது. வி.எ.நி. கணக்கு-2 ஐ முடிவுறுத்துவதற்கு பன்னாட்டு நாணய நிதியத்தினால் தீர்மானிக்கப்பட்ட போது, இலங்கைக்கெதிராக வி.எ.நி. கணக்கு-2 இல் வைக்கப்பட்டிருந்த மீதியை மாற்றியதன் மூலம் பன்னாட்டு நாணய நிதியத்தின் வழிகாட்டலின் கீழ் இந்தக் கணக்கு உருவாக்கப்பட்டது. வி.எ.நி. கணக்கு-2 இற்குப் பிந்திய கணக்கிலுள்ள மீதிகளை முழுமையான நன்கொடையாக அல்லது பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி கடனுக்கு மானியம் வழங்கும் ஒரு வழியாக பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கைப் பொறுப்புக்கு வழங்குவதற்கு கவனத்தில் கொள்ளுமாறு அந்தக் கணக்கில் மீதிகளைக் கொண்டிருந்த நாடுகளை பன்னாட்டு நாணய நிதியம் கேட்டுக் கொண்டது. அதற்கிணங்க இலங்கை அரசாங்கம், வி.எ.நி. கணக்கு- 2இற்குப் பிந்திய கணக்கிலுள்ள நிதிகளை முழுமையான நன்கொடையாகவன்றி 2018 வரையிலான வட்டியில்லா வைப்பாக பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கைப் பொறுப்புக் கணக்குக்கு மாற்றுவதற்கு இணங்கியது. இது பின்னர் 2024 வரை நீடிக்கப்பட்டது.

### 11.4 பா.நிதியத்துடன் தொடர்புபட்ட சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களிலான அசைவு

| | 2021<br>ரூ. 000 | 2020<br>ரூ. 000 |
|---|---|---|
| **கட்டம் 1** | | |
| சனவரி 1இல் உள்ளவாறான நிலுவை | **2** | 4 |
| ஆண்டு காலப்பகுதியிலான விதிப்பு/ (மீளளித்தல்) | **1** | (2) |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை** | **3** | 2 |

## 12. இலங்கை அரச பிணையங்கள்

அரச பிணையங்களின் பட்டியலானது நாணய விதிச் சட்டத்தின் 90(2) பிரிவின் கீழ், நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் நோக்கில் கொள்வனவு செய்யப்பட்டு பேணப்படுகின்றது.

| | 2021<br>ரூ. 000 | 2020<br>ரூ. 000 |
|---|---|---|
| திறைசேரி உண்டியல்கள் | **1,351,378,149** | 637,959,075 |
| திறைசேரி முறிகள் | **25,876,232** | 74,904,469 |
| பெறத்தக்க வட்டி | **565,966** | 1,667,983 |
| | **1,377,820,347** | 714,531,527 |

## 13. மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்

| | 2021<br>ரூ. 000 | 2020<br>ரூ. 000 |
|---|---|---|
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | **567,297,000** | 2,728,000 |
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் மீது பெறத்தக்க வட்டி | **235,312** | 412 |
| | **567,532,312** | 2,728,412 |

## 14. அரசுக்கான தற்காலிக முற்பணங்கள்

இவை நாணய விதிச் சட்டத்தின் 89ஆவது பிரிவின் கீழ் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட முற்பணங்களைக் குறிக்கின்றன. இது திரண்ட நிதியத்திலிருந்து உறப்படுவதற்காக, அங்கீகரிக்கப்பட்ட நிதியியல் செலவுகளுக்கான முற்பணங்களின் வழங்குகையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டதாகும்.

## 15. நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள்

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 105 'ஏ'ற்கு அமைய, இம்முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பிரிவின் கீழ் நாணயச் சபையின் கருத்துப்படி வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறையில் மனிதவள மூலவளங்களையும் தொழில்நுட்ப அபிவிருத்தியையும் முன்னேற்றுவதற்கும் மேம்படுத்துவதற்கும் அல்லது இலங்கையில் தொழிற்படுகின்ற வர்த்தக வங்கிகளுக்கிடையே கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவினை வசதிப்படுத்துவதற்குமாக ஏதாவது கம்பனி நிறுவப்படுமிடத்து அக்கம்பனிகளிலிருந்து பங்குகளைக் கொள்வனவு செய்து வைத்திருப்பதற்கு வங்கிக்கு வலுவளிக்கப்பட்டுள்ளது.

### 15.1 முதலீட்டு நிலைமை

| கம்பனி | வியாபாரத்தின் தன்மை | 2021 பங்குகளின் எண்ணிக்கை | 2021 சீர்மதிப்புப் பெறுமதி ரூ. 000 | 2020 பங்குகளின் எண்ணிக்கை | 2020 சீர்மதிப்புப் பெறுமதி ரூ. 000 |
|---|---|---|---|---|---|
| லங்கா கிளியர் (பிறைவேட்)லிமிடெட் | தன்னியக்கத் தீர்ப்பனவு | **2,986,824** | **653,414** | 2,986,824 | 597,246 |
| வரையறுக்கப்பட்ட லங்கா நிதியியல் பணிகள் பணியகம் | தன்னியக்க நிதிய மாற்றல் | **500,000** | **-** | 500,000 | - |
| வரையறுக்கப்பட்ட இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் | கொடுகடன் தகவல் வழங்கல் | **48,244** | **1,017,804** | 48,244 | 1,018,110 |
| | | | **1,671,218** | | 1,615,356 |

15.2 பங்குரிமை முதலீடுகளானவை, வங்கியின் நிதியியல் கூற்றுக்களை தயாரிக்கும் நேரத்தில் இருந்த இக்கம்பனிகளின் மிகப் பிந்திய கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களின் படி பங்கொன்றிற்கான தேறிய சொத்துக்களின் அடிப்படையில் 2021 திசெம்பர் 31 இலுள்ளவாறு சீர்மதிப்புப் பெறுமதியில் கொண்டு செல்லப்பட்டன. இதன்படி, கீழ்வரும் திகதிகளில் உள்ளவாறான பங்கொன்றிற்கான தேறிய சொத்து பயன்படுத்தப்பட்டது.

லங்காகிளியர் (பிறைவேட்) லிமிடெட் - 2021 திசெம்பர் 31 பங்கொன்றிற்கான தேறிய சொத்துப் பெறுமதி ரூ.218.77

வரையறுக்கப்பட்ட லங்கா நிதியியல் பணிகள் பணியகம் - 2021 நவெம்பர் 30 - பங்கொன்றிற்கான தேறிய சொத்துப் பெறுமதி ரூ.-4.82

வரையறுக்கப்பட்ட இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் - 2021 திசெம்பர் 31 - பங்கொன்றிற்கான தேறிய சொத்துப் பெறுமதி ரூ.21,097.00

## 16. வங்கிகளுக்கான கடன்கள்

| | 2021<br>ரூ. 000 | 2020<br>ரூ. 000 |
|---|---|---|
| வங்கிகளுக்கான கடன்கள் (குறிப்பு 16.1) | **90,621,674** | 111,641,894 |
| **கழிக்குக:** வங்கிகளுக்கான கடன்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு (குறிப்பு 16.2) | **(48,928)** | (154,368) |
| | **90,572,746** | 111,487,526 |

### 16.1 வங்கிகளுக்கான கடன்கள்

இக்கடன்களானவை நாணய விதிச் சட்டத்தின் அத்தியாயம் V இன் பகுதி III 'அ' இற்கிணங்க, உற்பத்தித்திறன் தேவைகளுக்காக கடன் கொடுத்தலை வசதிப்படுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ளன.

| | 2021<br>ரூ. 000 | 2020<br>ரூ. 000 |
|---|---|---|
| நடுத்தர மற்றும் நீண்ட கால கொடுகடன் திட்டம் | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | **20,368** | 22,563 |
| வடக்கு மற்றும் கிழக்கில் பாதிக்கப்பட்ட வீடுகளின் திருத்தம் **(குறிப்பு 16.1.1)** | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | **89,707** | 10,994 |
| கட்டுமானத்துறைக்கான திரவத்தன்மை வசதி **(குறிப்பு 16.1.2)** | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | **-** | 4,934,335 |
| - ஏனையோர் | **-** | 11,185 |
| சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி **(குறிப்பு 16.1.3)** | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | **60,373,446** | 72,901,250 |
| - ஏனையோர் | **9,245,265** | 10,701,621 |
| சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல் மீள்நிதியிடல் வசதி **(குறிப்பு 16.1.4)** | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | **8,644,208** | 16,277,700 |
| - ஏனையோர் | **3,173,742** | 6,782,246 |
| சௌபாக்கியா கடன் திட்டம் **(குறிப்பு 16.1.1)** | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | **6,850,588** | - |
| - ஏனையோர் | **2,211,334** | - |
| இம வங்கியின் கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கடன்கள் | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | **13,016** | - |
| | **90,621,674** | 111,641,894 |

**16.1.1** வடக்கு மற்றும் கிழக்கில் சேதமைடந்க வீடுகளை புனரமைத்தலிருந்தான ரூ. 82.05 மில்லியன் அத்துடன் சௌபாக்கிய கடன் திட்டத்திலிருந்தான ரூ. 9,061.92 மில்லியன் தொகை கொண்ட கடன் நிலுவைகளானது பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் திட்டங்களின் ஒருங்கிணைப்பிலிருந்தான வங்கியின் நிதியியல் கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டன.

**16.1.2** கட்டுமானத் துறைக்கான திரவத்தன்மை வசதி: அரசாங்கத்திடமிருந்து பெறப்பட வேண்டிய பணம் நிலுவையிலிருக்கும் ஒப்பந்தக்காரர்கள்/ வழங்குநர்களின் நிதியிடல் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு வர்த்தக வங்கிகளுக்கு நிதியங்களை வழங்கும் பொருட்டு, இவ்வசதியானது இலங்கை மத்திய வங்கியினால் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 83இன் கீழ் பிரத்தியேகமான கொடுகடன் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது. இக்கடன் வசதி திசெம்பர் 31ஆம் நாளன்று முழுமையாகச் செலுத்தப்பட்டது.

**16.1.3** சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளிப்பு வசதி: கொவிட்-19 நோய்ப்பரம்பலினால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தின் மீட்சிக்கு ஆதரவளிப்பதற்காக, கொவிட்-19 நோய்ப்பரம்பலினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு கடன் வழங்கப்பட வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில், 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 83இன் கீழ் இப்புதிய கொடுகடன் திட்டத்தை இலங்கை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியது.

**16.1.4** சௌபாக்கியா புத்துயிரளிப்பு மீள்நிதியிடல் வசதி: கொவிட்-19 நோய்ப்பரம்பலினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர துறை தொழில்முயற்சிகளை மீட்டெடுப்பதற்காகவும் நாட்டில் பொருளாதார நடவடிக்கையை ஊக்குவிப்பதற்காகவும் சௌபாக்கியா கடன் திட்டத்தின் கீழ் ஒரு புதிய மீள்நிதியிடல் வசதியை இலங்கை மத்திய வங்கி ஆரம்பித்தது.

### 16.2 வங்கிகளுக்கான கடன்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களிலான அசைவு

| | 2021 | | | | 2020 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | கட்டம் 1 ரூ. 000 | கட்டம் 2 ரூ. 000 | கட்டம் 3 ரூ. 000 | மொத்தம் ரூ. 000 | கட்டம் 1 ரூ. 000 | கட்டம் 2 ரூ. 000 | மொத்தம் ரூ. 000 |
| சனவரி 1 இல் உள்ளவாறான நிலுவை | 6,215 | 148,153 | - | 154,368 | - | 35 | 35 |
| ஆண்டு காலப்பகுதியிலான விதிப்பு/ (மீளளித்தல்) | 8,220 | (126,676) | 13,016 | (105,440) | 6,215 | 148,118 | 154,333 |
| **திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை** | **14,435** | **21,477** | **13,016** | **48,928** | 6,215 | 148,153 | 154,368 |

### 17. ஏனைய சொத்துக்கள்

| | 2021 ரூ. 000 | 2020 ரூ. 000 |
|---|---|---|
| **நிதியியல் சொத்துக்கள்** | | |
| உள்ளக நிதியங்களின் முதலீடுகள் | **16,490,667** | 13,319,452 |
| **கழிக்குக:** சொத்துக்களின் மீதான பெறுமதியிழப்பிற்கான ஏற்பாடு **(குறிப்பு 17.1)** | **(280)** | (79,572) |
| உள்ளக நிதியங்களின் தேறிய முதலீடு | **16,490,387** | 13,239,880 |
| பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் திட்டங்களின் முதலீடுகள் | **5,380,169** | - |
| **கழிக்குக:** பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் முதலீடுகள் மீதான எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு **(குறிப்பு 17.2)** | **(150)** | - |
| | **5,380,019** | - |
| பதிவழிக்கப்பட்ட செலவில் அலுவலர் கடன்கள் | **5,592,375** | 5,569,225 |
| திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களிலிருந்து பெறத்தக்கவை | **4,087,983** | 597,774 |
| ஏனைய பெறத்தக்கவைகள் | **2,258,932** | 1,649,540 |
| **கழிக்குக:** ஏனைய பெறத்தக்கவைகள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு **(குறிப்பு 17.3)** | **(2,226,887)** | (183,276) |
| | **9,712,403** | 7,633,263 |
| | **31,582,809** | 20,873,143 |
| **நிதியல்லாச் சொத்துக்கள்** | | |
| அலுவலர் கடன் தொடர்பான பிற்போடப்பட்ட சொத்து | **2,480,961** | 2,224,046 |
| | **34,063,770** | 23,097,189 |

### 17.1 உள்ளக நிதியங்களின் முதலீடுகளின் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிலான அசைவு

| | 2021 | | | 2020 | | |
|---|---|---|---|---|---|---|
| | கட்டம் 1 ரூ. 000 | கட்டம் 2 ரூ. 000 | மொத்தம் ரூ. 000 | கட்டம் 1 ரூ. 000 | கட்டம் 2 ரூ. 000 | மொத்தம் ரூ. 000 |
| சனவரி 1இலுள்ளவாறான நிலுவை | **48** | **79,524** | **79,572** | 15,617 | 16 | 15,633 |
| ஆண்டு காலப் பகுதியிலான விதிப்பு/ (மீளளித்தல்) | **(9)** | **(79,283)** | **(79,292)** | (15,569) | 79,508 | 63,939 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை | **39** | **241** | **280** | 48 | 79,524 | 79,572 |

**17.2 பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் முதலீட்டுத் திட்டங்கள் மீதான எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிலான அசைவு**

| | 2021 கட்டம் 1 ரூ. 000 | 2020 கட்டம் 1 ரூ. 000 |
|---|---|---|
| சனவரி 1 இல் உள்ளவாறான நிலுவை | **-** | - |
| ஆண்டு காலப்பகுதியிலான விதிப்பு | **150** | - |
| **திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை** | **150** | - |

**17.3 ஏனைய பெறத்தக்கவைகள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு**

| | 2021 கட்டம் 3 ரூ. 000 | 2020 கட்டம் 3 ரூ. 000 |
|---|---|---|
| சனவரி 1 இல் உள்ளவாறான நிலுவை | **183,276** | 175,275 |
| ஆண்டு காலப்பகுதியிலான விதிப்பு | **-** | 8,001 |
| பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் திட்டங்களிலிருந்து மாற்றல் செய்யப்பட்டவை | **2,043,611** | - |
| **திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை** | **2,226,887** | 183,276 |

**18. தங்கம்**

இது நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 67(1) மற்றும் பிரிவு 67(2) இனால் தேவைப்படுத்தப்பட்டவாறு, பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக வைத்திருக்கப்படும் பௌதீக ரீதியான தங்கத்தின் பெறுமதியாகும். நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 67(2) இன்படி, நாணயச் சபை குறைந்ததொரு அணு ஒதுக்காவது தங்க வடிவிலோ அல்லது மத்திய வங்கியால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இலகுவாக தங்கமாக மாற்றக்கூடிய நாணய வடிவிலோ வைத்திருப்பதற்கு முயல வேண்டும்.

**19. இருப்புக்கள்**

| | 2021 ரூ. 000 | 2020 ரூ. 000 |
|---|---|---|
| சுற்றோட்டத்திலுள்ள நாணயத் தாள்கள் | **1,788,014** | 2,294,967 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயக் குத்திகள் | **2,821,514** | 3,519,159 |
| வழங்குநரிடமிருந்தான இடைப்போக்கிலுள்ள நாணயக் குத்திகள் | **-** | 31,876 |
| வழங்குநரிடமிருந்தான இடைப்போக்கிலுள்ள நாணயத் தாள்கள் | **253,168** | 440,203 |
| | **4,862,696** | 6,286,205 |
| **கழிக்குக:** மெதுவாக அசையும் இருப்புக்களுக்கான ஏற்பாடு | **(2,446)** | (45,000) |
| | **4,860,250** | 6,241,205 |
| எழுதுகருவிகளும் நானாவித இருப்புகளும் | **68,124** | 60,306 |
| மருத்துவ நிலைய இருப்புக்கள் | **159** | 308 |
| **மொத்த இருப்புக்கள்** | **4,928,533** | **6,301,819** |

2021 காலப்பகுதியில் ரூ.2,780.25 மில்லியன் (2020இல் ரூ.2,396.89 மில்லியன்) பெறுமதியான இருப்புக்கள் ஆண்டுகாலப்பகுதியில் செலவினமாக அங்கீகரிக்கப்பட்டு “இருப்பின் கிரயம்” (புதிய நாணய வழங்கல் செலவு) ஆக உள்ளடக்கப்பட்டது.

**20. ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

| கிரயம் | காணியும் கட்டடமும் | பொறி மற்றும் பொறி ஒருங்கிணைப்புக்கள் | தளபாடங்களும் உபகரணங்களும் | உந்து ஊர்திகள் | கணனிகள் | சொத்துக்களின் பாவனை உரிமை | ஏனையவை | நடைபெற்று வரும் கட்டுமானம் | 2021 மொத்தம் | 2020 மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **சனவரி 1இல் உள்ளவாறு** | **19,166,963** | **1,584,031** | **1,383,500** | **561,293** | **1,073,355** | **71,125** | **57,490** | **129,010** | **24,026,767** | 20,698,837 |
| ஆண்டுகாலப்பகுதியில் சேர்க்கப்பட்டவை | **-** | **51,196** | **25,984** | **50,500** | **74,548** | **9,114** | **247** | **82,234** | **293,823** | 264,225 |
வரலாற்று ரீதியான தாழ்ந்த வட்டி வீதச் சூழலுக்கும் கொவிட்-19 நோய்ப்பரவலின் தொடர்ச்சியான நிச்சயமற்ற நிலைமைக்கும் மத்தியில் நிதியத்தின் முதலீட்டுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. நிதியத்தின் உபாயச் சொத்து ஒதுக்கீட்டுடன் இசைந்து செல்லும் விதத்தில், ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களமானது அதன் நிதியங்களில் பாரிய பகுதியொன்றை அரசாங்கப் பிணையங்களில் முதலிடுவதை தொடர்ந்தும் மேற்கொண்டது. ஒட்டுமொத்த சொத்துப்பட்டியல் மீதுமான தாழ்ந்த வட்டி வீதங்களின் தாக்கத்தினை தணிப்பதற்காக, ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களமானது குறுங்கால மற்றும் நடுத்தரகால அரசாங்கப் பிணையங்களில் முதலீடுசெய்தது. எவ்வாறாயினும், ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களமானது தாழ்ந்த வட்டி வீதச் சூழலின் பின்னணியில், அதன் உறுப்பினர்களுக்கு நியாயமான ஆதாய வீதத்தினை வழங்குவதற்கான தேவையினைக் கருத்திற்கொண்டு, அதன் முன்னுரிமை நீண்டகால அரசாங்கப் பிணையங்களிலும் (5 ஆண்டுகளுக்கு மேல்) முதலீடு செய்தது. ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களமானது மூலதன வருவாய்களை தேறல்செய்வதற்கு தெரிவுசெய்யப்பட்ட பங்குகளை அப்புறப்படுத்துவதன் மூலம் உள்நாட்டு பங்குரிமைச் சந்தையில் சாதகமான எண்ணப்பாங்கினைப் பயன்படுத்திக் கொள்வதற்கான வழிமுறைகளையும் மேற்கொண்டது. தாழ்ந்த வட்டி வீதக் கட்டமைப்பினைக் கருத்திற்கொண்டு, நிறுவன தொகுதிக்கடன்களிலான முதலீட்டு வாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்த அதேவேளையில், ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களமானது ஊழியர் சேமலாப நிதியத்தின் நிறுவனத் தொகுதிக்கடன் சொத்துப்பட்டியலின் கொடுகடன் இடர்நேர்வினை தணிப்பதற்கு சிறந்த கொடுகடன் தரமிடல்களுடன் கூடிய நிறுவனங்களில் முதலிடுவதற்கான தேவை தொடர்பிலும் விழிப்புடன் இருந்தது.

அதற்கிணங்க, 2021 இறுதியிலுள்ளவாறு, ரூ.3,173.3 பில்லியன் பெறுமதியான முதலீட்டுச் சொத்துப்பட்டியலானது அரசாங்கப் பிணையங்களில் 93.2 சதவீதத்தையும், பங்குரிமைகளில் 3.8 சதவீதத்தையும் நிறுவனத் தொகுதிக்கடன்களில் 0.8 சதவீதத்தையும் நிலையான வைப்புக்களில் 1.8 சதவீதத்தையும் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பந்தங்களில் எஞ்சிய 0.4 சதவீதத்தையும் உள்ளடக்கியிருந்தது.

**(ஈ) உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டிக்கொடுப்பனவு**

ஊழியர் சேமலாபத் திணைக்களமானது 2021 இறுதியில் காணப்பட்ட உறுப்பினர் நிலுவைகள் மீது 9.00 சதவீத வட்டி வீதத்தினை பிரகடனப்படுத்துவதற்கான வழிமுறைகளை மேற்கொண்டிருந்தது. அதற்கிணங்க, கடந்த 10 ஆண்டுகளில் ஊழியர் சேமலாப நிதியத்தினால் அதன் உறுப்பினர்களுக்கு உயர்வான வட்டி வீதத்தினை செலுத்துவதற்கு இயலுமாகவிருந்தது.

**(உ) உறுப்பினர் பணிகளில் ஈடுபடுதல்**

**(i) உறுப்பினர் கணக்குக் கூற்றுக்களை வழங்குதல்**

செயற்பாட்டு உறுப்பினர்களுக்கு நிதியத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள அவர்களின் தொழில்தருநர்களினூடாக அரையாண்டு அடிப்படையில் உறுப்பினர் கணக்குக் கூற்றுக்கள் விநியோகிக்கப்படுகின்றன. அதற்கிணங்க, 2020ஆம் ஆண்டின் முதலாம் அரையாண்டினதும் இரண்டாம் அரையாண்டினதும் உறுப்பினர் கணக்குக் கூற்றுக்கள் 2021 காலப்பகுதியில் விநியோகிக்கப்பட்டிருந்தன. (அட்டவணை II - 9).

அட்டவணை II - 9
**உறுப்பினர் கணக்குக் கூற்றுக்களை வழங்குதல்**

| காலப்பகுதி | தொழில்தருநர்களின் எண்ணிக்கை | கூற்றுக்களின் எண்ணிக்கை (செயற்பாட்டு உறுப்பினர்கள்) |
|---|---|---|
| 2020 முதலரையாண்டு | 69,998 | 1,999,486 |
| 2020 இரண்டாமரையாண்டு | 77,912 | 2,451,346 |

மூலம் : ஊ.சே.நி. திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**(ii) வீடமைப்புக் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு வசதியளிப்பதற்காக உறுப்பினர்களுக்கு உத்தரவாதச் சான்றிதழ்களை வழங்குதல்**

வீடமைப்புக் கடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ், 2021 காலப்பகுதியில், ரூ.5,423 மில்லியன் தொகையுடைய வீடமைப்புக் கடன்களின் ஒப்புதலுக்காக பங்கேற்கும் கடன்வழங்கல் நிறுவனங்களுக்கு உறுப்பினர்களின் ஊழியர் சேமலாப நிதியத்தின் நிலுவைகளுக்கெதிராக 9,068 கடன் உத்தரவாதச் சான்றிதழ்களை ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம் வழங்கியது (அட்டவணை II - 10). மேலும், 2021 காலப்பகுதியில், தொடர்புடைய உறுப்பினர் கணக்குகளிலிருந்து அண்ணளவாக ரூ.3,573 மில்லியன் கழிக்கப்பட்டு 2020 ஆண்டுக்காக தொடர்புடைய உறுப்பினர்களின் நிலுவையிலுள்ள கடன்களை தீர்ப்பனவுசெய்வதற்கு பங்கேற்கின்ற கடன்வழங்கும் நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டது.

அட்டவணை II - 10
**வீடமைப்புக் கடன் உத்தரவாத வசதி**

| ஆண்டு | வழங்கப்பட்ட சான்றிதழ்கள் (எண்ணிக்கை) | ஒப்புதலளிக் கப்பட்டதொகுதிடன் (ரூ.மில்.) | கடன் வழங்கல் நிறுவனங்களுக்கு செலுத்திய தொகை (ரூ.மில்.) |
|---|---|---|---|
| 2017 | 10,998 | 4,946 | 2,485 |
| 2018 | 10,036 | 4,974 | 2,759 |
| 2019 | 10,022 | 5,097 | 3,164 |
| 2020 | 8,537 | 4,497 | 3,321 |
| 2021 | 9,068 | 5,423 | 3,573 |

மூலம் : ஊ.சே.நி. திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**(iii) ஓய்வுபெறுவதற்கு முன்னரான மீளளிப்புத் திட்டம்**

2012ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் (திருத்தம்) சட்டத்தின் ஏற்பாடுகளினதும் அதனைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நடைமுறைகளினதும் நியதிகளுக்கமைவாக ஓய்வுபெறுவதற்கு முன்னரான மீளளிப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க, 10 ஆண்டுகளுக்கு மேலான சேவையுடைய மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்தின் கணக்கு நிலுவை ரூ.300,000 ஐ விட அதிகமாக கொண்டுள்ள உறுப்பினர்கள், 2015ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் வீடமைப்பு அல்லது மருத்துவ சிகிச்சை போன்ற நோக்கத்திற்காக ரூ. 2 மில்லியன் கொண்ட உயர்ந்த தொகைக்குட்பட்டு அவர்களின் கணக்குகளின் நிலுவையில் 30 சதவீதம் வரையில் மீள்எடுப்பனவு செய்வதற்கு தகுதியுடையவராவர். சொல்லப்பட்ட திட்டமானது ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்கள் மத்தியில் அதிக வரவேற்பினைப் பெற்றுள்ளது. 2021 ஆண்டு காலப்பகுதியில் இத்திட்டத்தின் கீழ் 16,554 பயன் பெறுநர்களுக்கு ரூ.8.8 பில்லியன் வழங்கப்பட்ட அதேவேளையில், 2021 இறுதியளவில் 197,057 பயன் பெறுநர்களுக்கு மொத்தமாக ரூ.107.1 பில்லியன் மீளளிக்கப்பட்டது.

**(iv) ஊழியர் சேமலாப நிதிய நடமாடும் பணிகள் நிகழ்ச்சித்திட்டம்**

2021 ஆண்டு காலப்பகுதியில், உறுப்பினரொருவர் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்திற்கு வருகைதந்து பெற்றுக்கொள்ளக்கூடிய பெரும்பாலும் அனைத்து பணிகளுக்கும் வசதியளிக்கின்ற நடமாடும் பணியொன்றினை ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம் மேற்கொண்டது. ஊழியர் சேமலாப நிதிய நிலுவைக் கூற்றுக்களை வழங்குதல், ஊழியர் சேமலாப நிதிய உறுப்பினர் விபரங்களைத் திருத்துதல், போலி இலக்கங்களை அகற்றுதல், ஊழியர் சேமலாப நிதியக் கணக்கினைத் திருத்துதல் மற்றும் குறுந்தகவல் பணிகளையும் இணையத்தள உறுப்பினர் பணிகளையும் ஊக்குவித்தல் என்பவற்றை இப்பணிகள் உள்ளடக்குகின்றன. மேலும், இ-சேகரிப்பு மற்றும் நேரடிப்பற்று முறைமை தொடர்பான விழிப்புணர்வு, உறுப்பினர் விபரங்களின் மீள்பதிவு மற்றும் ஒட்டுமொத்த ஊழியர் சேமலாப நிதியத்தின் நடைமுறைகள் தொடர்பில் ஆலோசனைகளை வழங்குதல் என்பவற்றையும் உள்ளடக்குகின்றது. எவ்வாறாயினும், ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த நடமாடும் பணிகள் கொவிட்-19 நோய்ப்பரவல் நிலைமையின் காரணமாக மட்டுப்படுத்தப்பட்டது.

**(v) இலத்திரனியல் ஊடகம் வாயிலாக ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்பு**

ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களமானது அதன் தற்போதுள்ள இ-சேகரிப்பு நடைமுறையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக அதன் மறுசீரமைக்கப்பட்ட உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக புதிய பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்தியமையால் 2021ஆம் ஆண்டு ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்திற்கு முக்கிய ஆண்டாக அமைந்தது. இணையத்தளத்தினூடாக தமது இ-திரட்டுக்களை சமர்ப்பிப்பதற்கும் லங்காபே அதேநேர கொடுப்பனவு தளத்தினூடாக அல்லது காசோலை மூலமாக அல்லது நேரடிப் பற்றாக பங்கேற்கின்ற உரிமம்பெற்ற வர்த்தக வங்கியூடாக இணையவழியில் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் தொழில்தருநர்களை இது இயலச்செய்தது. இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி என்பன 2021 இறுதியளவில் இவ்வசதிக்காக ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்துடன் இணைந்துக்கொண்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளாகும். வெற்றிகரமான பங்களிப்பொன்றின் மீது 24 மணித்தியாலங்களில் தனிப்பட்ட உறுப்பினர் கணக்குகளை இற்றைப்படுத்துவதை மேலும் துரிதப்படுத்துதல் இப்புதிய முறைமையின் முக்கியமான பண்புகளிலொன்றாகும். மேலும், ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தினுடைய தரவுத்தளத்திலுள்ள தொடர்புடைய விபரங்களுடன் ஒப்பிடுவதனூடாக பங்களிப்பு விபரக் கோவையில் அடங்கியுள்ள உறுப்பினர் பதிவுகளின் துல்லியத்தன்மையை உறுதிசெய்வதற்கு தொழில்தருநர்களுக்கு இது வசதியளிக்கின்றது. இது அனைத்தையுமுள்ளடக்கிய தரவுத்தளமொன்றினை நிறுவுவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாக இருக்குமென்பதால் எதிர்காலத்தில் உறுப்பினர்களுடைய விபரத் திருத்தங்களில் பூச்சிய அல்லது ஆகக்குறைந்த முயற்சிகளை வேண்டிநிற்கும்.

2021 இறுதியளவில், இ-திரட்டு சமர்ப்பித்தல் முறைமையில் தொழில்தருநர்களின்பங்களிப்பானது, செயற்பாட்டிலிருக்கின்ற உறுப்பினர் கணக்குகளின் ஏறத்தாழ 88 சதவீதத்தையும் மொத்த மாதாந்த ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புகளில் ஏறத்தாழ 88 சதவீதத்தையும் உள்ளடக்கி 10,069 இலிருந்து 11,260இற்கு அதிகரித்திருந்தது. மேலும், ஊழியர் சேமலாப நிதியத்தின் ஆர்வலர்களுக்காக இ-திரட்டு சமர்ப்பித்தல் நடைமுறை மற்றும் அதன் நன்மைகள் தொடர்பிலான மேலதிக விழிப்புணர்வை தொழில்தருநர்களுக்கு ஏற்படுத்துவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட அதேவேளையில், உரிய நேரத்தில் உறுப்பினர் கணக்குகளுக்கு பங்களிப்புக்கள் வரவுவைக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு இலத்திரனியல் தொடர்புகளில் உறுப்பினர் கணக்குகளின் வேறுபாடுகளுடன் தொடர்புடைய பிரச்சினைகளை திருத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வதன் முக்கியத்துவத்தினை வலியுறுத்துகின்றது.

**(vi) ஊழியர் சேமலாப நிதிய உறுப்பினர்களின் மீள்பதிவு**

நாட்டில் நிலவிய கொவிட்-19 நோய்ப்பரவல் நிலைமைகளினால் ஏற்பட்ட இடையூறுகளின் காரணமாக 2021 ஆண்டு காலப்பகுதியில் சிறிய பின்னடைவு அவதானிக்கப்பட்டபோதிலும், 18,758 உறுப்பினர்கள், தனித்துவமான அடையாளப்படுத்தல் இலக்கமாக பயன்படுத்தப்படுகின்ற அவர்களின் தேசிய அடையாள அட்டையின் விபரங்களுக்கமைவாக மீள்பதிவு செய்யப்பட்டனர். 2021 ஆண்டின் இறுதியளவில் மீள்பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 1,656,019 ஆகக் காணப்பட்டது.

மேலும், ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களமானது அதிக எண்ணிக்கையிலான செயற்பாட்டு உறுப்பினர்களை உள்ளடக்குவதற்கு 2022இல் உறுப்பினர்களை மீள்பதிவுசெய்கின்ற செயல்முறையை துரிதப்படுத்துகின்ற நோக்குடன், ஆட்களைப் பதிவுசெய்கின்ற திணைக்களத்தின் தரவுத்தளத்திற்கான அணுகுவழியைப் பெற்றுக்கொண்டதன் அடிப்படையில் 2021இல் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது.

**(vii) உறுப்பினர்களுக்கான ஏனைய பணிகள்**

ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் பொதுமக்கள் தொடர்புகள் மற்றும் விசாரணைகள் கருமபீடமானது கொவிட்-19 நோய்ப்பரவலுடன்கூடிய சவால்மிக்க ஆண்டொன்றினை 2021இல் நிறைவுசெய்தது. ஆண்டு காலப்பகுதியில் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களமானது திணைக்களத்திற்கு வருகைதந்த 96,561 உறுப்பினர்களுக்கு/தொழில்தருநர்களுக்கு அதன் பணிகளை வழங்கியதுடன் தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் மின்னஞ்சல்கள் ஊடாக முறையே 50,071 மற்றும் 11,059 உறுப்பினர் விசாரணைகளை மேற்கொண்டிருந்தது. மேலும், திணைக்களமானது உறுப்பினர்கள், தொழில்தருநர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்கள் ஆகியோரிடமிருந்து 76,759 கடிதங்களைப் பெற்றுக்கொண்டது.

2021ஆம் ஆண்டில், ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் பதிவுகள் திருத்தற் பிரிவானது உறுப்பினர்களின் பெயர் மற்றும் தேசிய அடையாள அட்டை விபரங்களின் பொருத்தப்பாடின்மையை சீர்செய்வதற்கு 33,400 ஊழியர் சேமலாப நிதிய பதிவுத் திருத்தங்களை மேற்கொண்ட அதேவேளையில், தொடர்புடைய உறுப்பினர்களின் சரியான கணக்கு நிலுவைகளையும் இற்றைப்படுத்தியது. ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தின் தரவுத்தளத்தின் அணுகுவழியுடன், ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தினால் அதன் உறுப்பினர்களுக்கு குறிப்பாக பதிவுத் திருத்த கட்டத்தில் அவர்களின் அடையாளத்தின் சரிபார்த்தலை துரிதப்படுத்துவதற்கு இயலுமாயிருந்தது.

**(ஊ) செயன்முறை முன்னேற்றமும் இயலளவு விருத்தியும்**

2021 ஏப்பிறலில் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தில் நிறுவப்பட்ட பிரத்தியேகமான பிரிவான செயன்முறை முன்னேற்றம் மற்றும் இயலளவு அபிவிருத்திப் பிரிவானது ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்ப முறைமையை இற்றைப்படுத்துவதற்கும் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற ஏதேனும் புத்தாக்க முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கும் உலக வங்கியினால் முன்மொழியப்பட்ட நிதியியல்த் துறை நவீனமயப்படுத்தல் கருத்திட்டத்திற்கும் முதன்மையான மையப்பகுதியாக விளங்கும்.

2021 ஆண்டு காலப்பகுதியில், ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களமானது அதன் அங்கத்தவர்களுக்கு இணையவழி பங்களிப்புத் தளம் போன்ற மேம்படுத்தப்பட்ட பணிகளுக்கு வசதியளிக்கின்ற ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினை மீளத் தொடங்கி வைப்பதற்கு வெற்றிகரமாக செயற்பட்டது. இத்தளமானது 2022 காலப்பகுதியில் கையடக்கத் தொலைபேசியை அடிப்படையாகக்கொண்ட கொடுப்பனவு நுழைவுடன் உறுப்பினர்களுக்கு வசதியளிக்கக்கூடிய மேலதிக மேம்படுத்தல்களுக்குட்பட்டுள்ளது.

2021இன் இறுதி இரு காலாண்டுப்பகுதிகளில், இலங்கை மத்திய வங்கிக்கும் அதன் ஆலோசகராகவும் கருத்திட்ட முகாமையாளராகவுமுள்ள இலங்கை மத்திய வங்கியால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறைஸ்வோற்றர்ஹவுஸ் கோப்பர்ஸ் இந்தியா நிறுவனத்திற்கும் இடையிலான ஒப்பந்தத்தை இறுதிசெய்வதை நோக்கி ஊழியர் சேமலாப நிதியம் பணியாற்றியது. இக்குறித்த ஆலோசனை ஏற்பாடு, ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் புத்தாக்கம் மற்றும் இறுதிப்படுத்தலை அறிமுகப்படுத்துவதற்கும் மேம்படுத்தப்பட்ட உறுப்பினர் பணிகளுடன் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தில் அதிநவீன புதிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வினை நடைமுறைப்படுத்துவதற்கும் வியாபாரச் செயன்முறைகளை மீளவடிவமைப்பதற்கும் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## 9. வசதிகள் முகாமைத்துவம்

2021 ஆண்டு காலப்பகுதியில் நிலவிய நோய்த்தொற்று நிலைமைகளினால் தூண்டப்பட்ட கொந்தளிப்புமிக்க வெளிப்புறக் காரணிகளுக்கு மத்தியில், ஆக்கபூர்வமான பணிச் சூழலொன்றை உருவாக்கும் நோக்கில் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களமானது கட்டட ஆதனங்களை பராமரித்து தரமுயர்த்துவதனூடாக இலங்கை மத்திய வங்கியின் வசதிகளை மேம்படுத்தும் அதன் வகிபாகத்தினை தொடர்ந்தும் முன்னெடுத்தது. திணைக்களத்தின் இந்நோக்கங்களை எய்தும் நோக்கில்,ஆதனங்கள் அவற்றின் ஆயுட்காலத்தின் மூன்றாம் தசாப்தத்திற்குள் காலடிவைக்கின்றது என்ற உண்மையைக் கருத்திற்கொண்டு, கழிவறைகளைப் புதுப்பித்தல், சமயலறை களஞ்சிய அலகுகளை மாற்றீடுசெய்தல், இனங்காணப்பட்ட பிரதேசங்களுக்குத் தேவையான நீர் உட்புகாமை காப்பு மற்றும் இனங்காணப்பட்ட மின்சார-இயக்கமுறைசார் முறைமைகளை மாற்றீடுசெய்தல் உள்ளடங்கலாக இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகக் கட்டடங்களின் வசதிகளை மேம்படுத்துவதற்காக பல்வேறு துரித நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. தொடர்புடைய காலப்பகுதியில் ஜோன் எக்ஸ்டர் பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தின் ஒலி முறைமையை தரமுயர்த்துவதற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டமை இலங்கை மத்திய வங்கியில் கிடைக்கக்கூடிய முக்கிய வளங்களுள் ஒன்றுக்கான மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்று முயற்சியாக அமைந்தது. அதேவேளை, இலங்கை மத்திய வங்கியில் புதிதாக தாபிக்கப்பட்ட திணைக்களங்களுக்கு இடமமைப்பதற்குத் தேவையான உட்புற ஒழுங்கேற்பாடுகள் இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகக் கட்டடத்தில் துரிதமாக மேற்கொள்ளப்பட்டன. மேலும், வங்கியில் ஏற்கனவேயுள்ள வாகனத் தொகுதியின் இயங்கு நிலையை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளும் மேற்கொள்ளப்பட்டன.

ஆய்விற்குரிய காலப்பகுதியில், இலங்கை மத்திய வங்கிக்கு உரித்தான லொயிட்ஸ் கட்டடத்தில் இயங்கி வந்த ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தை இடமாற்றுவதற்காக இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்திலிருந்து ஆகக்கூடிய சாத்தியமான அலுவலக இடப்பரப்பினை ஒதுக்கீடு செய்வதற்கு தேவையான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், குத்தகையாளரினால் பகுதியளவில் விடுவிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கிக்குச் சொந்தமான வைட்வேய்ஸ் கட்டடத்தில் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகள் மீண்டும் இடமாற்றப்பட்டன. இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் தீர்மானத்திற்கு இணங்குகின்ற விதத்தில், 2021ஆம் ஆண்டு காலப்பகுதியில், அமைச்சரவை அலுவலகத்தை தாபிப்பதற்காக லொயிட்ஸ் கட்டடத்தின் சொத்தாண்மை இலங்கை அரசாங்கத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது.

ராஜகிரிய வளாகத்தில் அமைந்துள்ள வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தில் அமைந்துள்ள சவோரின் கற்கை நிலையத்தில் புதிய மூடிய மின்சுற்று தொலைக்காட்சி (CCTV) முறைமையொன்று நிறுவப்பட்டதுடன் கருத்திற்கொள்ளப்படும் ஆண்டு காலப்பகுதியில் அதே இடத்தில் நுழைவு கட்டுப்பாட்டு முறைமையொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், வழங்கப்படுகின்ற பணிகளை திறம்பட வழங்குவதற்கு கிடைக்கக்கூடிய நவீன தொடர்பூட்டல் முறைமையின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு, மாத்தறை பிரதேச அலுவலகத்தில் தனியார் தன்னியக்க கிளைப் பரிவர்த்தனை நிறுவப்பட்டது. கதிர்காமம், நுவரெலியா, சோமாவதிய மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களில் அமைந்துள்ள இலங்கை மத்திய வங்கியின் ஓய்வு விடுதிகளின் பராமரிப்புப் பணிகளும் தரமுயர்த்தல் பணிகளும் 2021 ஆண்டு காலப்பகுதியில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டதுடன் புதிய சமயலறை களஞ்சிய அலகுகளை நிறுவுவதனூடாக நுவரெலியா ஓய்வு விடுதியின் வசதிகள் மேம்படுத்தப்பட்டன.

ஆய்விற்குரிய ஆண்டு காலப்பகுதியில், பிரதேச அலுவலக நடவடிக்கைகளை பிரதேச மட்டத்தில் மேலும் வலுப்படுத்தும் நோக்கில் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம் வாகனங்களுடனான வாகன ஓட்டுநர் பணிகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு வசதியளித்து பிரதேச அலுவலகங்களின் பயன்பாட்டிற்காக வழங்கியது. மேலும், புதிய வாகனங்கள் கொள்வனவு செய்யக்கூடிய அத்தகைய காலம் வரும் வரையில் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களத்தில் தற்போது கிடைக்கக்கூடிய வாகனத் தொகுதி தேவையான பராமரிப்புடனும் பழுது பார்த்தல்களுடனும் மேலும் வலுவூட்டப்பட்டது. மேலும், கடமைகளை நேரடியாக அறிக்கையிட வேண்டுமென ஒவ்வொரு திணைக்களத்தினாலும் தீர்மானிக்கப்பட்டதற்கிணங்க, அத்தியாவசியமான அலுவலர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காகவும் 2021 ஆண்டு காலப்பகுதியில் பயணத்தின் போது குறைவான சமூகத் தொடர்புகளை உறுதிசெய்வதற்கு இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களுக்கு பிரத்தியேக போக்குவரத்துச் சேவையை வழங்குவதற்காகவும் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களத்தினால் விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

நோய்த்தொற்றின் காரணமாக நிலவிய பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் சமூக இடைவெளித் தேவைப்பாடுகள் என்பவற்றின் காரணமாக ஆய்விற்குரிய காலப்பகுதி வசதிகள் முகாமைத்துவத் திணைக்களத்திற்கு சவால்மிக்க ஆண்டாகக் காணப்பட்டது. வசதிகள் முகாமைத்துவத் திணைக்களமானது கொவிட்-19 நோய்த்தொற்றிலிருந்து அலுவலர்களையும் குடியிருப்பாளர்களையும் பாதுகாக்கின்ற அதேவேளையில், சூழல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு அம்சங்களை வலியுறுத்தி அலுவலர்கள், வருகைதருநர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் ஆகியோருக்கு மட்டுப்பாடுகளை விதிப்பதனூடாகவும் பொருத்தமான பல்வேறு தடுப்பு வழிமுறைகளை மேற்கொள்வதனூடாகவும் இலங்கை மத்திய வங்கிக்குள் கொவிட்-19 நெறிமுறையினை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டது.

வசதிகள் முகாமைத்துவத் திணைக்களமானது வழமைபோல கட்டடத்தின் இன்றியமையாத பணிகளை பேணுவதை தொடர்ந்தும் மேற்கொண்டதுடன் அதன் முக்கிய பொறுப்புக்களின் பாகமாக போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பூட்டல் என்பவற்றிற்குத் தேவையான ஆதரவுப் பணிகளையும் வழங்கியது.

## 10. நிதி திணைக்களம்

நிதித் திணைக்களம், பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள்/ பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் தொடர்பான ஏற்பாட்டு நியதிகள் என்பனவற்றிற்கிணங்க இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் தொழிற்பாடுகளுக்குப் பொறுப்பாக இருக்கின்றது. 2002 தொடக்கம் இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் பின்பற்றப்படுகின்றன. நிதித் திணைக்களத்தின் தொழிற்பாடுகள் மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்தல், மத்திய வங்கியின் வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் கண்காணித்தல், மத்திய வங்கியின் உள்ளக மற்றும் வெளியகத்

தரப்பினருக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல், கொடையாளர் நிதியங்களை பகிர்ந்தளித்தல் மற்றும் அரச வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்தல், நிதியியல் கொடுக்கல் வாங்கல்களின் உள்ளக அறிக்கையிடலுக்கான முறைமைகளைப் பேணுதல், 17 உள்ளக நிதியங்களின் முதலீட்டுச் சொத்துப் பட்டியலை முகாமை செய்தல், மத்திய வங்கியின் நிலையான சொத்துப் பதிவேட்டினைப் பேணுதல் மற்றும் அலுவலர் கடன்களின் தரவுத்தளத்தைப் பேணுதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

### 10.1 நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு

i. மாதாந்த ஐந்தொகை: நாணய விதிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கிணங்க, அரச வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக 2020 திசெம்பர் மற்றும் 2021 சனவரி - நவெம்பர் காலப்பகுதிக்கான மாதாந்த ஐந்தொகைகள் தயாரிக்கப்பட்டன.

ii. காலாண்டு ரீதியான அறிக்கைகள்: இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் செயலாற்றம் மற்றும் நிதியியல் நிலைமை தொடர்பான அறிக்கை நாணயச் சபைக்கு காலாண்டு ரீதியில் சமர்ப்பிக்கப்பட்டன.

iii. வருடாந்த நிதியியல் கூற்றுக்கள்: கணக்குகளைத் தயாரிப்பதற்கான கணக்கீட்டு முறைமைகளும் நடவடிக்கை முறைகளும் 2021 திசெம்பர் இறுதியிலுள்ளவாறான தொடர்பான கணக்கீட்டு நியமங்களுடனும் தேவைப்பாடுகளுடனும் இணங்கிச் செல்வதற்காக இற்றைப்படுத்தப்பட்டன. 2021 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான மத்திய வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் ஆண்டறிக்கையின் பகுதி II இல் காட்டப்பட்டுள்ளன.

### 10.2 வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தினை தயாரித்தல்

2022ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் வருடாந்த வரவு செலவுத்திட்டம் (பாதீடு) மற்றும் மூலதன பாதீடு மத்திய வங்கியின் ஒவ்வொரு திணைக்களத்தினதும் உபாயத் திட்டத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்ட நடவடிக்கைகள் திட்டங்களுக்கிணங்க “நிகழ்நிலை வரவு செலவுத்திட்ட முறைமை” இனைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டன. இலங்கை மத்திய வங்கியின் 2022இன் வரவுசெலவுத் திட்டத்திற்கான நாணயச் சபையின் ஒப்புதல் 2021 திசெம்பரில் பெறப்பட்டதுடன் வரவுசெலவுத் திட்டம் 2022இன் முதல் வேலை நாளன்று திணைக்களங்களுக்கு கிடைக்கச் செய்யப்பட்டது. அதேவேளை, வரவுசெலவுத் திட்டக் கட்டுப்பாட்டின் காத்திரமான கண்காணிப்பினைக் கருத்திற்கொண்டு 2021ஆம் ஆண்டிற்கான காலாண்டு ரீதியான வரவுசெலவுத் திட்டச் செயலாற்றக் கூற்றுக்கள் நாணயச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

### 10.3 உள்ளக மற்றும் வெளியகத் தரப்பினருக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல்

i. ஊழியர் ஊதியங்கள், அலுவலர் கடன்கள், தொழிற்பாட்டுச் செலவினங்கள் போன்ற அனைத்து உள்ளகக் கொடுப்பனவுகளும் 2021இல் நேர இலக்குகளுக்குள் மேற்கொள்ளப்பட்டன.

ii. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வழங்குநர்களுக்கான அனைத்து வெளியகக் கொடுப்பனவுகளும் மத்திய வங்கியின் துணைநில் கட்டளைகளின்கீழ் குறிப்பிடப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கேற்ப மேற்கொள்ளப்பட்டன. 2021ஆம் ஆண்டுப்பகுதியில் மொத்த கொடுப்பனவுகள் 5,730ஆகக் காணப்பட்டதுடன் இதில் 5,540 உள்நாட்டு வழங்குநர்களுக்கானதாகவும் 190 வெளிநாட்டு வழங்குநர்களுக்கானதாகவும் காணப்பட்டது.

iii. 2021ஆம் ஆண்டுப்பகுதியில் பொதுத் திறைசேரி மற்றும் தொடர்பான செயற்றிட்டங்களுக்காக ரூ.617.94 பில்லியன் பெறுமதியான 3,412 பகிர்ந்தளிப்புக்களும் வெளிநாட்டுக் கடன்களின் மீள்கொடுப்பனவு தொடர்பான ரூ.1,396.55 பில்லியன் பெறுமதியான 631 தவணைக் கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டன. மேலும், ஒரு வெளிநாட்டுக் கடன் மற்றும் ஒரு கொடையாளர் நிதியிடப்பட்ட செயற்றிட்டம் என்பவற்றின் பொருட்டு இரண்டு வெளிநாட்டு வங்கிகளுடன் 2 வங்கித்தொழில் ஒழுங்குபடுத்தல்கள் 2021இல் கையொப்பமிடப்பட்டன.

### 10.4 உள்ளக நிதியங்களின் முகாமைத்துவம்

i. நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் படி, இலங்கை மத்திய வங்கியின் உள்ளக நிதியங்களின் (ஊ.சே. நிதியம் தவிர்ந்த) முதலீடுகளை முகாமை செய்வதற்காக நிதித் திணைக்களத்தில் ஒரு தனியான மத்திய அலகு நிறுவப்பட்டு, அதன் செயற்பாடுகள் 2016 மாச்சில் ஆரம்பிக்கப்பட்டன. அவை; இலங்கை மத்திய வங்கி அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியம் பெற்றவர்களின் 8 ஓய்வூதிய நிதியங்கள், நிதித் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் 4 ஏனைய நிதியங்கள், தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு நிதியம், அலுவலர் பணிகள் முகாமைத்துவ திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் 3 நிதியங்கள் மற்றும் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் செயற்றிட்ட நிதியங்கள் என்பனவாகும். இந்த அலகு 17 உள்ளக நிதியங்களை முகாமை செய்கின்றது. அவை அனைத்து நிதியங்களும் நிதித் திணைக்களத்தினால் பொது முதலீட்டுக் கொள்கையொன்றின் கீழ் முதலிடப்பட்டதுடன் தொடர்பான உரிமைத் திணைக்களங்கள் அத்தகைய நிதியங்களின் நிருவாகச் செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. நிதிய முகாமைத்துவ செயற்பாடானது, நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட முதலீட்டுக் கொள்கைக் கூற்று/ வழிகாட்டல்கள் மற்றும் உபாயச் சொத்து ஒதுக்கீட்டு வழிகாட்டல்களினால் ஆளுகைப்படுத்தப்படுகின்றது. மேலும், இது சுயாதீனமாகத் தொழிற்படுகின்ற ஒரு முன் அலுவலகம் மற்றும் பின் அலுவலகம் போன்றவற்றை உள்ளடக்குவதுடன், நிதியங்களின் முதலீட்டு நடவடிக்கைகள் துணை ஆளுநரின் தலைமையிலான உள்ளக முதலீட்டுக் கண்காணிப்புக் குழுவினால் கண்காணிக்கப்படுவதுடன், முதலீட்டு நிதியங்களைக் கண்காணித்து ஆலோசனை வழங்குவதற்கான இக்குழு 2021இல் 12 தடவைகள் சந்தித்துக் கொண்டது. முதலீடுகளின் செயலாற்றமானது தகவல் நோக்கங்களுக்காக நாணயச் சபைக்கு காலாண்டு ரீதியில் அறிக்கையிடப்பட்டன.

ii. நிதியங்கள் முக்கியமாக அரச பிணையங்கள், நிலையான வைப்புக்கள், உயர் தரமிடப்பட்ட கம்பனித் தொகுதிக் கடன்கள் மற்றும் குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவுகள் என்பனவற்றில் முதலீடு செய்யப்படுகின்றன. 2020ஆம் ஆண்டிற்கான ஆறு ஓய்வூதிய நிதியங்களின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் இந்நிதியங்களின் விதிகளுக்கிணங்க நாணயச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. 2021 இறுதியிலுள்ளவாறு, மொத்த நிதியத்தளம் ரூ.151.7 பில்லியனுக்கு அதிகரித்தது.

அட்டவணை II - 11

சொத்துப்பட்டியல் நிலைமை (ரூ.பில்)

| திணைக்களம் | 31 திசெம்பர் 2021இல் உள்ளவாறான சொத்துப் பட்டியல் பெறுமதி (முதலிடப்பட்ட பெறுமதி) | 31 திசெம்பர் 2020இல் உள்ளவாறான சொத்துப் பட்டியல் பெறுமதி (முதலிடப்பட்ட பெறுமதி) |
|---|---|---|
| நிதி | 75.3 | 64.9 |
| தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் | 70.9 | 60.4 |
| பிரதேச அபிவிருத்தி | 5.4 | 6.3 |
| அலுவலர் பணிகள் முகாமைத்துவம் | 0.06 | 0.06 |
| **மொத்தம்** | **151.7** | **131.7** |

### 10.5 நிலையான சொத்துக்களின் பதிவேடுகளைப் பேணுதல்

நிதித் திணைக்களம் பொதுப் பேரேட்டு முறைமையின் நிலையான சொத்து மாதிரியிலுள்ள நிலையான சொத்து பதிவேட்டில் மத்திய வங்கியின் நிலையான சொத்துக்களின் அனைத்துப் பதிவுகளையும் பேணுகின்றது. 2021 காலப்பகுதியில் புதிய கொள்வனவுகள், அமைவிடங்களின் மாற்றங்கள், தேய்மானங்கள் மற்றும் அகற்றல்கள் போன்ற அனைத்து மாற்றங்களும் இப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டன. 2021 காலப்பகுதியில் இப்பதிவேடானது 741 விடயங்களின் கொள்வனவுடனும் 346 பொருட்களின் அகற்றல்களுடனும் இற்றைப்படுத்தப்பட்டது.

### 10.6 அலுவலர் கடன்களின் தரவுத் தளத்தைப் பேணுதல்

நிதித் திணைக்களம், 2021ஆம் ஆண்டுப்பகுதியில் கடன்களின் அறவிடல் பதிவு செயன்முறையினை வசதிப்படுத்துவதற்காகவும் ஊழியர்களுக்கும் முகாமைத்துவத்திற்கும் தகவல்களை வழங்குவதற்காகவும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் உதவியுடன் இலங்கை மத்திய வங்கி ஊழியர்களின் கடன் தரவுத் தளத்தை தொடர்ச்சியாக இற்றைப்படுத்தியது. 2021 காலப்பகுதியில் ரூ.1.14 பில்லியன் பெறுமதியான 1,000 கடன்கள் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டன.

### 10.7 ஏனைய தொழிற்பாடுகள் - கொள்வனவுச் செயன்முறை

மத்திய வங்கியின் ஒழுங்குவிதிகளின்படி, நிதித் திணைக்களமானது, பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவிற்கான அனைத்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் மற்றும் விலைக்கோரல் சபைகளிலும் நிலையான சொத்துக்களின் அகற்றலுக்கான அளவீட்டுச் சபைகளிலும் கலந்து கொண்டது. 2021 காலப்பகுதியில் கொள்வனவுகள் தொடர்பான ஏறத்தாழ 152 விலைக்கோரல் சபைகள் மற்றும் 75 தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களில், நிதித் திணைக்களத்தின் அலுவலர்கள் திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்தினர்.

## 11. நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம்

நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிதியியல் நிறுவனங்களுக்குள் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பினை வலுப்படுத்தும் நோக்கில் 2020ஆம் ஆண்டு ஓகத்து மாதம் நிறுவப்பட்டது. திணைக்களமானது ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிறுவனங்கள் தொடர்பில் பொதுமக்களால் இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பப்படும் முறைப்பாடுகளை/குறைகளைக் கையாளுகின்ற அதேவேளை, நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு மீதான புதிய ஒழுங்குவிதிகளை அறிமுகப்படுத்துவதற்கான வழிமுறைகளை முன்னெடுத்துள்ளது. மாதாந்தம் சராசரியாக 500 முறைப்பாடுகளுடன் 2021ஆம் ஆண்டு காலப்பகுதியினுள் 6,186 முறைப்பாடுகள்/குறைகள் திணைக்களத்திற்கு கிடைத்துள்ளது. நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களத்தின் நடவடிக்கை வேண்டப்படுகின்ற முறைப்பாடுகளுள், 94 சதவீதத்திற்கும் மேலானவற்றிற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. முறைப்பாடுகளில்/குறைகளில் அநேகமானவை கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தரளவிலான வியாபாரம் மற்றும் தனிப்பட்டவர்களின் கடன் சட்ட இசைவுத் தாமதம் தொடர்பான விடயங்கள், கடன்களை மீளஅட்டவணைப்படுத்தல், உயர் வட்டி வீதங்கள், ஏற்றுக்கொள்ள முடியாத/ஒழுக்கமற்ற நடவடிக்கைகள் மற்றும் கடனட்டை வசதிகளின் முன்கூட்டிய தீர்ப்பனவு தொடர்பிலானவை என்பதை திணைக்களம் அவதானித்தது. 2021ஆம் ஆண்டு ஓகத்தில் நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களமானது கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின்/குறைகளின் பூரணத்தன்மையினை உறுதிப்படுத்துதல் மற்றும் அத்தகைய முறைப்பாடு சமர்ப்பித்தல் செயன்முறையினை விரைவுபடுத்துதல் என்பவற்றுக்காக எளிமைப்படுத்தப்பட்ட முறைப்பாடு சமர்ப்பித்தல் படிவம் ஒன்றினை அறிமுகப்படுத்தியது. மேலும், திணைக்களமானது நிதியியல் வாடிக்கையாளர்களினால் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகளின் தகவல்களைத் தன்னியக்கப்படுத்த வசதிப்படுத்துவதுடன் இது கொள்கை தீர்மானங்களுக்காக முறைப்பாட்டுத் தரவுகளைப் பகுப்பாய்வுசெய்வதில் பயனுள்ளதாகவிருக்கும்.

நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களமானது தொடர்புடைய ஏனைய திணைக்களங்களின் உதவியுடன் 2021ஆம் ஆண்டு மேயில் வெளியிலிருந்து சேவை பெற்றுக்கொள்ளப்படும் அலுவலர்களைக் கொண்டு இலங்கை மத்திய வங்கிக்கான தொடர்பு நிலையமொன்றினை அமைப்பதற்கு இயலுமாவிருந்தது. இப்புதிய தொடர்பு நிலையத்திற்கு நவீன அழைப்புநிலையத் தொழிற்பாடுகளுக்கு தேவையான அனைத்து வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. அதற்கமைய, இலங்கை மத்திய வங்கியின் தொடர்பு நிலையமானது தற்போது மும்மொழி வசதிப்படுத்தல்கள் மற்றும் அழைப்பைப் பதிவுசெய்யும் வசதிகள் என்பவற்றுடன் இலங்கை மத்திய வங்கியின் அலுவலக நேரங்களில் தொழிற்படுகிறது. மேலும், நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களமானது பொதுமக்களுக்கு அதிக வசதி வாய்ப்புக்கள் மற்றும் இலகுவான அணுகுதலை வழங்கும் பொருட்டு, 2021ஆம் ஆண்டு ஓகத்தில் இலங்கையின் எந்தவொரு தொலைபேசி இணைப்பின் வாயிலாகவும் இலங்கை மத்திய வங்கியை தொடர்பு கொள்வதற்காக 1935 என்ற பிரத்தியேகமான உடனடி அழைப்பிலக்கத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. தொடர்பு நிலையமானது மாதாந்த அடிப்படையில் 5,000 இற்கும் மேற்பட்ட தொலைபேசி விசாரணைகளுக்கு பதிலளிக்கிறது. மேலும், நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களமானது வாடிக்கையாளர் விழிப்புணர்வின் ஓர் பகுதியாக கருத்தரங்குகள், இணையவழி செயலமர்வுகள் மற்றும் நேர்காணல்கள் போன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடர்ந்தும் முன்னெடுக்கும் அதேவேளை நிதியியல் வாடிக்கையாளர் உரிமைகளை எடுத்துக்காட்டும் விதத்திலான இணையவழி விளம்பரத்தினையும் வெளியிட்டது.

## 12. நிதியியல் உளவறிதல் பிரிவு

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிலிருந்து தோற்றம்பெற்ற பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும், நிதியியல் உளவறிதல் பிரிவானது அதன் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு ஆர்வலர்களுடன் இணைந்து இலங்கையில் செயல்திறன்வாய்ந்த பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் கட்டமைப்பினை உறுதிசெய்கின்ற குறிக்கோளை எய்துகின்ற நோக்கில் பணியாற்றியது.

இலங்கையின் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் கட்டமைப்பானது 2006ஆம் ஆண்டின்

5ஆம் இலக்க பணம் தூயதாக்குதலைத் தடுத்தல் சட்டம், 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் மீதான சமவாயம் மற்றும் 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம் போன்ற மூன்று முக்கிய சட்டவாக்கங்களினால் கட்டமைக்கப்பட்டுள்ளது. நிதியியல் உளவறிதல் பிரிவானது நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளதுடன் அதே சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்புடையதாகும். அதற்கமைவாக, நாட்டின் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதலுக்கான முன்னணி ஒழுங்குபடுத்துநராக நிதியியல் உளவறிதல் பிரிவானது நிதியியல் நடவடிக்கைச் செயலணியின் பரிந்துரைகளுடன் (பணம் தூ யதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் மற்றும் ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தல் தொடர்பான பன்னாட்டுத் தர நியமங்கள்) இணைங்குவதை உறுதிப்படுத்துவதற்கு நாட்டின் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் கட்டமைப்பின் கீழ் பெரும்பாலான நிதியியல் நிறுவனங்களையும் பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்களையும் சென்றடைந்துள்ளது. நிதியியல் உளவறிதல் பிரிவின் முக்கியத் தொழிற்பாடுகளானது தற்போதைய சந்தை அபிவிருத்திகள் மற்றும் பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் தொடர்பில் பொருத்தமான சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் விதிகளை மீளாய்வுசெய்து திருத்தியமைத்தல் உபாயங்களையும் தொழிற்பாட்டு பகுப்பாய்வினையும் மேற்கொள்வதனூடாக பொருத்தமான சட்ட அமுலாக்கல் முகவராண்மைகளுக்கும் மேற்பார்வை அதிகாரிகளுக்கும் நிதியியல் மதியுரையினை பரப்புதல் இலங்கையில் பணம் தூயதாக்குதல்/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் என்பவற்றை முறியடிப்பதற்காக நிதியியல் நிறுவனங்களிலும் பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்களிலும் இடர்நேர்வு அடிப்படையிலமைந்த பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் தொடர்பான மேற்பார்வையை வலுப்படுத்துதல் அத்துடன் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானங்களில் இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகளின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

### 12.1 உளவறிதல் முகாமைத்துவம்

2021 ஆண்டு காலப்பகுதியில், அறிக்கையிடும் நிறுவனங்கள், கட்டாயத் தேவைப்பாடுகளின் நியதிகளுக்கமைவாக, ஆரம்பமட்ட அறிக்கையிடல் மற்றும் ஏனைய அறிக்கையிடல் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு ஆதரவளிப்பதற்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட வெப்தளத்தை அடிப்படையாகக் கொண்ட முறைமையான "லங்காபின்" ஊடாக சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடங்கலாக நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான தகவல்களை சமர்ப்பிப்பதை தொடர்ந்தும் மேற்கொண்டன. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், காப்புறுதிக் கம்பனிகள், பங்குத் தரகர்கள் மற்றும் பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்கள் ரூ.1.0 மில்லியன் அத்துடன் அதற்கு மேல், அல்லது வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமமான காசுக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் இலத்திரனியல் நிதிய மாற்றல்கள் தொடர்பாக நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிக்கையிடுவதைத் தொடர்ந்தும் மேற்கொண்டன. 2021 காலப்பகுதியில், அறிக்கையிடும் நிறுவனங்கள் 5.7 மில்லியன் (தற்காலிகமானது) காசுக் கொடுக்கல்வாங்கல்களையும் 9.2 மில்லியன் (தற்காலிகமானது) இலத்திரனியல் நிதிய மாற்றல்களையும் அறிக்கையிட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 7ஆம் பிரிவின் நியதிகளுக்கமைவாக, 4,696 சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடும் நிறுவனங்கள் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு சமர்ப்பித்தன. கிடைக்கப்பெற்ற சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளின் தொழிற்பாட்டு மற்றும் உபாய பகுப்பாய்வுகளைத் தொடர்ந்து, 1,830 சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் மேலதிக விசாரணைகளுக்காக சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுக்கும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரிகளுக்கும் சமர்ப்பிக்கப்பட்டன. 2,220 சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட்டதுடன் 641 சந்தேகத்திற்கிடமாக கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் ஆரம்ப பகுப்பாய்விற்காகவும் மேலதிக ஆய்வுகளுக்காகவும் வைக்கப்பட்ட அதேவேளையில், எஞ்சியுள்ள சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் மேலதிக நடவடிக்கை தேவையில்லை என வகைப்படுத்தப்பட்டன.

பகுப்பாய்வு மற்றும் வெளிப்படுத்தல் தொழிற்பாடுகளை மேம்படுத்துவதற்காக, நிதியியல் உளவறிதல் பிரிவானது பணம் தூ யதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் தொடர்பான அறிக்கையிடல் மற்றும் பகுப்பாய்வு முறைமையான "கோஎஎம்எல்" முறைமையை அறிக்கையிடும் நிறுவனங்களுக்கு அறிமுகப்படுத்தியது. 2021 காலப்பகுதியில், நிதியியல் உளவறிதல் பிரிவானது முறைமையை கட்டமைத்து முறைமையின் முக்கிய அறிக்கையிடல் தொழிற்பாடுகளை ஆரம்பித்தது. "கோஎஎம்எல்" முறைமையின் ஆரம்பமும் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளின் அறிக்கையிடலின் நேரடித் தொழிற்பாடுகளும் 2022 பெப்புருவரியில் ஆரம்பிக்கப்பட்டன.

### 12.2 சட்டக் கட்டமைப்பும் நிறுவனசார் இணங்குவிப்பும்

நாட்டின் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் கட்டமைப்பின் செயல்திறனை மேம்படுத்துகின்ற குறிக்கோளுடன், 2021 காலப்பகுதியில் நிதியியல் உளவறிதல் பிரிவானது நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தில் சட்டவாக்கத் திருத்தங்களை தொடங்கியதுடன் பணம் தூயதாக்குதலைத் தடுத்தல் சட்டத்திற்கும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் மீதான சமவாயத்திற்கும் திருத்தங்களை மேற்கொள்வதற்கு ஆதரவளித்தது. இத்திருத்தங்கள் 2022இன் இறுதியளவில் நடைமுறைக்கு வருமென எதிர்பார்க்கப்படுகின்றன.

நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 15(2) ஆம் பிரிவின் நியதிகளில் உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பயனைக்கொண்டு, 2021 ஆண்டு காலப்பகுதியில், பணம் தூயதாக்கல்/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான சந்தேகங்களின் அடிப்படையில், 28 தனிப்பட்டவர்களுக்கு உரித்துடைய 163 கணக்குகளினதும் 17 சம்பவங்களுடன்/வழக்குகளுடன் தொடர்புடைய 8 நிறுவனங்களினதும் கொடுக்கல்வாங்கல்களை இடைநிறுத்துவதற்கு நிதியியல் உளவறிதல் பிரிவு வழிமுறைகளை மேற்கொண்டது. இதற்கிணங்க, ஆண்டு காலப்பகுதியில் ரூ.77.0 மில்லியன் (வரவு), ரூ.0.9 மில்லியன் (மேலதிகப்பற்று) மற்றும் ஐ.அ.டொலர்.12,200 கொண்ட நிலுவை என்பன இடைநிறுத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக, முன்னைய ஆண்டுகளில் இடைநிறுத்தப்பட்ட 64 சம்பவங்களுடன் தொடர்புடைய ஏறத்தாழ 1000 கணக்குகள் தொடர்பாக விசாரணைகளை நடாத்துவதற்காக சட்ட அமுலாக்கல் முகவராண்மைகள் மேலதிக காலத்தை கோரியதற்கமைவாக ஆண்டு காலப்பகுதியில் இரண்டு-மாத தவணைகளுக்கு நீடிக்கப்பட்டன.

நிதியியல் உளவறிதல் பிரிவானது 2021 காலப்பகுதியில் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் தொடர்பான மேற்பார்வைச் செயன்முறையையும் நிறுவனசார் இணங்குவிப்பினையும் வலுப்படுத்துவதற்கு பல்வேறு வழிகாட்டல்களையும் சுற்றறிக்கைகளையும் வெளியிட்டது. இவை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் பகுதி IIIஇல் கிடைக்கப்பெறுகின்றன. மேலும், செயல்திறனான கண்காணிப்பு மற்றும் சட்ட அமுலாக்கம், தளத்திலான மற்றும் தளத்திற்கு வெளியேயான கண்காணிப்பு மற்றும் இணங்குவிப்பு மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதல் போன்றவற்றின் மூலமாக அறிக்கையிடல் நிறுவனங்களின் இணங்குவிப்பினை மேம்படுத்துவதற்கு நிதியியல் உளவறிதல் பிரிவு

தொடர்ச்சியான வழிமுறைகளை மேற்கொண்டது. நாட்டில் நிலவிய நோய்ப்பரவல் நிலைமையின் காரணமாக திட்டமிடப்பட்ட தளத்திலான பரீட்சிப்புக்களை மேற்கொள்வதற்கு மட்டுப்பாடுகள் நிலவிய போதிலும், நிதியியல் உளவறிதல் பிரிவானது அறிக்கையிடல் நிறுவனங்களின் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் இணங்குவிப்பினை மதிப்பிடுவதற்காக இரண்டு இடர்நேர்வு அடிப்படையிலான தளத்திலான பரீட்சிப்புக்களையும், ஏழு இணைந்த இடர்நேர்வு அடிப்படையிலான தளத்திலான பரீட்சிப்புக்களையும், ஏழு உடனடிப் பரீட்சிப்புக்களையும் அத்துடன் நான்கு தளத்திற்கு வெளியேயான பின்தொடர் பரீட்சிப்புக்களையும் நடாத்தியது. மேலும், நிதியியல் நிறுவனங்கள் தொடர்பாகவும் பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்கள் தொடர்பாகவும் ஏழு கருத்தியல் ரீதியான மீளாய்வுகள் நடாத்தப்பட்டன. இத்துறையினுள் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் தொடர்பான இணங்குவிப்பினை வலுப்படுத்துவதற்காக நிதியியல் உளவறிதல் பிரிவின் மேற்பார்வையின் கீழ் வருகின்ற பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு தொடர்ச்சியான வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலமாக பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்களின் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் தொடர்பான மேற்பார்வையின் நோக்கெல்லை மேலும் விரிவுபடுத்தப்பட்டது.

நிதியியல் உளவறிதல் பிரிவானது அபராதங்களை விதித்தல், எச்சரிக்கை கடிதங்களையும் காரணம் காட்டும் கடிதங்களையும் வழங்குதல், கால வரையறை நடவடிக்கைத் திட்டங்களை வழங்குதல் மற்றும் பின்தொடர் கூட்டங்களை நடாத்துதல் போன்ற பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் தொடர்பான இனங்காமைக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதையும் தொடர்ந்தும் முன்னெடுத்தது. மேலும், ஐக்கிய நாடுகள் தடைப் பரிசோதனைகள், வாடிக்கையாளரை இனங்காணுதல் மற்றும் உறுதிப்படுத்துதல், சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுதலும் முறையான இடர்நேர்வு கட்டுபாடுகள் மற்றும் தணிப்பு வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல் என்பவற்றுடன் தொடர்புடைய வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன விதிகளை மீறுதல் தொடர்பாக 2021 ஆண்டு காலப்பகுதியில் நான்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் ஐந்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் ரூ.10.5 மில்லியன் தொகை நிதியியல் அபராதங்களை நிதியியல் உளவறிதல் பிரிவு விதித்தது.

### 12.3 பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான தேசிய இடர்நேர்வு மதிப்பீடு

நிதியியல் நடவடிக்கைச் செயலணியின் பரிந்துரைகளின் பரிந்துரை 1உடன் இணங்கியொழுகுவதற்காக, 2021இல், நிதியியல் உளவறிதல் பிரிவானது உலக வங்கியின் ஒத்துழைப்புடனும் 66 தனியார் மற்றும் அரச ஆர்வலர் முகவராண்மைகளின் பங்குபற்றலுடனும் இலங்கையின் இரண்டாவது பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டை மேற்கொள்வதை ஆரம்பித்தது. உலக வங்கியானது வெப்எக்ஸ் தளத்தினைப் பயன்படுத்தி இலங்கையின் தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டினை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து 2021 யூலை 15அன்று அதன் அறிமுகப்படுத்தல் அமர்வினை நடாத்தியது. அதனைத்தொடர்ந்து, பணிக் குழுக்களுக்காக 13 செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

### 12.4 உள்நாட்டு மற்றும் பன்னாட்டு ஒத்துழைப்பு

நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் நியதிகளுக்கமைவாக, உள்நாட்டில் அல்லது வெளிநாட்டிலுள்ள ஏதேனும் நிறுவனம் அல்லது முகவராண்மையுடன் தகவல்களைப் பரிமாற்றிக்கொள்வதற்கு இலங்கையின் நிதியியல் உளவறிதல் பிரிவு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை கைச்சாத்திட முடியும். அதற்கமைவாக, 2021 காலப்பகுதியில், நிதியியல் உளவறிதல் பிரிவானது பல்வேறு உள்நாட்டு முகவராண்மைகள் மற்றும் வெளிநாட்டு நிதியியல் உளவறிதல் பிரிவுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதை ஆரம்பித்தது.

நிதியியல் உளவறிதல் பிரிவானது பணம் தூயதாக்குதல் தொடர்பில் ஆசிய பசுபிக் குழுவுடன் கூட்டாக இணைந்து நிதியியல் நடவடிக்கைச் செயலணி மூலமாக மேற்பார்வை செய்யப்படுகின்றது. நோய்ப்பரவலின் காரணமாக ஆசிய பசுபிக் குழு அதன் வருடாந்த முழுநிறைவுக் கூட்டத்தினை மெய்நிகர் வழியினூடாக 2021 யூலையில் நடாத்தியதுடன் சிறப்பு முழுநிறைவுக் கூட்டமானது மெய்நிகர் வழியூடாக 2021ஆம் ஆண்டு நவெம்பரில் இடம்பெற்றது. மேலும், பரஸ்பர மதிப்பீட்டு குழுக் கூட்டங்கள் மெய்நிகர் வழியாக 2021ஆம் ஆண்டின் யூன், யூலை, செப்தெம்பர் மற்றும் நவெம்பர் மாதங்களில் இடம்பெற்றன. இலங்கைத் தொடர்பான 6 ஆவது பின்தொடர் பரஸ்பர மதிப்பீட்டு அறிக்கை 2021 செத்தெம்பரில் மெய்நிகராக இடம்பெற்ற பரஸ்பர மதிப்பீட்டு குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. இக்குறித்த முன்னேற்ற அறிக்கையில் 2015 இல் பகுதியளவில் இணக்கமானவையென தரப்படுத்தப்பட்ட “காசு விரைவுப் பொதிகள்” மீதான பரிந்துரை 32 இற்கும் “பன்னாட்டு ஒத்துழைப்புக்களின் ஏனைய வடிவங்கள்” மீதான பரிந்துரை 40 இற்குமான தரப்படுத்தல்களை இலங்கை கோரியது. உறுப்புரிமையானது பரிந்துரை 32 இன் தரத்தினை “பகுதியளவில் இணக்கமானவை” இலிருந்து “பாரியளவு இணக்கமானவை” இற்கு தரமுயர்த்துவதற்கு இணங்கிய அதேவேளையில், பரிந்துரை 40 இன் தரமிடலானது அவ்வாறே காணப்பட்டது. அதற்கமைய, 2021 இறுதியளவில், 40 நிதியியல் நடவடிக்கைச் செயலணியின் பரிந்துரைகளில் இலங்கையின் தரமிடல்கள் 7 இணக்கமானவை, 25 பாரியளவில் இணக்கமானவை, 7 பகுதியளவில் இனக்கமானவை அத்துடன் 1 இணக்கமின்மை என்ற வகையில் மேம்பட்டிருந்தன.

நிதியியல் உளவறிதல் பிரிவானது விசாரணைகளைக் கொண்டு நடாத்துவதற்கும் அதன் விசாரணைகள் தொடர்பில் புலனாய்வுகளைத் திரட்டுவதற்காக உறுப்பு நாடுகளுடன் கூட்டிணைவதற்கும் 166 உறுப்பினர்களை உள்ளடக்கிய உலகளாவிய நிதியியல் உளவறிதல் பிரிவுகளின் சங்கமான எக்மன்ட் குழுமத்தின் உறுப்பினர்களிடமிருந்து உதவியினைப் பெறுகின்றது. 2021 காலப்பகுதியில், நிதியியல் உளவறிதல் பிரிவானது இணைத்தரப்பு நிதியியல் உளவறிதல் பிரிவுகளிலிருந்து 33 கோரிக்கைகளுக்கு பதிலிறுத்தியதுடன் முன்னெடுக்கப்படுகின்ற விசாரணைகளுடன் தொடர்புடைய தகவல்களை பகிர்வதற்காக இணைத்தரப்பு நிதியியல் உளவறிதல் பிரிவுகளின் 22 கோரிக்கைகளையும் முன்வைத்தது. 2021ஆம் ஆண்டிற்கான எக்மன்ட் முழுநிறைவுக் கூட்டமானது திட்டமிடப்பட்டவாறு இடம்பெறவில்லை. எவ்வாறாயினும், பணிக்குழுக் கூட்டங்கள், நிதியியல் உளவறிதல் பிரிவுகளின் பிரதானிக் கூட்டம் மற்றும் பிராந்தியக் கூட்டங்கள் என்பன மெய்நிகர் வழியாக இடம்பெற்றதுடன் நிதியியல் உளவறிதல் பிரிவின் அலுவலர்கள் இக்கூட்டங்களில் பங்கேற்றிருந்தனர்.

### 12.5 நிறுவனசார் இயலளவைக் கட்டியெழுப்புதலும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும்

பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதலுடன் தொடர்புடைய விழிப்புணர்வினை அதிகரிக்கின்ற தொடர்ச்சியான முயற்சிகளில், 2021 ஆண்டு காலப்பகுதியில் நிதியியல் உளவறிதல் பிரிவானது நிதியியல் நிறுவனங்கள், பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்கள், சட்ட அமுலாக்கல் முகவராண்மைகள் மற்றும் அறிக்கையிடும் அதிகாரிகள் ஆகியோரில் 3,000இற்கு மேற்பட்ட பங்கேற்பாளர்களுக்கு வசதியளித்து 50 விழிப்புணர்வுகள்/பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வள ஆதரவினை வழங்கியது. இந்நிகழ்ச்சித்திட்டங்கள் நேரடியாகவும் இணையவழி தளத்தினூடாகவும் நடாத்தப்பட்டன. மேலும், நிதியியல் உளவறிதல் பிரிவு முறைசாரா பணப் பரிமாற்றல் திட்டங்களுடன் தொடர்புடைய இடர்நேர்வுகள் தொடர்பாக பல்வேறு ஊடக அறிவித்தல்களை வெளியிட்டதுடன் அவை பத்திரிகைகளிலும் பல்வேறு சமூக ஊடக வலையமைப்புகளிலும் வெளியிடப்பட்டு பகிரப்பட்டன.

## 13. வெளிநாட்டுச் செலாவணி

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களமானது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தி அதன் மூலம் இலங்கையில் வெளிநாட்டுச் செலாவணி பற்றிய முறையான ஊக்குவிப்புக்களையும் ஒழுங்குவிதிகளையும் உறுதிசெய்வதற்கு அரசாங்கத்தின் முகவரொருவராக மத்திய வங்கிக்கு உரித்தளிக்கப்பட்ட பொறுப்புடமையினை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக 2017ஆம் ஆண்டு நவெம்பர் 20அன்று நிறுவப்பட்டது. வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களமானது குறித்தொதுக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக கொள்கை, மூலதன கொடுக்கல்வாங்கல்கள், கண்காணித்தல் மற்றும் விசாரணை ஆகிய நான்கு பிரிவுகளைக் கொண்டுள்ளது. வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகள் பின்வருமாறு,

(அ) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் நியதிகளுக்கமைவாக கௌரவ நிதி அமைச்சரினால் (அமைச்சர்) விதித்துரைக்கப்பட்டவாறு வெளிநாட்டுச் செலாவணியினைக் கையாள்வதற்கு மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களையும் ஏனைய ஆட்களையும் நியமித்தல்.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் பணிப்புரைகளை வழங்குதல் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் நியதிகள் என்பவற்றுக்கமைவாக அவர்களின் இணங்குவிப்பினை கண்காணித்தல்.

(இ) ஒழுங்குவிதிகளையும் கட்டளைகளையும் வகுப்பதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி நடவடிக்கைகளையும் கொடுக்கல் வாங்கல்களையும் மேற்கொள்வதற்காக பணிப்புரைகளை விடுத்தல்.

(ஈ) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பொதுவான ஒப்புதல்களில் உள்ளடக்கப்படாத குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக அனுமதிகளை வழங்குதல்.

(உ) ஏற்கனவேயுள்ள கொள்கைகளின் செயற்றிறனை மீளாய்வுசெய்தல் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அபிவிருத்திகளுக்கு இசைந்து செல்லும் விதத்தில் புதிய கொள்கைகளின் தேவைப்பாட்டினை இனங்காணல் அத்துடன் அத்தகைய புதிய கொள்கைகளை உரியவாறு நடைமுறைப்படுத்தல்.

(ஊ) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகாமைகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளல்.

(எ) வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான விசாரணைகளுக்கான தெளிவுபடுத்தல்களை வழங்கல் மற்றும் மத்திய வங்கியின் அறிக்கைகள் அத்துடன் வெளியீடுகளுக்காக வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் மற்றும் கொள்கைகளுக்கு தொடர்புடைய பொருத்தமான பிரிவுகளைத் தயாரித்தல்.

கொவிட்-19 நோய்த்தொற்றின் தாக்கத்தினால் தோற்றுவிக்கப்பட்ட சவால்மிக்க சூழலைக் கருத்திற்கொண்டு வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களைக் கவர்வதற்கும் எதிர்பாராத வெளிப்பாய்ச்சல்களை கட்டுப்படுத்துவதற்குமான முக்கியத்துவத்தை இனங்கண்டு, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் மீதான அழுத்தத்தைத் தளர்த்துவதற்குப் பல்வேறு பரிகார வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. 2021 ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடைமுறைப்படுத்தல்களின் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது.

### 13.1 புதிய ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகளின் வழங்கலுக்கு வசதியளித்தல்

வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டு விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகள் தொடர்பான ஆர்வலர்களின் பின்னூட்டலை மீளாய்வு செய்ததைத் தொடர்ந்து, வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் தொடர்பான தெளிவினை மேலும் எளிமைப்படுத்தி மேம்படுத்தும் நோக்குடன் 2021இன் ஆரம்பத்தில் திருத்தப்பட்ட ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

அதற்கிணங்க, வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களமானது நாட்டுக்கு புதிய உள்முக பணவனுப்பல்கள்/உட்பாய்ச்சல்களைக் கவர்வதை பிரதானமாக மையப்படுத்தி வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் அமைச்சரின் மூலமாக ஒன்பது ஒழுங்குவிதிகளை வழங்குவதற்கு வசதிப்படுத்தியது.

மேலும், வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் கொவிட்-19 நோய்த்தொற்றினைக் கருத்திற்கொண்டு, செலாவணி வீதத்தின் மீதான அழுத்தத்தையும் இலங்கைப் பொருளாதாரத்திற்கு சாத்தியமான பாதகமான தாக்கத்தினையும் குறைப்பதற்கு ஆதரவளிப்பதற்காக ஆண்டு காலப்பகுதியில் அமைச்சரின் மூலமாக ஆறு கட்டளைகளை வழங்குவதற்கு வசதிப்படுத்தியது. மேலும், சொல்லப்பட்ட ஒழுங்குவிதிகளை/ கட்டளைகளை தொழிற்படுத்துவதற்காக ஆண்டு காலப்பகுதியில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இருபத்து ஒன்பது பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. 2021 ஆண்டு காலப்பகுதியில் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகள் என்பன இவ்வறிக்கையின் பகுதி IIIஇல் தரப்பட்டுள்ளன.

### 13.2 வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களுக்கான அனுமதியினை வழங்குதல்

**அ) கீழே அட்டவணை II - 12 இல் தரப்பட்டவாறு வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் விசேட அனுமதிகள் வழங்கப்பட்டன.**

அட்டவணை II - 12
வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட விசேட அனுமதிகள்

| நோக்கம் | ஒப்புதல்களின் எண்ணிக்கை | பெறுமதி ஐ.அ.டொலா. மில்லியனில் |
|---|---|---|
| வெளிநாட்டில் முதலிடுவதற்காக வதியும் கம்பனிகள் | 2 | 23.5 |
| இலங்கைக்கு வெளியே வதிபவர்கள் சார்பில் வங்கி/ நிறுவன உத்தரவாதங்களை வழங்குவதற்கான வதியும் கம்பனிகள் | 3 | 54.4 |
| வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பொதுவான அனுமதிகளில் உள்ளடக்கப்படாத சில நானாவித வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களைச் செயன்முறைப்படுத்துவதற்காக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள்/வதியும் கம்பனிகள் | 4 | ஏற்புடையதல்ல |

**ஆ) நாணயமாற்று வியாபாரத்தில் ஈடுபடுவதற்கும் அத்துடன் அத்தகைய தொழிற்பாடுகளை நிறுத்துவதற்கு/கைவிடுவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கு அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்**

i) வெளிநாட்டு நாணயத்தாள்களை வாங்குவதற்கும் பரிமாற்றுவதற்கும் வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகளுக்கு (அதாவது நாணய மாற்றுநர்கள்) இரண்டு புதிய நாணய மாற்றல் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

ii) ஆண்டு காலப்பகுதியில் மூன்று நாணய மாற்றுநர்கள் அவர்களின் நாணய மாற்றல் தொழிற்பாடுகளை நிறுத்திக்கொண்டனர்.

iii) நாணய மாற்றல் வியாபாரத்தில் ஈடுபடுவதற்காக ஒவ்வொரு மட்டுப்படுத்தப்பட்ட வணிகருக்கும் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் விபரங்கள் கீழே அட்டவணை 2இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை II-13

**2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு நாணய மாற்றல் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள்**

| நிறுவனத்தின் வகை | அனுமதிக்கப்பட்ட வியாபாரம் | வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| நாணய மாற்றல் வியாபாரத்தில் பிரத்தியேகமாக ஈடுபட்டுள்ள வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகள் (நாணய மாற்றுநர்கள்) | வெளிநாட்டு நாணயக் கொள்வனவு மற்றும் பரிமாற்றல் | 65* |
| | வெளிநாட்டு நாணயக் கொள்வனவு, விற்பனை மற்றும் பரிமாற்றல் | |
| உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் | வெளிநாட்டு நாணயக் கொள்வனவு, விற்பனை மற்றும் பரிமாற்றல் | 08 |
| சுற்றுலா விடுதிகள் | வெளிநாட்டு நாணயக் கொள்வனவு | 03 |
| **மொத்தம்** | | **76** |

* 65 கம்பனிகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. இது 76 நாணய மாற்று நிலையங்களை/கிளைகளை உள்ளடக்குகின்றது. 76 நிலையங்களுள், வெளிநாட்டு நாணயத்தை கொள்வனவு மற்றும் பரிமாற்றல் செய்வதற்கு 63 நிலையங்கள் அனுமதிக்கப்பட்ட அதேவேளையில், எஞ்சிய 13 நிலையங்கள் வெளிநாட்டு நாணயத்தை கொள்வனவு, விற்பனை மற்றும் பரிமாற்றல் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டன.

அதன்படி, 2021 திசெம்பரில் 31இல் உள்ளவாறு, 26 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களும் 76 மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களும் (இது மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களின் பிரதான நிலையத்தை மாத்திரம் உள்ளடக்குகின்றது) தொழிற்பாட்டிலிருந்தனர். அனுமதிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியைக் கையாள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினதும் (அதாவது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்) மற்றும் உரிய அதிகாரத்தில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியைக் கையாள்வதற்கு அனுமதிக்கப்பட்ட உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளினதும் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களினதும் பட்டியல் முறையே இணைப்பு II-2 மற்றும் இணைப்பு III-3 இல் தரப்பட்டுள்ளன.

**இ) புலம்பெயர்ந்தோர் நிதிகளை மாற்றல்**

புலம்பெயர் இலங்கையர்களுக்கான புலம்பெயர் படிகளை விடுவித்தல் மற்றும் தேசத்தவரல்லாதோருக்கு உரிமைவழியாக வந்த நிதியங்களின் வெளிமுக பணவனுப்பல்களுக்கு வசதியளித்தல் போன்ற நோக்கங்களுக்காக ஆண்டு காலப்பகுதியில் 787 மூலதன கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்குகளைத் திறப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர். எவ்வாறாயினும், குறித்த சில மூலதனக் கொடுக்கல்வாங்கல்களை 2022 யூலை 01 வரையில் இடைநிறுத்திய வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழான கட்டளை வழங்கலின் காரணமாக இக்கணக்குகளின் ஊடாக பரிமாற்றப்பட்ட தொகைகள் மட்டுபடுத்தப்பட்டன.

**13.3 வதியும் முதலீட்டாளர்களுக்கு இசைவுக் கடிதங்களை வழங்குதல்**

இவ்வாண்டுப்பகுதியில், வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் வதியும் முதலீட்டாளர்களுக்கு அத்தகைய முதலீட்டாளர்கள் அமைச்சரினால் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் அனுமதிக்கப்பட்டவாறு வெளிமுக முதலீடுகளைச் செய்வதற்கு அவர்களை இயலுமைப்படுத்துவதற்காக வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் முடிவுறா விசாரணைகள் எதுவுமில்லை என்பதனை உறுதிப்படுத்தி 13 இசைவுக் கடிதங்களை வழங்கியது.

**13.4 வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களை கண்காணித்தல் மற்றும் விசாரணை செய்தல்**

i. அத்தகைய வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மீது வெளியிடப்பட்ட பணிப்புரைகளின் நியதிகளின் படி அமுல்படுத்தப்பட்டுள்ள அறிக்கையிடல் தேவைப்பாடுகளின் படி அவர்களினால் பராமரிக்கப்படும் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மீதான தகவல்களை வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்குமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களமானது அத்தகைய தகவல்களை முகாமைத்துவத்திற்கும் அத்தகைய தகவல்களின் பகுப்பாய்வுடன் தொடர்புடைய இலங்கை மத்திய வங்கியின் அலுவலக ரீதியான வெளியீடுகளுக்கும் சமர்ப்பிக்கின்றது. மேலும், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் அறிக்கையிடப்பட்ட தகவல்களில் ஏதேனும் இணங்கியொழுகாமை கண்டறியப்படின் வெளிநாட்டுச் செலாவணிச் சட்ட நியதிகளின் கீழ் மேலதிக விசாரணைகளுக்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வழிப்படுத்தப்பட்டனர்.

ii. படிவம் 1இல் அறிக்கையிடப்பட்ட வெளிநாட்டு நாணய விற்பனைகள் மற்றும் படிவம் 2இல் அறிக்கையிடப்பட்ட வெளிநாட்டு நாணயக் கொள்வனவுகள் மீது பொரெக்ஸ் முறைமையூடாக உருவாக்கப்பட்ட அறிக்கைகள் காலரீதியான பொருத்தமான பகுப்பாய்வுகளுடன் முகாமைத்துவத்திற்கு அனுப்பப்பட்டன.

iii. இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகள் மீதான கொடுக்கல்வாங்கல்கள் மெய்நிகர் அறிக்கையிடல் முறைமையூடாக கண்காணிக்கப்பட்டதுடன் ஏதேனும் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்கள் கண்டறியப்படின் விசாரணைகளுக்கு குறிப்பீடும் செய்யப்பட்டன.

iv. 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட 2021ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல் விதிகளின் நியதிகளுக்கமைவாக, இலங்கையில் ஏற்றுமதிப் பெறுகைகளின் கிடைப்பனவுகள் மற்றும் அத்தகைய பெறுகைப் பரிமாற்றல் என்பன திணைக்களத்தினால் கண்டிப்புடன் கண்காணிக்கப்படுகின்றது. அத்தகைய நோக்கத்திற்காக, தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதிப் பெறுகைகளின் கண்காணிப்பு முறைமை நடைமுறைபடுத்தப்படும் வரையில் ஏற்றுமதிப் பெறுகைகள் தொடர்பான தரவுகள் மாதாந்த அடிப்படையில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிடமிருந்து சேகரிக்கப்பட்டு தீர்மானம் மேற்கொள்வதற்காக முகாமைத்துவத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, விதிகளுடன் இணங்கியொழுகத் தவறிய ஏற்றுமதியாளர்களின் விபரங்களும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினூடாக வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கு அறிக்கையிடப்படுவதுடன் இணங்காமைகளை முறியடிக்கின்ற நோக்குடனான அத்தகைய மீறுகைகள் பற்றிய தெளிவுப்படுத்தல்கள் கோரப்பட்டன.

v. வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், பணிப்புரைகள் மற்றும் கட்டளைகளின் கீழ் இணங்கியொழுகாமைத் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் மற்றும் ஏனைய ஆட்கள் தொடர்பில் முப்பத்து எட்டு (38) புதிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

vi. மேலும், 2021ஆம் ஆண்டிற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட பதினைந்து (15) விசாரணைகள் மற்றும் 2021 ஆண்டு காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டு (02) விசாரணைகள் உட்பட பதினேழு (17) விசாரணைகள் இவ்வாண்டுக் காலப்பகுதியில் நிறைவுசெய்யப்பட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்ட விசாரணை நடைமுறைகளைப் பின்பற்றி பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

vii. மேலதிகமாக, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் தொடர்பான விடயங்கள் தொடர்பில் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நிபுணத்துவச் சான்றுகளை/சத்தியச் சான்றிதழ்களை வழங்குவதன் மூலம் வழக்காடல்களிலும், நீதிமுறைசார் நடவடிக்கைமுறைகளிலும் சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

### 13.5 வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல் கண்காணிப்பு முறைமையை ஆரம்பித்தல்

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிடமிருந்து தரவுகளை சேகரிக்கும் நோக்கில் அனைத்தையுமுள்ளடக்கிய எல்லை கடந்த மற்றும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல் கண்காணிப்பு முறைமையொன்றினை (அதாவது பன்னாட்டு கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை) நடைமுறைப்படுத்துவதற்காக 2021 ஆண்டு காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் என்பவற்றின் ஒத்துழைப்புடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இம்மும்மொழியப்பட்ட பொறிமுறையானது வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனைகள்/கொள்வனவுகள் மற்றும் உட்பாய்ச்சல்கள்/ வெளிப்பாய்ச்சல்கள் மீதான அனைத்துத் தரவுகளையும் பெற்று அதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் தொடர்ச்சியான கண்காணிப்பினை இயலுமைப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், ஏற்றுமதித் தரவுகளின் செயற்றிறனான சேகரிப்பினை உறுதிசெய்யும் நோக்குடன், தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக்கொண்ட ஏற்றுமதி நடைமுறைகள் கண்காணிப்பு முறைமை உருவாக்கப்பட்டுள்ளது. இம்முறைமை இலங்கைச் சுங்கத்திடம் ஏற்றுமதி கப்பலேற்றல்கள் தொடர்பாக கிடைக்கத்தக்கதாகவுள்ள தகவல்களை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிடம் கிடைக்கத்தக்கதாகவுள்ள ஏற்றுமதிப் பெறுகைகளின் கிடைப்பனவுத் தகவல்களுடன் இணைப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

### 13.6 வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் தொடர்பான விழிப்புணர்வை அதிகரித்தல்

ஆண்டு காலப்பகுதியில் வெளிநாட்டுச் செலாவணி சட்டத்தின் புதிய ஒழுங்குவிதிகள் மற்றும் ஏற்பாடுகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்களுக்காக பத்து விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. மேலும், வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகள் தொடர்பான விழிப்புணர்வினை அதிகரிப்பதற்கு ஏழு ஊடக வெளியீடுகளும் நான்கு பொதுமக்களுக்கான அறிவித்தல்களும் வெளியிடப்பட்டன. மேலும், புதிய ஒழுங்குவிதிகள் தொடர்பான பொது மக்களின் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்கு வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் அலுவல்சார் வெப்தளம் (www.dfe.lk) உரியவாறு இற்றைப்படுத்தப்பட்டதுடன் வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான விசாரணைகளுக்கான தெளிவுப்படுத்தல்களை வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் தொடர்ந்தும் வழங்கியது.

**இணைப்பு II-2**

**2021 திசெம்பர் 31இலுள்ளவாறான அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களின் பட்டியல்**

| | |
|---|---|
| **உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்** | |
| 1 | அமானா பாங்க் பிஎல்சி |
| 2 | இலங்கை வங்கி |
| 3 | பாங்க் ஒவ் சைனா லிமிடெட் |
| 4 | கார்கில்ஸ் பாங்க் லிமிடெட் |
| 5 | சிற்றி பாங்க் என்.ஏ |
| 6 | கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி |
| 7 | டொய்ச் பாங்க் ஏ ஜி |
| 8 | டிஎவ்சிசி பாங்க் லிமிடெட் |
| 9 | ஹபிப் பாங்க் லிமிடெட் |
| 10 | ஹற்றன் நசனல் பாங்க் பிஎல்சி |
| 11 | இந்தியன் வங்கி |
| 12 | இந்தியன் ஓவசீஸ் பாங்க் |
| 13 | எம்சிபி பாங்க் லிமிடெட் |
| 14 | நசனல் டெவலப்மன்ட் பாங்க் பிஎல்சி |
| 15 | நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி |
| 16 | பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி |
| 17 | மக்கள் வங்கி |
| 18 | பப்ளிக் பாங்க் பெர்ஹெட் |
| 19 | சம்பத் பாங்க் பிஎல்சி |
| 20 | செலான் பாங்க் பிஎல்சி |
| 21 | ஸ்ரான்டேர்ட் சார்ரட் பாங்க் |
| 22 | ஸ்டேட் பாங்க் ஒவ் இந்தியா |
| 23 | த ஹொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட் |
| 24 | யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி |
| **உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள்** | |
| 25 | தேசிய சேமிப்பு வங்கி |
| 26 | சணச டெவலப்மன்ட் பாங்க் பிஎல்சி |

**இணைப்பு II-3**

**2021, திசெம்பர் 31இல் உள்ளவாறான மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களின் பட்டியல்**

| | |
|---|---|
| **வெளிநாட்டு நாணயத்தை கொள்வனவு மற்றும் பரிமாற்றம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள்** | |
| நாணய மாற்றுநர்கள் | |
| 1 | ஏ. எச். எம் ரேடிங் (பிறைவேற்) லிமிடெட் |
| 2 | ஏ. ஓ. லக்ஷ்மி ஜுவல்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 3 | அப்தீன் மணி சேஞ்சேர்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 4 | அபிலாஸ் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 5 | ஆரியவன்ச என்ரபிறைசஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 6 | அருணா பொறக்ஸ் (பிறைவேற்) லிமிடெட் |
| 7 | ஏசியன் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் |
| 8 | பிரசிகா கிராமின் (பிறைவேற்) லிமிடெட் |

9 புள்ளியன் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்

10 கெப்பிட்டல் எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்

11 கார்லோ இன்ரனஷனல் (பிறைவேட்) லிமிடெட்

12 சென்றல் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்

13 கொழும்பு மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு 01

14 கொழும்பு மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு 06

15 தெடிகம குறூப் (பிறைவேற்) லிமிடெட்

16 டேற்றா எக்ஸ்சேஞ் இன்ரநஷனல் (பிறைவேற்) லிமிடெட்

17 தயா ஒதோரைஸ்ட் மணி சேஜ்சேர் (பிறைவேற்) லிமிடெட்

18 டெல்டா சரத் ஹோல்டிங்ஸ் (பிறைவேற்) லிமிடெட்

19 கோல் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - காலி

20 கோல் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - காலி துறைமுகம்

21 ஜோர்ஜ் மைக்கல் ஹோல்டிங்ஸ் (பிறைவேற்) லிமிடெட்

22 குளோபல் விலேஜ் எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்

23 கோல்டன் மணி சேஜ்சேர்ஸ் (பிறைவேற்) லிமிடெட்

24 கோல்ட் லங்கா ஜுவல்லரி (பிறைவேற்) லிமிடெட்

25 ஹய்வா ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் (பிறைவேற்) லிமிடெட்

26 இன்ரநஷனல் எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்

27 ஜேயஸ் இன்வெஸ்ட்மென்ற் லிமிடெட்

28 ஜெயா பொறக்ஸ் எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்

29 கமல் என்ரபிறைசஸ் (பிறைவேற்) லிமிடெட்

30 கெயிசர் எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்

31 குடாமடு மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்

32 எம்.பி மணி சேஞ்சேர் (பிறைவேற்) லிமிடெட்

33 மாருதி மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - யாழ்ப்பாணம்

34 மயூரி மணி சேஞ்சேர்ஸ் (பிறைவேற்) லிமிடெட்

35 மிட்னா மினி மார்க்கட் (பிறைவேற்) லிமிடெட்

36 மிலானோ மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்

37 நர்மதா கோல்ட் சென்ரர் (பிறைவேற்) லிமிடெட் - யாழ்ப்பாணம்

38 நர்மதா கோல்ட் சென்ரர் (பிறைவேற்) லிமிடெட் - கிளிநொச்சி

39 நியு லங்கா கோல்ட் ஹவுஸ் (பிறைவேற்) லிமிடெட்

40 நியு நட்டாஷா (பிறைவேற்) லிமிடெட்

41 நியு நீகல்ஸ் மணி சேஞ்சேர் (பிறைவேற்) லிமிடெட்

42 பேர்ள் எக்சி (பிறைவேற்) லிமிடெட்

43 றபீக் ஜெம்ஸ் (பிறைவேற்) லிமிடெட்

44 றிம்ஹா ஜுவல்லரி (பிறைவேற்) லிமிடெட்

45 றிவின்டு என்ரபிறைசஸ் (பிறைவேற்) லிமிடெட்

46 றோயல் மணி எக்ஸ்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு

47 றோயல் மணி எக்ஸ்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு

48 றோயல் மணி மார்ட் (பிறைவேற்) லிமிடெட் - அளுத்கம

49 றோயல் மணி மார்ட் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு 01

50 சலாக்கா ரஸ்ட் இன்வெஸ்ட்மென்ற் (பிறைவேற்) லிமிடெட்

51 சாரங்கா மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்

52 சிபாஸ் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்

53 சொர்ணம் பொறக்ஸ் (பிறைவேற்) லிமிடெட்

54 சுவிஸ் மணி எக்ஸ்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு - 01

55 சுவிஸ் மணி எக்ஸ்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு - 06

56 தாமஸா பொரெக்ஸ் (பிறைவேற்) லிமிடெட்

57 தோமஸ் குக் லங்கா (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு 02 - கொழும்பு சிற்றி சென்ரர்

58 தோமஸ் குக் லங்கா (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு 02 - வன் கோல்பேஸ் மோல்

59 தோமஸ் குக் லங்கா (பிறைவேற்) லிமிடெட் - கண்டி

60 யுனிக் பொறக்ஸ் (பிறைவேற்) லிமிடெட்

61 வசந்தாஸ் இன்ரநஷனல் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்

62 வெஸ்ரேன் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்

63 வின்சோர் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்

**வெளிநாட்டு நாணயத்தை கொள்வனவு, விற்பனை மற்றும் பரிமாற்றுவதற்கு அனுமதிக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள்**

**நாணய மாற்றுநர்கள்**

64 அர்ஜுனா ஜுவலரி (பிறைவேற்) லிமிடெட்

65 சிட்டி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்

66 கிறவுன் மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்

67 தேவி பொரெக்ஸ் (பிறைவேற்) லிமிடெட்

68 ஜுவல் லங்கா மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட்

69 மாருதி மணி எக்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு - 06

70 மெட்ரோ பொரெக்ஸ் (பிறைவேற்) லிமிடெட்

71 பிரசன்னா மணி எக்ஸ்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு - 01

72 பிரசன்னா மணி எக்ஸ்சேஞ் (பிறைவேற்) லிமிடெட் - கொழும்பு - 06

73 புஸ்பா மணி சேஞ்சேர்ஸ் (பிறைவேற்) லிமிடெட்

74 ரவி பொறக்ஸ் (பிறைவேற்) லிமிடெட்

75 தோமஸ் குக் லங்கா (பிறைவேற்) லிமிடெட் -பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்

76 யுனிவெர்சல் மணி சேஞ்சேர்ஸ் (பிறைவேற்) லிமிடெட்

**உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள்**

77 ஏசியா அசற் பினான்ஸ் பிஎல்சி

78 பிம்புத் பினான்ஸ் பிஎல்சி

79 சிற்றிசன்ஸ் டெவலப்மென்ற் பிசனஸ் பினான்ஸ் பிஎல்சி

80 லங்கா கிரடிட் அன்ட் பிசினஸ் பினான்ஸ் லிமிடெட்

81 எல்பீ பினான்ஸ் பிஎல்சி

82 செங்கடகல பினான்ஸ் கம்பனி பிஎல்சி

83 சிங்கபுத்திர பினான்ஸ் பிஎல்சி

84 சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி

**வெளிநாட்டு நாணயத்தைக் கொள்வனவு செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள்**

**சுற்றுலா விடுதிகள்**

85 பேள் சிற்றி ஹோட்டல்

86 சங்கிரி-லா ஹோட்டல் கொழும்பு

87 சங்கிரி-லாஸ் அம்பாந்தோட்டை றிசோட் அன்ட் ஸ்பா

**ஏனைய நிறுவனங்கள்**

88 எம்.எம்.பீ.எல்.மணி ரான்ஸ்வர் (பிறைவேட்) லிமிடெட்

89 இலங்கை ஏற்றுமதி கொடுகடன் காப்புறுதி கூட்டுத்தாபனம்

## 14. வெளிநாட்டுப் பணவனுப்பல்கள் வசதிப்படுத்தல் திணைக்களம்

வெளிநாட்டுப் பணவனுப்பல்கள் வசதிப்படுத்தல் திணைக்களம், 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 2021.11.03 அன்று தாபிக்கப்பட்டதாகும். நாட்டிற்குள் தொழிலாளர்கள் பணவனுப்பல்களின் உட்பாய்ச்சல்களை வசதிப்படுத்தி சீரமைப்பதே புதிதாக உருவாக்கப்பட்ட வெளிநாட்டு பணவனுப்பல்கள் வசதிப்படுத்தல் திணைக்களத்தின் பிரதான குறிக்கோளாகும்.

2021ஆம் ஆண்டுக் காலப்பகுதியிலும் 2022ஆம் ஆண்டின் முன்னைய காலப்பகுதியிலும் பின்வருகின்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் தொழிலாளர் புலம்பெயர்தல் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களின் முழுமையான ஆற்றலுக்கும் செயல்வடிவம் கொடுப்பதை நோக்கி வெளிநாட்டுப் பணவனுப்பல்கள் வசதிப்படுத்தல் திணைக்களம் பணியாற்றியது.

### 14.1 புலம்பெயர் தொழிலாளர்களுக்கான ஊக்குவிப்புத் திட்டங்கள்

(அ) “உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான மேலதிக ஊக்குவிப்புத் திட்டம்” அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்மூலம், 2021ஆம் ஆண்டிற்கான அரசாங்க வரவுசெலவுத் திட்டத்தினூடாக, அனுப்பப்பட்டு இலங்கை ரூபாவாக மாற்றப்பட்ட ஒவ்வொரு ஐ.அ.டொலருக்கும் செலுத்தப்பட்ட ரூ. 2 ஊக்குவிப்புத் தொகைக்கு மேலதிகமாக, 2021 திசெம்பரிலிருந்து ஒவ்வொரு ஐ.அ.டொலருக்கும் மேலதிகமான ரூ. 8 ஊக்குவிப்புத் தொகை இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டது. எவ்வாறாயினும், செலாவணி வீதத்தினுள் பாரியளவிலான நெகிழ்ச்சித் தன்மையுடன், 2022, மாச்சில் தொழிலாளர் பணவனுப்பல்களின் மாற்றல் மீது ஒவ்வொரு டொலருக்கு ரூ.8.00 என வழங்கப்படும் ஊக்குவிப்புத் தொகையை மத்திய வங்கி இடைநிறுத்தியது.

(ஆ) இலங்கைக்கு பணத்தை அனுப்பி இலங்கை ரூபாய்களாக மாற்றம்செய்யும் போது, ரூ. 20,000 தொகைக்கு மேலதிகமான ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலுக்கும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு ஏற்படுகின்ற ரூ. 1000 வரையான பரிமாற்றல் கிரயங்களை மீளச்செலுத்துவதற்கு ஊக்குவிப்புத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

### 14.2 புலம்பெயர் தொழிலாளர்கள் வங்கிக் கணக்குகளைத் திறப்பதற்கு ஊக்குவித்தல்

பத்திரமுல்லையில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் வளாகத்தில் ஐந்து வங்கிகளின் “சிறு கிளைகளைத்” திறப்பதற்கு வசதியளிக்கப்பட்டது. மட்டுப்படுத்தப்பட்ட நிதியியல் பணிகளுடனான இத்தகைய பிரத்தியேகமான “சிறு வங்கிக் கிளைகள்” குறிப்பாக வருங்காலத் தொழிலாளர் பணவனுப்பல்களின் வசதிகளைக் கருதி தாபிக்கப்பட்டன. புலம்பெயர் தொழிலாளர்கள் நாட்டிலிருந்து புறப்படுவதற்கு முன்னர் அவர்களின் அனைத்து வங்கித் தேவைப்பாடுகளையும் நிறைவற்றிக்கொள்வதற்கு இவ்வாய்ப்பை பயன்படுத்துவர் எனவும் அதன்மூலம் முறைசார் வங்கித்தொழில் முறைகளூடாக தொழிலாளர்கள் பணவனுப்பல்களின் உட்பாய்ச்சலுக்கு வசதியளிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

### 14.3 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்

(அ) புலம்பெயர் தொழிலாளர்களை மையப்படுத்தி ஊக்குவிப்புத் திட்டங்கள் தொடர்பிலும் முறைசார்ந்த பணப் பரிமாற்றல் முறைகளின் முக்கியத்துவம் பற்றியும் பத்திரிகைகள், வானொலி நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், சமூக வலைத் தளங்கள் மற்றும் ஊடகத் தளங்கள் போன்ற பல்வேறு வழிகளூடாக பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

(ஆ) புலம்பெயர் தொழிலாளர்களுக்கென அறிமுகப்படுத்தப்பட்ட ஊக்குவிப்புத் திட்டங்கள் பற்றி வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கும் மத்திய கிழக்கு பிராந்தியத்திலுள்ள வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றத்தில் ஈடுபடுகின்ற நிறுவனங்களின் பிரநிதிகளுக்கும் அறிவூட்டுவதற்கும் அதேபோன்று துறையிலுள்ள பிரச்சினைகளை இனங்கண்டு தீர்ப்பதற்கும் அத்துடன் சொல்லப்பட்ட கருத்துப்பரிமாற்றலிருந்து கிடைக்கப்பெற்ற பின்னூட்டலுக்கு அமைவாக புலம்பெயர் தொழிலாளர்களுக்கான தற்போதுள்ள மற்றும் முன்மொழியப்பட்ட ஊக்குவிப்புத் திட்டங்களைச் சீர்படுத்துவதற்கும் அவர்களுக்கு நேரடி மற்றும் மெய்நிகர் ஆகிய இரு வழிகள் மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும் கருத்தாடல் அமர்வுகளும் நடாத்தப்பட்டன.

### 14.4 ஆர்வலர்களுடன் உறவைப் பேணுதல்

(அ) வெளிநாட்டு பணவனுப்பல்கள் வசதிப்படுத்தல் திணைக்களமானது கடவுச்சீட்டு வழங்கல் செயன்முறையை துரிதப்படுத்துவதற்கும் அத்துடன் வெளிநாட்டவர்களுக்காக நீண்ட கால வதிவிட வீசா வகைகளின் பிரமாணத்தை திருத்துவதற்கும் ஊக்குவிப்பதற்கும் குடிவரவு மற்றும் குடியகழ்வு திணைக்களத்துடன் தொடர்ந்தும் கலந்துரையாடலை மேற்கொண்டு வருகின்றது.

(ஆ) புலம்பெயர் தொழிலாளர்களுக்காக புதிய ஓய்வூதியத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டை துரிதப்படுத்துவதற்காக வெளிநாட்டு பணவனுப்பல்கள் வசதிப்படுத்தல் திணைக்களம் தொழில் அமைச்சுடன் உறவைப்பேணி வருகின்றது.

(இ) மேலும், வெளிநாட்டு பணவனுப்பல்கள் வசதிப்படுத்தல் திணைக்களம், நாட்டிற்குள் வெளிநாட்டு நாணயத்தை அனுப்புவதுடன் தொடர்புடைய தெளிவுபடுத்தல்கள், முறைப்பாடுகள் மற்றும் குறைகளை கையாளும் செயன்முறையில் ஈடுபட்டு வருகின்றது.

முன்னோக்கிச் சென்று, வெளிநாட்டு பணவனுப்பல்கள் வசதிப்படுத்தல் திணைக்களமானது வேறு தொடர்புடைய அதிகாரசபைகளுடன் கூட்டிணைந்து புலம்பெயர் தொழிலாளர்கள் நலனோம்புகையை மேம்படுத்துவதற்கு புதிய திட்டங்களை அறிமுகப்படுத்துகின்ற செயன்முறையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்நோக்கில், புலம்பெயர் தொழிலாளர்களுக்கான ஊக்குவிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தும் பொருட்டு வெளிநாட்டு பணவனுப்பல்கள் வசதிப்படுத்தல் திணைக்களமானது தொழில் அமைச்சு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் சந்தைப் பன்முகப்படுத்தல் இராஜாங்க அமைச்சு, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் போன்ற வெளிநாட்டு தொழில்நிலைத் துறையிலுள்ள முக்கிய நிறுவனங்களுடனும் அதேபோன்று வங்கித்தொழில் துறை மற்றும் பல்வேறு ஆர்வலர்களுடனும் தொடர்ந்தும் பணியாற்றும். ஓய்வூதியத் திட்டமொன்றை நிறுவுவதற்கு மேலதிகமாக, குறைந்த வட்டிக் கடன்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட தீர்வையற்ற சலுகைகள் போன்ற வங்கித்தொழில்சார்ந்த வசதிகளையும் இத்தகைய ஊக்குவிப்புத் திட்டங்கள் உள்ளடக்குகின்றன.

## 15. ஆளுநர் செயலகம்

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக தோற்றம்பெற்ற பொருளாதார சவால்களை எதிர்கொள்ளும் பொருட்டும், இயக்கவாற்றல்வாய்ந்த நிதியியல் மற்றும் பொருளாதார நிலைமைகளுக்கு துரித நடவடிக்கைகளை எடுத்து நிபுணத்துவத்தை வழங்குவதற்காக மத்திய வங்கியின் ஆளுநரினால் வேண்டப்படும் தொழிற்பாட்டு மற்றும் தொழில்நுட்ப உதவியை வழங்கும் குறிக்கோளுடன், 2015 பெப்புருவரி 09 இலிருந்து செயலகத் திணைக்களத்தின் பிரிவாக தொழிற்பட்ட ஆளுநர் செயலகமானது 2021 செத்தெம்பர் 24 அன்று “ஆளுநர் செயலகத் திணைக்களம்” என்ற பெயரின் கீழ் திணைக்களமொன்றாக மீளத்தாபிக்கப்பட்டது.

உள்நாட்டு பொருளாதாரம் மீதான கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கத்தைக் குறைத்தல், ஆளுநரினால் ஏனைய

திணைக்களங்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட பணி மீதான பின்தொடர் நடவடிக்கைகள், அத்துடன் வங்கிகள், ஏனைய நிறுவனங்கள் அதேபோன்று பொதுமக்களுடனான தொடர்பை மிகவும் காத்திரமான முறையில் பேணுவதுடன் தொடர்புடைய பணி போன்ற சவால்மிக்க பொருளாதார இலக்குகளின் நியதிகளில் வெற்றிக்கொள்வதை வசதிப்படுத்துகின்ற வகையில் உயர் மட்ட செயலகப் பணி, நிறுவன பணிகள் அத்துடன் உபசரணை கடமைகளை வழங்குவதில் ஆளுநர் செயலகத் திணைக்களம் ஈடுபட்டது.

ஆளுநர் செயலகத் திணைக்களத்தின் முக்கியப் பணிகளாக, அலுவலர்கள் மற்றும் விருந்தினர்களுடனான ஆளுநரின் கூட்டங்கள் மற்றும் சந்திப்புக்களை உரிய காலத்தில் முகாமைசெய்தல், அத்தகைய சந்திப்புகளுடன் சம்பந்தப்பட்ட கடிதத்தொடர்பை மேற்கொள்ளுதல், ஏனைய திணைக்களங்களின் நடவடிக்கைகள் தொடர்பில் தொடர்ச்சியாக ஆளுநரின் கவனத்திற்கு கொண்டுவருதல், குறித்தொதுக்கப்பட்ட பணிகளை மேற்கொள்ளுதல் என்பன காணப்படுகின்றன. ஏனைய மத்திய வங்கிகளின் ஆளுநர்கள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், இலங்கையை தளமாகக்கொண்ட இராஜதந்திரிகள், வங்கிகளின் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களின் பிரதம நிறைவேற்று அதிகாரிகள் அத்துடன் ஊடகத் துறையின் பிரதானிகள், வர்த்தகத் தலைவர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள், யப்பான் பன்னாட்டு ஒத்துழைப்பிற்கான முகவராண்மை, ஆசிய அபிவிருத்தி வங்கி, பன்னாட்டு நாணய நிதியம், உலக வங்கி போன்ற பன்னாட்டு நிதியியல் நிறுவனங்களிலிருந்தான பேராளர் குழுக்கள் அத்துடன் ஏனைய வெளிநாட்டு பிரதிநிதிகள் உள்ளடங்கலாக உயர் மட்ட அதிகாரிகளுடனான குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான சந்திப்புக்களை ஆளுநர் மேற்கொண்டார். அத்தகைய அனைத்து சந்திப்புக்கள் தொடர்பிலான ஏற்பாடுகளும் கடிதத்தொடர்புகளும் ஆளுநர் செயகத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு அதன் பெறுபேறுகளுடன் தொடர்புடைய முன்னேற்றத்தைக் கண்காணித்து தொடர்புடைய ஆர்வலர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

ஆளுநர் செயலகத் திணைக்களம் அதன் பணிகளை வினைத்திறன் மிக்க வகையில் ஆற்றும் பொருட்டு வங்கித்தொழில், நிதி மற்றும் பொருளாதாரத் துறைகளில் உள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பங்கேற்பாளர்களுடன் தொடர்புகளைப் பேணியது. குறிப்பாக, வளர்ந்துவரும் பொருளாதாரம் என்ற வகையில் இலங்கையின் வளர்ச்சியுறும் நற்பெயரின் பின்னணியில், உலகளாவிய பங்கேற்பாளர்களுடனான தொடர்புகளுக்கு தொடர்ச்சியாக முன்னுரிமை வழங்கப்பட்டது. அப்பின்னணியில், ஆளுநர் செயலகத் திணைக்களம், வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நம்பகமான தகவல்களை வழங்கி ஆளுநருடன் அவர்களுக்கான சந்திப்புக்களை ஏற்பாடுசெய்து அவர்களுடன் கிரமமான இடைத்தொடர்புகளை பேணியது. தற்போதைய உலகளாவிய நோய்த்தொற்றின் சூழ்நிலையை கருத்திற்கொண்டு, நவீன தொடர்பூட்டல் முறைகளைப் பயன்படுத்தி, வெளிநாட்டு முதலீட்டாளர்களுடனான தொலைத்தொடர்பு மற்றும் காணொளி மாநாடுகள், காணொளி நேர்காணல்கள் மற்றும் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

ஆளுநர் செயலகத் திணைக்களமானது ஆளுநர், ஆளுநரை சந்திக்கின்ற உயர்மட்ட விருந்தினர்கள் மற்றும் மத்திய வங்கிக்கு வருகைத் தருகின்ற சிறப்பு விருந்தினர்கள் ஆகியோருக்கு உபசரணைப் பணிகளை வழங்கியது. இக்காலப்பகுதியில் ஆளுநரின் அலுவல்சார் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் இத்திணைக்களம் மேற்கொண்டது. இதற்கு மேலதிகமாக, வெளிநாட்டு முதலீட்டு ஊக்குவிப்பு கூட்டங்கள் உள்ளடங்கலாக, பிரதான விருந்தினராக அல்லது முக்கிய உரையாற்றுபவராக ஆளுநர் மேற்கொண்ட அனைத்து வெளிநாட்டு விஜயங்களையும் இத் திணைக்களம் ஒழுங்கமைத்தது. ஆளுநரின் அலுவல்சார் வெளிநாட்டுப் பயணங்களுக்கான உபசரணைப் பணிகளை வழங்கும் அதேவேளை, ஆளுநர் செயலகத் திணைக்களமானது தேவையான தரவுகள் மற்றும் தகவல்களை நாளாந்தம் வழங்கியதுடன் அத்தகைய விஜயங்களின் வெற்றியை உறுதிசெய்யும் பொருட்டு தேவையான இலத்திரனியல் ஊடக எடுத்துரைப்புகளையும் தயார்செய்தது. ஆளுநர் வெளிநாட்டில் இருக்கும் சந்தர்ப்பங்களில், ஆளுநர் செயலகத் திணைக்களமானது உள்நாட்டு பணச் சந்தை மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை தகவல் தொடர்பில் அதேநேர தரவுகளை ஆளுநருக்கு வழங்கியது. இதற்கு மேலதிகமாக, ஆளுநரினாலும் பிரதி ஆளுநர்களினாலும் ஏற்பாடுசெய்யப்பட்ட அனைத்து அலுவல்சார் பணிகளையும் ஆளுநர் செயலகத் திணைக்களம் ஒழுங்கமைத்தது.

நிறுவன முகாமைத்துவக் குழு, நாணய கொள்கை ஆலோசனைக் குழு, நிதியியல் முறைமைகள் உறுதிப்பாட்டு ஆலோசனைக் குழு ஆகிய மத்திய வங்கியின் குழுக்களுடனான சந்திப்புகளுக்கும் மற்றும் வங்கி பிரதம நிறைவேற்று அதிகாரிகளுடனான மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் பிரதம நிறைவேற்று அதிகாரிகளுடனான சந்திப்புகளுக்கும் ஆளுநரினால் கோரப்பட்ட தேவையான தொழில்சார் உள்ளீடுகளை இத்திணைக்களம் வழங்கியது. இதற்கு மேலதிகமாக, ஆளுநர் செயலகத் திணைக்களமானது 2021 ஒத்தோபர் 01 அன்று சமர்ப்பிக்கப்பட்ட "பேரண்டப்பொருளாதார மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை நிச்சயப்படுத்தலுக்கான ஆறுமாத கால வழிகாட்டல்" இனை தயாரிப்பதில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்திற்கு உதவியது.

அரச தொழில்முயற்சிகளின் பிரதானிகள், முக்கிய ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் அத்துடன் ஏனைய வர்த்தக சமூக தலைவர்களுடன் ஆளுநர் பங்கேற்ற கூட்டங்களுக்கு தேவையான தரவுகள் மற்றும் தகவல்களை ஆளுநர் செயலகத் திணைக்களம் வழங்கியது. மேலும், இத்திணைக்களமானது தொடர்புடைய திணைக்களங்களின் உதவியுடன் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு உரிய காலத்தில் தகவல்களை வழங்கியது.

ஆளுநர் செயலகத் திணைக்களம், ஏனைய திணைக்களங்களுக்கு ஆளுநரினால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களை பணி கண்காணிப்பு முறைமையைப் பயன்படுத்தி உன்னிப்பான பின்தொடர் நடவடிக்கை எடுத்ததுடன் தாமதமின்றி அவை நடைமுறைப்படுத்தப்பட்டன என்பதை உறுதிப்படுத்தியது. இத் திணைக்களமானது குறிப்பாக ஊழியர் சேமலாப நிதியம், நிதிக் கம்பனிகள், வங்கித்தொழில்சார் விடயங்கள் மற்றும் மத்திய வங்கியுடன் தொடர்புடைய ஏனைய விடயங்கள் தொடர்பில் மக்களின் விசாரணைகளுக்கு பதிலளிப்பதன் மூலமாக அவர்களுக்கு உதவியது.

## 16. மனித வளங்கள்

இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்களை எய்துவதற்குப் பங்களிக்கக்கூடிய உயர் உற்பத்தித்திறனும் செயலூக்கமும் மனநிறைவுமிக்க ஊழியர் குழாமொன்றின் கிடைப்பனவினை உறுதிப்படுத்துவதே மனித வளங்கள் திணைக்களத்தின் முக்கிய குறிக்கோளாகக் காணப்படுகிறது. மேற்குறிப்பிட்ட விடயத்துடன் இசைந்து செல்லும் விதத்தில், மனித வளத் திணைக்களம் உபாயத்தினையும் தொழிற்பாட்டு ரீதியான மனிதவள முகாமைத்துவச் செயற்பாடுகளையும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்த வேளையில், மிகச் சிறந்த மனிதவள நடைமுறைகளையும் பின்பற்றியது. இதற்கமைய, இலங்கை மத்திய வங்கியின் உபாயத்திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட உபாயங்களுடன் இசைந்துசெல்கின்ற விதத்தில், 2021ஆம் ஆண்டுப்பகுதியில் புதிய அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்தல், பதவி உயர்வுகள், வேலைச் சுழற்சி, ஊழியர் ஊதியங்கள், பயற்சி மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி, அலுவலர்களின் செயலூக்கம், செயலாற்ற மதிப்பீடு மற்றும் அவர்களின் மனக் குறைகளைப் போக்குதல் போன்ற பல்வேறுபட்ட நடவடிக்கைகளையும் மனித வளங்கள் திணைக்களம் மேற்கொண்டது. மேலும், மனித வளங்கள் திணைக்களம் அவசியமான தீர்மானங்களை எடுக்கும் பொருட்டு, கம்பனி முகாமைத்துவக் குழு, பயிற்சிக் குழு மற்றும் பயிற்சி துணைக்குழு என்பனவற்றின் கூட்டங்களை நடத்துகின்றமைக்கு வசதியளித்ததுடன் மனித வளங்கள் மற்றும் மனிதவள அபிவிருத்தியுடன் தொடர்பான அனைத்து விடயங்களின் மீதும் கம்பனி ஆதரவு தொழிற்பாடுகளுடன் தொடர்பான விடயங்களின் மீதும் விதந்துரைப்புக்களை மேற்கொண்டது.

வங்கியின் தொழில்முறைரீதியான சௌகன்யத்தினையும் ஒட்டுமொத்த தொழில் வினைத்திறனையும் மேம்படுத்தும் நோக்குடன், மனித வளங்கள் திணைக்களம், மத்திய வங்கியின் முகாமைத்துவம், ஊழியர்கள் மற்றும் தொழிற்சங்கங்களிடையே ஆக்கபூர்வமான உறவுமுறையினைப் பேணும் பொருட்டு பல்வேறு வழிமுறைகளையும் மேற்கொண்டது. இவ்வாண்டுப்பகுதியில் மனித வளங்கள் திணைக்களம் மத்திய வங்கியின் ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் ஓய்வூதியம் பெறுவோரின் விடயங்கள் தொடர்பில் சங்கங்களுடன் கலந்துரையாடல்களை மிகச் சிறந்த முறையில் நடத்துவதனையும் பரிசீலனையில் கொண்டிருந்தது.

2021ஆம் ஆண்டுப்பகுதியில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பரவல் மற்றும் சுகாதார அதிகாரிகளினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள் என்பனவற்றின் காரணமாக, மனித வளங்கள் திணைக்களம் ஊழியர்களுக்கான பாதுகாப்பான பணிச்சூழலொன்றினை உறுதிப்படுத்துவதற்கான வழிமுறைகளை எடுத்த வேளையில் வங்கியின் தடங்கலற்ற தொழிற்பாடுகளையும் பேணிக் கொண்டது. இதற்கமைய, மத்திய வங்கியின் ஊழியர்கள் “வீட்டிலிருந்தே வேலை செய்வதற்கு” வசதியளிக்கும் விதத்தில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் தொழில்புரிதல் தொடர்பான ஏற்பாடுகள் மீதும், அதேபோன்று காலத்திற்குக் காலம் சுகாதார அதிகாரிகளினால் விடுக்கப்பட்ட வழிகாட்டல்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்கின்ற வழிகாட்டல்களும் சுற்றறிக்கைகளும் விடுக்கப்பட்டன. மேலும், சுகாதார அதிகாரிகளினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் கொவிட்-19 இனால் மத்திய வங்கி அலுவலர்கள் பாதிக்கப்படும் தன்மையினையும் இடர்நேர்விற்குள்ளாகக்கூடிய தன்மையினையும் மதிப்பிடுவதற்காக, தொடர்ச்சியாக அளவீடொன்றினை நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. மத்திய வங்கி ஊழியர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காகவும் எவ்வித தடங்கலுமின்றி மத்திய வங்கியின் தொழிற்பாடுகளை முன்கொண்டு செல்வதற்காகவும் இலங்கை இராணுவத்தின் ஒத்துழைப்புடன் பூஸ்டர் தடுப்பு மருந்தினை ஊழியர்களுக்குச் செலுத்துவதற்கான ஏற்பாடுகளை மனித வளங்கள் திணைக்களம் மேற்கொண்டிருந்தது.

வங்கியின் மனித வளங்களின் கட்டமைப்பும் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் மனித வளங்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் தொகுப்பும் கீழே தரப்படுகின்றன.

### 16.1 மனித வளங்கள் கட்டமைப்பு

2021இன் இறுதியிலுள்ளவாறு, மத்திய வங்கி அலுவலர்களின் மொத்த எண்ணிக்கை 1,357 ஆகக் காணப்பட்டது. இது 715 உயர்பதவி வகுப்பு அலுவலர்களையும் 503 முகாமைத்துவ உதவி வகுப்பு அலுவலர்களையும் 139 அலுவலர் உதவி வகுப்பு அலுவலர்களையும் உள்ளடக்கியிருந்தது. மத்திய வங்கியின் மொத்த அலுவலர்கள் 714 ஆண், 643 பெண் அலுவலர்களை உள்ளடக்கியிருந்ததுடன் இது மொத்த அலுவலர்களில் முறையே 53 சதவீதத்தினையும் 47 சதவீதத்தினையும் பிரசன்னப்படுத்தியது. 2021இன் இறுதியிலுள்ளவாறு மத்திய வங்கி ஊழியர்களின் சராசரி வயது 39 ஆகக் காணப்பட்டது.

### 16.2 ஊழியர்களின் கல்விசார் மற்றும் தொழில்சார் நிபுணத்துவத் தகைமைகள்

மத்திய வங்கி உயர்மட்ட கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகளுடன் கூடிய பன்மைத்துவமும் திறனும் கூடிய மனித வளங்கள் குழுமமொன்றினைக் கொண்டிருக்கிறது. அட்டவணை II-14 2021இன் இறுதியிலுள்ளவாறு, மத்திய வங்கியின் ஊழியர்கள் கொண்டுள்ள கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமை பற்றிய விபரங்களைக் காட்டுகின்றது.

**அட்டவணை II - 14**

**2021.12.31இல் உள்ளவாறு மத்திய வங்கியின் ஊழியர்களின் கல்விசார் தகைமைகள்/ தொழில்சார் உறுப்புரிமைகள்**

| ஊழியர் வகுப்புகள் | முனைவர் பட்டம் பெற்றோர் | கல்விசார் தகைமைகள்/ தொழில்சார் உறுப்புரிமையைக் கொண்டுள்ளோர் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | முதுமானிப் பட்டம், முதற்பட்டம் மற்றும் தொழில்சார் உறுப்புரிமைகள் | முதுமானிப் பட்டம் மற்றும் முதற்பட்டம் | முதற்பட்டம் மற்றும் தொழில்சார் உறுப்புரிமைகள் | முதுமானிப் பட்டம், தொழில்சார் உறுப்புரிமைகள் | முதுமானிப் பட்டம் மட்டும் | முதற் பட்டம் மட்டும் | தொழில்சார் உறுப்புரிமைகள் மட்டும் | மொத்தம் |
| உயர் அலுவலர் பதவி வகுப்பு | 25 | 132 | 164 | 75 | 45 | 3 | 201 | 14 | 659 |
| முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு | - | 4 | 23 | 17 | 13 | 28 | 44 | 30 | 159 |
| அலுவலர் உதவியாளர் வகுப்பு | - | - | - | - | - | - | 7 | - | 7 |
| **மொத்தம்** | **25** | **136** | **187** | **92** | **58** | **31** | **252** | **44** | **825** |

**அட்டவணை II - 15**

**மத்திய வங்கி அநுசரணையில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பட்டப்பின்படிப்பு கற்கைகள்**

| ஆண்டு | பட்டப்பின்படிப்பு கற்கைகள் | | | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | முனைவர் | | முதுமானிப்பட்டம் | | தொடங்கப்பட்டது | நிறைவு செய்யப்பட்டது |
| | தொடங்கப்பட்டது | நிறைவு செய்யப்பட்டது | தொடங்கப்பட்டது | நிறைவு செய்யப்பட்டது | | |
| 2017 | 6 | 6 | 9 | 18 | 15 | 24 |
| 2018 | 8 | 1 | 8 | 14 | 16 | 15 |
| 2019 | 4 | 1 | 7 | 7 | 11 | 8 |
| 2020 | 2 | 5 | 6 | 8 | 8 | 13 |
| 2021 | 1 | 4 | 1 | 6 | 2 | 10 |
| **மொத்தம்** | **21** | **17** | **31** | **53** | **52** | **70** |

### 16.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

#### (அ) ஆட்சேர்ப்பு

மத்திய வங்கியின் உயர் அலுவலர் வகுப்பில் அடையாளம் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொதுவான ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் கீழ், 2021இல் மனித வளங்கள் திணைக்களம் உயர் அலுவலர் வகுப்பு தரம் 1 இற்கு (தகுதிகாண்) இட்டுச்செல்கின்ற முகாமைத்துவப் பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்ததுடன், முகாமைத்துவ பயிலுநர்களின் ஆட்சேர்ப்பிற்குச் சமாந்தரமாக உள்ளக பரீட்சார்த்திகளையும் தகுதிகாண் உயர்பதவி அலுவலர்களாக பதவி உயர்த்திய வேளையில், வங்கியின் குறிப்பிட்ட குறுங்கால தேர்ச்சித் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்காக ஆங்கிலம் - தமிழ் மொழிபெயர்ப்பாளர்களும் ஆங்கிலம் - சிங்கள மொழிபெயர்ப்பாளர்களும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர். பிந்திய ஆட்சேர்ப்புச் செய்முறையின் கீழ் நொத்தாரிசு எழுதுவினைஞர் ஒருவர் மத்திய வங்கிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருக்கின்றார்.

மேலும், மனித வளங்கள் திணைக்களம் வங்கித்தொழில் உதவியாளர்களையும் (பயிலுநர்கள்) கனிஷ்ட தனிப்பட்ட உதவியாளர்களையும் (ஆங்கிலம் மற்றும் சிங்களம்) மத்திய வங்கிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான வழிமுறைகளை தொடங்கியிருக்கிறது.

#### (ஆ) செயலாற்றல் முகாமைத்துவம்

மனித வளங்கள் திணைக்களம் இவ்வாண்டுப்பகுதியில் திட்டமிட்டவாறு, ஊழியர் செயலாற்ற மதிப்பீட்டுச் செய்முறையினை மேற்கொண்டது. செயலாற்ற மதிப்பீட்டுச் செய்முறையின் கீழ் ஒவ்வொரு ஊழியரினதும் செயலாற்ற மட்டமானது, குறிப்பிட்ட மதிப்பீட்டு பிரமாணத்துடன் இசைந்துசெல்லும் விதத்தில் பொதுவான மற்றும் தொழில்நுட்ப தகைமைகளின் அடிப்படையில் எய்தப்பட்ட செயலாற்றத்திற்கு தரமிடல்களை வழங்குவதன் மூலம் மதிப்பிடப்படுகிறது. உயர் அலுவலர் வகுப்ப III(2) வரை ஊழியர்களின் இறுதிச் செயலாற்றங்கள் பதவி உயர்வின் பிரமாணத் தேவைப்பாடுகளில் ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

மேலும், மனித வளங்கள் திணைக்களமானது திணைக்களங்களின் நடுவாண்டு செயலாற்ற மீளாய்வு செயன்முறையினை மீளாய்வு செய்தது. இது ஆண்டின் முதலரைப்பகுதியில், அலுவலர் உறுப்பினர்களின் செயலாற்ற மட்டத்தினைப் புரிந்து கொள்வதற்கான வாய்ப்பினை வழங்கியது.

#### (இ) பதவி உயர்வுகள்

மத்திய வங்கியின் ஊழியர் பதவி உயர்வுத் திட்டத்தின் கீழ், மனித வளங்கள் திணைக்களம் ஊழியர்கள் அவர்களது தொழில் முன்னேற்றங்களை உறுதிப்படுத்தும் விதமாக பதவி உயர்வுகளுக்கு வசதியளித்தது. இதற்கமைய, 2021இல் மொத்தமாக 224 அலுவலக உறுப்பினர்களுக்கு அவர்களது வகுப்பு மற்றும் தரத்தில் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன. மேலும், நான்கு திணைக்களத் தலைவர்கள் உதவி ஆளுநர்களாகவும் ஆறு திணைக்கள துணைத் தலைவர்கள் மேலதிக திணைக்களத் தலைவர்களாகவும் ஆறு உயர் அலுவலர் வகுப்பு III(1) அலுலர்கள் திணைக்கள துணைத் தலைவர்களாக பதவி உயர்த்தப்பட்ட வேளையில், 208 ஊழியர்களுக்கு அவர்களது வகுப்பு மற்றும் தரத்தில் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன.

#### (ஈ) பயிற்சி மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி

மாற்றமடைந்து வருகின்ற சூழலில், மத்திய வங்கி அலுவலர்களின் தேர்ச்சியையும் அறிவினையும் தரமுயர்த்துகின்ற செய்முறை வங்கியின் குறிக்கோள்களைக் காத்திரமான முறையில் நிறைவேற்றுவதற்கு அதிமுக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகக் காணப்படுகின்றது. இதற்கமைய, பட்டப்பின்படிப்பு மாணவர்களுக்காக, மத்திய வங்கியின் அநுசரணைத் திட்டத்தின் கீழ் பன்னாட்டு ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் பட்டப்பின்படிப்பு ஆய்வுகளை மேற்கொள்வதற்கு அதன் ஊழியர்களை ஊக்குவிக்கின்ற விதத்தில் மத்திய வங்கி செலவுகளைத் தாங்கிக் கொள்வதுடன் வங்கிக்குள் அறிவு, நிபுணத்துவம் மற்றும் தேர்ச்சி தொடர்ச்சியாக அதிகரிக்கப்படுவதற்கு ஆதரவளிப்பதற்காக உள்நாட்டு மற்றும் பன்னாட்டு ரீதியான குறுங்கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் ஊழியர்கள் கலந்து கொள்வதற்கும் வசதியளிக்கப்படுகிறது.

இது தொடர்பில், மனித வளத் திணைக்களம் பயிற்சியின் தேவைகளையும் பயிற்சியின் இடைவெளிகளையும் அடையாளம் கண்டதுடன் பயிற்சி இடைவெளிகளை நிரப்புவதற்கான உபாயங்களையும் வடிவமைத்ததுடன், பயிற்சித் திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்தி வருவதுடன் அலுவலர்கள் பட்டப்பின்படிப்பு கற்கைகளைத் தொடர்வதற்கு வசதிகளை வழங்கியதுடன் இலங்கை மத்திய வங்கியின் மனித மூலதன அபிவிருத்தியின் தோற்றம் பெற்றுவரும் தேவைகளைப் பூர்த்திசெய்யும் விதத்தில் அலுவலர்களுக்கான வெளிநாட்டு/ உள்நாட்டு குறுங்கால பயிற்சிகளுக்கான வாய்ப்புக்களையும் வழங்கியது.

இதற்கமைய, 2021இல் மனித வளங்கள் திணைக்களம் அவுஸ்திரேலியாவின் கீர்த்திமிக்க பல்கலைக்கழகங்களில் பட்டப்பின் படிப்பினை ஆரம்பிப்பதற்கு இரண்டு அலுவலர்களுக்கு வசதியளித்ததுடன் ஒரு அலுவலர் பகுதி நேர அடிப்படையில் உள்ளூர் பல்கலைக்கழகத்தில் முதுமானிப் பட்டத்திற்கான கற்கைகளை ஆரம்பித்துள்ளார். 2017ஆம் ஆண்டிலிருந்து 2021ஆம் ஆண்டு இறுதி வரையான காலப்பகுதியில் மத்திய வங்கியின் அநுசரணைத் திட்டத்தின் கீழ் பட்டப்பின்படிப்பினை ஆரம்பித்த/ நிறைவுசெய்த அலுவலர்களின் எண்ணிக்கை மேலே அட்டவணை II - 15இல் தரப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் நிலவுகின்ற உலகளாவிய நோய்த்தொற்று நிலைமைகளைப் பரிசீலனையில் கொண்டு, மத்திய வங்கி 2020.03.12 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் மறுஅறிவித்தல் வரை குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சிகளில் நேரடியாகப் பங்கேற்பதனை ஊக்குவிக்காமல் இருந்து வருகிறது. இதற்குப் பதிலாக, வங்கி மற்றைய மத்திய வங்கிகளினாலும் கீர்த்திமிக்க பன்னாட்டு மற்றும் உள்நாட்டு நிறுவனங்களினாலும் 2021இல் நடத்தப்பட்ட இணையவழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் அலுவலகள் கலந்து கொள்வதற்கு வசதியளித்தது. இதற்கமைய, மனித வளத் திணைக்களம் மெய்நிகர் அடிப்படையில் நடத்தப்பட்ட 529 குறுங்கால வெளிநாட்டு பயிற்சிகளில் கலந்து கொள்வதற்கு அலுவலர்களுக்கு வசதியளித்ததுடன் 1,229 அலுவலர்கள் இதில் பங்கேற்பதற்கு தமது நியமனப்பத்திரங்களை அனுப்பியிருந்தனர்.

அதேநேரம், மனித வளங்கள் திணைக்களம் வெளியிலுள்ள உள்நாட்டு பயிற்சி நிறுவனங்களினால் நடத்தப்பட்ட 44 உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்பதற்கு 208 அலுவலர்களுக்கும் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தினால் நடத்தப்பட்ட 46 உள்ளகப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் 450 அலுவலர்கள் பங்கேற்பதற்கும் வசதியளித்தது.

மேலும், மனித வளங்கள் திணைக்களம் மத்திய வங்கி ஊழியர்கள் நீண்ட கால உள்நாட்டு (பகுதி நேரம்) பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைப் பின்பற்றுவதற்கு வசதியளித்ததுடன் பட்டயம்பெற்ற நிதியியல் தகைமைக்கான அதன் அநுசரணை

வழங்கும் திட்டத்தினை தொடர்ந்தும் முன்னெடுத்த வேளையில் சான்றிதழ் பாடநெறிகள், டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கீர்த்திமிக்க உள்நாட்டு நிறுவனங்களினால் வழங்கப்பட்ட ஏனைய தகைமைகளை தொடர்வதற்கும் வசதியளித்தது. மனித வளத் திணைக்களம் மத்திய வங்கியின் அலுவலர்களிடையேயும் மற்றைய மத்திய வங்கிகளின் அலுவலர்களிடையேயும் அறிவினைப் பகிர்ந்து கொள்வதற்கு வசதியை அளித்தது. இதற்கேற்ப, "வெளிநாட்டுச் செலாவணிக் கொள்கை மற்றும் மூலதனப்பாய்ச்சல் முகாமைத்துவம்" என்ற மகுடத்தின் கீழ் பேரண்டப் பொருளாதாரத் துறையில் 2021இல் கொரியா வங்கியுடன் அறிவினைப் பகிர்ந்து கொள்ளும் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியது.

**(உ) வேலைச் சுழற்சி**

வங்கி அதன் ஒட்டுமொத்த குறிக்கோள்களை மிகக் காத்திரமான விதத்தில் எய்துவதற்கு அதற்கு வசதியளிப்பதற்காக, மத்திய வங்கி வருடாந்த வேலைச் சுழற்சிக் கொள்கையொன்றினை நடைமுறைப்படுத்திய வேளையில், ஊழியர்கள் வேறுபட்ட துறைகளில்/ வங்கியின் தொழிற்பாடுகளில் அனுபவத்தினை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்களையும் வழங்கியது. எனினும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக வருடாந்த வேலைச் சுழற்சித் திட்டத்தின் கீழ் வடிவமைக்கப்பட்ட வேலைச் சுழற்சித் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு அலுவலக உதவியாளர் வகுப்பிலுள்ள 12 ஊழியர்களுக்கான மாற்றல்கள் தவிர, 2021ஆம் ஆண்டிற்கான வேலைச் சுழற்சி நடைமுறைப்படுத்தப்படவில்லை. உயர் அலுவலர் வகுப்பு மற்றும் அலுவலக உதவியாளர் வகுப்பு ஊழியர்களுக்கான வருடாந்த வேலைச் சுழற்சியை வரும் 2022 சனவரி 01 இலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**(ஊ) தொழில்துறை சௌகன்யம்**

மனித வளங்கள் திணைக்களம், முகாமைத்துவத்திற்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையில் நெருக்கமான கலந்துரையாடல்களைப் பேணுவதற்கான வசதி ஏற்பாட்டாளர் என்ற அதன் வகிபாகத்தினைத் தொடர்ந்தும் ஆற்றியது. இதற்கமைய, 2021ஆம் ஆண்டில் ஊதியம், பதவி உயர்வுகள், பயிற்சி, நலன்புரி, ஆட்சேர்ப்பு மற்றும் வங்கியின் பொதுவான நிருவாகம் தொடர்பான சில பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக முகாமைத்துவத்திற்கும் தொழிற்சங்கங்களுக்கும் வாய்ப்பினை வழங்கி 3 கலந்துரையாடல்களை ஒழுங்குசெய்தது.

**16.4 புதிய திணைக்களத்தினை நிறுவுதல்**

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 33ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கிச் செல்லும் விதத்திலும் 2021 செத்தெம்பர் 23ஆம் நாள் நடைபெற்ற 33/2021ஆம் இலக்க கூட்டத்தில் எடுக்கப்பட்ட நாணயச் சபைத் தீர்மானங்களின்படியும் ஆளுநர் செயலகத் திணைக்களம் 2021 செத்தெம்பர் 24ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் இலங்கை மத்திய வங்கியில் நிறுவப்பட்டது. அத்துடன், நாணயச் சபையானது 2021 ஒத்தோபர் 27ஆம் திகதி நடைபெற்ற நாணயச் சபையின் 36/2021ஆம் இலக்க கூட்டத்தில் 2021 நவெம்பர் 03ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வெளிநாட்டு பணவனுப்பல் வசதிப்படுத்தல் திணைக்களமொன்றை நிறுவுவதற்கு தீர்மானித்தது.

**16.5 2021ஆம் ஆண்டுப்பகுதியில் ஆளுநர் கலந்து கொண்ட கூட்டங்கள்**

**(அ) ஆளுநர் மேற்கொண்ட வெளிநாட்டு விஜயங்கள்**

i. 2021 ஒத்தோபர் 20 - 23 காலப்பகுதியில் கட்டார் நாட்டில் மூத்த இணைத்தரப்பு அலுவலர்களுடனும் ஏனைய முதலீட்டாளர்களுடனும் கூட்டங்களை நடத்துவதற்காக ஆளுநரினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு விஜயம்.

ii. 2021 நவெம்பர் 03 - 09 காலப்பகுதியில் துபாயில் மூத்த இணைத்தரப்பு அலுவலர்களுடனும் ஏனைய முதலீட்டாளர்களுடனுமான கூட்டங்கள்.

**(ஆ) ஆளுநர் கலந்து கொண்ட மெய்நிகர் கூட்டங்கள்**

i. 2021 சனவரி 15ஆம் திகதி இடம்பெற்ற அமெரிக்க வர்த்தக சம்மேளனத்தினால் இலங்கையில் ஒழுங்குசெய்யப்பட்ட "பொருளாதாரத் தோற்றப்பாடு - 2021" பற்றிய வெப்தளக் கூட்டம்.

ii. 2021 சனவரி 19ஆம் திகதி இடம்பெற்ற ப.நா. நிதிய நிறைவேற்றுப் பணிப்பாளர் முனைவர் சுர்ஜித் பகல்லாவுடனான மாநாடு.

iii. 2021 மாச்சு 01ஆம் திகதி இடம்பெற்ற சார்க் நிதிய ஆளுநர்கள் குழுக் கூட்டம்.

iv. 2021 மாச்சு 22ஆம் திகதி இடம்பெற்ற ஐக்கிய இராச்சிய பிரதமரின் இலங்கைக்கான வர்த்தகப் பிரதிநிதி டேவிஸ் பிரபுவுடனான மாநாடு.

v. 2021 ஏப்பிறல் 05ஆம் திகதி இடம்பெற்ற ஜி-24 அமைச்சு மட்டத்திலான கூட்டம் (ப.நா.நிதியம்/ உலக வங்கி வசந்த காலக் கூட்டம்)

vi. 2021 ஏப்பிறல் 08ஆம் திகதி இடம்பெற்ற ப.நா.நிதிய ஆசிய பசுபிக் திணைக்களத்தின் பிராந்திய பொருளாதாரத் தோற்றப்பாட்டுக் கூட்டம்.

vii. 2021 ஏப்பிறல் 08ஆம் திகதி இடம்பெற்ற ப.நா.நிதியம்/ உலக வங்கியின் வசந்தகாலக் கூட்டங்கள்.

viii. 2021 ஏப்பிறல் 13ஆம் திகதி இடம்பெற்ற ஜி-24/ நிதியியல் வசதிக்குட்படுத்தல் கொள்கை வகுப்போர் வட்ட மேசை மாநாடு.

ix. 2021 ஏப்பிறல் 16ஆம் திகதி இடம்பெற்ற ப.நா.நிதியத்தின் ஆசிய பசுபிக் பணிப்பாளருடனான கூட்டம்.

x. 2021 மே 24ஆம் திகதி இடம்பெற்ற 49ஆவது ஆசிய தீர்ப்பனவு ஒன்றியப் பணிப்பாளர் சபையின் கூட்டம்.

xi. 2021 யூன் 21ஆம் திகதி இடம்பெற்ற இலங்கை - மாஷ்றெக் வணிகமல்லா விளம்பரக் கூட்டம்.

xii. 2021 யூன் 22ஆம் திகதி இடம்பெற்ற பிராங்கிளின் ரெம்பிள்டன், புளுபாக், கோல்ட்மான் ஏஎம் மற்றும் வெலிங்டனுடனான முதலீட்டாளர் கூட்டம்.

xiii. 2021 யூலை 12ஆம் திகதி இடம்பெற்ற சிஎன்பிசி உலக அலைவரிசையுடனான நேர்காணல்.

xiv. 2021 ஓகத்து 10ஆம் திகதி இடம்பெற்ற இந்திய றிசேர்வ் வங்கியின் ஆளுநருடனான கூட்டம்.

xv. 2021 செத்தெம்பர் 17ஆம் திகதி இடம்பெற்ற இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக கடமைகளைப் பொறுப்பேற்றமை தொடர்பில் புளும்பேர்க்குடனான நேர்காணல்.

xvi. 2021 செத்தெம்பர் 25ஆம் திகதி இடம்பெற்ற இலங்கையின் படுகடன் உறுதித்தன்மை/ தற்போதைய சவால்கள்-ஐசிசி இலங்கை தொடர்பில் முக்கிய பேச்சாளராகக் கலந்து கொண்டமை.

xvii. 2021 செத்தெம்பர் 27ஆம் திகதி இடம்பெற்ற சான்றிதழ்படுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் மெய்நிகர் கூட்டம்

xviii. 2021 செத்தெம்பர் 30ஆம் திகதி இடம்பெற்ற பேரண்ட பொருளாதார உறுதிப்பாடு பற்றி தோற்றம் பெற்று வருகின்ற பிரச்சனைகள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கி - ஆசிய அபிவிருத்தி வங்கி நிறுவனம் மற்றும் ஆசிய பசுபிக் பிரயோக பொருளாதார அமைப்பின் செயலமர்வு.

xix. 2021 ஒத்தோபர் 01ஆம் திகதி இடம்பெற்ற சிஎன்பிசி - ஆசியாவுடனான நேர்காணல்.

xx. 2021 ஒத்தோபர் 07ஆம் திகதி இடம்பெற்ற தற்போதைய பொருளாதார சூழ்நிலை பற்றிய புளும்பேர்க்குடனான நேர்காணல்.

xxi. 2021 ஒத்தோபர் 11ஆம் திகதி இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளின் மத்திய வங்கி ஆளுநர்களின் கூட்டம்.

xxii. 2021 ஒத்தோபர் 11ஆம் திகதி இடம்பெற்ற ப.நா.நிதியம்/ உலக வங்கியின் ஆண்டுக் கூட்டம்/ ஜி-24 அமைச்சு மட்டத்திலான கூட்டம்.

xxiii. 2021 ஒத்தோபர் 14ஆம் திகதி இடம்பெற்ற முதலீட்டாளர்களுடனான எச்எஸ்பீசியின் உலகளாவிய தோற்றம் பெற்றுவரும் சந்தையின் ஆய்வரங்கு.

xxiv. 2021 நவெம்பர் 15ஆம் திகதி இடம்பெற்ற 42ஆவது சார்க் நிதிய ஆளுநர்களின் குழுக் கூட்டம்.

xxv. 2021 திசெம்பர் 02ஆம் திகதி இடம்பெற்ற இலங்கையின் வருடாந்த மீளாய்வு தொடர்பில் பிட்ஜ் றேட்டிங்குடனான மாநாட்டு அழைப்பு.

xxvi. 2021 திசெம்பர் 06ஆம் திகதி இடம்பெற்ற தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் ஆளுநர் சபைக் கூட்டம்.

xxvii. 2021 திசெம்பர் 06ஆம் திகதி இடம்பெற்ற ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மத்திய வங்கி ஆளுநருடனான கூட்டம்.

xxviii. 2021 திசெம்பர் 07ஆம் திகதி இடம்பெற்ற மத்திய கிழக்குப் பிராந்தியத்திலுள்ள இலங்கை தூதுவர்களுடனான கூட்டம்.

xxix. 2021 திசெம்பர் 13ஆம் திகதி இடம்பெற்ற ஐக்கிய அரபு எமிரேட்ஸ்சில் வதியும் இலங்கை தொழில்சார்நிபுணர்களுடனான கூட்டம்.

xxx. 2021 திசெம்பர் 17ஆம் திகதி இடம்பெற்ற ஐக்கிய அரபு இராச்சியத்தில் வதியும் இலங்கை தொழில்சார்நிபுணர்களுடனான கூட்டம்.

**16.6 பதவி உயர்வுகள்/ நியமனங்கள்**

i. திரு. கே. ஜி. பி. சிறிகுமார, திரு. டி, குமாரதுங்க, திருமதி, யு. எல். முதுகல மற்றும் திரு. சி. பி. எஸ். பண்டார ஆகியோர் உயர் அலுவலர் வகுப்பு விசேட தரத்திற்குப் பதவி உயர்த்தப்பட்டு 2021 நவெம்பர் 17ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் உதவி ஆளுநர்களாக நியமிக்கப்பட்டனர்.

ii. திரு. கே. எம். அபயகூன், வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தின் பணிப்பாளர், 2021 சனவரி 19 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நாணயத் திணைக்களக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

iii. திரு. பீ. எல். ஜே. எஸ். பாலசூரியா, அலுவலர் பணிகள் முகாமைத்துத் திணைக்களத்தின் பணிப்பாளர் 2021 சனவரி 19ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன், அதனைத் தொடர்ந்து அவர் 2021 நவெம்பர் 24ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

iv. திரு. ஆர். எம். ஜயவர்த்தன, வசதிகள் முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளர், 2021 சனவரி 19 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து அவர் 2021 யூலை 12 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களத்தின் கடமைகளுக்கு மேலதிகமாக, பாதுகாப்புப் பணிகள் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் அவர் 2021 நவெம்பர் 24 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

v. திரு. டபிள்யு. ஆர். எம். கே. பர்னாந்து இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களப் பணிப்பாளர், 2021 சனவரி 19 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திற்குப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன், அதற்கு மேலதிகமாக அவர் 2021 செத்தெம்பர் 16 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ஆளுநர் செயலகத்திற்கு ஆளுநரின் செயலாளராக இணைக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து 2021 செத்தெம்பர் 24 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளர் என்ற ரீதியில் அவரின் கடமைகளுக்குப் புறம்பாக ஆளுநரின் செயலகத் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

vi. திரு. எம். எஸ். கே. தர்மவர்த்தன, பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர், 2021 சனவரி 19 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் தொடர்பூட்டல் திணைக்களப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன் அதன் பின்னர் 2021 நவெம்பர் 24 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

vii. திருமதி. ஆர். டி. ரி. குணசேகரா, தொடர்பூட்டல் திணைக்களப் பணிப்பாளர் 2021 சனவரி 19 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டனர்.

viii. திரு. சி. பி. எஸ். பண்டார, கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு, திணைக்களப் பணிப்பாளர் 2021 சனவரி 19 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

ix. திருமதி. டி. எஸ். டபிள்யு. சமரதுங்க, பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களப் பணிப்பாளர், 2021 சனவரி 19 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கித்தொழில் கற்கைக்கான ஆய்வுநிலையத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

x. திரு. ஏ. எம். குணதிலக, நாணயத் திணைக்களக் கண்காணிப்பாளர் 2021 சனவரி 19 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து அவர் 2021 நவெம்பர் 24 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் மனித வளங்கள் திணைக்களப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xi. திரு. எம். டி. எஸ். என். குணதிலக, வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் 2021 பெப்புருவரி 22 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன், அதனைத் தொடர்ந்து 2021 ஏப்பிறல் 19 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xii. திரு. ஜி. சி. ஏ. ஆரியதாச, பிரதேச அபிவிருத்தித் திணைக்கள மேலதிகப் பணிப்பாளர், 2021 பெப்புருவரி 22 இலிருந்து வெளிநாட்டுச் செலாவணித் திணைக்கள மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xiii. முனைவர் (திருமதி). ரி. எம். ஆர். பி. யட்டிகம்மன்ன, இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்கள மேலதிப் பணிப்பாளர், 2021 ஏப்பிறல் 19 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நிதித் திணைக்களத்தின் மேலதிக முதன்மைக் கணக்காளராக நியமிக்கப்பட்டார்.

xiv. முனைவர் ஈ. டபிள்யு. கே. ஜே. பி. எகெல்லபொல, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர், 2021 ஏப்பிறல் 27 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பொதுப்படுகடன் திணைக்களத்தின் மேலதிக கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xv. திரு. டபிள்யு. ஜி. பிரபாத், பொதுபடுகடன் திணைக்கள மேலதிகக் கண்காணிப்பாளர், 2021 ஏப்பிறல் 27 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் மனித வளங்கள் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xvi. திரு. ஆர். ஆர். ஜயரத்ன வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளர், 2021 மே 10 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பாதுகாப்புப் பணிகள் திணைக்களப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xvii. முனைவர் (திருமதி) ஏ. ஏ. ஐ. என் விக்ரமசிங்க சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர், 2021 மே 10 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் பணிப்பாராக நியமிக்கப்பட்டார்.

xviii. முனைவர் ஆர். ஏ. ஏ. பெரேரா உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் 2021 யூலை 27 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாராக நியமிக்கப்பட்டார்.

xix. திரு. ஜே. பி. ஹமலத், நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களப் பணிப்பாளர், 2021 செத்தெம்பர் 21 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xx. திரு. ஜே. டி. எஸ். ஜே. நாணயக்கார, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர், 2021 செத்தெம்பர் 21 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xxi. முனைவர் (செல்வி) டி. எஸ். ரி. வானகுரு, மேலதிகப் பணிப்பாளர், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், 2021 செத்தெம்பர் 28 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xxii. முனைவர் பீ. எச். பி. கே. திலகவீர, பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர், 2021 நவெம்பர் 03 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வெளிநாட்டு பணவனுப்பல் வசதிப்படுத்தல் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xxiii. திருமதி. கே. என். என். எம். பண்டார, மனித வளங்கள் திணைக்களப் பணிப்பாளர், 2021 நவெம்பர் 24 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் மத்திய வங்கியின் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

xxiv. திரு. டி. எம். டி. பீ. திஸ்ஸநாயக்க, தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களப் பணிப்பாளர் 2021 நவெம்பர் 24 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பாதுகாப்புப் பணிகள் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xxv. திருமதி. ஈ. எச். மொஹொட்டி, நிதியியல் உளவறிதல் பிரிவின் பணிப்பாளர், 2021 நவெம்பர் 24 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் தொடர்பூட்டல் திணைக்களப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xxvi. திரு. எம். ஆர். விஜேவர்த்தன, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர், 2021 நவெம்பர் 24 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xxvii. திரு. ஜே. எம். அமீர், செயலகத் திணைக்களத்தின் மேலதிகச் செயலாளர், 2021 நவெம்பர் 24 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xxviii. முனைவர் (திருமதி). எச். கே. ஜே. எக்கநாயக்கா, புள்ளிவிபரத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர், 2021 நவெம்பர் 24 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xxix. திருமதி. டி. ஆர். கருணாரத்ன, வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர், 2021 நவெம்பர் 24 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நிதியியல் உளவறிதல் பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xxx. திரு. டபிள்யு. எம். பிரியங்கார, கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்கள மேலதிகப் பணிப்பாளர், 2021 நவெம்பர் 24 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நிதியியல் உளவறிதல் பிரிவின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xxxi. முனைவர் (திருமதி). டபிள்யு. ஜி. எஸ். எஸ். ஜே. கீர்த்திரட்ன, நிதியியல் உளவறிதல் பிரிவின் மேலதிகப் பணிப்பாளர், 2021 நவெம்பர் 03 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xxxii. பன்னாட்டு நாணய நிதியத்தின் மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராக பணியாற்றியதன் பின்னர் கடமைக்குத் திரும்பிய முனைவர் (திருமதி). வை. எம். இந்திரரட்ண 2021 திசெம்பர் 13 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ஆளுநர் செயலகத் திணைக்களத்திற்கு விசேட செயற்றிட்டத்திற்குப் பொறுப்பான பணிப்பாளராக நியமிக்கப்பட்டு இணைத்துக் கொள்ளப்பட்டார்.

xxxiii.திரு. என். வை. டி. சி. வீரசிங்க, பொதுப் படுகடன் திணைக்கள மேலதிகக் கண்காணிப்பாளர், 2021 திசெம்பர் 31 இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

xxxiv.திரு. டி. எல். நிகால், பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் 2021 திசெம்பர் 31 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பொதுப்படுகடன் திணைக்களத்தின் மேலதிகக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

### 16.7 விடுவிப்பிலுள்ள ஊழியர்கள்

(i) முனைவர் (திருமதி). வை. எம். இந்திரரத்ன, உயர் அலுவலர் வகுப்பு தரம் ஐஏ அலுவலர், மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராக பன்னாட்டு 2021 நவெம்பர் 30 வரை நாணய நிதியத்திற்கு விடுவிக்கப்பட்டார்.

(ii) திருமதி. எஸ் ரணசிங்க, உயர் அலுவலர் வகுப்பு தரம் II அலுவலர் நிருவாக உதவியாளராக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு விடுவிக்கப்பட்டார்.

### 16.8 ஓய்வுபெறல்/ இராஜினாமாச் செய்தல்

2021ஆம் ஆண்டுப்பகுதியில் இரண்டு துணை ஆளுநர்கள், நான்கு திணைக்களத் தலைவர்கள் மற்றும் ஒரு துணைத் திணைக்களத் தலைவர் உட்பட 44 அலுவலர்கள் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றனர். ஒரு மேலதிகத் திணைக்களத் தலைவர் மற்றும் இரண்டு திணைக்கள துணைத் தலைவர் உட்பட மொத்தமாக 14 அலுவலர்கள் மத்திய வங்கிப் பணியிலிருந்து இராஜினாமாச் செய்தனர்.

## 17. தகவல் தொழில்நுட்பம்

தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது நோய்ப்பரவலின் காரணமாக தோற்றம்பெற்ற புதிய நிலைமையை கட்டாயமாக பின்பற்றவேண்டிய சவால்களுக்கு மத்தியிலும், பாதுகாப்பான உட்கட்டமைப்பினூடாக நிறுவன மட்டத்தில் ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்பத் தீர்வுகளையும் நிறுவனப் பணிகளையும் வழங்குவதன் மூலம் வங்கியின் மையக் குறிக்கோள்களை எய்துவதற்காக அதன் ஆற்றல்வாய்ந்த பங்களிப்பு வகிபாகத்தினை தொடர்ந்தும் நிறைவேற்றியது.

ஆண்டு காலப்பகுதியில், தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது, அ) செலவுச் சிக்கன பிரயோக மென்பொருள் தீர்வுகளை வழங்குதல்; ஆ) தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பின் தொடர்ச்சியான மேம்படுத்தல்; இ) அதிநவீன நிதியியல் சந்தை உட்கட்டமைப்பை நிறுவுவதற்காக பங்களித்தல்; ஈ) தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பையும் தாக்குபிடிக்கும்தன்மையையும் வலுப்படுத்துதல்; அத்துடன் உ) தகவல் தொழில்நுட்ப ஆதரவு மற்றும் அலுவலர்களின் திறன்களை மேம்படுத்துதல் ஆகிய முக்கிய துறைகளின் கீழ் அதன் பணிகளை வழங்கியது.

### அ) செலவுச் சிக்கன பிரயோக மென்பொருள் தீர்வுகளை வழங்குதல்

தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகளை முகாமைசெய்வதற்காக அதிநவீன ஒதுக்கு முகாமைத்துவ முறைமையொன்றை (RMS) நடைமுறைப்படுத்துவதில் முக்கிய பங்கினை வகித்தது. மேலும், வெளிநாட்டு நாணயத்துடன் தொடர்புடைய ஏனைய கொடுக்கல்வாங்கல்களைச் செயன்முறைப்படுத்துவதற்காக கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம், நிதித் திணைக்களம் மற்றும் பொதுப்படுகடன் திணைக்களம் என்பவற்றின் நடவடிக்கைகளுக்கு வசதியளித்து ஒதுக்கல்லா முகாமைத்துவ முறைமையாக (NRMS) தனியான முறைமையொன்று தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினால் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இம்முறைமையானது வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை முகாமைசெய்வதுடன் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்துடன் தொடர்புடைய கொடுப்பனவுகள், வெளிநாட்டுப் படுகடன் கொடுப்பனவுகள், திறைசேரி கொடுப்பனவுகள் அத்துடன் வங்கி மூலம் மேற்கொள்ளப்படுகின்ற ஏனைய கொடுப்பனவுகள் உட்பட வெளிநாட்டுக் கொடுப்பனவுகளின் பல்வேறு வகைகளை செயன்முறைப்படுத்துவதற்குத் தேவையான நிதியியல் தகவல்களுக்கும் வசதியளிக்கிறது.

வங்கியின் முக்கிய உபாய முன்னெடுப்பிலிருந்து தோற்றம்பெற்ற தொழிற்பாடு மற்றும் கொள்கைத் தீர்மானம் மேற்கொள்ளல் என்பவற்றை மேம்படுத்தும் நோக்கத்திற்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளிடமிருந்து எல்லைக் கடந்த மற்றும் உள்நாட்டில் இடம்பெறும் வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக விவரமான தரவுகளைச் சேகரிப்பதற்காக பன்னாட்டு கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையொன்றின் (ITRS) உருவாக்கத்தினை தகவல் தொழில்நுட்ப திணைக்களமானது நிறைவுசெய்தது. தகவல் தொழில்நுட்பத் திணைக்களம், பன்னாட்டு கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையின் வெற்றிகரமான நடைமுறைப்படுத்தலை உறுதிசெய்வதற்காக வங்கிகளுக்கு தொழில்நுட்ப நிபுணத்துவத்தையும் வழங்கியது.

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்திற்கு பிணையங்கள் ஒதுக்கீடு, அதிகாரமளித்தல் மற்றும் அறிக்கை தயாரித்தல் என்பவற்றிற்காக மேம்படுத்தப்பட்ட தொழிற்பாடுகளுடன்கூடிய புதிய வலைத்தள அடிப்படையிலான சொத்துப்பட்டியல் முகாமைத்துவ அலகொன்றினை நடைமுறைப்படுத்துவதனூடாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் (OMO) தீர்ப்பனவு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்டன.

நிதியியல் நிறுவனங்கள் மீதான தொடர்ச்சியான மேற்பார்வையையும் பரீட்சிப்பு செயன்முறையையும் வலுப்படுத்துவதற்காக, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் என்பவற்றிடமிருந்து இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்களுக்கமைவாக (SLFRS-9) நிதியியல் தகவல்களை சேகரிப்பதற்காக நிதியியல் தகவல் வலையமைப்பு (FinNet) முறைமை மேலும் மேம்படுத்தப்பட்டது. அதேபோன்று, டிஜிட்டல் தரவு சமர்ப்பித்தல்களை இயலச்செய்யவதற்காக உரிமம்பெற்ற நுண்நிதி நிறுவனங்களும் நிதியியல் தகவல் வலையமைப்பினுள் உள்வாங்கப்பட்டன.

ஆண்டு காலப்பகுதியில், தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது வங்கித்தொழில் கற்கைகளுக்கான நிலையத்தின் நிகழ்ச்சித்திட்டங்களையும் வசதிகளையும் தன்னியக்கமாக, பாதுகாப்பாக மற்றும் இலகுவாக முகாமைசெய்வதற்காக நிறுவன முகாமைத்துவ முறைமை மற்றும் வங்கித்தொழில் கற்கைகளுக்கான நிலையத்திற்கான புதிய இணையத்தளமொன்று ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதற்காகவும் வசதியளித்தது.

தகவல் தொழில்நுட்பத் திணைக்களம், புதிய வலைத்தள செயலியை நடைமுறைப்படுத்துவதற்கும் விரிவுபடுத்தப்பட்ட தொழில்தருநர் மற்றும் உறுப்பினர் சேவைகளை இயலச்செய்வதற்கும் தேவையான தொழில்நுட்பங்களை ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்திற்கு வழங்கியது. தொழில்தருநர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வசதியளிக்கின்றவிதத்தில் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினூடாக (CEFTS) இணையவழி பங்களிப்புக் கொடுப்பனவுகளுடன் தொழில்தருநர்களுக்கு ஆதரவளிப்பதற்கும் உறுப்பினர் கணக்குகளின் தன்னியக்கமான இற்றைப்படுத்தல்களுக்கு வசதியளிப்பதற்கும் புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட ஊழியர்

சேமலாப நிதியத் திணைக்களத்தின் வலைத்தளத்துடன் சேர்த்து இவ்வலைத்தள செயலி ஆரம்பிக்கப்பட்டது.

நாணயத் திணைக்களத்தின் நாணய முகாமைத்துவ முறைமையானது நாணய அழித்தல் பொறிகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டது. நாணய முகாமைத்துவ முறைமையில் அழிவடைந்த நாணயத்தாள்களை கைகளால் பதிவுசெய்வதுடன் தொடர்புடைய வினைத்திறனற்றத்தன்மையை இது இல்லாதொழித்ததுடன் அழித்தல் செயன்முறையின் வெளிப்படைத்தன்மையையும் பாதுகாப்பினையும் மேம்படுத்தியது.

மேற்குறித்த நிறைவுசெய்யப்பட்ட செயற்றிட்டங்களுக்கு மேலதிகமாக, தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது வங்கியின் செயற்பணிக்கு இன்றியமையாத ஏனைய பல புதிய முறைமைகளையும் மேம்படுத்தல்களையும் ஆரம்பித்து முன்னெடுத்தது.

கடன்வழங்கல் செயன்முறையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக, பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு தேவைப்படுகின்ற மீள்நிதியிடல், வட்டி உதவுத்தொகை மற்றும் கடன் உத்தரவாதத் திட்டங்கள் என்பவற்றிற்கான புதிய முறைமையொன்றின் உருவாக்கத்தினை தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் ஆரம்பித்தது.

தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்திற்கு தேவைப்படுகின்ற தரவுகளை வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களிடமிருந்து சேகரிப்பதற்காக வைப்புத் தரவுச் சேகரிப்பு கருவியை உருவாக்குவதை தொடர்ந்தும் மேற்கொண்டது.

நாட்டிற்கு கிடைக்கப்பெறுகின்ற ஏற்றுமதிப் பெறுகைகளை கண்காணிக்கும் பொருட்டு, தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் ஏற்றுமதிப் பெறுகை கண்காணிப்பு முறைமையொன்றின் உருவாக்கத்தை ஆரம்பித்தது. இம்முறைமையானது பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதிகளுக்கான ஏற்றுமதிப் வருவாய்களை நாட்டிற்கு அனுப்புவதை அவற்றின் மாற்றல் நிலையுடன் சேர்த்து கண்காணிப்பதற்கு வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கு வசதியளிக்கும்.

அலுவலர் கடன் செயல்முறைப்படுத்தல் வினைத்திறனை அதிகரிப்பதற்காக அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களத்திற்காக புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட வலைத்தள அடிப்படையிலான கடன்வழங்கல் முறைமையை உருவாக்குவதை தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் ஆரம்பித்தது.

தகவல் தொழில்நுட்பத் திணைக்களம், திணைக்களங்களின் விசேட தரவுத் தேவைப்பாடுகளை நிறைவுசெய்ததுடன் மென்பொருள் முறைமைகள் மற்றும் தொடர்புடைய செயன்முறைகள் குறித்து மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகளுக்கும் வசதியளித்தது.

மேலும், தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது பல திணைக்களங்களின் பௌதீக ஆவணங்களை டிஜிட்டல்மயப்படுத்தல் செயல்முறைகளை முடிவுறுத்துவதன் மூலமாகவும் ஆவணக் கையாளுகையுடன் தொடர்புடைய ஆளணியின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதன் மூலமாகவும் ஆவண முகாமைத்துவ முறைமையின் பயன்பாட்டினை விரிவுபடுத்தியது.

**ஆ) தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினைத் தொடர்ச்சியாக மேம்படுத்தல்**

அனைத்து தகவல் முறைமைகளும் தாக்குபிடிக்கும்தன்மையில் இருப்பதையும் பிந்திய தொழில்நுட்ப முன்னேற்றங்களுடன் இசைந்துசெல்வதையும் உறுதிசெய்வதற்கு ஆண்டு காலப்பகுதியில் வங்கியின் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு தரமுயர்த்தப்பட்டது.

தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் தொலைத்தொடர்பூட்டல் தொழிற்துறை அமைப்பு 942 தரமிடல் - 3 நியமத்துடன் இணங்குகின்றவிதத்தில் புதிய தலைமை அலுவலக தரவு நிலையத்தை நிறுவுவதை தொடர்ந்தும் மேற்கொண்டது.

அனர்த்த மீட்புத் தளத்தின் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக, தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் பிந்திய தொழில்நுட்பங்களுடன் வசதியளிக்கக்கூடிய புதிய இணையப் பாதுகாப்பை நிறுவி கட்டமைத்தது.

வங்கியின் மெய்நிகர் தனியார் வலையமைப்பு (VPN) தொழில்துறை தரங்களுக்கு இணங்குகின்றவிதத்தில், இரு-காரணி அங்கீகாரம் மற்றும் ஏனைய பாதுகாப்பான இணைப்பு தொடர்புகை பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் மேம்படுத்தப்பட்டது.

**இ) அதிநவீன நிதியியல் சந்தை உட்கட்டமைப்பை நிறுவுவதற்காக பங்களிப்புச் செய்தல்**

ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு தேசிய மட்டத்திலான தகவல் தொழில்நுட்ப செயற்றிட்டங்களுக்கான தொழில்நுட்ப நிபுணத்துவம் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டது.

தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது பொருத்தமான வழங்குநரைத் தேர்ந்தெடுப்பதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்றுவதனூடாக தேசிய கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவு முறைமை நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்திற்கு பங்களித்தது.

மேலும், தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது இலத்திரனியல் வர்த்தகப்படுத்தல் தளம், மத்திய பிணையங்கள் வைப்பகம் மற்றும் மத்திய இணைத்தரப்பு தீர்வுடனான தீர்ப்பனவு இல்லம் என்பவற்றை நிறுவுவதற்கு நிதியியல் சந்தை உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கான தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்கியது.

**ஈ) தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பையும் தாக்குபிடிக்கும் தன்மையையும் வலுப்படுத்துதல்**

தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது வங்கியின் அனைத்து ஊழியர்களுக்காகவும் வீட்டிலிருந்து பணியாற்றக்கூடிய பாதுகாப்பான சூழலுக்கு வசதியளித்த அதேவேளையில், வங்கியின் அனைத்து தகவல் தொழில்நுட்பச் சொத்துக்களையும் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

மென்பொருள் செயலிகள் தொடர்பில் உள்ளகரீதியாக மேற்கொள்ளப்பட்ட அவ்வப்போதான பாதிக்கப்படக்கூடியதன்மை மதிப்பீடுகளுக்கு மேலதிகமாக, எந்தவொரு இணையவழி பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கும் தாக்குபிடிக்கக்கூடிய வகையில் முறைமைகள் சிறந்தமுறையில் இருப்பதை உறுதிசெய்வதற்காக தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்புடன் தொடர்புடைய நிதியியல் தகவலனுப்பும் வலையமைப்புத் தொடர்பான மதிப்பீடொன்றும் செயலாற்றப்பட்டது. உயர்ந்த மட்டத்திலான பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக நிதியியல் தகவல் வலையமைப்பு மற்றும் ஏனைய இன்றியமையாத பணி முறைமைகளை இலக்காகக் கொண்டு வெளிவாரி தகவல் பாதுகாப்பு மதிப்பீடும் முன்னெடுக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் வங்கியின் பாதுகாப்பு நிலையை வலுப்படுத்துவதற்கு பாதுகாப்பு நிகழ்வு மற்றும் நிகழ்வு முகாமைத்துவ பகுப்பாய்வு முறைமையினை நடைமுறைப்படுத்துவதை மேற்கொண்டது.

எந்தவொரு பாதுகாப்பு வழிகாட்டல்களையும் விட்டுக்கொடுக்காது, தொழிற்துறை செயலிகளின் பயன்பாடு தொடர்பான அறிவு மற்றும் வழிகாட்டல்களை வங்கி ஊழியர்களுக்கு வழங்குவதற்காக மெய்நிகர் பயனர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

**உ) தகவல் தொழில்நுட்ப ஆதரவு மற்றும் அலுவலர்களின் திறன்களை மேம்படுத்துதல்**

தொழில்துறையின் சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றி, முறைமைகளுக்கு பாதுகாப்பான அணுகலை உறுதிசெய்கின்ற அதேவேளையில், வங்கியின் நாளாந்த தொழிற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்காக தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினால் வீட்டிலிருந்து பணியாற்றுவதற்கான ஏற்பாடுகளுக்கு ஆதரவளிக்கப்பட்டன. தகவல் தொழில்நுட்ப திணைக்களத்தினால் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் தொழில்துறை தரங்களுக்கு இணையாக முக்கியமான உட்கட்டமைப்பு வசதிகளின் கிடைப்பனவை உயர்மட்டத்தில் (99.5 சதவீதத்திற்கு மேல்) பேண மற்றும் அதேவேளையில் உதவி மேசைக்கு வரும் அனைத்து வினவல்களுக்கும் உரிய தீர்வையும் வழங்க முடிந்தது.

அலுவலர்களின் தகவல் தொழில்நுட்பத் திறன்களை அதிகரிப்பதற்கும் வங்கியினுள் அதிகளவான தொழில்நுட்பரீதியான திறனையும் அச்சுறுத்தல்களுக்குத் தயார்நிலையிலுள்ள சமூகத்தையும் பேணி வளர்ப்பதற்கும் உள்ளக வலையமைப்பில் மீது விழிப்புணர்வு பதாதைகள் வெளியிடப்படுவதை தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் தொடர்ந்தும் மேற்கொண்டதுடன் அலுவலர்களுக்கு மின்னஞ்சலினூடாக பாதுகாப்பு ஆலோசனை விழிப்பூட்டல்களையும் அனுப்பியது.

இதற்கு மேலதிகமாக, தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் அலுவலர்கள், தகவல் தொழில்நுட்ப முறைமைகளின் தரத்தினையும் வங்கியுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பினையும் உயர்த்துவதற்குத் தேவையான தகவல் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் தொடர்பாக தமது திறன்களையும் அறிவையும் மேம்படுத்துவதற்கு உள்நாட்டு மற்றும் சர்வதேச வலைத்தள கருத்தரங்குகள், மெய்நிகர் செயலமர்வுகள், மற்றும் மாநாடுகளில் முனைப்புடன் பங்குபற்றியிருந்தனர்.

## 18. உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடு 1951 தொடக்கம் மத்திய வங்கியில் தொழிற்பட்டு வருகின்றது. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் அலுவலர்களின் தொலைநோக்கு, பணி, வேலைகளின் செயற்பரப்பு, அதிகாரம், பொறுப்புவாய்ந்த தன்மை, பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் சுயாதீனம் என்பன நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வுச் சாசனத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. கணக்காய்வை நடாத்துகையில், உலகளாவிய நியமங்கள் பின்பற்றப்படுகின்றன. 2021ஆம் ஆண்டுப் பகுதியில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

### 18.1 உள்ளகக் கணக்காய்வுத் திட்டம்

2022-2024 காலப்பகுதிக்கான உபாய உள்ளக கணக்காய்வுத் திட்டமும் 2022ஆம் ஆண்டிற்கான வருடாந்த கணக்காய்வுத் திட்டமும் இவ்வாண்டுப்பகுதியில் தொகுக்கப்பட்டுள்ளன.

### 18.2 கணக்காய்வுப் பொறுப்புக்களை மேற்கொள்ளுதல்

**அ. செயன்முறை கணக்காய்வுகள் மற்றும் தகவல் முறைமைகளின் கணக்காய்வுகள்**

2021இல் செயன்முறை மற்றும் தகவல் முறைமைகளின் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு கணக்காய்வு செயற்பாட்டையும் திட்டமிடுதல், செயலாற்றுதல், கணக்காய்வுப் பெறுபேறுகளைத் தொடர்பூட்டுதல் மற்றும் தீர்மான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகிய நான்கு தொடர்ச்சியான படிமுறைகளில் மேற்கொள்ளப்பட்டன. கணக்காய்வுப் பெறுபேறுகளை தொடர்பூட்டுவதற்காக மூன்று படிமுறைகளிலான செயன்முறையொன்று பின்பற்றப்பட்டது. அதாவது கணக்காய்வு அவதானிப்புக்களைச் சரிபார்த்துக் கொள்வதற்காக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட திணைக்களத்துடன் தனியான கூட்டங்களை நடத்துதல், வரைபு கணக்காய்வு அறிக்கையினை வழங்குதல் மற்றும் இறுதி அறிக்கையினை வழங்குதல் என்பனவற்றை இது உள்ளடக்கியிருந்தது. செயன்முறைக்குரியவர்களினால் செய்யப்பட்ட கணக்காய்வு விதந்துரைப்புக்களினை நடைமுறைப்படுத்துவது இவ்வாண்டுப்பகுதியில் பின்தொடரப்பட்டது.

**ஆ. முன்னேற்றங்களை அறிக்கையிடல்**

ஒப்படைக்கப்பட்ட கணக்காய்வுப் பொறுப்புக்களை மேற்கொண்டமையில் அடையப்பட்ட முன்னேற்றம் பற்றி நாணயச் சபைக்கும் நாணயச் சபை மதியுரை கணக்காய்வுக் குழுவிற்கும் அறிக்கையிடப்பட்டது. கணக்காய்வு அறிக்கைகள் மதியுரைக் கணக்காய்வுக் குழுவினூடாக தேசிய கணக்காய்வு அலுவலக கண்காணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

**இ. நிதி அமைச்சுக்கு உள்ளக கணக்காய்வு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

இவ்வாண்டுப் பகுதியில், கோரப்பட்டமைக்கிணங்கவும் 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலங்கை தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் இணங்கிச்செல்லும் விதத்திலும் நிதியமைச்சின் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

### 18.3 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்

உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களமானது, 2021 இன் முதற்காலாண்டுப் பகுதியில் "உள்ளக கணக்காய்வு வசதிப்படுத்தல் வழிகாட்டல்கள்" பற்றி கணக்காய்வு இணைப்பு அலுவர்களுக்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடத்தியது. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்கள அலுவலர்களின் நன்மைகருதி, தகவல் முறைகள் கணக்காய்வு பற்றி தொழில்சார் நிபுணரொருவரினால் தகவல்முறைமைகள் தொடர்பான விருந்தினர் கணக்காய்வாளர் விளக்கவுரையொன்று நடத்தப்பட்டது.

### 18.4 நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வுக் குழுவிற்கு வசதியளித்தல்

மதியுரைக் கணக்காய்வுக்குழுவென்பது நாணயச் சபையினால் நியமிக்கப்பட்ட ஒரு துணைக்குழுவாகும். இது நிதியியல் அறிக்கையிடல், உள்ளக கட்டுப்பாடுகள், உள்ளக கணக்காய்வுகள், வெளிவாரிக் கணக்காய்வுகள் மற்றும் நாணயச் சபையினால் ஒப்படைக்கப்பட்ட வேறேதேனும் விடயங்கள் தொடர்பில் நாணயச் சபைக்கு மதியுரைகளை வழங்குகிறது. நாணச் சபையின் செயலாளர் மதியுரைக் கணக்காய்வுக்குழுவிற்கும் செயலாளராக இருக்கின்றார். உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் துணைச் செயலாளராக தொழிற்படுகின்றார். அதற்கமைய உள்ளக கணக்காய்வுத் திணைக்களம் இவ்வாண்டுப் பகுதியில் மதியுரை கணக்காய்வுக்குழுவிற்கு செயலக வசதிப்படுத்தல்களையும் வழங்கியது.

## 19. பன்னாட்டுத் தொழிற்பாடுகள்

1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் இயலுமைப்படுத்தல் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைவாக, அலுவல்சார் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளின் முகாமைத்துவத் தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற மற்றும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் ஒழுங்கானதும் சுமுகமானதுமான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை நடவடிக்கைகளைக் கண்காணிக்கின்ற பொறுப்பு பன்னாட்டுத் தொழிற்பாட்டுகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படடுள்ளது.

### 19.1 பன்னாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவம்

பாதுகாப்பு, திரவத்தன்மை மற்றும் ஆதாயக் குறிக்கோள்களைப் பரிசீலனையிற் கொண்டு, பன்னாட்டு ஒதுக்குகள் முதலீட்டு மேற்பார்வைக் குழுவின் மேற்பார்வையின் கீழ் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட முதலீட்டு கொள்கைக் கூற்று மற்றும் முதலீட்டு வழிகாட்டல்களுக்கிணங்க பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களமானது அதன் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொண்டது. 2016ஆம் ஆண்டிலிருந்து மத்திய வங்கியானது சொத்து மற்றும் பொறுப்புக் கட்டமைப்பிலிருந்து தோன்றுகின்ற மாதிரியொன்றை அடிப்படையாகக் கொண்ட விஞ்ஞான ரீதியான கட்டமைப்பிற்கிணங்க வெளிநாட்டு ஒதுக்குகளை முகாமைசெய்தது. இது, மத்திய வங்கியின் திரவத்தன்மைத் தேவைப்பாடுகள், மூலதனப் பாதுகாப்பு, வருமானம் ஈட்டல் மற்றும் இடர்நேர்வு சகிப்புத்தன்மை ஆகிய குறிக்கோள்களை முக்கியமாக கருத்திற்கொண்டிருந்தது. அதற்கமைய, மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகள், குறிக்கோள்களின் அடிப்படையில் மூன்று முக்கிய தொகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு தொகுதியும் தனித்துவமான முதலீட்டுக் காலம், நாணய உள்ளமைப்புக்கள் மற்றும் சொத்து உள்ளமைப்புக்கள் ஆகியவற்றை கொண்டுள்ளது. இத்தொகுதிகளின் கீழ், வேறுபட்ட சொத்துப்பட்டியல்கள் பேணப்படுகின்றன.

எனினும், கொவிட்-19 உலகளாவிய நோய்ப்பரவலினால் தோற்றுவிக்கப்பட்ட முன்னெப்பொழுதுமில்லாத தொடர்ச்சியான சூழ்நிலைகளுடன், 2020ஆம் ஆண்டிலிருந்து ஒதுக்கு முகாமைத்துவம் பற்றிய மரபுரீதியான திரவத்தன்மை, பாதுகாப்பு மற்றும் ஆதாய அணுகுமுறைகள் வேறுபட்ட வடிவத்திற்கு மாற்றமடைந்தன. மூலதனச் சந்தைகள் கடுமையான தளம்பல்களுடன் கூடிய தடங்கல்மிக்க போராட்டங்களைப் பதிவுசெய்வதன் மூலம் சாத்தியமான அழுத்தச் சூழ்நிலைகள் முழு உலகத்திற்கும் இயல்பானவையாக மாற்றம்பெற்றுள்ளன. இத்தன்மையின் தொடக்கத்தில், மத்திய வங்கியின் ஒதுக்கு முகாமைத்துவத் தொழிற்பாடுகளும் விதிவிலக்காக அமையவில்லை. உகப்பான ஒதுக்கு முகாமைத்துவத் தொழிற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டு, நிலைமைக்கும் காலம் குறித்த அணுகுமுறைகளுக்கும் ஏற்றாற்போன்று இருக்க கட்டாயப்படுத்தப்பட்ட அறிந்த வரலாற்றிலேயே மிகவும் சவால்மிக்க ஆண்டுகளில் ஒன்றாக இவ்வாண்டு காணப்பட்டது. முடக்கங்களுடனான உலகளாவிய நோய்த்தொற்று சூழ்நிலை பிரகடனப்படுத்தப்பட்டமையுடன் சுற்றுலாத் துறை முழுமையாக முடக்கப்பட்டதால், நாட்டின் வெளிநாட்டு துறையானது பெரிதும் பாதிப்படைந்த அதேவேளை, நாட்டின் தரப்படுத்தல்கள் கீழ்நோக்கி நகர்த்தப்பட்டன.

இப்பின்னணியில், நாட்டின் பிரதான வருமானமும் வரவு ஈட்டல் வளங்களும் தளர்வுற்றன. இதன் விளைவாக, 2020 ஏப்பிறல் முதல் குறிப்பாக அரசாங்கத்தின் வெளிநாட்டு நாணயப் படுகடன் கடப்பாடுகள் மீதான கடன் நிலுவைகளை தீர்ப்பனவுசெய்வதற்கு, இலங்கை மத்திய வங்கி தொடர்ந்தும் வெளிநாட்டு ஒதுக்குகளைப் பயன்படுத்த வேண்டியிருந்தது. திரவத்தன்மை முகாமைத்துவம் மீது முக்கிய கவனம் திசைதிருப்பப்பட்டிருந்த கடுமையான தளம்பலுடைய வெளிநாட்டு ஒழுங்குகளுக்கு மத்தியில் வளர்ந்துவரும் பொருளாதாரத்திற்கு இது, மிகவும் சவால் விடுக்கின்ற பணியாக இருந்தது. படுகடன் கடப்பாடுகளை தீர்க்கும் பொருட்டு, அரசாங்கமும் மத்திய வங்கியும் கடுமையான வழிமுறைகளை அதாவது, பல்வேறு மத்திய வங்கிகளுடன் மீள்கொள்வனவு வசதிகளை நிறைவேற்றுதல், சொத்து உள்ளமைப்புக்களின் மாற்றம், நிதியியல் வசதிகளின் நியதிகளில் ஏனைய அரசாங்கங்களுடனான பேச்சுவார்த்தைகள், படுகடன் கொடுப்பனவுகளை தீர்ப்பனவுசெய்தல் மற்றும் பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்த உடன்படிக்கைகளை வசதிப்படுத்தல் ஆகியவற்றில் பல்வேறு முறையியல்களை மீளமைத்தல் போன்றவற்றை நிறைவேற்றின. இத்தகைய பின்னணியில், வழமையான ஒதுக்கு முகாமைத்துவ கொள்கைகளை பின்பற்றுதலானது நியம நடைமுறைகளிலிருந்து விலகியதுடன் நாட்டின் குறிப்பான வெளிநாட்டு நாணயத் தேவைப்பாடுகள், கொள்கை அமைப்புக்கள் அத்துடன் வெளிவாரிச் சூழ்நிலைகள் என்பன மீது கவனம் செலுத்தவேண்டியிருந்தது.

அதேவேளை, 2014 சனவரி முதல் செயற்பாட்டிலிருந்த முறைமையை பதலீடு செய்கின்ற விதத்தில், 2022 சனவரி 01 அன்று மத்திய வங்கியானது புதிய ஒதுக்கு முகாமைத்துவ முறைமையை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியது. 2020 திசெம்பரில் ஒதுக்கு முகாமைத்துவ முறைமையின் நடைமுறைப்படுத்தல் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டதுடன் இலங்கை மத்திய வங்கியின் ஒதுக்கு முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கு நவீனத்துவமமிக்க மிகவும் பொருத்தமான முறைமையை நிறுவி செயல்படுத்துவதை உறுதிசெய்யும் பொருட்டு, 2021இல் உருவாக்குதல், ஒருங்கிணைத்தல், வடிவமைத்தல் அத்துடன் இணையான பரீட்சிப்புக்கள் எனபன மேற்கொள்ளப்பட்டன. புதிய முறைமையானது செயலாற்றல் மற்றும் பண்புக் கருவியை அறிமுகப்படுத்தல் அத்துடன் முன்னேற்றகரமான சொத்துப்பட்டியல் பகுப்பாய்வு மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ கருவியை தொடங்கிவைத்தல் போன்றவற்றை உள்ளடக்கி, இலங்கை மத்திய வங்கியின் ஒதுக்கு முகாமைத்துவ நியதிகளில் பல்வேறு முன்னேற்றங்களை கொண்டுவரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### 19.2 செயலாற்றப் பகுப்பாய்வு மற்றும் வசதிப்படுத்தல் நடவடிக்கைகள்

வெளிநாட்டு ஒதுக்கு மட்டங்களில் ஏற்பட்ட சடுதியான வீழ்ச்சிக்கு மத்தியிலும், மத்திய வங்கியானது ஒதுக்குகளை முகாமைசெய்ததுடன் மொத்த அலுவல்சார் ஒதுக்குக்கள் வழமை போன்று நாளாந்த அடிப்படையில் தொகுக்கப்பட்ட அதேவேளையில் மொத்த ஆதாய அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்ட ஒதுக்கு முகாமைத்துவ நடவடிக்கைகளின் செயலாற்றத்தினை மதிப்பீடுசெய்து காலாண்டு அடிப்படையில் நாணயச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

அலுவல்சார் ஒதுக்குகளை கட்டியெழுப்புதல் இடம்பெறும் வரை குறுகிய கால வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மையுடனும் கூட தாங்கியிருப்பொன்றை வழங்கும் நோக்குடன், பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களமானது பிராந்திய மத்திய வங்கிகளுடன் பல்வேறு இருதரப்பு நாணயப் பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்த உடன்படிக்கைகளை தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடாத்தி செயன்முறைப்படுத்தியது. இருதரப்பு நாணயப் பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்த உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடுவது நீண்டதொரு செயன்முறையாகும். இது நாணயச் சபை அத்துடன் அமைச்சரவையின் ஒப்புதலைத் தொடர்ந்து, சட்ட ஏற்பாடுகள் மற்றும் நிதியியல் நியதிகளின் தொடர்பில், வழங்கல் தரப்பினருக்கும் கோருகின்ற தரப்பினருக்குமிடையிலான பல்வேறு தொடர்பூட்டல்களையும் பேச்சுவார்த்தைகளையும் உள்ளடக்குகின்றது. அதற்கமைய, மத்திய வங்கியானது 2021 மாச்சு மற்றும் ஓகத்தில் முறையே சீன மத்திய வங்கி மற்றும் வங்காளதேச வங்கி என்பவற்றுடன் 2021 காலப்பகுதியில் இரு இருதரப்பு நாணயப் பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்த உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டது. வங்காளதேச வங்கியுடனான இருதரப்பு நாணயப் பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்த உடன்படிக்கையின் ஏற்பாடுகளின் கீழ், மொத்தமாக ஐ.அ.டொலர் 200 மில்லியன் கொண்ட தொகை மூன்று தொகுதிகளில் வரைவு செய்யப்பட்ட அதேவேளை சீன மக்கள் வங்கியுடன் கைச்சாத்திட்ட இருதரப்பு நாணயப் பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்த உடன்படிக்கையின் கீழ் ஒரு ஆண்டு காலப்பகுதிக்கு சீன ரென்மின்பி 10 பில்லியன் (ஐ.அ.டொலர் 1.5 பில்லியனிற்கு சமமானது) 2021 திசெம்பரில் வரைவு செய்யப்பட்டதுடன் இது உடனடி உடன்படிக்கையொன்றாகப் பேணப்பட்டுள்ளது. மேலும், பரஸ்பரப் பரிமாற்றல் வசதிகளைப் பெறுவதை இலக்காக் கொண்டு, ஏனைய பல்வேறு பிராந்திய மத்திய வங்கிகளுடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

இதற்கிடையில், மிகவும் சவாலான உலகளாவிய மற்றும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை நிலைமைகளுக்கு மத்தியிலும், பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களமானது 2021இல் ஏற்கனவே செயற்பாட்டிலுள்ள இணைத்தரப்பினர்களுக்கான வெளிநாட்டு இணைத்தரப்பினர்களின் பணம் தூயதாக்கலுக்கெதிராக/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தேவைப்பாடுகளைப் பின்பற்றுதலை/இணங்குவித்தலை மதிப்பிடுகின்ற நியதிகளில் ஆண்டு மீளாய்வை நடாத்தியது.

### 19.3 உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை அபிவிருத்திகள்

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிலிருந்தான நீடித்த சிக்கல்கள் காரணமாக தோற்றுவிக்கப்பட்ட சவாலான சந்தை நிலைமைகள் அத்துடன் உலகத் தரப்படுத்தல் முகவராண்மைகளினால் மேற்கொள்ளப்பட்ட நாட்டிற்கான கொடுகடன் தரப்படுத்தலின் தொடர்ச்சியான திருத்தங்கள் காரணமாக ஏற்பட்ட தாக்கத்திற்கு மத்தியிலும், பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களமானது ஆண்டுகாலப்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை நடவடிக்கைகளை கண்காணிப்பதிலும் இலங்கை ரூபாவின் வெளிநாட்டு பெறுமதியைப் பேணுவதிலும் அதன் தீவிரமான ஈடுபாட்டை தொடர்ச்சியாக மேற்கொண்டது. 2021 ஏப்பிறல் இறுதியிலிருந்து, செலாவணி வீதம் மீதான தேய்மான அழுத்தம் மற்றும் சந்தை ஊகத்தை குறிப்பிட்ட அளவிற்கு கட்டுப்படுத்தும் பொருட்டு, வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களை ரூ.200 - ரூ.203 என்ற ஐ.அ.டொலர்/இலங்கை ரூபாய் செலாவணி வீத வீச்சிற்குள் நிறைவேற்றுவதற்கு வங்கிகள் பரஸ்பரமாக உடன்பட்டன. மேலும், 2021 செத்தெம்பர் தொடக்கத்திலிருந்து, ரூ.200 - ரூ. 203 இடையிலான ஐ.அ.டொலர்/இலங்கை ரூபாய் செலாவணி வீதத்திற்குள் வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுமாறு அனைத்து வங்கிகளுக்குமான ஆளுநரின் அறிவுறுத்தல்களைத் தொடர்ந்து, உள்நாட்டு வங்கிகளுக்கிடையான வெளிநாட்டுச் செலாவணி சந்தையில் காணப்படுகின்ற சராசரி உடனடி செலாவணி வீதமானது குறித்த வீச்சிற்குள் தளம்பலடைந்திருந்தது. மேலும், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மை சிக்கல்களை தீர்க்கும் பொருட்டு, மத்திய வங்கி பல புதிய வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது. இதற்கான அத்தகைய முயற்சிகளை வெற்றிகரமாக மேற்கொள்வதில் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் தீவிரமாக ஈடுபட வேண்டியிருந்தது. 2021 காலப்பகுதியில், அலுவல்சார் ஒதுக்கு நிலையை வலுப்படுத்தும் பொருட்டு, மாற்றப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைளினதும் மாற்றப்பட்ட தொழிலாளர் பணவனுப்பல்களினதும் ஒரு பகுதியை மத்திய வங்கிக்கு விற்பனை செய்யுமாறு அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளையும் மத்திய வங்கி அறிவுறுத்தியது.

தகவலைப் பரப்பும் நியதிகளில், பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களமானது தேவையானவாறும் தேவைப்படும் போது பல்வேறு ஊடக வெளியீடுகளை வெளியிட்டதுடன் வங்கிகளுக்கு விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்தியது. மேலும், இத் திணைக்களமானது ஏனைய ஐம்பத்தாறு உலக நாணயக்களுக்கான குறியீட்டுச் செலாவணி வீதங்களுடன் சேர்த்து ஐ.அ.டொலருக்கான குறியீட்டுச் செலாவணி வீதத்தினை தொடர்ந்து வெளியிட்டது. மேலும், இத்திணைக்களம் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் தந்தி மாற்றல்களுக்காக வழங்கப்படும் ஒன்பது முக்கிய நாணயங்களுக்கெதிரான இலங்கை ரூபாவின் வாங்கல் மற்றும் விற்றல் செலாவணி வீதத்தின் சராசரியினையும் இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் நாளாந்த அடிப்படையில் தொடர்ந்தும் வெளியிட்டது. மேலும், பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், தேவையான செலாவணி வீதத்துடன் தொடர்புடைய தரவுகளை வழங்குவதன் மூலம் பொதுமக்கள் உட்பட பல்வேறு அரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்களின் கோரிக்கைகளை வசதிப்படுத்தியது. அதேவேளை, சந்தை நடத்தையில் உயர்வான தரத்தை உறுதிசெய்யும் பொருட்டு பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் சீரான தொழிற்பாடுகளுக்கு வசதியளிப்பதற்காக 2021இல் தற்காலிக அடிப்படையிலும் விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையிலும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் ஏதேனும் ஊக நடத்தைகளை கட்டுப்படுத்துவதற்கும் அத்துடன் தொடர்புடைய உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு ஏற்புடைய தேறிய வெளிநாட்டுச் செலாவணி திறந்த நிலைமையின் வரையறைகளை திருத்துவதற்கும் வழிமுறைகளை வலுப்படுத்தியது. அதேநேரம், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் சந்தைப் பங்கேற்பாளர்களின் முறைகேடான நடவடிக்கைகளுக்கு அல்லது தவறான நடத்தைகளுக்கு எதிராக தேவைப்பட்டவாறு பொருத்தமான ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

சந்தை எண்ணப்பாங்குகளை அவதானித்து, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் ஒழுங்கான நடத்தையை உறுதிசெய்கின்ற அதற்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்பிற்கமைவாக, பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களமானது செலாவணி வீதத்தில் காணப்படுகின்ற தேவையற்ற தளம்பல்களை கட்டுப்படுத்துவதற்கான அதன் விதந்துரைப்புக்களை வழங்கிய அதேவேளை, 2021ஆம் ஆண்டு முழுவதும் இலங்கை மத்திய வங்கியின் ஏனைய திணைக்களங்கள் மற்றும் வெளிவாரி நிறுவனங்கள் மூலம் பரிந்துரைக்கப்பட்ட பல்வேறு கொள்கை முன்மொழிவுகள், ஒழுங்குவிதிகள் மற்றும் தொடர்புடைய விடயங்கள் என்பனவற்றின் சாத்தியமான உள்ளார்ந்தங்கள் மீது அதன் அபிப்பிராயங்கள், அவதானிப்புக்கள் மற்றும் விதந்துரைப்புக்கள் போன்றவற்றை தொடர்ந்தும் வழங்கியிருந்தது.

பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், சந்தைத் தொழிற்பாடுகள் குழுவின் செயலகமாக தொடர்ந்தும் விளங்கியதுடன் காத்திரமான விதந்துரைப்புக்களை மேற்கொள்வதற்கான அனைத்து தொடர்புடைய தகவல்களுடன் அக்குழுவிற்கு வழங்கியது. பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை மற்றும் அலுவல்சார் ஒதுக்கு நியதிகளில் முன்னேற்றங்கள் பற்றிய அதன் உள்நோக்குகளையும் நாணயக் கொள்கை குழுவிற்கு வழங்கியது. விசேடமாக, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்படுகின்ற முன்னேற்றங்கள் பற்றிய கரிசனைகள் மற்றும் முன்னோக்கிய பயணத்தை உரிய காலத்தில் எடுத்துக்காட்டி, நாணயச் சபைக்கு தொடர்ந்தும் தெரியப்படுத்தப்பட்டதுடன் பொருத்தமான விதந்துரைப்புகளும் வழங்கப்பட்டது. மேலும், பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களமானது உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்படுகின்ற அண்மைக்கால முன்னேற்றங்கள் மற்றும் தேவையானவாறும் தேவைப்படும் போதும் வெளிநாட்டுச் செலாவணித் தேவைப்பாடு குறித்து மூத்த முகாமைத்துவத்திற்கு எடுத்துரைப்புகளையும் வழங்கியதுடன் பல்வேறு குறிப்புக்களையும் சமர்ப்பித்தது. 2021ஆம் ஆண்டில், பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களமானது வாடிக்கையாளர்கள் உட்பட சந்தைப் பங்கேற்பாளர்களுடன் வெளிநாட்டுச் செலாவணி தொடர்பான அவர்களின் கரிசனைகளை தீர்ப்பதற்கு தொடர்ந்தும் ஈடுபட்ட அதேவேளை, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் நிலவிய வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மைப் பற்றாக்குறைக்கு மத்தியில் பொருளாதாரத்தை முடிந்தவரை சீராக அத்துடன் ஏனைய அத்தியாவசிய உணவுப் பண்டங்கள் உட்பட அத்தியாவசிய இறக்குமதிகளின் தங்குதடையற்ற வழங்கலை உறுதிப்படுத்துவதற்கு உதவியது.

மேலும், நாட்டிற்கு அதிகளவான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை ஈர்க்கும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவத்தன்மையை மேம்படுத்தும் குறிக்கோளுடன், மத்திய வங்கியுடன் இணைந்து அரசாங்கம், முறையான வங்கித்தொழில் துறை மூலமாக அனுப்பப்படும் தொழிலாளர் பணவனுப்பல்களுக்கான பல்வேறு ஊக்குவிப்புக்களை வழங்கியது. பொது மக்களின் வெளிநாட்டு நாணயத் தாள்களை இலங்கை ரூபாவிற்கு மாற்றுகின்ற போது, ஐ.அ.டொலர் ஒன்றுக்கு மேலதிகமாக ரூ.10 உள்ளடங்கலாக வேறு வழிமுறைகளை கொண்டு பொதுமக்களுக்கு ஊக்குவிக்கப்பட்டது. இவ்வூக்குவிப்புக்களின் நடைமுறைமுறைப்படுத்தலானது பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் மூலம் உரியவாறு வசதிப்படுத்தப்பட்டது.

அதேவேளை, பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் சந்தை கண்காணிப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துகின்ற அதேவேளை, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையை அபிவிருத்தி செய்வதை இலக்காகக் கொண்டு, மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள மூலதனச் சந்தை அபிவிருத்தி கருத்திட்டத்திற்கான அதன் பங்களிப்பையும் உள்ளீடுகளையும் தொடர்ந்தும் வழங்கியது. வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கான இலத்திரனியல் வர்த்தக தளமொன்றை நடைமுறைப்படுத்துவதனூடாக, சுயாதீனமாக விலை அறிதலும் சந்தை திரவத்தன்மையும் மேம்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 20. சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களம்

இலங்கை மத்திய வங்கியின் ஆளுகைத் தராதரங்கள் மற்றும் இணங்குவிப்பு மட்டத்தினை மேம்படுத்துகின்ற அதேவேளை மத்திய வங்கியின் அக்கறைகளை பாதுகாக்கும் நோக்கத்துக்காக சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களம் தாபிக்கப்பட்டுள்ளது. சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களமானது மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பினை வலுப்படுத்தல் மற்றும் நிதியியல் துறைக்கு சட்ட சீர்திருத்தங்களை அறிமுகம் செய்தல் அதாவது, புதிய சட்டங்களை உருவாக்குதல், மத்திய வங்கியினால் நிருவகிக்கப்படும் நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு பொருத்தமான திருத்தங்களை கூட்டிணைத்தல் ஆகியவற்றுக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது. 2021ஆம் ஆண்டில் கொவிட்-19 தொற்று நிலைமை காரணமாக மத்திய வங்கி பல சவால்களுக்கு முகங்கொடுத்த போதும், மத்திய வங்கியின் பரந்த வரிசையிலான செயற்பாடுகளை நிறைவேற்ற சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களம் வழங்கிய பங்களிப்பினை பின்வருமாறு சுருங்கக் கூறலாம்.

சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களம் புதிய வங்கித்தொழில் சட்டம் மற்றும் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டம் உள்ளடங்கலாக இலங்கை மத்திய வங்கியினால் நிருவகிக்கப்படுகின்ற முக்கிய சட்டங்களை மீள்பார்வை செய்தல் மற்றும் அறிமுகம் செய்தல் ஆகியவற்றில் ஈடுபட்டது. அத்தகைய திருத்தங்களானவை மத்திய வங்கிக்கு உரித்தாக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை கட்டமைப்பிற்கு உறுதியான அடித்தளமொன்றை வழங்குவதற்கு முக்கியத் தேவையாக அமையும். சர்வதேச தராதரங்களுக்கு இணையாக அவற்றின் ஏற்பாடுகளை மேலும் வலுப்படுத்துவதற்கும், சீரமைப்பு செய்வதற்கும் முன்மொழியப்பட்டுள்ள வங்கித் தொழில் சட்டம் தொடர்பிலான இரண்டாம் சுற்று கலந்துரையாடல்கள் கடந்த வருடம் முடிவடைந்தன. நிதித் தொழில் சட்டத்திற்கு முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்கள் மத்திய வங்கியின் தீர்வு காணும் அதிகாரம் உள்ளடங்கலாக வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மீதான மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை அதிகாரங்களை மேம்படுத்தும் வகையில் அமையும்.

மேற்கூறப்பட்ட முக்கிய சட்டவாக்கங்களுக்கு மேலதிகமாக சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களமானது புதிய சட்டங்களை அதாவது வர்த்தகத் தீர்வு மற்றும் வலையமைப்புச் சட்டம், நிதியியல் சொத்துக்கள் முகாமைத்துவ முகவராண்மைச் சட்டம் மற்றும், நுண்கடன் மற்றும் கொடுகடன் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரச் சட்டம் ஆகியவற்றை உருவாக்குவதில் பாரியளவில் ஈடுப்பட்டது. குறைவாக செயற்படும் சொத்துக்கள் காரணமாக ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிதியியல் நிறுவனங்களின் இருப்புநிலை அறிக்கைகளில் ஏற்படும் சுமையை எளிதாக்குவதற்காக நிதியியல் சொத்துக்கள் முகாமைத்துவ கம்பனிகளை இலங்கையில் தாபிப்பதற்கான எண்ணக்கருவினை அடிப்படையாகக் கொண்ட சட்டக்கட்டமைப்பொன்றை அறிமுகப்படுத்துவதனை நிதியியல் சொத்துக்கள் முகாமைத்துவ முகவராண்மைச் சட்டம் இலக்காக கொண்டுள்ளது. புதிய நுண்கடன் மற்றும் கொடுகடன் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரச் சட்டமானது பணம் கடன் வழங்கல் வியாபாரம் மற்றும் நுண்கடன் வியாபாரம் ஆகியவற்றினை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்வதற்கான தனியான மேற்பார்வை அதிகாரசபை ஒன்றை தாபித்தல், தொடர்புடைய வியாபாரங்களில் நுகர்வோர் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றுக்காக வரையப்பட்டுள்ளது. சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களம் கடந்த ஆண்டின்போது தொடர்ச்சியாக இச்செயன்முறையில் ஈடுபட்டது.

இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள மூலதனச் சந்தை திட்டத்தினை வசதிப்படுத்தும் நோக்கில், இலங்கைக்கான வர்த்தகத் தீர்வு மற்றம் வலையமைப்புச் சட்டத்தினை அறிமுகம் செய்வதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. அச்சட்டம் அரச பிணையங்கள் மற்றும் வெளிநாட்டு செலாவணிக்கான சந்தைகளை பிந்தைய வர்த்தகத் தீர்வு, மத்திய இணைத்தரப்பு முறைமைகள், பல்நாணய அதே நேர மொத்த தீர்ப்பனவு முறைமை போன்றவற்றால் ஆதரவளிக்கப்பட்ட பாதுகாப்பான, நவீன மற்றும் போட்டித்தன்மையுள்ள நியாயமான சந்தைகளுக்கான இடங்களாக மாற்றுவதற்கு வடிவமைக்கப்பட்ட விரிவான சட்டம் மற்றும் தொழிநுட்ப கட்டமைப்பினை அறிமுகப்படுத்துவதனை அடிப்படை இலக்காக கொண்டிருந்தது. சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களம் ஆண்டு முழுவதும் இச்செயற்றிட்டத்தில் ஈடுபட்டிருந்தது. அதே காலப்பகுதியில், இலங்கையில் அரச பிணையங்கள் சந்தை மீதான பொதுமக்களின் நம்பிக்கையினை மீட்டெடுப்பதற்காகவும், திறைசேரி முறிகளின் வெளியீடுகளை வலுப்படுத்துவதற்காகவும் 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் அதன்கீழ் வெளியிடப்பட்ட கீழ்நிலைச் சட்டவாக்கங்களுக்கான திருத்தங்கள் முன்மொழியப்பட்டன.

இவை தவிர்ந்து, சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களமானது, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டமூலம், கொரோனா வைரஸ் தொற்று (கொவிட் -19) (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டமூலம், நிதிச் சட்டமூலம், தரவுப் பாதுகாப்பு சட்டமூலம் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம், தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் இலங்கை சங்கி கட்டளைச் சட்டம் ஆகியவற்றுக்கு முன்மொழியப்பட்ட திருத்தங்கள் போன்ற, ஆர்வலர்களால் வரையப்பட்ட மத்திய வங்கியுடனும் நிதித்துறையுடனும் தொடர்புடைய பல்வேறு சட்டவாக்கங்களை மீளாய்வு செய்தது. அவ்வாறு செய்யும் போது, சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களமானது அத்தகைய சட்டவாக்கங்கள்.'. திருத்தங்களுடன் இணைந்த தேசிய முக்கியத்துவத்தினை கருத்திற்கொண்டு நடைமுறையிலுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை கட்டமைப்பின் மீது அவை மேற்கொள்ளும் தாக்கத்தினை மதிப்பீடு செய்தது.

2021ஆம் ஆண்டின் போது சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களமானது ஊழியர்கள் மற்றும் நாணயச்சபையின் உறுப்பினர்களுக்கு ஏற்புடையதான நடத்தைக் கோவை, தகவல் தெரியப்படுத்தும் கொள்கை போன்ற இலங்கை மத்திய வங்கியின் ஆளுகைத் தூண்டுதல் கொள்கைகளை மீள்பரிசீலனை செய்வதில் ஈடுபட்டது. அதே வேளை, சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களம், மத்திய வங்கியின் இணங்குவிப்பு செயற்பாட்டின் முக்கியப்புள்ளியாக, வங்கியின் வெளிநாட்டு இணைத்தரப்புகளின் இணக்கத் தேவைப்பாடுகளை உடனடியாக கையாண்டதோடு அத்தகைய இணைத்தரப்புகள் வங்கியின் வெளிநாட்டு செலாவணி நடவடிக்கைகளில் ஈடுபடும் போது அவற்றின் இணக்கத்தினை உறுதிப்படுத்துவதற்காக அவற்றின் வருடாந்த உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள் மற்றும் விழிப்புக்கவன மதிப்பாய்வுகளை மேற்கொண்டது.

2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் மத்திய வங்கி இணங்கிச் செயற்படுவதை உறுதிசெய்யும் பொருட்டு, 2021ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களத்தின் தகவல் அறியும் பிரிவானது இலங்கை மத்திய வங்கி தொடர்பிலான 144 தகவலுக்கான கோரிக்கைகளையும் 13 மேன்முறையீடுகளையும் கையாண்டது. மேலும், சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களமானது தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் முன்னிலையில் மத்திய வங்கி சார்பாக எதிர்வாதிட்டது. அடிக்கடியான முடக்கம், பயணக்கட்டுப்பாடுகள், வீட்டிலிருந்து வேலை செய்யும் நெறிமுறைகள் போன்ற கொவிட்-19 தொற்று நிலைமையின் சவாலான விளைவுகள் காணப்பட்டபோதும், சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களத்தின் தகவல் அறியும் பிரிவானது பிரசைகள் மற்றும் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல் கோரிக்கைகளை உடனடி முறையில் கையாண்டது.

கொவிட்-19 தாக்கத்தினை தணிப்பதற்காக மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட சில கொள்கை முன்னெடுப்புகளுக்கெதிராக மூன்றாம் திறத்தவர்களால் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதனால் 2021ஆம் ஆண்டு மத்திய வங்கிக்கு ஒரு முக்கியமான ஆண்டாக அமைந்தது. பொருளாதாரத்தின் பாதிக்கப்பட்ட துறைகள் மீதான கடன் தடைக்காலம்,

ஏற்றுமதிப் பெறுகைகள் இலங்கைக்குள் திருப்பியனுப்பப்படுவதை அதிகரிக்க 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட விதிகள், நாணயச்சபையால் உரிமம் இரத்து செய்யப்பட்ட தோல்வியடைந்த நிதி நிறுவனங்களை ஒடுக்குதல் போன்றன 2021ஆம் ஆண்டில் நீதிமன்றங்களில் சவாலுக்குட்படுத்தப்பட்ட அத்தகைய முன்னெடுப்புகளாகும்.

சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களமானது மத்திய வங்கி சார்ந்த திணைக்களங்களுடன் அவற்றின் செயற்பாடுகளுடன் தொடர்புடைய துணைநிலைச் சட்டவாக்கங்களான பணிப்புரைகள், ஒழுங்குவிதிகள், வழிமுறைகள், கட்டளைகள், விதிகள் போன்றவற்றை உருவாக்குதல் மற்றும் திருத்துவதற்காக இணைந்து செயற்பட்டது. சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களம் அத்தகைய திணைக்களங்களுக்கு குறிப்பாக அவற்றுடன் தொடர்புடைய சட்டம் மற்றும்/அல்லது இணங்குவிப்பு இடர்நேர்வுகளை கவனத்திற்கொண்டு அறிவுரைகள் மற்றும் பரிந்துரைகளை வழங்கியது.

நாட்டின் அனைத்து மக்களினதும் நிதியியல் உள்ளடக்கத்தினை மேம்படுத்துவதற்காக மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களத்தின் அலுவலர்கள் பாரியளவலான பங்களிப்பினை வழங்கினர். சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களத்தின் பங்களிப்பானது மத்திய வங்கியின் சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு, தடைசெய்யப்பட்ட திட்டங்கள், அதிகாரமளிக்கப்படாத நிதி வியாபாரம், நிதிக்குத்தகையுடன் தொடர்புடைய பிரச்சினைகள், தவணைக் கொள்வனவு மற்றும் நிதியியல் நுகர்வோர் பாதுகாப்பு போன்றவற்றின் மீது கவனத்தை கொண்டதாக அமைந்தது. மேலும் 2021ஆம் ஆண்டின் போது, மத்திய வங்கியினதும் நிதியியல் துறையினதும் நடவடிக்கைகள் தொடர்பிலான இலங்கையின் தேசிய நிதியியல் உள்ளடக்க மூலோபாய ஆணைக்குழு மற்றும் புதிய அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமையின் கொள்வனவு மற்றும் அமுலாக்கத்திற்கான வழிநடத்தல் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு ஆணைக்குழுக்கள் போன்ற பல்வேறுபட்ட விடயதானங்களுக்காக அமைக்கப்பட்ட பல விசேட ஆணைக்குழுக்களில் சட்டம் மற்றும் இணங்குவிப்பு திணைக்களத்தின் அலுவலர்கள் பணியாற்றினர்.

## 21. பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம்

மத்திய வங்கியின் மைய நியதிச்சட்ட குறிக்கோள்களில் ஒன்றான நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை அடைவதற்கு மத்திய வங்கிக்கு வசதியளிக்கும் நோக்குடன் பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களமானது நிதியியல் துறையைப் பாதிக்கின்ற சாத்தியமுடைய முறைமைசார்ந்த இடர்நேர்வுகள் மீது பரந்தளவான பகுப்பாய்வுகளை நடத்துகின்றது. அத்தகைய பகுப்பாய்வுகள் நுண்பாகமுன்மதியுடைய ஒழுங்குமுறைப்படுத்தலையும் மேற்பார்வையையும் பூர்த்திசெய்கின்றன. இது, நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை பேணுவதில் மத்திய வங்கியால் பின்பற்றப்படுகின்ற அணுகுமுறைகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. இச்செயன்முறையில், பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களமானது நிதியியல் நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் தரவுகளை பயன்படுத்துவதன் மூலமாக முறைமைசார்ந்த இடர்நேர்வு பகுப்பாய்வுகளை நடாத்துவதுடன் தேவைப்படும் போதும் தேவைப்படுமாறும் எண்ணற்ற வேறு மூலங்களிலிருந்து தகவல்களையும் பெற்றுக்கொள்கின்றது. இதற்கு மேலதிகமாக, ஏதேனும் பாதகமான அதிர்ச்சிகளுக்கெதிராக நிதியியல் முறைமை தாக்குபிடிக்கும்தன்மையை உறுதிசெய்வதற்கு, நிகழக்கூடிய பாதகமான சூழ்நிலைகளின் கீழ் பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் அழுத்தப் பரிசோதனைகளை நடாத்துகின்றது. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை பேணும் பொருட்டு, முறைமைசார்ந்த இடர்நேர்வை தணிப்பதற்கு அத்துடன்∴அல்லது தவிர்ப்பதற்கு மத்திய வங்கியின் முன்னோக்கிய கொள்கை வகுத்தல் செயன்முறைக்கு இத்தகைய பகுப்பாய்வுகள் பங்களிப்புச்செய்கின்றன. 2021ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட பிரதான நடவடிக்கைகளின் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது.

### (அ) பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்பு

ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிதியியல் நிறுவனங்களால் அறிக்கையிடப்பட்ட தரவுகளையும் ஏனைய பல்வேறு மூலங்களிலிருந்து பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களத்தால் சேகரிக்கப்பட்ட தரவுகளையும் பயன்படுத்தி, உலகளாவிய மற்றும் உள்நாட்டுப் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள், நிதியியல் நிறுவனங்கள் மற்றும் நிதியியல் சந்தைகள் என்பனவற்றிலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வுகள் பற்றிய பகுப்பாய்வுகளை பேரண்டமுன்மதியுடைய திணைக்களம் நடாத்தியது. வீட்டலகு மற்றும் நிறுவன துறைகளிலிருந்து நிதியியல் துறைக்கான தாக்கத்தை இனங்காணும் பொருட்டு அத்துறைகளின் படுகடன் இயக்கவாற்றலுடன் தொடர்புடைய தரவுகள் மீதும் பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் பகுப்பாய்வை நடாத்தியது. இதற்கு மேலதிகமாக, பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களமானது உள்நாட்டு நிதியியல் முறைமையின் பல்வேறு துணைத் துறைகளின் உறுதிப்பாடு மற்றும் ஆற்றல்வாய்ந்ததன்மை என்பவற்றின் அடிப்படையிலமைந்த ஒருங்கிணைந்த நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குறிகாட்டிகள் பலவற்றைத் தொடர்ந்தும் தொகுத்த அதேவேளை, இக்குறிகாட்டிகளின் நம்பகத்தன்மையினை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை எடுத்தது. அத்தகைய பகுப்பாய்வினைத் தொடர்ந்து, 2021ஆம் ஆண்டுகாலப்பகுதியில் காலாண்டு ரீதியான இடர்நேர்வு மதிப்பீடுகள் உட்பட இடர்நேர்வு மதிப்பீடுகளை உள்ளடக்கும் பல சபைப் பத்திரங்கள் நாணயச்சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. இவை, நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டிற்கான சாத்தியமான அச்சுறுத்தல்களையும் கொள்கை விதந்துரைப்புக்களையும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுடன் தொடர்புடைய ஏனைய சமகால கரிசனைகளையும் எடுத்துக்காட்டுகின்றன.

### (ஆ) அழுத்தப் பரிசோதனைக் கட்டமைப்பு

இலங்கையில் பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புக் கட்டமைப்பின் விபரத்தையும் கருத்தாழத்தையும் விரிவுபடுத்துவதற்கு பேரண்டமுன்மதியுடைய திணைக்களம் 2020ஆம் ஆண்டில் பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்து பெற்றுக்கொண்ட தொழில்நுட்ப உதவியை தொடர்ந்தும் பெற்றுக்கொண்டது. தொழில்நுட்ப உதவியுடன் வங்கிகளுக்கான புதிய இயக்கவாற்றல்மிக்க கடன்தீராற்றல் அழுத்தப் பரிசோதனைக் கட்டமைப்பொன்றை பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் உருவாக்கியது. இது, முறைமை உறுதிப்பாட்டை நிச்சயப்படுத்துவதற்காக செயலூக்கமிக்க கொள்கைகளை உருவாக்குவதற்கான அனுமானங்களை வழங்குகின்றது. புதிய வங்கி கடன்தீராற்றல் அழுத்தப் பரிசோதனை மாதிரியானது கருதுகோள்சார்ந்த சூழ்நிலைகளின் கீழ், நிதியியல் முறைமையின் தாக்குபிடிக்கும்தன்மையை முழுமையாக மதிப்பீடுசெய்வதன் மூலம் பேரண்டமுன்மதியுடைய நோக்கை வழங்குகின்றது. பேரண்டமுன்மதியுடைய நோக்கானது குறிப்பாக வங்கித்தொழில் முறைமையிலுள்ள இடர்நேர்வுக்கான முக்கிய மூலங்கள், கடத்தல் பொறிமுறைகள், மற்றும் பாதிக்கப்படும்தன்மைகள் என்பவற்றை இறுதியாக உண்மைப் பொருளாதாரத்துடனும் நிலையெதிர்மாறாகவும் இணைக்கின்ற முறைமைசார்ந்த அபிப்பிராயத்தினை வலியுறுத்துகின்றது. இதனால் தனிப்பட்ட நிறுவனங்களின் தாக்குப்பிடிக்கும்தன்மை மீது முக்கியமாக கவனம்செலுத்துகின்ற மேற்பார்வை அழுத்தப் பரிசோதனைகளிலிருந்து இக்கட்டமைப்பு வேறுபடுகின்றது. மத்திய வங்கிகளின் பேரண்டமுன்மதியுடைய

கொள்கைகளின் இன்றியமையாத பகுதியொன்றாக வங்கி கடன்தீராற்றல் அழுத்தப் பரிசோதனைகள் காணப்படுகின்றன. தரவுகளைச் சேகரித்தல் மற்றும் தரவு உட்கட்டமைப்பை பேணுதல், ஏற்புடைய கருவிகளின் தொகுப்பொன்றுடன் அழுத்தப் பரிசோதனைச் சூழ்நிலையை உருவாக்குதல், அத்துடன் வங்கிகளின் ஐந்தொகைகள் மற்றும் தாக்குப்பிடிக்கும்தன்மை என்பவற்றிற்கு எதிர்பார்க்கப்படும் அதிர்ச்சிகளுக்கு இடமளிக்கின்ற கடத்தல் பொறிமுறைகளுடன் கூடிய இடர்நேர்வு தொகுதிகளை உள்ளடக்கும் அளவுசார் கருவித்தொகுப்பை செயல்படுத்துதல் என்பனவற்றில் பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் ஈடுபடுகின்றது. தரவுகளைச் சேகரித்தலுக்கு வசதியளிப்பதற்காக வங்கித்தொழில் துறையின் இயலாற்றலைக் கட்டியெழுப்பும் நோக்குடன், விவரமான பயனர் வழிகாட்டலொன்று உருவாக்கப்பட்டதுடன் மெய்நிகர் வழியான பல்வேறு பயிற்சித் தொடர்களும் நடாத்தப்பட்டன.

திரவத்தன்மை அதிர்ச்சிகளுக்கெதிராக வங்கித்தொழில் துறையின் தாக்குபிடிக்கும்தன்மையை மதிப்பிடுவதற்காக, வங்கித்தொழில் துறைக்கான திரவத்தன்மை அழுத்தப் பரிசோதனைக் கட்டமைப்பின் தாபிப்பையும் தொழில்நுட்ப உதவி உள்ளடக்குகின்றது. தரவு இடைவெளியை இணைப்பதற்கும் திரவத்தன்மை அழுத்தப் பரிசோதனையை செயலாற்றுவதற்கும் வங்கித்தொழில் மேற்பார்வைத் திணைக்களத்தின் ஆலோசனையுடன் முதிர்வுப் படிமுறை அமையுருவொன்றை பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் உருவாக்கியுள்ளது. இவ்வமையுரு பிரதான அறிக்கையிடல் நாணயங்கள் அத்துடன் அவற்றுடன் தொடர்புடைய முதிர்வுகளில் வகைப்படுத்தப்படும் நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புக்களின் காசு உட்பாய்ச்சல்-வெளிப்பாய்ச்சல் பொருத்தப்பாடின்மையையும் எதிர்சமநிலை இயலளவுகள் என்பவற்றை அடையாளம் காண்கின்றது. 2021ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், முன்னோடித் தரவு சேகரிப்பொன்றும் முறைசார்ந்த முதல் சுற்று தரவு சேகரிப்பொன்றும் நடாத்தப்பட்ட அதேவேளை திரவத்தன்மை அழுத்தப் பரிசோதனையின் தொழில்நுட்பரீதியிலான நடைமுறைப்படுத்தல் நிறைவுசெய்யப்பட்டது. 2022ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் முன்னோடி திரவத்தன்மை அழுத்தப் பரிசோதனைகளை நடாத்தி அதன் பெறுபேறுகளை நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**(இ) அளவீடுகள் மற்றும் தரவு சேகரிப்பு**

ஆண்டுக் காலப்பகுதியில், பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் ஆண்டிற்கு இருமுறை என்ற அடிப்படையில் முறைமைசார்ந்த இடர்நேர்வு அளவீட்டைத் தொடர்ந்தும் நடாத்தியது. முறைமைசார்ந்த இடர்நேர்வு அளவீடென்பது நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கு ஏதேனும் முறைமைசார்ந்த பாதிக்கப்படும் தன்மைகள் ஒன்றுதிரள்வதனை சமிக்ஞைப்படுத்துகின்ற சாத்தியமான இடர்நேர்வுகள் மற்றும் சாத்தியமுடையதாக உணரப்பட்ட அதீத தாக்கமுடைய நிகழ்வு என்பனவற்றின் மீது சந்தைப் பங்கேற்பாளர்களின் கருத்தை அளவிடுகின்ற மற்றும் கண்காணிக்கின்ற முன்னோக்கி பார்க்கும் அளவீடொன்றாக காணப்படுகின்றது. இத்தகைய இடர்நேர்வுகளின் இடம்பெறுகையானது நிதியியல் இடையீட்டுச் செயன்முறைக்கு கணிசமானளவில் இடையூறு ஏற்படுத்தக்கூடும் என்பதுடன் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் மீதான பொதுமக்களின் நம்பிக்கைத்தன்மையையும் பாதிக்கக்கூடும். மேலும், நிதியியல் முறைமையின் பாதிக்கப்படும் தன்மைகள் பற்றி பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களத்தின் உள்ளக மதிப்பீடுகளை உறுதிப்படுத்துவதற்கு முறைமைசார்ந்த இடர்நேர்வு அளவீடு உதவுகின்றது.

**(ஈ) நியதிச்சட்ட அறிக்கைகளுக்கும் மத்திய வங்கியின் ஏனைய வெளியீடுகளுக்கும் பங்களிப்புச் செய்தல்.**

**நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வு:** இலங்கையின் நிதியியல் துறை முகங்கொடுக்கின்ற இடர்நேர்வுகள் மற்றும் பாதிக்கப்படும் தன்மைகள் பற்றிய சுயாதீனமான மதிப்பீடொன்றை முன்வைப்பதற்கும் பின்பற்றப்பட்ட இடர்நேர்வு தணிப்பு வழிமுறைகளை கலந்துரையாடுவதற்கும் பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வை வெளியிடுகின்றது. பேரண்ட நிதியியல் நிலைமைகள், நிதியியல் சந்தைகள், நிதியியல் நிறுவனங்கள், வீட்டலகுத் துறை மற்றும் நிறுவனத் துறை அத்துடன் நிதியியல் முறைமை உட்கட்டமைப்பு ஆகிய ஐந்து அத்தியாயங்களை நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வு உள்ளடக்குகின்றது. 2022ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் வெளியிடப்படவுள்ள நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வை பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் 2021இல் வரைந்தது.

**நியதிச்சட்ட வெளியீடுகள் :** மத்திய வங்கி ஆண்டறிக்கை 2020, "அண்மைய பொருளாதார அபிவிருத்திகள் 2021" என்பவற்றின் "நிதியியல் துறை அபிவிருத்திகள் மற்றும் உறுதிப்பாடு" மீதான அத்தியாயத்தை ஒருங்கிணைத்து தொகுப்பதனூடாக மத்திய வங்கியின் முக்கிய வெளியீடுகளுக்கு பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் தொடர்ந்தும் பங்களிப்புச் செய்தது. மேலும், பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களமானது நிதிக்கு பொறுப்பாகவுள்ள அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்படும் இரகசிய அறிக்கையொன்றாக காணப்படுகின்ற செத்தெம்பர் 15ஆம் நாள் அறிக்கையின் நிதியியல் முறைமையுடன் தொடர்புடைய பிரிவொன்றை வடிவமைப்பதற்கு பங்களிப்புச் செய்தது. இதற்கு மேலதிகமாக, நிதியியல் துறைத் தரவுகளை தொகுப்பதன் மூலமும் நிதியியல் துறையின் துணைத் துறைகள் தொடர்பில் பகுப்பாய்வுகளை வழங்குவதன் மூலமும் மத்திய வங்கியின் ஏனைய வெளியீடுகளுக்கும் பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் பங்களிப்புச்செய்தது.

**(உ) நிறுவனத் துறை மற்றும் வீட்டலகுத் துறை பகுப்பாய்வை நடாத்துதல்**

பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களமானது கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் நிதியியல் அல்லாத பட்டியலிடப்பட்ட கம்பனிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத் துறை பாதிக்கப்படும்தன்மைகளின் மதிப்பீட்டை நடாத்தியது. பேரண்டப் பொருளாதாரம் மற்றும் நிதியியல் துறை விருத்திகள் என்பன நிறுவனத் துறையின் செயலாற்றத்தையும் ஐந்தொகையையும் பாதிக்கின்றமையால், பொருளாதார வீழ்ச்சிக்கும் நிதியியல் ரீதியான பாதிக்கப்படும் தன்மைகளுக்கும் முன்கூட்டிய எச்சரிக்கை குறிகாட்டிகளாக கருதப்படுகின்ற நிறுவனத் துறையின் இயக்கவாற்றலை இப்பகுப்பாய்வானது மதிப்பீடுசெய்வதன் மீது கவனம் செலுத்துகின்றது. நிதியியல் நிறுவனங்கள் மீதான நிறுவனங்களின் ஐந்தொகைகளினூடான கசிவுத்தாக்கங்களை இனங்காண்பதற்கு நிறுவனங்களின் கடன்தீராற்றல்தன்மை மதிப்பீடு செய்யப்பட்டது.

நிதியியல் முறைமையில் தோன்றக்கூடிய முறைமைசார்ந்த இடர்நேர்வுகள் கட்டியெழுப்பப்படுவதனை இனங்காண்பதற்கு வீட்டலகு மற்றும் நிதியியல் துறை படுகடன் மீதான கண்காணிப்பு, பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்பு துறையில் முக்கிய பரப்பொன்றாகும். இப்பகுப்பாய்வு கொடுகடன் தகவல் பணியகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற தரவைப் பயன்படுத்தி நிறுவனம் மற்றும் அரச துறை அத்துடன் வீட்டலகுத்துறை பாதிக்கப்படும் தன்மைகள் என்பவற்றை மதிப்பீடு செய்கின்றது. கொடுகடன் தகவல் பணியகமானது ஒட்டுமொத்த அடிப்படையில் வங்கிகளினதும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள்

துறையினதும் வெளிநின்ற கொடுகடன் மீதான பயன்படுத்தப்படும் காலாண்டுத் தரவுகளை இப்பகுப்பாய்விற்கு வழங்குகின்றது.

**(ஊ) நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீதான குழுக்களின் ஒருங்கிணைப்பு**

**நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழு:** நிதியியல் முறைமை உறுதிபாட்டுக் குழுவின் செயலகமாக பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் தொழிற்பட்டது. இது, நிதியியல் துறையைப் பாதிக்கின்ற இடர்நேர்வுகளை அடையாளம் காண்பதற்காகவும் இடாநேர்வுகளை தணிப்பதற்கான வழிமுறைகள் பற்றிய கலந்துரையாடல்களுக்கு வசதியளிப்பதற்கும் அத்துடன் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை ஊக்குவிப்பதற்கான திணைக்களங்களிடையே ஒருங்கிணைப்பு முயற்சிகளை வலுப்படுத்துவதற்கும் மத்திய வங்கியில் நிறுவப்பட்ட திணைக்களங்களுக்கிடையேயான மன்றமொன்றாகும். 2021ஆம் ஆண்டுக் காலப்பகுதியியல், நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழுவின் எட்டு கூட்டங்கள் இடம்பெற்றன. பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் உறுப்பினர்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக காலாண்டு இடர்நேர்வு மதிப்பீட்டை நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழுவின் கூட்டங்களில் முன்வைத்ததுடன் நிதியியல் முறைமை உறுதிபாட்டு குழுவின் உறுப்பினர்களால் முன்மொழியப்பட்டு ஒப்புதலளிக்கப்பட்ட விதந்துரைப்புக்களுடன் சேர்த்து காலாண்டு இடர்நேர்வு மதிப்பீடுகள் நாணயச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

**நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு ஆலோசனைக் குழு:** பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் இலங்கையின் நிதியியல் முறைமையில் வெளித் துறைசார் நிறுவனங்களிலிருந்தான முக்கிய ஆளணியை உள்ளடக்குகின்ற நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு ஆலோசனைக் குழுவிற்கான செயலகப் பணிகளை வழங்குகின்றது. 2021 செத்தெம்பரில் புதிய உறுப்பினர்களை நியமிப்பதன் மூலம் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு ஆலோசனைக் குழு மீளஉருவாக்கப்பட்டதுடன், உறுப்பினர்களில் சிலர் குழுவிலிருந்து விலகினர். ஆண்டுக் காலப்பகுதியியல் நிதியியல் முறைமை உறுதிப்பாடு ஆலோசனைக் குழுவின் ஆறு கூட்டங்கள் இடம்பெற்றன. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு ஆலோசனைக் குழுவின் மூலம் வழங்கப்பட்ட கொள்கை ஆலோசனைகள் நாணயச் சபைக்கு பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

**நிதியியல் முறைமை மேற்பார்வைச் சபை:** பேரண்டமுன்மதியுடைய விடயங்களை இணைத்து நிதியியல் முறைமை மேற்பார்வை சபையின் விசாரணை நியதிகள் திருத்தப்பட்டமையால் 2021ஆம் ஆண்டின் பிந்திய பகுதிகளில் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திலிருந்தான ஒழுங்குபடுத்தலுக்கிடையிலான குழுவொன்றாக காணப்படுகின்ற நிதியியல் முறைமை மேற்பார்வைச் சபையின் செயலகத் தொழிற்பாட்டினை பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் பொறுப்பேற்றது. அதற்கமைய, பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம், எதிர்காலத்தில் நிதியியல் முறைமை உறுதிப்பாடு சபைக்கு செயலகப் பணிகளை வழங்கும்.

**(எ) பன்னாட்டு முகவராண்மைகளுடனான ஒருங்கிணைத்தல்**

பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களமானது நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் கொத்தணியின் ஒருங்கிணைப்புத் திணைக்களமாக பேரண்டமுன்மதியுடைய அளவீட்டுக்கு பதிலிறுத்துவதில் பன்னாட்டு நாணய நிதியத்துடன் ஈடுபட்டது. மேலும், நிலைபெறத்தக்க நிதி வழிகாட்டலினை நடைமுறைப்படுத்துவதன் மீதான வழிநடாத்தல் குழுவின் உறுப்பினராக பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் பன்னாட்டு நாணயக் கூட்டுத்தாபனம், உலக வங்கி நிலைபெறத்தக்க வங்கித்தொழில் வலையமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றுடன் நிலைபெறத்தக்க நிதி வகைப்பாட்டியலினை உருவாக்குவதன் மீதான முன்முயற்சிகளை ஒருங்கிணைத்தது. 2021ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஆர்வலர்கள் கூட்டங்களை ஒழுங்கமைத்தல் மற்றும் பசுமை நிதியியல் வினாக்கொத்தின் பதில்களைத் தொகுத்தல் என்பற்றினூடாக ஆர்வலர்களுடனும், நிலைபெறத்தக்க அபிவிருத்தி நிதியியல் நிபுணர்களுடனும் அத்துடன் பசுமை நிதியியல் வகைப்பாட்டியலை அபிவிருத்தி செய்கின்ற தொழில்நுட்ப நிபுணர்களுடனும் உறவைப்பேணுவதற்கு பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் வசதியளித்தது.

## 22. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களமானது நிதிய மாற்றல்களுக்கான முறைமைகளை நிறுவித் தொழிற்படுத்துவதற்கும், கொடுப்பனவு கடப்பாடுகளைத் தீர்ப்பனவு செய்வதற்கும், பங்கேற்கும் நிறுவனங்களுக்கு முறைமை விதிகளை வழங்குவதற்குமாக மத்திய வங்கிக்கு அதிகாரத்தினை வழங்குகின்ற 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 62அ ஆம் பிரிவின் கீழ் மத்திய வங்கிக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றுகின்றது. மேலும், இலங்கையில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் பாதுகாப்பு, வினைத்திறன், போட்டித்தன்மை மற்றும் உறுதிப்பாடு என்பவற்றை உறுதிப்படுத்தும் குறிக்கோளுடன் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை ஒழுங்குமுறைபடுத்தி, மேற்பார்வை செய்வதற்கும், தேசிய கொடுப்பனவு முறைமைக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கும் 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கக் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் கீழ் மத்திய வங்கிக்கு பொறுப்பளிக்கப்பட்ட நியதிச்சட்ட பொறுப்பாணையும் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தினூடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய தொழிற்பாடுகளாக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைகளின் தொழிற்பாடுகள், நிதியியல் கொடுக்கல்வாங்கல்களுக்கான பின்னரங்க அலுவலகப் பணிகளை வழங்குதல், உலகளாவிய வங்கிகளுக்கு இடையேயான நிதித் தொலைத் தொடர்பூட்டல்களுக்கான சமூக (சுவிப்ற்) தொடர்பூட்டல் முறைமையின் முகாமைத்துவம், ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் கீழான கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளித்தல், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்தல் ஆகியன காணப்பட்டன. 2021ஆம் ஆண்டுப்பகுதியில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தினால் செயலாற்றப்பட்ட தொழிற்பாடுகளின் தொகுப்பொன்று கீழே தரப்பட்டுள்ளது.

### 22.1 அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைத் தொழிற்பாடுகள்

### 31.4 உலகளாவிய தரமிடல்களில் இலங்கையின் நிலையினை உயர்த்துதல்

#### அ. "வியாபாரம் செய்தலை இலகுபடுத்தல்" தரமிடல்

"இலங்கையில் வியாபாரம் செய்வதற்கு படிப்படியானதொரு வழிகாட்டல்" என்ற நூல் ஒன்பதாவது பதிப்பாக வெளியிடப்பட்டிருக்கிறது. இது வியாபார சமூகத்தினர், வாய்ப்புக்களைக் கொண்டுள்ள தொழில் முயற்சியாண்மையாளர்கள், வெளிநாட்டு முதலீட்டாளர்கள், முதலீட்டு ஊக்குவிப்பு முகவராண்மைகள் ஆகியோருக்குப் பயனளிக்கும் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை உள்ளடக்கிய விதத்தில் 2021இல் வெளியிடப்பட்டது. இவ்வெளியீடானது வியாபாரத்தினை தொடங்குவதற்கான வழிகாட்டும் தகவல்கள், கட்டுமானத்திற்கான அனுமதிப்பத்திரங்களைக் கையாளுதல், மின்வலுவினைப் பெற்றுக்கொள்ளுதல், சொத்துக்களைப் பதிவுசெய்தல், கொடுகடனைப் பெற்றுக்கொள்ளுதல், சிறிய முதலீட்டாளர்களைப் பாதுகாத்தல், வரிகளைச் செலுத்துதல், நாடு கடந்த வர்த்தகம், ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தல், கடன் தீராற்றலற்ற தன்மையினைத் தீர்த்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருப்பதுடன் இவை, வியாபாரம் செய்யுங்கள் தரமிடலை இலகுபடுத்துவதற்கும் பயன்மிக்கதொன்றாகக் காணப்படுகின்றது.

### 31.5 தகவலைப் பரப்புதல்

சவால்மிக்க நிலைமைகள் காணப்பட்டமைக்கு மத்தியிலும், புள்ளிவிபரத் திணைக்களம் 2021இல் அலுவல்சார் புள்ளிவிபரங்களை அச்சு மற்றும் இலத்திரனியல் ஆகிய இரு முறைகளிலும் தொடர்ந்தும் வெளியிட்டது. வருடாந்த புள்ளிவிபரவியல் வெளியீடுகளான "இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக புள்ளிவிபரவியல் 2021 தொகுதி XLIII" மற்றும் "இலங்கை சமூக பொருளாதார தரவு 2021 - தொகுதி XLIV" என்பன அனைத்து மூன்று மொழிகளிலும் முறையே 2021 யூலையிலும் செத்தெம்பரிலும் வெளியிடப்பட்டன. திணைக்களம் மத்திய வங்கியின் ஆண்டறிக்கை மற்றும் அண்மைக்கால பொருளாதார அபிவிருத்தி அறிக்கை என்பனவற்றின் இரண்டு அத்தியாயங்களுக்குப் பங்களித்த வேளையில், மத்திய வங்கியின் மாதாந்த செய்தித்திரட்டிற்கான தரவுகளையும் தொடர்ந்தும் வழங்கியது.

புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் கிரமமான வெளியீடுகள், செலாவணி வீதங்கள், பணச் சந்தை வீதங்கள், பங்குச்சந்தை மற்றும் வலுத்துறை புள்ளிவிபரங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய உயர்தாக்கம் மிக்க தரவுகளைக் கொண்ட நாளாந்த பொருளாதாரக் குறிகாட்டிகள், தெரிந்தெடுக்கப்பட்ட நுகர்வுப் பொருட்களின் நாளாந்த விலை அறிக்கை, வாராந்த மற்றும் நாளாந்த பொருளாதார குறிகாட்டிகள், என்பன ஆண்டு முழுவதும் சரியான நேரத்தில் மத்திய வங்கியின் வெப்தளத்தில் வெளியிடப்பட்டன. மேலும், ஊடக வெளியீடுகளூடாக பொதுமக்களுக்கு பல்வேறுபட்ட மற்றைய தகவல்கள் பரப்பப்பட்ட வேளையில், மத்திய வங்கியின் இணையவழி தரவுத்தளமான "தரவு நூலகம்" இற்றைப்படுத்தப்பட்டு ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்களின் தரவுத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் விதத்தில் பேணப்பட்டது.

## 32. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திற்கு முறையே 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டம் (நிதித்தொழில் சட்டம்), 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டம் (நிதிக் குத்தகைக்குவிடல் சட்டம்) மற்றும் 2016ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நுண்பாக நிதிச் சட்டம் என்பனவற்றின் ஏற்பாடுகளின் கீழ் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் மற்றும் உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் என்பவற்றினை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்யும் பொறுப்பாணை ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மேலும், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம், திருத்தப்பட்டவாறான 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்குவிதிகள் மற்றும் திருத்தப்பட்டவாறான 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்குவிதிகள் என்பனவற்றின் ஏற்பாடுகளின் கீழ் வங்கியல்லாத் துறை முதனிலை வணிகர் கம்பனிகளினையும் மேற்பார்வை செய்கிறது.

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம், தனது தொழிற்பாடுகளாக உரிமம்பெற்ற/ பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களின் நியதிச்சட்ட பரீட்சிப்புக்களையும் (தளத்திலான மேற்பார்வை) தொடர்ச்சியான கண்காணிப்பினையும் (தளத்திற்கு வெளியேயான மேற்பார்வை) நடாத்தும் வேளையில் ஒழுங்குமுறைப்படுத்தல் தொழிற்பாடுகளான உரிமங்களை/ பதிவுகளை வழங்குதல், முன்மதியுடைய ஒழுங்குமுறைப்படுத்தல்கள், ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்களை வழங்குதல், அதிகாரமின்றி நிதித்தொழிலை மேற்கொள்கின்ற கம்பனிகள் பற்றி புலனாய்வை மேற்கொள்ளுதல் என்பனவற்றுடனும் ஈடுபட்டுள்ளது. முக்கிய தொழிற்பாடுகளுக்குப் புறம்பாக, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் இத்துறையின் இயலாற்றலை கட்டியெழுப்புதல், நீதிமன்ற வழக்காடல்களுக்கு வசதியளித்தல் மற்றும் பொதுமக்களின் முறைப்பாடுகளைக் கவனித்தல் போன்ற பல நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றது.

2021 இறுதியில், திணைக்களத்தின் அதிகார வரம்பிற்குள் 39 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும், 3 சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும், 4 உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளும், 7 முதனிலை வணிகர் கம்பனிகளும் காணப்பட்டன. மேலும், 3 சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் உட்பட 58 பதிவுசெய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்கள் நிதிக் குத்தகைக்குவிடும் சட்டத்தின் கீழ் உரிமங்களை தன்னகத்தே கொண்டு காணப்பட்டன. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள், உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள், பதிவுசெய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்கள் மற்றும் முதனிலை வணிகர்களின் பெயர்கள் இப்பிரிவின் இறுதியில் தரப்பட்டுள்ளன. 2021ஆம் ஆண்டுப் பகுதியில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தினால் ஆற்றப்பட்ட முக்கிய தொழிற்பாடுகளினதும் நடவடிக்கைகளினதும் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

### 32.1 கொள்கை வழிமுறைகள்

இந்த ஆண்டில் தற்போதைய சந்தை மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கேற்ப வங்கியல்லா நிதி நிறுவனங்களின் தற்போதைய ஒழுங்குமுறை கட்டமைப்பை சீரமைக்க பல்வேறு முன்மதியுடைய ஒழுங்குவிதிகள் வங்கியல்லா நிதிநிறுவனங்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பங்குதாரர்களுடன் கலந்தாலோசித்து விடுக்கப்பட்டன. கொவிட்-19 பரவலைத் தொடர்ந்து எடுக்கப்பட்ட அசாதாரண நடவடிக்கைகள் உட்பட உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள், சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள், உரிமம்பெற்ற நுண்பாக நிதிக்கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர் கம்பனிகளுக்கு 2021இல் விடுக்கப்பட்ட முன்மதியுடைய ஒழுங்குவிதிகள் இவ்வறிக்கையின் பகுதி IIIஇல் தரப்பட்டுள்ளன. முக்கிய முன்மதியுடைய வழிமுறைகளின் சுருக்கம் கீழே தரப்படுகின்றது.

(அ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் அசையாச் சொத்துக்களை மதிப்பீடுசெய்தல் மீதான பணிப்புரைகளுக்கு திருத்தமொன்று விடுக்கப்பட்டது.

(ஆ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கு திருத்தமொன்று விடுக்கப்பட்டது.

(இ) பயணிகள் போக்குவரத்துப் பணிகளில் ஈடுபடுகின்ற கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூலம் பாதிக்கப்பட்ட தனிப்பட்டவர்கள் மற்றும் வியாபாரங்களுக்கு சலுகைகளை வழங்குமாறு கோரி உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

(ஈ) 2020 செத்தெம்பர் 30 அன்று விடுக்கப்பட்ட 2020ஆம் ஆண்டின் 09ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் கீழ் சுற்றுலாத் துறைக்கு வழங்கப்பட்ட படுகடன் சட்ட இசைவுத் தாமதத்தை நீடிக்குமாறு கோரி உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

(உ) கொடுகடன் வசதிகளின் வகைப்படுத்தல் மற்றும் அளவிடல் மீதான 2020ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரையின் நடைமுறைப்படுத்தலை பிற்போடுதல் தொடர்பில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு அறிவிக்கப்பட்டன.

(ஊ) 2020 செத்தெம்பர் 30 அன்று விடுக்கப்பட்ட திரவச் சொத்துக்கள் மீதான பணிப்புரையின் கீழ் வழங்கப்பட்ட தளர்த்தல் 2021 யூன் 30 வரை மூன்று மாத காலபகுதிக்கு மேலும் நீடிக்கப்பட்டது.

(எ) வெளிநாட்டு நாணய கடன்பெறுகைகள் மீது உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது.

(ஏ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மூலம் முன்னர் விடுக்கப்பட்ட வெளிநாட்டு நாணய கடன்பெறுகைகள் மீதான பணிப்புரைகளுக்கு மேலதிகமாக, வெளிநாட்டு நாணய கடன்பெறுகைகளுக்கு வசதியளிப்பதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளதென உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு அறிவிக்கப்பட்டது.

(ஐ) கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூலம் பாதிக்கப்பட்ட தனிப்பட்டவர்கள் மற்றும் வியாபாரங்களுக்கான சலுகைகள் மீது சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

(ஒ) உலகளாவிய நோய்த்தொற்றின் மூலம் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களின் கொடுகடன் வசதிகள் மீதான உந்து ஊர்திகளை பறிமுதல்செய்தல் மற்றும் மீள்உடமையாக்கம் செய்தல் கட்டளைகளை நிறுத்துமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டன.

(ஓ) 2020ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதித் தொழில் சட்டப் (கொடுகடன் வசதிகளின் வகைப்படுத்தல் மற்றும் அளவிடல்) பணிப்புரையின் நடைமுறைக்குவரும் திகதி மேலும் பிற்போடப்பட்டது.

(ஔ) குறைந்தபட்ச தேவைப்பாடு மீதான பணிப்புரையொன்று முதனிலை வணிகர் கம்பனிகளுக்கு விடுக்கப்பட்டது.

(க) கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூலம் பாதிக்கப்பட்ட தனிப்பட்டவர்கள் மற்றும் வியாபாரங்களுக்கான சலுகைகளை மேலும் நீடிக்குமாறு கோருகின்ற 2021 யூன் 09ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கைக்கான திருத்தமொன்று உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த கம்பனிகளுக்கு விடுக்கப்பட்டது.

(ங) கொடுகடன் தரமிடல் முகவராண்மையொன்றாக லங்கா தரமிடல் ஏஜென்சி லிமிடெட் நிறுவனம் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதை அறிவிக்கின்ற சுற்றறிக்கையொன்று உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு விடுக்கப்பட்டது.

(ச) கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூலம் பாதிக்கப்பட்ட தனிப்பட்டவர்கள் மற்றும் வியாபாரங்களுக்காக 2022 மாச்சு 31 வரை சலுகைகளை நீடிப்பதற்கும் அறவிடல் நடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்கும் கோருகின்ற சுற்றறிக்கையொன்று உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு விடுக்கப்பட்டது.

(ஞ) அதிக தொழிலாளர் பணவனுப்பல்களை ஊக்குவிக்கின்ற குறிக்கோளொன்றுடன் உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீது மேலதிக ஊக்கத்தொகையினை செலுத்துவதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் கோரப்பட்டன.

(ட) தற்போது நிலவுகின்ற 2,3 மற்றும் 5 கால வைப்புக்களின் வட்டி எல்லைகள், அதிகரிக்கின்ற திறைசேரி உண்டியல் வீதங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் திருத்தப்பட்டன.

(ண) நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் கீழ் அரச பிணையங்களிலுள்ள முதலீடுகள் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகளின் திரவச் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டது.

(த) முக்கிய பொறுப்புடைய ஆட்களின் பொருத்தப்பாடு மற்றும் தகுதியுடைமையை மதிப்பிடுதல் மீதான பணிப்புரையொன்று உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு விடுக்கப்பட்டது.

(ந) நிறுவன ஆளுகை மீதான பணிப்புரையொன்று உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகளுக்கு விடுக்கப்பட்டது.

(ப) மூத்த பிரசைகளுக்கான முதலீடுகள் மீது அதிகரித்த வருவாய்களை வழங்கும் நோக்குடன் 5 வருட கால வைப்புக்கள் மற்றும் 5 வருட படுகடன் சாதனங்களின் தற்போது நிலவுகின்ற வட்டி எல்லை திருத்தப்பட்டது.

**32.2 உரிமம்பெற்ற நிறுவனங்களின் மேற்பார்வை**

**(அ) நியதிச்சட்ட (தளத்திலான) பரீட்சிப்புக்களை நடத்துதல்**

(i) 2021ஆம் ஆண்டு காலப்பகுதியில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் 18 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் 3 முதனிலை வணிகர் கம்பனிகள் தொடர்பில் நியதிச்சட்டப் பரீட்சிப்புக்களை நடத்தியது. சொத்துக்களின் தரத்தில் சீர்குலைவு, உயர்ந்தளவில் திரட்சிப்படுத்தப்பட்ட கடன் சொத்துப்பட்டியல் இடர்நேர்வு, தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள் உட்பட ஆளுகைக் கட்டமைப்பு பலவீனம், இடர்நேர்வு முகாமைத்துவக் குறைபாடுகள், உள்ளக கணக்காய்வு மற்றும் இணங்குவித்தல் தொழிற்பாடுகள், ஒழுங்குமுறைபடுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்காமை, நிதியியல் இடையீட்டிலுள்ள குறைவான தொழிற்பாட்டு வினைத்திறன் போன்றவற்றை பரீட்சிப்புக்களில் முக்கியமாக கண்டறியப்பட்டவை உள்ளடக்கியிருந்தன.

(ii) 15 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/முதனிலை வணிகர் கம்பனிகளின் பரீட்சிப்புக்களின் போது அடையாளங்காணப்பட்ட மேற்பார்வை கரிசனைகளை சீர்திருத்துவதற்கான விதந்தரைப்புக்கள் உள்ளடங்கலாக கால வரையறை செய்யப்பட்ட நடவடிக்கைத் திட்டங்களுக்கு நாணயச் சபை ஒப்புதலளித்ததுடன் இவை பணிப்பாளர் சபையின் கவனத்திற்காக தொடர்பான கம்பனிகளுக்கு அறிவிக்கப்பட்டன.

(iii) மேலும், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் மூன்றாம் தரப்பினர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் ஒழுங்கீனங்களை விசாரணைசெய்வதற்கும் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட விசேட பணிப்புரைகளின் நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றத்தினை மீளாய்வதற்கும் 3 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் அதே இடத்திலான பரீட்சிப்புக்களை நடாத்தியது.

**(ஆ) தொடர்ச்சியான (தளத்திற்கு வெளியேயான) கண்காணிப்பை நடத்துதல்**

(i) அனைத்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகளும் முதனிலை வணிகர் கம்பனிகளும் வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட பின்-நெற் முறைமையினூடாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள்/முதனிலை வணிகர் கம்பனிகள் மூலம் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட காலாந்தர நிதியியல் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்பட்டு வருகின்றன. கணக்காய்வாளர் அறிக்கைகள், முகாமைத்துவக் கடிதங்கள், வெளிவாரித் தரமிடல்கள் மற்றும் ஊடக அறிக்கைகள் உட்பட ஏனைய நிதியியல் தகவல்களையும் இத்திணைக்களம் மீளாய்வுசெய்தது. இம்மீளாய்வுகள் மூலதனம், திரவத்தன்மை ஒதுக்கங்கள் ஆகிய துறைகள் மீதான முன்கூட்டிய எச்சரிக்கை குறிகாட்டிகள் மற்றும் உள்ளகத் தரமிடல் முறைமை என்பவற்றினூடாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர் கம்பனிகளின் சாத்தியமான இடர்நேர்வுகளை அடையாளம் கண்டதுடன் தேவைப்படும் போது அத்தியாவசியமான விதந்துரைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(ii) மேலும், உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட நிதியியல் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அனைத்து உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளும் தொடர்ந்தும் மேற்பார்வை செய்யப்பட்டு வருகின்றன. அதேபோன்று கணக்காய்வாளர் அறிக்கைகள், முகாமைத்துவக் கடிதங்கள், வெளிவாரித் தரமிடல்கள் மற்றும் ஊடக அறிக்கைகள் உட்பட ஏனைய நிதியியல் தகவல்களும் திணைக்களத்தின் மூலம் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

(iii) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களமானது மதிப்பீடுகள் மற்றும் கண்டறியப்பட்டவற்றின் தீவிரத்தன்மை என்பவற்றின் அடிப்படையில் தெளிவாக குறித்துரைக்கப்பட்ட காலவரையறையொன்றினுள் துறையின் மேற்பார்வை கரிசனைகளை சீர்செய்வதற்கு உடனடியாக சீராக்கும் நடவடிக்கைகளை எடுத்தது. மேலும், துறையில் காணப்படுகின்ற மூத்த முகாமைத்துவத்திற்கு சமீபத்திய அறிவித்தல்களை அறிந்திருக்கும் நோக்கில், துறையின் செயலாற்றம் காலாண்டு அடிப்படையில் நாணயச் சபைக்கு அறிக்கையிடப்பட்டது.

(iv) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம், படுகடன் சாதனங்களை வழங்குதல், பங்குமூலதனத்தினை அதிகரித்தல், புதிய முதலீட்டாளர்களின் மூலதன உள்ளீடுகள், அமைப்பு அகவிதிகளைத் திருத்துதல், துணைக் கம்பனிகளை உருவாக்குதல், வெளியாளரிடமிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல், புதிய பணிப்பாளர்களையும் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை செயலாற்றுகின்ற அலுவலர்களையும் நியமித்தல், சொத்துரிமை மாற்றல்கள் என்பன தொடர்பில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்களை வழங்கியது.

(v) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகள் துறையிலுள்ள பலவீனத்தையும் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மையையும் தீர்க்கும் பொருட்டு, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையை ஒன்றிணைப்பதற்கான முதன்மைத் திட்டம் 2020இல் அறிமுகப்படுத்தப்பட்டது. 2021ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்ட 13 உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள்/ சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் உரிய விழிப்புக்கவனம், தகவல் விஞ்ஞாபனம் மற்றும் மதிப்பீடுகள் பூர்த்தி செய்யப்பட்டு ஆர்வமுள்ள தரப்பினருடன் பகிர்ந்து கொள்ளப்பட்டன. அதேபோல பேச்சுவார்த்தைகளுக்கு தேவையான ஏற்பாடுகளை வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மேற்பார்வை திணைக்களம் ஏற்பாடு செய்தது. மேலும் 2021ஆம் ஆண்டில் முதன்மைத் திட்டத்தின் கீழ் நாணயச் சபையிடமிருந்து 6 பரிவர்த்தனைகளுக்கு பூர்வாங்க அனுமதிகள் பெறப்பட்டன.

(vi) மேலும், 2021ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சியுடன் ஒன்றிணைக்கப்பட்டது. எனவே, ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சிக்கு வழங்கப்பட்ட நிதித்தொழில் மற்றும் நிதியியல் குத்தகைக்குவிடும் உரிமம் இரத்துச்செய்யப்பட்டது.

(vii) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் தொடர்பிலும் பெரும்பாலும், கொள்கைசார்ந்த கருமங்கள் தொடர்பில், உரிமங்கள் இரத்துச்செய்யப்பட்ட உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் தொழிற்பாடுகள் தொடர்பிலும் பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற பெரும் எண்ணிக்கையான முறைப்பாடுகளுக்குத் தீர்வுகாண வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் மத்தியஸ்தம் வகித்தது.

**(இ) தீர்மான நடவடிக்கைகள்**

2021ஆம் ஆண்டு காலப்பகுதியில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் முக்கிய கவனம், கடந்த பல ஆண்டுகளாக நீண்டகால திரவத்தன்மை நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துவருகின்ற கடன் தீராற்றலற்ற தன்மையின் காரணமாக உரிமங்கள் இரத்துச்செய்யப்பட்ட அல்லது இடைநிறுத்தப்பட்ட கம்பனிகள் மீது துரிதமாக ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளை மேலும் நடைமுறைப்படுத்துவதன் மீது இருந்தது. அதற்கமைய, இது தொடர்பில் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

(i) த பினான்ஸ் கம்பனி பிஎல்சியை முடிவுறுத்தும் விண்ணப்பங்கள் 2021.02.16 அன்று கொழும்பு வர்த்தக மேல் நீதி மன்றத்தில் கோவைப்படுத்தப்பட்டது.

(ii) சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சிக்கு வழங்கப்பட்ட இடைநிறுத்தக் கட்டளையானது மீதமுள்ள வைப்புக்களின் 50 சதவீதத்தை மீளச்செலுத்துவதை வசதியளிப்பதற்கு 2021.01.13 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் மூன்று மாத காலப்பகுதிக்கு அகற்றப்பட்டது. மீதமுள்ள வைப்புக்களின் 50 சதவீதத்தை மீளச்செலுத்துதல் நிறைவடைந்தமையினைத் தொடர்ந்து, சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சி வியாபாரம் 2021.04.12 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் மீண்டும் இடைநிறுத்தப்பட்டது. அதன்பின்னர், கம்பனியை முதன்மைத் திட்டத்திற்குள் ஈர்த்துக்கொள்கின்ற சாத்தியப்பாட்டை கண்டறிவதற்கு சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சி வியாபாரம் 2021.10.13 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் மட்டுப்படுத்தப்பட்ட ஆறு மாத காலப்பகுதிக்கு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. முதன்மைத் திட்டத்தின் கீழ் சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சியின் 3 முதலீட்டு சொத்துக்களை எஸ் எம் பி லீசிங் பீஎல்சிக்கு விற்க 2021.12.08 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டது. கூறப்பட்ட பரிவர்த்தனைகள் முடிந்தவுடன், மீதமுள்ள வைப்புத் தொகையை சுவர்ணமஹால் பினான்சியல் பிஎல்சி முழுமையாக திரும்பிச்செலுத்தும் நிலையில் இருக்கும்.

(iii) 2021ஆம் ஆண்டின் காலப்பகுதியில், பேப்பச்சுவல் ரெசரீஸ் லிமிடெட் வியாபாரத்தின் இடைநிறுத்தம், 2021.01.05 மற்றும் 2021.07.05 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இரு தடவைகள் நீடிக்கப்பட்டதுடன் இலங்கை மத்திய வங்கியின் மூலம் நடாத்தப்பட்டு வருகின்ற விசாரணைகளைத் தொடரும் பொருட்டு 2022.01.05 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் மேலும் ஆறுமாத காலபகுதிக்கு தொடர்ந்தும் அமுலில் காணப்பட்டது.

(iv) முதன்மைத் திட்டத்திற்கமைவான பல்வேறு ஒன்றிணைக்கும் முன்மொழிவுகள் மூலதன தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகாத உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்காக ஆரம்பிக்கப்பட்டன.

(v) உரிமங்கள் இரத்துச் செய்யப்பட்ட/இடைநிறுத்தப்பட்ட கம்பனிகளில் தற்போது நிலவுகின்ற பிரச்சினைகள் தொடர்பில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் மூத்த முகாமைத்துவம் மற்றும் முகாமைத்துவக் குழுக்களுடன் கூட்டங்களும் நடைபெற்றன.

**(ஈ) பொதுமக்கள் விழிப்புணர்வு மற்றும் இயலளவு விருத்தி**

**(i) பொதுமக்களுக்கு வெளிப்படுத்தல்**

முன்மதியுடைய மூலதனத் தேவைப்பாடுகளுடன் இணங்காமையினைச் சுட்டிக்காட்டியும் அவ்வாறு ஏதும் காணப்படின் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டுப்பாடுகளுக்கு உட்படும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் பெயர்கள் இலங்கை மத்திய வங்கியின் வலைத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டன. மேலும், 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 42ஆம் பிரிவின் நியதிகளுக்கமைவாக ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகளின் முன்னெடுப்புக்களை வெளிப்படுத்துவதற்கு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் ஊடக அறிவித்தல்களை வெளியிட்டது.

**(ii) இயலளவு விருத்தி**

திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் இலங்கை மத்திய வங்கியின் வங்கித்தொழில் கற்கைகளின் ஆய்வுநிலையத்தில் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள் உட்பட பயிற்சி அமர்வுகளில் வளவாளர்களாகத் தொடர்ந்து பணியாற்றினர்.

**(iii) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் மற்றும் வேறு ஆர்வலர்களுடனான கூட்டங்கள்**

பொருளாதாரம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்திகள் தொடர்பான விடயங்களில் இலங்கை மத்திய வங்கிக்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்குமிடையில் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளும் குறிக்கோளுடன் ஆளுநர் தலைமையில் வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின்/ சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுடன் மூன்று கூட்டங்களை நடத்தியது. மேலும், தனிப்பட்ட உரிமம்பெற்ற நிறுவனங்கள்/ஒட்டுமொத்தமாக துறை தொடர்பிலான பிரச்சினைகளைக் கலந்துரையாடுவதற்கும் சீராக்க நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள், நிதி நிறுவனங்களின் அமைப்பு, குத்தகைக்குவிடும் அமைப்புக்கள் வெளிவாரிக் கணக்காய்வாளர்கள் மற்றும் பன்னாட்டு முகவர்கள் போன்ற நிறுவனங்களுடன் தொடர்ந்தும் கூட்டங்களை நடத்தியது.

**(iv) பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்**

தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம் மற்றும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் போன்ற ஏனைய திணைக்களங்களின் கோரிக்கையின் பேரிலும் வேண்டப்பட்ட போதும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் அத்தகைய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு உதவிகளை வழங்கியது. பொதுமக்கள் விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்குடன் ஊடக அறிக்கைகளும் வெளியிடப்பட்டன.

### 32.3 அதிகாரமளிக்கப்படாத நிதித்தொழில் தொடர்பான புலனாய்வு

அதிகாரமளிக்கப்படாது வைப்பு ஏற்றல் மற்றும் நிதித்தொழில்கள் மீதான புலனாய்வுத் தொழிற்பாட்டை 2020 யூலையில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திற்கு குறித்தொதுக்கிய பின்னர், கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளையும் தகவல்களையும் அடிப்படையாகக் கொண்டு 2021ஆம் ஆண்டின் இறுதியில் திணைக்களம் 97 புலானாய்வுகளைத் தொடங்கியது. ஆளுநரினூடாக வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையில் அடிப்படையில் அதிகாரமளிக்கப்படாது வைப்பை ஏற்றல் மற்றும் நிதித்தொழில்கள் தொடர்பில் விசாரணைகளை நடாத்துவதில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திற்கு உதவுவதற்காக இலங்கைப் பொலிஸின் நிதியியல் மற்றும் வர்த்தகக் குற்றப் புலனாய்வுகள் பிரிவில் விசேட பிரிவொன்று தாபிக்கப்பட்டுள்ளது. 2021ஆம் ஆண்டு காலப்பகுதியில், 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 42ஆம் பிரிவின் கீழ் உள்ள புலனாய்வுகளுக்குட்பட்டு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் மூன்று தடைக் கட்டளைகளை தரப்பினர்களுக்கு வழங்கியதுடன் பணிப்பாளர் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தினுடைய கோரிக்கைகளுக்கு அமைவாக, உயர் நீதி மன்றத்தினால் இத்தடைக் கட்டளைகள் உறுதிபடுத்தப்பட்டு நீடிக்கப்பட்டன. மேலும், பணிப்பாளர் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம், 2020இல் வழங்கப்பட்ட தடைக் கட்டளைகள் மீது உயர் நீதிமன்றத்திடமிருந்து நீடிப்புக்களைப் பெற்றது. புலனாய்வுகளுக்குட்பட்டு மூன்று நிறுவனங்களின் தொடர்புடைய தரப்பினர்கள் வெளிநாடுகளுக்கு பயணிப்பதை தடுப்பதற்காக வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் நீதிமன்ற கட்டளைகளைப் பெற்றுக்கொண்டது.

**இணைப்பு II - 4**

| அதிகாரமளிக்கப்பட்ட நிதியியல் நிறுவனங்கள் (2021 இறுதியிலுள்ளவாறு) | | | |
|---|---|---|---|
| **உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்** | | | |
| 1. | அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி (அ) | 22. | மேர்ச்சன்ட் பாங்க் ஒவ் சிறிலங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சி |
| 2. | அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி | 23. | மல்ரி பினான்ஸ் பிஎல்சி(அ) |
| 3. | ஏஎம்டபிள்யு கபிட்டல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி | 24. | நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி(அ) |
| 4. | ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி | 25. | ஒறியன்ட் பினான்ஸ் பிஎல்சி |
| 5. | அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி(அ)(ஆ) | 26. | பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி |
| 6. | பிம்புத் பினான்ஸ் பிஎல்சி(அ) | 27. | பீப்பிள்ஸ் மேர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி |
| 7. | சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி | 28. | பிறைம் பினான்ஸ் பிஎல்சி (அ) |
| 8. | சிற்றிசென்ஸ் டெவலெப்மென்ற் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி | 29. | றிச்சேர்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிடெட் |
| 9. | கொமர்சல் கிறடிட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி | 30. | சர்வோதய டெவலப்மன்ட் பினான்ஸ் லிமிடெட்(ஊ) |
| 10. | கொமர்சல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி | 31. | செங்கடகல பினான்ஸ் பிஎல்சி |
| 11. | டயலொக் பினான்ஸ் பிஎல்சி | 32. | சிபீசி பினான்ஸ் லிமிடெட் |
| 12. | ஈரிஜ பினான்ஸ் லிமிடெட்(இ) | 33. | சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி(அ) |
| 13. | பின்ரெக்ஸ் பினான்ஸ் லிமிடெட் | 34. | சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி |
| 14. | எச்என்பீ பினான்ஸ் பிஎல்சி | 35. | சியப்பதா பினான்ஸ் பிஎல்சி |
| 15. | ஐடியல் பினான்ஸ் லிமிடெட்(ஈ) | 36. | சொவ்ற்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி |
| 16. | கன்றிச் பினான்ஸ் லிமிடெட்(அ) | 37. | சுவர்ணமஹால் பினான்ஸ்சியல் சேர்விஸஸ் பிஎல்சி(அ) |
| 17. | லங்கா கிறெடிட் அன்ட் பிசினஸ் பினான்ஸ் லிமிடெட்(உ) | 38. | யு பீ பினான்ஸ் கம்பனி லிமிடெட் |
| 18. | எல்பீ பினான்ஸ் பிஎல்சி | 39. | வெலிபல் பினான்ஸ் பிஎல்சி |
| 19. | எல்ஓஎல்சி டெவலப்மென்ட் பினான்ஸ் பிஎல்சி | | |
| 20. | எல்ஓஎல்சி பினான்ஸ் பிஎல்சி | | |
| 21. | மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி | | |
| **பதிவுசெய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்கள்** | | | |
| **(அ)** | **உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்** | **(ஆ)** | **உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள்** |
| 1. | அமானா வங்கி பிஎல்சி | 1. | இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி |
| 2. | இலங்கை வங்கி | 2. | பிரதேசிய சங்வர்தன பாங்க் |
| 3. | கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி | 3. | சணச டெவலப்மன்ட் பாங்க் பிஎல்சி |
| 4. | டிஎவ்சிசி பாங்க் பிஎல்சி | 4. | சிறிலங்கா சேர்விங்ஸ் பாங்க் லிமிடெட் |
| 5. | அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி | | |
| 6. | எம்சிபி பாங்க் லிமிடெட் | | |

| | | | |
|---|---|---|---|
| 7. | நசனல் டெவலப்மன்ட் பாங்க் பிஎல்சி | **(இ)** | **சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள்** |
| 8. | நேசன்ஸ் ட்ரஸ்ட் பாங்க் பிஎல்சி | 1. | அசட்லைன் லீசிங் கம்பனி லிமிடெட் |
| 9. | பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி | 2. | கோபரேடிவ் லீசிங் கம்பனி லிமிடெட் |
| 10. | சம்பத் பாங்க் பிஎல்சி | 3. | எஸ்எம்பீ லீசிங் பிஎல்சி |
| 11. | செலான் பாங்க் பிஎல்சி | | |
| 12. | யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி | | |

**(ஈ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி(அ) | 21. | மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி |
| 2. | அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி | 22. | மேர்ச்சன்ட் பாங்க் ஒவ் சிறிலங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சி |
| 3. | ஏஎம்டபிள்யு கபிட்டல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி | 23. | மல்ரி பினான்ஸ் பிஎல்சி(அ) |
| 4. | ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி | 24. | நேசன் லங்கா பினான்ஸ் பிஎல்சி(அ) |
| 5. | அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி(அ)(ஆ) | 25. | ஒறியன்ட் பினான்ஸ் பிஎல்சி |
| 6. | பிம்புத் பினான்ஸ் பிஎல்சி(அ) | 26. | பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி |
| 7. | சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி | 27. | பீப்பிள்ஸ் மேர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி |
| 8. | சிற்றிசென்ஸ் டெவலெப்மென்ற் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி | 28. | பிறைம் பினான்ஸ் பிஎல்சி(அ) |
| 9. | கொமர்சல் கிறடிட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி | 29. | றிச்சேர்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிடெட் |
| 10. | கொமர்சல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி | 30. | சர்வோதய டெவலப்மன்ட் பினான்ஸ் லிமிடெட்(ஊ) |
| 11. | டயலொக் பினான்ஸ் பிஎல்சி | 31. | செங்கடகல பினான்ஸ் பிஎல்சி |
| 12. | ஈரிஜ பினான்ஸ் லிமிடெட் (இ) | 32. | சிபீசி பினான்ஸ் லிமிடெட் |
| 13. | பின்ரெக்ஸ் பினான்ஸ் லிமிடெட் | 33. | சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி (அ)(எ) |
| 14. | எச்என்பீ பினான்ஸ் பிஎல்சி | 34. | சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி |
| 15. | ஐடியல் பினான்ஸ் லிமிடெட்(ஈ) | 35. | சியப்பதா பினான்ஸ் பிஎல்சி |
| 16. | கன்றிச் பினான்ஸ் லிமிடெட் (அ) (எ) | 36. | சொவ்ற்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி |
| 17. | லங்கா கிறெடிட் அன்ட் பிசினஸ் பினான்ஸ் லிமிடெட்(உ) | 37. | சுவர்ணமஹால் பினான்ஸ்சியல் சேர்விஸஸ் பிஎல்சி(அ) |
| 18. | எல்பீ பினான்ஸ் பிஎல்சி | 38. | யு பீ பினான்ஸ் கம்பனி லிமிடெட் |
| 19. | எல்ஓஎல்சி டெவலப்மென்ட் பினான்ஸ் பிஎல்சி | 39. | வெலிபல் பினான்ஸ் பிஎல்சி |
| 20. | எல்ஓஎல்சி பினான்ஸ் பிஎல்சி | | |

**உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | பெரண்டினா மைக்ரோ இன்வெஸ்ட்மன்ட் கம்பனி லிமிடெட் | 3. | தும்பர மைக்ரோ கிரடிட் லிமிடெட் |
| 2. | லக் ஜெயா மைக்ரோ பினான்ஸ் லிமிடெட் | 4. | செஜய மைக்ரோ கிரடிட் லிமிடெட் |

**முதனிலை வணிகர் கம்பனிகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | அக்குயிட்டி செக்குறிட்டீஸ் லிமிடெட் | 5. | என்எஸ்பீ பன்ட் மனேஜ்மன்ட் கம்பனி லிமிடெட் |
| 2. | கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடெட் | 6. | பேப்பச்சுவல் ரெசரீஸ் லிமிடெட்(ஐ) |
| 3. | என்ட்ரஸ்ட் செக்குறிட்டீஸ் பிஎல்சி(ஏ) | 7. | வெல்த்றஸ்ட் செக்குறிட்டீஸ் லிமிடெட் |
| 4. | பர்ஸ்ட் கப்பிட்டல் ரெசறீஸ் பிஎல்சி | | |

(அ) 2021.12.31இல் உள்ளவாறு குறைந்தபட்ச மூலதனப் போதுமை தேவைப்படுத்தலுடன் அல்லது 2022.01.01இல் உள்ளவாறு குறைந்தபட்ச மைய மூலதனத் தேவைப்பாட்டுடன் இணங்காமை. அக்கம்பனிகள் தரப்பட்ட கால வரையறையொன்றினுள் நாணயச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மூலதன மறுசீரமைப்புத் திட்டம் அல்லது வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட முதன்மைத் திட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கி ஒழுக வேண்டும்.

(ஆ) ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி 2021.04.01ஆம் திகதி நடைமுறைக்குவரும் வகையில் அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சியுடன் இணைக்கப்பட்டது.

(இ) நாணயச் சபை மூலம் 2020.07.13 அன்று வியாபாரத் தொழிற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டன. 2021.01.01 அன்று, முடிவுறுத்துவதற்காகத் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றில் விண்ணப்பமொன்றினை மேற்கொள்வதற்கு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைப் பணிப்பாளருக்கு நாணயச் சபை அறிவுறுத்தியது.

(ஈ) ஐடியல் பினான்ஸ் லிமிடெட் நிறுவனம் 2022.01.28 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் மகேந்திரா ஐடியல் பினான்ஸ் லிமிடெட் என பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

(உ) முதன்மைத் திட்டத்தின் கீழ் பட்டியல் தேவையின் காரணமாக லங்கா கிறெடிட் அன்ட் பிசினஸ் பினான்ஸ் லிமிடெட் நிறுவனம் 2022.01.22 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் லங்கா கிறெடிட் அன்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி என பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

(ஊ) முதன்மைத் திட்டத்தின் கீழ் பட்டியல் தேவையின் காரணமாக சர்வோதய டெவலப்மன்ட் பினான்ஸ் லிமிடெட் நிறுவனம் 2022.01.06 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் சர்வோதய டெவலப்மன்ட் பினான்ஸ் பிஎல்சி என பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

(எ) புதிய குத்தகைக்குவிடும் வியாபாரத்தினை நடாத்துவதன் மீது நாணயச் சபையினால் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

(ஏ) அரச பிணையங்களின் முதலாந்தர ஏலங்களில் பங்கேற்பது 2017.07.24 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் தவிர்க்கப்பட்டது.

(ஐ) 2017.07.06ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் முதனிலை வணிகர் வியாபாரம் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்வது இடைநிறுத்தப்பட்டதுடன் நடப்பு இடைநிறுத்தம் 2022.07.05 வரை செயற்பாட்டிலிருக்கும்.

# பகுதி III

## பகுதி III

### ஆண்டுப்பகுதியில் அரசாங்கத்தினாலும் நாணயச்சபையினாலும் இலங்கை மத்திய வங்கி மற்றும் வங்கித்தொழில் நிறுவனங்களின் நடைமுறைகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நிருவாக வழிமுறைகள்

### தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள், சுற்றிக்கைகள், பணிப்புரைகள் மற்றும் அறிவித்தல்கள்


| | | தொடர்பு எண் | பக்கம் |
|---|---|---|---|
| **வங்கி மேற்பார்வை** | | | |
| 1. | 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கச் சுற்றறிக்கை: சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் நெல் ஆலையாளர்களுக்கெதிரான அறவிடல் நடவடிக்கைகளை இடைநிறுத்தல் | | 1 |
| 2. | 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் தற்றுணிபுக் கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடுகள் | | 1 |
| 3. | 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டுச் செலாவணியின் முன்னோக்கிய விற்பனைகளும் கொள்வனவுகளும் | | 2 |
| 4. | 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: பாசல் IIIஇன் கீழ் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான மூலதனத் தேவைப்பாடுகள் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் | | 2 |
| 5. | 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கச் சுற்றறிக்கை: இலங்கை கணக்கீட்டு நியமம் - இ.நி.அ.நியமம் 9: நிதியியல் சாதனங்களைப் பின்பற்றுவது தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட வழிகாட்டல்கள் மீதான 2018ஆம் ஆண்டின் 04ஆம் இலக்கச் சுற்றறிக்கைக்கான திருத்தங்கள் | | 4 |
| 6. | 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கச் சுற்றறிக்கை: பயணிகள் போக்குவரத்துத் துறையிலுள்ள வியாபாரங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் பெறப்பட்ட குத்தகை வசதிகளுக்கான சலுகைகள் | | 4 |
| 7. | 2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியினால் இலங்கை நாட்டிற்கான பன்னாட்டு முறிகளில் செய்யப்படும் முதலீடுகள் | | 6 |
| 8. | 2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட சுற்றுலாத் தொழில் துறையிலுள்ள வியாபாரங்கள் தனியாட்களுக்கான படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினை நீடித்தல் | | 7 |
| 9. | 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியினால் இலங்கை நாட்டிற்கான பன்னாட்டு முறிகளில் செய்யப்படும் முதலீடுகள் | | 8 |
| 10. | 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நாணயவிதிச் சட்டக் கட்டளை: நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் துறைக்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான முன்னுரிமைத் துறை கடன்வழங்கல் இலக்குகள் | | 8 |
| 11. | 2021ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியினால் இலங்கை நாட்டிற்கான பன்னாட்டு முறிகளில் செய்யப்படும் முதலீடுகள் | | 10 |
| 12. | 2021ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டுச் செலாவணியின் முன்னோக்கிய விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் | | 10 |

| | | |
|---|---|---|
| 13. | 2021ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணிக் கடன்பாடுகள் மீதான 2018ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் | 11 |
| 14. | 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்கச் சுற்றறிக்கை: கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான சலுகைகள் | 11 |
| 15. | 2021ஆம் ஆண்டின் 06ஆம் இலக்கச் சுற்றறிக்கை: கொவிட்-19 நோய்ப்பரவலிற்கு மத்தியில் வங்கித்தொழில் பணிகளை வழங்குதல் | 14 |
| 16. | 2021ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் என்பவற்றுக்கான மீட்புத் திட்டங்கள் | 14 |
| 17. | 2021ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளாலும் தேசிய சேமிப்பு வங்கியாலும் இலங்கை நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மீது மேற்கொள்ளப்படும் முதலீடுகள் | 18 |
| 18. | 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டக் கட்டளை: வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) கட்டளை குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள் | 18 |
| 19. | 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: உரிமம்பெற்ற வங்கிகளின் தற்றுணிபுக் கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடுகள் | 19 |
| 20. | 2021ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கச் சுற்றறிக்கை: தொடர்ந்து செல்லும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு காலப்பகுதியின் போது வங்கித்தொழில் பணிகளை வழங்கல் | 20 |
| 21. | 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க நாணயவிதிச் சட்டக் கட்டளை: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் தேசிய சேமிப்பு வங்கிகளினதும் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் | 21 |
| 22. | 2021ஆம் ஆண்டின் 08ஆம் இலக்கச் சுற்றறிக்கை: கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான சலுகைகள் | 22 |
| 23. | 2021ஆம் ஆண்டின் 09ஆம் இலக்கச் சுற்றறிக்கை: ஏற்றுக்கொள்ளத்தக்க கொடுகடன் தரமிடல் முகவராண்மையொன்றாக லங்கா ரேரிங் ஏஜென்சி லிமிடட்டை அங்கீகரித்தல் | 25 |
| 24. | 2021ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: இறக்குமதிகளுக்கு எதிராக எல்லைத் தேவைப்பாடுகள் | 25 |
| 25. | 2021ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கச் சுற்றறிக்கை: கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட சுற்றுலா தொழில் துறையிலுள்ள வியாபாரங்கள் மற்றும் தனியாட்களுக்கான படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினை நீடித்தல் | 26 |
| 26. | 2021ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: உரிமம்பெற்ற வங்கிகளின் கொடுகடன் வசதிகளின் வகைப்படுத்தல், அங்கீகரித்தல் மற்றும் அளவிடல் | 28 |
| 27. | 2021ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: உரிமம்பெற்ற வங்கிகளின் கொடுகடன் வசதிகள் தவிர்ந்த நிதியியல் சொத்துக்களை வகைப்படுத்தல், அங்கீகரித்தல் மற்றும் அளவிடல் | 39 |
| 28. | 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கச் சுற்றறிக்கை: கொடுகடன் வசதிகளின் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளில் ஏனைய நிதியியல் சொத்துக்களின் வகைப்படுத்தல், அங்கீகரித்தல் மற்றும் அளவிடல் தொடர்பில் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கான குறைநிரப்பு சுற்றறிக்கை | 45 |
| 29. | 2021ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: இறக்குமதிகளுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள் | 46 |
| 30. | 2021ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கச் சுற்றறிக்கை: பயணிகள் போக்குவரத்து துறையில் வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட குத்தகை வசதிகளுக்கான சலுகைகள் | 46 |

31. 2021ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: உரிமம்பெற்ற வங்கிகளுக்கான தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் புத்துயிரளித்தல் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு 46

32. 2021ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கச் சுற்றறிக்கை: கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கெதிரான அறவிடல் நடவடிக்கைகளை பிற்போடுதல் 48

33. 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தீர்மானம்: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் வருடாந்த உரிமக் கட்டணம் 48

34. 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நாணயவிதிச் சட்டக் கட்டளை: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் தேசிய சேமிப்பு வங்கியினதும் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் 49

35. 2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க நாணயவிதிச் சட்டக் கட்டளை: ஈட்டினைப் பிணையாகக் கொண்ட வீடமைப்புக் கடன்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் தொடர்பில் 2020ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நாணயவிதிச் சட்டக் கட்டளைக்கான திருத்தம் 50

நாணயம்

36. இலங்கை நாணயத் தாள்களை மீளத்தயாரித்தல் மீது முன்மொழியப்பட்ட வழிகாட்டல்கள் 51

உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

37. 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கச் சுற்றறிக்கை: சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பான திரட்டப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 56

38. தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல: 35/01/005/0007/18: ஒதுக்குத் தேவைப்பாடுகள் 74

39. நாணயக் கடிதங்களுக்கெதிராக காசு எல்லை வைப்புத் தேவைப்பாடுகளைப் பேணுவதன் மீது 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் 103ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைய இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட கட்டளை 75

40. நாணயக் கடிதங்களுக்கெதிராக காசு எல்லை வைப்புத் தேவைப்பாடுகளை பேணுவதன் மீது 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் 103ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைய இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட கட்டளை - (மேற்குறிப்பிட்ட கட்டளையை புறக்கீடுசெய்தல்) 80

வெளிநாட்டுச் செலாவணி

41. 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரைகள்: உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான தற்காலிக சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் 80

42. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) 2213/34ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03ஆந் திகதி புதன்கிழமை: 82

43. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) 2213/35ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03ஆந் திகதி புதன்கிழமை: 90

44. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) 2213/36ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03ஆந் திகதி புதன்கிழமை: 101

| | | |
|---|---|---|
| 45. | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) 2213/37ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03ஆந் திகதி புதன்கிழமை: | 108 |
| 46. | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) 2213/38ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03ஆந் திகதி புதன்கிழமை: | 113 |
| 47. | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) 2213/39ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03ஆந் திகதி புதன்கிழமை: | 118 |
| 48. | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) 2213/40ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03ஆந் திகதி புதன்கிழமை: | 121 |
| 49. | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) 2215/39ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 18ஆந் திகதி வியாழக்கிழமை: | 122 |
| 50. | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) 2218/38ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு மாச்சு மாதம் 09ஆந் திகதி செவ்வாய்க்கிழமை | 124 |
| 51. | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கப் பணிப்புரைகள்: நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | 124 |
| 52. | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கப் பணிப்புரைகள்: இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | 133 |
| 53. | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்கப் பணிப்புரைகள்: தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | 138 |
| 54. | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்கப் பணிப்புரைகள்: வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | 144 |
| 55. | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 06ஆம் இலக்கப் பணிப்புரைகள்: இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் இராசதந்திர ரூபாக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | 152 |
| 56. | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கப் பணிப்புரைகள்: மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் - சிறப்புக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | 154 |
| 57. | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 08ஆம் இலக்கப் பணிப்புரைகள்: வதியும் விருந்தினர் திட்டம் - சிறப்புக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | 158 |
| 58. | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 09ஆம் இலக்கப் பணிப்புரைகள்: வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் உடமையாளர்களுக்கான கடன்வசதிகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | 162 |

| | | |
|---|---|---|
| 59. | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கப் பணிப்புரைகள்: வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையருக்கான (புலம்பெயர்ந்தவர் தவிர) கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | 166 |
| 60. | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கப் பணிப்புரைகள்: நிரந்தர வதிவிட விசாவில் இலங்கைக்கு வெளியே மற்றொரு நாட்டில் வதிகின்ற மற்றும் இரட்டைப் பிரசாவுரிமையினைக் கொண்டுள்ள இலங்கையர்களுக்கான கடன்கள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | 169 |
| 61. | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கப் பணிப்புரைகள்: இலங்கை அபிவிருத்தி முறிகளுக்கான குறித்துரைக்கப்பட்ட முகவர்களாக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மற்றும் முதனிலை வணிர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | 172 |
| 62. | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 13ஆம் இலக்கப் பணிப்புரைகள்: வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகள் (படிவம் 1) மற்றும் வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகள் (படிவம் 2) தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | 173 |
| 63. | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 14ஆம் இலக்கப் பணிப்புரைகள்: வெளிமுக முதலீட்டுக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | 176 |
| 64. | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கப் பணிப்புரைகள்: உள்முக முதலீட்டுக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | 185 |
| 65. | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கப் பணிப்புரைகள்: மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | 191 |
| 66. | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 17ஆம் இலக்கப் பணிப்புரைகள்: புலம்பெயர்ந்தவரின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | 199 |
| 67. | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கப் பணிப்புரைகள்: வதிவற்றோர் ரூபாக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | 203 |
| 68. | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 19ஆம் இலக்கப் பணிப்புரைகள்: வெளிநாட்டு வர்த்தக கடன்பாட்டுக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | 206 |
| 69. | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 20ஆம் இலக்கப் பணிப்புரைகள்: நடைமுறை மற்றும் மூலதனக் கொடுக்கல்வாங்கல் தொடர்பில் உத்தரவாதங்களை வழங்குவது மற்றும் புதிப்பிப்பது தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | 209 |
| 70. | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது): 2220/69ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26ஆந் திகதி வெள்ளிக்கிழமை | 212 |

| | | | |
|---|---|---|---|
| 71. | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது): 2222/37ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 07ஆந் திகதி புதன்கிழமை | | 213 |
| 72. | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 21ஆம் இலக்கப் பணிப்புரைகள்: சிறப்பு வைப்புக்கள் கணக்கு மீது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்படும் பணிப்புரைகள் | | 214 |
| 73. | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது): 2222/60ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09ஆந் திகதி வெள்ளிக்கிழமை | | 216 |
| 74. | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 22ஆம் இலக்கப் பணிப்புரைகள்: இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபையுடன் பதிவுசெய்யப்பட்ட சுற்றுலாவிடுதிகளுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | | 217 |
| 75. | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது): 2229/5ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு மே மாதம் 25ஆந் திகதி செவ்வாய்க்கிழமை | | 219 |
| 76. | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது): 2229/9ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு மே மாதம் 28ஆந் திகதி வெள்ளிக்கிழமை | | 220 |
| 77. | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கப் பணிப்புரைகள்: இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் இராசதந்திர ரூபாக் கணக்குகள் என்பன தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | | 221 |
| 78. | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 24ஆம் இலக்கப் பணிப்புரைகள்: வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | | 221 |
| 79. | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது): 2234/19ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு யூன் மாதம் 30ஆந் திகதி புதன்கிழமை | 2234/19 | 222 |
| 80. | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது): 2234/20ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு யூன் மாதம் 30ஆந் திகதி புதன்கிழமை | 2234/20 | 223 |
| 81. | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது): 2234/49ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு யூலை மாதம் 02ஆந் திகதி வெள்ளிக்கிழமை | 2234/49 | 224 |
| 82. | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது): 2235/22ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு யூலை மாதம் 06ஆந் திகதி செவ்வாய்க்கிழமை | 2235/22 | 226 |
| 83. | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 25ஆம் இலக்கப் பணிப்புரைகள்: சிறப்பு வைப்புக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | | 228 |
| 84. | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 26ஆம் இலக்கப் பணிப்புரைகள்: கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட முதலீடுகளுக்கு வசதியளிப்பதற்காக சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | | 231 |

| | | | |
|---|---|---|---|
| 85. | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 27ஆம் இலக்கப் பணிப்புரைகள்: வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | | 235 |
| 86. | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது): 2251/42ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு ஒத்தோபர் மாதம் 28ஆந் திகதி வியாழக்கிழமை | 2251/42 | 235 |
| 87. | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது): 2258/23ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15ஆந் திகதி புதன்கிழமை | 2258/23 | 237 |
| 88. | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கப் பணிப்புரைகள்: முதலீட்டினைப் பெறுபவர்களுக்கு நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளிப்பதற்காக சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | | 238 |
| 89. | 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 29ஆம் இலக்கப் பணிப்புரைகள்: வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு உடமையாளர்களுக்கான கடன் வசதிகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள் | | 240 |
| **நிதியியல் உளவறிதல் பிரிவு** | | | |
| 90. | சுற்றறிக்கை இலக்கம்- 01/2021: இணையவழிக் கொடுப்பனவு தளங்களுடன் ஈடுபடுகின்ற தரப்பினர்கள் மீது பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியலித்தலை ஒழித்தல் வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல் | 037/05/006/0004/018 | 240 |
| 91. | சுற்றறிக்கை இலக்கம் - 02/2021: தன்னியக்க கூற்றுப் பொறிகளினூடாக வெளிநாட்டு நாணய வெளிப்பாய்ச்சல்களில் காணப்படுகின்ற போக்குகள்: வெளிநாடுகளில் பண மீளெடுப்புக்கள் | 037/03/009/0001/021 | 241 |
| 92. | சுற்றறிக்கை இலக்கம் - 03/2021: கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலையின் போது தோற்றம்பெற்று வரும் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடநேர்வுகளை தணிப்பதற்கான மேலதிக வழிமுறைகள் | 037/05/003/0005/016 | 241 |
| 93. | 2021/02ஆம் இலக்க வழிகாட்டல்கள்: 2021இன் 2ஆம் இலக்க பணம் தூ யதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் நோக்கங்களுக்காக சிசிரிவி தொழிற்பாடுகள் மீதான நிதியியல் நிறுவனங்களுக்கான வழிகாட்டல்கள் | 037/06/008/0006/020 | 242 |
| 94. | சுற்றறிக்கை இலக்கம் - 04/2021: 2021ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வைப்புக்கள் | | 245 |
| **பன்னாட்டுத் தொழிற்பாடுகள்** | | | |
| 95. | "தொழிலாளர் உள்முகப் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம் தொடர்பான" தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்கள் | 33/04/0170011/005 | 246 |
| 96. | "உள்முக பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம்" தொடர்பாக உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்கள் | 33/05/012/0011/006 | 247 |
| 97. | "ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல்" தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் | 33/04/012/0011/007 | 248 |
| 98. | "உள்முகப் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம்" தொடர்பாக உரிமம்பெற்ற வங்கிகளுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்கள் | 33/04/012/0011/008 | 253 |

| | | | |
|---|---|---|---|
| 99. | “ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவது” தொடர்பாக உரிமம்பெற்ற வங்கிகளுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்கள் | 33/04/012/0011/009 | 253 |
| 100. | இலங்கை மத்திய வங்கியினால் நடத்தப்படும் வாங்கல்-விற்றல், ஐ.அ.டொலர்/இல.ரூபா வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் ஏலங்களில் பங்கேற்பதற்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கிக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் | 33/04/012/0011/002 | 253 |
| 101. | “உள்முக பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம்” தொடர்பாக வர்த்தக வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் | 33/04/012/0011/10 | 255 |
| 102. | “ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல்” தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் | 33/04/012/0011/11 | 255 |
| 103. | ஏற்றுமதியாளர்களின் தொடர்பான (வெளிநாட்டு நாணய) கணக்குகளுக்கு ஏற்றுமதிப் பெறுகைகளை வரவு வைத்தல் மீது உரிமம்பெற்ற வங்கிகளுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் | 33/04/012/0011/12 | 258 |
| 104. | “ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல்” தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்கள் | 33/04/012/0011/13 | 258 |
| 105. | “தொழிலாளர் உள்முகப் பணவனுப்பல்கள் மீதான மேலதிக ஊக்குவிப்புக்கள்” தொடர்பான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் | 33/04/012/0011/014 | 261 |
| 106. | “கையில் வைத்திருக்கும் வெளிநாட்டு நாணயத்தினை வைப்புச் செய்தல், மாற்றிக் கொள்ளுதல் மற்றும் முதலீடு செய்வதற்காக பொதுமக்களுக்கு வழங்கப்படும் ஊக்குவிப்புக்கள்” தொடர்பான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் | 33/04/012/0011/015 | 262 |
| 107. | “கையில் வைத்திருக்கும் வெளிநாட்டு நாணயத்தினை வைப்புச் செய்தல், மாற்றிக் கொள்ளுதல் மற்றும் முதலீடு செய்வதற்காக பொதுமக்களுக்கு வழங்கப்படும் ஊக்குவிப்புக்கள்” தொடர்பான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்கள் | 33/04/012/0011/016 | 264 |
| 108. | “உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத்திட்டம்”, “ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்பதல்”, உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான மேலதிக ஊக்குவிப்புத் திட்டம் மற்றும் “கையிலுள்ள வெளிநாட்டு நாணயத்தினை வைப்புச் செய்தல், மாற்றுதல் மற்றும் முதலீடு செய்தல் என்பனவற்றிற்கான ஊக்குவிப்புக்கள்” என்பன தொடர்பான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்கள் | 33/04/012/0011/017 | 265 |
| **பொதுப்படுகடன்** | | | |
| 109. | வழிகாட்டல் இல.: எஸ்எஸ்எஸ்எஸ்/01/2021: இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல் தரவுகளைப் பதிவுசெய்தல் மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமைக்கு பிணையங்கள் தீர்ப்பனவு அறிவுறுத்தல்களை அனுப்புவது மீதான வழிகாட்டல்கள் | 08/25/001/0005/001 | 266 |
| 110. | சுற்றறிக்கை இல.: பிடிடி/01/2021: அரச பிணையங்கள் வர்த்தக அறிக்கையிடல் மீதான சுற்றறிக்கை (இரண்டாந்தரச் சந்தை) | 08/25/001/0005/001 | 266 |
| 111. | திறைசேரி முறிகளின் ஆரம்ப வழங்கல் மீதான பணிப்புரைகள் | 08/21/005/012/007 | 268 |
| **கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்** | | | |
| 112. | 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை: லங்காசெட்டில் முறைமையின் நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணைக்குத் திருத்தம் | 34/07/029/0001/002 | 268 |
| 113. | 2021ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை: 2021.04.30 அன்று பின்பற்றப்படவுள்ள லங்காசெட்டில் முறைமையின் சிறப்பு நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணை | 34/07/029/0001/002 | 271 |
| 114. | 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை: 2021.05.11, 2021.05.12 மற்றும் 2021.05.13ஆம் நாட்களுக்கான லங்காசெட்டில் முறைமையின் சிறப்பு நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணை | 34/07/029/0001/002 | 273 |

| | | | |
|---|---|---|---|
| 115. | 2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை: 2021.05.17இலிருந்து லங்காசெட்டில் முறைமையின் தொழிற்பாட்டு மணித்தியாலங்களை மட்டுப்படுத்துதல் | 34/07/029/0001/002 | 275 |
| 116. | 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை: லங்காசெட்டில் முறைமையின் நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணைக்குத் திருத்தம் | 34/07/029/0001/002 | 278 |
| 117. | 2021ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள முறைமை சுற்றறிக்கை: லங்காசெட்டில் முறைமையின் தொழிற்பாட்டு மணித்தியாலங்கள் 2021.05.28 இலிருந்து மட்டுப்படுத்தப்படுகிறது | 34/07/029/0001/002 | 280 |
| 118. | பிற்சேர்க்கை 3 - உள்நாட்டுக் கொடுப்பனவுகளுக்காக தேசிய விரைவுப் பதிலிறுப்புக் குறியீட்டு நியமமொன்றினை நிறுவுவது தொடர்பான 2019ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கச் சுற்றறிக்கை | 34/01/025/0038/003 | 282 |
| 119. | 2021ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை: 2021.06.23 மற்றும் 2021.06.25ஆம் திகதிகளில் பின்பற்றப்படவுள்ள லங்காசெட்டில் முறைமையின் சிறப்பு நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணை | 34/07/029/0001/002 | 283 |
| 120. | 2021ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை: 2021.07.12 இலிருந்து லங்காசெட்டில் முறைமையின் நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணை | 34/07/029/0001/002 | 285 |
| 121. | கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை இல: 09/2021: லங்காசெட்டில் முறைமை விதிகளின் புதிய பதிப்பு - பதிப்பு 2.2 | 34/07/029/0001/002 | 288 |
| 122. | கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை இல: 10/2021: லங்காசெட்டில் முறைமை 2021 திசெம்பர் 09 மற்றும் 10ஆம் திகதிகளில் அதன் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து நேரடித் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் | 34/01/024/0106/006 | 289 |
| 123. | 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை சுற்றறிக்கை: 2021.12.24 இற்கான லங்காசெட்டில் முறைமையின் சிறப்பு நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணை | 34/07/029/0001/002 | 289 |
| 124. | பிற்சேர்க்கை 4 - உள்நாட்டுக் கொடுப்பனவுகளுக்காக தேசிய விரைவுப் பதிலிறுப்புக் குறியீட்டு நியமமொன்றினை நிறுவுவது தொடர்பான 2019ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கச் சுற்றறிக்கை | 34/01/025/0038/003 | 291 |
| | **பிரதேச அபிவிருத்தி** | | |
| 125. | சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி: சுற்றுலாத் தொழில்துறையிலுள்ள வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் வழங்கப்பட்ட சலுகைகளை நீடித்தல் | 32/04/034/0001/001 | 292 |
| 126. | புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் - “சருசற” கொடுகடன் உத்தரவாதம் மற்றும் வட்டி உதவுதொகைத் திட்டத்திற்கான திருத்தம் | ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/ 2011/2021/01 | 293 |
| 127. | புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தம் | ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/ 2011/2021/02 | 313 |
| 128. | உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னோடிச் செயற்றிட்டத்தின் நடைமுறைப்படுத்தலுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் | ஆர்டிடி/டிஏடி-பிபி/2021/01 | 314 |
| 129. | சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி: சலுகைகளை நீடித்தல்: | 32/04/034/0001/001 | 338 |
| 130. | சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி: சுற்றுலாத் தொழிற்துறையிலுள்ள வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை நீடித்தல், சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி: சலுகைகளை நீடித்தல் | 32/04/034/0001/001 | 340 |
| 131. | இலங்கையிலுள்ள அரிசி ஆலைச் சொந்தக்காரர்களுக்கு வழங்கப்படவுள்ள கடன்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டம்: | ஆர்டிடி/சிஜி/ஆர்எம்/2021/01 | 340 |
| 132. | இரண்டாவது கடனுக்காகவும் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு பதிவுப்படிவங்கள் சமர்ப்பிக்கப்படுவதனை இலகுபடுத்துவதற்காகவும் சுபீட்சக் கடன் திட்ட (சௌபாக்யா) ஏற்பாடுகளின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை திருத்துதல்: | ஆர்டிடி/பிஆர்/2010/03 (ஏ-06) | 350 |

| | | | |
|---|---|---|---|
| 133. | சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி: சுற்றுலாத் தொழிற்துறையிலுள்ள வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை நீடித்தல், சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி: சலுகைகளை நீடித்தல் | 32/04/034/0001/001 | 360 |
| 134. | இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் திட்டங்களின் கீழ் கொடுகடன் உத்தரவாத கோரல்களுக்கான அறிவுறுத்தல்கள்: | 32/04/034/0001/001 | 363 |
| 135. | 2021.09.01ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க நாணயச் சபை சுற்றறிக்கையின் நியதிகளில் சிறு உடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் மீளெழுச்சிப்படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் பெறப்பட்ட கடன்களுக்காக வழங்கப்படவுள்ள சலுகைகள் | | 363 |
| 136. | 2021.09.01ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க நாணயச் சபைச் சுற்றறிக்கையின் நியதிகளில் வழங்கல் சங்கிலி மீள்வலுவூட்டல் கடன் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட கடன்களுக்காக வழங்கப்படவுள்ள சலுகைகள் | | 365 |
| 137. | சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி: சுற்றுலாத் தொழிற்துறையிலுள்ள வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை நீடித்தல், சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி: சலுகைகளை நீடித்தல் | 32/04/034/0001/001 | 367 |
| 138. | 2021.09.01ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க நாணயச் சபை சுற்றறிக்கையின் நியதிகளில் சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் திட்டங்களின் கீழ் பெறப்பட்ட கடன்களுக்காக வழங்கப்படவுள்ள சலுகைகள் | | 370 |
| 139. | சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரசாங்க தனியார் உற்பத்தியாளர் பங்குடமை கடன் திட்டங்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான இரண்டாவது திருத்தம்<br>ஆர்டிடி/எஸ்ஏபிபி/4பி/2019/01 (திருத்தம் - 02) | | 372 |
| 140. | சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சூழலும் நிதியக் கடன் திட்டங்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான இரண்டாவது திருத்தம்<br>ஆர்டிடி/எஸ்ஏபிபி/ஆர்எவ்/2019/01 (திருத்தம் - 02) | | 373 |
| 141. | அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை மீள்வலுவூட்டுவதற்கான புதிய மீள்நிதியிடல் திட்டம் ("சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி கட்டம்-IV") | ஆர்டிடி/கொவிட்-19-கட்டம் IV/2021/01 | 374 |
| 142. | "சுவசக்தி - பத்து இலட்சம் தொழில் வாய்ப்புக்களை நோக்கி" கடன் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட கடன்களுக்காக வழங்கப்படவுள்ள சலுகைகள் | 32/004/021/001/005 | 387 |
| 143. | இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களின் கீழ் கடன்களைப்பெற்ற கடன்பாட்டாளர்களுக்கு சலுகைகளை வழங்குதல் | ஆர்டிடி/ஜஎஸ்/எஸ்எவ்/2021/01 | 389 |
| 144. | இலங்கையில் இறால் வளர்ப்புப் பண்ணைகளைச் செறிவுபடுத்துவதற்கான வட்டி உதவுதொகைக் கடன் திட்டம் | | 389 |
| **தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல்** | | | |
| 145. | இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்ட ஒழுங்குவிதிகள் 2010ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்ட ஒழுங்குவிதிகளுக்கான திருத்தம் | | 398 |
| 146. | இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்ட ஒழுங்குவிதிகள் | | 399 |
| **வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை** | | | |
| 147. | 2021ஆம் அண்டின் 01ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: அசையாச் சொத்துக்களின் மதிப்பீட்டிற்கான திருத்தம் | | 408 |

| | | |
|---|---|---|
| 148. | 2021ஆம் அண்டின் 01ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடல் சட்டப் பணிப்புரைகள்: அசையாச் சொத்துக்களின் மதிப்பீட்டிற்கான திருத்தம் | 409 |
| 149. | 2021ஆம் அண்டின் 02ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: உந்து ஊர்திகள் தொடர்பாக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் தொடர்பான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் | 411 |
| 150. | 2021ஆம் அண்டின் 02ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடல் சட்டப் பணிப்புரைகள்: உந்து ஊர்திகள் தொடர்பாக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் தொடர்பான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் | 411 |
| 151. | 2021ஆம் அண்டின் 04ஆம் இலக்கச் சுற்றறிக்கை: பயணிகள் போக்குவரத்துத் துறையிலுள்ள வியாபாரங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் பெறப்பட்ட குத்தகை வசதிகளுக்கான சலுகைகள் | 411 |
| 152. | 2021ஆம் அண்டின் 05ஆம் இலக்கச் சுற்றறிக்கை: கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட சுற்றுலாத் தொழில் துறையிலுள்ள வியாபாரங்கள் தனியாட்களுக்கான படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினை நீடித்தல் | 414 |
| 153. | 2021ஆம் அண்டின் 03ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: திரவச் சொத்துக்கள் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் | 415 |
| 154. | 2021ஆம் அண்டின் 03ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடல் சட்டப் பணிப்புரைகள்: திரவச் சொத்துக்கள் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் | 415 |
| 155. | 2021ஆம் அண்டின் 04ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் | 416 |
| 156. | 2021ஆம் அண்டின் 06ஆம் இலக்கச் சுற்றறிக்கை: கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான சலுகைகள் | 418 |
| 157. | 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் மற்றும் பதிவுசெய்யப்பட்ட பங்கு மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்ட பணிப்புரைகள்: முதனிலை வணிகர் கம்பனிகளின் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடு | 421 |
| 158. | 2021ஆம் அண்டின் 07ஆம் இலக்கச் சுற்றறிக்கை: கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான சலுகைகள் மீதான 2021இன் 6ஆம் இலக்க சுற்றறிக்கைக்கான திருத்தம் | 424 |
| 159. | 2021ஆம் அண்டின் 08ஆம் இலக்கச் சுற்றறிக்கை: ஏற்றுக்கொள்ளத்தக்க கடன்தரப்படுத்தல் முகவராண்மையாக லங்கா ரேட்டிங் ஏஜன்சி லிமிடெட்டினை அங்கீகரித்தல் | 424 |
| 160. | 2021ஆம் அண்டின் 09ஆம் இலக்கச் சுற்றறிக்கை: கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான சலுகைகளை நீடித்தல் | 425 |
| 161. | 2021ஆம் அண்டின் 05ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: கம்பனி ஆளுகை | 428 |
| 162. | 2021ஆம் அண்டின் 06ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள்: முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்களின் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடல் | 449 |

**2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கச் சுற்றறிக்கை** **2021 சனவரி 13**

**சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் நெல் ஆலையாளர்களுக்கெதிரான அறவிடல் நடவடிக்கைகளை இடைநிறுத்தல்**

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி நெல் ஆலையாளர்களுக்கு உதவுவதற்கான அரசாங்கத்தின் முன்னெடுப்புக்களைப் பரிசீலனையில் கொண்டு எதிர்வரும் அறுவடை பருவகாலத்தின் போது, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் (இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் என குறிப்பிடப்படும்) கீழே குறித்துரைக்கப்பட்டவாறு 2021 சனவரி 01ஆம் திகதி தொடக்கம் ஆறு மாத காலப்பகுதிக்கு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் நெல் ஆலையாளர்களுக்கெதிரான அறவிடல் நடவடிக்கையினை இடைநிறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

1. 1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் கடன் அறவிடல் ஏற்பாடுகள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம், அல்லது திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க ஈட்டுச் சட்டம் அல்லது 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டம் அல்லது இது தொடர்பிலான வேறு ஏதேனும் தொடர்பான சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அறவிடல் நடவடிக்கைகளை தொடங்கிய அல்லது அறவிடல் நடவடிக்கை பற்றிய அறிவித்தலை வழங்கிய உரிமம்பெற்ற வங்கிகளைப் பொறுத்தவரை, அத்தகைய அறவிடல் நடவடிக்கைகளை, தொடர்பான உரிமம்பெற்ற வங்கியும் கடன்பாட்டாளரும் படுகடன் மீள்கொடுப்பனவு தொடர்பில் உடன்படிக்கையொன்றிற்கு வருதல் வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு இடைநிறுத்துதல் வேண்டும்.
2. உரிமம்பெற்ற வங்கிகள் கடன்களையும் முற்பணங்களையும் அறவிடுவதற்கான புதிய தீர்மானங்களை நிறைவேற்றுவதனை பிற்போடுதல் வேண்டும். அறவிடலுக்கான தீர்மானங்கள் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருக்கின்ற சந்தர்ப்பங்களில் சொத்துக்களை ஏலமிடுவதனை 2021.06.30 வரை இடைநிறுத்துதல் வேண்டும்.
3. அறவிடல் தொடர்பான வழக்காடல்கள் நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகின்ற சந்தர்ப்பத்தில், கடன்பாட்டாளர் மேலே (i)இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கான சத்தியக்கடதாசியை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் உடன்படிக்கைக்கு வருவதற்கு அனுமதிக்கப்படல் வேண்டும்.
4. உரிமம்பெற்ற வங்கிகள் வேறு ஏதேனும் சட்ட அல்லது அறவிடல் நடவடிக்கைகளை 2021.06.30 வரை இடைநிறுத்துதல் வேண்டும்.

ஒப்பம்
பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கச் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்** **2021 சனவரி 19**

**உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் தற்றுணிபுக் கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடுகள்**

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை, கொவிட்-19 நோய்த்தொற்று காரணமாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினதும் (இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பிடப்படும்) திரவத்தன்மை மீதும் ஏனைய முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகள் மீதும் ஏற்படக்கூடிய மோசமான தாக்கத்தினையும் உரிமம்பெற்ற வங்கிகளின் திரவத்தன்மை மற்றும் மூலதன தாங்கிருப்பினையும் பொருத்தமான மட்டங்களில் பேணுவதன் முக்கியத்துவத்தினையும் கருத்திற் கொண்டு, உரிமம்பெற்ற வங்கிகளின் தற்றுணிபுக் கொடுப்பனவுகளைக் கட்டுப்படுத்துவதன் மீது இப்பணிப்புரைகளை இத்தால் விடுக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| **1.** | **அதிகாரமளித்தல்** | 1.1 | திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 46(1) மற்றும் 76ஜே(1) இன் நியதிகளில், வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல் வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு, நாணயச் சபைக்கு, அத்தகைய வங்கிக்கு, வங்கிகளுக்கு எந்தவொரு வியாபார அம்சங்கள் தொடர்பிலும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பது பற்றி அனைத்து அல்லது ஏதேனும் உரிமம்பெற்ற வங்கிக்கு பணிப்புரைகளை விடுப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது. |
| **2.** | **பிரயோகத்தின் செயற்பரப்பு** | 2.1 | இப்பணிப்புரைகள், இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ள அல்லது நிறுவப்பட்டுள்ள ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கிக்கும் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள அல்லது நிறுவப்பட்டுள்ள வங்கியொன்றின் கிளைக்கும் தனியான அடிப்படையில் ஏற்புடைத்தாதல் வேண்டும். |
| **3.** | **தற்றுணிபுக் கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடுகள்** | 3.1 | இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ள அல்லது நிறுவப்பட்டுள்ள ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கியும் காசிலான பங்குலாபக் கொடுப்பனவுகளை 2020ஆம் ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்கள் இறுதியாக்கப்பட்டு, அது வெளிவாரி கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படும் வரை பிற்போடுதல் வேண்டும். |

3.2 இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியும் 2019 மற்றும் 2020ஆம் ஆண்டிற்காக ஏற்கனவே பிரகடனப்படுத்தப்படாத இலாபங்களை தாய்நாட்டிற்கு அனுப்புவதனை, 2020ஆம் ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்கள் இறுதிப்படுத்தப்பட்டு, அது வெளிவாரிக் கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படும் வரை பிற்போடுதல் வேண்டும்.

3.3 காசிலான பங்கிலாபக் கொடுப்பனவுகளையும் இலாபங்களை தாய்நாட்டிற்கு அனுப்புவதனையும் தீர்மானிக்கும் பொழுது உரிமம்பெற்ற வங்கிகள், பாசல் III இன் கீழ் உரிமம்பெற்ற வங்கிகளுக்கான மூலதனத் தேவைப்பாடுகள் மீதான 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் தேவைப்பாடுகள் மீதும், எதிர்பார்க்கப்படும் சொத்து வளர்ச்சி, வியாபார விரிவாக்கம் மற்றும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கம் என்பன தொடர்பில் உரிய கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும்.

3.4 உரிமம்பெற்ற வங்கிகள் 2021 யூன் 30ஆம் நாள் வரை;

(அ) அதன் சொந்தப் பங்குகளை மீண்டும் வாங்குவதிலிருந்தும் விலகியிருத்தல் வேண்டும்;

(ஆ) முகாமைத்துவப் படிகளிலும் பணிப்பாளர் சபைக்கான கொடுப்பனவுகளிலும் அதிகரிப்புக்களைச் செய்யாது விலகியிருத்தல் வேண்டும்;

(இ) முன்மதியுடைய விதத்தில் நடந்து கொள்ளல் வேண்டும் என்பதுடன் விளம்பரங்கள், வியாபார ஊக்குவிப்புக்காக பரிசுத் திட்டங்கள், பொழுதுபோக்கு, அநுசரணைகள், பயணம் மற்றும் பயிற்சி போன்ற அத்தியாவசியமல்லாத செலவினங்களை ஏற்படுத்துவதிலிருந்தும் சாத்தியமானளவிற்கு விலகியிருத்தல்; அத்துடன்

(ஈ) ஏதேனும், மூலதனச் செலவினங்கள் உறப்படும் போது தீவிரமான உரிய விழிப்புக் கவனத்தினையும் முன்மதியுடைய தன்மையினையும் பின்பற்றுதல் வேண்டும்.

**பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்**
நாணயச் சபையின் தலைவரும் இலங்கை மத்திய வங்கியின்
ஆளுநரும்

**2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை** 2021 சனவரி 25

### உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டுச் செலாவணியின் முன்னோக்கிய விற்பனைகளும் கொள்வனவுகளும்

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1)ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளுக்கிணங்க விடுக்கப்படுகிறது.

வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் மிகையான தளம்பல்களையும் வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் தாக்கத்தினையும் தவிர்க்கும் அவசியத்தினைக் கருத்திற் கொண்டு, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உடனடியாக நடைமுறைக்குவரும் விதத்தில் மூன்று மாத காலப்பகுதிக்கு வெளிநாட்டுச் செலாவணி தொடர்பாக முன்னோக்கிய ஒப்பந்தங்களைச் செய்வதிலிருந்து விலகியிருக்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றன.

ஒப்பம்
பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

**2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்** 2021 சனவரி 25

### பாசல் III இன் கீழ் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான மூலதனத் தேவைப்பாடுகள் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்

பாசல் IIIஇன் கீழ் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான மூலதனத் தேவைப்பாடுகள் மீதான 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் பின்வரும் பணிப்புரைகளைப்

பதிலீடு செய்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன.

**அட்டவணை I**

**பின்னிணைப்பு IV**

**பகுதி III (அ) கொடுகடன் இடர்நேர்விற்காக இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட தொகையினைக் கணித்தல்**

| வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக் குறியீடு | சொத்து | இடர்நேர்வு நிறை (%) |
|---|---|---|
| 20.3.1.1.1.2 | **மத்திய அரசாங்கத்தின் மீதான வெளிநாட்டுக் கோரல்**<br>இலங்கை அரசாங்கத்தின் மீதான அனைத்து வெளிநாட்டுக் கோரல்கள்<br>(திருத்தப்பட்ட இடர்நேர்வு நிறை 2021ஆம் ஆண்டிற்கு மாத்திரம் ஏற்புடைத்தாகும்) | 10 |
| 20.3.1.9.0.0 | **வதிவிடச் சொத்தினால் பிணையிடப்பட்ட கோரல்கள்**<br>தொகையானது, ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதன நோக்கங்களுக்கு தகைமைபெற்ற வதிவிடச் சொத்துக்களினால் பிணையிடப்பட்ட கோரல்களின் தொகையுடனும் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதன நோக்கங்களுக்குத் தகைமைபெறாத வதிவிடச் சொத்தினால் பிணையிடப்பட்ட கோரல்களுடனும் இணங்குதல் வேண்டும்)<br>(வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக் குறியீடு 20.3.1.9.1.0 இலிருந்து 20.3.1.9.2.0 வரை)<br>வர்த்தக ரீதியான உண்மைச் சொத்துக்கள் மீதான ஈடுகளின் மூலம் பிணையிடப்பட்ட இடர்நேர்விற்குள்ளாகும் தன்மை, இதிலிருந்து நீக்கப்படல் வேண்டும். | |
| 20.3.1.9.1.0 | **ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதன நோக்கங்களுக்கு தகைமைபெற்ற கோரல்கள்**<br>(அ) கீழேயுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, முதன்மை ஈடொன்றினால் முழுமையாகப் பிணையிடப்பட்ட வதிவிட வீடமைப்புக் கடன் அத்தகைய வதிவிடச் சொத்து கடன்பாட்டாளரினால் வதிதல் வேண்டும் அல்லது வாடகைக்கு கொடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.<br>(ஆ) முன்னுரிமை இடர்நேர்வு நிறைக்குப் பயன்படுத்துவதற்கு இயலுமை பெறுவதற்கு கோரல்கள் பின்வரும் தகைமைப் பிரமாணத்தினைக் கட்டாயம் பூர்த்திசெய்தல் வேண்டும். | 35 |
| | • பிந்திய மதிப்பீட்டு அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு சொத்தின் கட்டாய விற்பனைப் பெறுமதியின் மீது குறைந்தபட்சம் 25 சதவீதம் கொண்ட இலாபம்.<br>• சொத்தின் மதிப்பீடு: வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள், வருமான அங்கீகரிப்பு மற்றும் ஒதுக்கங்களின் வகைப்படுத்தல் மீதான பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வெளிவாரி சுயாதீனமான மதிப்பீட்டாளரொருவரினால் மேற்கொள்ளப்பட்ட சொத்துக்களின் மதிப்பீடு அல்லது சொத்துக்களினது மதிப்பீட்டின் தற்போதைய உள்ளக மதிப்பீடு.<br>(இ) மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு:<br>• அதே வங்கியுடனான ஈடாகவும்;<br>• கடனின் நோக்கம் வதிவிடத்திற்கான நோக்கங்களுக்குமாக இருக்குமிடத்து;<br>முதலாந்தர ஈடுகள் தவிர்ந்த ஈடுகள் அதே இடர்நேர்வு நிறைகளுக்கு தகைமைபெறும். | |
| 20.3.1.9.2.0 | **ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதன நோக்கங்களுக்கு தகைமைபெறாத கோரல்கள்**<br>மேலே தரப்பட்டுள்ள பிரமாணங்களைப் பூர்த்திசெய்யாது செயற்படுகின்ற கோரல்கள் | 100 |

ஒப்பம்

**பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்**
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

**2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கச் சுற்றறிக்கை** 2021 சனவரி 25

**இலங்கை கணக்கீட்டு நியமம் - இ.நி.அ.நியமம் 9: நிதியியல் சாதனங்களைப் பின்பற்றுவது தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட வழிகாட்டல்கள் மீதான 2018ஆம் ஆண்டின் 04ஆம் இலக்கச் சுற்றறிக்கைக்கான திருத்தங்கள்**

இலங்கை மத்திய வங்கி தற்போது காணப்படுகின்ற விதிவிலக்கான சூழ்நிலை, நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மீதான பிந்திய வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் இலங்கை கணக்கீட்டு நியமம் - இ.நி.அ.நியமம் 9: நிதியியல் சாதனங்களை உரிமம்பெற்ற வங்கிகள் பின்பற்றுவது தொடர்பில் நிலையான நடவடிக்கை முறைகளை நிறுவுகின்ற நோக்கம் என்பனவற்றினைப் பரிசீலனையில் கொண்டு, இலங்கை கணக்கீட்டு நியமம் - இ.நி.அ.நியமம் 9: நிதியியல் சாதனங்கள் இனைப் பின்பற்றுவது தொடர்பான வழிகாட்டல்கள் மீது விடுக்கப்பட்ட 2018ஆம் ஆண்டின் 04ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் இணைப்பு ஐ இற்கு இத்தால் திருத்தங்களை விடுக்கிறது.

வழிகாட்டல் 2.5(இ) இனை வழிகாட்டல் 2.5(ஆ) இனை உடனடுத்து பின்வருமாறு உட்புகுத்துதல் வேண்டும்.

2.5(இ) எவ்வாறெனினும் 2021ஆம் ஆண்டிற்கான எதிர்பார்க்கப்படும் இழப்புக்களைக் கணிக்கும் போது 10 சதவீதம் கொண்ட இழப்புக்களை ஏற்படுத்திய தவணை தவறுகையினைப் பிரயோகிப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றன.

**வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர்**

**2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கச் சுற்றறிக்கை** 2021 மாச்சு 10

**பயணிகள் போக்குவரத்துத் துறையிலுள்ள வியாபாரங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் பெறப்பட்ட குத்தகை வசதிகளுக்கான சலுகைகள்**

தற்பொழுது காணப்படும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக பயணிகள் போக்குவரத்துத் துறையில் ஈடுபட்டுள்ள வியாபாரங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் எதிர்நோக்கப்படும் சவால்களை ஈடுசெய்யும் நோக்குடன், இலங்கை மத்திய வங்கி உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் (இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பிடப்படும்) பயணிகள் போக்குவரத்துப் பணிகளில் (இதனகத்துப் பின்னர் திட்டம் எனக் குறிப்பிடப்படும்) ஈடுபட்டுள்ள கொவிட்-19இனால் பாதிக்கப்பட்டிருக்கும் வியாபாரங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் பெறப்பட்ட குத்தகை வசதிகளுக்காக கீழே குறிப்பிடப்பட்டவாறு 2021 ஏப்பிறல் 1ஆம் நாளிலிருந்து ஆறுமாத காலப்பகுதிக்கு சலுகைகளை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறது.

இதற்கமைய, இச்சுற்றறிக்கையானது, அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கிடையேயும் நிலையானதொரு தன்மையினை ஏற்படுத்தும் விதத்தில் திட்டத்திற்குக் காத்திரமான தன்மையினை வழங்குவதற்காக விடுக்கப்படுகிறது.

1. **குத்தகைத் தவணைகளைப் பிற்போடும் காலம்**

1.1 உரிமம்பெற்ற வங்கிகள் தகைமையுடைய கடன்பாட்டாளர்களினால் எதிர்நோக்கப்படும் நிதியியல் இடர்ப்பாடுகளைப் பரிசீலனையில் கொண்டு 2021 ஏப்பிறல் 01 இலிருந்து ஆரம்பிக்கும் விதத்தில் 6 மாத காலத்தினை விஞ்சாததொரு காலப்பகுதிக்கு அல்லது ஏற்புடைத்தானவிடத்து குறைவானதொரு காலப்பகுதிக்குப் பிற்போடுதல் வேண்டும்.

1.2 குத்தகை தவணையினை (மூலதனம் மற்றும் வட்டி) பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளரின் கோரிக்கை மீது பிற்போடலாம்.

2. **விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி**

2.1 தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் 2021 ஏப்பிறல் 19 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ குத்தகை தவணைகளை பிற்போடுவதற்கான கோரிக்கையினை எழுத்து மூலமோ அல்லது இலத்திரனியல் முறை மூலமோ விடுத்தல் வேண்டும். உரிமம்பெற்ற வங்கிகள் விரைவான முறையில் சலுகைகள், விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி, விண்ணப்பங்களின் படிவம் போன்றவற்றை தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கு அச்சிடப்பட்ட வடிவில் அத்துடன் மின்னஞ்சல் மற்றும் குறுந்தகவல் உட்பட இலத்திரனியல் முறையில் அறிவித்தல் வேண்டும்.

2.2 2021 ஏப்பிறல் 19ஆம் திகதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் தொடர்பில், அத்தகைய கோரிக்கையினைச் செய்வதில் காணப்பட்ட தாமதத்திற்கான காரணங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருப்பின் உரிமம்பெற்ற வங்கிகள் அதனை ஏற்றுக்கொள்ளலாம்.

3. **தகைமையுடைய கடன்பாட்டாளர்கள்**

3.1 பொதுமக்கள் பயணிகள் போக்குவரத்தினை வழங்குவதில் ஈடுபட்டுள்ள வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்கள், பாடசாலைப் போக்குவரத்துப் பணிகள், அலுவலகப் போக்குவரத்துப் பணிகள், முச்சில்லு வண்டிகள் உட்பட ரக்சி போன்ற தனியார்

பயணிகள் போக்குவரத்துக்கள் மற்றும் சுற்றுலாத்துறைக்கு பயணிகள் போக்குவரத்துப் பணிகளை வழங்குபவர்கள் ஆகியோர்.

3.2 உரிமம்பெற்ற வங்கிகள் மேலே 3.1இல் குறிப்பிடப்பட்ட துறைகளுக்குப் பயணிகள் போக்குவரத்தினை வழங்குவதற்கு ஊர்திகள் பயன்படுத்தப்பட்டமையினை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு தகைமையுடைய கடன்பாட்டாளர்களைக் கேட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

**4. தகைமையுடைய கொடுகடன் வசதிகள்**

மேலேயுள்ள பந்தி 3இன் கீழ் குறிப்பிடப்பட்ட தகைமையுடைய கடன்பாட்டாளர்களினால் பெறப்பட்ட 2021 மாச்சு 31இல் உள்ளவாறான சட்ட இசைவுத்தாமதத்தின் கீழான குத்தகை வசதிகள் உட்பட செயற்படுகின்ற குத்தகை வசதிகள்.

**5. சலுகைகளை சீரமைத்தல்**

5.1 குத்தகை வசதிகளின் தற்போதுள்ள காலப்பகுதியை நீடித்தல்

(அ) உரிமம்பெற்ற வங்கிகள் பிற்போடுவதற்கு தகைமையுடைய குத்தகை வசதிகளின் தற்போதுள்ள காலத்தினை, தொடர்பான பிற்போடல் காலத்தினால் நீடிக்கலாம்.

(ஆ) உரிமம்பெற்ற வங்கிகள் பிற்போடப்பட்ட காலப்பகுதிக்குள் செலுத்தப்பட வேண்டிய குத்தகை தவணைப் பணத்தின் மீது மாத்திரம், 2021 ஏப்பிறல் 01 அன்று கிடைக்கத்தக்க 364 நாட்கள் திறைசேரி உண்டியலுக்கான மிகப் பிந்திய ஏல வீதத்துடன் ஆண்டிற்கு 1 சதவீதத்தினை கூட்டிய வீதத்தினை விஞ்சாத வீதத்தில் வட்டி வீதமொன்றினை விதிக்கலாம்.

(இ) அத்தகைய வட்டி வீதத்தினை இக்காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய ஏற்கனவேயுள்ள குத்தகையுடன் சேர்த்து 2023 ஏப்பிறலிலிருந்து அறவிட்டுக் கொள்ளுதல் வேண்டும். குத்தகை வசதியின் எஞ்சியுள்ள காலம் 2023 ஏப்பிறலுக்கு முன்னர் முடிவடைகின்ற விடயத்தினைப் பொறுத்தவரை, நிதியியல் நிறுவனங்கள் குத்தகை வசதியின் எஞ்சியுள்ள காலம் நிறைவடையும் போது அத்தகைய வட்டியினை அறவிட்டுக் கொள்ளத் தொடங்கலாம்.

(ஈ) தற்போதுள்ள குத்தகை வசதியின் எஞ்சியுள்ள காலம் முடிவடைந்ததும், கடன்பாட்டாளர்கள் மேலே பந்தி 5.1(அ)இல் குறிப்பிடப்பட்ட பிற்போடப்பட்ட தவணைகளின் மீள்கொடுப்பனவுகளை ஆரம்பித்தல் வேண்டும்.

**5.2 சட்ட இசைவுத்தாமதத்தின் போது செலுத்தப்பட வேண்டிய தொகையினை அறவிடல்**

(அ) பள்ளிக்கூடங்கள் (அநேகமான போக்குவரத்து பணிகளை வழங்குவோர் மாதாந்த கொடுப்பனவுகளை தடங்கலின்றி தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்கின்றனர்), அலுவலகங்கள், விமானநிலையம் போன்றன மீளத்திறக்கப்பட்டமையின் காரணமாக அரச மற்றும் தனியாள் போக்குவரத்து படிப்படியாக வழமைக்குத் திரும்புகின்றமை, உரிமம்பெற்ற வங்கிகள் மீதான படுகடன் சட்ட இசைவுத்தாமதம் நீடிக்கப்பட்டமையின் சாதகமான தாக்கம் மற்றும் தற்போது இடம்பெற்று வருகின்ற தடுப்பு மருந்து நிகழ்ச்சித்திட்டம் என்பனவற்றினைப் பரிசீலனையில் கொண்டு, 2019 ஏப்பிறல் 1 இலிருந்து 2020 மாச்சு 31 வரையிலும் 2020 ஏப்பிறல் 01 இலிருந்து 2020 செத்தெம்பர் 30 வரையிலும் 2020 ஒத்தோபர் 01 இலிருந்து 2021 மாச்சு 31 வரையிலுமான காலப்பகுதியில் (இதனகத்துப் பின்னர் சட்ட இசைவுத்தாமதம் எனக் குறிப்பிடப்படும்) வழங்கப்பட்ட சட்ட இசைவுத்தாமதம் தொடர்பில் செலுத்தப்பட வேண்டிய தவணைப் பணத்தினை, ஏற்புடைத்தான விதத்தில் மேலே பந்தி 5.1(அ)இல் குறிப்பிடப்பட்ட தற்போதுள்ள குத்தகை வசதியின் பிற்போடப்பட்ட காலப்பகுதியில் அறவிடத் தொடங்குதல் வேண்டும்.

(ஆ) தற்போதுள்ள குத்தகை வசதியின் பிற்போடப்பட்ட காலம் (மேலேயுள்ள பந்தி 5.1(அ) இல் குறிப்பிடப்பட்டவை) முடிவடைந்ததும் சட்ட இசைவுத்தாமதத்தின் மீது செலுத்தப்பட வேண்டிய தவணைப் பணத்தின் மீள்கொடுப்பனவினை தற்போதுள்ள குத்தகை வசதியின் பிற்போடப்பட்ட காலம் உட்பட எஞ்சியுள்ள காலப்பகுதி வரை பிற்போடப்படுதல் வேண்டும்.

(இ) சட்ட இசைவுதாமதத்தின் மீது செலுத்தப்பட வேண்டிய தவணைப் பணத்தின் அத்தகைய பிற்போடப்பட்ட காலப்பகுதிக்காக, 2021 ஏப்பிறல் 01ஆம் திகதியில் கிடைக்கத்தக்கதாகவுள்ள 364 நாள் திறைசேரி உண்டியல்களுக்கான பிந்திய ஏல வீதத்துடன் ஆண்டொன்றிற்கு 1 சதவீதத்தினை கூட்டிய வீதத்தினை விஞ்சாததொரு வீதத்தில் வட்டியை ஒன்றுசேர்க்கலாம்.

(ஈ) அத்தகைய வட்டியினை, மேலே 5.1(ஆ) மற்றும் (இ)இல் குறிப்பிடப்பட்ட வட்டியையும் தற்போதுள்ள குத்தகை வசதி மீதான தவணைப் பணம் மற்றும் சட்ட இசைவுத்தாமதத்துடன் தொடர்பான பிற்போடப்பட்ட தவணைப் பணம் என்பனவற்றுடன் சேர்த்து, ஏற்புடைத்தானதொரு விதத்தில் பூரணமாகக் கொடுப்பனவு செய்ததன் பின்னர், உடனடியாக அறவிடுதல் வேண்டும்.

(உ) தற்போதுள்ள குத்தகை வசதியின் பிற்போடப்பட்ட காலம் உட்பட, எஞ்சியுள்ள காலம் முடிவடைந்ததும் கடன்பாட்டாளர்கள் மேலேயுள்ள பந்தி 5.2(ஆ) இல் குறிப்பிடப்பட்ட சட்ட இசைவுத்தாமதம் தொடர்பான பிற்போடப்பட்ட தவணைப் பணத்தின் மீள்கொடுப்பனவுகளைத் தொடங்குதல் வேண்டும்.

5.3 சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டியவை மற்றும் பிற்போடப்பட்ட காலப்பகுதிக்கான வட்டி என்பன

உட்பட பிற்போடப்பட்ட காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய குத்தகை தவணைப் பணத்தினை உரிய காலத்திற்கு முன்னர் தீர்ப்பனவு செய்வதற்கு கடன்பாட்டாளர் எழுத்து மூலமான கோரிக்கையொன்றினை சமர்ப்பிப்பாராயின் உரிமம்பெற்ற வங்கிகள் அத்தகைய கோரிக்கைக்கு வசதியளிக்கலாம். அத்தகைய விடயத்தில் உரிமம்பெற்ற வங்கிகளும் கடன்பாட்டாளரும் சீரமைப்பு, வட்டி வீதம் மற்றும் காலம் தொடர்பில் உடன்பாடொன்றிற்கு வருதல் வேண்டும். வட்டி வீதம் தற்போதைய சந்தை வீதத்திற்கு நிகரான வீதத்தில் இருத்தல் வேண்டும்.

5.4 உரிமம்பெற்ற வங்கிகள், கடன்பாட்டாளரின் கோரிக்கையின் மீது கடன்பாட்டாளருக்கு வேறு ஏதேனும் தேர்வுகளை வழங்கலாம். எனினும், கடன்பாட்டாளருக்கான ஒட்டுமொத்த நன்மைகள் இச்சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்படுகின்ற நன்மைகளிலும் பார்க்கக் குறைவானதாக இருக்கக்கூடாது. அத்தகைய விடயத்தில், உரிமம்பெற்ற வங்கிகள் இச்சுற்றறிக்கையில் முன்மொழியப்பட்ட சீரமைப்பு உட்பட அனைத்துத் தேர்வுகளின் கீழுமான வட்டி வீதக் கணிப்புக்களை, அத்தகைய சலுகைகளுக்கு ஒப்புதலளிப்பதற்கு முன்னர் தெளிவாக விளக்குதல் வேண்டும்.

5.5 உரிமம்பெற்ற வங்கிகள் ஒன்றுசேர்ந்த தண்ட வட்டி வீதத்தினையும் 2021 ஏப்பிறல் 01 வரை செலுத்தப்படாதவை ஏதுமிருப்பின் அவற்றையும் தள்ளுபடி செய்தல் வேண்டும். பிற்போடப்பட்ட காலப்பகுதியில் தண்ட வட்டி வீதங்களை ஒன்றுசேர்க்கவோ விதிக்கவோ கூடாது.

5.6 சலுகைகளை வழங்குவது தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகள் மிகையான கட்டணங்களையோ விதிப்புக்களையோ மேற்கொள்ளக்கூடாது.

5.7 கோரிக்கைகளை நிராகரிப்பது தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகள் அத்தகைய நிராகரிப்பிற்கான காரணங்களைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

**6. குத்தகை தவணைப் பணத்தினைப் பிற்போட்டமை தொடர்பான கணக்கீட்டுப் பரிசீலனைகள்**

உரிமம்பெற்ற வங்கிகள் குத்தகை தவணைப் பணத்தினைப் பிற்போட்டமை தொடர்பான கணக்குகளை இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படியும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக நிதியியல் அறிக்கையிடல் சிக்கல்கள் தொடர்பில் இலங்கை கணக்கீட்டு நியமத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் மேலதிக வழிகாட்டிகளுக்கேற்பவும் பரிசீலித்தல் வேண்டும். இது தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு மேலதிக வழிகாட்டல்கள்/ தெளிவுபடுத்தல்கள் தேவைப்படுமிடத்து இலங்கை கணக்கீட்டு நியமங்களையும் கணக்காய்வாளர்களையும் நாடலாம்.

**7. அறிக்கையிடும் தேவைப்பாடு**

உரிமம்பெற்ற வங்கிகள் அவற்றின் கடன்பாட்டாளர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட குத்தகை தவணைப் பணத்தினைப் பிற்போட்டமை தொடர்பான விபரங்களை 2021 மே 01ஆம் நாளிலிருந்து ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு மாதத்தின் 30ஆம் திகதியிலுள்ளவாறு 15 வேலைநாட்களுக்குள் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டுள்ள படிவத்தின்படி அறிக்கையிடுதல் வேண்டும்.

ஒப்பம்
பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

இப்பணிப்புரையின் இணைப்பு I இனை https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/bsd_circular_no_3_of_2021_t.pdf என்ற வெப்தளத்தில் பார்வையிடலாம்.

**2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை** 2021 மாச்சு 18

**உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியினால் இலங்கை நாட்டிற்கான பன்னாட்டு முறிகளில் செய்யப்படும் முதலீடுகள்**

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76ஜே(1)ஆம் பிரிவுகளினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளுக்கிணங்க விடுக்கப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கி, வெளிநாட்டுச் செலாவணி வீதத்தின் மீதான அழுத்தத்தினை தளர்த்தும் நோக்குடனும் வங்கிகளினால் செய்யப்படும் வெளிநாட்டுச் செலாவணியின் வெளிப்பாய்ச்சல்களின் சாத்தியமான/ வாய்ப்பான கணிசமான தொகையினையும் வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மீது இதன் தாக்கத்தினையும் பரிசீலனையில் கொண்டு 2021 மாச்சு 23ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 2021 ஏப்பிறல் 09ஆம் நாள் வரையான காலப்பகுதியில் இலங்கை நாட்டிற்கான பன்னாட்டு முறிகளைக் கொள்வனவு செய்வதனை இடைநிறுத்துமாறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் தேசிய சேமிப்பு வங்கிக்கும் இத்தால் அறிவிக்கிறது.

ஒப்பம்
பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்

**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்கச் சுற்றறிக்கை** 2021 மாச்சு 19

## கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட சுற்றுலாத் தொழில் துறையிலுள்ள வியாபாரங்கள் தனியாட்களுக்கான படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினை நீடித்தல்

தற்பொழுது காணப்படும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக சுற்றுலாத் துறையில் ஈடுபட்டுள்ள வியாபாரங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் எதிர்நோக்கப்படும் சவால்களுக்கு முகம்கொடுக்கும் நோக்குடன், இலங்கை மத்திய வங்கி, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் (இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் என குறிப்பிடப்படும்) 2020 ஓகத்து 26ஆம் திகதியிடப்பட்ட 2020இன் 08ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் கீழ் சுற்றுலாத் துறைக்காக வழங்கப்பட்ட படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தின் கீழே குறித்துரைக்கப்பட்டவாறு 2021 ஏப்பிறல் 1ஆம் நாள் தொடக்கம் மற்றுமொரு ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்குமாறு கோரியிருக்கிறது. எனினும், உரிமம்பெற்ற வங்கிகள் கடன்பாட்டாளரின் கோரிக்கையின் மீது, கடன்பாட்டாளருக்கு ஏதேனும் மேலதிக தெரிவுகளை வழங்கலாமெனினும் அத்தகைய வழியில் கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்படும் ஒட்டுமொத்த நன்மைகள் இச்சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்படும் நன்மைகளை விடக் குறைவானதாக இருக்கக்கூடாது. மேலே குறிப்பிடப்பட்ட நீடிப்பு, நீண்ட கால ஏற்பாடுகளுக்கான முன்மொழிவுகளுடன் கடன்பாட்டாளர்கள் முன்வருவதற்குப் போதுமான நேரத்தினை வழங்கும் பொருட்டு வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, கடன்பாட்டாளர்கள், நீடிக்கப்பட்ட சட்ட இசைவுத்தாமத காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னதாக நீண்ட காலப்பகுதியில் கொடுகடன் வசதிகளை மறுசீரமைப்பதற்காக உரிமம்பெற்ற வங்கிகளுக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க திட்டமொன்றினை சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய திட்டங்கள் உரிமம்பெற்ற வங்கிகளினால் ஒவ்வொரு விடயமாக ஆராய்ந்து மதிப்பீடு செய்யப்படும். இதற்கமைய, இச்சுற்றறிக்கையானது அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளிடையேயும் ஒரே விதமான காத்திரமான தன்மையினை வழங்கும் விதத்தில் விடுக்கப்படுகிறது.

2020ஆம் ஆண்டின் 08ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் பின்வரும் ஏற்பாடுகள் திருத்தப்பட்டிருப்பதுடன் குறிப்பிட்ட சுற்றறிக்கையின் மற்றைய ஏற்பாடுகள் தொடர்ந்தும் மாற்றமின்றியிருக்கும்.

**1. பொதுவான நியதிகளும் நிபந்தனைகளும்**

1.1 படுகடன் சட்ட இசைவுத்தாமதம் 2021 ஏப்பிறல் 1 இலிருந்து 2021 செத்தெம்பர் 30 வரையான மேலுமொரு ஆறு மாத காலப்பகுதிக்கான மூலதனம் மற்றும் வட்டி இரண்டிற்குமான சட்ட இசைவுதாமதத்தினைக் குறிக்கிறது.

1.2 சட்ட இசைவுத்தாமதத்தினைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பும் தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் அத்தகைய சட்ட இசைவுத்தாமதத்தினைப் பெற எதிர்பார்த்திருப்பது பற்றி தொடர்பான உரிமம்பெற்ற வங்கிக்கு 2021 ஏப்பிறல் 19 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கோரிக்கையொன்றை விடுத்தல் வேண்டும். 2021 ஏப்பிறல் 19 இற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஏதேனும் கோரிக்கை தொடர்பில், அத்தகைய கோரிக்கையினைத் தாமதமாக செய்வதற்கான காரணங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியனவாக இருப்பின் அத்தகைய கோரிக்கையினை ஏற்றுக்கொள்ளுமாறு உரிமம்பெற்ற வங்கிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. தகைமையுடைய கடன்களின் மீள்கொடுப்பனவினைத் தீர்ப்பனவு செய்வதற்கு இயலாற்றலுள்ள எவரேனும் கடன்பாட்டாளர்கள் இந்நீடிப்பிற்கான கோரிக்கையினை விடுப்பதற்குப் பதிலாக அத்தகைய கடன் மீள்கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

**2. படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினைச் சீரமைத்தல்**

2.1 உரிமம்பெற்ற வங்கிகள் 2021 ஏப்பிறல் 1 இலிருந்து தொடங்கி 2021 செத்தெம்பர் 30 வரையான சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய மூலதனத்தினையும் வட்டியையும் தவணைக் கடனொன்றிற்கு மாற்றுதல் வேண்டும். உரிமம்பெற்ற வங்கிகள் முன்னர் வழங்கப்பட்ட சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய மூலதனத்தினையம் வட்டியினையும் 2021 ஏப்பிறல் 1 இலிருந்து 2021 செத்தெம்பர் 30 வரையான காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய மூலதனம் மற்றும் வட்டியுடன், சமமான மாதாந்த தவணைக் கடன்கள் நீங்கலாக, ஒன்றுசேர்த்தல் வேண்டும். சட்ட இசைவுத்தாமத காலப்பகுதிக்கான வட்டி வீதம் 7 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

2.2 உரிமம்பெற்ற வங்கிகள் அவ்வாறு மாற்றப்பட்ட கடன்களின் அறவிடலை, நீடிக்கப்பட்ட சட்ட இசைவுத்தாமத காலப்பகுதி முடிவடைந்ததும் தொடங்கலாம்.

2.3 இச்சுற்றறிக்கையின் கீழ் செயற்படும் கடன் வசதிகள் மீது 2021 ஏப்பிறல் 01இல் உள்ளவாறான ஒன்றுசேர்ந்த மற்றும் செலுத்தப்படாத தண்ட வட்டிகள் ஏதுமிருப்பின் அவற்றினை உரிமம்பெற்ற வங்கிகள் தள்ளுபடி செய்யலாம். சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் தண்ட வட்டி வீதங்களை விதிக்கவோ ஒன்றுசேர்க்கவோ கூடாது.

ஒப்பம்
பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்** 2021 ஏப்பிறல் 09

**உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியினால் இலங்கை நாட்டிற்கான பன்னாட்டு முறிகளில் செய்யப்படும் முதலீடுகள்**

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76ஜே(1)ஆம் பிரிவுகளினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளுக்கிணங்க விடுக்கப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கி, வெளிநாட்டுச் செலாவணி வீதத்தின் மீதான அழுத்தத்தினை தளர்த்தும் நோக்குடனும் வங்கிகளினால் செய்யப்படும் வெளிநாட்டுச் செலாவணியின் வெளிப்பாய்ச்சல்களின் சாத்தியமான/ வாய்ப்பான கணிசமான தொகையினையும் வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மீது இதன் தாக்கத்தினையும் பரிசீலனையில் கொண்டு 2021 மாச்சு 23 வரை இலங்கை நாட்டிற்கான பன்னாட்டு முறிகளைக் கொள்வனவு செய்வதனை இடைநிறுத்துமாறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் தேசிய சேமிப்பு வங்கியையும் கேட்டுக் கொள்கிறது.

ஒப்பம்
பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நாணய விதிச் சட்டக் கட்டளை** 2021 ஏப்பிறல் 21

**நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் துறைக்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான முன்னுரிமைத் துறை கடன்வழங்கல் இலக்குகள்**

உள்நாட்டுப் பொருளாதார வளர்ச்சி மற்றும் ஏற்றுமதி வருவாய்களின் நியதிகளில் உயர்ந்த வாய்ப்புக்களைக் கொண்ட பொருளாதார துறைகளை ஊக்குவிப்பதற்கான தேவையினை அங்கீகரிக்கின்ற விதத்தில், பொருளாதாரத்தின் பரந்த அடிப்படையிலான புத்துயிரளிப்பிற்கு வழிவகுக்கின்ற விதத்தில் இலங்கை மத்திய வங்கி, நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையிலுள்ள தனிப்பட்டவர்களுக்கும் வியாபாரங்களுக்கும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினாலும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினாலும் (இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் என குறிப்பிடப்படும்) வழங்கப்பட்ட கொடுகடன் மீது முன்னுரிமைத் துறை கடன்வழங்கல் இலக்கினைப் பின்வரும் விதத்தில் அறிமுகப்படுத்துகிறது.

1. அதிகாரமளித்தல்

1.1 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறு) 101(1)(ஆ) பிரிவின் நியதிகளுக்கிணங்க, நாணயச் சபையானது, வர்த்தக வங்கிகளினால் குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் அதிகரிக்கப்படக்கூடிய கடன்கள் மற்றும் முதலீடுகளின் தொகை எவ்விதத்தில் அதிகரிக்கப்படலாம் என்பது பற்றி காலத்திற்குக் காலம் நிர்ணயிக்கலாம்.

2. முன்னுரிமைத் துறை கடன்வழங்கல் இலக்கு

2.1 உரிமம்பெற்ற வங்கிகள் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையிலுள்ள தனிப்பட்டவர்களுக்கும் வியாபாரங்களுக்கும் கொடுகடன் வசதிகளை வழங்கலாம் என்பதுடன் முன்னைய ஆண்டின் இறுதியில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான கடன்வழங்கலின் வெளிநின்ற இருப்பினை விட ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 20 சதவீதத்திற்குக் குறையாத வளர்ச்சி வீதத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும்.

2.2 சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளிலுள்ள உள்நாட்டு வளர்ச்சி மற்றும் ஏற்றுமதி வருவாய்கள் ஆகிய நியதிகளில் உயர்ந்த வாய்ப்புக்களை எடுத்துக்காட்டிய பின்வரும் பொருளாதார துணைத் துறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்:

(i) உணவு மற்றும் குடிபானம் பதனிடல்;

(ii) மருத்துவப் பயன்பாட்டுப் பொருட்கள் மற்றும் அதனுடன் தொடர்பான உற்பத்திகள்;

(iii) தொலைக் கல்வி வசதிகளை அபிவிருத்தி செய்தல்;

(iv) உள்நாட்டுக் குடிசைக் கைத்தொழில்;

(v) இறப்பர் மற்றும் இறப்பர் உற்பத்திகள்;

(vi) கப்பல் மற்றும் படகு கட்டுதல்;

(vii) அழகுசாதனப்பொருட்கள்;

(viii) பத்திக் மற்றும் கைத்தறி;

(ix) இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள்;

(x) சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு;

(xi) இலத்திரனியல் மற்றும் மின்னியல் கூறுகள்;

(xii) உந்து ஊர்திகள் பொருத்தல்;

(xiii) மருந்தாக்கல் தயாரிப்புக்கள்;

(xiv) புறோசலின், மட்பாண்டம், குசவுத் தொழில்.

3. ஏற்புடைத்தன்மை

3.1 கொடுகடன் வசதிகள் காலக் கடன்கள், குத்தகை, மேலதிகப் பற்றுக்கள் மற்றும் ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகள், இலங்கையிலுள்ள நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையிலுள்ள அனைத்து வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு உரிமம்பெற்ற வங்கிகளினால் வழங்கப்பட்ட இலங்கை ரூபா மற்றும் வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்டவை உட்பட வர்த்தக நிதி வசதிகளை உள்ளடக்குகின்றன.

3.2 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான பாசல் III இன் கீழான மூலதனத் தேவைப்பாடுகள் தொடர்பான 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளைத் திருத்துவது தொடர்பில் அறிமுகப்படுத்தப்பட்ட 2020ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தில் வழங்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் வரைவிலக்கணத்துடன் இசைந்து செல்லும் விதத்தில், இக்கட்டளைகளின் நோக்கத்திற்காக, ரூ.1,000 மில்லியனை விஞ்சாத ஆண்டுப் புரள்வினைக் கொண்டுள்ள தொழில்முயற்சிகள் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் எனக் கருதப்படல் வேண்டும்.

4. விலக்கல்கள்

4.1 நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையிலுள்ள தனிப்பட்டவர்களுக்கும் வியாபாரங்களுக்கும் உரிமம்பெற்ற வங்கிகளினால் வழங்கப்பட்ட அடகுபிடித்தலுக்கான முற்பணங்களும் மேலே 2.1இல் உள்ள முன்னுரிமைத் துறை கடன்வழங்கல் இலக்கிலிருந்து விலக்கப்படல் வேண்டும்.

5. கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல்

5.1 இக்கட்டளைகளின் கீழ், கொடுகடன் வசதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டதும் உரிமம்பெற்ற வங்கிகள் தொடர்ச்சியான கண்காணிப்புப் பொறிமுறையொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5.2 உரிமம்பெற்ற வங்கிகள் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான கடன்வழங்கலின் விபரங்கள் பற்றி இணைப்பு I இல் உள்ள படிவத்தில், 2021 ஏப்பிறல் 01 இலிருந்து தொடங்குகின்ற ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலுமிருந்து 30 நாட்களுக்குள் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களப் பணிப்பாளருக்கும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கும் அறிக்கையளித்தல் வேண்டும்.

பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்

**நாணயச் சபையின் தலைவரும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

இப்பணிப்புரையின் இணைப்பு **I** இனை https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/bsd_monetary_law_act_order_1_of_2021_t.pdf என்ற வெப்தளத்தில் பார்வையிடலாம்.

**2021ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப்பணிப்புரைகள்** 2021 ஏப்பிறல் 23

**உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியினால் இலங்கை நாட்டிற்கான பன்னாட்டு முறிகளில் செய்யப்படும் முதலீடுகள்**

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76ஜே(1)ஆம் பிரிவுகளினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளுக்கிணங்க விடுக்கப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கி, வெளிநாட்டுச் செலாவணி மீதான அழுத்தத்தினைத் தளர்த்தும் நோக்குடனும் வங்கிகளினால் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டுச் செலாவணியின் வெளிப்பாய்ச்சல்களின் சாத்தியமான/ வாய்ப்பான கணிசமான தொகையையும் வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மீது இதன் தாக்கத்தினையும் பரிசீலனையில் கொண்டு இலங்கை நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் கொள்வனவினை மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்துமாறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் தேசிய சேமிப்பு வங்கியையும் கேட்டுக் கொள்கிறது.

ஒப்பம்
பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2021ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்** 2021 ஏப்பிறல் 25

**உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டுச் செலாவணியின் முன்னோக்கிய விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள்**

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) பிரிவினால் உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளுக்கிணங்க விடுக்கப்படுகிறது.

வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்படும் மிகையான தளம்பல்களையும் வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மீதான தாக்கத்தினையும் தவிர்க்கும் அவசியத்தினைக் கருத்திற் கொண்டு, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் பின்வரும் விடயங்கள் நீங்கலாக, உடன் திகதிக்கு அப்பாலான பெறுமதித் திகதியுடன் கூடிய வெளிநாட்டுச் செலாவணியின் முன்னோக்கிய ஒப்பந்தங்களை மேற்கொள்வதிலிருந்தும் மறுஅறிவித்தல்வரை விலகியிருத்தல் வேண்டும்.

(i) ஏற்றுமதியாளர்களிடமிருந்து கிடைக்கத்தக்கவை உட்பட, அவர்களது வாடிக்கையாளர்களிடமிருந்தான வெளிநாட்டுச் செலாவணியின் முன்னோக்கிய கொள்வனவு.

(ii) இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட, வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளிலிருந்து தோன்றுகின்ற வெளிநாட்டுச் செலாவணி வெளிப்படுத்துகை இடர்நேர்வுகளிலிருந்து இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்ற உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளையும் பாதுகாக்கும் பொருட்டு, அவற்றின் வெளிநாட்டுச் செலாவணிக் கடன்பாடுகளின் மீது பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடுகளுக்காக வசதியளித்தல்.

(iii) இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளிலிருந்து தோன்றுகின்ற வெளிநாட்டுச் செலாவணி வெளிப்படுத்துகை இடர்நேர்வுகளிலிருந்து கம்பனி வாடிக்கையாளர்களைப் பாதுகாக்கும் பொருட்டு அவர்களின் வெளிநாட்டுச் செலாவணிக் கடன்பாடுகளின் மீது பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடுகளுக்கு வசதியளித்தல்.

(iv) கொடுக்கல்வாங்கல்களின் நம்பகத்தன்மையினைச் சரிபார்த்ததன் பின்னர் வாடிக்கையாளர்களிடமிருந்து தெரிவிக்கப்படும் கோரிக்கையினை அடிப்படையாகக் கொண்டு, வரலாற்று வீதங்களில் வாடிக்கையாளரின் ஏற்கனவேயுள்ள முன்னோக்கிய/ பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தங்களின் பெறுமதித் திகதியை திருத்துதல்/ நீடித்தல்.

(v) தனியொரு இணைத்தரப்பினருடன் (அதாவது இரண்டு வங்கிகளுக்குமிடையில் மாத்திரம்) வங்கிகளுக்கிடையிலான முன்னோக்கிய மற்றும் பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களுக்குள் நுழைதல்.

(vi) முன்னோக்கிய குறுக்கு நாணய கொடுக்கல்வாங்கல்களுக்குள் நுழைதல்.

ஒப்பம்
பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2021ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்** 2021 மே 25

**உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணிக் கடன்பாடுகள் மீதான 2018ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்**

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை, உண்மைப் பொருளாதாரத்தில் மூலதன உருவாக்கத்தினைத் தூண்டும் தேவையினையும் நாட்டின் வெளிநாட்டு நாணயத் தேவைப்பாடுகளைத் துணைநிரப்பு செய்வதனையும் பரிசீலனையில் கொண்டு, உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் தொடர்பான 2018ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்குப் பின்வரும் திருத்தங்களை இத்தால் விடுக்கிறது.

இதற்கமைய, இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பிடப்படும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும் பின்வரும் விடயம் அறிவிக்கப்படுகிறது:

1. உடனடியாக நடைமுறைக்குவரும் விதத்தில், ஓராண்டு காலப்பகுதிக்கு, தற்போதுள்ள குறுங்கால வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் வரையறை இரத்துச் செய்யப்படுகின்ற அதேவேளையில், பொருத்தமான இடர்நேர்வு தணிப்பு நடவடிக்கை முறைகளினூடாக, அத்தகைய வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் வெளிநாட்டு நாணய இடர்நேர்வுகளில் எந்தவொரு மிகையான உயர்வினையும் ஏற்படுத்தாது என்பதனை உரிமம்பெற்ற வங்கிகள் உறுதிப்படுத்துவதற்கு உட்பட்டும் உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் தொடர்பில் 2018இன் 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்ட பணிப்புரை 9.1இன் விபரங்களை அத்தகைய கடன்பாடுகளுக்கு முன்னர் அறிவித்தல் வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டும் தற்போதைய மொத்த வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் வரையறையினை 10 சதவீதம் வரைக்கும் பேணலாம்.
2. உரிமம்பெற்ற வங்கிகள் எடுத்துக்காட்டப்பட்ட பணிப்புரைகளின் மற்றைய அனைத்து பணிப்புரைகளுக்கும் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.
3. உரிமம்பெற்ற வங்கிகள் ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலுள்ளவாறான மொத்த வெளிநாட்டு நாணய கடன்பாடுகளின் நிலைமையினை இணைக்கப்பட்டுள்ள படிவத்திலுள்ளவாறு 2021 யூன் 30ஆம் நாள் தொடக்கம் 15 வேலை நாட்களுக்குள் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு அறிக்கையிடல் வேண்டும்.

பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

இப்பணிப்புரையின் இணைப்பு ஐ இனை https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/Banking_Act_Directions_No_8_of_2021_t.pdf என்ற வெப்தளத்தில் பார்வையிடலாம்.

**2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்கச் சுற்றறிக்கை** 2021 மே 25

**கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான சலுகைகள்**

இலங்கையில் கொவிட்-19இன் மூன்றாவது அலையின் தோற்றத்துடன் தொடர்பான கரிசனைக்குரிய தரப்பினர்களிடமிருந்தும் அரச அதிகாரிகளிடமிருந்தும் இலங்கை மத்திய வங்கியினால் பெறப்பட்ட கோரிக்கைகளைப் பரிசீலனையில் கொண்டு, பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்கள்/ வாடிக்கையாளர்களுக்கும் குறிப்பிட்ட சலுகைகள் வழங்கப்படுகின்றன. இதற்கமைய கொவிட்-19இன் மூன்றாவது அலை காரணமாக வியாபாரங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் எதிர்நோக்கப்பட்ட சவால்களை ஈடுசெய்யும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கி கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் (இதனகத்துப் பின்னர் திட்டம் எனக் குறிப்பிடப்படும்) பின்வரும் சலுகைகளை வழங்குமாறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் (இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பிடப்படும்) கேட்டுக் கொள்கின்றது. மேலும், உரிமம்பெற்ற வங்கிகள் கொவிட்-19இன் மூன்றாவது அலையின் காரணமாக பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் அவர்களது கோரிக்கையின் மீது மேலதிக சலுகைகளை, இச்சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்படும் நன்மைகளிலும் பார்க்க குறையாத விதத்தில் ஒட்டுமொத்த நன்மைகளாக வழங்கலாம். இதற்கமைய வியாபாரங்கள்/ வருமான உருவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட தற்போதைய இடையூறுகளினால் பாதிக்கப்பட்ட வங்கிகளின் கடன்பாட்டாளர்கள் அவர்களது கடன்களை உரிய முறையில் திருப்பிச் செலுத்தும் விதத்தில் அவர்கள் மீதான சுமையினைத் தளர்த்தும் நோக்குடன் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளிடையேயும் ஒரேவிதமான தன்மையினை இத்திட்டம் தொடர்பில் ஏற்படுத்துவதற்காக இச்சுற்றறிக்கை விடுக்கப்படுகிறது.

1. 2021 மே 15ஆம் நாளன்று செயற்படும் வகையில் காணப்படும் தற்போதுள்ள கொடுகடன் வசதிகளைப் பிற்போடுதல் அல்லது மறுசீரமைத்தல்

   (அ) கொவிட்-19இன் மூன்றாவது அலையினால் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களின் தற்போதுள்ள கொடுகடன் வசதிகளின் மூலதனம், வட்டி அல்லது இரண்டினையும் அறவிடுவதனை 2021 ஓகத்து 31 வரையான காலப்பகுதியில், வேலையிழப்பு, வருமானம்/ சம்பளங்கள் அல்லது விற்பனைகளில் ஏற்பட்ட குறைப்பு, வியாபாரம் மூடப்பட்டமை போன்ற தகைமையுடைய கடன்பாட்டாளர்களினால் எதிர்நோக்கப்பட்ட நிதியியல் இடர்ப்பாடுகளைப் பரிசீலனையில் கொண்டு, ஒவ்வொரு விடயங்களாக ஆராய்ந்து பிற்போடுதல் வேண்டும்.

(ஆ) தகைமையுடைய கடன்பாட்டாளர்களின் நிதியியல் இடர்ப்பாடுகள் மற்றும் மீள்கொடுப்பனவு இயலாற்றல் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு ரூபாவில் அல்லது வெளிநாட்டு நாணயங்களில் வழங்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கும் கூடுதலான தற்போதுள்ள கொடுகடன் வசதிகளுக்கு மூலதனம், வட்டி அல்லது இரண்டினையும் பிற்போடும் வசதியை வழங்குதல் வேண்டும்.

(இ) மேற்குறிப்பிட்ட பிற்போடலுக்காகப் பரிசீலனையில் கொள்ளப்பட்ட ஏதேனும் ரூபா வசதிகளைப் பொறுத்தவரையில், பிற்போடப்பட்ட காலப்பகுதிக்காக 2021 மே 19ஆம் நாளன்று உள்ளவாறான 364 நாள் திறைசேரி உண்டியலின் ஏல வீதத்துடன் ஆண்டிற்கு 1 சதவீதத்தினைக் கூட்டிய வீதத்தினை விஞ்சாத விதத்தில் (அதாவது 5.18 சதவீதம் + 1 சதவீதம் = ஆண்டிற்கு 6.18 சதவீதம்) உரிமம்பெற்ற வங்கிகள் வட்டி வீதமொன்றினை விதிக்கலாம் என்பதுடன் பிற்போடப்பட்ட தொகைக்கு மாத்திரமே அவ்வாறு விதிக்கலாம். வெளிநாட்டு நாணயக் கடன்களைப் பொறுத்தவரை, உரிமம்பெற்ற வங்கிகள் தற்பொழுது நிலவுகின்ற குறைந்த வட்டி வீதத்தினைப் பரிசீலனையில் கொண்டு சலுகை ரீதியான வட்டி வீதமொன்றினை விதிக்கலாம்.

(ஈ) மாற்று ஏற்பாடொன்றாக, உரிமம்பெற்ற வங்கிகள் கடன்பாட்டாளரின் மீள்கொடுப்பனவு இயலாற்றலையும் ஏற்றுக்கொள்ளத்தக்க மீளெழுச்சித் திட்டத்தினையும் பரிசீலனையில் கொண்டு தற்போதுள்ள கொடுகடன் வசதிகளை நீண்ட காலப்பகுதியொன்றிற்கு மறுசீரமைத்துக் கொள்ளலாம். இவ்விடயத்தில் உரிமம்பெற்ற வங்கியும் கடன்பாட்டாளரும் தற்போது நிலவுகின்ற குறைந்த வட்டி வீதங்களைப் பரிசீலனையில் கொண்டு வட்டி வீதமொன்றிற்கு இணங்கிக் கொள்ளலாம்.

(உ) உரிமம்பெற்ற வங்கிகள் 2021 ஓகத்து 31 வரையான காலப்பகுதியில் தொழிற்படு மூலதனம், அடகுபிடித்தல், தற்காலிக மேலதிகப் பற்று, குறுங்கால வர்த்தக நிதியிடல் வசதிகள் போன்றன உட்பட, ஆனால் இவ்வசதிகளுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்படாத விதத்தில் சுழலும் கொடுகடன்களின் தவணைத் திகதிகளை நீடிக்கலாம். உரிமம்பெற்ற வங்கிகள் பிற்போடப்பட்ட காலப்பகுதிக்கு மாத்திரம், பிற்போடப்பட்ட தொகைக்கு மேலே 1(இ)இல் குறிப்பிடப்பட்டவாறான வட்டியை விதிக்கலாம்.

(ஊ) சலுகைக் காலத்தில் அதாவது 2021 மே 15 இலிருந்து 2021 ஓகத்து 31 வரையான காலப்பகுதியில் தண்ட வீதங்கள் ஒன்றுசேர்க்கப்படவோ அல்லது விதிக்கப்படவோகூடாது.

(எ) உரிமம்பெற்ற வங்கிகள், தற்பொழுது காணப்படும் பயணத் தடைகள் காரணமாக பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளரிடமிருந்து கடன்களின் மீள்கொடுப்பனவுகளை ஒரு சில நாட்களினால் (உயர்ந்தபட்சம் 10 வேலைநாட்கள்) தாமதிக்குமாறு விடுக்கப்படும் கோரிக்கைகளை, அத்தகைய வசதிகளைப் பிற்போடாமல் அல்லது மறுசீரமைப்புச் செய்யாமல் அனுமதிக்கலாம். உரிமம்பெற்ற வங்கிகள் அத்தகைய தாமதத்திற்காக மேலதிக வட்டியையோ அல்லது வேறு ஏதேனும் விதிப்புக்களையோ அறவிடக்கூடாது.

(ஏ) 2021 மாச்சு 13ஆம் திகதியில் விடுக்கப்பட்ட 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழ் குத்தகை மீள்கொடுப்பனவுகளைப் பிற்போடும் வசதி அல்லது 2021 மாச்சு 19ஆம் திகதியில் விடுக்கப்பட்ட 2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழான சட்ட இசைவுத்தாமதம் என்பவற்றைத் தற்பொழுது அனுபவிக்கின்ற கடன்பாட்டாளர்கள் மேலே வழங்கப்படும் சலுகைகளுக்கு தகைமையுடையவராகார்.

2. 2021 மே 15ஆம் நாளன்று செயற்படா வகையிலுள்ள கொடுகடன் வசதிகளுக்கான சலுகைகள்

(அ) உரிமம்பெற்ற வங்கிகள் 2021 மே 15ஆம் நாளன்று உள்ளவாறான தற்போதுள்ள செயற்படாக் கடன் வசதிகள், கடன்பாட்டாளரின் மீள்கொடுப்பனவு இயலாற்றல் மற்றும் ஏற்றுக்கொள்ளத்தக்க மீளெழுச்சித் திட்டம் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு நீண்ட காலப்பகுதிக்கு மீள்அட்டவணைப்படுத்தலாம். இவ்விடயத்தில், உரிமம்பெற்ற வங்கியும் கடன்பாட்டாளரும் வட்டி வீதம் உட்பட நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்குதல் வேண்டும்.

(ஆ) உரிமம்பெற்ற வங்கிகள், 2020 ஏப்பிறல் 1ஆம் நாளிலிருந்து 2021 மே 15ஆம் நாள் வரையான காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த தண்ட வட்டி வீதங்களை, அத்தகைய வசதிகள் இத்திட்டத்தின் கீழ் மீள்அட்டவணைப்படுத்தலுக்குப் பரிசீலனைக்கு கொள்ளப்பட்டுள்ளமை பற்றிய நிபந்தனைக்குட்பட்டு தள்ளுபடி செய்யலாம் அல்லது விதிக்கலாம்.

(இ) உரிமம்பெற்ற வங்கிகள் 2020 ஏப்பிறல் 01 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ செயற்படாக் கடனாக வகைப்படுத்தப்பட்டிருக்கும் கொடுகடன் வசதிகளுக்கெதிராக 2021 ஓகத்து 31 வரை அனைத்து வகையான அறவிடல் நடவடிக்கைகளையும் இடைநிறுத்துதல் வேண்டும்.

3. உரிமம்பெற்ற வங்கிகள் மேலதிகக் கட்டணங்களையோ அல்லது சலுகைகளை வழங்குவது தொடர்பில் கட்டணங்களையோ விதிக்கக்கூடாது.

4. உரிமம்பெற்ற வங்கிகள் ரூ.500,000 இற்குக் குறைவான பெறுமதியினைக் கொண்ட காசோலைகளுக்கான செல்லுபடியாகும் காலத்தினை 2021 யூன் 30 வரை நீடிக்கலாம்.

5. உரிமம்பெற்ற வங்கிகள் அனைத்துக் காசோலைக் கொடுப்பனவுகள் தொடர்பிலும் திரும்பும் காசோலைகள் மற்றும் கொடுப்பனவுகளை நிறுத்துதல் தொடர்பான விதிப்புக்களை 2021 யூன் 30 வரை நிறுத்துதல் வேண்டும்.

6. உரிமம்பெற்ற வங்கிகள், வெளிப்படையாகவே பாதிக்கப்பட்டவர்களுக்காக கொடுகடன் அட்டைகள் மற்றும் ஏனைய கொடுகடன் வசதிகள் மீதான பிந்திய கொடுப்பனவுகளுக்கான கட்டணத்தினை 2021 யூன் 30 வரையான காலப்பகுதியில் நிறுத்துதல் வேண்டும்.

7. உரிமம்பெற்ற வங்கிகள், கடன்பாட்டாளர் தற்போதுள்ள கொடுகடன் வசதியை/ வசதிகளைப் பிற்போடுவது அல்லது மறுசீரமைப்பதற்குப் பதிலாக 2021 ஓகத்து அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அவரின்/ அவளின் தற்போதைய கொடுகடன் வசதிகளைத் தீர்ப்பனவு செய்வதற்கான அவரின் விருப்பத்தினைத் தெரிவிக்குமிடத்து, அவ்விடயத்தில் நேரகாலத்துடனான தீர்ப்பனவிற்கான கட்டணத்தினை விதிக்கக்கூடாது.

8. இலங்கை கொடுகடன் தகவல் பணியத்திற்கு அறிக்கையிடுதல்

(அ) உரிமமம்பெற்ற வங்கிகள், இத்திட்டத்தின் கீழ், தகைமையுடைய கடன்பாட்டாளரிடமிருந்தான கடன் விண்ணப்பங்களை கொடுகடன் தகவல் பணியகத்தின் மோசமான பதிவேடுகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு நிராகரிக்கக்கூடாது.

(ஆ) உரிமம்பெற்ற வங்கிகள், கொடுகடன் தகவல் பணியகத்தின் ஆலோசனையுடன் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பிற்போடல்/ மறுசீரமைத்தல் அறிக்கை தொடர்பில் அறிக்கையிடுகின்ற மாதிரியொன்றினைத் தயாரித்தல் வேண்டும். இதன் மூலம் இத்திட்டத்தில் பங்கேற்பது, எதிர்காலத்தில் கடன்பாட்டாளரின் கொடுகடன் மதிப்பெண்ணின் மீது தாக்கத்தினையோ அல்லது எதிர்காலக் கொடுகடன் தகவல் பணியகத்தின் எதிர்கால அறிக்கைகள் எதிர்மறையான தன்மையினைப் பிரதிபலிக்கவோமாட்டாது.

9. கோரிக்கையினைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி

(அ) தகைமையுடைய கடன்பாட்டளார்கள் 2021 யூன் 21 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ எழுத்து மூலமாக அல்லது இலத்திரனியல் வழிமுறையூடாக மேற்குறிப்பிட்ட சலுகைகளுக்கான கோரிக்கையினை விடுத்தல் வேண்டும். உரிமம்பெற்ற வங்கிகள் அனைத்து தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கு அச்சு/ அல்லது மின்னஞ்சல் மற்றும் குறுஞ்செய்தி உட்பட இலத்திரனியல் ஊடகங்களூடாக சலுகைகள், இறுதித் திகதி, சமர்ப்பிப்பதற்கான விண்ணப்பப் படிவம் என்பன பற்றி விரைவாக தொடர்பூட்டுதல் வேண்டும்.

(ஆ) உரிமம்பெற்ற வங்கிகள் 2021 யூன் 21இற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கையினையும் அத்தகைய கோரிக்கை தாமதமாக செய்யப்படுவதற்கான காரணங்களை ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருப்பின் ஏற்றுக்கொள்ளலாம்.

(இ) கொடுகடன் வசதிகளைப் பிற்போடுவதற்கான அல்லது மறுசீரமைத்தலுக்கான கோரிக்கைக்குப் பதிலாக, கடன் மீள்கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்வதற்கான இயலாற்றலைக் கொண்டுள்ள எவரேனும் தகைமையுடைய கடன்பாட்டாளர் அத்தகைய கடன்களை மீள்கொடுப்பனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றார்.

(ஈ) உரிமம்பெற்ற வங்கிகள் கொடுகடன் வசதிகளைப் பிற்போடுவது அல்லது மறுசீரமைக்கும் அமைப்பு தொடர்பில் கடன்பாட்டாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது என்பதனை ஒப்புதலுக்கு முன்னர் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். கோரிக்கையினை நிராகரிப்பது தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகள் அத்தகைய நிராகரிப்பதற்கான காரணங்களைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

10. சட்ட இசைவுத்தாமதம் தொடர்பான கணக்கீட்டுப் பரிசீலனைகள்

உரிமம்பெற்ற வங்கிகள் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சலுகைகளுக்கான கணக்குகளை இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படியும் 2020 ஒத்தோபர் 28ஆம் திகதியிடப்பட்ட 2020ஆம் ஆண்டின் 9ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் கீழ், இலங்கை மத்திய வங்கியினால், வழங்கப்பட்ட மேலதிக வழிகாட்டல்களுக்கு இணங்கவும் கணக்கீடு செய்யவேண்டும். இது தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு மேலதிக வழிகாட்டல்கள்/ தெளிவுபடுத்தல்கள் தேவைப்படுமிடத்து இலங்கை பட்டயம்பெற்ற கணக்காளர்களையும் மற்றும் கணக்காய்வாளர்களையும் நாடலாம்.

11. அறிக்கையிடும் தேவைப்பாடு

உரிமம்பெற்ற வங்கிகள் அவற்றின் கடன்பாட்டாளர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சலுகைகளின் விபரங்களை 2021 யூன் 30ஆம் நாளிலிருந்து ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாதத்தின் 30ஆம் திகதியிலுள்ளவாறு 15 வேலை நாட்களுக்குள் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும். அறிக்கையிடுகின்ற படிவம் காலக்கிரமத்தில் சுற்றோட்டப்படுத்தப்படும்.

ஒப்பம்
பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2021ஆம் ஆண்டின் 06ஆம் இலக்கச் சுற்றறிக்கை** 2021 யூன் 07

**கொவிட் -19 நோய்ப்பரவலிற்கு மத்தியில் வங்கித்தொழில் பணிகளை வழங்குதல்**

இலங்கை மத்திய வங்கி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் பொலிஸ் மா அதிபரின் ஒப்புதலை/ சம்மதத்தை பெற்றதையடுத்து, கொவிட்-19 நோயப்பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், தற்போது நடைமுறையிலுள்ள பயணக் கட்டுப்பாடுகளுக்கமைவாக வழங்கப்பட்ட அனைத்து உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை கண்டிப்பாக கடைப்பிடித்து அத்தியாவசிய வங்கிப் பணிகளை முன்னெடுக்குமாறு, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் (உரிமம்பெற்ற வங்கிகள்) ஏற்கனவே கேட்டுக்கொண்டுள்ளது.

1. இதற்கமைய, கொவிட்-19 நோய்ப்பரவல் காலப்பகுதியில், அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் பின்வருவனவற்றுடன் இணங்கியொழுகி இடைத்தடங்கலற்ற வங்கிப் பணிகளை வழங்குவதற்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும்:

   i வர்த்தக நிதியளித்தல், திறைசேரி தொழிற்பாடுகள், தீர்ப்பனவு நடவடிக்கைகள், ஓய்வூதியங்கள்/ சம்பளங்களின் கொடுப்பனவுகள் வாடிக்கையாளரின் ஏனைய அவசரக் கோரிக்கைகள்/ விசாரணைகள் போன்ற அத்தியாவசியப் பணிகளை வழங்குவதற்கு மாத்திரம் வங்கிக்கிளைகளைத் திறத்தல்

   ii உரிமம்பெற்ற வங்கிக்கிளைகளில் பணிக்கு சமூகமளிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை, ஒரு கிளைக்கு 15 ஊழியர்களை விடவும் விஞ்சலாகாது

   iii ஊழியர்கள் சுழற்சி முறையில் பணிக்கு சமூகமளித்தல் வேண்டும், அல்லது ஒவ்வொரு கிளையினதும் வாடிக்கையாளர்களின் தேவைப்பாடுகளை கருத்திற்கொண்டு, குறித்த சில தினங்களில் மாத்திரம் கிளைகளைத் திறத்தல் மற்றும்

   iv கிளை முகாமையாளர்கள், இணைக்கப்பட்ட மாதிரிப்படிவத்தில் வழங்கப்பட்ட விடயங்கள் உள்ளிட்ட தொடர்புடைய ஊழியரின் பயணத்திற்காக உரிய தகவல்களைக் கொண்ட கோரிக்கைக் கடிதத்தை வழங்குவதன் மூலம் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்தின் முன் அனுமதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

2. உரிமம்பெற்ற வங்கிகள்:

   i அத்தியாவசிய வங்கிப் பணிகளை எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும் என்பது தொடர்பில், பொது மக்களுக்கு தெரிவிப்பதற்காக அறிவித்தல்களை வெளியிடுதல் வேண்டும்

   ii இக்காலப்பகுதியில், வங்கிக்கிளைகளைத் தொடர்புகொள்வதற்கான பல்வேறு விரும்பத்தக்க கொடுக்கல்வாங்கல் மூலங்களை கருத்திற்கொண்டு, கிளை ஊழியர்களின் தொடர்பு இலக்கங்கள் மற்றும் அவசர தொலைபேசி இலக்கங்கள் என்பவற்றை காட்சிப்படுத்தல் உள்ளடங்கலாக அத்தியாவசிய வங்கிப் பணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான தகவல்களை வாடிக்கையாளர்கள் அறிந்திருப்பதற்கான போதியளவு வழிமுறைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்

   iii வாடிக்கையாளர் விசாரணைகளுக்கு பதிலளிக்கப்பட்டு அவர்களின் பிரச்சனைகள் துரிதமாகக் தீர்க்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும் மற்றும்

   iv தன்னியக்க கூற்றுப் பொறிகள் (ATMs), பண வைப்புப் பொறிகள் (CDMs), பண மீள்சுழற்சிப் பொறிகள் (CRMs) மற்றும் நடமாடும் வங்கி ஊர்திகள் உள்ளடங்கலான இலத்திரனியல்/ டிஜிட்டல் வழிப் பயன்பாட்டை தொடர்ந்தும் வசதிப்படுத்தல் வேண்டும்.

பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

இப்பணிப்புரையின் இணைப்பு I இனை https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/bsd_circular_no_6_of_2021_t.pdf என்ற வெப்தளத்தில் பார்வையிடலாம்.

**2021ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்** 2021 யூன் 16

**உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் என்பவற்றுக்கான மீட்புத் திட்டங்கள்**

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் (இதனகத்துப்பின்னர் "உரிமம்பெற்ற வங்கிகள்" என குறிப்பீடு செய்யப்படும்) மீட்புத் திட்டங்களைப் பேணவேண்டிய தேவைப்பாட்டிற்காக திருத்தப்பட்டவாறான, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76(ஒ)(1) ஆம் பிரிவுகளால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளுக்கமைவாக நாணயச் சபை இப்பணிப்புரைகளை விடுக்கின்றது.

1. **அதிகாரமளித்தல்**

   1.1 வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) ஆம் பிரிவுகளின் நியதிகளுக்கமைவாக, வங்கியின் அல்லது வங்கிகளின் வியாபாரத்தின் எந்தவொரு அம்சமும் எவ்வாறு கொண்டு நடாத்தப்படவேண்டுமென்பது தொடர்பில் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் பணிப்புரைகளை விடுப்பதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

**2. ஏற்புடைத்தன்மையின் நோக்கெல்லை**

2.1 நிறுவனரீதியான குறித்துரைக்கப்பட்ட அழுத்தங்கள், சந்தை ரீதியான அழுத்தங்கள் அல்லது அவை இரண்டினதும் சேர்க்கை என்பனவற்றிலிருந்து எழக்கூடிய மூலதன அதிர்ச்சிகள், திரவத்தன்மை மற்றும் ஏனைய அனைத்து விடயங்களையும் கையாள்வதற்கு உரிமம்பெற்ற வங்கியொன்றிற்கு கிடைக்கின்ற தெரிவுகளில் முழு அளவினையும் மீட்புத் திட்டங்கள் இனங்காணுதல் வேண்டும்.

2.1 ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கியும் அறவிடல் திட்டமொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அறவிடல் திட்டம் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்

(அ) உரிமம்பெற்ற வங்கியின் தன்மை, அளவு, சிக்கல்தன்மை, இடைத்தொடர்புத்தன்மை போன்றவற்றைக் கருத்திற்கொண்டு மீட்புத் திட்டத்தின் நோக்கெல்லை வடிவமைக்கப்படுதல்.

(ஆ) மீட்புக் கட்டமைப்பின் கீழ் உள்ளடக்கப்படுகின்ற வங்கிக்குழுவின் நிறுவனங்கள்.

**3. முக்கியத் தொழிற்பாடுகளும் முக்கியமாக பகிர்ந்தளிக்கப்பட்ட பணிகளும்**

3.1 முக்கியத் தொழிற்பாடுகளும் முக்கியமாக பகிர்ந்தளிக்கப்பட்ட பணிகளும் மீட்புத் திட்டங்களில் தெளிவாக இனங்காணப்பட வேண்டும் என்பதுடன் வரைவிலக்கணம் செய்யப்படுதல் வேண்டும்.

3.2 முக்கிய தொழிற்பாடுகளும் முக்கியமாக பகிர்ந்தளிக்கப்பட்ட பணிகளும் சாத்தியமான மீட்பினதும் தீர்மானத் தெரிவுகளினதும் கீழ் ஒட்டுமொத்த வங்கிக்குமான பகிர்ந்தளிக்கப்பட்ட பணிகளின் தொடர்ச்சியான ஏற்புடைத்தன்மையை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் ஒருங்கேற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

**4. மீட்புத் தூண்டல்களும் குறிகாட்டிகளும்**

4.1 ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கியும் தீர்மான வழிமுறைகளைச் செயற்படுத்துவதற்கான மீட்புக் குறிகாட்டிகள், மீட்புத் தூண்டல்கள், மீட்புச் செயற்பாடுகள் மற்றும் நிபந்தனைகளை இனங்காணுதல் வேண்டும்.

(அ) மீட்புத் திட்டங்களின் காலமுறையான நடைமுறைப்படுத்தலை உறுதிப்படுத்துவதற்கான பொருத்தமான குறிகாட்டிகள், தூண்டல்களையும் நடைமுறைகளையும் மீட்புத் திட்டம் உள்ளடக்குதல் வேண்டும்.

(ஆ) இனங்காணப்பட்ட குறிகாட்டிகளும் தூண்டல்களும் கணியம்சார் மற்றும் பண்புசார் தூண்டல்களின் அளவை உள்ளடக்குதல் வேண்டும்.

(இ) கணியம்சார் குறிகாட்டிகளும் தூண்டல்களும் ஏற்புடைத்தான இடங்களில், ஒருங்கிணைக்கப்பட்ட மேற்பார்வைத் தேவைப்பாடுகளிற்கு மேலான மட்டங்களில் செயற்படுதல் வேண்டும்.

(ஈ) அத்தகைய தூண்டல்களிற்கு மேலதிகமாக, கண்காணிப்பு மிக்க எதிர்மறையான போக்குகளை இனங்காணுவதற்கு முன்கூட்டிய எச்சரிக்கை குறிகாட்டிகள் பயன்படுத்தப்படல் வேண்டும்.

**5. மீட்புத் தெரிவுகள்**

5.1 மீட்புத் திட்டமொன்று நிறுவன ரீதியாக குறித்துரைக்கப்பட்ட அழுத்தங்கள், சந்தை ரீதியான அழுத்தங்கள், அல்லது அவை இரண்டினதும சேர்ப்புக்களிலிருந்து எழக்கூடிய மூலதனம், திரவத்தன்மை மற்றும் ஏனைய அனைத்து அம்சங்களிற்கான அதிர்ச்சிகளை கையாள்வதற்கு வங்கியொன்றிற்கு கிடைக்கின்ற நம்பகமானதும் நெகிழ்வானதுமான அளவை இனங்காணுதல் வேண்டும்.

(அ) மூலதனம், திரவத்தன்மை அத்துடன்/ அல்லது வேறு விடயப்பரப்பு ஏதேனுமிருக்கின்றவிடத்து அவற்றின் நியதிகளுக்கமைவாக தெரிவில் எதிர்பார்க்கப்பட்ட தாக்கம் அல்லது விளைவு.

(ஆ) தெரிவை நடைமுறைபடுத்துவதற்கு தேவைப்படுகின்ற காலமும் மூலவளங்களும்

(இ) தெரிவை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியமான தடைகள்

(ஈ) தடைகளை நிவர்த்தி செய்வதற்காக எடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகள்.

(உ) நடைமுறைப்படுத்தல் கிரயங்களின் விபரங்கள்

(ஊ) தெரிவு ரீதியாக குறித்துரைக்கப்பட்ட தொடர்பூட்டல் திட்டமிடலின் விபரங்கள்

5.2 வங்கியின் மீட்புத் தெரிவுகள், நியாயமான காலகட்டத்திற்குள் நிறைவேற்றப்பட வேண்டிய இயலுமையைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் தெரிவுகளின் நம்பகத்தன்மை தீவிரமாக மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

5.3 மீட்புத் திட்டங்கள், மீட்பு மீது சட்டரீதியானதும் புகழ்பெற்றதும் தொழிற்பாட்டு ரீதியானதுமான ஏதேனும் தடைகளை கருத்திற் கொள்ள வேண்டும் என்பதுடன் மீட்புத் தெரிவுகளின் காலமுறையான நடைமுறைப்படுத்தலை உறுதிசெய்வதற்கான செயன்முறையை வடிவமைத்தல் வேண்டும்.

5.4 ஒவ்வொரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியும் மீட்புத் திட்டங்களை வடிவமைக்கும் போது வியாபாரத்தை தொடர்வதற்கான திட்டமிடல் ஒருங்கேற்பாடுகளை பொருத்தமான வகையில் உள்ளடக்குதல் வேண்டும்.

**6. பணிப்பாளர் சபையும் முகாமைத்துவமும்**

6.1 ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கியும் தனது மீட்புத் திட்டச் செயன்முறையை மேற்பார்வை செய்வதற்கு முகாமைத்துவத்தின் உறுப்பினரொருவரை நியமித்தல் வேண்டும் என்பதுடன் மீட்புத் திட்டச் செயன்முறைக்கு ஆதரவளிப்பதற்காக வலுவான ஆளுகைக் கட்டமைப்பையும் போதுமான வளங்களையும் வைத்திருத்தல் வேண்டும். மீட்புத் திட்டத்தின் செயன்முறையில் ஈடுபடுகின்ற ஒவ்வொரு நபரினதும் வகிபாகங்களும் பொறுப்புக்களும் வங்கிக்குள் தெளிவாக ஒதுக்கப்படல் வேண்டும் என்பதுடன் மீட்புச் செயற்திட்டத்தில் குறித்துரைக்கப்படல் வேண்டும்.

6.2 உள்நாட்டில் ஒன்றிணைக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கிக்காகவும் இலங்கைக்கு வெளியே ஒருங்கிணைக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கிக்கான பிரதேச/ உலகளாவிய தலைமை அலுவலகத்திற்காகவும் மீட்புத் திட்டம் பணிப்பாளர்கள் சபையினால் ஒப்புதலளிக்கப்படல் வேண்டும் என்பதுடன் கையொப்பமிடப்படலும் வேண்டும்.

6.3 மீட்புத் திட்டம், மாறிவரும் செயன்முறையாக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஆகக்குறைந்தது ஆண்டுதோறும் இற்றைப்படுத்தப்படுவதுடன் ஏற்கனவேயுள்ள இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு மற்றும் செயன்முறையுடன் ஒருங்கிணைக்கப்படல் வேண்டும்.

6.4 மூத்த முகாமைத்துவ ஆளணி, தொடர்புடைய திணைக்களங்கள்/ பிரிவுகள், மற்றும் வடிவமைப்பதற்கான ஏனைய தொடர்புடைய அலுவலர்கள், பேணுதல்/ கிரமமான மீளாய்வு, நிறைவேற்றுதல், மற்றும் மீட்புத் திட்டத்தை செயற்படுத்தல் போன்றவற்றிற்கான தெளிவான கடமைப்பொறுப்புக்கள் ஒழுங்கமைக்கப்பட்டு ஆவணப்படுத்தப்படல் வேண்டும்.

6.5 இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகள் தமது மீட்புத் திட்டத்தில் பின்னவருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(அ) பிரதான வங்கியின் மீட்புடனும் தீர்மானக் கட்டமைப்புடனும் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் ஒருங்கிணைகின்ற தன்மை

(ஆ) மீட்புத் திட்டங்கள் மீது உள்நாட்டு ஒருங்குமுறைபடுத்துனருக்கு அளிக்கப்பட்ட சமர்ப்பிப்புகளின் சுருக்கமான விவரணம்.

(இ) இலங்கையில் வியாபாரத்திற்கு உறப்பட்ட அல்லது வியாபாரத்துடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து தேவையான கடப்பாடுகளிற்கும் மத்திய வங்கி மூலம் அத்தகைய வங்கியின் தேவைக்கேற்ப நிதிகளை வழங்க முடியும் என திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 3(2)(இ)(i) ஆம் பிரிவின் கீழ், தலைமை அலுவலகத்தின் அல்லது கட்டுப்படுத்தும் பிரதான அலுவலத்தின் பணிப்பாளர்கள் சபையினுடைய தீர்மானத்தின் மூலம் ஆதரவளிக்கப்பட்டு எழுத்து மூலமாக மேற்கொள்ளப்படுகின்ற பிரதியொன்று எடுத்துரைக்கின்றது.

**7. முகாமைத்துவ தகவல்களும் தொடர்பூட்டல் திட்டமிடலும்**

7.1 ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கியும் அதன் மீட்புச் செயன்முறைக்கு தேவைப்படும் தகவல்களை உருவாக்குகின்ற இயலுமையைக் கொண்டதாக தற்போதுள்ள முகாமைத்துவத் தகவல்கள் முறைமையில் தகவல்களைப் பேணுதல் வேண்டும்.

7.2 ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கியும் பின்வரும் விடயப்பரப்புகளில் பின்வருவனவற்றிக்குள் மட்டுப்படவேண்டிய கட்டுப்பாட்டுக்குள் உள்ளடங்காது, இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை பேணுதல் வேண்டும்.

(அ) கணக்கு இலக்கம், வைப்பு வகை, வைப்பு மீதி, தொடர்பு விபரங்கள் மற்றும் ஏனைய தொடர்பான விபரங்கள் உள்ளடங்கலான வைப்பாளர்களின் பட்டியல்.

(ஆ) உரிமம்பெற்ற வங்கியின் அனைத்து ஒப்பந்ததாரர்களினதும் தகவல்கள்

(இ) குழுக்களுக்குள்ளேயான கொடுக்கல்வாங்கல்கள் மீதான தகவல்கள்

7.3 தொடர்பூட்டல் திட்டமொன்று, மீட்புத் திட்டத்தின் உள்ளக மற்றும் வெளியக ஆர்வலர்களுடன் காலமுறையான தொடர்பூட்டலை உறுதிப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**8. ஒழுங்குமுறைப்படுத்தல் முன்வைப்புக்கள்**

8.1 2020இலிருந்து ஆரம்பமாகும் வகையில், ரூபா ஒரு றில்லியனுக்கு மேலதிகமான சொத்துக்களைக் கொண்ட உரிமம்பெற்ற வங்கிகள், ஒவ்வொரு ஆண்டின் யூன் மாத இறுதியில் அல்லது மீட்புத் திட்டம் கணிசமாக திருத்தப்படும் போது, ஆண்டுதோறும் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அறவிடல் திட்டத்தை வடிவமைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.

8.2 2020இலிருந்து ஆரம்பமாகும் வகையில், ரூபா ஒரு றில்லியனுக்குக் குறைவான சொத்துக்களை கொண்ட உரிமம்பெற்ற வங்கிகள் 2022 யூன் 30இலிருந்து மீட்புத் திட்டங்களை பேணுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய மீட்புத் திட்டங்கள் தொடர்புடைய வங்கியின் நியதிச்சட்டப் பரிசோதனையின் போது மீளாய்வுக்குட்படுதல் வேண்டும்.

8.3 வங்கியொன்று மீட்புத் திட்டத்தை செயன்முறைப்படுத்துவதன் மூலம் தூண்டல் புள்ளியை அடையும் போது அல்லது வங்கியொன்று உயர் மட்ட அழுத்தத்தை உணரும் போது வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

8.4 மீட்புத் திட்டங்களை வரைவதற்கு உரிமம்பெற்ற வங்கிகளுக்கான பரந்த மாதிரியுருவொன்றை வழங்குகின்ற மாதிரி வடிவமொன்று அட்டவணை I இல் இணைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மீட்புத் திட்டத்தின் ஆழத்திலும் முன்வைத்தலிலுமுள்ள நியாயமானமான அளவு மாறுபாடு ஒவ்வொரு வங்கியின் அளவு, வங்கித்தொழில் வியாபார மாதிரி, கடுமைத்தன்மை, இணைக்கப்படும் நிலை, இடர்நேர்வுத் தோற்றப்பாடு மற்றும் முறைமை ரீதியான முக்கியத்துவம் போன்றவற்றின் அடிப்படையில் எதிர்பார்க்கப்படுகின்றது.

**9. பொருள்கோடல்கள்**

9.1 முக்கியத் தொழிற்பாடுகள் என்பது, மூன்றாம் தரப்பினருக்காகச் செயலாற்றும் போது ஏற்படக்கூடிய தோல்விகளால் வங்கிக் குழுவின் அளவு மற்றும் சந்தைப் பங்கு, வெளியக மற்றும் உள்ளக இணைக்கப்படும் நிலையினதும் கடினத்தன்மை அல்லது எல்லை மட்டச் செயற்பாடுகளினதும் காரணமாக உண்மைப் பொருளாதார தொழிற்பாட்டிற்கும் நிதியியல் உறுதிப்பாட்டிற்கும் உண்டாகக்கூடிய இடையூறுகள் எனப் பொருள்கொள்ள வேண்டும்.

9.2 முக்கியமாக பகிர்ந்தளிக்கப்பட்ட பணிகள் என்பது மூன்றாம் தரப்பினர்களுக்காக நிறுவனத்தினுள் அல்லது வெளியிலிருந்து செயலாற்றப்படும் நடவடிக்கைகளின் தோல்விகள் காரணமாக, முக்கியத் தொழிற்பாடுகளை செயலாற்றுவதற்கு இயலாதுபோகுமிடத்து உண்மைப் பொருளாதாரத்திற்கு அல்லது நிதியியல் உறுதிப்பாட்டிற்கு ஏற்படும் இடையூறுகள் எனப் பொருள்கொள்ள வேண்டும்.

9.3 மூன்றாம் தரப்பினர்கள் என்பது உரிமம்பெற்ற வங்கியினுள் வியாபாரத் தொடர்பு ரீதியாக உள்வாங்கப்பட்டுள்ள அனைத்து நிறுவனங்களையும் அல்லது தனியாட்களையும் உள்ளடக்குதல் வேண்டும்.

**பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்**

நாணயச் சபையின் தலைவரும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

**இப்பணிப்புரையின் இணைப்பு** I **இனை** https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/Banking_Act_Directions_No_9_of_2021_t.pdf **என்ற வெப்தளத்தில் பார்வையிடலாம்.**

**2021ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்** 2021 யூன் 16

**உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளாலும் தேசிய சேமிப்பு வங்கியாலும் இலங்கை நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மீது மேற்கொள்ளப்படும் முதலீடுகள்**

திருத்தப்பட்டவாறான, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76(ஒ)(1)ஆம் பிரிவுகளால் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கமைவாக விடுக்கப்பட்டது.

1. இப்பணிப்புரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியால் இலங்கை நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மீது மேற்கொள்ளப்படும் முதலீடுகள் மீது 2021 ஏப்பிறல் 23ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளை இலங்கை மத்திய வங்கி இத்தால் இரத்துச்செய்கின்றது.

2. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் தேசிய சேமிப்பு வங்கியும் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு இரண்டாந்தரச் சந்தையில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை கொள்வனவு செய்யலாம்.

   i நிதிகளைத் திரட்டும் மூலங்கள், கரைகடந்த நாடுகளிலிருந்தான புதிய கடன் பெறுகைகளுக்குள் மட்டுப்படுத்தப்படவேண்டும் என்பதுடன் இது, இலங்கை மத்திய வங்கியின் திருப்தியுடன் தாபிக்கப்பட வேண்டும். இத்தகைய நோக்கத்திற்காக, உரிமம்பெற்ற வங்கிகளால் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு நாணய கடன்பெறுகைகள் மீது 2018ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் 9.1ஆம் பிரிவில் குறித்துரைக்கப்படுகின்றவாறான கரைகடந்த கடன்பெறுகைகளின் ஆவணங்களை வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு வழங்குமாறு உரிமம்பெற்ற வங்கிகளும் தேசிய சேமிப்பு வங்கியும் கோரப்படுகின்றது.

   ii மேலே 2(ய) இல் குறிப்பிடப்பட்டதற்கமைவாக நிதியங்களின் முதலீடுகள் ஒவ்வொன்றும் 50 சதவீத விகிதாசாரத்தில் இலங்கை அபிவிருத்தி முறிகளிலும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளிலும் முதலிடப்படலாம் என்பதோடு திரட்டப்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் தேசிய சேமிப்பு வங்கிகளும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளிலும் இலங்கை அபிவிருத்தி முறிகளிலும் மேற்கொள்ளப்படும் தங்களது முதலீடுகள் மீதான பின்வரும் தகவல்களை வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கும் பொதுப்படுகடன் திணைக்களத்தின் கண்காணிப்பாளரிற்கும் சமர்ப்பித்தல் வேண்டும்.

      அ) முதலீடு செய்யும் திகதி

      ஆ) பன்னாட்டு பிணையங்கள் அடையாள எண்

      இ) நாட்டிற்கான பன்னாட்டு முறிகளிலும் இலங்கை அபிவிருத்தி முறிகளிலும் முதலீடு செய்யப்பட்ட தொகை

   iii ஏற்கனவே குறித்துரைக்கப்பட்ட/ பின்பற்றப்பட்ட ஏனைய இடர்நேர்வு தணிப்பு வழிமுறைகளுக்கு மேலதிகமாக ஏற்படக்கூடிய ஏதேனும் குறுங்கால முதிர்ச்சி பொருத்தப்பாட்டின்மையை இணைப்பதற்காக பொருத்தமான இடர்நேர்வு தணிப்பு ஒருங்கேற்பாடுகளைப் பின்பற்றுகின்ற கடன்பெறுகைகளுக்கும் நாட்டிற்கான பன்னாட்டு முறி/ இலங்கை அபிவிருத்தி முறி முதலீடுகளுக்குமிடையிலான முதிர்ச்சி பொருத்தப்பாட்டின்மைகளைப் பாதுகாப்பதற்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் தேசிய சேமிப்பு வங்கியும் இடர்நேர்வு தணிப்பு வழிமுறைகளை பின்பற்றுதல் வேண்டும்.

பேராசிரியர் டபிள்யு டி லக்ஷ்மன்
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்,**
**நாணயச் சபையின் தலைவரும்**

**2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டக் கட்டளை** 2021 யூன் 18

**வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) கட்டளை**
**குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள்**

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 23, 25 மற்றும் 26ஆம் பிரிவுகளின் கீழ், அமைச்சரின் ஒப்புதலுடன் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட கட்டளை.

1. **குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள்**

   1.1 இக்கட்டளையின் கீழேயுள்ள திட்டத்தில் காட்டப்பட்டுள்ள வெளிநாட்டு நாணயங்கள், வங்கித்தொழில் (வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) கட்டளையின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களாக நிர்ணயிக்கப்படுகின்றன.

   1.2 இக்கட்டளையின் திட்டம், 2011.10.27ஆம் திகதியிடப்பட்ட 2011ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் (வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) கட்டளையிலுள்ள திட்டத்தில் பதிலீடு செய்யப்படுகின்றது.

**பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்**
**நாணயச் சபையின் தலைவரும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**அட்டவணை**

**குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள்**

1. அவுஸ்திரேலியன் டொலர்
2. கனடியன் டொலர்
3. சீன றென்மின்பீ
4. டெனிஷ் குரோனர்
5. யூரோ
6. ஹொங்கொங் டொலர்
7. யப்பானிய யென்
8. நியுசிலாந்து டொலர்
9. நோர்வேஜியன் குரோனர்
10. ஸ்ரேர்லிங் பவுண்
11. சிங்கப்பூர் டொலர்
12. சுவிடிஷ் குரோனர்
13. சுவிஸ் பிராங்க்
14. தாய் பட்
15. ஐக்கிய அமெரிக்க டொலர்

**2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்** 2021 யூலை 13

**உரிமம்பெற்ற வங்கிகளின் தற்றுணிபுக் கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடுகள்**

கொவிட்-19 உலகளாவிய நோய்ப்பரம்பலின் காரணமாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளினதும் (இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கி என குறிப்பிடப்படும்) திரவத்தன்மை மீதும் வேறு முக்கியச் செயலாற்றக் குறிகாட்டிகள் மீதும் சாத்தியமான பாதகமான தாக்கத்தையும் உரிமம்பெற்ற வங்கிகளிலுள்ள திரவத்தன்மையினதும் மூலதன தாங்கியிருப்புக்களினதும் பொருத்தமான மட்டங்களைப் பேணுகின்ற முக்கியத்துவத்தையும் கருத்திற்கொண்டு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை உரிமம்பெற்ற வங்கிகளின் தற்றுணிப்புக் கொடுப்பனவுகள் மீதான பணிப்புரைகளை இத்தால் விடுக்கின்றது.

**1. அதிகாரமளித்தல்**

1.1 வங்கித்தொழில் முறையின் ஆற்றல்வாய்ந்த தன்மையை உறுதிப்படுத்துவதற்காக, வங்கி அல்லது வங்கிகளின் வியாபாரங்கள் நடாத்தப்படவேண்டிய வழிமுறை தொடர்பில், பணிப்புரைகளை வங்கித்தொழில் சட்டத்தின் 46(1)ஆம் பிரிவின் நியதிகளுக்கமைவாக, அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் விடுப்பதற்கு நாணயச் சபை அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

1.2 வங்கித்தொழில் சட்டத்தின் 76ஒ(1)ஆம் பிரிவின் நியதிகளுக்கமைவாக, வங்கிகளின் வியாபாரங்கள் நடாத்தப்படவேண்டிய வழிமுறை தொடர்பில் நாணயச் சபை உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்கு அல்லது உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளின் எந்தவொரு பிரிவிற்கும் பணிப்புரைகளை வழங்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

**2. பிரயோகத்தின் நோக்கெல்லை**

2.1 இப்பணிப்புரைகள், இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கிக்கும் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட வங்கியொன்றின் கிளையாகவுள்ள ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கிக்கும் தன்னிலையான அடிப்படையில் ஏற்புடையதாதல் வேண்டும்.

**3. தற்றுணிபுக் கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடுகள்**

3.1 இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கியும் 2012ஆம் ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்கள்/ இடைக்கால நிதியியல் கூற்றுக்கள் அதன் வெளியகக் கணக்காய்வாளரினால் இறுதிசெய்யப்பட்டு கணக்காய்வு செய்யப்படும் வரை காசுப் பங்கிலாபத்தின் கொடுப்பனவை பிற்போடுதல் வேண்டும்.

3.2 இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஒவ்வொரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியும், 2021ஆம் ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்கள்/ இடைக்கால நிதியியல் கூற்றுக்கள் இறுதிசெய்யப்பட்டு கணக்காய்வு செய்யப்படும் வரை 2020 மற்றும் 2021 நிதியியல் ஆண்டிற்காக ஏற்கனவே பிரகடனப்படுத்தப்படாத இலாபங்களை நாட்டிற்கு வெளியே அனுப்புவதைத் தவிர்த்தல் வேண்டும்.

3.3 உரிமம்பெற்ற வங்கிகள், பணப் பங்கிலாபங்கள் மற்றும் இலாபத்தை நாட்டிற்கு வெளியே அனுப்புதல் தொடர்பாகவும் தீர்மானிக்கும் போது உரிமம்பெற்ற வங்கிகளுக்கான பாசல் III இன்கீழ் மூலதனத் தேவைப்பாடுகள் மீதான 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள், சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சி, வியாபாரத்தை விரிவுபடுத்தல் மற்றும் கொவிட்-19 நோய்த்தொற்றின் சாத்தியமான தாக்கம், தற்போது நிலவுகின்ற சந்தை நிலைமைகள் என்பனவற்றின் தேவைப்பாடுகளுக்கமைய உரிய கவனத்தைச் செலுத்துதல் வேண்டும்.

3.4 2021 திசெம்பர் 31 வரை உரிமம்பெற்ற வங்கிகள் பின்வருகின்றனவற்றை கடைப்பிடித்தல் வேண்டும்.

(அ) தனக்குச் சொந்தமான பங்குகளை மீளப் பெற்றுக்கொள்வதைத் தவிர்த்தல்.

(ஆ) பணிப்பாளர்கள் சபைக்கான முகாமைத்துவ படிகளையும் கொடுப்பனவுகளையும் தவிாத்தல்.

(இ) முன்மதியை கடைப்பிடிப்பதுடன் விளம்பரப்படுத்தல், வியாபார பதவி உயர்வுகள், பரிசுத் திட்டங்கள், பொழுதுபோக்கு, அநுசரணைகள், போக்குவரத்து மற்றும் பயிற்றுவித்தல் செலவினங்கள் போன்ற அத்தியாவசியமற்ற செலவினங்கள் உறப்படுதலை முடிந்தளவிற்கு தவிர்த்தல்.

(ஈ) ஏதேனும் மூலதனச் செலவினங்கள் செயற்படுத்தப்படின், அதனை உறப்படுத்தும் போது தீவிர சிரத்தையுடனான மற்றும் முன்மதியைக் கடைப்பிடித்தல்.

4. நடைமுறைக்குவரும் திகதி

4.1 இப்பணிப்புரைகள், 2021 யூலை 01 இலிருந்து நடைமுறைக்குவருதல் வேண்டும்.

**பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்**
**நாணயச் சபையின் தலைவரும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2021ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கச் சுற்றறிக்கை** 2021 ஓகத்து 21

**தொடர்ந்து செல்லும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு காலப்பகுதியின் போது வங்கித்தொழில் பணிகளை வழங்கல்**

இலங்கை மத்திய வங்கி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் 2021 ஓகத்து 20 அன்று திகதியிடப்பட்ட ஊடக அறிக்கையின் அறிவிப்பைத் தொடர்ந்து, 2021 ஓகத்து 20ஆம் திகதி பி.ப 10.00 மணியிலிருந்து 2021 ஓகத்து 30 மு.ப 4.00 மணி வரை நடைமுறைக்கு வரும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு காலப்பகுதியின் கீழ் அனுமதிக்கப்பட்ட தொழிற்பாடுகளை எடுத்துக்காட்டி, அத்தியாவசியமான வங்கித்தொழில் பணிகளை இடையூறில்லாமல் மேற்கொள்ளுமாறு உரிமம்பெற்ற வா்த்தக வங்கிகளையும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளையும் (இதனகத்துப்பின்னா் உரிமம்பெற்ற வங்கிகள் என குறிப்பிடப்படும்) கேட்டுக்கொண்டுள்ளது. இதற்கமைய, அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் பின்வருவனவற்றிற்கு இனங்கியொழுகுவதுடன் இக்காலப்பகுதியில் வங்கித்தொழில் பணிகளை வழங்குவதற்கான தேவையான ஒருங்கேற்பாடுகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

(i) வா்த்தக நிதியளித்தல், திறைசேரித் தொழிற்பாடுகள், தீா்ப்பனவு நடவடிக்கைகள், சம்பளக் கொடுப்பனவு, வேறு அவசர கோரிக்கைகளுக்கு பதிலிறுத்தல்/ வாடிக்கையாளா்களின் விசாரணைகள் போன்ற அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்கு மாத்திரம் வங்கிக் கிளைகளைத் திறத்தல்

(ii) மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதுமான அத்தியாவசியமானதுமான வங்கித்தொழில் பணிகளை சுழற்சி முறையில் வழங்குவதற்குத் தேவையான குறைந்தபட்ச ஊழியா்களுடன் தொழிற்படுதல் அல்லது ஒவ்வொரு கிளையினதும் வாடிக்கையாளா்களின் குறிப்பிட்ட தேவைப்பாடுகளை கருத்திற்கொண்டு குறிப்பிட்ட நாட்களில் மாத்திரம் கிளைகளைத் திறத்தல் வேண்டும்

(iii) அனைத்து தொடா்பான பாதுகாப்பு வழிமுறைகளையும் வழிகாட்டல்களையும் கண்டிப்பாகக் கடைப்பிடித்தல்

(iv) அத்தியாவசிய வங்கித்தொழில் பணிகளை எவ்வாறு பெற்றுக்கொள்ளமுடியும் என்பது தொடா்பில் பொதுமக்களுக்கு தெரிவிப்பதற்காக அறிவித்தல்களை வெளியிடுதல்

(v) பல்வேறு கொடுக்கல்வாங்கல் முறைகளை கருத்திற்கொள்வதுடன், கிளையிலுள்ள கிளை ஊழியா்களின் தொலைபேசி விபரங்களையும் அவசர அழைப்பு எண்களையும், இக்காலப்பகுதியில் அத்தியாவசிய வங்கித்தொழில் பணிகளைப் பெற்றுக்கொள்வதற்கான தொடா்பு விபரங்களை வங்கிகளின் வாடிக்கையாளா்களுக்கு அறிவிக்கப்படுவதற்கான போதுமான வழிமுறைகளை எடுத்தல்

(vi) வாடிக்கையாளர்களின் விசாரணைகள் விரைவாக பதிலிறுத்து தீர்க்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்தல் மற்றும்

(vii) தன்னியக்கக்கூற்றுப் பொறிகள், காசு வைப்புப் பொறிகள், காசு மறு சுழற்சிப் பொருட்கள் மற்றும் நடமாடும் வங்கித்தொழில் ஊர்திகள் உள்ளடங்கலாக இலத்திரனியல் டிஜிட்டல் ஊடகங்களின் பயன்பாட்டிற்கு தொடர்ச்சியாக வசதியளித்து ஊக்குவித்தல்.

பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க நாணய நிதிச்சட்டக் கட்டளை** 2021 ஓகத்து 24

**உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் தேசிய சேமிப்பு வங்கிகளினதும் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்**

திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 104(1)(அ) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்டது.

ரூபா மற்றும் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்டுச் செலுத்தப்பட்ட வட்டி வீதங்களிலுள்ள முரண்பாடுகளை பரிசீலணையில் கொண்டு நாணயச் சபை, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கிகளின் வெளிநாட்டு நாணய வைப்புச் சாதனங்கள் தொடர்பில் செலுத்தப்படவுள்ள உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் மீது இத்தால் கட்டளையொன்றை விடுக்கின்றது.

1. **நாணய விதிச் சட்டத்தின் கீழ் அதிகாரமளித்தல்**

1.1 நாணய விதிச் சட்டத்தின் 104(1)(அ) ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய, நாணயச் சபை, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் பல்வேறு வகை வைப்புக்களிற்கு செலுத்த வேண்டிய உயர்ந்தபட்ச வட்டி வீதங்களை காலத்திற்குக் காலம் தீர்மானிக்கலாம்.

2. **வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்**

2.1 அனைத்து வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியினாலும் தேசிய சேமிப்பு வங்கியினாலும் வழங்கப்பட்டுச் செலுத்தக்கூடிய உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள், 5 சதவீதம் வரையிலான வருடாந்த பயனுறு வீதத்தை விஞ்சுதலாகாது.

2.2 வெளிநாட்டு நாணயங்களில் சிறப்பு வைப்புக் கணக்குகளின் சந்தர்ப்பத்தில், மேலதிகமாக வழங்கப்பட்டு செலுத்தப்படக்கூடிய வட்டி வீதம், மேலே 2.1இல் குறிப்பிடப்பட்ட ஏற்புடைத்தான மேலதிக வட்டி வீதமாக இருத்தல் வேண்டும்.

3. **ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கையிடுதலும் வெளிப்படுத்துகையும்**

3.1 ஒவ்வொரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியும் தேசிய சேமிப்பு வங்கியும்

(i) “வட்டி வீதங்கள்” மீதான வாராந்த நியதிச்சட்டக் கூற்றுக்கிணங்க, வெளிநாட்டு நாணய வைப்புச் சாதனங்கள் மீது வழங்கப்பட்ட வட்டி வீதங்களின் விபரங்களை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன்

(ii) வெளிநாட்டு நாணயங்களில் வைப்புச் சாதனங்கள் மீதான வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட வட்டி வீதங்களை அறிவிப்பதற்கும் காட்சிப்படுத்துவதற்கும் ஒழுங்கேற்பாடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

4. **நடைமுறைப்படுத்தல்**

4.1 கட்டளை நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து இப்பணிப்புரைகள் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்பதுடன் புதிய வெளிநாட்டு நாணய வைப்புக்களுக்கும், ஏற்கனவேயுள்ள வெளிநாட்டு நாணய சேமிப்பு வைப்புக்களுக்கும் வெளிநாட்டு நாணய வைப்புக்களை புதுப்பிப்பதற்கும் இவை ஏற்புடையாதல் வேண்டும்.

பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்
**நாணயச் சபையின் தலைவரும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2021ஆம் ஆண்டின் 08ஆம் இலக்கச் சுற்றறிக்கை** **2021 செத்தெம்பர் 01**

**கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான சலுகைகள்**

இலங்கையில் கொவிட்-19இன் பரவலின் புதிய தோற்றத்தினைக் கருத்தில் கொண்டு, கரிசனைக்குரிய தரப்பினர்களிடமிருந்து இலங்கை மத்திய வங்கியினால் பெறப்பட்ட கோரிக்கைகள் 2021 மே 25ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் கீழ் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்கள்/ வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை நீடிப்பது பற்றி பரிசீலிக்குமாறு கேட்டுக் கொண்டன. இதற்கமைய, தற்பொழுது காணப்படும் கொவிட்-19இன் உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக வியாபாரங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் எதிர்நோக்கப்பட்ட சவால்களை ஈடுசெய்யும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கி கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் 2021 மே 25ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்பட்ட சலுகைகளை கீழே குறித்துரைக்கப்பட்ட விதத்தில் நீடிக்குமாறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் (இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பிடப்படும்) கேட்டுக் கொள்கின்றது. மேலும், உரிமம்பெற்ற வங்கிகள் கொவிட்-19இன் மூன்றாவது அலையின் காரணமாக பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் அவர்களது கோரிக்கையின் மீது மேலதிக சலுகைகளை இச்சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்படும் நன்மைகளிலும் பார்க்க குறையாத விதத்தில் ஒட்டுமொத்த நன்மைகளாக வழங்கலாம்.

இச்சுற்றிக்கையானது, வியாபாரங்கள்/ வருமான உருவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட தற்போதைய இடையூறுகளினால் பாதிக்கப்பட்ட வங்கிகளின் கடன்பாட்டாளர்கள் அவர்களது கடன்களை உரிய முறையில் திருப்பிச் செலுத்தும் விதத்தில் அவர்கள் மீதான சுமையினைத் தளர்த்தும் நோக்குடன் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளிடையேயும் ஒரேவிதமான தன்மையினை இத்திட்டம் தொடர்பில் ஏற்படுத்துவதற்காக விடுக்கப்படுகிறது. இச்சுற்றறிக்கையானது சுற்றுலாத் துறைக்கான வழங்கப்பட்ட சலுகைகளை பெறுவதற்குத் தகைமையுடைய சுற்றுலாத் துறையிலுள்ள கடன்பாட்டாளர்களுக்கு ஏற்புடைத்தாகாது.

1. 2021 செத்தெம்பர் 01ஆம் நாளன்று செயற்படும் வகையில் காணப்படும் தற்போதுள்ள கொடுகடன் வசதிகளைப் பிற்போடுதல் அல்லது மறுசீரமைத்தல்

(அ) உரிமம்பெற்ற வங்கிகள் கொவிட்-19இனால் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களின் தற்போதுள்ள கொடுகடன் வசதிகளின் மூலதனம், வட்டி அல்லது இரண்டினையும் அறவிடுவதனை 2021 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில், வேலையிழப்பு, வருமானம்/ சம்பளங்கள் அல்லது விற்பனைகளில் ஏற்பட்ட குறைப்பு, வியாபாரம் குறைவடைந்தமை அல்லது பெறுமதி இழந்தமை அல்லது வியாபாரம் மூடப்பட்டமை போன்றவை உட்பட, அத்தகைய கடன்பாட்டாளர்களினால் எதிர்நோக்கப்பட்ட நிதியியல் இடர்ப்பாடுகளைப் பரிசீலனையில் கொண்டு, ஒவ்வொரு விடயங்களாக ஆராய்ந்து பிற்போடுதல் வேண்டும்.

(ஆ) உரிமம்பெற்ற வங்கிகள் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையிலுள்ள கடன்பாட்டாளர்களினால் கேட்டுக் கொள்ளப்பட்ட சலுகைகளை வழங்குவதற்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும்.

(இ) தகைமையுடைய கடன்பாட்டாளர்களின் நிதியியல் இடர்ப்பாடுகள் மற்றும் மீள்கொடுப்பனவு இயலாற்றல் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு ரூபாவில் அத்துடன்/ அல்லது வெளிநாட்டு நாணயங்களில் வழங்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கும் கூடுதலான தற்போதுள்ள கொடுகடன் வசதிகளுக்கு மூலதனம், வட்டி அல்லது இரண்டினையும் பிற்போடும் வசதியை வழங்குதல் வேண்டும்.

(ஈ) உரிமம்பெற்ற வங்கிகள் முன்னைய சட்ட இசைவுத்தாமதம்/ பிற்போடப்பட்ட திட்டங்களின் போது சேர்ந்த தொகையினையும் (அதாவது மூலதனம், வட்டி மற்றும் தொடர்பான சட்ட இசைவுத்தாமதம்/ பிற்போடப்பட்ட தொகை தொடர்பில் சட்ட இசைவுத்தாமதம்/ பிற்போடப்பட்ட காலப்பகுதிக்கு பிரயோகிக்கத்தக்க வட்டி) தற்போதைய திட்டத்தின் போது சேர வேண்டிய தொகையினையும் (அதாவது மூலதனம் மற்றும் வட்டி) புதிய கடனொன்றாக ஒன்றுசேர்த்துக் கொள்ளுதல் வேண்டும். உரிமம்பெற்ற வங்கிகள் கீழே 1(உ)இல் குறிப்பிடப்பட்டவாறு 2021 செத்தெம்பர் 01இல் இருந்து தொடங்குகின்ற காலப்பகுதிக்கு மேலே குறிப்பிடப்பட்ட புதிய கடன்கள் மீதும் கீழே 1(ஊ) மற்றும் (எ)இல் குறிப்பிடப்பட்டவாறு மீள்கொடுப்பனவின் இணங்கப்பட்ட காலப்பகுதிக்காக தனியான கடன் தீர்ப்பனவு அட்டவணையின் அடிப்படையில் வட்டி வீதங்களை விதிக்கலாம்.

(உ) மேற்குறிப்பிட்ட பிற்போடலுக்காகப் பரிசீலனையில் கொள்ளப்பட்ட ஏதேனும் ரூபா வசதிகளைப் பொறுத்தவரையில், பிற்போடப்பட்ட காலப்பகுதிக்காக 2021 ஓகத்து 31ஆம் நாளன்று உள்ளவாறான 364 நாட்கள் திறைசேரி உண்டியலின் ஏல வீதத்துடன் ஆண்டிற்கு 1 சதவீதத்தினைக் கூட்டிய வீதத்தினை விஞ்சாத விதத்தில் (அதாவது 5.93 சதவீதம் + 1 சதவீதம் = ஆண்டிற்கு 6.93 சதவீதம்) உரிமம்பெற்ற வங்கிகள் வட்டி வீதமொன்றினை விதிக்கலாம். வெளிநாட்டு நாணயக் கடன்களைப் பொறுத்தவரை, உரிமம்பெற்ற வங்கிகள் சலுகை ரீதியான வட்டி வீதமொன்றினை விதிக்கலாம். மேலும், ஏற்கனவேயுள்ள வசதியின் பிற்போடப்பட்ட மூலதனத்தொகை நீங்கலாக, எஞ்சிய மூலதனத்தின் வெளிநின்ற நிலுவைக்கான வட்டி பிற்போடப்பட்ட காலப்பகுதி முடிவடைந்ததன் பின்னர் ஒப்பந்தம் செய்யப்பட்ட வட்டி வீதத்தில் தொடர்ந்தும் ஒன்றுசேரும்.

(ஊ) குத்தகை வசதிகள் உட்பட தவணைக் கடன்களைப் பொறுத்தவரை, உரிமம்பெற்ற வங்கியும் தொடர்பான கடன்பாட்டாளரும், மேலே 1(அ)இல் குறிப்பிடப்பட்டவாறு அத்தகைய கடன்பாட்டாளரினால் எதிர்நோக்கப்பட்ட நிதியியல் இடர்ப்பாடுகளைப் பரிசீலனையில் கொண்டு 2022 யூலை 01 இலிருந்து தொடங்குகின்ற 06 மாத காலப்பகுதி வரையில் மேலே 1(ஈ)இல் உள்ள புதிய கடன்களைத் தீர்ப்பதற்கான மீள்கொடுப்பனவுக் காலப்பகுதி தொடர்பில் இணக்கப்பாடொன்றிற்கு வருதல் அவசியமாகும்.

கடன்பாட்டாளர் அவ்வாறு செய்ய விரும்புவாராயின், அவர் புதிய கடனின் மீள்கொடுப்பனவினை முன்கூட்டிய திகதியொன்றில் ஆரம்பித்துக் கொள்ளலாம். எவ்வாறெனினும் கடன்பாட்டாளர் ஏற்கனவேயுள்ள வசதிகளின் மீள்கொடுப்பனவினை 2022 சனவரி 01இலிருந்து ஆரம்பித்தல் வேண்டும்.

(எ) மேலே 1(ஈ)இல் குறிப்பிடப்பட்ட புதிய கடன்களைக் கடன்பாட்டாளர் 6 மாத காலப்பகுதிக்கும் அப்பால் தீர்ப்பனவு செய்வதற்கு கோரிக்கையொன்றினை விடுக்கும் விடயத்தில் கடன்பாட்டாளரும் வங்கியும் 6 மாத காலப்பகுதிக்கு அப்பாலுள்ள காலப்பகுதிக்கான சலுகை வட்டி வீதம் தொடர்பில் இணக்கப்பாட்டிற்கு வருதல் வேண்டும்.

(ஏ) உரிமம்பெற்ற வங்கிகள், பிற்போடப்பட்ட தொகையினை நேரகாலத்துடன் மீள்கொடுப்பனவு செய்ய தொடங்குவதற்கு கடன்பாட்டாளரை ஊக்குவிக்கும் பொருட்டு, நேரகாலத்துடன் மீள்கொடுப்பனவினை தொடங்குவதிலுள்ள நன்மைகளையும் மீள்கொடுப்பனவுக் காலத்தினை நீடிப்பதிலுள்ள சிக்கல்களையும் கடன்பாட்டளருக்கு விளக்குதல் வேண்டும்.

(ஐ) மாற்று ஏற்பாடொன்றாக, உரிமம்பெற்ற வங்கிகள் கடன்பாட்டாளரின் மீள்கொடுப்பனவு இயலாற்றலையும் ஏற்றுக்கொள்ளத்தக்க மீளெழுச்சித் திட்டத்தினையும் பரிசீலனையில் கொண்டு, தற்போதுள்ள கொடுகடன் வசதிகளை ஒவ்வொரு விடயமாக ஆராய்ந்து நீண்ட காலப்பகுதியொன்றிற்கு மறுசீரமைத்துக் கொள்ளலாம். இவ்விடயத்தில் உரிமம்பெற்ற வங்கியும் கடன்பாட்டாளரும் தற்போது நிலவுகின்ற குறைந்த வட்டி வீதங்களைப் பரிசீலனையில் கொண்டு வட்டி வீதமொன்றிற்கு இணங்கிக் கொள்ளலாம்.

(ஒ) உரிமம்பெற்ற வங்கிகள் 2021 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் தொழிற்படு மூலதனம், அடகுபிடித்தல், தற்காலிக மேலதிகப் பற்று, குறுங்கால வர்த்தக நிதியிடல் வசதிகள் போன்றன உட்பட, ஆனால் இவ்வசதிகளுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்படாத விதத்தில் ஒவ்வொரு விடயமாக ஆராய்ந்து அத்தகைய செலுத்தப்பட வேண்டிய திகதிகள் 2021 செத்தெம்பர் 01 இலிருந்து 2021 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் வருமிடத்து சுழலும் கொடுகடன் வசதிகளின் செலுத்த வேண்டிய திகதிகளை நீடிக்கலாம். உரிமம்பெற்ற வங்கிகள் பிற்போடப்பட்ட காலப்பகுதிக்கு மாத்திரம், பிற்போடப்பட்ட தொகைக்கு மேலே 1(உ)இல் குறிப்பிடப்பட்டவாறு வட்டியை விதிக்கலாம்.

(ஓ) சலுகைக் காலத்தில் அதாவது 2021 செத்தெம்பர் 01 இலிருந்து 2021 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் சேரவேண்டிய தொகைக்கு தண்ட வீதங்கள் ஒன்றுசேர்க்கப்படவோ அல்லது விதிக்கப்படவோகூடாது.

(ஔ) உரிமம்பெற்ற வங்கிகள், தற்பொழுது காணப்படும் பயணத் தடைகள் காரணமாக பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளரிடமிருந்து கடன்களின் மீள்கொடுப்பனவுகளை ஒரு சில நாட்களினால் (உயர்ந்தபட்சம் 15 வேலைநாட்கள்) தாமதிக்குமாறு விடுக்கப்படும் கோரிக்கைகளை, அத்தகைய வசதிகளைப் பிற்போடாமல் அல்லது மறுசீரமைப்புச் செய்யாமல் அனுமதிக்கலாம். உரிமம்பெற்ற வங்கிகள் அத்தகைய தாமதத்திற்காக மேலதிக வட்டியையோ அல்லது வேறு ஏதேனும் விதிப்புக்களையோ அறவிடக்கூடாது.

2. 2021 செத்தெம்பர் 01ஆம் நாளன்று செயற்படா வகையிலுள்ள கொடுகடன் வசதிகளுக்கான சலுகைகள்

(அ) உரிமம்பெற்ற வங்கிகள், 2021 செத்தெம்பர் 01ஆம் நாளன்று உள்ளவாறான தற்போதுள்ள செயற்படாக் கடன் வசதிகளைக் கடன்பாட்டாளரின் மீள்கொடுப்பனவு இயலாற்றல் மற்றும் ஏற்றுக்கொள்ளத்தக்க மீளெழுச்சித் திட்டம் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு நீண்ட காலப்பகுதிக்கு மீள்அட்டவணைப்படுத்தலாம். இவ்விடயத்தில், உரிமம்பெற்ற வங்கியும் கடன்பாட்டாளரும் தற்போது நிலவுகின்ற குறைந்த வட்டி வீதங்களைப் பரிசீலனையில் கொண்டு வட்டி வீதம் உட்பட நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்குதல் வேண்டும்.

(ஆ) உரிமம்பெற்ற வங்கிகள், 2020 ஏப்பிறல் 01ஆம் நாளிலிருந்து 2021 செத்தெம்பர் 01ஆம் நாள் வரையான காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த தண்ட வட்டி வீதங்களை, அத்தகைய வசதிகள் இத்திட்டத்தின் கீழ் மீள்அட்டவணைப்படுத்தலுக்குப் பரிசீலனையில் கொள்ளப்பட்டுள்ளன என்ற நிபந்தனைக்குட்பட்டு தள்ளுபடி செய்யலாம் அல்லது விதிக்கலாம்.

(இ) உரிமம்பெற்ற வங்கிகள் 2020 ஏப்பிறல் 01 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ செயற்படாக் கடனாக வகைப்படுத்தப்பட்டிருக்கும் கொடுகடன் வசதிகளுக்கெதிராக 2021 திசெம்பர் 31 வரை அனைத்து வகையான அறவிடல் நடவடிக்கைகளையும் இடைநிறுத்துதல் வேண்டும். மேலும், மேற்குறிப்பிட்ட கடன்பாட்டாளர்கள் தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகள் கடன்பாட்டாளர்களை அளவுக்கதிகமாக தொடர்பு கொள்வது/ கட்டாயப்படுத்துவது அல்லது மேற்குறிப்பிட்ட வாடிக்கையாளர் தொடர்பில் கிரமமான சேகரிப்பு நடைமுறையொன்றின் பகுதியாக அவரிடம் விஜயம் செய்வது என்பன தொடர்பில் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ளுதல் வேண்டும். அறவிடல் தொடர்பில் நீதிமன்றங்களில் வழக்காடல்கள் இடம்பெற்றுவரும் சந்தர்ப்பங்களில் கடன்பாட்டாளர் இச்சலுகைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நீதிமன்றத்துடன் உடன்படிக்கையொன்றினைச் செய்து கொள்ளுதல் வேண்டும்.

3. உரிமம்பெற்ற வங்கிகள் சலுகைகளை வழங்குவது தொடர்பில் அளவுக்கதிகமான கட்டணங்களையோ அல்லது விதிப்புக்களையோ விதிக்கக்கூடாது என்பதுடன் அத்தகைய கட்டணங்கள் அல்லது விதிப்புக்கள் பற்றி கடன்பாட்டாளருக்கு எழுத்து மூலம் அறிவித்தலும் வேண்டும்.

4. உரிமம்பெற்ற வங்கிகள் ரூ.500,000 இற்குக் குறைவான பெறுமதியினைக் கொண்ட காசோலைகளுக்கான செல்லுபடியாகும் காலத்தினை 2021 ஒத்தோபர் 31 வரை நீடிக்கலாம்.

5. உரிமம்பெற்ற வங்கிகள் அனைத்துக் காசோலைக் கொடுப்பனவுகள் தொடர்பிலும் திரும்பும் காசோலைகள் மற்றும் கொடுப்பனவுகளை நிறுத்துதல் தொடர்பான விதிப்புக்களை 2021 செத்தெம்பர் 30 வரை நிறுத்துதல் வேண்டும்.

6. உரிமம்பெற்ற வங்கிகள், வெளிப்படையாகவே பாதிக்கப்பட்டவர்களுக்காக கொடுகடன் அட்டைகள் மற்றும் ஏனைய கொடுகடன் வசதிகள் மீதான பிந்திய கொடுப்பனவுகளுக்கான கட்டணத்தினை 2021 ஒத்தோபர் 31 வரையான காலப்பகுதிக்கு நிறுத்துதல் வேண்டும்.

7. இத்திட்டத்தின் கீழ் சலுகைகளை பெறத்தகைமையுடைய கடன்பாட்டாளர்களைப் பொறுத்த வரை, இத்திட்டத்தின் கீழான சலுகைகளைக் கோருவதற்குப் பதிலாக, அவரின்/ அவளின் தற்போதுள்ள கொடுகடன் வசதிகளை அல்லது சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் செலுத்த வேண்டிய தொகைகளைத் தீர்ப்பனவு செய்வதற்கான விருப்பத்தினை தெரிவிக்குமிடத்து, உரிமம்பெற்ற வங்கிகள் வட்டி தள்ளுபடிகளை வழங்குவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றன. மேலும், உரிமம்பெற்ற வங்கிகள் அத்தகைய கடன்பாட்டாளர் தொடர்பில் நேரகாலத்துடனான தீர்ப்பனவிற்கான கட்டணத்தினையும் குத்தகை வசதிகளின் எதிர்கால வட்டியினை அறவிடுவது உட்பட வேறு ஏதேனும் கட்டணங்களையும் விதிப்புக்களையும் தள்ளுபடி செய்தல் வேண்டும்.

8. இலங்கை கொடுகடன் தகவல் பணியத்திற்கு அறிக்கையிடுதல்

(அ) உரிமம்பெற்ற வங்கிகள், இத்திட்டத்தின் கீழ், தகைமையுடைய கடன்பாட்டாளரிடமிருந்தான கடன் விண்ணப்பங்களை கொடுகடன் தகவல் பணியகத்தின் மோசமான பதிவேடுகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு நிராகரிக்கக்கூடாது.

(ஆ) உரிமம்பெற்ற வங்கிகள், கொடுகடன் தகவல் பணியகத்தின் ஆலோசனையுடன் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பிற்போடல்/ மறுசீரமைத்தல் அறிக்கை தொடர்பில் அறிக்கையிடுகின்ற மாதிரியொன்றினைத் தயாரித்தல் வேண்டும். இதன் மூலம் இத்திட்டத்தில் பங்கேற்பது, எதிர்காலத்தில் கடன்பாட்டாளரின் கொடுகடன் மதிப்பெண்ணின் மீது தாக்கத்தினையோ அல்லது எதிர்காலக் கொடுகடன் தகவல் பணியகத்தின் எதிர்கால அறிக்கைகளில் எதிர்மறையான தன்மையினைப் பிரதிபலிக்கவோமாட்டாது.

9. மீள்நிதியிடல்/ வட்டி உதவுதொகைத் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான சலுகைகள்

பல்வேறு மீள்நிதியிடல் அல்லது வட்டி உதவுதொகைத் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான சலுகைகளை வழங்குவது தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகள், தொடர்பான முகவர்களிடமிருந்து தேவையான வழிகாட்டல்களை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

10. கோரிக்கையினைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி

(அ) அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் இச்சுற்றறிக்கையினை 3 நாட்களுக்குள் அனைத்துக் கிளைகளுக்கும் சுற்றோட்டப்படுத்தல் வேண்டுமென்பதுடன் 7 நாட்களுக்குள் தேவையான உள்ளக வழிகாட்டல்கள்/ சுற்றறிக்கைகளை வழங்குதலும் வேண்டும்.

(ஆ) தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் 2021 செத்தெம்பர் 21 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ எழுத்து மூலமாக அல்லது இலத்திரனியல் வழிமுறையூடாக மேற்குறிப்பிட்ட சலுகைகளுக்கான கோரிக்கையினை விடுத்தல் வேண்டும். உரிமம்பெற்ற வங்கிகள் அனைத்து தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கு அச்சு அத்துடன்/அல்லது மின்னஞ்சல் மற்றும் குறுஞ்செய்தி உட்பட இலத்திரனியல் ஊடகங்களூடாக சலுகைகள், இறுதித் திகதி, சமர்ப்பிப்பதற்கான விண்ணப்பப் படிவம் என்பன பற்றி விரைவாக தொடர்பூட்டுதல் வேண்டும்.

(இ) உரிமம்பெற்ற வங்கிகள் 2021 செத்தெம்பர் 21இற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கையினை அத்தகைய கோரிக்கை தாமதமாக செய்யப்படுவதற்கான காரணங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருப்பின் அனுமதிக்கலாம்.

(ஈ) கடன் மீள்கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்வதற்கான இயலாற்றலைக் கொண்டுள்ள எவரேனும் தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் அத்தகைய கொடுகடன் வசதிகளை பிற்போடுவது அல்லது மறுசீரமைப்புச் செய்வதற்கான கோரிக்கையினை விடுப்பதற்குப் பதிலாக அத்தகைய கடனை மீளச்செலுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர்.

(உ) உரிமம்பெற்ற வங்கிகள் கொடுகடன் வசதிகளைப் பிற்போடுவது அல்லது மறுசீரமைக்கும் அமைப்பு தொடர்பில் கடன்பாட்டாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது என்பதனை ஒப்புதலுக்கு முன்னர் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் கடன்பாட்டாளரின் சம்மதத்தினை எழுத்து மூலம் அல்லது இலத்திரனியல் ஊடகம் மூலம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

(ஊ) விண்ணப்பத்தினை நிராகரிப்பது தொடர்பான விடயத்தினைப் பொறுத்தவரை, உரிமம்பெற்ற வங்கிகள் சாத்தியமானளவிற்கு 14 நாட்களுக்கு முன்னதாக எழுத்து மூலமாக அல்லது இலத்திரனியல் ஊடகம் மூலமாக அத்தகைய நிராகரிப்பிற்கான காரணங்களுடன் விண்ணப்பதாரிக்கு அறிவித்தல் வேண்டும். அத்தகைய நிராகரிப்பிற்கெதிராக கடன்பாட்டாளர் பணிப்பாளர், நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம், இலங்கை மத்திய வங்கிக்கு இதனை மீளாய்வு செய்வதற்குக் கோருவதற்கான வாய்ப்பு காணப்படுகிறது. உரிமம்பெற்ற வங்கிகள் அதே நிராகரித்தல் கடிதத்தின் மூலமாக கடன்பாட்டாளர் விரும்புமிடத்து, மீளாய்வு வசதிகளை அவராகவே பயன்படுத்திக் கொள்வதற்கு தகைமை பெற்றுள்ளார் என்பது பற்றி விண்ணப்பதாரிக்கு ஆலோசனை வழங்குதல் வேண்டும்.

11. சட்ட இசைவுத்தாமதம் தொடர்பான கணக்கீட்டுப் பரிசீலனைகள்

உரிமம்பெற்ற வங்கிகள் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சலுகைகளுக்கான கணக்குகளை 2020 ஒத்தோபர் 28ஆம் திகதியிடப்பட்ட 2020ஆம் ஆண்டின் 9ஆம் இலக்கச் சுற்றறிக்கைக்கிணங்க கணக்கீடு செய்யவேண்டும். இடர்நேர்வுகளை அதிகரிக்கின்ற கடன்பாட்டாளர்கள் அல்லது துறைகளைப் பொறுத்தவரை உரிமம்பெற்ற வங்கிகள் போதுமான பழுதுறல் கட்டணங்களை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. இது தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு மேலதிக வழிகாட்டல்கள்/ தெளிவுபடுத்தல்கள் தேவைப்படுமிடத்து இலங்கை பட்டயம்பெற்ற கணக்காளர்களையும் மற்றும் கணக்காய்வாளர்களையும் நாடலாம்.

12. அறிக்கையிடும் தேவைப்பாடு

உரிமம்பெற்ற வங்கிகள் அவற்றின் கடன்பாட்டாளர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சலுகைகளின் விபரங்களை 2021 செத்தெம்பர் 30ஆம் நாளிலிருந்து ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாதத்தின் 30ஆம் திகதியிலுள்ளவாறு 15 வேலை நாட்களுக்குள் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும். அறிக்கையிடுகின்ற படிவம் காலக்கிரமத்தில் சுற்றோட்டப்படுத்தப்படும்.

ஒப்பம்
**பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்**
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2021ஆம் ஆண்டின் 09ஆம் இலக்கச் சுற்றறிக்கை** 2021 செத்தெம்பர் 08

**ஏற்றுக்கொள்ளத்தக்க கொடுகடன் தரமிடல் முகவராண்மையொன்றாக லங்கா றேரிங் ஏஜென்சி லிமிடட்டை அங்கீகரித்தல்**

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான பாசல் IIIஇற்கு கீழான மூலதனத் தேவைப்பாடுகள் மற்றும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுடன் தொடர்புடைய ஏனைய தொடர்புபட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீது 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் நோக்கத்திற்காக ஏற்றுக்கொள்ளத்தக்க வெளிவாரி கொடுகடன் மதிப்பீட்டு நிறுவனமொன்றாக இலங்கை மத்திய வங்கி, லங்கா றேரிங் ஏஜென்சி லிமிடட்டை (LRA) அங்கீகரித்துள்ளது.

இதற்கமைய, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்குமான பாசல் III இற்கு கீழ் வருகின்ற மூலதனத் தேவைப்பாடுகள் மீதான 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் 2.3ஆம் இலக்க அட்டவணை 1 பிற்சேர்க்கை IVஇன் விடயத்தின் கீழ் அட்டவணை 1 மற்றும் அட்டவணை 3 இணைப்பிலுள்ளவாறு திருத்தப்படுகின்றன.

**பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்**
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

இப்பணிப்புரையின் இணைப்பு I இனை https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/bsd_circular_no_9_of_2021_t.pdf என்ற வெப்தளத்தில் பார்வையிடலாம்.

**2021ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்** 2021 செத்தெம்பர் 08

**இறக்குமதிகளுக்கு எதிராக எல்லைத் தேவைப்பாடுகள்**

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும்76ஜே(1)ஆம் பிரிவுகளினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளுக்கிணங்க விடுக்கப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கியானது வங்கித்தொழில் முறைமையில் செலாவணி வீதத்தின் உறுதிப்பாட்டையும் வெளிநாட்டு நாணயத்தின் திரவத்தன்மையையும் பேணும் நோக்குடன், மறு அறிவித்தல் வரை உடனடியாக நடைமுறைக்குவரும் வகையில் குறித்த சில அத்தியாவசியமற்ற மற்றும் அவசரமற்ற பொருட்களின் இறக்குமதிகள் தொடர்பில் பின்வரும் வழிமுறைகளை பின்பற்றுமாறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் தேசிய சேமிப்பு வங்கிகளையும் கோருகின்றது

1. ஏற்றுக்கொள்ளல் நியதிகளுக்கெதிரான ஆவணங்களின் கீழ் விடுக்கப்பட்ட அட்டவணை ஏ யில் குறித்துரைக்கப்பட்ட இறக்குமதிகளின் பொருட்பட்டியல் பெறுமதி மீது 100 சதவீத வட்டியற்ற காசு எல்லையை பேணுதல் வேண்டும்.

2. தேசிய சேமிப்பு வங்கியைப் பொறுத்தவரையில், மேலே பணிப்புரை 1இல் குறித்துரைக்கப்பட்ட எல்லைத் தேவைப்பாடுகளானது கொடுகடன் நியதிகளின் கடிதத்தின் கீழ் விடுக்கப்பட்ட அத்தகைய இறக்குமதியாளர்களுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

3. இந்த பணிப்புரையினுள் உள்ளடக்கப்படுகின்ற பொருட்களின் இறக்குமதியை ஏற்கனவேயுள்ள ஏற்றுக்கொள்ளல் நியதிகளுக்கெதிரான ஆவணங்கள் உள்ளடக்குகின்ற பட்சத்தில், மேலே பணிப்புரை 1இல் கோரப்பட்டவாறான காசு எல்லை வைப்புக்களினால் அத்தகைய அதிகரிப்பு உள்ளடக்கப்படாதவரை உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினாலும் தேசிய சேமிப்பு வங்கியினாலும் அத்தகைய ஏற்றுக்கொள்ளல் நியதிகளுக்கெதிரான ஆவணங்களின் பெறுமதியில் அதிகரிப்பு அனுமதிக்கப்படலாகாது.

4. அத்தகைய வட்டியற்ற காசு எல்லையானது இறக்குமதியாளரால் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்டுகின்ற சந்தர்ப்பத்தில் ஆவணங்களை வெளியிடுகின்ற வங்கியுடன் இறக்குமதியாளரினால் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

5. இந்த பணிப்புரைகளின் கீழ் உள்ளடக்கப்படாத பொருட்களை அதே பொருட்பட்டியல் கருத்திற்கொள்ளாத போது அத்தகைய வட்டியற்ற காசு எல்லைத் தேவைப்பாடானது பொருட்பட்டியலின் மொத்த பெறுமதியாக இருத்தல் வேண்டும்.

6. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் தேசிய சேமிப்பு வங்கியும் எல்லை வைப்பு கிடைக்கப்பெற்றவுடன் பொருட்பட்டியலை செயற்படுத்துவதற்கு அங்கீகரிக்கும்.

7. எல்லை வைப்பானது இலங்கையின் வங்கித்தொழில் வழிமுறைகள் மற்றும் இறக்குமதிகளின் அப்புறப்படுத்தலுடன் தொடர்புடைய சுங்க ஆவணங்களின் ஊடாகவும் கொடுப்பனவுகள் தொடர்பான ஆவணச் சான்று வழங்கலின் மீது விடுத்தல் வேண்டும்.

8. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் தேசிய சேமிப்பு வங்கியும், இத்தகைய இறக்குமதியாளர்கள் தொடர்பில் எல்லை வைப்புக்களை வைப்பிலிடுவதற்கு இறக்குமதியாளர்களுக்கு இயலச்செய்வதற்கு எந்தவொரு கடன் வசதிகளையும் வழங்கலாகாது.

9. இந்த பணிப்புரைகளின் ஏற்பாடுகளானது தற்போது வலுவிலுள்ள ஏதேனும் தேவைப்பாட்டிற்கு மேலதிகமாக செல்லுபடியாகுமென்பதுடன் அத்தகைய வேறு தேவைப்பாடுகள் பொருட்களின் இறக்குமதிகள் தொடர்பில் ஏதேனும் சட்டத்தின் நியதிகளில் அறிமுகப்படுத்தப்படலாம்.

**பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்**
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2021ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கச் சுற்றறிக்கை** 2021 செத்தெம்பர் 13

**கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட சுற்றுலா தொழில் துறையிலுள்ள வியாபாரங்கள் மற்றும் தனியாட்களுக்கான படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினை நீடித்தல்**

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட சுற்றுலா தொழில் துறையில் ஈடுபட்டுள்ள வியாபாரங்கள் மற்றும் தனியாட்களினால் எதிர்நோக்கப்பட்ட சவால்களை அவர்கள் எதிர்கொள்ளச் செய்யும் பொருட்டு, இலங்கை மத்திய வங்கி உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் (இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பிடப்படும்) 2020 ஓகத்து 26ஆம் திகதியிடப்பட்ட 2020இன் 8ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் கீழ், சுற்றுலாத் துறைக்கு வழங்கப்பட்ட படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினை கீழே குறித்துரைக்கப்பட்டவாறு 2021 ஒத்தோபர் 1 இலிருந்து ஆரம்பமாகின்ற மேலுமொரு ஒன்பது மாத காலப்பகுதிக்கு (இதனகத்துப் பின்னர் திட்டம் எனக் குறிப்பிடப்படும்) நீடிக்குமாறு கேட்டுக் கொண்டது. எனினும், உரிமம்பெற்ற வங்கிகள் கடன்பாட்டாளரின் கோரிக்கையின் பேரில் வேறு ஏதேனும் தேர்வுகளையும் வழங்கலாம்; எனினும், கடன்பாட்டாளர்களுக்காக அவ்வாறு வழங்கப்படுகின்ற ஒட்டுமொத்த நன்மைகள் இச்சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்படுகின்றவற்றினை விடக் குறைவானவையாக இருக்கக்கூடாது. இதற்கமைய, இச்சுற்றறிக்கையானது அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளிடையேயும் ஒரே சீரான தன்மையில் இத்திட்டத்திற்குக் காத்திரமான தன்மையினை வழங்கும் பொருட்டு விடுக்கப்படுகிறது.

அ. 2020இன் 8ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் பின்வரும் ஏற்பாடுகள் திருத்தப்பட்டிருப்பதுடன் 2020இன் 8ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் மற்றைய ஏற்பாடுகள் மாற்றமின்றி தொடர்ந்துமிருக்கும்.

1. பொதுவான நியதிகளும் நிபந்தனைகளும்

1.1 கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட தகைமையுடைய வியாபாரங்களின் ஊழியர்கள் மற்றும் தகைமையுடைய சங்கங்களின் உறுப்பினர்கள். அத்தகைய ஊழியர்கள் மற்றும் உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், மேலே (அ)இல் குறிப்பிடப்பட்ட தொடர்பான நிறுவனங்களுடன் வியாபாரங்கள் அல்லது சங்கங்கள் செய்து கொண்டுள்ள பதிவுகள் போதுமானவையாகக் கருதப்படல் வேண்டும்.

1.2 படுகடன் சட்ட இசைவுத்தாமதமானது, மூலதனம் மற்றும் வட்டி இரண்டிற்குமாக 2021 ஒத்தோபர் 1 இலிருந்து தொடங்கி 2022 யூன் 30 வரையான மேலும் ஒன்பது மாத காலப்பகுதிக்கான சட்ட இசைவுத்தாமதத்தினைக் குறிக்கிறது.

1.3 சட்ட இசைவுத்தாமத்தினைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பும் தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் அத்தகைய கடன்

இசைவுத்தாமதத்தினைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக உரிமம்பெற்ற வங்கிகளிடம் 2021 ஒத்தோபர் 15 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கோரிக்கையொன்றை விடுத்தல் வேண்டும். 2021 ஒத்தோபர் 15 இற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஏதேனும் கோரிக்கைகளைப் பொறுத்தவரை, அத்தகைய கோரிக்கையினைத் தாமதமாகச் செய்வதற்கான காரணங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருப்பின், அவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு உரிமம்பெற்ற வங்கிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. கடனை மீளச் செலுத்துவதற்கு இயலாற்றலைக் கொண்டுள்ள எவரேனும் தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் இந்நீடிப்பிற்கு கோரிக்கை விடுப்பதற்குப் பதிலாக அத்தகைய கடனை மீளச் செலுத்துதல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர்.

**2. படுகடன் சட்ட இசைவுத்தாமத்தினைச் சீரமைத்தல்**

2.1 2021 ஒத்தோபர் 1 இலிருந்து தொடங்கி 2022 யூன் 30 வரையான சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய மூலதனத்தினையும் வட்டியையும் உரிமம்பெற்ற வங்கிகள் தவணைக் கடனொன்றிற்கு மாற்றுதல் வேண்டும். உரிமம்பெற்ற வங்கிகள் முன்னர் வழங்கப்பட்ட சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய மூலதனத்தினையும் வட்டியையும் 2021 ஒத்தோபர் 1 இலிருந்து 2022 யூன் 30 வரையான காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய மூலதனம் மற்றும் வட்டியுடன் ஒன்றுசேர்த்தல் வேண்டும்.

2.2 உரிமம்பெற்ற வங்கிகள் அவ்வாறு மாற்றப்பட்ட கடன்களை நீடிக்கப்பட்ட சட்ட இசைவுத்தாமதம் முடிவடைந்ததும் அறவிடத் தொடங்கலாம்.

2.3 இச்சுற்றறிக்கையின் கீழ், உரிமம்பெற்ற வங்கிகள் செயற்படுகின்ற கடன்களாகக் கருதப்பட்டவை தொடர்பில், 2021 ஒத்தோபர் 1இல் உள்ளவாறான ஒன்றுசேர்ந்த மற்றும் செலுத்தப்படாத தண்ட வட்டி ஏதுமிருப்பின் அவற்றைத் தள்ளுபடி செய்தல் வேண்டும். சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் தண்ட வட்டியை விதிக்கவோ அல்லது ஒன்றுசேர்க்கவோகூடாது.

**3. அறிக்கையிடல் தேவைப்பாடு**

உரிமம்பெற்ற வங்கிகள் கடன்பாட்டாளர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சட்ட இசைவுத்தாமதம் பற்றிய விபரங்களை 2020இன் 8ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் கீழ் விபரிக்கப்பட்ட படிவத்தில் ஒவ்வொரு மாதமும் 30ஆம் திகதியிலுள்ளவாறு 15 வேலை நாட்களுக்குள் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு தொடர்ச்சியாக அறிவித்தல் வேண்டும்.

ஆ. இச்சுற்றறிக்கையில் பின்வரும் புதிய ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன:

(1) மாற்று ஏற்பாடொன்றாக, உரிமம்பெற்ற வங்கிகள் கடன்பாட்டாளரின் மீள்கொடுப்பனவு இயலாற்றலையும் ஏற்றுக்கொள்ளத்தக்க புத்துயிரளித்தல் திட்டத்தினையும் பரிசீலனையில் கொண்டு தற்போதுள்ள கொடுகடன் வசதிகளை நீண்ட காலப்பகுதியொன்றிற்கு சீரமைத்துக் கொள்ளலாம். இவ்விடயத்தினைப் பொறுத்தவரையில், உரிமம்பெற்ற வங்கியும் கடன்பாட்டாளரும், தற்பொழுது நிலவுகின்ற குறைந்த வட்டி வீதங்களைப் பரிசீலனையில் கொண்டு சலுகை வட்டி வீதம் உட்பட நியதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பில் இணக்கப்பாடொன்றிற்கு வருதல் வேண்டும்.

(2) தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் இச்சுற்றறிக்கையின் கீழ் சட்ட இசைவுத்தாமதத்தினைத் தெரிவுசெய்வதற்குப் பதிலாக, தற்போதுள்ள கடன் வசதிகளை அல்லது சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் செலுத்த வேண்டிய தொகைகளைத் தீர்ப்பனவு செய்வதற்கு அவர்/ அவள் தமது விருப்பத்தினைத் தெரிவிக்கும் சந்தர்ப்பத்தில் உரிமம்பெற்ற வங்கிகள் வட்டி வீத தள்ளுபடிகளை வழங்குவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றன. மேலும், உரிமம்பெற்ற வங்கிகள் உரிய காலத்திற்கு முன்னரான தீர்ப்பனவுக் கட்டணத்தினையும் குத்தகை வசதிகளின் எதிர்கால வட்டி ஏதுமிருப்பின் அவற்றின் அறவிடல் உள்ளிட்ட விதிப்புக்களையும் தள்ளுபடி செய்தல் வேண்டும்.

(3) உரிமம்பெற்ற வங்கிகள் அத்தகைய வசதிகள் 2020 ஏப்பிறல் 01 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தப்பட்டிருக்குமிடத்து அத்தகைய செயற்படா வசதிகளுக்கெதிரான அனைத்து வகை அறவிடல் நடவடிக்கைகளையும் 2022 யூன் 30 வரை இடைநிறுத்துதல் வேண்டும். மேலும், உரிமம்பெற்ற வங்கிகள் கடன்பாட்டாளர்களை அளவுக்கதிகமாக தொடர்பு கொள்வது/ கட்டாயப்படுத்துவது அல்லது மேற்குறிப்பிட்ட வாடிக்கையாளர் தொடர்பில் கிரமமான சேகரிப்பு நடைமுறையொன்றின் பகுதியாக அவரிடம் விஜயம் செய்வது என்பன தொடர்பில் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ளுதல் வேண்டும். அறவிடல் தொடர்பில் நீதிமன்றங்களில் வழக்காடல்கள் இடம்பெற்றுவரும் சந்தர்ப்பங்களில் கடன்பாட்டாளர் இச்சலுகைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நீதிமன்றத்துடன் உடன்படிக்கையொன்றினைச் செய்து கொள்ளுதல் வேண்டும்.

(4) உரிமம்பெற்ற வங்கிகள் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சலுகைக்கான கணக்குகளை இலங்கை கணக்கீட்டு நியமம் - இ.நி.அ.நி.9: நிதியியல் சாதனங்களைப் பின்பற்றுவது தொடர்பாக உரிமம்பெற்ற வங்கிகளுக்கு இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட வழிகாட்டல்களுக்கிணங்க கணக்கீடு செய்தல் வேண்டும். உரிமம்பெற்ற வங்கிகள் சுற்றுலாத் துறையினை இடர்நேர்வினை அதிகரிக்கின்ற துறையாக அடையாளம் கண்டு அதற்கேற்ப நடந்து கொள்ளுதல் வேண்டும். உரிமம்பெற்ற வங்கிகள் இது தொடர்பில் மேலதிக வழிகாட்டல்/ தெளிவுபடுத்தல் பற்றி இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம் மற்றும் கணக்காய்வாளர்களிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

(5) உரிமம்பெற்ற வங்கிகள் பல்வேறுபட்ட மீள்நிதியிடல் அல்லது வட்டி உதவுதொகை திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்காக சலுகைகளை வழங்குவது பற்றி தொடர்பான முகவர்களிடமிருந்து தேவையான வழிகாட்டல்களைப்

பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

(6) உரிமம்பெற்ற வங்கிகள் கொடுகடன் வசதிகளைப் பிற்போடுவது அல்லது மறுசீரமைப்பது பற்றி, ஒப்புதலுக்கு முன்னரேயே கடன்பாட்டாளர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பத்தினை நிராகரிப்பது தொடர்பான விடயத்தினைப் பொறுத்தவரை, உரிமம்பெற்ற வங்கிகள் சாத்தியமானளவிற்கு 14 நாட்களுக்குள் எழுத்து மூலமாக/ இலத்திரனியல் ஊடகம் மூலமாக அத்தகைய நிராகரிப்பதற்கான காரணங்களுடன் விண்ணப்பதாரிக்கு அறிவித்தல் வேண்டும். அத்தகைய நிராகரிப்பிற்கெதிராக கடன்பாட்டாளர் பணிப்பாளர், நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம், இலங்கை மத்திய வங்கிக்கு இதனை மீளாய்வு செய்யுமாறு கோருவதற்கான சந்தர்ப்பமும் காணப்படுகிறது. உரிமம்பெற்ற வங்கிகள் நிராகரிக்கின்ற அதே கடிதத்தின் மூலமாக கடன்பாட்டாளர் விரும்புமிடத்து, மீளாய்வு வசதிகளை விண்ணப்பதாரி அவராகவே சரியாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு உரித்துடையவராக இருக்கின்றார் என்பது தொடர்பில் ஆலோசனை வழங்குதல் வேண்டும்.

(7) உரிமம்பெற்ற வங்கிகள் இச்சுற்றறிக்கையினை 3 நாட்களுக்குள் அனைத்துக் கிளைகளுக்கும் சுற்றோட்டப்படுத்தல் வேண்டும் என்பதுடன் தேவையான உள்ளக வழிகாட்டல்களை/ சுற்றறிக்கைகளை 7 நாட்களுக்குள் வழங்குதலும் வேண்டும்.

**பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்**
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2021ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்** 2021 செத்தெம்பர் 14

**உரிமம்பெற்ற வங்கிகளின் கொடுகடன் வசதிகளின் வகைப்படுத்தல், அங்கீகரித்தல் மற்றும் அளவிடல்**

திருத்தப்பட்டவாறான, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46ஏ,46 (1) அத்துடன் 76(ஜே)(1) ஆகிய பிரிவுகளினால் விடுக்கப்பட்ட அதிகாரங்களின் பின்பற்றுகைக்கமைவாக, இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையானது இலங்கை கணக்கீட்டு நியமம், இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9: நிதியியல் சொத்துக்கள் (இதனகத்துப்பின்னர் நிதி அறிக்கையிடல் நியமம் 9 என அறியப்படும்) மற்றும் வங்கித்தொழில் துறையில் நிலையானதும் முன்மதியுடையதுமான நடைமுறைகளின் நிறுவலுடன் உரிமம்பெற்ற வங்கிகளில் கொடுகடன் வசதிகளின் வகைப்படுத்தல், அங்கீகரித்தல் மற்றும் அளவிடல் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்தி இணக்கப்படுத்தும் நோக்குடன் உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளின் (இதனகத்துப்பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் என அறியப்படும்) கொடுகடன் வசதிகளின் வகைப்படுத்தல், அங்கீகரித்தல் மற்றும் அளவிடல் மீதான பின்வரும் பணிப்புரைகளை இத்தால் விடுக்கின்றது.

1. **அதிகாரமளித்தல்**

1.1 வங்கித்தொழில் சட்டத்தின் 46(1)பிரிவின் நியதிகளுக்கமைவாக, வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல்வாய்ந்த தன்மையை உறுதிசெய்யும் நோக்கில், நாணயச் சபைக்கு, அத்தகைய வங்கியின் அல்லது வங்கிகளின் வியாபாரத்தின் எந்தவொரு அம்சமும் எவ்வாறு கொண்டு நடாத்தப்படவேண்டுமென்பது தொடர்பில் அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் பணிப்புரைகளை விடுப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

1.2 வங்கித்தொழில் சட்டத்தின் 76ஜே(1) பிரிவின் நியதிகளுக்கமைவாக, நாணயச் சபைக்கு, அத்தகைய வங்கிகளின் வியாபாரத்தின் எந்தவொரு அம்சமும் எவ்வாறு கொண்டுநடாத்தப்படவேண்டுமென்பது தொடர்பில் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்கு அல்லது உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளின் எந்தவொரு வகைக்கும் பணிப்புரைகளை வழங்குவதற்கு அதிகாரம ளிக்கப்பட்டுள்ளது.

2. **பிரயோகம் மற்றும் செயற்பரப்பு**

2.1 இலங்கை கணக்கீட்டு நியமனங்களின் தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக இந்த பணிப்புரைகளில் காணப்படுகின்ற அனைத்து தேவைப்பாடுகளும் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு ஏற்புடைத்தாதல் வேண்டும்.

3. **வரைவிலக்கணங்கள்**

3.1 இந்த பணிப்புரைகளின் நோக்கங்களுக்காக பின்வரும் வரைவிலக்கணங்கள் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

3.1.1 கொடுகடன் வசதிகள் என்பது,

அ. ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானமூடாக சீர்மதிப்புப் பெறுமதி அல்லது பதிவழிக்கப்பட்ட கிரயத்தில் அளவிடப்பட்ட ஐந்தொயையில் காணப்படுகின்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள் அத்துடன் குத்தகை பெறுகைகளின் தேறிய முதலீடு; அத்துடன்

ஆ. தங்கியிருக்கின்ற பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கான கடப்பாடுகள் உள்ளடங்கலாக ஐந்தொகைக்கு வெளியான சொத்துக்கள் மற்றும் உத்தரவாதங்கள்,முறிகள்,கொடுகடன் கடிதங்கள், ஏற்றுக்கொள்ளல்கள் உட்பட கொடுகடன் அட்டைகள் மற்றும் மேலதிகப்பற்று வசதிகள் போன்ற கொடுகடன் வசதிகளின் எடுப்பனவு செய்யப்படாத கடப்பாட்டின் கூறினையும் உள்ளடக்குகின்றது.

3.1.2 கடன்பாட்டாளரானது தனிப்பட்டவர்கள், கம்பனிகள், இலங்கை அரசாங்கம், அரச கூட்டுத்தாபனங்கள், நிதியச் சபைகள், நிறுவனங்கள், அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகள், தனிப்பட்டவர்கள் மற்றும் ஏதேனும் வேறு நிறுவனத்தின் சங்கங்களை உள்ளடக்குதல் வேண்டும்.

3.1.3 பணிப்பாளர்கள் சபை என்பது உள்நாட்டில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகளையும் வெளிநாட்டு வங்கிகளைப் பொறுத்தவரையில் தலைமை அலுவலகம்/ பிரதேச கண்காணிப்பு அலுவலகம் என்பவற்றின் பணிப்பாளர்கள் சபை எனப் பொருட்படுதல் வேண்டும்.

3.1.4 தலைமை நிருவாக அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணி என்பது தலைமை நிருவாக அதிகாரி மற்றும் வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்டவாறு உரிமம்பெற்ற வங்கிகளின் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை செயற்படுத்துகின்ற அலுவலர்கள் எனப் பொருள்படுதல் வேண்டும்.

**4. கொடுகடன் வசதிகளுக்கான ஆளுகைக் கட்டமைப்பு**

4.1 பணிப்பாளர்கள் சபை, தலைமை நிறைவேற்று அதிகாரி மற்றும் தொடர்புடைய கண்காணித்தல் ஆளணியினர், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், ஏற்புடையதான இலங்கை கணக்கீட்டு நியமங்கள், ஏற்புடைய ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை வழிகாட்டலுக்கு அமைவாக உரிமம்பெற்ற வங்கியில் கொடுகடன் இடர்நேர்வினை முகாமை செய்வதற்கு உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன்மிக்க முறைமை உள்ளடங்களாக வலுவான கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை உரிமம்பெற்ற வங்கி கொண்டுள்ளமையை உறுதிப்படுத்துவதற்கு பொறுப்புடையவர்களாவர்.

4.2 பணிப்பாளர்கள் சபை, உரிமம்பெற்ற வங்கியின் கொடுகடன் கொள்கையானது உரிமம்பெற்ற வங்கிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பு தொடர்பான வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாகப் குறைந்தபட்சம் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருப்பதை உறுதிசெய்தல் வேண்டும்.

4.2.1 கொடுகடன் வசதிகளின் வகைப்படுத்தல், அளவிடல் மற்றும் அங்கீகரித்தல் தொடர்பான கொள்கை;

4.2.2 போதுமான கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகள் மற்றும் ஒட்டுமொத்த கொடுகடன் வாழ்க்கைச் சங்கிலியையும் உள்ளடக்குகின்ற உரிய நேரத்திலான இனங்காணல், அளவிடல், கண்காணித்தல், அறிக்கை, மற்றும் கொடுகடன் இடர்நேர்வினை தணிப்பதற்கான செயன்முறைகள். அத்தகைய செயன்முறையானது முறைமைகள், நடைமுறைகளின் ஆற்றல்மிக்க பின்பற்றுகை மற்றும் கடன்கள் மற்றும் முற்பணங்களின் கொடுகடன் இடர்பாட்டினை மதிப்பீடு செய்வதற்கும் அளவிடுவதற்குமான கட்டுப்படுத்தல்களை மேற்கொள்கின்ற அதேவேளையில், ஆவணப்படுத்தப்படலும் வேண்டும்;

4.2.3 கொடுகடன் வசதிகளின் உரிய நேரத்திலான அடையாளப்படுத்தலுக்குரிய போதியாளவான கொள்கைகளும் செயன்முறைகளும், செயற்படுகின்ற/ செயற்படா சொத்துக்களின் கீழான முகாமைத்துவம், போதுமான பெறுமதியிழப்பு கொடுப்பனவுகளை தீர்மானித்தல் அத்துடன் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிற்கமைவாக கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறையை வலுவூட்டுதல்.

4.2.4 பின்வருவனவற்றின் மீது தெளிவான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டமையை உறுதிப்படுத்துதல்;

(அ) சாத்தியமான இடர்நேர்வு பிரமாணங்களின் அடிப்படையில் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்ட கடன்களை எவ்வாறு வேறுப்படுத்தல் உள்ளடங்களாக கடன்களை ஒழுங்குப்படுத்தல்.

(ஆ) பெறுமதியிழப்பு நோக்கங்களுக்காக தவணை தவறும் நிகழ்தகவு, இழப்புகளை தருகின்ற தவணை தவறல்கள், பொருளாதார துறைத் திருத்தங்கள் போன்றவற்றை தீர்மானிப்பதற்கான முறையியல்கள்;

(இ) மதிப்பீட்டு வரையறைகளும் பெறுமதியிழத்தலுக்காக தனிப்பட்ட ரீதியில் மதிப்பீடு செய்யப்படவேண்டிய கொடுகடன் வசதிகளின் கடன்பாட்டாளர் ரீதியான உள்ளடக்கம்;

(ஈ) பிணையானது அத்தகைய பிணை மீதான மதிப்பீட்டுத் தேவைப்பாடுகளுடன் சேர்த்து பெறுமதியிழப்பிற்காக கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன் கீழே பணிப்புரை 12இற்கமைவாக அத்தகைய மதிப்பீடுகளுக்காக பயன்படுத்தப்படவேண்டிய நுட்பங்களினதும் தரவுகளினதும் விவரக்குறிப்பு;

(உ) வேறு வகையில் சேர்க்கப்படாத சாத்தியமான பொருளாதார அதிர்வுகளை பிரதிபலிக்கின்ற எதிர்பார்க்கப்படுகின்ற இழப்பு கணிப்பீடுகளை உறுதிப்படுத்துவதற்காக பெறுமதியிழப்பு மாதிரிகளுக்கான மேலோட்டமானப் பயன்பாடு; மற்றும்

(ஊ) கீழேயுள்ள பணிப்புரை 11இற்கமைவாக கொடுகடன் வசதிகளின் தரமுயர்த்தல்

4.2.5 வங்கியால் பயன்படுத்தப்படவேண்டிய தெளிவான வகிபாகங்கள், பொறுப்புக்கள், மதிப்பீட்டு தடவை மற்றும் நடைமுறைகள் அத்துடன் முறைமைகள் உள்ளடங்களாக உரிமம்பெற்ற வங்கியின் கொடுகடன் வசதிகளின் வகைப்படுத்தல், அங்கீகாரம் மற்றும் அளவீடுகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற மாதிரிகளுக்கமைவாக அனைத்தையுமுள்ளடக்கிய மதிப்பீட்டுக் கொள்கை.

4.2.6 நெருக்கமான பின்பற்றல் நடவடிக்கையை உறுதிப்படுத்துவதற்கும், மீட்சி செயன்முறையை கண்காணிப்பதற்கும் ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் செயற்படா கொடுகடன் வசதிகளை ஏனைய கொடுகடன் வசதிகளிலிருந்து வேறுபடுத்துவதற்கு பொறிமுறையொன்றினை தாபித்தல்

4.2.7 அணுகுமுறை, அதிகாரம், அலட்சியங்களுக்கான பொறுப்புக்கூறல், பொறுத்தமற்ற பின்பற்றுகை, தன்னிச்சையான மீளாய்வு மற்றும் கணக்காய்வு, தொடர்ச்சியான கண்காணிப்பு, அறிக்கையிடல் போன்றவற்றை வரையறுக்கின்ற பணிப்பாளர் சபையால் நிறுவப்பட்ட நன்கு வடிவமைக்கப்பட்ட எழுத்துமூல/ எழுத்துமூலமற்ற கொள்கை. அத்தகைய கொள்கைகள், பிணை/ உத்தரவாதங்கள் போன்றவற்றின் அமுலாக்கத்தினூடாக ஆகக்கூடிய காப்புப் பெறுமதியை மீட்பதையும் நோக்காகக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன்,

4.2.8 பொதுமக்களின் வெளிப்படுத்துகைகள் ஊடாக உரிமம்பெற்ற வங்கியின் உரிய நேரத்திலான, பொருத்தமான, துல்லியமான மற்றும் பயனுள்ளத் தகவல்களை வழங்குவதற்காக பொறிமுறைகளை தாபிப்பதனூடாக வெளிப்படைத்தன்மையையும் ஒப்பீட்டுத் தன்மையையும் உறுதிப்படுத்தல், போதியளவான தரவுகளையும்/ பதிவுகளையும் பேணுதல், இலங்கை கணக்கீட்டு நியமத்தின் அல்லது நடைமுறையிலுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் கீழ் இனங்காண்பதற்கும் பின்பற்றுவதற்கும் தேவைப்பாடுகளை அறிக்கையிடுவதற்குமான முறைமைகள்

4.3 உரிமம்பெற்ற வங்கியின் முதன்மை நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர், கொடுகடன் வசதிகள் தொடர்பில் சபையால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ள கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் செயன்முறைகள் என்பன நோக்கத்திற்கமைவாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன, உள்ளக கட்டுப்பாட்டுக்கு போதியளவாகவுள்ளன, மற்றும் மதிப்பீட்டு செயன்முறைகள் குறித்துரைக்கப்பட்டதையே உறுதிப்ப டுத்துவதற்காக நிறுவப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

4.4 உரிமம்பெற்ற வங்கி, அதே வங்கியால் ஏதேனும் கடன்பாட்டாளருக்கு வழங்கிய ஏதேனும் கொடுகடன் வசதியின் மீட்சிக்கு நிதியிடலாகாது.

**5. கொடுகடன் வசதிகளின் வகைபாடு**

5.1 உரிமம்பெற்ற வங்கி, பெறுமதியிழத்தல் மதிப்பீடு, இடந்நேர்வு தணிப்பு மற்றும் செயற்படும்/ செயற்படா கடன்கள் மற்றும் முற்பணங்களை கண்காணித்தல் போன்ற நோக்கங்களுக்காக அனைத்து கொடுகடன் வசதிகளையும் பின்வருமாறு வகைப்படுத்தல் வேண்டும்:

5.1.1 செயற்படுகின்ற கொடுகடன் வசதிகள் என்பது:

(அ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9இன் கீழ் கட்டம் 1ஆக வகைப்படுத்தப்பட்டவாறான அனைத்து கொடுகடன் வசதிகள்அத்துடன்

(ஆ) குறிப்பிடத்தக்களவிலான அதிகரித்த கொடுகடன் இடர்நேர்வு வசதிகளாக அடையாளப்படுத்தப்பட்டதும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9இன் கீழ் கட்டம் 2ஆக வகைப்படுத்தப்பட்டதுமான அனைத்து கொடுகடன் வசதிகள் (செயற்படுகின்ற கொடுகடன் வசதிகளின் கீழ்) எனப் பொருட்படல் வேண்டும்.

5.1.2 செயற்படா கொடுகடன் வசதிகள் என்பது, வாடிக்கையாளரின் ஒப்பந்தக் கொடுப்பனவுகள் 90 நாட்களுக்கு மேலதிகமாக நிலுவையாக இருக்கக்கூடிய அனைத்து கொடுகடன் வசதிகள் (நிலுவையாக இருக்கக்கூடிய நாட்களின் எண்ணிக்கை கொடுப்பனவின் ஒப்பந்த நிலுவைத் திகதியிலிருந்தான ஆரம்பத்திலிருந்து கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.) அல்லது 90 நாட்களுக்கு மேலதிகமாக வழங்கப்பட்ட எல்லையின் மிகையில் எஞ்சியிருத்தல் மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9இன் கீழ் கொடுகடன் வசதி கட்டம் 3ஆக வகைப்படுத்தப்பட்டவாறான ஏதேனும் வேறு கொடுகடன் வசதிகள் (சாத்தியமான இடர்நேர்வின் அடிப்படையில் செயற்படா கொடுகடன் வசதிகளாக வகைப்படுத்தப்பட்ட வசதிகளும் உருவாக்கத்தின் போது பெறுமதியிழக்கப்பட்ட சொத்துக்கள்) எனப் பொருட்படுதல் வேண்டும்.

5.2 உரிமம்பெற்ற வங்கியொன்று கொடுகடன் வசதியொன்றின் வகைப்படுத்தல் நிலைமையை தீர்மானிக்கின்ற பொழுது அவர்களின் கொடுகடன் வசதிகளுக்கு எதிராக வங்கியால் பெறப்படுகின்ற பெறுமதியையும் பாதுகாப்பினையும் கருத்திற்கொள்ளுதல் ஆகாது.

5.3 கடன்பாட்டாளரொருவர் வங்கியுடன் மேலதிகப்பற்று வரையறைகளுடன் பல்வேறு நடைமுறைக் கணக்குகளை வைத்திருக்கின்ற பட்சத்தில், வழங்கப்பட்ட கூட்டு எல்லையும் அத்தகைய அனைத்து கணக்குகள் மீது நாளாந்தம் செலுத்தவேண்டிய கூட்டு நிலுவையும் மேலதிகப்பற்றுக்களின் வகைப்படுத்தல்களின் நோக்கங்களுக்காக கருத்திற்கொள்ளப்படுதல் வேண்டும்.

**6. செயற்படா கொடுகடன் வசதிகளின் துணை வகைப்படுத்தல்**

6.1 உரிமம்பெற்ற வங்கி கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரமாணங்களின் அடிப்படையில் செயற்படா கொடுகடன் வசதிகளை பின்வரும் வகைகளில் துணைப்பிரிவுகளாக வகைப்படுத்தல் வேண்டும்:

6.1.1 சிறப்பு குறிப்பீடு

(அ) நாளாந்தம் செலுத்தவேண்டிய நிலுவையின் அடிப்படையில்: ஒப்பந்தக் கொடுப்பனவுகள் செலுத்தப்படவேண்டிய நிலுவைகளாக அல்லது 90 நாட்களுக்கு அதிகமாக ஆனால் 180 நாட்களுக்கு குறைவாக அல்லது சமமான நாட்களுக்காக வழங்கப்பட்ட எல்லையில் மிகையாக மீதமிருக்கின்ற அனைத்து கொடுகடன் வசதிகளும்.

(ஆ) சாத்தியமான இடர்நேர்வின் அடிப்படையில்: உரிய நேரத்தில் மேற்கொள்ளப்படாவிடத்து, சாத்தியமான பலவீனங்களை ஏற்படுத்துகின்ற எதிர்காலத் திகதியில் கடன்பாட்டாளரினால் மேற்கொள்ளப்படவிருக்கின்ற மீள்கொடுப்பனவை மோசமான வகையில் பாதிக்கக்கூடிய அத்தகைய குறித்த உத்தரவாதமானது உரிமம்பெற்ற வங்கியால் உற்று அவதானிக்கப்படுகின்ற அனைத்து கொடுகடன் வசதிகளும்

6.1.2 தரமற்றவை

(அ) நாளாந்தம் செலுத்தவேண்டிய நிலுவையின் அடிப்படையில்: ஒப்பந்தக் கொடுப்பனவுகள் செலுத்தவேண்டிய நிலுவையாக அல்லது 270 நாட்களை விட குறைவாக அல்லது அதற்குச் சமமாக இன்றி 180 நாட்களுக்கு மேலாக வழங்கப்பட்ட வரையறையில் மிகையாக காணப்படுகின்ற அனைத்து கொடுகடன் வசதிகளும்.

(ஆ) சாத்தியமான இடர்நேர்வின் அடிப்படையில்: காணப்படுகின்ற நியதிகளின் தொடர்பில் மீள்கொடுப்பனவில் ஆபத்துக்குள்ளாக்குகின்ற நிலையை ஏறபடுத்துகின்ற ஒன்றில் வியாபாரம், காசுப்பாய்ச்சல் அல்லது கடன்பாட்டாளரின் நிதியியல் நிலைமை தொடர்பில் வரையறுக்கப்படக்கூடிய பலவீனங்களை வெளிப்படுத்துகின்றதும் பகுதியளவான அல்லது ஒட்டுமொத்த வசதியானது திருப்பிச்செலுத்தப்படுவது குறித்து நிச்சயமற்றத்தன்மை காணப்படக்கூடியதும் கடன்பாட்டாளரின் திருப்தியற்ற படுகடன் தீர்ப்பனவு பதிவு/ நிதியியல் நிலைமை காரணமாக வழமையான இழப்பு இடர்நேர்வினையும் விட அதிகமான இடர்நேர்வு உள்ளடக்கக்கூடியதும் சேகரிப்பின் போதமை கொண்ட அல்லது தற்போதைய கொடுகடன் நியதிகளுடன் இணக்கப்படுத்துவதற்கு கடன்பாட்டாளரின் இயலுமையாக சில ஐயக்கடன்களுக்கு அதிகரிப்பினை ஏற்படுத்துகின்ற ஏதேனும் வேறு காரணிகளைக் கொண்ட அனைத்து கொடுகடன் வசதிகளும்.

6.1.3 ஐயக்கடன்

(அ) நாளாந்தம் செலுத்தவேண்டிய நிலுவையின் அடிப்படையில்: ஒப்பந்தக் கொடுப்பனவுகள் செலுத்தவேண்டிய நிலுவையாக அல்லது 360 நாட்களை விட குறைவாக அல்லது அதற்குச் சமமாக இன்றி 270 நாட்களுக்கு மேலாக வழங்கப்பட்ட வரையறையில் மிகையாக காணப்படுகின்ற அனைத்து கொடுகடன் வசதிகளும்:

(ஆ) சாத்தியமான இடர்நேர்வின் அடிப்படையில்: பகுதியளவில் செலுத்தத்தவறிய உயர்வான இடர்நேர்வினை வெளிப்படுத்துகின்ற அல்லது மொத்தச் சேகரிப்பானது சாத்தியமற்றதாகவும் செலுத்தத்தவறுதலில் உயரிய இடர்நேர்வு காணப்படுவதுடன் செலுத்தவேண்டிய கொடுகடன் வசதியானது தரமற்ற வகைப்பாட்டில் காணப்படுகின்ற பலவீனங்களை விடவும் கூடிய கடுமையான பலவீனங்களை பிரதிபலிக்கின்ற அனைத்து கொடுகடன் வசதிகளும்

6.1.4 இழப்பு

(அ) நாளாந்தம் செலுத்தவேண்டிய நிலுவையின் அடிப்படையில்: ஒப்பந்த கொடுப்பனவுகள் செலுத்தவேண்டிய நிலுவையாக அல்லது 360 நாட்களுக்கு மேலதிகமாக அனுமதிக்கப்பட்ட எல்லையில் மிகை எஞ்சியிருக்குமிடத்து அனைத்து கொடுகடன் வசதிகளும்

(ஆ) சாத்திய இடர்நேர்வின் அடிப்படையில்: கேகரிக்க இயலாதென உணரப்படுகின்ற அல்லது அதனை மீளச்செலுத்த இயலாதென ஏறத்தாழ உறுதியாக காணப்படுகின்ற மற்றும் தொழிற்படா கொடுகடன் வசதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ள ஆனால் சிறப்பு குறிப்பீடு, தரமற்ற அத்துடன் ஐயக்கடன் வகைகளுக்குள் உள்ளடக்கப்படாத அனைத்து கொடுகடன் வசதிகளும்

**7. கொடுகடன் இடர்நேர்வு/ செலுத்தத்தவறிய வசதிகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு**

7.1 இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9இன் கீழ் எதிர்பார்க்கப்படுகின்ற ஆயுட்கால இழப்புக்களை கணிப்பிடும் நோக்கத்திற்காக, ஆகக்குறைந்தது, பின்வரும் காரணிகள்/ நிலைமைகளில் ஒன்றோ அல்லது அதிற்கு அதிகமாகவோ சந்திக்கின்றவிடத்து, அது கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பாக அல்லது செலுத்தத்தவறிய வசதிகளாக கருத்திற்கொள்ளப்படுதல் வேண்டும்.

7.1.1 கடன்பாட்டாளர் ஒருவரின் ஒப்பந்தக் கொடுப்பனவுகள் 30 நாட்களுக்கு மேலதிகமாக செலுத்தத்தவறிய நிலுவைகளாகும். (இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9இன் கீழ் தள்ளுபடி செய்யக்கூடிய எதிர்வுகூறலுக்கு உட்பட்டு)

7.1.2 கடன்பாட்டாளரின் கொடுகடன் தரமிடலானது B+ இற்கு அல்லது வெளியக கொடுகடன் மதிப்பீட்டு நிறுவனத்தினால் இலங்கை தேசிய தரமிடல் அளவின் கீழ் தொடர்ந்தும் கீழே தரம் குறைக்கப்பட்டுள்ளது;

7.1.3 உரிமம்பெற்ற வங்கியின் உள்ளகத் தரமிடலின் கீழ் இரண்டு வெட்டுபுள்ளிகள், தரம் குறைக்கப்படுதல் உரிமம்பெற்ற வங்கிகள், வெளியக கொடுகடன் மதிப்பீட்டு நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள தரமிடல்களுடன் அவர்களின் உள்ளக கொடுகடன் இடர்நேர்வு தரமிடல்களை வழிகாட்டுவதற்கு வேண்டப்படுகின்றன. இந் நோக்கத்திற்காக, மூலதன தேவைப்பாடுகள் தொடர்பாக வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகளில் வழங்கப்பட்டுள்ள வெளியக கொடுகடன் தரமிடல்களின் வழிகாட்டலை உசாவுமாறு வேண்டப்படுகின்றனர்;

7.1.4 எதிர்கால பொருளாதார நிலைமைகளின் நியாயமானதும் ஆதரவானதுமான எதிர்வு கூறல்களானது வாடிக்கையாளரொருவரின்/ வாடிக்கையாளர் குழாமொன்றின் செயலாற்றத்தின் மீது நேரடி எதிர்மறை தாக்கத்தை காண்பிக்கின்றன;

7.1.5 புவியியல்சார் அமைவிடங்களில் ஏற்படுகின்ற கணிசமானளவான மாற்றம் அல்லது இயற்கை அனர்த்தங்கள் வாடிக்கையாளரொருவரின்/ வாடிக்கையாளர் குழாமொன்றின் செயலாற்றத்தின் மீது நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்துகின்றன;

7.1.6 பிணையின் பெறுமதியானது கணிசமானளவில் குறைவடைகிறது அத்துடன்/ அல்லது பிணையின் நம்பகத்தன்மையானது சந்தேகத்திற்குரியதாகும். உரிமம்பெற்ற வங்கிகள், பொருத்தமான நுழைவுகளை/ வரையறைகளை அடையாளங்காண வேண்டுமென்பதுடன் அதனை ஆவணப்படுத்தலும் வேண்டும்;

7.1.7 கடன்பாட்டாளர்,கொடுகடன் வசதியின் செயலாற்றத்தில் கணிசமானளவில் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்ற சட்ட நடவடிக்கைகளுக்கு உட்பட்டவராவார்;

7.1.8 பணிப்பாளர் சபை மற்றும் நிறுவன ரீதியான வாடிக்கையாளரின் சிரேஷ்ட முகாமைத்துவத்தில் அடிக்கடி ஏற்படுகின்ற மாற்றங்கள்;

7.1.9 முன்னதாக ஒப்புக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேலதிகமாக வியாபாரத் தொழிற்பாடுகள்/ செயற்றிட்டங்களின் தொடக்கத்தில் தாமதம்;

7.1.10 நீடிப்புக்கள், கொடுப்பனவுகளின் பிற்போடல், உடன்படிக்கைகளை இரத்துச்செய்தல் உள்ளடங்கலாக சலுகைகளில் விளைவினை ஏற்படுத்துகின்ற நியதிகளில் திருத்தங்கள்;

7.1.11 கடன்பாட்டாளர் நோய்வாய்ப்பட்டிருத்தல்/ கடன் தீராற்றலற்றிருத்தல்;

7.1.12 உரிமம்பெற்ற வங்கி, கடன்பாட்டாளரை தொடர்புகொள்வதற்கு அல்லது அடையாளங்காண்பதற்கு முடியாதிருத்தல்; அத்துடன்

7.1.13 இரண்டு தொடர்ச்சியான ஆண்டுகளுக்காக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுமைகயில் 50 சதவீதம் அல்லது விற்பனைப்புரள்வில் அத்துடன்/ அல்லது கடன்பாட்டாளரின் வரிக்கு முன்னரான இலாபத்தில் அதற்கு கூடிய சதவீதம் அத்துடன்/ அல்லது முன்னைய நிதியியல் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடன்பாட்டாளரின் தேறிய நன்மையில் 25 சதவீதத்திற்கு அதிகமான தேய்வு(பங்குரிமைக் கட்டமைப்பிலும் பங்குலாபக் கட்டமைப்பிலும் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கான காரணம் நீங்கலாக);

7.1.14 கீழே பணிப்புரை 10இல் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கமைவாக மீள்கட்டமைக்கப்பட்ட மற்றும் மீள் திட்டமிடப்பட்ட கொடுகடன் வசதிகள்;

7.2 கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை நிர்ணயிக்கும்போது உரிமம்பெற்ற வங்கிகள் பின்வருவன தொடர்பில் 7.1.2 இலிருந்து 7.1.14 வரை பட்டியலிடப்பட்டுள்ள பிரமாணங்களில் ஒன்றை அல்லது அதற்கு அதிகமான பிரமாணங்களை மறுக்கலாம்:

7.2.1 இடர் முகாமைத்துவ தொழிற்பாடுகளை தலைமைதாங்குகின்ற முக்கிய முகாமைத்துவ ஆளணி, அத்தகைய மறுக்கப்பட்ட பிரமாணங்களானது வங்கிக்கு கொடுகடன் இடர்நேர்வின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பில் விளைவை ஏற்படுத்தாது என்பதை உறுதிப்படுத்துவதற்கான நியாயமான காரணத்தையும் நியாயப்படுத்தல்களையும் பணிப்பாளர்கள் சபைக்கு விதந்துரைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களை பரிசீலனையிற் கொண்டதன் பின்னர் பணிப்பாளர்கள் சபை, முன்மொழிவிற்கான அனுமதியை அல்லது நிராகரிப்பினை வழங்குதல் வேண்டும்.

7.2.2 தொடர்புடைய வங்கியின் பெறுமதியிழப்பு ஏற்பாடுகள் தொடர்பில் அத்தகைய மறுப்புக்களின் மதிப்பிடப்பட்ட தாக்கம் மற்றும் அவர்களின் கணக்கிடப்பட்ட வருடாந்த நிதியியல் கூற்றுக்களில் இலாபத்தன்மையிருப்பின் மறுக்கப்பட்ட பிரமாணத்தை வெளிப்படுத்தல்.

**8. கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதியிழப்புக் கட்டணங்கள்**

8.1 உரிமம்பெற்ற வங்கிகள், இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கி இவ்விடயம் தொடர்பில் காலத்திற்குக் காலம் வழங்குகின்ற பணிப்புரைகள்/ வழிகாட்டல்களுக்கமைவாக கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதியிழப்புக் கட்டணங்களை அளவிடுதல் வேண்டும்.

8.2 பெறுமதியிழப்புக் கட்டணங்களின் அளவீடு, வலுவான முறையியல்களின் அடிப்படையில் கட்டமைக்கப்பட வேண்டுமென்பதுடன் ஏற்புடைய இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களின் பொருத்தமானதும் உரியநேரத்திலான அங்கீகாரத்திலும் வெளிப்படுத்துதல் வேண்டும்.

8.3 ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியன்றும், உரிமம்பெற்ற வங்கிகள், கடன்கள் மற்றும் முற்பணங்களின் கொடுகடன் இடர்நேர்வானது ஆரம்ப அங்கீகரிப்பிலிருந்து கணிசமானளவில் அதிகரித்து வந்திருக்குமாயின், கொடுகடன் வசதிகளுக்கான இழப்பு கொடுப்பனவை ஆயுட்காலம் முழுவதும் எதிர்பார்க்கப்பட்ட இழப்புகளுக்குச் சமனான தொகையில் அளவிடுதல் வேண்டும் (கொடுகடன் வசதி கொள்வனவுகளுக்காக அத்துடன்/ அல்லது கொடுகடன் பெறுமதியிழப்பு கொடுகடன் வசதிகளாக ஆரம்பிக்கப்பட்டவை நீங்கலாக).

8.4 கொள்வனவு செய்யப்பட்ட அல்லது ஆரம்பிக்கப்பட்ட கொடுகடன் பெறுமதியிழத்தல் கொடுகடன் வசதிகள் தொடர்பில், ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்கள், கீழே 11வது பணிப்புரைக்கமைவாக தரமுயர்த்தப்பட்டாலன்றி, அளவிடப்பட்டதாகயிருத்தல் வேண்டும்.

8.5 கொள்கைக்கமைவாக, ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்கள் அத்துடன்/ அல்லது பெறுமதியிழக்கப்படாத கொடுகடன் வசதிகள், பிரத்தியேக அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுவதாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், உரிமம்பெற்ற வங்கி, அவர்களின் சொத்துப்பட்டியலுக்கு ஏற்புடைய குழுக்கள் அல்லது சொத்துக்கள் மீது ஒன்றுசேர்ந்த அடிப்படையில் மதிப்பீட்டை மேற்கொள்ளலாம்.

8.6 உரிமம்பெற்ற வங்கியின் பெறுமதியிழப்புக் கொடுப்பனவுகளின் கூட்டுத்தொகை, அத்தகைய கொடுப்பனவொன்றில் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் அல்லது தனிப்பட்ட அடிப்படையில் நிர்ணயிக்கப்படாதபோது, ஏற்புடைய இலங்கை கணக்கீட்டு நியமங்களின் நோக்கங்களுடன் போதுமானமாகவும் நிலையானதாகவும் இருத்தல் வேண்டும்.

8.7 கட்டம் 1இன் கொடுகடன் வசதிகளின் பெறுமதியிழப்பு

8.7.1 2022.01.01 இலிருந்து, உரிமம்பெற்ற வங்கிகள், கட்டம் 1இன் கொடுகடன் வசதிகளின் மொத்தத்தின் சதவீதமாக 0.5 சதவீதத்தை கட்டம் 1இன் குறைந்தபட்ச விகிதமாக அதாவது, கட்டம் 1இன் பெறுமதியிழப்பு/ கட்டம் 1இன் கொடுகடன் வசதிகள் இணை பேணுதல் வேண்டும்.

8.7.2 கட்டம் 1இன் கொடுகடன் வசதிகளின் மொத்தத்தின் சதவீதமாக 0.5 சதவீதத்தை கட்டம் 1இன் குறைந்தபட்ச விகிதமாக உரிமம்பெற்ற வங்கி பேணாத சந்தர்ப்பங்களில் அத்தகைய பற்றாக்குறையானது பங்கு மூலதனத்திற்கு எதிராக சிறப்பு ஒதுக்குகளில் பேணுமாறு கோரப்படுதல் வேண்டும்.

8.7.3 அத்தகைய ஒதுக்குகள், பங்குலாபங்களை அறிவிப்பதற்கு உரிமம்பெற்ற வங்கிகளால் பயன்படுத்தப்படலாகாது.

8.7.4 எவ்வாறாயினும், இது கட்டம் 1இன் பெறுமதியிழப்பிற்காக ஆகக்குறைந்த பெறுமதியாக மாத்திரம் பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் உரிமம்பெற்ற வங்கிகள், பொருத்தமான இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் உள்ளக கொள்கைகளுக்கமைவாக கட்டம் 1இன் பெறுமதியிழப்பின் போதுமாந்தன்மையை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

8.8 உரிமம்பெற்ற வங்கிகளின் கொடுகடன் வசதிகளின் பெறுமதியிழப்பு குறித்த மேலதிகப் பணிப்புரைகள் இணைப்பு Iஇல் வழங்கப்பட்டுள்ளன.

**9. பெறுமதியிழத்தல் கணிப்பீட்டிற்கான மாதிரிகள்**

9.1 உரிமம்பெற்ற வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர், பணிப்பாளர்கள் சபையினால் வழங்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் உரிமம்பெற்ற வங்கியானது,

9.1.1 இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கமைவாக எதிர்பார்க்கப்படுகின்ற கொடுகடன் இழப்புக்களை நிர்ணயிப்பதற்காக வலுவான மாதிரிகளை அபிவிருத்திச் செய்கின்றது, இது, உரிமம்பெற்ற வங்கியினுடைய வியாபார மாதிரியுடனும் இடர்நேர்வு தோற்றப்பாட்டுடனும் இசைந்துசெல்லும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

9.1.2 மதிப்பீடுகளானது வலுவானதாகவும், பக்கச் சார்பற்றவையாகவும் தற்போதைய வெளிப்படுத்துகைகளை பிரதிபலிப்பவையாகவும் இருக்கின்றமையை உறுதிசெய்து எதிர்பார்க்கப்படுகின்ற கொடுகடன் இழப்புக்களை மதிப்பிடும் போது கிடைப்பனவாகவுள்ள பொருத்தமான உள்ளக மற்றும் வெளியகத் தரவுகளை கருத்திற் கொள்கிறது.

9.1.3 நன்கு பயிற்சிபெற்ற, திறமையான மற்றும் வங்கியால் பின்பற்றப்படுகின்ற மாதிரிகளின் முழுமையான புரிந்துணர்வுடைய பொருத்தமான அலுவலர்களைக் கொண்டிருக்கின்றது.

9.1.4 மாதிரி அபிவிருத்தி தொடர்பில் வெளியக விற்பனையாளர்கள்/ஆலோசனையாளர்களிடம் இருந்து ஆதரவினை பெற்றுக்கொள்கின்ற போது, கடுமையான ஆளுகையையும் உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகளையும் பின்பற்றுகின்றது.

9.1.5 பல்வேறு சொத்துக்களுக்கும் சாதனங்களுக்கும் வேறுபட்ட மாதிரிகள் பயன்படுத்தப்படுமானால், பொருத்தமான வழியாக குறித்துரைக்கப்பட்ட மாதிரியினை தெரிவுசெய்தமைக்கான காரணங்களை ஆவணப்படுத்துகின்றது என்பதுடன் அனைத்து கொடுகடன் மாதிரிகளும் ஆகக்குறைந்தது ஆண்டுதோறும் மீளாய்வு செய்யப்படுவதை உறுதிசெய்கின்றது.

9.1.6 கொடுகடன் இடர்நேர்வு மதிப்பீடு மற்றும் அளவீட்டு முறைகள், தொடர்ந்து செல்லும் அடிப்படையில் துல்லியமான,நிலையான மற்றும் பக்கச்சார்பற்ற எதிர்வுகூறல் மதிப்பீடுகளை வெளிப்படுத்துவதற்கான இயலுமையை கொண்டிருப்பதை உறுதிசெய்வதற்கு செயல்திறன்மிக்க மாதிரி மதிப்பீட்டு செயன்முறையை தாபிக்கிறது. அத்துடன்

9.1.7 பிரமாணங்கள், உள்ளீடுகள் மற்றும் இலாபத்தின் சீரானத்தன்மையின் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகின்ற எதிர்வுகூறல்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதிலிருந்து தவிர்த்திருக்கின்றது. எவ்வாறாயினும், கொடுகடன் மாதிரிகளில் ஏதேனும் மாற்றங்கள் தேவைப்படுமிடத்து, அத்தகைய மாற்றத்திற்கான அடிப்படை மற்றும் நியாயப்படுத்தல் என்பன பிரதம இடர்நேர்வு அலுவலரினாலும் ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவ குழுவினாலும் மதிப்பீடு செய்யப்பட வேண்டுமென்பதுடன் பணிப்பாளர்கள் சபையினால் ஒப்புதலளிக்கப்படுதலும் வேண்டும். என்பதை உறுதிசெய்தல் வேண்டும்.

9.2 இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகள் அவர்களின் தலைமை அலுவலகம் அல்லது பிராந்திய அலுவலகங்களினால் அபிவிருத்திசெய்யப்பட்ட மாதிரிகளை பயன்படுத்தப்படுகின்ற வேளையில், அத்தகைய உரிமம்பெற்ற வங்கிகள், கொடுகடன் மாதிரிகளின் பொருத்தப்பாட்டினைத் இலங்கைப் பின்னணியில் மதிப்பிட வேண்டுமென்பதுடன் பொருத்தமான மதிப்பீட்டு நடைமுறைகள் முக்கிய முகாமைத்துவ ஆளணியினால் தலைமைத் தாங்கப்படுகின்ற உள்நாட்டு குழுவொன்றால் கொண்டுநடாத்தப்படுதல் வேண்டும்.

**10. மீள்கட்டமைக்கப்பட்ட மற்றும் மீள்திட்டமிடப்பட்ட கொடுகடன் வசதிகள்**

10.1 மீள்கட்டமைக்கப்பட்ட கொடுகடன் வசதிகள

10.1.1 மீள்கட்டமைக்கப்பட்ட கொடுகடன் வசதிகள் என்பது மேலே பணிப்புரை 5.1.1இன் பணிப்புரையின் கீழ் குறித்துரைக்கப்பட்டவாறான செயற்படும் வசதிகளாக தொடர்புடைய கொடுகடன் வசதிகள் காணப்படும் வேளையில், கொடுகடன் தரத்தில் வீழ்ச்சியொன்றின் காரணமாக உண்மை மீள்கொடுப்பனவு நியதிகள் திருத்தப்பட்டுள்ளபோது காணப்படுவதாகும்.

10.1.2 கீழே பணிப்புரை 11இன் கீழ் குறித்துரைக்கப்பட்டவாறான தரமுயர்த்தப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கு மேலாக இரண்டு தடவைகள் வரையில் மீள்கட்டமைக்கப்படுகின்ற கொடுகடன் வசதிகள் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9இன் கீழ் கட்டம் 2 கொடுகடன் வசதிகளாக வகைப்படுத்தப்படுதல் வேண்டும்.

10.1.3 கீழே பணிப்புரை 11இன் கீழ் குறித்துரைக்கப்பட்டவாறான தரமுயர்த்தப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கு மேலாக இரண்டு தடவைகளுக்கு மேல் மீள்கட்டமைக்கப்படுகின்ற கொடுகடன் வசதிகள் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9இன் கீழ் கட்டம் 3 கொடுகடன் வசதிகளாக கருத்திற்கொள்ளப்படுதல் வேண்டும்.

10.2 மீள்திட்டமிடப்பட்ட கொடுகடன் வசதிகள்

10.2.1 மீள்திட்டமிடப்பட்ட கொடுகடன் வசதிகள் என்பது மேலே பணிப்புரை 5.1.2இல் குறித்துரைக்கப்பட்டவாறான செயற்படா கொடுகடன் வசதிகளாக தொடர்புடைய கொடுகடன் வசதிகள் காணப்படுகின்றவேளையில், முன்னதான மீள்கொடுப்பனவு நியதிகள் திருத்தப்பட்டுள்ளபோது காணப்படுவதாகும்.

10.2.2 கீழே பணிப்புரை 11இன் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ள தரமுயர்த்தப்பட்டுள்ள கொடுகடன் வசதிகளைத் தவிர, மீள்திட்டமிடப்பட்ட அனைத்து கொடுகடன் வசதிகளும், இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9இன் கீழ் கட்டம் 3இன் கொடுகடன் வசதிகளாக கருத்திற்கொள்ளப்படுதல் வேண்டும்.

10.3 உரிமம்பெற்ற வங்கிகள், கொடுகடன் தரத்தில் ஏதேனும் வீழ்ச்சியை மதிப்பிடுவதற்கு மேலே பணிப்புரை 7.1 கீழ் பட்டியலிடப்பட்டுள்ள காரணிகளை கருத்திற்கொள்ளுதல் வேண்டும். எவ்வாறாயினும், அத்தகைய மதிப்பீடுகள், பணிப்புரை 7.1 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள காரணிகளுக்கு மட்டுப்படுத்தலாகாது என்பதுடன் கொடுகடன் வசதியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் ஏற்புடையதாவதற்கு மீள்கட்டமைக்கப்பட்ட மற்றும் மீள்திட்டமிடப்பட்ட கொடுகடன் வசதிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள பொருத்தமான ஏற்பாடுகளை உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

10.4 உரிமம்பெற்ற வங்கிகள், புதிய கொடுகடன் வசதியும் செயற்படா கொடுகடன் வசதியாக வகைப்படுத்தப்படும் வரையில் அதே கடன்பாட்டாளருக்கு செயற்படா கொடுகடன் வசதியின் மீள்கொடுப்பனவிற்காக புதிய கொடுகடன் வசதிகளை வழங்குதலாகாது.

**11. கொடுகடன் வசதிகளை தரமுயர்த்தல்**

11.1 உரிமம்பெற்ற வங்கிகள் பின்வரும் சந்தர்ப்பங்களில் கொடுகடன் வசதிகளை உயர்ந்த கட்டத்திலிருந்து (கட்டம் 3 அல்லது 2) தாழ்ந்த கட்டத்திற்கு (கட்டம் 2 அல்லது 1) தரமுயர்த்தலாம்:

11.1.1 கொடுகடன் வசதிகளின் தரமுயர்த்தலானது பணிப்பாளர்கள் சபையால் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்கைக்கு அமைவாக இருப்பதுடன் அத்தகைய தரமுயர்த்தலுக்கான நியாயபூர்வமானதன்மை முறையாக ஆவணப்படுத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும். அத்தகைய கொள்கை குறைந்தளவில் பின்வருவனவற்றை உறுதிப்படுத்தல் வேண்டும்:

(அ) கடன் நிலுவைகளின் தீர்ப்பனவு

(i) கடன் நிலுவைகள் வாடிக்கையாளரினால் முழுமையாக செலுத்தப்பட்டும் எதிர்வுகூறப்பட்டுமுள்ள வருங்காலம் வரையிலான படுகடன் தீர்ப்பனவுக் கடப்பாடுகளை தீர்ப்பனவு செய்வதற்கு வாடிக்கையாளரால் இயலுமென வங்கி திருப்திக்கொள்ளுமிடத்து, கட்டம் 3இல் மீள்கட்டமைக்கப்பட்ட கொடுகடன் வசதிகளைத் தவிர்ந்த கொடுகடன் வசதிகளும் மீள்திட்டமிடப்பட்ட கொடுகடன் வசதிகளும் தரமுயர்த்தப்படுதல் வேண்டும்:

(ஆ) கட்டம் 3இலிருந்து தரமுயர்த்தப்படுகின்ற மீள்கட்டமைக்கப்பட்ட கொடுகடன் வசதிகளும் மீள்திட்டமிடப்பட்ட கொடுகடன் வசதிகளும்

(i) உரிமம்பெற்ற வங்கி, செயற்படுகின்ற கொடுகடன் வசதிகளின் கீழ் செயற்படா கொடுகடன் வசதிகளின் தரமுயர்த்தலில் முன்மதியினைப் பின்பற்றுகிறது.

(ii) தரமுயர்த்தப்பட்ட கொடுகடன் வசதியானது மேம்படுத்தப்பட்ட வகைப்படுத்தல் நிலைமையை நியாயப்படுத்துவதற்காக மேம்படுத்தலின் நீடித்து நிலைத்துநிற்கும் போக்கினை/ நிலைமையினை கொண்டுள்ளது.

11.1.2 மீள்திட்டமிடப்பட்ட மற்றும் மீளகட்டமைக்கப்பட்ட கொடுகடன்களின் தரமுயர்த்தலானது இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தினால் மாத்திரம் மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன் கொடுகடன் வசதி மீளாய்வு பொறிமுறையிலிருந்து தன்னிச்சையானதாக இருத்தல் வேண்டும்.

**12. பெறுமதியிழப்பின் நோக்கங்களுக்காக பிணையின் மதிப்பீடு**

12.1 உரிமம்பெற்ற வங்கி, இழப்புக்களை தருகின்ற தவணைத் தவறல்கள்/ காசுப் பாய்ச்சலின் மதிப்பீடு கிடைக்கத்தக்க நம்பகரமான சந்தை மதிப்பீடுகளை கருத்திற்கொண்டு சொத்துக்களின் மதிப்பீட்டினை முன்மதியுடைய அடிப்படையில் பரிசீலனையிற் கொள்ளுதல் வேண்டும். அத்தகைய மதிப்பீடுகள், இடர்பாடுடைய சொத்து திரவப்படுத்தலுடன் தொடர்புடைய உள்ளார்ந்த நிச்சயமற்றத்மையினை பொருத்தமானவகையில் பிரதிபலித்தல் வேண்டும். (அத்தகைய உணர்தல்களுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நேரம் உள்ளடங்கலாக)

12.2 உரிமம்பெற்ற வங்கி, அத்தகைய அதிகரிப்புக்கள் நிலையானவையென்ற பொருத்தமான சான்றுடன் மதிப்பீட்டில் ஏதேனும் அதிகரிப்பினை நிரூபித்தல் வேண்டும்.

12.3 உரிமம்பெற்ற வங்கிகள், அதிகளவான நம்பகரமான மதிப்பீடுகளை சமர்ப்பிப்பதற்கு கொடுகடன் இடர்நேர்வு தணித்தல்களின் தேறிய நம்பகத்தன்மையினை மதிப்பீடு செய்தல் வேண்டும் அல்லது பிணையங்களின் கட்டாய விற்பனை மதிப்பீட்டினை பயன்படுத்தல் வேண்டும். பெறுமதியிழத்தல் கட்டணங்களானது அத்தகைய கொடுகடன் இடர்நேர்வு தணித்தல்களின் தரமுயர்த்தப்பட்ட நம்பகரமான மதிப்பீடுகளை கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.

12.4 சொத்துக்கள் பிணையங்களாக கருத்திற்கொள்ள முடியுமென்பதுடன் அவை காசு, வைப்புக்கள், சொத்துப் பிணை, அரசாங்கத்தின் உத்தரவாதங்கள், இலங்கை மத்திய வங்கி மற்றும் உரிமம்பெற்ற வங்கிகள், ஆயுட் காப்புறுதி கொள்கைகளின் பத்திரம், தங்க பொருட்கள், பங்குப் பத்திரம், மோட்டார் வாகனங்கள் மீதான பிணையம், பொறி, பொறி மற்றும் சாதனங்கள், தொகுதிக்கடன்களில் குறித்துரைக்கப்பட்ட படுகடன் பிணையங்கள், பங்குரிமை மூலதனம் மற்றும் வங்கி மேற்பார்வை பணிப்பாளரினால் தனித்தனி அடிப்படையில் விசேடமாக ஒப்புதலளிக்கப்பட்டவாறான ஏதேனும் வேறு வகை பிணையங்கள் என வரையறை செய்யப்படுதல் வேண்டும்.

12.5 உரிமம்பெற்ற வங்கி, பிணையங்களின் மதிப்பீடு தொடர்பில் பின்வருவனவற்றுடன் இணங்குதல் வேண்டும்.

12.5.1 உரிமம்பெற்ற வங்கிகளின் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் மீது காலத்திற்குக் காலம் இலங்கை மத்திய வங்கியால் விடுக்கப்படுகின்ற வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்.

12.5.2 நிதியியல் அறிக்கையிடல் நோக்கத்திற்காக சொத்து, பொறி மற்றும் சாதனங்கள், முதலீட்டுச் சொத்துக்கள் மற்றும் உயிரியல்ச் சொத்துக்களின் மதிப்பீடுகள் மீது இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்படுகின்ற வழிகாட்டல்கள்.

**13. வட்டி வருமானத்தின் அங்கீகாரம்**

13.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் உரிமம்பெற்ற வங்கி கொடுகடன் வசதிகளுக்காக வட்டி வருமானத்தை அங்கீகரித்தல் வேண்டும்.

**14. உள்ளகக் கணக்கீட்டின் வகிபாகம்**

14.1 உள்ளக கணக்கீட்டு தொழிற்பாடானது கொடுகடன் இடர்நேர்வு மதிப்பீடு, அளவீட்டு முறைமைகள், மற்றும் உரிமம்பெற்ற வங்கியின் செயன்முறைகள் என்பவற்றின் செயல்திறனை தன்னிச்சையாக மதிப்பீடு செய்தல் வேண்டுமென்பதுடன் கொடுகடன் நியாயப்படுத்தல்களின் ஏற்றுக்கொள்ளத்தக்க தன்மையை உறுதிப்படுத்தலும் வேண்டும்.

14.2 உள்ளக கணக்கீட்டு தொழிற்பாடானது அனைத்து கொடுகடன் இடர்நேர்வு மதிப்பீட்டு மாதிரிகள், உள்ளீடுகள் மற்றும் சுமூகமான தரவுகளுடன் சேர்த்து பயன்படுத்தப்பட்ட அனுமானங்கள் ஏதேனும் இருப்பின் ஆகக்குறைந்தது ஆண்டுதோறும் பரிசோதித்து மதிப்பீடு செய்தல் வேண்டும்.

14.3 உள்ளக கணக்கீட்டு தொழிற்பாடானது முக்கிய இயக்கிகள் சேகரிக்கப்பட்டு துல்லியமாக அளவிட்டமையை உறுதிசெய்வதற்காக பின்னூட்டல் பரிசோதனையின் போதுமாந்தன்மை மற்றும் செயல்திறன் தொடர்பில் உத்தரவாதத்தை வழங்குதல் வேண்டும்.

**15. ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கையிடல்**

15.1 உரிமம்பெற்ற வங்கி, கீழே குறித்துரைக்கப்பட்டவாறு, அல்லது அவ்வாறில்லாவிடின், வங்கி மேற்பார்வை பணிப்பாளரால் குறித்துரைக்கப்பட்டவாறு இந்த பணிப்புரைகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட நியதிச்சட்ட திரட்டுக்களை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகிறது.

15.1.1 மாதாந்த திரட்டுக்கள் - வரவிருக்கம் மாதத்தின் 15ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்

15.1.2 காலாண்டுத் திரட்டுக்கள் - காலாண்டொன்றின் இறுதியிலிருந்து 15ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்

15.2 உரிமம்பெற்ற வங்கி, இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத் தகவலின் அடிப்படையில் காலாண்டு மற்றும் வருடாந்த நிதியியல் கூற்றுக்களில் பின்வரும் முக்கிய செயலாற்ற குறிக்காட்டிகளை வெளியிடுதல் வேண்டும்.

15.2.1 மொத்த கடன்களுக்கு (3ஆம் கட்ட பெறுமதியிழப்பின் தேறல்) 3ஆம் கட்டக் கடன்கள் (3ஆம் கட்ட பெறுமதியிழப்பின் தேறல்)

15.2.2 3ஆம் கட்டக் கடன்களுக்கு 3ஆம் கட்ட பெறுமதியிழப்பு

**16. செயற்பாட்டிற்கு வரும் திகதி**

16.1 இந்த பணிப்புரைகள் 2022 சனவரி 01இலிருந்து செயற்பாட்டிற்கு வருதல் வேண்டும்.

**17. பணிப்புரைகளை இரத்துச் செய்தல்**

17.1 பின்வரும் பணிப்புரைகள்/ சுற்றறிக்கைகள் 2022 சனவரி 01இலிருந்து இரத்துச்செய்யப்படும்.

17.1.1 கடன்கள் மற்றும் முற்பணங்கள், வருமான அங்கீகாரம் என்பவற்றின் வகைப்படுத்தல் மீதான 2008ஆம் ஆண்டின் 3ஆம் மற்றும் 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள், 2008ஆம் ஆண்டு மே 08ஆம் திகதியிடப்பட்ட ஏற்பாடுகள்.

17.1.2 2010ஆம் ஆண்டின் 3ஆம் மற்றும் 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை - கடன்கள் மற்றும் முற்பணங்கள், வருமான அங்கீகாரம் என்பவற்றின் வகைப்படுத்தல் மீதான பணிப்புரைக்கான திருத்தங்கள் மற்றும் 2010ஆம் ஆண்டின் செத்தெம்பர் 27ஆம் திகதியிடப்பட்ட ஏற்பாடுகள்.

17.1.3 2018ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க சுற்றறிக்கை - இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பின்பற்றுகை மீது உரிமம்பெற்ற வங்கிகளுக்கான வழிகாட்டல்கள் -இலங்கை நிதி அறிக்கையிடல் நிதியம் 9: 2018 திசெம்பர் 31ஆம் திகதியிடப்பட்ட நிதியியல்ச் சாதனங்கள். இலங்கை நிதி அறிக்கையிடல் நிதியம் 9இன் பின்பற்றுதலிலிருந்து முதல் நாள் கணக்கிடப்பட்ட மேலதிக கொடுகடன் இழப்பு ஏற்பாடுகளை தளர்த்துவதற்கான ஒருதடவை அனுமதி, பிடித்துவைக்கப்பட்ட இலாபங்களுக்கான முதல் நாள் தாக்கம் மீதான ஏதேனும் வேறு தேறிய திருத்தங்கள் மற்றும் வரி விளைவுகளின் தேறல் என்பன 2021 திசெம்பர் 31 வரை நடைமுறையில் காணப்படும்.

17.1.4 2019ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க சுற்றறிக்கை - இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பின்பற்றுகை மீதான 2018ஆம் 04ஆம் இலக்க சுற்றறிக்கைக்கான குறைநிரப்பி - இலங்கை நிதி அறிக்கையிடல் நிதியம் 9: 2019ஆம் ஆண்டின் ஏப்பிறல் 26ஆம் திகதியிடப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகளின் நிதியியல் சாதனங்கள்

**பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்**

நாணயச் சபையின் தலைவரும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

**இப்பணிப்புரையின் இணைப்பு I இனை** https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/Banking_Act_Directions_No_13_of_2021_t.pdf **என்ற வெப்தளத்தில் பார்வையிடலாம்.**

**2021ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்** 2021 செத்தெம்பர் 14

## உரிமம்பெற்ற வங்கிகளின் கொடுகடன் வசதிகள் தவிர்ந்த நிதியியல் சொத்துக்களை வகைப்படுத்தல், அங்கீகரித்தல் மற்றும் அளவிடல்

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1) மற்றும் 76(ஒ)(1) இனால் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பிரயோகிக்கின்ற விதத்தில், இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது, இலங்கை கணக்கீட்டு நியமங்கள் - இ.நி.அ.நியமம் 9: நிதியியல் சாதனங்களுடன் (இதனகத்துப் பின்னர் இ.நி.அ.நியமம் 9 எனக் குறிப்பீடு செய்யப்படும்) உரிமம்பெற்ற வங்கிகளில் கொடுகடன் வசதிகள் தவிர்ந்த நிதியியல் சொத்துக்களை வகைப்படுத்தல், அங்கீகரித்தல் மற்றும் அளவிடல் மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்தல் மற்றும் இணங்கியொழுகச் செய்தல் மற்றும் வங்கித்தொழில் துறையில் முன்மதியுடைய நடைமுறைகளை நிறுவும் நோக்குடன், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளில் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளில் (இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) கொடுகடன் வசதிகள் தவிர்ந்த நிதியியல் சொத்துக்களை வகைப்படுத்தல், அங்கீகரித்தல் மற்றும் அளவிடல் தொடர்பில் பின்வரும் பணிப்புரைகளை இத்தால் விடுத்திருக்கின்றது.

**1. அதிகாரமளித்தல்**

1.1 வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1)இன் நியதிகளில், வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல் வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு, அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் எந்தவொரு விடயத்திலும் எந்த விதத்தில் நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி அத்தகைய வங்கிக்கு அல்லது வங்கிகளுக்கு பணிப்புரைகளை விடுப்பதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

1.2 வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஒ(1)இன் நியதிகளில், வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல் வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு, அனைத்து உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும் அல்லது ஏதேனுமொரு உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும் எந்தவொரு விடயத்திலும் எந்த விதத்தில் நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி அத்தகைய வங்கிக்கு அல்லது வங்கிகளுக்கு பணிப்புரைகளை விடுப்பதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

**2. நோக்கெல்லையும் ஏற்புடைத்தன்மையும்**

2.1 இப்பணிப்புரைகளின் அனைத்து தேவைப்பாடுகளும் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக உரிமம்பெற்ற வங்கிகளுக்கு ஏற்புடையதாக விருத்தல் வேண்டும்.

**3. வரைவிலக்கணங்கள்**

3.1 இப்பணிப்புரைகளின் நோக்கங்களுக்காக பின்வரும் வரைவிலக்கணங்கள் ஏற்புடையதாகவிருத்தல் வேண்டும்.

3.1.1 இப் பணிப்புரைகளினால் உள்ளடக்கப்படும் நிதியியல் சொத்துக்கள் என்பது இ.நி.அ.நியமம் 9இன் கீழ் உள்ளடக்கப்படும் அனைத்து நிதியியல் சொத்துக்கள், என்ற கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும், என்பதுடன் கொடுகடன் வசதிகளை வகைப்படுத்தல், அளவிடல் மற்றும் அங்கீகரித்தல் மீதான 13ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப்பணிப்புரைகளினால் உள்ளடக்கப்பட்ட நிதியியல் சொத்துக்களை உள்ளடக்காது.

3.1.2 கடன்பாட்டாளர்கள் என்பது தனிநபர்கள், நிறுவனங்கள் அரசாங்கம், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகள், நிறுவனங்கள், அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள், நபர்களின் கூட்டிணைப்புக்கள் மற்றும் வேறு ஏதாவது நிறுவனம் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

3.1.3 பணிப்பாளர் சபை என்பது உள்நாட்டில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகளின் பணிப்பாளர் சபை அத்துடன் வெளிநாட்டு வங்கிகள் என்ற விடயத்தில், தலைமை அலுவலகம்/ பிராந்திய கண்காணிப்பு அலுவலகம் எனப் பொருள்படும்.

3.1.4 முதன்மை நிறைவேற்று அலுவலர் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர்கள் என்பது முதன்மை நிறைவேற்று அலுவலர் அத்துடன் வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்டதற்கிணங்க உரிமம்பெற்ற வங்கிகளின் நிறைவேற்றுப் பணிகளையாற்றுகின்ற அதிகாரிகள் எனப் பொருள்படும்.

**4. கொடுகடன் வசதிகளை தவிர நிதியியல் சொத்துக்களுக்கான ஆளுகை கட்டமைப்பு**

4.1 ஏற்புடைய இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் தொடர்புடைய ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை வழிகாட்டலிற்கமைவாக நிதியியல் சொத்துக்களின் வகைப்படுத்தல், அங்கீகரித்தல் மற்றும் அளவிடல் ஆகியவற்றுக்கு வசதியளிப்பதற்கு உரிமம்பெற்ற வங்கிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு மீதான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு புறம்பாக, உரிமம்பெற்ற வங்கிகள் குறைந்தபட்சமாக அனுமதிக்கப்பட்ட வியாபார மாதிரியொன்றையும் கொள்கையையும் கொண்டுள்ளன என்பதை உறுதிசெய்வதற்கு பணிப்பாளர் சபை, முதன்மை நிறைவேற்று அலுவலர் மற்றும் தொடர்புடைய முக்கிய முகாமைத்துவ ஆளணியர்கள் பொறுப்புடையவர்களாவர்.

4.2 குறைந்தபட்சம் அத்தகைய கொள்கை:

4.2.1 தொடர்ந்தியங்கும் அடிப்படையில் நிதியியல் சொத்துக்களின் வியாபார மாதிரிகளை மதிப்பீடு செய்வதற்கான போதியளவான நடைமுறைகள் மற்றும் முறைமைகளுடன் குறிக்கோள்கள், வரைவிலக்கணங்கள், பண்புகள், பிரமாணம் மற்றும் தொழிற்பாட்டு கொள்கைகளை இனங்காணுதல்;

4.2.2 வியாபார மாதிரி தீர்மானங்களுக்கான தீர்மானம் மேற்கொள்ளல் அதிகாரிகள், தொடர்சியற்றதும் முக்கியமற்றதுமென கருதப்படக்கூடிய விற்பனைகளின் அளவு, வர்த்தக நோக்கங்களுக்கென கருதப்படக்கூடிய குறுகியகால விற்பனை செய்தலுக்கான காலப்பகுதி, இலாபம் அல்லது நட்டம் ஊடாக அத்துடன் அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக சாதனங்களுக்கான சீர்மதிப்பு பெறுமதியின் தெரிவினை தெரிவு செய்தல்;

4.2.3 தரப்படுத்தப்பட்ட செயன்முறைகளை ஆவணப்படுத்தி பேணுதல், சாதனங்கள் மற்றும் ஒப்பந்தங்களின் மூலதனம் மற்றும் வட்டி ஏக கொடுப்பனவுகளை (மூலதனம் மற்றும் வட்டி ஏக கொடுப்பனவுகளை பெறுவதற்கான ஒப்பந்த ரீதியிலான காசுப்பாய்ச்சல்கள்) அடைவதற்கும் இனங்காணுவதற்கான விரிவான பரிசோதனைப்பட்டியல்கள் மற்றும் தீர்மானப்படிமுறைகள் போன்றவற்றை இனங்காணுதல் வேண்டும்.

4.3 பணிப்பாளர் சபை, தொடர்புடைய வெளிப்படுத்துகைகளூடாக உரிமம்பெற்ற வங்கியின் தகவலை நேரத்துடன், உரிய மற்றும் பயன்பெறத்தக்க ரீதியில் வழங்குவதற்கான பொறிமுறையொன்றை நிறுவுதல் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் தற்போதுள்ள ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட கட்டமைப்பின் கீழ் தேவைப்பாடுகளை இனங்காண்பதற்கும், சரிபார்ப்பதற்கும் அறிக்கையிடுவதற்குமான போதியளவான தரவு/பதிவேடுகள் மற்றும் முறைமைகளைப் பேணுதல் ஆகியன மூலமாக வெளிப்படைத்தன்மையையும் ஒப்பீட்டுத்தன்மையையும் உறுதிசெய்தல் வேண்டும்.

4.4 பணிப்பாளர் சபை, தெளிவான வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்கள், சரிபார்ப்பு காலஇடைவெளி மற்றும் வங்கிகளினால் பயன்படுத்தப்பட வேண்டிய நடைமுறைகள் மற்றும் முறைமைகள் உள்ளடங்கலாக உரிமம்பெற்ற வங்கிகளில் கொடுகடன் வசதிகள் தவிர நிதியியல் சொத்துக்களை வகைப்படுத்தல், அங்கீகரித்தல் மற்றும் அளவிடலுக்கான முறைகள் தொடர்பில் அனைத்தையுமுள்ளடக்கிய சரிபார்ப்பு பூட்கையொன்றை நிறுவுதல் வேண்டும்.

4.5 பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்கையொன்று பின்வருவன தொடர்பில் தெளிவான வழிகாட்டல்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:

4.5.1 முதலீடுகளை கட்டப்படுத்துவதற்கு (சாத்தியமான இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட கட்டம் 2 மற்றும் 3 கடன்களை எவ்வாறு வேறுப்படுத்துவது உள்ளடங்கலாக);

4.5.2 சேதமிழப்பு நோக்கங்களுக்கான தவணைத்தவறுகின்ற நிகழ்தகவு, இழப்புக்களை தருகின்ற தவணைத்தவறுதல்களை நிர்ணயிப்பதற்கான முறைகள். பொருளாதார காரணிச் சீராக்கம், ஏனையவை;

4.5.3 அத்தகைய பிணையுறுதிகள் மீதான மதிப்பீட்டு தேவைப்பாடுகளுடன் சேதமிழப்பிற்காக கருத்திற்கொள்ளப்படும் பிணையுறுதி மற்றும் அத்தகைய மதிப்பீடுகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டிய உத்திகள் மற்றும் தரவுகளின் மாதிரி;

4.5.4 தெளிவான வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்கள், சரிபார்ப்பு காலஇடைவெளி மற்றும் வங்கிகளினால் பயன்படுத்தப்பட வேண்டிய நடைமுறைகள் மற்றும் முறைகள் உள்ளடங்கலாக அனைத்தையுமுள்ளடக்கிய மாதிரி சரிபார்ப்பு கொள்கையொன்று;

4.5.5 எதிர்பார்க்கப்படும் இழப்பீட்டு தன்மையின் கணிப்பீடுகள் பொருளாதார அதிர்வுகளைப் பிரதிபலிக்கின்றதை உறுதிப்படுத்துவதற்கான சேதமிழப்புக்கள் மாதிரிகளை மேலோட்டமாகப் பயன்படுத்தல், இல்லையெனில் அவை கண்டறியப்படாதவை; அத்துடன்

4.5.6 கீழே குறிப்பிடப்பட்டுள்ள 9ஆம் இலக்கப் பணிப்புரைக்கு அமைவாக முதலீடுகளை மீளமைத்தல் தொடர்பான வழிகாட்டல்;

4.6 உரிமம்பெற்ற வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலர் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர்கள், நிதியியல் சொத்துக்கள் மீதான சபை ஒப்புதலளித்த கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்கள் வலுப்படுத்துவதற்கமைவாக நடைமுறைப்படுத்தப்படுகின்றதுடன் அதையொத்தவற்றை உறுதிப்படுத்துவதற்காக போதியளவு உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் சரிபார்ப்பு செயன்முறைகள் நிறுவுப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

**5. நிதியியல் சொத்துக்களையும் (கொடுகடன் வசதிகள் தவிர) நிதியியல் பொறுப்புக்களையும் வகைப்படுத்தல்**

5.1 உரிமம்பெற்ற வங்கிகள், இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நிதியியல் சொத்துக்கள் (கொடுகடன் வசதிகள் தவிர) நிதியியல் பொறுப்புக்களை வகைப்படுத்தல் வேண்டும். வகைப்படுத்தலின் சபைத் தொகுப்பு மற்றும் நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் தொடர் அளவிடல் ஆகியன இணைப்பு 1 இல் தரப்பட்டுள்ளன.

5.2 இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் குறித்துரைக்கப்பட்டதற்கமைவாக உரிமம்பெற்ற வங்கியொன்று அதன் நிதியியல் பொறுப்புக்களுக்கு வகைகூறுகின்றவிடத்து, உரிமம்பெற்ற வங்கிகள், ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக அதன் சொந்த கொடுகடன் இடர்நேர்வின் மாற்றங்களின் காரணமாக நிதியியல் சொத்துக்களின் பெறுமதிகளின் மாற்றங்களை மதிப்பீடு செய்து வகைகூறுதல் வேண்டும். இந்நோக்கத்திற்காக உரிமம்பெற்ற வங்கி, சபை ஒப்புதலளித்த உள்ளக வழிகாட்டல்களை உருவாக்குதல் வேண்டும்.

**6. கொடுகடன் இடர்நேர்வின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு/ கொடுகடன் வசதிகள் தவிர நிதியியல் சொத்துக்களின் தவறல்**

6.1 குறைந்தப்பட்சமாக ஆயுட் கால எதிர்பார்க்கப்படும் இழப்புக்களை இ.நி.அ.நியமம் 9இன் கீழ் கணிப்பிடும் நோக்கத்திற்காக, பின்வரும் ஒரு/ ஒன்றுக்கு மேற்பட்ட காரணிகளை/ நிலைமைகளை சந்திக்கின்றபட்சத்தில், அது கொடுகடன் இடர்நேர்வின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றாக அல்லது வசதிகளின் தவறலாக கருதப்படுதல் வேண்டும்.

6.1.1 நிதியியல் சொத்தொன்றின் ஒப்பந்த ரீதியான கட்டாயக் கொடுப்பனவுகள் 30 நாட்களுக்கு அதிகமான காலக்கிரமத்தில் செலுத்தப்பட வேண்டியதாயுள்ளன. (இ.நி.அ.நியமம் 9இன் கீழ் மறுக்கக்கூடிய அனுமானத்திற்குட்பட்டு);

6.1.2 கருவியொன்றின் கொடுகடன் தரமிடல், வெளிவாரி கொடுகடன் மதிப்பீட்டு நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப்பட்ட இலங்கை தேசிய தரமிடல் அளவீட்டின் கீழ் தொடர்ச்சியாக பீ + அல்லது கீழான அளவிற்கு குறைவடைந்துள்ளது.

6.1.3 உரிமம்பெற்ற வங்கியின் உள்ளக தரமிடலின் கீழ் (கிடைக்கும்பட்சத்தில்) இரண்டு புள்ளிகள் குறைவடைந்துள்ளன. உரிமம்பெற்ற வங்கிகள் வெளிநாட்டு கொடுகடன் மதிப்பீட்டு நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தரமிடல்களுடன் அவர்களின் உள்ளக முதலீட்டு தரமிடல்களை ஆராய்வதற்கு கேட்டுக்கொள்ளப்படுகின்றன. இந்நோக்கத்திற்காக உரிமம்பெற்ற வங்கிகள், மூலதனத் தேவைப்பாடுகள் மீது வங்கித்தொழில் சட்டப்பணிப்புரைகளில் தரப்பட்டுள்ள வெளிவாரி கொடுகடன் தரமிடல்களின் மாதிரிகளை ஆற்றுப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

6.1.4 எதிர்காலப் பொருளாதார நிலைமைகளின் நியாயமானதும் ஆதரவானதுமான எதிர்வுகூறல்கள், சொத்துப்பட்டியல்கள்/ கருவிகளின் செயலாற்றம் மீது நேரடியான எதிர்க்கணிய தாக்கமொன்றை காண்பிக்கிறது;

6.1.5 புவியியல் ரீதியான அமைவிடங்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றமொன்று அல்லது இயற்கை அனர்த்தங்கள் ஆகியன சாதனத்தில் நேரடியாக தாக்கம் செலுத்துகின்றன;

6.1.6 பணிப்பாளர் சபையின் தொடர்ச்சியான மாற்றங்கள் மற்றும் மூத்த முகாமைத்துவம் மற்றும் வழங்குநரின் ஏதேனும் தொடர்ந்து செல்லும் கரிசனைகளின் வழங்கல்கள்;

6.1.7 இரு தொடர் ஆண்டுகளுடன் முன்னைய ஆண்டை ஒப்பிடும் போது, கடன்பாட்டாளரின் 50 சதவீதம் செலுத்தப்பட வேண்டிய அல்லது புரள்வில் மேலதிகமாக அத்துடன/ அல்லது வரிக்கு முன்னரான இலாபம் அத்துடன்/ அல்லது முன்னைய நிதியாண்டுடன் ஒப்பிடும் போது, 25 சதவீதத்தினை விட மேலதிகமாக கடன்பாட்டாளரின் தேறிய-மதிப்பின் தேய்வு (பங்குரிமை மூலதனக் கட்டமைப்பு மற்றும் பங்கிலாப கொள்கையில் ஏற்பட்ட மாற்றங்களை தவிர)

6.1.8 வழங்குநர் மரணித்துள்ளார்/ கடன் தீர்க்க வகையற்றவராவார்;

6.1.9 தொடர்ச்சியாக மூன்று ஆண்டு காலப்பகுதிக்கான கிடைக்கப்பெறாத பங்குலாபங்கள்/ வருவாய்கள் (30 சதவீதம் மற்றும் அதற்கு அதிகமான தேறிய சொத்து மதிப்பின் திரண்ட வீழ்ச்சியொன்றுடன்); அத்துடன்

6.1.10 மூன்றாண்டுகளுக்கு மேலாக குறைந்த கிரயத்திலிருக்கின்ற முதலீட்டுப் பெறுமதியுடன், சந்தை விலைகளில் தொடர்ச்சியான வீழ்ச்சிப் போக்கொன்று.

6.2 உரிமம்பெற்ற வங்கிகள், பின்வருவனவற்றுக்கு உட்பட்டு, கொடுகடன் இடர்நேர்வின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை நிர்ணயிக்கின்ற போது, 6.1.2 இலிருந்து 6.1.10 வரை பட்டியலிடப்பட்ட ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பிரமாணங்களை மறுக்குமாறு கோரலாம்.

6.2.1 அத்தகைய பிரமாணம் வங்கிக்கான கொடுகடன் இடர்நேர்வின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை தோற்றுவிக்காது என்பதை உறுதிப்படுத்துவதற்கான சரியான நியாயப்பூர்வமான தன்மை மற்றும் நியாயப்படுத்தல்களை வழங்குவதன் மூலம் இடர்நேர்வு முகாமைத்துவ செயற்பாட்டை தலைமை தாங்குகின்ற முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் பணிப்பாளர் சபைக்கு அத்தகைய மறுப்பினை விதிந்துரைத்தல் வேண்டும், அத்துடன் பணிப்பாளர் சபை, வழங்கப்படும் தவலைக் கருத்திற்கொண்ட பின்னரே முன்மொழிவுக்கு ஒப்புதலளிக்க வேண்டும் அல்லது நிராகரிக்க வேண்டும்.

6.2.2 ஏதேனுமிருப்பின் மறுக்கப்பட்ட பிரமாணத்தை அத்துடன் தொடர்புடைய வங்கியின் பெறுமதியிழப்பு ஏற்பாடுகள் மீது அத்தகைய மறுப்பின் மதிப்பீடு செய்யப்பட்ட தாக்கம் மற்றும் அவற்றின் கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த நிதியியல் கூற்றுக்களின் இலாபத்தன்மை ஆகியவற்றை வெளிப்படுத்தல்.

**7. கொடுகடன் வசதிகள் தவிர நிதியியல் சொத்துக்களுக்கான பெறுமதியிழப்புக் கட்டணங்கள்**

7.1 உரிமம்பெற்ற வங்கிகள், இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் காலத்துக்கு காலம் வழங்கப்படும் பணிப்புரைகள்/ வழிகாட்டல்களுக்கமைவாக கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதியிழப்புக் கட்டணங்களை கணிப்பிடுதல் வேண்டும்.

7.2 பெறுமதியிழப்புப் படிகளின் அளவிடல் வலுவான முறைகளின் மீது உருவாக்கப்படுதல் வேண்டும் அத்துடன் ஏற்புடைத்தான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களின் உரிய மற்றும் நேரத்துடனான இனங்காணலை தோற்றுவித்தல் வேண்டும்.

7.3 படிக்கூறுகள், கூட்டு அடிப்படையொன்றில் அல்லது தனிப்பட்ட அடிப்படையொன்றில் நிர்ணயிக்கப்படுகின்றன என்பதைப் பொருட்படுத்தாமல் உரிமம்பெற்ற வங்கிகளின் பெறுமதியிழப்பும் படிகளின் கூட்டுக்களின் தொகை, போதியளவானதாகவும் ஏற்புடைத்தான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் குறிக்கோள்களுடன் இணங்குவதாகவும் அமைதல் வேண்டும்.

7.4 உரிமம்பெற்ற வங்கிகளின் பெறுமதியிழப்பு மீதான மேலதிக வழிகாட்டல் இணைப்பு II இல் தரப்பட்டுள்ளது.

**8. கொடுகடன் வசதிகள் தவிர நிதியியல் சொத்துக் கணக்கான பெறுமதியிழப்பின் கணிப்பீட்டு மாதிரிகள்**

8.1 உரிமம்பெற்ற வங்கியின் பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் ஏனைய தொடர்புடைய முக்கிய முகாமைத்துவ ஆளணியினர், பணிப்பாளர்கள் சபையினால் வழங்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் உரிமம்பெற்ற வங்கியானது:

8.1.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கமைவாக எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களை நிர்ணயிப்பதற்காக வலுவான மாதிரிகளை உருவாக்குகின்றன, அத்துடன் அவை உரிமம்பெற்ற வங்கியின் வியாபார மாதிரி மற்றும் இடர்நேர்வு தோற்றப்பாட்டுடன் இணங்கியொழுகியிருத்தல் வேண்டும்;

8.1.2 எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களை மதிப்பிடும் போது, அனைத்தும் கிடைக்கக்கூடியதும் தொடர்புடையதுமான உள்ளக மற்றும் வெளியகத் தரவுகளைப் பரீசிலனையில் கொள்வதன் மூலமாக, மதிப்பீடுகள் உறுதியானவை என்றும் பக்கச் சார்பற்றவை அத்துடன் நடைமுறை இடர்நேர்வுகளைப் பிரதிபலிப்பவை என்பதை உறுதிப்படுத்துகின்றது;

8.1.3 நன்கு பயிற்றுவிக்கப்பட்ட தேர்ச்சிமிக்க அத்துடன் வங்கியினால் பின்பற்றப்படும் மாதிரிகள் தொடர்பில் பூரண அறிவினைக் கொண்ட அலுவலர்களைக் கொண்டிருக்கின்றது;

8.1.4 மாதிரி உருவாக்கத்துடன் தொடர்புடைய வெளிநாட்டு விற்பனையாளர்கள்/ ஆலோசகர்களிடமிருந்து ஆதரவினைப் பெறுகின்ற போது கடுமையான ஆளுகை மற்றும் உள்நாட்டு கட்டுப்பாட்டு செயன்முறைகளை பின்பற்றுகின்றது;

8.1.5 குறித்த மாதிரியொன்றை பொருத்தமான மாதிரியாக தெரிவுசெய்வதற்கான காரணங்களை கொண்ட ஆவணங்களின் வேறுபட்ட மாதிரிகள், பல்வேறு சொத்துப்பட்டியல்கள் மற்றும் சாதனங்களுக்கு பயன்படுத்தபடுகின்ற பட்சத்தில், அனைத்து கொடுகடன் மாதிரிகளும் குறைந்தபட்சம் ஆண்டுதோறும் மீளாய்வு செய்யப்படுகின்றன என்பதை உறுதிசெய்தல் வேண்டும்;

8.1.6 கொடுகடன் இடர்நேர்வு மதிப்பிடல் மற்றும் அளவீட்டு முறைகள், தொடர்ந்தியங்கும் அடிப்படையில் மதிப்பீடுகளை துல்லியமாகவும், முரண்பாடற்ற அத்துடன் பக்கச்சார்பற்ற எதிர்வுகூறல் மதிப்பீடுகளை உருவாக்குவதற்கான இயலளவைக் கொண்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துவதற்கான காத்திரமான மாதிரி செல்லுபடி செயன்முறைகளை நிறுவுகின்றன;

8.1.7 இலாபச் சீராக்குதலின் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும், அளவீடுகள், உள்ளீடுகள் மற்றும் அனுமானங்களின் மாற்றங்களை மேற்கொள்வதிலிருந்து விலகியிருக்கின்றன. எது எவ்வாறெனினும், கொடுகடன் மாதிரிகளில் ஏதேனும் மாற்றங்கள் வேண்டப்படுகின்றப் பட்சத்தில் அம்மாற்றத்திற்கான நியாயப்பூர்வமானத் தன்மை, இடர்நேர்வு அலுவலர் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ குழுக்களினால் மதிப்பிடப்படுதல் வேண்டும் அத்துடன் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்படுதல் வேண்டும்; என்பதையும் பணிப்பாளர் சபையினால் வழங்கப்படும் வழிகாட்டலின் கீழ் உரிமம்பெற்ற வங்கியின் தலைமை நிறைவேற்று அதிகாரி மற்றும் தொடர்புடைய வேறு முக்கிய முகாமைத்துவ ஆணையாளர்கள் உறுதிப்படுத்தல் வேண்டும்.

8.2 இலங்கைக்கு வெளியே ஒருங்கிணைக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகள் அவற்றின் தலைமை அலுவலகம் அல்லது பிராந்திய அலுவலகத்தினால் உருவாக்கப்பட்ட மாதிரிகளைப் பயன்படுத்தும் விடயத்தைப் பொறுத்தவரையில் அத்தகைய உரிமம்பெற்ற வங்கிகள், இலங்கைச் சூழலின் கொடுகடன் மாதிரிகளின் பொருத்தப்பாட்டினை மதிப்பிடல் வேண்டும். அத்துடன் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரினால் தலைமை தாங்குகின்ற உள்நாட்டுக்குழுவொன்றுடன் பொருத்தமான செல்லுபடி நடைமுறைகளை முன்னெடுத்தல் வேண்டும்.

**9. கொடுகடன் வசதிகளைத் தவிர நிதியியல் சொத்துக்களை மீள வகைப்படுத்தல்**

9.1 உரிமம்பெற்ற வங்கிகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் ஏற்பாடுகளின் கீழ் நிதியியல் சொத்துக்களை மீள வகைப்படுத்தலாம், எனினும் அதன் நிதியியல் சொத்துக்களிற்கான உரிமம்பெற்ற வங்கிகளின் வியாபார மாதிரியின் குறிக்கோள் மாற்றமடைந்துள்ளது அத்துடன் அதன் முன்னைய மாதிரி மதிப்பீடு நீண்டகாலத்திற்கு பிரயோகிக்கப்படுவதில்லை.

9.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களின் கீழான தேவைப்பாடுகளுக்கமைவாக, வியாபார மாதிரிகள் மற்றும் மீள்வகைப்படுத்தலின் அத்தகைய மாற்றங்கள் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்படுதல் வேண்டும் அத்துடன் அவ் ஒப்புதலளிக்கப்பட்ட திகதியின் 7 வேலைநாட்களுக்குள் வங்கி மேற்பார்வையின் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

**10. கொடுகடன் வசதிகளை தவிர நிதியியல் சொத்துக்களை தரமுயர்த்துதல்**

10.1 உரிமம்பெற்ற வங்கிகள், பணிப்பாளர் - சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்கையொன்றிற்கமைவாக நிதியியல் சொத்துக்களை உயர்ந்த மட்டத்தில் உயர்த்துதல் வேண்டும், அத்துடன் அவ் தரமுயர்த்தலிற்கான நியாயப்படுத்தலை உரிய முறையில் ஆவணப்படுத்தல் வேண்டும்.

10.2 உரிமம்பெற்ற வங்கிகள், நிதியியல் சொத்துக்களை உயர்த்துதல் தொடர்பில் முன்மதியுடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும் அத்துடன் தரமுயர்த்தப்பட்ட சொத்து, மேம்படுத்தப்பட்ட வகைப்படுத்தல் நிலையின் நியாயப்படுத்தலுக்கான முன்னேற்றத்தின் நிலையான போக்கு∴ நிலையொன்றினைக் காண்பித்துள்ளது என்பதை உறுதிசெய்தல் வேண்டும்.

**11. கொடுகடன் வசதிகளைத் தவிர நிதியியல் சொத்துக்களின் சீர்மதிப்புப் பெறுமதியை அளவிடல்**

11.1 நிதியியல் சாதனங்கள் தொடர்ச்சியாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுகின்ற போது, உரிமம்பெற்ற வங்கிகள், "இலங்கை கணக்கீட்டு நியமம் இ.நி.அ.நியமம் 13 சீர்மதிப்புப் பெறுமதி அளவிடலில்" தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும் அத்துடன் அவை -

11.1.1 போதியளவான தரவுகள் கிடைக்கத்தக்க பொருத்தமான மதிப்பீட்டு உத்தியொன்றைப் பயன்படுத்துமாறு;

11.1.2 தெரிவுசெய்யப்பட்ட மதிப்பீட்டு உத்திகளை தொடர்ச்சியாக (முன்மதியுடைய விதத்தில் மேற்கொள்ளுதல்) பிரயோகிக்குமாறு;

11.1.3 தொடர்புடைய அவதானிக்கத்தக்க உள்ளீடுகளின் பயன்பாட்டை அதிகரித்தல். விதிவிலக்கான சந்தர்ப்பங்களில், அவதானிக்கப்படாத உள்ளீடுகளும் பயன்படுத்தப்படலாம் அத்துடன்;

11.1.4 அவ் உள்ளீடுகள், தொடர்புடைய மதிப்பீட்டு உத்திகளை பயன்படுத்தியிருப்பின், கட்டம் 3 படி நிலையின் கீழ் உள்ளீடுகளின் பொருத்தப்பாடு மற்றும் நம்பகத்தன்மையின் தொடர்புடன் தலைமை இடர்நேர்வு அலுவலரிடமிருந்து உறுதிப்படுத்தலை பெறுவதற்கும், உரிமம்பெற்ற வங்கிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

**12. உள்ளகக் கணக்காய்வின் வகிபாகம்**

12.1 உள்ளக கணக்காய்வு தொழிற்பாடானது கொடுகடன் இடர்நேர்வு மதிப்பிடல், அளவிடலின் முறைமைகளின் செயல்திறனை மற்றும் உரிமம்பெற்ற வங்கியின் செயன்முறைகளை சுதந்திரமாக மதிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் கொடுகடன் தீர்மானங்களின் ஏற்புடைத்தன்மையினை உறுதிப்படுத்தல் வேண்டும்.

12.2 ஏதேனுமிருப்பின், உள்ளக கணக்காய்வு தொழிற்பாடு, குறைந்தபட்சம் ஆண்டுதோறும், தரவு சீராக்கத்துடன் கூடியதாக பயன்படுத்தப்படும் அனைத்து கொடுகடன் இடர்நேர்வு மதிப்பீட்டு மாதிரிகள், உள்ளீடுகள் மற்றும் அனுமானங்களை உறுதிசெய்து மதிப்பிடுதல் வேண்டும்.

12.3 முக்கிய உந்து சக்திகள் துல்லியமாகக் கண்டறியப்பட்டு அளவீடு செய்யப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு, உள்ளகக் கணக்காய்வு தொழிற்பாடு, மீளாய்வின் போதியளவானதும் செயற்றிறன் மிக்கதுமான தன்மை மீது உத்தரவாதமொன்றினை வழங்குதல் வேண்டும்.

**13. ஒழுங்குவிதி அறிக்கையிடல்**

13.1 கீழே குறித்துரைக்கப்பட்டதற்கமைவாக அல்லது வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் குறித்துரைக்கப்பட்டிற்கமைவாக உரிமம்பெற்ற வங்கிகள், இப்பணிப்புரைகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட நியதி வருவாய்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

13.1.1 மாதாந்த சமர்ப்பித்தல் - அடுத்துவரும் மாதத்தில் 15ம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னரோ

13.1.2 காலாண்டுப் பகுதியில் சமர்ப்பித்தல் - காலாண்டிறுதியிலிருந்து 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னரோ

**14. நடைமுறைக்கு வரும் திகதி**

14.1 இப்பணிப்புரைகள் 2022 சனவரி 01ஆம் நாளிலிருந்து தொழிற்பாட்டிற்கு வருதல் வேண்டும்.

**15. பணிப்புரைகளை இரத்துச் செய்தல்**

15.1 பின்வரும் பணிப்புரைகள் 2022 சனவரி 01ஆம் நாளிலிருந்து இரத்துச் செய்யப்படுதல் வேண்டும்

15.1.1 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு வழங்கப்பட்ட 2006.03.01ஆம் திகதியிடப்பட்ட வங்கியின் முதலீட்டு சொத்துப்பட்டியலை வகைப்படுத்தல், மதிப்பிடுதல் மற்றும் தொழிற்பாட்டிற்கான முன்மதியுடைய விதிகள் மீதான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்.

**பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்**
**நாணயச் சபையின் தலைவரும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**இப்பணிப்புரையின் இணைப்பு** I **இனை** https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/Banking_Act_Directions_No_14_of_2021_t.pdf **என்ற வெப்தளத்தில் பார்வையிடலாம்.**

**2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கச் சுற்றறிக்கை** 2021 செத்தெம்பர் 30

**கொடுகடன் வசதிகளின் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளில் ஏனைய நிதியியல் சொத்துக்களின் வகைப்படுத்தல், அங்கீகரித்தல் மற்றும் அளவிடல் தொடர்பில் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கான குறைநிரப்பு சுற்றறிக்கை**

முறையே கொடுகடன் வசதிகளின் வகைப்படுத்தல், அங்கீகரித்தல் மற்றும் அளவிடல் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளில் கொடுகடன் வசதிகள் தவிர்ந்த ஏனைய நிதியியல் சொத்துக்களின் வகைப்படுத்தல், அங்கீகரித்தல் மற்றும் அளவிடல் தொடர்பில் 2021ஆம் ஆண்டின் 13 மற்றும் 14ஆம் இலக்க புதிய வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் வழங்கலைத் தொடர்ந்து, இலங்கை கணக்கீட்டு நியமங்கள் - இ.நி.அ.நியமம் 9: நிதியியல் சாதனங்களை கொவிட்-19 நோய்ப்பரவலின் மத்தியில் உரிமம்பெற்ற வங்கிகள் பின்பற்றுவது தொடர்பில் நிலையான நடைமுறைகளை நிறுவுகின்ற நோக்கில், இலங்கை மத்திய வங்கி 2022 சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் இச் சுற்றறிக்கையை உரிமம்பெற்ற வங்கிகளுக்கு இத்தால் விடுத்திருக்கிறது.

1. கொவிட்-19 நோய்ப்பரவலின் காரணமாக ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளுக்கு மத்தியில், உரிமம்பெற்ற வங்கிகள், வங்கிப் பணிப்பாளர் சபையின் ஒப்புதலுடன், தொடர்பான கொள்கைகளில் பெறுமதியிழப்பு நோக்கங்களுக்காக கடன்கள் மற்றும் முற்பணங்களைக் வகைப்படுத்துவது தொடர்பில் தெளிவான வழிகாட்டல்களை உள்ளடக்குதல் வேண்டும்.

2. கொவிட்-19 நோய்ப்பரவலின் காரணமாகப் பொருளாதார நடவடிக்கைகளின் மீது நேரடியான தற்காலிகக் கட்டுப்பாடுகள் காணப்படுகின்ற/ காணப்பட்ட விடயத்தினைப் பொறுத்தவரையில்,

   (அ) பொருளாதார நடவடிக்கைகளின் மீதான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டவுடன் கடன்படுநர்கள் வியாபாரங்களுக்குப் புத்துயிரளித்துக் கடன்களை மீளச்செலுத்துவதற்குப் போதியளவு காசுப்பாய்ச்சலை உருவாக்கிக் கொள்வதற்கான இயலாமையினைப் பரிசீலனையில் கொள்ளல்

   (ஆ) கொவிட் 19 தொற்று அல்லது உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் என்பனவற்றின் மோசமான பொருளாதார விளைவுகளின் காரணமாக, வசதியானது, இரு தடவைகளுக்கு மேல் சீரமைக்கப்பட்டிருப்பின் கடன் வசதிகளை தரம் III இற்கு வகைப்படுத்துவதா இல்லையா என்பதனை பின்வரும் நிகழ்வுகளின் அடிப்படையில் உரிமம்பெற்ற வங்கிகள் விவேகமான தீர்ப்பினை தொடர்ச்சியாக அமுல்படுத்தலாம்.

3. நாடுகளினால் வழங்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட தவணை தவறும் நிகழ்தகவுகளைக் கணிப்பது தொடர்பில் மேலதிக வழிகாட்டல்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு, உரிமம்பெற்ற வங்கிகள் பட்டயக் கணக்காளர்களுடனும் கணக்காய்வாளர்களுடனும் ஆலோசனைகளை மேற்கொள்ள முடியும்;

4. இவ் அறிவுறுத்தல்கள், சுற்றுலாத்துறை உள்ளடங்கலாக, கொவிட்-19இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான இலங்கை மத்திய வங்கியிடமிருந்து காலத்துக்கு காலம் வழங்கப்படும் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வழங்கப்பட்ட சலுகைகளின் கீழ் பரிசீலனையில் கொள்ளப்பட்ட அனைத்து கொடுகடன் வசதிகளுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

5. இலங்கை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றுவது தொடர்பான உரிமம்பெற்ற வங்கிகளுக்கான வழிகாட்டலின் மீதான 2018ஆம் ஆண்டின் 04ஆம் இலக்கச் சுற்றறிக்கைக்கான திருத்தங்களுக்கான 2020 ஒத்தோபர் 28இல் விடுவிக்கப்பட்ட 2020ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க சுற்றறிக்கை- இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9: நிதியியல் சாதனங்கள் 2022 சனவரி 01 தொடக்கம் இரத்துச் செய்யப்படும்.

**வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர்**

**2021ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்** 2021 ஒத்தோபர் 01

**இறக்குமதிகளுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்**

திருத்தப்பட்டவாறான, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76(ஒ)(1)ஆம் பிரிவுகளால் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கமைவாக விடுக்கப்பட்டது.

இறக்குமதிகளுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள் மீதான 2021 செத்தெம்பர் 08ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் இத்தால் இரத்துச்செய்யப்படுகின்றன.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2021ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கச் சுற்றறிக்கை** 2021 ஒத்தோபர் 05

**பயணிகள் போக்குவரத்து துறையில் வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட குத்தகை வசதிகளுக்கான சலுகைகள்**

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மத்தியில் சுற்றுலாத் துறை உள்ளடங்கலாக அரச மற்றும் தனியார் பயணிகள் போக்குவரத்து பணிகளை வழங்கும் வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களால் எதிர்நோக்கப்படும் சவால்களை எதிர்கொள்ளும் பொருட்டு, இலங்கை மத்திய வங்கி, பயணிகள் போக்குவரத்து துறையில் வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்கள் பெற்றுக்கொண்ட குத்தகை வசதிகளுக்கான சலுகைகள் மீது 2021 மாச்சு 10ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்பட்ட சலுகைகளை நீடிக்குமாறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் என்பவற்றினை (இதனகத்துப்பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) கேட்டுக் கொண்டிருக்கிறது. அவை பின்வருமாறு:

(i) சுற்றுலாத் துறைக்கான பயணிகள் போக்குவரத்து பணிகளை வழங்கும் கொவிட் -19இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களால் பெற்றுக்கொள்ளப்படும் குத்தகை வசதிகளுக்கு 2021 செத்தெம்பர் 13ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழ், ஆதரவளித்தல், அத்துடன்

(ii) பயணிகள் போக்குவரத்து பணிகளில் ஈடுபட்டுள்ள கொவிட் -19 இனால் பாதிக்கப்பட்ட ஏனைய வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களால் பெற்றுக்கொள்ளப்படும் குத்தகை வசதிகளுக்கு 2021 செத்தெம்பர் 01ஆம் நாள் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழ் ஆதரவளித்தல்.

உரிமம்பெற்ற வங்கிகள் மேலே குறிப்பிடப்பட்ட (i) மற்றும் (ii)இனை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான ஏற்பாடுகளை விரைவில் மேற்கொள்ளல் வேண்டும்.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்,**
**நாணயச் சபையின் தலைவரும்**

**2021ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்** 2021 திசெம்பர் 09

**உரிமம்பெற்ற வங்கிகளுக்கான தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் புத்துயிரளித்தல் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு**

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76(ஜே)(1) ஆகிய பிரிவுகளினால் வழங்கப்பட்ட அதிகாரங்களை செயற்படுத்துகின்ற விதத்தில், நாணயச் சபை, உரிமம்பெற்ற வங்கிகளில் தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவத்தினையும் புத்துயிரளித்தல் கட்டமைப்பினையும் மேலும் வலுப்படுத்தும் நோக்குடன், உரிமம்பெற்ற வங்கிகள் என இதனகத்துப்பின்னர் குறிப்பீடு செய்யப்படும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்குமான தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் புத்துயிரளித்தல் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு மீது பின்வரும் பணிப்புரைகளை இத்தால் விடுக்கிறது.

1. **அதிகாரவலுவளிப்பு**

1.1 வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1) இன் நியதிகளில் நாணயச் சபை, வங்கித்தொழில் முறைமையின் ஆற்றலினை உறுதிசெய்யும் பொருட்டு அத்தகைய வங்கியின் அல்லது வங்கிகளின் வியாபாரத்தினை ஏதேனும் அம்சங்களைக் கொண்டு நடத்தவேண்டிய முறை தொடர்பில் அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் பணிப்புரைகளை விடுப்பதற்கான அதிகாரத்தினைக் கொண்டிருக்கிறது.

1.2 வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76(ஜே)(1) இன் நியதிகளில், நாணயச் சபை உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்கு அல்லது உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் ஏதேனும் வகைக்கு, அத்தகைய வங்கிகள் வியாபாரத்தின் ஏதேனும் அம்சங்களைக் கொண்டு நடத்தவேண்டிய முறை தொடர்பில் பணிப்புரைகளை விடுப்பதற்கான அதிகாரத்தினைக் கொண்டிருக்கிறது.

**2. செயற்பரப்பு மற்றும் ஏற்புடைத்தன்மை**

2.1 இப்பணிப்புரைகள் முகவராண்மைகள் மற்றும் மூன்றாம் தரப்பு பணி வழங்குவோர் ஊடாக நடத்தப்படும் தொழிற்பாடுகள் உட்பட அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

**3. தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் புத்துயிரளித்தல் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு**

3.1 இப்பணிப்புரைகளுக்கான அட்டவணை I இலுள்ள (இதனகத்துப்பின்னர் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு எனக் குறிப்பீடு செய்யப்படும்) தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் புத்துயிரளித்தல் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினால் விதிக்கப்படும் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதனை அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

3.2 ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிலுள்ள தேவைப்பாடுகள் முகவராண்மைகள் மற்றும் மூன்றாம் தரப்பு பணி வழங்குவோர் ஊடாக நடத்தப்படுகின்ற தொழிற்பாடுகள் உட்பட, உரிமம்பெற்ற வங்கிகளின் அனைத்து தொழிற்பாடுகளுக்கும் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

**4. சபையின் பொறுப்புக்கள்**

4.1 உரிமம்பெற்ற வங்கிகளின் பணிப்பாளர் சபை ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பில் குறித்துரைக்கப்பட்ட தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் புத்துயிரளித்தலை உரிமம்பெற்ற வங்கிகள் நடைமுறைப்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்குப் போதுமான மேற்பார்வை வழிமுறைகளை நிறுவிக்கொள்ளுதல் வேண்டும்.

**5. ஆளுகைக் கட்டமைப்பு**

5.1 தொழில்நுட்பவியல் இடர்நேர்வுகளின் முன்மதியுடைய முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்துவதற்காக ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் 4ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகும் விதத்தில் உரிமம்பெற்ற வங்கிகளின் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட காத்திரமான ஆளுகைக் கட்டமைப்பொன்றினை உரிமம்பெற்ற வங்கிகள் நிறுவிக்கொள்ளுதல் வேண்டும்.

**6. மேற்பார்வை மீளாய்வுச் செயன்முறையின் கீழ் தொழில்நுட்பவியல் இடர்நேர்வினை மதிப்பிடல்**

6.1 உரிமம்பெற்ற வங்கிகள், வங்கியின் உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செய்முறையிலுள்ள இடர்நேர்வுகளின் அனைத்தையுமுள்ளடக்கிய மதிப்பீட்டின் ஒரு பகுதியாக தொழில்நுட்பவியல் இடர்நேர்வு மதிப்பிடப்பட்டது என்பதனையும் ஏதேனும் சாத்தியமான இடர்நேர்வு தொழில்நுட்பவியல் இடர்நேர்வுகளை எதிர்கொள்வதற்கு மூலதனத்தினை போதுமான மட்டத்தில் வைத்திருத்தல் வேண்டும் என்பதனையும் உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

**7. உள்ளகக் கணக்காய்வின் வகிபாகம்**

7.1 உரிமம்பெற்ற வங்கிகளின் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகள் தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்கிக்கொள்ளப்பட்டமையினை உறுதிப்படுத்தும் விதத்தில் அவற்றை மதிப்பீடு செய்து சபைக் கணக்காய்வுக் குழுவினூடாக, குறைந்தபட்சம் ஆண்டிற்கொருதடவையாவது உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடல் வேண்டும்.

**8. இணங்குவிப்புக்களை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள்**

8.1 இப்பணிப்புரைகளின் திகதியிலிருந்து தகவல்முறைமைக் உட்கட்டமைப்பு சொத்துடமை, முகாமைத்துவம் மற்றும் அமைவிடம் என்பனவற்றின் அடிப்படையில் தேவைப்பாடுகள் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் 9ஆவது பிரிவுடன் இணங்குகின்ற விதத்தில் உரிமம்பெற்ற வங்கிகள் அனைத்து புதிய தொழில்நுட்பவியல் முன்னெடுப்புக்களையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

8.2 நடைமுறைப்படுத்தல் மற்றும் இடைக்கால ஏற்பாடுகள் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் 10 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் சரியான நேரத்தில் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் மற்றைய அனைத்து தேவைப்பாடுகளுடனும் இணங்கிக்கொள்ளப்பட்டமையினை உறுதிப்படுத்தல் வேண்டும்.

8.3 உள்நாட்டு முறையியல் ரீதியாக முக்கியத்துவம் பெற்ற வங்கிகள் என குறித்துரைக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகள், உள்நாட்டு முறையியல் ரீதியாக முக்கியத்துவம் பெற்ற வங்கிகள் என குறித்துரைக்கப்பட்டு அறிவித்தல் விடுக்கப்பட்ட நாளிலிருந்து அல்லது ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் பிரிவின்படி, இதில் எது பின்னர் வருகின்றதோ அத்திகதியிலிருந்து 12 மாதத்திற்குள் உள்நாட்டு ரீதியாக முக்கியத்துவம் பெற்ற வங்கிகள் விசேடமாக ஏற்புடைத்தான தேவைப்பாடுகளுடன் இணங்கிக்கொள்வதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

இப்பணிப்புரையின் இணைப்பு I இனை https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/Banking_Act_Directions_No_16_of_2021_t_0.pdf என்ற வெப்தளத்தில் பார்வையிடலாம்.

**2021ஆம் ஆண்டின் 13ஆம் இலக்கச் சுற்றறிக்கை** 2021 திசெம்பர் 22

**கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கெதிரான அறவிடல் நடவடிக்கைகளை பிற்போடுதல்**

இலங்கை மத்திய வங்கி, தற்பொழுது காணப்படுகின்ற கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக வியாபாரங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் எதிர்நோக்கப்படுகின்ற சவால்களை எதிர்கொள்ளும் நோக்குடன் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளையும் (இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் என குறிப்பீடு செய்யப்படும்) பராட்டே நிறைவேற்றல் மற்றும் குத்தகைக்குவிடப்பட்ட சொத்துக்களை நிர்ப்பந்த முறையில் மீள உடமைப்படுத்தல் உள்ளிட்ட அனைத்து வகையான அறவிடல் நடவடிக்கைகளையும் இடைநிறுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

1. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான சலுகைகள் தொடர்பில் 2021 செத்தெம்பர் 01ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அனைத்து அறவிடல் நடவடிக்கைகளையும் 2022.03.31 வரை உரிமம்பெற்ற வங்கிகள் நீடித்தல் வேண்டும்.
2. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட சுற்றுலா தொழில்துறையிலுள்ள வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தின் நீடிப்புக்கள் தொடர்பான 2021 செத்தெம்பர் 13ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அனைத்து அறிவிடல் நடவடிக்கைகளையும் இடைநிறுத்துவதற்கான கோரிக்கை 2022.06.30 வரை மாற்றமின்றியிருத்தல் வேண்டும்.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

**2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தீர்மானம்** 2021 திசெம்பர் 27

**உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் வருடாந்த உரிமக் கட்டணம்**

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 8 மற்றும் 76ஈ(6)ஆம் பிரிவுகளின் கீழ், இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்.

1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 8(1) மற்றும் 76ஈ(6)ஆம் பிரிவுகளின் நியதிகளில், நாணயச் சபை, ஒவ்வொரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் கீழேயுள்ள அட்டவணையில் எடுத்துக்காட்டப்பட்டவாறு, 2021 இறுதியில் உள்ளவாறு அத்தகைய வங்கியின் மொத்தச் சொத்துக்களை அடிப்படையாகக் கொண்டு, 2022 கலண்டர் ஆண்டுடன் தொடர்பான உரிமக் கட்டணத்தினை 2022 சனவரி 31ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்துதல் வேண்டுமெனத் தீர்மானித்திருக்கிறது.

**2022ஆம் ஆண்டிற்கான உரிமக்கட்டணம்**

| 2021 இறுதியிலுள்ளவாறு மொத்தச் சொத்துக்கள் (ரூ.பில்.) | உரிமக் கட்டணம் (ரூ.மில்.) |
|---|---|
| 2,000 இற்கு மேல் | 38.0 |
| 1,000 இற்கு மேல் 2,000 வரை | 35.0 |
| 500 இற்கு மேல் 1,000 வரை | 28.5 |
| 200 இற்கு மேல் 500 வரை | 25.0 |
| 125 இற்கு மேல் 200 வரை | 18.5 |
| 75 இற்கு மேல் 125 வரை | 12.5 |

| | |
|---|---|
| 25 இலிருந்து 75 வரை | 6.5 |
| 25 இற்கு குறைவான | 3.3 |

**நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்**
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

**2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நாணய விதிச் சட்டக் கட்டளை** 2021 திசெம்பர் 30

**உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் தேசிய சேமிப்பு வங்கியினதும் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்**

திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 104(1)(அ) இன் கீழ் விடுக்கப்பட்டது.

தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்பட்ட பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீது நிலவுகின்ற வட்டி வீதங்கள் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு, நாணயச் சபை உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியின் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீது செலுத்தப்படவேண்டிய உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் தொடர்பில் இத்தால் கட்டளையொன்றினை விடுக்கின்றது.

**1. நாணயவிதிச் சட்டத்தின் கீழான வலுவளிப்பு**

1.1 நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 104(1)(அ) இன் நியதிகளில், நாணயச் சபை, வைப்புக்களின் பல்வேறு வகுப்புக்களின் மீதும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் செலுத்தப்படக்கூடிய உயர்ந்தபட்ச வட்டி வீதங்களை காலத்திற்குக் காலம் நிர்ணயிக்கலாம்.

**2. வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்**

2.1 வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினாலும் தேசிய சேமிப்பு வங்கியினாலும் வழங்கப்படக்கூடிய அல்லது செலுத்தப்படக்கூடிய உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் வருமாறு;

(i) ஓராண்டிற்குக் குறைவான அல்லது சமமான முதிர்ச்சியைக் கொண்டவற்றிற்கான வட்டி, முன்னைய காலாண்டின் இறுதிக் கலண்டர் மாதகாலப்பகுதியில் நடைபெற்ற ஏலங்களில் தீர்மானிக்கப்பட்ட 364 நாள் திறைசேரி முறிகளின் முதலாந்தர சந்தை விளைவு வீதங்களின் எளிமையான சராசரியில் 150 அடிப்படைப் புள்ளிகளைக் கழித்த அல்லது 5 சதவீதம் இதில் எது உயர்வானதோ அதனை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன்;

(ii) ஓராண்டிற்கும் கூடுதலான முதிர்ச்சியுடன்கூடியவற்றிற்கு சந்தை நடத்தையை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

2.2 வெளிநாட்டு நாணயத்திலமைந்த சிறப்பு வைப்புக் கணக்குகளைப் பொறுத்தவரையில், வழங்கப்படக்கூடிய அல்லது செலுத்தப்படக்கூடிய மேலதிக வட்டி வீதங்கள் மேலே 2.1இல் பிரயோகிக்கப்படக்கூடியவற்றிற்கும் மேலானதாகவும் உயர்வானதாகவும் இருத்தல் வேண்டும்.

**3. கணிப்பிற்கான அடிப்படை**

3.1 மேலேயுள்ள சராசரி வீதங்களைக் கணிப்பதற்கான ஏலங்கள், தொடர்பான கலண்டர் மாதத்திற்குள் வருகின்ற ஏலத்திகதியின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட வேண்டுமேயொழிய தீர்ப்பனவுத் திகதியினடிப்படையிலல்ல.

3.2 இனிவரும் காலாண்டிற்கான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் நடைமுறைக் காலாண்டின் இறுதி வேலைநாளின் அடிப்படையில் கணிக்கப்படுதல் வேண்டும்.

**4. பரஸ்பரபரிமாற்றல் செலவு**

4.1 ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபாவின் உள்நாட்டு பரஸ்பரபரிமாற்றல் சந்தையில் அவதானிக்கப்பட்ட அண்மைய மிகையான தளம்பல் நிலைமையினை பரிசீலனையில் கொண்டு, அவற்றின் ஒழுங்குமுறையான நடத்தையினை உறுதிப்படுத்துவதற்காக உரிமம்பெற்ற வங்கிகள் ஆண்டொன்றிற்கு ஐ.அ.டொலர் 10 சதவீதம் கொண்ட உயர்ந்தபட்ச வட்டி என்ற நிபந்தனைக்குட்பட்டு, ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா பரஸ்பரபரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுமாறு உரிமம்பெற்ற வங்கிகள் அறிவுறுத்தப்படுகின்றன. இதற்கமைய, ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா பரஸ்பரபரிமாற்றல் புள்ளிகள், மறு அறிவித்தல் வரை தொடர்பான காலப்பகுதிக்கான மேற்குறிப்பிட்ட அடித்தள அளவுக் குறியீடு ஐ.அ.டொலர் வட்டி வீதத்தின் அடிப்படையில் விகிதசமப்படுத்தப்பட்டனவாக இருத்தல் வேண்டும்.

**5. ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கையிடல் மற்றும் வெளிப்படுத்தல்**

5.1 ஒவ்வொரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியும் தேசிய சேமிப்பு வங்கியும்

(i) “வட்டி வீதங்கள்” மீதான வாராந்த கூற்றுக்களுக்கிணங்க வெளிநாட்டு நாணய வைப்புச் சாதனங்கள் மீது வழங்கப்பட்ட வட்டி வீதங்களின் விபரங்களை சமர்ப்பித்தல் வேண்டும்; அத்துடன்

(ii) வெளிநாட்டு நாணய வைப்புச் சாதனங்கள் மீது வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட வட்டி வீதங்களை அறிவிக்கவும் காட்சிப்படுத்தவும் ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

**6. நடைமுறைப்படுத்தல்**

6.1 இக்கட்டளைகள் 2021.12.31 இலிருந்து நடைமுறைக்குவருதலாதல் வேண்டும் என்பதுடன் இது புதிய வெளிநாட்டு நாணய வைப்புக்கள், ஏற்கனவேயுள்ள வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மற்றும் புதுப்பிக்கப்படும் வெளிநாட்டு நாணய கால வைப்புக்கள் என்பனவற்றிற்கு ஏற்புடைத்தாதல் வேண்டும்.

**7. இரத்துச்செய்தல்**

7.1 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி என்பனவற்றின் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் தொடர்பில் 2021.08.24ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க நாணயவிதிச் சட்டக் கட்டளை இத்தால் இரத்துச்செய்யப்படுகிறது.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்

**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க நாணய விதிச் சட்டக் கட்டளை** 2021 திசெம்பர் 31

**ஈட்டினைப் பிணையாகக் கொண்ட வீடமைப்புக் கடன்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் தொடர்பில் 2020ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நாணயவிதிச் சட்டக் கட்டளைக்கான திருத்தம்**

திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 104(1)(ஆ) இன் கீழ் விடுக்கப்பட்டது.

தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்பட்ட பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளினால் வழங்கப்பட்ட இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களின் தற்போது நிலவும் சந்தை வட்டி வீதங்கள் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு, நாணயச் சபை, ஈட்டினைப் பிணையாகக் கொண்ட வீடமைப்புக் கடன்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் தொடர்பான 2020ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நாணயச் சட்டக் கட்டளைக்குத் திருத்தமொன்றினை விடுக்கிறது.

இதன்படி, எடுத்துக்காட்டப்பட்ட நாணய விதிச் சட்டக் கட்டளையின் 3.1 கட்டளை பின்வருமாறு பதிலீடு செய்யப்படவேண்டும்.

**3. ஊழியர்களின் சம்பளத்தினை ஈட்டுப் பிணையாகக் கொண்ட வீடமைப்புக் கடன்களின் வட்டி வீதங்கள் மற்றும் காலம்**

3.1 மேலே கட்டளை 2.1இல் குறித்துரைக்கப்பட்ட ஈட்டினைப் பிணையாக் கொண்ட வீடமைப்புக் கடன்களுக்கு ஏற்புடைத்தான உயர்ந்தபட்ச வட்டி வீதம் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:

(i) நிலையான வட்டி வீதம், கடன் காலத்தின் முதல் ஐந்து ஆண்டு காலப்பகுதிக்கான கடனின் பகிர்ந்தளிப்புத் திகதியில் நிலவிய மாதாந்த சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மை கடன் வழங்கல் வீதமாக இருத்தல் வேண்டும்.

(ii) முதல் ஐந்து ஆண்டுகளின் பின்னர், கடனின் எஞ்சிய காலப்பகுதிக்கு பிரயோகிக்கத்தக்க வட்டி வீதம் மாதாந்த சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதத்துடன் 200 அடிப்படைப் புள்ளிகளைக் கூட்டிய வீதத்துடன் இணைக்கப்பட்ட மிதக்கும் வட்டி வீதமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு ஆறு மாதமும் மீண்டும் விலையிடப்படுதல் வேண்டும்.

(iii) முதல் ஐந்து ஆண்டு காலப்பகுதிக்கான மாதாந்த தவணைப் பணம் கடனின் முழுக்காலப்பகுதிக்குமான வட்டி வீதத்தினைப் போன்றே கடன் பகிர்ந்தளிப்புக் காலத்தில் நிலவிய சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதத்தினை பரிசீலனையில் கொண்டு கணிக்கப்படுதல் வேண்டும்.

இக்கட்டளையானது 2022 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்கு வருதலாதல் வேண்டும்

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்

**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**இலங்கை நாணயத் தாள்களை மீளத்தயாரித்தல் மீது முன்மொழியப்பட்ட வழிகாட்டல்கள்**

**1. அறிமுகம்**

1.1. 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் 49ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய, இலங்கையில் நாணயத்தாள்களை மற்றும் குற்றிகளை வெளியிடுவதற்கான ஏக உரிமையினையும் அதிகாரத்தினையும் இலங்கை மத்திய வங்கி கொண்டுள்ளது.

1.2. நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 58(ஈ)ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய, இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் அதிகாரமின்றி, எவரேனும் ஆள் ஏதேனும் நாணயத் தாளை எதுவாயினும் ஏதேனும் வடிவத்தில் மீளத்தயாரித்தல் அல்லது நகலெடுத்தல் குற்றத்தவறொன்றாக இருத்தல் வேண்டும். இந்நியதிச்சட்ட தேவைப்பாட்டின் நோக்கம், போலி நாணயத் தாள்களைத் தடுத்தல் அல்லது குறைத்தல் அத்துடன் நாணயம் பற்றிய பொதுமக்களின் ஒருமைப்பாட்டில் எண்ணப்பாங்கினையும் நம்பிக்கையினையும் அதிகரிப்பதற்கானதாகும்.

1.3. இலங்கை நாணயத் தாள்களை மீளத்தயாரித்தல் மீதான இவ்வழிகாட்டல்களின் (வழிகாட்டல்கள்) நோக்கம், நாணயத் தாள்களின் ஏதேனும் மீளத்தயாரித்தலுக்கான நிபந்தனைகளையும் (இதனகத்துப்பின்னர் நாணயம் என குறிப்பீடு செய்யப்படும்) நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 58(ஈ)ஆம் பிரிவின் கீழ் நாணயச் சபையின் ஒப்புதலைப் பெற விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான நடைமுறையினையும் வழங்குவதாகும்.

1.4. இவ்வழிகாட்டல்கள், ஆள்புலம், தேசியம் போன்றவற்றைப் பொருட்படுத்தாது இலங்கையின் நாணயத்தை மீளத்தயாரிப்பதற்கு முனைகின்ற எவரேனும் சட்டரீதியான அல்லது இயற்கையான ஆளுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

**2. மீளத்தயாரித்தல் பற்றிய வரைவிலக்கணம்**

i. மீளத்தயாரித்தல் என்பது, நாணயத் தாளின் கட்புலப் பிம்பத்தின், உள்ளடக்கங்களின் அல்லது தோற்றத்தின் ஏதேனும் பாகத்தை (நாணயத் தாளொன்றின் 25 சதவீதத்திற்கும் மேல்) அல்லது முழுமையாகப் பிரதிசெய்தல், நகலெடுத்தல், போலிசெய்தல் அல்லது வடிவமைத்தல் எனப் பொருள்படும்.

ii. மீளத்தயாரித்தலானது விளக்கப்படங்கள், வர்ணம்தீட்டுதல், புகைப்படங்கள், உருவப்படங்கள், இலத்திரனியல் பிம்பங்கள், இணையத்தளம், தொலைக்காட்சி மற்றும் படச்சுருள்கள் அடங்கலாக அச்சு அல்லது இலத்திரனியல் ஊடகம் என்பன ஊடாக செய்யப்படக்கூடியதாகும்.

**3. மீளத்தயாரித்தல் நிபந்தனைகள் -** கீழே 3.2 முதல் 3.7 வரையான பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளை திருப்திசெய்கின்ற ஆளொருவர் நாணயச் சபையின் ஒப்புதலுக்குட்பட்டு அல்லது வேறுவகையில் குறிப்பிட்டவாறு 3.1ஆம் பிரிவில் தரப்பட்ட நோக்கங்களுக்காக இலங்கை நாணயத் தாள்களை மீளத்தயாரிப்பதற்கு அனுமதிக்கப்படலாம்.

3.1. அனுமதிக்கப்பட்ட நோக்கங்கள்

i. **கல்விசார்ந்தவை:** பாடப்புத்தகங்கள், சஞ்சிகைகள், கல்விசார் கட்டுரைகள், ஆராய்ச்சி வெளியீடுகள், தகவல் பிரசுரங்கள், மெய்நிகர் அருங்காட்சியகங்கள், நூலகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் மீதான கல்விசார் கட்டுரைகள் என்பவற்றுக்காக மீளத்தயாரித்தல்.

ii. **வர்த்தகம்சார்ந்தவை:** அச்சு மற்றும் இலத்திரனியல் வடிவத்திலான விளம்பரங்கள் மற்றும் வேறு வர்த்தக நோக்கங்களுக்காக மீளத்தயாரித்தலுடன் தொடர்புபட்ட வகைகள்.

iii. **ஏனையவை**: நாணயச் சபையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வேறு ஏதேனும் நோக்கம்

3.2. நாணயத்தின் ஏதேனும் மீளத்தயாரித்தலானது நாணயத்தின் நன்மதிப்பினையும், பிம்பத்தினையும், அதன் ஏதேனும் சிறப்பு அடையாளத்தினை அத்துடன் வடிவமைப்பினைப் பேணுதலும் வேண்டும்.

3.3. மதுபானம் அத்துடன் புகைத்தலுடன் தொடர்புபட்ட அல்லது இணைந்த வன்முறை அல்லது ஆபாசப் படங்கள் போன்ற குற்றவியல் பின்னணியுடன் இணைந்த அல்லது ஏதேனும் அரசியல் உள்ளடக்கத்துடன் இணைந்த, அல்லது பொதுநலனுக்கெதிரான மீளத்தயாரித்தல்கள், அனுமதிக்கப்படலாகாது. மேலும், ஆபாசம், சூதாட்டம் அல்லது வேறு ஏதேனும் சமூக ரீதியாக ஏற்றுக்கொள்ளத்தகாத நடத்தைகளை ஊக்குவிக்கக்கூடிய வர்த்தக விளம்பரப்படுத்தலுக்கு மீளத்தயாரித்தல்கள் பயன்படுத்தப்படலாகாது.

3.4. அச்சு ஊடகங்களில் மீளத்தயாரித்தல்

(அ) மீளத்தயாரித்தலானது பொருத்தமற்ற அல்லது சிதைக்கின்ற விதத்தில் நாணயத் தாளின் பிம்பத்தை அல்லது பகுதியளவான பிம்பத்தை மாற்றலாகாது அல்லது திரிபுபடுத்தலாகாது என்பதுடன் அத்தகைய பின்னணியில் பயன்படுத்தப்படலாகாது.

(ஆ) ஏதேனும் நாணயத் தாளின் மீளத்தயாரித்தலானது உண்மையான நாணயத் தாளின் சமவளவில் இருத்தலாகாது. மேலும், அது சிறியதாகவிருக்குமிடத்து, உரிய நாணயத் தாளின் மூன்றில் இரண்டு பங்கிற்கும் குறைவானதாக

இருத்தல் வேண்டும் அத்துடன் பெரிதாகவிருக்குமிடத்து உரிய நாணயத் தாளின் மூல அளவின் குறைந்தபட்சம் ஒன்றரை மடங்காக இருத்தல் வேண்டும். நாணயத் தாளொன்றின் ஏதேனும் ஒரு பகுதியினை மீளத்தயாரிப்பதற்கும் இதே நிபந்தனைகளை பின்பற்றுதலும் வேண்டும்.

(இ) மீளத்தயாரித்தலானது வங்கித் தாள்களுக்குப் பயன்படுத்தப்படும் காகிதத்திலிருந்து (அதாவது, பருத்திக் கூழைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் காகிதம்) தெளிவாக வேறுபட்ட மற்றும் வேறுபடுத்திக்காட்டக்கூடிய பொருட்களில் செய்யப்படுதல் வேண்டும்.

(ஈ) மீளத்தயாரித்தல், “SPECIMEN” என்ற சொற்பதத்தை உள்ளடக்கியிருக்க வேண்டும். மீளத்தயாரித்தல் அளவில் மூன்றில் ஒரு பங்கிற்குக் குறையாத எழுத்தில் நாணயத் தாளின் அடிப்பகுதியில் தடிப்பாகவும் தெளிவாகவும் இது அச்சிடப்படுதல் வேண்டும். ஒன்றன்மீது ஒன்றாக நாணயத் தாள்களை மீளத்தயாரிக்கும் விடயத்தில், மேலே குறித்துரைக்கப்பட்டவாறு நாணயத் தாளின் மிக முக்கிய இடத்தில் “SPECIMEN” என்ற சொற்பதம் அச்சிடப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், விண்ணப்பதாரர், இந்நிபந்தனைக்கு இணங்குவதும் மீளத்தயாரித்தலின் நோக்கத்தை அடைந்துகொள்வதும் நடைமுறைச்சாத்தியமற்றது என்ற சான்று காணப்படுகின்றவிடத்து இத்தேவைப்பாட்டினைத் தள்ளுபடிசெய்வதற்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கண்காணிப்பாளரிடம் கோரலாம். நாணயக் கண்காணிப்பாளர் அத்தகைய கோரிக்கையை பரிசீலித்து, கோரிக்கையுடன் அவர் திருப்திப்படுவாராயின், விலக்களிப்பினை வழங்குதல் வேண்டும்.

(உ) மீளத்தயாரித்தலானது நாணயத் தாளின் ஒரு பக்கத்தினை மாத்திரம் கொண்டதாகவிருத்தல் வேண்டும். நாணயத் தாளானது உண்மையான நாணயத் தாளை ஒத்தவாறு இருபுறமும் உடன் நிகழ்வாக அச்சிடப்படலாகாது.

(ஊ) கூப்பனுக்காக அல்லது உறுதிச்சீட்டிற்காக மீளத்தயாரித்தல் பயன்படுத்தப்படலாகாது.

(எ) நிதி அமைச்சரின், இலங்கை மத்திய வங்கி ஆளுநரின் கையொப்பங்கள், மேல் அச்சிடுதல் அல்லது வேறு ஏதேனும் முறையில் முற்றிலும் நீக்கப்பட வேண்டும்.

(ஏ) இலங்கை மத்திய வங்கியின் பெயர் அல்லது இலச்சினை ஏதேனும் மீளத்தயாரித்தலுடன் இணைக்கப்பட்டிருத்தலாகாது.

(ஒ) மீளத்தயாரிக்கப்பட்ட நாணயத் தாளுக்கு சற்றுக் கீழே “இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது” என்ற சொற்பதங்கள் குறித்துக்காட்டப்பட வேண்டும்.

3.5. இணையத்தளங்கள் மற்றும் ஏனைய டிஜிட்டல் ஊடகங்கள் உள்ளடங்கலாக இலத்திரனியல் ஊடகங்களில் அசைவற்ற உருவப்படங்களாக மீளத்தயாரித்தல்

இவ்வகையான மீளத்தயாரித்தல் மேலே 3.3(அ), (ஆ), (ஈ), (ஊ), (எ) மற்றும் (ஏ) நிபந்தனைகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும். மேலும், அதன் மூல அளவில் உள்ள இலத்திரனியல் விளக்கப்படமொன்றினை பிரிதிறன் ஒரு அங்குலத்திற்கு 72 புள்ளிகளை (dpi) விஞ்சலாகாது.

3.6. திரைப்படங்கள், தொலைக்காட்சித் திரைகள், காணொளிகள் மற்றும் வேறு அசையும் உருவப்படங்கள் உள்ளடங்கலாக இலத்திரனியல் ஊடகங்களில் மீளத்தயாரித்தல்

மீளத்தயாரித்தல்களின் இவ்வகைகளும் 3.3(அ) மற்றும் (எ)ஆம் நிபந்தனைகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

3.7. தவறாகப் பயன்படுத்துவதனைத் தவிர்ப்பதற்காக பகுதியளவோ முழுமையாகவோ அத்துடன் பௌதீக ரீதியாகவோ அல்லது இலத்திரனியல் ரீதியாகவோ நாணயத் தாள்களின் பிம்பமொன்றினை உள்ளடக்குகின்ற அல்லது சேமிக்கின்ற அல்லது நாணயத் தாள்களின் பிம்பமொன்றினை அல்லது மீளத்தயாரிப்பொன்றினை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்படுகின்ற அனைத்து டிஜிட்டல் கோவைகள், எதிர்ஒளிப்படப் படலம், முதன்மை தட்டுகள் அல்லது வேறு கோவைகள், கருவிகள் அல்லது சாதனங்கள், பாதுகாப்பாகச் சேமிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

3.8. மேலும், மேலே 3.7 இல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பொருட்களும் அவற்றின் பயன்பாட்டின் பின்னர் அத்துடன் இலங்கை மத்திய வங்கி வழங்கிய அனுமதியின் செல்லுபடியாகும் காலம் முடிந்து ஒரு மாத காலத்தைப் பிந்தாது நிரந்தரமாக அழிக்கப்பட அல்லது நீக்கப்பட வேண்டும். இந்நடவடிக்கையினைக் குறிப்பிடுகின்ற சத்தியக்கூற்றொன்றினை அவர்களின் பதிவிற்காக பொலிஸ் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கான பிரதியொன்றுடன் இலங்கை மத்திய வங்கியின் நாணயத் திணைக்கள கண்காணிப்பாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

**4. மதிப்பீடும் அனுமதி நடைமுறையும்**

4.1 கீழே 5.1 மற்றும் 5.2ஆம் பிரிவுகளின் கீழ் குறித்துரைக்கப்பட்ட விதிவிலக்குகளுக்கு உட்பட்டு, அச்சிலானதோ அல்லது இலத்திரனியல் வடிவத்திலோ முன்மொழியப்பட்ட அனைத்து மீளத்தயாரிப்புக்களினதும் ஒப்பச்சு, இணைப்பு (அ)இன் பிரகாரம் விண்ணப்பப்படிவம் மற்றும் சரிபார்ப்புப் பட்டியல் என்பவற்றுடன் சேர்த்து மீளத்தயாரிப்பதற்கு குறைந்தது 30 நாட்களுக்கு முன்னர் நாணயக் கண்காணிப்பாளருக்கு விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4.2 நாணயக் கண்காணிப்பாளர் நாணய மீளத்தயாரிப்பு தொடர்பில் கிடைக்கப்பெற்ற அனைத்து விண்ணப்பங்களையும்

மீளாய்வு செய்து, அத்தகைய விண்ணப்பமானது வழிகாட்டல்களுடன் இணங்குவதைப் பரிசீலனையிற்கொண்டு, நாணயச் சபைக்கு அவரது பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பார். நாணயச் சபையானது நாணயக் கண்காணிப்பாளரின் பரிந்துரைகளை பரிசீலனையிற்கொண்டு கோரப்பட்ட நோக்கத்திற்காக மீளத்தயாரிப்புகளுக்கான அனுமதியினை வழங்கலாம். அனுமதிக்கான உயர்ந்தபட்சக் காலம் பின்வருகின்றனவாறான விண்ணப்பத்தின் நோக்கத்தின் மீது சார்ந்திருக்கும்.

i. **கல்விசார் நோக்கங்கள் -** கல்விசார் பாடப்புத்தகங்கள் விடயத்தில் வழங்கப்பட்ட அனுமதியானது பாடப்புத்தகங்களை மீள அச்சிடும் வரை செல்லுபடியானதாகவிருக்கலாம் என்பதுடன் கல்வி அமைச்சின் பாடப்புத்தகங்களுக்காக வழங்கப்பட்ட அனுமதி, பாடத்திட்டம் மாற்றத்தின் காரணமாக பாடப்புத்தகம் மாற்றப்படும் வரை வலிதாகவிருக்கும். வெளிநாட்டு மத்திய வங்கிகள் மற்றும் நாணய அதிகாரசபைகளின் நாணய அருங்காட்சியகங்களில் காட்சிப்படுத்துவதற்கு மீளத்தயாரிப்புக்காக அவற்றுக்கு ஒரு தடவை அனுமதி வழங்கப்படலாம் அத்துடன் வேறு விண்ணப்பதாரிகளுக்கு நான்கு (4) வருடங்கள் வரை அனுமதி வழங்கப்படலாம்.

ii. **வர்த்தகம்சார்ந்த நோக்கங்கள் -** அனுமதியின் உயர்ந்தபட்சக் காலம் 1 (ஒரு) வருடமாகவிருக்கும்.

iii. **ஏனையவை -** அனுமதியின் உயர்ந்தபட்சக் காலம் 2 (இரண்டு) வருடங்களாகவிருக்கும்.

4.3 நாணயத்தின் மீளத்தயாரிப்பு செய்வதற்கான கோரிக்கையானது வழிகாட்டல்களுக்கு இணங்கவில்லை என நாணயக் கண்காணிப்பாளர் கருதும் பட்சத்தில், அத்தகைய கோரிக்கை நாணயத் திணைக்களத்தினை மேற்பார்வைசெய்கின்ற துணை ஆளுநரின் அனுமதியைப் பெற்றதன் பின்னர் நாணயக் கண்காணிப்பாளரால் நிராகரிக்கப்படலாம். நாணயக் கண்காணிப்பாளரின் தீர்மானத்தில் விண்ணப்பதாரர் திருப்தியடையாத சந்தர்ப்பத்தில், அவர் நாணயக் கண்காணிப்பாளரின் தீர்மானத்திற்கெதிராக ஒரு மாதத்திற்குள் நாணயச் சபையில் மேன்முறையீட்டினைச் செய்யலாம். அத்தகைய மேல்முறையீட்டை நாணயச் சபை பரிசீலித்து நாணயச் சபையின் தீர்மானம் விண்ணப்பதாரிக்கு அதற்கேற்றவாறு அறிவிக்கப்படும்.

4.4 அனுமதியின் செல்லுபடியாகும் காலத்தை நீட்டிப்பதற்கான எழுத்துமூல விண்ணப்பம், அத்தகைய அனுமதியின் காலாவதித் திகதிக்கு முன்னர் ஒரு மாதத்தினைவிடப் பிந்தாது நாணயக் கண்காணிப்பாளருக்கு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

4.5 ஏதேனும் முன்மொழியப்பட்ட மீளத்தயாரித்தல் வழிகாட்டல்களுடன் இணங்காதிருப்பின் அவசியமான மாற்றங்களைச் செய்வதற்கு விண்ணப்பதாரி வேண்டப்படுவார் என்பதுடன் அனுமதிக்காக அவரது விண்ணப்பத்தை மீளச்சமர்ப்பிக்க வேண்டும் அல்லது நாணயத் தாள்களை மீளத்தயாரிப்பதிலிருந்து தவிர்ந்துகொள்ள வேண்டும்.

**5 பொதுவான விதிவிலக்குகள்**

5.1 பின்வரும் நாணய மீளத்தயாரிப்பு வகைகள் இதன் 2.i ஆம் பிரிவில் தரப்பட்ட மீளத்தயாரித்தல் வரைவிலக்கணத்தினுள் வராமையினால், அவை பின்வருகின்றவாறானவையாக இருப்பின், நாணயச் சபையின் அனுமதியினைப் பெற்றுக்கொள்வதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

அ) நாணயத் தாளின் ஒரு சிறிய பகுதி (25 சதவீதத்திற்குக் குறைவானது) ஒன்றாகவிருப்பின், அல்லது

ஆ) கறுப்பு மற்றும் வெள்ளை நிறங்களில் மாத்திரமிருப்பின், அல்லது

இ) மேலே 5.1(அ) இற்குட்பட்டு, அச்சு அல்லது இலத்திரனியல் ஊடகங்களில் நாணயத் தாள்களைப் பயன்படுத்தும் சைகையில் பயன்படுத்தப்படுபவை.

5.2 மேலே 5.1(அ) தொடக்கம் (இ) வரையான பிரிவுகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதிவிலக்குகளுக்குள் வருகின்ற நாணயத் தாளொன்றை மீளத்தயாரிப்பதற்கு உத்தேசித்துள்ள ஆட்கள், முன்மொழியப்பட்ட மீளத்தயாரித்தலுக்கான ஒப்பச்சுடன் அத்தகைய மீளத்தயாரித்தலுக்கு ஒரு மாதத்திற்கு முன்னர் நாணயக் கண்காணிப்பாளருக்கு தெரியப்படுத்துதல்வேண்டும். நாணயக் கண்காணிப்பாளர், அத்தகைய தகவல்களைப் பரிசீலித்து, அத்தகைய மீளத்தயாரித்தலுக்கான ஆட்சேபனை இல்லையென கடிதத்தை வழங்கலாம் அல்லது வழிகாட்டல்களுக்கிணங்க நாணயத் தாள்களை மீளத்தயாரிப்பதற்கு புதிய விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக்குமாறும் அத்தகைய ஆட்களைக் கோரலாம்.

5.3 பிரிவு 5.2இன் கீழ் நாணயத்தின் மீளத்தயாரித்தலுக்காக நாணயத் திணைக்கள கண்காணிப்பாளர் ஆட்சேபனை இல்லை என வழங்கிய கடிதம் அத்தகைய குறிப்பிட்ட நோக்கத்திற்கும் குறிப்பிட்ட காலத்திற்கும் மாத்திரம் செல்லுபடியாகும். செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பதற்கு செல்லுபடியாகும் காலம் முடிவடைவதற்கு 14 நாட்களுக்கு முன்னர் எழுத்துமூல விண்ணப்பம் செய்யப்பட வேண்டும்.

**6 இணங்காமை**

6.1 வழிகாட்டல்களில் தரப்பட்ட நிபந்தனைகளை மற்றும் நடைமுறைகளைக் கடைப்பிடிக்கத் தவறுகின்றமை நாணய விதிச் சட்டத்தின் 58(ஈ) ஆம் பிரிவின் கீழ் மற்றும் தண்டனைச் சட்டக்கோவையின் 478 அ(1), 478(ஆ), 478(இ) அல்லது 478(ஈ) ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றமொன்றாகக் கருதப்படலாம் என்பதுடன் இருவகையிலொருவகை இருபது (20) ஆண்டுகள் வரையான காலப்பகுதியொன்றுவரை நீடிக்கக்கூடிய மறியத்தண்டனைக்கு மற்றும் குற்றப்பணத்திற்கு ஆளாதால் வேண்டும் (இணைப்பு ஆ).

6.2 மேலும், நாணயச் சபை, அதன் தற்றுணிபில் மீளத்தயாரிப்பை அல்லது அதன் ஏதேனும் பிரதியினை அல்லது அத்தகைய மீளத்தயாரித்தலுடன் ஈடுபட்ட ஏதேனும் வடிவத்திலான ஏதேனும் வேறு பொருளை உடனடியாக அழிப்பதற்கு வேண்டலாம். அத்தகைய நிகழ்வில், அத்தகைய அழிப்பினை உறுதிப்படுத்துவதற்காக சத்தியக்கூற்றொன்றினை இலங்கை மத்திய வங்கி கோரலாம்.

**இணைப்பு அ**

| | | |
|---|---|---|
| | **விண்ணப்பதாரர்களின் விபரங்கள்** | |
| 1 | பெயர்: | |
| 2 | தேசிய அடையாள அட்டை இலக்கம்: | |
| 3 | பதவி: | |
| 4 | நிறுவனத்தின் பெயரும் முகவரியும்: | |
| 5 | வியாபார பதிவு இல. (பிரதி இணைக்கப்பட வேண்டும்): | |
| 6 | மின்னஞ்சல்: | இணையத்தளம் ஏதேனும் இருப்பின்: |
| 7 | தொலைபேசி (நிலையான மற்றும் செல்லிட): | |
| | **மீளத்தயாரித்தல் விபரங்கள்** | |
| 8 | மீளத்தயாரிக்க வேண்டிய நாணயத் தாளின்/ நாணயத் தாள்களின் வகை: | |
| 9 | மீளத்தயாரித்தலின் தன்மை:(பொருத்தமானவற்றை பூர்த்திசெய்க) | |
| | அ | பொருள்(காகிதம் பற்றிய விவரக்குறிப்பு): |
| | ஆ | பயன்படுத்தப்படும் ஊடகம்:<br>(அச்சு ஊடகம், இறுவெட்டு, இணையத்தளங்கள், சமூக ஊடகங்கள், தொலைக்காட்சி, ஏனையவை) |
| | இ | பிரதிகளின் எண்ணிக்கை:<br>(ஏற்புடையதாயின் ஒவ்வொரு வகையும் வெவ்வேறாக) |
| 10 | மீளத்தயாரித்தலில் “SPECIMEN” என்ற சொற்பதத்தை விலக்குவதற்கு ஒப்புதல் கோரப்பட்டதா அல்லது (தயவுசெய்து வழிகாட்டல்களின் 3.4 ஆம் பிரிவைப் பார்க்கவும்): | |
| | **பிரகடனம்** | |
| 11 | விண்ணப்பதாரரால் செய்யப்படும் பிரகடனம் | |
| | அ | நான் நாணயத் தாள்களை மீளத்தயாரித்தல் தொடர்பான எனது கடப்பாடுகள் பற்றி அறிந்துள்ளேன் மற்றும் புரிந்துகொண்டுள்ளேன். |
| | ஆ | போலி நாணயத் தாள்கள் குற்றம் தொடர்பில் நாணயவிதிச் சட்டத்தினதும் தண்டனைச் சட்டக் கோவையின் ஏற்பாடுகளை நான் அறிவேன் (இணைப்பு ஆ). |
| | இ | நான் வழங்கிய தகவல்கள் உண்மையானவையும் செம்மையானவையும் ஆகும் மற்றும் எனது அறிவுக்கு எட்டியவரையில் முன்மொழியப்பட்ட மீளத்தயாரித்தலானது இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வழிகாட்டலுடன் இணங்கியுள்ளது. |
| | ஈ | நாணயத்தை மீளத்தயாரிப்பதற்கான அனுமதியை அங்கீகரிக்க அல்லது நிராகரிக்க இலங்கை மத்திய வங்கி ஏக தற்றுணிபினைக் கொண்டுள்ளது எனவும் வழிகாட்டல்களுடன் இணங்குகின்றமை அனுமதி வழங்கப்படும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை என்பதையும் நான் அறிவேன். |
| | உ | இலங்கை மத்திய வங்கி எந்த நேரத்திலும் முன்னறிவித்தலின்றி, முன்னைய அனுமதியைத் திருத்தலாம் மற்றும் இரத்துச்செய்யலாம் மற்றும் வழிகாட்டல்களைத் திருத்தலாம் என்பதை நான் அறிவேன். |

............................................ விண்ணப்பதாரரின் கையொப்பம்

திகதி கம்பனியின்/ நிறுவனத்தின் முத்திரை

**(திகதி) ஆம் திகதியிலிருந்து தொடங்குகின்ற (காலம்) இற்காக நாணயத்தாள்களை மீளத்தயாரித்தலுக்கான அனுமதியை வழங்குவதற்கான சரிபார்ப்புப் பட்டியல்**

| தேவை | | இணங்கியுள்ளது | இணங்கவில்லை | கருத்து |
|---|---|---|---|---|
| நோக்கம் | கல்விசார்ந்தவை | | | |
| | வர்த்தகம்சார்ந்தவை | | | |
| | ஏனையவை | | | |
| நிபந்தனைகள் | அளவு | | | |
| | பொருள்/மூலக்கூறு | | | |
| | "SPECIMEN" சொற்பதத்தை உட்சேர்த்தல் | | | |
| | மீளத்தயாரித்தல் கறுப்பு வெள்ளை நிறத்திலா என்பது | | | |
| | "இம்மீளத்தயாரித்தல் இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்டது" என்ற சொற்பதங்களை உட்சேர்த்தல் | | | |
| | ஒரு பக்கத்தில் மாத்திரம் அச்சிடல் | | | |
| | கையொப்பங்கள் முழுமையாக நீக்கப்பட்டுள்ளன | | | |
| | திரிபு இல்லை | | | |

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் மற்றும் கையொப்பம் (தயவுசெய்து உத்தியோகபூர்வ முத்திரையை பதிக்கவும்)

தயவுசெய்து விண்ணப்பத்திற்கு பின்வருவனவற்றை இணைக்கவும்.

1. ஏற்புடையவாறு இலங்கை நாணயத்தின் உத்தேச மீள் உற்பத்தியின் வன்.'. மென் பிரதி
2. ஏற்புடைதாயின், வியாபார பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி

**இணைப்பு ஆ**

**சட்ட ரீதியான ஏற்பாடுகள் - நாணயத் தாள்களை மீளத்தயாரித்தல்**

அ) 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 58(ஈ) பிரிவின் நியதிகளுக்கமைய, "நாணயச் சபையின் அதிகாரமின்றி, எவரேனும் ஆள், ஏதேனும் நாணயத் தாளை எதுவாயினும் ஏதேனும் வடிவத்தில் மீளத்தயாரித்தல் அல்லது சரியான நகலெடுத்தல் குற்றத்தவறொன்றாக இருத்தல் வேண்டும்" எனக் குறிப்பிடுகின்றது.

ஆ) தண்டனைச் சட்டக் கோவையின் 478அ தொடக்கம் 478ஈ வரையான பிரிவுகள் குறிப்பிடுவதாவது:

478 அ (1) ஏதேனும் நாணயத் தாளை அல்லது வங்கித்தாளை பொய்யாகப்புனைகின்ற அல்லது போலிபுனைகின்ற, அல்லது பொய்யாகப்புனைகின்ற அல்லது போலிபுனைகின்ற செயன்முறையில் ஏதேனும் பாகத்தினை அறிந்து செயலாற்றுகின்ற எவ்வாளும், இருவகையிலொருவகை இருபது ஆண்டுகள் வரை நீடிக்ககூடிய காலப்பகுதிக்கு மறியத்தண்டனையுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும் மற்றும் குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

478 ஆ. அவ்வாறான தாள் பொய்யாகப் புனையப்பட்டதாக அல்லது போலியானதாக இருப்பதை அறிந்திருக்கின்ற அல்லது நம்புவதற்கு காரணத்தைக் கொண்டுள்ள ஏதேனும் பொய்யாகப்புனையப்பட்ட அல்லது போலி நாணயத் தாளை அல்லது வங்கித் தாளை எவரேனும் வேறு ஆளுக்கு விற்பனை செய்கின்ற, அல்லது எவரேனும் வேறு ஆளிடமிருந்து வாங்குகின்ற அல்லது பெற்றுக்கொள்கின்ற அல்லது வேறுவகையில் கொண்டுசெல்கின்ற அல்லது உண்மையானதாகப் பயன்படுத்துகின்ற எவ்வாளும், இருவகையிலொருவகை இருபது ஆண்டுகள் வரை நீடிக்ககூடிய காலப்பகுதிக்கு மறியத்தண்டனையுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும் மற்றும் குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

478 இ. அவ்வாறான தாள் பொய்யாகப்புனையப்பட்டதாக அல்லது போலியானது என அறிந்து அல்லது நம்புவதற்கு காரணத்தைக் கொண்டிருந்து, ஏதேனும் பொய்யாகப்புனையப்பட்ட அல்லது போலியான நாணயத் தாளை அல்லது வங்கித்தாளை அவரது உடமையில் வைத்திருக்கின்ற அத்துடன் உண்மையானதாக அதனைப் பயன்படுத்துவதற்கு அல்லது அது உண்மையானதாக பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என எண்ணுகின்ற எவ்வாளும், இருவகையிலொருவகை இருபது ஆண்டுகள் வரை நீடிக்ககூடிய காலப்பகுதிக்கு மறியத்தண்டனைக்கு மற்றும் குற்றப்பணத்திற்கு அல்லது இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

478 ஈ. ஏதேனும் நாணயத் தாளை அல்லது வங்கித்தாளை பொய்யாகப் புனைவதற்கு அல்லது போலிபுனைவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற நோக்கத்திற்கான அல்லது அது பயன்படுத்தப்படுவதற்கு எண்ணப்பட்டுள்ளதென அறிகின்ற அல்லது நம்புவதற்கு காரணத்தைக் கொண்டுள்ள ஏதேனும் இயந்திரத்தை, சாதனத்தை அல்லது பொருளை ஆக்குகின்ற அல்லது ஆக்குவதன் செயன்முறையின் ஏதேனும் பாகத்தினை செயலாற்றுகின்ற அல்லது அவரது உடமையில் கொண்டுள்ள எவ்வாளும், இருவகையிலொருவகை இருபது ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய காலப்பகுதிக்கு மறியத்தண்டனையுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும் மற்றும் குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

2021 மே 21

**2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கை**

**சேரல்: அனைத்துப் பங்கேற்கும் நிறுவனங்களுக்கும்**

**சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பான திரட்டப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

இது இல.35/03/016/007/001 கொண்ட சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பான திரட்டப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் தொடர்பானது. இது திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் துணைநில் வசதிகள் தொடர்பான விடயங்கள் மீது 2016 ஒத்தோபர் 31ஆம் நாள் வரை விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்/ சுற்றறிக்கைகள் அனைத்தையும் ஒன்றுதிரட்டியதன் மூலம் பங்கேற்கும் நிறுவனங்கள் அனைத்து அறிவுறுத்தல்களையும் ஒன்றாக வைத்திருப்பதற்காக 2016 நவெம்பர் 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் விடுக்கப்பட்டது.

சந்தைத் தொழிற்பாடுகள் மீதான திரட்டப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள், அதன் பின்னர் இலங்கை மத்திய வங்கியினால் இப்பொழுது வரை திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் துணைநில் வசதிகள் தொடர்பான விடயங்கள் மீது விடுக்கப்பட்ட ஏற்கனவேயுள்ள தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களைத் திரட்டியதன் மூலம் திருத்தியமைக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி, பங்கேற்கும் அனைத்து நிறுவனங்களும் 2021 யூன் 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இற்றைப்படுத்தப்பட்ட சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பான திரட்டப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு (2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கை) இணங்கியொழுகுமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

சி. ஏ. அபேசிங்க
**பணிப்பாளர்**
**உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

**இணைப்பு I**

**2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கை**

சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பானதொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

**உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

1. திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் துணைநில் வசதிகள் தொடர்பான விடயங்களின் மீது 2016 ஒத்தோபர் 31ஆம் நாள் வரை பங்கேற்கும் நிறுவனங்களுக்கு விடுக்கப்பட்ட அனைத்துத் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களையும் கூட்டிணைக்கின்ற விதத்தில் 2016 நவெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இலங்கை மத்திய வங்கி “சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பான திரட்டப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்” இனை விடுத்திருக்கிறது.

   அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், தனியான முதனிலை வணிகர்கள் (உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் நீங்கலாக முதனிலை வணிகர்களாக நியமிக்கப்பட்ட கம்பனிகள்) மற்றும் ஊழியர் சேம நிதியம் என்பன பங்கேற்கும் நிறுவனங்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

2. திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் துணைநில் வசதிகள் தொடர்பான விடயங்கள் மீது 2021 மே 20ஆம் நாள் வரை இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட (கிளை வாசகம் 3.0இல் தரப்பட்டுள்ளவாறு) பின்வரும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்/ சுற்றறிக்கைகளைத் திரட்டியதன் மூலம் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பான திரட்டப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் தற்பொழுது திருத்தப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் சுற்றறிக்கைகள் புறக்கீடு செய்யப்பட்டு புதிய சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பான திரட்டப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 2021 யூன் 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதலாதல் வேண்டும்.

3. திரட்டப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்/ சுற்றறிக்கைகளின் பட்டியல்

| | சுற்றறிக்கை இல. | விடுக்கப்பட்ட திகதி | தலைப்பு |
|---|---|---|---|
| 01 | 35/03/016/007/001 | 2016 நவெம்பர் 01 | சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பான திரட்டப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் |
| 02 | 35/03/021/0013/001 | 2018 ஓகத்து 23 | இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் |
| 03 | 35/03/016/007/002 | 2019 பெப்புருவரி 14 | சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பான திரட்டப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் |
| 04 | 35/03/016/007/003 | 2019 செத்தெம்பர் 05 | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்கான திருத்தப்பட்ட நேர அட்டவணை |
| 05 | 35/03/016/007/004 | 2019 செத்தெம்பர் 05 | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் உடனடி ஏலங்கள் |
| 06 | 35//03/021/0013/002 | 2019 செத்தெம்பர் 05 | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் தனியான முதனிலை வணிகர்களுக்காக திரவத்தன்மை ஆதரவு வசதி தொடர்பான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் |
| 07 | 35/03/021/0013/003 | 2019 செத்தெம்பர் 05 | இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் |
| 08 | 35/03/016/007/005 | 2020 பெப்புருவரி 11 | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் உடனடி ஏலங்கள் |
| 09 | 35/03/016/007/006 | 2020 யூன் 29 | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் துணைநில் வசதிகளுக்காக தற்போதுள்ள முறைமைகளுக்கு நவீன திருத்தங்களை அறிமுகப்படுத்தல் |

பகுதி 1: அறிமுகம்

4. இலங்கை மத்திய வங்கி, துணைநில் வீத வீச்சான வட்டி வீத வீச்சொன்றிற்குள் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தினைப் பேணும் பொருட்டு, திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நடத்துகின்றது. எனினும், திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ், தனியான முதனிலை வணிகர்களுக்கு நேர்மாற்று மீள்கொள்வனவு வடிவத்தில் திரவத்தன்மை ஆதரவு வசதி ஏலங்கள் வழங்கப்படுமிடத்து மாத்திரமே உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுடன் நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் நடத்தப்படுகின்றன. துணைநில் வீத வீச்சின் முறையே கீழ் எல்லையினையும் மேல் எல்லையினையும் உருவாக்குகின்ற துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் என்பனவற்றின் நியதிகளில் துணைநில் வீத வீச்சு வரைவிலக்கணம் செய்யப்படுகிறது. துணைநில் வீத வீச்சு ஒவ்வொரு ஆண்டும் எட்டுத் தடவைகள் மீளாய்வு செய்யப்பட்டு தேவையானவிடத்து திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

5. நாளாந்த மற்றும் குறுங்கால பணச் சந்தைத் திரவத்தன்மையின் மதிப்பீடு, சந்தை அபிவிருத்தி மற்றும் கொள்கை சூழல்

என்பனவற்றின் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியின் சந்தைத் தொழிற்பாட்டுக் குழு ஒன்றில் சந்தையிலிருந்து திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்ள வேண்டுமா அல்லது சந்தைக்கு திரவத்தன்மையினை உள்ளீடு செய்ய வேண்டுமா என்பது பற்றியும் அவ்வாறாயின் தொகை, வகை மற்றும் சாதனங்களின் காலம் பற்றியும் தீர்மானித்தல் வேண்டும்.

6. அ. திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ், பங்கேற்கும் நிறுவனங்கள் பின்வரும் சாதனங்களை ஒவ்வொரு பிரிவிலும் குறித்துரைக்கப்பட்டவாறு பெற்றுக்கொள்ள முடியும்.

அ. குறுங்கால ஏலங்கள்
- அ. குறுங்கால மீள்கொள்வனவு ஏலங்கள்
- ஆ. குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்

ஆ. நீண்ட கால ஏலங்கள்
- அ. நீண்ட கால மீள்கொள்வனவு ஏலங்கள்
- ஆ. நீண்ட கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்

இ. திரவத்தன்மை ஆதரவு வசதி
- அ. குறுங்கால திரவத்தன்மை ஆதரவு வசதி
- ஆ. நீண்ட கால திரவத்தன்மை ஆதரவு வசதி

ஈ. உடனடி ஏலங்கள்
- அ. உடனடி விற்பனை ஏலங்கள்
- ஆ. உடனடி கொள்வனவு ஏலங்கள்

உ. மத்திய வங்கி பிணையங்களுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள்
- அ. ஏல முறைமைகளின் கீழ் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குதல்
- ஆ. ஏல முறைமைகளின் கீழ் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் இளைப்பாறல்
- இ. இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை மீண்டும் வாங்கிக் கொள்ளும் வசதி

ஊ. வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்கள்
- அ. வாங்கும் - விற்கும் பரஸ்பர பரிமாற்றல்கள்
- ஆ. விற்கும் - வாங்கும் பரஸ்பர பரிமாற்றல்கள்

ஆ. துணைநில் வசதியின் கீழ், பங்கேற்கும் நிறுவனங்கள் பின்வரும் சாதனங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியனவாக இருக்கும்.
- அ. துணைநில் வைப்பு வசதி
- ஆ. துணைநில் கடன்வழங்கல் வசதி

**பகுதி 2: பங்கேற்கும் நிறுவனங்களுக்கான பொதுவான அறிவுறுத்தல்கள்**

7. இலங்கை மத்திய வங்கி சந்தைத் தொழிற்பாடுகள் குழுவின் தீர்மானத்தினை கணனிவழி அதேநேர இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமை மற்றும் மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பு ஊடாக சந்தைக்கு அறிவிக்கும். துணைநில் வசதி தவிர்ந்த திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நடத்துவதற்கு ஏல முறைமை பயன்படுத்தப்படுதல் வேண்டும். பங்கேற்கும் நிறுவனங்கள், கீழேயுள்ள கிளை வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலை தவிர, கணனி வழி அதேநேர இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமை மூலம் கிடைக்கத்தக்கதாகவுள்ள தொடர்பான முறைமைகளினூடாக தமது வணிகங்களை/ விலைக்குறிப்பீடுகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. தொழில்நுட்பத் தவறுகள் காரணமாக மாத்திரம் அதேநேர கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையைப் பங்கேற்கும் நிறுவனங்கள் அணுக முடியாத சந்தர்ப்பத்தில், அத்தகைய பங்கேற்கும் நிறுவனங்கள் அவற்றின் தொடர்பான வணிகங்களை/ விலைக்குறிப்பீடுகளைத் தொலைபேசியூடாக உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பிரிவிற்குத் தொடர்பான ஏலங்கள் மூடப்படுவதற்கு முன்னதாக அல்லது துணைநில் வசதியின் வெட்டு நேரத்திற்கு முன்னதாக எது ஏற்புடைத்தானதோ அதன் அடிப்படையில் சமர்ப்பிக்குமாறு ஆலோசனை வழங்கப்படுகின்றது. இரண்டு அதிகாரம் பெற்ற அலுவலர்களினால் கையொப்பமிடப்பட்ட அத்தகைய வணிகம்/ விலைக்குறிப்பீடுகளை உறுதிப்படுத்துகின்ற கடிதமொன்றினை, அத்தகைய தொழில்நுட்பத் தவறின் தன்மையினை எடுத்துக்காட்டும் விதத்தில், பொருத்தமானவாறு, தொடர்பான ஏலம் அல்லது வெட்டு நேரம் முடிவடைந்த பின்னர் 15 நிமிடங்களுக்குள் தொலைநகல் ஊடாகவோ அல்லது மின்னஞ்சல் ஊடாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய வணிகம்/ விலைக்குறிப்பீடு ஒவ்வொன்றும் கொடுக்கல்வாங்கல்களை உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் கையால் பதிவுசெய்வதனை இயலுமைப்படுத்தும் விதத்தில் தொடர்பான தகவல்கள் அனைத்தையுமுள்ளடக்கியிருத்தல் வேண்டும். அவர்களால் வழங்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பங்கேற்கும் நிறுவனங்கள் சார்பில் கையினால் வணிகங்களை மேற்கொள்ள/ விலைக்குறிப்பீடுகளை மேற்கொள்வதற்கான கோரிக்கையொன்றாக அத்தகைய தொடர்பூட்டலை இலங்கை மத்திய வங்கி பரிசீலனையில் கொள்ளும். கையால் விலைக்கோரல்களைப் பதிவுசெய்வதற்கான தகவல்கள் பிழையாக அல்லது பூரணமாக நிறைவுசெய்யப்படாதவிடத்து அத்தகைய கோரிக்கைகள் இலங்கை மத்திய வங்கியினால் நிராகரிக்கப்படுவதற்குக் காரணமாகலாம். குறித்துரைக்கப்பட்ட வெட்டு நேரத்திற்குப் பின்னர் பெறப்படும் விலைக்குறிப்பீடுகள் (தொலைபேசி அத்துடன்/ அல்லது தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம்) எந்தவொரு சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. தொலைநகலின் மூலப்பிரதி அதேநாளன்று வியாபாரம் மூடப்படுவதற்கு முன்னதாக

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

9. இவ்வொன்று திரட்டப்பட்ட சுற்றறிக்கையின் 4, 5 மற்றும் 6ஆம் பிரிவுகளில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள ஏற்பாட்டு நியதிகளில் பங்கேற்கும் நிறுவனங்களுக்கும் இலங்கை மத்திய வங்கிகளுக்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலக் கொடுக்கல்வாங்கல்களும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் போன்றவற்றிற்கும் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட முதன்மை மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்குட்பட்டதாக இருக்கும். இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் பயன்படுத்தப்பட்ட சொற்பதங்கள் முதன்மை மீள்கொள்வனவுகள் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையில் அவற்றிற்கு வழங்கப்பட்ட அதே கருத்துக்களையே கொண்டிருத்தல் வேண்டும்.

10. இவ்வொன்று திரட்டிய சுற்றறிக்கையின் 3ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் நியதிகளில், பங்கேற்கும் நிறுவனங்களுக்கும் இலங்கை மத்திய வங்கிக்குமிடையே மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து துணைநில் வைப்பு வசதிகள் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதிகளின் கொடுக்கல்வாங்கல்களும் அத்தகைய பங்கேற்கும் நிறுவனங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட முதன்மை துணைநில் வசதி உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்குட்பட்டனவாக இருக்கும். இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் பயன்படுத்தப்பட்ட சொற்பதங்கள் முதன்மை துணைநில் வசதி உடன்படிக்கையில் அவற்றிற்கு வழங்கப்பட்ட அதே கருத்துக்களையே கொண்டிருக்கும்.

11. பங்கேற்கும் நிறுவனங்களுக்கான முன்னறிவித்தலுடன் இவ்வொன்று திரட்டப்பட்டுள்ள சுற்றறிக்கையினைத் திருத்துவதற்கு, மாற்றியமைப்பதற்கு அல்லது வேறு ஏதேனும் நியதிகள் அத்துடன்/ அல்லது நிபந்தனைகளை அல்லது அதிலுள்ள ஏதேனும் பகுதியினை மாற்றுவதற்கான உரிமையினை மத்திய வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.

12. திரட்டப்பட்ட சுற்றறிக்கைக்கும் முதன்மை மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைக்கும் அத்துடன்/ அல்லது முதன்மை துணைநில் வசதி உடன்படிக்கைக்குமிடையில் ஏதேனும் ஒவ்வாமை அல்லது முரண்பாடு காணப்படும் சந்தர்ப்பத்தில் இத்திரட்டப்பட்ட சுற்றறிக்கையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

13. அனைத்து ரூபா கொடுக்கல்வாங்கல்களுக்குமான வணிக/ விலைக்குறிப்பீட்டின் குறைந்தபட்சப் பெறுமதி ரூபா ஒரு மில்லியனாக (ரூ.1,000,000.00) இருக்குமென்பதுடன் வணிகம் ஒரு மில்லியன் ரூபாவின் பெருக்கத்தில் இருத்தலும் வேண்டும்.

14. அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினை அணுகுவதில் தொழில்நுட்பத் தவறு ஏற்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் மட்டும் பின்வரும் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள உறுதிப்படுத்தல்களைப் பங்கேற்கும் நிறுவனமொன்று பார்க்கவோ அல்லது அச்செடுக்கவோ முடியாதிருக்கும் சந்தர்ப்பத்தில் இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் கோரிக்கையின் மீது உறுதிப்படுத்தல்களின் பிரதியொன்றினை தொலைநகலில் பங்கேற்கும் நிறுவனத்திற்கு அனுப்பும்.

15. ஏலத்தில், துணைநில் கடன்வழங்கல் வசதி வீத வணிகம் அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு விலைக்குறிப்பீட்டினை மேற்கொள்ளும் பொழுது துணைநில் கடன்வழங்கல் வசதி வணிகம்/ நேர்மாற்று மீள்கொள்வனவு விலைக்குறிப்பீடு போன்ற ஒவ்வொன்றிற்குமாக இலங்கை மத்திய வங்கிக்கு ஒதுக்கப்பட வேண்டிய பிணைகள்/ பிணையங்களின் முகப்புப் பெறுமதி, தொடர்பான பிணை/ பிணையங்களின் இலங்கை மத்திய வங்கியினது அலுவல்சார் வாங்கும் விலை/ விலைகளின் அடிப்படையில் தன்னியக்கமான முறையில் முறைமையினால் கணிக்கப்படும். அத்தகைய அலுவல்சார் விலைகள் லங்கா செகுயரில் பதிவுசெய்யப்படுவதுடன் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையிலிருந்தும் சீர்ப்படுத்தல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

16. குறிப்பிட்ட துணைநில் கடன்வழங்கல் வசதி வணிகம் அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு விலைக்குறிப்பீட்டிற்காக பங்கேற்கும் நிறுவனங்கள் பன்னாட்டு பிணை அடையாள இலக்கங்களில் ஏதேனும் இலக்கமொன்றினை (பன்னாட்டு பிணை அடையாள இலக்கம் பெருக்கி) ஒதுக்க முடியும். துணைநில் கடன்வழங்கல் வசதி வணிகம் அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு விலைக்குறிப்பீடு ஒரு இலக்கத்திற்கும் கூடுதலான பன்னாட்டு பிணை அடையாள இலக்கத்துடன் தொடர்பானதாக இருக்குமாயின் அத்தகைய ஒவ்வொரு பன்னாட்டு பிணை அடையாள இலக்கமும் தனியான வணிகம்/ விலைக்குறிப்பீடாகக் கருதப்படல் வேண்டும்.

17. சேதங்களின் மீட்பு

அ. தீர்ப்பனவுத் திகதியன்று விலைக்குறிப்பீட்டினை/ வணிகத்தினை பங்கேற்கும் நிறுவனங்கள் கௌரவிக்கத் தவறுதல்

பங்கேற்கும் நிறுவனமொன்றின் வணிகம்/ விலைக்குறிப்பீட்டினை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்வது சட்டத்தினால் பிணிக்கப்பட்டிருப்பதுடன் தீர்ப்பனவுத் திகதியானது லங்கா செகுயரின் வியாபாரம் முடிவடைவதற்கு முன்னர் தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதியம் இல்லாமை அல்லது அவர்களது சொந்தக் கணக்கில் வைக்கப்பட்டிருக்கும் பிணைகள் போதுமானளவு கிடைக்காமல் இருப்பதன் காரணமாக பங்கேற்கும் நிறுவனம் வணிகத்தினை/ விலைக்குறிப்பீட்டினை கௌரவிக்கத் தவறுமாயின், அத்தகைய பங்கேற்கும் நிறுவனங்கள் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களின் வட்டிக்குச் சமமான தொகையொன்றினை இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்துவதற்குப் பொறுப்புடையதாக இருக்கும். அத்தகைய சேதங்கள் இலங்கை மத்திய வங்கியிலுள்ள பங்கேற்கும் நிறுவனங்களில் தீர்ப்பனவுக் கணக்கிலிருந்து அடுத்த வியாபார நாளன்று கழிக்கப்படுதல் வேண்டும்.

ஆ. முதிர்ச்சித் திகதியன்று செலுத்தத் தவறும் பங்கேற்கும் நிறுவனம்

முதிர்ச்சித் திகதியன்று (மீண்டும் விற்கும் திகதி) லங்காசெகுயரின் வியாபாரம் முடிவடைவதற்கு முன்னதாக மீண்டும் விற்கும் பெறுமதியினைச் செலுத்துவதற்கு பங்கேற்கும் நிறுவனத்தின் தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதியினைப் பேணுவதற்கு அந்நிறுவனம் தவறும் சந்தர்ப்பத்தில் பங்கேற்கும் நிறுவனம் நாளொன்றிற்கு ஒரு சதவீதத்தின் பத்திலொரு (0.1 சதவீதம்) சதவீதத்தில் செலுத்தத் தவறிய வட்டி வீதக் கொடுப்பனவிற்குப் புறம்பாக மீண்டும் விற்கும் பெறுமதிக்குச் சமமான பெறுமதியினை இலங்கை மத்திய வங்கிக்குச் சேதமாக செலுத்த பொறுப்புடையதாகும்.

இ. மேற்குறிப்பிட்ட (ஆ) இலிருந்து பெறப்பட்ட மொத்தத் தொகை இலங்கை மத்திய வங்கியிலுள்ள பங்கேற்கும் நிறுவனங்களில் தீர்ப்பனவுக் கணக்குகளில் அடுத்துவரும் வியாபார நாளன்று பற்று வைக்கப்படும்.

ஈ. கலண்டர் ஆண்டொன்றில் ஒரு தடவைக்கும் மேலாக விலைக்குறிப்பீடு/ வணிகத்தினைக் கௌரவிப்பதற்குத் தவறுதல்

கலண்டர் ஆண்டொன்றில் ஒரு தடவைக்கும் மேலாக விலைக்குறிப்பீடு/ வணிகத்தினைக் கௌரவிப்பதற்கு பங்கேற்கும் நிறுவனமொன்று தவறும் சந்தர்ப்பத்தில், இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியதொரு காலப்பகுதி வரை அத்தகைய கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதிலிருந்தும் இடைநிறுத்தப்படுவதனை இலங்கை மத்திய வங்கி பரிசீலனையில் கொள்ளலாம். பங்கேற்கும் நிறுவனமொன்று கலண்டர் ஆண்டொன்றில் மூன்று தடவைக்கும் மேலாக செலுத்தத் தவறும் சந்தர்ப்பத்தில் அத்தகைய செலுத்தத் தவறும் வட்டி வீதம் நாளொன்றிற்கு ஒரு சதவீதத்தில் பத்திலிரண்டு சதவீதத்திற்கு அதிகரிக்கப்படல் வேண்டும் அல்லது பங்கேற்கும் நிறுவனம் இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடிய காலப்பகுதி வரை கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட முடியாது.

18. ஏலம் மூடப்பட்டதும் எந்தவொரு சூழ்நிலையிலும் பங்கேற்கும் நிறுவனங்களினால் முன்வைக்கப்பட்ட விலைக்குறிப்பீடுகளில் எந்தவொரு திருத்தத்தினையும் செய்யமுடியாது.

19. கிரமமான ஏலங்களுக்குப் புறம்பாக, இலங்கை மத்திய வங்கி அவசியமானது எனக் கருதும் பொழுது வைத்திருக்கும் மேலதிக ஏலங்களை நடத்துவதற்குத் தீர்மானிக்கலாம்.

20. பங்கேற்கும் நிறுவனத்தின் வணிகத்தினை/ விலைக்குறிப்பீட்டினை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்வதற்கான அல்லது நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளது.

21. திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளின் அலுவல்சார் வாங்குகின்ற மற்றும் விற்கின்ற விலைகள் நடைமுறைச் சந்தை விலைகள் மற்றும் அபிவிருத்திகளின் அடிப்படையில், நாளாந்த ரீதியில் இலங்கை மத்திய வங்கியினால் கணிக்கப்படுதல் வேண்டும்.

22. அரசாங்கம் சடுதியாக வங்கி விடுமுறையொன்றினை பிரகடனப்படுத்துமிடத்து, ஏதேனும் கொடுக்கல்வாங்கல் தொடர்பிலான முதிர்ச்சிநாள் அத்தகைய விடுமுறை நாளன்று வருமிடத்து, அத்தகைய நாளன்று எழும் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களுக்கு தரப்பினர் கடப்பாடுகளைக் கொண்டிருப்பின் உடனடுத்து அடுத்துவரும் வியாபார நாளன்று அதனைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

23. திறந்த சந்தைத் தொழிற்பாட்டுச் சாதனங்களின் நேர அட்டவணையுடன் சேர்ந்து சுருக்கமொன்று இணைப்பில் தரப்பட்டுள்ளது.

24. துணைநில் வைப்பு வசதி நீங்கலாக அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களும் வழங்கல் எதிர் கொடுப்பனவு அடிப்படையில் இருக்கும்.

25. ஏலமொன்று நடைபெறும் சந்தர்ப்பத்திலும் வெட்டு வட்டி வீதத்தில் விலைக்குறிப்பீடுகள் காணப்படும் சந்தர்ப்பத்திலும் முன்வைக்கப்பட்ட தொகையை விஞ்சிக் காணப்படும் கிடைக்கத்தக்க அளவு அத்தகைய விலைக்குறிப்பீட்டாளர்களிடையே 'விகிதசம' அடிப்படையில் ஒதுக்கப்படல் வேண்டும். இதன்படி, விலைக்குறிப்பீடுகள் வெட்டு வட்டி வீதத்தில் பகுதியளவில் ஏற்றுக்கொள்ளப்படலாம்.

26. வியாபாரத்தினை மூடிவிடுதல் என்பது லங்கா செட்டில் முறைமை விதிகளின் பதிப்பு 2.1 இன் தொகுதி 4 அல்லது அதன் பிந்திய பதிப்பிலுள்ள நாளாந்தத் தொழிற்பாட்டு அட்டவணையிலுள்ள வியாபாரத்தினை மூடிவிடுவதற்காக குறித்துரைக்கப்பட்ட நேரம் எனக் கருதப்படல் வேண்டும். பொதுவாக, லங்கா செகுயரின் வியாபாரம் மூடப்படும் நேரம் 0430 மணியாகும். எனினும், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் எதிர்பாராத நிகழ்வுகளைக் கையாள்வதற்காக காலத்திற்குக் காலம் அதன் ஏக தற்றுணிபின் அடிப்படையில் பின்பற்றப்படக்கூடிய தொழிற்பாட்டு அட்டவணைக்கு அவ்வப்பொழுது சீராக்கங்களைச் செய்யும். அத்தகைய சந்தர்ப்பத்தில், இலங்கை மத்திய வங்கி வியாபாரத்தினை மூடிவிடும் நேரத்தினை சீர்செய்து அவசியமானவிடத்து பங்கேற்பாளர்களுக்கு அறிவிக்கும்.

27. பங்கேற்கும் நிறுவனங்கள் தீர்ப்பனவு தொடர்பான அறிவுறுத்தல்கள் எதனையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படவில்லை.

28. துணைநில் கடன்வழங்கல் வசதி, குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் மற்றும் நீண்ட கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் என்பன தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட பதிலீட்டுப் பிணையங்கள் அனுமதிக்கப்படமாட்டா.

29. பங்கேற்கும் நிறுவனங்களின் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் மீள்கொள்வனவு கணக்கிற்கு மாற்றல் செய்யப்பட்ட பிணையங்கள் பங்கேற்கும் நிறுவனங்களினால் வர்த்தகப்படுத்தப்படக்கூடாது

**பகுதி 3: துணைநில் வசதி**

30.0 துணைநில் வசதி ஓரிரவு வசதியொன்றாக இருத்தல் வேண்டுமென்பதுடன் இதில், பங்கேற்கும் நிறுவனங்கள் மத்திய வங்கியிலுள்ள வைப்பு நிதியத்திற்கான துணைநில் வைப்பு வசதியினை பயன்படுத்த அல்லது தகைமையுடைய பிணையங்களை வழங்குவதன் மூலம் இலங்கை மத்திய வங்கியிலிருந்து நிதியினைக் கடன்படுவதற்கு துணைநில் கடன்வழங்கல் வசதியைப் பயன்படுத்த முடியும். துணைநில் வசதியின் கீழ் அவ்வாறு வைப்புச் செய்யப்பட்ட அல்லது கடன்படப்பட்ட தொகை அவற்றின் சொந்த தற்றுணிபினை அடிப்படையாகக் கொண்டிருக்கும். சிறப்பு வைப்பு வசதி/ சிறப்புக் கடன்வழங்கல் வசதியின் கீழ் அதேநேர கணனிவி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையூடாக வைப்புச் செய்யப்பட்ட/ கோரப்பட்ட தொகையின் முழுப் பொறுப்பும் பங்கேற்கும் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். கோரப்பட்ட தொகைக்கு மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்டதும் எந்தவொரு சூழ்நிலையிலும் பங்கேற்கும் நிறுவனத்தினால் வைப்புச் செய்யப்பட்ட விலைக்குறிப்பீட்டின் மீது திருத்தங்கள் எதனையும் செய்யமுடியாது.

**3.1 துணைநில் வைப்பு வசதி**

31. துணைநில் வைப்பு வசதியைப் பயன்படுத்த விரும்பும் பங்கேற்கும் நிறுவனங்கள் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையூடாக சமர்ப்பிப்பதன் மூலம் இலத்திரனியல் ரீதியாக வணிகத்தினை 1530 மணிக்குப் பிந்தாமல் பதியுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

32. துணைநில் வைப்பு வசதிக்கான ஏற்புடைத்தான வட்டி வீதம் மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதமாக இருத்தல் வேண்டுமென்பதுடன் "வட்டிக் கூறு" தொடர்பான வைப்பின் காலப்பகுதிக்காக கணிக்கப்படுதலும் வேண்டும்.

33. இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் துணைநில் வைப்பு வசதியில் வைத்திருக்க விரும்பும் பெறுமதியினை பங்கேற்கும் நிறுவனத்தின் தீர்ப்பனவுக் கணக்கிலிருந்து அதேநாளன்று லங்காசெட்டில் முறைமை விதியின் நாளாந்தத் தொழிற்பாட்டு அட்டவணைக்கிணங்க பற்று வைக்கும்.

34. பங்கேற்கும் நிறுவனம், லங்காசெட்டில் முறைமையின் பங்கேற்பாளர் புறோசர் பணி நிலைத்தினூடாக தமது தீர்ப்பனவுக் கணக்கில் தொடர்பான பற்று இடம்பெற்றுள்ளதாக என்பதனை சரிபார்த்துக் கொள்ளல் வேண்டும்.

35. தொடர்பான கணக்கு வைத்திருப்பவருக்கு துணைநில் வைப்பு வசதியில் வைப்புச் செய்யப்பட்ட பெறுமதியளவிற்கு அவர்களது கணக்கில் செய்யப்பட்ட பற்றினை உறுதிப்படுத்தும் பற்று சுவிப்ற் செய்தி அதாவது பின் 900 இன் உறுதிப்படுத்தல் அனுப்பி வைக்கப்படும்.

36. முதிர்ச்சி நாளன்று, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம், வட்டிக் கூறுடன் சேர்த்து ஆரம்ப வைப்புப் பெறுமதியினை 0830 மணிக்குப் பிந்தாமல் பங்கேற்பாளர் நிறுவனங்கள் கணக்கிற்கு பற்று வைக்கும்.

37. தொடர்பான கணக்கு வைத்திருப்பவருக்கு அவரது கணக்கிற்குச் செய்யப்பட்ட வைப்பினை உறுதிப்படுத்தும் வரவு சுவிப்ற் செய்தி அதாவது பின் 910இன் உறுதிப்படுத்தல் முதிர்ச்சி நாளன்று 0830 மணிக்குப் பிந்தாமல் அனுப்பி வைக்கப்படும்.

**3.2 துணைநில் கடன்வழங்கல் வசதி**

38. துணைநில் கடன்வழங்கல் வசதியானது நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல் கோட்பாடுகளின் மீது தொழிற்படுகிறது. துணைநில் கடன்வழங்கல் வசதியின் கீழ் இலங்கை மத்திய வங்கி, உடன்பாடு காணப்பட்ட திகதியன்று உடன்பாடு காணப்பட்ட விலையில் (மீள்கொள்வனவு விலை/ மீண்டும் விற்கும் விலை) மீண்டும் விற்கப்படும் என்ற உடன்படிக்கையொன்றுடன் பங்கேற்கும் நிறுவனங்களிடமிருந்து உடன்பட்ட விலையில் (கொள்வனவு விலை) அரச பிணையங்களை (திறைசேரி உண்டியல்கள்/கள் மற்றும் அல்லது திறைசேரி முறி/கள்) கொள்வனவு செய்யும்.

39. மீண்டும் விற்கும் பெறுமதியானது தொடர்பான வணிகத்திற்கான கொள்வனவு விலையினையும் வட்டிக் கூறினையும் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

40. துணைநில் கடன்வழங்கல் வசதிக்கான ஏற்புடைத்தான வட்டி வீதம் இலங்கை மத்திய வங்கி துணைநில் கடன்வழங்கல் வசதியின் வீதமாக இருத்தல் வேண்டுமென்பதுடன் "வட்டிக் கூறு" தொடர்பான கடன்வழங்கல் காலப்பகுதிக்காக கணிக்கப்படுதல் வேண்டும்.

41. துணைநில் கடன்வழங்கல் வசதியைப் பயன்படுத்த விரும்பும் பங்கேற்கும் நிறுவனங்கள் பிணையங்களின் தேவைப்படும் தொகையினையும் விபரங்களையும் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாகச் சமர்ப்பிப்பதன் மூலம் வணிகத்தினை இலத்திரனியல் மூலம் 1530 மணிக்குப் பிந்தாமல் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

42. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம், கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் பெறுகைக்கு எதிராக பிணையங்களின் (கோரப்பட்ட தொகை) கொள்வனவு விலைக்கான தொகையில் பங்கேற்கும் நிறுவனங்களின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு வரவு வைப்பதன் மூலம் லங்கா செகுயரிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கணக்கிற்கு அதேநாளன்று 1615 மணிக்குப் பிந்தாமல் வரவு வைப்பதன் மூலம் கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்யும்.

43. ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை, பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம், முகப்புப் பெறுமதி, விளைவு வீதம் மற்றும்

முதிர்ச்சித் திகதி என்பனவற்றை எடுத்துக்காட்டும் துணைநில் கடன்வழங்கல் வசதி வணிகத்தின் உறுதிப்படுத்தலானது அதேநாளன்று 1615 மணிக்குப் பிந்தாமல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

44. முதிர்ச்சித் திகதியன்று (மீண்டும் விற்கும் நாள்) இலங்கை மத்திய வங்கி, பிணையங்களினை மீளவிற்கும் பெறுமதிக்காக (மீள்கொள்வனவு விலை) இலங்கை மத்திய வங்கியின் தீர்ப்பனவுக் கணக்கிற்குப் பெறப்படும் நிதியத்திற்கெதிராக 1100 மணிக்குப் பிந்தாமல் லங்கா செகுயரிலுள்ள பங்கேற்கும் நிறுவனங்களின் சொந்தக் கணக்கிற்குக் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை மீண்டும் மாற்றல் செய்ய வேண்டும்.

**பகுதி 4: குறுங்கால ஏலங்கள்**

45. குறுங்கால ஏலங்கள் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் வடிவில் காணப்படும். குறுங்கால ஏலங்களின் காலம் ஓரிரவிலிருந்து ஒரு வாரம் வரையில் காணப்படும். சரியான காலமும் வழங்கப்பட்ட தொகையும் இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் பந்தி 5.0 இல் குறிப்பிடப்பட்டவாறு சந்தைத் தொழிற்பாட்டுக் குழுவினால் தீர்மானிக்கப்படல் வேண்டும். தீர்ப்பனவானது அதேநாள் தீர்ப்பனவினை (hp+0) அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

46. இலங்கை மத்திய வங்கி சந்தைத் தொழிற்பாட்டுக் குழுவின் தீர்மானத்தினை அதேநாளன்று 0930 மணியளவில் அறிவித்தல் வேண்டும். அறிவித்தலானது, முன்வைக்கப்படவுள்ள ஏலங்களின் வகை (குறுங்கால மீள்கொள்வனவு அல்லது குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு), முன்வைக்கப்பட்ட தொகை மற்றும் முதிர்ச்சித் திகதி (காலம்) என்பனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

47. ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனமும் உயர்ந்தபட்சம் 3 விலைக்குறிப்பீடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருப்பதுடன் மொத்தப் பெறுமதி தொடர்பான ஏலத்தில் முன்வைக்கப்பட்ட தொகைக்கு மட்டுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு விலைக்குறிப்பீடும் அவர்கள் முதலீடு செய்ய/ கடன்பட விரும்பும் தொகையினையும் தொடர்பான விலைக்குறிப்பீட்டு வட்டி வீதத்தினையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

48. குறுங்கால மீள்கொள்வனவு, குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு மற்றும் குறுங்கால திரவ ஆதரவு வசதி ஏலங்களின் பெறுபேறுகள், ஏலத் திகதியன்று ஏல வெட்டுநேரத்திற்கு 30 நிமிடங்களின், பின்னர் அதேநேரக் கணனி வழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமை மற்றும் மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பினூடாகப் பெறப்பட்ட மொத்த விலைக்குறிப்பீடுகள், ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை சராசரி நிறையேற்றப்பட்ட வட்டி வீதம், வெற்றிபெற்ற விலைக்குறிப்பீடுகளின் உயர்ந்தபட்ச மற்றும் குறைந்தபட்ச வீதங்கள் என்பனவற்றைக் கொண்ட விபரங்களுடன் அறிவிக்கப்படும். ஏலத்தின் ஒவ்வொரு விலைக்குறிப்பீட்டாளருக்கும் (பங்கேற்கும் நிறுவனம்) ஏலத்தின் பெறுபேறுகள்( நிராகரிக்கப்பட்டவை, ஏற்றுக்கொள்ளப்பட்டவை அல்லது பகுதியளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைக்குறிப்பீடுகள்) அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக அறிவிக்கப்படும்.

49. வெற்றிபெற்ற ஒவ்வொரு விலைக்குறிப்பீட்டிற்குமாக, குறுங்கால மீள்கொள்வனவில் இலங்கை மத்திய வங்கியின் அலுவல்சார் விற்பனை விலையில் பிணையங்கள் ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும். குறுங்கால மீள்கொள்வனவு, குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு மற்றும் குறுங்கால திரவத்தன்மை ஆதரவு வசதி ஏலங்கள் தொடர்பில் ஒவ்வொரு வெற்றிபெற்ற பங்கேற்கும் நிறுவனத்திற்கான ஏலப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டதன் ஒரு மணித்தியாலத்திற்குப் பின்னர் உறுதிப்படுத்தல் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக இலத்திரனியலூடாக விடுவிக்கப்படும். உறுதிப்படுத்தல் பன்னாட்டு பிணைய அடையாள இலக்கம் மற்றும் ஒதுக்கப்பட்ட முகப்புப் பெறுமதி (விலைக்குறிப்பீடு பகுதியளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்குமாயின் மீளக்கணிக்கப்பட்ட முகப்புப் பெறுமதிகள்) ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை மற்றும் மீள்கொள்வனவு/ விற்பனைப் பெறுமதி என்பனவற்றையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

**4.1 குறுங்கால மீள்கொள்வனவு ஏலங்கள்**

50. குறுங்கால மீள்கொள்வனவு ஏலங்களின் கீழ் முதலீடு செய்ய விரும்பும் பங்கேற்கும் நிறுவனமொன்று பொருத்தமான ஏல அறிவிப்பினை தெரிவுசெய்வதன் மூலம் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக இலத்திரனியல் ரீதியில் அவர்களது விலைக்குறிப்பீட்டினை/ விலைக்குறிப்பீடுகளைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தில் அல்லது அதற்கு அதிகமான வீதத்தில் அமைந்த எந்தவொரு விலைக்குறிப்பீடும் நிராகரிக்கப்படும்.

51. ஒதுக்கீடுகள் வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டாளரினால் குறிப்பீடு செய்யப்பட்ட விலைக்குறிப்பீட்டு வட்டி வீதங்களின் இறங்குமுக வரிசையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

52. கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவு லங்காசெட்டிலில் கிடைக்கத்தக்கதாகவுள்ள பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தகப் பின்னூட்டல் வசதியூடாக மேற்கொள்ளப்படும். பிணையங்களின் விற்பனைப் பெறுமதிக்காக இலங்கை மத்திய வங்கியின் தீர்ப்பனவுக் கணக்கிற்கான நிதியங்களின் (ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை) பெறுகைகளுக்கெதிராக லங்கா செகுயரிலுள்ள தொடர்பான பங்கேற்கும் நிறுவனத்தின் வழங்கல் எதிர் கொடுப்பனவுக் கணக்கிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பிணையங்களை மாற்றல் செய்வதன் மூலம் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் கொடுக்கல்வாங்கல்களை 1315 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ தீர்ப்பனவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

53. வெற்றி பெற்ற பங்கேற்கும் நிறுவனங்கள், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம், 1315 மணியளவில் பிணையங்களின் விற்பனைப் பெறுமதியினை (ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுமதி) முழுமையாகப் பற்று வைப்பதனை இயலச்செய்யும் விதத்தில் தமது தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதி கிடைக்கத்தக்கதாக இருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

54. முதிர்ச்சித் திகதியன்று (மீள்கொள்வனவுத் திகதி) கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் 0830 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ லங்கா செகுயரிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் சொந்தக் கணக்கிற்கு அல்லது உள்நாட்டுத் தொழிற்பாடுகள் கடன்பாட்டுக் கணக்கிற்கு விற்பனை செய்யப்பட்ட பிணையங்களுக்கெதிராக பங்கேற்கும் நிறுவனத்தின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு பிணையங்களின் மீள்கொள்வனவுப் பெறுமதியை வரவு வைக்கும்.

55. மீள்கொள்வனவுப் பெறுமதியானது பிணையங்களின் விற்பனை விலையையும் (ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை) தொடர்பான விலைக்குறிப்பீட்டின் வட்டிக் கூறினையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். தொடர்பான விலைக்குறிப்பீட்டின் வட்டிக் கூறு ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை மற்றும் உடன்பாடு காணப்பட்ட காலப்பகுதிக்கான (காலம்) அவ்விலைக்குறிப்பீட்டிற்கான பங்கேற்கும் நிறுவனத்தின் தொடர்பான விலைக்குறிப்பீட்டு வட்டி வீதம் என்பனவற்றின் அடிப்படையில் கணிக்கப்படுதல் வேண்டும்.

56. பங்கேற்கும் நிறுவனங்கள், குறுங்கால மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் முழுமையாகத் திருப்பப்படுவதனை இயலச்செய்யும் விதத்தில் முதிர்ச்சித் திகதியன்று (மீள்கொள்வனவுத் திகதி) 0830 மணியளவில் லங்கா செகுயரிலுள்ள அவற்றின் உள்நாட்டு தொழிற்பாடுகள் மீள்கொள்வனவுக் கணக்கில் இலங்கை மத்திய வங்கியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் கிடைக்கத்தக்கதாக இருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**4.2 குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்**

57. குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களிலிருந்து கடன்பட விரும்பும் பங்கேற்கும் நிறுவனமொன்று பொருத்தமான ஏல அறிவிப்பினைத் தெரிவு செய்வதன் மூலம் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக இலத்திரனியல் முறையில் அவற்றின் விலைக்குறிப்பீட்டினை/ விலைக்குறிப்பீடுகளைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. பங்கேற்கும் நிறுவனங்கள் அவற்றின் விலைக்குறிப்பீடுகளுடன் சேர்த்து பிணைய விபரங்கள் பன்னாட்டு பிணைய அடையாள இலக்கங்களையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. துணைநில் வைப்பு வசதி வீதத்தில் அல்லது அதற்குக் குறைவான வீதத்தில் அமைந்த எந்தவொரு விலைக்குறிப்பீடும் நிராகரிக்கப்படும்.

58. ஒதுக்கீடுகள் வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டாளரினால் குறிப்பீடு செய்யப்பட்ட விலைக்குறிப்பீட்டு வட்டி வீதங்களின் இறங்குமுக வரிசையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

59. கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவு, தீர்ப்பனவு நாளன்று 1315 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ லங்காசெட்டிலில் கிடைக்கத்தக்கதாகவிருக்கும் பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தகப் பின்னூட்டல் வசதிகளினூடாக செயன்முறைப்படுத்தப்படல் வேண்டும். கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் லங்காசெட்டிலிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கணக்கிற்கான கொள்வனவுப் பிணையங்களின் பெறுகைக்கெதிராக, பிணையங்களின் கொள்வனவு பெறுமதிக்காக (ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுமதி) பங்கேற்கும் நிறுவனங்களின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு வரவு வைப்பதன் மூலம் கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்யும்.

60. முதிர்ச்சித் திகதியன்று (மீண்டும் விற்பனை செய்யும் நாள்) இலங்கை மத்திய வங்கி, கொள்வனவு செய்யப்பட்ட பிணைய/ பிணையங்களின் மீண்டும் விற்பனை செய்யும் பெறுமதிக்காக (மீள்கொள்வனவு விலை) இலங்கை மத்திய வங்கியின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு நிதிகள் பெறப்பட்டதற்கெதிராக, 1100 மணிக்குப் பிந்தாமல் லங்கா செகுயரிலுள்ள பங்கேற்கும் நிறுவனத்தின் சொந்தப் பிணையக் கணக்கிற்கு கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை மீண்டும் மாற்றல் செய்யும்.

61. மீண்டும் விற்பனை செய்யும் பெறுமதியானது பிணையங்களின் கொள்வனவு விலைகளையும் (ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை) மற்றும் தொடர்பான விலைக்குறிப்பீடுகளுக்கான வட்டிக் கூறு என்பனவற்றை உள்ளடக்கியிருக்கும். தொடர்பான விலைக்குறிப்பீட்டில் வட்டிக் கூறானது ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை மற்றும் உடன்படிக்கை (காலப்பகுதி) காலப்பகுதிக்குரிய விலைக்குறிப்பீட்டிற்கான பங்கேற்கும் நிறுவனத்தின் தொடர்பான விலைக்குறிப்பீட்டு வட்டி வீதம் என்பனவற்றின் அடிப்படையில் கணிக்கப்படும்.

**பகுதி 5: நீண்ட கால ஏலங்கள்**

62. நீண்ட கால ஏலங்கள் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் வடிவிலிருக்கும். நீண்ட கால ஏலங்களின் காலப்பகுதி 7 நாட்களுக்கும் கூடுதலாக (ஒரு வாரத்திற்கும் கூடுதலாக) இருக்கும்.

63. இலங்கை மத்திய வங்கி, நீண்ட கால ஏலங்களை நடத்துவதற்கான சந்தைத் தொழிற்பாட்டுக் குழுவின் தீர்மானத்தினை ஏல நாளன்று 0930 மணியளவில் அல்லது ஏலத் திகதிக்கு ஒரு நாள் முன்கூட்டிய வியாபார நாளன்று அறிவிக்கும். அறிவித்தலானது முன்வைக்கப்படும் ஏலத்தின் வகை (நீண்ட கால மீள்கொள்வனவு அல்லது நீண்ட கால நேர்மாற்று மீள்கொள்வனவு, நீண்ட கால திரவத்தன்மை ஆதரவு வசதி), முன்வைக்கப்படும் தொகை, முதிர்ச்சி நாள் (காலம்), ஏலத்திகதி மற்றும் தீர்ப்பனவுத் திகதி என்பனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

64. ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனமும் உயர்ந்தபட்சம் 6 விலைக்குறிப்பீடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருப்பதுடன் மொத்த விலைக்குறிப்பீட்டின்/ குறிப்பீடுகளின் பெறுமதி, தொடர்பான ஏலத்தில் முன்வைக்கப்படும் தொகைக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

ஒவ்வொரு விலைக்குறிப்பீடும் அவர்கள் முதலீடு செய்ய/ கடன்பட விரும்பும் தொகையினையும் தொடர்பான விலைக்குறிப்பீட்டின் வட்டித் தொகையினையும் உள்ளடக்கியிருக்கும். நீண்ட கால மீள்கொள்வனவு, நீண்ட நேர்மாற்று மீள்கொள்வனவு, நீண்ட கால திரவத்தன்மை ஆதரவு வசதி ஏலங்கள் நேர அட்டவணையின் இணைப்பு மற்றும் திறந்த சந்தைத் தொழிற்பாட்டுச் சாதனங்களின் தொகுப்பின்படி நடத்தப்படுமென்பதுடன் தீர்ப்பனவுத் திகதி அடுத்துவரும் வியாபார நாளாக இருக்கும்.

65. குறுங்கால மீள்கொள்வனவு, குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு மற்றும் நீண்ட கால திரவத்தன்மை ஆதரவு வசதி ஏலங்களின் பெறுபேறுகள் ஏலத் திகதியன்று ஏல வெட்டுநேரத்திற்கு 30 நிமிடங்களின பின்னர் அதேநேரக் கணனி வழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமை மற்றும் மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பூடாகப் பெறப்பட்ட மொத்த விலைக்குறிப்பீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை சராசரி நிறையேற்றப்பட்ட வட்டி வீதம் வெற்றிபெற்ற விலைக்குறிப்பீடுகளின் உயர்ந்தபட்ச மற்றும் குறைந்தபட்ச வீதங்கள் என்பனவற்றைக் கொண்ட விபரங்களுடன் அறிவிக்கப்படும். ஏலத்திற்கு ஒவ்வொரு விலைக்குறிப்பீட்டாளருக்கும் (பங்கேற்கும் நிறுவனம்) ஏலத்தின் பெறுபேறுகள்( நிராகரிக்கப்பட்டவை, ஏற்றுக்கொள்ளப்பட்டவை அல்லது பகுதியளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைக்குறிப்பீடுகள்) அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக அறிவிக்கப்படும்.

66. ஒவ்வொரு வெற்றி பெற்ற விலைக்குறிப்பீட்டிற்குமாக, குறுங்கால மீள்கொள்வனவில் இலங்கை மத்திய வங்கியின் அலுவல்சார் விற்பனை விலையில் பிணையங்கள் ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும். குறுங்கால மீள்கொள்வனவு, குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு மற்றும் நீண்ட கால திரவத்தன்மை ஆதரவு வசதி ஏலங்கள் தொடர்பில் ஒவ்வொரு வெற்றிபெற்ற பங்கேற்கும் நிறுவனத்திற்கான உறுதிப்படுத்தல் ஏலப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டதன் பின்னர் ஒரு மணித்தியாலத்திற்குப் பின்னர் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக இலத்திரனியலூடாக விடுவிக்கப்படும். உறுதிப்படுத்தல் பன்னாட்டு பிணைய அடையாள இலக்கம் மற்றும் ஒதுக்கப்பட்ட (விலைக்குறிப்பீடு பகுதியளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்குமாயின் மீள கணிக்கப்பட்ட முகப்புப் பெறுமதிகள்) தொடர்பான முகப்புப் பெறுமதி ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை மற்றும் மீள்கொள்வனவு/ விற்பனைப் பெறுமதி என்பனவற்றையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்

### 5.1 நீண்ட கால மீள்கொள்வனவு ஏலங்கள்

67. நீண்ட கால மீள்கொள்வனவு ஏலங்களில் முதலீடு செய்ய விரும்பும் பங்கேற்கும் நிறுவனமொன்று பொருத்தமான ஏல அறிவிப்பினைத் தெரிவுசெய்வதன் மூலம் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக இலத்திரனியல் முறையில் ஏல நாளன்று அவற்றின் விலைக்குறிப்பீட்டினை/ குறிப்பீடுகளைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

68. ஒதுக்கீடுகள் வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டாளரினால் குறிப்பீடு செய்யப்பட்ட விலைக்குறிப்பீட்டு வட்டி வீதங்களின் இறங்குமுக வரிசையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

69. தீர்ப்பனவு நாளன்று, கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவுகள் லங்காசெட்டிலில் கிடைக்கத்தக்கதாகவுள்ள பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தகப் பின்னூட்டல் வசதியூடாக மேற்கொள்ளப்படும். கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கியின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு பிணையங்களின் விற்பனைப் பெறுமதிக்கான (கொள்வனவு விலை) நிதியங்களின் பெறுகைக்கெதிராக (ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை) லங்கா செகுயரிலுள்ள தொடர்பான பங்கேற்பு நிறுவனத்தின் வழங்கல் எதிர் கொடுப்பனவுக் கணக்கிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பிணையங்களை (கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்) மாற்றல் செய்வதன் மூலம் தீர்ப்பனவுத் திகதியன்று 0830 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ கொடுக்கல்வாங்கல்களை தீர்ப்பனவு செய்யும்.

70. வெற்றிபெற்ற பங்கேற்கும் நிறுவனங்கள், தீர்ப்பனவுத் திகதியன்று 0830 மணியளவில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் பிணையங்களின் விற்பனைப் பெறுமதியினை (ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுமதி) முழுமையாக பற்று வைப்பதனை இயலச்செய்யும் விதத்தில் அவர்களின் தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதியம் கிடைக்கத்தக்கதாக இருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

71. முதிர்ச்சி நாளன்று (மீள்கொள்வனவுத் திகதி), கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம், லங்காசெகுயரிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் சொந்த அல்லது உள்நாட்டுத் தொழிற்பாடுகள் கடன்பாட்டுக் கணக்கிற்கான விற்பனை செய்யப்பட்ட பிணையங்களின் பெறுகைக்கெதிராக, 0830 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ பங்கேற்கும் நிறுவனங்களின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு பிணையங்களின் மீள்கொள்வனவுப் பெறுமதியை வரவு வைக்கும்.

72. மீள்கொள்வனவுப் பெறுமதியானது பிணையங்களின் விற்பனை விலையையும் (ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை) தொடர்பான விலைக்குறிப்பீடுகளுக்கான வட்டிக் கூறினையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். தொடர்பான விலைக்குறிப்பீட்டின் வட்டிக் கூறு, ஏற்றுக்கொள்ளப்படட தொகையினையும் உடன்படிக்கையின் காலப்பகுதிக்கான (காலம்) விலைக்குறிப்பீட்டிற்கான பங்கேற்கும் நிறுவனத்தின் தொடர்பான விலைக்குறிப்பீட்டு வட்டி வீதத்தினையும் அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படும்.

### 5.2 நீண்ட கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்

73. நீண்ட கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களிலிருந்து கடன்பட விரும்புகின்ற பங்கேற்கும் நிறுவனமொன்று பொருத்தமான ஏல அறிவித்தலினைத் தெரிவுசெய்வதன் மூலம் அதேநேர கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக இலத்திரனியல் ரீதியாக தமது விலைக்குறிப்பீட்டினை/ குறிப்பீடுகளைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. பங்கேற்கும்

நிறுவனங்கள் அவர்களின் விலைக்குறிப்பீட்டுடன் சேர்த்து பிணைய விபரங்களின் பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கத்தினையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

74. ஒதுக்கீடுகள் வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டாளரினால் குறிப்பீடு செய்யப்பட்ட விலைக்குறிப்பீட்டு வட்டி வீதங்களின் இறங்குமுக வரிசையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

75. தீர்ப்பனவு நாளன்று, கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவு 0830 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக லங்கா செட்டிலில் கிடைக்கத்தக்கதாகவுள்ள பொருத்தப்பட்ட வர்த்தகப் பின்னூட்டல் வசதியூடாக செயன்முறைப்படுத்தப்படல் வேண்டும். கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் லங்கா செகுயரிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டு தொழிற்பாடுகள் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கணக்கிற்கு கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் பெறப்பட்டமைக்கு எதிராக பிணையங்களின் கொள்வனவு விலைக்காக (ஏற்றுக் கொள்ளப்பட்ட தொகை) பங்கேற்கும் நிறுவனங்களின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு வரவு வைப்பதன் மூலம் கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்தல் வேண்டும்.

76. முதிர்ச்சி நாளன்று (மீண்டும் விற்பனை செய்யும் நாள்) இலங்கை மத்திய வங்கி, கொள்வனவு செய்யப்பட்ட பிணையம்/ பிணையங்களின் மீண்டும் விற்கப்படும் பெறுமதிக்காக (மீள்கொள்வனவு விலை) இலங்கை மத்திய வங்கியின் தீர்ப்பனவுக் கணக்கிற்கான நிதிகளின் பெறுகைக்கு எதிராக 1100 மணிக்குப் பிந்தாமல் லங்கா செகுயரிலுள்ள பங்கேற்கும் நிறுவனங்களின் சொந்தப் பிணையக் கணக்கிற்கு கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை மீண்டும் மாற்றல் செய்யும்.

77. மீண்டும் விற்கும் பெறுமதி பிணையங்களின் கொள்வனவு விலை (ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை) மற்றும் தொடர்பான விலைக்குறிப்பீட்டிற்கான வட்டிக் கூறு என்பனவற்றை உள்ளடக்கியிருக்கும். தொடர்பான விலைக்குறிப்பீட்டின் வட்டிக் கூறு ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை, உடன்படிக்கையின் காலப்பகுதிக்கான (காலம்) விலைக்குறிப்பீட்டிற்கான பங்கேற்கும் நிறுவனத்தின் தொடர்பான விலைக்குறிப்பீட்டு வட்டி வீதம் என்பனவற்றின் அடிப்படையில் கணிக்கப்படுதல் வேண்டும்.

**பகுதி 6: திரவத்தன்மை ஆதரவு வசதி**

78. திரவத்தன்மை ஆதரவு வசதியானது, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் நீங்கலாக, முதனிலை வணிகர்களாக நியமிக்கப்பட்ட கம்பனிகளான தனியான முதனிலை வணிகர்களுக்காக நேர்மாற்று மீள்கொள்வனவு வடிவில் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படுகின்றது. திரவத்தன்மை ஆதரவு வசதியானது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்காக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை இலங்கை மத்திய வங்கியினால் நடத்தப்படும் போது அல்லது இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படும் போது தனியான முதனிலை வணிகர்களுக்கு கிடைக்கச் செய்யப்படும்.

79. திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் கீழ் நிதியினைக் கடன்படுவதற்கு எண்ணுகின்ற தனியான முதனிலை வணிகர்கள், தொடர்பான ஏலத்தினை தெரிவுசெய்வதன் மூலம் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக இலத்திரனியல் முறைமையினூடாக அவர்களின் பிணைய விபரங்கள் மற்றும் பன்னாட்டு பிணைய அடையாள இலக்கம் என்பனவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

80. அதே நாளன்று உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்காக நடத்தப்பட்ட நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலத்தின் உயர்ந்தபட்சம் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைக்குறிப்பீட்டு வீதத்தினை அடிப்படையாகக் கொண்டு திரவத்தன்மை ஆதரவு வசதியின் கீழ் ஏலங்களின் தள வீதம் இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படும். பிரயோகிக்கத்தக்க தள வீதம் திரவத்தன்மை ஆதரவு வசதிக்கான ஏலம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாக மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பு மற்றும் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையூடாக அறிவிக்கப்படல் வேண்டும். தள வீதத்திற்குக் குறைவான எந்தவொரு விலைக்குறிப்பீடும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

81. ஒதுக்கீடுகள் வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டாளரினால் குறிப்பீடு செய்யப்பட்ட விலைக்குறிப்பீட்டு வட்டி வீதங்களின் இறங்குமுக வரிசையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

82. திரவத்தன்மை ஆதரவு வசதிக்காகப் பதிலீட்டுப் பிணையங்களைச் சமர்ப்பிப்பது அனுமதிக்கப்படமாட்டாது.

83. கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவு அதேநாளன்று 1315 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ செய்முறைப்படுத்தப்படல் வேண்டும். இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம், லங்காசெகுயரிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் நேர்மாற்று மீள்கொள்வனவு கணக்கிற்குள் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் பெறப்படுவதற்கெதிராக பிணையங்களின் கொள்வனவு விலைகளுக்காக (ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை) தொடர்பான தனியான முதனிலை வணிகர் தீர்ப்பனவுக் கணக்கிற்காக வரவு வைப்பதன் மூலம் கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்யும்.

84. முதிர்ச்சித் திகதியன்று (தொடர்பான தனியான முதனிலை வணிகர்களினால் கொள்வனவு செய்யப்பட்ட திகதி) இலங்கை மத்திய வங்கி, லங்காசெகுயரிலுள்ள தொடர்பான தனியான முதனிலை வணிகர்கள் சொந்த பிணையக் கணக்கிற்கு கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை 11.00 மணிக்குப் பிந்தாமல் தனியான முதனிலை வணிகரின் பிணை/ பிணையங்களின் மீள்கொள்வனவு பெறுமதிக்கான இலங்கை மத்திய வங்கியின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு நிதி கிடைக்கப் பெற்றமைக்கெதிராக மீண்டும் மாற்றல் செய்தல் வேண்டும்.

85. மீள்கொள்வனவுப் பெறுமதி பிணையங்களின் (ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை) கொள்வனவுப் பெறுமதி மற்றும் தொடர்பான

விலைக்குறிப்பீட்டிற்கான வட்டிக் கூறு என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது. தொடர்பான விலைக்குறிப்பீட்டின் வட்டிக் கூறு, ஏற்றக்கொள்ளப்பட்ட தொகை மற்றும் உடன்படிக்கையின் காலப்பகுதிக்கான விலைக்குறிப்பீட்டிற்காக (காலம்) தனியான முதனிலை வணிகர்கள் தொடர்பான விலைக்குறிப்பீட்டு வட்டி வீதத்தின் அடிப்படையில் கணிக்கப்படல் வேண்டும்.

**பகுதி 7: உடனடி ஏலங்கள்**

86.0 இலங்கை மத்திய வங்கி, அதன் உடமையிலிருந்து திறைசேரி உண்டியல்களை அல்லது முறிகளை (நிரந்தர அடிப்படையில் திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்கு) அல்லது இரண்டாந்தரச் சந்தையிலிருந்து அவற்றைக் கொள்வனவு செய்வதற்குத் (நிரந்தர அடிப்படையில் திரவத்தன்மையினை உள்ளீடு செய்வதற்கு) தீர்மானிக்கலாம். அனைத்துப் பங்கேற்பாளர்களும் உடனடி ஏலங்களை அணுகலாம்.

87. இலங்கை மத்திய வங்கி ஏல நாளன்று அல்லது ஏல நாளுக்கு முன்னதாக ஒரு வியாபார நாளன்று 0930 மணியளவில் உடனடி ஏலத்தினை நடத்துவதற்கான சந்தைத் தொழிற்பாட்டுக் குழுவின் தீர்மானத்தினை அறிவிக்கும் அதேவேளை, திறைசேரி முறிகளுக்கான உடனடி ஏலமொன்றினை நடத்துவதற்கான தீர்மானம் ஏல நாளுக்கு குறைந்தபட்சம் ஒரு நாளுக்கு முன்னதாக அறிவிக்கப்படும். அறிவித்தலானது முன்வைக்கப்படும் ஏலத்தின் வகை (உடனடி விற்பனை அல்லது கொள்வனவு), முன்வைக்கப்பட்ட தொகை (பிணையங்கள் முகப்புப் பெறுமதி), முதிர்ச்சித் திகதி, முதிர்ச்சிக்கு இன்னமுமுள்ள நாட்கள், ஏலத் திகதி மற்றும் தீர்ப்பனவுத் திகதி என்பனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். உடனடிக் கொடுக்கல்வாங்கல்களுக்கான தீர்ப்பனவுத் திகதி அடுத்துவரும் வியாபார நாளாக இருக்கும்.

88. ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனமும் உயர்ந்தபட்சம் 6 விலைக்குறிப்பீடுகளுக்கு மட்டுப்படுத்தப்படுவதுடன் இவை இணைப்பில் குறித்துரைக்கப்பட்ட நேரத்தின்படி ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் மொத்த விலைக்குறிப்பீடுகளின் பெறுமதி, தொடர்பான ஏலத்தில் முன்வைக்கப்பட்ட தொகைக்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும். ஒவ்வொரு விலைக்குறிப்பீடும் அவர்கள் வாங்க/ விற்க விரும்பும் பிணையங்களின் முகப்புப் பெறுமதியினையும் கொள்வனவு செய்யப்பட்ட/ விற்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள்/ முறிகளின் தேவைப்படுத்தப்பட்ட முதிர்ச்சிக் காலம், திறைசேரி முறிகளின் கொள்வனவினைப் பொறுத்தவரையில் நறுக்கு வீதம் மற்றும் நறுக்குத் திகதி, தொடர்பான விலைக்குறிப்பீட்டு வட்டி வீதம் (விளைவு வீதம்) மற்றும் எதிர்பார்க்கப்படும் விலை என்பனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

89. உடனடி/ கொள்வனவு ஏலங்களின் பெறுபேறுகள் ஏல வெட்டுநேரத்திலிருந்து மூன்று மணித்தியாலங்களுக்குள் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையூடாகப் பெறப்பட்ட மொத்த விலைக்குறிப்பீடு, ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட வட்டி வீதம் என்பனவற்றின் விபரங்களுடன் அறிவிக்கப்படும். ஒவ்வொரு விலைக்குறிப்பீட்டாளருக்கும் (பங்கேற்கும் நிறுவனம்) ஏலத்தின் பெறுபேறுகள் (நிராகரிக்கப்பட்டவை, ஏற்றுக்கொள்ளப்பட்டவை அல்லது பகுதியளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைக்குறிப்பீடுகள்) ஏற்புடைத்தானவிடத்து பிணையங்களின் ஏற்புடைத்தான விற்பனைகளுடன் சேர்த்து ஏலத்திகதியன்று அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையூடாக அறிவிக்கப்படும்.

**7.1 உடனடி விற்பனை ஏலங்கள்**

90. உடனடி விற்பனை ஏலங்களிலிருந்து திறைசேரி உண்டியல்கள்/ முறிகளைக் கொள்வனவு செய்ய விரும்புகின்ற பங்கேற்கும் நிறுவனமொன்று பொருத்தமான ஏல அறிவித்தலைத் தெரிவு செய்வதன் மூலம் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக ஏல நாளன்று அவற்றின் விலைக்குறிப்பீடு/ குறிப்பீடுகளை இலத்திரனியல் முறையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

91. ஒதுக்கீடுகள் வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டாளரினால் குறிப்பீடு செய்யப்பட்ட விலைக்குறிப்பீட்டு வட்டி வீதங்களின் இறங்குமுக வரிசையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

92. தீர்ப்பனவுத் திகதியன்று, கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவு லங்கா செட்டிலில் கிடைக்கத்தக்கதாகவுள்ள பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தகப் பின்னூட்டல் வசதியினூடாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும். கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு பிணையங்களின் (விற்பனை செய்யப்பட்ட பிணையங்களின் கழிவிடப்பட்ட பெறுமதி) விற்பனைப் பெறுமதிக்கான நிதிகளின் பெறுகைக்கெதிராக லங்கா செகுயரிலுள்ள வெற்றி பெற்ற தொடர்பான விலைக்குறிப்பீட்டாளரின் (பங்கேற்கும் நிறுவனம்) சொந்தக் கணக்கிற்கு விற்கப்பட்ட பிணையங்களை மாற்றல் செய்வதன் மூலம் தீர்ப்பனவுத் திகதியன்று 0830 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்தல் வேண்டும்.

93. விற்பனை செய்யப்பட்ட பிணையங்களின் கழிவிடப்பட்ட பெறுமதியானது விடயத்தைப் பொறுத்து தொடர்பான விலைக்குறிப்பீட்டாளரால் (பங்கேற்கும் நிறுவனம்) விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்கள்/ முறிகளின் விலைக்குறிப்பீட்டு வட்டி வீதம் (விளைவு வீதம்) மற்றும் திறைசேரி உண்டியல்கள்/ முறிகளின் முதிர்ச்சித் திகதி என்பவற்றின் அடிப்படையில் கணிக்கப்படுகிறது.

**7.2 உடனடி கொள்வனவு ஏலங்கள்**

94. உடனடிக் கொள்வனவு ஏலங்களில் மத்திய வங்கியினால் எடுத்துக்காட்டப்பட்ட (முன்வைக்கப்பட்ட) முதிர்ச்சியில் திறைசேரி உண்டியல்/ முறிகளினை விற்பனை செய்ய விரும்புகின்ற பங்கேற்கும் நிறுவனமொன்று ஏல நாளன்று அவற்றின் விலைக்குறிப்பீடு/

விலைக்குறிப்பீடுகளைப் பொருத்தமான ஏல அறிவிப்பினைத் தெரிவு செய்வதன் மூலம் இலத்திரனியல் ரீதியாக அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

95. ஒதுக்கீடுகள் வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டாளரினால் குறிப்பீடு செய்யப்பட்ட விலைக்குறிப்பீட்டு வட்டி வீதங்களின் இறங்குமுக வரிசையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

96. கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவு, தீர்ப்பனவுத் திகதியன்று 0830 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ லங்கா செட்டிலில் கிடைக்கத்தக்கதாகவுள்ள பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக பின்னூட்டல் வசதியினூடாக செயன்முறைப்படுத்தப்படல் வேண்டும். லங்கா செகுயரிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் சொந்தப் பிணையங்கள் கணக்கிற்கான கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் பெறுகைக்கெதிராக, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் பிணையங்களின் கொள்வனவுப் பெறுமதிக்காக (கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் கழிவிடப்பட்ட பெறுமதி) பங்கேற்கும் நிறுவனத்தின் தீர்ப்பனவுக் கணக்கில் வரவு வைப்பதன் மூலம் கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்கிறது.

97. பிணையங்களின் கழிவிடப்பட்ட பெறுமதியானது விடயத்தைப் பொறுத்து தொடர்பான விலைக்குறிப்பீட்டாளரால் (பங்கேற்கும் நிறுவனம்) விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்கள்/ முறிகளின் விலைக்குறிப்பீட்டு வட்டி வீதம் (விளைவு வீதம்) மற்றும் திறைசேரி உண்டியல்கள்/ முறிகளின் முதிர்ச்சித் திகதி என்பவற்றின் அடிப்படையில் கணிக்கப்படுகிறது.

**பகுதி 8: மத்திய வங்கிப் பிணையங்கள்**

98. இலங்கை மத்திய வங்கி, மிகையான ரூபாத் திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்கான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் ஒரு பகுதியாக, நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 91 (1)(ஆ) இன் கீழ், தேவையெனக் கருதும் பொழுது மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குவதற்கும் அத்துடன்/ அல்லது ஏற்கனவே வழங்கப்பட்ட மத்திய வங்கி பிணையங்களை நேரகாலத்துடன் இளைப்பாற விடுவதற்கும் அது தீர்மானங்களை மேற்கொள்ள முடியும்.

**99. இலங்கை மத்திய வங்கி**

i. ஏல முறைமையின் கீழ் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குதல்

ii. ஏல முறைமையின் கீழ் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை இளைப்பாறவிடுதல்

iii. இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் மீள்விற்பனை வசதி

என்பன தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்ளமுடியும்.

**100 இப்பிணையங்களின் முக்கிய பண்புகள் வருமாறு:**

i. இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் பத்திரங்களற்ற வடிவத்தில் வழங்கப்படும்.

ii. இலங்கை மத்திய வங்கிப் பிணையங்கள் கைமாறத்தக்கவை.

iii. பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை மற்றும் மத்திய வைப்பக முறைமை என்பனவற்றிற்கு ஏற்புடைத்தான நியதிகளும் ஒழுங்குவிதிகளும் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் மாற்றல்கள் மற்றும் தீர்ப்பனவுகளுக்கும் ஏற்புடைத்தாக இருக்கும்.

iv. இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் சந்தைப்படுத்தத்தக்கனவாகும். எனினும், இப்பிணையங்கள் ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதி, துணைநில் கடன் வழங்கல் வசதி, அல்லது மத்திய வங்கியுடனான நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்கு பிணையமாகப் பயன்படுத்தத் தகைமையற்றனவாகும்.

v. அரச திறைசேரி உண்டியல்களைப் போன்று இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களும் கழிவிடல் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

vi. பங்கேற்கும் நிறுவனங்கள் இப்பிணையங்களை இலங்கை மத்திய வங்கியிலிருந்து கொள்வனவு செய்ய உரித்துடையனவாகும். பொதுமக்கள் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை வர்த்தக வங்கிகளூடாக அல்லது முதனிலை வணிகர்களினூடாக இரண்டாந்தரச் சந்தையிலிருந்து கொள்வனவு செய்ய முடியும்.

vii. அரச பிணையங்களைப் போன்று, இப்பிணையங்களின் ஆரம்ப வழங்கல் வட்டி வருமானத்தின் மீதான பிடித்துவைத்தல் வரிக்கு ஏற்புடைத்தானதாகும்.

viii. இலங்கை மத்திய வங்கியின் பிணையங்களினது காலம் (முதிர்ச்சிக் காலம்) மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படும்.

**8.1 ஏல முறைமையின் கீழ் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குதல்** (குறுங்காலம் மற்றும் நீண்ட காலம்)

101 ஏல நாளன்று அல்லது ஏல நாளுக்கு முன்னதாகவுள்ள ஒரு வியாபார நாளன்று இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குவதற்கு ஒரு ஏலத்தினை நடத்துவதற்கான நாணயத் தொழிற்பாட்டுக் குழுவின் தீர்மானத்தினை இலங்கை மத்திய வங்கி அறிவிக்கும். ஏலம் தொடர்பான அறிவித்தலானது ஏலத்தின் வகை (குறுங்காலம் அல்லது நீண்ட காலம்), முன்வைக்கப்பட்ட

தொகை (முகப்புப் பெறுமதி), விற்கப்படவுள்ள பிணையங்களின் முதிர்ச்சிக் காலம், ஏலத்தின் திகதி மற்றும் நேரம் மற்றும் தீர்ப்பனவுத் திகதி என்பனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

102 இலங்கை மத்திய வங்கி ஒன்றில் குறுங்கால அல்லது நீண்ட கால மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குவதற்குத் தீர்மானிக்க முடியும். குறுங்கால மத்திய வங்கிப் பிணையங்கள் 1 நாளிலிருந்து 7 நாட்கள் (1 வாரம்) வரையில் காணப்படுகின்ற வேளையில் நீண்ட காலப் பிணையங்கள் 7 நாட்களுக்கும் கூடுதலான (ஒரு வாரத்திற்கும் கூடுதலான) காலப்பகுதிக்கு வழங்கப்படும்.

103 ஏலமானது உடனடி விற்பனை ஏலத்திற்கான விருப்பின் கீழ் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக நடத்தப்படும். ஏலங்களிலிருந்து இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களைக் கொள்வனவு செய்ய விரும்பும் பங்கேற்கும் நிறுவனமொன்று தொகை (கொள்வனவு செய்ய எதிர்பார்க்கும் பிணையங்களின் முகப்புப் பெறுமதி) மற்றும் ஏல அறிவிப்பில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் காலப்பகுதியில் ஏலத் திகதியிலுள்ள விலைக்குறிப்பீட்டின் வட்டி (விளைவு) வீதம் என்பனவற்றைப் பொருத்தமான விற்பனை ஏல அறிவிப்பினைத் தெரிவுசெய்வதன் மூலம் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக, இலத்திரனியல் முறைமையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

104 ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனமும் ஒவ்வொரு முதிர்ச்சிக்குமாக உயர்ந்தபட்சம் 6 விலைக்குறிப்பீடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருப்பதுடன் மொத்த விலைக்குறிப்பீட்டின்/ விலைக்குறிப்பீடுகளின் பெறுமதி தொடர்பான ஏலத்தில் முன்வைக்கப்பட்ட தொகைக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

105 பங்கேற்கும் நிறுவனங்களினால் குறிப்பீடு செய்யப்பட்ட விலைக்குறிப்பீட்டு வட்டி (விளைவு) வீதங்கள் பிடித்துவைத்தல் வரியுடன் கூடிய விளைவு வீதங்களாக இருக்கும்.

106 ஒதுக்கீடுகள் வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டாளரினால் குறிப்பீடு செய்யப்பட்ட விலைக்குறிப்பீட்டு வட்டி வீதங்களின் இறங்குமுக வரிசையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

107 ஏலங்களின் பெறுபேறானது பெறப்பட்ட மொத்த விலைக்குறிப்பீடு, ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை மற்றும் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் என்பனவற்றை வழங்கும் விதத்தில் ஏலம் மூடப்பட்டத்திலிருந்து 30 நிமிடங்களின் பின்னர் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக அறிவிக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு விலைக்குறிப்பீட்டாளருக்கும் (பங்கேற்கும் நிறுவனம்) ஏல நாளன்று ஏலம் மூடப்பட்டதிலிருந்து 30 நிமிடங்களுக்குப் பின்னர் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக பிணையங்களின் தொடர்பான விற்பனை விலை (பிடித்துவைத்தல் வரி உட்பட) யுடன் சேர்த்து ஏலத்தின் பெறுபேறுகளை (விலைக்குறிப்பீடுகளின் நிராகரிப்பு, ஏற்றுக்கொள்ளல் அல்லது பகுதியளவில் ஏற்றுக்கொள்ளல் பற்றி) அறிவிக்கப்படும்.

108 ஒவ்வொரு வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டினதும் விற்பனை விலை (பிடித்துவைத்தல் வரி உட்பட) தொடர்பான பங்கேற்கும் நிறுவனத்தினால் குறிப்பீடு செய்யப்பட்ட பிணையங்களின் முதிர்ச்சிக் காலத்திற்கான பிடித்துவைத்தல் வரிக்கு (வரி வீதத்திற்குப் பின்னர்) சீராக்கப்பட்ட விலைக்குறிப்பீட்டு வட்டி (விளைவு) வீதங்களில் பிணையங்களின் முகப்புப் பெறுமதியினைக் கழிவிடுவதன் மூலம் கணிக்கப்படுதல் வேண்டும்.

109. ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை, பன்னாட்டு பிணைய அடையாள இலக்கம், முகப்புப் பெறுமதி மற்றும் முதிர்ச்சித் திகதி என்பனவற்றை உறுதிப்படுத்தும் விதத்தில் பெறுபேறுகள் வெளியிடப்பட்டு ஒரு மணித்தியாலத்திற்குள் வணிகத்தின் உறுதிப்படுத்தலொன்று அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையூடாக இலத்திரனியல் ரீதியில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தினால் பங்கேற்கும் நிறுவனத்திற்கு வழங்கப்படும்.

110 கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவினை லங்கா செட்டிலில் கிடைக்கத்தக்கதாகவுள்ள பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தகப் பின்னூட்டல் வசதியூடாக மேற்கொள்ளுதல் வேண்டும். தீர்ப்பனவு நாளன்று, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கியின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு பிணையங்களின் விற்பனைப் பெறுமதிக்கான (விற்கப்பட்ட பிணையங்களின் கழிவிடப்பட்ட பெறுமதி/ பிடித்துவைத்தல் வரியுடனான விலை) நிதியங்களின் பெறுகைக்கெதிராக லங்கா செகுயரிலுள்ள தொடர்பான பங்கேற்கும் நிறுவனத்தின் சொந்தக் கணக்கிற்கு விற்கப்பட்ட பிணையங்களின் முகப்புப் பெறுமதியினை மாற்றல் செய்வதன் மூலம் கீழே 110 கிளைவாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட தொடர்பான தீர்ப்பனவு நேரத்தில் கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்யும்.

111 தீர்ப்பனவு நேரம் பின்வருமாறு இருக்கும்:

i. குறுங்கால இலங்கை மத்திய வங்கி பிணைய ஏலங்களுக்கான, தீர்ப்பனவானது ஏல நாளன்று தொடர்பான ஏலம் மூடப்பட்டதன் பின்னர் 2 மணித்தியாலங்களுக்கிடையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

ii. நீண்ட கால இலங்கை மத்திய வங்கிப் பிணைய ஏலங்களுக்கான, தீர்ப்பனவு நேரமானது தொடர்பான தீர்ப்பனவு நாளன்று 0830 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

112 பிணையங்களை இலங்கை மத்திய வங்கியின் சொந்தப் பிணையங்கள் கணக்கிற்கும் முதிர்ச்சிப் பெறுகைகளை (பிணையங்களின் முகப்புப் பெறுமதி) முதிர்ச்சித் திகதிக்கு உடனடியாக முற்போந்த வியாபார நாளன்று தொடர்பான பிணையங்களை வைத்திருக்கும் பங்கேற்கும் நிறுவனத்தின் தீர்ப்பனவுக் கணக்கிற்கும் மாற்றல் செய்வதன் மூலம் முதிர்ச்சித் திகதியில் 0830 மணிக்கோ அல்லது

அதற்கு முன்பாகவோ முறைமையானது முதிர்ச்சித் தீர்ப்பனவுகளைத் தானாகவே ஆரம்பிக்கிறது.

**8.2 முன்னரே தீர்மானிக்கப்பட்ட வீதத்தில் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குதல்**

113 இலங்கை மத்திய வங்கி, இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை முன்னரே தீர்மானிக்கப்பட்ட விளைவு வீதத்தில் பங்கேற்கும் நிறுவனத்திற்கு வழங்கும்.

114 முன்னரே தீர்மானிக்கப்பட்ட வீதத்தில் வழங்கப்படவுள்ள இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் முதிர்ச்சிக் காலம், விளைவு வீதம் (பிடித்துவைத்தல் வரியுடன்) மற்றும் தீர்ப்பனவுத் திகதி என்பன சந்தைத் தொழிற்பாட்டுக் குழுவினால் தீர்மானிக்குமென்பதுடன் அதேநேரக் கணினிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமை/ பணச் சந்தைக் கண்காணிப்பு முறைமை அல்லது/ அத்துடன் வேறு ஏதேனும் தொடர்பூட்டல் முறைமைகள் என்பனவற்றினூடாக பங்கேற்கும் நிறுவனங்கள் ஒவ்வொரு வியாபார நாளன்றும் 1100 மணியிலிருந்து 1430 மணி வரையில் மத்திய வங்கிப் பிணையங்களைக் கொள்வனவு செய்வதற்கும் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பிரிவுடனான வர்த்தகத்தினை மேற்கொள்ளவும் அழைக்கப்படுகின்றன.

115 முன்னரே தீர்மானிக்கப்பட்ட வீதங்களில் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களைக் கொள்வனவு செய்ய விரும்பும் பங்கேற்கும் நிறுவனங்கள் தொலைபேசி அல்லது தொலைநகல் செய்தி மூலம் அதே நாளன்று 1430 மணிக்குப் பிந்தாமல் கொள்வனவு செய்யத் தேவைப்படும் தொகையினை முகப்புப் பெறுமதி உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பிரிவிற்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

116 பங்கேற்கும் நிறுவனங்கள் கொள்வனவு செய்வதற்குத் தேவைப்படும் தொகையினை (முகப்புப் பெறுமதி) இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமைக்கு (துணைநில் வசதி, உடனடிக் கொள்வனவுத் தேர்வின் கீழ்) அதேநாளன்று 1500 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

117 யாருடைய வணிகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதோ அந்த பங்கேற்கும் நிறுவனங்கள் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக (துணைநில் வசதி உடனடி விற்பனைத் தேர்வின் கீழ்) அதேநாளன்று 1500 மணியளவில் அத்தகைய ஏற்றுக்கொள்ளல்களைப் பார்வையிட முடியும்.

118 வணிகத் திகதியன்று தீர்ப்பனவுகள் இடம்பெறுகின்ற விடயங்களைப் பொறுத்தவரையில் பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தகப் பின்னூட்டல் கோவை வணிகத் திகதியன்று 1500 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ லங்கா செக்குயருக்கு சமர்ப்பிக்கப்படும். தீர்ப்பனவுத் திகதி அடுத்த நாளாக இருக்குமிடத்து பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தகப் பின்னூடல் கோவை தீர்ப்பனவுத் திகதியன்று 0830 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ லங்கா செகுயருக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

119 விற்கப்பட்ட பிணையங்களின் கழிவிடப்பட்ட பெறுமதிக்காக இலங்கை மத்திய வங்கியின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு நிதிகள் பெறப்பட்டமைக்கெதிராக பங்கேற்கும் நிறுவனங்களின் தொடர்பான சொந்தக் கணக்குகளுக்கு விற்கப்பட்ட பிணையங்களை மாற்றல் செய்வதன் மூலம் முறைமையானது கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்யும்.

120 பிணையத்தின் முதிர்ச்சிக் காலப்பகுதிக்கான பிடித்துவைத்தல் வரிக்காக (வரி வீதத்திற்குப் பின்னர்) ஏற்புடைத்தான வட்டி வீதம் சீராக்கப்படுவதன் மூலம் விற்கப்பட்ட பிணையங்களின் முகப்புப் பெறுமதியினைக் கழிவிடுவதன் மூலம் விற்பனைப் பெறுமதி (பிடித்துவைத்தல் வரியை உள்ளடக்கிய விற்பனை விலை) கணிக்கப்படும்.

121 முதிர்ச்சி நாளன்று, முறைமையானது பிணையங்களை இலங்கை மத்திய வங்கியின் சொந்தக் கணக்கிற்கும் முதிர்ச்சிப் பெறுகைகளை முதிர்ச்சி நாளுக்கு முன்னைய வியாபார நாளன்று தொடர்பான பிணையங்களை வைத்திருக்கும் பங்கேற்கும் நிறுவனங்களின் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைக் கணக்கிற்கும் மாற்றல் செய்வதன் மூலமும் தன்னியக்கமாகவே தீர்ப்பனவினை மேற்கொள்ளும்.

122 இலங்கை மத்திய வங்கி அவசியமானது எனக் கருதும் பொழுது முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட வீதத்தின் கீழ் வழங்கப்பட வேண்டிய இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் விளைவு வீதத்தினையும் முதிர்ச்சிக் காலத்தினையும் மாற்றுவதற்கான உரிமையைக் கொண்டிருப்பதுடன், அத்தகைய மாற்றங்கள் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு, அதேநேரக் கணனி வழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமை/ பணம் சந்தைக் கண்காணிப்பு முறைமை அல்லது வேறு ஏதேனும் தொடர்பூட்டல் முறைமையினைப் பயன்படுத்தி, இது நடைமுறைக்குவரும் நாளன்று 0930 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ அறியத்தரப்படும்.

**8.3 ஏல முறைமையின் கீழ் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் உரிய காலத்திற்கு முன்னரான இணைப்பாற்றல்**

123 ஏலமொன்றினூடாக தொடர்பான முதிர்ச்சித் திகதி/ திகதிகளுக்கு முன்னதாக இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை இளைப்பாற்றுவதற்கு எப்பொழுது அவசியமானது என எண்ணுகிறதோ அப்பொழுது சந்தைத் தொழிற்பாட்டுக் குழு அதனைத் தீர்மானிக்கும்.

124 இலங்கை மத்திய வங்கி, இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை முதிர்ச்சித் திகதிக்கு முன்னதாகவே இளைப்பாற்றுவதற்கு (கொள்வனவு) ஏலமொன்றை நடத்துவதற்கு சந்தைத் தொழிற்பாட்டுக் குழு தீர்மானித்திருப்பது பற்றி ஏல நாளன்றோ அல்லது ஏலத் திகதிக்கு ஒரு வியாபார நாள் முன்னதாகவோ அறிவித்தல் வேண்டும். ஏலம் தொடர்பான அறிவித்தலானது முன்வைக்கப்பட்ட தொகை (முகப்புப் பெறுமதி), முதிர்ச்சித் திகதி (திகதிகள்) மற்றும் கொள்வனவு செய்யப்படவுள்ள பிணையங்களின்

பன்னாட்டு பிணைய அடையாள இலக்கம், ஏலம் நடைபெறும் திகதி மற்றும் நேரம் மற்றும் தீர்ப்பனவுத் திகதி என்பனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

125 ஏலத்தில் தொடர்பான மத்திய வங்கிப் பிணையங்களை விற்க விரும்புகின்ற பங்கேற்கும் நிறுவனமொன்று தொகை (விற்பனை செய்ய எதிர்பார்க்கும் பிணையங்களின் முகப்புப் பெறுமதி) மற்றும் ஏல நாளன்று விலைக்குறிப்பீடு செய்யப்படவுள்ள வட்டி (விளைவு) வீதம் என்பன பற்றிய விபரங்களை, 1300 மணிக்கும் 1400 மணிக்குமிடையில் உடனடிக் கொள்வனவு ஏலத் தேர்வின் கீழ் பொருத்தமான ஏல அறிவிப்பினைத் தெரிவு செய்வதன் மூலம் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக இலத்திரனியல் முறையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. தீர்ப்பனவு நேரம் அடுத்த வியாபார நாளன்று 0830 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவே மேற்கொள்ளப்படும்.

126 ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனமும் ஒவ்வொரு முதிர்ச்சிக்குமாக (பன்னாட்டு பிணைய அடையாள இலக்கம்) உயர்ந்தபட்சம் 6 விலைக்குறிப்பீடுகளுக்கு மட்டுப்படுத்தப்படுவதுடன் மொத்த விலைக்குறிப்பீட்டுப் பெறுமதி, தொடர்பான ஏலத்தில் முன்வைக்கப்பட்ட தொகைக்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

127 ஒதுக்கீடுகள் வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டாளரினால் குறிப்பீடு செய்யப்பட்ட விலைக்குறிப்பீட்டு வட்டி வீதங்களின் இறங்குமுக வரிசையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

128 ஏலங்களின் பெறுபேறுகள் ஏலம் மூடப்பட்ட பின்னர் 30 நிமிடங்களின் பின்னர் அதேநேரக் கணினிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக பெறப்பட்ட மொத்த விலைக்குறிப்பீடு, ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை மற்றும் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் ஆகிய விபரங்களுடன் அறிவிக்கப்படும். ஒவ்வொரு விலைக்குறிப்பீட்டாளருக்கும் (பங்கேற்கும் நிறுவனம்) ஏலங்களின் பெறுபேறு (விலைக்குறிப்பீட்டின் நிராகரிப்பு, ஏற்றுக்கொள்ளல் அல்லது பகுதியளவான ஏற்றுக்கொள்ளல்) மற்றும் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் தொடர்பான கொள்வனவு விலைகள் போன்ற விபரங்கள் ஏல நாளன்று ஏலம் மூடப்பட்டு 30 நிமிடங்களின் பின்னர் அதேநேர கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக அறிவிக்கப்படும்.

129 கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவு, தீர்ப்பனவு நாளன்று 0830 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ லங்கா செட்டிலில் கிடைக்கத்தக்கதாக இருக்கும் பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தகப் பின்னூட்டல் வசதிகளினூடாக செயன்முறைப்படுத்தப்படும். கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் லங்கா செகுயரிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் சொந்தப் பிணையங்கள் கணக்கிற்கான இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் பெறுகைக்கெதிராக, பிணையங்களின் கொள்வனவுப் பெறுமதிக்காக (கொள்வனவு செய்யப்பட்ட இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் கழிவிடப்பட்ட பெறுமதி) பங்கேற்கும் நிறுவனங்களின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு வரவு வைப்பதன் மூலம் கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்யும்.

130 இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் கொள்வனவு விலையானது, பிணையங்களின் முதிர்ச்சிக்கு இன்னமும் எஞ்சியுள்ள நாட்களுக்காக தொடர்பான பங்கேற்கும் நிறுவனங்களினால் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட வீதத்தில் ஒவ்வொரு வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டின் பெறுமதியையும் (கொள்வனவு செய்யப்படவிருக்கும் பிணையங்களின் முகப்புப் பெறுமதி) கழிவிடுவதன் மூலம் கணிக்கப்படுகின்றது.

### 8.4 இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் மீண்டும் விற்கும் வசதி மற்றும் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட வீதத்தில் முன்கூட்டியே இளைப்பாற்றுதல்

131 இலங்கை மத்திய வங்கிப் பிணையங்கள் தொடர்பில், இலங்கை மத்திய வங்கி பங்கேற்கும் நிறுவனங்களுக்காகப் பின்வரும் வசதிகளை வழங்குகின்றது:

அ. அவர்கள் வசமுள்ள இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை முதிர்ச்சிக்கு முன்னதாக இலங்கை மத்திய வங்கி துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தில் மீண்டும் விற்பனை செய்வதற்கு.

ஆ. இலங்கை மத்திய வங்கி முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட வீதமொன்றில் முதிர்ச்சிக்கு முன்னதாக இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை இளைப்பாற (கொள்வனவு) விடுவதற்கு.

132 131(அ) இன்படி, முதிர்ச்சியின் எஞ்சிய காலப்பகுதிக்காக இலங்கை மத்திய வங்கியின் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்துடன் ஒப்பிடுகையில் கழிவிடல் வட்டி வீதமொன்றில் திரவத்தன்மைத் தேவைகளைப் பங்கேற்கும் நிறுவனங்கள் கொண்டிருக்கும் பொழுது, தொடர்பான மத்திய வங்கிப் பிணையங்களின் முதிர்ச்சித் திகதிக்கு முன்னதாக அவர்கள் வசமுள்ள இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை இலங்கை மத்திய வங்கிக்கு மீண்டும் விற்பனை செய்ய பங்கேற்கும் நிறுவனங்கள் அனுமதிக்கப்பட்டன. 131(ஆ) இனைப் பொறுத்தவரை, இலங்கை மத்திய வங்கி முதிர்ச்சிக்கு முன்னர் இளைப்பாற விடப்படவுள்ள இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் வீதம், முதிர்ச்சித் திகதி மற்றும் பன்னாட்டு பிணைய அடையாள இலக்கம் ஆகிய விபரங்களுடன் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட வீதத்தில் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை இளைப்பாறவிடும் அதன் எண்ணத்தினை அறிவிக்கும்.

133 மேற்குறிப்பிட்ட வசதிகளை பயன்படுத்த விரும்பும் பங்கேற்கும் நிறுவனங்கள் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பிரிவிற்கு மீண்டும் விற்க எதிர்பார்க்கப்படும் தொகையினை (இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் முகப்புப் பெறுமதி) 1515 மணிக்குப் பிந்தாமல் தொலைபேசி அல்லது தொலைநகல் மூலம் அறிவிக்குமாறு

கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

134 பங்கேற்கும் நிறுவனங்கள் அதே நாளன்று 1515 மணிக்குப் பிந்தாமல் துணைநில் வசதியின் கீழ், உடனடிக் கொள்வனவுத் தேர்வினைத் தெரிவு செய்வதன் மூலம் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக அதே விடயங்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் இலத்திரனியல் ரீதியாக வணிகத்தினை (விற்பதற்குத் தேவைப்படும் தொகை மற்றும் பன்னாட்டுப் பிணைய அடையாள இலக்கம்) உறுதிப்படுத்தல் வேண்டும். இத்தீர்ப்பனவானது அதேநாள் (hp+0) தீர்ப்பனவு அடிப்படையில் இருக்கும்.

135 ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை, பன்னாட்டுப் பிணைய அடையாள இலக்கம், முகப்புப் பெறுமதிகள் மற்றும் விளைவு வீதம் என்பனவற்றை உறுதிப்படுத்தி, அதேநாளன்று 1615 மணிக்குப் பிந்தாமல் அதேநேர இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக இலத்திரனியல் ரீதியாக பங்கேற்கும் நிறுவனங்களுக்குக் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் வணிகத்தின் உறுதிப்படுத்தலொன்றினை வழங்கும்.

136 இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் கொள்வனவுப் பெறுமதி (கொள்வனவு விலை) 131(அ) இன் நியதிகளில் இலங்கை மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வீதத்தில் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் முகப்புப் பெறுமதியினைக் கழிவிடுவதன் மூலமும் 131(ஆ) இனைப் பொறுத்தவரை பிணையங்களின் முதிர்ச்சிக்கு எஞ்சியுள்ள நாட்களுக்கான முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட வீதத்திலும் கணிக்கப்படுதல் வேண்டும்.

137 கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவு லங்கா செட்டிலில் கிடைக்கத்தக்கதாகவுள்ள பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக பின்னூட்டல் வசதியினூடாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும். கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம், லங்கா செகுயரிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் சொந்தப் பிணையங்கள் கணக்கிற்கான கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் பெறுகைக்கெதிராக பிணையங்களின் கொள்வனவுப் பெறுமதிக்காக (கொள்வனவு செய்யப்பட்ட மத்திய வங்கிப் பிணையங்களின் கழிவிடப்பட்ட பெறுமதி) பங்கேற்கும் நிறுவனங்களின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு வரவு வைப்பதன் மூலம் அதேநாளன்று 1615 மணிக்கோ அல்லது அதற்கு முன்பதாகவோ கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்யும்.

**பகுதி 9: வெளிநாட்டுச் செலாவணிப் பரஸ்பரப் பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்கள்**

138 இப்பிரிவிலுள்ள நடைமுறைகள், வழிகாட்டல்கள், நியதிகள் மற்றும் நிபந்தனைகள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு மாத்திரமே ஏற்புடைத்தாகும்.

139 இலங்கை மத்திய வங்கியின் சந்தைத் தொழிற்பாட்டுக் குழு, ஒன்றில் சந்தையிலிருந்து திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்காக அல்லது சந்தைக்கு திரவத்தன்மையினை அல்லது உள்ளீடு செய்வதற்கான நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளிலுள்ள கருவியொன்றாக வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை நடத்துவது பற்றி தீர்மானிக்கும். வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்கள், இணங்கப்பட்ட வீதமொன்றில் எதிர்காலத் திகதியில் கொடுக்கல்வாங்கல்களை மாற்றியமைப்பதற்கான உடன்படிக்கையொன்றுடன் ஆரம்பத் திகதியொன்றில் ஒரு நாணயத்தினை மற்றொரு நாணயத்திற்கெதிராகக் கொள்வனவு செய்வதுடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது. கொடுக்கல்வாங்கல்களின் தன்மையினைப் பொறுத்தவரையில் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல்கள் மீள்கொள்வனவினை ஒத்ததாக இருப்பினும் பிணையமென்ற முறையில் அரச பிணையங்களுக்குப் பதிலாக வெளிநாட்டு நாணயம் இருந்து வருகின்றது.

140 அனைத்து வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் இலங்கை மத்திய வங்கிக்குமிடையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல்களின் இரண்டு வகைகளில் ஈடுபடும்.

i. விற்றல் - வாங்கல் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல்; மற்றும்

ii. வாங்கல் - விற்றல் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல்

141 விற்றல் - வாங்கல் மற்றும் வாங்கல் - விற்றல் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களுக்கான நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் தொழிற்பாட்டு நடைமுறைகள் இப்பிரிவில் மேலோட்டமாகக் குறிப்பிடப்படுகின்றன.

142 விற்றல் - வாங்கல் மற்றும் வாங்கல் - விற்றல் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களுக்கான காலம் உயர்ந்தபட்சம் 365 நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

143 இலங்கை மத்திய வங்கி, ஏல நாளன்று அல்லது ஏலத் திகதிக்கு ஒரு நாள் முன்னதாகவுள்ள ஒரு வியாபார நாளன்று 0930 மணியளவில் விற்றல் - வாங்கல் அல்லது வாங்கல் - விற்றல் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றலை நடத்துவதற்கான சந்தைத் தொழிற்பாட்டுக் குழுவின் தீர்மானத்தினை அறிவிக்கும். அறிவித்தலானது முன்வைக்கப்பட்ட தொகை, ஏலத் திகதி, காலம் மற்றும் 1ஆவது பிரிவின் தீர்ப்பனவுத் திகதி மற்றும் இரண்டாவது பிரிவின் முதிர்ச்சித் திகதி என்பனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

144 இலங்கை மத்திய வங்கியுடனான வெளிநாட்டுச் செலாவணிப் பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையில் நுழைய விரும்பும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்று ஏல நாளில் அதன் விலைக்குறிப்பீடுகளைப் பொருத்தமான ஏல அறிவித்தலைத் தெரிவு செய்வதன் மூலம் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக இலத்திரனியல் முறையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

145 வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் ஏலமானது ஏல நாளன்று 1300 மணியிலிருந்து - 1400 மணி வரையான காலப்பகுதியில் விலைக்குறிப்பீடுகளுக்காக திறந்து வைக்கப்படுதல் வேண்டும்.

146 விலைக்குறிப்பீடுகள் மறுஅறிவித்தல் வரை ஐ.அ.டொலரிலேயே ஏற்றுக்கொள்ளப்படும்.

147 வர்த்தக வங்கியொன்று ஒவ்வொரு விலைக்கோரலுக்கும் உயர்ந்தபட்சம் ஆறு விலைக்குறிப்பீடுகளைச் சமர்ப்பிக்க முடியும். விலைக்குறிப்பீட்டின் குறைந்தபட்சப் பெறுமதி ஐ.அ.டொலர் ஒரு மில்லியனாகவும் ($1,000,000.00) விலைக்குறிப்பீடுகள் ஐ.அ.டொலர் நூறாயிரத்தின் ($100,000) பெருக்கமாகவும் இருக்கும். ஒவ்வொரு விலைக்குறிப்பீடும் ஐ.அ.டொலரிலான தொகையினையும் பரஸ்பர பரிமாற்றல் புள்ளியையும் (மாறுபட்ட வீத விலைக்கோருநர்கள்) கொண்டிருக்கும்.

148 பரஸ்பர பரிமாற்றல் புள்ளிகள் அதேநேர கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையில் ரூபா நியதிகளில் இரண்டு தசமதானங்களில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும். உ-ம் 0.20 = இருபது சதம்

149 ஒதுக்கீடுகள், வெற்றி பெற்ற விலைக்குறிப்பீட்டாளர்களினால் குறிப்பீடு செய்யப்பட்ட பரஸ்பர பரிமாற்றல் புள்ளிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

150 முன்வைக்கப்பட்ட தொகையினை விஞ்சும் விதத்தில் வெட்டு பரஸ்பர பரிமாற்றல் புள்ளிகளில் விலைக்குறிப்பீடுகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் விற்றல் - வாங்கல் அல்லது வாங்கல் - விற்றல் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல்கள் கிடைக்கத்தக்க அளவு “விகிதசம” அடிப்படையில் அத்தகைய விலைக்குறிப்பீட்டாளர்களிடையே ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும். இதன்படி, வெட்டு பரஸ்பர பரிமாற்றல் புள்ளியில் விலைக்குறிப்பீடுகள் பகுதியளவில் ஏற்றுக்கொள்ளப்படலாம்.

151 வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் ஏலங்களின் பெறுபேறுகள் ஏல நாளன்று ஏலம் மூடப்பட்டதிலிருந்து 30 நிமிடங்களின் பின்னர் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையூடாக பெறப்பட்ட மொத்த விலைக்குறிப்பீடுகள், ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட பரஸ்பர பரிமாற்றல் புள்ளிகள் என்பன அறிவிக்கப்படுகின்றன.

152 ஏல நாளன்று ஏலம் முடிவடைந்ததிலிருந்து 30 நிடங்களுக்குப் பின்னர் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையூடாக வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றலினால் ஒதுக்கப்பட்ட பெறுமதியுடன் சேர்த்து ஏலங்களின் பெறுபேறுகள் (நிராகரிப்பு, ஏற்றுக்கொள்ளல் அல்லது விலைக்குறிப்பீடுகளைப் பகுதியளவில் ஏற்றுக்கொள்ளல்) என்பனவற்றுடன் ஒவ்வொரு விலைக்குறிப்பீட்டாளருக்கும் அறிவிக்கப்படும்.

153 வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களின் உறுதிப்படுத்தல் ஒவ்வொரு வெற்றிபெற்ற பங்கேற்கும் நிறுவனங்களுக்கும் அதேநேரக் கணனிவழி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக இலத்திரனியல் ரீதியில் பெறுபேறுகள் வெளியிடப்பட்டு ஒரு மணித்தியாலத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை, காலம், முதிர்ச்சித் திகதி மற்றும் பரஸ்பர பரிமாற்றல் புள்ளிகள் என்பனவற்றை உறுதிப்படுத்தி வழங்கப்படும்.

154 இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் தொடர்பான விற்றல் - வாங்கல் அல்லது வாங்கல் - விற்றல் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களை பௌதீக வடிவத்தில் மேற்கொள்ளும் என்பதுடன் ஒவ்வொரு வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டாளருக்கும் வணிக உறுதிப்படுத்தல்களை அனுப்பும்.

155 விற்றல் - வாங்கல் அல்லது வாங்கல் - விற்றல் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களுக்கான தீர்ப்பனவு நடைமுறை மற்றைய இதேபோன்ற வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களை ஒத்ததாகவே இருக்கும்.

**பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

**இணைப்பு**

## திறந்த சந்தைத் தொழிற்பாட்டு சாதனங்களின் நேர அட்டவணையும் தொகுப்பும்

| விபரங்கள் | சாதனம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | குறுங்கால மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் | குறுங்கால திரவத்தன்மை ஆதரவு வசதி ஏலங்கள் | நீண்டகால மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் | உடனடி விற்பனைகள்/ கொள்வனவு ஏலங்கள் | நீண்ட கால திரவத்தன்மை ஆதரவு வசதி ஏலங்கள் | வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் ஏலங்கள் | துணைநில் வசதி | மத்திய வங்கிப் பிணையங்கள் |
| ஏல நேரம் | 1000 - 1030 மணித்தியாலங்கள் | 1100 - 1130 மணித்தியாலங்கள் | 1300 - 1330 மணித்தியாலங்கள் | 1300 - 1400 மணித்தியாலங்கள் | 1400 - 1430 மணித்தியாலங்கள் | 1300 - 1400 மணித்தியாலங்கள் | வெட்டுநேரம் 1530 மணித்தியாலங்கள் | வழங்கல் 1100 - 1130 மணித்தியாலங்கள் இளைப்பாறல் 1300 - 1400 மணித்தியாலங்கள் |
| அதேநேர இலத்திரனியல் விற்பனை முறைமையூடான தீர்ப்பனவு | T+0 | T+0 | T+1 | T+1 | T+1 | T+2 | T+0 | 1500 மணியளவில் |
| தீர்ப்பனவு நேரம் | 1315 மணியளவில் | 1315 மணியளவில் | T+1 0830 மணியளவில் | T+1 0830 மணியளவில் | T+1 0830 மணியளவில் | T+2 | துணைநில் வைப்பு வசதி - 1600 மணியளவில் துணைநில் கடன்வழங்கல் வசதி 1615 மணியளவில் (வழமையாக 1545 மணியளவில் தீர்ப்பனவு செய்யப்படுகிறது) | 0830 மணியளவில் மீளவிற்கும் வசதி T+0 1615 மணியளவில் இளைப்பாறல் - T+1 0830 மணியளவில் |
| முதிர்ச்சித் திகதி மீதான மாற்றல் | மீள்கொள்வனவு - 0800 மணியளவில் நேர்மாற்று மீள்கொள்வனவு - 1100 மணியளவில் | 1100 மணியளவில் | மீள்கொள்வனவு - 0800 மணியளவில் நேர்மாற்று மீள்கொள்வனவு - 1100 மணியளவில் | வி.கி. | 1100 மணியளவில் | வியாபாரத்தினை மூடிவிடல் | துணைநில் வைப்பு வசதி - 0800 மணியளவில் துணைநில் கடன்வழங்கல் வசதி - 1100 மணியளவில் | 0830 மணியளவில் |
| இணைத்தரப்பு | உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் ஊ.சே. நிதியம் | தனியான முதனிலை வணிகர்கள் | உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் ஊ.சே. நிதியம் | உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், தனியான முதனிலை வணிகர்கள் மற்றும் ஊ.சே. நிதியம் | தனியான முதனிலை வணிகர்கள் | உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் | உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், தனியான முதனிலை வணிகர்கள் மற்றும் ஊ.சே.நிதியம் | உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், தனியான முதனிலை வணிகர்கள் மற்றும் ஊ.சே.நிதியம் |
| காலம் | 1 - 7 நாட்கள் | 1 - 7 நாட்கள் | 7 நாட்களுக்கும் கூடுதலாக | வி.கி. | 7 நாட்களுக்கும் கூடுதலாக | 1 ஆண்டு வரை | ஓரிரவு | 1 ஆண்டு வரை |

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல: 35/01/005/0007/18

2021 ஓகத்து 19

**சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்**

**ஒதுக்குத் தேவைப்பாடுகள்**

1 நாணயவிதிச் சட்டத்தின் (இலங்கை சட்டவாக்க அமுலாக்கங்களின் 422ஆம் அத்தியாயம்) 10(இ), 93, 94, 96 மற்றும் 97ஆம் பிரிவுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்டு திருத்தப்பட்டவாறான 2013 ஏப்பிறல் 12ஆம் திகதிய 1805.∴39ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி “ஈ” மூலம் திருத்தப்பட்டவாறான அறிவித்தலின் மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. குறிப்பிட்ட அறிவித்தலுக்கிணங்க உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அவற்றின் இலங்கை ரூபாவில் மாற்றப்பட்ட வைப்புப் பொறுப்புக்களுக்கெதிராக, அத்தகைய வைப்புப் பொறுப்புக்களின் மொத்தத்தின் நான்கு சதவீதத்திற்கு (4.00 சதவீதம்) சமமான தொகையினை ஒதுக்குகளாகப் பேண வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

3. 2020 யூன் 17ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/007/17ஆம் இலக்க தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் அட்டவணை அ இணைக்கப்பட்டுள்ள “அட்டவணை அ“ மூலம் பதிலீடு செய்யப்படுகின்றது.

4. மேற்குறிப்பிட்ட திருத்தம் 2021 செத்தெம்பர் 01ஆம் திகதியிலிருந்து தொடங்குகின்ற ஒதுக்குப் பேணுகின்ற காலப்பகுதியிலிருந்து நடைமுறைக்கு வரும். காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 2013 ஏப்பிறல் 22ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 35/01/005/007/06 கொண்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் உள்ளடக்கப்பட்ட ஏனைய அனைத்து அறிவுறுத்தல்களும் தொடர்ந்தும் ஏற்புடையதானவாக இருக்கும்.

முனைவர் ஆர் ஏ அனில் பெரேரா

**பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

**அட்டவணை அ**

அறிக்கைப் படிவம்

**நாளாந்த சராசரி வைப்புப் பொறுப்புக்கள் அறிக்கை**

வங்கியின் பெயர்: ........................................................................................................................................

(..............................................) தொடக்கம் (............................................) வரையான காலத்திற்கானது

திகதி திகதி

சேரல் : பணிப்பாளர்
உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
கொழும்பு 01.

கீழே அறிக்கையிடப்பட்ட வைப்புப் பொறுப்புக்களின் சராசரித் தொகைகள் மேலே குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியின் ஒவ்வொரு வேலை நாள் முடிவிலும் வங்கியின் ஏடுகள் மூலம் காட்டப்பட்ட வைப்பு மீதிகளை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

| (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|
| **கேள்வி வைப்புக்கள்** | **கால மற்றும் சேமிப்பு வைப்புக்கள்** | **நாணயக் கடிதங்களுக்கு/ ஏற்றுகொள்ளலுக்கெதிரான ஆவணங்கள் நியதிகளுக்கு எதிரான எல்லைகள்** | **அனைத்து ஏனைய வைப்புப் பொறுப்புக்கள்** |
| | | | |

வைப்புச் சான்றிதழின் விடயத்தில், பிரகடனப்படுத்தப்பட்ட தொகையானது செலுத்தப்பட்ட பெறுமதியாக இருத்தல் வேண்டும்.

**வேண்டப்படும் ஒதுக்குகள்**

...................................................... ஆரம்பிக்கின்ற காலப்பகுதிக்கானது

| விடயம் | இலங்கை ரூபாவில் |
|---|---|
| 1. விடயத்திற்கு ஏற்றவாறு<br>அ.<br>(i) 'மோட்டார் வாகனங்கள் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்' மீதான 2018 செத்தெம்பர் 19ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/0010/20 ஆம் இலக்க சுற்றறிக்கையின் அல்லது<br>(ii) 'மோட்டார் வாகனங்கள் மற்றும் அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்' மீதான 2018 செத்தெம்பர் 29ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/0010/21 சுற்றறிக்கையின்<br>கீழ் குறித்துரைக்கப்பட்ட நாணயக் கடிதங்களுக்கு<br>அத்துடன்<br>ஆ. 2018 ஒத்தோபர் 11ஆம் திகதியிடப்பட்ட 2018இன் 2ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட ஏற்றுகொள்ளலுக்கெதிரான ஆவணங்கள் நியதிகள் மீதான இறக்குமதிகளுக்கு<br>எதிரான சராசரி நாளாந்த மொத்த எல்லை வைப்புக்களின் 100 சதவீதம். | |
| 2. மேலே (1) நீங்கலாக சராசரி நாளாந்த மொத்த ரூபா வைப்புப் பொறுப்புக்களின் 4 சதவீதம். | |
| 3. மேலே 1 மற்றும் 2இல் உள்ளடக்கப்படும் சராசரி வைப்புப் பொறுப்புக்களின் மேலதிகமாக வைத்திருக்கப்படும் இலங்கை நாணயத் தாள்கள் மற்றும் குத்திகளின் 2 சதவீதம், ஆயினும் 4 சதவீதத்தினை விஞ்சாதிருத்தல். | |
| 4. ஒதுக்குப் பேணுதல் காலத்தின் (1+2-3) மீது பேணப்படுவதற்கு வேண்டப்படும் மொத்த ஒதுக்குகள். | |

மேற்குறித்த கூற்று சரியானதென்றும் இவ்வங்கியிலுள்ள ஏடுகளுக்கமைவானதென்றும் மேலே காட்டப்பட்ட தொகைகள் இந்நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விதந்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கமைவானவை என்றும் நாம்.'. நான் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.'. சான்றுப்படுத்துகின்றோம்.

திகதி :............................... ..............................................

உத்தியோகபூர்வ கையொப்பம்

**குறிப்பு:-**

(அ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் தவிர ஏதேனும் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட வைப்புகள் மற்றும் இருப்புக்கள், குறித்துரைக்கப்பட்ட விகிதங்களில் வேண்டப்பட்ட ஒதுக்குகளின் பேணுகையாக கணக்கிற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆ) அனைத்து தொகைகளும் கிட்டிய ரூபாவில் காட்டப்பட வேண்டும்.

2021 செத்தெம்பர் 08

**சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்**

**நாணயக் கடிதங்களுக்கெதிராக காசு எல்லை வைப்புத் தேவைப்பாடுகளைப் பேணுவதன் மீது 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் 103ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைய இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட கட்டளை**

1. உடனடியாக நடைமுறைக்குவரும் வகையில் நாணயக் கடிதத்தினைத் திறக்கின்ற நேரத்தில் உரிய உரிமம்பெற்ற வங்கிகளில் பேணப்படுகின்ற 100 சதவீத வட்டி உரித்தற்ற காசு எல்லை வைப்பினால் அத்தகைய நாணயக் கடிதங்கள் உள்ளடக்கப்பட்டாலன்றி இதற்கு இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பொருட்களின் இறக்குமதிக்காக உரிமம்பெற்ற வங்கிகள் மூலம் நாணயக் கடிதங்கள் திறக்கப்படலாகாது என உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் இத்தால் பணிக்கப்பட்டுள்ளன.

2. இக்கட்டளை மூலம் உள்ளடக்கப்படும் பொருட்களின் இறக்குமதிக்காக பின்வரும் நிபந்தனைகளும் ஏற்புடையதாதல் வேண்டுமெனவும் உரிமம்பெற்ற வங்கிகள் மேலும் பணிக்கப்பட்டுள்ளன.

அ) அதே விலைப் பட்டியல் இக்கட்டளை மூலம் உள்ளடக்கப்படாத பொருட்களை உள்ளடக்கியுள்ள விடயம் எவ்வாறிருப்பினும்

காசு எல்லை வைப்புத் தேவைப்பாடுகள் விலைப் பட்டியலின் மொத்தப் பெறுமதி மீதானதாக இருத்தல் வேண்டும்.

ஆ) இக்கட்டளை மூலம் உள்ளடக்கப்படும் பொருட்கள் இறக்குமதியினை உள்ளடக்குகின்ற ஏற்கனவேயுள்ள நாணயக் கடிதங்கள் விடயத்தில், அத்தகைய அதிகரிப்பானது மேலே (1)இல் வேண்டப்பட்டவாறு காசு எல்லை வைப்புக்களினால் உள்ளடக்கப்பட்டாலன்றி அத்தகைய நாணயக் கடிதங்களின் பெறுமதியில் அதிகரிப்பு எதுவும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் அனுமதிக்கப்படலாகாது.

இ) இக்கட்டளை மூலம் விதிக்கப்பட்ட குறைந்தபட்ச காசு எல்லை வைப்புத் தேவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்கு அத்தகைய வாடிக்கையாளர்களை இயலச்செய்யும் நோக்கத்திற்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் அவற்றின் வாடிக்கையாளர்களுக்கு ஏவையேனும் முற்பணங்களை வழங்கலாகாது.

ஈ) இக்கட்டளைக்கமைவாக காசு எல்லை வைப்பு பேணப்படுகின்றதா என்பதனை சான்றுபடுத்தி தொடர்புடைய விலைப் பட்டியலை உரிமம்பெற்ற வங்கிகள் புறக்குறிப்பீடு செய்தல் வேண்டும்.

உ) எல்லை வைப்பானது இலங்கையிலுள்ள வங்கித்தொழில் வழிகளூடாக கொடுப்பனவுகள் மீதான ஆவண ரீதியான சான்றினதும் இறக்குமதிகளை அப்புறப்படுத்தல் தொடர்பில் சுங்க ஆவணங்களினதும் சமர்ப்பித்தலின் மீது விடுவிக்கப்படுதல் வேண்டும்.

3. இக்கட்டளையின் ஏற்பாடுகள் தற்போது வலுவிலுள்ள ஏதேனும் தேவைப்படுத்தலுக்கு மேலதிகமாகவும் பொருட்கள் ஏற்றுமதி தொடர்பில் ஏதேனும் சட்டத்தின் நியதிகளுக்கமைய அறிமுகப்படுத்தப்படக்கூடிய அத்தகைய வேறு தேவைப்படுத்தல்களுக்கும் மேலதிகமாக வலுவுள்ளதாகவிருத்தல் வேண்டும்.

முனைவர் ஆர் ஏ அனில் பெரேரா
**பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

அட்டவணை

| இல. | இணங்குவிப்புக் குறியீடு | இல. | இணங்குவிப்புக் குறியீடு | இல. | இணங்குவிப்புக் குறியீடு | இல. | இணங்குவிப்புக் குறியீடு |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 030441 | 33 | 180620 | 65 | 220510 | 97 | 34011920 |
| 2 | 030449 | 34 | 180631 | 66 | 220820 | 98 | 34013020 |
| 3 | 030451 | 35 | 180632 | 67 | 220830 | 99 | 340600 |
| 4 | 030461 | 36 | 180690 | 68 | 22084010 | 100 | 40111010 |
| 5 | 030462 | 37 | 190211 | 69 | 220850 | 101 | 40111090 |
| 6 | 030469 | 38 | 190219 | 70 | 220860 | 102 | 40112011 |
| 7 | 030474 | 39 | 190220 | 71 | 220870 | 103 | 40112019 |
| 8 | 04029990 | 40 | 190230 | 72 | 240210 | 104 | 401130 |
| 9 | 040310 | 41 | 190240 | 73 | 24022050 | 105 | 401170 |
| 10 | 040390 | 42 | 190410 | 74 | 24022060 | 106 | 40118010 |
| 11 | 040510 | 43 | 190420 | 75 | 24031990 | 107 | 40118090 |
| 12 | 040620 | 44 | 20091190 | 76 | 24039990 | 108 | 40129010 |
| 13 | 040630 | 45 | 200971 | 77 | 33030010 | 109 | 40129090 |
| 14 | 040690 | 46 | 200979 | 78 | 33030021 | 110 | 401692 |
| 15 | 08041020 | 47 | 200990 | 79 | 33030022 | 111 | 420100 |
| 16 | 08051010 | 48 | 220210 | 80 | 33030029 | 112 | 420211 |
| 17 | 08052110 | 49 | 220291 | 81 | 330410 | 113 | 420212 |
| 18 | 080610 | 50 | 22029910 | 82 | 330420 | 114 | 420219 |
| 19 | 080620 | 51 | 22029930 | 83 | 330430 | 115 | 420221 |
| 20 | 080810 | 52 | 22029940 | 84 | 330491 | 116 | 420222 |
| 21 | 08109090 | 53 | 22029951 | 85 | 330499 | 117 | 420229 |
| 22 | 110412 | 54 | 22029959 | 86 | 330510 | 118 | 420231 |
| 23 | 110419 | 55 | 22029961 | 87 | 330520 | 119 | 420232 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 24 | 110422 | 56 | 22029969 | 88 | 330530 | 120 | 420239 |
| 25 | 110423 | 57 | 22029970 | 89 | 330590 | 121 | 420291 |
| 26 | 110429 | 58 | 22029991 | 90 | 330610 | 122 | 420292 |
| 27 | 110430 | 59 | 22029999 | 91 | 330690 | 123 | 420299 |
| 28 | 110510 | 60 | 22030010 | 92 | 330710 | 124 | 420310 |
| 29 | 110520 | 61 | 22030020 | 93 | 330720 | 125 | 420321 |
| 30 | 110710 | 62 | 22030090 | 94 | 330730 | 126 | 420329 |
| 31 | 110720 | 63 | 220410 | 95 | 330749 | 127 | 420330 |
| 32 | 110814 | 64 | 220421 | 96 | 33079090 | 128 | 420340 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 129 | 42050010 | 161 | 610432 | 193 | 610831 | 225 | 611595 |
| 130 | 430400 | 162 | 610433 | 194 | 610832 | 226 | 611596 |
| 131 | 44219990 | 163 | 610439 | 195 | 610839 | 227 | 611599 |
| 132 | 570292 | 164 | 610442 | 196 | 610891 | 228 | 611610 |
| 133 | 570320 | 165 | 610443 | 197 | 610892 | 229 | 611691 |
| 134 | 570330 | 166 | 610444 | 198 | 610899 | 230 | 611692 |
| 135 | 570500 | 167 | 610449 | 199 | 610910 | 231 | 611693 |
| 136 | 610120 | 168 | 610452 | 200 | 610990 | 232 | 611699 |
| 137 | 610130 | 169 | 610453 | 201 | 611011 | 233 | 611710 |
| 138 | 610190 | 170 | 610459 | 202 | 611012 | 234 | 61178010 |
| 139 | 610210 | 171 | 610461 | 203 | 611019 | 235 | 61178020 |
| 140 | 610220 | 172 | 610462 | 204 | 611020 | 236 | 620111 |
| 141 | 610230 | 173 | 610463 | 205 | 611030 | 237 | 620112 |
| 142 | 610290 | 174 | 610469 | 206 | 611090 | 238 | 620113 |
| 143 | 610310 | 175 | 610510 | 207 | 611120 | 239 | 620119 |
| 144 | 610322 | 176 | 610520 | 208 | 611130 | 240 | 620192 |
| 145 | 610323 | 177 | 610590 | 209 | 611190 | 241 | 620193 |
| 146 | 610329 | 178 | 610610 | 210 | 611211 | 242 | 620199 |
| 147 | 610331 | 179 | 610620 | 211 | 611212 | 243 | 620211 |
| 148 | 610332 | 180 | 610690 | 212 | 611219 | 244 | 620212 |
| 149 | 610333 | 181 | 610711 | 213 | 611231 | 245 | 620213 |
| 150 | 610339 | 182 | 610712 | 214 | 611239 | 246 | 620219 |
| 151 | 610341 | 183 | 610719 | 215 | 611241 | 247 | 620291 |
| 152 | 610342 | 184 | 610721 | 216 | 611249 | 248 | 620292 |
| 153 | 610343 | 185 | 610729 | 217 | 611300 | 249 | 620293 |
| 154 | 610349 | 186 | 610791 | 218 | 611420 | 250 | 620299 |
| 155 | 610413 | 187 | 610799 | 219 | 611430 | 251 | 620311 |
| 156 | 610419 | 188 | 610811 | 220 | 611490 | 252 | 62031290 |
| 157 | 610422 | 189 | 610819 | 221 | 611510 | 253 | 62031990 |
| 158 | 610423 | 190 | 610821 | 222 | 611529 | 254 | 62032290 |
| 159 | 610429 | 191 | 610822 | 223 | 611530 | 255 | 62032390 |
| 160 | 610431 | 192 | 610829 | 224 | 611594 | 256 | 62032990 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 257 | 620331 | 289 | 62059090 | 321 | 62114219 | 353 | 63023290 |

| | |
|---|---|
| 258 | 62033290 |
| 259 | 62033390 |
| 260 | 62033990 |
| 261 | 620341 |
| 262 | 62034290 |
| 263 | 62034390 |
| 264 | 62034990 |
| 265 | 62041290 |
| 266 | 62041390 |
| 267 | 62041990 |
| 268 | 62042290 |
| 269 | 62042390 |
| 270 | 62042990 |
| 271 | 620431 |
| 272 | 62043290 |
| 273 | 62043390 |
| 274 | 62043990 |
| 275 | 620441 |
| 276 | 62044290 |
| 277 | 62044390 |
| 278 | 62044490 |
| 279 | 62044990 |
| 280 | 62045290 |
| 281 | 62045390 |
| 282 | 62045990 |
| 283 | 620461 |
| 284 | 62046290 |
| 285 | 62046390 |
| 286 | 62046990 |
| 287 | 62052090 |
| 288 | 62053090 |

| | |
|---|---|
| 290 | 62061090 |
| 291 | 620620 |
| 292 | 62063090 |
| 293 | 62064090 |
| 294 | 62069090 |
| 295 | 620711 |
| 296 | 620719 |
| 297 | 62072290 |
| 298 | 62079190 |
| 299 | 62079990 |
| 300 | 62081190 |
| 301 | 62082190 |
| 302 | 62082290 |
| 303 | 62082990 |
| 304 | 62089190 |
| 305 | 62089290 |
| 306 | 62089990 |
| 307 | 620920 |
| 308 | 620930 |
| 309 | 620990 |
| 310 | 621010 |
| 311 | 621020 |
| 312 | 621030 |
| 313 | 621040 |
| 314 | 621050 |
| 315 | 621111 |
| 316 | 621112 |
| 317 | 621120 |
| 318 | 62113290 |
| 319 | 62113390 |
| 320 | 62113990 |

| | |
|---|---|
| 322 | 62114292 |
| 323 | 62114299 |
| 324 | 62114319 |
| 325 | 62114392 |
| 326 | 62114399 |
| 327 | 62114919 |
| 328 | 62114992 |
| 329 | 62114999 |
| 330 | 621210 |
| 331 | 621220 |
| 332 | 621230 |
| 333 | 621290 |
| 334 | 62132090 |
| 335 | 62139090 |
| 336 | 62141090 |
| 337 | 62144090 |
| 338 | 62149090 |
| 339 | 621510 |
| 340 | 621520 |
| 341 | 621590 |
| 342 | 621600 |
| 343 | 630110 |
| 344 | 630120 |
| 345 | 630130 |
| 346 | 630140 |
| 347 | 630190 |
| 348 | 630210 |
| 349 | 63022190 |
| 350 | 63022290 |
| 351 | 63022990 |
| 352 | 63023190 |

| | |
|---|---|
| 354 | 63023990 |
| 355 | 630240 |
| 356 | 63025190 |
| 357 | 63025990 |
| 358 | 63026090 |
| 359 | 63029190 |
| 360 | 63029390 |
| 361 | 63029990 |
| 362 | 630312 |
| 363 | 630319 |
| 364 | 630391 |
| 365 | 630392 |
| 366 | 630399 |
| 367 | 630411 |
| 368 | 63041990 |
| 369 | 630420 |
| 370 | 630491 |
| 371 | 63049290 |
| 372 | 63049390 |
| 373 | 63049990 |
| 374 | 63051090 |
| 375 | 630520 |
| 376 | 630532 |
| 377 | 630533 |
| 378 | 630539 |
| 379 | 630590 |
| 380 | 630612 |
| 381 | 630619 |
| 382 | 630622 |
| 383 | 630629 |
| 384 | 630630 |

| | |
|---|---|
| 385 | 630640 |
| 386 | 630690 |
| 387 | 630710 |
| 388 | 630720 |
| 389 | 640212 |
| 390 | 64021910 |
| 391 | 64021919 |
| 392 | 640220 |
| 393 | 640291 |
| 394 | 640299 |
| 395 | 640312 |

| | |
|---|---|
| 417 | 65069910 |
| 418 | 65069990 |
| 419 | 650700 |
| 420 | 660110 |
| 421 | 660191 |
| 422 | 660199 |
| 423 | 670300 |
| 424 | 670411 |
| 425 | 670419 |
| 426 | 670420 |
| 427 | 670490 |

| | |
|---|---|
| 449 | 732392 |
| 450 | 732393 |
| 451 | 732394 |
| 452 | 732399 |
| 453 | 73241010 |
| 454 | 73241090 |
| 455 | 732421 |
| 456 | 732429 |
| 457 | 732490 |
| 458 | 76151020 |
| 459 | 76151090 |

| | |
|---|---|
| 481 | 84182190 |
| 482 | 84182920 |
| 483 | 84182990 |
| 484 | 84501110 |
| 485 | 84501131 |
| 486 | 84501132 |
| 487 | 84501133 |
| 488 | 84501134 |
| 489 | 84501139 |
| 490 | 84501141 |
| 491 | 84501142 |

| | |
|---|---|
| 396 | 64031910 |
| 397 | 64031919 |
| 398 | 640320 |
| 399 | 640340 |
| 400 | 640351 |
| 401 | 640359 |
| 402 | 640391 |
| 403 | 640399 |
| 404 | 640411 |
| 405 | 640419 |
| 406 | 640420 |
| 407 | 640510 |
| 408 | 640520 |
| 409 | 640590 |
| 410 | 650100 |
| 411 | 650200 |
| 412 | 650400 |
| 413 | 65050010 |
| 414 | 65050090 |
| 415 | 65069110 |
| 416 | 65069190 |

| | |
|---|---|
| 428 | 69120010 |
| 429 | 701310 |
| 430 | 701322 |
| 431 | 701328 |
| 432 | 701333 |
| 433 | 701337 |
| 434 | 701341 |
| 435 | 701342 |
| 436 | 701349 |
| 437 | 701391 |
| 438 | 70139990 |
| 439 | 701810 |
| 440 | 701820 |
| 441 | 732111 |
| 442 | 732112 |
| 443 | 732119 |
| 444 | 732181 |
| 445 | 732182 |
| 446 | 732189 |
| 447 | 732310 |
| 448 | 732391 |

| | |
|---|---|
| 460 | 821599 |
| 461 | 830520 |
| 462 | 830629 |
| 463 | 841451 |
| 464 | 841459 |
| 465 | 84151021 |
| 466 | 84151022 |
| 467 | 84151023 |
| 468 | 84151024 |
| 469 | 84151029 |
| 470 | 84151032 |
| 471 | 84151033 |
| 472 | 84151034 |
| 473 | 84151035 |
| 474 | 84151039 |
| 475 | 84158190 |
| 476 | 84158290 |
| 477 | 84158390 |
| 478 | 84159019 |
| 479 | 84159029 |
| 480 | 84181090 |

| | |
|---|---|
| 492 | 84501143 |
| 493 | 84501144 |
| 494 | 84501149 |
| 495 | 84501210 |
| 496 | 84501231 |
| 497 | 84501232 |
| 498 | 84501233 |
| 499 | 84501234 |
| 500 | 84501239 |
| 501 | 84501910 |
| 502 | 84501931 |
| 503 | 84501932 |
| 504 | 84501933 |
| 505 | 84501934 |
| 506 | 84501939 |
| 507 | 850811 |
| 508 | 850940 |
| 509 | 850980 |
| 510 | 851010 |
| 511 | 851020 |
| 512 | 851030 |

| | |
|---|---|
| 513 | 85131010 |
| 514 | 85131090 |
| 515 | 851610 |
| 516 | 851621 |
| 517 | 851629 |
| 518 | 851631 |
| 519 | 851632 |
| 520 | 851633 |
| 521 | 851640 |
| 522 | 851650 |
| 523 | 85166010 |
| 524 | 85166090 |
| 525 | 851671 |
| 526 | 851672 |
| 527 | 85167910 |
| 528 | 85167920 |
| 529 | 851680 |
| 530 | 851711 |
| 531 | 85171210 |
| 532 | 85171220 |
| 533 | 85171290 |

| | |
|---|---|
| 541 | 852791 |
| 542 | 852792 |
| 543 | 852799 |
| 544 | 85285990 |
| 545 | 852869 |
| 546 | 85287120 |
| 547 | 85287190 |
| 548 | 85287210 |
| 549 | 85287231 |
| 550 | 85287232 |
| 551 | 85287233 |
| 552 | 85287234 |
| 553 | 85287235 |
| 554 | 85287236 |
| 555 | 85287239 |
| 556 | 85287241 |
| 557 | 85287249 |
| 558 | 85287291 |
| 559 | 85287299 |
| 560 | 85287320 |
| 561 | 85287390 |

| | |
|---|---|
| 569 | 85392290 |
| 570 | 853929 |
| 571 | 85392910 |
| 572 | 85392990 |
| 573 | 85393110 |
| 574 | 853949 |
| 575 | 853950 |
| 576 | 853990 |
| 577 | 900410 |
| 578 | 910121 |
| 579 | 910211 |
| 580 | 910219 |
| 581 | 910221 |
| 582 | 910229 |
| 583 | 910521 |
| 584 | 920290 |
| 585 | 920710 |
| 586 | 920890 |
| 587 | 94012090 |
| 588 | 94013090 |
| 589 | 94017190 |

| | |
|---|---|
| 597 | 94052020 |
| 598 | 94052090 |
| 599 | 940530 |
| 600 | 94054010 |
| 601 | 94054020 |
| 602 | 94054030 |
| 603 | 94054040 |
| 604 | 94054090 |
| 605 | 94055010 |
| 606 | 94055020 |
| 607 | 94055090 |
| 608 | 940560 |
| 609 | 940591 |
| 610 | 940592 |
| 611 | 94059910 |
| 612 | 94059990 |
| 613 | 95030010 |
| 614 | 95030030 |
| 615 | 95030050 |
| 616 | 95030070 |
| 617 | 95030090 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 534 | 851718 | 562 | 85291010 | 590 | 94019090 | 618 | 950420 |
| 535 | 85258090 | 563 | 85291090 | 591 | 94032090 | 619 | 950440 |
| 536 | 852712 | 564 | 852990 | 592 | 94039090 | 620 | 950450 |
| 537 | 852713 | 565 | 85392110 | 593 | 94051010 | 621 | 95049090 |
| 538 | 852719 | 566 | 85392190 | 594 | 94051020 | 622 | 950510 |
| 539 | 852721 | 567 | 85392210 | 595 | 94051090 | 623 | 961590 |
| 540 | 852729 | 568 | 85392220 | 596 | 94052010 | | |

2021 ஒத்தோபர் 01

**சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்**

**நாணயக் கடிதங்களுக்கெதிராக காசு எல்லை வைப்புத் தேவைப்பாடுகளைப் பேணுவதன் மீது 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் 103ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைய இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட கட்டளை**

2021 செத்தெம்பர் 08ஆம் திகதியிடப்பட்ட நாணயக் கடிதங்களுக்கெதிராக காசு எல்லை வைப்புத் தேவைப்பாடுகளைப் பேணுவதன் மீது 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் 103ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைய இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட கட்டளை இன்றிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் (2021 ஒத்தோபர் 01) மீளப் பெறப்பட்டுள்ளது என அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

முனைவர் ஆர் ஏ அனில் பெரேரா
**பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

**உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான தற்காலிக சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்**

2017ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணி கணக்குகளைத் திறத்தல் மற்றும் பேணுதல்) ஒழுங்குவிதிகளின் நியதிகளிலும் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 6ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் நியதிகளிலும் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, வெளிநாட்டு நாணயக் கடன்களின் மீள்கொடுப்பனவுகளுடன் தொடர்பான வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வுகளிலிருந்து பாதுகாப்பைப் பெற்றுக் கொள்வதற்காக, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் தற்காலிக சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறந்து மற்றும் பேணி வருவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

**1.1 தகைமையுடைய ஆட்கள்**

(அ) 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் (திருத்தப்படக்கூடியவாறான).

**1.2 கணக்குகளைத் திறத்தல் மற்றும் பேணி வருதல்**

(அ) உள்நாட்டு வங்கித்தெழில் பிரிவில் கடனின் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் சேமிப்புக்கள் அல்லது கால வைப்புக் கணக்குகள் வடிவில் தற்காலிக சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறந்து மற்றும் பேணி வரலாம்.

**1.3 அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) வெளிநாட்டுக் கடன் வழங்குநரின் உள்முக முதலீட்டுக் கணக்குகளினூடாக வழிப்படுத்தப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களுடன் தொடர்பான பெறுகைகள்.

(ஆ) எப்பொழுது கேட்டுக் கொள்ளப்படுகின்றதோ அதற்கு ஏற்றவாறு கடன்கள் தொடர்பிலான வட்டி மற்றும் ஏனைய விதிப்புக்களின் மீள்கொடுப்பனவு நோக்கங்களுக்காக வெளிநாட்டு நாணயத்தில் மாற்றப்பட்ட இலங்கை ரூபா.

(இ) தொடர்பான கடன் முழுமையாக மீளச்செலுத்தப்படும் வரை பரஸ்பரபரிமாற்றல் உடன்படிக்கைகள் முதிர்ச்சியடைவதனைத் தொடர்ந்து அல்லது வேறு ஏதேனும் பெறுதிச் சாதனங்கள் தொடர்பில் மற்றொரு அதிகாரமளிக்கப்பட்ட வணிகரினால் மாற்றல் செய்யப்படும் வெளிநாட்டு நாணயங்கள்.

(ஈ) கணக்கில் வைத்திருக்கப்படும் நிதியங்களின் மீது வெளிநாட்டு நாணயத்தில் ஈட்டப்பட்ட வட்டி.

**1.4 அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) தொடர்பான உடன்படிக்கைகளின்படி, பரஸ்பரபரிமாற்றல் அல்லது வேறு ஏதேனும் பெறுதிச் சாதனங்களை மேற்கொள்வதற்காக மற்றொரு அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்குச் செய்யப்படும் வெளிநாட்டு நாணயங்களின் மாற்றல்.

(ஆ) தொடர்பான உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட மீள்கொடுப்பனவு நியதிகளுக்கிணங்க, வெளிநாட்டு நாணயக் கடன்களின் மீள்கொடுப்பனவிற்காக (மூலதனம், வட்டி, கட்டணங்கள் மற்றும் தொடர்பான விதிப்புக்கள் உட்பட) வெளிநாட்டுக் கடன் வழங்குநரின் உள்முக முதலீட்டுக் கணக்குகளுக்கான நிதிய மாற்றல்கள்.

(இ) இலங்கை ரூபாவில் இலங்கையில் பகிர்ந்தளிக்கப்படுகின்றவை.

**2. ஏனைய நிபந்தனைகள்**

(அ) எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தற்காலிக சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்து மேலதிக எடுப்பனவுகளை மேற்கொள்ளக்கூடாது.

(ஆ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் பெறப்பட்ட ஒவ்வொரு கடன் தொடர்பிலும் ஒரு தற்காலிக சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கினை மாத்திரமே அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பேணுதல் வேண்டும். இது தொடர்பில் தற்காலிக சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றினைத் திறக்கின்ற நேரத்தில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியிடமிருந்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகரினால் சத்தியக் கடதாசியொன்று பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(இ) தற்காலிக சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளினூடாகச் செய்யப்படும் கொடுக்கல்வாங்கல்களின் நம்பத்தன்மையினை நிறுவிக் கொள்வதற்கும், இப்பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்குமாக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் போதுமான ஆவணச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(ஈ) கணக்கினைப் பேணி வருகின்ற காலப்பகுதியில் பதிவேடுகளைப் பேணி வருகின்ற ஏதேனும் நியதிச் சட்ட ரீதியான தேவைப்பாடுகளுக்கு அப்பால் தற்காலிக சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளினூடாகச் செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலான ஆவணச் சான்றுகளை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் (ஒன்றில் வன்பிரதியாக அல்லது இலத்திரனியல்/ டிஜிட்டல் வடிவில்) பேணி வருதல் வேண்டும்.

**3. தற்காலிக சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளை மூடிவிடுதல்**

(அ) கடன்பட்டாளர் தொடர்பான கடனை முழுமையாகத் தீர்ப்பனவு/ மீளச்செலுத்தியிருக்குமிடத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் தற்காலிக சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கினை மூடிவிடுதல் வேண்டும்.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அத்தகைய மூடல் பற்றி, மூடப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் பணிப்பாளர்/ வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கு னகநஅளூஉடிளடடமம என்ற மின்னஞ்சலூடாக அறிவித்தல் வேண்டும்.

4. இப்பணிப்புரைகளின் அதிகாரவரம்பிற்குள் உள்ளடக்கப்படாத வேறு ஏதேனும் நோக்கத்திற்காக தற்காலிக சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு அல்லது கணக்கிலிருந்து ஏதேனும் கொடுக்கல்வாங்கலை/ மாற்றலைச் செய்ய வேண்டுமாயின் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பணிப்பாளர்/ வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திடமிருந்து முன்அனுமதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**5. அறிக்கையிடும் தேவைப்பாடுகள்**

தற்காலிக சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்குச் செய்யப்பட்ட வரவுகள் மற்றும் பற்றுக்களை உறுதிப்படுத்துகின்ற கூற்றுக்களை தொடர்பான அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் இணங்குவிப்பு அலுவலரூடாக காலாண்டு அடிப்படையில் அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ னகநஅளூஉடிளடட.டமம இற்கு மின்னஞ்சல் மூலம் பணிப்பாளர்/ வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**6. இப்பணிப்புரைகளின் நோக்கத்திற்காக**

(அ) “வெளிநாட்டு நாணயக் கடன்கள்” என்பது (திருத்தப்பட்டவாறான) 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் நியதிகளில் அனுமதிக்கப்பட்டவாறு இலங்கைக்கு வெளியே வதிபவரிடமிருந்து (அதாவது வெளிநாட்டுக் கடன்வழங்குபவர்) பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்கள் எனப் பொருள்படும்.

7. இப்பணிப்புரைகளினால் அனுமதிக்கப்பட்ட எதுவும், இப்பணிப்புரைகளின் கீழ், வெளிநாட்டுச் செலாவணி வணிகத்தில் ஈடுபடுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களை அல்லது வேறு எவரேனுமாளினை வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன்

இணங்கியொழுகுவதற்கான தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கின்றது, விடுவிக்கின்றது அல்லது தடுக்கின்றது எனப் பொருள்கோடலாகாது.

**பணிப்பாளர்/ வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**
**2021 சனவரி 15**

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

**2213/34ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03ஆந் திகதி புதன்கிழமை**

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

பகுதி I : தொகுதி (I) - பொது

**அரசாங்க அறிவித்தல்கள்**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.**

மஹிந்த ராஜபக்ஷ,
**நிதி அமைச்சர்.**

கொழும்பு,
2021, பெப்புருவரி 03.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்கு விதிகள் 2021ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கையில் வதிகின்ற ஆளொருவரினால் இலங்கைக்கு வெளியே பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புகள்) பற்றிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2021, மாச்சு 22 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தொழிற்படுத்தப்படல் வேண்டும்.

2. இலங்கையில் வதிபவரும் இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவருமான ஆளொருவரினால் இலங்கைக்கு வெளியே பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள், இவ்வொழுங்குவிதிகளிலும் இதற்கான அட்டவணையிலும் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய வரையறைகள், நியதிகள், நிபந்தனைகள் என்பவற்றுக்கமைய, சட்டத்தின் 4ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட அளவுக்கு ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியினால் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியினால் நிறைவேற்றப்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் அதிகாரமளிக்கப்பட்ட வகுப்புகளாதல் வேண்டும்.

3. இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதனக் கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதில், ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியும் சட்டத்தின் 9ஆம் பிரிவின்கீழ் காலத்துக்குக்காலம் மத்திய வங்கியினால் அதற்கென வழங்கப்பட்ட பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

4. (1) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியும் அதற்கென ஆவணமுறையான சான்றைப் பெற்றுக்கொள்வதன் மூலம் பின்வருவனவற்றை நிச்சயித்தல் வேண்டும்:-

(அ) கொடுக்கல்வாங்கலை நிறைவேற்றுகின்ற ஆளின் நல்லெண்ணம்; அத்துடன்

(ஆ) அத்தகைய கொடுக்கல்வாங்கல் இவ்வொழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகவுள்ளதென்று.

(2) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட்டுள்ள ஒவ்வோராளும், (1)ஆம் பந்தியின் நோக்கத்துக்காக அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிக்கு அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிக்கு அவசியமான எல்லா ஆவணமுறையான சான்றையும் வழங்குதல் வேண்டும்.

(3) ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியும் இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வெளிநாட்டுச் செலாவணியிலான அத்தகைய மூலதனக் கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதில் உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் பிரயோகித்தல் வேண்டும்.

5. மத்திய வங்கியானது, இவ்வொழுங்குவிதிகளுக்கிணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி, மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி அல்லது ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியாகவிராத

வேறெவரேனுமாள் தொடர்பில் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அது அவசியமெனக் கருதுகின்றவாறான அத்தகைய நடவடிக்கையை எடுக்கலாம்.

6. (1) இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காகப் "பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம்" என்பது, பின்வருவன என்று பொருளாகும்:-

(அ) ஐக்கிய அமெரிக்க டொலர் (ஐஅடொ);
(ஆ) யூரோ;
(இ) ஸ்டேர்லிங் பவுண்;
(ஈ) அவுஸ்திரேலிய டொலர்;
(உ) சிங்கப்பூர் டொலர்;
(ஊ) சுவீடன் குரோனர்;
(எ) சுவிஸ் பிரான்க்;
(ஏ) கனேடிய டொலர்;
(ஐ) ஹொங்கொங் டொலர்;
(ஒ) யப்பானிய யென்;
(ஓ) டென்மார்க் குரோனர்;
(ஔ) நோர்வே குரோனர்;
(க) சீன ரென்மின்பி; அத்துடன்
(ங) நியூசீலாந்து டொலர்.

(2) மத்திய வங்கியானது, காலத்துக்குக்காலம், சட்டத்தின் 9ஆம் பிரிவின்கீழ் அதற்கென வழங்கப்பட்ட பணிப்புகளின்மூலம், (1) ஆம் பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களைத் திருத்தலாம், மாற்றலாம் அல்லது அவற்றுக்கு எதனையும் சேர்க்கலாம்.

7. 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டவையும் 2017, நவம்பர் 17ஆந் திகதிய 2045/56ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையுமான 2017ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளினால் கொண்டுநடாத்தப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புகள்) பற்றிய ஒழுங்குவிதிகள், அவற்றின்கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இத்தால் ஒழிக்கப்படுகின்றன:

ஆயின், எவ்வாறாயினும், மேற்கூறப்பட்ட ஒழுங்குவிதிகள் ஒழிக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும், அதன் செல்லுபடிக் காலப்பகுதி 2020, திசெம்பர் 18ஆந் திகதிய 2206/25ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் நீடிக்கப்பட்டதும், மற்றும் 2020, யூலை 2ஆந் திகதிய 2182/37ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதுமான கட்டளையானது, அவ்வாறு நீடிக்கப்பட்ட காலப்பகுதியின்போது பயனுறுதல் வேண்டும்.

8. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக-

"சட்டம்" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் என்று பொருளாகும்;

"அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"மூலதனக் கொடுக்கல்வாங்கல்" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"மத்திய வங்கி" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"கொழும்புப் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை" என்பது, 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டு பதிவுசெய்யப்பட்டதும் அத்துடன் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை ஒன்றாகத் தொழிற்படுவதற்கு 1987ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்டதுமான கொழும்புப் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை எனப் பொருள்படும்;

"உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள்" என்பது, 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"தகவுடைய வதிவுள்ள முதலீட்டாளர்" என்பது, இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணையின் பாகம் ஐ இன் 3 ஆம் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்டவை தவிர, இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணையின் பாகம் ஐ இன் 2 ஆம் பந்தியின் 1ஆம் பட்டியலின் 1ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டவாறு தகவுடைய வதிவுள்ள முதலீட்டாளர் எனப் பொருள்படும்;

“குடியகல்பவர்” என்பது, 2021, பெப்புருவரி 3ஆந் திகதிய 2213/36ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (குடியகல்வோரினால் நிதிகளின் அனுப்புதொகை) ஒழுங்குவிதிகளிலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

“ஊழியர் பங்குச் சொத்தாண்மைத் திட்டம் அல்லது ஊழியர் பங்கு விருப்புத்தெரிவுச் செய்திட்டம்” என்பது, இலங்கையில் அதனது கிளையினை அல்லது துணைநிலைக் கம்பெனியினைச் சேர்ந்த ஊழியர்களுக்கு இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பெனி ஒன்று எந்தத் திட்டம் அல்லது செய்திட்டத்தின்கீழ் அதனது பங்குகளை அல்லது கம்பெனிகள் தொகுதியின் பங்குகளைக் கொள்ளுதல்செய்வதற்குச் சந்தர்ப்பம் ஒன்றை வழங்குகின்றதோ அந்தத் திட்டம் அல்லது செய்திட்டம் எனப் பொருள்படும்;

“கிட்டிய குடும்பவுறுப்பினர்கள்” என்பது, பெற்றோர், பாட்டன்மார் பாட்டிமார், வாழ்க்கைத்துணை மற்றும் பிள்ளைகள் என்று பொருளாகும்;

“இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு” என்பது, 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு என்று பொருளாகும்;

“உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி” என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

“உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கி” என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

“பணச்சபை” என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும;

“கடல்கடந்த கம்பனி” என்பது, 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்திலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும;

“நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்” என்பது, (423ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் என்று பொருளாகும்;

“மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி” என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்திலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

“இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு” என்பது, 1987ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு என்று பொருளாகும்;

“வலிந்துதவும் சமூகசேவைகள் ஒழுங்கமைப்புகள்” என்பது, 1980ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க, வலிந்துதவும் சமூகசேவைகள் ஒழுங்கமைப்புகள் (பதிவுசெய்தலும் மேற்பார்வைசெய்தலும்) சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்.

**(ஒழுங்குவிதி 2)**

**அட்டவணை**

**பாகம் I**

**இலங்கையில் வதிவுள்ள ஆளொருவரினால் இலங்கைக்கு வெளியே பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள்**

1. எவரேனும் தகவுடைய வதிவுள்ள முதலீட்டாளர் பின்வருவனவற்றைச் செய்வதற்கு அனுமதிக்கப்படுகின்றார்:-

(அ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பெனிகளினால் வழங்கப்பட்ட சாதாரணப் பங்குகள் அல்லது முந்துரிமைப் பங்குகள் அல்லது கடன்தொகுதிப்பத்திரங்கள் அல்லது கூட்டிணைப்பு முறிகள், ஒழுங்குபடுத்தப்பட்ட கூறு நம்பிக்கைப் பொறுப்புகளில் உள்ள கூறுகள் அல்லது பரஸ்பர நிதியங்கள் அத்துடன் முதலீடு செய்யப்பட்ட நேரத்தில் இலங்கையின் இறைமையுள்ள கடன் மதிப்பீட்டில் அல்லது அதற்குமேல் மதிப்பிடப்பட்ட, வெளிநாட்டு அரசாங்கங்களினால் வழங்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் என்பவற்றைக் கொள்ளுதல், வைத்திருத்தல் அல்லது கையுதிர்த்தல்,

(ஆ) (தனியாளினால் தவிர) வெளிநாடொன்றில் ஒரு கிளை, இணைப்பு, சந்தைப்படுத்தல், முகவராண்மை, கருத்திட்ட, பிரதிநிதித்துவ அல்லது வேறு ஒத்த அலுவலகத்தை (கடல் கடந்த அலுவலகம்) தாபித்தல் மற்றும் பேணுதல்.

2. (1) மேலே பந்தி 1 இல் குறித்துரைக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலான வெளித்திரும்பல் அனுப்புகைகள், கீழேயுள்ள அட்டவணை 1 இல் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கும் அத்துடன் இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கும் அமைய, ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியுடன் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியுடன் தகவுடைய வதிவுள்ள முதலீட்டாளரினால் திறக்கப்பட்டு பேணப்பட்ட வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினூடாகச் செய்யப்படுதல் வேண்டும்:

**பட்டியல் 1 - வெளித்திரும்பல் முதலீடுகளுக்கான வரையறைகள்**

| | *நிரல் I*<br>*தகவுடைய வதிவுள்ள முதலீட்டாளர்* | *நிரல் II*<br>*அனுமதிக்கப்பட்ட வரையறைகள்* | *நிரல் III*<br>*முதலீட்டின் வகை* |
|---|---|---|---|
| (i) | கொழும்புப் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையில் நிரற்படுத்தப்பட்ட கம்பெனிகள் | ஒரு பஞ்சாங்க ஆண்டிற்கு 2,000,000 ஐக்கிய அமெரிக்க டொலர் (ஐஅடொ) அல்லது பெயர்குறிக்கப்பட்ட வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை. | சாதாரணப் பங்குகள், கூறுகள், முந்துரிமைப் பங்குகள், கூட்டிணைப்பு முறிகள், கடன்தொகுதிப்பத்திரங்கள் மற்றும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் |
| (ii) | கொழும்புப் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையில் நிரற்படுத்தப் படாத கம்பெனி ஒன்று | ஒரு பஞ்சாங்க ஆண்டிற்கு 500,000 ஐஅடொ அல்லது பெயர்குறிக்கப்பட்ட வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை. | |
| (iii) | மத்திய வங்கி அல்லது இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு அல்லது இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின்கீழ் (மேலே (i) மற்றும் (ii) இன்கீழ் தகவுடைய முதலீட்டாளர்களைத் தவிர்த்து) ஒழுங்குபடுத்தப்பட்ட அல்லது உரிமமளிக்கப்பட்ட உருவகங்கள் | ஒரு பஞ்சாங்க ஆண்டிற்கு 500,000 ஐஅடொ அல்லது பெயர்குறிக்கப்பட்ட வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை. | |
| (iv) | 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஊழியர் சகாய நிதியம் அல்லது தொழில் ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக் கப்பட்ட வேறேதேனும் சகாய நிதியம் | ஒரு பஞ்சாங்க ஆண்டிற்கு 500,000 ஐஅடொ அல்லது பெயர்குறிக்கப்பட்ட வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை. | |
| (v) | இலங்கையில் பதிவு செய்யப்பட்ட பங்காண்மை ஒன்று | ஆயுட் காலத்துக்காக 300,000 ஐஅடொ அல்லது பெயர்குறிக்கப்பட்ட வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை. | |
| (vi) | தனியாள் ஒருவர் அல்லது அத்தகைய தனியாளின் தனியுரிமையாண்மை (கூட்டுமொத்தத்தில்) | ஆயுட் காலத்துக்காக 200,000 ஐஅடொ அல்லது பெயர்குறிக்கப்பட்ட வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை | |
| (vii) | கம்பெனி ஒன்று அல்லது பங்காண்மை ஒன்று | ஒரு பஞ்சாங்க ஆண்டிற்கு 300,000 ஐஅடொ அல்லது பெயர்குறிக்கப்பட்ட வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை. | கடல்கடந்த அலுவலகங்கள் |
| (viii) | உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி கள் மற்றும் உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகள் | ஒரு பஞ்சாங்க ஆண்டிற்கு 500,000 ஐஅடொ அல்லது பெயர்குறிக்கப்பட்ட வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை. | கிளையலுவலகங்கள் |
| **எவையேனும் வரையறைகளுக்கு அமையவிராமல் அனுமதிக்கப்பட்ட முதலீடுகள்** | | | |
| (ix) | தனியாள் ஒருவர் | ஊழியர் பங்குச் சொத்தாண்மைத் திட்டத்தின் அல்லது ஊழியர் பங்கு விருப்புத் தெரிவுச் செய்திட்டத்தின் திட்டவிளக்க அறிவிப்பிலுள்ள தொகைவரை | ஊழியர் பங்குச் சொத்தாண்மைத் திட்டத்தின் அல்லது ஊழியர் பங்குவிருப்புத் தெரிவுச் செயற்திட்டத்தின் பங்குகளில் முதலீடுசெய்தல் |

| | | | |
|---|---|---|---|
| (x) | உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளும் உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகளும் (முதலீடானது கடல் கடந்த நாடுகளில் வங்கித்தொழில் தொழிற்பாட்டில் இருந்தால் மட்டும்) | முதலீடுபெறும் நாட்டில் ஒழுங்குபடுத்துநரினால் விதிக்கப்பட்ட வரையறைவரை | ஒரு துணைநிலைக் கம்பெனியின் பங்குகளில் முதலீடு செய்தல் அல்லது ஒரு கிளையலுவலகத்தில் முதலீடு செய்தல் |

(2) மேலே பட்டியல் 1 இல் குறித்துரைக்கப்பட்ட முதலீடுகளுக்கான கூட்டுமொத்த வரையறைகள், இவ்வொழுங்குவிதிகளின்கீழ் செய்யப்பட்ட கூட்டுமொத்த முதலீடுகளையும், நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் நியதிகளின்படியும் 2017ஆம் ஆண்டு நவெம்பர் 17ஆந் தேதிய 2045/56ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணி (அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளினால் கொண்டுநடாத்தப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புகள்) பற்றிய ஒழுங்குவிதிகளின் மூலமும் வழங்கப்பட்டதும் 1686∴50ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையின்கீழும் 2011ஆம் ஆண்டு சனவரி 1ஆந் தேதிய 1686∴52 மற்றும் 1686∴53ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களின்கீழும் அளிக்கப்பட்ட பொது அனுமதியின் நியதிகளின்படி முன்னர் செய்யப்பட்ட ஏதேனும் வெளித்திரும்பல் கொடுப்பனவையும் கொண்டிருத்தல் வேண்டும்.

3. வலிந்துதவும் சமூகசேவைகள் ஒழுங்கமைப்புகள், உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்று மற்றும் நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் ஏதேனும் துடர்ச்சி, வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கை அல்லது சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி இலங்கையில் வதிகின்ற எவ்வாளுக்கெதிராகக் குற்றவழக்கு, புலனாய்வுகள் அல்லது ஏதேனும் அறவிடுதல் வழக்கு முடிவுறாதுள்ளனவோ அத்தகைய ஆள் ஒருவர் அட்டவணையின் இப்பாகத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட நோக்கங்களுக்காக மூலதனக் கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதற்குத் தகவுடையனவாதலாகாது அல்லது தகவுடையவராதலாகாது.

4. அட்டவணையின் இப்பாகத்தின் 1ஆம் பந்தியின்கீழ் முதலீடுசெய்த எவரேனும் தகவுடைய வதிவுள்ள முதலீட்டாளர், அட்டவணையின் இப்பாகத்தின் 2 ஆம் பந்தியின் பட்டியல் 1 இல் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளைப் பொருட்படுத்தாது, வழங்குநரினாலான கூட்டிணைப்பு நடவடிக்கையின் பயனைக்கொண்டு அல்லது இவ்வொழுங்குவிதிகளின் கீழ் கொள்ளப்பட்ட முந்துரிமைப் பங்குகளை அல்லது கடன்தொகுதிப்பத்திரங்களை அல்லது கூட்டிணைப்பு முறிகளை மாற்றுதல் என்ற வகையாக, இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பெனிகளின் ஒன்றிணைவுகள் அல்லது ஒன்றுசேர்க்கைகளின் நியதிகளின்படி பெறப்பட்ட பங்குகள் என்ற வகையாக, அத்தகைய முதலீட்டாளரை வந்தடைகின்ற பங்குகளைக் கொள்ளுதல்செய்து வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றார்.

5. எவ்விதப் பிரதிபயனுக்காகவுமன்றி கடல்கடந்த நாடுகளில் சொத்துக்களின் அல்லது முதலீடுகளின் கொள்கைகள்

(1) இலங்கையில் வதிவுள்ள எவரேனுமாள், வெளிநாட்டுச் செலாவணியில் அல்லது இலங்கை ரூபாக்களில் அல்லது சொத்துக்கள் என்ற வடிவத்தில் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டவொரு கம்பெனியிடமிருந்து அல்லது இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற எவரேனுமாளிடமிருந்து வருமதியாகவுள்ள ஏதேனும் பெறப்படற்பாலதன் பரிமாற்றாகப் பிரதிபயனெதுவும் செலுத்தப்படவேண்டியிராதவிடத்து கடல்கடந்த நாடுகளில் ஏதேனும் சொத்தை அல்லது முதலீட்டைக் கொள்ளுதல்செய்து வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றார்.

(2) வழங்குநரினாலான கூட்டிணைப்பு நடவடிக்கையின் பயனைக்கொண்டு அல்லது இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பெனிகளின் ஒன்றிணைவுகளின் அல்லது ஒன்றுசேர்க்கைகளின் நியதிகளின்படி ஊக்குவிப்பாளர் பங்குகளாக அல்லது தங்கப் பங்குகளாக மற்றும் அத்தகைய முதலீட்டாளர்களைச் சென்றடைகின்ற அடுத்துப்பின்னரான பங்குகளாக இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிவுள்ள ஆளொருவரினால் தனிப்பட்ட முதலீட்டாளரொருவருக்கு மரபுரிமைப்பெறுகையாக அல்லது கொடைகள் என்றவகையாக, ஊழியர் பங்குச் சொத்தாண்மைத் திட்டத்தின்கீழ் அல்லது ஊழியர் பங்குவிருப்புத்தெரிவுச் செய்திட்டத்தின்கீழ் எவ்விதப் பிரதிபயனுக்காகவும் அன்றிப் பெறப்பட்ட பங்குகளை மேலேயுள்ளவை உள்ளடக்கலாம்.

(3) அத்தகைய கொள்கைகள், அட்டவணையின் இப்பாகத்தின் 2ஆம் பந்தியின் பட்டியல் ஐஇல் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கு அமைந்தனவாகவிருத்தலாகாது.

**6. ஊழியர் பங்குச் சொத்தாண்மைத் திட்டத்திலான அல்லது ஊழியர் பங்கு விருப்புத்தெரிவுச் செய்திட்டத்திலான முதலீடுகள்**

(1) அதன் ஊழியர்களின் சார்பில் இலங்கையில் தாபிக்கப்பட்ட துணைநிலைக் கம்பெனியிடமிருந்து அல்லது கிளையிலிருந்து ஒருதடவையிலான அனுப்புதொகை ஒன்றின் அடிப்படைமீது அத்தகைய கடல்கடந்த கம்பெனிக்குப் பிரதிபயன் என்றவகையாக வெளித்திரும்பல் அனுப்புதொகை ஒன்றைச் செய்வதற்கு ஏதேனும் தேவைப்பாடு இருப்பின், அத்தகைய நிதிக் கைமாற்றல்கள், கொடுக்கல்வாங்கலின் நல்லெண்ணம் பற்றித் திருப்திப்படுவதன்மேல் ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியினூடாக அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியினூடாக இலங்கையில் தாபிக்கப்பட்ட அத்தகைய துணைநிலைக் கம்பெனியின் அல்லது கிளையின் கணக்கொன்றிலிருந்து பயனுறுத்தப்படலாம்.

(2) அதன் ஊழியர்கள் சார்பில் அத்தகைய ஒரு தடவையிலான அனுப்புதொகையை அல்லது அனுப்புதொகைகளைச் செய்வதற்கு உட்கருதுகின்றதும் இலங்கையில் தாபிக்கப்பட்டதுமான துணைநிலைக் கம்பெனி அல்லது கிளை, இவ்வொழுங்குவிதிகளின் கீழ் நிதிகளை அனுப்பு முன்னர் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத் தலைவரிடமிருந்து ஒவ்வோர் ஊழியர் சார்பிலும் அனுமதிப்புக் கடிதமொன்றைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய அனுப்புதொகையைப் பயனுறுத்துகின்ற திகதியிலிருந்து ஒருவாரத்தினுள் அத்தகைய அனுப்புதொகை பற்றிய விபரங்களை வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்துக்கு வழங்குதலும் வேண்டும்.

7. முதலீடுகளின் வருமானத்தை அல்லது கையுதிர்ப்பு அல்லது ஒழித்துக்கட்டுகையின் வரும்படிகளை இலங்கையினுள் திருப்பியனுப்புதல்

(1) அட்டவணையின் இப்பாகத்தின் 1, 2 மற்றும் 4 ஆகிய பந்திகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட அத்தகைய முதலீடுகளின் ஏதேனும் வருமானம் மற்றும் எவையேனும் மூலதன வரும்படிகள், அத்தகைய பெறுகைத் திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள், ஆரம்ப முதலீடு எந்த வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கினூடாகச் செய்யப்பட்டதோ அதே வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கினூடாக இலங்கையினுள் கொண்டுவரப்படுதல் வேண்டும்.

(2) ஊழியர் பங்கு விருப்புத்தெரிவுச் செய்திட்டத்தின் அல்லது ஊழியர் பங்குச் சொத்தாண்மைத் திட்டத்தின் நியதிகளின்படி, பங்கிலாபங்களைத் திருப்பியனுப்புவதற்கான தேவைப்பாடு, அதன்மூலம் அத்தகைய ஊழியர் பங்கு விருப்புத்தெரிவுச் செய்திட்டத்தின் கீழ் அல்லது ஊழியர் பங்குச் சொத்தாண்மைத் திட்டத்தின்கீழ் பங்கிலாபங்கள் பங்குகளில் மீள்முதலீடு செய்யப்படுகின்ற ஏதேனும் பணிப்பாணைமுறையிலான அல்லது விருப்புத்தெரிவு முறையிலான தேவைப்பாட்டுக்கு அமையவிருக்கலாம். அட்டவணையின் இப்பாகத்தின் 6ஆம் பந்தியின் (1)ஆம் உட்பந்தியின்கீழ் அனுமதிக்கப்பட்டவாறு ஊழியர் பங்கு விருப்புத்தெரிவுச் செய்திட்டத்தின்கீழ் அல்லது ஊழியர் பங்குச் சொத்தாண்மைத் திட்டத்தின்கீழ் முதலீட்டுக்காக அதன் ஊழியர்களின் சார்பில் ஒரு தடவையிலான அனுப்புதொகையாக/ அனுப்புதொகைகளாக உள்ள நிதிகளை அனுப்பியுள்ள இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பெனியின்/ கிளையின் விடயத்தில், அத்தகைய தனிப்பட்ட ஊழியர்கள், ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியுடன் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியுடன் அத்தகைய தனிப்பட்ட முதலீட்டாளர்களினால் திறக்கப்பட்ட வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கினூடாக அத்தகைய முதலீடுகளின் ஏதேனும் வருமானத்தையும் கையுதிர்ப்பின் வரும்படிகளையும் இலங்கையினுள் கொண்டுவருதல் வேண்டும்.

(3) ஏற்புடையவாறாக அட்டவணையின் இப்பாகத்தின் 5ஆம் பந்தியின்கீழ் அனுமதிக்கப்பட்டவாறு கொள்ளுதல் செய்யப்பட்ட கடல்கடந்த நாடுகளிலான ஏதேனும் சொத்தின் அல்லது முதலீட்டின் ஏதேனும் வருமானத்தையும் கையுதிர்ப்பின் எவையேனும் வரும்படிகளையும் பெறுகின்ற விடயத்தில், அவை அத்தகைய பெறுகைகளின் திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள், அட்டவணையின் இப்பாகத்தின் 8ஆம் பந்தியின் (1)ஆம் உட்பந்திக்கும் அட்டவணையின் இப்பாகத்திற் குறித்துரைக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளுக்கும் அமைய, ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியுடன் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியுடன் திறக்கப்பட்ட அத்தகைய வதிவுள்ள முதலீட்டாளரின் வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கினூடாக அல்லது தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கினூடாக அல்லது ஏற்கனவேயுள்ள வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கினூடாக இலங்கையினுள் கொண்டுவரப்படுதல் வேண்டும்.

8. வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினூடாகச் செய்யப்பட்ட முதலீடுகளை மரபுரிமையாகப் பெறுதல்:

(1) அட்டவணையின் இப்பாகத்தின் 5ஆம் பந்தியின்கீழ் அனுமதிக்கப்பட்டவாறு, இலங்கையில் வதிகின்ற தனிப்பட்ட ஆளொருவரினால் வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினூடாகச் செய்யப்பட்ட முதலீடு, ஒரு மரபுரிமையாளராக அல்லது பயனுகரியாகவுள்ள ஆளொருவரினால் இலங்கையில் வதிகின்ற ஆளொருவருக்கு மரபுரிமையாகப் பெறப்பட்டுள்ள அல்லது அவருக்குக் கொடையளிக்கப்பட்டுள்ள விடயத்தில், அத்தகைய முதலீடுகளின் ஏதேனும் வருமானம் அல்லது மூலதன வரும்படிகள், அத்தகைய மரபுரிமையாளரினால் அல்லது பயனுகரியினால் திறக்கப்பட்ட வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினூடாக இலங்கையினுள் கொண்டுவரப்படுதல் வேண்டும்.

(2) ஒரு வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கினூடாக இலங்கையில் வதிகின்ற தனியாளொருவரினாற் செய்யப்பட்ட முதலீடொன்று, ஏற்புடையனவான மரபுரிமை மற்றும் அடுத்துறுகைச் சட்டங்களுக்கமைய, இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவருக்குக் கைமாற்றப்படலாம்.

9. குடியகல்பவராக வருகின்ற வதிவுள்ள தனிப்பட்ட முதலீட்டாளரொருவரின் விடயத்தில், சொல்லப்பட்ட தனியாள் இலங்கையில் வதிபவராகவிருக்கையில் ஒரு வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கினூடாக நிரந்தர வதிவுரிமையைப் பெற்றுள்ள நாட்டில் அத்தகைய குடியகல்பவரினால் செய்யப்பட்ட ஏதேனும் முதலீட்டின் மொத்தப் பெறுமதி, அத்தகைய தனியாளின் தகவுடைய புலம்பெயர் படியிலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.

10. வதிவுள்ள முதலீட்டாளர்களுக்கான ஊக்குவிப்புகள்:

அட்டவணையின் இப்பாகத்தின் 2ஆம் பந்தியின் பட்டியல் ஐஇல் குறித்துரைக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட வரையறைகளுக்கு அமைந்தவராகவிராது, வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்குக்கு வரவு வைக்கப்பட்ட முன்னைய வெளித்திரும்பல் முதலீடுகளின் மூலதன ஈட்டுகைகளின் பெறுமதியினது ஐம்பது சதவீதம் வரையில் நிதிகளைப் பயன்படுத்துவதன்மூலம் அட்டவணையின்

இப்பாகத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட நோக்கங்களுக்காக முதலீடுகளைச் செய்வதற்குத் தகவுடைய வதிவுள்ள முதலீட்டாளரொருவர் அனுமதிக்கப்படலாம்.

11. கூட்டிணைப்பு உத்தரவாதமும் பங்குகளை அடைமானம் வைத்தலும்:

(1) சொல்லப்பட்ட முதலீடு பெறுநரிலான முதலீடு, நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகச் செய்யப்பட்டிருப்பின் மற்றும் கம்பெனியின் நிதிசார் வலிமையானது கூட்டிணைப்பு உத்தரவாதத்தின் பொறுப்பை ஏற்பதற்குப் போதியதாகவிருப்பின், சொல்லப்பட்ட முதலீட்டாளர் பங்குதாரராகவிருக்கின்ற இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றின் சார்பில் (அதாவது முதலீடு பெறுநர்), நிதி நிறுவனமொன்றிலிருந்து வசதிகளைத் திரட்டுவதனை அல்லது முதலீடுபெறுநரினால் பொறுப்பேற்கப்பட்ட ஒப்பந்தமொன்றை வசதிப்படுத்துவதனை முதலீடு பெறுநருக்கு இயலச்செய்வதற்கு இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டவொரு கம்பெனி (முதலீட்டாளர்) கூட்டிணைப்பு உத்தரவாதமொன்றை வழங்குவதற்குத் தேவைப்படுத்தப்படும் பட்சத்தில், 1,000,000 ஐஅடொலர் என்ற அதிகபட்ச எல்லைக்கமைவாகக் கூட்டிணைப்பு உத்தரவாதமொன்று வழங்கப்படலாம். கூட்டிணைப்பு உத்தரவாதத்திலிருந்து எழுகின்ற ஏதேனும் எதிர்பாராத பொறுப்பை எதிர்கொள்வதற்கு கம்பெனிக்கு நிதிசார் வலிமை உள்ளதனைக் கம்பெனியின் பணிப்பாளர் சபை உறுதிப்படுத்துதல் வேண்டும். உத்தரவாதப் பெறுமதி, மேற்படி அனுமதியின்கீழ் வழங்கப்பட்ட (கூட்டிணைப்பு உத்தரவாதத்தினதும் இயைபான சபைத் தீர்மானங்களினதும் பிரதிகளுட்பட) அத்தகைய ஒவ்வொரு கூட்டிணைப்பு உத்தரவாதத்தினதும் விபரங்களைச் சொல்லப்பட்ட உத்தரவாதம் பயனுறும் திகதியிலிருந்து 14 நாட்களினுள் மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத் தலைவருக்குக் கொடுத்துதவுவதற்கு முதலீட்டாளர் தேவைப்படுத்தப்படுகின்ற ஏதேனும் கொடுக்கப்பட்ட நேரத்தில் சொல்லப்பட்ட முதலீடுபெறுநரில் முதலீட்டாளருக்குள்ள நூற்று வீதப் பங்கு வைத்திருக்கைக்கு விகிதாசாரமானதாகவிருத்தல் வேண்டும்.

(2) சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கமைய, மேலே (1)ஆம் உட்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட உத்தரவாதங்கள் தொடர்பில் செல்லுபடியான உரிமைக்கோரிக்கைகளிலிருந்து எழுகின்ற வெளித்திரும்பல் அனுப்புதொகைகளைச் செய்வதற்கும் ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அனுமதிக்கப்படுகின்றது அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி அனுமதிக்கப்படுகின்றார்.

(3) இவ்வொழுங்குவிதிகளில் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளில் அனுமதிக்கப்பட்டவாறு வதிவுள்ள முதலீட்டாளரினால் முதலீடுபெறுநரில் கொள்ளப்பட்ட பங்குகள், ஒரு நிதி நிறுவனத்திடமிருந்து முதலீடுபெறுநரினால் பெறப்படவேண்டிய வசதிகளுக்குப் பிணைப்பொறுப்பளிப்பதற்கு அல்லது முதலீடுபெறுநரினால் பொறுப்பேற்கப்பட்ட ஒப்பந்தத்தை வசதிப்படுத்துவதற்கு, ஒரு சோந்தையாக இடப்படலாம். சோந்தையானது முதலீடுபெறுநரில் வதிவுள்ள முதலீட்டாளரினால் வைத்திருக்கப்பட்ட பங்குவைத்திருக்கையின் அக்கறைக்கு விகிதாசாரமானதாகவிருத்தல் வேண்டும்.

(4) மேலே (1)ஆம், (3)ஆம் உட்பந்திகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட உத்தரவாதத்துக்கு அல்லது சோந்தைக்குப் பின்வரும் நிபந்தனைகளும் பயனுறுத்தப்படுகின்றன:-

(அ) ஒரு வதிவுள்ள முதலீட்டாளர், கூட்டிணைப்பு உத்தரவாதத்தை வழங்குமுன்னர் அல்லது சோந்தையைச் செய்துகொள்ளு முன்னர் (தவணை தவறுகையின் பட்சத்தில்) உரிமைக்கோரிக்கையின் பெறுமதியை அறவிடுவதற்கு முதலீடுபெறுநருடன் தோதான சட்ட உடன்படிக்கையைச் செய்தல் வேண்டும்;

(ஆ) ஒரு செல்லுபடியான உரிமைக் கோரிக்கை செய்யப்படும் பட்சத்தில், உரிமைக்கோரிக்கையின் அதிகபட்ச எல்லை, வசதியின் நிலுவையாகவுள்ள கடப்பாடுகளுக்கு விகிதாசாரமாக அல்லது அதற்குக் குறைவாக இருத்தல் வேண்டும்;

(இ) மேலே (அ) என்னும் விடயத்தில் கூறப்பட்டவாறான அத்தகைய அறவீடுகள், முதலீடு எந்த வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கினூடாகச் செய்யப்பட்டதோ அதே வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கினுட் கொண்டுவரப்படுதல் வேண்டும்.

12. ஏனைய நியதி நிபந்தனைகள்:

(1) தகவுடைய வதிவுள்ள முதலீட்டாளரொருவர், ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியினூடாக அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியினூடாக அட்டவணையின் இப்பாகத்தின் பட்டியல் ஐ இன்கீழ் குறித்துரைக்கப்பட்ட முதலீடுகளுக்காக ஒவ்வொரு வெளித்திரும்பல் அனுப்புகைக்கு முன்னரும் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தலைவரிடமிருந்து அனுமதிப்புக் கடிதமொன்றைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அடுத்துப்பின்னரான வெளிநாட்டு முதலீடுகளைச் செய்வதற்கு உட்கருதுகின்ற எவரேனும் தகவுடைய வதிவுள்ள முதலீட்டாளர், வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத் தலைவருக்கு, ஆதாரப்படுத்துகின்ற ஆவணங்களுடன் சேர்த்து, இவ்வொழுங்குவிதிகளின்கீழ் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பொது அனுமதியின் நியதிகளின்படி அத்தகைய தகவுடைய முதலீட்டாளரினால் செய்யப்பட்ட முன்னைய முதலீடுகளின் முன்னேற்றமும் நிலைமையும் பற்றி, இலங்கைப் பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் இணை உறுப்பினரொருவரிடமிருந்து அல்லது பட்டயம்பெற்ற நிதிசார் பகுப்பாய்வாளர் (சீஎவ்ஏ நிறுவகத்தின்) பட்டயம் வைத்திருப்பவரொருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும். வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தலைவர், அத்தகைய தகவுடைய முதலீட்டாளரினாற் செய்யப்பட்ட சொல்லப்பட்ட முன்னைய முதலீடுகளின் முன்னேற்றம்பற்றித் திருப்திப்படுவதன் மேலும் அட்டவணையின் இப்பாகத்தின் 3ஆம் பந்திக்கமையவும் சொல்லப்பட்ட

அனுமதிப்புக் கடிதத்தை வழங்குதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் இலங்கைக்கு வெளியேயுள்ள நிரற்படுத்தப்படாத கம்பெனியொன்றில் அனுமதிக்கப்பட்ட முதலீடொன்றைச் செய்துள்ள முதலீட்டாளர் கம்பெனியின் பணிப்பாளர்சபை, அத்தகைய முதலீட்டின் முன்னேற்றத்தை வருடாந்தம் மதிப்பீடுசெய்தல் வேண்டுமென்பதுடன் முதலீடுபெறுநரின் இலாபம் அல்லது நட்டம், முதலீடுபெறுநரினால் வெளிப்படுத்தப்பட்ட பங்கிலாபம் அல்லது முதலீடுபெறுநரினாலான பங்கிலாபங்களின் பெறுகை பற்றிய விபரங்களுட்பட அதுபற்றிய அறிக்கையொன்றை வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத் தலைவருக்கு, முறையான அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிக்கான அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிக்கான பிரதியொன்றுடன், அடுத்துவரும் ஆண்டின் மார்ச்சு 31ஆந் திகதியன்று அல்லது ஒரு குறிப்பிட்ட முதலீடு தொடர்பில் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத் தலைவரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அனுப்பிவைத்தலும் வேண்டும்.

(3) (தனியாட்கள் நீங்கலாக) தகவுடைய முதலீட்டாளர் இவ்வொழுங்குவிதிகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட முதலீட்டைச் செய்வதற்குத் தகவுடையவராகவிருப்பதற்கு, கடந்த மூன்றாண்டுகளுக்காக உறுதியான நிதிநிலைமையையும் செயல்நிறைவேற்றுகையையும் பேணியிருத்தல் வேண்டும். தகவுடைய முதலீட்டாளர், சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கமைய, கடல்கடந்த நாடுகளில் ஒழுங்குபடுத்தப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையிலான அனுமதிக்கப்பட்ட முதலீடுகள் நீங்கலாக, மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான மற்றும் உத்தேசிக்கப்பட்ட முதலீட்டின் சாத்தியத்தன்மை தொடர்பான விதப்புரையொன்றைப் பட்டயம்பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தின் இணையுறுப்பினரொருவரிடமிருந்து அல்லது பட்டயம்பெற்ற நிதிசார் பகுப்பாய்வு நிறுவகத்தின் பட்டயம் வைத்திருப்பவரொருவரிடமிருந்து ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிக்கு அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிக்கு வழங்குதல் வேண்டும்.

### பாகம் II

சட்டம் நடைமுறைக்கு வருமுன்னர் வழங்கப்பட்டிருந்த (பொதுவான அல்லது விசேடமான) ஏதேனும் அங்கீகாரத்தின்கீழ் பொறுப்பேற்கப்பட்டனவும் இவ்வொழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களைப் பொருளளவில் ஒத்திருக்கின்றனவுமான ஏற்கனவேயுள்ள எல்லா மூலதனக் கொடுக்கல்வாங்கல்களும் இவ்வொழுங்குவிதிகளினால் அல்லது எவையேனும் அடுத்துப்பின்னரான ஒழுங்குவிதிகளினால் குறிப்பானமுறையில் வேறுபடுத்தப்பட்டாலொழிய அத்தகைய அங்கீகாரத்தின்கீழ் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களுக்காகக் குறித்துரைக்கப்பட்ட நியதிநிபந்தனைகளுக்கமைய தொடர்ந்து நடாத்தப்படலாம்.

### பாகம் III

### கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்குமான அதிகாரம்

1. வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்குகள்

ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி, சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கமைய, இவ்வொழுங்குவிதிகளின் கீழ் குறித்துரைக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களைக் கையாள்வதற்குப் பின்வரும் தகவுடைய ஆட்களின் பெயரில் வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அதிகாரங்கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்டவொரு கம்பெனி தவிர 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனிகள்;

(ஆ) ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கி;

(இ) (மேலே (அ) மற்றும் (ஆ) என்பவற்றின்கீழ் தகவுள்ள முதலீட்டாளர்கள் நீங்கலாக) மத்திய வங்கி, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு அல்லது இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின்கீழ் ஒழுங்குபடுத்தப்பட்ட அல்லது உரிமமளிக்கப்பட்ட உருவகங்கள்;

(ஈ) 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஊழியர் சகாய நிதியம் அல்லது தொழில் ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட வேறேதேனும் சகாய நிதியம்;

(உ) இலங்கையில் பதிவுசெய்யப்பட்டவொரு பங்காண்மை; அத்துடன்

(ஊ) (ஏற்புடையற்பாலவாறு) இலங்கையில் வதிகின்ற தனியாள் அல்லது அத்தகைய தனியாளினால் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட தனியுரிமையாண்மை.

2. ஏனைய நியதி நிபந்தனைகள்

(1) வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்குமான கட்டளைக்கற்களும் அத்தகைய கணக்குக்காக அனுமதிக்கப்பட்ட பற்றுகளும் வரவுகளும், சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட இயைபான பணிப்புகளில் குறித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(2) ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி, இப்பாகத்தின் பந்தி ஐஇல் குறித்துரைக்கப்பட்ட வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் நாடுகின்ற ஆட்கள், சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட இயைபான பணிப்புகளிற் குறித்துரைக்கப்பட்ட கட்டளைகளின்கீழ் அத்தகைய கணக்கைத் திறந்து பேணுவதற்குத் தகவுடையவர்களா என்பதை நிச்சயிப்பதற்கு உரிய விழிப்புக்கவனத்தையும் நியாயமான கவனத்தையும் பிரயோகித்தல் வேண்டும். ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியும், கணக்கைப் பேணும்போதும் அத்தகைய கணக்குகளை மூடியபின்னர் ஆறாண்டுகளுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்காகவும் அவர்களின் தகவுடைமைபற்றிய எண்பிப்பாகக் கணக்குவைத்திருப்போர் தொடர்பான தகவல்களையும் ஆவணமுறையான சான்றையும் பேணுதல் வேண்டும்.

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

**2213/35ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03ஆந் திகதி புதன்கிழமை**

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

பகுதி I : தொகுதி (I) - பொது

**அரசாங்க அறிவித்தல்கள்**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.**

மஹிந்த ராஜபக்ஷ,
**நிதி அமைச்சர்.**

கொழும்பு,
2021, பெப்புருவரி 03.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2021ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவரினால் இலங்கையில் பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புகள்) பற்றிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2021, மாச்சு 22 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தொழிற்படுத்தப்படல் வேண்டும்.

2. இலங்கைக்கு வெளியே வதிபவரும் இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவாறானவருமான ஆளொருவரினால் இலங்கையில் பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள், இவ்வொழுங்குவிதிகளிலும் இதற்கான அட்டவணையிலும் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய வரையறைகள், நியதிகள், நிபந்தனைகள் என்பவற்றுக்கமைய, சட்டத்தின் 4ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட அளவுக்கு ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியினால் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியினால் நிறைவேற்றப்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் அதிகாரமளிக்கப்பட்ட வகுப்புகளாதல் வேண்டும்.

3. இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வெளிநாட்டுச்செலாவணியிலான மூலதனக் கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதில், ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியும் சட்டத்தின் 9ஆம் பிரிவின்கீழ் காலத்துக்குக்காலம் மத்திய வங்கியினால் அதற்கென வழங்கப்பட்ட பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

4. (1) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியும் அதற்கென ஆவணமுறையான சான்றைப் பெற்றுக்கொள்வதன்மூலம் பின்வருவனவற்றை நிச்சயித்தல் வேண்டும்:-

(அ) கொடுக்கல்வாங்கலை நிறைவேற்றுகின்ற ஆளின் நல்லெண்ணம்; அத்துடன்

(ஆ) அத்தகைய கொடுக்கல்வாங்கல் இவ்வொழுங்குவிதிகளுக்கிணங்கி யொழுகவுள்ளதென்று.

(2) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட்டுள்ள ஒவ்வோராளும், (1)ஆம் பந்தியின் நோக்கத்துக்காக அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிக்கு அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிக்கு அவசியமான எல்லா ஆவணமுறையான சான்றையும் வழங்குதல் வேண்டும்.

(3) ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியும் இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வெளிநாட்டுச் செலாவணியிலான அத்தகைய மூலதனக் கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதில் உரிய எல்லா

விழிப்புக்கவனத்தையும் பிரயோகித்தல் வேண்டும்.

5. மத்திய வங்கியானது, இவ்வொழுங்குவிதிகளுக்கிணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி, மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி அல்லது ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியாகவிராத வேறெவரேனுமாள் தொடர்பில் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அது அவசியமெனக் கருதுகின்றவாறான அத்தகைய நடவடிக்கையை எடுக்கலாம்.

6. இவ்வொழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களுடன் சம்பந்தப்பட்ட (எல்லா இடைத்தரகர்களும், பங்குத் தரகர்களும், கூறு நம்பிக்கைப்பொறுப்புக்களும், பரஸ்பர நிதியங்களும் மற்றும் நிதி நிறுவனங்களும் உட்பட) இலங்கையில் வதிவுள்ள எவரேனுமாள் அத்தகைய மூலதனக் கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றும்போது இவ்வொழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்குப் பொறுப்பாதல் வேண்டும்.

7. இதற்கான அட்டவணையின் பாகம் Iஇன் தலைப்பு ஆ வின்கீழ் 1ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு கடல் கடந்த கம்பனியும், இதற்கான அட்டவணையின் பாகம் ஐஇன் தலைப்பு ஆ வின்கீழ் குறித்துரைக்கப்பட்ட நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அது இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

8. (1) இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காகப் “பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம்” என்பது, பின்வருவன என்று பொருளாகும்:-

(அ) ஐக்கிய அமெரிக்க டொலர் (ஐஅடொ);
(ஆ) யூரோ;
(இ) ஸ்டேர்லிங் பவுண்;
(ஈ) அவுஸ்திரேலிய டொலர்;
(உ) சிங்கப்பூர் டொலர்;
(ஊ) சுவீடன் குரோனர்;
(எ) சுவிஸ் பிரான்க்;
(ஏ) கனேடிய டொலர்;
(ஐ) ஹொங்கொங் டொலர்;
(ஒ) யப்பானிய யென்;
(ஓ) டென்மார்க் குரோனர்;
(ஔ) நோர்வே குரோனர்;
(க) சீன ரென்மின்பி; அத்துடன்
(ங) நியூசீலாந்து டொலர்.

(2) மத்திய வங்கியானது, காலத்துக்குக்காலம், சட்டத்தின் 9ஆம் பிரிவின்கீழ் அதற்கென வழங்கப்பட்ட பணிப்புகளின்மூலம், (1) ஆம் பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களைத் திருத்தலாம், மாற்றலாம் அல்லது அவற்றுக்கு எதனையும் சேர்க்கலாம்.

9. 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டவையும் 2019, பெப்புருவரி 28ஆந் தேதிய 2112/25ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையுமான ஒழுங்குவிதிகள், அவற்றின்கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இத்தால் ஒழிக்கப்படுகின்றன.

10. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக-

“சட்டம்” என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் என்று பொருளாகும்;

“அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி” என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

“மூலதனக் கொடுக்கல்வாங்கல்” என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

“மத்திய வங்கி” என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

“உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள்” என்பது, 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

“பங்குகளுக்கான மாற்றுகைகள்” என்பது,-

(அ) 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டவொரு கம்பனியினால் வழங்கப்பட்ட முந்துரிமைப் பங்குகளை இவ்வொழுங்குவிதிகளின்கீழ் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச்

சட்டத்தின்கீழ் சாதாரணப் பங்குகளாக மாற்றுதல்;

(ஆ) 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டவொரு கம்பனியினால் பெறப்பட்ட அல்லது வழங்கப்பட்ட கடன்களை அல்லது தனிசுப் பிணையங்களை இவ்வொழுங்குவிதிகளின்கீழ் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் சாதாரணப் பங்குகளாக மாற்றுதல்;

(இ) உற்பத்தியாளரினால் அல்லது உற்பத்தியாளரின் அதிகாரமளிக்கப்பட்ட முகவரினால் பெறுமதிமதிக்கப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட எந்திரத்தொகுதியின் பெறுமதியை, இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட எந்தக் கம்பனியினால் அத்தகைய எந்திரத்தொகுதியின் ஆகுசெலவு உறப்பட்டதோ இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட அந்தக் கம்பனியின் பெயரில் சாதாரணப் பங்குகளாக மாற்றுதல்,

என்று பொருளாகும்;

"குடியகல்பவர்" என்பது, காலத்துக்குக்காலம் திருத்தப்படக்கூடியவாறாக 2021, பெப்புருவரி 3ஆந் திகதிய 2213/ 36ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (குடியகல்வோரினால் நிதிகளின் அனுப்புதொகை) ஒழுங்குவிதிகளிலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"பங்குகளுக்கான தகவுடைமை" என்பது, இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வழங்குநரினாலான கூட்டிணைப்பு நடவடிக்கையின் பயனாக அல்லது கம்பனிகளின் ஒன்றிணைவுகள் அல்லது ஒன்றுசேர்க்கைகளின் பயனாக அல்லது மரபுரிமை மற்றும் அடுத்துறுகை தொடர்பான சட்டத்தின் நியதிகளின்படி (குடியகல்பவருட்பட) வதிவற்ற தனியாளுக்கு மரபுரிமை என்றவகையாக அல்லது கிட்டிய குடும்பவுறுப்பினரொருவரிடமிருந்து (குடியகல்பவருட்பட) வதிவற்ற தனியாளுக்கான கொடைகள் அல்லது ஒரு நீதிமன்றக் கட்டளையின்கீழானவொரு தீர்த்துவைத்தலின் பயனாக வழங்கப்பட்ட அல்லது கைமாற்றப்பட்ட எவையேனும் பங்குகள் என்று பொருளாகும்;

"கிட்டிய குடும்பவுறுப்பினர்கள்" என்பது, பெற்றோர், பாட்டன்மார் பாட்டிமார், வாழ்க்கைத்துணை மற்றும் பிள்ளைகள் என்று பொருளாகும்;

"உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனி" என்பது, 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க, நிதித் தொழில் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்டவொரு நிதிக் கம்பனி என்று பொருளாகும்;

"உரிமமளிக்கப்பட்ட நிதி நிறுவனம்" என்பது,-

(அ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று;

(ஆ) உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியொன்று;

(இ) 2016ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க, நுண்நிதிச் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட நுண்நிதிக் கம்பனியொன்று; அல்லது

(ஈ) உரிமமளிக்கப்பட்ட நிதிக்கம்பனியொன்று,

என்று பொருளாகும்;

"உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கி" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"அமைச்சர்" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க,வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"பணச்சபை" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும;

"கடல்கடந்த கம்பனி" என்பது, 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்திலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும;

"நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்" என்பது, (423ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் என்று பொருளாகும்;

"மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்திலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"சில்லறை வியாபாரம்" என்பது, தனிப்பட்ட அல்லது வீட்டுப் பாவனைகளுக்காக அல்லது பயன்பாட்டுக்காகப் பொதுமக்களுக்குப் புதிய மற்றும் பாவித்த பண்டங்களின் மீள்விற்பனை (உருமாற்றமில்லாத விற்பனை) என்று பொருளாகும்;

"விசேடித்த குத்தகைக் கம்பனி" என்பது, நிதிக் குத்தகைத் தொழிலை நடாத்துவதற்கு 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க, நிதிக் குத்தகைச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டவொரு கம்பனி என்று பொருளாகும்;

"அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சி" என்பது, ஐம்பது சதவீதத்துக்கு மேற்பட்ட அதன் பங்கு மூலதனம் இலங்கை அரசாங்கத்தினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் அரசுக்குச் சொந்தமானவொரு தொழில்முயற்சி என்று பொருளாகும்;

"இலங்கை அபிவிருத்தி முறிகள்" என்பது, இலங்கை அரசாங்கத்தின்சார்பில் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் வழங்கப்பட்டதும் ஒரு வெளிநாட்டு நாணயத்தில் பெயர்குறிக்கப்பட்டதுமானவொரு தனிசுச் சாதனம் என்று பொருளாகும்.

**அட்டவணை**

(ஒழுங்குவிதிகள் 2 மற்றும் 7)

பாகம் I

**இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆள் ஒருவரினால் இலங்கையில் பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள்**

அ. அனுமதிக்கப்பட்ட முதலீடுகள்

1. இலங்கைக்கு வெளியே வதிகின்ற எவரேனும் ஆள், இலங்கைக்கு வெளியே தாபிக்கப்பட்ட எவையேனும் நாட்டு நிதியங்கள், பிராந்திய நிதியங்கள், முதலீட்டு நிதியங்கள் மற்றும் பரஸ்பர நிதியங்கள் (வதிவற்ற முதலீட்டாளர்கள்) இலங்கையில் பின்வரும் வகையினவான மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடலாம்:-

(1) அட்டவணையின் இப்பாகத்தின் அ என்னும் தலைப்பின் கீழ் 7ஆம், 8ஆம் பந்திகளில் கூறப்பட்ட தவிர்ப்புக்களுக்கும் வரையறைகளுக்கும் அமைய, 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளினால் வழங்கப்பட்ட பங்குகளுக்கான உரித்துடைமையொன்றின்கீழ் அல்லது பங்குகளுக்கான மாற்றுகைகளின்கீழ் எல்லா வகுப்பினவையுமான பங்குகளையும் கொள்ளுதல், வைத்திருத்தல் அல்லது உரிமைதுறத்தல்;

(2) பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அல்லது இலங்கை ரூபாக்களில் (உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள், உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகள், உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகள், விசேடித்த குத்தகைக் கம்பனிகள், மற்றும் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் மற்றும் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட கடல்கடந்த கம்பனிகள் தவிர) 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளினால் வழங்கப்பட்ட 3 அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுக் காலத்துடனான தனிசுப்பிணையங்களில் முதலீடுசெய்தல் (நிரற்படுத்தப்பட்ட தனிசுப் பிணையங்கள் நீங்கலாக);

(3) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள், உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகள், உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகள் அல்லது விசேடித்த குத்தகைக் கம்பனிகள் என்பவற்றினால் பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அல்லது இலங்கை ரூபாக்களில் இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைகளின் அங்கீகாரத்துடன் வழங்கப்பட்ட தனிசுப் பிணையங்களில் முதலீடு செய்தல்;

(4) பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அல்லது இலங்கை ரூபாக்களில் (உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள், உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகள், உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகள், விசேடித்த குத்தகைக் கம்பனிகள், மற்றும் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் மற்றும் கடல்கடந்த கம்பனிகள் தவிர) 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளுக்கு 3 அல்லது அதற்குமேற்பட்ட ஆண்டுக் காலத்துடனான கடன்களை வழங்குதல்;

(5) பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அல்லது இலங்கை ரூபாக்களில், 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் கடல்கடந்த கம்பனியொன்றாக இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட அதன் கிளை அலுவலகத்துக்கு அல்லது கருத்திட்ட அலுவலகத்துக்கு இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட தாய்க் கம்பனி கடன்களை வழங்குதல்;

(6) இயைபான துறை அமைச்சிடமிருந்தும் வேறேதேனும் இயைபான அதிகாரசபையிடமிருந்தும் தேவைப்பட்ட ஏதேனும் அங்கீகாரத்தைப் பெறுவதற்கமைய, இலங்கை அரசாங்கத்திற்கு அல்லது அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்குக் கடன்களை வழங்குதல்;

(7) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள், உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகள், உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் விசேடித்த குத்தகைக் கம்பனிகள் என்பவற்றுக்கு இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைகளினது அங்கீகாரத்துக்கமைய, வெளிநாட்டு நாணயத்தில் அல்லது இலங்கை ரூபாக்களில் கடன்களை வழங்குதல்;

(8) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் உள்ள ஏற்பாடுகள் அல்லது மட்டுப்பாடுகளுக்கு அமைய, பின்வருவனவற்றில்

முதலீடுகளைச் செய்தல்:-

(அ) கூறு நம்பிக்கைப்பொறுப்புக்களிலான கூறுகள் அல்லது பரஸ்பர நிதியங்கள்;

(ஆ) அரசாங்கப் பிணையங்கள் (இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் மற்றும் வேறு எவையேனும் பிணையங்கள்);

(இ) இலங்கை மத்திய வங்கியினால் அல்லது அரசுக்குச் சொந்தமான ஏதேனும் தொழில்முயற்சியினால் அல்லது வேறு ஏதேனும் நியதிச்சட்டக் குழுவினால் வழங்கப்பட்ட பிணையங்கள்;

(ஈ) இலங்கை அபிவிருத்தி முறிகள் (இஅமு);

(உ) சட்டத்தின் 4ஆம் பிரிவுக்கமைய, உரிமமளிக்கப்பட்ட நிதி நிறுவனங்களில் இலங்கை ரூபாக்களிலான அல்லது ஏதேனும் பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்திலான காலவைப்புக்கள்;

(ஊ) அசைவற்ற ஆதனங்கள்; அல்லது

(எ) நிரற்படுத்தப்பட்ட தனிசுப் பிணையங்கள்.

(9) 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு, வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளை வைத்திருக்கின்றவையும் இலங்கையிலுள்ளவையுமான கம்பனிகளுக்கு மூன்றாண்டுகளுக்குக் குறைவான காலத்துடனான கடன்களை, கடனின் அத்தகைய வரும்படிகளைக் கடன்பெறுநரின் தொழிற்பாட்டு மூலதனத் தேவைப்பாட்டை எதிர்கொள்வதற்குப் பயன்படுத்தும் நோக்கத்துக்காக வழங்குதல்; ஆயின், அத்தகைய கடன்களின் எல்லா மீள்கொடுப்பனவுகளும் கடன்பெறுநரின் வெளிநாட்டுச் செலாவணி உழைப்புக்களிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்;

(10) அமைச்சரினால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கிணங்க, பணச்சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் முதலீட்டு வகுதியில் முதலீடு செய்தல்.

2. வதிவற்ற தனியாள், அட்டவணையின் இப்பாகத்தின் தலைப்பு அ வின்கீழ் 1ஆம் பந்தியின் (1), (2), (3) மற்றும் (8) ஆகிய உட்பந்திகளிற் குறிப்பீடுசெய்யப்பட்ட சொத்துக்களை, கிட்டிய குடும்பவுறுப்பினரொருவரிடமிருந்தான கொடை என்ற வகையாக அல்லது மரபுரிமையும் அடுத்துறுகையும் தொடர்பான சட்டத்தின் நியதிகளின்படி மரபுரிமை என்றவகையாக அல்லது ஒரு நீதிமன்றக் கட்டளையின்கீழான தீர்த்துவைத்தலொன்றாகக் கொள்ளலாம்.

3. குடியகல்பவரொருவர், இலங்கையிலுள்ள ஏதேனும் சொத்தை, வதிவுள்ள ஆளொருவராக அல்லது குடியகல்பவரொருவராக உள்ள பெற்றோர், பாட்டன்மார் பாட்டிமார், உடன்பிறந்தோர் அல்லது வாழ்க்கைத்துணை என்போரிடமிருந்தான கொடை என்றவகையாகக் கொள்ளலாம். குடியகல்பவரொருவர், மரபுரிமையும் அடுத்துறுகையும் தொடர்பான சட்டத்தின் நியதிகளின்படி மரபுரிமை என்றவகையாக இலங்கையிலுள்ள ஏதேனும் சொத்தைக் கொள்ளலாம்.

4. அட்டவணையின் இப்பாகத்தின் தலைப்பு அ வின்கீழ் 1, 2, 3 ஆகிய பந்திகளிற் குறித்துரைக்கப்பட்ட எல்லா மூலதனக் கொடுக்கல்வாங்கல்களும் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமையவிருத்தல் வேண்டும்:-

(1) அனுமதிக்கப்பட்ட முதலீடுகள் தொடர்பாக இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே நிதிகளை நெறிப்படுத்தல் பற்றிய அமைப்புமுறை

(அ) மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட அனுமதிக்கப்பட்ட முதலீடுகளுக்காகச் செலுத்தப்படற்பாலதான பிரதிபயன், ஏதேனும் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அல்லது இலங்கை ரூபாக்களில் திறக்கப்பட்டு பேணப்பட்ட உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினூடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(ஆ) அத்தகைய முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட எல்லா வருமானமும் எவையேனும் மூலதன வரும்படிகளும், எந்த உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கினூடாக முதலீடு செய்யப்பட்டதோ அந்த உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

(இ) மேலே (அ) மற்றும் (ஆ) என்னும் விடயங்களிற் குறித்துரைக்கப்பட்ட வதிவற்ற முதலீட்டாளரின் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினூடாக நிதிகளை அனுப்புவதற்கான தேவைப்பாடுகள், அட்டவணையின் இப்பாகத்தின் தலைப்பு அ வின்கீழ் 1ஆம் பந்தியின் (4), (5), (6), (7), (8)(அ) மற்றும் (9) என்னும் உட்பந்திகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட முதலீடுகளுக்காகவும் மற்றும் (8)ஆம் உட்பந்தியின்கீழ் அனுமதிக்கப்பட்ட வேறெவையேனும் முதலீடுகளுக்காகவும் (பணச்சபையினால் அவ்வாறு அனுமதிக்கப்படின்) பணிப்பாணைமுறையிலானவையல்ல;

(ஈ) அட்டவணையின் இப்பாகத்தின் தலைப்பு அ வின்கீழ் 1ஆம் பந்தியின் (8)ஆம் உட்பந்தியின் (அ) என்னும் விடயத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட முதலீடுகளுக்காக அனுப்புதொகைகள் நேரடியாகச் செய்யப்படும் பட்சத்திலும், உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கும், உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகளுக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும், அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கும் கடன்கள் வழங்கப்படும் பட்சத்திலும், அத்தகைய முதலீடுகளின் எல்லா வருமானமும் மூலதன வரும்படிகளும் வதிவற்ற முதலீட்டாளருக்கு முதலீடுபெறுநரினால் நேரடியாகத் திருப்பியனுப்பப்படலாம்;

(உ) அட்டவணையின் இப்பாகத்தின் தலைப்பு அ வின்கீழ் (1)ஆம் பந்தியின் (9)ஆம் உட்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்டவொரு கடனின் வரும்படிகள், கடன்பெறுநரினால் திறக்கப்பட்டுப் பேணப்பட்ட வியாபார வெளிநாட்டு நாணயக் கடன் கணக்கொன்றுக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கடனின் எல்லா மீள்கொடுப்பனவுகளும், சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புக்களுக்கமைய, அதே வியாபார வெளிநாட்டு நாணயக் கடன் கணக்கினூடாகச் செலுத்தப்படுதலும் வேண்டும். எச்சூழ்நிலைகளிலும் அத்தகைய கடன், ரூபாக்களை மாற்றுதல் என்றவகையாகக் கொடுத்துத் தீர்க்கப்படுவதற்கு அனுமதிக்கப்படுதலாகாது.

(2) இலங்கைக்கு வெளியே வதிவுள்ள ஆளொருவரிடமிருந்து கடன்பெறுகின்ற உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள், உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகள், இலங்கை அரசாங்கம் மற்றும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் தவிர்ந்த இலங்கையில் வதிவுள்ள எவரேனுமாள், அத்தகைய கடன்களின் வரும்படிகளைப் பெறுவதற்கும் கடனைச் சேவைப்படுத்துவற்கும் அதனை மீளச்செலுத்துவதற்கும், சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கமைய, வெளிநாட்டு வர்த்தகக் கடன்பெறுகைக் கணக்கைத் திறத்தலும் பேணுதலும் வேண்டும்.

(3) அட்டவணையின் இப்பாகத்தின் தலைப்பு அ வின்கீழ் 1ஆம் பந்தியின் (6)ஆம், (7)ஆம் உட்பந்திகளின்கீழ் செய்யப்பட்ட கடன்பெறுகைகளின்மீது அறிக்கையிடுதல்-

(அ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகளினால் செய்யப்பட்ட கடன்பெறுகைகளின் விடயத்தில், அத்தகைய கடன்பெறுகைகள் பற்றிய விபரங்கள் (தேதி, கடனின் தொகையும் நாணயமும், காலம் மற்றும் கடன்கொடுநரின் விபரத்தொகுப்பு என்பனவுட்பட), அடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்குமுன்னர் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத் தலைவருக்கு அறிக்கையிடப்படுதல் வேண்டும்;

(ஆ) இலங்கை அரசாங்கத்தினாலும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளினாலும் செய்யப்பட்ட கடன்பெறுகைகளின் விடயத்தில், அத்தகைய கடன்பெறுகைகள் பற்றிய விபரங்கள் (தேதி, கடனின் தொகையும் நாணயமும், காலம் மற்றும் கடன்கொடுநரின் விபரத்தொகுப்பு என்பனவுட்பட), கடன் வரும்படிகள் பெறப்பட்டதிலிருந்து ஒரு மாதத்தினுள் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் தலைவருக்கு, நிதியமைச்சின் வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தினால், பகிரங்கத் தொழில்முயற்சித் திணைக்களத்தினால் மற்றும் தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்தினால் (ஏற்புடையாற்பாலவாறு) அறிக்கையிடப்படுதல் வேண்டும்;

(4) அட்டவணையின் இப்பாகத்தின் தலைப்பு அ வின்கீழ் (1)ஆம் பந்தியின் (4)ஆம், (5)ஆம் உட்பந்திகளின்கீழ் பெறப்பட்ட கடன்கள், காலமுடிவில் முழுமையாகக் கடன்பெறுநரினால் மீளச்செலுத்தப்படலாம் அல்லது கடன் உடன்படிக்கையின் நியதிகளுக்கிணங்கக் காலத்தின்போது கடன்தீர்வு செய்யப்படுதல் வேண்டும்.

(5) முதலீட்டின் வரும்படிகளை அல்லது மரபுரிமையாகப் பெறப்பட்ட அல்லது கொடையாகப் பெறப்பட்ட அல்லது ஒரு நீதிமன்றக் கட்டளையின்கீழ் பெறப்பட்ட சொத்துக்களைத் திருப்பியனுப்புதல்

(அ) (ஏற்புடையாற்பாலவாறு) மரபுரிமை மற்றும் அடுத்துறுகை தொடர்பான சட்டத்தின் நியதிகளின்படி அல்லது கிட்டிய குடும்பவுறுப்பினரொருவரிடமிருந்து கொடை என்றவகையாக அல்லது ஏதேனும் நீதிமன்றத்தின் கட்டளையொன்றின்கீழான தீர்த்துவைத்தலொன்றாக வதிவற்ற தனியாளுக்குக் கைமாற்றப்பட்ட அனுமதிக்கப்பட்ட முதலீடுகளின் ஏதேனும் வருமானமும் எவையேனும் மூலதன வரும்படிகளும், முதலீடானது இவ்வொழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுக ஆரம்ப முதலீட்டாளரினால் செய்யப்பட்டிருப்பின், பயனுகரியினால் திறக்கப்பட்ட உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினூடாக மட்டுமே திருப்பியனுப்பப்படலாம்.

(ஆ) (ஏற்புடையாற்பாலவாறு) மரபுரிமை மற்றும் அடுத்துறுகை தொடர்பான சட்டத்தின் நியதிகளின்படி அல்லது கிட்டிய குடும்பவுறுப்பினரொருவரிடமிருந்து கொடை என்றவகையாக அல்லது ஏதேனும் நீதிமன்றத்தின் கட்டளையொன்றின்கீழான தீர்த்துவைத்தலொன்றாக வதிவற்ற தனியாளுக்குக் கைமாற்றப்பட்ட அனுமதிக்கப்பட்ட முதலீடுகளின் ஏதேனும் வருமானமும் எவையேனும் மூலதன வரும்படிகளும், முதலீடானது 2017, நவம்பர் 20ஆந் தேதிக்குமுன்னர் ஆரம்ப முதலீட்டாளரின் (உட்திரும்பல் முதலீட்டுக் கணக்காக மீளப்பெயர்குறிக்கப்பட்ட) பிணையங்கள் முதலீட்டுக் கணக்கொன்றினூடான அல்லது வேறேதேனும் கணக்கினூடான உட்திரும்பல் அனுப்புதொகைகளிலிருந்து செய்யப்பட்டிருப்பின், பயனுகரியினால் திறக்கப்பட்ட உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினூடாக மட்டுமே திருப்பியனுப்பப்படலாம்.

(இ) (குடியகல்பவர் நீங்கலாக) வதிவற்ற தனியாளரொருவரினால், இறந்தவரான வதிவுள்ள ஆளொருவரிடமிருந்து மரபுரிமை மற்றும் அடுத்துறுகைச் சட்டத்தின் நியதிகளின்படி மரபுரிமையாகப் பெறப்பட்ட அல்லது வதிவுள்ளவரான கிட்டிய குடும்பவுறுப்பினரொருவரிடமிருந்து கொடை என்றவகையாகப் பெறப்பட்ட அல்லது ஒரு வதிவுள்ளவரினால் வைத்திருக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக ஏதேனும் நீதிமன்றத்தின் கட்டளையொன்றின்கீழான தீர்த்துவைத்தலொன்றாகப் பெறப்பட்ட ஏதேனும் அனுமதிக்கப்பட்ட முதலீட்டின் ஏதேனும் வருமானம் மற்றும் எவையேனும் மூலதன வரும்படிகள், சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின்படி, 30,000 ஐஅடொலர் என்ற வருடாந்தப் படிக்கமைய, ஒரு மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்குக்கு வரவுவைக்கப்பட்டு அதனூடாகத் திருப்பியனுப்பப்படுதல் வேண்டும்.

(ஈ) மரபுரிமை மற்றும் அடுத்துறுகைச் சட்டத்தின் நியதிகளின்படி மரபுரிமையாகப் பெறப்பட்ட அல்லது (குடியகல்பவர் நீங்கலாக) வதிவற்ற தனியாளொருவருக்கு இன்னொரு குடியகல்பவரிடமிருந்து அல்லது குடியகல்பவராகவுள்ள கிட்டிய குடும்பவுறுப்பினரொருவரிடமிருந்து ஏதேனும் அனுமதிக்கப்பட்ட முதலீட்டின் ஏதேனும் வருமானம் மற்றும் எவையேனும் மூலதன வரும்படிகள், அத்தகைய முதலீடு அத்தகைய குடியகல்பவரினால் இலங்கையில் வதிபவராகவிருக்கையில் செய்யப்பட்டுள்ளவிடத்து அல்லது இவ்வொழுங்குவிதிகள் பயனுக்கு வருமுன்னர் அவரது அல்லது அவளது இலங்கை ரூபாக் கணக்குகளினூடாகச் செய்யப்பட்டுள்ளவிடத்து அல்லது அட்டவணையின் இப்பாகத்தின் தலைப்பு அ வின்கீழ் 6ஆம் பந்தியின்கீழ் அனுமதிக்கப்பட்டவாறு செய்யப்பட்டுள்ளவிடத்து, சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின்படி, 30,000 ஐஅடொலர் என்ற வருடாந்தப் படிக்கமைய, ஒரு மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்குக்கு வரவுவைக்கப்பட்டு அதனூடாகத் திருப்பியனுப்பப்படுதல் வேண்டும்.

(உ) அட்டவணையின் இப்பாகத்தின் தலைப்பு அ வின்கீழ் 3ஆம் பந்தியின்கீழ் அனுமதிக்கப்பட்டவாறு ஒரு குடியகல்பவரினால் மரபுரிமையாகப் பெறப்பட்ட அல்லது அவருக்குக் கொடையாக அளிக்கப்பட்ட ஏதேனும் சொத்தின் ஏதேனும் வருமானம் மற்றும் எவையேனும் மூலதன வரும்படிகள், காலத்துக்குக்காலம் திருத்தப்படக்கூடியவாறாக, 2021, பெப்புருவரி 3ஆந் தேதிய 2213/36ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (குடியகல்வோரினால் நிதிகளின் அனுப்புகை) ஒழுங்குவிதிகளுக்கமைய, திருப்பியனுப்பப்படுதல் வேண்டும்.

(6) 2017ஆம் ஆண்டு நவம்பர் 20ஆந் தேதிக்குமுன்னர் செய்யப்பட்ட முதலீடுகளின் வரும்படிகளைத் திருப்பியனுப்புதல்

(அ) 2017, நவம்பர் 20 ஆந்தேதிக்குமுன்னர் செய்யப்பட்ட மேலேயுள்ள முதலீடுகளின் ஏதேனும் வருமானமும் எவையேனும் மூலதன வரும்படிகளும், முதலீட்டுக்கான உட்திரும்பல் அனுப்புதொகைகளின் சான்று சமர்ப்பிக்கப்படுவதற்கமைய, முதலீட்டாளரினால் திறக்கப்பட்ட உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினூடாக மட்டும் அல்லது கூறுநம்பிக்கைப் பொறுப்புக்களிலுள்ள கூறுகளில் செய்யப்பட்ட முதலீடுகளின் விடயத்தில் முதலீட்டாளரின் இலங்கைக்கு வெளியேயான கணக்கொன்றுக்கு நேரடியாகத் திருப்பியனுப்பப்படலாம்.

(ஆ) 2010, சனவரி 1ஆந் தேதிக்குமுன்னர் செய்யப்பட்ட முதலீடுகளுக்காக உட்திரும்பல் அனுப்புதொகைகள் பற்றிய சான்று கிடைக்கக்கூடியதாகவிராத பட்சத்தில், அத்தகைய முதலீட்டின் ஏதேனும் வருமானமும் எவையேனும் மூலதன வரும்படிகளும், அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியினால் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியினால் செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கலின் நல்லெண்ணம் பற்றித் திருப்திப்படுவதன்மேல், வதிவற்ற முதலீட்டாளரினால் திறக்கப்பட்ட உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினூடாக மட்டும் திருப்பியனுப்பப்படலாம் அல்லது கூறுநம்பிக்கைப்பொறுப்புக்களிலான கூறுகளில் செய்யப்பட்ட முதலீடுகளின் விடயத்தில் முதலீட்டாளரின் இலங்கைக்கு வெளியேயான கணக்கொன்றுக்கு நேரடியாக அனுப்பப்படலாம்.

(7) அட்டவணையின் இப்பாகத்தின் தலைப்பு அ வின்கீழ் 4ஆம் பந்தியின் (5)ஆம் உட்பந்தியின் (ஆ) என்னும் விடயத்தின்கீழ் குறிப்பீடுசெய்யப்பட்ட அல்லது 2010, சனவரி 1ஆந் தேதியிலிருந்து 2017, நவம்பர் 20ஆந் தேதிவரையிலான காலப்பகுதியின்போது செய்யப்பட்ட முதலீடுகளுக்கான உட்திரும்பல் அனுப்பு தொகைகள் பற்றிய சான்று கிடைக்கக்கூடியதாகவிராத பட்சத்தில், அத்தகைய முதலீடுகளின் ஏதேனும் வருமானம் அல்லது மூலதன வரும்படிகள், முதலீட்டாளரினால் அல்லது பயனுகரியினால் திறக்கப்பட்ட, விடயத்துக்கேற்ப, ஒரு மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்குக்கு அல்லது வதிவற்ற ரூபாக் கணக்குக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின்படி 30,000 ஐஅ டொலரான வருடாந்தப் படிக்கமைய, திருப்பியனுப்பப்படுதலும் வேண்டும்.

(8) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள், உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகள், உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகள் அல்லது விசேடித்த குத்தகைக் கம்பனிகள், இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையிடமிருந்தான அங்கீகாரத்துக்கமைய, இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட அல்லது பெறப்பட்ட தனிசுப் பிணையங்கள் அல்லது கடன்களைச் சாதாரணப் பங்குகளாக மாற்றலாம். 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளினால் வழங்கப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட நிரற்படுத்தப்படாத தனிசுப் பிணையங்கள் அல்லது கடன்கள், விடயத்துக்கேற்ப, வழங்குகை அல்லது கடன்பெறுகைத் தேதியிலிருந்து 18 மாதங்கள் முடிவுற்றபின்னர் மட்டுமே சாதாரணப் பங்குகளாக மாற்றப்படலாம். 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளினால் வழங்கப்பட்ட நிரற்படுத்தப்பட்ட தனிசுப்பிணையங்கள் கொழும்புப் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுக மட்டுமே சாதாரணப் பங்குகளாக மாற்றப்படலாம்.

5. வதிவற்ற முதலீட்டாளர்கள், இலங்கையிலுள்ள ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் கரைகடந்த வங்கித்தொழிற் கூறுகளில் பேணப்பட்ட கணக்குகளினூடாக நிதிகளை அனுப்புவதன்மூலம், எவையேனும் மட்டுப்பாடுகளின்றி, இலங்கையில் கூட்டிணைக்கப்படாதவையும் இலங்கையிலுள்ள கொழும்புப் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையினால் நிரற்படுத்தப்பட்டவையுமான கம்பனிகளின் பங்குகளில் அல்லது தனிசுப்பிணையங்களில் முதலீடுசெய்யலாம்.

6. வதிவற்ற ரூபாக் கணக்குகளில் வைத்திருக்கப்பட்ட நிதிகளிலிருந்து குடியகல்வோரினாலான முதலீடுகள்.

(1) அட்டவணையின் இப்பாகத்தின் தலைப்பு அ வின்கீழ் 1ஆம் பந்தியின் (1), (2), (3) மற்றும் (8) ஆகிய உட்பந்திகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட முதலீடுகளை, அட்டவணையின் இப்பாகத்தின் தலைப்பு அ வின்கீழ் 1ஆம் பந்தியின் (8)ஆம் உட்பந்தியின்

(ஈ) என்னும் விடயம் தவிர, குடியகல்பவரின் வதிவற்ற ரூபாக் கணக்கொன்றில் வைத்திருக்கப்பட்ட நிதிகளிலிருந்து செய்வதற்குக் குடியகல்பவர் ஒருவர் அனுமதிக்கப்படுகின்றார்.

(2) அத்தகைய முதலீடுகளின் எல்லா வருமானமும் மூலதன வரும்படிகளும், முதலீடானது எந்த வதிவற்ற ரூபாக் கணக்குகளினூடாகச் செய்யப்பட்டதோ முறையான அந்த வதிவற்ற ரூபாக் கணக்குகளுக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட எல்லா வருமானமும், சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின்படி, தகவுடைய புலம்பெயர் படிக்கு அமையவிராது, (ஏற்புடையற்பாலவாறு) முறையான மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கினூடாக அல்லது குடியகல்வோரின் அனுப்பத்தக்க வருமானக் கணக்கினூடாக மட்டும் திருப்பியனுப்பப்படலாம்.

(4) அத்தகைய முதலீடுகளின் எவையேனும் மூலதன வரும்படிகள், சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின்படி, தகவுடைய புலம்பெயர் படிக்கு அமைய, முறையான மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கினூடாக மட்டும் திருப்பியனுப்பப்படலாம்.

7. தவிர்ப்புக்கள் - அட்டவணையின் இப்பாகத்தின் தலைப்பு அ வின்கீழ் 1ஆம் பந்தியின் (1)ஆம் உட்பந்தியின்கீழான அனுமதியானது, பின்வரும் தொழில்களுள் எவற்றையும் கொண்டுநடாத்துவதற்கு உத்தேசிக்கின்ற அல்லது கொண்டுநடாத்துகின்ற கம்பனியொன்றின் வாக்களிக்கும் பங்குகள் தொடர்பில் ஏற்புடையதாதலாகாது:-

(1) அடகு பிடித்தல்;

(2) (கடற்றொழில் என்னும் விடயம் குறித்தளிக்கப்படுகின்ற அமைச்சரினால் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு) கரையோரத்தில் மீன்பிடித்தல்;

(3) இலங்கைக்கு வெளியில் வதிகின்ற ஆட்களினால் பங்களிப்புச் செய்யப்பட்ட மூலதனம் 5 மில்லியன் ஐஅடொலரைவிடக் குறைவாக இருக்குமிடத்து சில்லறை வியாபாரம்.

8. வரையறைகள்

(1) அட்டவணையின் இப்பாகத்தின் தலைப்பு அ வின்கீழ் 1ஆம் பந்தியின் (1)ஆம் உட்பந்தியின்கீழான அனுமதியானது, பின்வரும் தொழில்களுள் எவற்றையும் கொண்டுநடாத்துகின்ற அல்லது கொண்டுநடாத்த உத்தேசிக்கின்ற கம்பனியொன்றிலுள்ள வாக்களிக்கும் பங்குகள் தொடர்பில், அத்தகைய கம்பனியின் முழுமையாகச் செலுத்தப்பட்ட வாக்களிக்கும் பங்குகளின் எண்ணிக்கையினது 40 சதவீதம் வரை மாத்திரம் அல்லது ஏதேனும் கம்பனியில் வெளிநாட்டு முதலீட்டின் உயர்வான வீதமொன்றுக்காக இலங்கை முதலீட்டுச் சபையினால் விசேட அங்கீகாரமொன்று வழங்கப்பட்டிருப்பின், அத்தகைய உயர்வான வீதம்வரை மாத்திரம் ஏற்புடையதாதல் வேண்டும்:-

(அ) இலங்கையின் ஏற்றுமதிகள் சர்வதேசரீதியில் தீர்மானிக்கப்பட்ட அனுமதிப்பங்கு மட்டுப்பாடுகளுக்கமைய உள்ளவிடத்து பண்டங்களின் உற்பத்தி;

(ஆ) தேயிலை, இறப்பர், தென்னை, கொக்கோ, அரிசி, சீனி மற்றும் வாசனைத்திரவியங்களை வளர்த்தலும் அவற்றின் ஆரம்பப் பதனிடுகையும்;

(இ) மீளப் புதுப்பிக்கத்தகா தேசிய வளங்களின் அகழ்வும் ஆரம்பப் பதனிடுகையும்;

(ஈ) உள்நாட்டு வெட்டுமரங்களைப் பயன்படுத்திச் செய்யப்படும் வெட்டுமரத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள்;

(உ) (கடற்றொழில் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினால் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறாக) ஆழ்கடலில் மீன்பிடித்தல்;

(ஊ) வெகுசனத் தொடர்பாடல்;

(எ) கல்வி;

(ஏ) கப்பற்சரக்கு அனுப்புதல்;

(ஐ) பயண முகவராண்மைகள்;

(ஒ) கப்பற்றொழில் முகவராண்மைகள்.

(2) அட்டவணையின் இப்பாகத்தின் தலைப்பு அ வின்கீழ் 1ஆம் பந்தியின் (1)ஆம் உட்பந்தியின்கீழான அனுமதியானது, அத்தகைய கம்பனியின் முழுமையாகச் செலுத்தப்பட்ட வாக்களிக்கும் பங்குகளின் எண்ணிக்கையினது சதவீதம்வரை மாத்திரம், கீழே குறித்துரைக்கப்பட்ட தொழில்களுள் எவற்றையும் கொண்டுநடாத்துகின்ற அல்லது கொண்டுநடாத்த உத்தேசிக்கின்ற கம்பனியொன்றிலுள்ள வாக்களிக்கும் பங்குகள் தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டும்; அச்சதவீதத்துக்காக, அத்தகைய தொழில்களில் வெளிநாட்டு முதலீடுகளின் அங்கீகாரத்துக்காக அமைக்கப்பட்டதும் இலங்கை அரசாங்கத்தினால்

தாபிக்கப்பட்டதுமான இயைபான சட்ட அல்லது நிருவாக அதிகாரசபையினால் ஒன்றில் பொதுவான அல்லது விசேடமான அங்கீகாரம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்:-

(அ) வான் போக்குவரத்து;

(ஆ) (கப்பற்றொழில் என்னும் விடயம் குறித்தளிக்கப்படுகின்ற அமைச்சரினால் வரைவிலக்கணங் கூறப்பட்டவாறாக) கரையோரத்தில் மீன்பிடித்தல்;

(இ) 1990ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க, கைத்தொழில் ஊக்குவிப்புச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான கைத்தொழில் பொறுப்புமுயற்சி, அதாவது

(i) ஆயுதங்கள், வெடிமருந்துகள், வெடிப்பொருட்கள், இராணுவ வாகனங்கள் மற்றும் உபகரணங்கள், வானூர்திகள் மற்றும் ஏனைய இராணுவத் தளபாடங்களைத் தயாரிக்கின்ற ஏதேனும் கைத்தொழில்;

(ii) நச்சுப்பொருட்கள், போதைப்பொருட்கள், மதுபானம், அபாயகரமான அவுடதங்கள் மற்றும் நச்சுத் தன்மையுடைய, தீங்கு விளைவிக்கக்கூடிய அல்லது புற்றுநோயை விளைவிக்கின்ற பொருட்களைத் தயாரிக்கின்ற ஏதேனும் கைத்தொழில்;

(iii) நாணயத் தாள்கள், நாணயக் குற்றிகள் அல்லது பாதுகாப்பு ஆவணங்களைத் தயாரிக்கின்ற ஏதேனும் கைத்தொழில்;

(ஈ) பாரியளவில் இயந்திரமயமாக்கப்பட்ட இரத்தினக்கல் அகழ்வு;

(உ) லொத்தர்கள்.

ஆ. இலங்கையில் தொழிலிடமொன்றைத் திறத்தலும் தொழிற்படுத்தலும்

1. (1) 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட கடல்கடந்த கம்பனியொன்று இலங்கையில் பின்வருவனவற்றை நிறைவேற்றலாம்:-

(அ) அட்டவணையின் இப்பாகத்தின் தலைப்பு ஆ வின்கீழ் 3ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகள் தவிர, ஏதேனும் வர்த்தக, வியாபார அல்லது கைத்தொழில் செயற்பாடு; ஆயின், அட்டவணையின் இப்பாகத்தின் தலைப்பு ஆ வின்கீழ் 4ஆம் பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக வெளிநாட்டு முதலீடுகளுக்காக அங்கீகாரம் வழங்குவதற்கென இலங்கை அரசாங்கத்தினால் தாபிக்கப்பட்ட இயைபான சட்ட அல்லது நிருவாக அதிகாரசபையிடமிருந்து முன்னனுமதி பெறப்பட்டிருத்தல் வேண்டும்; அல்லது

(ஆ) இணைப்பு அலுவலகம், பிரதிநிதித்துவ அலுவலகம், பிராந்திய அலுவலகம் அல்லது அதனையொத்த வேறு அலுவலகமொன்றினால் பொறுப்பேற்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் போன்ற ஏதேனும் வர்த்தகஞ்சாரா, வியாபாரஞ்சாரா அல்லது கைத்தொழில்சாராச் செயற்பாடு; ஆயின், அத்தகைய செயற்பாடுகள் இலங்கையிலுள்ள கடல்கடந்த கம்பனிக்கு நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ ஏதேனும் வருமானத்தைத் தோற்றுவிப்பனவாக இருத்தலாகாது.

(2) மேலே குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் செயற்பாட்டைப் பொறுப்பேற்கின்ற அல்லது கொண்டுநடாத்துகின்ற, 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட கடல்கடந்த கம்பனியொன்று பின்வருவனவற்றைச் செய்தல் வேண்டும்:-

(அ) கிளை அலுவலகம், கருத்திட்ட அலுவலகம் அல்லது அதனையொத்த வேறு அலுவலகம் போன்ற தொழிலிடமொன்றின் விடயத்தில், கடல்கடந்த கம்பனியின் கணக்கொன்றின் வரவிற்கு இலங்கையிலுள்ள ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியுடன் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியுடன் கடல்கடந்த நாட்டில் உள்ள தாய்க் கம்பனியினால் திறக்கப்பட்ட உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினூடாக நெறிப்படுத்தப்பட்ட, ஆகக்குறைந்த முதலீடாக 200,000 ஐஅ டொலர்களை அல்லது வேறு எவையேனும் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமமான தொகையைப் பெறுதல் வேண்டுமென்பதுடன் சொல்லப்பட்ட முதலீட்டின் எண்பிப்புக்கான சான்றைப் பதிவுசெய்யப்பட்டதிலிருந்து தொண்ணூறு (90) நாட்களுக்குள் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்துக்கு வழங்குதலும் வேண்டும். அத்தகைய நிதிகள் முதலீடொன்றாகக் கம்பனியின் புத்தகங்களில் பதியப்படுதல் வேண்டுமென்பதுடன் கம்பனியானது இலங்கையில் அதன் தொழிலை இல்லாதொழியும்வரை அத்தகைய பதிவேடுகள் பேணப்படுதலும் வேண்டும்.

(ஆ) இணைப்பு அலுவலகம், பிரதிநிதித்துவ அலுவலகம் அல்லது அதனையொத்த வேறு அலுவலகம் போன்ற தொழிலிடமொன்றின் விடயத்தில், அத்தகைய தொழிலிடத்தை அமைப்பதற்கும் பேணுவதற்கும் தேவையான நிதிகளை, கடல்கடந்த நாட்டில் உள்ள தாய்க் கம்பனியினால் திறக்கப்பட்ட கடல்கடந்த கம்பனியின் ஒரு கணக்கின் வரவுக்கு இலங்கையிலுள்ள அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியொருவரிடம் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியொருவரிடம் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினூடாகப் பெறுதல் வேண்டும்.

2. அட்டவணையின் இப்பாகத்தின் தலைப்பு ஆ வின்கீழ் 1ஆம் பந்தியின் (1)ஆம் உட்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட கடல்கடந்த

கம்பனியொன்று, முதலீடானது தாய்க் கம்பனியின் எந்த உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கினூடாக அனுப்பப்பட்டதோ அந்த உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கினூடாக அவர்களின் இலாபம், அரசுரிமைப்பணம், நடத்துரிமம் அல்லது வேறு ஒத்த கொடுப்பனவுகளை அல்லது மேன்மிகை நிதிகளை, தேறிய வரியின்றி, முடிவுறுத்துகை நேரத்தில் இலங்கையிலிருந்து அனுப்பலாம். 2017, நவம்பர் 20ஆந்திகதிக்கு முன்னர் பதிவுசெய்யப்பட்ட கடல்கடந்த கம்பனி, கொடுக்கல்வாங்கலின் நல்லெண்ணம்பற்றி அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியை அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியைத் திருப்திப்படுத்துவதன்மேல் தாய்க் கம்பனியின் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கினூடாகச் சொல்லப்பட்ட கொடுப்பனவுகளை அனுப்புதல் வேண்டும்.

3. அட்டவணையின் இப்பாகத்தின் தலைப்பு ஆ வின்கீழ் 1ஆம் பந்தியின் (1)ஆம் உட்பந்தியின் (அ) என்னும் விடயத்தின் நோக்கத்திற்காக, பின்வரும் வர்த்தக, வியாபார மற்றும் கைத்தொழில் செயற்பாடுகள் கடல்கடந்த கம்பனியொன்றினால் நிறைவேற்றப்படுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை:-

(1) (1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட வெளிநாட்டு வங்கிகளின் கிளைகள் தவிர) பணம் கடன் கொடுத்தல்;
(2) அடகுபிடித்தல்;
(3) இலங்கைக்கு வெளியில் வதியும் ஆட்களினால் பங்களிப்புச் செய்யப்பட்ட மூலதனம், அத்தகைய முதலீட்டின் பின்னர் 5 மில்லியன் ஐஅடொலர்களுக்குக் குறைவாக இருக்குமிடத்து, சில்லறை வியாபாரம்;
(4) (கடற்றொழில் என்னும் விடயம் குறித்தளிக்கப்படுகின்ற அமைச்சரினால் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு) கரையோரத்தில் மீன்பிடித்தல்;
(5) தேயிலை, இறப்பர், தென்னை மற்றும் அரிசி என்பவற்றை வளர்த்தலும் அவற்றின் ஆரம்பப் பதனிடுகையும்;
(6) மீளப் புதுப்பிக்கத்தகா தேசிய வளங்களின் அகழ்வும் ஆரம்பப் பதனிடுகையும்;
(7) கப்பற்சரக்கு அனுப்புதல்;
(8) கப்பற்றொழில் முகவராண்மைத் தொழில்;
(9) இயந்திரமயமாக்கப்பட்ட இரத்தினக்கல் அகழ்வு; அத்துடன்
(10) லொத்தர்கள்.

4. அட்டவணையின் இப்பாகத்தின் தலைப்பு ஆ வின் 1ஆம் பந்தியின் (1)ஆம் உட்பந்தியின் (அ) என்னும் விடயத்தின் நோக்கத்துக்காக, வெளிநாட்டு முதலீடுகளுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கென இலங்கை அரசாங்கத்தினால் தாபிக்கப்பட்ட இயைபான சட்ட அல்லது நிருவாக அதிகாரசபையின் முன்னனுமதியுடன் பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்படுவதற்கு அனுமதியளிக்கப்படுகின்றது:-

(1) இலங்கையின் ஏற்றுமதிகள் சர்வதேச ரீதியில் தீர்மானிக்கப்பட்ட அனுமதிப்பங்கு மட்டுப்பாடுகளுக்கமைய உள்ளவிடத்து பண்டங்களின் உற்பத்தி;
(2) சீனி, கொக்கோ மற்றும் வாசனைத்திரவியங்களை வளர்த்தலும் அவற்றின் ஆரம்பப் பதனிடுகையும்;
(3) உள்நாட்டு வெட்டுமரங்களைப் பயன்படுத்திச் செய்யப்படும், வெட்டுமரத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள்;
(4) (கடற்றொழில் என்னும் விடயம் குறித்தளிக்கப்படுகின்ற அமைச்சரினால் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு) ஆழ்கடலில் மீன்பிடித்தல்;
(5) வெகுசனத் தொடர்பாடல்;
(6) கல்வி;
(7) வெளிநாடு செல்லும் பயண முகவராண்மைத் தொழில்;
(8) உள்நாட்டு வான் போக்குவரத்து;
(9) பின்வருவனவற்றை உற்பத்திசெய்யும் அல்லது தயாரிக்கும் ஏதேனும் கைத்தொழில்:-

(அ) ஆயுதங்கள், வெடிமருந்துகள், வெடிப்பொருட்கள், இராணுவ வாகனங்கள் மற்றும் வானூர்தி உபகரணங்கள், மற்றும் ஏனைய இராணுவத் தளபாடங்கள்;

(ஆ) நச்சுப்பொருட்கள், போதைப்பொருட்கள், மதுபானம், அபாயகரமான அவுடதங்கள் மற்றும் நச்சுத்தன்மையுடைய, தீங்குவிளைவிக்கக்கூடிய அல்லது புற்றுநோயை விளைவிக்கின்ற பொருட்கள்; அத்துடன்

(இ) நாணயத்தாள்கள், நாணயக்குற்றிகள் மற்றும் பாதுகாப்பு ஆவணங்கள்.

## பாகம் II

### இலங்கை அரசாங்கத்தினால் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்குகைக்கான அனுமதி

இலங்கைக்கு வெளியே வதிகின்ற எவரேனுமாளுக்கு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை அல்லது வேறுவகையினவான தனிசுப்பிணையங்களை வழங்குவதற்கும் அதுபற்றி இயைபான அதிகாரிகளின் அனுமதிகளுக்கமைய அத்தகைய வழங்குகை தொடர்பாக அத்தகைய ஆட்களுக்கு ஏதேனும் கொடுப்பனவைச் செய்வதற்கும் இலங்கை அரசாங்கத்துக்கு அனுமதியளிக்கப்படுகின்றது.

### பாகம் III

**வதிவுள்ள ஆட்களுக்கான அனுமதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகளின்கீழ் விதிக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களைக் கையாள்வதற்கு இவ்வட்டவணையின் பாகம் ஐஇன்கீழ் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் வதிவுள்ள ஆள், இவ்வொழுங்குவிதிகளின் அல்லது இலங்கையிலுள்ள வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, பங்குகளை அல்லது எவையேனும் அனுமதிக்கப்பட்ட பிணையங்கள் மற்றும் முறிகளை வழங்குவதற்கு அல்லது அசைவற்ற ஆதனங்களைக் கடனாகப் பெறுவதற்கு அல்லது விற்பனைசெய்வதற்கு மற்றும் வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்படுகின்றார்.

2. அட்டவணையின் பாகம் ஐஇன் கீழ் குறித்துரைக்கப்பட்ட இலங்கை அரசாங்கம், இவ்வொழுங்குவிதிகளின் அல்லது இலங்கையிலுள்ள வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, எவையேனும் அனுமதிக்கப்பட்ட பிணையங்களையும் முறிகளையும் வழங்குவதற்கு அல்லது கடனாகப் பெறுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது.

3. 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில்கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள், அத்தகைய பங்குகளின் கொள்ளுகை அல்லது வந்துறுகை வழிகளைப் பொருட்படுத்தாது, இவ்வொழுங்குவிதிகளுக்கமைய, வதிவற்ற முதலீட்டாளரொருவரின் பெயரில் பங்குகளை வழங்குதலும், கைமாற்றுதலும், பதிவுசெய்தலும் வேண்டும்.

4. ஒரு குடியகல்பவரின் பெற்றோர், பாட்டன் பாட்டி, உடன்பிறந்தவர் அல்லது வாழ்க்கைத்துணை ஒருவராகவிருக்கும் வதிவுள்ள தனியாளொருவர், இலங்கையில் வைத்திருக்கப்பட்ட எவையேனும் சொத்துக்களை ஒரு குடியகல்பவருக்குக் கொடை என்றவகையாகக் கைமாற்றுவதற்கு அனுமதிக்கப்படுகின்றார்.

5. 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறான கம்பனிகள் அல்லது இலங்கையில் வதிகின்ற ஆட்கள், மத்திய வங்கியினால் காலநீடிப்பொன்று வேறுவகையாக அளிக்கப்பட்டாலொழிய, முதலீட்டுக்காக உட்திரும்பல் அனுப்புதொகைகள் பெறப்பட்ட தேதியிலிருந்து மூன்று (3) மாதங்களினுள், அட்டவணையின் பாகம் ஐஇன் தலைப்பு அ வின்கீழ் 1ஆம் பந்தியின் (1)ஆம், (2)ஆம் உட்பந்திகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட பங்குகளை (ஏற்புடையற்பாலவிடத்து) மற்றும் தனிசுப் பிணையங்களை வழங்குதல், கைமாற்றுதல் அல்லது பதிவுசெய்தல் வேண்டும்.

6. 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறான கம்பனிகள், அட்டவணையின் பாகம் ஐஇன் தலைப்பு அ வின்கீழ் 7ஆம், 8ஆம் பந்திகளிற் கூறப்பட்ட தவிர்ப்புகள் மற்றும் வரையறைகளுக்கமைய, அவற்றுக்கான உட்திரும்பல் அனுப்புதொகைகள் ஒன்றில் 2017, நவம்பர் 20 ஆந்தேதிக்கு முன்னர் பெறப்பட்டுள்ளவற்றுக்காக இவ்வொழுங்குவிதிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து தொண்ணூறு (90) நாட்களினுள் அல்லது அத்தகைய முதலீட்டாளர்களின் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினூடாகப் பெறப்பட்ட உட்திரும்பல் அனுப்புதொகைகளுக்காக இவ்வொழுங்குவிதிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதிக்குமுன்னர் பங்குகளை வழங்குவதற்கு அனுமதிக்கப்படுகின்றன. அத்தகைய முதலீடுகளின் எல்லா வருமானமும் எவையேனும் மூலதன வரும்படிகளும், முதலீட்டுக்கான உட்திரும்பல் அனுப்புதொகைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படுவதன்மேல் முதலீட்டாளரினால் திறக்கப்பட்ட உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினூடாக மட்டும் திருப்பியனுப்பப்படுதல் வேண்டும்.

### பாகம் IV

சட்டம் நடைமுறைக்கு வருவதற்குமுன்னர் வழங்கப்பட்டிருந்த (பொதுவான அல்லது விசேடமான) ஏதேனும் அங்கீகாரத்தின்கீழ் பொறுப்பேற்கப்பட்டவையும் இவ்வொழுங்குவிதிகளிற் குறித்துரைக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களைக் கணிசமானளவு ஒத்திருக்கின்றவையுமான ஏற்கனவேயுள்ள எல்லா மூலதனக் கொடுக்கல்வாங்கல்களும், இவ்வொழுங்குவிதிகளினால் அல்லது அடுத்துப்பின்னரான எவையேனும் ஒழுங்குவிதிகளினால் குறிப்பாக வேறுபடுத்தப்பட்டாலொழிய, அத்தகைய அங்கீகாரத்தின்கீழ் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களுக்காகக் குறித்துரைக்கப்பட்ட நியதிநிபந்தனைகளுக்கமைய, தொடர்ந்து நடாத்தப்படலாம்.

### பாகம் V

ஏற்கனவேயுள்ள கணக்குகளுக்கு மீளப்பெயர்குறித்தல் முதலியன

1. நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் திறக்கப்பட்ட ஏற்கனவேயுள்ள எல்லா வெளிநாட்டு வர்த்தகக் கடன்பெறுகைக் கணக்குகளும், இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆட்களிடமிருந்து அத்தகைய வெளிநாட்டு வர்த்தகக் கடன்பெறுகைக் கணக்கினூடாக வதிவுள்ள கடன்பெறுநர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக்கடன்கள் முழுமையாகக் கொடுத்துத்தீர்க்கப்படும்வரை, தொடர்ந்து தொழிற்படுத்தப்படுதல் வேண்டும்.

2. 2017ஆம் ஆண்டு நவம்பர் 17ஆந் தேதிய 2045/56ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் நோக்கத்திற்காக கணக்குகளைத் திறத்தலும் பேணுதலும்) ஒழுங்குவிதிகளின்கீழ் மீளப்பெயர்குறிக்கப்பட்ட எல்லா உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளும்,

அத்தகைய ஒழுங்குவிதிகள் ஒழிக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும், மீளப்பெயர்குறிக்கப்பட்டவாறு தொடர்ந்து தொழிற்படுத்தப்படுதல் வேண்டும்.

## பாகம் VI

கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்குமான அதிகாரம்

1. உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகள்

ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி, இவ்வொழுங்குவிதிகளின்கீழ் குறித்துரைக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களைக் கையாள்வதற்குப் பின்வரும் தகவுடைய ஆட்களின் பெயரில் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்குமான அதிகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(1) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற நாட்டினத்தவர் அல்லாத ஒருவர்;
(2) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற இரட்டைப் பிரசாவுரிமையுடைய இலங்கைப் பிரசை ஒருவர்;
(3) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்றவரும் வேறொரு நாட்டில் நிரந்தர வதிவந்தஸ்தை அல்லது பிரசாவுரிமையைப் பெற்றுள்ளவருமான இலங்கை நாட்டினத்தவர்;
(4) இலங்கைக்கு வெளியே வதிகின்றவரும் வெளிநாட்டில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளவருமான இலங்கைப் பிரசையொருவர் (குடியகல்வோர் நீங்கலாக);
(5) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்று;
(6) இலங்கைக்கு வெளியே பதிவுசெய்யப்பட்ட பங்காண்மையொன்று;
(7) இலங்கைக்கு வெளியே தாபிக்கப்படுகின்ற நாட்டு நிதியங்கள், பிராந்திய நிதியங்கள், பரஸ்பர நிதியங்கள், கூறு நம்பிக்கைப்பொறுப்புக்கள் மற்றும் வெளிநாட்டு நிறுவனஞ்சார் முதலீட்டாளர்கள்;
(8) ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியிடம் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியிடம் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றைப் பேணிவந்த ஓர் இறந்த ஆளின் மரணச்சொத்தினது நிறைவேற்றுநர் அல்லது நிருவாகியொருவர்;
(9) ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியிடம் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியிடம் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றைப் பேணிவந்த கம்பனியொன்றின் பெறுநர் அல்லது ஒழிப்போன் ஒருவர்; அத்துடன்
(10) காலத்திற்குக்காலம் மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்படக்கூடிய வேறெவரேனும் ஆள் அல்லது வகுதியினரான ஆட்கள்.

2. வெளிநாட்டு வர்த்தகக் கடன்பெறுகைக் கணக்குகள்

ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி, சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆட்களிடமிருந்து கடன்பெறுவதற்கு அனுமதிக்கப்படுகின்ற ஆட்களின்பெயரில் வெளிநாட்டு வர்த்தகக் கடன்பெறுகைக் கணக்கைத் திறப்பதற்கும் பேணுவதற்குமான அதிகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. ஏனைய நியதிகளும் நிபந்தனைகளும்

(1) உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளையும் வெளிநாட்டு வர்த்தகக் கடன்பெறுகைக் கணக்குகளையும் திறப்பதற்கும் பேணுவதற்குமான கட்டளைகள், அத்தகைய கணக்குகளுக்கான அனுமதிக்கப்பட்ட பற்றுகளும் வரவுகளும், சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின்மூலம் குறித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(2) ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி, அட்டவணையின் இப்பாகத்தின் 1ஆம், 2ஆம் பந்திகளிற் குறித்துரைக்கப்பட்ட கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் நாடுகின்ற ஆட்கள், சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட இயைபான பணிப்புகளிற் குறித்துரைக்கப்பட்ட கட்டளைகளின்கீழ் அத்தகைய கணக்கைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் தகவுடையவர்களா என்பதை நிச்சயிப்பதற்கு உரிய விழிப்புக்கவனத்தையும் நியாயமான கவனத்தையும் பிரயோகித்தல் வேண்டும். ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியும், கணக்குவைத்திருப்போர் தொடர்பான தகவல்களையும் ஆவணச்சான்றையும், கணக்கைப் பேணும்போது அவர்களின் தகவுடைமைக்கான எண்பிப்பாகவும் அத்தகைய கணக்குகளை மூடியபின்னர் ஆறாண்டுகளுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்காகவும் பேணுதல் வேண்டும்.

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

**2213/36ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03ஆந் திகதி புதன்கிழமை**

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

பகுதி I : தொகுதி (I) - பொது

**அரசாங்க அறிவித்தல்கள்**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.**

மஹிந்த ராஜபக்ஷ,
**நிதி அமைச்சர்.**

கொழும்பு,
2021, பெப்புருவரி 03.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2021ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணி (குடியகல்வோரினால் நிதிகளின் அனுப்புதொகை) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2021, மாச்சு 22 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தொழிற்படுத்தப்படல் வேண்டும்.

2. இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாகக் குடியகல்வோரினால் நிதிகளின் அனுப்புத்தொகையானது, இவ்வொழுங்குவிதிகளிலும் இதற்கான அட்டவணையிலும் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய வரையறைகள், நியதிகள், நிபந்தனைகள் என்பவற்றுக்கமைய, சட்டத்தின் 4ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட அளவுக்கு ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியினால் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியினால் நிறைவேற்றப்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் அதிகாரமளிக்கப்பட்ட வகுப்புகளாதல் வேண்டும்.

3. இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதனக் கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதில், ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியும் சட்டத்தின் 9ஆம் பிரிவின்கீழ் காலத்துக்குக்காலம் மத்திய வங்கியினால் அதற்கெனவழங்கப்பட்ட பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

4. (1) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியும் அதற்கென ஆவணமுறையான சான்றைப் பெற்றுக்கொள்வதன்மூலம் பின்வருவனவற்றை நிச்சயித்தல் வேண்டும்:-

   (அ) கொடுக்கல்வாங்கலை நிறைவேற்றுகின்ற ஆளின் நல்லெண்ணம்; அத்துடன்

   (ஆ) அத்தகைய கொடுக்கல்வாங்கல் இவ்வொழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகவுள்ளதென்று.

   (2) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட்டுள்ள ஒவ்வோராளும், (1)ஆம் பந்தியின் நோக்கத்துக்காக அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிக்கு அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிக்கு அவசியமான எல்லா ஆவணமுறையான சான்றையும் வழங்குதல் வேண்டும்.

   (3) ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியும் இவ்வொழுங்குவிதிகளின் கீழ் வெளிநாட்டுச் செலாவணியிலான அத்தகைய மூலதனக் கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதில் உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் பிரயோகித்தல் வேண்டும்.

5. மத்திய வங்கியானது, இவ்வொழுங்குவிதிகளுக்கிணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி, மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி அல்லது ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியாகவிராத வேறெவரேனுமாள் தொடர்பில் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அது அவசியமெனக் கருதுகின்றவாறான அத்தகைய நடவடிக்கையை எடுக்கலாம்.

6. (1) இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காகப் "பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம்" என்பது, பின்வருவன என்று பொருளாகும்:-

   (அ) ஐக்கிய அமெரிக்க டொலர் (ஐஅடொ);
   (ஆ) யூரோ;
   (இ) ஸ்டேர்லிங் பவுண்;
   (ஈ) அவுஸ்திரேலிய டொலர்;
   (உ) சிங்கப்பூர் டொலர்;
   (ஊ) சுவீடன் குரோனர்;
   (எ) சுவிஸ் பிரான்க்;
   (ஏ) கனேடிய டொலர்;

(ஐ) ஹொங்கொங் டொலர்;
(ஒ) யப்பானிய யென்;
(ஓ) டென்மார்க் குரோனர்;
(ஔ) நோர்வே குரோனர்;
(க) சீன ரென்மின்பி; அத்துடன்
(ங) நியூசீலாந்து டொலர்.

(2) மத்திய வங்கியானது, காலத்துக்குக்காலம், சட்டத்தின் 9ஆம் பிரிவின்கீழ் அதற்கென வழங்கப்பட்ட பணிப்புகளின்மூலம், (1) ஆம் பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களைத் திருத்தலாம், மாற்றலாம் அல்லது அவற்றுக்கு எதனையும் சேர்க்கலாம்.

7. 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17ஆந் தேதிய 2045/56ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையும், 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டவையுமான 2017ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளினால் கொண்டுநடாத்தப்படும் வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புகள்) பற்றிய ஒழுங்குவிதிகள் ஒழிக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும், அதன் செல்லுபடிக் காலப்பகுதி 2020, திசெம்பர் 18ஆந் தேதிய 2206/25ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் நீடிக்கப்பட்டதும், மற்றும் 2020, யூலை 2ஆந் தேதிய 2182/37ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதுமான கட்டளையானது, அவ்வாறு நீடிக்கப்பட்ட காலப்பகுதியின்போது பயனுறுதல் வேண்டும்.

8. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக-

"சட்டம்" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் என்று பொருளாகும்;

"அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"மூலதனக் கொடுக்கல்வாங்கல்" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"மத்திய வங்கி" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"குடியகல்பவர்" என்பது,-

(அ) வேறொரு நாட்டில் நிரந்தர வதிவந்தஸ்த்தை அல்லது பிரசாவுரிமையைப் பெற்றுள்ள இலங்கையரொருவர்;

(ஆ) அவரது தாய் அல்லது தகப்பன் இலங்கையில் பிறந்துள்ள, இரட்டைப் பிரசாவுரிமையைக் கொண்டிருக்கின்ற இலங்கைப் பிரசையொருவர்; அல்லது

(இ) (i) அவரது தாய் அல்லது தகப்பன் இலங்கையில் பிறந்துள்ள; அத்துடன்

(ii) அவரது பிறப்பு இலங்கையில் பதிவுசெய்யப்பட்டுள்ள,

இலங்கைப் பிரசையல்லாத ஒருவர் என்று பொருளாகுமென்பதுடன் (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆட்களின் பராயமடையாதோரையும் உள்ளடக்கும்;

"ஊழியர் சகாய நிதியம்" என்பது, 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஊழியர் சகாய நிதியம் என்று பொருளாகும்;

"ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்" என்பது, 1980ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்று பொருளாகும்;

"கிட்டிய குடும்பவுறுப்பினர்கள்" என்பது, இயைபான ஆளின் பெற்றோர், பாட்டன்மார் பாட்டிமார், உடன்பிறந்தோர் மற்றும் வாழ்க்கைத்துணை என்று பொருளாகும்;

"உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"அமைச்சர்" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"பணச்சபை" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"பெற்றோர் புலம்பெயர் செய்திட்டம்" என்பது, ஒரு வெளிநாட்டில் நிரந்தர வதிவந்தஸ்தை அல்லது பிரசாவுரிமையைப் பெற்றுள்ள ஆளொருவரின் பெற்றோர் அத்தகைய வெளிநாட்டில் நிரந்தர வதிவந்தஸ்தைப் பெறுவதற்கு அத்தகைய நாட்டினால் தொழிற்படுத்தப்பட்டவொரு செய்திட்டம் என்று பொருளாகும்;

"நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்" என்பது, (423ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் என்று பொருளாகும்;

"மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"தற்காலிக வதிவு விசா" என்பது, குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதற்கமைய, எதிர்காலத் தேதியொன்றில் அந்நாட்டில் நிரந்தர வதிவந்தஸ்தை அல்லது பிரசாவுரிமையைப் பெறுவதற்குத் தனியாளை உரித்துள்ளவராக்குகின்ற விசா வகுதியினுள் அடங்குகின்றதும் இலங்கைப் பிரசையொருவரினால் பெறப்பட்டதுமானவொரு விசா என்று பொருளாகும்.

(ஒழுங்குவிதி 2)

**அட்டவணை**

**பாகம் I**

**குடியகல்வோரினால் நிதிகளின் அனுப்புதொகை**

1. இவ்வொழுங்குவிதிகளில் தரப்பட்டுள்ள வரையறைகளுக்கும் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய, 18 வயதினராக அல்லது அதற்கு மேற்பட்டவராக உள்ள குடியகல்பவர் ஒருவர், இலங்கை ரூபாக்களை வெளிநாட்டு நாணயமாக மாற்றுவதனை உட்படுத்துகின்ற புலம்பெயர் படியை உரிமைகோருவதற்குத் தகவுடையவராகவுள்ளார்.

2. புலம்பெயர்படியானது பின்வருவனவற்றிலிருந்து உரிமைகோரப்படுதல் வேண்டும்:-

   (1) இலங்கையில் வதிபவராகவிருக்கையில் குடியகல்பவரினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது இவ்வொழுங்குவிதிகள் பயனுக்கு வருவதற்குமுன்னர் அத்தகைய ஆளின் இலங்கை ரூபாக் கணக்குகளினூடாக நிதிகளைப் பயன்படுத்துவதன்மூலம் கொள்ளப்பட்ட அல்லது இவ்வட்டவணையின் இப்பாகத்தின் 8ஆம் பந்தியின்கீழ் அனுமதிக்கப்பட்டவாறு கொள்ளப்பட்ட (அசைவுள்ள, அசைவற்ற, உருவ மற்றும் அருவச் சொத்துக்கள் உட்பட) இலங்கையிலுள்ள ஏதேனும் சொத்திலிருந்து தேறிப்பெறப்பட்ட எவையேனும் வரும்படிகள்;

   (2) இலங்கையில் வதிபவராகவுள்ள ஆளொருவரிடமிருந்து ஒரு குடியகல்பவரினால் மரபுரிமையாகப் பெறப்பட்ட (தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் அல்லது உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளில் வைத்திருக்கப்பட்ட நிதிகள் நீங்கலாக, அசைவுள்ள, அசைவற்ற, உருவ மற்றும் அருவச் சொத்துக்கள் உட்பட) இலங்கையிலுள்ள ஏதேனும் சொத்திலிருந்து தேறிப்பெறப்பட்ட எவையேனும் வரும்படிகள்;

   (3) இலங்கையில் வதிகின்ற ஆளொருவராகவுள்ள கிட்டிய குடும்பவுறுப்பினரொருவரிடமிருந்து ஒரு குடியகல்பவரினால் கொடையாகப் பெறப்பட்ட (தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் அல்லது உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளில் வைத்திருக்கப்பட்ட நிதிகள் நீங்கலாக, அசைவுள்ள, அசைவற்ற, உருவ மற்றும் அருவச் சொத்துக்கள் உட்பட) இலங்கையிலுள்ள ஏதேனும் சொத்திலிருந்து தேறிப்பெறப்பட்ட எவையேனும் வரும்படிகள்;

   (4) இலங்கையில் வதிபவராகவிருக்கையில் செய்யப்பட்ட அல்லது இவ்வொழுங்குவிதிகள் பயனுக்கு வருமுன்னர் அவரது அல்லது அவளது இலங்கை ரூபாக் கணக்குகளினூடாகச் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து குடியகல்பவருக்குக் கிட்டிய குடும்பவுறுப்பினர் ஒருவராகவுள்ள வேறொரு குடியகல்பவரிடமிருந்து (அதாவது கைமாற்றுநரிடமிருந்து) மரபுரிமையாகப் பெறப்பட்ட அல்லது கொடை என்றவகையாகப் பெறப்பட்ட அல்லது கைமாற்றுநரினால் மரபுரிமையாகப் பெறப்பட்ட அல்லது கைமாற்றுநரினால் கொடை என்ற வகையாகப் பெறப்பட்ட அல்லது அட்டவணையின் இப்பாகத்தின் 8ஆம் பந்தியின்கீழ் அனுமதிக்கப்பட்டவாறாகச் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து (தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் அல்லது உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளில் வைத்திருக்கப்பட்ட நிதிகள் நீங்கலாக, அசைவுள்ள, அசைவற்ற, உருவ மற்றும் அருவச் சொத்துக்கள் உட்பட) இலங்கையிலுள்ள ஏதேனும் சொத்திலிருந்து தேறிப்பெறப்பட்ட எவையேனும் வரும்படிகள்; அல்லது

   (5) (அசைவுள்ள, அசைவற்ற, உருவ மற்றும் அருவச் சொத்துக்கள் உட்பட) இலங்கையிலுள்ள ஏதேனும் சொத்திலிருந்து தேறிப்பெறப்பட்ட நிதிகளாகவுள்ளவையும், கிட்டிய குடும்பவுறுப்பினரொருவரிடமிருந்து குடியகல்பவரினால் பெறப்பட்டவையுமான பணவகையான கொடைகள்.

3. இவ்வட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட புலம்பெயர் படிக்குப் பின்வரும் வரையறைகள் ஏற்புடையனவாதல் வேண்டும்:-

   (1) குடியகல்பவர் ஒருவருக்கு ஐஅடொலர் 200,000 கொண்ட ஆரம்பப் புலம்பெயர் படியொன்று.

(2) ஐஅ டொலர் 30,000 கொண்ட வருடாந்தப் புலம்பெயர்படி; ஆரம்பப் புலம்பெயர்படி முழுமையாகப் பயன்படுத்தப்பட்ட பின்னர் குறைந்தபட்சம் 12 மாதங்கள் கழிந்தபின்னர், அத்தகைய முதலாவது வருடாந்தப் படி கைமாற்றத்தக்கதாகும். முதலாவது வருடாந்தப்படி தவிர, அடுத்துப்பின்னரான படிகள் பஞ்சாங்க ஆண்டொன்றுக்குக் கைமாற்றத்தக்கனவாக இருத்தல் வேண்டும் என்பதுடன், (அந்நிதிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கமைய ஒரு வங்கிக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு பேணப்பட்டிருப்பின் அத்தகைய காலப்பகுதிக்காக), ஒன்றுதிரளுகையில் கைமாற்றப்பட முடியுமாக இருத்தலும் வேண்டும்;

(3) 2017, நவெம்பர் 20ஆந் திகதிக்கு முன்னர் ஆரம்பப் புலம்பெயர் படியின் பாகத்தை உரிமை கோரியுள்ளவொரு குடியகல்பவருக்காக, 150,000 ஐஅ டொலரிலிருந்தான மீதி மற்றும் அட்டவணையின் இப்பாகத்தின் 3ஆம் பந்தியின் (2) ஆம் உட்பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டவாறாக 30,000 ஐஅ டொலரைக் கொண்ட அடுத்துப் பின்னரான வருடாந்தப் படி;

(4) 2017, நவெம்பர் 20ஆந் திகதிக்கு முன்னர் ஆரம்பப் புலம்பெயர் படியை முழுமையாகப் பயன்படுத்தியுள்ள குடியகல்பவருக்காக 2013, 2014, 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளுக்காகப் பஞ்சாங்க ஆண்டொன்றிற்கு 20,000 ஐஅ டொலரைக் கொண்ட ஏதேனும் ஒன்றுதிரண்ட வருடாந்தப் படி மற்றும் அட்டவணையின் இப்பாகத்தின் 3 ஆம் பந்தியின் (2)ஆம் உட்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்டவாறாக 30,000 ஐஅ டொலரைக் கொண்ட அடுத்துப்பின்னரான வருடாந்தப் படி.

4. குடியகல்பவரொருவர் எந்நாட்டில் நிரந்தர வதிவுரிமையை அல்லது பிரசாவுரிமையைப் பெற்றுள்ளாரோ அந்நாட்டில், வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினூடாக இலங்கையில் வதிபவராகவிருக்கையில் சொல்லப்பட்ட தனியாளினால் செய்யப்பட்ட முதலீடுகளின் மொத்தப் பெறுமதியானது, தகவுடைய புலம்பெயர் படியை உரிமை கோருகின்ற நேரத்தில், தகவுடைய புலம்பெயர் படியிலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.

5. வெளிநாடுகளினால் தொழிற்படுத்தப்படுகின்ற “பெற்றோர் புலம்பெயர் செய்திட்டங்கள்” என்ற விடயத்தில், விசா பெறுவதற்காக அத்தகைய தனியாட்களினால் கடல்கடந்த அதிகாரிகளுக்குச் செலுத்தப்படவேண்டிய கொடுப்பனவுகளுக்கான நிதிகள், சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கமைய, அத்தகைய தனியாட்களினால் திறக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கினூடாக அனுப்பப்படுதல் வேண்டும். கொடுப்பனவு எந்நாட்டுக்குச் செலுத்தப்பட்டதோ அந்நாட்டில் நிரந்தர வதிவுரிமையைப் பெற்றதன்மேல், அத்தகைய கொடுப்பனவுகளின் மொத்தத்தொகை, தகவுடைய புலம்பெயர் படியை உரிமைகோருகின்ற நேரத்தில் அத்தகைய தனியாட்களின் தகவுடைய புலம்பெயர் படியிலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.

6. பதினெட்டு வயதினராக அல்லது அதற்கு மேற்பட்டவராகவுள்ள இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்றவரும் வேறொரு நாட்டில் தற்காலிக வதிவு விசாவைப் பெற்றுள்ளவருமான இலங்கையரான தனியாளொருவர் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கமைய, அதிகபட்சம் 30,000 ஐஅடொலர்களை உரிமைகோரலாம். அத்தகைய ஆட்களினால் திறக்கப்பட்டவொரு மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கினூடாக அத்தகைய ஆட்கள் சொல்லப்பட்ட படியை உரிமைகோரலாம். அவ்வாறு உரிமைகோரப்பட்ட தொகைகள், புலம்பெயர் படியை உரிமைகோருகின்ற நேரத்தில் தகவுடைய புலம்பெயர் படியிலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.

7. திருப்பியனுப்பும் முறை

(1) அட்டவணையின் இப்பாகத்தின் 5ஆம், 6ஆம் பந்திகளின்கீழ் குறித்துரைக்கப்பட்ட குடியகல்வோர் அல்லது ஆட்கள், தகவுடைய படிகளைத் திருப்பியனுப்பும் நோக்கத்துக்காக, மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புக்கமைய, வங்கித்தொழில் முறைமையில் ஒரு மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கை மட்டுமே திறத்தலும் பேணுதலும் வேண்டும்.

(2) குடியகல்பவரொருவர், அட்டவணையின் இப்பாகத்தின் 7(4)ஆம் உட்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அவரது அல்லது அவளது வருமானத்தைத் திருப்பியனுப்பும் நோக்கத்துக்காகத் தனிவேறான கணக்கொன்றைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் தேவைப்படுத்தப்படின், அத்தகைய ஆள், சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கமைய, அதே நோக்கத்துக்காக, ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியுடன் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியுடன் ஒரு குடியகல்வோரின் அனுப்பத்தக்க வருமானக் கணக்கை மட்டுமே திறந்து பேணலாம். எவ்வாறாயினும், மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கு மற்றும் குடியகல்வோரின் அனுப்பத்தக்க வருமானக் கணக்கு ஆகிய இரண்டும் அதே அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியிடம் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியிடம் திறக்கப்படுதலும் பேணப்படுதலும் வேண்டும்.

(3) புலம்பெயர் படியானது, விண்ணப்பகாரரின் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குக்கு அல்லது உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குக்கு அல்லது குடியகல்பவரின் இலங்கையிலுள்ள உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் கரைகடந்த வங்கித்தொழிற் கூறொன்றிலுள்ள கணக்கொன்றுக்கு அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள கணக்கொன்றுக்கு மூலதனக் கொடுக்கல் வாங்கல் ரூபாக் கணக்கிலிருந்து கைமாற்றப்படலாம்.

(4) அட்டவணையின் இப்பாகத்தின் 2ஆம் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட எவையேனும் சொத்துக்களிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் வருமானம் மற்றும் மூப்போய்வூதிய நன்மைகள் (ஊழியர் சகாய நிதியம் (ஊசநி), ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் (ஊநநி), பணிக்கொடை அத்துடன் ஓய்வூதியங்கள் அல்லது வேறெவையேனும் இளைப்பாற்று நன்மைகள்

உட்பட) விடயத்துக்கேற்ப, முறையான மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்குக்கு அல்லது குடியகல்வோரின் அனுப்பத்தக்க வருமானக் கணக்குக்கு அல்லது வதிவற்ற ரூபாக் கணக்குக்கு வரவுவைக்கப்படலாமென்பதுடன் தகவுடைய புலம்பெயர் படிக்கு அமைந்ததாகவிராமல், குடியகல்பவரின் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கினூடாக அல்லது குடியகல்வோரின் அனுப்பத்தக்க வருமானக் கணக்கினூடாக மட்டும் திருப்பியனுப்பப்படுதலும் வேண்டும். அத்தகைய நிதிகள் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கிலிருந்து அல்லது குடியகல்பவரின் அனுப்பத்தக்க வருமானக் கணக்கிலிருந்து குடியகல்வோரின் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றுக்கு அல்லது உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றுக்கு அல்லது இலங்கையிலுள்ள உரிமமளிக்கப்பட்டவொரு வர்த்தக வங்கியில் கரைகடந்த வங்கித்தொழிற் கூறிலுள்ள கணக்கொன்றுக்கு அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள கணக்கொன்றுக்குக் கைமாற்றப்படலாம்.

8. இலங்கையில் வைத்திருக்கப்பட்ட நிதிகளிலிருந்து குடியகல்வோரினாலான முதலீடுகள்

(1) குடியகல்பவரொருவர், அத்தகைய குடியகல்பவரின் வதிவற்ற ரூபாக் கணக்குகளில் வைத்திருக்கப்பட்ட நிதிகளிலிருந்து 2021, பெப்புருவரி 3ஆந் திகதிய 2213/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவரினால் இலங்கையில் பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புகள்) பற்றிய ஒழுங்குவிதிகளின்கீழ் அனுமதிக்கப்பட்டவாறாக இலங்கையில் முதலீடுகளைச் செய்வதற்கு அனுமதிக்கப்படுகின்றார்.

(2) அத்தகைய முதலீடுகளின் எல்லா வருமானமும் மூலதன வரும்படிகளும், அம்முதலீடானது முறையான எந்த வதிவற்ற ரூபாக் கணக்குகளினூடாகச் செய்யப்பட்டதோ முறையான அந்த வதிவற்ற ரூபாக் கணக்குகளுக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய முதலீடுகளின் எல்லா வருமானமும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின்படி, தகவுடைய புலம்பெயர் படிக்கமையவிராது, விடயத்துக்கேற்ப, குடியகல்பவரின் முறையான மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்கினூடாக அல்லது குடியகல்வோரின் அனுப்பத்தக்க வருமானக் கணக்கினூடாக மட்டும் திருப்பியனுப்பப்படுதல் வேண்டும்.

(4) அத்தகைய முதலீடுகளின் எவையேனும் மூலதன வரும்படிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான தகவுடைய புலம்பெயர் படிக்கமைய, மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கினூடாக மட்டும் திருப்பியனுப்பப்படலாம்.

9. குடியகல்பவரொருவரினால் மரபுரிமையாகப் பெறப்பட்ட அல்லது அத்தகைய குடியகல்பவரினால் இலங்கையில் வைத்திருக்கப்பட்ட இலங்கை ரூபாக்களைப் பயன்படுத்துவதன்மூலம் கொள்வனவுசெய்யப்பட்ட அசைவற்ற ஆதனமொன்றைக் குடியகல்பவர் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற எவரேனுமாளுக்கு விற்பனை செய்யும் பட்சத்தில், அத்தகைய ஆதனத்தின் விற்பனை தொடர்பிலான பிரதிபயனின் கொடுப்பனவு இலங்கை ரூபாக்களில் செலுத்தப்பட்டு அக்குடியகல்பவரின் ஒரு வதிவற்ற ரூபாக் கணக்குக்கு அல்லது மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்குக்கு மட்டுமே வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

10. ஏனைய நியதி நிபந்தனைகள்

(1) குடியகல்பவரொருவர் எந்த நாட்டில் நிரந்தர வதிவந்தஸ்த்தைப் பெற்றுள்ளாரோ அந்த நாட்டில் நிரந்தரமாகக் குடியமரும் நோக்கத்துக்காக இலங்கையை விட்டுச்செல்வதற்கு அவர் அல்லது அவள் எதிர்பார்க்குமிடத்து, அவர் அல்லது அவள் எந்த அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளுடன் இலங்கை ரூபாக் கணக்குகளைப் பேணுகின்றாரோ அந்த அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளுக்கு, அத்தகைய தனியாளின் அத்தகைய ரூபாக் கணக்குகளை வதிவற்ற ரூபாக் கணக்குகளாக மீளப்பெயர் குறிப்பதற்கென, அவரின் அல்லது அவளின் புலம்பெயர்வு தொடர்பாக அறிவித்தல் வேண்டும். ஏலவே ஒரு குடியகல்பவராகவுள்ள தனியாளொருவர், இவ்வொழுங்குவிதிகள் பயனுள்ளனவாக வருகின்றதிலிருந்து 6 மாதங்களுள் அவ்வாறு செய்வதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) புலம்பெயர் படியானது இலங்கையை விட்டுச்செல்லும் நேரத்தில் (ஆரம்பத்தில் அல்லது அடுத்துப்பின்னர்) அல்லது குடியகல்பவர் இலங்கைக்கு வெளியே வதிகின்ற காலத்தின்போது மட்டுமே உரிமைகோரப்படுதல் வேண்டும்.

## பாகம் II

சட்டம் நடைமுறைக்கு வருவதற்குமுன்னர் வழங்கப்பட்டிருந்தவையும் இவ்வொழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களைக் கணிசமானளவில் ஒத்திருக்கின்றவையுமான ஏதேனும் (பொதுவான அல்லது விசேடமான) அங்கீகாரத்தின்கீழ் பொறுப்பேற்கப்பட்ட ஏற்கனவேயுள்ள எல்லா மூலதனக் கொடுக்கல்வாங்கல்களும், இவ்வொழுங்குவிதிகளினால் அல்லது எவையேனும் அடுத்துப் பின்னரான ஒழுங்குவிதிகளினால் குறிப்பாக வேறுபடுத்தப்பட்டாலொழிய, அத்தகைய அங்கீகாரத்தின்கீழ் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களுக்காகக் குறித்துரைக்கப்பட்ட நியதி நிபந்தனைகளுக்கமைய, தொடர்ந்து நடாத்தப்படலாம்.

## பாகம் III

### கணக்குகளுக்கு மீளப்பெயர் குறித்தல் முதலியன

1. எல்லா மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்குகளுக்கும், அவற்றுக்கான பதிவிலக்கமொன்று மத்திய வங்கியினால் வழங்கப்பட்டுள்ள கணக்குகளைத் தவிர, சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கமைய, இவ்வொழுங்குவிதிகள் வர்த்தமானியில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள் மீளப்பெயர் குறிக்கப்பட்டு வதிவற்ற ரூபாக் கணக்குகளாக அவை தொடர்ந்து தொழிற்படுத்தப்படுதல் வேண்டும்.

2. இலங்கைக்கு வெளியே பதிவுசெய்யப்பட்ட வெளிநாட்டுக் குழுமங்களினாலும் கம்பெனிகளினாலும் இலங்கைக்கு வெளியே வதிகின்றவர்களும் வெளிநாட்டில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளவர்களுமான இலங்கையரினாலும் பேணப்பட்ட ஏற்கனவேயுள்ள எல்லா மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்குகளுக்கும், சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கமைய, இவ்வொழுங்குவிதிகள் வர்த்தமானியில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள் மீளப்பெயர் குறிக்கப்பட்டு அவை முறையே வதிவற்ற ரூபாக் கணக்குகளாகவும் இலங்கை ரூபாக் கணக்குகளாகவும் தொடர்ந்து தொழிற்படுத்தப்படுதல் வேண்டும்.

3. சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கமைய, குடியகல்பவரொருவர் எந்த நாட்டில் நிரந்தர வதிவந்தஸ்த்தைப் பெற்றுள்ளாரோ அந்த நாட்டில் நிரந்தரமாகக் குடியமரும் நோக்கத்துக்காக அவர் அல்லது அவள் இலங்கையை விட்டுச்செல்வதற்கு எதிர்பார்க்கின்றவிடத்து, அக்குடியகல்பவரினால் பேணப்பட்ட எல்லா இலங்கை ரூபாக் கணக்குகளுக்கும், அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி அத்தகைய குடியகல்பவரின் புலம்பெயர்வு பற்றி எந்நேரத்தில் அறிந்ததோ அந்த நேரத்திலிருந்து உடனடியாக மீளப்பெயர் குறிக்கப்பட்டு, வதிவற்ற ரூபாக் கணக்குகளாக அவை தொடர்ந்து தொழிற்படுத்தப்படுதல் வேண்டும்.

4. ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி, வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் தலைவரினால் வழங்கப்பட்ட பதிவிலக்கத்துடன் ஏற்கனவே மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்குகளைத் திறந்துள்ள குடியகல்வோரின் பெயர்களில், சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கமைய, குடியகல்வோரின் அனுப்பத்தக்க வருமானக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அனுமதிக்கப்படுகின்றது அல்லது அனுமதிக்கப்படுகின்றார்.

## பாகம் IV

### கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்குமான அதிகாரம்

1. மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்குகள்

ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி, இவ்வொழுங்குவிதிகளின்கீழ் குறித்துரைக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களைக் கையாள்வதற்குப் பின்வரும் தகவுடைய ஆட்களின் பெயரில் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்குமான அதிகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(1) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஒரு குடியகல்பவர்;

(2) ஒரு பராயமடையாதவர் உட்பட இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஒரு நாட்டினத்தவர் அல்லாதவர்;

(3) 18 வயதினரானவரும் அல்லது அதற்குமேற்பட்டவரும் தற்காலிக வதிவு விசாவின்கீழ் வேறொரு நாட்டுக்குப் புறப்பட்டுச் செல்வதற்கு உட்கருதுகின்றவருமான ஒரு தனிப்பட்ட இலங்கையர்;

(4) பெற்றோர் புலம்பெயர் செய்திட்டமொன்றின்கீழ் புலம்பெயர்ந்தவராக வரவுள்ள ஒரு தனிப்பட்ட இலங்கையர்;

(5) மேலே (1)ஆம் மற்றும் (2)ஆம் உட்பந்திகளிற் குறிப்பீடுசெய்யப்பட்ட இறந்த ஆளொருவரின் மரணச்சொத்தின் நிருவாகம் பூர்த்தி செய்யப்படும்வரை, அத்தகைய இறந்த ஆளின் மரணச்சொத்தின் ஒரு நிருவாகி அல்லது நிறைவேற்றுநர்; அல்லது

(6) காலத்துக்குக்காலம் மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்படக்கூடிய வேறெவரேனுமாள் அல்லது வகுதியினரான ஆட்கள்.

2. குடியகல்வோரின் அனுப்பத்தக்க வருமானக் கணக்குகள்

ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி, குடியகல்வோரின் அனுப்பத்தக்க வருமானக் கணக்குகளை, இவ்வட்டவணையின் பாகம் Iஇன் 7(4)ஆம் உட்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்டதும் இலங்கையிற் பெறப்பட்டதுமான அவரது அல்லது அவளது நடப்பு வருமானத்தைத் திருப்பியனுப்பும் நோக்கத்துக்காகப் பின்வரும் தகவுடைய ஆட்களின் பெயரில் திறந்து பேணுவதற்கான அதிகாரத்தை, அத்தகைய குடியகல்பவரினால் பூலோக ரீதியில் பெறப்பட்ட நடப்புக் கணக்கை அடையாளங்காண்பதற்குக் குடியகல்பவர் நிரந்தரமாக வதிகின்ற நாட்டில் ஒழுங்குபடுத்தும் தேவைப்பாடொன்று இருந்தால் மட்டுமே கொண்டிருத்தல் வேண்டும்-

(அ) ஒரு குடியகல்பவர்;

(ஆ) காலத்துக்குக்காலம் மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்படக்கூடிய வேறெவரேனுமாள் அல்லது வகுதியினரான ஆட்கள்.

3. வதிவற்ற ரூபாக் கணக்குகள்

ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது ஒரு மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி, இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணையின் பாகம் I இன் 8ஆம் பந்தியில் விதிக்கப்பட்ட, இலங்கையில் உள்நாட்டுக் கொடுக்கல்வாங்கல்களையும் அனுமதிக்கப்பட்ட முதலீடுகளையும் வசதிப்படுத்துவதற்கு காலத்துக்குக்காலம் திருத்தப்படக்கூடியவாறாக, 2021, பெப்புருவரி 3ஆந் திகதிய 2213/38ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற நோக்கத்துக்காகக் கணக்குகளைத் திறத்தலும் பேணுதலும்) பற்றிய ஒழுங்குவிதிகளின்படி குடியகல்வோருக்கான வதிவற்ற ரூபாக் கணக்குகளைத் திறந்து பேணுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது.

4. ஏனைய நியதிகளும் நிபந்தனைகளும்

(1) அட்டவணையின் இப்பாகத்தின் 1ஆம் பந்தியின்கீழ் குறித்துரைக்கப்பட்டவாறான எவரேனும் தகவுடைய ஆள் இலங்கையிலுள்ள வங்கித்தொழில் முறைமையில் ஒரு மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கை மட்டுமே திறத்தல் வேண்டும்.

(2) அட்டவணையின் இப்பாகத்தின் 2ஆம் பந்தியின்கீழ் குறித்துரைக்கப்பட்டவாறான எவரேனும் தகவுடைய ஆள் இலங்கையிலுள்ள வங்கித்தொழில் முறைமையில் ஒரு குடியகல்பவரின் அனுப்பத்தக்க வருமானக் கணக்கை மட்டுமே திறத்தல் வேண்டும்.

(3) மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கு மற்றும் குடியகல்வோரின் அனுப்பத்தக்க வருமானக் கணக்கு ஆகிய இரண்டும் ஒரே அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியிடம் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியிடம் திறக்கப்பட்டு பேணப்படுதல் வேண்டும்.

(4) மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்குகளை அல்லது குடியகல்வோரின் அனுப்பத்தக்க வருமானக் கணக்கைத் திறப்பதற்கும் பேணுவதற்குமான கட்டளைகளும் அத்தகைய கணக்குக்காக அனுமதிக்கப்பட்ட பற்றுக்களும் வரவுகளும், சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட இயைபான பணிப்புகளில் குறித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(5) ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி, அட்டவணையின் இப்பாகத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் நாடுகின்ற ஆட்கள், சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் காலத்துக்குக்காலம் வழங்கப்பட்ட இவ்வொழுங்குவிதிகளினதும் பணிப்புகளினதும் நியதிகளின்படி அத்தகைய கணக்குகளைத் திறந்து பேணுவதற்குத் தகவுடையவர்களா என்பதை நிச்சயிப்பதற்கு உரிய விழிப்புக்கவனத்தையும் நியாயமான கவனத்தையும் பிரயோகித்தல் வேண்டும். ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியும், கணக்கைப் பேணும்போதும் அத்தகைய கணக்குகளை மூடியபின்னர் ஆறாண்டுகளுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்காகவும் கணக்கு வைத்திருப்போரின் தகவுடைமை பற்றிய எண்பிப்பாக அவர்கள் தொடர்பான தகவல்களையும் ஆவணமுறையான சான்றையும் பேணுதல் வேண்டும்.

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

**2213/37ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03ஆந் திகதி புதன்கிழமை**

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.**

மஹிந்த ராஜபக்ஷ,
**நிதி அமைச்சர்.**

கொழும்பு,
2021, பெப்புருவரி 03.

## ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2021ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (நானாவித மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புகள்) பற்றிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2021, மாச்சு 22 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தொழிற்படுத்தப்படல் வேண்டும்.

2. இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட நானாவித மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புகள், சட்டத்தின் 4ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட அளவுக்கு ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியினால் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியினால் நிறைவேற்றப்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் அதிகாரமளிக்கப்பட்ட வகுப்புகளாதல் வேண்டும்.

3. இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வெளிநாட்டுச் செலாவணியிலான நானாவித மூலதனக் கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதில், ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியும் சட்டத்தின் 9ஆம் பிரிவின்கீழ் காலத்துக்குக்காலம் மத்திய வங்கியினால் அதற்கென வழங்கப்பட்ட பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

4. (1) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வெளிநாட்டுச் செலாவணியிலான நானாவித மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியும் அதற்கென ஆவணமுறையான சான்றைப் பெற்றுக்கொள்வதன் மூலம் பின்வருவனவற்றை நிச்சயித்தல் வேண்டும்:-

   (அ) கொடுக்கல்வாங்கலை நிறைவேற்றுகின்ற ஆளின் நல்லெண்ணம்; அத்துடன்

   (ஆ) அத்தகைய கொடுக்கல்வாங்கல் இவ்வொழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகவுள்ளதென்று.

   (2) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் நானாவித மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட்டுள்ள ஒவ்வோராளும், (1)ஆம் பந்தியின் நோக்கத்துக்காக அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிக்கு அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிக்கு அவசியமான எல்லா ஆவணமுறையான சான்றையும் வழங்குதல் வேண்டும்.

   (3) ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியும் இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வெளிநாட்டுச் செலாவணியிலான அத்தகைய நானாவித மூலதனக் கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதில் உரிய எல்லா விழிப்புக் கவனத்தையும் பிரயோகித்தல் வேண்டும்.

5. மத்திய வங்கியானது, இவ்வொழுங்குவிதிகளுக்கிணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி, மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி அல்லது ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியாகவிராத வேறெவரேனுமாள் தொடர்பில் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அது அவசியமெனக் கருதுகின்றவாறான அத்தகைய நடவடிக்கையை எடுக்கலாம்.

6. ஒழுங்குவிதி 2இல் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியும் மற்றும் அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியினூடாக அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியினூடாக இவ்வொழுங்குவிதிகளின்கீழ் நானாவித மூலதனக் கொடுக்கல்வாங்கலில் ஈடுபட்டுள்ள ஆட்களும், அவர்கள் ஈடுபட்டுள்ள நானாவித மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் இவ்வொழுங்குவிதிகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களாக உள்ளன என்ற நிகழ்வுக்கான எண்பிப்பாக எல்லாத் தகவல்களையும் ஆவணமுறையான சான்றையும், அத்தகைய கொடுக்கல்வாங்கல்களின் தேதியிலிருந்து ஆறாண்டுக் காலப்பகுதியொன்றுக்கு வைத்திருத்தல் வேண்டும்.

7. சட்டம் நடைமுறைக்குவருவதற்கு முன்னர் அளிக்கப்பட்டிருந்த (பொதுவான அல்லது விசேடமான) ஏதேனும் அங்கீகாரத்தின்கீழ் பொறுப்பேற்கப்பட்டவையும் இவ்வொழுங்குவிதிகளிற் குறித்துரைக்கப்பட்ட நானாவித மூலதனக் கொடுக்கல்வாங்கல்களுக்குக் கணிசமானளவில் ஒத்ததாகவுள்ளவையுமான ஏற்கனவேயுள்ள எல்லா நானாவித மூலதனக் கொடுக்கல்வாங்கல்களும், இவ்வொழுங்குவிதிகளினால் அல்லது எவையேனும் அடுத்துப்பின்னரான ஒழுங்குவிதிகளினால் குறிப்பாக வேறுபடுத்தப்பட்டாலொழிய, அத்தகைய அங்கீகாரத்தின்கீழ் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களுக்காகக் குறித்துரைக்கப்பட்ட நியதிநிபந்தனைகளுக்கமைய, தொடர்ந்து நடாத்தப்படலாம்.

8. (1) இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காகப் "பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம்" என்பது, பின்வருவன என்று பொருளாகும்:-

   (அ) ஐக்கிய அமெரிக்க டொலர் (ஐஅடொ);
   (ஆ) யூரோ;
   (இ) ஸ்டேர்லிங் பவுண்;
   (ஈ) அவுஸ்திரேலிய டொலர்;
   (உ) சிங்கப்பூர் டொலர்;
   (ஊ) சுவீடன் குரோனர்;
   (எ) சுவிஸ் பிரான்க்;
   (ஏ) கனேடிய டொலர்;

(ஐ) ஹொங்கொங் டொலர்;
(ஒ) யப்பானிய யென்;
(ஓ) டென்மார்க் குரோனர்;
(ஔ) நோர்வே குரோனர்;
(க) சீன ரென்மின்பி; அத்துடன்
(ங) நியூசீலாந்து டொலர்.

(2) மத்திய வங்கியானது, காலத்துக்குக்காலம், சட்டத்தின் 9ஆம் பிரிவின்கீழ் அதற்கென வழங்கப்பட்ட பணிப்புகளின்மூலம், (1)ஆம் பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களைத் திருத்தலாம், மாற்றலாம் அல்லது அவற்றுக்கு எதனையும் சேர்க்கலாம்.

9. 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டவையும் 2019, ஒற்றோபர் 17 ஆந்தேதிய 2145/49ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையுமான ஒழுங்குவிதிகள், அவற்றின்கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இத்தால் ஒழிக்கப்படுகின்றன.

10. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக-

"சட்டம்" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் என்று பொருளாகும்;

"அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"மூலதனக் கொடுக்கல்வாங்கல்" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"மத்திய வங்கி" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"நடப்புக் கொடுக்கல்வாங்கல்" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"கிட்டிய குடும்பவுறுப்பினர்கள்" என்பது, பெற்றோர், வாழ்க்கைத்துணை மற்றும் பிள்ளைகள் என்று பொருளாகும்;

"அமைச்சர்" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"பணச்சபை" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சி" என்பது, 2021, பெப்புருவரி 3ஆந் தேதிய 2213/35ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவரினால் இலங்கையில் பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புகள்) பற்றிய ஒழுங்குவிதிகளிலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## அட்டவணை

### (ஒழுங்குவிதி 2)

### நானாவித மூலதனக் கொடுக்கல் வாங்கல்களின் வகுப்புகள்

அ. இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆட்களுக்கு இலங்கையில் கடன்களையும் முற்பணங்களையும் வழங்குதல்

சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட இயைபான பணிப்புகளுக்கமைய, அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகள் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிகள், பின்வரும் ஆட்களுக்கு வெளிநாட்டு நாணயத்தில் அல்லது இலங்கை ரூபாக்களில் பெயர்குறிக்கப்பட்ட கடன்களையும் முற்பணங்களையும் வழங்கலாம்:-

(1) இன்னொரு நாட்டில் நிரந்தரமாக வதிபவர்களாகவும் இலங்கையிலுள்ள வதிவிட ஆதனமொன்றைக் கொள்ளுதல், நிர்மாணித்தல், அபிவிருத்தி செய்தல் அல்லது புனரமைத்தல் என்ற நோக்கத்திற்காக இரட்டைப் பிரசாவுரிமையைக் கொண்டுள்ள பிரசைகளாகவும் உள்ள இலங்கையர்கள்.

(2) இலங்கையில் பயன்படுத்தப்பட வேண்டிய ஏதேனும் நோக்கத்துக்காகவும் இலங்கைக்கு வெளியே தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள அத்தகைய இலங்கையரின் வதிவுள்ள கிட்டிய குடும்பவுறுப்பினர்களின் நடப்புக் கொடுக்கல்வாங்கல்களினது நோக்கத்துக்காகவும் இலங்கைக்கு வெளியே தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள இலங்கையர்கள்.

ஆ. இலங்கைக்கு வெளியே கல்வியைத் தொடர்கின்ற இலங்கை மாணவர்களினாலான கடன்பெறுகைகள்

1. கல்விசார் நோக்கங்களுக்காக இலங்கைக்கு வெளியே சென்றுள்ள எவரேனும் இலங்கைப் பிரசை, வெளிநாட்டில் கல்வியைத் தொடர்ந்து கொண்டிருக்கும்பொழுது தனிவகுப்புக் கட்டணங்கள், வாழ்க்கைச் செலவுகள் மற்றும் வேறு கல்வியுடன் தொடர்புபட்ட செலவுகளை எதிர்கொள்ளும் நோக்கத்துக்காக வெளிநாடுகளிலுள்ள வங்கிகள், நிதிநிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் அல்லது கல்வி நிறுவனங்களிடமிருந்து கடன்பெறுவதற்கும் இலங்கையிலிருந்து நிதிகளை அனுப்புவதன்மூலம் அத்தகைய கடன்களைத் திருப்பிச்செலுத்துவதற்கும் அனுமதியளிக்கப்படுகின்றார்.

2. எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி, கொடுக்கல்வாங்கலின் நல்லெண்ணத்தைச் சரிபார்த்த பின்னரும் அவசியமான ஆவணமுறையான சான்றைப் பெற்றுக்கொண்டதன் பின்னரும், கல்விசார் நோக்கத்துக்காக இலங்கைக்கு வெளியே சென்றுள்ள அத்தகைய இலங்கைப் பிரசைகளின் இலங்கையிலுள்ள பெற்றோர் அல்லது பாதுகாவலர்களினால் கடன்களின் சேவைப்படுத்துதலும் திருப்பிச்செலுத்துகையாகவுமுள்ள வெளித்திரும்பல் அனுப்புதொகைகளை அந்தந்தக் கடன்கொடுக்கும் நிறுவனங்களுக்கு அளிக்கலாம்.

3. மேற்கூறப்பட்ட இலங்கைப் பிரசை நிரந்தரமான வதிவு விசாவை, இன்னொரு நாட்டில் நிரந்தர வதிவுரிமைக்கு அல்லது இன்னொரு நாட்டின் பிரசாவுரிமைக்கு (இரட்டைப் பிரசாவுரிமையுட்பட) உரித்தளிக்கின்றவொரு தற்காலிக வதிவு விசாவைப் பெற்றுக்கொள்ளும் பட்சத்தில், கடன்களைத் திருப்பிச்செலுத்துதல் தொடர்பிலான வெளித்திரும்பல் அனுப்புதொகைகள், அத்தகைய ஆளின் தகவுடைய புலம்பெயர் படிக்கு அமைந்தனவாதல் வேண்டும்.

இ. நிதிசார் பெறுதிக் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய கொடுப்பனவுகள்

அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி ஒருவர், அடிப்படைக் கொடுக்கல் வாங்கல்களின் நல்லெண்ணம் பற்றித் தம்மைத் திருப்திப்படுத்திய பின்னரும் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கிணங்கியொழுகவும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட நடப்புக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள் (அதாவது, அத்தகைய அடிப்படைக் கொடுக்கல்வாங்கல்கள்) தொடர்பிலான நிதிசார் பெறுதிக் கொடுக்கல்வாங்கல்களுக்காக வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவுகளைச் செய்யலாம்.

ஈ. தற்காலிக வதிவு விசாக்களின்கீழ் இலங்கையை விட்டுச்செல்வதற்கு உட்கருதுகின்ற ஆட்களுக்கு வெளிநாட்டுச் செலாவணியை விடுவித்தல்

ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி, இலங்கைக் குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியினால் அல்லது வேறு இயைபான அதிகாரியினால் வழங்கப்பட்ட கடவுச்சீட்டின்மீது இடப்பட்ட தோதான புறக்குறிப்பொன்றுடன், அதிகபட்சம் 15,000 ஐஅ டொலருக்கு அல்லது வேறு வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமானதற்கமைய, அத்தகைய ஆட்கள் கடல்கடந்த நாடுகளில் ஆரம்பத்தில் குடியமரும் நோக்கத்துக்கான அடிப்படைப் படியாகவுள்ள (ஓர் எதிர்காலத் தேதியில் அந்நாட்டில் நிரந்தர வதிவுரிமையை அல்லது பிரசாவுரிமையை அத்தனியாள் பெற்றுக்கொள்வதற்கு உரித்தளிக்கின்ற தற்காலிக வதிவு விசா தவிர்ந்த) தற்காலிக வதிவு விசாவின்கீழ் இலங்கையை விட்டுச்செல்வதற்கு உட்கருதுகின்ற இலங்கையில் வதிவுள்ள ஆளொருவருக்கு நியாயமான தொகையிலான வெளிநாட்டுச் செலாவணியை வழங்கலாம்.

உ. பண்டங்களின் ஏற்றுமதியாளர்களினால் ஏற்றுமதி வரும்படிகள் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்படுதல்

1. பண்டங்களின் ஏற்றுமதியாளர் ஒவ்வொருவரும், பண்டங்களின் ஏற்றுமதிக்காகப் பெறப்பட்ட கொடுப்பனவுகளை ஏற்றுமதித் திகதியிலிருந்து 180 நாட்களுக்குள் அல்லது மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு காலப்பகுதியினுள் இலங்கைக்குத் திருப்பியனுப்புதல் வேண்டும்.

2. பண்டங்களின் ஏற்றுமதியாளர் ஒவ்வொருவரும், ஒவ்வொரு ஏற்றுமதியினதும்மீதான தொடர்புடைய ஆவணச் சான்றை, கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளும் அந்தந்த அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிக்கு அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. பண்டங்களின் ஏற்றுமதியாளர்களினால் இத்தலைப்பின் கீழான தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகப் படுவதனைக் கண்காணிப்பதற்கான அமைப்புமுறையொன்றை மத்திய வங்கி அறிமுகப்படுத்தலாம் என்பதுடன், விடயத்துக்கேற்ப, சட்டத்தின் 11ஆம் பிரிவின்கீழ் அல்லது 26ஆம் பிரிவின்கீழ் அவசியமென அது கருதக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கையையும் எடுக்கலாம்.

ஊ. இலங்கையில் வதியும் ஆளொருவரினால் இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவர் சார்பில் நிதிசார் உத்தரவாதங்கள் வழங்கப்படுதல்

1. ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி, சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கமைய, நடப்புக் கொடுக்கல்வாங்கல்களும் மூலதனக் கொடுக்கல்வாங்கல்களும் தொடர்பில்,

விடயத்துக்கேற்ப, வங்கி உத்தரவாதங்களை, முறிகளை அல்லது துணைநிலைக் கடன்பத்திரங்களை வழங்குவதற்கும் புதுப்பிப்பதற்கும் அனுமதிக்கப்படுகின்றது.

2. இலங்கை அரசாங்கம் அல்லது அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் சர்வதேச முறிகளை வழங்குவதனை இயலச்செய்வதற்கு அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவரிடமிருந்து பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் கடன்பெறுவதற்கு நாட்டிற்கான பன்னாட்டு உத்தரவாதங்களை வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதிக்கப்படுகின்றது.

3. ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி, சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்டுள்ள பணிப்புகளுக்கமைய, அத்தகைய வங்கி உத்தரவாதங்களை, முறிகளை அல்லது துணைநிலைக் கடன்பத்திரங்களை வழங்குவதிலிருந்து எழுகின்ற செல்லுபடியான உரிமைக் கோரிக்கைகள் தொடர்பில் வெளித்திரும்பல் அனுப்புதொகைகளைச் செய்வதற்கும் அனுமதிக்கப்படுகின்றது.

எ. இலங்கைக்கு வெளியேயுள்ள ஒழுங்குபடுத்தப்பட்ட நிதி நிறுவனம் ஒன்றுடனான கணக்கொன்றைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் மற்றும் தொழிற்படுத்துவதற்கும் அனுமதிக்கப்பட்ட ஆட்கள்

1. பின்வரும் ஆட்கள் இலங்கைக்கு வெளியேயுள்ள ஒழுங்குபடுத்தப்பட்ட நிதி நிறுவனம் ஒன்றுடனான வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் தொழிற்படுத்துவதற்கும் அனுமதிக்கப்படுகின்றனர்:

(அ) வியாபாரம், கல்வி அல்லது மருத்துவ நோக்கங்களுக்காகத் தற்காலிகமாக இலங்கைக்கு வெளியே சென்றுள்ள இலங்கையில் வதிவுள்ள ஆளொருவர்;

(ஆ) இச்சட்டம் பயனுக்கு வருமுன்னர் அல்லது வந்த பின்னர் எந்நேரத்திலும் இலங்கைக்கு வெளியே வதிபவராகவிருந்து இலங்கை ரூபாக்களை வெளிநாட்டுச் செலாவணியாக மாற்றுவதனை உட்படுத்தாமல் இலங்கைக்கு வெளியே வெளிநாட்டுச் செலாவணியை உழைத்துள்ள அல்லது வேறு வகையில் கொள்ளுதல் செய்துள்ள இலங்கையில் வதிகின்ற ஆளொருவர்;

(இ) இலங்கைக்கு வெளியே உயர்தொழில்சார் அல்லது தொழில்சார் சேவைகளை வழங்கி இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவரிடமிருந்து அத்தகைய சேவைகளுக்காக வெளிநாட்டுச் செலாவணியில் கொடுப்பனவைப் பெறுகின்ற தனியாள் ஒருவர், இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட கம்பனி அல்லது குழுமம் ஒன்று;

(ஈ) இலங்கைக்கு வெளியே முதலீடு செய்வதற்குச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பொதுவான அல்லது விசேடமான அனுமதி வழங்கப்பட்டிருந்த தனியாளொருவர், இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட கம்பனி அல்லது குழுமம் ஒன்று; ஆயின், அத்தகைய ஆள் சொல்லப்பட்ட முதலீட்டின் தேவைப்பாடொன்றாக இலங்கைக்கு வெளியே கணக்கொன்றைத் திறப்பதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றார்;

(உ) வணிகப் பொருட்களின் ஏற்றுமதியாளரொருவர்;

(ஊ) இன்னொரு நாட்டில் நிரந்தரமான வதிவுரிமையைக் கொண்டுள்ள ஆளொருவர்;

(எ) இரட்டைப் பிரசாவுரிமையைக்கொண்ட பிரசையொருவர்;

(ஏ) ஆளொருவருக்கு விசா வழங்குவதற்கான நிபந்தனை ஒன்றாக அவர் செல்கின்ற நாட்டிலுள்ள ஒழுங்குபடுத்தப்பட்ட நிதி நிறுவனம் ஒன்றுடன் கணக்கொன்றைத் திறப்பதற்கு மற்றும் பேணுவதற்கு விசாவை வழங்கும் அதிகாரியினால் அத்தகைய ஆள் தேவைப்படுத்தப்படுமிடத்து அத்தகைய நாட்டிற்கு கல்விக்காக இலங்கைக்கு வெளியே செல்வதற்கு உட்கருதுகின்ற இலங்கையில் வதிவுள்ள ஆளொருவர்;

(ஐ) கடல்கடந்த ஒரு வங்கியிடமிருந்து அல்லது நிதி நிறுவனத்திடமிருந்து கடன்பெறுவதற்குத் தகவுடைய இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்று; ஆயின், அத்தகைய கம்பனி, அத்தகைய கடன் உடன்படிக்கையின் நிபந்தனையொன்றாக இலங்கைக்கு வெளியே கணக்கொன்றைத் திறப்பதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றது;

2. (1) இலங்கைக்கு வெளியேயுள்ள ஒழுங்குபடுத்தப்பட்ட நிதிநிறுவனமொன்றுடன் கணக்கொன்றைத் திறந்து பேணிவந்தவரும் இவ்வட்டவணையின் தலைப்பு எ இன் 1ஆம் பந்தியிற் குறித்துரைக்கப்பட்டவருமான எவரேனுமாள், இவ்வொழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகும் நோக்கங்களுக்காக அத்தகைய கணக்குகளை மூடிவிடலாம்.

(2) இவ்வட்டவணையின் தலைப்பு எ இன் 1ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட ஆளொருவரினால் திறக்கப்பட்ட கணக்கொன்றுக்கு, இலங்கைக்கு வெளியே சட்டப்படியாக உழைக்கப்பட்ட, பெறப்பட்ட அல்லது கொள்ளப்பட்ட அல்லது சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியிடமிருந்து அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியிடமிருந்து அத்தகைய ஆளின் பெயரில் இலங்கையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயம் வரவுவைக்கப்படலாம்.

(3) இவ்வட்டவணையின் தலைப்பு எ இன் 1ஆம் பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட ஆட்களினால் திறக்கப்பட்ட கணக்குகளிலான நிதிகள், கணக்குவைத்திருப்பவரின் எவையேனும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களுக்காகப் பயன்படுத்தப்படலாம்.

(4) இவ்வட்டவணையின் தலைப்பு எ இன் 1ஆம் பந்தியின்கீழ் இலங்கைக்கு வெளியேயுள்ள நிதிநிறுவனமொன்றுடன் கணக்கொன்றைத் திறந்து பேணுவதற்கு அனுமதிக்கப்பட்ட ஆளொருவர், அதன்கண்ணுள்ள (ஆ), (இ), (ஊ), (எ) மற்றும் (ஏ) என்னும் உட்பந்திகளிற் குறித்துரைக்கப்பட்ட வகுதிகளுக்காகத் தவிர, கணக்கானது எந்நோக்கங்களுக்காகத் திறக்கப்பட்டதோ அந்நோக்கங்களை நிறைவேற்றிய தேதியிலிருந்து ஒருமாதத்தினுள் இலங்கைக்கு வெளியே அத்தகைய ஆளினால் திறக்கப்பட்ட கணக்குகளில் எஞ்சியுள்ள எவையேனும் மீதியான நிதிகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல் வேண்டும்.

(5) இவ்வட்டவணையின் தலைப்பு எ இன் 1ஆம் பந்தியின் (ஏ) என்னும் உட்பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட வகுதியின்கீழ் இலங்கைக்கு வெளியே கணக்கொன்றைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அனுமதிக்கப்படும் ஆளொருவருக்கு அத்தகைய நாட்டினால் மாணவ விசாவொன்று மறுக்கப்பட்டுள்ளவிடத்து அல்லது அத்தகைய ஆள் மாணவ விசாவைப் பெற்றுக்கொண்ட பின்னர் கற்கைகளைத் தொடங்காதிருப்பதற்கு முடிபுசெய்யுமிடத்து, அத்தகைய ஆள், அத்தகைய முடிபு எடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஒருமாதத்தினுள் இவ்வொழுங்குவிதியின்கீழ் அத்தகைய ஆளினால் இலங்கைக்கு வெளியே திறக்கப்பட்ட கணக்கின் வரவுக்கிருக்கும் எல்லாப் பணங்களையும் திருப்பியனுப்புதல் வேண்டும்.

ஏ. இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற நாட்டினத்தவர்கள் அல்லாதோருக்கு ஆயுட்காப்புறுதிப் பத்திரங்களை வழங்குதல்

1. 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க, காப்புறுதித்தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டத்தின்கீழ் இலங்கையில் காப்புறுதித் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்குப் பதிவுசெய்யப்பட்ட கம்பெனியொன்று, காப்புறுதி தொடர்பாக இலங்கையின் ஏதேனும் எழுத்திலான சட்டத்துக்கமைய, இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிவுள்ள நாட்டினத்தவர்கள் அல்லாதோர் தொடர்பில் (அதாவது காப்புறுதிசெய்யப்பட்டவர்) விடயத்துக்கேற்ப, இலங்கை ரூபாக்களில் அல்லது வெளிநாட்டு நாணயத்தில் பெயர்குறிக்கப்பட்ட ஆயுட்காப்புறுதிப்பத்திரங்களை வழங்குவதற்கு அனுமதிக்கப்படுகின்றது.

2. ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி, காப்புறுதி தொடர்பாக இலங்கையின் ஏதேனும் எழுத்திலான சட்டத்துக்கமைய, முறையான ஆயுட்காப்புறுதிப் பத்திரங்களுக்கிணங்க, நன்மைகளாக (அதாவது, அத்தகைய காப்புறுதிப்பத்திரம் வைத்திருப்பவர் காப்புறுதிப்பத்திரக் காலத்துக்கப்பால் உயிரோடிருக்கும் பட்சத்தில் காப்புறுதிசெய்யப்பட்டவருக்கான முதிர்வு நன்மைகள், காப்புறுதிப்செய்யப்பட்டவர் இறப்பதன்மேல் பயனுகரிகளுக்கான இறப்பு நன்மைகள் அல்லது ஒப்படைப்புப்பெறுமதி), இத்தலைப்பின்கீழ் மேலே 1ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பெனியொன்றினாலான கொடுப்பனவுகளாகவுள்ள வெளித்திரும்பல் அனுப்புதொகைகளைச் செய்வதற்கு அனுமதிக்கப்படுகின்றது.

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

**2213/38ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03ஆந் திகதி புதன்கிழமை**

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

பகுதி I : தொகுதி (I) - பொது

**அரசாங்க அறிவித்தல்கள்**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 5, 7 மற்றும் 8ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29ஆம் பிரிவின்கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.**

மஹிந்த ராஜபக்ஷ,
**நிதி அமைச்சர்.**

கொழும்பு,
2021, பெப்புருவரி 03.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2021ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற நோக்கத்துக்காகக் கணக்குகளைத் திறத்தலும் பேணுதலும்) பற்றிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2021, மாச்சு 22 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தொழிற்படுத்தப்படல் வேண்டும்.

பாகம் I

**கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்குமான அதிகாரம்**

2. (1) சட்டத்தின் 4ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட அளவுக்கு ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி, வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களைக் கையாளும் நோக்கத்துக்காக எவரேனுமாளின் பெயரில், 5ஆம் ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகளை அல்லது இலங்கை ரூபாக் கணக்குகளைத் திறந்து பேணுவதற்கு அதிகாரமுடையதாதல் வேண்டும்.

(2) ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி, இவ்வொழுங்குவிதிகளின்கீழ் கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றும்போது, சட்டத்தின் 9ஆம் பிரிவின்கீழ் காலத்துக்குக்காலம் மத்திய வங்கியினால் அதற்கென வழங்கப்பட்ட பணிப்புகளுக்கு இணங்கியொழுகுவதற்கு எல்லா நேரங்களிலும் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

3. இலங்கைக்கு வெளியே வதிவுள்ள ஒழுங்குபடுத்தப்பட்ட நிதி நிறுவனமொன்று கொடுக்கல்வாங்கல்களைத் தீர்த்துவைப்பதற்காக இலங்கையிலுள்ள ஏதேனும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியுடன் வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகளை மற்றும் இலங்கை ரூபாக் கணக்குகளை (வொஸ்ட்ரோ கணக்குகள்) திறக்கலாம் மற்றும் பேணலாம்.

4. அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியொருவர், அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளினால் வேறு நாடுகளில் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் வினைத்திறனான தீர்த்துவைத்தலை வசதிப்படுத்துவதற்கென இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட ஒரு வங்கியிடம் வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகளை (நொஸ்ட்ரோ கணக்குகள்) திறக்கலாம் மற்றும் பேணலாம்.

பாகம் II

**கணக்குகளின் வகைகள்**

5. பின்வரும் வகையினவான கணக்குகள், சட்டத்தின் 4ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட அளவுக்கு அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி ஒருவரினால் திறக்கப்படலாம் மற்றும் பேணப்படலாம்:

(அ) தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (தவெநாக)
(ஆ) வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (விவெநாக)
(இ) தூதுவ வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (தூவெநாக)
(ஈ) தூதுவ ரூபாக் கணக்குகள் (தூரூக)
(உ) வதிவற்ற ரூபாக் கணக்குகள் (வரூக)
(ஊ) வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்குகள் (வெமுக)
(எ) உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகள் (உமுக)
(ஏ) மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்குகள் (மூகொரூக)
(ஐ) குடியகல்வோரின் அனுப்பத்தகு வருமானக் கணக்குகள் (குஅவக)
(ஒ) வெளிநாட்டு வர்த்தகக் கடன்பெறுதற் கணக்குகள் (வெவகக)
(ஓ) சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் மூலம் அனுமதிக்கப்படக் கூடியவாறான அத்தகைய வரவு மற்றும் பற்று வரையறைகளுக்கமைய, விசேட வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (விவெநாக).

6. உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் விடயத்தில், 5ஆம் ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட கணக்குகள், அவற்றின் உள்நாட்டு வங்கித்தொழிற் கூறுகளில் திறக்கப்படுதலும் பேணப்படுதலும் வேண்டும்.

7. ஆளெவரும், இந்த ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறாக 5ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட கணக்கொன்றைத் திறப்பதற்குத் தகவுடையவராகவிராதவிடத்து அத்தகையவொரு கணக்கை அத்தகைய ஆள் திறத்தலாகாது.

8. (1) ஒழுங்குவிதி 5இல் குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு வகையினவையுமான கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்குமான கட்டளைகள் மற்றும் அத்தகைய கணக்குகளுக்கான அனுமதிக்கப்பட்ட பற்றுக்களும் வரவுகளும் சட்டத்தின் 9ஆம் பிரிவின்கீழ் காலத்துக்குக்காலம் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின்மூலம் குறித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(2) ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி 5ஆம் ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் நாடுகின்ற ஆட்கள், சட்டத்தின் 9ஆம் பிரிவின்கீழ் மத்திய வங்கியினால் காலத்துக்குக்காலம் வழங்கப்பட்ட பணிப்புகளில் குறித்துரைக்கப்பட்ட கட்டளைகளின்கீழ் அத்தகைய கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் தகவுடையவர்களாகவுள்ளனரா என்பதனை நிச்சயிப்பதற்கு உரிய விழிப்புக் கவனத்தையும் நியாயமான கவனத்தையும் பிரயோகித்தல் வேண்டும்.

9. (1) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வெளிநாட்டுச் செலாவணியிலான கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியும் அதற்கென ஆவணமுறையான சான்றைப் பெற்றுக்கொள்வதன் மூலம் பின்வருவனவற்றை நிச்சயித்தல் வேண்டும்:-

(அ) கொடுக்கல்வாங்கலை நிறைவேற்றுகின்ற ஆளின் நல்லெண்ணம்; அத்துடன்

(ஆ) அத்தகைய கொடுக்கல்வாங்கல் இவ்வொழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகவுள்ளதென்று.

(2) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட்டுள்ள ஒவ்வோராளும், (1)ஆம் பந்தியின் நோக்கத்துக்காக அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிக்கு அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிக்கு அவசியமான எல்லா ஆவண முறையான சான்றையும் வழங்குதல் வேண்டும்.

(3) ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியும் இவ்வொழுங்கு விதிகளின்கீழ் வெளிநாட்டுச் செலாவணியிலான அத்தகைய கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதில் உரிய எல்லா விழிப்புக் கவனத்தையும் பிரயோகித்தல் வேண்டும்.

10. மத்திய வங்கியானது, இவ்வொழுங்கு விதிகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஏதேனும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி, மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி அல்லது ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியாக இராத வேறேவரேனுமாள் தொடர்பில், சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அவசியமென அது கருதக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கையை எடுக்கலாம்.

11. ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும், மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியும் அல்லது அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியினூடாக அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியினூடாக இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற எவரேனுமாள், அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் இவ்வொழுங்குவிதிகளின் கீழான அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் என்ற நிகழ்வுக்கான எண்பிப்பாக எல்லாத் தகவல்களையும் ஆவண முறையான சான்றையும், அத்தகைய கொடுக்கல்வாங்கல்களின் தேதியிலிருந்து ஆறாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்காக வைத்திருத்தல் வேண்டும்.

## பாகம் III

### ஏற்கனவேயுள்ள கணக்குகளுக்கு மீளப்பெயர்குறித்தல் முதலியன

12. (1) நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் திறக்கப்பட்ட வெளிநாட்டு வங்கிகளினதும் வெளிநாட்டுச் செலாவணி அகங்களினதும் எல்லா வதிவற்ற ரூபாக் கணக்குகளும், 3ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்டவாறாக இலங்கை ரூபாக்களில் வொஸ்ட்ரோ கணக்குகளாகத் தொடர்ந்து தொழிற்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஏற்கனவேயுள்ள எல்லா வதிவுள்ள அதிதி செய்திட்ட விசேட கணக்குகளும் மற்றும் சிரேட்ட வெளிநாட்டினத்தவர்களின் விசேட கணக்குகளும் மீளப்பெயர்குறிக்கப்படாமல் 2017, நவம்பர் 17ஆந் திகதியிலிருந்து தொடர்ந்து தொழிற்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) முறையே, இலங்கைக்கு வெளியே பதிவுசெய்யப்பட்ட வெளிநாட்டுக் குழுமங்களினாலும் கம்பனிகளினாலும் குடியகல்வோர் நீங்கலாக, இலங்கைக்கு வெளியே வதிகின்ற வெளிநாட்டில் தொழிலுக்கு அமர்த்தப்பட்டுள்ளவர்களுமான இலங்கையரினாலும் பேணப்பட்ட ஏற்கனவேயுள்ள எல்லா மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்குகளுக்கும் மீளப்பெயர் குறிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் முறையே, வதிவற்ற ரூபாக் கணக்குகளாகவும் இலங்கை ரூபாக் கணக்குகளாகவும் அவை தொடர்ந்து தொழிற்படுத்தப்படுதலும் வேண்டும்.

(4) நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் 2010, மே 7ஆந் திகதி முதல் 2017, யூலை 5ஆந் திகதி வரையிலான காலப்பகுதியின்போது இலங்கையில் வதிகின்ற தகவுடைய தொழில்தருநர்களினாலும் ஊழியர்களினாலும் திறக்கப்பட்ட சர்வதேசச் சேவை வழங்குநர்களுக்கும் அவர்களின் ஊழியர்களுக்குமான ஏற்கனவேயுள்ள எல்லா வெளிநாட்டு நாணயக் கணக்குகளும், முறையே, வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளாகவும் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளாகவும் 2017, நவம்பர் 20ஆந் திகதியிலிருந்து பயனுறுவனவாகத் தொழிற்பாட்டில் இருந்துள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் திறக்கப்பட்டவையும் இலங்கையில் தொழிற்படுகின்ற அரசசார்பற்ற ஒழுங்கமைப்புகளினவையுமான ஏற்கனவேயுள்ள எல்லா சுனாமிப் பேரலைக்குப் பின்னரான உட்திரும்பல் அனுப்புகைகள் கணக்குகளுக்கும் இலங்கை ரூபாக் கணக்குகளாகத் தொடர்ந்து தொழிற்படுத்தப்படுதல் வேண்டும்.

13. குடியகல்வோர் நீங்கலாக, இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கை நாட்டினத்தவர்கள், இலங்கையிலான முதலீடுகளுட்பட உள்நாட்டுக் கொடுக்கல்வாங்கல்களுக்காக மட்டுமே அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளுடன் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிகளுடன் இலங்கை ரூபாக்களில் நடப்பு, சேமிப்பு அல்லது கால வைப்புக் கணக்குகளைத் திறக்கலாம் மற்றும் பேணலாம்.

14. (1) இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காகப் “பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம்” என்பது, பின்வருவன என்று பொருளாகும்:-

(அ) ஐக்கிய அமெரிக்க டொலர்;
(ஆ) யூரோ;

(இ) ஸ்டேர்லிங் பவுண்;
(ஈ) அவுஸ்திரேலிய டொலர்;
(உ) சிங்கப்பூர் டொலர்;
(ஊ) சுவீடன் குரோனர்;
(எ) சுவிஸ் பிரான்க்;
(ஏ) கனேடிய டொலர்;
(ஐ) ஹொங்கொங் டொலர்;
(ஒ) யப்பானிய யென்;
(ஓ) டென்மார்க் குரோனர்;
(ஔ) நோர்வே குரோனர்;
(க) சீன ரென்மின்பி; அத்துடன்
(ங) நியூசீலாந்துடொலர்.

(2) மத்திய வங்கியானது, காலத்துக்குக்காலம், சட்டத்தின் 9ஆம் பிரிவின்கீழ் அதற்கென வழங்கப்பட்ட பணிப்புகளின்மூலம், (1)ஆம் பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களைத் திருத்தலாம், மாற்றலாம் அல்லது அவற்றுக்கு எதனையும் சேர்க்கலாம்.

15. 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டவையும் 2017, நவம்பர் 17ஆந் திகதிய 2045/56ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையுமான 2017ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணி (மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற நோக்கத்துக்காகக் கணக்குகளைத் திறத்தலும் பேணுதலும்) பற்றிய ஒழுங்குவிதிகளும் மற்றும் 2017ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகளைத் திறத்தலும் பேணுதலும்) ஒழுங்குவிதிகள், அவற்றின்கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் ஒழிக்கப்படுகின்றன:

ஆயின், எவ்வாறாயினும், மேற்கூறப்பட்ட ஒழுங்குவிதிகள் ஒழிக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும், அதன் செல்லுபடிக் காலப்பகுதி 2020, திசெம்பர் 18ஆந் தேதிய 2206/25ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் நீடிக்கப்பட்டதும், மற்றும் 2020, யூலை 2ஆந்தேதிய 2182/37ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதுமான கட்டளையானது, அவ்வாறு நீடிக்கப்பட்ட காலப்பகுதியின்போது பயனுறுதல் வேண்டும்.

16. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக-

"சட்டம்" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் என்று பொருளாகும்;

"அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"மத்திய வங்கி" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"தூதராலயம்" என்பது, ஒரு தூதராலயம், உயர் ஸ்தானிகர் பணியகம், துணைத் தூதரகம், ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தரத் தூதராலயம், ஐரோப்பிய ஆணைக்குழுவின் ஐரோப்பிய ஒன்றியப் பேராளர் குழு, சர்வதேச நாணய நிதியம், புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி அல்லது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் (வெஅஅ) வரைவாவணப் பிரிவினால் ஒரு தூதராலயமெனக் காலத்துக்குக்காலம் ஏற்றங்கீகரிக்கப்பட்டுள்ள வேறேதேனும் ஒத்த ஒழுங்கமைப்பு என்று பொருளாகும்;

"தூதுவ ஆளணியினர்" என்பது, ஒரு தூதராலயத்தினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட ஒரு வெளிநாட்டின் பிரசைகள் என்று பொருளாகும்;

"குடியகல்பவர்" என்பது, 2021, பெப்புருவரி 3ஆந் திகதிய 2213/36ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணி (குடியகல்வோரினால் நிதிகளின் அனுப்புதொகை) ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறான குடியகல்பவர் ஒருவர் என்று பொருளாகும்;

"உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"ஆள்" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

“ஒழுங்குபடுத்தப்பட்ட நிதி நிறுவனம்” என்பது, ஒரு வெளிநாட்டின் ஏதேனும் சட்டத்தின்கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டவொரு நிதிநிறுவனம் என்று பொருளாகும்;

“நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்” என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தினால் நீக்கப்பட்ட (423ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் என்று பொருளாகும்.

**(ஒழுங்குவிதி 7)**

**அட்டவணை**

**கணக்குகளைத் திறப்பதற்குத் தகவுடைய ஆட்கள்**

1. தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (தவெநாக)

(1) இலங்கை நாட்டினத்தவராகவுள்ள பராயமடையாதவர் உட்பட்ட தனியாளொருவர்;

(2) இலங்கைக்கு வெளியே வதிகின்ற பராயமடையாதவர் ஒருவர் உட்பட இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட தனியாளொருவர்;

(3) இலங்கையில் வதிகின்ற நாட்டினத்தவரல்லாத ஒருவர்;

(4) ஒன்றில் இலங்கைக்குத் தற்காலிகமாக வருகைதருகின்ற அல்லது இலங்கைக்கு வருகைதருவதற்கு உட்கருதுகின்ற நாட்டினத்தவர் அல்லாதவரொருவர்; அத்துடன்

(5) ஓர் இறந்துள்ள ஆளின் மரணச்சொத்தினது நிருவாகம் பூர்த்திசெய்யப்படும் வரை ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியிடம் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியிடம் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றைப் பேணிவந்த, அத்தகைய இறந்துள்ள ஆளின் மரணச்சொத்தினது நிருவாகி அல்லது நிறைவேற்றுநர் ஒருவர்.

2. வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (விவெநாக)

(1) இலங்கைக்கு வெளியே வதிபவரொருவரிடமிருந்து வெளிநாட்டுச் செலாவணியை உழைக்கின்ற இலங்கையில் வதிவுள்ள பின்வரும் ஆட்கள்:-

(அ) இலங்கையில் வதிகின்ற தனியாளொருவர்;

(ஆ) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஒரு தனியுரிமையாண்மையின் உரிமையாளர் அல்லது பெரும்பான்மையோரான பங்காளர்கள் இலங்கையில் வதியுமிடத்து, அத்தனியுரிமையாண்மை அல்லது பங்காண்மை (இரு பங்காளர்களுடனான பங்காண்மையொன்றின் விடயத்தில் குறைந்தபட்சம் ஒரு பங்காளரேனும் இலங்கையில் வதிபவராகவிருத்தல் வேண்டும்;

(இ) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டவொரு கம்பனி;

(ஈ) 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் கடல்கடந்த கம்பனியொன்றாகப் பதிவுசெய்யப்பட்ட, இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டவொரு கம்பனி;

(உ) இயைபான துறை அமைச்சுச் செயலாளரின் அல்லது தோதான அதிகாரசபையின் விதப்புரையுடன் அரச நிறுவனமொன்று;

(ஊ) ஓர் இறந்துள்ள ஆளின் மரணச்சொத்தினது நிருவாகம் பூர்த்தி செய்யப்படும் வரை ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியிடம் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியிடம் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றைப் பேணிவந்த, அத்தகைய இறந்துள்ள ஆளின் மரணச்சொத்தினது நிருவாகி அல்லது நிறைவேற்றுநர் ஒருவர்; அத்துடன்

(எ) வழக்கு நடவடிக்கைகள் முடிவுறும்வரை, ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியிடம் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியிடம் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றைப் பேணிவந்த கம்பனியொன்றின் பெறுநரொருவர் அல்லது ஒழிப்போன்.

(2) அரச சார்பற்ற ஒழுங்கமைப்பொன்று வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அனுமதிக்கப்படுதலாகாது.

3. தூதுவ வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (தூவெநாக)

(1) வெளிநாட்டுத் தூதராலயங்கள்;

(2) குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வதிவு விசாவைப் பெறுகின்ற தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள தூதுவ ஆளணியினர்; அத்துடன்

(3) குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வதிவு விசாவைப் பெறுகின்ற தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள இலங்கையிலுள்ள தூதுவ ஆளணியினரின் குடும்பவுறுப்பினர்கள்.

4. தூதுவ ரூபாக் கணக்குகள் (தூரூக)

(1) வெளிநாட்டுத் தூதராலயங்கள்;

(2) குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வதிவு விசாவைப் பெறுகின்ற தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள தூதுவ ஆளணியினர்; அத்துடன்

(3) குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வதிவு விசாவைப் பெறுகின்ற தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள இலங்கையிலுள்ள தூதுவ ஆளணியினரின் குடும்பவுறுப்பினர்கள்.

5. வதிவற்ற ரூபாக் கணக்குகள் (வரூக)

(1) இலங்கைக்கு வெளியே தாபிக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுமங்களும் கம்பனிகளும்.

(2) குடியகல்வோர்; அத்துடன்

(3) மத்திய வங்கியினால் காலத்துக்குக்காலம் அதிகாரமளிக்கப்படக்கூடிய வேறெவரேனுமாள்.

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

**2213/39ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03ஆந் திகதி புதன்கிழமை**

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**

**அரசாங்க அறிவித்தல்கள்**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

**8ஆம் பிரிவின் கீழான கட்டளை**

2017ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிபவராகவுள்ள ஆளொருவர், எந்த நோக்கங்கள், வரையறைகள் மற்றும் நியதிநிபந்தனைகளுக்கு அமைந்தவராகப் பின்வருவனவற்றைச் செய்தல் வேண்டுமோ, அந்த நோக்கங்கள், வரையறைகள் மற்றும் நியதிநிபந்தனைகளை இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறாக 2021, மாச்சு 22 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் தொழிற்படுத்தப்படும் இக்கட்டளை மூலம் விதித்துரைக்கின்றேன்:-

(அ) ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தை அல்லது இலங்கை நாணயத்தை இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்தல் அல்லது இலங்கையினுள் இறக்குமதி செய்தல்; அல்லது

(ஆ) அவரது உடைமையில் அல்லது இலங்கையிலுள்ள ஒரு வங்கிக் கணக்கில் வெளிநாட்டுச் செலாவணியை வைத்திருத்தல்.

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 8ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும் 2020, யூலை 1ஆந் தேதிய 2182.33ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளை, அதன்கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ
**நிதி அமைச்சர்**

நிதி அமைச்சு,
கொழும்பு,
2021, பெப்புருவரி 03.

**அட்டவணை**

**பாகம் I**

வெளிநாட்டு நாணயத்தின் அல்லது இலங்கை நாணயத்தின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கான நோக்கங்கள், வரையறைகள், நியதிகள் மற்றும் நிபந்தனைகள்

1. (1) இலங்கையிலிருந்து புறப்பட்டுச்செல்கின்ற அல்லது இலங்கையில் வந்திறங்குகின்ற எவரேனும் ஆள், அத்தகைய ஆளால் சட்டமுறையாகக் கொள்ளுதல் செய்யப்பட்ட நாணயத்தாள்கள், வங்கிவரைவுகள், காசோலைகள், பயண அட்டைகள் முதலியன

போன்ற வடிவத்திலான ஏதேனும் வெளிநாட்டுச் செலாவணித் தொகையினை, அத்தகைய வெளிநாட்டுச் செலாவணியின் மொத்தப் பெறுமதி ஐக்கிய அமெரிக்க டொலர் 15,000 இனை அல்லது வேறு வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமமான தொகையினை விஞ்சுகின்றதாகவிருப்பின், முறையே புறப்பட்டுச்செல்கின்ற அல்லது வந்திறங்குகின்ற துறையிலுள்ள சுங்கத் திணைக்களத்துக்குச் செய்யப்பட்ட வெளிப்படுத்துகை ஒன்றுக்கமைய கொண்டுசெல்லலாம். அத்தகைய ஆள் அவ்வாறு செய்யும்படி கோரப்படின், வெளிநாட்டுச் செலாவணியின் கொள்ளுகை தொடர்பான ஆவணமுறையான சான்றைச் சுங்கத் திணைக்களத்துக்கு அல்லது அடுத்துப்பின்னர் மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் தலைவருக்கு அல்லது அத்தகைய தகவலை நாடுவதற்குச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படுகின்ற வேறெவரேனுமாளுக்கு வழங்குவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) எவ்வாறாயினும், இலங்கையில் வந்திறங்குகின்ற ஆளொருவர், மேலே பந்தி 1 இன் உப பந்தி (1) இன் கீழ் இலங்கைக்குள் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் ஐக்கிய அமெரிக்க டொலர் 10,000 இனை அல்லது வேறு வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமமான தொகையினை விஞ்சுகின்ற பயன்படுத்தப்படாத வெளிநாட்டு நாணயத்தாள்களைத் திருப்பி எடுத்துச்செல்வதற்கு உட்கருதுகின்றவிடத்து, அல்லது ஐக்கிய அமெரிக்க டொலர் 10,000 இனை அல்லது வேறு வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமமான தொகையினை விஞ்சுகின்ற வெளிநாட்டு நாணயத்தாள்களை எடுத்துக்கொண்டு இலங்கையிலிருந்து புறப்பட்டுச் செல்லுமிடத்து, அத்தகைய ஆள், சுங்கத் திணைக்களத்துக்கு அது தொடர்பாக வெளிப்படுத்துகையொன்றைச் செய்வதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றார்.

(3) இலங்கையில் முதலீடுசெய்யும் நோக்கத்துக்காக ஆளொருவரின் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கினுள் வெளிநாட்டுச் செலாவணியை வரவுவைப்பதற்கு உட்கருதுகின்ற அத்தகைய ஆள் இலங்கையினுள் வந்திறங்குமிடத்து, அத்தகைய வெளிநாட்டுச் செலாவணி, பெறுமதியைப் பொருட்படுத்தாது, சுங்கத் திணைக்களத்துக்கு வெளிப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் சுங்கத் திணைக்களத்தின் முத்திரையிடப்பட்ட வெளிப்படுத்துகை வரவுக்காதாரமாக வைத்திருக்கப்படுவதற்காக அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிக்குச் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

2. இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற எவரேனும் ஆள் -

(அ) இலங்கை ரூபா 20,000 பெறுமதிவரையான இலங்கை நாணயத்தை முறையே, இலங்கைக்கு வெளியே எடுத்துச்செல்லலாம் அல்லது இலங்கையினுள் கொண்டு வரலாம்; அல்லது

(ஆ) வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் தலைவரின் அனுமதிக்கமைய, மத்திய வங்கியின் நாணயக் கண்காணிப்பாளரினால் விதந்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காகவும், வரையறைகளுக்காகவும், நியதிநிபந்தனைகளுக்காகவும் இலங்கை நாணயத்தை ஏற்றுமதி செய்யலாம் அல்லது இறக்குமதி செய்யலாம்.

3. எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி, அவரது தொழில்களின் சாதாரண நடவடிக்கையிலும் அல்லது சாதாரண நடவடிக்கைக்காகவும் அத்துடன் அதிகாரவளிப்பின் நியதிகளுக்குட்பட்டும் கொள்ளுதல் செய்யப்பட்டுள்ள வெளிநாட்டு நாணயத்தை இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யலாம் அல்லது இலங்கைக்குள் இறக்குமதி செய்யலாம்.

4. இப்பாகத்தின் நோக்கத்திற்கென-

"அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"மத்திய வங்கி" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## பாகம் II

### வெளிநாட்டுச் செலாவணியை உடைமையில் வைத்திருப்பதற்கான நோக்கங்கள், வரையறைகள், நியதிகள் மற்றும் நிபந்தனைகள்

1. இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற ஆளொருவரினால் வெளிநாட்டுச் செலாவணி உடைமையில் வைத்திருக்கப்படுதல்.

(1) இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற எவரேனும் ஆள், இதன்கண் 2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட மட்டுப்பாட்டுக் காலப்பகுதியைப் பொருட்படுத்தாது, ஏதேனும் காலப்பகுதிக்கு, ஐக்கிய அமெரிக்க டொலர் 15,000 இன், அல்லது வேறு வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமமான பெறுமதிவரை வெளிநாட்டு நாணயத் தாள்களை அவருடைய உடைமையில் வைத்திருக்கலாம்; ஆயின், அத்தகைய வெளிநாட்டு நாணயம் பின்வருவனவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும்:-

(அ) அத்தகைய ஆளின் வெளிநாட்டுப் பயணத்துக்கென அத்தகைய ஆளினால் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி ஒருவரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு, இலங்கைக்குத் திரும்பும்பொழுது பயன்படுத்தப்படாதனவாகத் திருப்பிக் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு நாணயம்; அல்லது

(ஆ) அத்தகைய ஆளினால் இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்கு வெளிநாட்டில் அளிக்கப்பட்ட சேவையொன்றுக்கான அல்லது வழங்கப்பட்ட பண்டங்களுக்கான கொடுப்பனவு என்றவாறாக, அல்லது வேறு ஏதேனும் சட்டமுறையான மூலத்திலிருந்து, இலங்கைக்கு வெளியேயிருந்து அத்தகைய ஆளினால் பெறப்பட்ட வெளிநாட்டு நாணயம்; அல்லது

(இ) பயண நோக்கத்துக்கென அத்தகைய ஆளினால் அவரது தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்து அல்லது தொழில்சார் வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்து மீளப்பெறப்பட்ட வெளிநாட்டு நாணயத்தாள்கள்.

(2) (அ) எவரேனும் ஆள், அத்தகைய ஆளினால் இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவருக்கு வழங்கப்பட்ட பண்டங்களும் சேவைகளும் தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயத்தைத் தனதுடைமையில் வைத்திருக்கலாம்.

(ஆ) இலங்கையிலுள்ள கப்பற்றுறையில் அல்லது வானூர்திநிலையத்தில் இலங்கைக்கு வந்திறங்குகின்ற அல்லது இலங்கையிலிருந்து புறப்பட்டுச் செல்கின்ற பயணிகளுக்குத் தீர்வையற்ற சலுகையின்கீழ் பண்டங்களையும் சேவைகளையும் வழங்குவதற்காக அனுமதியளிக்கப்பட்ட தொழிலொன்றைக் கொண்டு நடாத்தும் இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற ஆளொருவர், அத்தகைய பயணிக்குப் பண்டங்களையும் சேவைகளையும் வழங்குதல் தொடர்பில் வதிவுள்ளவராயினுஞ்சரி அல்லது வதிவற்றவராயினுஞ்சரி, அத்தகைய பயணிகளிடமிருந்து பெறப்பட்ட வெளிநாட்டு நாணயத்தை வைத்திருக்கலாம்.

(இ) இப்பந்தியின் ஏற்பாடுகளின்கீழ் வெளிநாட்டுச் செலாவணியைக் கொள்ளுதல் செய்கின்ற ஆளொருவர், அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயத்தை, அத்தகைய வெளிநாட்டு நாணயத்தை ஏற்றுக்கொண்ட ஆளின் பெயரிலுள்ள தொழில்சார் வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றினுள் வைப்புச்செய்யாமல், அல்லது அத்தகைய பயன்பட்ட சான்றைச் சமர்ப்பிப்பதன்மேல், அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியொருவருக்கு விற்பனை செய்யாமல், ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து 7 நாட்களை விஞ்சுகின்ற காலப்பகுதியொன்றுக்கு வைத்திருத்தலாகாது.

(3) இலங்கைக்கு வெளியே வதிகின்ற எவரேனும் ஆள் இலங்கையில் இருக்கையில், அத்தகைய வெளிநாட்டு நாணயம் அவர் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே இருக்கும்போது, அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளிடம் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிகளிடம் பேணப்படும் வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகளிலிருந்து சட்டப்படியாக அவரால் மீளப்பெறப்பட்டதாகவிருப்பின், எத்தொகையினதுமான வெளிநாட்டு நாணயத்தையும் உடைமையில் வைத்திருக்கலாம்.

ஆயின், அத்தகைய ஆள் அவ்வாறு செய்யும்படி கோரப்பட்டால், வெளிநாட்டுச் செலாவணியின் கொள்ளுகை தொடர்பான ஆவணமுறையான சான்றைச் சுங்கத் திணைக்களத்துக்கு அல்லது அடுத்துப்பின்னர் மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத் தலைவருக்கு அல்லது அத்தகைய தகவலை நாடுவதற்குச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படுகின்ற வேறெவரேனுமாளுக்கு வழங்குதல் வேண்டும்.

2. வெளிநாட்டுச் செலாவணியை வைத்திருப்பதற்கான காலப்பகுதி பின்வருமாறு இருத்தல் வேண்டும்:-

(1) அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிக்கு அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிக்கு அவரால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றில் குறிப்பிடப்பட்ட நோக்கமொன்றுக்காக, அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியொருவரிடமிருந்து வெளிநாட்டு நாணயத்தைப் பெறுகின்றவரும், அத்தகைய நோக்கத்துக்கென அதனைப் பயன்படுத்தாதவருமான எவரேனும் ஆள், அத்தகைய வெளிநாட்டு நாணயத்தை இலங்கை ரூபாக்களுக்கு மாற்றாமல், அத்தகைய வெளிநாட்டு நாணயத்தைப் பெற்றுக்கொண்ட திகதியிலிருந்து தொண்ணூறு (90) நாட்களை விஞ்சுகின்ற காலப்பகுதியொன்றுக்கு வைத்திருத்தலாகாது.

(2) (அ) ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிக்கு அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிக்கு அவரால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றில் குறிப்பிடப்பட்ட நோக்கமொன்றுக்காக, அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியிடமிருந்து வெளிநாட்டு நாணயத்தைப் பெறுகின்றவரும் சொல்லப்பட்ட வெளிநாட்டு நாணயத்தை அல்லது அதன் பாகத்தை அதன்பின்னர் இலங்கைக்குத் திருப்பிக் கொண்டுவருபவருமான எவரேனும் ஆள், அத்தகைய வெளிநாட்டு நாணயத்தை இலங்கை ரூபாக்களுக்கு மாற்றாமல், திருப்பியனுப்பிய திகதியிலிருந்து தொண்ணூறு (90) நாட்களை விஞ்சுகின்ற காலப்பகுதியொன்றுக்கு அத்தகைய வெளிநாட்டு நாணயத்தை வைத்திருத்தலாகாது.

(ஆ) எவ்வாறாயினும், 1ஆம் பந்தியின் (1)(அ) என்னும் உட்பந்தியின்கீழ் திரளாக ஐக்கிய அமெரிக்க டொலர் 15,000 இன், அல்லது வேறு வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமமான பெறுமதிவரை பயண நோக்கத்திற்கென வெளிநாட்டு நாணயத்தாள்களைப் பெற்றுக்கொண்ட ஆளொருவர், அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி ஒருவருடன் திறக்கப்பட்டு பேணப்படமுடியுமான தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றில் அதனை வைப்புச் செய்வதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஊழியம் அல்லது உயர்தொழிலைப் பொறுப்பேற்பதற்காக, அல்லது தொழிலொன்றைத் தாபிப்பதற்காக இலங்கைக்கு வெளியே செல்கின்ற எவரேனுமாள் அத்தகைய ஊழியம், உயர்தொழில் அல்லது தொழிலிலிருந்து வெளிநாட்டு நாணயத்தை உழைத்து அல்லது பெற்று அதனை இலங்கைக்குத் திருப்பிக் கொண்டுவருமிடத்து, அத்தகைய வெளிநாட்டு நாணயத்தை இலங்கை ரூபாக்களுக்கு மாற்றாமல், 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க அத்தகைய ஆளினால் திறக்கப்பட்டு பேணப்பட முடியுமான வெளிநாட்டுச் செலாவணிக்

கணக்கொன்றினுள் அதனை வரவு வைக்காமல், அதன் திருப்பியனுப்பல் திகதியிலிருந்து தொண்ணூறு (90) நாட்களை விஞ்சுகின்ற காலப்பகுதியொன்றுக்கு அதனை வைத்திருப்பதற்கு அத்தகைய ஆள் உரித்துடையவராதலாகாது.

3. இப்பாகத்தின் நோக்கத்துக்காக-

"அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"மத்திய வங்கி" என்பது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

**2213/40ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03ஆந் திகதி புதன்கிழமை**

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

பகுதி I : தொகுதி (I) - பொது

**அரசாங்க அறிவித்தல்கள்**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

**31ஆம் பிரிவின் கீழான கட்டளை**

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 31ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய ஆட்கள் மேற்கூறப்பட்ட சட்டத்தின் நோக்கத்துக்காக இலங்கையில் வதிபவர்களாகவிருத்தல் வேண்டுமென 2021, மாச்சு 22 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தொழிற்படுத்தப்படும் இக்கட்டளை மூலம் தீர்மானிக்கின்றேன்.

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 31ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும் 2017ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17ஆந் திகதிய 2045/56ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளை, அதன்கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ,
**நிதி அமைச்சர்.**

கொழும்பு,
2021, பெப்புருவரி 03.

**அட்டவணை**

1. எவரேனும் இலங்கைப் பிரசை அல்லது இலங்கைப் பிரசையொருவரைத் திருமணஞ்செய்துள்ள எவரேனும் வெளிநாட்டுப் பிரசை, முற்போந்த பன்னிரெண்டு (12) மாதங்களின்போது கூட்டுமொத்தத்தில் நூற்றியெண்பத்திமூன்று (183) நாட்களைக் கொண்ட அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றுக்கு இலங்கையில் இருந்திருப்பின் அத்தகைய ஆள்.

2. (அ) முற்போந்த பன்னிரெண்டு 12 மாதங்களின்போது கூட்டுமொத்தத்தில் நூற்றியெண்பத்திரெண்டு (182) நாட்களுக்கு மேற்படாத காலப்பகுதியொன்றுக்கு, விடுமுறை, கல்வி, வியாபாரம், மருத்துவச் சிகிச்சை என்பவற்றுக்காக அல்லது வேறேதேனும் ஒத்த காரணத்துக்காக இலங்கைக்கு வெளியே தற்காலிகமாகச் சென்றுள்ளவரான;

(ஆ) வேறொரு நாட்டினால் வழங்கப்பட்ட மாணவ அல்லது அதற்குச் சமமான விசாவொன்றின்மீது மற்றும் அத்தகைய கற்கைகள் பூர்த்திசெய்யப்பட்டதன்மேல் நூற்றியெண்பத்திரெண்டு (182) நாட்களுக்கு மேற்படாத மேலதிகக் காலப்பகுதியொன்றுக்கு இலங்கைக்கு வெளியே சென்றுள்ளவரான,

எவரேனும் இலங்கைப் பிரசை.

3. அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், அரசாங்க நிறுவனங்கள், நியதிச்சட்ட முறையான சபைகள், அரசாங்க முகவராண்மைகள் மற்றும் அரசுக்குச் சொந்தமான வேறெவையேனும் உருவகங்கள் உள்ளடங்கலாக இலங்கை அரசாங்கம்.

4. (அ) இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கை அரசாங்கத்தின் (எத்தகையதுமான எப்பெயரினாலும் அல்லது

தலைப்புப்பெயரினாலும் பெயர்குறிக்கப்பட்ட) தூதுவப் பிரதிநிதிகள், தூதர்கள் அல்லது வியாபார ஸ்தானிகர்கள்;

(ஆ) விசா வழங்கும் அதிகாரியினால் விசா பெற்றுக்கொள்வதற்கான தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள இலங்கைப் பிரசையாகவுள்ள எவரேனுமாள் மேலே பந்தி 4இன் (அ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனும் ஆளின் பணியாட்டொகுதியுறுப்பினராகவிருந்தால் அவர்;

(இ) வெளிநாட்டில் ஆட்சேர்க்கப்பட்டவர்கள் தவிர, வெளிநாட்டில் சேவையாற்றுகின்ற ஓர் அரசாங்கக் கூட்டுத்தாபனத்தின், ஓர் அரசாங்க நிறுவனத்தின், ஒரு நியதிச்சட்டமுறையான சபையின், ஓர் உரிமமளிக்கப்பட்ட வங்கியின் அல்லது இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பெனியின் பணியாட்டொகுதியுறுப்பினரொருவர்;

(ஈ) மேலே 4ஆம் பந்தியின் (அ), (ஆ) அல்லது (இ) என்னும் உட்பந்திகளின்கீழ் இலங்கையில் வதிபவராகத் தீர்மானிக்கப்பட்ட எவரேனுமாளின் எவரேனும் குடும்பவுறுப்பினர்.

5. குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட இயைபான விசாவின்கீழ் இலங்கையில் வதிகின்ற அல்லது தொழிலுக்கமர்த்தப்படுகின்ற வெளிநாடுகளின் பிரசைகள், ஆனால் வேறு நாடுகளுக்கு இடைப்பெயர்விலுள்ள பயணிகள் அல்லது உல்லாசத்துக்காக அல்லது வியாபாரத்துக்காக நாட்டில் சுற்றுலாப்பயணத்தை மேற்கொள்கின்ற வருகையாளர்கள் அல்ல.

6. இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட பின்வரும் நிறுவனங்களைச் சொந்தமாக வைத்திருக்கின்ற, கட்டுப்படுத்துகின்ற அல்லது முகாமைசெய்கின்ற ஆட்களின் பிரசாவுரிமையினது அந்தஸ்தைப் பொருட்படுத்தாது அத்தகைய பின்வரும் நிறுவனங்கள்:-

(அ) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனிகள்;

(ஆ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வங்கிகளின் கிளைகளுட்பட (வெளிநாட்டு வங்கிகள்) 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட கடல்கடந்த கம்பெனிகள்;

(இ) கரைகடந்த கம்பெனிகளாகப் பதிவுசெய்யப்பட்ட கம்பெனிகள்;

(ஈ) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட அரசசார்பற்ற ஒழுங்கமைப்புகளுட்பட, களரிகள், சங்கங்கள் அல்லது வேறெவையேனும் ஒழுங்கமைப்புக்கள்.

7. இறந்த நேரத்தில் இறந்தவர், அல்லது தீர்த்துவைத்தல் செய்யப்பட்ட நேரத்தில் தீர்த்துவைப்பவர் மேலே 1 முதல் 5 வரையிலான பந்திகளின் நியதிகளின்படி வதிபவராகவிருந்தவிடத்து, அத்தன்மையில் மட்டுமே செயலாற்றும்போது இறுதிவிருப்பாவண நம்பிக்கைப் பொறுப்புகளின் அல்லது வாழ்வோரிடைத் தீர்த்து வைத்தல்களின் வேறொரு நாட்டின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் மற்றும் மரணச் சொத்துக்களின் நிருவாகிகள் அல்லது இறுதிவிருப்பாவணங்களின் நிறைவேற்றுநர்கள்.

8. 1971ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் பொருளுக்குட்பட, தனியாள் இலங்கைக் கப்பலொன்றில் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற காலப்பகுதியின்போது, அவ்வாறு தொழிலுக்கமர்த்தப்படுகின்ற இலங்கைப் பிரசைகள்.

9. மேலே 1, 2, 4 அல்லது 7ஆம் பந்திகளிலுள்ள நிபந்தனைகளைத் திருப்திசெய்யாத இலங்கைப் பிரசைகளாகவுள்ள அல்லது இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட தனியாட்கள், 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும், கட்டளைகளுக்கும், பணிப்புகளுக்கும் அமைய, தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கான நோக்கத்துக்காக மட்டுமே இலங்கையில் வதிபவர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

**2215/39ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 18ஆந் திகதி வியாழக்கிழமை**

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

பகுதி I : தொகுதி (I) - பொது

**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

**1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டம்**

**1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 68ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10(இ)ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விதிகள்**

பேராசிரியர் டபிள்யூ. டி. லக்ஷ்மன்,
**நாணயச் சபையின் தலைவரும்,**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்.**

இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு,
2021, பெப்புருவரி 18.

**ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல்**

1. இவ்விதிகள், "2021ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்பும் விதிகள்" என எடுத்துக்காட்டப்படுதல் வேண்டும்.

2. திருத்தப்பட்டவாறான, 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க, நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 10(இ)இல் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 68ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளில் செயற்படுகின்ற இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை, இலங்கைக்குள் ஏற்றுமதிப் பெறுகைகளைப் பெறுதல் தொடர்பிலும் அத்தகைய பெறுகைகளை இலங்கை ரூபாவிற்கு மாற்றிக்கொள்வது தொடர்பிலும் இத்தால் விதிகளை விடுக்கின்றது.

3. மறுஅறிவித்தல் வரை பொருட்களின் ஒவ்வொரு ஏற்றுமதியாளரும்:

   (i) ஏற்றுமதி செய்யப்பட்ட அனைத்துப் பொருட்கள் தொடர்பிலும் கப்பலேற்றப்பட்ட திகதியிலிருந்து நாற்றியெண்பது (180) நாட்களுக்கிடையில் ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கையில் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்; அத்துடன்

   (ii) ஏற்றுமதி செய்யப்பட்ட ஒவ்வொரு பொருட்கள் தொடர்பிலும் ஏற்றுமதிப் பெறுகைகளின் ஒவ்வொரு பற்றுச்சீட்டுக்கள் மீதுமான தொடர்பான அனைத்து ஆவணச் சான்றுகளையும் அத்தகைய பெறுகைகளை இலங்கையில் பெறுகின்ற தொடர்பான உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிடம் அல்லது உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளிடம் (இதனகத்துப் பின்னர் "உரிமம்பெற்ற வங்கிகள்" என அழைக்கப்படும்) உடனடியாக சமர்ப்பித்தல் வேண்டும்.

4. மேலேயுள்ள 3ஆம் பிரிவின் கீழ் கேட்டுக்கொள்ளப்பட்டவாறு, பொருட்களின் ஒவ்வொரு ஏற்றுமதியாளர்களும் இலங்கைக்குள் அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகளைப் பெற்றுக்கொண்டதும் உடனடியாக, இலங்கையில் பெறப்பட்ட குறிப்பிட்ட ஏற்றுமதிப் பெறுகைகளில் இருபத்தைந்து சதவீதத்தினை (25%) உரிமம்பெற்ற வங்கியொன்றின் மூலமாக மாற்றிக்கொள்ளுதல் வேண்டும்.

5. இலங்கையில் பெறப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளிலிருந்து மேற்சொல்லப்பட்ட இருபத்தைந்து சதவீதத்தினை (25%) மாற்றிக்கொள்ளும் தேவைப்பாடு, நாணயச் சபையினால் காலத்திற்குக் காலம் வேறு ஏதேனும் சதவீதம் நிர்ணயிக்கப்படும் வரை தொடர்ந்திருத்தல் வேண்டும்.

6. மேலேயுள்ள விதி 3இல் குறித்துரைக்கப்பட்டவாறான காலப்பகுதிக்குள் இலங்கையில் ஏற்றுமதிப் பெறுகைகள் பெறப்பட்டமையினையும் மேலேயுள்ள விதி 4இல் கேட்டுக்கொள்ளப்பட்டவாறு அத்தகைய பெறுகைகள் மாற்றப்பட்டுள்ளமையினையும் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் கட்டாயமாகவும் கடுமையாகவும் கண்காணிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன் அவற்றுடன் தொடர்பான அல்லது தொடர்புபட்ட அனைத்து ஆவணச் சான்றுகளையும் பேணி வருதலும் வேண்டும்.

7. அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் காலத்திற்குக் காலம் கேட்டுக்கொள்ளப்படுகின்றவாறு இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், விடயத்தினைப் பொறுத்து மேலேயுள்ள 6ஆம் விதியின் கீழ் பேணப்படும் பதிவேடுகளைப் புலனாய்வு செய்வதற்கும் பரீட்சிப்பதற்கும் இவ்விதிகளுடன் முழுமையான விதத்திலும் கடுமையான விதத்திலும் இணங்கிச் செல்வதற்கு அத்தகைய உரிமம்பெற்ற வங்கிகளினால் எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் பரீட்சிப்பதற்கும் மீளாய்வு செய்வதற்குமாக ஆளுநரினால் அல்லது துணை ஆளுநரினால் அதிகாரமளிக்கப்பட்டவாறான இலங்கை மத்திய வங்கி அலுவலர்களை எவ்வித கட்டுப்பாடுமின்றி அணுகுவதற்கு அனுமதித்தல் வேண்டும்.

8. இவ்விதிகள், ஏற்றுமதி செய்யப்பட்ட அனைத்துப் பொருட்கள் தொடர்பிலும் அத்தகைய பொருட்கள் கப்பலேற்றப்பட்ட திகதியிலிருந்து நூற்றியெண்பது (180) நாட்கள் எத்திகதியில் வருகின்றதோ அத்திகதியின் பின்னர் நடைமுறைக்கு வருதலாதலும் வேண்டும்.

9. இவ்விதிகள் உடனடியாகவும் இங்கேயுள்ள திகதியிலிருந்தும் நடைமுறைக்கு வருதலாதல் வேண்டும்.

10. ஏதேனும் சந்தேகங்களைத் தவிர்த்துக்கொள்வதற்காகவும் இவ்விதிகளின் நோக்கத்திற்காகவும் "ஏற்றுமதிப் பெறுகைகள்" என்பது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2019.10.17 ஆந் திகதியிடப்பட்ட இல.2145/49 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, செலாவணிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 29ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட அத்தகைய பெறுகைகளை உள்ளடக்குதல் வேண்டும்.

11. இவ்விதிகளின் நோக்கங்களுக்காக "உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்" மற்றும் "உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்" என்ற பதங்கள் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளில் அவற்றிற்கு வழங்கப்பட்ட அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

**2218/38ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு மாச்சு மாதம் 09ஆந் திகதி செவ்வாய்க்கிழமை**

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

பகுதி I : தொகுதி (I) - பொது

**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

**1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டம்**

**1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 68ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10(இ)ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விதிகள்**

பேராசிரியர் டபிள்யூ. டி. லக்ஷ்மன்,
**நாணயச் சபையின் தலைவரும்,**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்.**

இலங்கை மத்திய வங்கி
கொழும்பு,
2021, மாச்சு 09.

**ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல்**

1. இவ்விதிகள், “2021ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்பும் விதிகள்” என எடுத்துக்காட்டப்படுதல் வேண்டும்.

2. இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்டு 2021, பெப்புருவரி 18ஆந் திகதியிடப்பட்ட 2215/39ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல் விதிகள், அதன் 4ஆம் விதியினை நீக்கி பின்வரும் புதிய விதியினை அதற்கு பதிலீடு செய்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

“4. பொருட்களின் ஒவ்வொரு ஏற்றுமதியாளரும் மேலே 3ஆம் விதியின் கீழ் வேண்டப்பட்டவாறு, அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகள் இலங்கைக்கு கிடைக்கப்பெற்றதன் மீது பதினான்கு நாட்களினுள் (14) இலங்கையில் கிடைக்கப்பெற்ற சொல்லப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளின் மொத்தத்தில் இருந்து மற்றும் மொத்தத்தில் இருபத்தைந்து சதவீதத்தினை (25%) உரிமம்பெற்ற வங்கியொன்றினூடாக இலங்கை ரூபாய்க்கு மாற்றிக்கொள்ளுதல் வேண்டும்.

ஆயினும், எவ்வாறிருப்பினும், அத்தகைய மாற்றும் திகதி, மேலே விதி 3(ஊ)இல் தேவைப்படுத்தப்பட்டவாறு ஏற்றுமதிப் பெறுகைகள் இலங்கையில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதற்கு முன்னரான திகதியினைவிட பிந்திய திகதியொன்றாக இருத்தலாகாது (அதாவது கப்பலேற்றப்பட்ட திகதியிலிருந்து நூற்றியெண்பது (180) நாட்களுக்குப் பிந்தியதல்ல).”

**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 5ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் நியதிகளில் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 6ஆம் பிரிவின் கீழ் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

1. அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவர் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 33ஆம் பிரிவில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் நியதிகளில், அதன் தொடர்பான அதிகாரமளித்தலில் குறித்துரைக்கப்பட்டளவிற்கு முதல்வர் அல்லது இடையேற்பாட்டாளரென்ற விதத்தில் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியினைக் கையாளமுடியும்.

2. இலங்கையிலுள்ள ஆளொருவர் அல்லது வதியும் ஆளொருவர் அத்தகைய ஆளுடன் (அத்தகைய ஆள் தனிப்பட்டவராக இருக்குமிடத்து அவரின்/ அவளின் வாழ்க்கைத் துணைவர், பிள்ளைகள் அல்லது பெற்றோர் உட்பட) இலங்கை ரூபாவினை

வெளிநாட்டுச் செலாவணிக்கு அல்லது மறுதலையாக மாற்றுகின்றமையுடன் தொடர்புபட்ட நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட முடியும்.

3. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 6(3)ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு கோரிக்கைகளின் உண்மைத்தன்மை மற்றும் சரிபார்ப்புக்களையிட்டு அவர்களே திருப்தியடைந்த பின்னர், நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களுக்கான வெளிநாட்டுச் செலாவணியினை விடுவிக்கலாம். நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களின் குறிப்பிட்ட வகைகளுக்கான உதாரணங்களைத் தருகின்ற குறியீட்டுப் பட்டியலொன்று இப்பணிப்புரைகளின் அட்டவணை ஐ இல் தரப்பட்டுள்ளது. எனினும், இது நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களின் முழுமையான பட்டியலைத் தரவில்லை.

4. உண்மைத்தன்மையினை மதிப்பிடுகையிலும் சரிபார்ப்புக்களை மேற்கொள்கையிலும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கொடுக்கல்வாங்கல்களின் தன்மை மற்றும் பணவனுப்பல்களின் நன்மைபெறுநர் என்பனவற்றுடன் தொடர்பான ஆவணச் சான்றுகளை அல்லது வேறு ஏதேனும் கிடைக்கத்தக்கத் தகவல்களை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

5. நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான வெளிநாட்டுச் செலாவணியின் வணிகப்படுத்தலுக்கான வழிகாட்டலொன்று இப்பணிப்புரைகளின் அட்டவணை IIஇல் தரப்பட்டுள்ளது. இக்கொடுக்கல்வாங்கல்கள் கொடுப்பனவுகள் (வெளிப்பாய்ச்சல்கள்) மற்றும் பெறுகைகள் (உட்பாய்ச்சல்கள்) இரண்டையும் உள்ளடக்குகின்ற நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களின் எந்தவொரு வகைக்குமான எந்தவொரு உள்முகப் பணவனுப்பல்களும் அனுமதிக்கப்படுகின்றன.

6. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், இலங்கை மத்திய வங்கியினால் சரிபார்ப்பதற்காக ஒவ்வொரு நடைமுறை கொடுக்கல்வாங்கல்களினதும் அடிப்படையில் அவை தொடர்பான எந்தவொரு தகவலையும் அல்லது ஆவணங்களையும் (இலத்திரனியல் ரீதியாக அல்லது ஆவண வடிவில்) அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் இடம்பெற்ற திகதியிலிருந்து ஆறு ஆண்டு காலப்பகுதிக்கு அல்லது பதிவேடுகளைப் பேணி வருகின்ற சட்ட ரீதியான காலப்பகுதி வரை எந்தக் காலப்பகுதி நீண்ட காலமானதோ, அதன் அடிப்படையில் வைத்திருத்தல் வேண்டும்.

7. வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 6(5)ஆம் பிரிவிற்கு இணங்கிச் செல்லும் விதத்தில் சட்டத்தின் 6(4)ஆம் பிரிவில் தெரிவிக்கப்பட்ட காரணங்களுக்காக அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவர் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களுக்கான வெளிநாட்டுச் செலாவணி வணிகத்தில் ஈடுபடுவதற்கு மறுக்கப்படலாம்.

8. **இப்பணிப்புரைகளின் நோக்கங்களுக்காக;**

(அ) “இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டை” என்பது பயன்படுத்துநர் வரவு, பற்று அல்லது வேறு ஏதேனும் வடிவிலான மாற்றல்களை இயலச்செய்யும் அட்டை அல்லது சாதனம் எனப் பொருள்படுவதுடன் கடன் அட்டைகள், பற்று அட்டைகள் மற்றும் பெறுமதிச் சேமிப்பு அட்டைகள் என்பனவற்றை உள்ளடக்குமிடத்து இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையுடன் தொடர்புபட்ட வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரைகளுடன் இணங்கிச் செல்லும் நோக்கத்திற்காகக் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளின் விபரங்களை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அடையாளம் காணவும் முடியும்.

(ஆ) “புலம்பெயர்ந்தவர்” என்பது 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (புலம்பெயர்ந்தவர்களினால் செய்யப்படும் நிதிய அனுப்பல்கள்) ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறான பொருளைக் கொண்டிருக்கும்.

(இ) “உடனடிக் குடும்ப உறுப்பினர்கள்” என்பது வாழ்க்கைத் துணை, பெற்றோர் மற்றும் பிள்ளைகள் ஆகியோர் எனப் பொருள்படும்.

(ஈ) “பணவனுப்பல்கள்” என்பது தந்தி மாற்றல்கள், ஏனைய வங்கிகளிடையேயான மாற்றல்கள், வங்கி வரைவுகள், ஏனைய கொடுப்பனவுச் சாதனங்கள், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு கொடுப்பனவுப் பொறிமுறைகள் அல்லது தளங்களூடாகப் பெறப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் நாணயத் தாள்கள் தவிர, வெளிநாட்டிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் பரிவர்த்தனைக் கம்பனிகளிலிருந்து/ இல்லங்களிலிருந்து பெறப்பட்ட நிதிகள் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(உ) “வெளிநாட்டுச் செலாவணி மற்றும் வெளிநாட்டு நாணயம்” என்பது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 33ஆம் பிரிவின் நியதிகளின் அதே பொருள்கோடலைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஊ) “வெளிநாட்டுச் செலாவணிக் கையாளுகை” என்பது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 33ஆம் பிரிவின் நியதிகளின் அதே பொருள்கோடலைக் கொண்டிருத்தல் வேண்டும்.

9. நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட 2017 நவெம்பர் 20ஆம் திகதியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரைகளும் 2020 மாச்சு 19ஆம் திகதியிடப்பட்ட 2020ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரைகளும் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

10. மேலேயுள்ள பந்தி 9இல் குறிப்பிடப்பட்ட முன்னைய பணிப்புரைகள் இரத்துச் செய்யப்பட்டமையானது, இரத்துச் செய்யப்படுவதற்கு முன்னராக அவற்றின் கீழ் உறப்பட்ட ஏதேனும் உரிமைகள், அல்லது தண்டங்கள் அல்லது பொறுப்புக்களைப் பாதிக்கக்கூடாது.

11. இப்பணிப்புரைகளினால் அனுமதிக்கப்பட்ட எதுவும், இப்பணிப்புரைகளின் கீழ் வெளிநாட்டுச் செலாவணி வணிகத்தில் ஈடுபடுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களை அல்லது வேறு எவரேனுமாளினை வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன்

இணங்கியொழுகுவதற்கான தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கின்றது, விடுவிக்கின்றது அல்லது தடுக்கின்றது எனப் பொருள்கோடலாகாது.

12. இப்பணிப்புரைகள் 2021 மாச்சு 22ஆம் திகதியிலிருந்து தொழிற்பாட்டிற்கு வருதலாதல் வேண்டும்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**
2021 மாச்சு 18

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான அட்டவணை I

**நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களின் குறியீட்டுப்பட்டியல்**

1. வெளிநாட்டு வர்த்தகம், பணிகள் மற்றும் வங்கித்தொழில் உட்பட ஏனைய நடைமுறை வியாபாரங்கள் மற்றும் கொடுகடன் வசதிகள்

**1.1 வெளிநாட்டு வர்த்தகம்**

1.1.1. இலங்கைக்கான பொருட்களின் இறக்குமதி மற்றும் இலங்கையிலிருந்தான பொருட்களின் ஏற்றுமதி

1.1.1.1 பொதுவான வணிகப் பொருட்கள், இவை அசையும் பொருட்களை உள்ளடக்குகின்றன.

1.1.1.2 திருத்தல் அல்லது பதனிடலுக்கான பொருட்களின் ஏற்றுமதிகள் அல்லது இறக்குமதிகள்.

1.1.1.3 எரிபொருட்கள், மளிகைப் பொருட்கள், களஞ்சியங்கள் மற்றும் நிரம்பல்கள் போன்ற கொண்டு செல்பவரினால் துறைமுகத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள்.

**1.1.2. சுங்கத் தீர்வையற்ற துறைமுகத்திலான இறக்கி ஏற்றல் வர்த்தகம்**

1.1.2.1 இறக்குமதி செய்யப்பட்டு மூன்றாவது நாட்டிற்கு மீள ஏற்றுமதி செய்யப்படும் வரை வரி செலுத்தப்படாது சுங்கக் களஞ்சிய அறைகளில் சேமித்து வைக்கப்படும் பொருட்கள்.

1.1.2.2 மூன்றாவது நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட முன்னர் வரி செலுத்தப்படாது சுங்க களஞ்சியத்தில் வைத்து அல்லது சுங்கப்பகுதியில் வைத்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை மீளப் பொதியிடல்/ மீள சுட்டுத் துண்டிடல்/ எளிதான பதனிடல்களை மேற்கொள்ளுதல்.

1.1.2.3 இலங்கைக்குப் பொருட்கள் வராமலேயே இரண்டாவது நாட்டிலிருந்து மூன்றாவது நாட்டிற்குப் பொருட்களை நேரடியாக ஏற்றுமதி செய்யும் கரைகடந்த வியாபாரம் (அதாவது ஒரு நாட்டில் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு அல்லது தயாரிக்கப்பட்டு மற்றொரு நாட்டிற்கு கப்பற்படுத்தப்படுவது).

1.1.2.4. வரி செலுத்தப்படாது சுங்கக் களஞ்சியத்திற்குப் பொருட்களை எடுத்துச் செல்லாமலேயே இலங்கைத் துறைமுகமொன்றிற்குள் கப்பல் அல்லது வானூர்தியிலிருந்து இன்னொன்றிற்குப் பொருட்களை மாற்றுதல்.

**1.2 பணிகள் உட்பட ஏனைய நடைமுறை வியாபாரங்கள்**

1.2.1 மற்றையவர்களுக்குச் சொந்தமான பௌதீக உள்ளீடுகளின் தயாரிப்புப் பணிகள் (பதனிடல் பணிகள்), இவை பதனிடல், பொருத்தல், சுட்டுத் துண்டிடுதல் மற்றும் பொதியிடல் போன்றவற்றை உள்ளடக்குகின்றன.

1.2.2 பேணல் மற்றும் திருத்தல் பணிகள், இவை கப்பல்கள், வானூர்திகள் மற்றும் ஏனைய போக்குவரத்துக் கருவிகள் போன்றவற்றின் திருத்தல் மற்றும் பேணலை உள்ளடக்குகின்றன.

1.2.3 போக்குவரத்துப் பணிகள், இவை பயணிகளைக் கொண்டு செல்பவையுடன் தொடர்பான பணிகள், பொருட்களின் நகர்வுகள் (சரக்கு) மற்றும் அஞ்சல், கூரியர், சரக்கு கையாளல் மற்றும் களஞ்சியப்படுத்தல் பணிகள் போன்றவை உள்ளிட்ட தொடர்பான ஆதரவுப் பணிகளை உள்ளடக்குகின்றன.

1.2.4 பயண முகவர்கள், சுற்றுலா தொழிற்பாட்டாளர்கள் அல்லது ஏனைய பணி வழங்குவோரூடாக ஒழுங்கு செய்யப்பட்ட பயணப் பணிகள் உட்பட, வியாபாரம் கல்வி, சுகாதாரம், விடுமுறை, யாத்திரை, ஆய்வரங்குகள், விளையாட்டுக்கள், மாநாடுகள், கலாச்சார நடவடிக்கைகள், விஜயம் செய்தல் என்பனவற்றுடன் தொடர்பான பயணம்.

1.2.5 அத்தகைய கட்டுமானப் பணிகளுடன் தொடர்பான இலங்கைக்குள் உள்ள அல்லது இலங்கைக்கு வெளியேயான பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவு உட்பட கட்டுமானப் பணிகள்.

1.2.6 தொடர்பூட்டல் பணிகள், இவை அஞ்சல், கூரியர், வானொலி, தொலைத் தொடர்பூட்டல் பணிகள் போன்றவற்றை

உள்ளடக்குகின்றன.

1.2.7 காப்புறுதியுடன் தொடர்பான பணிகள், இவை காப்புறுதியுடன் தொடர்பான உள்நாட்டு/ பன்னாட்டு ஒழுங்குவிதிகளுக்குட்பட்டு (ஆயுள் காப்புறுதி தவிர) காப்புறுதி, மீள்காப்புறுதி உத்தரவாதப் பணிகள் மற்றும் காப்புறுதியுடன் தொடர்பான மற்றைய காப்புறுதிகள் என்பனவற்றை உள்ளடக்குகிறது.

1.2.8 நிதியியல் பணிகள், இவை நாணயக் கடிதங்கள்/ கொடுகடன் நிரல்கள்/ வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள்/ நுகர்வோர் மற்றும் வியாபாரக் கொடுகடன் பணிகள்/ தரகுப் பணிகள்/ காரணிப்படுத்தல் பணிகள்/ ஒப்புறுதிகள்/ பாதுகாப்புச் சாதனங்களின் ஏற்பாடுகள்/ நிதியியல் சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் பணிகள்/ கட்டுக்காப்புப் பாதுகாப்புப் பணிகள் என்பனவற்றிற்கான தரகுகள் மற்றும் கட்டணங்கள் உட்பட நிதியியல் இடையேற்பாடுகள் மற்றும் துணைப் பணிகளை உள்ளடக்கிய நிதியியல் பணிகள், கொடுப்பனவுத் தீர்ப்பனவு விதிப்புக்கள், கொடுகடன் தரமிடல் கட்டணங்கள், நம்பிக்கைக் கட்டணங்கள் மற்றும் ஏனைய இடையேற்பாட்டாளர் பணிக் கட்டணங்கள்.

1.2.9 தொலைத் தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல் பணிகள், இவை ஒலிபரப்பு மற்றும் ஊடுகடத்திப் பணிகள், வியாபார வலையமைப்புப் பணிகள், கணனி வன்பொருள் மற்றும் மென்பொருள் பணிகள், முறைமை பேணல் மற்றும் ஏனைய ஆதரவுப் பணிகள் (நிறுவுதல், திருத்தல், பயன்படுத்துவதுடன் தொடர்பான உரிமங்கள் போன்றவை), வடிவமைத்தல் மற்றும் நிகழ்ச்சித்திட்டப்படுத்தல், உத்தரவாதக் கோரல்கள், புதுப்பித்தல் கட்டணங்கள் மற்றும் தரவுச் செயன்முறைப்படுத்தல் அல்லது வெப் உதவிப் பணிகள் போன்றவற்றை உள்ளடக்குகின்றன.

1.2.10 வேத்துரிமை மற்றும் ஏனைய வியாபாரம் தொடர்பான கட்டணங்கள், இவை உரிமக் கட்டணங்கள், வணிக உரிமக் கட்டணங்கள், முகாமைத்துவக் கட்டணங்கள், முடிவுறுத்தல் கட்டணங்கள், உற்பத்தி ஊக்குவிப்பு பணிக் கட்டணங்கள் மற்றும் நுழைவுக் கட்டணங்கள், இரத்துச் செய்தல் கட்டணங்கள் போன்றவற்றை உள்ளடக்குகின்றன.

1.2.11 கண்டுபிடிப்புக்கள், வர்த்தக அடையாளங்கள், பதிப்புரிமைகள், கைத்தொழில் செயன்முறைகள், வடிவமைப்பு, வர்த்தக இரகசியங்கள், வர்த்தக உரிமம், வர்த்தக அடையாளப் பெயர்கள், தலைப்பு அனுசரணைகளுக்கான பிரத்தியேக உரிமை, ஊடக உரிமக் கட்டணங்கள் போன்றவை தவிர்ந்த குத்தகை வாடகை மற்றும் ஏனைய மாற்றத்தக்க ஒப்பந்தங்கள் போன்ற புலமைச் சொத்துரிமையினைப் பயன்படுத்துவதற்கான கட்டணங்கள்.

1.2.12 ஏனைய வியாபாரப் பணிகள், இவை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள், தொழில்சார்நிபுணத்துவம் மற்றும் முகாமைத்துவ ஆலோசனைப் பணிகள், தொழில்நுட்பப் பணிகள் (தரகுகள் உட்பட), கட்டடக்கலை, பொறியியல் பணிகள் போன்ற வர்த்தகத்துடன் தொடர்பான ஏனைய பணிகள், வணிகப்படுத்தல் (துறைமுகத்திலான வர்த்தகம்), வெளிநாட்டு மாலுமிகளுக்கான கூலிகள், வசதிகளின் கொள்வனவு, தொடர்பான நியதிச் சட்டக் கொடுப்பனவுகள், ஒப்பந்த அடிப்படையிலான கப்பல், வானூர்திகள், கொள்கலன்கள் போன்றவற்றிற்கான வாடகை உட்பட பன்னாட்டு நீர்ப்பரப்பில் உள்நாட்டு கப்பல் போக்குவரத்துக் கம்பனிகளினால் தொழிற்படுத்தப்படும் கப்பல் தொழிற்பாடுகள்) மற்றும் ஏனைய வியாபாரப் பணிகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

1.2.13 தொழிற்படுகின்ற குத்தகைக்குவிடும் (வாடகை) பணிகள். அத்தகைய குத்தகை வாடகைகள் எந்தவொரு கலண்டர் ஆண்டிலுமுள்ள அத்தகைய குத்தகை வாடகைகள் பன்னிரண்டு மாதங்களை விஞ்சாத விதத்தில் மட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

1.2.14 கட்புல செவிப்புல மற்றும் தொடர்பான பணிகள் போன்றவை உட்பட தனியாள், கலாச்சாரம் மற்றும் பொழுதுபோக்குப் பணிகள்.

1.2.15 கட்டணங்கள் மற்றும் விதிப்புக்கள், இவை உறுப்புரிமைச் சந்தாக்கள், உலகளாவிய மாநாடுகள்/ ஆய்வரங்குகள்/ பாடநெறிகளைப் பதிவு செய்தல் மற்றும் பங்கேற்புக் கட்டணங்கள், பல்கலைக்கழகங்கள்/ பரீட்சைக் கட்டணங்கள், கௌரவக் கொடுப்பனவுகள், இணைப்புக் கட்டணங்கள், கடப்பாட்டுக் கட்டணங்கள், பன்னாட்டு பிரசுரக் கட்டணங்கள் போன்றவற்றை உள்ளடக்குகின்றன.

1.2.16 ஏனைய பணிகள், இவை அரசாங்கங்கள், பன்னாட்டு மற்றும் பிரதேச அமைப்புக்கள் மற்றும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கிடையேயான அனைத்துப் பணிகள் அதாவது தூதரகச் செலவுகள், விசாக் கட்டணங்கள், தேர்ச்சி அல்லது அறிமுக மதிப்பீட்டுக் கட்டணங்கள், மருத்துவப் பரிசோதனைக் கட்டணங்கள் மற்றும் விசா தொடர்பான ஆவணங்களின் பதிவு மீதான செயன்முறைப்படுத்தல் கட்டணங்கள் போன்றவற்றை உள்ளடக்குகின்றன.

1.2.17 ஏனைய நடைமுறை வியாபாரங்கள், இவை பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

1.2.17.1 குறிப்பிட்ட நடைமுறைக் கொடுக்கல்வாங்கலொன்று தொடர்பில் இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஒருவரின் சார்பில் அல்லது மறுதலையாக, இலங்கையில் வதியுமொருவரினால் மீளளிக்கத்தக்க வைப்புக்களாக அல்லது பிணையங்களாக முன்கூட்டியே வைப்புச் செய்யப்படவுள்ள முற்பணம்.

1.2.17.2 தரப்பினரிடையேயான தொடர்பான வியாபாரம், பணி உடன்படிக்கைகள் அல்லது ஒப்பந்தங்கள் இரத்துச்

செய்யப்படுவதனைத் தொடர்ந்து இலங்கைக்கு வெளியே வதிபவர்களுக்கான கொடுப்பனவுகளின் மீளளிப்பு (குறிப்பிட்ட நடைமுறைக் கொடுக்கல்வாங்கலொன்று தொடர்பில் உள்முகப் பணவனுப்பல்களாகப் பெறப்பட்டவை).

1.2.17.3 வதியும் தொழில்தருநர் கம்பனிகள்/ நிறுவனங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட இலங்கையிலுள்ள செயற்றிட்டங்கள் அல்லது ஒப்பந்தங்கள் வெற்றிகரமாக முடிவடைந்ததைத் தொடர்ந்து வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்களுக்குப் பிடித்துவைக்கப்பட்ட பணத்தினை விடுவித்தல்.

1.2.17.4. பின்வருவனவற்றினால் மேற்கொள்ளப்படும் நிதிகளின் அனுப்புதல்:

1.2.17.4.1 முகவராண்மை உடன்படிக்கைகளை வைத்திருக்கும் அத்தகைய பணி வழங்குபவர்கள் தொடர்பான வெளிநாட்டு முகவர்களுக்கு இலங்கையிலுள்ள கப்பற்படுத்தல், வான் பயண முகவர்கள் மற்றும் சரக்கு அனுப்புவோரினால் சேகரிக்கப்பட்ட இலங்கை ரூபாயிலமைந்த சரக்கு மற்றும் பயணக் கட்டணங்களை அனுப்புதல்.

1.2.17.4.2 வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கள், வெளிநாட்டுத் தூதரகங்கள் அல்லது வெளிநாடுகளிலுள்ள வெளிநாட்டு முகவர்களுக்கு இலங்கை ரூபாவில் அல்லது வெளிநாட்டுச் செலாவணியில் விசாக் கட்டணங்களைச் சேகரித்து வழங்குவதற்காக அத்தகைய பணி வழங்குபவர்களுடன் செல்லுபடியாகக்கூடிய உடன்படிக்கைகளைச் செய்து கொண்டுள்ள விசாப் பணிகள்/ செய்முறைப்படுத்தல் நிலையங்கள் (இவை இராசதந்திர தூதரகங்கள் அல்ல).

1.2.17.4.3 இலங்கையிலுள்ள கல்வி/ பயிற்சி வழங்கல் நிறுவனங்கள் உள்ளூர் மாணவர்களிடமிருந்து இலங்கை ரூபாவில் அல்லது வெளிநாட்டு நாணயத்தில் பரீட்சை அல்லது பதிவுக் கட்டணமாக சேகரிக்கப்பட்ட நிதிகளை செல்லுபடியாகும் உடன்படிக்கைகளைக் கொண்டுள்ள அத்தகைய கல்விசார்ந்த நிறுவனங்களான வெளிநாட்டுப் பல்கலைகழகங்கள்/ நிறுவனங்கள்/ கல்லூரிகளுக்கு அனுப்புதல்.

1.2.17.4.4 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) கீழ் பதிவுசெய்யப்பட்ட வெளிநாட்டுக் கம்பனியினால் (இலங்கையில் தொழிற்படுகின்ற வெளிநாட்டுக் கம்பனி தொடர்பில் ஏற்பட்ட) செலவிடப்பட்ட பணத்தினை நிதியங்களின் மீளளிப்புக்களை வெளிநாட்டிலுள்ள தாய்க் கம்பனிக்கு அனுப்புதல்.

1.2.17.4.5 பல்தேசியக் கம்பனிகளுடன் இணைக்கப்பட்டதாகக் காணப்படும் இலங்கையிலுள்ள கம்பனியொன்றினால் கம்பனிகளுக்கிடையிலான கட்டணங்களினை (குறிப்பிட்ட நடைமுறைக் கொடுக்கல்வாங்கலொன்றுடன் தொடர்புடைய) அத்தகைய பல்தேசியக் கம்பனிகளுக்கு அனுப்புதல்.

1.2.17.4.6 இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட கொடைஞரால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள் தொடர்பில் உள்முகப் பணவனுப்பல்களாகப் பெறப்பட்டு செலவிடப்படாது அல்லது பயன்படுத்தப்படாதிருக்கும் நிதியின் பகுதியினை வெளிநாட்டிலுள்ள தொடர்பான கொடைஞருக்கு/ நிதியிடல் முகவர்களுக்கு நாட்டின் ஏற்புடைத்தான சட்டங்களுக்குட்பட்டு வதியும் செயற்றிட்டக் கம்பனிகளினால் அனுப்புதல்.

**1.3 வங்கித்தொழில் மற்றும் கொடுகடன் வசதிகள்**

1.3.1 நாணயக் கடிதங்கள்

பன்னாட்டு வர்த்தகக் கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளிக்கும் பொருட்டு, ஒருமுகப்படுத்தப்பட்ட சுங்க நடைமுறையின் ஏதேனும் உறுப்புரை, அதன் ஒரு பகுதி அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு ஏற்புடைத்தானதும் அவர்களைக் கட்டுப்படுத்துகின்றதுமான இலங்கையில் நிலவுகின்ற சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பில் அத்தகைய ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டங்களுடன் முன்னுக்குப்பின் முரண்படவில்லை என்ற நிபந்தனைக்குட்பட்டு பன்னாட்டு வர்த்தகச் சம்மேளனத்தின் ஆவணப்படுத்தல் வரவுகளுக்காக ஒருமுகப்படுத்தப்பட்ட சுங்க நடைமுறை ஏற்பாடுகளின் நியதிகளுக்கிணங்க அத்தகைய நாணயக் கடிதங்கள் நிறுவப்பட்டிருக்குமிடத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் நாணயக் கடிதங்களை வழங்கலாம்; செல்லுபடியாகும் காலத்தை நீடிக்கலாம்; கிளைவாசகங்களைத் திருத்தலாம்.

1.3.2 வெளிநாட்டு நிரம்பலர் கொடுகடன் வசதிகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள்

வெளிநாட்டு நிரம்பலர்களினால் பொருட்களின் இறக்குமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளின் மீதான வட்டிக் கொடுப்பனவுகளை (அதாவது உள்நாட்டு இறக்குமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுடன் தொடர்பான கொடுப்பனவு நியதிகள் தொடர்பில்), அப்பொழுது நிலவுகின்ற பன்னாட்டு வட்டி வீதங்களை விஞ்சாத விதத்தில் மற்றும் வழங்கப்பட்ட கொடுகடன் காலத்திற்கு அல்லது உண்மையான தீர்ப்பனவுத் திகதிக்கப்பால் (இதில் எது முதலில் வருகின்றதோ அப்பொழுது) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுப்பி வைக்க முடியும்.

**2. கடன்கள் மீதான வட்டி மற்றும் ஏனைய முதலீடுகளிலிருந்தான தேறிய வருமானம்**

2.1 பங்குலாபங்கள், வட்டி, வாடகை வருமானம் மற்றும் இலாபங்களை உள்ளடக்குகின்ற முதலீட்டு வருமானம்

2.1.1 இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே செய்யப்பட்ட அனுமதிக்கப்பட்ட முதலீடுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட முதலீட்டு வருமானம். இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட அனுமதிக்கப்பட்ட முதலீடுகளிலிருந்து ஏதேனும் வருமானம் பெறப்பட்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில் அத்தகைய வருமானம் உள்முக முதலீட்டுக் கணக்குகளுக்கு ஏற்புடைத்தான வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகளின் நியதிகளில் உள்முக முதலீட்டுக் கணக்கொன்றினூடாக வழிப்படுத்தப்படல் வேண்டும்.

2.1.2 வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் அல்லது இரத்துச் செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட கடன்கள் தொடர்பில், கடன் வட்டி, கடப்பாட்டுக் கட்டணங்கள், கடன் நிருவாகம் மற்றும் ஏனைய தொடர்பான கட்டணங்கள் மற்றும் விதிப்புக்களின் கொடுப்பனவுகள் பொருத்தமான விதத்தில் உள்முக முதலீட்டுக் கணக்குகள் அல்லது வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுக் கணக்குகளூடாக வழிப்படுத்தப்படல் வேண்டும்.

**3. கடன்களின் தீர்ப்பனவிற்கான கொடுப்பனவுகள்**

3.1 மூலதனத்தின் மீள்கொடுப்பனவினதும் வட்டிக் கொடுப்பனவுகளினதும் தொகைகளும் காலமும் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் அல்லது இரத்துச் செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட கடன்களின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கியவையாக இருக்குமிடத்து கடன் உடன்படிக்கைகள் தொடர்பில் சேரவேண்டிய கொடுப்பனவுகள் இசைந்தவையாக இருக்கும்.

**4. குடும்பங்களின் வாழ்க்கைச் செலவுகள் மற்றும் ஊழியர்களின் இழப்பீட்டிற்கான பணவனுப்பல்கள்**

**4.1 குடும்பங்களின் வாழ்க்கைச் செலவுகள்**

4.1.1 வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கைப் பிரசைகளினால் உள்முகப் பணவனுப்பல்கள்

4.1.2 புலம்பெயர்ந்தவர்கள் நீங்கலாக வெளிநாட்டில் வாழும் குடும்பங்கள் அல்லது தங்கியிருப்போரைப் (பெற்றோர், வாழ்க்கைத்துணை, பிள்ளைகள்) பராமரிப்பதற்கான நிதியங்களின் பணவனுப்பல்கள்

4.1.3 மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்குகளுக்கு ஏற்புடைத்தான வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகளின் நியதிகளுக்குட்பட்டு வெளிநாட்டில் வாழும் குடும்பங்கள் அல்லது தங்கியிருப்போரை (பெற்றோர், வாழ்க்கைத்துணை, பிள்ளைகள்) பராமரிப்பிற்காக புலம்பெயர்ந்தவர்களினால் மேற்கொள்ளப்படும் நிதியங்களின் பணவனுப்பல்கள்

**4.2 வெளிநாட்டிலுள்ள ஊழியர்களுக்கான இழப்பீடு**

4.2.1 கூலிகள், சம்பளங்கள், படிகள், ஓய்வூதியம் அல்லது சேமலாப நிதியப் பங்களிப்புக்கள் மற்றும் தொழில்தருநர்களினால் செலுத்தப்பட்ட வாழ்க்கைச் செலவு மற்றும் தொழில்நிலையுடன் தொடர்பான செலவுகளினை திருப்பியனுப்புதல் என்பனவற்றை உள்ளடக்கிய ஏனைய தொழில்நிலை நன்மைகள் அல்லது இலங்கையில் தொழில்புரியும் வேளையில் அத்தகைய வெளிநாட்டு வேலையாளரினால் கொள்வனவு செய்யப்பட்ட உந்து ஊர்தியின் விற்பனைப் பெறுகைகள் என்பனவற்றை உள்ளடக்குகின்ற வெளிநாட்டிலுள்ள ஊழியர்களுக்கான (தேசியம் கருத்திற்கொள்ளப்படவில்லை) பணவனுப்பல்கள்.

4.2.2 முன்னர் அல்லது தற்பொழுது தொழில்புரியும் வெளிநாட்டு ஊழியர்களின் ஒன்றுதிரண்ட சம்பளங்கள் மற்றும் தொழில்நிலை அல்லது வேறு எவற்றுடனும் தொடர்பான நன்மைகளின் கொடுப்பனவுகளாக அல்லது திருப்பியனுப்பல்களாக வெளிநாட்டில் பேணப்படும் வெளிநாட்டில் தொழில்புரிபவரின் கணக்கிற்கு அல்லது குறித்துரைக்கப்பட்ட பன்னாட்டு ஓய்வூதிய நிதியங்கள்/ திட்டங்கள் அல்லது வெளிநாட்டிலுள்ள தாய்க் கம்பனிகளுக்கான பணவனுப்பல்கள்.

**5. பல்வகை நடைமுறை மாற்றல்கள்**

5.1 உணவு, உடை மற்றும் நுகர்வுப்பொருட்கள், மருத்துவப்பொருட்களின் விநியோக அன்பளிப்புக்கள், நிவாரண முயற்சிகளுடன் இணைந்த தொழில்நுட்ப உதவி அலுவலர்களுக்கான கொடுப்பனவுகள் என்பனவற்றுடன் தொடர்பான அரசாங்கத்தின் மாற்றல்கள்.

5.2 இணங்கிக் கொள்ளாமை அல்லது சட்ட மீறல்கள் தொடர்பாக சட்ட நீதிமன்றங்கள் மற்றும் ஏனைய அரச அல்லது நிறுவன ரீதியான ஒழுங்குமுறைப்படுத்தல் சபைகளினால் விதிக்கப்பட்ட குற்றப் பணம், தண்டப் பணம், விதிப்புக்கள் மற்றும் கோரல்கள் மற்றும் இழப்பீட்டுக் கொடுப்பனவுகள், வழங்கப்பட்ட கட்டாயக் கொடுப்பனவுகள் அல்லது சட்ட நீதிமன்றத்தில் இணங்கிக் கொள்ளப்பட்ட ஒடுக்கிவிடுதல்/ வணிகத் தீர்ப்புக்கள் அல்லது வேறு ஏதேனும் பிணக்குகளுடன் தொடர்பான தீர்ப்பனவுகள்.

5.3 வரிகளுக்கு ஏற்புடைத்தான உள்நாட்டு/ பன்னாட்டுச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்குட்பட்டு வரிகளின் மீளளிப்பு உட்பட வரிகளின் தற்போதைய கொடுப்பனவு.

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கப் பணிப்புரைகளுக்கான அட்டவணை II

**நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியில் வணிகங்களை மேற்கொள்வதற்கான வழிகாட்டல்கள்**

1 வர்த்தகக் கொடுப்பனவுகள்

1.1 வணிகப் பொருட்களின் ஏற்றுமதிகள்

1.1.1 பொதுவான கொள்கை

1.1.1.1 நாட்டிற்கான வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களை உருவாக்கும் வணிகப்பொருட்களின் ஏற்றுமதிக்கான கொடுப்பனவுகள் அரசாங்கத்தின் வர்த்தகக் கொள்கைக்குட்பட்டு, எவ்வித கட்டுப்பாடுமின்றி அனுமதிக்கப்படுகிறது.

1.1.1.2 ஏற்றுமதிப் பெறுகைகளை, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுடன் ஏற்றுமதியாளரினால் திறந்து பேணப்படும் ஏதேனும் இலங்கை ரூபாக் கணக்கிற்கு அல்லது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு வரவு வைத்தல் வேண்டும்.

1.1.2 தரகுகள் மற்றும் கோரல்கள்

1.1.2.1 இலங்கையிலுள்ள வதிவோர் ஒருவரினால் பெறப்பட்ட வணிகப்பொருள் ஏற்றுமதிகள் அல்லது வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் இலங்கைக்கு ஏற்றுமதிப் பெறுகைகள் அல்லது உள்முகப் பணவனுப்பல்கள் அனுப்பப்படுமிடத்து வெளிநாட்டிலுள்ள முகவருக்கான தரகுகளின் பணவனுப்பல்.

1.1.2.2 இலங்கையில் ஏற்றுமதிப் பெறுகைகள் பெறப்படுமிடத்து, ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் தரம் மற்றும் அளவுகளில் காணப்படும் வேறுபாடுகள் தொடர்பில் வெளிநாட்டு வாங்குநர்களினால் செய்யப்படும் கோரல்கள் மீதான நியாயமான தொகை கொண்ட பணவனுப்பல்கள்.

1.1.3 உள்முகப் பணவனுப்பல்களைத் திருப்புதல் அல்லது இரத்துச் செய்தல் - வணிகப்பொருள் ஏற்றுமதிப் பொருட்களைப் பொறுத்த வரையில் அத்தகைய ஏற்றுமதிக் கட்டளைகள் பூரணப்படுத்தப்படாமல் அல்லது நிதிகள் மிகையாக அல்லது பயன்படுத்தாமல் பெறப்பட்டிருக்குமிடத்து வாங்குநர்/ அனுப்பியவர் அதனை மீளக் கோருமிடத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அத்தகைய வணிகப் ஏற்றுமதிப் பொருட்களுக்காக இலங்கையில் பெறப்பட்ட உள்முகப் பணவனுப்பல்களைத் திருப்பி அனுப்பலாம்.

1.2 வணிகப் பொருட்களின் இறக்குமதிகள்

1.2.1 பொதுவான கொள்கை - இறக்குமதிப் பொருட்களுக்கான கொடுப்பனவுகள் அரசாங்கத்தின் வர்த்தகக் கொள்கைக்குட்பட்டு எவ்விதக் கட்டுப்பாடுமின்றி அனுமதிக்கப்படுகின்றன.

1.2.2 குறித்துரைக்கப்பட்ட மூன்றாந்தரப்பினருக்கான இறக்குமதிக் கொடுப்பனவுகள் - மற்றொரு வெளிநாட்டு நிரம்பலரினால் (வாங்குநருக்கும் விற்பவருக்குமிடையிலான இணங்கிக் கொள்ளப்பட்ட வர்த்தக உடன்படிக்கையின்படி) நிரம்பல் செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பாக வெளிநாடுகளிலுள்ள குறித்துரைக்கப்பட்ட மூன்றாந்தரப்பினருக்கு பொருட்களின் இறக்குமதியாளர்களினால் செய்யப்படும் கொடுப்பனவுகளுக்காக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வெளிநாட்டுச் செலாவணியினை விடுவிக்கலாம்.

1.3 சுங்கத் தீர்வையற்ற துறைமுகத்திலான இறக்கி ஏற்றல் வர்த்தகம்

1.3.1 பொதுவான கொள்கை

1.3.1.1 அரசாங்கத்தின் வர்த்தகக் கொள்கைக்குட்பட்டு, சுங்கத் தீர்வையற்ற துறைமுகத்திலான இறக்கி ஏற்றல் வர்த்தகத்தின் கீழ் மீள் ஏற்றுமதி நோக்கங்களுக்காக இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான கொடுப்பனவுகள் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகள் தவிர்ந்த, வங்கித்தொழில் முறைமையூடாகக் கட்டுப்பாடுகளெதுவுமின்றி அனுமதிக்கப்படுகின்றன.

1.3.1.2 சுங்கத் தீர்வையற்ற துறைமுகத்திலான இறக்கி ஏற்றல் வர்த்தகத்தின் கீழ், பொருட்களின் இறக்குமதிக்கான கொடுப்பனவுகள், பெறுமதி கூட்டப்பட்ட செலவுகள், வங்கி விதிப்புக்கள் மற்றும் இலாபங்கள் உட்பட மற்றைய உள்நாட்டுக் கட்டணங்கள் என்பன உட்பட உள்நாட்டு வர்த்தகர் (இடையீட்டாளர்) போதுமான இலாப அளவுகளைப் பெறுவதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் பெறப்படக்கூடிய தொடர்பான கொடுப்பனவுகளிலும் பார்க்கக் குறைவானதாக இருத்தல் வேண்டும்.

**2 பணிக் கொடுப்பனவுகள்**

2.1 பொதுவான கொள்கை - நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களின் கீழ்வரும் பணிகளுக்கான கொடுப்பனவுகள் எவ்வித கட்டுப்பாடுமின்றி அனுமதிக்கப்படுகின்றன.

2.2 உள்முகப் பணவனுப்பல்களைத் திருப்புதல் அல்லது இரத்துச் செய்தல் - இலங்கையில் பெறப்பட்ட உள்முகப் பணவனுப்பல்கள் பெறப்பட்டும் பயன்படுத்தப்படாமல் அல்லது மிகையாக இருக்குமிடத்து அவற்றை அனுப்பியவர் மீளக்கோருமிடத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அப்பணவனுப்பல்களை திருப்பியனுப்பலாம்.

**3 பொதுவானவை**

3.1 பயண நோக்கங்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியினை விடுவித்தல்

3.1.1 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், பொழுதுபோக்கு மற்றும் விடுமுறைகளுக்கான பயணம், விளையாட்டு, பொழுதுபோக்கு மற்றும் கலாச்சார நடவடிக்கைகள், உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் விஜயம் செய்தல், யாத்திரைகள், வியாபார நோக்கங்கள், பயிற்சி, மருத்துவம் மற்றும் வெளிநாட்டில் கல்வி கற்றல் (மாணவர் விசாவின் கீழான ஆட்களுக்கான படிகளைப் பொறுத்தவரையில் ஏற்புடைத்தான விதத்தில் தொடர்பான கல்வி நிறுவனங்களிலிருந்து அல்லது வெளிநாட்டு அரசாங்க அதிகாரிகளிடமிருந்தான ஆவணச்சான்றுகளின் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்) என்பன உள்ளிட்ட நோக்கங்களுக்காக வெளிநாடுகளுக்குப் பயணம் செய்கின்ற இலங்கையில் வதியும் ஆட்களுக்கு பயணப் படிகளின் ஒரு பகுதியாக உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 5,000 அல்லது அதற்குச் சமமான வேறு வெளிநாட்டு நாணயத்தினை, அத்தகைய பிரசைகள் இலங்கை ஆட்களாக இருக்குமிடத்து இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட கடவுச்சீட்டின் மீது பொருத்தமான புறக்குறிப்பீட்டினை செய்வதன் மூலம் வெளிநாட்டு நாணயத் தாள்களை வழங்கலாம்.

3.1.2 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், மற்றொரு நாட்டில் நிரந்தரமாக வதிகின்ற இலங்கையர்களுக்கு, இரட்டைப் பிரசாவுரிமையினைக் கொண்டுள்ளவர்களக்கு அவர்கள் தற்பொழுது தொழில்புரிகின்ற அல்லது இலங்கையில் வதிகின்றவிடத்து இரட்டைப் பிரசாவுரிமையினைக் கொண்டிருந்து, ஆனால் அத்தகைய ஆட்கள் அவர்கள் நிரந்தர வதிவிடத்தினை அல்லது பிரசாவுரிமையினைக் கொண்டுள்ள நாட்டிற்கு பயணிக்கின்றவிடத்து பயணப்படியாக ஐ.அ.டொலர் 5,000 அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தினை அல்லது வெளிநாட்டுப் பயண அட்டையினை வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கிற்கு ஏற்புடைத்தான ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகளுக்குட்பட்டு வெளிநாட்டுச் செலாவணியின் நியாயமான தொகையொன்றினை வழங்கலாம்.

3.2 தற்காலிக வதிவிட விசாவின் கீழ் இலங்கையை விட்டுச் செல்வதற்கு எண்ணியுள்ள ஆட்களுக்கு வெளிநாட்டுச் செலாவணியினை விடுவித்தல்

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், தற்காலிக வதிவிட விசாவின் கீழ் இலங்கையை விட்டுச் செல்ல எண்ணியுள்ள இலங்கையில் வதியும் ஆட்களுக்கு (எதிர்காலத் திகதியொன்றில் மற்றொரு நாட்டில் நிரந்தர வதிவிட விசாவினை அல்லது இரட்டைப் பிரசாவுரிமையினைப் பெறத் தகைமையுடையதாக்கும் தற்காலிக விசா தவிர) 2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகளின் (பல்வகை மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) நியதிகளில் அடிப்படைப் படிகளாக வெளிநாட்டுச் செலாவணியின் நியாயமான தொகையொன்றினை வழங்கலாம்.

3.3 வெளிநாட்டுப் பயண அட்டைகள்

3.3.1 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், வெளிநாட்டு நாணயத்தில் பயணப் படிகளைப் பெறுவதற்குத் தகைமையுடைய இலங்கையில் வதியும் ஆட்களுக்கு அவர்கள் வெளிநாட்டில் பயணத்தினை மேற்கொள்வதற்காக இலங்கையிலிருந்து புறப்படும் போது குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட கடவுச்சீட்டின் மீது வெளிநாட்டுப் பயண அட்டையினை வழங்குவது தொடர்பில் பொருத்தமான புறக்குறிப்பீட்டினைச் செய்வதன் மீது வெளிநாட்டுப் பயண அட்டைகளை வழங்கலாம்.

3.3.2 பயண நோக்கங்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியினை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றவிடத்து, ஏதேனும் இலங்கை ரூபாக் கணக்கிற்கு அல்லது வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு பற்று வைப்பதன் மூலம் வெளிநாட்டுப் பயண அட்டையொன்றினை வழங்குதல் வேண்டும்.

3.3.3 வெளிநாட்டுப் பயண அட்டையை வைத்திருப்பவரின் (இதனகத்துப் பின்னர் அட்டையை வைத்திருப்பவர் எனக் குறிப்பீடு செய்யப்படும்) கோரிக்கையின் பேரில் அல்லது அட்டையை வைத்திருப்பவர் இலங்கைக்குத் திரும்பிய திகதியிலிருந்து 90 நாட்கள் கழிந்ததன் பின்னர் இதில் எத்திகதி முதலில் வருகின்றதோ அத்திகதியில் வெளிநாட்டுப் பயண அட்டையில் எஞ்சியுள்ள பயன்படுத்தப்படாத தொகையினை;

(அ) அட்டையினை வைத்திருப்பவர் இலங்கை ரூபாவில் எடுப்பனவு செய்யலாம் அல்லது அட்டையை வைத்திருப்பவரின் இலங்கை ரூபாக் கணக்கிற்கு வரவு வைக்கலாம்; அல்லது

(ஆ) வெளிநாட்டுப் பயண அட்டை வெளிநாட்டு நாணயக் கணக்கில் பற்று வைத்ததன் மூலம் நிரப்பப்பட்டிருக்குமாயின்

அவ்வாறு பற்று வைக்கப்பட்ட தொகை வரையிலான தொகையொன்றினை தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு அல்லது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றிற்கு அல்லது வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு வரவு வைக்கலாம்.

3.3.4 அட்டையை வைத்திருப்பவர் இலங்கையில் வதிபவராகவும் மாணவர் விசாவின் கீழ் வெளிநாட்டில் கல்வி கற்பதற்காக இலங்கைக்கு வெளியே சென்றிருப்பவராகவும் (அதாவது மாணவர்) இருக்கின்ற சந்தர்ப்பம் தவிர, அட்டை வைத்திருப்பவர் வெளிநாட்டில் இருக்குமிடத்து வெளிநாட்டுப் பயண அட்டையொன்றை மீளநிரப்பக்கூடாது. இது கீழேயுள்ள பந்தி 3.3.5இன் நியதிகளுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

3.3.5 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், மாணவர்களுக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டுப் பயண அட்டைகளின் நம்பகத்தன்மையினைச் சரிபார்த்ததன் பின்னர் தொடர்பான வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள்/ கல்வி நிறுவனங்களினால் அல்லது வெளிநாட்டு அரச அதிகாரிகளினால் வழங்கப்பட்ட தேவையான ஆவணச்சான்றுகளையும் பெற்றுக் கொண்டதனைத் தொடர்ந்து வெளிநாட்டிலுள்ள அத்தகைய மாணவர்களின் வாழ்க்கைச் செலவுகள் தொடர்பில், ஏற்புடைத்தானவாறு நிரப்ப முடியும்.

3.4 கொடுப்பனவு அட்டைகள்

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளை அதாவது கொடுகடன்/ பற்று/ பெறுமதி சேமிப்பி அட்டைகளை இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற ஆட்களுக்கு தனிப்பட்ட நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களுக்காக அதாவது இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையினை வைத்திருப்பவரின் அல்லது அவரின் உடனடி குடும்ப உறுப்பினரின் நோக்கங்களுக்காக, இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆட்களுக்கு வெளிநாட்டுச் செலாவணியில் கொடுப்பனவுகளைச் செய்வதற்காக வழங்கலாம். இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளை வழங்குவதும் அதனைப் பயன்படுத்துவதும் அவை தொடர்பில் மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டல்களுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

3.5 மாணவர் விசாவினைப் பெறுவதற்காக முன்கூட்டியே நிதிகளை அனுப்புதல்

3.5.1 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், குறிப்பிட்ட வெளிநாட்டு அரசாங்கங்களின் தேவைப்பாடுகளுக்கிணங்க, கொடுக்கல்வாங்கல்களின் நம்பகத்தன்மையினைச் சரிபார்த்ததன் பின்னர் இவை தொடர்பான தேவையான ஆவணச்சான்றுகளைப் பெற்றுக்கொண்டதும் மாணவர் விசாவிற்கு விண்ணப்பித்துள்ள (கொள்கையளவில் ஒப்புதலளிக்கப்பட்டுள்ள மாணவர் விசா) இலங்கையில் வதியும் ஆட்களுக்கு வாழ்க்கைச் செலவுகளைப் பூர்த்தி செய்வதற்காக முன்கூட்டியே நிதிகளை அனுப்பி வைக்க முடியும்.

3.5.2 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட அனுமதியின் நியதிகளுக்கிணங்க, இலங்கைக்கு வெளியே ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிறுவனமொன்றில் திறக்கப்பட்ட மாணவரின் கணக்கிற்கு பணவனுப்பல்கள் செய்யப்படுகின்றமையினைச் சரிபார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

3.5.3 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அத்தகைய மாணவரின் கடவுச்சீட்டில் பணவனுப்பல்களின் தொகை மற்றும் நோக்கம் என்பன உள்ளிட்ட விபரங்களைக் குறித்துரைக்கின்ற விதத்தில் பொருத்தமான புறக்குறிப்பீடொன்றினைச் செய்தல் வேண்டும்.

3.6 கல்விசார்ந்த நோக்கத்திற்காக இலங்கைக்கு வெளியே செல்கின்ற இலங்கையர்கள் தொடர்பில் நிதிகளை அனுப்புதல்

3.6.1 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், கல்வி நோக்கங்களுக்காக இலங்கைக்கு வெளியே சென்றுள்ள இலங்கைப் பிரசைகளினால் (அதாவது மாணவர்கள்) கல்விக் கட்டணம்/ வாழ்க்கைச் செலவுகள் மற்றும் ஏனைய கல்வியுடன் தொடர்பான செலவினங்களுக்காக இலங்கையர்களினால் அத்தகைய கடன்கள் பெறப்பட்டிருக்குமிடத்து அத்தகைய கொடுக்கல்வாங்கல்களின் நம்பகத்தன்மையினை சரிபார்த்ததன் பின்னர் 2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (பல்வகை மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகளின் நியதிகளில் தேவையான ஆவணச்சான்றுகளைப் பெற்றுக்கொண்டதும் இலங்கையிலுள்ள பெற்றோர் அல்லது பாதுகாவலர்களினால் செய்யப்படும் மீள்கொடுப்பனவுகளுக்காக வெளிநாட்டிலுள்ள தொடர்பான கடன்வழங்கல் நிறுவனங்களுக்கு (அதாவது வங்கிகள், நிதியியல் நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் அல்லது கல்விசார்ந்த நிறுவனங்கள்) நிதிகளை அனுப்பி வைக்கலாம்.

3.7 செலவிடப்படாத ரூபாய்களை மீளமாற்றுதல் - அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆட்களின் செலவிடப்படாத ஏதேனும் இலங்கை ரூபாய்களை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால்/ மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களினால் வழங்கப்பட்ட தொடர்பான காசாக மாற்றிய பற்றுச்சீட்டுக்களைச் சமர்ப்பிப்பதன் மீது வெளிநாட்டு நாணயத்திற்கு மீண்டும் மாற்றிக் கொள்ளலாம்.

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

**இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்**

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் பிரிவுகள் 5, 6 மற்றும் 7 உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களுக்கு வெளிநாட்டுச் செலாவணியில் கொடுப்பனவுகளைச் செய்வதற்காக இலங்கையில் வதியும் ஆட்களுக்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

2. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற ஆட்களுக்கு (இதனகத்துப் பின்னர் “அட்டை உரிமையாளர்கள்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) வழங்கப்பட்ட இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகள் இப்பணிப்புரைகளின் பந்தி 10.1இல் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களுக்கான கொடுப்பனவுகளின் பயன்பாடு தவிர்ந்த, இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆட்களின் தனிப்பட்ட ரீதியிலான நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் மாத்திரம் இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆட்களுக்கு கொடுப்பனவுகளைச் செய்வதற்குப் பயன்படுத்த முடியும்.

3. மேலும், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பின்வரும் ஆட்களுக்கு அத்தகைய அட்டை உரிமையாளர்களின் தொடர்பான கணக்குகளில் வைத்திருக்கப்படும் நிதிகளுக்கெதிராக படுகடன் அட்டைகளை வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

(அ) வியாபாரம், கல்வி அல்லது மருத்துவ நோக்கங்களுக்காக தற்காலிகமாக இலங்கைக்கு வெளியே பயணிக்கின்ற, இலங்கையில் வதிகின்ற ஆளொருவருக்கு

(ஆ) வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கின் உடமையாளரொருவருக்கு

(இ) தனியாள் நாணயக் கணக்கின் உடமையாளரொருவருக்கு

(ஈ) இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்கின் அல்லது இராசதந்திர ரூபாக் கணக்கின் உடமையாளரொருவருக்கு

(உ) உள்முக முதலீட்டுக் கணக்கொன்றின் உடமையாளரொருவருக்கு

(ஊ) மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கொன்றின் உடமையாளரொருவருக்கு

(எ) புலம்பெயர்ந்தவரின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கொன்றின் உடமையாளரொருவருக்கு

(ஏ) வதிவற்ற ரூபாக் கணக்கொன்றின் உடமையாளரொருவருக்கு

(ஐ) வதியும் விருந்தினர் ரூபா நடைமுறைக் கணக்கொன்றின் உடமையாளரொருவருக்கு

(ஒ) மூத்த வெளிநாட்டு பிரசைகள் ரூபாக் கணக்கொன்றின் உடமையாளரொருவருக்கு

4. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளையும் கொடுகடன் இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கான பொறிமுறைகளையும் நடைமுறைப்படுத்துவதன் மூலமும் பின்வரும் ஆட்களுக்கு கொடுகடன் அட்டைகளை வழங்கலாம்.

(அ) இராசதந்திர கடவுச்சீட்டுக்களை அத்துடன்/ அல்லது இலங்கையிலுள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட இராசதந்திர அடையாள அட்டைகளை வைத்திருக்கும் வெளிநாட்டுப் பிரசைகளுக்கு

(ஆ) இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களுக்கு, பிணையுறுதியாக/ பிணையமாக வைத்திருக்கும் அத்தகைய ஆளின் இலங்கையிலுள்ள வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியை 90 சதவீதத்தில் வரையறுத்தல்; அத்தகைய கொடுகடன் அட்டைகளின் மீது உறப்பட்ட செலவினத்தினை தீர்ப்பனவு செய்யுமிடத்து அதனை உள்முகப் பணவனுப்பல்களுடான வெளிநாட்டு நாணயக் கணக்கில் அல்லது புலம்பெயர்ந்தவரின் பணவனுப்பத்தக்க நடைமுறைக் கணக்கில் கிடைக்கத்தக்கதாக இருப்பின் நிதியின் மூலம் தீர்ப்பனவு செய்தல் வேண்டும்.

(இ) இலங்கையிலும் மற்றைய ஏதேனும் நாட்டிலும் இரட்டைப் பிரசாவுரிமையினைப் பெற்றுக் கொண்டிருக்கும் இலங்கையர்களுக்கு இலங்கையில் வசித்த காலப்பகுதியில் அத்தகைய கொடுகடன் அட்டைகளின் மீது உறப்பட்ட செலவினங்களைப் பொறுத்தவரை வெளிநாட்டிலிருந்தான உள்முகப் பணவனுப்பல்கள் ஊடாக வெளிநாட்டு நாணயக் கணக்கின் அல்லது புலம்பெயர்ந்தவரின் பணவனுப்பத்தக்க கணக்கிலுள்ள (கிடைக்கத்தக்கதாக இருப்பின்) நிதியின் மூலம் அல்லது அட்டை உடமையாளரின் இலங்கை ரூபா வருமானங்களிலிருந்து தீர்ப்பனவு செய்யப்படல் வேண்டும்.

5. இப்பணிப்புரையின் பந்திகள் 3 மற்றும் 4இல் குறித்துரைக்கப்பட்ட அட்டை உடமையாளர்களுக்கு வழங்கப்பட்ட இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகள் பின்வருவனவற்றிற்குட்பட்டு, பயன்படுத்தப்படல் வேண்டும் என்பதனை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(அ) இலங்கையிலுள்ள முதலீடுகளுக்கான கொடுப்பனவுகளின் பயன்பாடு தவிர இலங்கையில் இலங்கை ரூபாவில் செய்யப்படும் ஏதேனும் கொடுப்பனவுகள் அனுமதிக்கப்படுகின்றன;

(ஆ) இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டை பின்வருவோருக்கு வழங்கப்பட்டிருக்குமிடத்து, ஏதேனும் நோக்கத்திற்காக இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களுக்கான ஏதேனும் கொடுப்பனவுகள் எவ்வித கட்டுப்பாடுமின்றி அனுமதிக்கப்படுகின்றன;

(i) இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவராகவும் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றின் உடமையாளரொருவராகவும் இருக்கும் இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்கின் உடமையாளரொருவர்

(ii) இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்கின் உடமையாளரொருவர்

(iii) உள்முக முதலீட்டுக் கணக்கின் உடமையாளரொருவர்

(iv) புலம்பெயர்ந்தவரின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கின் உடமையாளரொருவர்

(இ) இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டை பின்வருவனவற்றில் ஒருவருக்கு வழங்கப்பட்டிருக்குமிடத்து, தனிப்பட்ட நோக்கங்களுக்கான நடைமுறைக் கொடுக்கல்வாங்கலொன்றிற்காக இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவருக்காக ஏதேனும் கொடுப்பனவுகளுக்கு (இப்பணிப்புரைகளின் பந்தி 10.1இல் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக கொடுப்பனவுகளைப் பயன்படுத்துவது தவிர) அனுமதிக்கப்படுகின்றன;

(i) வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கின் உடமையாளரொருவர்

(ii) இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவராகவுள்ள தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கின் உடமையாளரொருவர்

(iii) வியாபாரம், கல்வி அல்லது மருத்துவ நோக்கங்களுக்காக தற்காலிகமாக இலங்கைக்கு வெளியே சென்றிருக்கும் இலங்கையில் வதியும் ஆளொருவர்

(iv) இலங்கைக்கு வெளியே நிறுவப்பட்டுள்ள/ கூட்டிணைக்கப்பட்டுள்ள நிறுவனமொன்றாக அல்லது கம்பனியாக விளங்குகின்ற வதிவற்றோர் ரூபாக் கணக்கின் உடமையாளரொருவர்

(எ) இராச தந்திர ரூபாக் கணக்கொன்றின் உடமையாளரொருவர்

(vi) வதியும் விருந்தினர் ரூபா நடைமுறைக் கணக்கொன்றின் உடமையாளரொருவர்

(vii) மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் ரூபாக் கணக்கின் உடமையாளரொருவர்

(ஈ) அத்தகைய அட்டை பின்வருபவர்களுக்கு வழங்கப்பட்டிருக்குமிடத்து, இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையின் உடமையாளரின் மூலதனக் கொடுக்கல்வாங்கல்களுக்காக இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்கான ஏதேனும் கொடுப்பனவுகளை அனுமதித்தல்;

(i) வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கின் உடமையாளரொருவர்

(ii) இலங்கையில் வதிகின்ற ஆளொருவராகவுள்ள தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கின் உடமையாளரொருவர்

6. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், இலங்கையில் வதிகின்ற ஆட்களென குறித்துரைக்கப்பட்ட ஊழியர்கள் அல்லது பணிப்பாளர்களின் பெயர்களில் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளுக்கு/ நிறுவனங்களுக்கு (அதாவது கூட்டாண்மைகளுக்கு) கீழேயுள்ள பந்தி 10.1இல் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்கான கொடுப்பனவுகளின் பயன்பாடு தவிர, நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்பான வெளிநாட்டுச் செலாவணியில் ஏதேனும் கொடுப்பனவுகளைச் செய்வதற்காக, ஒப்புதலளிக்கப்பட்ட உள்ளக நடவடிக்கை முறைகளுக்கிணங்க அத்தகைய கூட்டாண்மைகளுக்கு இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளை வழங்கலாம்.

7. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், அட்டை உடமையாளர் நிரந்தர வதிவிற்காக அல்லது வெளிநாட்டில் தொழில்புரிவதற்காக புலம்பெயரும் போது அல்லது இலங்கையை விட்டுச் செல்லுமிடத்து, இலங்கையிலுள்ள அத்தகைய ஆளுக்கு வழங்கப்பட்ட அட்டையினை, வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள், தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகள், இராசதந்திர ரூபாக் கணக்குகள், உள்முக முதலீட்டுக் கணக்குகள், புலம்பெயர்ந்தவரின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்குகளில் வைத்திருக்கப்பட்ட நிதியங்களுக்கெதிராக வெளிநாட்டுச் செலாவணியில் தீர்ப்பனவுகளைச் செய்வதற்காக இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டை வழங்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பம் தவிர, அல்லது வெளிநின்ற தொகைகள் உள்முகப் பணவனுப்பல்களூடாக தீர்ப்பனவு செய்யப்படும் என்ற அடிப்படையில் அட்டைகள் வழங்கப்பட்டிருக்குமிடத்து அட்டை வழங்கிய வங்கியிடம் அதனைக் கையளித்தல் வேண்டும்.

8. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், பற்று அட்டையினைப் பயன்படுத்தி வெளிநாட்டு நாணயங்களை எடுப்பனவு செய்வது அல்லது கொடுகடன் அட்டையினூடாக காசு முற்பணங்களைப் பெற்றுக்கொள்வது மற்றும் அத்தகைய நாணயங்கள் இப்பணிப்புரையின் கீழ் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பது தொடர்பிலும் அட்டை உடமையாளர்கள் நியதிச் சட்டப் பதிவேடுகளைப் பேணுகின்ற தேவைப்பாடுகளுக்காக சான்றுகளை வைத்திருத்தல் வேண்டும் என்பதனை அட்டை உடமையாளர்களுக்கு உணர்த்துதல் வேண்டும்.

9. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், இப்பணிப்புரைகளின் அதிகாரவரம்பிற்குள் வராத ஏதேனும் நோக்கத்திற்காக இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையூடாக இலங்கைக்கு வெளியே வதிபவருக்கு ஏதேனும் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் பணிப்பாளரிடமிருந்து எழுத்து மூலமான முன்னொப்புதலைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டுமென அட்டை உடமையாளர்களைப் பணித்தல் வேண்டும்.

10. ஏனைய நிபந்தனைகள்

10.1 அட்டை உடமையாளர்களுக்கு வழங்கப்பட்ட இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகள் பின்வருவனவற்றிற்குப் பயன்படுத்தக்கூடாது என்பதனை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்:

(அ) வெளிநாட்டுச் செலாவணியில் வணிகம் செய்தல் (வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகம்);

(ஆ) மெய்நிகர் நாணயக் கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்பான கொடுப்பனவுகள்;

(இ) இலங்கைக்கு வெளியே இடம்பெறும் குதிரைப்பந்தயம், பந்தயம் மற்றும் சூதாட்டத்துடன் தொடர்பான கொடுப்பனவுகள்;

(ஈ) 1969ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டம் மற்றும் அதற்குச் செய்யப்பட்ட ஏதேனும் திருத்தங்களின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்குட்பட்டு, வர்த்தக நோக்கத்திற்காக இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கான கொடுப்பனவுகள்.

10.2 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், இப்பணிப்புரைகளிலுள்ள இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகள் தொடர்பாகக் காணப்படும் ஒழுங்குவிதிகளை விரும்புகின்ற மொழியில் எழுத்து மூலமாக (இலத்திரனியல் ரீதியாக அல்லது ஆவண வடிவில்) தொடர்பு கொண்டு அறிவித்தல் வேண்டுமென்பதுடன் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளை வழங்குகின்ற நேரத்தில் இணைப்பு I இல் உள்ளவாறான வெளிப்படுத்துகையொன்றினையும் அட்டை உடமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

10.3 இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளைப் பயன்படுத்தி அட்டை உடமையாளர்களினால் இப்பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்டவாறான கொடுக்கல்வாங்கல்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டிருக்கின்றன என்பதனை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் உறுதிப்படுத்தல் வேண்டும்.

10.4 எவரேனும் அட்டை உடமையாளர் இப்பணிப்புரைகளில் அனுமதிக்கப்படாத நோக்கங்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியில் கொடுப்பனவுகளை/ காசு எடுப்பனவுகளை மேற்கொள்கின்றார் என்பதற்கு நியாயமான காரணங்கள் காணப்படுமிடத்து, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் உரிய விழிப்புக் கவனத்தினை மேற்கொண்டு இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியில் கொடுப்பனவுகள்/ காசு எடுப்பனவுகளை மேற்கொள்வதனை இடைநிறுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதுடன் இவ்விடயத்தினை வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டு வருதலும் வேண்டும்.

10.5 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் ஒவ்வொரு அட்டை உடமையாளரினதும் கொடுக்கல்வாங்கல்களை வெளிநாட்டுச் செலாவணியிலும் இலங்கை ரூபாவிலும் தனித்தனியாக அடையாளம் காணுதல் வேண்டும்.

10.6 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், முதன்மையான அட்டை உடமையாளர்களும் இலங்கைக்கு வெளியே வதிகின்றவிடத்தொழிய, இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆட்களுக்கு இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளை துணைநிரப்பு அட்டைகளாக வழங்கக்கூடாது. துணைநிரப்பு அட்டைகளின் வழங்கலும் பயன்பாடும் இப்பணிப்புரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டனவாக இருத்தல் வேண்டும்.

10.7 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், வெளிநாட்டில் தொழில்புரிவதற்காக அல்லது கல்வி நோக்கங்களுக்காக இலங்கைக்கு வெளியே சென்றுள்ள அட்டை உடமையாளர்களின் வதிவிட அந்தஸ்தில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பில், இப்பணிப்புரைகளுடன் இணங்கிச் செல்கின்ற விதத்தில் எல்லா நேரங்களிலும் சரிபார்த்துப் பொருத்தமான வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

10.8 இரத்துச் செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஏற்கனவே வழங்கப்பட்ட இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகள் இப்பணிப்புரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டனவாக இருத்தல் வேண்டும்.

11. மாதாந்த அறிக்கையிடல் - அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், வெளிநாட்டு நாணயத்தில் மேற்கொண்ட காசு எடுப்பனவுகள் உட்பட, அட்டை உடமையாளர்களினால் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் பெறுமதியினைக் கருத்திற்கொள்ளாது, அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களினதும் விபரங்களை வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல் கண்காணிப்பு முறைமையான வெளிநாட்டுச் செலாவணி இணையத்தளமூடாக மாத்திரம் மாதாந்த அடிப்படையில் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

12. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இங்கேயுள்ள இணைப்பு I மற்றும் இணைப்பு II, உட்பட இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளின் வழங்கல் மற்றும் புதுப்பித்தல் தொடர்பான ஏதேனும் தகவல்களை அல்லது ஆவணப்படுத்தல்களை, இலங்கை மத்திய வங்கியின் சரிபார்ப்புக்களுக்காக ஆறு ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்கு அல்லது சட்ட ரீதியாக பதிவேடுகளைப் பேணுகின்ற காலப்பகுதிக்கு இதில் எது நீண்டதோ அக்காலப்பகுதி வரை பேணி வருதல் வேண்டும்.

13. இப்பணிப்புரையின் நோக்கங்களுக்காக

(i) “இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டை” என்பது பயன்படுத்துநர் வரவு, பற்று அல்லது வேறு ஏதேனும் வடிவிலான மாற்றல்களை இயலச்செய்யும் அட்டை அல்லது சாதனம் எனப் பொருள்படுவதுடன் கடன் அட்டைகள், பற்று அட்டைகள் மற்றும்

பெறுமதி சேமிப்பு அட்டைகள் என்பனவற்றை உள்ளடக்குவதுடன் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கிச் செல்லும் நோக்கத்திற்காக கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளின் விபரங்களை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அடையாளம் காணமுடியும்.

(ii) "பற்று அட்டை" என்பது அட்டை உடமையாளரின் கணக்கிலுள்ள வரவு நிலுவைகளிலிருந்து நேரடியாகப் பற்று வைப்பதன் மூலம் காசினை எடுப்பனவு செய்யவும் கொடுப்பனவு அட்டைகளைப் பயன்படுத்தவும் அத்துடன் அல்லது பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவிற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளவும் பயன்படுத்த முடியுமொரு அட்டை எனப் பொருள்படும்.

(iii) "கடன் அட்டை" என்பது அட்டை வைத்திருப்பவருக்கு வழங்குநரால் வழங்கப்படும் தொடர் கொடுகடனுடன் தொடர்புபட்டதாக இருக்குமிடத்து, பயன்படுத்தப்பட்ட கடனைக் குறித்துரைக்கப்பட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ தீர்ப்பனவு செய்யமுடியும். குறித்துரைக்கப்பட்ட திகதிக்குப் பின்னர் தீர்ப்பனவு செய்யப்படாத ஏதேனும் தொகையின் மீது வழங்குநர் வட்டியை அல்லது வேறு ஏதேனும் கட்டணத்தினை விதிக்கலாம்.

(iv) "தனியாள் தன்மை" என்பது அட்டை உடமையாளர், வாழ்க்கைத் துணை, பிள்ளைகள் மற்றும் பெற்றோரின் பயன்பாட்டினை மாத்திரம் குறிக்கும்.

(v) "நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள்" என்பது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(vi) "மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள்" என்பது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் சட்டத்திலுள்ளவாறான அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(vii) "மெய்நிகர் நாணயம்" என்பது பெறுமதியின் டிஜிட்டல் வடிவமாக இருப்பதுடன் டிஜிட்டல் முறையில் வர்த்தகப்படுத்தக்கூடியதாகவும் பரிவர்த்தனை ஊடகமாகத் தொழிற்படுவதாகவும் இருக்கிறது. அத்துடன்/ அல்லது கணக்கொன்றின் அலகொன்றாகவும்; அத்துடன்/ அல்லது பெறுமதிச் சேமிப்பியாகவும் இருக்கின்றதெனினும் இது, எந்தவொரு நியாயாதிக்கத்திலும் சட்ட ரீதியான அந்தஸ்தினைக் கொண்டிராததுடன் எந்தவொரு நியாயாதிக்கத்தினாலும் வழங்கப்படவோ அல்லது உத்தரவாதப்படுத்தப்படவோ இல்லை.

(viii) "இலங்கையில் வதிகின்ற ஆட்கள்" என்பது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 31ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்ட கட்டளையின் நியதிகளில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

14. இலங்கையிலுள்ள அல்லது வதிகின்ற ஆட்களுக்கு இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையினை வழங்குவது தொடர்பான தேவைப்பாடுகளைக் குறித்துரைக்கின்ற விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட 2017ஆம் ஆண்டு நவெம்பர் 20ஆம் திகதியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கப் பணிப்புரைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

15. மேலேயுள்ள பந்தி 14இல் குறித்துரைக்கப்பட்ட முன்னைய பணிப்புரைகளின் இரத்தானது, இரத்துச் செய்யப்படுவதற்கு முன்னர் அவற்றின் கீழ் உறப்பட்ட ஏதேனும் உரிமைகள் அல்லது தண்டங்கள் அல்லது பொறுப்புக்களைப் பாதிப்பதாக இருக்கக்கூடாது.

16. இப்பணிப்புரைகளினால் அனுமதிக்கப்பட்டதெதுவும், இப்பணிப்புரைகளின் கீழ், வெளிநாட்டுச் செலாவணி வணிகத்தில் ஈடுபடுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களை அல்லது வேறு எவரேனும் ஆளினை வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கான தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கின்றது, விடுவிக்கின்றது அல்லது தடுக்கின்றது எனப் பொருள்கோடலாகாது.

17. இப்பணிப்புரைகள் 2021 மாச்சு 22ஆம் நாளிலிருந்து தொழிற்பாட்டிற்கு வருதலாதல் வேண்டும்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**
**2021 மாச்சு 18**

2021ஆம் ஆண்டின் 3ஆம் இலக்கப் பணிப்புரைகளுக்கான இணைப்பு I

**(வங்கியில் வைத்திருக்கப்படும் அட்டை உடமையாளரின் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டை விண்ணப்பத்தில் அல்லது ஒப்பந்தங்களை செய்பவரின் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டை உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டியவை)**

**இலங்கை மத்திய வங்கி**

**இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளுக்கான விண்ணப்பதாரியின்/ விண்ணப்பதாரிகளின் பிரகடனம்**

சேரல்: பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்

(கடன்/ பற்று அல்லது வேறு ஏதேனும் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைக்கெதிராக வெளிநாட்டுச் செலாவணியினைப் பெறுவதற்காக விண்ணப்பதாரி/ விண்ணப்பதாரிகளினால் நிரப்பப்படவேண்டியது)

............................................ (பிரதான அட்டை உடமையாளர்/ துணை அட்டை உடமையாளர்) .............................. (பிரதான அட்டை

உடமையாளர்/ துணை அட்டை உடமையாளர்) ஆகிய நான்/ நாங்கள் மேலே என்னால்/ எங்களால் இப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள அனைத்து விபரங்கள் உண்மையானவை எனவும் சரியானவையெனவும் பிரகடனம் செய்கின்றேன்/ செய்கின்றோம்.

நான்/ நாங்கள் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகள் தொடர்பில் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 2021 மாச்சு 18ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கப் பணிப்புரைகளிலுள்ள விபரங்களின்படியான (இணைக்கப்பட்டுள்ளது) நிபந்தனைகளை நான்/ நாங்கள் அறிவோம் என்பதனை இத்தால் நான்/ நாங்கள் உறுதிப்படுத்துகின்றோம் இதற்கு உட்பட்டு வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களுக்காக அட்டை பயன்படுத்தப்படுமென்பதற்கும் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க நான்/ நாங்கள் நடந்துகொள்வதற்கும் பொறுப்பேற்கிறோம்.

வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் நோக்கத்திற்காக .............................. வங்கி கேட்டுக்கொள்கின்றவாறு எனக்கு/ எங்களுக்கு வழங்கப்பட்ட அட்டை தொடர்பில் வெளிநாட்டுச் செலாவணியில் என்னால்/ எங்களால் செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மீதான ஏதேனும் தகவல்களை வழங்குவதற்கு நான்/ நாங்கள் மேலும் உடன்படுகின்றேன்/ உடன்படுகின்றோம்.

எனக்கு/ எங்களுக்கு வழங்கப்பட்ட இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டை தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் விடுக்கப்பட்ட இணைக்கப்பட்ட பணிப்புரைகளின் நியதிகளில் அனுமதிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்கள் எனச் சந்தேகப்படுவதற்கு நியாயமான காரணங்கள் இருக்குமிடத்து இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டை மீதான வெளிநாட்டுச் செலாவணியின் கிடைப்பனவினை இடைநிறுத்துமாறும் வெளிநாட்டுச் செலாவணிப் பணிப்பாளருக்கு விடயத்தினை அறிவிக்குமாறும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் (வங்கி) கேட்டுக்கொள்ளப்படுவர் என்பதனை நான்/ நாங்கள் அறிவோம்.

நான்/ நாங்கள் நிரந்தர வதிவிற்காக அல்லது வெளிநாட்டுத் தொழிலொன்றிற்காக இலங்கையை விட்டு புலம்பெயரும் பொழுது இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளை .......................................... வங்கியிடம் கையளிப்போம் என நான்/ நாங்கள் பொறுப்பேற்றுக் கொள்வோம் என நான்/ நாங்கள் உறுதியளிக்கின்றோம். மேலும், நான்/ நாங்கள் எனது/எங்கள் வதிவிட அந்தஸ்தில் ஏற்படும் மாற்றங்கள் ஏதேனுமிருப்பின் அதனை அதன்படி வங்கிக்கு அறிவிப்பதற்கு இணங்குகிறோம்.

................................................ ...............................................................................................

திகி.மாமா.ஆஆ பிரதான அட்டை உடமையாளரின் கையொப்பம்

...............................................................................................

துணை அட்டை உடமையாளரின் கையொப்பம்

**2021ஆம் ஆண்டின் 3ஆம் இலக்கப் பணிப்புரைகளுக்கான இணைப்பு II**

(தகைமையுடைய ஆட்களுக்கு இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளை வழங்கும்/ உறுதிப்படுத்தும் போது (வங்கியின்) ........... ..................... சார்பில் உறுதிப்படுத்தும் அலுவலரினால் நிரப்பப்பட வேண்டியது)

**இலங்கை மத்திய வங்கி**

**இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளுக்கான அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் பிரகடனம்**

சேரல்: பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்

நான், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் என்ற ரீதியில் விண்ணப்பதாரி/ விண்ணப்பதாரிகளினால் வழங்கப்பட்ட தொடர்பான ஆவணங்களுடன் சேர்ந்த தகவல்களை மிகக் கவனமாக பரீட்சித்து பார்த்ததுடன் இத்தகவல்களினதும் ஆவணங்களினதும் நம்பகத்தன்மையினையிட்டு திருப்தியடைந்துள்ளேன். மேலும், நான் வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் என்ற வகையில் வெளிநாட்டுச் செலாவணியில் அவர்/ அவளின் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையினால் மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்கள் மீது எல்லா நேரங்களிலும் உரிய விழிப்புக் கவனத்தினைச் செலுத்துவதற்கும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் நியதிகளின் கீழ் விடுக்கப்பட்ட 2021 மாச்சு 18ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பணிப்புரைகளின் நியதிகளில் அனுமதிக்கப்படாத வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளின் மீது அட்டை உடமையாளர்களினால் வழங்கப்பட்ட பொறுப்பினை மீறுகின்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என ஐயப்படுவதற்கு நியாயமான காரணங்கள் காணப்படுமிடத்து இவ்விடயத்தினை வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் பணிப்பாளரது கவனத்திற்குக் கொண்டு வருவதற்கும் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்.

................................................ ...............................................................................................

திகி.மாமா.ஆஆ அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்

## வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்

## இலங்கை மத்திய வங்கி

## 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்கப் பணிப்புரைகள்

தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற நோக்கத்திற்காக கணக்குகளைத் திறத்தல் மற்றும் பேணுதல்) ஒழுங்குவிதிகளின் நியதிகள் மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் பிரிவுகள் 5, 6, 7 மற்றும் 8 உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறக்கவும் பேணவும் அனுமதிக்கப்படுகின்றனர்.

**1.1 தகைமையுடைய ஆட்கள்**

(அ) பராயமடையாதவர் உட்பட இலங்கையராகவுள்ள தனிப்பட்ட ஒருவர்;

(ஆ) பராயமடையாதவர் உட்பட, இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட தனிப்பட்ட ஒருவர்;

(இ) பராயமடையாதவர் உட்பட, இலங்கையில் வதியும் இலங்கையரல்லாத ஒருவர்;

(ஈ) ஒன்றில் இலங்கைக்கு தற்காலிகமாக விஜயம் செய்கின்ற அல்லது இலங்கைக்கு தற்காலிக விஜயம் செய்ய எண்ணியுள்ள இலங்கையரல்லாதவர்; அத்துடன்

(உ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் அவ்வாறு மரணித்த ஆளினால் பேணப்பட்ட தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கினை மரணித்தவரின் சொத்தின் நிருவாகம் முடிவடையும் வரை மரணித்த அவ்வாளின் சொத்தின் நிருவாகி அல்லது நிறைவேற்றுநர்.

**1.2 கணக்குளைத் திறத்தல் மற்றும் பேணி வருதல்**

(அ) தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளை உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவில், குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நாணயத்தில் சேமிப்புக்கள், நடைமுறை (மேலதிகப் பற்று வசதியில்லாமல்) அல்லது கால வைப்புக் கணக்குகளாகத் திறந்து பேணி வரமுடியும்.

(ஆ) தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளை மற்றொரு தகைமையுடைய ஆளுடன் சேர்ந்து கூட்டுக் கணக்குகளாகவும் பேணமுடியும். எனினும், ஒன்றில் இலங்கைக்குத் தற்காலிகமாக விஜயம் செய்கின்ற அல்லது இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு எண்ணியுள்ள இலங்கையரல்லாதவர்கள் இக்கணக்குகளைக் கூட்டாகத் திறப்பதற்கும் பேணுவதற்கும் தகைமையுடையவரல்லர்.

(இ) இலங்கையராகவுள்ள அல்லது இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட மற்றும் இலங்கைக்கு வெளியே வதிகின்ற பராயமடையாதோரின் பெயரில் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றினைத் திறக்கப்பட வேண்டிய சந்தர்ப்பத்தில் அத்தகைய கணக்குகள் இலங்கைக்கு வெளியே வதியும் அவர்களது பெற்றோர், பாட்டன்பாட்டிகள் அல்லது பாதுகாவலாளரிடமிருந்து அல்லது ஏற்கனவேயுள்ள பெற்றோர், பாட்டன்பாட்டிகள் அல்லது பாதுகாவலரின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்து மாற்றல் செய்யப்பட்ட நிதியிலிருந்து பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிப் பணவனுப்பல்களை வரவு வைப்பதன் மூலம் திறக்கப்படல் வேண்டும்.

(ஈ) வெளிநாட்டில் பயணம் செய்யும் நோக்கத்திற்காக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வணிகரொருவரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட அத்தகைய வெளிநாட்டு நாணயங்கள் அத்தகைய தனிப்பட்டவர்களினால் பயன்படுத்தப்படாத பயணப் படியை நாட்டிற்குள் மீண்டும் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு நாணயத் தாள்களின் வைப்புக்களின் மூலம், அதிகாரமளிக்கப்பட்ட வணிகரினால் குறிப்பிடப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் நம்பகத்தன்மையினை நிரூபிப்பதற்கும் உரிய விழிப்புக் கவனத்தினை மேற்கொள்வதற்குட்பட்டு, புதிய தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றினைத் திறக்க முடியும்.

**1.3 அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) வங்கித்தொழில் முறைமையினூடாக கணக்கு உடமையாளரின் சார்பில் இலங்கைக்கு வெளியிலிருந்து பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலமைந்த பணவனுப்பல்கள்;

(ஆ) அதே கணக்கு உடமையாளரின் அத்துடன்/ அல்லது உடனடிக் குடும்ப உறுப்பினர்களின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றிலிருந்தான மாற்றல்கள்;

(இ) தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்தான அல்லது நடைமுறைக் கொடுக்கல்வாங்கல் தொடர்பில், இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவரினால் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிலிருந்தான

மாற்றல்கள்;

(ஈ) இலங்கையிலுள்ள முதலீடுகள் அல்லது சொத்துக்களின் விற்பனை/ கையேற்பு நோக்கங்கள் நீங்கலாக, இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆட்களாக இருதரப்பினரும் இருக்குமிடத்து, கணக்கு உடமையாளரைக் கருத்திற்கொள்ளாது தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளில் பேணப்படும் கணக்குகளிலிருந்தான மாற்றல்கள்;

(உ) கணக்கு உடமையாளரினால் அத்துடன்/ அல்லது உடனடி குடும்ப உறுப்பினரால் பயண நோக்கங்களுக்காகப் பெறப்பட்டு பயன்படுத்தப்படாத வெளிநாட்டு நாணயம்;

(ஊ) கணக்கு உடமையாளரினால் இலங்கைக்குள் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி ஐ.அ.டொலர் 15,000 இனை விஞ்சுகின்றவிடத்து அல்லது வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகையினை விஞ்சுகின்றவிடத்து சுங்கத் திணைக்களத்திளத்திற்குப் பிரகடனப்படுத்துவதன் மூலமும் அல்லது அத்தகைய வெளிநாட்டுச் செலாவணி ஐ.அ.டொலர் 15,000 இனை அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்திற்குக் குறைவாகவுள்ளவிடத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்கு பிரகடனப்படுத்துவதன் மூலமும் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி;

(எ) கணக்கு உடமையாளரின் அல்லது அவரின்/ அவளின் உடனடி குடும்ப உறுப்பினர்களின் வெளிநாட்டுப் பயண அட்டைகளில் பயன்படுத்தப்படாதுள்ள நிதியில், கணக்கு உடமையாளரின் அதே தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து அத்தகைய வெளிநாட்டுப் பயண அட்டைக்கு நிதியிடப்பட்ட தொகை எவ்வளவோ அதுவரையிலான தொகை;

(ஏ) அதே கணக்கு உடமையாளரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு, உள்முக முதலீட்டுக் கணக்கு அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கிலிருந்தான மாற்றல்கள்;

(ஐ) பொருட்கள் மற்றும் பணிகளின் வழங்கல் தொடர்பில், இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவரின் இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்தான மாற்றல்கள்;

(ஒ) ஆரம்ப முதலீடு, கணக்கு உடமையாளரின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கில் பற்று வைத்ததன் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்திருக்குமாயின், வெளிநாட்டு நாணயத்தில் இலங்கை அபிவிருத்தி முறிகளில் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து தோன்றிய கூப்பன் வருமானம், விற்பனை/ முதிர்ச்சிப் பெறுகைகள் மற்றும் வேறு ஏதேனும் தொடர்பான பெறுகைகள்;

(ஓ) அத்தகைய முதலீடுகள் அதே கணக்கு உடமையாளரின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கில் பற்று வைப்பதன் மூலம் அல்லது அதே கணக்கு உடமையாளரின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து வெளிமுக முதலீட்டுக் கணக்கிற்கு மாற்றல் செய்யப்பட்ட நிதியினைப் பயன்படுத்தியதன் மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்குமிடத்து, வெளிமுக முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் வருமானம் அல்லது மூலதனமாக வெளிமுக முதலீட்டுக் கணக்கிலிருந்து பங்களிப்புக்களின் விகிதாசாரமாகச் செய்யப்பட்ட மாற்றல்கள்;

(ஔ) ஆரம்ப முதலீடு, கணக்கு உடமையாளரின் அதே தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து பற்று வைத்ததன் மூலம் செய்யப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய வாங்குநருக்கான வெளிநாடுகளிலுள்ள அனுமதிக்கப்பட்ட முதலீடுகளின் விற்பனையிலிருந்தான பெறுகைகளாக விளங்கும் மற்றொரு ஆளின் (அதாவது வாங்குநர்) வெளிமுக முதலீட்டுக் கணக்கிலிருந்தான மாற்றல்கள்;

(க) கணக்கு உடமையாளர் இலங்கைக்கு வெளியே வதியும் புலம்பெயர்ந்தவராக அல்லது இலங்கையினை விட்டுச் செல்கின்ற புலம்பெயர்ந்தவராக (ஆரம்பத்தில் அல்லது பின்னர்) இருக்கின்றவிடத்து, கணக்கு உடமையாளரின் மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்கு அல்லது புலம்பெயர்ந்தவர் பணம் அனுப்பத்தக்க வர்த்தக வருமானக் கணக்கு என்பனவற்றிலிருந்து இலங்கையில் பெறப்பட்ட நடைமுறை வருமானம்;

(ங) கணக்கு உடமையாளர் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கையரல்லாதவராக இருக்குமிடத்து (பராயமடையாதவர் உட்பட) மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்கு மீதான 2021 மாச்சு 18ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கப் பணிப்புரையின் பந்தி 5(இ)இல் குறிப்பிடப்பட்ட அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள் தொடர்பான நிதிகளின் மாற்றல்;

(ச) கணக்கு உடமையாளர் இலங்கையில் தொழில்புரிபவராகவும் இலங்கையரல்லாத அல்லது இரட்டைப் பிரசாவுரிமையினைக் கொண்டவராகவும் இருக்குமிடத்து, கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்குகளான வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது தொழில்தருநர் அல்லது ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் அல்லது சம்பளங்கள், தொழில்நிலை மற்றும் ஓய்வூதிய நன்மைகள் அல்லது அத்தகைய ஊழியர்களுக்குச் சேர வேண்டிய வேறு ஏதேனும் கொடுப்பனவுகள் தொடர்பில் தொழில் ஆணையாளர் நாயகத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட வேறு ஏதேனும் ஒப்புதலளிக்கப்பட்ட சேமலாப நிதியம் என்பனவற்றிலிருந்தான மாற்றல்கள்;

(ஞ) கணக்கு உடமையாளர் மரணித்தவரினது சொத்தின் நியமனத்தவராக, நிருவாகியாக அல்லது நிறைவேற்றுநராக மேலேயுள்ள பந்தி 1.1இன் (உ) விடயத்தின் கீழ் தகைமையுடையவராக இருக்குமிடத்து, மரணத்தவரின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்தான மாற்றல்கள்;

(ட) ஏற்கனவேயுள்ள கணக்கு உடமையாளர் ஒருவர் இலங்கையில் வதிகின்ற ஆளொருவராக இருந்து நன்மைபெறுநராகக் குறித்துரைக்கப்படுமிடத்து, மரணித்தவரின் சொத்தினது நிருவாகியாக/ நிறைவேற்றுநராகவுள்ள அல்லது கம்பனியின் பெறுநர்/ ஒடுக்கிவிடுபவராகவுள்ளவரின் உள்முக முதலீட்டுக் கணக்கிலிருந்தான மாற்றல்கள்;

(ண) கணக்கு உடமையாளர் இலங்கைப் பிரசையாகவும் வெளிநாட்டிலுள்ள தொழில்தருநரொருவருக்கு இலங்கைக்கு வெளியே பணிகளை வழங்குமொருவராகவும் இருக்கின்றவிடத்து, கூலிகள் அத்துடன் அல்லது கணக்குடமையாளரின் வருவாய்களைப் பகிர்ந்தளிப்பதற்காக வெளிநாட்டிலுள்ள தொழில்தருநருடன் ஏற்பாடுகளைக் கொண்டுள்ள இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்தான மாற்றல்கள்;

(த) கணக்கு உடமையாளர் இலங்கைப் பிரசையாகவும் உள்நாட்டுக் கப்பற்படுத்தல்/ வானூர்திக் கம்பனிகளுக்குச் சொந்தமான கப்பல்/ வானூர்திகளில் வெளிநாட்டில் வேலை செய்யும் ஒருவராகவுமிருக்குமிடத்து, வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது விமானப் பணியாளர்களின் சம்பளங்கள்/ கூலிகள் மற்றும் அதனுடன் தொடர்பான தொழில் வாய்ப்பு மற்றும் ஓய்வுகால நன்மைகள் தொடர்பில் அத்தகைய உள்நாட்டுக் கப்பற்படுத்தல்/ வானூர்திக் கம்பனிகளின் வெளிநாட்டு வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிலிருந்தான மாற்றல்கள்;

(ந) சிறப்பு வைப்புக் கணக்குகளுக்கு ஏற்புடைத்தான விதத்தில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகளின் நியதிகளில் கணக்கு உடமையாளரினால் திறந்து பேணப்பட்டு வரும் சிறப்பு வைப்புக் கணக்குகள் மீதான வட்டி உட்பட முதிர்ச்சிப் பெறுகைகள்; அத்துடன்

(ப) கணக்கில் வைத்திருக்கப்பட்ட நிதியின் மீது வெளிநாட்டு நாணயத்தில் உழைக்கப்பட்ட வட்டி.

**1.4 அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) இலங்கையில் வதிகின்ற கணக்கு உடமையாளர் அத்துடன்/ அல்லது உடனடி குடும்ப உறுப்பினர்கள் கணக்குகளின் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் இலங்கைக்கு வெளியே செய்யப்பட்ட ஏதேனும் வெளிமுகப் பணவனுப்பல்கள்;

(ஆ) இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவராக இருக்கும் கணக்கு உடமையாளரின் மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் இலங்கைக்கு வெளியே செய்யப்பட்ட ஏதேனும் வெளிமுகப் பணவனுப்பல்கள்;

(இ) கணக்கு உடமையாளர் இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவராக இருக்கின்றவிடத்து ஏதேனும் நோக்கத்திற்காக இலங்கைக்கு வெளியே அனுப்பப்பட்ட ஏதேனும் வெளிமுகப் பணவனுப்பல்கள்;

(ஈ) இலங்கை ரூபாவில் இலங்கையில் பகிர்ந்தளிக்கப்பட்டவை;

(உ) அதே கணக்கு உடமையாளரின் அத்துடன்/ அல்லது உடனடிக் குடும்ப உறுப்பினர்களின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கான மாற்றல்கள்;

(ஊ) அதே கணக்கு உடமையாளரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கிற்கான மாற்றல்கள்;

(எ) இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவரின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்குகளுக்கு நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் செய்யப்படும் மாற்றல்கள்;

(ஏ) இரண்டு தரப்பினர்களும் இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களாக இருக்குமிடத்து, கணக்கு உடமையாளரைக் கருத்திற்கொள்ளாது, இலங்கையிலுள்ள முதலீடுகள் அல்லது சொத்துக்களினைக் கையேற்கும் நோக்கங்கள் நீங்கலாக, ஏனைய தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்குகளுக்கான மாற்றல்கள்;

(ஐ) கணக்கு உடமையாளரின் தனியாள் வெளிநாட்டு நாணய நடைமுறைக் கணக்கிலுள்ள நிதிகளைப் பயன்படுத்தி வெளிநாட்டு நாணயத்தில் இலங்கை அபிவிருத்தி முறிகளில் செய்யப்பட்ட முதலீடுகளுக்கான கொடுப்பனவுகள்;

(ஒ) அதே வெளிமுக முதலீட்டுக் கணக்கினூடாக விற்பனையாளரினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாடுகளிலுள்ள அனுமதிக்கப்பட்ட முதலீடுகளைக் கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவாக மற்றொரு ஆளின் (அதாவது விற்பனையாளர்) வெளிமுக முதலீட்டுக் கணக்கிற்குச் செய்யப்பட்ட மாற்றல்கள்;

(ஓ) நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரைகளின் நியதிகளில், கணக்கு உடமையாளர் அத்துடன்/ அல்லது உடனடி குடும்ப உறுப்பினர்களின் (ஒவ்வொரு ஆளுக்கும்) பயண நோக்கத்திற்காக ஐ.அ.டொலர் 5,000 அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் நாணயங்களை வெளிநாட்டு நாணயத் தாள்களில் செய்யும் எடுப்பனவு அல்லது வெளிநாட்டுப் பயண அட்டைகளை நிரப்புவதற்கான நிதிய மாற்றல்;

(ஔ) வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கான (புலம்பெயர்ந்தவர்கள் நீங்கலாக) கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பில் 2021 மாச்சு 18ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கப் பணிப்புரைகளின் நியதிகளில் கணக்கு

உடமையாளரினால் பெறப்பட்ட கடன்களின் மீள்கொடுப்பனவுகள்/ தீர்ப்பனவுகளுக்காகச் செய்யப்படும் நிதிய மாற்றல்கள்;

(க) இலங்கைக்கு வெளியே மற்றொரு நாட்டில் நிரந்தர வதிவிட விசாவில் அல்லது இரட்டைப் பிரசாவுரிமையில் வதியும் இலங்கையர்களுக்கான கடன்கள் தொடர்பில் 2021ஆம் ஆண்டு மாச்சு 18ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கப் பணிப்புரைகளின் நியதிகளில் பெறப்பட்ட கடன்களின் மீள்கொடுப்பனவு/ கடன் தீர்ப்பனவிற்காக அதே கணக்கு உடமையாளரின் வெளிநாட்டு நாணயக் கடன் கணக்குகள் அல்லது இலங்கை ரூபாக் கடன் கணக்குகளுக்குச் செய்யப்படும் நிதிய மாற்றல்கள்;

(ங) கணக்கு உடமையாளர் இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கையரல்லாதவராகவும் இலங்கைக்கு தற்காலிகமாக விஜயம் செய்பவராகவும் இருக்குமிடத்து, வெளிநாட்டு நாணயத்திலான எடுப்பனவுகள்;

(ச) கணக்கு உடமையாளர் இலங்கைக்கு வெளியே வதியுமொரு ஆளாக அல்லது இலங்கையில் வதியும் இலங்கையல்லாதவராக இருக்குமிடத்து, அதே கணக்குடமையாளரின் உள்முக முதலீட்டுக் கணக்கிற்குச் செய்யப்படும் மாற்றல்கள்;

(ஞ) கணக்கு உடமையாளர் இலங்கையரல்லாதவராக அல்லது இரட்டைப் பிரசாவுரிமையைக் கொண்ட இலங்கையில் தொழில்புரிபவராக இருக்குமிடத்து சம்பளங்கள், தொழில்நிலை மற்றும் ஓய்வூகால நன்மைகளின் மிகையான கொடுப்பனவு அல்லது அத்தகைய தொழில்தருநருக்குச் சேரவேண்டிய வேறு ஏதேனும் கொடுப்பனவுகள் தொடர்பில் தொழில்தருநரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கு, கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்குகளுக்கு அல்லது இலங்கை ரூபாக் கணக்குகளுக்குச் செய்யப்பட்ட மாற்றல்கள்;

(ட) கணக்கு உடமையாளர் இலங்கைப் பிரசையாகவும் உள்நாட்டுக் கப்பற்படுத்தல்/ விமானக் கம்பனிக்குச் சொந்தமான கப்பல்/ வானூர்தியில் வெளிநாட்டில் தொழில்புரியவராகவும் இருக்குமிடத்து அத்தகைய உள்நாட்டுக் கப்பற்படுத்தலை/ வானூர்திக் கம்பனியின் (அதாவது தொழில்தருநர்) வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிற்கு கப்பல் பணியாளர்களின் சம்பளங்கள்/ கூலிகள் மற்றும் அத்தகைய தொழில்தருநருக்குச் சேரவேண்டிய ஏனைய தொடர்பான கொடுப்பனவுகளுக்கான மாற்றல்கள்;

(ண) கணக்கு உடமையாளர் இலங்கைப் பிரசையாக இருந்து வெளிநாட்டில் தொழில்புரியுமிடத்து, கணக்கு உடமையாளருக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட வீடமைப்புக் கடன்களுக்குப் பிணையாக வழங்கப்பட்ட காப்புறுதிப் பூட்கைகள் தொடர்பில் காப்புறுதிக் கொடுப்பனவுகளாக இலங்கைக் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் காப்புறுதிக் கம்பனிகளின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கான மாற்றல்கள்; அத்துடன்

(த) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 8(3)ஆம் பிரிவின் நியதிகளில் அத்தகைய நிதிகள் இலங்கைக்கு அனுப்பப்பட்டிருக்குமிடத்து கணக்கு உடமையாளரின் ஏதேனும் நோக்கத்திற்காக நிதிகளின் வெளிமுகப் பணவனுப்பல்கள்.

**2. அறிக்கையிடுகின்ற தேவைப்பாடுகள்**

அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இணைப்பு ஐஇல் உள்ளவாறு மாதாந்த அடிப்படையில் னகநஅளூஉடிளட.டமஇ இற்கு மின்னஞ்சல் மூலம் அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இத்திணைக்களத்திற்கு அறிக்கையினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) மேற்குறிப்பிட்ட அறிக்கையிடல் தேவைப்பாடுகளுக்கிணங்க, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், அவர்கள் தொடர்பான வங்கிகளின் கணக்கேடுகளிலிருந்து தொடர்பான தகவல்களை உருவாக்கும் அல்லது பிரித்தெடுக்கும் விதத்தில் வங்கிக்குள் முறைமையொன்றினை நடைமுறைக்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

3. இப்பணிப்புரைகளின் அதிகாரவரம்பிற்குள் வராத ஏதேனும் நோக்கங்களுக்காக தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கு அல்லது கணக்குகளிலிருந்தான ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள் அல்லது மாற்றல்களுக்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் பணிப்பாளரின் முன்னொப்புதலைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**4. இப்பணிப்புரைகளின் நோக்கங்களுக்காக**

(அ) “உடனடி குடும்ப உறுப்பினர்கள்” என்பது வாழ்க்கைத் துணை, பெற்றோர் மற்றும் பிள்ளைகள் எனப் பொருள்படும்.

(ஆ) “பணவனுப்பல்கள்” என்பது தந்தி மாற்றல்கள், ஏனைய வங்கிகளிடையேயான மாற்றல்கள், வங்கி வரைவுகள், ஏனைய கொடுப்பனவுச் சாதனங்கள், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு கொடுப்பனவுப் பொறிமுறைகள் அல்லது தளங்களூ டாகப் பெறப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் நாணயத் தாள்கள் தவிர, வெளிநாட்டிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் பரிவர்த்தனைக் கம்பனிகளிலிருந்து/ இல்லங்களிலிருந்து பெறப்பட்ட நிதிகள் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(இ) “நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள்” என்பது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஈ) “மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள்” என்பது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் தொழிற்படுத்துவது தொடர்பான தேவைப்பாடுகளைக் குறித்துரைக்கின்ற விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட 2017ஆம் ஆண்டு நவெம்பர் 20ஆம் திகதியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கப் பணிப்புரைகளும் 2020 ஒத்தோபர் 07ஆம் திகதியிடப்பட்ட 2020ஆம் ஆண்டின் 7ஆம் இலக்கப் பணிப்புரைகளும் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

6. மேலேயுள்ள பந்தி 5இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள குறித்துரைக்கப்பட்ட முன்னைய பணிப்புரைகளின் இரத்தானது, இரத்துச் செய்யப்படுவதற்கு முன்னர் அவற்றின் கீழ் உறப்பட்ட ஏதேனும் உரிமைகள் அல்லது தண்டங்கள் அல்லது பொறுப்புக்களைப் பாதிப்பதாக இருக்கக்கூடாது.

7. இப்பணிப்புரைகளினால் அனுமதிக்கப்பட்டதெதுவும், இப்பணிப்புரைகளின் கீழ், வெளிநாட்டுச் செலாவணி வணிகத்தில் ஈடுபடுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களை அல்லது வேறு எவரேனும் ஆளினை வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கான தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கின்றது, விடுவிக்கின்றது அல்லது தடுக்கின்றது எனப் பொருள்கோடலாகாது.

8. இப்பணிப்புரைகள் **2021 மாச்சு 22ஆம்** நாளிலிருந்து தொழிற்பாட்டிற்கு வருதலாதல் வேண்டும்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**
**2021 மாச்சு 18**

2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு I

தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் மாதாந்தக் கூற்று

வங்கியின் பெயர்: ......................................................................

அறிக்கையிடும் மாதம் மற்றும் ஆண்டு: ...............................

| நாணய வகை | ஆரம்ப நிலுவை | | வரவுகள் | | | | | பற்றுக்கள் | | | | | | இறுதி நிலுவை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கணக்குகளின் எண்ணிக்கை | தொகை | வெளிநாடுகளிலிருந்தான உள்முகப் பணவனுப்பல்கள் | ஏனைய கணக்குகளிலிருந்தான மாற்றல்கள் | வரவு வைக்கப்பட்ட மொத்த வட்டி | ஏனைய வரவுகள் | மொத்தம் | இலங்கைக்கு வெளியே செய்யப்பட்ட வெளிமுகப் பல்கள் | ஏனைய கணக்குகளுக்கான மாற்றல்கள் | ஏனைய பற்றுக்கள் | வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கை யர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களின் திட்டத்தின் கீழ் கடன்கள் மற்றும் முற்பணங்களின் மீள்கொடுப்பனவுகள் | இலங்கைக்கு வெளியே மற்றொரு நாட்டில் நிரந்தர வதிவிட விசாவிலும் இரட்டைப் பிரசாவுரிமையிலும் வதியும் இலங்கையர்களின் கடன் கணக்குகளுக்கான நிதிய மாற்றல்கள் | மொத்தம் | கணக்குகளின் எண்ணிக்கை | தொகை |
| அவுஸ்திரேலிய டொலர் | | | | | | | | | | | | | | | |
| கனேடிய டொலர் | | | | | | | | | | | | | | | |
| சுவிஸ் பிராங் | | | | | | | | | | | | | | | |
| ஏனைய குறித்துரைக் கப்பட்ட வெளிநாட்டு நாணயம்மூ | | | | | | | | | | | | | | | |

* ஏனைய குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களுக்குத் தேவையான அளவிற்கு நிரல்களை நீங்கள் விரிவாக்கிக் கொள்ளலாம்.

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அறிக்கையின் ஸ்கான் செய்யப்பட்ட பிரதியையும் மேலேயுள்ளவாறு எம்எஸ் எக்ஸ்செல் பதிப்பினையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வங்கியின் கணக்கேட்டிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட / தயாரிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட தகவல்கள் துல்லியமானவை என்பதனை நாங்கள் உறுதிப்படுத்துகின்றோம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் மற்றும் பதவி: ......................................

கையொப்பம் மற்றும் முத்திரை: ..........................................

திகதி: .......................................................

இணங்குவிப்பு அலுவலரின் பெயர்: .......................................

கையொப்பம்: ..........................................

திகதி: .......................................................

**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற நோக்கத்திற்காக கணக்குகளைத் திறந்து மற்றும் பேணிவருதல்) ஒழுங்குவிதிகளின் நியதிகள் மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் பிரிவுகள் 5, 6, 7 மற்றும் 8 உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறக்கவும் பேணவும் அனுமதிக்கப்படுகின்றனர்.

1.1 **தகைமையுடைய ஆட்கள்**

(அ) இலங்கைக்கு வெளியே வதிகின்றவர்களிடமிருந்து வெளிநாட்டுச் செலாவணியினை ஈட்டுகின்ற இலங்கையில் வதியும் பின்வரும் ஆட்கள்;

(i) இலங்கையில் வதியும் தனிப்பட்ட ஒருவர்;

(ii) தனியுரிமையாளர் அல்லது பங்குடமையாளர்களில் பெரும்பான்மையானவர்கள் இலங்கையில் வதிகின்றவர்களாக இருக்குமிடத்து (இரண்டு பங்குடமையாளர்களைக் கொண்ட பங்குடமையினைப் பொறுத்தவரை குறைந்தபட்சம் ஒரு பங்காளராவது இலங்கையில் வதிபவராக இருத்தல் வேண்டும்) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஏக தனியுடைமை அல்லது பங்குடமை;

(iii) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்று;

(iv) 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் கடல் கடந்த கம்பனியொன்றாகப் பதிவுசெய்யப்பட்டுள்ள இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்று;

(v) தொடர்பான நிரல் அமைச்சின் செயலாளர் அல்லது தொடர்பான அதிகாரியினால் விதந்துரைக்கப்பட்ட அரச நிறுவனமொன்று;

(vi) அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருடன் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றினைப் பேணி வந்த மரணமடைந்தவரின் மரணச் சொத்தினது நிருவாகம் பூர்த்தி செய்யப்படும் வரை அத்தகைய மரணமடைந்தவரின் சொத்தினது நிருவாகி அல்லது நிறைவேற்றுநர்; அத்துடன்

(vii) அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருடன் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றினைப் பேணிய கம்பனியொன்றின் வழக்கு நடவடிக்கைகள் முடிவடையும் வரை பெறுநர் அல்லது ஒடுக்கிவிடுவோன் ஒருவர்.

(ஆ) அரசுசார் அமைப்பொன்று வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றினைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அனுமதிக்கப்படக்கூடாது.

1.2 **கணக்குளைத் திறத்தல் மற்றும் பேணி வருதல்**

(அ) வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளை உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவில், குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நாணயத்தில் சேமிப்பு, நடைமுறை அல்லது கால வைப்புக் கணக்குகளாகத் திறந்து பேணி வரமுடியும்.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவரிடமிருந்தான வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் தொடர்பில், வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கினைத் திறந்து பேணுவதற்கு விண்ணப்பதாரிக்கு இருக்கும் தகைமையினைத் தீர்மானிப்பதற்காக வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கினைத் திறக்கின்ற நேரத்தில் தொடர்பான அதிகாரி/ அதிகாரிகளின் உறுதிப்படுத்தல் உள்ளிட்ட ஆவணப்படுத்தல் சான்றுகள், எவற்றையேனும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(இ) வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு உடமையாளர்களுக்கான கடன் வசதி மீது 2021 மாச்சு 18ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 09ஆம் இலக்கப் பணிப்புரைகளின் கீழ் வழங்கப்பட்ட மேலதிகப் பற்று வசதி வழிவகை தவிர, வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு மேலதிக எடுப்பனவு எதனையும் கொண்டிருக்கக்கூடாது.

(ஈ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், கணக்கு உடமையாளர் கப்பற்படுத்தல் முகவரொருவராக அல்லது பொது விற்பனை முகவராக முறையே வணிக கப்பற்படுத்தல் பணிப்பாளர் நாயகத்தினால் அல்லது இலங்கை விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தினால் உரிமம் வழங்கப்பட்டிருக்குமிடத்து, சரக்குக் கட்டணத்தின் ஒரு கூறாகக் காணப்படாத, உள்நாட்டுக் கட்டணங்களாக அல்லது விதிப்புக்களாகச் சேகரிக்கப்பட்ட விதிப்புக்களையும் வைப்புக்களையும் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் வரவு வைக்கக்கூடாது.

(உ) எந்தவொரு சூழ்நிலையிலும் இலங்கை ரூபா வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்றப்பட்டு வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு வரவு வைக்கப்படக்கூடாது.

**1.3 அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள், சுங்கவரி செலுத்தப்படாத துறைமுகத்திலான வர்த்தகம், கணக்கு உடமையாளரினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செயற்றிட்டங்கள், இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்கு உள்நாட்டில் விநியோகிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகள் தொடர்பாக வங்கித்தொழில் முறைமையினூடாக வெளிநாட்டிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலான பணவனுப்பல்கள்;

(ஆ) இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்கு கணக்கு உடமையாளரினால் விநியோகிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகள் தொடர்பில் இலங்கையில் அத்தகைய கணக்கு உடமையாளரினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி;

(இ) வெளிநாட்டுச் செலாவணி ஐ.அ.டொலர் 15,000 அல்லது அதற்குச் சமமான வேறு வெளிநாட்டு நாணயத்தினை விஞ்சுமாயின் அதனைச் சுங்கத் திணைக்களத்திற்குப் பிரகடனப்படுத்தியும் ஐ.அ.டொலர் 15,000 அல்லது அதற்குச் சமமான வேறு வெளிநாட்டு நாணயங்களுக்குக் குறைவாக இருக்குமிடத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்குப் பொருத்தமான விதத்தில் பிரகடனப்படுத்தியும் கணக்கு உடமையாளரினால் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி;

(ஈ) தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது அதே கணக்கு உடமையாளரினால் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிலிருந்தான மாற்றல்கள்;

(உ) நடைமுறைக் கொடுக்கல்வாங்கல் தொடர்பில் இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவரின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிலிருந்தான மாற்றல்கள்;

(ஊ) கணக்கு உடமையாளர் உள்நாட்டுக் கப்பற்படுத்தல்/ வானூர்திக் கம்பனியொன்றாக இருக்குமிடத்து, கணக்கு உடமையாளருக்குச் சொந்தமான கப்பல்கள்/ வானூர்திகளில் வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கைப் பிரசைகளுக்குச் செய்யப்பட்ட பணியாளர் சம்பளங்கள்/ கூலிகள் மற்றும் அத்தகைய ஊழியர்களிடமிருந்து சேரவேண்டிய மிகைக் கொடுப்பனவுகள் தொடர்பாக அவர்களின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து செய்யப்படும் மாற்றல்கள்;

(எ) பொருட்கள் மற்றும் பணிகளின் விநியோகம் தொடர்பில் இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவரின் இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்தான மாற்றல்கள்;

(ஏ) கணக்கு உடமையாளர் இலங்கையிலுள்ள கப்பற்படுத்தல் முகவராக அல்லது பொது விற்பனை முகவராக இருக்குமிடத்து, தொடர்பான முகவராண்மை உடன்படிக்கைகளின் கீழான நோக்கத்திற்காக, தொடர்பான வெளிநாட்டு முதல்வரிடமிருந்து அல்லது வெளிநாட்டு முதல்வரின் சார்பில் குறித்துரைக்கப்பட்ட மூன்றாந்தரப்பினரிடமிருந்து வங்கித்தொழில் முறைமையினூடாக வெளிநாட்டுச் செலாவணியில் பெறப்பட்ட பணவனுப்பல்கள்;

(ஐ) கணக்கு உடமையாளர் இலங்கையிலுள்ள கப்பற்படுத்தல் முகவராக அல்லது பொது விற்பனை முகவராக இருக்குமிடத்து, வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவிலுள்ள கணக்கொன்றிற்கு எதிராக இலங்கையிலுள்ள அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவரினால் வழங்கப்பட்ட வங்கி மாற்றல் அல்லாத வங்கி வரைபு மூலமாக, வெளிநாட்டு முதல்வரின் சார்பில் முகவரினால் சேகரிக்கப்பட்ட சரக்கு மற்றும் பயணிகள் கட்டணங்கள்;

(ஒ) கணக்கு உடமையாளர் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டதொரு கம்பனியாகவும் இலங்கைக்கு வெளியே பணிகளை வழங்குகின்ற இலங்கைப் பிரசைகளின் கூலிகள் அத்துடன்/ அல்லது வருவாய்களைப் பகிர்ந்தளிப்பதற்காக வெளிநாடுகளிலுள்ள தொழில்தருநரொருவருடன் ஏற்பாடுகளைக் கொண்டுள்ளதுமான கம்பனியாக இருக்குமிடத்து, தொடர்பான வெளிநாட்டுத் தொழில்தருநர்களிடமிருந்து வங்கித்தொழில் முறைமையினூடாக வெளிநாட்டிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியில் அல்லது அத்தகைய வெளிநாட்டு தொழில்தருநரின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிலிருந்து மாற்றல்களாகப் பெறப்பட்ட ப்பல்கள்;

(ஓ) இலங்கையிலுள்ள துறைமுகம் அல்லது வானூர்திநிலையத்தினூடாக இலங்கைக்கு வருகின்ற அல்லது புறப்பட்டுச் செல்கின்ற பயணிகளுக்கு (வதிவிட அந்தஸ்தினை கருத்திற்கொள்ளாமல்) பொருட்கள் மற்றும் பணிகளை விநியோகிப்பதன் மூலம் தீர்வையற்ற சலுகைகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட வியாபாரங்களைக் கொண்டு நடத்துகின்ற கணக்குடமையாளரினால் வெளிநாட்டுச் செலாவணியில் பெறப்பட்ட கொடுப்பனவுத் தொகை;

(ஔ) கணக்கு உடமையாளரின் ஏதேனும் வெளிநாட்டுச் சொத்து வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கில் பற்று வைக்கப்பட்டதன் மூலம் கொள்வனவு செய்யப்பட்டிருக்குமிடத்து அத்தகைய சொத்துக்களின் ஏதேனும் வருமானம் அல்லது மூலதனப் பெறுகைகள்;

(க) அத்தகைய முதலீடுகள் அதே கணக்கு உடமையாளரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கில் பற்று வைக்கப்பட்டதன் மூலம் அல்லது அதே கணக்கு உடமையாளரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து வெளிமுக

முதலீட்டுக் கணக்கொன்றிற்கு மாற்றல் செய்யப்பட்ட நிதியினைப் பயன்படுத்துவதன் மூலம் செய்யப்பட்டிருக்குமாயின், பங்களிப்புக்களின் விகிதமாக வெளிமுக முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வேறு ஏதேனும் வருமானம் அல்லது மூலதனப் பெறுகைகளாக வெளிமுக முதலீட்டுக் கணக்கிலிருந்தான மாற்றல்கள்;

(ங) ஆரம்ப முதலீடு, கணக்கு உடமையாளரின் அதே வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு பற்று வைக்கப்பட்டதன் மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய வாங்குநருக்கு வெளிநாடுகளில் அனுமதிக்கப்பட்ட முதலீகளின் விற்பனையிலிருந்தான பெறுகைகளாக மற்றொரு ஆளின் (அதாவது வாங்குநர்) வெளிமுக முதலீட்டுக் கணக்கொன்றிலிருந்தான மாற்றல்கள்;

(ச) இலங்கை அபிவிருத்தி முறிகளின் ஆரம்ப முதலீட்டு கணக்கு உடமையாளரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கில் பற்று வைக்கப்பட்டதன் மூலம் செய்யப்பட்டிருந்திருக்குமாயின், வெளிநாட்டு நாணயத்தில் இலங்கை அபிவிருத்தி முறிகளில் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து தோன்றிய கூப்பன் வருமானம், விற்பனை/ முதிர்ச்சிப் பெறுகைகள் மற்றும் ஏனைய தொடர்பான பெறுகைகள்;

(ஞ) இப்பணிப்புரைகளின் 1.4ஆம் பந்தியின் (உ), (ஊ) மற்றும் (எ) விடயங்களின் நியதிகளில் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கில் பற்று வைத்தமையின் மூலம் கணக்கு உடமையாளரினால் பெறப்பட்டு பயன்படுத்தப்படாத வெளிநாட்டு நாணயம்;

(ட) கணக்கு உடமையாளரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து வெளிநாட்டுப் பயண அட்டைக்கு எவ்வளவு தொகை நிதியிடப்பட்டதோ அது வரையிலான அத்தகைய கணக்கு உடமையாளரின் வெளிநாட்டுப் பயண அட்டையில் எஞ்சியுள்ள நிலுவை;

(ண) கணக்கு உடமையாளர், இலங்கைக் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் ஒழுங்குமுறைப்படுத்தும் காப்புறுதிக் கம்பனியொன்றாக இருக்குமிடத்து, தகைமையுடைய வாடிக்கையாளர்கள் மற்றும் இணைக் காப்புறுதியாளர்களுக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட காப்புறுதிப் பூட்கைகள் தொடர்பில் பெறப்பட்ட காப்புறுதிக் கட்டணங்கள் மற்றும் மீள்காப்புறுதியாளர்களிடமிருந்தும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திலிருந்தும் பெறப்பட்ட கோரல்கள்;

(த) கணக்கு உடமையாளர் தொழில்தருநராக இருக்குமிடத்து, சம்பளங்கள், தொழில்நிலை, ஓய்வுகால நன்மைகள் மற்றும் அத்தகைய ஊழியர்களிடமிருந்து சேரவேண்டிய ஏனைய கொடுப்பனவுகள் தொடர்பில் இலங்கையில் தொழில்புரியும் இலங்கையல்லாதவர் மற்றும் இரட்டைப் பிரசாவுரிமை உடையவர்களுக்குச் செய்யப்பட்ட மிகைக் கொடுப்பனவுகளுக்காக அவர்களின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்தான மாற்றல்கள்;

(ந) கணக்கு உடமையாளர் சொத்து அபிவிருத்தியாளரொருவராக இருக்குமிடத்து, இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்கு (அதாவது முதலீட்டாளர்) அசையாச் சொத்தினை அத்தகைய முதலீட்டாளருக்கு விற்பனை செய்தமையின் மூலம் பெறப்பட்ட கொடுப்பனவாக உள்முக முதலீட்டுக் கணக்கிலிருந்து பெறப்பட்ட நிதியங்களின் மாற்றல்;

(ப) கணக்கு உடமையாளர் சொத்து அபிவிருத்தியாளரொருவராக இருக்குமிடத்து, 2021 மாச்சு 18ஆம் திகதியிடப்பட்ட 2021இன் 11ஆம் இலக்கப் பணிப்புரைகளினால் அனுமதிக்கப்பட்டவாறு நிரந்தர வதிவிட விசாவில் மற்றொரு நாட்டிலுள்ள அல்லது இரட்டைப் பிரசாவுரிமையைக் கொண்டுள்ள இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கையர்களிடமிருந்து பெறப்பட்ட கொடுப்பனவாக வெளிநாட்டு நாணயக் கடன் கணக்கிலிருந்தான நிதிய மாற்றல்கள்;

(ம) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 8(3)ஆம் பிரிவின் நியதிகளில் கணக்கு உடமையாளரிடமிருந்து இலங்கைக்கு வெளியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ப்பல்கள்;

(ய) இணைப்பு I இல் பட்டியலிடப்பட்ட ஆட்களின் வகையிலுள்ளவர் என்ற ரீதியில் கணக்கு உடமையாளரினால் விநியோகிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகள் தொடர்பில் ஏனைய வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்பட்ட கணக்குகளிலிருந்தான மாற்றல்கள்; அத்துடன்

(ர) கணக்கில் வைத்திருக்கப்பட்ட நிதியின் மீது வெளிநாட்டு நாணயத்தில் உழைக்கப்பட்ட வட்டி.

**1.4 அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) கணக்கு உடமையாளரின் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் இலங்கைக்கு வெளியே செய்யப்பட்ட ஏதேனும் வெளிமுகப் ப்பல்கள்;

(ஆ) இலங்கை ரூபாவில் இலங்கையில் செய்யப்படும் பகிர்ந்தளிப்புக்கள்;

(இ) அதே கணக்கு உடமையாளரின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிற்கான மாற்றல்கள்;

(ஈ) நடைமுறைக் கொடுக்கல்வாங்கல் தொடர்பில், இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவரின் கரைகடந்த

வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிற்கான மாற்றல்கள்;

(உ) நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் 2021ஆம் ஆண்டு மாச்சு 18ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கப் பணிப்புரைகளின் நியதிகளுக்கிணங்க ஐ.அ.டொலர் 5,000 (அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயம்) வரையிலான வெளிநாட்டு நாணயத் தாள்களின் எடுப்பனவு அல்லது கணக்கு உடமையாளரின் பயண நோக்கத்திற்காக வெளிநாட்டுப் பயண அட்டையொன்றினை நிரப்புவதற்கான நிதிய மாற்றல்;

(ஊ) தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தலைச் சமர்ப்பிப்பதனை அடுத்து வெளிநாட்டிலிருந்து வெட்டி பட்டைதீட்டப்பட்ட அல்லது பட்டைதீட்டப்படாத இரத்தினக்கற்களையும் ஏனைய மூலப்பொருட்களையும் கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக அந்நேரத்தில் இரத்தினக்கல் மற்றும் ஆபரண வணிகர்களினால் மேற்கொள்ளப்படும் ஐ.அ.டொலர் 50,000 வரையிலான (அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயம்) வெளிநாட்டு நாணயத் தாள்களிலான எடுப்பனவுகள்;

(எ) கணக்கு உடமையாளர் இலங்கையில் கப்பற்படுத்தல் முகவராக அல்லது பொது விற்பனை முகவராக இருக்கின்றவிடத்து, அதிகாரமளிக்கப்பட்ட வணிகரினால் ஏற்றுக்கொள்ளத்தக்க காரணங்களுடன் கூடிய கோரிக்கையின் மீது வெளிநாட்டு முதல்வரிடமிருந்து அல்லது வெளிநாட்டு முதல்வரின் சார்பில் குறித்துரைக்கப்பட்ட மூன்றாந்தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட உள்முகப் ப்பல்களுக்கெதிராக, கப்பல் பிரதானிகளுக்கான காசு கொடுப்பனவாக ஒவ்வொரு வருகைக்கும் ஒவ்வொரு கப்பலுக்கும் ஐ.அ.டொலர் 50,000 (அல்லது வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயங்களுக்குச் சமமான தொகை) வரையிலான வெளிநாட்டு நாணயத் தாள்களிலான எடுப்பனவுகள்;

(ஏ) வெளிநாட்டிலுள்ள கடன் வழங்குநரொருவரிடமிருந்து பெற்ற வெளிநாட்டுக் கடன்களை மீள்கொடுப்பனவு செய்தல்/ தீர்ப்பனவு செய்தல் நோக்கத்திற்காக அதே கணக்கு உடமையாளரின் (அதாவது கடன்பாட்டாளர்) வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுக் கணக்கிற்கான மாற்றல்கள்;

(ஐ) வியாபார வெளிநாட்டு நாணயக் கடன் கணக்கிற்கான நிதிய மாற்றல்கள் உட்பட, அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவரிடமிருந்து கணக்கு உடமையாளரினால் பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களின் படுகடன் தீர்ப்பனவுச் செலவுகள் மற்றும் மீள்கொடுப்பனவுகள்;

(ஒ) கணக்கு உடமையாளரினால் (அதாவது கடன்பாட்டாளர்) 2017 நவெம்பர் 20ஆம் திகதியிலிருந்து இப்பணிப்புரைக்கான திகதி வரையான காலப்பகுதியில் அத்தகைய கடன்வழங்குநரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களின் மீள்கொடுப்பனவாக வெளிநாட்டிலுள்ள கடன்வழங்குநரின் உள்முக முதலீட்டுக் கணக்கிற்கான மாற்றல்கள்;

(ஓ) கணக்கு உடமையாளரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிலுள்ள நிதியினைப் பயன்படுத்தி வெளிநாட்டு நாணயத்தில் இலங்கை அபிவிருத்தி முறிகளில் செய்யப்படும் முதலீடுகள் தொடர்பிலான மாற்றல்கள்;

(ஔ) வெளிமுக முதலீட்டுக் கணக்கினூடாக விற்பனையாளரினால் செய்யப்பட்ட வெளிநாட்டிலுள்ள அனுமதிக்கப்பட்ட முதலீட்டின் கொள்வனவிற்கான கொடுப்பனவு என்ற ரீதியில் மற்றொரு ஆளின் (அதாவது விற்பனையாளர்) அதே வெளிமுக முதலீட்டுக் கணக்கிற்கான மாற்றல்கள்;

(க) கணக்கு உடமையாளர் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவுடன் பதிவுசெய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனியொன்றாக இருக்குமிடத்து, வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட பூட்கைகள் தொடர்பில் தகைமையுடைய வாடிக்கையாளர்கள் மற்றும் இணைக் காப்புறுதியாளர்களுக்கான கோரல்கள், உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மீள்காப்புறுதியாளர்களுக்கான கட்டணம் மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் மற்றும் தரகுக் கட்டணங்களுக்கான கொடுப்பனவுகள்;

(ங) கணக்கு உடமையாளர் முதலீட்டினைப் பெறுமொருவராக, வாடகையாளராக, குத்தகையைப் பெறுபவராக அல்லது வாங்குநராக இருக்கின்றவிடத்து, உள்முக முதலீட்டுக் கணக்கிற்குப் பிரயோகிக்கத்தக்க விதத்தில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகளின் கீழ் அனுமதிக்கப்பட்டவாறு உள்முக முதலீட்டுக் கணக்கின் அத்தகைய உடமையாளரின் இலங்கையிலுள்ள மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் காரணமான ஏதேனும் வருமானம் அல்லது மூலதனப் பெறுகைகளின் கொடுப்பனவாக உள்முக முதலீட்டுக் கணக்கிற்குச் செய்யப்பட்ட மாற்றல்கள்;

(ச) இலங்கைக்கு வெளியே பணிகளை வழங்குகின்ற இலங்கைப் பிரசைகளுக்கு கூலிகள் அத்துடன்/ அல்லது வருவாய்களைப் பகிர்ந்தளிப்பதற்காக வெளிநாட்டிலுள்ள தொழில்தருநருடன் ஏற்பாடுகளைக் கொண்டுள்ள இலங்கையிலுள்ள கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாக இருக்குமிடத்து, தொடர்பான ஊழியர்களின் தனியார் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது இலங்கை ரூபாக் கணக்குகளுக்குச் செய்யப்படும் மாற்றல்கள்;

(ஞ) கணக்கு உடமையாளர் உள்நாட்டுக் கப்பற்படுத்தல்/ வானூர்திக் கம்பனியாக இருக்குமிடத்து, அத்தகைய கப்பற்படுத்தல்/ வானூர்திக் கம்பனிக்குச் சொந்தமான கப்பல்கள்/ வானூர்திகளில் வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கைப் பிரசைகளின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு பணியாட்களின் சம்பளங்கள்/ கூலிகள் மற்றும் ஏனைய தொடர்பான தொழில் நன்மைகளின் கொடுப்பனவாகச் செய்யப்படும் மாற்றல்கள்;

(ட) ஏனைய வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கு அல்லது இணைப்பு ஐஇல் பட்டியலிடப்பட்டுள்ள ஆட்களின் வகையிலுள்ள கணக்கு உடமையாளரினால் செய்யப்பட்ட பொருட்களின் கொள்வனவு மற்றும் பெறப்பட்ட பணிகள் தொடர்பில் செய்யப்பட்ட மாற்றல்கள்; அத்துடன்

(ண) அத்தகைய நிதிகள் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 8(3)ஆம் பிரிவின் நியதிகளில் இலங்கைக்கு அனுப்பப்பட்டனவாக இருக்குமிடத்து, தனிப்பட்ட ரீதியில் கணக்கு உடமையாளரின் ஏதேனும் நோக்கத்திற்கான நிதிகளின் வெளிமுகப் ப்பல்கள்.

**1.5 ஏனைய நிபந்தனைகள்**

(அ) இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்கு கணக்கு உடமையாளரினால் விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் வழங்கப்பட்ட பணிகள் தொடர்பில் அத்தகைய பொருட்கள் மற்றும் பணிகளுக்கான கொடுப்பனவுகள் இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்ட இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையொன்றைப் பயன்படுத்தி இலத்திரனியல் தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் முனைக்கோடி அல்லது இணையத்தளக் கொடுப்பனவு நுழைவாயிலினூடாக மேற்கொள்ளப்பட்டிருக்குமிடத்து, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர், இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்ட இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையினைப் பயன்படுத்தி இக்கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது என்பதற்கான இலத்திரனியல் தரவினைப் பெற்றுக்கொள்ளும் முனைக்கோடி அல்லது இணையத்தளக் கொடுப்பனவு நுழைவாயில் பணிவழங்குபவரின் எழுத்து மூலமான உறுதிப்படுத்தல் பெற்றுக்கொள்ளப்பட்டவுடன் மாத்திரம் அக்கொடுப்பனவினை வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு வரவு வைத்தல் வேண்டும்;

(ஆ) கணக்கு உடமையாளர் இலங்கையிலுள்ள கப்பற்படுத்தல் முகவராக அல்லது பொது விற்பனை முகவராக இருக்குமிடத்து, வெளிநாட்டு முதல்வருக்கு மிகையான நிதியினைத் திருப்பியனுப்புவது, அரசாங்கத்திற்குச் செலுத்தப்படத்தக்க வரி முகவராண்மைத் தரகுகள் என்பன உட்பட இலங்கையிலுள்ள வெளிநாட்டு முதல்வரின் அனைத்துப் பொறுப்புக்களையும் பூர்த்தி செய்யத்தக்க விதத்தில் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கில் போதுமான நிதி வைக்கப்பட்டுள்ளது என்பதற்குச் சான்றாக கணக்கு உடமையாளரிடமிருந்து (அதாவது முகவர்) எழுத்து மூலமான உறுதிப்படுத்தலைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் மாத்திரமே அனுமதிக்கப்படல் வேண்டும்;

(இ) கணக்கு உடமையாளர் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட கம்பனியொன்றாக இருக்குமிடத்து, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அத்தகைய ஊழியர் வெளிநாட்டிற்குப் பயணம் செய்யும் நோக்கத்திற்காக, நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் 2021 மாச்சு 18ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கப் பணிப்புரைகளுக்குட்பட்டு, கணக்கு உடமையாளரின் (தொழில்தருநர்) வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு பற்று வைப்பதன் மூலம் தனிப்பட்ட ஒருவருக்கு (அத்தகைய கம்பனியின் ஊழியராகவுள்ள ஒருவர்) உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 5,000 வரையிலான (அல்லது ஏனைய வெளிநாட்டு நாணயங்களில் சமமான தொகையினை) தொகையினை வெளிநாட்டு நாணயத் தாள்களாக வழங்கலாம்;

(ஈ) கணக்கு உடமையாளர் சொத்து அபிவிருத்தியாளராக இருக்குமிடத்து (அதாவது விற்பனையாளர்) இப்பணிப்புரைகளின் பந்தி 1.3இன் விடயம் (ந)இன் நியதிகளில் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள நிதியினை, உத்தரவாதங்களை வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் தொடர்பில் 2021 மாச்சு 18ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 20ஆம் இலக்கப் பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு, விற்பனையாளரின் சார்பில் இலங்கைக்கு வெளியே வதிகின்றவரான சொத்துக்களில் கொள்வனவாளரின் பெயரில் வங்கி உத்தரவாதத்தினை அல்லது துணைநில் நாணயக் கடிதமொன்றினை வழங்குவதற்கான பிணையுறுதியாக/ பிணையாக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் வைத்திருக்கப்படலாம்.

**2. அறிக்கையிடுகின்ற தேவைப்பாடு**

(அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், இணைப்பு ஐஐஇல் உள்ளவாறான அறிக்கையினை மாதாந்த அடிப்படையில் அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ னகநஅஉடிளட.டம என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாக இத்திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட அறிக்கையிடல் தேவைப்பாடுகளுக்காக, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அவர்களது தொடர்பான வங்கிகளின் கணக்கேடுகளிலிருந்து தொடர்பான தகவல்களை உருவாக்குவதற்கு அல்லது பிரித்தெடுப்பதற்கு ஏற்றவிதத்தில் வங்கிக்குள்ளே முறைமையொன்றினை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

3. இப்பணிப்புரைகளின் அதிகாரவரம்பிற்குள் வராத ஏதேனும் நோக்கங்களுக்காக வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளிற்கு/ அல்லது கணக்குகளிலிருந்து மேற்கொள்ளப்படும் ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள் அல்லது மாற்றல்களுக்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளரின் முன்னொப்புதலைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**4. இப்பணிப்புரைகளின் நோக்கங்களுக்காக:**

(அ) "ப்பல்கள்" என்பது தந்தி மாற்றல்கள், ஏனைய வங்கிகளிடையேயான மாற்றல்கள், வங்கி வரைவுகள், ஏனைய கொடுப்பனவுச்

சாதனங்கள், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு கொடுப்பனவுப் பொறிமுறைகள் அல்லது தளங்களூடாகப் பெறப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் நாணயத் தாள்கள் தவிர, வெளிநாட்டிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் பரிவர்த்தனைக் கம்பனிகளிலிருந்து/ இல்லங்களிலிருந்து பெறப்பட்ட நிதிகள் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(ஆ) "இலங்கைக்கு வெளியே வழங்கப்படுகின்ற பணிகள்" என்பது கடல்வழிப் பயணக் கலம்கள்/ கப்பல்கள், வர்த்தக ரீதியான வானூர்திகளில் வெளிநாடுகளில் வழங்கப்படும் பணிகள் மற்றும் வெளிநாடுகளின் கட்டுமானம், சுத்திகரிப்பு, சுகாதாரம், பாதுகாப்பு, கணக்கீடு, சட்டம் மற்றும் ஏனைய பணிகளை வழங்குதல் எனப் பொருள்படும்.

(இ) "நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள்" என்பது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஈ) "மூலதனக் கொடுக்கல்வாங்கல்" என்பது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(உ) "அரசுசாரா அமைப்புக்கள்" என்பது 1980ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க சுயவிருப்பிலான சமூகப் பணி அமைப்புக்கள் (பதிவுசெய்தல் மற்றும் மேற்பார்வை) சட்டத்தினதும் அதற்குச் செய்யப்பட்ட திருத்தங்களினதும் நியதிகளில் அரசுசாரா அமைப்புக்களுக்கான தேசிய செயலகத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட சுயவிருப்பிலான சமூகப் பணி அமைப்பு எனப் பொருள்படும்.

(ஊ) "வெளிநாட்டுச் செலாவணி மற்றும் வெளிநாட்டுச் சொத்துக்கள்" என்பது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க செலாவணிச் சட்டத்தின் 33ஆம் பிரிவின் நியதிகளின் அதே பொருளினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(எ) "கப்பற்படுத்தல் முகவர்" என்பது இலங்கை வணிக கப்பற்படுத்தல் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகக்கூடிய உரிமம் அல்லது உறுதிப்படுத்தல் கடிதத்துடன் வெளிநாட்டுக் கப்பற்படுத்தல் நிறுவனத்தின் (வெளிநாட்டு முதல்வர்) சார்பில் இலங்கையில் கப்பற்படுத்தல் முகவராக வியாபாரத்தினை மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆள் எனப் பொருள்படும்.

(ஏ) "வெளிநாட்டுக் கப்பற்படுத்தல் நிறுவனம்" என்பது இலங்கைக்கு வெளியே வதிகின்ற திருத்தப்பட்டவாறான 1972ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கக் கப்பற்படுத்தல் முகவராண்மைகளுக்கு உரிமம் வழங்கல் சட்டத்தின் கருத்திற்குள்வரும் கப்பற்படுத்தல் நிறுவனம் எனப் பொருள்படும்.

(ஐ) "பொதுவான விற்பனை முகவர்" என்பது இலங்கை சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகக்கூடிய உரிமம் அல்லது உறுதிப்படுத்தல் கடிதத்துடன் வெளிநாட்டுக் கப்பற்படுத்தல் நிறுவனத்தின் (வெளிநாட்டு முதல்வர்) சார்பில் இலங்கையும் பொது விற்பனை முகவராக வியாபாரத்தினை மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆள் எனப் பொருள்படும்.

(ஒ) "வெளிநாட்டு வானூர்தி நிறுவனம்" என்பது இலங்கைக்கு வெளியே வதிகின்ற, திருத்தப்பட்டவாறான 2010ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க விமானப் போக்குவரத்துச் சட்டத்தின் கருத்திற்குள் வரும் ஏதேனும் வெளிநாட்டு வான் பயண தொழிற்பாட்டாளர் எனப் பொருள்படும்.

(ஓ) "துறைமுக முனைக்கோடி தொழிற்பாட்டாளர்கள்" என்பது எயார்போர்ட் அன் ஏவியேஷன் சேர்விசஸ் (இலங்கை) லிமிடெட், இலங்கைத் துறைமுக அதிகாரசபை, சவுத் ஏசியன் கேட்வே டேர்மினல்ஸ் (பிறைவேற்) லிமிடெட் மற்றும் கொழும்பு இன்ரநஷனல் கொன்டெயினர் டேர்மினல் லிமிடெட் என்பனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(ஔ) "ஆள்" என்பது இயற்கையான அல்லது சட்ட ரீதியான ஆள் எனப் பொருள்படும்.

5. வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் தொழிற்படுத்துவது தொடர்பான தேவைப்பாடுகளைக் குறித்துரைக்கின்ற விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட 2017ஆம் ஆண்டு நவெம்பர் 20ஆம் திகதியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 04ஆம் இலக்கப் பணிப்புரைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

6. மேலேயுள்ள பந்தி 5இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள குறித்துரைக்கப்பட்ட முன்னைய பணிப்புரைகளின் இரத்தானது, இரத்துச் செய்யப்படுவதற்கு முன்னர் அவற்றின் கீழ் உறப்பட்ட ஏதேனும் உரிமைகள் அல்லது தண்டங்கள் அல்லது பொறுப்புக்களைப் பாதிப்பதாக இருக்கக்கூடாது.

7. இப்பணிப்புரைகளினால் அனுமதிக்கப்பட்டதெதுவும், இப்பணிப்புரைகளின் கீழ், வெளிநாட்டுச் செலாவணி வணிகத்தில் ஈடுபடுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களை அல்லது வேறு எவரேனும் ஆளினை வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கான தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கின்றது, விடுவிக்கின்றது அல்லது தடுக்கின்றது எனப் பொருள்கோடலாகாது.

8. இப்பணிப்புரைகள் 2021 மாச்சு 22ஆம் நாளிலிருந்து தொழிற்பாட்டிற்கு வருதலாதல் வேண்டும்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**
**2021 மாச்சு 18**

## 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு I

### ஆட்களின் வகை

1. பொருட்களின் ஏற்றுமதியாளர்கள் (வணிகப்பொருட்கள்)
2. தொழில்சார் நிபுணத்துவப் பணிகளின் ஏற்றுமதியாளர்கள்
3. இடையேற்பாட்டாளர்களாக சுங்க வரி செலுத்தாத துறைமுகத்திலான வர்த்தக வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆட்கள்
4. பயண முகவர்கள் மற்றும் சுற்றுலா தொழிற்பாட்டாளர்கள்
5. சுற்றுலாவிடுதிகள் மற்றும் உணவகங்கள்
6. இரத்தினக்கல் மற்றும் ஆபரண வணிகர்கள்
7. வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர்கள்
8. இலங்கை வணிகக் கப்பற்படுத்தல் பணிப்பாளர் நாயகத்தினால் உரிமம் வழங்கப்பட்ட/ அங்கீகரிக்கப்பட்ட சரக்கு அனுப்புவோர் மற்றும் ஏனைய ஏற்பாட்டு பணி வழங்குவோர்
9. இலங்கை வணிகக் கப்பற்படுத்தல் பணிப்பாளர் நாயகத்தினால் உரிமம் வழங்கப்பட்ட/ அங்கீகரிக்கப்பட்ட கப்பற்படுத்தல் முகவர்கள்
10. இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தினால் உரிமம் வழங்கப்பட்ட/ அங்கீகரிக்கப்பட்ட பொது விற்பனை முகவர்கள்
11. தொடர்பான நிரல் அமைச்சினால் உரிமம் வழங்கப்பட்ட நீர்க்கல எரிபொருள் தொழிற்பாட்டாளர்கள்
12. துறைமுக முனைக்கோடி தொழிற்பாட்டாளர்கள்
13. வானூர்தி நிறுவன முனைக்கோடி பணியை வழங்குபவர்கள்
14. கப்பற்படுத்தல் கம்பனிகளுக்கும் வான் நிறுவனங்களுக்கும் உணவு மற்றும் குடிவகைகளை வழங்குவோர்
15. தீர்வையற்ற கடைகள் (தீர்வையற்ற சலுகைகளின் கீழ் பொருட்களையும் பணிகளையும் வழங்குவதற்காக அனுமதிக்கப்பட்ட வியாபாரங்களில் ஈடுபட்டுள்ளவர்கள்)

**2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு II**

## வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் மாதாந்தக் கூற்று

வங்கியின் பெயர்: ..........................................................................

அறிக்கையிடும் மாதம் மற்றும் ஆண்டு: ................................

| கணக்கின் வகை | நாணயம் | மாதத் தொடக்கத்திலுள்ளவாறு நிலுவை | வரவுகள் | | | | | | பற்றுக்கள் | | | | | | | | மாதத்தின் இறுதியிலுள்ளவாறு நிலுவை | மாதத்தின் இறுதியிலுள்ளவாறு கணக்குகளின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாட்டுப் பல்கள் | ஏனைய கணக்குகளிலிருந்தான மாற்றல்கள் | வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 8(3)இன் ஏற்பாடுகளின் கீழ் தனிப்பட்டவர்களினால் செய்யப்பட்ட பண மனுப்பல்கள் | வரவு வைக்கப்பட்ட மொத்த வட்டி | ஏனைய வரவுகள் | மொத்தம் | வெளிமுகப் பண மனுப்பல்கள் | ஏனைய கணக்குகளுக்கான மாற்றல்கள் | படுகடன் தீர்ப்பனவுச் செலவுகள் மற்றும் வெளிநாட்டு நாணயக் கடன்களின் மீள்கொடுப்பனவு மற்றும் வியாபார வெளிநாட்டு நாணயக் கடன் கணக்கிற்கான மாற்றல்கள் | உள்நாட்டுப் பகிர்ந்தளிப்புக்கள்/ ரூபாக் கணக்கிற்கான மாற்றல்கள் | வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் பிரிவு 8(6)இன் ஏற்பாடுகளின் கீழ் தனிப்பட்டவர்களினால் செய்யப்பட்ட பண மனுப்பல்கள் | வெளிநாட்டு நாணயத்தில் இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடு செய்வதற்கான மாற்றல்கள் | ஏனைய பற்றுக்கள் | மொத்தம் | | |
| பொருட்களின் ஏற்றுமதியாளர்கள் | | | | | | | | | | | | | | | | | | |
| தொழில்சார் பணிகளின் ஏற்றுமதியாளர்கள் | | | | | | | | | | | | | | | | | | |
| இடையேற்பாட்டாளர்களாக சுங்கவரி செலுத்தாது துறைமுக வர்த்தக வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆட்கள் | | | | | | | | | | | | | | | | | | |
| பயண முகவர்கள்/ சுற்றுலாத் தொழிற்பாட்டாளர்கள் | | | | | | | | | | | | | | | | | | |
| சுற்றுலாவிடுதிகள் மற்றும் உணவகங்கள் | | | | | | | | | | | | | | | | | | |
| இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண வணிகர்கள் | | | | | | | | | | | | | | | | | | |
| காப்புறுதியாளர்கள் | | | | | | | | | | | | | | | | | | |
| வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு முகவர்கள் | | | | | | | | | | | | | | | | | | |
| சரக்கு அனுப்புவோர் மற்றும் ஏனைய ஏற்பாட்டு பணிகளை வழங்குவோர் | | | | | | | | | | | | | | | | | | |
| கப்பற்படுத்தல் முகவராண்மை | | | | | | | | | | | | | | | | | | |
| பொதுவான விற்பனை முகவராண்மை (வான் நிறுவனம்) | | | | | | | | | | | | | | | | | | |
| தொடர்பான நிரல் அமைச்சினால் உரிமம் வழங்கப்பட்ட நீர்க்கல எரிபொருள் தொழிற்பாட்டாளர்கள் | | | | | | | | | | | | | | | | | | |
| துறைமுக முனைக்கோடி தொழிற்பாட்டாளர்கள் | | | | | | | | | | | | | | | | | | |
| வானூர்தி முனைக்கோடி பணி தொழிற்பாட்டாளர்கள் | | | | | | | | | | | | | | | | | | |
| கப்பற்படுத்தும் நிறுவனங்களுக்கும் வான் நிறுவனங்களுக்கும் உணவு மற்றும் குடிவகைகளை வழங்குவோர் | | | | | | | | | | | | | | | | | | |
| இலங்கையர்களுக்கு கூலிகளை பகிர்ந்தளிப்பதற்காக வெளிநாட்டிலுள்ள தொழில்தருநர்களுடன் ஏற்பாடுகளைக் கொண்டுள்ள கம்பனிகள் | | | | | | | | | | | | | | | | | | |
| தீர்வையற்ற கடைகள் (தீர்வையற்ற சலுகைகளின் கீழ் பொருட்களையும் பணிகளையும் விநியோகிக்கின்ற அனுமதிக்கப்பட்ட வியாபாரங்களில் ஈடுபட்டுள்ளவர்கள்) | | | | | | | | | | | | | | | | | | |
| ஏனையவை (வகையைக் குறிப்பிடவும்) | | | | | | | | | | | | | | | | | | |
| **மொத்தம்** | | | | | | | | | | | | | | | | | | |

குறிப்பு: தயவுசெய்து எல்லாக் கணக்குகளிலுமுள்ள குறித்துரைக்கப்பட்ட வேறுபட்ட வகை நாணயங்களினதும் ஐயூரோ, ஐ.அ.டொலர், பிரித்தானிய பவுண், ஏனையவை (தயவுசெய்து குறித்துரைக்கவும்)ஸ தொடர்பான தகவல்களைத் தருக.

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மேலே குறிப்பிடப்பட்ட அறிக்கையின் ஸ்கான் செய்யப்பட்ட பிரதியையும் மேலேயுள்ளவாறு எம்எஸ் எக்ஸ்செல் பதிப்பினையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நாங்கள் வங்கிக் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட/ உருவாக்கப்பட்ட மேலேயுள்ள தகவல்கள் துல்லியமானவை என்பதனை உறுதிப்படுத்துகின்றோம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் மற்றும் பதவி: ......................................

கையொப்பம் மற்றும் முத்திரை: ......................................................

திகதி: .......................................................

இணங்குவிப்பு அலுவலரின் பெயர்: ..........................................

கையொப்பம்: ......................................................

திகதி: .......................................................

## வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்

## இலங்கை மத்திய வங்கி

## 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 06ஆம் இலக்கப் பணிப்புரைகள்

இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் இராசதந்திர ரூபாக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற நோக்கத்திற்காக கணக்குகளைத் திறந்து மற்றும் பேணுதல்) ஒழுங்குவிதிகளின் நியதிகள் மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 6ஆம் மற்றும் 7ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் இராசதந்திர ரூபாக் கணக்குகளைத் திறந்து மற்றும் பேணி வருவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

**1.1 தகைமையுடைய ஆட்கள்**

(அ) வெளிநாட்டு இராசதந்திர பணிமனைகள்;

(ஆ) குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் வதிவிட விசாவினைப் பெற்றுக்கொள்கின்ற தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள இராசதந்திர ஆளணியினர்; அத்துடன்

(இ) குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் வதிவிட விசாவினைப் பெற்றுக்கொள்கின்ற தேவைப்பாட்டிலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ள இலங்கையிலுள்ள இராசதந்திர ஆளணியினரின் குடும்ப உறுப்பினர்கள்.

**1.2 கணக்குளைத் திறந்து மற்றும் பேணி வருதல்**

(அ) இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகளையும் இராசதந்திர ரூபாக் கணக்குகளையும் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவில், சேமிப்பு, நடைமுறை (மேலதிகப் பற்று வசதியில்லாமல்) அல்லது கால வைப்புக் கணக்குகளாகத் திறந்து பேணி வரமுடியும்.

(ஆ) இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகளையும் இராசதந்திர ரூபாக் கணக்குகளையும் முறையே குறித்துரைக்கப்பட்ட எந்தவொரு வெளிநாட்டு நாணயத்திலும் இலங்கை ரூபாவிலும் பேண முடியும்.

(இ) இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகளையும் இராசதந்திர ரூபாக் கணக்குகளையும் தனிப்பட்டவர்களினால் தனியாகவும் மற்றொரு தகைமையுடைய ஆளுடன் கூட்டாகவும் பேணமுடியும்.

**1.3 இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகள்**

1.3.1 அனுமதிக்கப்பட்ட வரவுகள்

(அ) கணக்கு உடமையாளரின் பெயரில் வங்கித்தொழில் முறைமையூடாக இலங்கைக்கு வெளியிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியில் பெறப்பட்ட பணவனுப்பல்கள்;

(ஆ) பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் சட்டங்களுடன் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இணங்கியொழுகுவதனை இயலுமைப்படுத்துகின்ற விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்குப் போதுமான தகவல்களை/ சான்றுகளை சமர்ப்பிப்பதன் மூலம் கணக்கு உடமையாளரினால் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி;

(இ) உள்முக முதலீட்டுக் கணக்கொன்றிலிருந்தான அல்லது அதே கணக்கு உடமையாளரினால் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிலிருந்தான மாற்றல்கள்;

(ஈ) கணக்கு உடமையாளரைப் பொருட்படுத்தாது, இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்தும் இராசதந்திர ரூபாக் கணக்குகளிலிருந்தும் மேற்கொள்ளப்பட்ட மாற்றல்கள்; அத்துடன்

(உ) கணக்கில் வைக்கப்பட்டுள்ள நிதியின் மீது வெளிநாட்டு நாணயத்தில் உழைக்கப்பட்ட வட்டி.

**1.3.2 அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) இலங்கைக்கு வெளியே மேற்கொள்ளப்படும் ஏதேனும் வெளிமுகப் பணவனுப்பல்கள்;

(ஆ) பயண நோக்கங்களுக்காக வெளிநாட்டு நாணயத்தில் மேற்கொள்ளப்படும் எடுப்பனவுகள்;

(இ) இலங்கை ரூபாவில் இலங்கையில் பகிர்ந்தளிப்புக்கள்;

(ஈ) உள்முக முதலீட்டுக் கணக்கொன்றிற்கு அல்லது அதே கணக்கு உடமையாளரின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிற்கான மாற்றல்கள்;

(உ) கணக்கு உடமையாளரைப் பொருட்படுத்தாது, இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கும் இராசதந்திர ரூபாக் கணக்குகளுக்குமான மாற்றல்கள்; அத்துடன்

(ஊ) பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவுகள் தொடர்பில் வேறு எவரேனும் ஆளின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் என்பனவற்றிற்கான மாற்றல்கள்.

**1.4 இராசதந்திர ரூபாக் கணக்குகள்**

1.4.1 அனுமதிக்கப்பட்ட வரவுகள்

(அ) கணக்கு உடமையாளரின் பெயரில் வங்கித்தொழில் முறைமையூடாக இலங்கைக்கு வெளியிலிருந்து பெறப்பட்ட பணவனுப்பல்கள்;

(ஆ) விசாக் கட்டணங்களின் சேகரிப்பு, சம்பளத்தின் மீளளிப்புக்கள்/ மீளனுப்புதல்கள், இலங்கையிலுள்ள எவரேனுமாளிடமிருந்து கணக்கு உடமையாளருக்கு வரவேண்டிய ஏனைய ஒத்த கொடுப்பனவுகள்;

(இ) இணைப்பு ஐ இல் பட்டியலிடப்பட்ட ஆவணங்களை கணக்கு உடமையாளரினால் சமர்ப்பிக்கப்படுவதன் மீது இலங்கையில் பெறப்பட்ட கணக்கு உடமையாளருக்குச் சொந்தமான உந்து ஊர்திகளின் விற்பனைப் பெறுகைகள்;

(ஈ) அதே கணக்குடமையாளரின் உள்முக முதலீட்டுக் கணக்கொன்றிலிருந்தான மாற்றல்கள்;

(உ) கணக்கு உடமையாளரைப் பொருட்படுத்தாது, இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் இராசதந்திர ரூபாக் கணக்குகளிலிருந்தான மாற்றல்கள்; அத்துடன்

(ஊ) கணக்கில் வைத்திருக்கப்பட்ட நிதியின் மீது இலங்கை ரூபாவில் உழைக்கப்பட்ட வட்டி.

**1.4.2 அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) இலங்கை ரூபாவில் இலங்கையில் பகிர்ந்தளிப்புக்கள்;

(ஆ) விசாக் கட்டணங்கள், மீளளிப்புக்கள், மீளனுப்புதல்கள் உட்பட கணக்கு உடமையாளரின் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் வெளிமுகப் பணவனுப்பல்கள்;

(இ) கணக்கு உடமையாளருக்குச் சொந்தமான உந்து ஊர்திகளின் விற்பனை பெறுகைகள் தொடர்பிலான வெளிமுகப் பணவனுப்பல்கள்;

(ஈ) அதே கணக்கு உடமையாளரின் உள்முக முதலீட்டுக் கணக்கொன்றிற்கான மாற்றல்கள்;

(உ) கணக்கு உடமையாளரைக் கருத்திற் கொள்ளாது, இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் இராசதந்திர ரூபாக் கணக்குகளுக்கான மாற்றல்கள்; அத்துடன்

(ஊ) தொடர்பான நிரல் அமைச்சினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறு வெளிநாட்டுச் செலாவணியிலான ஏதேனும் வேறு கொடுக்கல்வாங்கல்.

2. இப்பணிப்புரைகளின் அதிகாரவரம்பிற்குள் வராத ஏதேனும் நோக்கத்திற்காக இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகள்/ இராசதந்திர ரூபாக் கணக்குகளுக்கான அல்லது கணக்குகளிலிருந்தான ஏதேனும் கொடுக்கல்வாங்கல்/ மாற்றலிற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளரிடமிருந்து முன்னொப்புதலைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**3. இப்பணிப்புரைகளின் நோக்கங்களுக்காக**

(அ) “இராசதந்திர பணிமனை” என்பது தூதுவராலயங்கள், உயர் ஸ்தானிகராலயங்கள், துணைத் தூதரகங்கள், ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிரந்தரப் பணிமனை, ஐரோப்பிய ஆணைக்குழுவின் ஐரோப்பிய பிரதிநிதிகள் ஒன்றியம், பன்னாட்டு நாணய நிதியம், மீள்கட்டுமானம் மற்றும் அபிவிருத்திக்கான பன்னாட்டு வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி அல்லது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் உபசரணைப் பிரிவினால் காலத்திற்குக் காலம் இராசதந்திர பணிமனைகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ள வேறு ஏதேனும் இதையொத்த அமைப்புக்களின் நிரந்தரப் பணிமனை எனப் பொருள்படும்.

(ஆ) “இராசதந்திர ஆளணியினர்” என்பது இராசதந்திரப் பணிமனையினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வெளிநாடொன்றின் பிரசைகள் எனப் பொருள்படும்.

(இ) “பணவனுப்பல்கள்” என்பது தந்தி மாற்றல்கள், ஏனைய வங்கிகளிடையேயான மாற்றல்கள், வங்கி வரைவுகள், ஏனைய கொடுப்பனவுச் சாதனங்கள், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு கொடுப்பனவுப் பொறிமுறைகள் அல்லது தளங்களூடாகப் பெறப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் நாணயத் தாள்கள் தவிர, வெளிநாட்டிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில்

பரிவர்த்தனைக் கம்பனிகளிலிருந்து/ இல்லங்களிலிருந்து பெறப்பட்ட நிதிகள் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(ஈ) "நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள்" என்பது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் இராசதந்திர ரூபாக் கணக்குகள் என்பனவற்றின் தொழிற்பாடுகள் தொடர்பான தேவைப்பாடுகளைக் குறித்துரைக்கின்ற விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட 2017ஆம் ஆண்டு நவெம்பர் 20ஆம் திகதியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 05ஆம் இலக்கப் பணிப்புரைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

5. மேலேயுள்ள 4ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள குறித்துரைக்கப்பட்ட முன்னைய பணிப்புரைகளின் இரத்தானது, இரத்துச் செய்யப்படுவதற்கு முன்னர் அவற்றின் கீழ் உறப்பட்ட ஏதேனும் உரிமைகள் அல்லது தண்டங்கள் அல்லது பொறுப்புக்களைப் பாதிப்பதாக இருக்கக்கூடாது.

6. இப்பணிப்புரைகளினால் அனுமதிக்கப்பட்டதெதுவும், இப்பணிப்புரைகளின் கீழ், வெளிநாட்டுச் செலாவணி வணிகத்தில் ஈடுபடுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களை அல்லது வேறு எவரேனும் ஆளினை வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கான தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கின்றது, விடுவிக்கின்றது அல்லது தடுக்கின்றது எனப் பொருள்கோடலாகாது.

7. இப்பணிப்புரைகள் 2021 மாச்சு 22ஆம் நாளிலிருந்து தொழிற்பாட்டிற்கு வருதலாதல் வேண்டும்.

பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்
2021 மாச்சு 18

2021ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு I

இராசதந்திர ரூபாக் கணக்குகளுக்கு உந்து ஊர்திகளின் விற்பனைப் பெறுகைகளை வரவு வைக்கும் பொழுது பெறப்பட வேண்டிய ஆவணங்கள்

1. விற்பனையாளரின் பெயரிலுள்ள உந்து ஊர்தியின் பதிவுச் சான்றிதழ்.
2. உந்து ஊர்தியின் உடமை மாற்றல் அறிக்கை - வாங்குநருக்கு உந்து ஊர்தியை சொத்துரிமை மாற்றல் செய்யப்பட்டமையினை நிரூபிப்பதற்கான ஆவணச்சான்று.
3. ஊர்தியின் விலையினை உறுதிப்படுத்துகின்ற வாங்குநரிடமிருந்தான கடிதமொன்று.
4. அரச நிதித் திணைக்களத்திலிருந்தான தீர்வை மதிப்பீடொன்று.
5. ஊர்தியின் மாற்றலை உறுதிப்படுத்துகின்ற தொடர்பான நிரல் அமைச்சிலிருந்தான கடிதமொன்று.
6. சுங்கத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சுங்கத் தீர்வை மற்றும் மற்றைய விதிப்புக்களின் கணிப்பு.
7. சுங்கத் திணைக்களம் - பொருட்களைப் பிரகடனப்படுத்தும் படிவம்.
8. சுங்கத் திணைக்களம் - மதிப்பீட்டு அறிக்கை.

**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

**மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் - சிறப்புக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்**

2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற நோக்கத்திற்காக கணக்குகளைத் திறந்து மற்றும் பேணி வருதல்) ஒழுங்குவிதிகளின் நியதிகள் மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் பிரிவுகள் 6 மற்றும் 7ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் (நடைமுறைப்படுத்தும் முகவர்) நடைமுறைப்படுத்தப்படும் "இலங்கை - எனது கனவு இல்ல நிகழ்ச்சித்திட்டம்" என்பதன் கீழ் 55 வயதிற்கு மேற்பட்டவர்களும் இலங்கையில் நீண்ட காலம் தங்கியிருக்க விரும்புகின்றவர்களுமான மூத்த வெளிநாட்டுப் பிரசைகளின் பெயரில் பின்வரும் கணக்குகளைத் திறந்து மற்றும் பேணி வருவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

**2. கணக்குகளின் வகை**

(அ) மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் நிலையான வைப்புக் கணக்குகள் - வெளிநாட்டு நாணயம்

(ஆ) மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் ரூபாக் கணக்குகள்

3. **கணக்குளைத் திறந்து மற்றும் பேணி வருதல்**

(அ) மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் நிலையான வைப்புக் கணக்குகளினைக் குறைந்தபட்ச ஆரம்ப வைப்பான ஐ.அ.டொலர் 15,000 அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் நிலையான வைப்புக் கணக்கொன்றாகத் திறத்தல் வேண்டும். இக்குறைந்தபட்ச வைப்பினை விண்ணப்பதாரி வதிவிட விசாவின் கீழ் இலங்கையில் தங்கியுள்ள காலம் எதுவரையோ அதுவரை பேணி வருதல் வேண்டும்.

(ஆ) மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் ரூபாக் கணக்குகளை நடைமுறைக் கணக்கொன்றாக, பிரதான விண்ணப்பதாரிக்காக மாதாந்தம் ஐ.அ.டொலர் 1,500 அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தினையும் அவருடன் தங்கியிருக்கும் வாழ்க்கைத் துணைக்கும் ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் ஐ.அ.டொலர் 750 அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தினையும் இலங்கையில் அவர்கள் தமது வாழ்க்கையினைக் கொண்டு நடத்துவதற்காக, மாதாந்தம் அனுப்பி வைப்பதன் மூலம் திறந்து பேணி வரலாம்.

4. **மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் நிலையான வைப்புக் கணக்குகள்**

4.1 **அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) பின்வரும் பொறிமுறைகளிலொன்றினூடாக விண்ணப்பதாரியினால் நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட ஐ.அ.டொலர் 15,000 அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தினைக் கொண்ட குறைந்தபட்ச ஆரம்ப வைப்பு:

(i) கணக்கு உடமையாளரின் பெயரில் வங்கித்தொழில் முறைமையூடாக இலங்கைக்கு வெளியிலிருந்து பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலமைந்த பணவனுப்பல்கள்; அல்லது

(ii) இலங்கையில் வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்காக பிரகடனப்படுத்தப்பட்டு கணக்கு உடமையாளரால் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி; அல்லது

(iii) உள்முக முதலீட்டுக் கணக்குகளிலிருந்து அல்லது அதே கணக்கு உடமையாளரினால் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்குகளிலிருந்தான மாற்றல்கள்.

(ஆ) கணக்கிலுள்ள நிதியங்களின் மீது வெளிநாட்டு நாணயத்தில் உழைக்கப்பட்ட வட்டி.

4.2 **அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) கணக்கு உடமையாளர் இலங்கையில் தங்கியிருப்பதனை முடிவுறுத்துவதெனத் தீர்மானித்து, அவ்வாறு அவர் புறப்படுவதனை உறுதிப்படுத்தும் ஆவணச் சான்றுகளைப் பெறுகின்ற வேளையில் மாத்திரம் மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் நிலையான வைப்புக் கணக்குகளிலிருந்தான எடுப்பனவுகளை அனுமதித்தல் வேண்டும். நிதியத்தினைப் பின்வருமாறு விடுவிக்கலாம்:

(i) கணக்கு உடமையாளரின் பெயருக்கு அல்லது குறித்துரைக்கப்பட்ட மூன்றாந்தரப்பினருக்கு இலங்கைக்கு வெளியே பேணப்படும் கணக்கொன்றிற்கான நிதி அனுப்பல்கள்;

(ii) வெளிநாட்டு நாணயத் தாள்களில் ஐ.அ.டொலர் 10,000 வரையான எடுப்பனவுகள்.

(ஆ) மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் நிலையான வைப்புக் கணக்குகள் மீது உழைக்கப்பட்ட வட்டியை கணக்கு உடமையாளரின் மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் ரூபாக் கணக்கிற்கு மாற்றுதல்.

5. **மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் ரூபாக் கணக்குகள்**

5.1 **அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) மேலேயுள்ள 3(ஆ)ஆம் பந்தியில் தேவைப்படுத்தப்பட்டவாறு, இலங்கையில் வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்காக கணக்கு உடமையாளரின் பெயருக்கு வங்கித்தொழில் முறைமையூடாக இலங்கைக்கு வெளியிலிருந்து பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலமைந்த பணவனுப்பல்கள் அல்லது கணக்கு உடமையாளரினால் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி;

(ஆ) 4.2(ஆ)ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு, கணக்கு உடமையாளரின் மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் நிலையான வைப்புக் கணக்குகள் மீது செலுத்தப்பட்ட, இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்ட வட்டி.

5.2 **அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) கணக்கு உடமையாளர் அல்லது இலங்கையில் வதிகின்ற அவரில் தங்கியிருப்பவர்களுக்காக இலங்கை ரூபாவில் இலங்கையில் செய்யப்படும் பகிர்ந்தளிப்புக்கள்;

(ஆ) கணக்கு உடமையாளர் அல்லது இலங்கையில் வதியும் அவரில் தங்கியிருப்பவர்களது நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள்

தொடர்பிலான கொடுப்பனவுகளுக்கான பணவனுப்பல்கள்;

6. **மாதாந்தக் கூற்றுக்கள்**

(அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், இணைப்பு ஐ மற்றும் இணைப்பு ஐஐ இல் குறிப்பிடப்பட்டவாறு மாதாந்த அடிப்படையில் அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ னகநஅளூஉடிளட.டம ஊடாக மின்னஞ்சல் மூலம் இத்திணைக்களத்திற்கு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட அறிக்கையிடல் தேவைப்பாடுகளுக்காக, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அவர்களது தொடர்பான வங்கிகளின் கணக்கேடுகளிலிருந்து தொடர்பான தகவல்களை உருவாக்குவதற்கு அல்லது பிரித்தெடுப்பதற்கு ஏற்ற விதத்தில் வங்கிக்குள்ளே முறைமையொன்றை நடைமுறைக்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

7. இப்பணிப்புரைகளின் கீழ் சிறப்புக் கணக்குகளைத் திறப்பதற்கு தகைமையுடைய ஆட்கள் வங்கித்தொழில் முறைமையில் ஒரு மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் நிலையான வைப்புக் கணக்கையும் மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் ரூபாக் கணக்கையும் மாத்திரமே திறத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கணக்குகளைத் தங்கியிருப்பவருடன் இணைந்து கூட்டுக் கணக்குகளாகவும் பேண முடியும்.

8. இப்பணிப்புரைகளின் அதிகாரவரம்பிற்குள் வராத ஏதேனும் நோக்கத்திற்காக, மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் நிலையான வைப்புக் கணக்குகள் அல்லது மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் ரூபாக் கணக்குகளிற்கான/ கணக்குகளிலிருந்தான ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களுக்காக, திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் முகவரின் இணக்கத்துடன் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளரின் முன்னொப்புதலைப் பெற்றுக் கொள்ளுமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

9. **இப்பணிப்புரைகளின் நோக்கத்திற்காக**

(அ) "பணவனுப்பல்கள்" என்பது தந்தி மாற்றல்கள், ஏனைய வங்கிகளிடையேயான மாற்றல்கள், வங்கி வரைவுகள், ஏனைய கொடுப்பனவுச் சாதனங்கள், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு கொடுப்பனவுப் பொறிமுறைகள் அல்லது தளங்களூடாகப் பெறப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் நாணயத் தாள்கள் தவிர, வெளிநாட்டிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் பரிவர்த்தனைக் கம்பனிகளிலிருந்து/ இல்லங்களிலிருந்து பெறப்பட்ட நிதிகள் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(ஆ) "பிரகடனம்" என்பது வெளிநாட்டுச் செலாவணி ஐ.அ.டொலர் 15,000 இனை அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தினை விஞ்சுமிடத்து சுங்கத் திணைக்களத்திற்கும் ஐ.அ.டொலர் 15,000 இற்கு அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயங்களுக்குக் குறைவாக இருக்குமிடத்து அதனை அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருக்கும் பொருத்தமான விதத்தில் செய்யப்படும் பிரகடனமொன்றாகும்.

(இ) "நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள்" என்பது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

10. மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் நிலையான வைப்புக் கணக்குகள் மற்றும் மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் ரூபாக் கணக்குகள் என்பனவற்றின் தொழிற்பாடுகள் தொடர்பான தேவைப்பாடுகளைக் குறித்துரைக்கின்ற விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட 2017ஆம் ஆண்டு நவெம்பர் 20ஆம் திகதியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கப் பணிப்புரைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

11. மேலேயுள்ள 10ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள குறித்துரைக்கப்பட்ட முன்னைய பணிப்புரைகளின் இரத்தானது, இரத்துச் செய்யப்படுவதற்கு முன்னர் அவற்றின் கீழ் உறப்பட்ட ஏதேனும் உரிமைகள் அல்லது தண்டங்கள் அல்லது பொறுப்புக்களைப் பாதிப்பதாக இருக்கக்கூடாது.

12. இப்பணிப்புரைகளினால் அனுமதிக்கப்பட்டதெதுவும், இப்பணிப்புரைகளின் கீழ், வெளிநாட்டுச் செலாவணி வணிகத்தில் ஈடுபடுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களை அல்லது வேறு எவரேனும் ஆளினை வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கான தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கின்றது, விடுவிக்கின்றது அல்லது தடுக்கின்றது எனப் பொருள்கோடலாகாது.

13. இப்பணிப்புரைகள் 2021 மாச்சு 22ஆம் நாளிலிருந்து தொழிற்பாட்டிற்கு வருதலாதல் வேண்டும்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**
**2021 மாச்சு 18**

**2021ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு I**

**மூத்த வெளிநாட்டு பிரசைகள் நிலையான வைப்பு கணக்கின் மாதாந்தக் கூற்று**

**வங்கியின் பெயர்: ........................................................................**
**அறிக்கையிடும் மாதம் மற்றும் ஆண்டு: ................................**

**ஐ.அ.டொலரில்**

| கணக்கு உடமையாளாின் பெயர் | கணக்கு இலக்கம் | நாணயம் | ஆரம்ப வைப்பு | | வெளிமுகப் பண வனுப்பல்கள் | நாட்டை விட்டுச் செல்லும் நேரத்தில் எடுப்பனவு | உழைக்கப் பட்ட வட்டி | மூத்த வெளிநாட்டு பிரசைகள் ரூபாக் கணக்கிற்கு மாற்றல் செய்யப்பட்ட வட்டி | ஏனையவை | இறுதி நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | திகதி | தொகை | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மேலே குறிப்பிடப்பட்ட அறிக்கையின் ஸ்கான் செய்யப்பட்ட பிரதியையும் மேலேயுள்ளவாறு எம்எஸ் எக்ஸ்செல் பதிப்பினையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வங்கியின் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட/ தயாரிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட தகவல்கள் துல்லியமானவை என்பதனை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் மற்றும் பதவி: ........................ இணங்குவிப்பு அலுவலரின் பெயர்: ...................

கையொப்பம் மற்றும் முத்திரை: ..................................................... கையொப்பம்: .....................................................

திகதி: ...................................................................................... திகதி: ...................................................................

**2021ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு II**

**மூத்த வெளிநாட்டு பிரசைகள் ரூபாக் கணக்கின் மாதாந்தக் கூற்று**

**வங்கியின் பெயர்: ........................................................................**
**அறிக்கையிடும் மாதம் மற்றும் ஆண்டு: ................................**

**இலங்கை ரூபாவில்**

| கணக்கு உடமையாளாின் பெயர் | கணக்கு இலக்கம் | நாணயம் | மாதத் தொடக் கத்தில் ஆரம்ப நிலுவை | வரவுகள் | | | பற்றுக்கள் | | | இறுதி நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | உள்முகப் பண வனுப்பல்கள்/ வைப்புக்கள் | மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் நிலையான வைப்புக் கணக்கின் மீது நிதிய மாற்றல்/ அதன் மீது பெறப்பட்ட வட்டி | ஏனையவை | நடைமுறைக் கொடுக்கல் வாங்கல்களுக்கான கொடுப்பனவுகள் | உள்நாட்டுக் பகிர்ந்தளிப்புக்கள் | ஏனையவை | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மேலே குறிப்பிடப்பட்ட அறிக்கையின் ஸ்கான் செய்யப்பட்ட பிரதியையும் மேலேயுள்ளவாறு எம்எஸ் எக்ஸ்செல் பதிப்பினையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வங்கியின் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட/ தயாரிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட தகவல்கள் துல்லியமானவை என்பதனை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் மற்றும் பதவி: ........................ இணங்குவிப்பு அலுவலரின் பெயர்: ...................

கையொப்பம் மற்றும் முத்திரை: ..................................................... கையொப்பம்: ..........................................................

திகதி: ...................................................................................... திகதி: .......................................................................

**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 08ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

வதியும் விருந்தினர் திட்டம் - சிறப்புக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற நோக்கத்திற்காக கணக்குகளைத் திறந்து மற்றும் பேணிவருதல்) ஒழுங்குவிதிகளின் நியதிகள் மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் பிரிவுகள் 6 மற்றும் 7ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட “வதியும் விருந்தினர் திட்டம்” என்பதன் கீழ் இலங்கைக்கு வருகை தருகின்ற முதலீட்டாளர்களாக வரக்கூடிய வாய்ப்புக்களைக் கொண்டவர்களினதும் தொழில்சார் நிபுணர்களினதும் பெயர்களில் பின்வரும் கணக்குகளைத் திறக்கவும் பேணவும் அனுமதிக்கப்படுகின்றனர்.

2. **கணக்குகளின் வகைகள்**

(அ) வதியும் விருந்தினர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்

(ஆ) வதியும் விருந்தினர் ரூபா நடைமுறைக் கணக்குகள் - முதலீட்டாளர்கள்

(இ) வதியும் விருந்தினர் ரூபா நடைமுறைக் கணக்குகள் - தொழில்சார்நிபுணர்கள்.

3. **கணக்குளைத் திறத்தல் மற்றும் பேணுதல்**

(அ) வதியும் விருந்தினர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளை, வாய்ப்புக்களைக் கொண்ட முதலீட்டாளர்களினால் குறைந்தபட்சம் ஆரம்ப வைப்பாக ஐ.அ.டொலர் 250,000 அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்திலான வைப்புக்களுடன் இலங்கையில் முதலீடுகளாக, நிலையான வைப்புக் கணக்கொன்றாகத் திறக்கலாம்.

(ஆ) வதியும் விருந்தினர் ரூபா நடைமுறை கணக்குகளை ஒவ்வொரு ஆளுக்கும் குறைந்தபட்சம் ஐ.அ.டொலர் 35,000 அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அத்தகைய முதலீட்டாளரில் தங்கியுள்ள ஒவ்வொருவரினதும் (வாழ்க்கைத்துணை உட்பட) வாழ்க்கைச் செலவிற்காக (வாழ்க்கையைக் கொண்டு நடத்த) திறந்து பேணி வருதல் வேண்டும் என்பதுடன் இலங்கை ரூபாவிற்கு மாற்றிக் கொள்ளுதலும் வேண்டும்.

(இ) வதியும் விருந்தினர் ரூபா நடைமுறைத் தொழில்சார்நிபுணர் கணக்குகளை இலங்கையில் தங்கியிருக்க எண்ணுகின்ற தொழில்சார்நிபுணருக்காக மாதமொன்றிற்குக் குறைந்தபட்சம் ஐ.அ.டொலர் 2,000 அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்துடன் நடைமுறைக் கணக்கொன்றாகத் திறந்து பேணி வரமுடியும் என்பதுடன் அவருடன் சேர்ந்து அவரில் தங்கியுள்ள (வாழ்க்கைத்துணை உட்பட) ஒவ்வொருவருக்குமாக மாதமொன்றிற்கு மேலும், ஐ.அ.டொலர் 1,000 அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் இலங்கையில் அவர்களின் வாழ்க்கைச் செலவிற்காகப் பெற்று இலங்கை ரூபாவிற்கு மாற்றிக் கொள்ளுதலும் வேண்டும்.

4. **வதியும் விருந்தினர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்**

4.1 **அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) கணக்கு உடமையாளரின் பெயரில் வங்கித்தொழில் முறைமையூடாக இலங்கைக்கு வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலமைந்த பணவனுப்பல்கள்.

(ஆ) பிரகடனப்படுத்தப்பட்டு கணக்கு உடமையாளரினால் இலங்கைக்குள் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி

(இ) ஆரம்பத்தில் இரண்டாண்டு காலப்பகுதிக்கு கணக்கில் வைக்கப்பட்டிருந்த பயன்படுத்தாத நிதியின் மீதான வட்டி (இது தொடர்பில் நடைமுறைப்படுத்தல் முகவரின் முன்னொப்புதலைப் பெறாமல் ஆரம்ப இரண்டாண்டு காலப்பகுதியும் முடிவடைந்த பின்னர் வட்டி செலுத்தப்படக்கூடாது).

4.2 **அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) தொடர்பான ஒப்புதல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டமையினை நிரூபிக்கும் ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்குட்பட்டு, பின்வரும் “ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களில்” முதலீடு செய்வதற்காக எடுப்பனவு செய்யப்பட்ட நிதிகள்.

(i) இலங்கை முதலீட்டுச் சபையினால் அல்லது தொடர்பான அதிகாரசபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட புதிய துணிகர தொழில்முயற்சிகள்;

(ii) தொடர்பான அதிகாரசபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களில் ஈடுபட்டுள்ள ஏற்கனவேயுள்ள அல்லது

புதிய கம்பனிகள்;

(iii) கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட பங்குகள்.

(ஆ) நாட்டிற்குள் ஐ.அ.டொலர் 250,000 அல்லது அதற்குச் சமமான வேறு குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களுக்கும் கூடுதலான தொகை கொண்டு வரப்பட்டு பயன்படுத்தப்படாமல் கணக்கில் வைத்திருக்கும் நிதியினை அதே கணக்கு உடமையாளரின் பெயரில் இலங்கைக்கு வெளியே பேணப்படும் கணக்கொன்றிற்கு மாற்றல்.

(இ) மேலேயுள்ள பந்தி 4.2(ஆ)இல் குறிப்பிடப்பட்டவாறு முதலீடு செய்யப்படாது கணக்கில் வைக்கப்பட்டுள்ள நிதியின் மீது உழைக்கப்பட்ட வட்டியை அதே முதலீட்டாளரின் வதியும் விருந்தினர் ரூபா நடைமுறைக் கணக்கிற்கு மாற்றல்.

**5. வதியும் விருந்தினர் ரூபா நடைமுறைக் கணக்குகள் - முதலீட்டாளர்கள்**

**5.1 அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) வங்கித்தொழில் முறைமையினூடாக இலங்கைக்கு வெளியிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியில் பெறப்பட்ட பணவனுப்பல்களின் இலங்கை ரூபாப் பெறுகைகள் அல்லது முதலீட்டாளரினதும் அவரில் தங்கியுள்ள தங்கியிருப்பாளர் ஒவ்வொருவரினதும் வாழ்க்கைச் செலவிற்காக (வாழ்க்கையைக் கொண்டு நடத்த) மேலே பந்தி 3(ஆ) இனால் தேவைப்படுத்தப்பட்டவாறு பிரகடனப்படுத்தப்பட்டு கணக்கு உடமையாளரினால் இலங்கைக்குள் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி.

(ஆ) பந்தி 4.2(ஆ)இல் குறிப்பிட்டவாறு, கணக்கு உடமையாளரின் மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் நிலையான வைப்புக் கணக்குகள் மீது செலுத்தப்பட்டு இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்ட வட்டி.

(இ) வருமானம் (பங்குலாபங்கள், இலாபங்கள்) மற்றும் வதியும் விருந்தினர் ரூபா நடைமுறைக் கணக்கிலுள்ள நிதியினைப் பயன்படுத்தி கையேற்கப்பட்ட முதலீடுகளிலிருந்தான விற்பனைப் பெறுகைகள்.

**5.2 அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) முதலீட்டாளர்களினதும் அவரில் தங்கியிருப்பவர்களினதும் இலங்கை ரூபாவில் இலங்கையில் செய்யப்படும் பகிர்ந்தளிப்புக்கள்.

(ஆ) மேலேயுள்ள பந்தி 4.2(அ)இல் குறிப்பிடப்பட்ட ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களில் முதலீடுகள்.

(இ) முதலீட்டாளரின் அல்லது இலங்கையில் வதிகின்ற அவரில் தங்கியிருப்பவர்களின் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலான கொடுப்பனவுகளுக்கான பணவனுப்பல்கள்.

**6. வதியும் விருந்தினர் ரூபா நடைமுறைக் கணக்குகள் - தொழில்சார்நிபுணர்கள்**

**6.1 அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) வங்கித்தொழில் முறைமையினூடாக இலங்கைக்கு வெளியிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியில் பெறப்பட்ட பணவனுப்பல்களின் இலங்கை ரூபாப் பெறுகைகள் அல்லது தொழில்சார்நிபுணர்களினதும் அவரில் தங்கியுள்ள தங்கியிருப்பாளர் ஒவ்வொருவரினதும் வாழ்க்கைச் செலவிற்காக (வாழ்க்கையைக் கொண்டு நடத்த) மேலேயுள்ள பந்தி 3(இ) இனால் தேவைப்படுத்தப்பட்டவாறு பிரகடனப்படுத்தப்பட்டு கணக்கு உடமையாளரினால் இலங்கைக்குள் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி.

(ஆ) கணக்கு உடமையாளரினால் இலங்கையில் வழங்கப்பட்ட தொழில்சார்நிபுணத்துவப் பணிகளிலிருந்து பெறப்பட்ட சம்பளம், ஆலோசனைக் கட்டணங்கள் போன்றவை.

**6.2 அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) கணக்கு உடமையாளர் மற்றும் அவரின்/ அவளில் தங்கியுள்ளவர்களின் இலங்கை ரூபாவில் இலங்கையில் செய்யப்பட்ட பகிர்ந்தளிப்புக்கள்.

(ஆ) தொழில்சார்நிபுணர் அல்லது இலங்கையில் வதிகின்ற அவரில் தங்கியிருப்பவர்களின் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலான கொடுப்பனவுகளுக்கான பணவனுப்பல்கள்.

(இ) கணக்கில் வைக்கப்பட்டுள்ள ஏதேனும் பயன்படுத்தப்படாத நிதியின் எடுப்பனவு அல்லது அதே தொழில்சார்நிபுணரின் பெயரில் இலங்கைக்கு வெளியே பேணப்படும் கணக்கொன்றிற்கு அவர் புறப்படும் நேரத்தில் செய்யப்படும் அத்தகைய பயன்படுத்தாத நிதியின் மாற்றல்.

**7. மாதாந்தக் கூற்றுக்கள்**

(அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், வதியும் விருந்தினர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் வதியும் விருந்தினர் ரூபா நடைமுறைக் கணக்குகள் - முதலீட்டாளர் என்பனவற்றிற்கான காலாண்டுக் கூற்றுக்களை முறையே இணைப்பு I மற்றும்

இணைப்பு II இல் உள்ளவாறு அடுத்த மாதம் 15ஆம் நாளுக்குப் பிந்தாமலும் வதியும் விருந்தினர் ரூபா நடைமுறைக் கணக்குகள் - தொழில்சார்நிபுணருக்கான மாதாந்தக் கூற்றுக்களை இணைப்பு III இல் உள்ளவாறு அடுத்த மாதம் 15ஆம் நாளுக்குப் பிந்தாமலும் dfem@cbsl.lk என்ற மின்னஞ்சலூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட அறிக்கையிடல் தேவைப்பாடுகளுக்காக, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அவர்களது தொடர்பான வங்கிகளின் கணக்கேடுகளிலிருந்து தொடர்பான தகவல்களை உருவாக்குவதற்கு அல்லது பிரித்தெடுப்பதற்கு ஏற்ற விதத்தில் வங்கிக்குள் முறைமையொன்றினை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

8. இப்பணிப்புரைகளின் அதிகாரவரம்பிற்குள் வராத ஏதேனும் நோக்கத்திற்காக வதியும் விருந்தினர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதியும் விருந்தினர் ரூபா நடைமுறைக் கணக்குகள் - முதலீட்டாளர்கள் அல்லது வதியும் விருந்தினர் ரூபா நடைமுறைக் கணக்குகள் - தொழில்சார்நிபுணர்கள் என்பனவற்றிற்கும் அவற்றிலிருந்துமான ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள்/ மாற்றல்களுக்காக திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் முகவரின் இணக்கத்துடன் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளரின் முன்னொப்புதலைப் பெற்றுக் கொள்ளுமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**9. இப்பணிப்புரைகளின் நோக்கத்திற்காக**

(அ) "பணவனுப்பல்கள்" என்பது தந்தி மாற்றல்கள், ஏனைய வங்கிகளிடையேயான மாற்றல்கள், வங்கி வரைவுகள், ஏனைய கொடுப்பனவுச் சாதனங்கள், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு கொடுப்பனவுப் பொறிமுறைகள் அல்லது தளங்களூடாகப் பெறப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் நாணயத் தாள்கள் தவிர, வெளிநாட்டிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் பரிவர்த்தனைக் கம்பனிகளிலிருந்து/ இல்லங்களிலிருந்து பெறப்பட்ட நிதிகள் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(ஆ) "பிரகடனம்" என்பது வெளிநாட்டுச் செலாவணி ஐ.அ.டொலர் 15,000 இனை அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தினை விஞ்சுமிடத்து சுங்கத் திணைக்களத்திற்கும் ஐ.அ.டொலர் 15,000 இற்கு, அல்லது, அதற்குச் சமமான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயங்களுக்குக் குறைவாக இருக்குமிடத்து அதனை அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருக்கும் பொருத்தமான விதத்தில் செய்யப்படும் பிரகடனமொன்றாகக் குறித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(இ) "நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள்" என்பது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

10. வதியும் விருந்தினர் திட்டச் சிறப்புக் கணக்குகளின் தொழிற்பாடுகள் தொடர்பான தேவைப்பாடுகளைக் குறித்துரைக்கின்ற விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட 2017ஆம் ஆண்டு நவெம்பர் 20ஆம் திகதியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 06ஆம் இலக்கப் பணிப்புரைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

11. மேலேயுள்ள பந்தி 10இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள குறித்துரைக்கப்பட்ட முன்னைய பணிப்புரைகளின் இரத்தானது, இரத்துச் செய்யப்படுவதற்கு முன்னர் அவற்றின் கீழ் உறப்பட்ட ஏதேனும் உரிமைகள் அல்லது தண்டங்கள் அல்லது பொறுப்புக்களைப் பாதிப்பதாக இருக்கக்கூடாது.

12. இப்பணிப்புரைகளினால் அனுமதிக்கப்பட்டதெதுவும், இப்பணிப்புரைகளின் கீழ், வெளிநாட்டுச் செலாவணி வணிகத்தில் ஈடுபடுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களை அல்லது வேறு எவரேனும் ஆளினை வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கான தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கின்றது, விடுவிக்கின்றது அல்லது தடுக்கின்றது எனப் பொருள்கோடலாகாது.

13. இப்பணிப்புரைகள் 2021 மாச்சு 22ஆம் நாளிலிருந்து தொழிற்பாட்டிற்கு வருதலாதல் வேண்டும்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**
**2021 மாச்சு 18**

**2021ஆம் ஆண்டின் 08ஆம் இலக்கப் பணிப்புரைகளுக்கான இணைப்பு I**

**வதியும் விருந்தினர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் காலாண்டுக் கூற்று**

**வங்கியின் பெயர்: ........................................................................**
**அறிக்கையிடும் காலாண்டு மற்றும் ஆண்டு: ................................**

| கணக்கு உடமை யாளரின் பெயர் | நாணயம் | ஆரம்ப வைப்பு | | ஆரம்ப நிலுவை | வரவுகள் | | | பற்றுக்கள் | | | | இறுதி நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | திகதி | தொகை | | உள்முகப் பணவனுப்பல்கள்/ வைப்புக்கள் | வரவு வைக்கப்பட்ட வட்டி | ஏனையவை | பயன்படுத்தப்படாத/ மிகையான நிதியத்தின் மாற்றல் | ஒப்புதலளிக்கப்பட்ட முதலீடுகளுக்கான நிதியத்தின் எடுப்பனவு | வ.வி.ரூ.நா கணக்கிற்கு மாற்றல் செய்யப்பட்டவை | ஏனையவை | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மேலே குறிப்பிடப்பட்ட அறிக்கையின் ஸ்கான் செய்யப்பட்ட பிரதியையும் மேலேயுள்ளவாறு எம்எஸ் எக்ஸ்செல் பதிப்பினையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வங்கியின் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட/ தயாரிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட தகவல்கள் துல்லியமானவை என்பதனை நாங்கள் உறுதிப்படுத்துகின்றோம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் மற்றும் பதவி: ........................ இணங்குவிப்பு அலுவலரின் பெயர்: ...................

கையொப்பம் மற்றும் முத்திரை: ..................................................... கையொப்பம்: .....................................................

திகதி: ..................................................................................... திகதி: ..................................................................

வ.வி.ரூ.நா.க. - வதியும் விருந்தினர் ரூபா நாணயக் கணக்கு

**2021ஆம் ஆண்டின் 08ஆம் இலக்கப் பணிப்புரைகளுக்கான இணைப்பு II**

**வதியும் விருந்தினர் ரூபா நடைமுறைக் கணக்குகளின் காலாண்டுக் கூற்று - முதலீட்டாளர்கள்**

**வங்கியின் பெயர்: .......................................................................**

**அறிக்கையிடும் காலாண்டு மற்றும் ஆண்டு: ...............................**

**இலங்கை ரூபாவில்**

| கணக்கு உடமை யாளரின் பெயர் | கணக்கு இலக்கம் | ஆரம்ப வைப்பு | | ஆரம்ப நிலுவை | வரவுகள் | | | | | பற்றுக்கள் | | | இறுதி நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | திகதி | தொகை | | உள்முகப் பணவனுப்பல்கள்/ ஆரம்ப தொகையான ஐ.அ.டொ. 35,000 இற்கான வைப்புக்கள் | உள்முகப் பணவனுப்பல்கள்/ கணக்கு உடமையாளரினதும் அவரில் தங்கியிருப்பவர்களினதும் வாழ்க்கைச் செலவிற்கான வைப்புக்கள் | வதியும் விருந்தினர் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்தான மாற்றல்கள் | முதலீடுகளிலிருந்து ஈட்டப்பட்ட வருமானம் | ஏனையவை | உள்நாட்டுப் பகிர்ந்தளிப்புக்கள் | நடைமுறைக் கொடுக்கல் வாங்கல்களுக்கான கொடுப்பனவுகள் | ஏனையவை | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மேலே குறிப்பிடப்பட்ட அறிக்கையின் ஸ்கான் செய்யப்பட்ட பிரதியையும் மேலேயுள்ளவாறு எம்எஸ் எக்ஸ்செல் பதிப்பினையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வங்கியின் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட/ தயாரிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட தகவல்கள் துல்லியமானவை என்பதனை நாங்கள் உறுதிப்படுத்துகின்றோம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் மற்றும் பதவி: ........................

கையொப்பம் மற்றும் முத்திரை: .....................................................

திகதி: .....................................................................................

**2021ஆம் ஆண்டின் 08ஆம் இலக்கப் பணிப்புரைகளுக்கான இணைப்பு III**

**வதியும் விருந்தினர் ரூபா நடைமுறைக் கணக்குகளின் மாதாந்தக் கூற்று - தொழில்சார்நிபுணர்கள்**

**வங்கியின் பெயர்: .......................................................................**

**அறிக்கையிடும் காலாண்டு மற்றும் ஆண்டு: ...............................**

| கணக்கு உடமை யாளரின் பெயர் | கணக்கு இலக்கம் | ஆரம்ப நிலுவை | வரவுகள் | | | | பற்றுக்கள் | | | | இறுதி நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | உள்முகப் பணவனுப்பல்கள்/ ஆரம்ப தொகையான ஐ.அ.டொ. 2,000 இற்கான வைப்புக்கள் | உள்முகப் பணவனுப்பல்கள்/ கணக்கு உடமையாளரினதும் அவரில் தங்கியிருப்பவர்களினதும் வாழ்க்கைச் செலவிற்கான வைப்புக்கள் | இலங்கையில் ஈட்டப்பட்டவை | ஏனையவை | உள்நாட்டுப் பகிர்ந் தளிப்புக்கள் | நடைமுறைக் கொடுக்கல் வாங்கல் களுக்கான கொடுப்பனவுகள் | எடுப்பனவுகள்/ பயன்படுத்தப்படாத ஏதேனும் நிதியங்களின் மாற்றல்கள் | ஏனையவை | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மேலே குறிப்பிடப்பட்ட அறிக்கையின் ஸ்கான் செய்யப்பட்ட பிரதியையும் மேலேயுள்ளவாறு எம்எஸ் எக்ஸ்செல் பதிப்பினையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வங்கியின் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட/ தயாரிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட தகவல்கள் துல்லியமானவை என்பதனை நாங்கள் உறுதிப்படுத்துகின்றோம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் மற்றும் பதவி: ........................

கையொப்பம் மற்றும் முத்திரை: .....................................................

திகதி: ....................................................................................

இணங்குவிப்பு அலுவலரின் பெயர்: ...................

கையொப்பம்: .........................................................

திகதி: ......................................................................

**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 09ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் உடமையாளர்களுக்கான கடன்வசதிகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் நியதிகளில், வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் உடமையாளர்களுக்கு (இதனகத்துப் பின்னர் கடன்பாட்டாளர் எனக் குறிப்பிடப்படும்) பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் தமது உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் கடன்வசதிகளை வழங்குவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

**2. கடன்வசதிகளை வழங்குவதற்கான நோக்கங்கள்**

2.1 இலங்கையில் எந்தவொரு நோக்கத்திற்கும் பயன்படுத்துவதற்கு.

2.2 கடன்பாட்டாளரின் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு.

3. இக்கடன்களை உரிய காலத்தில் முழுமையாகத் தீர்ப்பதற்கு ஏற்றவிதத்தில் அதன் சாதாரண வியாபார நடவடிக்கைகளின் போது கடன்பாட்டாளர்கள் வெளிநாட்டுச் செலாவணியில் கிரமமான காசுப்பாய்ச்சலைப் பெறுகின்றனர் என அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் திருப்தியடைகின்றளவிற்கு வெளிநாட்டுச் செலாவணி உழைப்பாளர்களாக விளங்கும் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு உடமையாளர்களுக்கு மாத்திரம் கடன்வசதிகளை வழங்குதல் வேண்டும்.

4. கொடுகடன் இடர்நேர்வுகளை, குறிப்பாக ஏற்கனவே தம்வசமுள்ள அல்லது எதிர்பார்க்கப்படுகின்ற வெளிநாட்டுக் காசுப்பாய்ச்சல்களிலிருந்து அத்தகைய கடன்களைத் தீர்ப்பனவு செய்வதற்கான இயலுமையினை வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு உடமையாளர்கள் கொண்டிருப்பது தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் முன்மதியுடன் கூடிய மதிப்பீட்டினை மேற்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் அவர்களது மதிப்பீட்டிற்கு வலுவளிப்பதற்கான ஆவணங்களைப் பேணுதலும் வேண்டும்.

5. கடன் தொகைகளைப் பகிர்ந்தளித்தல்/ வரவு வைத்தல் நோக்கத்திற்காக கடன்பட்டாளரின் பெயரில் "வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு கடன் கணக்கு" ஒன்றினைத் திறத்தல் வேண்டும். வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு கடன் கணக்கில்

பற்றுக்கள் மற்றும் வரவுகள் பின்வருவனவற்றிற்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும்:

5.1 வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு கடன் கணக்கிற்கு அனுமதிக்கப்பட்ட வரவுகள்

(அ) இப்பணிப்புரைகளின் நியதிகளில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் வெளிநாட்டு நாணயத்தில் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன் தொகைகள்.

(ஆ) இப்பணிப்புரைகளின் கீழுள்ள கடன்களைத் தீர்ப்பனவு செய்யும்/ மீளச்செலுத்தும் நோக்கத்திற்காக கடன்பாட்டாளரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றிலிருந்து அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிலிருந்தான நிதிகளின் மாற்றல்.

(இ) வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு உடமையாளர் இலங்கைக்கு வெளியேயுள்ள ஆளொருவரிடமிருந்து (அதாவது வெளிநாட்டுக் கடன்வழங்குபவர்) குறுங்கால கடன்பாடுகளைப் பெறுகின்ற சந்தர்ப்பத்தில் உள்முக முதலீட்டுக் கணக்கிலிருந்து அல்லது கடன் தொகையினை வழங்குகின்ற வெளிநாட்டு கடன் வழங்குநரின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிலிருந்தான உள்முகப் பணவனுப்பல்கள் அல்லது மாற்றல்.

5.2 வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு கடன் கணக்கிற்கு அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்

(அ) கடன்பாட்டாளரின் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான வெளிமுகப் பணவனுப்பல்கள்.

(ஆ) இப்பணிப்புரைகளின் கீழ் பெறப்பட்ட கடன்களின் மீள்கொடுப்பனவுகள்.

(இ) இப்பணிப்புரைகளின் மேலேயுள்ள பந்தி 5.1(இ) இல் குறிப்பிடப்பட்டவாறு, பெறப்பட்ட கடன்களின் தீர்ப்பனவு/ மீள்கொடுப்பனவு நோக்கத்திற்காக இலங்கைக்கு வெளியே பேணப்படும் கணக்கொன்றிற்கு அல்லது உள்முக முதலீட்டுக் கணக்கிற்கு அல்லது கடன் வழங்கியவரின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிற்குச் செய்யப்படும் பணவனுப்பல்/ நிதிய மாற்றல்.

(ஈ) கரைகடந்த வங்கித்தொழில் பிரிவிலிருந்து கடன்பாட்டாளரினால் பெறப்பட்ட மற்றைய கடன்களின் தீர்ப்பனவிற்காக கடன்பாட்டாளரின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிற்கான நிதிய மாற்றல்.

(உ) இலங்கை ரூபாவில் இலங்கையில் செய்யப்படும் பகிர்ந்தளிப்புக்கள்.

6. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் (அதாவது கடன்வழங்குநர்) இப்பணிப்புரையின் கீழ், மற்றொரு அதிகாரமளிக்கப்பட்ட வணிகரிடமிருந்து (அதாவது வழங்குநர்) கடன்வழங்குநரின் பெயரில் வங்கி உத்தரவாதத்தினை அல்லது துணைநில் நாணயக் கடிதத்தினைப் பெற்றுக்கொண்டமையின் மீது, நடைமுறை மற்றும் மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் உத்தரவாதத்தினை வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் தொடர்பில் 2021 மாச்சு 18ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 20ஆம் இலக்கப் பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்டவாறு, அத்தகைய வங்கி உத்தரவாதம்/ துணைநில் நாணயக் கடிதம் வழங்குநருடன் கடன்பாட்டாளர் பேணும் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கில் வைக்கப்பட்டுள்ள நிதியத்திற்கெதிராக வழங்கப்பட்டிருக்குமிடத்து, இப்பணிப்புரைகளின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு கடன்களை வழங்கமுடியும்.

**7. கடன் வசதிகளை அறவிடல்**

7.1 அத்தகைய கடன் வசதிகளை வெளிநாட்டு நாணயத்தில் அறவிடுவதற்கான சாத்தியம் மிகக் குறைவாகக் காணப்படும் போது, அவசியமானவிடத்து இறுதிய நடவடிக்கையொன்றாக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இலங்கை ரூபாவில் கடன்களை அறிவிட்டுக் கொள்ளலாம். இது தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள்:

(அ) வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட கடன்களை இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட கடன்களுக்கு மாற்றிக் கொள்ளுமாறும்;

(ஆ) தொடர்பான உடன்படிக்கைகளில் இணங்கப்பட்டவாறு, கடன்களை/ தவணைப் பணத்தினை முழுமையாகத் தீர்ப்பனவு செய்வதற்கு அதன் சாதாரண வியாபார நடவடிக்கைகளிலிருந்து போதுமான வெளிநாட்டுச் செலாவணிக் காசுப்பாய்ச்சல்களைப் பெற்றுக்கொள்ள கடன்பாட்டாளர்களால் முடியாது என்பதனையிட்டு திருப்திப்பட்டுக் கொள்வதுடன் இது தொடர்பில் தேவையான ஆவணச் சான்றுகளையும் பேணுமாறும்; கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**8. ஏனைய நிபந்தனைகள்**

8.1 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், வெளிநாட்டு நாணயத்தில் கடன்பாட்டாளருக்கு வழங்கப்பட்ட கடன்பெறுகைகளும் அத்தகைய கடன்பாட்டாளர்களினால் வெளிநாடுகளிலிருந்து பெறப்பட்ட குறுங்கால வெளிநாட்டு நாணயக் கடன்களும் இலங்கைக்கு வெளியே மூலதனக் கொடுக்கல்வாங்கல்களுக்காக எந்தவொரு சூழ்நிலையிலும் பயன்படுத்தப்படமாட்டாது என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

8.2 இப்பணிப்புரைகளின் நியதிகளுக்கிணங்க, வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு உடமையாளர்களுக்கு கடன்களை வழங்குவதற்குப் புறம்பாக, வியாபார வெளிநாட்டு நாணயக் கடன் கணக்கொன்றினை இப்பணிப்புரைகளின் பந்தி 5.1(இ) மற்றும் 5.2(இ) இல் குறித்துரைக்கப்பட்டவாறான நோக்கங்களுக்காக 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி

(இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவரினால் இலங்கையில் மேற்கொள்ளப்படும் மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு திறக்க முடியும்.

8.3 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், கடன்கள் வழங்கப்பட்ட நேரத்தில் பெற்றுக்கொண்ட ஆவணச்சான்றுகளை, அத்தகைய கடன்கள் முழுமையாகத் தீர்ப்பனவு செய்யப்படும் வரை ஏதேனும் நியதிச்சட்ட ஆவணங்களைப் பேணுகின்ற தேவைப்படுத்தலுக்கு மேலதிகமான காலப்பகுதிக்குப் பேணுதல் வேண்டும். கடன்வழங்கல்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டதும் தொடர்பான ஆவணச்சான்றுகள், பத்திரங்கள் வடிவில் அல்லது இலத்திரனியல் வடிவில் முழுமையாகத் தீர்ப்பனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து நியதிச்சட்ட ஆவணம் பேணப்படுவதற்குத் தேவைப்படும் காலம்வரை பேணப்படுதல் வேண்டும்.

8.4 இப்பணிப்புரைகளின் கீழ் வழங்கப்பட்ட கடன் வசதிகள் மீதான மாதாந்தக் கூற்றுக்களை, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இணைப்பு ஐ இற்கு அமைவாக அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு னகநஅளூஉடிளட.டம என்ற மின்னஞ்சலூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

8.5 இரத்துச் செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது இப்பணிப்புரைகளுக்கு முன்னதாக, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகளின் கீழ் வெளிநாட்டுச் செலாவணி உழைப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன் வசதிகளின் அறவிடல் தொடர்பான நியதிகளும் நிபந்தனைகளும் இப்பணிப்புரைகளின் நியதிகளுக்கிணங்கச் செயற்பாட்டிற்கு வருதல் வேண்டும்.

**9. இப்பணிப்புரைகளின் நோக்கங்களுக்காக**

(அ) “கடன்வசதி வழங்கல்கள்” என்பது கடன்கள் மற்றும் முற்பணங்களின் வகைப்படுத்தல், வருமான அங்கீகாரம் மற்றும் ஒதுக்கீடுகள் மீதான 2008ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை மற்றும் அதற்கு செய்யப்பட்ட ஏதேனும் திருத்தங்களில் உள்ளவாறான அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) “நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள்” என்பது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) “மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள்” என்பது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஈ) “பணவனுப்பல்கள்” என்பது தந்தி மாற்றல்கள், ஏனைய வங்கிகளிடையேயான மாற்றல்கள், வங்கி வரைவுகள், ஏனைய கொடுப்பனவுச் சாதனங்கள், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு கொடுப்பனவுப் பொறிமுறைகள் அல்லது தளங்களூடாகப் பெறப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் நாணயத் தாள்கள் தவிர, வெளிநாட்டிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் பரிவர்த்தனைக் கம்பனிகளிலிருந்து/ இல்லங்களிலிருந்து பெறப்பட்ட நிதிகள் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(உ) “குறுங்காலக் கடன்கள்” என்பது 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆட்களினால் இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்ற மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகளினால் அனுமதிக்கப்பட்டவாறு வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு உடமையாளர்களினால் மூன்றாண்டுகளுக்கும் குறைவான காலப்பகுதிக்காக இலங்கைக்கு வெளியே வதிபவரிடமிருந்து (அதாவது வெளிநாட்டுக் கடன் வழங்குபவர்) பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களைக் குறித்தல் வேண்டும்..

10. வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு உடமையாளர்களுக்கான கடன்கள் தொடர்பான தேவைப்பாடுகளைக் குறித்துரைக்கின்ற விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட 2017ஆம் ஆண்டு நவெம்பர் 20ஆம் திகதியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 09ஆம் இலக்கப் பணிப்புரைகள் மற்றும் 2020ஆம் ஆண்டின் ஏப்பிறல் 03ஆம் திகதியிடப்பட்ட 2020ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கப் பணிப்புரைகள் என்பன இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

11. மேலேயுள்ள 10ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள குறித்துரைக்கப்பட்ட முன்னைய பணிப்புரைகளின் இரத்தானது, இரத்துச் செய்யப்படுவதற்கு முன்னர் அவற்றின் கீழ் உறப்பட்ட ஏதேனும் உரிமைகள் அல்லது தண்டங்கள் அல்லது பொறுப்புக்களைப் பாதிப்பதாக இருக்கக்கூடாது.

12. இப்பணிப்புரைகளினால் அனுமதிக்கப்பட்டதெதுவும், இப்பணிப்புரைகளின் கீழ், வெளிநாட்டுச் செலாவணி வணிகத்தில் ஈடுபடுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களை அல்லது வேறு எவரேனும் ஆளினை வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கான தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கின்றது, விடுவிக்கின்றது அல்லது தடுக்கின்றது எனப் பொருள்கோடலாகாது.

13. இப்பணிப்புரைகள் 2021 மாச்சு 22ஆம் நாளிலிருந்து தொழிற்பாட்டிற்கு வருதலாதல் வேண்டும்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**
**2021 மாச்சு 18**

**2021ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு I**

**வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் உடமையாளர்களுக்கான கடன் வசதிகளின் மாதாந்தக் கூற்று**

**வங்கியின் பெயர்: ........................................................................**
**அறிக்கையிடும் மாதம் மற்றும் ஆண்டு: ................................**

**அட்டவணை 1: கடன் வசதிகள் - செயற்படுகின்றவை**

| நாணயத்தின் வகை | மாதத்தின் ஆரம்பத்தில் கடன் வசதிகளின் எண்ணிக்கை | மாதத்தின் ஆரம்பத்தி லுள்ளவாறு வெளிநின்ற நிலுவை | இம்மாதத்தில் பகிர்ந்தளிக்கப் பட்டவை | மீள்கொடுப் பனவுகள் (மூலதனம்) | மாதத்தின் இறுதியில் கடன் வசதிகளின் எண்ணிக்கை | மாதத்தின் இறுதியிலுள்ளவாறு வெளிநின்ற நிலுவை |
|---|---|---|---|---|---|---|
| அவுஸ்திரேலிய டொலர் | | | | | | |
| கனேடியன் டொலர் | | | | | | |
| சுவிஸ் பிராங் | | | | | | |
| ஏனைய குறித்துரைக் கப்பட்ட வெளிநாட்டு நாணயம்* | | | | | | |

* ஏனைய குறித்துரைக்கப்பட்ட நாணயங்களின் தேவையைப் பொறுத்து நீங்கள் நிரல்களை அதிகரித்துக் கொள்ளலாம்.

**அட்டவணை 2: வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளினது கடன் கணக்குகளின் விபரங்கள்**

| வரவுகள் | | | பற்றுக்கள் | | | |
|---|---|---|---|---|---|---|
| கடன் வசதிகளின் பெறுகைகள் | வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவிலிருந்து மீள்கொடுப்பனவுகளுக்கான மாற்றல்கள் | மொத்தம் | நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் வெளிமுகப் பணவனுப்பல்கள் | கரைகடந்த வங்கித்தொழில் பிரிவிலுள்ள கணக்கொன்றிற்கான நிதியங்களின் மாற்றல் | இலங்கை ரூபாவில் பகிர்ந்தளிப்புக்கள் | மொத்தம் |
| | | | | | | |
| | | | | | | |

**அட்டவணை 3: கடன்வசதிகளை அறவிடல்**

| கடன்பாட்டாளரின் பெயர் | கடன் கணக்கின் இலக்கம் | நாணயக் குறியீடு | வெளிநாட்டு நாணயத்தில் வழங்கப்பட்ட கடன் தொகை (ஐ.அ. டொலரில்) | கடனின் காலம் | வெளிநாட்டு நாணயத்தில் செலுத்தத் தவறிய தொகை (ஐ.அ.டொலரில்) | இறுதி நடவடிக்கையாக இலங்கை ரூபாவில் அறவிடப்பட்ட தொகை | | இலங்கை ரூபாவில் மாதத்தின் இறுதியில் வெளிநின்ற கடன் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | கடன் தவணைகளாக | முழுக் கடன் நிலுவைகள் (இலங்கை ரூபாவிற்கு குறித்துரைக்கப்பட்ட கடன்களாக மாற்றப்பட்டவை) | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மேலே குறிப்பிடப்பட்ட அறிக்கையின் ஸ்கான் செய்யப்பட்ட பிரதியையும் மேலேயுள்ளவாறு எம்எஸ் எக்ஸ்செல் பதிப்பினையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வங்கியின் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட/ தயாரிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட தகவல்கள் துல்லியமானவை என்பதனை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் மற்றும் பதவி: .........................

கையொப்பம் மற்றும் முத்திரை: ......................................................

திகதி: ......................................................................................

இணங்குவிப்பு அலுவலரின் பெயர்: ....................

கையொப்பம்: ......................................................

திகதி: ...................................................................

**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையருக்கான (புலம்பெயர்ந்தவர் தவிர) கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (பல்வகை மூலதனக் கொடுக்கல்வாங்கல் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகள் மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவு என்பனவற்றின் நியதிகளில், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைப் பேணுகின்ற (புலம்பெயர்ந்தவர் தவிர) வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கு (இதனகத்துப் பின்னர் கடன்பாட்டாளர் எனக் குறிப்பீடு செய்யப்படுவர்) அவர்களது உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்து குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அல்லது இலங்கை ரூபாவில் கடன்களையும் முற்பணங்களையும் வழங்குவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

2. **கடன்கள் மற்றும் முற்பணங்களை வழங்குகின்ற நோக்கங்கள்**

 2.1 இலங்கையில் எந்தவொரு நோக்கத்திற்கும் பயன்படுத்துவதற்கு.

 2.2 இலங்கையில் வதிகின்ற கடன்பாட்டாளரின் உடனடிக் குடும்ப உறுப்பினர்களின் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு.

3. கொடுகடன் இடர்நேர்வுகளை, குறிப்பாக வெளிநாட்டு நாணயத்தில் கடன்களையும் முற்பணங்களையும் மீளச்செலுத்துவதற்கான கடன்பாட்டாளரின் இயலாற்றலைக் கருத்திற்கொண்டு மதிப்பீடு செய்ததன் பின்னரே கடன்களையும் முற்பணங்களையும் வழங்குதல் வேண்டும்.

4. இலங்கையில் சொத்துக்களின் விற்பனை வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கின்றவரும் வெளிநாட்டு நாணயத்தினை ஏற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளவருமான சொத்து அபிவிருத்தியாளரொருவரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றிற்கு அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிற்கு அத்தகைய கடன்களின் பெறுகைகளை மாற்றல் செய்யுமாறு கடன்பாட்டாளர் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரைக் கேட்டுக் கொள்கின்ற சந்தர்ப்பத்தைத் தவிர, வெளிநாட்டு நாணயத்தில் அல்லது இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட கடன் மற்றும் முற்பணத் தொகைகளை "தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கு கடன் கணக்கிற்கு" இலங்கை ரூபாவில் வரவு வைப்பதற்கு பகிர்ந்தளித்தல் வேண்டும்.

5. தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கில் கடன் கணக்கு கடன்பாட்டாளரின் பெயரில் திறக்கப்பட்டு தொழிற்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் பின்வரும் வரவுகள் மற்றும் பற்றுக்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருத்தலும் வேண்டும்.

 5.1 தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கின் கடன் கணக்கிற்கு அனுமதிக்கப்பட்ட வரவுகள்

  (அ) இப்பணிப்புரைகளின் நியதிகளுக்கிணங்க அதிகாரமளிக்கப்பட்ட வணிகரினால் இலங்கை ரூபாவில் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களின் தொகைகள்.

  (ஆ) கடன்பாட்டாளரின் பெயரில் வங்கித்தொழில் முறைமையினூடாக வெளிநாட்டிலிருந்தான பணவனுப்பல்கள் அல்லது கடன்கள் மற்றும் முற்பணங்களின் தீர்ப்பனவு/ மீள்கொடுப்பனவு நோக்கங்களுக்காக கடன்பாட்டாளர் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் உள்முக முதலீட்டுக் கணக்குகள் அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்குகளிலிருந்து மாற்றல் செய்யப்பட்ட நிதிகள்.

 5.2 தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கின் கடன் கணக்கிற்கு அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்

  (அ) இலங்கை ரூபாவில் இலங்கையில் செய்யப்படும் பகிர்ந்தளிப்புக்கள்.

  (ஆ) இலங்கையில் வதிகின்ற கடன்பாட்டாளரின் உடனடிக் குடும்ப உறுப்பினர்களின் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலான வெளிமுகப் பணவனுப்பல்கள்.

  (இ) இப்பணிப்புரைகளின் கீழ் பெறப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களின் மீள்கொடுப்பனவுகள்.

6. குறிப்பிட்ட கடன்பாட்டாளர் வெளிநாட்டில் தொழில்புரியும் காலப்பகுதி எவ்வளவோ அக்காலப்பகுதியில் கடன்களையும் முற்பணங்களையும் உள்முகப் பணவனுப்பல்கள் மூலம் அல்லது கடன்பாட்டாளரின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயக் கணக்கிலுள்ள நிதியினைப் பயன்படுத்தி வெளிநாட்டு நாணயத்தில் மீளச்செலுத்தல் வேண்டும்.

7. கடன்பாட்டாளர் அவரின்/ அவளின் வெளிநாட்டு வேலையினை நிறுத்தி அல்லது நிறுத்தப்பட்டு இலங்கையில் வதியுமொருவராக மாறும் சந்தர்ப்பத்தில், கடன்கள்/ முற்பணங்கள் தொடர்பில் வெளிநிற்கும் ஏதேனும் நிலுவைகளை (இலங்கை ரூபாக் கடன்/

முற்பணத்திற்கு மாற்றப்பட வேண்டும் எனக் கோரப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட கடன்கள்/ முற்பணங்கள் உட்பட) அத்தகைய கடன்பாட்டாளரின் தொழில்நிலை நிறுத்தப்பட்டமை தொடர்பிலான தேவையான ஆவணச்சான்றுகளை சரிபார்த்தமைக்குட்பட்டு இலங்கை ரூபாவில் தீர்ப்பனவு செய்யலாம். எது எவ்வாறெனினும், இலங்கை ரூபாவில் கடன்களையும் முற்பணங்களையும் தீர்ப்பனவு செய்வதற்கு முன்னர் கடன்பாட்டாளரின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் அல்லது வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலுள்ள முழு மீதிகளையும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

8. வழமையான வங்கித்தொழில் நடவடிக்கை முறையின் கீழ் ஈடுவைக்கப்பட்ட சொத்து இலங்கையில் வதியும் ஆளுக்குச் சொந்தமானதாக இருக்கின்றவிடத்து இக்கடன்களையும் முற்பணங்களையும் வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கும் இலங்கையில் வதியும் ஆளாகவுள்ள உடனடிக் குடும்ப உறுப்பினருக்கும் கூட்டாகவும் வழங்க முடியும். எனினும், அத்தகைய கடன்களும் முற்பணங்களும் இப்பணிப்புரைகளின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களினாலேயே தீர்ப்பனவு செய்யப்படல் வேண்டும்.

**9. கடன்களையும் முற்பணங்களையும் அறவிடல்**

9.1 அத்தகைய கடன்களையும் முற்பணங்களையும் வெளிநாட்டு நாணயத்தில் அறவிடுவது சாத்தியமானதாக இருக்காத போது, அவசியமானவிடத்து இறுதி நடவடிக்கையொன்றாக, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இலங்கை ரூபாவில் கடன்களை அறவிட்டுக் கொள்ளலாம். இது தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள்:

அ. வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட கடன்களையும் முற்பணங்களையும் இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கு மாற்றுமாறும்;

ஆ. தொடர்பான உடன்படிக்கைகளில் இணங்கப்பட்டவாறு, கடன்கள் மற்றும் முற்பணங்களை/ தவணைப் பணத்தினை முழுமையாகத் தீர்ப்பனவு செய்வதற்கு கடன்பாட்டாளர்கள் வெளிநாட்டிலுள்ள அவரின்/ அவளின் தொழிலிலிருந்து போதுமான வெளிநாட்டுச் செலாவணியினைப் பெற்றிருக்கவில்லை அல்லது வெளிநாட்டு நாணயக் கணக்கிலுள்ள மீதி உட்பட வெளிநாட்டு நாணயச் சொத்துக்களை வைத்திருக்கவில்லை என்பதனையிட்டு திருப்திப்பட்டுக் கொள்வதுடன் இது தொடர்பில் தேவையான ஆவணச்சான்றுகளைப் பேணுமாறும்;

கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**10. ஏனைய நிபந்தனைகள்**

10.1 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கடன்களையும் முற்பணங்களையும் வழங்கிய நேரத்தில் பெற்றுக்கொண்ட ஆவணச்சான்றுகளை, அத்தகைய கடன்களும் முற்பணங்களும் முழுமையாக தீர்ப்பனவு செய்யப்படும் வரை ஏதேனும் நியதிச்சட்ட ஆவணங்களைப் பேணுகின்ற தேவைப்படுத்தலுக்கு மேலதிகமான காலப்பகுதிக்குப் பேணுதல் வேண்டும். கடன்களும் முற்பணங்களும் தீர்ப்பனவு செய்யப்பட்டதும் முழுமையாகத் தீர்ப்பனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து தொடர்பான ஆவணச்சான்றுகள் பத்திரங்கள் வடிவில் அல்லது இலத்திரனியல் வடிவில் நியதிச்சட்ட ஆவணம் பேணப்படுவதற்குத் தேவைப்படும் காலம் வரை பேணப்படுதல் வேண்டும்.

10.2 இப்பணிப்புரைகளின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான மாதாந்தக் கூற்றுக்களை, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ இணைப்பு ஐ இற்கமைய வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு நகநஅளுஉடிளட.டம என்ற மின்னஞ்சலூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

10.3 இரத்துச் செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது இப்பணிப்புரைகளுக்கு முன்னதாக வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகளின் கீழ் வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கடன்கள் மற்றும் முற்பணங்களின் அறவிடல் தொடர்பான நியதிகளும் நிபந்தனைகளும் இப்பணிப்புரைகளின் நியதிகளுக்கிணங்கச் செயற்பாட்டிற்கு வருதல் வேண்டும்.

**11. இப்பணிப்புரைகளின் நோக்கங்களுக்காக**

(அ) “உடனடி குடும்ப உறுப்பினர்கள்” என்பது வாழ்க்கைத் துணை, பெற்றோர் மற்றும் பிள்ளைகள் எனப் பொருள்படும்.

(ஆ) “நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள்” என்பது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) “பணவனுப்பல்கள்” என்பது தந்தி மாற்றல்கள், ஏனைய வங்கிகளிடையேயான மாற்றல்கள், வங்கி வரைவுகள், ஏனைய கொடுப்பனவுச் சாதனங்கள், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு கொடுப்பனவுப் பொறிமுறைகள் அல்லது தளங்களூ டாகப் பெறப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் நாணயத் தாள்கள் தவிர, வெளிநாட்டிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் பரிவர்த்தனைக் கம்பனிகளிலிருந்து/ இல்லங்களிலிருந்து பெறப்பட்ட நிதிகள் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

12. வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கு கடன்களையும் முற்பணங்களையும் வழங்குவது தொடர்பான தேவைப்பாடுகளைக் குறித்துரைக்கின்ற விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட 2017ஆம் ஆண்டு நவெம்பர் 20ஆம்

திகதியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கப் பணிப்புரைகள் மற்றும் 2020ஆம் ஆண்டின் ஏப்பிறல் 16ஆம் திகதியிடப்பட்ட 2020ஆம் ஆண்டின் 05ஆம் இலக்கப் பணிப்புரைகள் என்பன இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

13. மேலேயுள்ள 12ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள குறித்துரைக்கப்பட்ட முன்னைய பணிப்புரைகளின் இரத்தானது, இரத்துச் செய்யப்படுவதற்கு முன்னர் அவற்றின் கீழ் உறப்பட்ட ஏதேனும் உரிமைகள் அல்லது தண்டங்கள் அல்லது பொறுப்புக்களைப் பாதிப்பதாக இருக்கக்கூடாது.

14. இப்பணிப்புரைகளினால் அனுமதிக்கப்பட்டதெதுவும், இப்பணிப்புரைகளின் கீழ், வெளிநாட்டுச் செலாவணி வணிகத்தில் ஈடுபடுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களை அல்லது வேறு எவரேனும் ஆளினை வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கான தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கின்றது, விடுவிக்கின்றது அல்லது தடுக்கின்றது எனப் பொருள்கோடலாகாது.

15. இப்பணிப்புரைகள் 2021 மாச்சு 22ஆம் நாளிலிருந்து தொழிற்பாட்டிற்கு வருதலாதல் வேண்டும்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**
**2021 மாச்சு 18**

**2021ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு I**

**வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களின் மாதாந்தக் கூற்று**

**வங்கியின் பெயர்: ........................................................................**
**அறிக்கையிடும் மாதம் மற்றும் ஆண்டு: ................................**

**அட்டவணை 1: கடன்கள் மற்றும் முற்பணங்கள் - செயற்படுகின்றவை**

| கடன்களின் நாணய வகைகள் | கடன்களின் நோக்கம் | | மாதத்தின் ஆரம்பத்தில் உள்ளவாறு கடன்களின் எண்ணிக்கை | மாதத்தின் ஆரம்பத்தில் உள்ளவாறு வெளிநின்ற நிலுவை | இம்மாத காலத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டவை | | மீள்கொடுப்பனவுகள் (மூலதனம்) | | மாத இறுதியிலுள்ள வாறு கடன்களின் எண்ணிக்கை | மாதத்தின் இறுதியிலுள்ள வாறு வெளிநின்ற நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இலங்கையில் நோக்கங்களுக் கானவை | நடைமுறைக் கொடுக்கல் வாங்கல் களுக்காக | | | இலங்கை ரூபா | வெ.நா.* (ஐ.அ. டொலரில்) | இலங்கை ரூபா** | வெ.நா. (ஐ.அ. டொலரில்) | | |
| வெ.நா. (ஐ.அ. டொலரில்) | | | | | | | | | | |
| இலங்கை ரூபா | | | | | | | | | | |

* கடன்பாட்டாளர், இலங்கையில் சொத்து விற்பனை வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கின்றவரும் வெளிநாட்டு நாணயத்தினை ஏற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டவருமாக இருக்கின்றவிடத்து சொத்து அபிவிருத்தியாளரொருவரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிற்கு கடன்பெறுகைகளை மாற்றல் செய்யுமாறு கோருமிடத்து

** கடன்பாட்டாளர் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பினை நிறுத்திவிட்டு இலங்கையில் வதிபவராக மாறுமிடத்து

வெ.நா. - வெளிநாட்டு நாணயம்

**அட்டவணை 2: கடன்கள் மற்றும் முற்பணங்களின் அறவிடல்**

| கடன்பாட்டாளரின் பெயர் | கடன் கணக்கின் இலக்கம் | நாணயக் குறியீடு | கடனின் காலம் | வெளிநாட்டு நாணயத்தில் வழங்கப்பட்ட கடன் தொகை (ஐ.அ. டொலரில்) | வெளிநாட்டு நாணயத்தில் செலுத்தத் தவறிய தொகை (ஐ.அ.டொலரில்) | இறுதி நடவடிக்கையாக இலங்கை ரூபாவில் அறவிடப்பட்ட தொகை | | ஐ.அ.டொரில் மாதத்தின் இறுதியில் வெளிநின்ற நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | கடன் தவணைகள் | முழுக் கடன் நிலுவைகள் (இலங்கை ரூபாவிற்கு குறித்துரைக்கப்பட்ட கடனாக மாற்றப்பட்டவை) | |
| | | | | | | | | |

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மேலே குறிப்பிடப்பட்ட அறிக்கையின் ஸ்கான் செய்யப்பட்ட பிரதியையும் மேலேயுள்ளவாறு எம்எஸ் எக்ஸ்செல் பதிப்பினையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வங்கியின் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட/ தயாரிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட தகவல்கள் துல்லியமானவை என்பதனை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் மற்றும் பதவி: ........................ இணங்குவிப்பு அலுவலரின் பெயர்: ...................

கையொப்பம் மற்றும் முத்திரை: ...................................................... கையொப்பம்: ......................................................

திகதி: ...................................................................................................... திகதி: ...................................................................

**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

நிரந்தர வதிவிட விசாவில் இலங்கைக்கு வெளியே மற்றொரு நாட்டில் வதிகின்ற மற்றும் இரட்டைப் பிரசாவுரிமையினைக் கொண்டுள்ள இலங்கையர்களுக்கான கடன்கள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (பல்வகை மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகள் மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவு என்பனவற்றின் நியதிகளில், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு நிரந்தர வதிவிட விசாவில் இலங்கைக்கு வெளியே மற்றொரு நாட்டில் வதிகின்ற இலங்கையர்களுக்கும் இலங்கையில் இரட்டைப் பிரசாவுரிமையினைப் பெற்றுக்கொண்டுள்ள தனிப்பட்டவர்களுக்கும் அவர்களது வதிவிட அந்தஸ்தினைக் கருத்திற்கொள்ளாது (இதனகத்துப் பின்னர் "கடன்பாட்டாளர்" எனக் குறிப்பிடப்படுவர்) அவர்களது உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்து கடன்களை வழங்குவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

**2. கடன்களை வழங்குகின்ற நோக்கங்கள்**

2.1 இலங்கையில் வதிவிட ஆதனமொன்றினை பெற்றுக்கொள்வதற்கு.

2.2 இலங்கையில் வதிவிட ஆதனமொன்றினை நிருமாணிப்பதற்கு/ அபிவிருத்தி செய்வதற்கு/ புதுப்பிப்பதற்கு

**3. வெளிநாட்டு நாணயத்தில் கடன்கள்**

3.1 அத்தகைய கடன்களின் கொடுகடன் இடர்நேர்வுகள், குறிப்பாக வெளிநாட்டு நாணயத்தில் கடன்களை மீளச்செலுத்துவதற்கான கடன்பாட்டாளரின் இயலாற்றலைப் பரிசீலனையில் கொண்டு மதிப்பீடுகளைச் செய்ததன் பின்னர் வெளிநாட்டு நாணயக் கடன்களை வழங்குதல் வேண்டும்.

3.2 கடன்பெறுகைகளை பகிர்ந்தளித்தல் மற்றும் கடன்களின் மீள்கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளுதல் ஆகிய நோக்கங்களுக்காக கடன்பாட்டாளரின் பெயரில் "வெளிநாட்டு நாணயக் கடன் கணக்கு" ஒன்றினைத் திறத்தல் வேண்டும். கடன் முழுமையாகத் தீர்ப்பனவு செய்யப்பட்டதும் உடனடியாக வெளிநாட்டு நாணயக் கடன் கணக்கு மூடப்படுதல் வேண்டும்.

3.3 இலங்கையில் வதிவிட ஆதன விற்பனை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவரும் வெளிநாட்டு நாணயத்தினை ஏற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்ட வருமானச் சொத்து அபிவிருத்தியாளரொருவரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றிற்கு அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிற்கு அத்தகைய கடன்பெறுகைகளை மாற்றல் செய்யுமாறு இலங்கைக்கு வெளியில் வதியும் கடன்பாட்டாளர் கேட்டுக் கொண்டாலொழிய, கடன்பெறுகைகள் வெளிநாட்டு நாணயக் கடன் கணக்கிலிருந்து இலங்கை ரூபாவிலேயே பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும்.

3.4 வெளிநாட்டு நாணயக் கடன்கள், உள்முகப் பணவனுப்பல்களூடாக அல்லது தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், உள்முக முதலீட்டுக் கணக்குகள் அல்லது கடன்பாட்டாளரின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்குகளில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியினைப் பயன்படுத்துவதன் மூலம் வெளிநாட்டு நாணயத்தில் மீளச்செலுத்தப்படல் வேண்டும்.

**4. இலங்கை ரூபாவில் கடன்கள்**

4.1 அத்தகைய கடன்களின் கொடுகடன் இடர்நேர்வினை, குறிப்பாக கடனை மீளச்செலுத்துவதற்கான கடன்பாட்டாளரின் இயலாற்றலைப் பரிசீலனையில் கொண்டு மதிப்பீடு செய்ததன் பின்னர் இலங்கை ரூபாவிலான கடன்களை வழங்குதல் வேண்டும்.

4.2 கடன்பெறுகைகளைப் பகிர்ந்தளித்தல் மற்றும் கடன் மீள்கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளுதல் ஆகிய நோக்கங்களுக்காக கடன்பாட்டாளரின் பெயரில் "இலங்கை ரூபாக் கடன் கணக்கு" ஒன்று திறக்கப்படல் வேண்டும்.

4.3 கடன்பெறுகைகள் இலங்கை ரூபாவில் மட்டுமே பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும்.

4.4 இலங்கை ரூபாக் கடன்கள், வெளிநாட்டு நாணய உள்முகப் பணவனுப்பல்கள் அல்லது தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், உள்முக முதலீட்டுக் கணக்குகள், புலம்பெயர்ந்தவரின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கு அல்லது கணக்குகள், கடன்பாட்டாளரின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்குகளில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியினைப் பயன்படுத்துவதன் மூலம் மீளச்செலுத்தப்படுதல் வேண்டும். இந்நோக்கத்திற்காக, உள்நாட்டு முதலீட்டுக் கணக்கு - இலங்கை ரூபாக் கணக்குகளும் புலம்பெயர்ந்தவரின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்குகளிலிருந்தும் செய்யப்படும் கொடுப்பனவுகள் உள்முக பணவனுப்பல்களாக அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

5. கடன்களை அறவிடுதல்

5.1 இலங்கை ரூபாவில் கடன்களை அறிவிடுவதென்பது (செலுத்தத்தவறிய சந்தர்ப்பத்தில்) அத்தகைய கடன்கள் மற்றும் முற்பணங்களின் வகைப்படுத்தல், வருமான அங்கீகாரம் மற்றும் ஒதுக்கீடுகள் தொடர்பான திருத்தப்பட்டவாறான 2008ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் நியதிகளில் குறைந்தபட்சம் குறைந்த தரவகையில் செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் மாத்திரம், கடன்பாட்டாளரின் வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலுள்ள மீதிகள் உட்பட, வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதற்குட்பட்டு மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும். இச்சந்தர்ப்பத்தில், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், கடன்பாட்டாளர்கள் வெளிநாட்டு நாணயத்தில் கடன்களைச் செலுத்துவதற்கு அனைத்து வழிமுறைகளையும் எடுத்திருக்கின்றார்கள் என்பதனையிட்டு தாமாகவே திருப்திப்பட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

5.2 இப்பணிப்புரைகள் வேறு விதத்தில் தேவைப்படுத்தினாலன்றி, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் செலுத்தத் தவறிய கடன்களை இலங்கை ரூபாவில் அறவிடுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

6. ஏனைய நிபந்தனைகள்

6.1 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், கடனுடன் இணைந்து காணப்படும் அனைத்து இடர்நேர்வுகளையும் மதிப்பீடு செய்து, அத்தகைய இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கான முன்மதியுடைய பொருத்தமான வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

6.2 கடன்பெறுகைகள் கடன்பாட்டாளருக்குப் பரம்பரையாகக் கிடைத்த சொத்தொன்றின் நிருமாணம்/ அபிவிருத்தி/ புதுப்பித்தலுக்கு அல்லது கடன்பாட்டாளர் இலங்கையில் அவர்/ அவள் வதிந்த வேளையில் கடன்பாட்டாளரினால் கையேற்கப்பட்ட ஆதனத்திற்காகப் பயன்படுத்தப்படுவதாக இருப்பின் அத்தகைய கடன்களை வழங்குவதற்கு முன்னர், ஆதனம் கடன்பாடுகளுக்கான பிணையுறுதியாக வைக்கப்படுமிடத்து, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட முன்மதியுடைய ஒழுங்குவிதிகளின் நியதிகளில் தெரிவுசெய்யப்பட்ட மதிப்பீட்டாளரொருவரிடமிருந்து அத்தகைய ஆதனத்தின் மதிப்பீட்டினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

6.3 இப்பணிப்புரைகளின் நியதிகளில், கடன்பெறுகைகளைப் பயன்படுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட/ நிருமாணிக்கப்பட்ட/ அபிவிருத்தி செய்யப்பட்ட/ புதுப்பிக்கப்பட்ட ஆதனத்திலிருந்து பெறப்பட்ட விற்பனைப் பெறுகைகள் பின்வரும் அடிப்படையில் இலங்கைக்கு வெளியே அனுப்பப்படுவதனை (வெளிநிற்கும் கடன்களை முழுமையாகத் தீர்ப்பனவு செய்தமையினைத் தொடர்ந்து) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

அ. கடனை மீளச் செலுத்துவதற்காக இலங்கைக்கு அனுப்பப்பட்ட தொகைக்கு (கடன்பாட்டாளரின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், உள்முக முதலீட்டுக் கணக்குகள், புலம்பெயர்ந்தவரின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்குகள் அல்லது கடனை மீளச்செலுத்துவதற்காக கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்பட்ட கணக்குகளிலிருந்து மாற்றல் செய்யப்பட்ட நிதிகள் உட்பட) விகிதசமமான விற்பனைப் பெறுகைகளை, கடனை மீளச்செலுத்துவதற்காக உள்முக முதலீட்டுக் கணக்கினூடாக எவ்வித கட்டுப்பாடுமின்றி அனுப்ப முடியும்.

ஆ. விற்பனைப் பெறுகைகளில் ஏதேனும் மீதி காணப்படுமாயின் தகைமையுடைய புலம்பெயர் படிக்குட்பட்டு அவை அனுப்பப்படுதல் வேண்டும்.

6.4 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், அத்தகைய ஆதனத்தின் விற்பனைப் பெறுகைகள் தொடர்பில் எதிர்கால வெளிமுகப் பணவனுப்பல்களை வசதிப்படுத்துவதற்காக கடன்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு உள்முகப் பணவனுப்பல்கள் பயன்படுத்தப்பட்டன என்பதனை உறுதிப்படுத்தி கடன்பாட்டாளருக்கு உறுதிப்படுத்தல் பத்திரமொன்றினை வழங்குதல் வேண்டும்.

6.5 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், கடன்களை வழங்கிய நேரத்தில் பெற்றுக்கொண்ட ஆவணச் சான்றுகளை அத்தகைய கடன்கள் முழுமையாகத் தீர்ப்பனவு செய்யப்படும் வரை ஏதேனும் நியதிச்சட்ட ஆவணங்களைப் பேணுகின்ற தேவைப்படுத்தலுக்கு மேலதிகமான காலப்பகுதிக்குப் பேணுதல் வேண்டும். கடன்கள் முழுமையாகத் தீர்ப்பனவு செய்யப்பட்டதும் தொடர்பான ஆவணச்சான்றுகள் பத்திரங்கள் வடிவில் அல்லது இலத்திரனியல் வடிவில் நியதிச்சட்ட ஆவணம் பேணப்படுவதற்குத் தேவைப்படும் காலம் வரை பேணப்படுதல் வேண்டும்.

6.6 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், இப்பணிப்புரைகளின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்கான மாதாந்தக் கூற்றுக்களை, அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ இணைப்பு I இற்கமைய வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு dfem@cbsl.lk என்ற மின்னஞ்சலூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

7. நிரந்தர வதிவிட விசாவில் இலங்கைக்கு வெளியே மற்றொரு நாட்டில் வதிகின்ற இலங்கையர்களுக்கும் இரட்டைப் பிரசாவுரிமையுடையவர்களுக்கும் இரத்துச் செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது இப்பணிப்புரைகளுக்கு முன்னதாக வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகளின் கீழான நியதிகள் மற்றும் நிபந்தனைகளும் வழங்கப்பட்ட கடன்களின் அறவிடலும் இப்பணிப்புரைகளின் நியதிகளில் வலிதில் உள்ளனவாக இருத்தல் வேண்டும்.

8. நிரந்தர வதிவிட விசாவில் இலங்கைக்கு வெளியே மற்றொரு நாட்டில் வதியும் இலங்கையர்களுக்கும் இரட்டைப் பிரசாவுரிமையுடையவர்களுக்கும் வழங்கப்பட்ட கடன்கள் தொடர்பிலான தேவைப்பாடுகளை குறித்துரைக்கின்ற விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட 2017ஆம் ஆண்டு நவெம்பர் 20ஆம் திகதியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கப் பணிப்புரைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

9. மேலேயுள்ள 8ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள குறித்துரைக்கப்பட்ட முன்னைய பணிப்புரைகளின் இரத்தானது, இரத்துச் செய்யப்படுவதற்கு முன்னர் அவற்றின் கீழ் உறப்பட்ட ஏதேனும் உரிமைகள் அல்லது தண்டங்கள் அல்லது பொறுப்புக்களைப் பாதிப்பதாக இருக்கக்கூடாது.

10. இப்பணிப்புரைகளினால் அனுமதிக்கப்பட்டதெதுவும், இப்பணிப்புரைகளின் கீழ், வெளிநாட்டுச் செலாவணி வணிகத்தில் ஈடுபடுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களை அல்லது வேறு எவரேனும் ஆளினை வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கான தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கின்றது, விடுவிக்கின்றது அல்லது தடுக்கின்றது எனப் பொருள்கோடலாகாது.

11. இப்பணிப்புரைகள் 2021 மாச்சு 22ஆம் நாளிலிருந்து தொழிற்பாட்டிற்கு வருதலாதல் வேண்டும்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**
**2021 மாச்சு 18**

**2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு I**

**வேறொரு நாட்டில் நிரந்தர வதிவிட விசாவில் வதிகின்ற மற்றும் இரட்டைப் பிரசாவுரிமையினைக் கொண்டுள்ள இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கையர்களுக்கான கடன்களின் மாதாந்தக் கூற்று**

**வங்கியின் பெயர்: ......................................................................**
**அறிக்கையிடும் மாதம் மற்றும் ஆண்டு: ...............................**

**அட்டவணை 1: கடன்கள் - செயற்படுகின்றவை**

| கடன்களின் வகை | மாதத்தின் ஆரம்பத்தில் உள்ளவாறு கடன்களின் எண்ணிக்கை | மாதத்தின் ஆரம்பத்தில் உள்ளவாறு வெளிநின்ற நிலுவை | இம்மாத காலத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டவை | | மீள்கொடுப்பனவுகள் (மூலதனம்) | | மாத இறுதியிலுள்ள வாறு கடன்களின் எண்ணிக்கை | மாதத்தின் இறுதியிலுள்ள வாறு வெளிநின்ற நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | இலங்கை ரூபா | வெ.நா.மூ (ஐ.அ. டொலரில்) | இலங்கை ரூபா** | வெ.நா. (ஐ.அ. டொலரில்) | | |
| வெ.நா. (ஐ.அ. டொலரில்) | | | | | | | | |
| இலங்கை ரூபா | | | | | | | | |

* கடன்பாட்டாளர், இலங்கையில் சொத்து விற்பனை வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கின்றவரும் வெளிநாட்டு நாணயத்தினை ஏற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டவருமாக இருக்கின்றவிடத்து, சொத்து அபிவிருத்தியாளரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிற்கு மாற்றல் செய்யுமாறு கோருமிடத்து

** கடன்கள் இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் மீள்கொடுப்பனவுகளை புலம்பெயர்ந்தவரின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கிலிருந்து அல்லது உள்முக முதலீட்டு ரூபாக் கணக்கலிருந்தான நிதிய மாற்றல்களினூ டாக மேற்கொள்ள முடியும்.

வெ.நா. - வெளிநாட்டு நாணயம்

**அட்டவணை 2: கடன்கள் - செயற்படாதவை**

| கடன்பாட்டாளரின் பெயர் | கடன் நாணய வகை | | நாணயக் குறியீடு | கடன் தொகை | | வெளிநாட்டு நாணயத்தில் செலுத்தத் தவறிய தொகை (ஐ.அ. டொலரில்) | இம்மாத காலத்தில் இலங்கை ரூபாவில் அறவிடல்கள் | இலங்கை ரூபாவில் மாத இறுதியிலுள்ள வாறு வெளிநின்ற நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வெ.நா. (ஐ.அ. டொலரில்) | இலங்கை ரூபா | | வெ.நா. (ஐ.அ. டொலரில்) | இலங்கை ரூபா | | | |
| | | | | | | | | |

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மேலே குறிப்பிடப்பட்ட அறிக்கையின் ஸ்கான் செய்யப்பட்ட பிரதியையும் மேலேயுள்ளவாறு எம்எஸ் எக்ஸ்செல் பதிப்பினையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வங்கியின் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட/ தயாரிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட தகவல்கள் துல்லியமானவை என்பதனை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் மற்றும் பதவி: ........................

கையொப்பம் மற்றும் முத்திரை: ......................................................

திகதி: ......................................................................................

இணங்குவிப்பு அலுவலரின் பெயர்: ...................

கையொப்பம்: ......................................................

திகதி: ...................................................................

**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

இலங்கை அபிவிருத்தி முறிகளுக்கான குறித்துரைக்கப்பட்ட முகவர்களாக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மற்றும் முதனிலை வணிர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 4ஆம் மற்றும் 9ஆம் பிரிவுகளின் நியதிகளில், இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற இலங்கை அபிவிருத்தி முறிகளைக் கொள்வனவு செய்து சந்தைப்படுத்துகின்ற நோக்கத்திற்காக குறித்துரைக்கப்பட்ட முகவர்களாக இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் கண்காணிப்பாளரால் நியமிக்கப்பட்டிருக்கின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

2. இலங்கை அபிவிருத்தி முறிகளை கையேற்றல், உடமையில் வைத்திருத்தல் மற்றும் மாற்றல் செய்தல் நோக்கத்திற்காக, இலங்கை அரசாங்கத்திடமிருந்து இலங்கை அபிவிருத்தி முறிகளை நேரடியாகக் கொள்வனவு செய்கின்ற, இங்கே 3ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட முதலீட்டாளர்களின் வகைகளிலிருந்து பெறப்பட்ட இலங்கை அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய நிதியத்தினை வரவு வைப்பதற்கு இலங்கை அரசாங்கத்தின் சார்பில் “இலங்கை அபிவிருத்தி முறிகள் முதலீட்டுக் கணக்கு” என்ற பெயரில் ஐ.அ.டொலரில் வட்டி உழைக்கின்ற கணக்கினை அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் பேணுவதற்கு.

3. **இலங்கை அபிவிருத்தி முறிகளின் தகைமையுடைய முதலீட்டாளர் வகைகள்:**

(அ) அவர்களின் வதிவிட அந்தஸ்தினைக் கருத்திற்கொள்ளாது, உள்முக முதலீட்டுக் கணக்குகளூடாக வெளிநாட்டு அரசுகளின் பிரசைகள்.

(ஆ) உள்முக முதலீட்டுக் கணக்குகளினூடாக இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கைப் பிரசைகள்.

(இ) தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுக் கணக்குகளின் உடமையாளர்கள்.

(ஈ) உள்முக முதலீட்டுக் கணக்குகளூடாக இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் அல்லது இலங்கைக்கு வெளியே பதிவுசெய்யப்பட்ட பங்குடமைகள்.

(உ) நாட்டு நிதியங்கள், பிராந்திய நிதியங்கள், சமவாய நிதியங்கள், நம்பிக்கை நிதியங்கள் மற்றும் உள்முக முதலீட்டுக் கணக்குகளூடாக இலங்கைக்கு வெளியே நிறுவப்பட்டுள்ள நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள்.

(ஊ) இலங்கை மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக நியமிக்கப்பட்டுள்ள உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்.

(எ) வெளிநாட்டு நாணயத்தில் வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்.

**4. இலங்கை அபிவிருத்தி முறி முதலீட்டுக் கணக்கு**

**4.1 அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடு செய்வது தொடர்பில் ஏற்படக்கூடிய பணிக் கட்டணங்கள் உட்பட, இலங்கை அரசாங்கத்திடமிருந்து இலங்கை அபிவிருத்தி முறிகளின் கொள்வனவிற்காக மேலேயுள்ள 3ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட தகைமையுடைய முதலீட்டாளர்களிடமிருந்து ஐ.அ.டொலரில் பெறப்பட்ட நிதியங்கள்.

**4.2 அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) மேலேயுள்ள 3ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட தகைமையுடைய முதலீட்டாளர்களினால் இலங்கை அபிவிருத்தி முறிகளைக் கொள்வனவு செய்வதற்காக இலங்கை அரசாங்கத்திற்குச் செய்யப்பட வேண்டிய கொடுப்பனவு தொடர்பில் பொதுப்படுகடன் கண்காணிப்பாளரினால் முன்வைக்கப்பட்ட ஆவணங்களில் அல்லது விடுக்கப்பட்ட சுற்றறிக்கையில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கிணங்க மேற்கொள்ளப்படும் நிதிய மாற்றல்கள்

(ஆ) பொதுப்படுகடன் கண்காணிப்பாளரின் அறிவுறுத்தலின் மீது வேறு ஏதேனும் நோக்கத்திற்காகச் செய்யப்படுகின்ற மீளளிப்பு மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பில் மேலேயுள்ள 3ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட தகைமையுடைய முதலீட்டாளர்களின் கணக்கொன்றிற்கான நிதிய மாற்றல்

(இ) இலங்கை ரூபாவிலான பகிர்ந்தளிப்புக்கள் அல்லது இலங்கை அபிவிருத்தி முறிகளில் செய்யப்பட்ட முதலீடுகள் தொடர்பில் தொடர்பான பணிக் கட்டணங்களின் பொருட்டு குறித்துரைக்கப்பட்ட முகவரின் வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கான மாற்றல்கள்

(ஈ) பொதுப்படுகடன் கண்காணிப்பாளருக்கு செலுத்தப்படத்தக்க வேறு ஏதேனும் தொகைகளின் பொருட்டு பொதுப்படுகடன் கண்காணிப்பாளரினால் முன்வைக்கப்பட்ட ஆவணத்தில் அல்லது விடுக்கப்பட்ட சுற்றறிக்கையில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கிணங்க மேற்கொள்ளப்படும் நிதிய மாற்றல்.

5. இலங்கை அபிவிருத்தி முறிகளுக்கான குறித்துரைக்கப்பட்ட முகவர்களாக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் விடுக்கப்பட்ட 2017 நவெம்பர் 20ஆம் திகதியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கப் பணிப்புரைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

6. மேலேயுள்ள 5ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முன்னைய பணிப்புரைகளின் இரத்தானது, இரத்துச் செய்யப்படுவதற்கு முன்னர் அவற்றின் கீழ் உறப்பட்ட ஏதேனும் உரிமைகள் அல்லது தண்டங்கள் மற்றும் பொறுப்புக்களை பாதிப்பதாக இருக்கக்கூடாது.

7. இப்பணிப்புரைகளினால் அனுமதிக்கப்பட்டதெதுவும், இப்பணிப்புரைகளின் கீழ், வெளிநாட்டுச் செலாவணி வணிகத்தில் ஈடுபடுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களை அல்லது வேறு எவரேனும் ஆளினை வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கான தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கின்றது, விடுவிக்கின்றது அல்லது தடுக்கின்றது எனப் பொருள்கோடலாகாது.

8. இப்பணிப்புரைகள் 2021 மாச்சு 22ஆம் நாளிலிருந்து தொழிற்பாட்டிற்கு வருதலாதல் வேண்டும்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**
**2021 மாச்சு 18**

**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 13ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகள் (படிவம் 1) மற்றும் வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகள் (படிவம் 2) தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 6 மற்றும் 7ஆம் பிரிவுகளுடன் வாசிக்கப்பட வேண்டிய 9ஆம் பிரிவின் நியதிகளில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகள் (படிவம் 1) மற்றும் வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகள் (படிவம் 2) தொடர்பான தகவல்களை, வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் கண்காணிப்பு முறைமையான - அத்தகைய அனைத்து வெளிநாட்டுச் செலாவணி விற்பனை மற்றும் கொள்வனவு கொடுக்கல்வாங்கல்

தொடர்பான வெளிநாட்டுச் செலாவணி முறைமையூடாக, பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஊடுகடத்துமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

1.1 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், இலங்கை ரூபாவினை வெளிநாட்டுச் செலாவணிக்கு அல்லது மறுதலையாக மாற்றுவதற்குத் தேவைப்படுத்தும் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், கொடுக்கல்வாங்கலின் நம்பகத்தன்மையினையிட்டு திருப்தியடைந்ததன் மேல் அனுமதிக்கப்பட்ட அனைத்துக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலும் வெளிநாட்டுச் செலாவணியினை வாங்கும் மற்றும் விற்கும் அதன் வாடிக்கையாளர்களிடமிருந்து, துல்லியமாகவும் பூரணமாகவும் நிரப்பப்பட்ட முறையே இணைப்பு I மற்றும் இணைப்பு II இல் தரப்பட்ட படிவ முறைமைக்கிணங்க படிவம் 1 இனையும் படிவம் 2 இனையும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

1.2 அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவர் பூரணப்படுத்தப்பட்டு கையொப்பமிடப்பட்ட படிவம் 1 மற்றும் படிவம் 2 இனை ஏற்றுக்கொள்வதுடன் கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதற்கான ஆவணச்சான்றுகளையும் (ஒன்றில் தொலைநகல், மின்னஞ்சல் அல்லது ஏதேனும் இலத்திரனியல் பரிமாற்ற முறைகளூடாக) அதன் வாடிக்கையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் 2006ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல்கள் சட்டம் மற்றும் அதற்குச் செய்யப்பட்ட ஏதேனும் திருத்தங்களின் கீழ், அத்தகைய வாடிக்கையாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள்/ விபரங்களின் உறுதிப்படுத்தல் மற்றும் துல்லியத்தன்மைக்கான முழுப்பொறுப்பையும் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கடப்பாடுகளுடன் இணங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

1.3 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் படிவம் 1 மற்றும் படிவம் 2 தொடர்பான அனைத்துத் தகவல்களையும் கொடுக்கல்வாங்கலின் பெறுமதியினைக் கருத்திற்கொள்ளாது அவர்களது மைய வங்கித்தொழில் முறைமைகளிலிருந்து பிரித்தெடுத்துக் கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் கைகளினால் எவ்வித நடவடிக்கையினையும் மேற்கொள்ளாமல் நாளாந்த அடிப்படையில் குறித்துரைக்கப்பட்ட நேரத்தில் வெளிநாட்டுச் செலாவணி முறைமைக்கு (஗வவிள:.:..:.றறற.உடிளட.டம.:.கழசநஒ.:.) தரவேற்றம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். எனினும், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் ரீ1 அடிப்படையில் பி.ப. 4.30 மணிக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை மாத்திரம் அடுத்த வேலை நாளன்று வியாபாரத் தொழிற்பாடுகள் ஆரம்பமாவதற்கு முன்னர் வெளிநாட்டுச் செலாவணி முறைமையூடாக அறிவித்தல் வேண்டும்.

1.4 அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவர் படிவம் 1 மற்றும் படிவம் 2 இலுள்ள அனைத்துக் கட்டாயத் துறைகளையும் உள்ளடக்கும் விதத்தில் மைய வங்கித்தொழில் முறைமையில் பொறிமுறையொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அனைத்து வெளிநாட்டுச் செலாவணி விற்பனை மற்றும் கொள்வனவுத் தகவல்கள் இலத்திரனியல் ரீதியாக வழிகாட்டல்கள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி முறைமையில் காணப்படும் இடைமுகத் தேவைப்பாட்டு மாதிரிகளுக்கிணங்க வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கு ஊடுகடத்தப்படுவதனையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

1.5 அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவர் மேலே 1.1ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு பெறப்பட்ட படிவம் 1 மற்றும் படிவம் 2 இனை அடிப்படைக் கொடுக்கல்வாங்கல்களின் நம்பத்தன்மையினை நிறுவுவதற்குத் தேவையான ஆவணச்சான்றுகளை பத்திரங்கள் வடிவில் அல்லது இலத்திரனியல் ரீதியாக பதிவேடுகளுடன் சேர்த்து அவை பேணப்பட வேண்டிய காலம் வரை வங்கி/ கிளையின் பணிமனைகளில் அல்லது மையப்படுத்தப்பட்ட செய்முறைப்படுத்தும் பிரிவில் கொடுக்கல்வாங்கல் இடம்பெற்ற திகதியிலிருந்து, வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் கிரமமான விசாரணை/ பரிசோதனையை இயலுமைப்படுத்தும் விதத்தில் பேணிவருதல் வேண்டும்.

**2. பிரயோகிக்கத்தக்க ஏனைய நிபந்தனைகள்**

2.1 அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவர், கொடுக்கல்வாங்கலொன்றிற்காக ஐ.அ.டொலர் 5,000 இற்கும் குறைவான அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தினைக் கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்தில், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் அத்தகைய அனைத்துத் தகவல்களையும் திரட்டப்பட்ட கூற்று வடிவில் வாராந்த அடிப்படையில் பதிவேடுகள் பேணப்பட வேண்டிய காலம் வரை பேணலாம்.

2.2 அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவர் உரிய விழிப்புக் கவனம் மற்றும் கோரிக்கையின் நம்பகத்தன்மை என்பன தொடர்பில் திருப்தியடைந்ததன் மேல் பின்வரும் சந்தர்ப்பங்கள் தொடர்பில் முறையே வெளிநாட்டுச் செலாவணியினை வாங்கும் மற்றும் விற்கும் விண்ணப்பதாரிகளின் சார்பில் படிவம் 1 மற்றும் படிவம் 2இல் கையொப்பமிடலாம்.

(i) தேவையான எழுத்து மூலமான உறுதிப்படுத்தலைப் பெற்றுக்கொண்ட பின்னர் உள்முகப் பணவனுப்பல்கள்.

(ii) இணையத்தள வங்கித்தொழில் மற்றும் செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழிலூடாக முன்னெடுக்கப்படும் கொடுக்கல்வாங்கல்கள்.

(iii) துணைநில் கட்டளையினூடாக முன்னெடுக்கப்படும் கொடுக்கல்வாங்கல்கள்.

(iv) அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் வியாபாரத் தலத்திற்கு வாடிக்கையாளர் சமூகமளிக்க முடியாமல் இருக்கும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் இலங்கை ரூபாவினை வெளிநாட்டு நாணயத்திற்கு அல்லது மறுதலையாக மாற்றுவதுடன் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வாடிக்கையாளர் எழுத்து மூலமாக அறிவுறுத்தல், சம்மதம் அல்லது

அதிகாரத்தினை வழங்கியிருந்துமிடத்தும் கடன் அறவிடல் நடவடிக்கைகளின் போதும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்.

(v) நாட்டில் நிலவுகின்ற சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்குகின்ற விதத்தில் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்/ இலங்கை ரூபாக் கணக்கிலிருந்து ஏதேனும் வரி, நியதிச்சட்ட விதிப்புக்கள் அல்லது கட்டணங்களைக் கழித்தல் மற்றும் வங்கி விதிப்புக்கள்/ கட்டணங்களைக் கழித்தல்.

(vi) இலங்கை ரூபாவினை வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்றுதல் அல்லது மறுதலையாக மேற்கொள்வதுடன் தொடர்பான வங்கியின் தலைமை அலுவலகத்திலிருந்தான அல்லது தலைமை அலுவலகத்திற்கான கொடுப்பனவுகள்/ மாற்றல்கள்.

3. மேலும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் படிவம் 1 மற்றும் படிவம் 2 கொடுக்கல்வாங்கல்களின் உறுதிப்படுத்தல் மற்றும் துல்லியத்தன்மைக்கும் வெளிநாட்டுச் செலாவணி முறைமைகளுக்கு தகவல்களைத் தரவேற்றம் செய்வதற்குமான முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

4. இப்பணிப்புரைகளினால் அனுமதிக்கப்பட்டதெதுவும், இப்பணிப்புரைகளின் கீழ், வெளிநாட்டுச் செலாவணி வணிகத்தில் ஈடுபடுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களை அல்லது வேறு எவரேனும் ஆளினை வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கான தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கின்றது, விடுவிக்கின்றது அல்லது தடுக்கின்றது எனப் பொருள்கோடலாகாது.

5. இப்பணிப்புரைகள் 2021 மாச்சு 22ஆம் நாளிலிருந்து தொழிற்பாட்டிற்கு வருதலாதல் வேண்டும்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**
**2021 மாச்சு 18**

<table>
<tr><td colspan="6" align="right">2021ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு I</td></tr>
<tr><td colspan="6" align="center">அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவரின் வெளிநாட்டுச் செலாவணி விற்பனை</td></tr>
<tr><td colspan="6" align="right">படிவம் 1</td></tr>
<tr><td>தே.அ.அ/ கடவுச்சீட்டு/ கம்பனி பதிவு இல.</td><td></td><td rowspan="2">தொடர் இல.</td><td colspan="3" rowspan="2"></td></tr>
<tr><td>வருமான வரி கோப்பு இல./</td><td></td></tr>
<tr><td>விண்ணப்பதாரியின் பெயர்</td><td></td><td>வங்கிக் குறியீடு</td><td></td><td>நோக்கக் குறியீடு</td><td></td></tr>
<tr><td>விண்ணப்பதாரியின் முகவரி</td><td></td><td>கிளைக் குறியீடு</td><td></td><td>துணை நோக்கக் குறியீடு</td><td></td></tr>
<tr><td></td><td></td><td>நாட்டுக் குறியீடு</td><td></td><td>நாணயக் குறியீடு</td><td>விடுவிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணித் தொகை</td></tr>
<tr><td>விமானப் பயணச்சீட்டு இல. (பயண நோக்கத்திற்கு மாத்திரம்)</td><td></td><td>வங்கி வரைவு</td><td></td><td></td><td></td></tr>
<tr><td>நன்மைபெறுநரின் பெயர்</td><td></td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>நன்மைபெறுநரின் முகவரி</td><td></td><td>தந்தி மாற்றல்</td><td></td><td></td><td></td></tr>
<tr><td>நோக்கம்</td><td></td><td>பயண அட்டை</td><td></td><td></td><td></td></tr>
<tr><td rowspan="4">வெளிநாட்டுச் செலாவணிக்கு விண்ணப்பித்த தொகை</td><td>ஐ.அ.டொ.</td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>யூரோ</td><td>ஏனையவை (குறிப்பிடுக)</td><td></td><td></td><td></td></tr>
<tr><td>பி.பவுண்</td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td></td><td>நாணய வழங்கல்</td><td></td><td></td><td></td></tr>
<tr><td colspan="2">என்னால் வழங்கப்பட்ட அனைத்துத் தகவல்களும் உண்மையானவையும் சரியானவையுமென நான் பிரகடனப்படுத்துகின்றேன்.<br>............................ ..........................................................<br>திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்</td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>வங்கியின் பயன்பாட்டிற்கு</td><td>........................ திகதி<br>................................ காசாளரின் கையொப்பம்<br>.......................................... கையொப்பம் மற்றும் வங்கி முத்திரை</td><td>குறிப்புக்கள்</td><td colspan="3"></td></tr>
<tr><td>குறிப்பு:</td><td colspan="5">விண்ணப்பதாரி இலங்கை ரூபாவினை வெளிநாட்டுச் செலாவணிக்கு மாற்றியவராக இருத்தல் வேண்டும். உதாரணமாக, வியாபாரப் பயணத்திற்காக கம்பனியொன்று ஊழியரொருவருக்கு வெளிநாட்டுச் செலாவணியினை வழங்கும் பொழுது அவர் விண்ணப்பதாரியாகவும் ஊழியர் நன்மைபெறுநராகவும் இருத்தல் வேண்டும்.</td></tr>
</table>

**2021ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு II**

**அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களின் வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவு**

**படிவம் 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தே.அ.அ/கடவுச்சீட்டு கம்பனி பதிவு இல. | | தொடர் இல. | | | |
| வருமான வரி கோப்பு இல. | | | | | |
| விண்ணப்பதாரியின் பெயர் | | வங்கிக் குறியீடு | | நோக்கக் குறியீடு | |
| விண்ணப்பதாரியின் முகவரி | | கிளைக் குறியீடு | | துணை நோக்கக் குறியீடு | |
| | | நாட்டுக் குறியீடு | | நாணயக் குறியீடு | |
| | | விடுவிக்கப்பட்ட தொகை | | | |
| | | தொகை இலங்கை ரூபாவில் | | | |
| பணம் அனுப்பியவரின் பெயர் | | | | | |
| பணம் அனுப்பியவரின் முகவரி | | | | | |
| நோக்கம் | | | | | |
| ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணித் தொகை | ஐ.அ.டொ. | | | | |
| | யூரோ | | | | |
| | பி.பவுண் | | | | |
| என்னால் வழங்கப்பட்ட அனைத்துத் தகவல்களும் உண்மையானவையும் சரியானவையுமென நான் பிரகடனப்படுத்துகின்றேன். ......................... திகதி ......................................................... விண்ணப்பதாரியின் கையொப்பம் | | மொத்தம் | | | |
| வங்கியின் பயன்பாட்டிற்கு | .................... திகதி .................... காசாளரின் கையொப்பம் ........................... கையொப்பம் மற்றும் வங்கி முத்திரை | குறிப்புக்கள் | | | |
| குறிப்பு: | படிவம் 2 விண்ணப்பதாரி/ நன்மைபெறுநரினால் நேரடியாக கையொப்பமிடப்படல் வேண்டும். அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் உரியவரின் சார்பில் உள்முகப் பணவனுப்பல்களைக் கொள்வனவு செய்யுமிடத்து இணையவழி வங்கித்தொழில் முறைமையினூடாக உள்ளகக் கணக்கு மாற்றல்களை மேற்கொள்ளும் போது விண்ணப்பம் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரினால் கையொப்பமிடப்படல் வேண்டும். | | | | |

**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 14ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

வெளிமுக முதலீட்டுக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கையில் வதியும் ஆளொருவரினால் இலங்கைக்கு வெளியே மேற்கொள்கின்ற மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகள் (ஒழுங்குவிதிகள்) மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 6 மற்றும் 7ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் நியதிகளில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவில் வெளிமுக முதலீட்டுக் கணக்குகளைத் திறந்து மற்றும் பேணி வருவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

1. **தகைமையுடைய ஆட்கள்**

(அ) உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்று தவிர, 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்;

(ஆ) 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் நியதிகளில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்று அல்லது உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்று;

(இ) மத்திய வங்கி, பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு என்பனவற்றின் கீழுள்ள (மேலே (அ) மற்றும் (ஆ)இன் கீழ்வரும் தகைமையுடைய முதலீட்டாளர்கள் தவிர) ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட/ உரிமம்பெற்ற நிறுவனங்கள்;

(ஈ) 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஊழியர் சேமலாப நிதியம் அல்லது தொழில் ஆணையாளர் நாயகத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட ஒப்புதலளிக்கப்பட்ட சேமலாப நிதியங்கள்.

(உ) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட பங்குடமையொன்று; அத்துடன்

(ஊ) இலங்கையில் வதியும் தனிப்பட்ட ஒருவர் அல்லது/ அத்தகைய தனிப்பட்டவரினால் (ஏற்புடைத்தானவாறு) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஏக தனியுரிமை நிறுவனம்.

2. **வெளிமுக முதலீட்டுக் கணக்குளைத் திறந்து மற்றும் பேணி வருதல்**

(அ) வெளிமுக முதலீட்டுக் கணக்குகளை, வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றாக ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் திறந்து மற்றும் சேமிப்பு அல்லது கால வைப்புக்கள் (வெளிமுக முதலீடுகளிலிருந்து பெற்ற வருமானத்திலிருந்து) அல்லது நடைமுறை (மேலதிகப் பற்று வசதிகளும் காசோலை மூலமான எடுப்பனவு வசதிகளும் இல்லாமல்) கணக்குகளாகப் பேண முடியும்.

(ஆ) வெளிமுக முதலீட்டுக் கணக்குகளைத் தனியொரு கணக்குகளாகப் பேணிவருதல் வேண்டும். வெளிமுக முதலீட்டுக் கணக்குகளை இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஏக தனியுரிமையினைக் கொண்டிருக்கும் தனிப்பட்ட ஆட்களினால் கூட்டுக் கணக்குகளாகவும் வைத்திருக்க முடியும். அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் தனிப்பட்ட ஆட்களினால் திறக்கப்பட்ட வெளிமுக முதலீட்டுக் கணக்குகள் தொடர்பிலும் அத்தகைய ஆட்களின் ஏக தனியுரிமை தொடர்பிலும் கண்காணிப்புப் பதிவேடுகளை பேணும் விதத்திலும் உள்ளக நடவடிக்கை முறையொன்றினை நிறுவுதல் வேண்டும்.

(இ) இப்பணிப்புரைகளின் திகதிக்கு முன்னர் இலங்கை ரூபாவில் திறக்கப்பட்ட வெளிமுக முதலீட்டுக் கணக்குகளை இப்பணிப்புரைகளின் 8ஆவது பந்திக்குட்பட்டு வெளிமுக முதலீட்டு கணக்குகள் மூடப்படும் வரை தொடர்ந்தும் தொழிற்படுத்தலாம்.

4. **வெளிமுக முதலீட்டுக் கணக்குகளை வதிவற்றோர் ரூபாக் கணக்கிற்கு மாற்றுதல்**

(அ) அவர்/ அவள் மற்றொரு நாட்டில் நிரந்தர வதிவிடத்தினைப் பெற்றிருக்குமிடத்து அந்நாட்டில் நிரந்தர வதிவிடத்தினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காக இலங்கையை விட்டுப் புறப்பட எதிர்பார்க்கும் புலம்பெயர்பவரினால் பேணப்பட்ட வெளிமுக முதலீட்டுக் கணக்கினை மாற்றி, அத்தகைய புலம்பெயர்வு அறிவிக்கப்பட்டதும் அல்லது தெரியவந்ததும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் உடனடியாக நடைமுறைக்கு வரும் விதத்தில் அதனை வதிவற்றோர் ரூபாக் கணக்காக மாற்றித் தொடர்ந்தும் தொழிற்படுத்தி வரலாம்.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், வெளிமுக முதலீட்டுக் கணக்குகளை வதிவற்றோர் ரூபாக் கணக்குகளாக மாற்றுவது பற்றிய (வெளிமுகப் பணவனுப்பல் தொகை, அவர்/ அவள் நிரந்தர வதிவிட அந்தஸ்த்தினை அல்லது பிரசாவுரிமையினைப் பெற்றுள்ள நாட்டிற்குச் செய்யப்பட்ட அனைத்து முதலீடுகளின் பணவனுப்பல்களின் திகதி போன்ற விபரங்கள் உட்பட) தகவல்களை அத்தகைய மாற்றல் திகதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் னகநஅளூஉடிளட.டம ஊடாக வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

5. **அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) ஒழுங்குவிதிகளில் அல்லது இரத்துச் செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் அல்லது வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளில் வழங்கப்பட்ட சிறப்பு அனுமதிகளில் வெளிமுக முதலீடுகளுக்காக குறித்துரைக்கப்பட்ட அத்தகைய வரையறை அளவு வரை வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்றப்பட்ட இலங்கை ரூபா.

(ஆ) அதே வெளிமுக முதலீட்டுக் கணக்கினூடாகச் செய்யப்பட்ட வெளிமுக முதலீடொன்றின் விற்பனைப் பெறுகைகளாக மற்றொரு ஆளின் (அதாவது வாங்குநர்) வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது வெளிமுக முதலீட்டுக் கணக்கிலிருந்து செய்யப்பட்ட மாற்றல்கள்.

(இ) இரத்துச் செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் அல்லது வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளில் அனுமதிக்கப்பட்ட வெளிமுக முதலீடுகளுக்கு நிதியிடும் நோக்கத்திற்காக கணக்கு உடமையாளரின் வெளிநாட்டு வர்த்தக கடன்பாட்டுக் கணக்கினூடாக கணக்கு உடமையாளரினால் வெளிநாட்டு கடன் வழங்குநரிடமிருந்து பெறப்பட்ட கடன்களினது பெறுகைகளின் மாற்றல்கள்.

(ஈ) ஒழுங்குவிதிகளில் அல்லது இரத்துச் செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் அல்லது வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் என்பனவற்றின் ஏற்பாட்டு நியதிகளில் அனுமதிக்கப்பட்ட வெளிமுக முதலீடுகளுக்கான நிதியிடல் நோக்கத்திற்காக கடன் வழங்குநரின் இலங்கைக்கு வெளியேயுள்ள கணக்கு அல்லது உள்முக முதலீட்டு கணக்கு அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கிலிருந்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால்/ உரிமம்பெற்ற சிறப்பியல்பு

வாய்ந்த வங்கிகளினால்/ அரசுடமையாக்கப்பட்ட தொழில்முயற்சிகளினால் வெளிநாட்டு கடன்வழங்குநரிடமிருந்து பெற்ற கடன்பெறுகைகளின் மாற்றல்கள்.

(உ) ஒழுங்குவிதிகளில் அல்லது இரத்துச் செய்யப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் அல்லது வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் நியதிகளில் அனுமதிக்கப்பட்ட வெளிமுக முதலீடுகளில் நிதியிடும் நோக்கத்திற்காக கடன்பாட்டாளரின் நொஸ்ரோ கணக்கிலிருந்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்/ உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினால் வெளிநாட்டுக் கடன் வழங்குநரிடமிருந்து பெறப்பட்ட கடன்பெறுகைகளின் மாற்றல்கள்.

(ஊ) ஒழுங்குவிதிகளில் அல்லது இரத்துச் செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அல்லது வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளில் அனுமதிக்கப்பட்டவாறு அதே வெளிமுக முதலீட்டுக் கணக்கினூடாக செய்யப்பட்ட வெளிமுக முதலீடுகளின் ஏதேனும் வருமானமாக அல்லது ஏதேனும் மூலதனப் பெறுகைகளான பணவனுப்பல்கள்.

(எ) வெளிமுக முதலீட்டு கணக்கினூடாக செய்யப்பட்ட வெளிமுக முதலீடு தொடர்பான நீதிமன்றக் கட்டளையொன்றின் கீழான தீர்ப்பனவுக் கட்டணங்களாக பணவனுப்பல்கள்.

(ஏ) ஒழுங்குவிதிகள் அல்லது இரத்துச் செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டவாறு, கணக்கு உடமையாளரினால் கையேற்கப்பட்ட/ உடமையில் கொள்ளப்பட்ட வெளிநாடுகளிலுள்ள ஏதேனும் சொத்து/ முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் வருமானம் மற்றும் ஏதேனும் மூலதனப் பெறுகைகளாக பணவனுப்பல்கள்.

(ஐ) ஒழுங்குவிதிகள் அல்லது இரத்துச் செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டவாறு கணக்கு உடமையாளரின் சார்பில் (அதாவது ஊழியர்) இலங்கையில் நிறுவப்பட்டுள்ள கம்பனியொன்றினால் அல்லது கிளை அலுவலகத்தினால் (அதாவது தொழில்தருநர்) அத்தகைய முதலீடுகளுக்காக வெளிமுகப் பணவனுப்பல்கள் செய்யப்பட்டிருக்குமிடத்து ஊழியர் பங்குடமைத் திட்டம் அல்லது ஊழியர் பங்குடமை விருப்புத் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட பங்குகளின் ஏதேனும் வருமானம் அத்துடன் ஏதேனும் மூலதனப் பெறுகைகளாக பணவனுப்பல்கள்.

(ஒ) ஒழுங்குவிதிகளுக்குட்பட்டு, அத்தகைய ஆளிடமிருந்து கணக்கு உடமையாளருக்கு மரபுவழியாகக் கிடைத்த மற்றொரு ஆளின் வெளிமுக முதலீட்டுக் கணக்கொன்றினூடாகச் செய்யப்பட்ட ஏதேனும் முதலீட்டின் ஏதேனும் வருமானமாக மற்றும் ஏதேனும் மூலதனப் பெறுகைகளாக பணவனுப்பல்கள்.

(ஓ) ஒழுங்குவிதிகள் அல்லது இரத்துச் செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் அல்லது வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், அனுமதிக்கப்பட்ட வெளிமுக முதலீடொன்றிற்காக அத்தகைய நிதியத்தினைப் பயன்படுத்துவதற்கு கணக்கு உடமையாளர் எண்ணுகின்றவிடத்து, இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட வங்கியொன்றினால் வழங்கப்பட்ட பங்குகள், படுகடன் பிணையங்களின் முதலீட்டுப் பெறுகைகளாக மற்றொரு ஆளின் (அதாவது முதலீட்டாளர்) உள்முக முதலீட்டுக் கணக்கொன்றிலிருந்தான மாற்றல்கள்.

(ஔ) இலங்கையிலுள்ள பரம்பரை மற்றும் பின்னுரிமைச் சட்டங்களுக்குட்பட்டு மரபுவழியாகப் பெறப்பட்ட வெளிமுக முதலீட்டுக் கணக்கின் வெளிநின்ற மீதி தொடர்பில் மற்றொரு ஆளின் வெளிமுக முதலீட்டுக் கணக்கொன்றிலிருந்தான மாற்றல்.

(க) முதலீடுகளுக்காகச் செய்யப்பட்ட கொடுப்பனவுத் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அதே வெளிமுக முதலீட்டுக் கணக்கினூடாக நிதிகள் ஒழுங்குவிதிகளின் கீழ் இதற்காக அனுப்பப்பட்ட தேறல் செய்யப்படாத வெளிமுக முதலீடுகளின் பெறுகைகள்;

(ங) வெளிநின்ற முதலீடுகள் தொடர்பாக முகாமைத்துவக் கட்டணங்கள், ஆலோசனைக் கட்டணங்கள் மற்றும் தரகு;

(ச) கணக்கிலுள்ள நிதியின் மீது உழைக்கப்பட்ட வட்டி.

**6. அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) ஒழுங்குவிதிகள் அல்லது இரத்துச் செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் அல்லது வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளில் கணக்கு உடமையாளரினால் பொறுப்பேற்கப்பட்ட வெளிமுக முதலீடொன்று தொடர்பிலான பணவனுப்பல்கள்.

(ஆ) ஒழுங்குவிதிகள் அல்லது இரத்துச் செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் அல்லது வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் நியதிகளில் அதே வெளிமுக முதலீட்டுக் கணக்கு அல்லது தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளூடாகச் செய்யப்பட்ட விற்பனையாளரிடமிருந்தான வெளிநாடுகளின் அனுமதிக்கப்பட்ட முதலீட்டினைக் கொள்வனவு செய்வதற்காக மற்றொரு ஆளின் வெளிமுக முதலீட்டுக் கணக்கு அல்லது தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கான மாற்றல்கள்.

(இ) கணக்கு உடமையாளரின் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களுக்கான கொடுப்பனவுகள்.

(ஈ) வெளிமுக முதலீடுகள் அத்தகைய தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவிலுள்ள கணக்குகளில் பற்று வைத்தமையின் மூலம் அல்லது அத்தகைய கணக்குகளிலிருந்து வெளிமுக முதலீட்டுக் கணக்கிற்கு மாற்றல் செய்யப்பட்ட நிதியினைப் பயன்படுத்தி

மேற்கொள்ளப்பட்டதாக இருக்குமிடத்து, அத்தகைய வெளிமுக முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் வருமானம் மற்றும் ஏதேனும் மூலதனப் பெறுகைகளின் பொருட்டு கணக்கு உடமையாளரின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கிற்குப் பங்களிப்புக்களின் விகிதாசாரமாகச் செய்யப்பட்ட மாற்றல்கள்.

(உ) அதே கணக்கு உடமையாளரின் வெளிமுக முதலீட்டுக் கணக்கிற்கான மாற்றல்கள்.

(ஊ) வெளிநாட்டுக் கடன் வழங்குநர்களிடமிருந்து பெறப்பட்ட கடன்களின் மீள்கொடுப்பனவு நோக்கத்திற்காக கணக்கு உடமையாளரின் வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுக் கணக்கிற்கான மாற்றல்கள்.

(எ) இலங்கையிலுள்ள மரபுவழி மற்றும் பின்னுரிமைச் சட்டங்களுக்குட்பட்டு நன்மைபெறுநர்/ வாரிசுகளின் வெளிமுக முதலீட்டுக் கணக்கிற்கான வெளிநின்ற நிலுவையின் மாற்றல்கள்.

(ஏ) கணக்கு உடமையாளரின் அத்துடன்/ அல்லது உடனடிக் குடும்ப உறுப்பினர்களின் பயண நோக்கத்திற்காக நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் (அல்லது வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்திற்குச் சமமான) 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்ட எல்லை வரி) வெளிநாட்டுப் பயண அட்டைகளை நிரப்புவதற்காக வெளிநாட்டு நாணயத் தாள்களின் எடுப்பனவு அல்லது நிதிகளின் மாற்றல்.

(ஐ) இலங்கையில் இலங்கை ரூபாய்களில் பகிர்ந்தளிப்பு.

7. ஏனைய நிபந்தனைகள்

(அ) ஒழுங்குவிதிகள் மற்றும் இப்பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்ட அனைத்துத் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்த பின்னர் மாத்திரம், வெளிமுக முதலீட்டு நோக்கங்களுக்காக மாத்திரம் ரூபாப் பெறுகைகளை வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்றல் செய்யப்பட்டு வெளிமுக முதலீட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முதலீடுகளை மேற்கொள்ளாமல் வெளிமுக முதலீட்டுக் கணக்கில் அத்தகைய நிதிகளை வைத்திருக்கக்கூடாது.

(ஆ) இப்பணிப்புரைகளின் 6(அ)ஆம் துணைப்பந்தியில் குறித்துரைக்கப்பட்ட கொடுப்பனவுகளை வெளிநாட்டுக் கம்பனியின் கணக்கிற்கு (அதாவது முதலீட்டினைப் பெறுபவர்) அல்லது அனுமதிக்கப்பட்ட பிணையத்தின் விற்பனையாளரது கணக்கிற்கு (பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ள சாதனங்களில் முதலீடு செய்வதனைப் பொறுத்தவரை பங்குத்தரகர் ஊடாக) அல்லது நாட்டிலுள்ள வதியும் முதலீட்டாளர்களினால் வைத்திருக்கப்படும் கணக்கொன்றிற்கு (வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பில் அந்நாட்டிலுள்ள சட்டத் தேவைப்பாடுகளுக்குட்பட்டு) அல்லது முதலீட்டினைப் பெறுபவர் கூட்டிணைப்பினை மேற்கொள்வதற்கான செய்முறையில் ஈடுபட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் முதலீட்டாளரின் நியமிக்கப்பட்ட செயலாளர் அல்லது பதிவாளரின் கணக்கிற்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(இ) 5(இ), 5(ஈ) மற்றும் 5(ஒ)ஆம் பந்திகளின் கீழான வரவுகள் வெளிமுக முதலீடுகளுக்குத் தேவையான அனைத்து ஒப்புதல்கள் பெறப்பட்டமையினைத் தொடர்ந்து அத்தகைய வெளிமுக முதலீடுகளை மேற்கொள்ளும் நேரத்தில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஈ) வதியும் முதலீட்டாளரொருவர், வெளிமுக முதலீட்டுக் கணக்கொன்றினூடாக முதலீட்டினைப் பெறுபவருக்கு மேலதிக முதலீட்டிற்கான நிதியினை அனுப்பும் சந்தர்ப்பத்தில், முதலீட்டின் ஒரு பகுதி வெளிமுக முதலீட்டுக் கணக்கினூடாக ஏற்கனவே செய்யப்பட்டிருக்குமிடத்து, முன்மொழியப்பட்ட மேலதிக முதலீடு ஆரம்ப முதலீடு மேற்கொள்ளப்பட்ட அதே வெளிமுக முதலீட்டுக் கணக்கினூடாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(உ) இப்பணிப்புரைகளின் 5(க)ஆம் பந்தியின் கீழ் வரவு வைக்கப்பட்ட நிதியங்கள், அத்தகைய நிதியங்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட அதே நாளுக்குள் அதே கணக்கு உடமையாளரின் ரூபாக் கணக்கிற்கு மாற்றல் செய்யப்படுதல் வேண்டும். அதையொத்த கொடுப்பனவுகள் மூன்று மாதத்திற்குப் பின்னர் பெறப்படும் சந்தர்ப்பத்தில், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கொடுக்கல்வாங்கலின் நம்பகத்தன்மையினையிட்டு திருப்தியடைந்ததன் பின்னர் கணக்குடமையாளரின் ரூபாக் கணக்கிற்கு வரவு வைக்க முடியும். எது எவ்வாறெனினும், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்களின் விபரங்களை (வெளிமுகப் பணவனுப்பல்களின் திகதி மற்றும் தொகை, திகதி மற்றும் திரும்பிய தொகை, முதலீடு தவறாகிப் போனமைக்கான காரணம் போன்றவை) ஆவணச்சான்றுகளுடன் வெளிமுக முதலீட்டுக் கணக்கு அல்லது ரூபாக் கணக்கிற்கு (பொருத்தமான விதத்தில்) வரவு வைக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று வேலை நாட்களுக்குள் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு னகநஅளூஉடிளட.டம ஊடாக அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(ஊ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துவதற்காக சத்தியக் கடதாசியொன்றினை (இந்நோக்கத்திற்காக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் குறிப்பிட்டதொரு படிவத்தினைப் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்) பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(i) தனிப்பட்ட ஆளொருவரினால் அல்லது ஏக தனியுரிமையாளரினால் அல்லது பங்குடமையாளரினால் மேற்கொள்ளப்படவுள்ள முதலீடுகளைப் பொறுத்தவரை, ஏக தனியுரிமையாளருடன் அல்லது பங்குடமையாளருடன் தொடர்புபட்ட தனிப்பட்ட ஆள் அல்லது ஆட்கள் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 31ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்ட கட்டளையின் நியதிகளில்

இலங்கையில் வதிபவர்களாக இருக்கின்றமை.

(ii) முதலீட்டாளர் ஏற்புடைத்தான காலப்பகுதியில் ஒழுங்குவிதிகளில் அனுமதிக்கப்பட்டவாறு வெளிமுக முதலீடுகளுக்காக முதலீட்டாளர் ஏதேனும் வெளிமுகப் பணவனுப்பல்களை செய்திருக்குமிடத்து அவ்வாறு செய்யப்பட்ட வெளிமுகப் பணவனுப்பல்களின் விபரங்கள்.

(iii) முதலீட்டாளர் தனிப்பட்ட ஒருவராக இருக்கும் சந்தர்ப்பத்தில், குறிப்பிட்ட ஆள் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட தனியுடமையொன்றினைச் சொந்தமாகக் கொண்டிருப்பதுடன் அத்தகைய தனியுடமை ஒழுங்குவிதிகளின் கீழ் அல்லது இரத்துச் செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அல்லது வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கைக்கு வெளியே முதலீட்டினைச் செய்திருக்கிறது. அவ்வாறாயின், அதன் விபரங்கள்.

(iv) முதலீட்டாளர் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஏக தனியுரிமையாளராக இருக்குமிடத்து, ஏக தனியுரிமைக்குச் சொந்தமான ஆள் ஒழுங்குவிதிகளின் கீழ் அல்லது இரத்துச் செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அல்லது வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கைக்கு வெளியே முதலீடு செய்திருக்குமிடத்து, அதன் விபரங்கள்.

(v) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் (வெளிமுக முதலீடுகளின் அவர்/ அவள் நிரந்தர வதிவிட அந்தஸ்தினை அல்லது பிரசாவுரிமையினை எந்நாட்டிற்குப் பெற்றார்களோ அந்நாட்டின் ஐ.அ.டொலரில் செய்யப்பட்ட வெளிமுகப் பணவனுப்பல்களின் விபரங்கள் அனைத்து முதலீடுகளும் அனுப்பப்பட்ட திகதி என்பனவற்றின் விபரங்கள் உட்பட) விபரங்களை புலம்பெயர்ந்தவர் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கினை எந்த அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் திறக்கவுள்ளாரோ அந்த அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் கோரிக்கையின் மீது அனுப்பி வைத்தல் வேண்டும்.

(ஏ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படைக் கொடுக்கல்வாங்கல்களின் சட்டபூர்வத்தன்மையினையும் நம்பகத்தன்மையினையும் நிறுவுவதற்காக இணைப்பு ஐஇல் உள்ள ஆவணங்கள் உட்பட சரியான சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணச்சான்றுகளை (தேவைப்பட்டவாறு) பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் ஒழுங்குவிதிகளுக்கும் இப்பணிப்புரைகளுக்கும் இணங்கியொழுகுவதனையும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(ஐ) இணைப்பு ஐஇன் 1ஆம் பந்தியின் (இ) துணைப்பந்தியில் குறிப்பிடப்பட்ட இசைவுக்கடிதத்தினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் ஏதேனும் காரணத்திற்காக உத்தேச முதலீடுகளுக்கான வெளிமுக பணவனுப்பல்களை மேற்கொள்ள முடியாமல் போகுமிடத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இசைவுக்கடிதம் காலாவதியாகிய திகதிகியலிருந்து ஒரு வாரத்திற்குள் இவ்விடத்தினை வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு னகநஅளூஉடிளட.டம ஊடாக அறிவித்தல் வேண்டும்.

(ஒ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வெளிமுக முதலீட்டுக் கணக்குகளூடாகச் செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் ஆவணச்சான்றுகளை (ஒன்றில் வன்பிரதியாக அல்லது இலத்திரனியல்/ டிஜிட்டல் வடிவில்) ஏதேனும் சட்ட ரீதியான பதிவேடுகளைப் பேண வேண்டிய காலப்பகுதிக்கு அப்பால் பேண வேண்டுமென்பதுடன் அத்தகைய கணக்குகள் மூடப்பட்ட பின்னர் குறைந்தபட்சம் ஆறு ஆண்டு காலப்பகுதிக்குப் பேணுதலும் வேண்டும்.

**8. வெளிமுக முதலீட்டுக் கணக்குகளை மூடிவிடுதல்**

(அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், சொல்லப்பட்ட வெளிமுக முதலீட்டுக் கணக்கினூடாக கணக்கு உடமையாளரால் கையேற்கப்பட்ட/ மேற்கொள்ளப்பட்ட அனைத்து முதலீடுகளையும் அகற்றியதன் பின்னர் மாத்திரமே வெளிமுக முதலீட்டுக் கணக்கினை மூடுதல் வேண்டும்.

(ஆ) எனினும், மற்றொரு அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் திறந்து பேணிவரும் வெளிமுக முதலீட்டுக் கணக்கிற்கு அத்தகைய முதலீடுகளிலிருந்து பெறப்படும் எதிர்கால வருமானங்களையும் ஏதேனும் மூலதனப் பெறுகைகளையும் கொண்டுவரும் நோக்கத்திற்காக வெளிமுக முதலீட்டுக் கணக்கின் உடமையாளர், அதே வெளிமுக முதலீட்டுக் கணக்கினூடாகச் செய்யப்பட்ட முதலீடுகளை அகற்றுவதற்கு முன்னதாக வெளிமுக முதலீட்டுக் கணக்கினை மூடிவிடுமாறு கோருகின்ற சந்தர்ப்பத்தில், ஆரம்ப வெளிமுக முதலீட்டுக் கணக்கு பேணப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட வணிகர், பெறுநரின் வெளிமுக முதலீட்டுக் கணக்கினைத் தொழிற்படுத்துகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் திருப்திக்காகப் பின்வரும் தகவல்களையும் ஆவணங்களையும் அனுப்பி வைத்ததன் பின்னர் மாத்திரம் வெளிமுக முதலீட்டுக் கணக்கினை மூடிவிடலாம்.

(i) மூடப்படவுள்ள வெளிமுக முதலீட்டுக் கணக்கிலுள்ள நிதியிலிருந்து செய்யப்பட்ட வெளிநின்ற முதலீடுகளின் உறுதிப்படுத்தல் (வெளிமுக பணவனுப்பல்களின் விபரங்கள், முதலீட்டினைப் பெறுபவரின் விபரங்கள், முதலீடுகளின் வகை போன்றவை)

(ii) வெளிமுக முதலீட்டுக் கணக்கினூடாகச் செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை நிரூபிக்கின்ற விதத்தில் வெளிமுக முதலீட்டுக் கணக்கு உடமையாளரிடமிருந்து சேகரிக்கப்பட்ட ஆவணச் சான்றுகள்.

(இ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இப்பணிப்புரைகளின் 8(அ) மற்றும் 8(ஆ)ஆம் துணைப்பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட

அத்தகைய மூடுதல் தொடர்பான தகவல்கள் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளருக்கு அதே வெளிமுக முதலீட்டுக் கணக்கினூடாகச் செய்யப்பட்ட அனைத்து முதலீடுகளின் விபரங்களையும் அத்தகைய முதலீடுகளின் அகற்றல் மற்றும் வெளிமுக முதலீட்டுக் கணக்கினை மூடிவிடுவதற்கான காரணங்கள் ஆகிய விபரங்களை னகநஅளூஉடிளட.டம ஊடாக அவ்வாறு மூடப்பட்ட திகதியிலிருந்து மூன்று வேலை நாட்களுக்குள் அறிவித்தல் வேண்டும்.

**9. அறிக்கையிடும் தேவைப்பாடுகள்**

(அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வெளிமுக முதலீட்டுக் கணக்கு தொடர்பான விபரங்களை நாளாந்த அடிப்படையில் இத்திணைக்களத்திற்கு https://www.cbsl.lk/forexnet ஊடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், மேலேயுள்ள அறிக்கையிடும் தேவைப்பாடுகளுக்கமைவாக அவர்கள் தொடர்பான வங்கிகளின் கணக்கேடுகளிலிருந்து தொடர்பான தகவல்களை உருவாக்கும் அல்லது பிரித்தெடுக்கும் விதத்தில் முறைமையொன்றினை நடைமுறைக்கிடுதல் வேண்டும்.

(இ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கு இலத்திரனியல் ரீதியாகச் சமர்ப்பித்த தகவல்களின் துல்லியமான மற்றும் பூரணமான தன்மையின் சரிபார்ப்புக்களை உள்ளடக்க வேண்டியதுடன் அதன் உள்ளகக் கணக்காய்வு காலாந்தர மீளாய்வு மற்றும் இணங்குவிப்பு நிகழ்ச்சித்திட்டத்தினையும் அவற்றை நிரூபிப்பதற்கான சான்றுகளையும் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் பரிசோதனையின் போது கிடைக்கத்தக்க விதத்தில் ஆயத்தநிலையில் வைத்திருத்தல் வேண்டும்.

(ஈ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இணைப்பு IIஇல் உள்ள ஆவணங்களை வதியும் முதலீட்டாளரிடமிருந்து பெற்று, அத்தகைய ஆவணங்களைக் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

10. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இப்பணிப்புரைகளின் அதிகாரவரம்பிற்குள் வராத ஏதேனும் நோக்கத்திற்காக வெளிமுக முதலீட்டுக் கணக்கிற்கு அல்லது அதிலிருந்து செய்யப்படக்கூடிய ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள்/ மாற்றல்களுக்கு வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளரின் முன்அனுமதியினைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**11. இப்பணிப்புரைகளின் நோக்கங்களுக்காக**

(அ) “வெளிமுக முதலீகள்” என்பது (திருத்தப்பட்டவாறான) 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கையில் வதியுமொரு ஆளினால் இலங்கைக்கு வெளியே மேற்கொள்ளப்படுகின்ற மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்பு) ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் எனப் பொருள்படும்.

(ஆ) “அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள்” என்பது (திருத்தப்பட்டவாறான) 2021ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கையில் வதியுமொரு ஆளினால் இலங்கைக்கு வெளியே மேற்கொள்ளப்படுகின்ற மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்பு) ஒழுங்குவிதிகளிலுள்ள அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) “பணவனுப்பல்கள்” என்பது தந்தி மாற்றல்கள், ஏனைய வங்கிகளிடையேயான மாற்றல்கள், வங்கி வரைவுகள், ஏனைய கொடுப்பனவுச் சாதனங்கள், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு கொடுப்பனவுப் பொறிமுறைகள் அல்லது தளங்களூடாகப் பெறப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் நாணயத் தாள்கள் தவிர, வெளிநாட்டிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் பரிவர்த்தனைக் கம்பனிகளிலிருந்து/ இல்லங்களிலிருந்து பெறப்பட்ட நிதிகள் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

12. வெளிமுக முதலீட்டுக் கணக்குகள் தொடர்பான தேவைப்பாடுகளைக் குறித்துரைக்கின்ற விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட 2017ஆம் ஆண்டு நவெம்பர் 20ஆம் திகதியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 14ஆம் இலக்கப் பணிப்புரைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

13. மேலேயுள்ள 10ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள குறித்துரைக்கப்பட்ட முன்னைய பணிப்புரைகளின் இரத்தானது, இரத்துச் செய்யப்படுவதற்கு முன்னர் அவற்றின் கீழ் உறப்பட்ட ஏதேனும் உரிமைகள் அல்லது தண்டங்கள் அல்லது பொறுப்புக்களைப் பாதிப்பதாக இருக்கக்கூடாது.

14. இப்பணிப்புரைகளினால் அனுமதிக்கப்பட்டதெதுவும், இப்பணிப்புரைகளின் கீழ், வெளிநாட்டுச் செலாவணி வணிகத்தில் ஈடுபடுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களை அல்லது வேறு எவரேனும் ஆளினை வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கான தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கின்றது, விடுவிக்கின்றது அல்லது தடுக்கின்றது எனப் பொருள்கோடலாகாது.

15. இப்பணிப்புரைகளின் அனைத்து வரவுகளும் பற்றுக்களும் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

16. இப்பணிப்புரைகள் 2021 மாச்சு 22ஆம் திகதியிலிருந்து தொழிற்பாட்டிற்கு வருதலாதல் வேண்டும்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**
**2021 மாச்சு 18**

இணைப்பு I

1. இப்பணிப்புரைகளின் கீழ் அனைத்து வெளிமுக முதலீடுகளுக்குமாகப் பின்வரும் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(அ) இணைப்பு IIIஇல் உள்ள தகவல்களை உள்ளடக்கிய கோரிக்கைக் கடிதம்.

(ஆ) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் சுங்கத்தவரினால் அல்லது சிஎவ்ர நிறுவகத்தின் பட்டயம்பெற்றவரினால் இணைப்பு IVஇல் உள்ள படிவத்தில் வழங்கப்பட்ட விதந்துரைப்பு (குறிப்பு: வெளிமுக முதலீடுகளுக்காக வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளில் வெளிமுக முதலீடுகளுக்கு சிறப்பு அனுமதி வழங்கப்பட்டிருக்குமிடத்து அல்லது ஊழியர் பங்கு விருப்புத் திட்டம்/ ஊழியர் பங்கு சொத்துடமைத் திட்டத்தின் கீழ் ஏதேனும் முதலீடுகளாக அல்லது ஒழுங்குவிதிகளின் கீழ் வெளிநாடுகளிலுள்ள பங்குப் பரிவர்த்தனையில் செய்யப்படவுள்ள முதலீடுகளாக இருக்குமிடத்து இது தேவையில்லை).

(இ) இரத்துச் செய்யப்பட்ட 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழக்குத் தொடுப்புக்கள், நடவடிக்கைகள், வழக்காடல்கள் எதுவுமில்லை என்பதனையும் அல்லது வெளிநாட்டில் முதலீடு செய்ய எண்ணியுள்ள அத்தகைய ஆளுக்கெதிராக சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளில் வழங்குத் தொடுப்புக்கள், விசாரணைகள் அல்லது ஏதேனும் அறவிடல் நடவடிக்கைகள் (இரத்துச் செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் அல்லது வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் அல்லது ஏற்பாடுகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட வெளிமுக முதலீடுகள் தொடர்பான வெளிமுக முதலீடுகளுக்கான ஒவ்வொரு பணவனுப்பல்கள் அல்லது மாற்றல்கள்) இல்லை என்பதனையும் உறுதிப்படுத்துவதற்காக வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திலிருந்து இசைவுச் சான்றிதழ். இசைவுச் சான்றிதழ் கடிதத்திற்கான கோரிக்கைப் படிவத்தினை றறற.னகந.டம வெப்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

(ஈ) முதலீட்டுத் தொகையினை உள்ளடக்குகின்ற விதத்தில் வரி இசைவுச் சான்றிதழ் (உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தினால் கேட்டுக் கொள்ளப்பட்டவாறு).

(உ) சத்தியக் கடதாசி/ கடதாசிகள் (தனிப்பட்டவர்கள் அல்லது ஏக தனியுரிமை அல்லது பங்குடமைகளுக்கு மாத்திரம் ஏற்புடைத்தானது)/ தகைமையுடைய கம்பனிகள்/ சட்ட ரீதியான நிறுவனங்களைப் பொறுத்தவரை பின்வருவனவற்றை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்று:

(i) உத்தேச வெளிமுக முதலீடு முதலீட்டினைப் பெறுபவரின் நாட்டில் நிலவுகின்ற சட்டங்கள்/ ஒழுங்குவிதிகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படும்.

(ii) முதலீட்டினைப் பெறுகின்றவரின் நாட்டில் இயற்றப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள்/ சட்டங்களுக்கிணங்க உத்தேச வெளிமுக முதலீட்டின் ஏதேனும் வருமானம் ஏதேனும் மூலதனப் பெறுகைகள் மற்றும் முதலீட்டினைப் பெறுபவரின் கம்பனி மூடப்படும் அல்லது ஒடுக்கிவிடும் சந்தர்ப்பத்தில் ஒடுக்கிவிடுதல் தொடர்பான பெறுகைகள்/ மிகை நிதி என்பன இலங்கைக்கு எவ்வித கட்டுப்பாடுமின்றி அனுப்பப்படும். குறிப்பு: அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் திருப்திக்காக முதலீட்டினைப் பெறும் முதலீட்டாளரின் நாட்டின் தொடர்பான அதிகாரசபைகளினால் விடுக்கப்பட்ட குறிப்பிட்ட ஒழுங்குவிதிகள்/ சட்டங்கள் தொடர்பான ஆவணச்சான்றுகளை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

2. மேற்குறிப்பிட்டவற்றிற்குப் புறம்பாக பின்வரும் வகை - குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களும் பெறப்படல் வேண்டும்:

(அ) 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகள்

(i) கூட்டிணைப்புச் சான்றிதழ், அமைப்பு புறவிதிகள் மற்றும் அமைப்பு அகவிதிகளின் பிரதி (கம்பனிச் செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்டது).

(ii) பணிப்பாளர் விபரங்களது பிரதி (கம்பனிச் செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்டது).

(iii) உத்தேச முதலீட்டின் ஒப்புதலுக்காக, கம்பனியின் அகவிதிகளுக்கிணங்க கம்பனியின் பணிப்பாளர் சபையினால் அல்லது கம்பனியின் பங்குடமையாளர்களினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் (கம்பனிச் செயலாளர்களினால் உறுதிப்படுத்தப்பட்டது).

(ஆ) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட பங்குடமை

(i) பங்குடமை உடன்படிக்கை மற்றும் பதிவின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி.

(ii) பங்காளர்களின் வதிவிட அந்தஸ்தினை நிரூபிப்பதற்கான ஆவணச்சான்றுகள்.

(இ) இலங்கையில் வதியும் தனிப்பட்டவர்கள்

(i) வதிவிட அந்தஸ்தினை நிரூபிப்பதற்கான ஆவணச்சான்றுகள்.

(ii) முதலீடுகள், ஊழியர் பங்கு விருப்புத் திட்டத்தில் அல்லது ஊழியர் பங்கு சொத்துடமைத் திட்டத்திற்கு செய்யப்பட்டிருக்குமாயின் ஊழியர் பங்கு விருப்புத் திட்டம் அல்லது ஊழியர் பங்கு சொத்துடமைகளின் முன்விபரணம்.

(ஈ) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஏக தனியுடமை

(i) ஏகதனியுடைப் பதிவின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி.

(ii) உடமையாளரின் வதிவிட அந்தஸ்தினை நிரூபிப்பதற்கான ஆவணச்சான்றுகள்.

(உ) இலங்கை மத்திய வங்கியின் கீழ் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட/ உரிமம் வழங்கப்பட்ட நிறுவனங்கள், பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு, இலங்கை காப்புறுதிச் சபை அல்லது தொழில் திணைக்களத்தின் தொழில் ஆணையாளர் நாயகத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட ஒப்புதலளிக்கப்பட்ட சேமலாப நிதியங்கள் அல்லது 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க (திருத்தப்பட்டவாறான) வங்கித்தொழில் சட்டத்தின் நியதிகளில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் சிறப்பியில்பு வாய்ந்த வங்கிகள்.

(i) நிறுவனம் நிறுவப்பட்டமைக்கான ஆவணச்சான்றுகள்.

(ii) உத்தேச முதலீடுகள் மீதான ஒப்புதல்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைகளிலிருந்து பெறப்பட்ட வேறு ஏதேனும் ஒப்புதல்களுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால்/ முகாமைத்துவத்தினால்/ ஆளுகை சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

**இணைப்பு** II

1. **வெளிநாட்டுச் செலாவணியின் வெளிமுக பணவனுப்பல் மேற்கொள்ளப்பட்டதிலிருந்து மூன்று மாதங்களுக்குள்;**

(அ) பட்டியலிடப்படாத கம்பனியொன்றின் பங்குகளில் முதலீடொன்று செய்யப்படுமிடத்து நாட்டிற்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட புதிய கம்பனியின் கூட்டிணைப்புச் சான்றிதழ், புற மற்றும் அகவிதிகளின் பிரதிகள்.

(ஆ) வெளிநாட்டு அலுவலகங்களின் பதிவுச் சான்றிதழின் பிரதி.

(இ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட பட்டியலிடப்படாத முதலீடுகளைப் பெறும் கம்பனியிலுள்ள பங்கு முதலீடுகளைப் பொறுத்தவரை (சாதாரண அல்லது முன்னுரிமை) வழங்கப்பட்ட பங்குச் சான்றிதழ்களின் அல்லது வேறு ஏதேனும் சான்றுகளின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள்.

(ஈ) ஊழியர் பங்கு விருப்புத் திட்டம் அல்லது ஊழியர் பங்குச் சொத்துடமைத் திட்டத்திற்கு சந்தாக்களைச் செலுத்துகின்ற வதியும் அனைத்து ஊழியர்களுக்கும் வழங்கப்பட்ட பங்கு மூலதனம்/ சேர்ப்பனவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள்.

(உ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றினால் வழங்கப்பட்ட பட்டியலிடப்பட்ட சாதாரண பங்குகள், முன்னுரிமைப் பங்குகள், கம்பனி முறிகள் மற்றும் தொகுதிக் கடன்களில் செய்யப்பட்ட முதலீடுகள் தொடர்பில் வெளிநாட்டுப் பங்கு/ முறி பரிவர்த்தனைகள் மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்களினால் வழங்கப்பட்ட நாட்டிற்கான முறிகளினதும் தொடர்பான மத்திய வைப்பக முறைமைகளிலிருந்தான கூற்றுக்கள்.

(ஊ) இலங்கைக்கு வெளியே முதலீட்டினைப் பெறுகின்றவர்களினால் வழங்கப்பட்ட கூறுகள்/ தொகுதிக் கடன்கள்/ கம்பனி முறிகள் சேர்ப்பனவு செய்யப்பட்டமைக்கான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள்.

என்பனவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

2. **வருடாந்த அடிப்படையில்;**

(அ) பட்டியலிடப்படாத வெளிநாட்டுக் கம்பனிகள் மற்றும் வெளிநாட்டு அலுவலகங்களின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள்.

(ஆ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றினால் வழங்கப்பட்ட பட்டியலிடப்பட்ட சாதாரண பங்குகள், முன்னுரிமைப் பங்குகள், கம்பனி முறிகள் மற்றும் தொகுதிக் கடன்களில் செய்யப்பட்ட முதலீடுகள் மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்களினால் வழங்கப்பட்ட நாட்டிற்கான முறிகள் தொடர்பில் வெளிநாட்டு பங்கு/ முறி பரிவர்த்தனையின் தொடர்பான மத்திய வைப்பக முறைமைகளிலிருந்தான கூற்றுக்கள்.

என்பனவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**இணைப்பு** III

**வெளிநாட்டு முதலீடுகள் மீதான தகவல்கள்**

1. **பொதுவான தகவல்கள்**

(அ) கம்பனிகள்/ பங்குடமை/ தனிப்பட்டவர்கள் மற்றும் ஏக தனியுடமை (ஏதுமிருப்பின்)/ நிறுவனம்:

(ஆ) வியாபாரப் பதிவு இலக்கம்/ தேசிய அடையாள அட்டை இலக்கம்/ கடவுச்சீட்டு இலக்கம் (வதியும் முதலீட்டாளர் இலங்கையில் வதியும் வெளிநாட்டுப் பிரசையாகவும் செல்லுபடியாகக்கூடிய தேசிய அடையாள அட்டையினையும் கொண்டிராதவிடத்து மாத்திரம் கடவுச்சீட்டு இலக்கத்தினைப் பெறல் வேண்டும்):

**2. வெளிநாட்டு முதலீடு மீதான விபரங்கள் (பொருத்தமானவிடத்து)**

(அ) சாதாரண பங்குகள்/ முன்னுரிமைப் பங்குகள்/ கூறுகள்/ தொகுதிக் கடன்கள்/ நாட்டிற்கான முறிகளில் முதலீடு

(i) முதலீடு செய்யப்படவுள்ள மொத்தத் தொகை (ஐ.அ.டொலரில்):

(ii) முதலீட்டுக் கம்பனியின்/ வழங்குநரின் பெயர் மற்றும் நாடு:

(iii) முதலீட்டின் தன்மை (சாதாரண பங்குகள்/ முன்னுரிமைப் பங்குகள்/ கூறுகள்/ தொகுதிகள் கடன்கள்/ நாட்டிற்கான முறிகள்:

(iv) சாதனம் பட்டியலிடப்பட்டதா அல்லது பட்டியிடப்படாதா:

(v) கொள்வனவு செய்யப்படவுள்ள சாதாரண பங்குகள்/ முன்னுரிமைப் பங்குகள்/ அலகுகள்/ தொகுதிக் கடன்கள்/ நாட்டிற்கான முறிகளின் எண்ணிக்கை:

(vi) சாதாரண பங்குகள்/ முன்னுரிமைப் பங்குகள்/ அலகுகள்/ தொகுதிக் கடன்கள்/ நாட்டிற்கான முறிகளின் விலைகள்:

(vii) முதிர்ச்சித் திகதி:

(viii) வட்டி வீதம்

(ix) வழங்கும் நிறுவனத்தின் நாட்டிற்கான கொடுகடன் தரமிடல்

(ஆ) வெளிநாட்டு அலுவலகங்களை நிறுவி பேணுவதற்கான முதலீடு

(i) ஐ.அ.டொலரில் முதலீடு செய்யப்படவுள்ள மொத்தத் தொகை

(ii) வெளிநாட்டு அலுவலகம்/ நாட்டின் வகை/ நோக்கம்:

மேற்குறிப்பிட்ட தகவல்கள் உண்மையானவையெனவும் துல்லியமானவையெனவும் நான் இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

| | |
|---|---|
| அதிகாரமளிக்கப்பட்டவரின் கையொப்பம் | அதிகாரமளிக்கப்பட்டவரின் கையொப்பம் |
| பதவி | பதவி |
| இறப்பர் முத்திரை | இறப்பர் முத்திரை |
| திகதி | திகதி |

**இணைப்பு** IV

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் நியதிகளில் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் இலங்கைக்கு வெளியே முதலீடு செய்கின்ற நோக்கங்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியினை விடுப்பதற்காக இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அங்கத்தவராக அல்லது சிஎவ்ஏ நிறுவகத்தின் பட்டயம்பெற்ற உறுப்பினராகவுள்ள ............................ (பெயர்) இன் விதந்துரைப்பு.

சேரல்: முகாமையாளர்

கிளை:

அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் பெயர்:

கூற்று 1: கடந்த மூன்று நிதியியல் ஆண்டுகளாக ..................................... (தகைமையுடைய முதலீட்டாளரின் பெயர்) ஆற்றல்வாய்ந்த நிதியியல் நிலைமையினையும் செயலாற்றத்தினையும் பேணி வருகின்றார் என்பதனையும் நான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

கூற்று 2: கீழே காட்டப்பட்டுள்ள உத்தேச முதலீட்டு விபரங்களை ................................... என்ற (பயன்படுத்தப்பட்ட முறை/ முறைகளின் பெயர்களைத் தயவுசெய்து குறிப்பிடவும்) முதலீட்டு மதிப்பீட்டு முறை/ முறைகளின் அடிப்படையில் என்னால் பகுப்பாய்வு செய்யப்பட்டன என்பதனை உறுதிப்படுத்துவதுடன் குறிப்பிட்ட முதலீட்டினையும் விதந்துரைக்கின்றேன்.

குறிப்பு:

i. உத்தேச முதலீடு தொடர்பான மதிப்பீட்டினையும் விதந்துரைப்புக்களையும் மேற்கொள்ளும் போது முதலீட்டின் நேரப் பெறுமதியினையும் அதன் வருவாய்களையும் பரிசீலனையில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ii. முதலீட்டாளரின் நிதியியல் நிலைமை மற்றும் செயலாற்றம் தொடர்பான அறிக்கையும் விதந்துரைப்புக்களுக்கான காரணங்கள் உட்பட உத்தேச முதலீட்டிற்கான பகுப்பாய்வும் இத்தால் வழங்கப்படல் வேண்டும்.

**1. பொதுவான தகவல்கள்**

(அ) முதலீட்டாளரின் பெயர்:

(ஆ) ஐ.அ.டொலரில் தொகை (அல்லது ஏனைய குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் சமமான தொகையில்):

**2. முதலீட்டின் விபரங்கள் (ஏற்புடைத்தான விதத்தில்)**

(அ) முதலீட்டைப் பெறுபவரின் பெயர் மற்றும் நாடு:

(ஆ) முதலீட்டின் வகை (சாதாரண பங்குகள்/ முன்னுரிமைப் பங்குகள்/ அலகுகள்/ தொகுதிக் கடன்கள்/ கூட்டாண்மை முறிகள்/ நாட்டிற்கான முறிகள்/ வெளிநாட்டு அலுவலகம்:

(இ) சாதனங்கள் ஒன்றில் பட்டியலிடப்பட்டவை அல்லது பட்டியலிடப்படாதவை:

(ஈ) இது வெளிநாட்டு அலுவலகமாக இருப்பின்:

(i) அலுவலகத்தின் வகை (கிளை, செயற்றிட்டம், தொடர்பு, பிரதிநிதித்துவம் போன்றவை):

(ii) நோக்கம்:

(உ) பங்குகள்/ நாட்டிற்கான முறிகள்/ அலகுகள்/ தொகுதிக் கடன்கள் போன்றவற்றின் எண்ணிக்கை:

(ஊ) பங்குகள்/ நாட்டிற்கான முறிகள்/ அலகுகள்/ தொகுதிக் கடன்கள் போன்றவற்றின் விலை:

(எ) முதிர்ச்சித் திகதி:

(ஏ) வட்டி வீதம்:

(ஐ) சிறப்புக் குறிப்புக்கள் (ஏதுமிருப்பின்):

அதிகாரமளிக்கப்பட்டவரின் கையொப்பம்

பதவி

இறப்பர் முத்திரை

திகதி

**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

உள்முக முதலீட்டுக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவரினால் இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்ற மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகள் (ஒழுங்குவிதிகள்) மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 6 மற்றும் 7ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் நியதிகளில், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு, உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவில் உள்முக முதலீட்டுக் கணக்குகளைத் திறந்து மற்றும் பேணி வருவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

**2. தகைமையுடைய ஆட்கள்**

(அ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கையரல்லாதவரொருவர்.

(ஆ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கை இரட்டைப் பிரசாவுரிமை பெற்றவொருவர்.

(இ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற, மற்றொரு நாட்டில் நிரந்தர வதிவிட அந்தஸ்தினை அல்லது இரட்டைப் பிரசாவுரிமையினைப் பெற்றுள்ள இலங்கை நாட்டவர்.

(ஈ) இலங்கைக்கு வெளியே வதிகின்ற, வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கைப் பிரசையொருவர் (புலம்பெயர்ந்தவர் நீங்கலாக).

(உ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்று.

(ஊ) இலங்கைக்கு வெளியே பதிவுசெய்யப்பட்ட பங்குடமையொன்று.

(எ) நாடுகளுக்கான நிதியம், பிராந்திய நிதியம், சமவாய நிதியம், கூறுநம்பிக்கைகள் மற்றும் இலங்கைக்கு வெளியே நிறுவப்பட்ட வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள்.

(ஏ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் உள்முக முதலீட்டு கணக்கினைப் பேணிய மரணித்தவரின் சொத்துக்களை நிருவகிப்பவர் அல்லது நிறைவேற்றுநர் ஒருவர்.

(ஐ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் உள்முக முதலீட்டுக் கணக்கினைப் பேணிய கம்பனியின் பெறுநர் அல்லது ஒடுக்கிவிடுபவர் ஒருவர்.

**3. உள்முக முதலீட்டுக் கணக்குளைத் திறந்து மற்றும் பேணிவருதல்**

(அ) உள்முக முதலீட்டுக் கணக்கினை ஒன்றில் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அல்லது இலங்கை ரூபாவில் சேமிப்பு அல்லது கால வைப்புக்களாக அல்லது நடைமுறை (மேலதிகப் பற்று வசதிகளும் காசோலை மூலமான எடுப்பனவு வசதிகளும் இல்லாமல்) கணக்குகளாகத் திறந்து மற்றும் பேணி வரலாம்.

(ஆ) உள்முக முதலீட்டுக் கணக்கினைத் தனியானதொரு கணக்காக வைத்திருத்தல் வேண்டும். உள்முக முதலீட்டுக் கணக்கினை 2ஆம் பந்தியின் துணைப் பந்திகள் (அ), (ஆ) மற்றும் (இ)இன் கீழ் தகைமையுடைய உடனடிக் குடும்ப உறுப்பினர்களுடன் சேர்ந்து தனிப்பட்ட தகைமையுடையவர்களினால் கூட்டுக் கணக்காகவும் பேணலாம்.

(இ) இப்பணிப்புரைகளின் திகதிக்கு முன்னர் உடனடி குடும்ப உறுப்பினர்களாயிராத ஆளொருவருடன் கூட்டாக ஏற்கனவே திறந்த கணக்குகளைத் தொடர்ந்தும் பேணலாம் என்பதுடன், இப்பணிப்புரையின் 7(அ)ஆம் பந்திக்கு உட்பட்டு உள்முக முதலீட்டுக் கணக்கு மூடப்படும் வரை தொழிற்படுத்தப்படலாம்.

**4. அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) வங்கித்தொழில் முறைமையூடாக, கணக்கு உடமையாளரின் பெயரில் இலங்கைக்கு வெளியிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியில் பெறப்பட்ட பணவனுப்பல்கள்.

(ஆ) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்ட கட்டளைக்குட்பட்டு, சுங்கத் திணைக்களத்திற்குப் பிரகடனம் செய்ததன் மேல் கணக்கு உடமையாளரினால் இலங்கைக்குள் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி.

(இ) கணக்கு உடமையாளரின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது உள்முக முதலீட்டுக் கணக்குகள் அல்லது புலம்பெயர்ந்தவரின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கு அல்லது இராஜதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது இராசதந்திர ரூபாக் கணக்கு அல்லது கணக்கு உடமையாளரின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்குகளிலிருந்து மாற்றல்கள்.

(ஈ) இரத்துச்செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் அல்லது வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் என்பனவற்றின் ஒழுங்குவிதிகள் அல்லது ஏற்பாடுகளின் கீழ் அனுமதிக்கப்பட்டவாறு இலங்கை ரூபாக் கணக்கொன்றில், அல்லது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு, அல்லது மற்றொரு ஆளின் (அதாவது இலங்கையில் வதியும் முதலீட்டினைப் பெறுகின்றவர், வாடகை குடியிருப்பாளர், குத்தகைதாரர் அல்லது வாங்குநர்) கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிலிருந்து கணக்கு உடமையாளரின் இலங்கையிலுள்ள மூலதனக் கொடுக்கல்வங்கல்களிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் வருமானம் மற்றும் ஏதேனும் மூலதனப் பெறுகைகளின் மாற்றல்கள்.

(உ) இரத்துச் செய்யப்பட்ட வெளிநாட்டு செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் அல்லது வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் அதே உள்முக முதலீட்டுக் கணக்கினூடாகச் செய்யப்பட்ட முதலீடுகளின் மற்றொரு ஆளுக்கு (அதாவது வாங்குநர்) விற்பனை செய்வதனைப் பொறுத்தவரை அத்தகைய வாங்குநரின் உள்முக முதலீட்டுக் கணக்கிலிருந்தான விற்பனைப் பெறுகைகளாக மாற்றல்கள்.

(ஊ) உள்முக முதலீட்டுக் கணக்கினூடாக செய்யப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்பான நீதிமன்றல் கட்டளையின் கீழ் தீர்ப்பனவு விதிப்புக்கள்.

(எ) மத்திய வைப்பக முறைமைகள் (தனியார்) லிமிடெட் மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையினால் தீர்மானிக்கப்பட்டவாறு கணக்கு உடமையாளரினால் பெறப்பட்ட கோரல்கள்.

(ஏ) இரத்துச் செய்யப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் அல்லது வெளிநாட்டுச் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் அல்லது ஏற்பாட்டு நியதிகளில் அனுமதிக்கப்பட்டவாறு கடன்பாட்டாளருக்கு கணக்கு உடமையாளரினால் வழங்கப்பட்ட அறவிடல்களாக இலங்கையிலுள்ள வதியும் ஆளின் (அதாவது கடன்பாட்டாளர்) வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுக் கணக்கிலிருந்தான மாற்றல்கள்.

(ஐ) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் மீள்கொடுப்பனவாக,

கடன்பாட்டாளரின் ரூபாக் கணக்கிலிருந்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் அல்லது உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், அல்லது இலங்கை அரசாங்கம் அல்லது இலங்கை அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான (அதாவது கடன்பாட்டாளர்) மாற்றல்கள்.

(ஒ) 2017 நவெம்பர் 20ஆம் திகதியிலிருந்து இப்பணிப்புரைகளின் திகதி வரையான காலப்பகுதியில் கடன்பாட்டாளரின் இலங்கை ரூபாக் கணக்கு அல்லது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிற்கு அதே உள்முக முதலீட்டுக் கணக்கினூடாக கணக்கு உடமையாளரினால் இலங்கையில் வதியும் ஆளொருவருக்கு வழங்கப்பட்ட கடன்களின் மீள்கொடுப்பனவுகள்.

(ஓ) இப்பணிப்புரைகளின் துணைப்பந்தி 6(உ)இன் நிபந்தனைகளுக்குட்பட்டு 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கப் பணிப்புரைகளின் கீழ் பெறப்பட்ட கடனைப் பயன்படுத்தி கணக்கு உடமையாளரினால் கையேற்கப்பட்ட வதிவிட சொத்திலிருந்து பெறப்பட்ட ஏதேனும் வருமானம் அல்லது மூலதனப் பெறுகைகள்.

(ஔ) ஒழுங்குவிதிகளின் கீழ், இலங்கையிலுள்ள கடன்கள் நீங்கலாக (ஆரம்ப பொது வழங்கல் உட்பட) நிறைவேற்ற முடியாமல் போன மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் பெறுகைகளுக்காக, முதலீடுகளுக்காகச் செய்யப்பட்ட கொடுப்பனவுத் திகதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் அதே உள்முக முதலீட்டுக் கணக்கினூடாக அனுப்பப்பட்ட நிதியம். கூட்டுறுதித் தொடர்மாடிச் சொத்தொன்றின் முதலீட்டினைப் பொறுத்தவரை, இரண்டு தரப்பினர்களுக்குமிடையிலான ஒப்பந்தத்தின் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்யத் தவறியமை அல்லது ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டமையின் காரணமாக அத்தகைய சொத்து நிறைவடைவதற்கு முன்னதாக சொத்து அபிவிருத்தியாளரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து சொத்து அபிவிருத்தியாளரால் திருப்பி அனுப்பப்பட்ட அத்தகைய பெறுகைகள்.

(க) அதே கணக்கு உடமையாளரின் மூலதன கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்கிலிருந்தான புலம்பெயர் படிகளின் அல்லது நடைமுறை வருமானத்தின் மாற்றல்கள்.

(ங) கணக்கு உடமையாளர் இலங்கையரல்லாதவராக இலங்கையில் அல்லது வெளியே வதியுமொருவராக இருக்குமிடத்து:

(i) கணக்கு உடமையாளர் இலங்கையில் வதிந்த வேளையில் அக்கணக்கு உடமையாளரின் சம்பளங்கள், ஓய்வுகால நிதியங்களின் (ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், பணிக்கொடை மற்றும் ஓய்வூதியம் அல்லது வேறு ஏதேனும் ஓய்வுகால நன்மைகள்) நன்மைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் வருமானம் மற்றும் ஏதேனும் மூலதனப் பெறுகைகள்.

(ii) கணக்கு உடமையாளரின் மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்கிலிருந்தான ஆண்டொன்றிற்கு ஐ.அ.டொலர் 30,000 கொண்ட மாற்றல்கள்.

(ச) கணக்குடமையாளர் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாக இருக்குமிடத்து; கணக்குடமையாளரின் வதிவற்றோர் ரூபாக் கணக்கிலிருந்து ஆண்டிற்கு ஐ.அ.டொலர் 30,000 கொண்ட மாற்றல்கள்.

(ஞ) கணக்கு உடமையாளர் மரணமடைந்தவரின் சொத்துக்களை நிருவகிப்பவராக அல்லது நிறைவேற்றுபவராக அல்லது கம்பனியொன்றின் பெறுநராக அல்லது ஒடுக்கிவிடுபவராக இருக்குமிடத்து:

(i) இரத்துச் செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் அல்லது வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஒழுங்குவிதி அல்லது ஏற்பாடுகளில் அனுமதிக்கப்பட்டவாறு மரணித்தவரினால் அல்லது ஒடுக்கப்பட்ட கம்பனியினால் இலங்கையில் செய்யப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் வருமானம் அல்லது ஏதேனும் மூலதனப் பெறுகைகள்.

(ii) அத்தகைய மரணித்தவரின் அல்லது ஒடுக்கிவிடப்பட்ட கம்பனியின் உள்முக முதலீட்டுக் கணக்குகளிலிருந்து மாற்றல் செய்யப்பட்ட நிதியம்.

(ட) கணக்கு உடமையாளர் நன்மைபெறுநராக இருக்கின்ற சந்தர்ப்பத்தில் மரணமடைந்தவரின் சொத்தினை நிருவகிக்கின்றவரின்/ நிறைவேற்றுகின்றவரின் அல்லது கம்பனியின் ஒடுக்கிவிடுபவர்/ பெறுபவரின் உள்முக முதலீட்டுக் கணக்கிலிருந்தான மாற்றல்கள்.

(ண) கணக்கில் வைக்கப்பட்டுள்ள நிதியின் மீது ஈட்டப்பட்ட வட்டி.

**5. அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) கணக்கு உடமையாளரின் சார்பில் ஏதேனும் வெளிமுகப் பணவனுப்பல்கள்.

(ஆ) இலங்கை ரூபாவில் இலங்கையில் செய்யப்படும் பகிர்ந்தளிப்புக்கள்.

(இ) தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது உள்முக முதலீட்டுக் கணக்குகள் அல்லது இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது இராசதந்திர ரூபாக் கணக்குகள் அல்லது அதே கணக்கு உடமையாளரின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்குகளுக்கான மாற்றல்கள்.

(ஈ) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் அல்லது ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிகளின் நியதிகளில் கணக்கு உடமையாளரினால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக பின்வருவனவற்றிற்குச் செய்யப்பட்ட கொடுப்பனவுகள்:

(i) முதலீட்டின் முதலீட்டினைப் பெறுபவர்/ விற்பவரின் (வதிபவராகவுள்ளவர்) ரூபாக் கணக்கிற்கு.

(ii) முதலீட்டினைப் பெறுபவர் அல்லது வழங்குநர் வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகளின் நியதிகளில் அல்லது அத்தகைய முதலீட்டினைப் பெறுபவர்/ வழங்குநருக்காக வழங்கப்பட்ட சிறப்பு அனுமதிகளில் வெளிநாட்டு நாணயத்தில் அத்தகைய பெறுகைகளைப் பெறுவதற்கு குறிப்பிட்ட முதலீட்டினைப் பெறுபவர் அல்லது வழங்குநர் அனுமதிக்கப்பட்டிருக்குமிடத்து வதிபவராகவுள்ள முதலீட்டினைப் பெறுபவரின் அல்லது வழங்குநரின் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு.

(iii) அனுமதிக்கப்பட்ட முதலீட்டின் கொள்வனவு தொடர்பில் மற்றொரு ஆளின் (அதாவது வாங்குநர்) உள்முக முதலீட்டுக் கணக்கிற்கு.

(iv) முதலீடு, கூட்டுறுதி தொடர்மாடிமனைச் சொத்தின் கொள்வனவிற்கானதாக இருப்பின், சொத்து அபிவிருத்தியாளரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு

(எ) முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் இலங்கைக்கான முதலீடுகள் தொடர்பில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் தொடர்பான ஏற்பாடுகளிலிருந்து முதலீட்டினைப் பெறுபவர் விலக்களிக்கப்பட்டிருக்குமிடத்து முதலீட்டினைப் பெறுபவரின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிற்கு.

(உ) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் அல்லது ஏற்பாடுகளின் கீழ், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு அல்லது உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு அல்லது இலங்கை அரசாங்கத்திற்கும் அல்லது அரசுடமையாக்கப்பட்ட தொழில்முயற்சிகளுக்கும் (அதாவது கடன்பாட்டாளர்) வழங்கப்பட்ட கடன் பெறுகைகள் தொடர்பில் கடன்பாட்டாளரின் ரூபாக் கணக்கிற்கான மாற்றல்.

(ஊ) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் அல்லது ஏற்பாடுகளின் கீழ், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் அல்லது உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு (அதாவது கடன்பாட்டாளர்) கடன்பாட்டாளரின் வெளிமுக முதலீட்டுக் கணக்குகளுக்கு வழங்கப்பட்ட கடன்களைப் பொறுத்தவரை, அத்தகைய கடன்பாடுகள் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஒழங்குவிதிகள் அல்லது ஏற்பாடுகளின் கீழ் கடன்பாட்டாளரின் வெளிமுக முதலீடுகளுக்கு நிதியிடும் நோக்கத்திற்காகச் செய்யப்பட்டிருக்குமாயின், அப்பெறுகைகளின் மாற்றல்கள்.

(எ) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் அல்லது ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட கடன்களினது பெறுகைகள் தொடர்பாக இலங்கையில் வதிகின்ற ஆளின் (அதாவது கடன்பாட்டாளர்) வெளிநாட்டு வர்த்தக கடன்பாட்டுக் கணக்கிற்குச் செய்யப்பட்ட மாற்றல்கள்.

(ஏ) முதலீட்டின் அத்தகைய பெறுகைகள் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் மற்றும் ஏற்பாடுகளின் கீழ் முதலீட்டாளரின் வெளிமுக முதலீட்டிற்கு முதலிடும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுமிடத்து வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் அல்லது ஏற்பாடுகளின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்படட கம்பனியொன்றினால் (அதாவது முதலீட்டினைப் பெறுபவர்) வழங்கப்பட்ட பங்குகள், படுகடன் பிணையங்களில் செய்யப்பட்ட முதலீடுகள் தொடர்பாக முதலீட்டினைப் பெறுபவரின் வெளிமுக முதலீட்டுக் கணக்கிற்கான கொடுப்பனவுகள்.

(ஐ) உள்முக முதலீட்டுக் கணக்கினூடாகச் செய்யப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்பான நீதிமன்றக் கட்டளையின் கீழ் தீர்ப்பனவுகள் தொடர்பான விதிப்புக்கள்.

(ஒ) மத்திய வைப்பக முறைமைகள் (பிறைவேட்) லிமிடெட் மற்றும் கொழும்புப் பங்கு பரிவர்த்தனையினால் தீர்மானிக்கப்பட்டவாறு கணக்கு உடமையாளரினால் செலுத்தப்பட்ட கோரல்கள்.

(ஓ) கணக்கு உடமையாளர் மரணமடைந்த ஆளின் சொத்தினது நிருவாகத்தவராக அல்லது நிறைவேற்றுநராக அல்லது கம்பனியொன்றின் செயலாளராக/ ஒடுக்கிவிடுபவராக இருக்குமிடத்து;

(i) நன்மைபெறுநர் அல்லது நிருவாகத்தர்/ நிறைவேற்றுநர் அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள கம்பனியின் பெறுநர்/ ஒடுக்கிவிடுபவரின் பெயரிலான வெளிமுகப் பணவனுப்பல்கள்.

(ii) நன்மைபெறுநரின் உள்முக முதலீட்டுக் கணக்கிற்கான மாற்றல்கள்.

(iii) நன்மைபெறுநர் இலங்கையில் வதியும் ஆளாக இருக்குமிடத்து இலங்கை ரூபா கணக்கிற்கான அல்லது நன்மைபெறுநரின் ஏற்கனவேயுள்ள தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கான மாற்றல்கள்.

**6. ஏனைய நிபந்தனைகள்**

(அ) 2(ஏ) மற்றும் 2(ஐ)ஆம் துணைப்பந்திகளின் கீழ் குறிப்பிடப்பட்ட தகைமையுடைய ஆட்கள் முறையே 4(அ), 4(ஊ), 4(ஞ),

4(ட), 4(ண) மற்றும் 5(ஆ), 5(ஓ)ஆம் துணைப்பந்திகள் என்பனவற்றின் கீழுள்ள வரவுகளுக்கும் பற்றுக்களுக்கும் மட்டும் தகைமையுடையவராவர்.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டவாறு முதலீடுகளின் அனைத்து வருமானமும் மூலதனப் பெறுகைகளும் முதலீடு எக்கணக்கினூடாக மேற்கொள்ளப்பட்டதோ அந்த உள்முக முதலீட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்படுவதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(இ) கூட்டு உள்முக முதலீட்டுக் கணக்கினைப் பொறுத்தவரை, இப்பணிப்புரைகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள்/ மாற்றல்களை நிறைவேற்றும் போது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், நிதிகளை உரிய தரப்பினரின் "கூட்டுக் கணக்கொன்றிலிருந்து" "தனியான கணக்கொன்றிற்கு" மாற்றுவது தொடர்பில் வழமையான வங்கித்தொழில் வியாபார நடவடிக்கை முறைகளைப் பின்பற்றலாம்.

(ஈ) வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கைப் பிரசையொருவரினால் (புலம்பெயர்ந்தவர்கள் நீங்கலாக) திறக்கப்பட்ட உள்முக முதலீட்டு கணக்குகளை, அதே உள்முக முதலீட்டுக் கணக்கினூடாகச் செய்யப்பட்ட அத்தகைய முதலீடுகளில் ஏதேனும் வருமானத்தினை அல்லது ஏதேனும் மூலதனப் பெறுகைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காக அத்தகைய முதலீடுகள் அனைத்தும் அகற்றப்படும்/ ஒடுக்கப்படும் வரை கணக்கு உடமையாளர் இலங்கையில் வதிபவராக மாறிய பின்பும் கூட உள்முக முதலீட்டுக் கணக்கினைத் தொடர்ந்தும் தொழிற்படுத்தி வரலாம். அத்தகைய கணக்குகளின் தொழிற்பாடுகள் இப்பணிப்புரையின் அனுமதிக்கப்பட்ட வரவுகளாக 4(ஈ), 4(உ) மற்றும் 4(ஊ) இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட வரவுகளுக்கும் 5(ஆ) மற்றும் 5(இ)ஆம் துணைப்பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட பற்றுக்களுக்கும் மட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

(உ) 4(ஓ)ஆம் பந்தியின் கீழான வரவினைப் பொறுத்தவரை, சொத்தின் மூலதனப் பெறுகைகள் கணக்கு உடமையாளரின் உள்முகப் பணவனுப்பல்கள் அல்லது தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது உள்முக முதலீட்டுக் கணக்குகள் அல்லது புலம்பெயர்ந்தவர் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கு அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவிலுள்ள கணக்கின் நிதியிலிருந்து பயன்படுத்தியதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட கடனின் மீள்கொடுப்பனவுத் தொகைக்கான விகிதாசாரமாக இருத்தல் வேண்டும்.

(ஊ) இப்பணிப்புரைகளின் 5(ஈ)ஆம் பந்தியின் (ii)ஆம் துணைப்பந்தியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் தொடர்பில் முதலீட்டினைப் பெறுபவர் அல்லது பெறுநரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் ஏதேனும் வருமானம் அல்லது மூலதனப் பெறுகைகள் முதலீட்டினைப் பெறுவர் அல்லது வழங்குநரின் வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்து பெறப்பட வேண்டும் என்பதுடன் குறிப்பிட்ட நோக்கத்திற்காக ரூபா மாற்றல்கள் அனுமதிக்கப்படமாட்டா. இப்பணிப்புரைகளின் 5(ஈ)ஆம் பந்தியின் (ii)ஆம் துணைப்பந்தியின் கீழ் அனுமதிக்கப்பட்டவாறு உள்முக முதலீட்டுக் கணக்கிலிருந்து முதலீடுகளுக்கான நிதியினை, முதலீட்டினைப் பெறுபவரின் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு மாற்றல் செய்கின்ற நேரத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இந்நிபந்தனையிலுள்ளவாறு முதலீட்டினைப் பெறுபவரிடமிருந்து அல்லது வழங்குநரிடமிருந்து சம்மதத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(எ) இப்பணிப்புரைகளின் 2(அ) இலிருந்து 2(எ) வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட தகைமையுடைய முதலீட்டாளர்களினால் செய்யப்பட்ட முதலீடுகள் தொடர்பிலான கொடுக்கல்வாங்கல்களைப் பின்வரும் விதத்தில் வசதிப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இத்தால் அனுமதிக்கப்படுகிறார்கள்.

(i) தகைமையுடைய முதலீட்டாளர்களின் உள்முக முதலீட்டுக் கணக்கில் வரவு வைக்கப்படுவதற்கான நிதியங்கள் வொஸ்ரோ கணக்கினூடாக வழிப்படுத்தப்படலாம்.

(ii) மேலே 6(ஊ)(i)ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அத்தகைய முதலீடுகளின் ஏதேனும் வருமானம் மற்றும் ஏதேனும் மூலதனப் பெறுகைகள், முதலீடு வழிப்படுத்தப்பட்ட அதே வழியினைப் பின்பற்றியே அனுப்பி வைக்கப்படலாம்.

(iii) இலங்கைக்கு முதலீட்டினை மேற்கொள்ளும் நேரத்தில், உள்முக முதலீட்டுக் கணக்கினூடாகச் செய்யப்படவுள்ள அனுமதிக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் கொடுப்பனவுகளுக்காக வெளிநாட்டுச் செலாவணிக்கு இலங்கை ரூபாவினை மாற்றுவது மற்றொரு அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் யாருடைய குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல் நிறுவப்பட்டதோ அவ்வாடிக்கையாளர்களுக்காக மேற்கொள்ளப்படல் வேண்டும். ஒவ்வொரு கொடுக்கல்வாங்கல் தொடர்பிலுமான ஆவணச்சான்றுகள் உள்முக முதலீட்டுக் கணக்கு யாருடன் பேணப்படுகின்றதோ அந்த அதிகாரமளிக்கப்பட்ட வணிகரினால் சமர்ப்பிக்கப்படலாம்.

(iv) உள்முக முதலீட்டுக் கணக்கு யாருடன் பேணப்படுகின்றதோ அவ்வதிகாரமளிக்கப்பட்ட வணிகர் குறிப்பிட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் நோக்கத்திற்கான நிதிகள் கணக்கு உடமையாளரின் அதே உள்முக முதலீட்டுக் கணக்கிற்கு பற்று வைக்கப்பட்டுள்ளன எனவும் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களிலிருந்து பெறப்பட்ட வருமானம் அல்லது மூலதனப் பெறுகைகள் ஒழுங்குவிதிகளுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் அதே உள்முக முதலீட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளன என்பதனையும் உறுதிப்படுத்துவதன் மேல் கணக்கு உடமையாளரின் பெயரில் அனுமதிக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் ஏதேனும் வருமானம் அல்லது ஏதேனும் மூலதனப் பெறுகைகளின் வெளிமுகப் பணவனுப்பல்களை உள்முக முதலீட்டுக் கணக்கு பேணப்படும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் தவிர, மற்றொரு

அதிகாரமளிக்கப்பட்ட வணிகரூடாகவும் மேற்கொள்ளலாம்.

(ஏ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மேற்கொள்ளப்படவுள்ள கொடுக்கல்வாங்கல்களின் சட்டபூர்வத் தன்மையினையும் நம்பகத்தன்மையினையும் நிறுவுவதற்காகச் சரியான சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளத்தக்க சான்றுகளைக் (கேட்டுக் கொள்ளப்பட்டவாறு) பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் ஒழுங்குவிதிகளுக்கும் இப்பணிப்புரைகளுக்கும் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளவும் வேண்டும்.

(ஐ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் உள்முக முதலீட்டுக் கணக்கினூடகக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொண்ட நேரத்தில் பெற்றுக்கொண்ட ஆவணச்சான்றுகளை (ஒன்றில் வன்பிரதியாக அல்லது இலத்திரனியல்/ டிஜிட்டல் வடிவில்) கணக்குகளைப் பேணுகின்ற காலப்பகுதியில் சட்ட ரீதியாகப் பதிவேடுகளைப் பேண வேண்டிய காலத்திற்கு அப்பாலும் அத்தகைய கணக்குகள் மூடப்பட்டதன் பின்னரும் ஆறு ஆண்டுகளுக்குக் குறையாத காலப்பகுதிக்குப் பேணிவருதல் வேண்டும்.

7. **உள்முக முதலீட்டுக் கணக்குகளை மூடிவிடுதல்**

(அ) குறிப்பட்ட உள்முக முதலீட்டுக் கணக்கினூடாக கணக்கு உடமையாளரால் கையேற்ற அனைத்து முதலீடுகளினதும் வெளிநாட்டுப் பணவனுப்பல்/ அகற்றல் பெறுகைகளின் மாற்றல்/ ஒடுக்கிவிடுதலின் பின்னர் மாத்திரமே உள்முக முதலீட்டுக் கணக்குகளை மூடமுடியும்.

(ஆ) எனினும், மற்றொரு அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் திறந்து பேணிவரும் உள்முக முதலீட்டுக் கணக்கொன்றிற்கு எதிர்கால வருமானத்தினையும் அத்தகைய முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் மூலதனப் பெறுகைகளையும் வரவு வைக்கின்ற நோக்கத்திற்காக இதே உள்முக முதலீட்டுக் கணக்கினூடாகச் செய்யப்பட்ட முதலீடுகளை அகற்றுவதற்கு முன்னதாக உள்முக முதலீட்டுக் கணக்கினை மூடுவதற்கு உள்முக முதலீட்டுக் கணக்கு உடமையாளர் கோரிக்கை விடுக்கும் சந்தர்ப்பத்தில், ஆரம்ப உள்முக முதலீட்டுக் கணக்கினை வைத்திருக்கின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் பின்வரும் தகவல்கள்/ ஆவணங்களை பெறுநரின் உள்முக முதலீட்டுக் கணக்கினைத் தொழிற்படுத்துகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் திருப்திக்காக அனுப்பி வைத்ததன் பின்னர் உள்முக முதலீட்டுக் கணக்கினை மூடலாம்.

(i) மூடப்படவுள்ள உள்முக முதலீட்டுக் கணக்கிலுள்ள நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட வெளிநிற்கும் முதலீடுகளின் உறுதிப்படுத்தல் (உள்முக பணவனுப்பல்களின் விபரங்கள், முதலீட்டினைப் பெறுபவரின் விபரங்கள், முதலீடுகளின் வகை போன்றவை).

(ii) உள்முக முதலீட்டுக் கணக்கினூடாகச் செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை நிரூபிக்கின்ற விதத்தில் உள்முக முதலீட்டுக் கணக்கு உடமையாளரிடமிருந்து சேகரிக்கப்பட்ட ஆவணச் சான்றுகள்.

(இ) இலங்கைக்கு வெளியே வதிகின்ற (புலம்பெயர்ந்தவர் நீங்கலாக) வெளிநாட்டில் தொழில்புரிகின்ற இலங்கைப் பிரசைகளினால் வைத்திருக்கப்படும் உள்முக முதலீட்டுக் கணக்குகளைப் பொறுத்தவரை;

(i) கணக்கு உடமையாளர் வதிபவராக மாறிய பின்னர், கணக்கு உடமையாளரின் கோரிக்கையினையடுத்து அத்தகைய உள்முக முதலீட்டுக் கணக்குகளை மூடிவிடலாம்.

(ii) இப்பணிப்புரையின் துணைப்பந்தி 6(ஈ)இன் கீழ் அனுமதிக்கப்பட்டவாறு உள்முக முதலீட்டுக் கணக்கு தொடர்ந்தும் தொழிற்படுமாயின், அத்தகைய உள்முக முதலீட்டுக் கணக்குகளை, அனுமதிக்கப்பட்ட வரவுகள் மற்றும் பற்றுக்களின் கீழ் அதே உள்முக முதலீட்டுக் கணக்கினூடாகச் செய்யப்பட்ட அத்தகைய முதலீடுகளின் அகற்றல்/ ஒடுக்கிவிடுதலின் பெறுகைகள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் மாத்திரமே மூடிவிடுதல் வேண்டும்.

(ஈ) மரணமடைந்தவரின் சொத்துக்களை நிருவகிக்கின்ற/ நிறைவேற்றுகின்ற ஒருவரினால் அல்லது கம்பனியொன்றின் பெறுநர்/ ஒடுக்கிவிடுபவரினால் திறக்கப்பட்ட உள்முக முதலீட்டுக் கணக்குகள், இலங்கையிலுள்ள சட்டபூர்வமான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்கின்றமைக்குட்பட்டு பெறுகைகளின் அனுப்பல்கள் முடிவடைந்ததன் பின்னர் உடனடியாக மூடப்படுதல் வேண்டும்.

(உ) மேலே (அ) இலிருந்து (ஈ) வரை குறிப்பிடப்பட்ட அத்தகைய மூடல் தொடர்பான தகவல்களை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் அவ்வாறு மூடப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் dfem@cbsl.lk ஊடாக வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

8. இப்பணிப்புரைகளின் அதிகாரவரம்பிற்குள் வராத ஏதேனும் நோக்கத்திற்காக உள்முக முதலீட்டுக் கணக்கிற்கான/ கணக்கிலிருந்தான ஏதேனும் கொடுக்கல்வாங்கல்/ மாற்றலுக்காக வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளரின் முன்னொப்புதலைப் பெற்றுக்கொள்ளுமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

9. **அறிக்கையிடும் தேவைப்பாடுகள்**

(அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் உள்முக முதலீட்டுக் கணக்கு தொடர்பான விபரங்களை நாளாந்த அடிப்படையில் இத்திணைக்களத்திற்கு https://www.cbsl.lk/forexnet ஊடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அவர்கள் தொடர்பான வங்கிகளின் கணக்கேடுகளிலிருந்து தொடர்பான தகவல்களை உருவாக்கும் அல்லது பிரித்தெடுக்கும் விதத்தில் முறைமையொன்றினை நடைமுறைக்கிடுதல் வேண்டும்.

(இ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கு இலத்திரனியல் ரீதியாகச் சமர்ப்பித்த தகவல்களின் துல்லியமான மற்றும் பூரணமான தன்மையின் சரிபார்ப்புக்களை உள்ளடக்க வேண்டியதுடன் அதன் உள்ளகக் கணக்காய்வு காலாந்தர மீளாய்வு மற்றும் இணங்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களையும் அவற்றை நிரூபிப்பதற்கான சான்றுகளையும் செலாவணித் திணைக்களத்தின் பரிசோதனையின் போது கிடைக்கத்தக்க விதத்தில் ஆயத்தநிலையில் வைத்திருத்தல் வேண்டும்.

**10. இப்பணிப்புரைகளின் நோக்கங்களுக்காக**

(அ) **"புலம்பெயர்பபடி"** என்பது 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (புலம்பெயர்ந்தவர்களின் நிதிய அனுப்பல்கள்) ஒழுங்குவிதிகளின் (அதற்குச் செய்யப்பட்ட திருத்தங்களின்படி) அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) **"புலம்பெயர்ந்தவர்"** என்பது 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (புலம்பெயர்ந்தவர்களினால் செய்யப்படும் நிதிய அனுப்பல்கள்) ஒழுங்குவிதிகளின் (அதற்குச் செய்யப்பட்ட திருத்தங்களின்படி) அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) **"பணவனுப்பல்கள்"** என்பது தந்தி மாற்றல்கள், ஏனைய வங்கிகளிடையேயான மாற்றல்கள், வங்கி வரைவுகள், ஏனைய கொடுப்பனவுச் சாதனங்கள், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு கொடுப்பனவுப் பொறிமுறைகள் அல்லது தளங்களூடாகப் பெறப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் நாணயத் தாள்கள் தவிர, வெளிநாட்டிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் பரிவர்த்தனைக் கம்பனிகளிலிருந்து/ இல்லங்களிலிருந்து பெறப்பட்ட நிதிகள் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

11. இப்பணிப்புரைகளினால் அனுமதிக்கப்பட்டதெதுவும், இப்பணிப்புரைகளின் கீழ், வெளிநாட்டுச் செலாவணி வணிகத்தில் ஈடுபடுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களை வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கான தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கின்றது, விடுவிக்கின்றது அல்லது தடுக்கின்றது எனப் பொருள்கோடலாகாது.

12. உள்முக முதலீட்டுக் கணக்கு தொடர்பான தேவைப்பாடுகளைக் குறித்துரைக்கின்ற விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட 2017ஆம் ஆண்டு நவெம்பர் 20ஆம் திகதியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 13ஆம் இலக்கப் பணிப்புரைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

13. மேலேயுள்ள பந்தி 12இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள குறித்துரைக்கப்பட்ட முன்னைய பணிப்புரைகளின் இரத்தானது, இரத்துச் செய்யப்படுவதற்கு முன்னர் அவற்றின் கீழ் உறப்பட்ட ஏதேனும் உரிமைகள் அல்லது தண்டங்கள் அல்லது பொறுப்புக்களைப் பாதிப்பதாக இருக்கக்கூடாது.

14. இப்பணிப்புரைகளின் அனைத்து வரவுகளும் பற்றுக்களும் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

15. இப்பணிப்புரைகள் 2021 மாச்சு 22ஆம் திகதியிலிருந்து தொழிற்பாட்டிற்கு வருதலாதல் வேண்டும்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**
**2021 மாச்சு 18**

**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (புலம்பெயர்ந்தவர்களினால் நிதிகளை அனுப்புதல்) ஒழுங்குவிதிகள் மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 6 மற்றும் 7ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் நியதிகளில், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்கினைத் திறந்து மற்றும் பேணி வருவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

**2. தகைமையுடைய ஆட்கள்**

(அ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற புலம்பெயர்ந்தவரொருவர்.

(ஆ) இலங்கையில் வதிகின்ற அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கையரல்லாதவரொருவரும் அத்தகைய ஆளின் பராயமடையாதவரொருவரும் உட்பட.

(இ) 18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட, மற்றொரு நாட்டில் தற்காலிக வதிவிட விசாவினைப் பெற்றுக் கொண்டுள்ள இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற தனிப்பட்ட இலங்கையரொருவர்.

(ஈ) பெற்றோர் புலம்பெயர் திட்டத்தின் கீழ், புலம்பெயரக்கூடிய வாய்ப்புக்களைக் கொண்டுள்ள இலங்கையில் வதிகின்ற தனிப்பட்ட இலங்கையரொருவர்.

(உ) புலம்பெயர்ந்த ஒருவராக இருந்து மரணமடைந்த ஆளின் சொத்தினை நிருவகிக்கின்ற அல்லது நிறைவேற்றகின்ற ஒருவர்.

3. **மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்குளைத் திறந்து மற்றும் பேணிவருதல்**

(அ) மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்கினை இலங்கை ரூபாவில் சேமிப்பு அல்லது நடைமுறைக் (மேலதிகப் பற்று வசதியில்லாமல்) கணக்குகள் வடிவில் திறந்து பேணி வரலாம்.

(ஆ) தகைமையுடைய ஆட்கள் வங்கித்தொழில் முறைமையில் ஒரு கணக்கினை மாத்திரம் திறந்து ஏக கணக்காக அதனை வைத்திருத்தல் வேண்டும்.

(இ) மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்கினையும் புலம்பெயர்ந்தவரின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கினையும் அதே அதிகாரமளிக்கப்பட்ட ஒரு வணிகருடன் திறந்து மற்றும் பேணிவருதல் வேண்டும்.

(ஈ) மத்திய வங்கியினால் பதிவு இலக்கம் வழங்கப்பட்ட கணக்குகள் தவிர, ஏற்கனவேயுள்ள அனைத்து மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்குகளும் ஒழுங்குவிதிகளின் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் மீளப்பெயர் குறித்துரைக்கப்பட்டு, வதிவற்றோர் ரூபாக் கணக்குகளாகத் தொடர்ந்தும் தொழிற்படுத்தப்படல் வேண்டும்.

(உ) வெளிநாட்டு நிறுவனங்கள்/ பதிவுசெய்யப்பட்ட/ இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளினால் பேணப்படுகின்ற ஏற்கனவேயுள்ள அனைத்து மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்குகளும் இவ்வொழுங்குவிதிகளின் திகதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் மீளப்பெயர் குறித்துரைக்கப்பட்டு வதிவற்றோர் ரூபாக் கணக்குகளாகத் தொடர்ந்தும் தொழிற்படுத்தப்படல் வேண்டும்.

(ஊ) இலங்கைக்கு வெளியே வதிகின்ற, வெளிநாடுகளில் தொழில்புரிகின்ற இலங்கையர்களினால் பேணப்படுகின்ற ஏற்கனவேயுள்ள அனைத்து மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்குகளும் இவ்வொழுங்குவிதிகளின் திகதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் பெயர் குறித்துரைக்கப்பட்ட இலங்கை ரூபாக் கணக்குகளாகத் தொடர்ந்தும் பேணப்படுதல் வேண்டும்.

4. **அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) கணக்கு உடமையாளர் புலம்பெயர்ந்தவராக, இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிபவராக இருக்குமிடத்து;

(i) இலங்கையில் உள்ளூரில் பகிர்ந்தளிக்கும் நோக்கத்திற்காக, வங்கித்தொழில் முறைமையூடாக கணக்கு உடமையாளரின் பெயரில் இலங்கைக்கு வெளியிலிருந்து பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலமைந்த பணவனுப்பல்கள்.

(ii) இலங்கையில் வதியுமொருவராக இருந்த வேளையில் புலம்பெயர்ந்தவரினால் சொந்தமாக்கப்பட்ட இலங்கையிலுள்ள ஏதேனும் சொத்துக்களிலிருந்து (அசையும், அசையா மற்றும் உருவ மற்றும் அருவச் சொத்துக்கள் உட்பட) அல்லது இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் அத்தகைய புலம்பெயர்ந்தவரின் இலங்கை ரூபா கணக்கினூடான நிதியினைப் பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்ட ஏதேனும் சொத்துக்களிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் பெறுகைகள்.

(iii) இலங்கையில் வதியும் ஆளொருவரிடமிருந்து புலம்பெயர்ந்தவரினால் மரபுவழியாகப் பெறப்பட்ட இலங்கையிலுள்ள (அசையும், அசையா, உருவ மற்றும் அருவச் சொத்துக்கள் உட்பட) ஏதேனும் சொத்துக்களிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் பெறுகைகள்.

(iv) இலங்கையில் வதியும் ஆளொருவராகவுள்ள உடனடிக் குடும்ப உறுப்பினரொருவரிடமிருந்து புலம்பெயர்ந்தவரினால் அன்பளிப்பாகப் பெறப்பட்ட இலங்கையிலுள்ள ஏதேனும் சொத்துக்களிலிருந்து (அசையும், அசையா உருவ மற்றும் அருவச் சொத்துக்கள் உட்பட) பெறப்பட்ட ஏதேனும் பெறுகைகள்.

(v) மரபுவழியாக கிடைக்கப்பெற்ற அல்லது அன்பளிப்பு மூலமாகப் பெறப்பட்ட அல்லது இலங்கையில் வதிந்த வேளையில் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து உடனடிக் குடும்ப உறுப்பினர்களாகவுள்ள (அல்லது மாற்றல் செய்பவர்) மற்றொரு புலம்பெயர்ந்தவரிடமிருந்து புலம்பெயர்ந்தவரினால் மரபுவழியாகப் பெறப்பட்ட இலங்கையிலுள்ள ஏதேனும் சொத்துக்களிலிருந்து இவ்வொழுங்குவிதி நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் அல்லது அவரின் அல்லது அவளின் ரூபாக் கணக்கினூடாக அல்லது மாற்றல் செய்பவரினால் மரபுரிமையாக அல்லது மாற்றல் செய்பவரினால் அன்பளிப்பாகப் பெறப்பட்ட அல்லது 2021ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவரினால் மேற்கொள்ளப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்பு) ஒழுங்குவிதிகளினால் அனுமதிக்கப்பட்டவாறு வதிவற்றோர் ரூபாக் கணக்கினூடாக மாற்றல் செய்பவரால் அன்பளிப்பாகப் பெறப்பட்ட இலங்கையிலுள்ள (அசையும், அசையா, உருவ மற்றும் அருவச் சொத்துக்கள் உள்ளடங்கலாக, தனியாள் வெளிநாட்டு நாணய அல்லது உள்முக முதலீட்டுக் கணக்கு நீங்கலாக) ஏதேனும் சொத்துக்களிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் பெறுகைகள்.

(vi) இலங்கையிலுள்ள ஏதேனும் சொத்துக்களிலிருந்து (அசையும், அசையா, உருவ மற்றும் அருவச் சொத்துக்கள் உட்பட) பெறப்பட்ட நிதியமாக உடனடி குடும்ப உறுப்பினரிடமிருந்து புலம்பெயர்ந்தவரினால் பெறப்பட்ட நாணய ரீதியிலான அன்பளிப்பு.

(vii) இப்பணிப்புரையின் 4(அ)(ை) இலிருந்து 4(அ)(எ) வரையான துணைப்பந்திகளின் கீழ் குறிப்பிடப்பட்டவாறு சொந்தமாகக் கிடைத்த அல்லது கையேற்கப்பட்ட அல்லது மரபுரிமையாகக் கிடைத்த அல்லது புலம்பெயர்ந்தவர்களின் அன்பளிப்பு மூலமாகக் கிடைத்த முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் வருமானம்.

(viii) கணக்கு உடமையாளரின் ஓய்வுகால நன்மைகள் (ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், பணிக் கொடை, ஓய்வூதியம் அல்லது வேறு ஏதேனும் ஓய்வுகால நன்மைகள் உட்பட)

(ix) கணக்கு உடமையாளரின் வதிவற்றோர் ரூபாக் கணக்கிலிருந்தான மாற்றல்கள்.

(ஆ) கணக்கு உடமையாளர் பராயமடையாதவர் உட்பட, இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் வதியும் இலங்கையரல்லாதவராக இருக்குமிடத்து;

(i) 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவரினால் இலங்கையில் மேற்கொள்ளப்படும் மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகளின் அட்டவணை ஐ இன் தலைப்பு (அ)இன் கீழ் 4(5)(இ), 4(5)(ஈ) மற்றும் 4(7)ஆம் துணைப்பந்திகளின் கீழ் அனுமதிக்கப்பட்டவாறு முதலீடுகளின் ஏதேனும் வருமானம் மற்றும் ஏதேனும் முதலீடுகளின் பெறுகைகள்.

(ii) கணக்கு உடமையாளரின் ஓய்வுகால நன்மைகள் (ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், பணிக்கொடை மற்றும் ஓய்வூதியம் அல்லது வேறு ஏதேனும் ஓய்வுகால நன்மைகள் உட்பட)

(இ) கணக்கு உடமையாளரின் தனிப்பட்ட இலங்கையராகவும் மற்றொரு நாட்டில் தற்காலிக வதிவிட விசாவினை பெற்றவராகவும் 18 வயதினை அல்லது கூடுதலான வயதினைக் கொண்டவராகவுமிருக்குமிடத்து ஒழுங்குவிதிகளின் கீழ் அனுமதிக்கப்பட்டவாறு, வெளிநாட்டுச் செலாவணியினைப் பெற்றுக்கொள்வதற்கு உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 30,000 இற்குச் சமமான நிதியம்.

(ஈ) கணக்கு உடமையாளர் தனிப்பட்ட இலங்கையராகவும் பெற்றோர் புலம்பெயர் திட்டத்தின் கீழ் புலம்பெயர்ந்தவராக வரக்கூடியவராகவுமிருக்குமிடத்து ஒழுங்குவிதிகளின் கீழ் அனுமதிக்கப்பட்டவாறு பெற்றோர் புலம்பெயர் திட்டத்தின் கீழ் விசாவினைப் பெறுவதற்கு வெளிநாட்டு அதிகாரிகளுக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவுத் தொகைக்குச் சமமான நிதியம்.

(உ) கணக்கு உடமையாளர், புலம்பெயர்ந்தவராக இருந்து மரணமடைந்தவரின் சொத்துக்களினது நிருவாகத்தவராக/ நிறைவேற்றுநராக இருக்குமிடத்து;

(i) அத்தகைய மரணமடைந்தவரின் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கு அல்லது வதிவற்றோர் ரூபாக் கணக்கு அல்லது புலம்பெயர்ந்தவரின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கிலிருந்தான மாற்றல்கள்.

(ii) இப்பணிப்புரைகளின் 4(அ)(vi) நீங்கலாக, பந்தி 4(அ)இன் கீழ் குறிப்பிடப்பட்டவாறு அத்தகைய மரணமடைந்த ஆளுக்குக் கிடைக்க வேண்டிய ஏதேனும் வருமானம் அல்லது மூலதனப் பெறுகைகள்.

(ஊ) கணக்கு உடமையாளரினால் வழங்கப்பட்ட பணிக்காகப் பெறப்பட்ட வருமானம்; அத்துடன்

(எ) கணக்கில் வைத்திருக்கப்பட்ட நிதியின் மீது இலங்கை ரூபாவில் ஈட்டப்பட்ட வட்டி.

**5. அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) கணக்கு உடமையாளரின் இலங்கைக்கு வெளியே வதிகின்ற புலம்பெயர்ந்தவராக அல்லது இலங்கையை விட்டு புறப்பட்டுச் செல்கின்றவராக (ஆரம்பத்தில் அதன் பின்னர்) இருக்குமிடத்து;

(i) கணக்கு உடமையாளரின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு அல்லது உள்முக முதலீட்டு கணக்கிற்கு அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படுகின்ற கணக்கொன்றிற்கு அல்லது இலங்கைக்கு வெளியே பேணப்படும் கணக்கொன்றிற்கு தகைமையுடைய புலம்பெயர் படிகளை அனுப்புதல்/ மாற்றுதல்.

(ii) மேலேயுள்ள பந்திகள் 4(அ)(vii) மற்றும் 4(அ) (viii) இன் கீழ் வரவு வைக்கப்பட்ட நிதிகளை கணக்கு உடமையாளரின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றிற்கு அல்லது உள்முக முதலீட்டுக் கணக்கொன்றிற்கு, அல்லது புலம்பெயர்ந்தவரின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கு அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிற்கு அல்லது இலங்கைக்கு வெளியே அனுப்பப்படும் பணவனுப்பல்/ மாற்றல்.

(iii) ஒழுங்குவிதிகளுக்குட்பட்டு, கணக்கு உடமையாளரின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், வாழ்க்கைத்துணை அல்லது பெற்றோரில் ஒருவருக்குப் பிறந்த பிள்ளைகளின் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கிற்கு அன்பளிப்பாகச் செய்யப்படும் மாற்றல்கள்.

(iv) கணக்கு உடமையாளரின் வதியாதோர் ரூபாக் கணக்கிற்கான மாற்றல்கள்.

(ஆ) கணக்கு உடமையாளர் இலங்கையில் வதியும் புலம்பெயர்ந்தவராக இருக்குமிடத்து;

(i) நடைமுறைக் கொடுக்கல்வாங்கல் அல்லது இலங்கையில் வதிபவராகவுள்ள கணக்கு உடமையாளரின் பயண நோக்கங்களுக்கான வெளிநாட்டுப் பயண அட்டையினை நிரப்புவது தொடர்பான பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்ட உயர்ந்தபட்ச மட்டம் வரை வெளிநாட்டு நாணயத் தாள்களிலான எடுப்பனவுகள்.

(ii) இலங்கையில் வதிகின்ற கணக்கு உடமையாளரின் உடனடிக் குடும்ப உறுப்பினர்/ உறுப்பினர்களின் (இலங்கைக்கு வெளியே வதிகின்ற தங்கியிருப்பவர்/ தங்கியிருப்பவர்கள்) வாழ்க்கைச் செலவு நோக்கங்களுக்கான பணவனுப்பல்கள்.

(இ) பராயமடையாதவர் உட்பட கணக்கு உடமையாளர் இலங்கையரல்லாதவராக, இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ வதிகின்றவராக இருக்குமிடத்து;

(i) துணைப்பந்தி 4(ஆ)(i)இன் கீழ் வரவு வைக்கப்பட்ட நிதியிலிருந்து ஆண்டொன்றிற்கு ஐ.அ.டொலர் 30,000 இனை, கணக்கு உடமையாளரின் உள்முக முதலீட்டுக் கணக்கிற்கு அல்லது தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிற்கு அல்லது இலங்கைக்கு வெளியே பேணப்படும் கணக்கொன்றிற்கு அனுப்புதல்/ மாற்றுதல்.

(ii) துணைப்பந்தி 4(ஆ)(ii)இன் கீழ் வரவு வைக்கப்பட்ட நிதியிலிருந்து கணக்கு உடமையாளரின் உள்முக முதலீட்டுக் கணக்கிற்கு அல்லது தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிற்கு அல்லது இலங்கைக்கு வெளியே பேணப்படும் கணக்கொன்றிற்கு அனுப்புதல்/ மாற்றுதல்.

(ஈ) கணக்கு உடமையாளர் தனிப்பட்ட இலங்கையராகவும் மற்றொரு நாட்டிற்கு தற்காலிக வதிவிட விசாவினைப் பெற்றுக்கொண்டவராகவும் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருக்குமிடத்து அவருக்கு வழங்கப்பட்ட உயர்ந்தபட்ச ஐ.அ.டொலர் 30,000 வரையிலான வெளிநாட்டுச் செலாவணி.

(உ) கணக்கு உடமையாளர் தனிப்பட்ட இலங்கையராகவும் புலம்பெயரக்கூடிய வாய்ப்பினைக் கொண்டவராகவுமிருக்குமிடத்து பெற்றோர் புலம்பெயர் திட்டத்தின் கீழ் விசாவினைப் பெறுவதற்கு வெளிநாட்டு அதிகாரிகளுக்கான கொடுப்பனவுகள்.

(ஊ) கணக்கு உடமையாளர், புலம்பெயர்ந்தவராக இருந்து மரணமடைந்தவரின் சொத்துக்களை நிருவகிப்பவர் அல்லது நிறைவேற்றுபவராக இருக்குமிடத்து மரணமடைந்த ஆளினது சொத்துக்களின் நன்மைபெறுநராக/ நன்மைபெறுநர்களாகவுள்ளவர்களின் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கிற்கான நிதிய மாற்றல்கள்.

(எ) இலங்கை ரூபாவில் இலங்கையில் செய்யப்படும் பகிர்ந்தளிப்புக்கள்.

**6. மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கினைத் திறப்பதற்கான நடைமுறை**

(அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் ஸ்கான் செய்யப்பட்ட பின்வரும் ஆவணங்களை (ஏற்புடைத்தானவாறு) ஊவுசுயுளூஉடிளட. டம ஊடாகச் சமர்ப்பிப்பதனைத் தொடர்ந்து, தகைமையுடைய ஆளொருவருக்கான மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கொன்றினைத் திறப்பதற்கு முன்னர் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளரிடமிருந்து பதிவு இலக்கமொன்றினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்:

(i) இணைப்பு I இன் பூரணப்படுத்தப்பட்ட படிவமொன்று.

(ii) நடப்பிலுள்ள கடவுச்சீட்டின் அடையாளப்படுத்தும் பக்கம், மாற்றம் செய்யப்படுகின்ற பக்கம் மற்றும் அவதானப் பக்கங்களின் பிரதியொன்று.

(iii) நிரந்தர வதிவிட திகதி மற்றும் நாடு என்பனவற்றை நிரூபிக்கின்ற விதத்தில் நிரந்தர வதிவிட புறக்குறிப்பீடு அல்லது வேறு ஏதேனும் ஆவணச்சான்று/ சான்றுகளின் பிரதியொன்று.

(iv) பிரசாவுரிமை அல்லது இரட்டைப் பிரசாவுரிமைச் சான்றிதழின் பிரதியொன்று.

(v) புலம்பெயர்ந்தவர் இலங்கைக்கு வெளியே பிறந்திருப்பின் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று (ஏதேனுமிருப்பின்).

(ஆ) வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட பதிவு இலக்கம் கிடைக்கப்பெற்றதும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கினைத் திறத்தல் வேண்டும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட அதே பதிவிலக்கத்தின் கீழ் அதே கணக்கு உடமையாளரின் பெயரில் புலம்பெயர்ந்தவர் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கினைத் திறக்க முடியும். புலம்பெயர்ந்த ஒருவர் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட பதிவு இலக்கத்திற்காக ஏற்கனவே புலம்பெயர்ந்தவர் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கொன்றினைக்

கொண்டிருக்குமிடத்து, அவர் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கினைத் திறப்பதற்கு கோரும் பொழுது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அதே பதிவு இலக்கத்தின் கீழ் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கினைத் திறப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

7. **ஏனைய நிபந்தனைகள்**

(அ) புலம்பெயர் படியை இலங்கையை விட்டுப் புறப்படும் நேரத்தில் (ஆரம்பத்தில் அல்லது அதன் பின்னர்) அல்லது புலம்பெயர்ந்தவர் இலங்கைக்கு வெளியே வதிகின்ற நேரத்தில் மாத்திரம் கோருதல் வேண்டும்.

(ஆ) தொடர்பான தகைமையுடைய ஆட்கள் தொடர்பில் திறக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கிற்கு ஒதுக்கப்பட்ட கணக்கு இலக்கத்தினை அது ஒதுக்கப்பட்டதனை உடனடுத்து CTRA@cbsl.lk ஊடாக வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

(இ) தகைமையுடைய பராயமடையாதவர்களுக்காக (அதாவது 18 வயதிற்குக் குறைவாகவுள்ள ஆட்கள்) மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கினைத் திறக்கின்ற போது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், அவரின்/ அவளின் இயற்கையாக அல்லது நியமிக்கப்பட்ட பாதுகாவலாளரினூடாகத் திறத்தல் வேண்டும். அத்தகைய பராயமடையாதோர் ஒழுங்குவிதிகளினால் அனுமதிக்கப்பட்டவாறு அவர்கள் 18 வயதினை அடையும் போது அவர்களது தகைமையுடைய படிகளைக் கோரமுடியும்.

(ஈ) இப்பணிப்புரைகளின் 4(அ)(ix)ஆம் பந்தியின் கீழ் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றும் பொழுது, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வதியாதோர் ரூபாக் கணக்கு எந்த அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் பேணப்பட்டதோ அந்த அதிகாரமளிக்கப்பட்ட வணிகரிடமிருந்து நிதியத்தின் மூலத்தினை உறுதிப்படுத்தும் சான்றினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(உ) இப்பணிப்புரைகளின் 5(ஆ)ஆம் பந்தியின் கீழ் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றும் போது

(i) கணக்கு உடமையாளர் நிரந்தர வதிவிடத்தினை அல்லது பிரசாவுரிமையினை எந்நாட்டிற்குப் பெற்றுள்ளாரோ அந்நாட்டிற்குப் பயணம் செய்யும் நோக்கத்திற்காகப் பயணப் படிகள் கோரப்படவுள்ளவிடத்தும் இந்நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படவுள்ள நிதியம் இப்பணிப்புரைகளின் பந்தி 4(அ)(i) இலிருந்து 4(அ)(vi)இன் கீழ் வரவு வைக்கப்பட்டிருக்குமாயின் தொகையானது அத்தகைய படிகள் கோரப்படும் நேரத்தில் தகைமையுடைய புலம்பெயர் படிகளிலிருந்து கழித்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(ii) கணக்கு உடமையாளர் நிரந்தர வதிவிடத்தினை அல்லது பிரசாவுரிமையினை எந்நாட்டிற்குப் பெற்றுள்ளாரோ அந்நாட்டில் வசிக்கின்ற அவரில்/ அவளில் தங்கியுள்ளவர்களுக்கு வாழ்க்கைச் செலவுகள் அனுப்பப்பட வேண்டியுள்ளவிடத்தும் இந்நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படவுள்ள நிதியம் இப்பணிப்புரைகளின் 4(அ)(ஐ) இலிருந்து 4(அ)(எஐ) வரையான பந்திகளின் கீழ் வரவு வைக்கப்பட்டிருக்குமாயின், இத்தொகையானது அத்தகைய படிகளைக் கோருகின்ற நேரத்தில் தகைமையுடைய புலம்பெயர்படிகளிலிருந்து கழித்துக் கொள்ளப்படல் வேண்டும்.

(ஊ) இப்பணிப்புரைகளின் 5(அ)(iv)ஆம் பந்தி மற்றும் 5(ஊ)ஆம் பந்தி என்பனவற்றின் கீழ் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றும் பொழுது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கு எந்த அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் பேணப்பட்டதோ அந்த அதிகாரமளிக்கப்பட்ட வணிகரிடமிருந்து நிதியத்தின் மூலத்தினை உறுதிப்படுத்தும் சான்றினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(எ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், புலம்பெயர்பவர் ஆரம்பத்தில் இலங்கையைவிட்டு புறப்படுகின்ற நேரத்தில் தகைமையுடைய புலம்பெயர் படிகள் தொடர்பில் அல்லது மேலேயுள்ள துணைப்பந்தி 5(ஈ)இன் கீழ் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 5,000 அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகையினை வெளிநாட்டு நாணயத் தாள்களின் வடிவில், அதிகாரமளிக்கப்பட்ட வணிகரினால் கடவுச்சீட்டின் மீது திகதி, வெளிநாட்டு நாணயத்தின் தொகை, மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கின் பதிவு இலக்கம், சேரும் நாடு என்பன உட்பட பொருத்தமான புறக்குறிப்பீட்டினை மேற்கொள்வதன் மீது வெளிநாட்டுச் செலாவணியினை வழங்கலாம்.

(ஏ) புலம்பெயர்ந்தவர் இலங்கையில் வதிகின்றவராக இருந்த வேளையில் குறிப்பிட்ட தனிப்பட்டவர் நிரந்தர வதிவிடத்தினை அல்லது பிரசாவுரிமைப் பெற்றுள்ள நாட்டிலுள்ள வெளிமுக முதலீட்டுக் கணக்கினூடாக வெளிமுக முதலீடுகளை மேற்கொண்டுள்ளமையினை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் அவதானிக்குமிடத்து அல்லது அவருக்கு அறிவிக்குமிடத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர், வெளிமுக முதலீட்டுக் கணக்கு, எவ்வதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் பேணப்படுகின்றதோ அவ்வணிகரிடமிருந்து அத்தகைய முதலீடுகளின் விபரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் அத்தகைய முதலீடுகளுக்காகச் செய்யப்பட்ட வெளிமுக பணவனுப்பல்களின் பெறுமதியினை அத்தகைய புலம்பெயர்பவரின் அவரின்/ அவளின் தகைமையுடைய புலம்பெயர் படிகளிலிருந்து கழித்துக் கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளிமுக முதலீட்டுக் கணக்கினை வதியாதோர் ரூபாக் கணக்கிற்கு மாற்றுவதனை இயலுமைப்படுத்தும் பொருட்டு வெளிமுக முதலீட்டுக் கணக்கு எவருடன் பேணப்படுகின்றதோ அந்த அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்கு குறிப்பிட்ட புலம்பெயர்பவரின் புலம்பெயர்வு பற்றியும் அறிவித்தல் வேண்டும்.

(ஐ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இத்திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பதிவு இலக்கம் அதேபோன்று மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கின் இலக்கம் என்பனவற்றிலிருந்து தனிப்பட்டவரை அடையாளம் காண்பதற்கான பொறிமுறையொன்றினை நடைமுறையில் வைத்திருத்தல் வேண்டும்.

(ஓ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், மேற்கொள்ளப்படவிருக்கும் குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்களின் சட்டபூர்வத் தன்மையினையும் நம்பகத்தன்மையினையும் நிறுவுவதற்காக இணைப்பு 2 மற்றும் இணைப்பு 3 (ஏற்புடைத்தானவிடத்து) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆவணங்கள் உள்ளிட்ட, பொருத்தமான விதத்தில் சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணச்சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் ஒழுங்குவிதிகளுக்கும் இப்பணிப்புரைகளுக்கும் இணங்கியொழுகுவதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும். அத்தகைய ஆவணச்சான்றுகளையும் பதிவேடுகளையும் (ஒன்றில் வன்பிரதியாக அல்லது இலத்திரனியல்/ டிஜிட்டல் வடிவில்) மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கு மூடப்படும் வரை நியதிச்சட்ட ரீதியாக பதிவேடுகளைப் பேணுகின்ற தேவைப்பாடுகளுக்கு அப்பாலும் பேணுதல் வேண்டும்.

**8. மூலதனக் கொடுக்கல்வாங்கல் கணக்குகளை மூடிவிடுதல்**

(அ) இப்பணிப்புரைகளின் பந்தி 2(உ)இன் கீழ் அனுமதிக்கப்பட்ட மரணமடைந்த ஆளின் சொத்துக்களை நிருவகிக்கின்றவர் அல்லது நிறைவேற்றுபவர் ஒருவர் தவிர்ந்த, தகைமையுடைய ஆட்கள் தொடர்பில் திறந்து பேணப்பட்டு வருகின்ற மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கினை மூடிவிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளரின் முன்னொப்புதலைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(ஆ) மரணமடைந்த ஆளின் சொத்துக்களை நிருவகிப்பவர் அல்லது நிறைவேற்றுபவர் ஒருவர் தொடர்பில் திறக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கினை, அத்தகைய மரணமடைந்த ஆளின் சொத்துக்களின் கீழ் இலங்கையில் மேற்கொள்கின்ற நிருவாக நடவடிக்கைகள் முடிவடைந்ததும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மூடிவிடுதல் வேண்டும்.

(இ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் மேலேயுள்ள 8(ஆ)இன் கீழ் குறிப்பிடப்பட்ட மூடுதல் பற்றி வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளருக்கு அத்தகைய மூடல் இடம்பெற்ற திகதியிலிருந்து மூன்று வேலை நாட்களுக்குள் CTRA@cbsl.lk. ஊடாக அறிவித்தல் வேண்டும்.

9. இப்பணிப்புரைகளின் அதிகாரவரம்பிற்குள் வராத ஏதேனும் நோக்கங்களுக்காக மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கிற்கான/ அல்லது கணக்கிலிருந்தான ஏதேனும் கொடுக்கல்வாங்கல்/ மாற்றல்களுக்காக வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளரின் முன்னொப்புதலைப் பெற்றுக்கொள்ளுமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**10. அறிக்கையிடும் தேவைப்பாடுகள்**

இப்பணிப்புரைகளின் இணைப்பு 4இன்படி, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மாதாந்த அடிப்படையில் அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ பணிப்பாளர், வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கு அறிக்கையொன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**11. இப்பணிப்புரைகளின் நோக்கங்களுக்காக**

(அ) **"புலம்பெயர்ந்தவர்"** என்பது 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (புலம்பெயர்ந்தவர்களினால் செய்யப்படும் நிதிய அனுப்பல்கள்) ஒழுங்குவிதிகளின் அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) **"உடனடிக் குடும்ப உறுப்பினர்"** என்பது 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (புலம்பெயர்ந்தவர்களினால் செய்யப்படும் நிதிய அனுப்பல்கள்) ஒழுங்குவிதிகளின் அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) **"பெற்றோர் புலம்பெயர்தல் திட்டம்"** என்பது 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (புலம்பெயர்ந்தவர்களினால் செய்யப்படும் நிதிய அனுப்பல்கள்) ஒழுங்குவிதிகளின் அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஈ) **"தற்காலிக வதிவிட விசா"** என்பது 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (புலம்பெயர்ந்தவர்களினால் செய்யப்படும் நிதிய அனுப்பல்கள்) ஒழுங்குவிதிகளின் அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஈ) **"புலம்பெயர்படி"** என்பது 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (புலம்பெயர்ந்தவர்களின் நிதிய அனுப்பல்கள்) ஒழுங்குவிதிகளின் (அதற்குச் செய்யப்பட்ட திருத்தங்களின்படி) அதேகருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஊ) **"பணவனுப்பல்கள்"** என்பது தந்தி மாற்றல்கள், ஏனைய வங்கிகளிடையேயான மாற்றல்கள், வங்கி வரைவுகள், ஏனைய கொடுப்பனவுச் சாதனங்கள், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு கொடுப்பனவுப் பொறிமுறைகள் அல்லது தளங்களூடாகப் பெறப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் நாணயத் தாள்கள் தவிர, வெளிநாட்டிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் பரிவர்த்தனைக் கம்பனிகளிலிருந்து/ இல்லங்களிலிருந்து பெறப்பட்ட நிதிகள் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

12. இப்பணிப்புரைகளினால் அனுமதிக்கப்பட்டதெதுவும், இப்பணிப்புரைகளின் கீழ், வெளிநாட்டுச் செலாவணி வணிகத்தில் ஈடுபடுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களை வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கான தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கின்றது, விடுவிக்கின்றது அல்லது தடுக்கின்றது எனப் பொருள்கோடலாகாது.

13. மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபா கணக்கு தொடர்பான தேவைப்பாடுகளைக் குறித்துரைக்கின்ற விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட 2017ஆம் ஆண்டு நவெம்பர் 20ஆம் திகதியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 08ஆம் இலக்கப் பணிப்புரைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

14. மேலேயுள்ள பந்தி 13இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள குறித்துரைக்கப்பட்ட முன்னைய பணிப்புரைகளின் இரத்தானது, இரத்துச் செய்யப்படுவதற்கு முன்னர் அவற்றின் கீழ் உறப்பட்ட ஏதேனும் உரிமைகள் அல்லது தண்டங்கள் அல்லது பொறுப்புக்களைப் பாதிப்பதாக இருக்கக்கூடாது.

15. இப்பணிப்புரைகளின் அனைத்து வரவுகளும் பற்றுக்களும் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

16. இப்பணிப்புரைகள் **2021 மாச்சு 22ஆம்** திகதியிலிருந்து தொழிற்பாட்டிற்கு வருதலாதல் வேண்டும்.

பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்
2021 மாச்சு 18

**2021ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கப் பணிப்புரைகளுக்கான இணைப்பு 1**

**வெளிநாட்டுச் செலாவணியினை விடுவிப்பதற்கான கோரிக்கை**

**மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்கு மற்றும் புலம்பெயர்ந்தவரின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கினைத் திறப்பதற்கான பதிவு இலக்கத்திற்கான கோரிக்கை**

1) மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்கு அல்லது புலம்பெயர்ந்தவரின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கு உடமையாளரின் விபரங்கள்

அ) முழுப் பெயர்: ........................................

ஆ) தேசிய அடையாள அட்டை இலக்கம் (இலங்கை): ........................................

இ) தனியாள் அடையாள அட்டை இலக்கம் (வெளிநாடு): ........................................

ஈ) தற்போதைய கடவுச்சீட்டு இலக்கம்: ........................................

உ) இலங்கை கடவுச்சீட்டு இல. (ஏதுமிருப்பின்): ........................................

ஊ) பிறந்த திகதி (நாள்/ மாதம்/ ஆண்டு): ....................பிறந்த இடம்:....................

எ) நிரந்தர வதிவிடத்தினைப் பெற்ற திகதி (நாள்/ மாதம்/ ஆண்டு): ........................................

ஏ) நிரந்தர வதிவிடம்/ பிரசாவுரிமை பெற்ற நாடு: ........................................

ஐ) திறக்கப்பட வேண்டிய கணக்கு (புலம்பெயர்ந்தவரின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கு அல்லது மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கு அல்லது இரண்டும்): ........................................

ஒ) கணக்கு உடமையாளரின் தகைமை வகை (தகைமையினைக் குறித்துரைக்கவும்): ........................................

2) அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் விபரங்கள்

அ) பெயர் : ........................................

ஆ) கிளை : ........................................

இ) கிளை முகவரி : ........................................

ஈ) மின்னஞ்சல் : ........................................

உ) கோரிக்கைவிடும் அலுவலரின் பெயர் : ........................................

ஊ) பதவி : ........................................

எ) தொடர்பு இல. நேரடி : ........................................

செல்லிடத் தொலைபேசி: ........................................

ஏ) திகதி மற்றும் கையொப்பம் : ........................................

குறிப்பு 1: அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மேலேயுள்ள இணைப்பு 1 தொடர்பான தகவல்களைத் துல்லியமாகவும் முழுமையாகவும் நிரப்பி சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

**2021ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கப் பணிப்புரைகளுக்கான இணைப்பு 2**

**புலம்பெயர் படிக்கான வெளிநாட்டுச் செலாவணியினை விடுவிக்கும் போது பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஆவணங்கள்**

i. புலம்பெயர்ந்தவரிடமிருந்தான வழமையான கோரிக்கையொன்று (அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் படிவமொன்றினைப் பேணுமாறு ஆலோசனை வழங்கப்படுகின்றனர்).

ii. தனியாள் அடையாள அட்டையின் பிரதியொன்று (வெளிநாடு).

iii. புலம்பெயர்ந்தவரின் பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று.

iv. நிரந்தர வதிவிடம், பிரசாவுரிமை (ஏதுமிருப்பின்) இரட்டைப் பிரசாவுரிமை (ஏதுமிருப்பின்) அதனை நிரூபிப்பதற்கான ஆவணங்கள்.

v. புலம்பெயர்ந்தவரின் தற்போதைய கடவுச்சீட்டின் அறிமுகப் பக்கத்தின் (ஏற்புடைத்தாயின்) பிரதிகள்.

vi. நிதியின் மூலம்/ மூலங்களை நிரூபிப்பதற்கான செல்லுபடியாகக்கூடிய ஆவணங்களை (உ-ம்: உறுதி மாற்றல் போன்றவை) ஒழுங்குவிதிகளில் அனுமதிக்கப்பட்டவாறு நன்கொடையாக இருக்குமாயின் நன்கொடை வழங்கியவருக்கும் புலம்பெயர்ந்தவருக்குமிடையிலான உறவுமுறையினை (உடனடிக் குடும்ப உறுப்பினரொருவர் என) நிரூபிப்பதற்கு பிறப்புச்சான்றிதழ்/ சான்றிதழ்கள் அல்லது திருமணச் சான்றிதழ் அல்லது வேறு ஏதேனும் ஆவணச்சான்றுகளின் (ஏற்புடைத்தானவிடத்து) உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் சேர்த்து நன்கொடையாளரினால் கையொப்பமிடப்பட்ட சம்மதக்கடிதத்தினை சமர்ப்பிப்பது கட்டாயமானதாகும்.

vii. அனுப்பப்பட வேண்டிய தொகைக்காக (உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் ஒழுங்குவிதிகளின்படி, கேட்டுக் கொள்ளப்படுமிடத்து) இலங்கை உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக்கொண்ட வரி இசைவுச்சான்றிதழொன்று.

viii. பின்வருவனவற்றைப் பிரகடனப்படுத்துகின்ற விதத்தில் சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சொலிசிஸ்டரினால் சரியாக முத்திரையிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட சத்தியக் கடதாசியொன்று.

(அ) ஆரம்ப படியான ஐ.அ.டொலர் 200,000 மற்றும் வருடாந்தப் படியான ஐ.அ.டொலர் 30,000 இனை விஞ்சி மாற்றல்கள் எதுவும் பொருத்தமானவாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இனிமேலும், மேற்கொள்ளப்படமாட்டாது. பிரகடனத் திகதிக்கு முன்னர் ஏதேனும் புலம்பெயர் படிகள் பயன்படுத்தப்பட்டிருப்பின் அதனைப் பிரகடனப்படுத்தல் வேண்டும்.

(ஆ) இலங்கைக்கு வெளியே முதலீடுகளைச் செய்யும்/ சொத்துக்களை கையேற்கும் நோக்கத்திற்காக மாற்றல்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. ஏதேனும் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அத்தகைய முதலீடுகளின் விபரங்களை (பணவனுப்பல் எந்த அதிகாரமளிக்கப்பட்ட வணிகரூடாக மேற்கொள்ளப்பட்டதோ அவரின் பெயர், பணவனுப்பல் திகதி, தொகை, நாணயம், கணக்கின் பெயர் மற்றும் இலக்கம், முதலீட்டின் தன்மை முதலீட்டினை பெறுபவரின் விபரங்கள் ஆவணச்சான்றுகளுடன் பிரகடனப்படுத்தல் வேண்டும்.

ix. வானூர்திப் பயணச்சீட்டின் பிரதியொன்று (ஏற்புடைத்தானவாறு).

x. புலம்பெயர்ந்தவரின் அட்டோர்ணித் தத்துவத்தின் பிரதியொன்று (ஏற்புடைத்தானவாறு).

xi. மேற்குறிப்பிட்டவை தவிர, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இப்பணிப்புரைகளின் பந்தி 7(ஒ)இல் தேவைப்படுத்தப்பட்டவாறு அவர்களது உள்ளக நடைமுறைகளைப் பின்பற்றும் பொருட்டு ஏதேனும் ஆவணச்சான்றுகளையும்/ தகவல்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

**2021ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கப் பணிப்புரைகளுக்கான இணைப்பு 3**

**இப்பணிப்புரைக்களின் கீழ் “இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கையரல்லாத ஒருவருக்கு" அனுமதிக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களுக்கான வெளிநாட்டுச் செலாவணியினை விடுவிக்கும் போது பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஆவணங்கள்**

i. விண்ணப்பதாரியிடமிருந்தான வழமையான கோரிக்கை (அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் படிவமொன்றினைப் பேணுமாறு ஆலோசனை வழங்கப்படுகின்றனர்).

ii. தனியாள் அடையாள அட்டையின் பிரதி (வெளிநாடு).

iii. விண்ணப்பதாரியின் தற்போதைய கடவுச்சீட்டின் அறிமுகப்பக்கத்தின் பிரதியொன்று.

iv. நிதியத்தின் மூலம்/ மூலங்களை நிரூபிப்பதற்கான செல்லுபடியாகக்கூடிய ஆவணங்களொன்று.

v. அனுப்பப்பட வேண்டிய தொகைக்கு இலங்கை உண்ணாட்டரசிறைத் ஆணையாளர் நாயகத்திடமிருந்தான (உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் ஒழுங்குவிதிகளின்படி தேவைப்படுத்தப்படின்) வரி இசைவுச்சான்றிதழொன்று.

vi. மேற்குறிப்பிடப்பட்டவை தவிர, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், இப்பணிப்புரையின் பந்தி 7(ஒ) இனால் தேவைப்படுத்தப்பட்டவாறு அவர்களது உள்ளக நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு ஏதேனும் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 17ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

புலம்பெயர்ந்தவரின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற நோக்கத்திற்காக கணக்குகளைத் திறந்து மற்றும் பேணிவருதல்) ஒழுங்குவிதிகளின் நியதிகளில் (ஒழுங்குவிதிகள்) மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 6 மற்றும் 7ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் நியதிகளில், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் புலம்பெயர்ந்த ஒருவரினால் இலங்கையில் பெறப்பட்ட நடைமுறை வருமானத்தினை வெளியில் அனுப்பும் நோக்கத்திற்காக அத்தகைய புலம்பெயர்ந்தவரினால் உலகளாவிய ரீதியில் பெறப்படும் நடைமுறை வருமானத்தினை அடையாளம் காண்பதற்கு புலம்பெயர்ந்தவர் எந்நாட்டில் நிரந்தரமாக வதிகின்றாரோ அந்நாட்டில் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் இருக்குமிடத்து மாத்திரம் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவில் புலம்பெயர்ந்தவரின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கினைப் பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு திறந்து மற்றும் பேணி வருவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

2. **தகைமையுடைய ஆட்கள்**

(அ) புலம்பெயர்ந்த ஒருவர்.

3. **புலம்பெயர்ந்தவரின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்குளைத் திறந்து மற்றும் பேணி வருதல்**

(அ) புலம்பெயர்ந்தவர் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கினைச் சேமிப்பு அல்லது நடைமுறை (மேலதிகப் பற்று வசதியில்லாமல்) கணக்குகள் வடிவில் இலங்கை ரூபாவில் திறந்து பேணி வரமுடியும்.

(ஆ) தகைமையுடைய ஆட்கள் வங்கித்தொழில் முறைமையில் புலம்பெயர்ந்தவரின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கொன்றினை மாத்திரம் திறக்க முடியும்.

(இ) மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்கினையும் புலம்பெயர்ந்தவர் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கினையும் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு வணிகரிடம் திறந்து மற்றும் பேணிவருதல் வேண்டும்.

(ஈ) வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட பதிவு இலக்கத்துடன் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கினை ஏற்கனவே திறந்துள்ள புலம்பெயர்ந்தவரின் பெயரில் புலம்பெயர்ந்தவர் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கினைத் திறக்கவும் பேணவும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் ஒருவர் அத்தகைய புலம்பெயர்ந்தவரின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கின் விபரங்களை (பதிவு இலக்கம், புலம்பெயர்ந்தவரின் பெயர், புலம்பெயர்ந்தவர் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கின் இலக்கம்) திறந்த திகதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் ஊவுசுயுளூஉடிளட.டம ஊடாக வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

4. **புலம்பெயர்ந்தவர் ஒருவர் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கொன்றினைத் திறப்பதற்கான நடைமுறை**

(அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், ஸ்கான் செய்யப்பட்ட பின்வரும் ஆவணங்கள் (ஏற்புடைத்தானவாறு) CTRA@cbsl.lk ஊடாக சமர்ப்பிக்கப்படுவதனைத் தொடர்ந்து, தகைமையுடைய ஆட்களுக்காக புலம்பெயர்ந்தவர் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கினைத் திறக்கும் வேளையில் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளரிடமிருந்து பதிவு இலக்கத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்;

(i) இணைப்பு Iஇன் பூரணப்படுத்தப்பட்ட படிவம்.

(ii) நடப்பிலுள்ள கடவுச்சீட்டின் அடையாளப்படுத்தும் பக்கம், மாற்றம் செய்யப்படும் பக்கம் மற்றும் அவதானப் பக்கங்களின் பிரதியொன்று.

(iii) நிரந்தர வதிவிட திகதி மற்றும் நாடு என்பனவற்றை நிரூபிக்கின்ற விதத்தில் நிரந்தர வதிவிடம் பற்றிய புறக்குறிப்பீடு அல்லது வேறு ஏதேனும் ஆவணச்சான்று/ சான்றுகளின் பிரதியொன்று.

(iv) பிரசாவுரிமை அல்லது இரட்டைப் பிரசாவுரிமைச் சான்றிதழின் பிரதியொன்று.

(v) புலம்பெயர்ந்தவர் இலங்கைக்கு வெளியே பிறந்திருப்பின் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று (ஏதேனுமிருப்பின்).

(ஆ) வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் பணிப்பாளரினால் வழங்கப்படும் பதிவு இலக்கம் கிடைக்கப்பெற்றதும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் புலம்பெயர்ந்தவர் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கினைத் திறத்தல் வேண்டும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட அதே பதிவிலக்கத்தின் கீழ் அதே கணக்கு உடமையாளரின் பெயரில் மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள்

ரூபாக் கணக்கொன்றினைத் திறக்க முடியும். வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட பதிவு இலக்கத்திற்காக புலம்பெயர்ந்தவர் ஏற்கனவே மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கொன்றினை வைத்திருந்து, புலம்பெயர்ந்தவர் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கொன்றினைத் திறப்பதற்குக் கோருமிடத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் புலம்பெயர்ந்தவர் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கொன்றினை அதே பதிவிலக்கத்தின் கீழ் திறப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றார்.

5. **அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) இலங்கையில் வதியுமொருவராக இருந்த வேளையில் புலம்பெயர்ந்தவரினால் சொந்தமாக்கப்பட்ட இலங்கையிலுள்ள ஏதேனும் சொத்துக்களிலிருந்து (அசையும், அசையாத உருவ மற்றும் அருவச் சொத்துக்கள் உட்பட) அல்லது இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் அத்தகைய புலம்பெயர்ந்தவரின் இலங்கை ரூபாக் கணக்கினூடான நிதிகளைப் பயன்படுத்திக் கொள்வனவு செய்யப்பட்ட ஏதேனும் சொத்துக்களிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் பெறுகைகள்.

(ஆ) இலங்கையில் வதியும் ஆளொருவரிடமிருந்து புலம்பெயர்ந்தவரினால் மரபுவழியாகப் பெறப்பட்ட இலங்கையிலுள்ள (அசையும், அசையாத, உருவ மற்றும் அருவச் சொத்துக்கள் உட்பட) ஏதேனும் சொத்துக்களிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் பெறுகைகள்.

(இ) இலங்கையில் வதியும் ஆளொருவராகவுள்ள உடனடிக் குடும்ப உறுப்பினரொருவரிடமிருந்து புலம்பெயர்ந்தவரினால் அன்பளிப்பாகப் பெறப்பட்ட இலங்கையிலுள்ள ஏதேனும் சொத்துக்களிலிருந்து (அசையும், அசையாத, உருவ மற்றும் அருவச் சொத்துக்ள் உட்பட) பெறப்பட்ட ஏதேனும் பெறுகைகள்.

(ஈ) மரபுவழியாகக் கிடைக்கப்பெற்ற அல்லது அன்பளிப்பாகப் பெறப்பட்ட அல்லது உடனடிக் குடும்ப உறுப்பினராகவுள்ள மற்றொரு புலம்பெயர்ந்தவரிடமிருந்து அவர் (அதாவது மாற்றல் செய்பவர்) இலங்கையில் வதியாத வேளையில் செய்த முதலீடுகளிலிருந்து புலம்பெயர்ந்தவரினால் மரபுவழியாகப் பெறப்பட்ட இலங்கையிலுள்ள ஏதேனும் சொத்துக்களிலிருந்து, இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் அவரின்/ அவளின் ரூபாக் கணக்கினூடாக அல்லது மாற்றல் செய்பவரினால் மரபுவழியாக அல்லது மாற்றல் செய்பவரினால் அன்பளிப்பாகப் பெறப்பட்ட அல்லது 2021ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவரினால் மேற்கொள்ளப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகளினால் (அதற்குச் செய்யப்பட்ட திருத்தங்களின்படி) அனுமதிக்கப்பட்டவாறு வதிவற்றோர் ரூபாக் கணக்கினூடாக மாற்றல் செய்பவராக அன்பளிப்பாகப் பெறப்பட்ட இலங்கையிலுள்ள (அசையும், அசையாத, உருவ மற்றும் அருவச் சொத்துக்கள் உள்ளடங்கலாக, தனியார் வெளிநாட்டு நாணய அல்லது உள்முக முதலீட்டுக் கணக்கு நீங்கலாக) ஏதேனும் சொத்துக்களிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் பெறுகைகள்.

(உ) கணக்கு உடமையாளரினால் வழங்கப்பட்ட பணிக்காக பெறப்பட்ட வருமானம்.

(ஊ) கணக்கு உடமையாளரின் ஓய்வுகால நன்மைகள் (ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், பணிக்கொடை மற்றும் ஓய்வூதியம் அல்லது வேறு ஏதேனும் ஓய்வுகால நன்மைகள் உட்பட)

(எ) கணக்கு உடமையாளரின் வதிவற்றோர் ரூபாக் கணக்கு அல்லது மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்குகளிலிருந்து கணக்கு உடமையாளருக்கு நடைமுறை வருமானமாக கிடைக்கின்ற மாற்றல்கள்.

(ஏ) கணக்கில் வைத்திருக்கப்படும் நிதிக்காக உழைக்கப்படும் வட்டி.

6. **அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) கணக்கு உடமையாளரின் பெயரிலான பணவனுப்பல்கள்.

(ஆ) அதே கணக்கு உடமையாளரின் உள்முக முதலீட்டுக் கணக்கு அல்லது தனியான வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவினால் பேணப்படும் கணக்கு அல்லது இலங்கைக்கு வெளியே பேணப்படும் கணக்குகளுக்கான மாற்றல்கள்.

(இ) மரணமடைந்த ஆளின் சொத்துக்களின் நிருவாகத்தர்/ நிறைவேற்றுநரின் மூலதனக் கொடுக்கல்வாங்கல் கணக்கிற்கான நிதிய மாற்றல் (அதாவது கணக்கு உடமையாளர்).

(ஈ) 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கப் பணிப்புரையின் கீழ் (அதற்குச் செய்யப்பட்ட திருத்தங்களின்படி) கணக்கு உடமையாளரினால் பெறப்பட்ட கடன்கள் தொடர்பான கொடுப்பனவுகள்.

(உ) 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க பணிப்புரைகளின் (அதற்குச் செய்யப்பட்ட திருத்தங்களின்படி) நியதிகளில் வழங்கப்பட்ட கணக்கு உடமையாளரின் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளின் தீர்ப்பனவிற்கான கொடுப்பனவுகள்.

(ஊ) இலங்கை ரூபாவில் இலங்கையில் செய்யப்படும் பகிர்ந்தளிப்புக்கள்.

7. **ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள்**

(அ) தகைமையுடைய ஆட்கள் தொடர்பில் புலம்பெயர்ந்தவர் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கிற்கு வழங்கப்பட்ட கணக்கு இலக்கத்தினை அது வழங்கப்பட்டதனை உடனடுத்து ஊவுசுயுளூஉடிளட.டம ஊடாக வெளிநாட்டுச் செலாவணித்

திணைக்களப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

(ஆ) இப்பணிப்புரைகளின் 5(எ)ஆம் துணைப்பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றும் பொழுது, வதியாதோர் ரூபாக் கணக்கு அல்லது மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கு பேணப்படுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகரிடமிருந்து நிதியத்தின் மூலம் தொடர்பான உறுதிப்படுத்தலை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(இ) புலம்பெயர்ந்தவர் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கினை திறக்கின்ற தேவைப்பாடுகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் திருப்திக்காக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் ஆவணச்சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(ஈ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் புலம்பெயர்ந்தவர் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கினூடாக மேற்கொள்ளப்படவுள்ள கொடுக்கல்வாங்கல்களின் சட்டபூர்வ தன்மையினையும் நம்பகத்தன்மையினையும் நிறுவுவதற்காக பொருத்தமான சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணச்சான்றுகளை (தேவைப்பட்டவாறு) பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் ஒழுங்குவிதிகளுக்கும் இப்பணிப்புரைகளுக்கும் இணங்கிக் கொள்வதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(உ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இத்திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பதிவிலக்கம் அதேபோன்று புலம்பெயர்ந்தவர் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கு இலக்கம் என்பனவற்றிலிருந்து தனிப்பட்டவர்களை அடையாளம் கண்டு கொள்வதற்கான பொறிமுறையொன்றினை நடைமுறையில் வைத்திருத்தல் வேண்டும்.

(ஊ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் புலம்பெயர்ந்தவர் வைத்திருக்கும் புலம்பெயர்ந்தவர் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கினூடாக செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலான ஆவணச்சான்றுகள் (ஒன்றில் வன்பிரதியாக அல்லது இலத்திரனியல்/ டிஜிட்டல் படிவம்) கணக்கு பேணப்படும் காலப்பகுதியில் சட்ட ரீதியாக பதிவேடுகள் பேணப்படுவதற்கு தேவைப்படுத்துப்படும் காலப்பகுதிக்கு அப்பாலும் பேணுதல் வேண்டும்.

**8. புலம்பெயர்ந்தவர் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்குகளை மூடிவிடுதல்**

(அ) கணக்கு உடமையாளர் அவர்/ அவள் எதிர்காலத்தில் புலம்பெயர்ந்தவர் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கினைத் திறப்பதற்கு கோரமாட்டார்கள் என்ற உறுதிப்படுத்தலைப் பெற்றுக்கொண்டமையினைத் தொடர்ந்து கணக்கு உடமையாளரின் கோரிக்கையின்படி புலம்பெயர்ந்தவர் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்குகளை மூடிவிடலாம். அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட முன்னைய பதிவு இலக்கத்தின் கீழ் அதே கணக்கு உடமையாளரின் பெயரில் மற்றுமொரு புலம்பெயர்ந்தவர் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கினைத் திறப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அவ்வாறு கணக்கு மூடப்பட்ட திகதியிலிருந்து மூன்று வேலை நாட்களுக்குள் அது பற்றி ஊவுசுயுளுஉடிஎட.டம ஊடாக மின்னஞ்சல் செய்வதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

9. இப்பணிப்புரைகளின் அதிகாரவரம்பிற்குள் வராத ஏதேனும் நோக்கங்களுக்காக புலம்பெயர்ந்தவர் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கிற்கு அல்லது கணக்கிலிருந்தான ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள்/ மாற்றல்களுக்காக வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளரின் முன்னொப்புதலைப் பெற்றுக்கொள்ளுமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**10. அறிக்கையிடும் தேவைப்பாடுகள்**

இப்பணிப்புரைகளின் இணைப்பு 2இன்படி, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மாதாந்த அடிப்படையில் அறிக்கையொன்றினை அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ பணிப்பாளர், வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**11. இப்பணிப்புரைகளின் நோக்கத்திற்காக**

(அ) “புலம்பெயர்ந்தவர்” என்பது பராயமடையாதவர் உட்பட, மற்றொரு நாட்டில் நிரந்தர வதிவிட அந்தஸ்தினை அல்லது பிரசாவுரிமையினைப் பெற்றுள்ள இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்டுள்ள இரட்டைப் பிரசாவுரிமையினைக் கொண்டுள்ளவரும் (இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்டவர் என்பதன் கருத்து குறைந்தபட்சம் பெற்றோரில் ஒருவர் இலங்கையில் பிறந்தவர் என்பதாகும்) இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட இலங்கைக்கு வெளியே வதிகின்றவரும் இலங்கையில் தனது பிறப்பினைப் பதிவுசெய்து கொண்டுள்ளவருமான ஒருவர் எனப் பொருள்படும்.

(ஆ) “பணவனுப்பல்கள்” என்பது தந்தி மாற்றல்கள், ஏனைய வங்கிகளிடையேயான மாற்றல்கள், வங்கி வரைவுகள், ஏனைய கொடுப்பனவுச் சாதனங்கள், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு கொடுப்பனவுப் பொறிமுறைகள் அல்லது தளங்களூடாகப் பெறப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் நாணயத் தாள்கள் தவிர, வெளிநாட்டிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் பரிவர்த்தனைக் கம்பனிகளிலிருந்து/ இல்லங்களிலிருந்து பெறப்பட்ட நிதிகள் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(இ) “உடனடிக் குடும்ப உறுப்பினர்” என்பது 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (புலம்பெயர்ந்தவர்களினால்

செய்யப்படும் நிதிய அனுப்பல்கள்) ஒழுங்குவிதிகளின் அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

12. இப்பணிப்புரைகளினால் அனுமதிக்கப்பட்டதெதுவும், இப்பணிப்புரைகளின் கீழ், வெளிநாட்டுச் செலாவணி வணிகத்தில் ஈடுபடுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களை வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கான தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கின்றது, விடுவிக்கின்றது அல்லது தடுக்கின்றது எனப் பொருள்கோடலாகாது.

13. இப்பணிப்புரைகளின் அனைத்து வரவுகளும் பற்றுக்களும் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

14. இப்பணிப்புரைகள் 2021 மாச்சு 22ஆம் திகதியிலிருந்து தொழிற்பாட்டிற்கு வருதலாதல் வேண்டும்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**
**2021 மாச்சு 18**

**2021ஆம் ஆண்டின் 17ஆம் இலக்கப் பணிப்புரைகளுக்கான இணைப்பு 1**

**வெளிநாட்டுச் செலாவணியினை விடுவிப்பதற்கான கோரிக்கை**

**மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்கு மற்றும் புலம்பெயர்ந்தவரின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கினைத் திறப்பதற்கான பதிவு இலக்கத்திற்கான கோரிக்கை**

1) <u>மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்கு அல்லது புலம்பெயர்ந்தவரின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கு உடமையாளரின் விபரங்கள்</u>

அ) முழுப் பெயர்: ..........

ஆ) தேசிய அடையாள அட்டை இலக்கம் (இலங்கை): ..........

இ) தனியாள் அடையாள அட்டை இலக்கம் (வெளிநாடு): ..........

ஈ) தற்போதைய கடவுச்சீட்டு இலக்கம்: ..........

உ) இலங்கை கடவுச்சீட்டு இல. (ஏதுமிருப்பின்): ..........

ஊ) பிறந்த திகதி (நாள்/ மாதம்/ ஆண்டு): ..........

எ) நிரந்தர வதிவிடத்தினைப் பெற்ற திகதி (நாள்/ மாதம்/ ஆண்டு): ..........

ஏ) நிரந்தர வதிவிடம்/ பிரசாவுரிமை பெற்ற நாடு: ..........

ஐ) திறக்கப்பட வேண்டிய கணக்கு (புலம்பெயர்ந்தவரின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கு அல்லது மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கு அல்லது இரண்டும்): ..........

ஒ) கணக்கு உடமையாளரின் தகைமை வகை (தகைமையினைக் குறித்துரைக்கவும்): ..........

2) <u>அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் விபரங்கள்</u>

அ) பெயர் : ..........

ஆ) கிளை : ..........

இ) கிளை முகவரி : ..........

ஈ) மின்னஞ்சல் : ..........

உ) கோரிக்கைவிடும் அலுவலரின் பெயர் : ..........

ஊ) பதவி : ..........

எ) தொடர்பு இல. நேரடி : ..........

செல்லிடத் தொலைபேசி: ..........

ஏ) திகதி மற்றும் கையொப்பம் : ..........

குறிப்பு 1: அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மேலேயுள்ள இணைப்பு 1 தொடர்பான தகவல்களைத் துல்லியமாகவும் முழுமையாகவும் நிரப்பி சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

## 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கப் பணிப்புரைகள்

வதிவற்றோர் ரூபாக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற நோக்கத்திற்காக கணக்குகளைத் திறந்து மற்றும் பேணிவருதல்) ஒழுங்குவிதிகளின் நியதிகள் (ஒழுங்குவிதிகள்) மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 6 மற்றும் 7ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் நியதிகளில், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவில் வதிவற்றோர் ரூபாக் கணக்குகளைத் திறந்து மற்றும் பேணி வருவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

2. **தகைமையுடைய ஆட்கள்**

(அ) இலங்கையில் அல்லது வெளியே வதியும் புலம்பெயர்ந்தவரொருவர்.

(ஆ) இலங்கைக்கு வெளியே நிறுவப்பட்ட/ கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமொன்று அல்லது கம்பனியொன்று.

3. **வதிவற்றோர் ரூபாக் கணக்குளைத் திறந்து மற்றும் பேணிவருதல்**

(அ) வதிவற்றோர் ரூபாக் கணக்குகளை இலங்கை ரூபாவில் சேமிப்பு, அல்லது நடைமுறை (மேலதிக எடுப்பனவு வசதியில்லாமல்) அல்லது கால வைப்புக்கள் வடிவில் திறந்து பேணி வரமுடியும்.

(ஆ) வதிவற்றோர் ரூபாக் கணக்கினைத் தனியொரு கணக்காகப் பேணி வருதல் வேண்டும் என்பதுடன் புலம்பெயர்ந்தவரினால் பேணப்படும் வதிவற்றோர் ரூபாக் கணக்கினை மற்றொரு புலம்பெயர்ந்தவருடன் கூட்டாகவும் பேணலாம்.

(இ) 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளினால் இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்ற மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகளின் அட்டவணை ஐ இன் தலைப்பு 'அ' இன் கீழ், 4(7)ஆம் துணைப்பந்தியின் கீழ் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்ற எதிர்பார்க்கும் இலங்கைக்கு வெளியே நிறுவப்பட்டுள்ள கூட்டிணைக்கப்பட்டுள்ள நிறுவனம் அல்லது கம்பனி அத்தகைய நோக்கங்களுக்காக, வங்கித்தொழில் முறைமையில் ஒரு வதியாதோர் ரூபாக் கணக்கினைத் திறப்பதற்கு தகைமையுடையனவாகும்.

(ஈ) மத்திய வங்கியினால் பதிவிலக்கம் வழங்கப்பட்டிருக்கின்ற கணக்குகள் தவிர்ந்த, அனைத்து மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்குகளும் மீளப்பெயர் குறித்துரைக்கப்பட்டு, இவ்வொழுங்குவிதிகளின் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் வதிவற்றோர் ரூபாக் கணக்குகளாகத் தொடர்ந்தும் தொழிற்படுத்தப்படல் வேண்டும்.

(உ) நிரந்தர வதிவிட அந்தஸ்தினைப் பெற்றுக்கொண்ட நாட்டில் நிரந்தரமாகக் குடியேறும் நோக்கத்துடன் இலங்கையை விட்டுப் புறப்படுவதற்கு எதிர்பார்க்கும் புலம்பெயர்கின்ற அவர்/ அவளினால் பேணப்பட்ட அனைத்து இலங்கை ரூபாக் கணக்குகளையும் மீளப்பெயர் குறித்துரைக்கப்பட்டு, அவர்/ அவளின் புலம்பெயர்தல் பற்றி அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அறிவித்தலைப் பெற்றதும் அல்லது அறிய வந்ததும் உடனடியாக வதிவற்றோர் ரூபாக் கணக்குகளாகக் கருதி தொடர்ந்தும் தொழிற்படுத்தி வருதல் வேண்டும்.

4. மற்றொரு நாட்டினால் வழங்கப்பட்ட நிரந்தர வதிவிட விசாவொன்றின் கீழ் புலம்பெயர்வதற்கான வாய்ப்புக்களைக் கொண்டுள்ள தனிப்பட்ட இலங்கையரொருவரினால் பேணப்பட்ட அனைத்து இலங்கை ரூபாக் கணக்குகளையும் வதிவற்றோர் ரூபாக் கணக்குகளாக மீளக் குறித்துரைக்கின்ற நடைமுறைகள்;

(அ) அவர்/ அவள் நிரந்தர வதிவிட அந்தஸ்தினைப் பெற்றுக்கொண்ட நாட்டில் நிரந்தரமாகக் குடியேறும் நோக்கத்துடன் இலங்கையை விட்டுப் புறப்படுவதற்கு எதிர்பார்க்கும் புலம்பெயர்கின்றவரால் "ஏகக் கணக்காக அல்லது கூட்டுக் கணக்காகப்" பேணப்பட்ட ஏதேனும் இலங்கை ரூபாக் கணக்கினை மீளப்பெயர் குறித்துரைக்கப்பட்டு, வதிவற்றோர் ரூபாக் கணக்குகளாகக் கருதி தொடர்ந்தும் தொழிற்படுத்தி வருதல் வேண்டும்.

(ஆ) அவர்/ அவள் நிரந்தர வதிவிட அந்தஸ்தினைப் பெற்றுக்கொண்ட நாட்டில் நிரந்தரமாகக் குடியேறும் நோக்கத்திற்காக இலங்கையை விட்டுப் புறப்பட எதிர்பார்க்கும் புலம்பெயருமொருவரினால் இலங்கையில் வதியும் இன்னொருவருடன் சேர்ந்து "கூட்டுக் கணக்காக" பேணப்பட்ட ஏதேனும் இலங்கை ரூபாக் கணக்கினை மூடிவிட்டு குறிப்பிட்ட புலம்பெயர்கின்றவர் தேவையானவிடத்து வதியாதோர் ரூபாக் கணக்கினைத் திறக்க முடியும். அத்தகைய இலங்கை ரூபாக் கணக்கிலுள்ள மீதித் தொகையினை, வழமையான வங்கித்தொழில் வியாபார நடைமுறைக்குட்பட்டு புலம்பெயர்வதற்கான வாய்ப்புக்களைக் கொண்டவரினால் திறக்கப்படவுள்ள வதியாதோர் ரூபாக் கணக்கிற்கு மாற்றல் செய்தல் வேண்டும்.

(இ) அவர்/ அவள் நிரந்தர வதிவிட அந்தஸ்தினைப் பெற்றுக்கொண்ட நாட்டில் நிரந்தரமாகக் குடியேறும் நோக்கத்திற்காக இலங்கையை விட்டு புறப்பட எதிர்பார்க்கும் புலம்பெயரும் ஒருவரினால் மற்றொரு புலம்பெயரும் ஒருவருடன் சேர்ந்து "கூட்டுக் கணக்காகப்" பேணப்படும் ஏதேனும் இலங்கை ரூபாக் கணக்கினை மீளப்பெயர் குறித்துரைத்து வதியாதோர் ரூபாக் கணக்காகத் தொடர்ந்தும் தொழிற்படுத்திவரல் வேண்டும்.

(ஈ) அவர்/ அவள் நிரந்தர வதிவிட அந்தஸ்தினைப் பெற்றுக்கொண்ட நாட்டில் நிரந்தரமாகக் குடியேறும் நோக்கத்திற்காக,

இலங்கையைவிட்டு புறப்பட எதிர்பார்க்கும் புலம்பெயரும் ஒருவரினால் பேணப்படும் வெளிமுக முதலீட்டுக் கணக்குகளை, அவரின்/ அவளின் புலம்பெயர்தல் அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்கு அறிவிக்கப்பட்டதும் அல்லது தெரியவந்ததும் உடனடியாக நடைமுறைக்குவரும் விதத்தில் வதியாதோர் ரூபாக் கணக்குகளாக மாற்றி தொடர்ந்தும் தொழிற்படுத்தல் வேண்டும். அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வெளிமுக முதலீட்டுக் கணக்குகள், வதியாதோர் ரூபாக் கணக்காக மாற்றப்பட்டமை பற்றி (வெளிமுகப் பணவனுப்பல் தொகை, அவர்/ அவள் நிரந்தர வதிவிட அந்தஸ்தினைப் பெற்றிருக்கின்ற நாட்டில் செய்யப்பட்ட அனைத்து முதலீடுகளினதும் பணவனுப்பல்களின் திகதி போன்ற விபரங்கள் உட்பட) அவ்வாறு மாற்றப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் dfem@cbsl.lk ஊடாக வெளிநாட்டுச் செலாவணிப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

5. **அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) இலங்கையில் உள்நாட்டுப் பகிர்ந்தளிப்புக்களின் நோக்கத்திற்காக, வங்கித்தொழில் முறைமையினூடாக கணக்கு உடமையாளரின் பெயரில் இலங்கைக்கு வெளியிலிருந்து பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலமைந்த பணவனுப்பல்கள்.

(ஆ) கணக்கு உடமையாளர் புலம்பெயர்ந்த ஒருவராக இருக்குமிடத்து;

(i) இலங்கையில் வதிபவராக இருந்த வேளையில், புலம்பெயர்ந்தவரினால் சொந்தமாகப் பெறப்பட்ட அல்லது ஒழுங்குவிதிகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் அத்தகைய புலம்பெயர்ந்தவரின் இலங்கை ரூபாக் கணக்கின் மூலமாகக் கிடைத்த நிதியினைப் பயன்படுத்திக் கொள்வனவு செய்யப்பட்ட அல்லது 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கையில் வதியும் ஆளினால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகளினால் அனுமதிக்கப்பட்ட கணக்கினூடாக நிதியிடப்பட்டமையின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட இலங்கையிலுள்ள ஏதேனும் சொத்துக்களிலிருந்து (அசையும், அசையாத, உருவ மற்றும் அருவச் சொத்துக்கள் உட்பட) பெறப்பட்ட ஏதேனும் பெறுகைகள்.

(ii) இலங்கையில் வதியுமாளொருவரிடமிருந்து புலம்பெயர்ந்தவரொருவரினால் மரபுரிமையாக (அசையும், அசையாத, உருவ மற்றும் அருவச் சொத்துக்கள் உட்பட) பெறப்பட்ட இலங்கையிலுள்ள ஏதேனும் சொத்துக்களிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் பெறுகைகள்.

(iii) இலங்கையில் வதியுமாளொருவராகவுள்ள உடனடிக் குடும்ப உறுப்பினரிடமிருந்து புலம்பெயர்ந்தவரினால் அன்பளிப்பாகப் பெறப்பட்ட (அசையும் அசையாத, உருவ மற்றும் அருவச் சொத்துக்கள் உட்பட) இலங்கையிலுள்ள ஏதேனும் சொத்துக்களிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் பெறுகைகள்.

(iv) இலங்கையில் வதியுமொருவராக இருந்த வேளையில் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து உடனடிக் குடும்ப அங்கத்தவராகவுள்ள (அதாவது மாற்றல் செய்பவர்) மற்றொரு புலம்பெயர்ந்தவரிடமிருந்து புலம்பெயர்ந்தவருக்கு அல்லது புலம்பெயர்ந்தவரினால் மரபுரிமையாக அல்லது அன்பளிப்பாகப் பெறப்பட்ட அல்லது ஒழுங்குவிதிகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னதாக அவரின்/ அவளின் இலங்கை ரூபாக் கணக்குகளினூடாகச் செய்யப்பட்ட அல்லது மாற்றல் செய்பவரினால் மரபுரிமையாக வழங்கப்பட்ட அல்லது மாற்றல் செய்பவரினால் அன்பளிப்பொன்றாகப் பெறப்பட்ட அல்லது 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவரினால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகளினால் அனுமதிக்கப்பட்டவாறான மாற்றல்களின் வதியாதோர் ரூபாக் கணக்கினூடாகச் செய்யப்பட்ட இலங்கையிலுள்ள ஏதேனும் சொத்துக்களிலிருந்து (அசையும், அசையாத, உருவ மற்றும் அருவச்சொத்துக்கள் உட்பட) பெறப்பட்ட ஏதேனும் பெறுகைகள்.

(v) இப்பணிப்புரைகளின் 5(ஆ)(i)ஆம் துணைப்பந்தியிலிருந்து 5(ஆ)(iv)ஆம் துணைப்பந்தி வரை குறிப்பிடப்பட்டவாறு, புலம்பெயர்ந்தவரினால் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து, அல்லது, மரபுரிமையாக அல்லது அன்பளிப்பாகப் பெறப்பட்ட ஏதேனும் வருமானம்.

(vi) கணக்கு உடமையாளரின் ஓய்வுகால நன்மைகள் (ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், பணிக்கொடை மற்றும் ஓய்வூதியம் அல்லது வேறு ஏதேனும் ஓய்வுகால நன்மைகள்).

(இ) கணக்கு உடமையாளர் இலங்கைக்கு வெளியே நிறுவப்பட்ட/ கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமொன்றாக அல்லது கம்பனியொன்றாக இருக்குமிடத்து;

(i) ஆவணச்சான்றுகளைச் சரிபார்த்தல் மற்றும் கொடுக்கல்வாங்கல்களின் நம்பகத்தன்மையினை நிறுவுதல் என்பனவற்றிற்குட்பட்டு நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களிலிருந்து பெறப்பட்ட உள்நாட்டு வருமானம்

(ii) 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியே வதியுமாளொருவரினால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகளின் அட்டவணை ஐஇன் ' அ' தலையங்கத்தின் கீழ் துணைப்பந்தி 4(7)ஆம் துணைப்பந்தியின் கீழ் அனுமதிக்கப்பட்டவாறு முதலீடுகளின் ஏதேனும் வருமானம் அல்லது ஏதேனும் முதலீட்டுப் பெறுகைகள்.

(ஈ) கணக்கில் வைக்கப்பட்டுள்ள நிதியத்தின் மீது உழைக்கப்பட்ட வட்டி.

6. **அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) கணக்கு உடமையாளர் புலம்பெயர்ந்தவரொருவருராக இருக்குமிடத்து;

(i) 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவரினால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகளினால் அனுமதிக்கப்பட்டவாறு முதலீடுகளுடன் தொடர்பான கொடுப்பனவுகள்.

(ii) கணக்கு உடமையாளரின் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கிற்கான மாற்றல்கள்.

(iii) 5(ஆ)(v)ஆம் பந்தியின் கீழ், கணக்கு உடமையாளரின் புலம்பெயர்ந்தவர் பணவனுப்பத்தக்க வருமானக் கடன்களுக்கு வரவு வைக்கப்பட்ட கணக்கு உடமையாளரின் நடைமுறை வருமானத்திலிருந்தான மாற்றல்கள்.

(iv) மரணமடைந்த ஆளொருவரினது (அதாவது கணக்கு உடமையாளர்) சொத்துக்களின் நிருவாகத்தவர்/ நிறைவேற்றுநராகவுள்ளவரின் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கிற்கான நிதியத்தின் மாற்றல்.

(ஆ) கணக்கு உடமையாளர் இலங்கைக்கு வெளியே நிறுவப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமொன்றாக அல்லது கம்பனியொன்றாக இருக்குமிடத்து;

(i) இப்பணிப்புரைகளின் 5இ(i)ஆம் பந்தி மற்றும் 5(ஈ)ஆம் பந்தி ஆகியவற்றின் கீழ் வரவு வைக்கப்பட்ட நிதிகளின் பணவனுப்பல்கள்.

(ii) இப்பணிப்புரைகளின் 5(இ)(ii)ஆம் பந்தியின் கீழ் வரவு வைக்கப்பட்ட நிதிகளிலிருந்து கணக்கு உடமையாளரின் உள்முக முதலீட்டுக் கணக்கு அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கிற்கு அல்லது இலங்கைக்கு வெளியே பேணப்படும் கணக்கொன்றிற்கான ஆண்டொன்றிற்கு ஐ.அ.டொலர் 30,000 கொண்ட பணவனுப்பல்/ மாற்றல்.

(இ) இலங்கை ரூபாவில் இலங்கையில் செய்யப்படும் பகிர்ந்தளிப்புக்கள்.

7. **ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள்**

(அ) 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியே வதியுமாளொருவரினால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகளில் அனுமதிக்கப்பட்டவாறு வதியாதோர் ரூபாக் கணக்கினூடாகச் செய்யப்பட்ட அத்தகைய முதலீடுகளின் அனைத்து வருமானமும் மூலதனப் பெறுகைகளும் இம்முதலீடுகள் எதனூடாகச் செய்யப்பட்டதோ அந்த வதியாதோர் ரூபாக் கணக்கிற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) இப்பணிப்புரைகளின் 6(அ)(ii) இலிருந்து 6(அ)(iv) வரையான துணைப்பந்திகளின் கீழ் கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றும் பொழுது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் நிதியத்தின் மூலம் தொடர்பான உறுதிப்படுத்தலை மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கு அல்லது புலம்பெயர்ந்தவர் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்கு பேணப்படுகின்ற பெறுநரான அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

(இ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துகின்ற சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணரின் திருப்திக்காக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் ஆவணச்சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(i) இப்பணிப்புரைகளின் 3இ(i)ஆம் துணைப்பந்தியின் கீழ் வதிவற்றோர் ரூபாக் கணக்கினைத் திறக்கின்ற போது மற்றொரு அதிகாரமளிக்கப்பட்ட வணிருடன் வதிவற்றோர் ரூபாக் கணக்கினைத் திறக்கக்கூடாது.

(ii) ஏதேனும் சந்தர்ப்பத்தில் அ(i)இன் கீழ் குறிப்பிடப்பட்ட பிரகடனம் தவறாக இருக்குமிடத்து எதிர்காலப் பணவனுப்பல்களை ஏற்றுக்கொள்வதனை கைவிடல் வேண்டும்.

(ஈ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வதிவற்றோர் ரூபாக் கணக்கினூடாக மேற்கொள்ளப்படவுள்ள கொடுக்கல்வாங்கல்களின் சட்டபூர்வ தன்மையினையும் நம்பகத்தன்மையினையும் நிறுவுவதற்காக பொருத்தமான சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணச்சான்றுகளை (தேவைப்பட்டவாறு) பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் ஒழுங்குவிதிகளுக்கும் இப்பணிப்புரைகளுக்கும் இணங்கிக் கொள்வதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(உ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் புலம்பெயர்ந்தவர்களினால் வைத்திருக்கப்பட்ட வதிவற்றோர் ரூபாக் கணக்கினூடாக செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலான ஆவணச்சான்றுகளை (ஒன்றில் வன்பிரதியாக அல்லது இலத்திரனியல்/ டிஜிட்டல் படிவம்) கணக்குப் பேணப்படும் காலப்பகுதியில், சட்ட ரீதியாக பதிவேடுகள் பேணப்படுவதற்குத் தேவைப்படுத்துப்படும் காலப்பகுதிக்கு அப்பாலும் பேணுதல் வேண்டும்.

8. **வதிவற்றோர் ரூபாக் கணக்குகளை மூடிவிடுதல்**

(அ) வதிவற்றோர் ரூபாக் கணக்கினூடாக மேற்கொள்ளப்பட்ட அனைத்து முதலீடுகளும் (ஏதேனுமிருப்பின்) அகற்றப்பட்டு/ ஒடுக்கப்பட்டு இருக்குமிடத்தும் அத்தகைய பெறுகைகள் கணக்கு உடமையாளரின் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக்

கணக்கிற்கு மாற்றல் செய்யப்பட்டிருக்குமிடத்து, கணக்கு உடமையாளரின் கோரிக்கையின் அடிப்படையில் வதிவற்றோர் ரூபாக் கணக்கினை மூடிவிடலாம்.

(ஆ) அத்தகைய மூடப்பட்ட திகதியிலிருந்து ஒரு வார காலத்திற்குள் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அத்தகைய மூடல் பற்றி வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளருக்கு னகநஅளூஉடிளட.டம இற்கு மின்னஞ்சல் மூலம் அறிவித்தல் வேண்டும்.

9. இப்பணிப்புரைகளின் அதிகாரவரம்பிற்குள் வராத ஏதேனும் நோக்கங்களுக்காக வதிவற்றோர் ரூபாக் கணக்குகளுக்கு/ கணக்குகளிலிருந்தான ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களை/ மாற்றல்களைச் செய்வதற்கு வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளரின் முன்னொப்புதலைப் பெறுமாறு தேவைப்படுத்தப்படுகின்றன.

**10. அறிக்கையிடும் தேவைப்பாடுகள்**

(அ) இப்பணிப்புரைகளின் இணைப்பின்படி, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மாதாந்த அடிப்படையில் அறிக்கையொன்றினை அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ பணிப்பாளர், வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கு dfem@cbsl.lk என்ற மின்னஞ்சல் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியே வதியுமாளொருவரினால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகளில் அட்டவணை ஐஇன் தலையங்கம் ‘அ’ இன் கீழுள்ள 4(7)ஆம் துணைப்பந்தியின் கீழ் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட/ நிறுவப்பட்ட நிறுவனத்தினால்/ கம்பனியினால் திறக்கப்பட்ட வதிவற்றோர் ரூபாக் கணக்கின் விபரங்களை (கணக்கு உடமையாளரின் பெயர் மற்றும் முகவரி, அந்நாட்டிலுள்ள நிறுவனத்தின்/ கம்பனியின் பதிவிலக்கம், கணக்கு இலக்கம்) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், கணக்கு திறக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் சமர்ப்பித்தல் வேண்டும்.

**11. இப்பணிப்புரைகளின் நோக்கத்திற்காக**

(அ) “புலம்பெயர்ந்தவர்” என்பது 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (புலம்பெயர்ந்தவர்களினால் செய்யப்படும் நிதிய அனுப்பல்கள்) ஒழுங்குவிதிகளின் அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) “பணவனுப்பல்கள்” என்பது தந்தி மாற்றல்கள், ஏனைய வங்கிகளிடையேயான மாற்றல்கள், வங்கி வரைவுகள், ஏனைய கொடுப்பனவுச் சாதனங்கள், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு கொடுப்பனவுப் பொறிமுறைகள் அல்லது தளங்களூடாகப் பெறப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் நாணயத் தாள்கள் தவிர, வெளிநாட்டிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் பரிவர்த்தனைக் கம்பனிகளிலிருந்து/ இல்லங்களிலிருந்து பெறப்பட்ட நிதிகள் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(இ) “உடனடிக் குடும்ப உறுப்பினர்” என்பது 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (புலம்பெயர்ந்தவர்களினால் செய்யப்படும் நிதிய அனுப்பல்கள்) ஒழுங்குவிதிகளின் அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

12. இப்பணிப்புரைகளினால் அனுமதிக்கப்பட்டதெதுவும், இப்பணிப்புரைகளின் கீழ், வெளிநாட்டுச் செலாவணி வணிகத்தில் ஈடுபடுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களை வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கான தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கின்றது, விடுவிக்கின்றது அல்லது தடுக்கின்றது எனப் பொருள்கோடலாகாது.

13. இப்பணிப்புரைகளின் அனைத்து வரவுகளும் பற்றுக்களும் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

14. இப்பணிப்புரைகள் 2021 மாச்சு 22ஆம் திகதியிலிருந்து தொழிற்பாட்டிற்கு வருதலாதல் வேண்டும்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**
**2021 மாச்சு 18**

**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 19ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

வெளிநாட்டு வர்த்தக கடன்பாட்டுக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியே வதியுமாளொருவரினால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகளின் நியதிகளில் (ஒழுங்குவிதிகள்) மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 6 மற்றும் 7ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட

வேண்டிய வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் நியதிகளில், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவில் வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுக் கணக்குகளைத் திறந்து மற்றும் பேணி வருவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

2. தகைமையுடைய ஆட்கள்

(அ) 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனிகள்.

3. வெளிநாட்டு வர்த்தக கடன்பாட்டுக் கணக்குகளைத் திறந்து மற்றும் பேணி வருதல்

(அ) வெளிநாட்டு வர்த்தக கடன்பாட்டுக் கணக்குகளைச் சேமிப்பு அல்லது கால வைப்பு கணக்குகளாக, ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அல்லது இலங்கை ரூபாவில் தனியொரு கணக்காகப் பேணி வரலாம்.

**4. அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) வெளிநாட்டுக் கடன்வழங்குநரின் இலங்கைக்கு வெளியே பேணப்படும் கணக்கொன்றிலிருந்து அல்லது உள்முக முதலீட்டுக் கணக்கொன்றிலிருந்து அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிலிருந்து கணக்குடமையாளரினால் பெறப்பட்ட கடன்பெறுகைகளின் பணவனுப்பல்கள்/ மாற்றல்கள்.

(ஆ) கடனைத் தீர்ப்பனவு செய்யும் நோக்கத்திற்காக கணக்கு உடமையாளரின் வெளிமுக முதலீட்டுக் கணக்கொன்றிலிருந்து அல்லது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிலிருந்து அல்லது இலங்கை ரூபாக் கணக்கிலிருந்தான மாற்றல்கள்.

(இ) அதே கணக்கு உடமையாளரின் மற்றொரு வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுக் கணக்கிலிருந்தான மாற்றல்கள்.

(ஈ) கணக்கில் வைக்கப்பட்டுள்ள நிதியின் மீது உழைக்கப்பட்ட வட்டி.

**5. அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) கடன் உடன்படிக்கையின் நியதிகளில், கடனைத் தீர்ப்பனவு செய்யும் அல்லது மீள்கொடுப்பனவு செய்யும் நோக்கத்திற்காக கடன்வழங்குநரின் இலங்கைக்கு வெளியே பேணப்படும் கணக்கொன்றிற்கான அல்லது உள்முக முதலீட்டுக் கணக்கிற்கான அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிற்கான நிதியங்களின் பணவனுப்பல்/ மாற்றல்கள்.

(ஆ) கணக்கு உடமையாளரின் இலங்கை ரூபாக் கணக்கொன்றிற்கான கடன்பெறுகைகளின் மாற்றல்கள்.

(இ) 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கையில் வதியுமாளொருவரினால் இலங்கைக்கு வெளியே மேற்கொள்ளப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகள் அல்லது இரத்துச் செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் அல்லது வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தில் அனுமதிக்கப்பட்டவாறு, வெளிமுக முதலீடுகளுக்கு நிதியிடும் நோக்கத்திற்காக கடன் பெறப்பட்டிருக்குமாயின் மாத்திரம் வெளிமுக முதலீட்டுக் கணக்கிற்கு செய்யப்படும் கடன்பெறுகைகளின் மாற்றல்கள்.

(ஈ) கணக்கு உடமையாளரின் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலான பணவனுப்பல்கள்.

(உ) அதே கணக்கு உடமையாளரின் வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுக் கணக்கிற்கான மாற்றல்கள்.

(ஊ) கடன் தொடர்பில் செலுத்தப்பட வேண்டிய வங்கி விதிப்புக்கள், கட்டணங்கள், தரகுகள் போன்றவை.

(எ) இலங்கை ரூபாவில் இலங்கையில் செய்யப்படும் பகிர்ந்தளிப்புக்கள்.

**6. ஏனைய நிபந்தனைகள்**

(அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், ஒவ்வொரு கடனினதும் பெறுகைகள் பெறப்படுவது தொடர்பில் வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுச் சேமிப்புக் கணக்கொன்றினைத் திறக்கலாம் என்பதுடன் அத்தகைய கடன்களின் அனைத்து மீள்கொடுப்பனவுகளும் (வட்டி உட்பட) அதே வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுக் கணக்கினூடாகவே மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இவ்விடயம் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரினால் வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுக் கணக்கினைத் திறந்த நேரத்தில் கடன்பாட்டாளரிடமிருந்து சத்தியக்கடதாசியொன்று பெறப்படல் வேண்டும்.

(ஆ) வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுக் கணக்கின் கால வைப்பினை, வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வினைத் தணிப்பதற்காக அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவரிடமிருந்து கணக்கு உடமையாளர்களினால் பெறப்படவுள்ள இலங்கை ரூபாக் கடனுக்கான உரிமையின் கீழ் பேணும் நோக்கத்திற்காக மாத்திரம் திறக்க முடியும். அத்தகைய கணக்கு உடமையாளர்கள் வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுக் கணக்கின் கால வைப்புக்களிலுள்ள நிதியினைப் பயன்படுத்தி குறிப்பிட்ட வெளிநாட்டு நாணயக் கடனின் மூலதனத்தின் மீள்கொடுப்பனவுகளைச் செய்தல் வேண்டுமென்பதுடன் இந்நோக்கங்களுக்காக ரூபா மாற்றல்கள் எதுவும் அனுமதிக்கப்படமாட்டாது. வெளிநாட்டு வர்த்தகக் கடனின் கால வைப்பு மீதான வட்டியையும் வெளிநாட்டு நாணயக் கடனின் வட்டியை மீள்கொடுப்பனவு செய்யப் பயன்படுத்த முடியும் என்பதுடன் குறிப்பிட்ட வெளிநாட்டுக் கடனின் வட்டியை மீள்கொடுப்பனவு செய்வதில் ஏதேனும் பற்றாக்குறை காணப்படுமாயின் அதற்கு ரூபா மாற்றல்கள் அனுமதிக்கப்படும்.

(இ) வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுக் கணக்கில் கால வைப்புக்கள் இப்பணிப்புரைகளின் முறையே 4ஆம் பந்தியின் (இ) மற்றும் (ஈ)ஆம் துணைப்பந்திகள் மற்றும் 5ஆம் பந்தியின் (ஆ), (உ) மற்றும் (எ)ஆம் துணைப்பந்திகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட வரவுகளுக்கும் பற்றுக்களுக்கும் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுக் கணக்கின் கால வைப்பை திறக்கும் நேரத்தில் இப்பணிப்புரைகளின் 6(ஆ)ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கிணங்க சரியான முறையில் கணக்கு உடமையாளரின் சம்மதத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(ஈ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுக் கணக்கினூடாக மேற்கொள்ளும் கொடுக்கல்வாங்கல்களின் சட்டபூர்வ தன்மையினையும் நம்பகத்தன்மையினையும் நிறுவுவதற்காகவும் ஒழுங்குவிதிகளுக்கும் இப்பணிப்புரைகளுக்கும் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்காகவும் பின்வரும் தகவல்கள்/ ஆவணங்கள் உட்பட சரியான சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணச்சான்றுகளை (தேவைப்படுகின்றவாறு) பெற்றுக்கொள்ள வேண்டும்.

(i) மீள்கொடுப்பனவு அட்டவணை உட்பட, கடன் உடன்படிக்கையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று.

(ii) கடன் வழங்குநர் மற்றும் கடன்பாட்டாளர் தொடர்பான விபரங்கள்.

(iii) உத்தேச கடனின் ஒப்புதலுக்காக கடன்பாட்டாளராகவுள்ள கம்பனியின் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்டு, கம்பனி செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட தீர்மானத்தின் பிரதியொன்று.

(உ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுக் கணக்கினூடாக செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலான ஆவணச்சான்றுகளை (ஒன்றில் வன்பிரதியாக அல்லது இலத்திரனியல்/ டிஜிட்டல் படிவம்) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், கணக்குப் பேணப்படும் காலப்பகுதியில் சட்ட ரீதியாக பதிவேடுகள் பேணப்படுவதற்கு தேவைப்படுத்துப்படும் காலப்பகுதிக்கு அப்பாலும் பேணுதல் வேண்டும்.

**7. வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுக் கணக்கினை மூடிவிடுதல்**

(அ) கடன்பாட்டாளர் தொடர்பான கடனை முழுமையாகத் தீர்ப்பனவு செய்யுமிடத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுக் கணக்கொன்றினை மூடிவிடலாம்.

(ஆ) எனினும், மற்றொரு அதிகாரமளிக்கப்பட்ட வணிகரூடாகத் திறக்கப்படவுள்ள வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுக் கணக்கினூடாகக் குறிப்பிட்ட கடனின் எதிர்கால மீள்கொடுப்பனவுகளைத் தொடரும் நோக்கத்திற்காக, தொடர்பான கடனை முழுமையாகத் தீர்ப்பனவு செய்வதற்கு முன்பே வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுக் கணக்கினை மூடிவிடுவதற்கு கணக்கு உடமையாளர் கோரிக்கைவிடுக்கும் சந்தர்ப்பத்தில், ஆரம்பத்தில் வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுக் கணக்கு வைத்திருக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட வணிகர், புதிய வெளிநாட்டு வர்த்தகக் கணக்கினைத் திறக்க விரும்பும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரைத் திருப்திப்படுத்தும் விதத்தில் பின்வரும் தகவல்கள்/ ஆவணங்களை அனுப்பி வைத்ததன் பின்னர் வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுக் கணக்கினை மூடிவிடலாம்.

(i) கடன்பெறுகைகளின் விபரங்கள் (திகதி, நாணய வகையுடன் தொகை வழங்குநர், கடன்பாட்டாளர் போன்றவை) அனைத்து மீள்கொடுப்பனவுகள் (திகதி, தொகை நன்மைபெறுநரின் கணக்கு விபரங்கள் போன்றவை) மற்றும் வெளிநின்ற நிலுவை.

(ii) வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுக் கணக்கினூடாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுக்கு சான்றாக வெளிநாட்டு வர்த்தக கடன்பாட்டு கணக்குடமையாளரிடமிருந்து சேகரிக்கப்பட்ட ஆவணச்சான்றுகள்.

(இ) அவ்வாறு மூடப்பட்ட திகதியிலிருந்து மூன்று வேலை நாட்களுக்குள் பணிப்பாளர் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கு dfem@cbsl.lk ஊடாக மின்னஞ்சல் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அத்தகைய மூடல் பற்றி அறிவித்தல் வேண்டும்.

8. இப்பணிப்புரைகளின் அதிகாரவரம்பிற்குள் வராத ஏதேனும் நோக்கங்களுக்காக வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுக் கணக்குகளிற்கு அல்லது கணக்குகளிலிருந்து செய்யப்படும் ஏதேனும் மாற்றல்/ கொடுக்கல்வாங்கல்கள் குறித்து அதிகாரமளிக்கப்பட்ட வணிர்கள் பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திடமிருந்து தேவையான முன்னொப்புதலைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

9. அறிக்கையிடும் தேவைப்பாடுகள் இப்பணிப்புரைகளின் இணைப்பின்படி அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மாதாந்த அடிப்படையில், அறிக்கையொன்றினை அடுத்தவரும் மாதத்தின் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கு னகநஅளூஉடிளட.டம என்ற மின்னஞ்சல் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

**10. இப்பணிப்புரைகளின் நோக்கத்திற்காக**

(அ) "பணவனுப்பல்கள்" என்பது தந்தி மாற்றல்கள், ஏனைய வங்கிகளிடையேயான மாற்றல்கள், வங்கி வரைவுகள், ஏனைய கொடுப்பனவுச் சாதனங்கள், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு கொடுப்பனவுப் பொறிமுறைகள் அல்லது தளங்களூடாகப் பெறப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் நாணயத் தாள்கள் தவிர, வெளிநாட்டிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் பரிவர்த்தனைக் கம்பனிகளிலிருந்து/ இல்லங்களிலிருந்து பெறப்பட்ட நிதிகள் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

11. இப்பணிப்புரைகளினால் அனுமதிக்கப்பட்டதெதுவும், இப்பணிப்புரைகளின் கீழ், வெளிநாட்டுச் செலாவணி வணிகத்தில்

ஈடுபடுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களை வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கான தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கின்றது, விடுவிக்கின்றது அல்லது தடுக்கின்றது எனப் பொருள்கோடலாகாது.

12. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்காகத் தற்காலிகச் சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் தொழிற்படுத்துவது தொடர்பிலான தேவைப்பாடுகளைக் குறித்துரைக்கும் விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட 2021ஆம் ஆண்டு 15ஆம் திகதியிடப்பட் 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

13. இப்பணிப்புரைகள் 2021 மாச்சு 22ஆம் திகதியிலிருந்து தொழிற்பாட்டிற்கு வருதலாதல் வேண்டும்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**
**2021 மாச்சு 18**

**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 20ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

நடைமுறை மற்றும் மூலதனக் கொடுக்கல்வாங்கல் தொடர்பில் உத்தரவாதங்களை வழங்குவது மற்றும் புதிப்பிப்பது தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (பல்வகை மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகளின் நியதிகள் மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவு என்பனவற்றிற்கிணங்க, கீழே குறித்துரைக்கப்பட்ட நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில், விடயத்திற்கேற்றாற்போல், உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவிலிருந்து பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு உத்தரவாதங்களை வழங்குவதற்கும் புதுப்பிப்பதற்கும் (அதாவது வங்கி உத்தரவாதங்கள், முறிகள், துணைநில் நாணயக் கடிதங்கள்) அத்தகைய வங்கி உத்தரவாதங்கள், முறிகள், துணைநில் நாணயக் கடிதங்கள்/ அத்தகைய வங்கி உத்தரவாதங்கள், முறிகள், துணைநில் நாணயக் கடிதங்கள் மற்றும் கம்பனி உத்தரவாதங்களின் கோரல் தொடர்பில் கொடுப்பனவுகளைச் செய்வதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

1. **நடைமுறைக் கொடுக்கல்வாங்கல் தொடர்பில் அனுமதிக்கப்பட்ட உத்தரவாதங்கள்**

(அ) நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலான பணிப்புரைகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் உத்தரவாதங்களை வழங்குவதற்கும் புதுப்பிப்பதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

2. **மூலதனக் கொடுக்கல்வாங்கல் தொடர்பில் அனுமதிக்கப்பட்ட உத்தரவாதங்கள்**

(அ) இலங்கையில் கம்பனியொன்று கூட்டிணைப்புச் செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் (அதாவது முதலீட்டாளர்), இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட எக்கம்பனியில் குறிப்பிட்ட முதலீட்டாளர் பங்குதாரரொருவராகவுள்ளாரோ அக்கம்பனி (அதாவது முதலீட்டினைப் பெறுபவர்) இரத்துச் செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அல்லது அச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி முதலீட்டினை செய்திருப்பின் அம்முதலீட்டினைப் பெறுபவர் ஐ.அ.டொலர் 1,000,000 என்ற உயர்ந்தபட்ச வரையறைக்குட்பட்டு, கூட்டிணைப்புச் செய்யப்பட்ட நாட்டிலுள்ள நிதி நிறுவனங்களிலிருந்து வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இயலுமைப்படுத்தும் விதத்தில் உத்தரவாதமொன்றினை வழங்கலாம். உத்தரவாதப் பெறுமதியானது குறிப்பிட்ட ஏதேனுமொரு நேரத்தில் குறிப்பிட்ட முதலீட்டினைப் பெறுபவரிடத்திலுள்ள முதலீட்டாளரின் பங்குடமையின் நூற்று வீதத்திற்கான விகிதாசாரமாக இருத்தல் வேண்டும்.

(ஆ) இலங்கையில் கூட்டிணைப்புச் செய்யப்பட்டிருக்கும் (அதாவது முதலீட்டாளர்) இலங்கைக்கு வெளியே நிறுவப்பட்டிருக்கும் கிளையொன்று அல்லது செயற்றிட்டமொன்றினை இயலுமைப்படுத்தும் விதத்தில் உத்தரவாதமொன்றினை வழங்குமாறு குறிப்பிட்ட முதலீட்டாளர், நிறுவனமொன்றிலிருந்து வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக கோரிக்கையொன்றினை விடுக்கும் சந்தர்ப்பத்தில் முதலீடானது இரத்துச் செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அல்லது வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி முதலீட்டாளர்களால் இலங்கைக்கு வெளியே நிறுவப்பட்ட கிளையொன்றில் செய்யப்பட்டிருப்பின் குறிப்பிட்ட கிளையொன்றிற்கு அல்லது செயற்றிட்ட அலுவலகத்திற்கு ஐ.அ.டொலர் 500,000 வரையிலான உத்தரவாதமொன்றினை வழங்கலாம்.

(இ) முதலீட்டாளர் இப்பணிப்புரைகளின் 2(அ) மற்றும் 2(ஆ)ஆம் துணைப்பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட உத்தரவாதங்களை முதலீட்டினைப் பெறுபவரின் சார்பில் வழங்குவதற்கான இயலாற்றலை முதலீட்டினைக் கொண்டிருக்காத சந்தர்ப்பத்தில் தாய்க் கம்பனி அல்லது முதலீட்டினைப் பெறுபவருக்கு முழுமையாகச் சொந்தமான துணைக் கம்பனி (அதாவது உத்தரவாதி) அது தொடர்பில் முதலீட்டாளரின் சம்மதத்துடன் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவரூடாக அத்தகைய உத்தரவாதத்தினை

வழங்குமாறு கோரிக்கை விடுக்கலாம். அத்தகைய உத்தரவாதமானது, இப்பணிப்புரைகளின் 2(அ) மற்றும் 2(ஆ)ஆம் துணைப்பந்திகளில் அனுமதிக்கப்பட்ட உத்தரவாதங்களுக்கு ஏற்புடைய வரையறைகளுக்குட்பட்டு அதிகாரமளிக்கப்பட்ட வணிகரினால் வழங்கப்படலாம். வெளிநாட்டிலுள்ள முதலீடு முதலீட்டாளரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில் இவ்வனுமதி ஏற்புடைத்தாகமாட்டாது.

(ஈ) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்று, இருதரப்பினர்களிடையே செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையொன்றிற்குட்பட்டு, இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றின் (அதாவது முதல்வர்) முகவராக தொழிற்படுகின்றவிடத்து (முகவர் உடன்படிக்கை), உத்தரவாதமொன்று குறிப்பிட்ட முகவராண்மை உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட தொகைக்கு முதல்வரின் பெயரில் முகவரின் சார்பில் வழங்கப்படல் வேண்டும்.

(உ) குறிப்பிட்ட முதலீட்டாளரின் உள்முக முதலீட்டுக் கணக்கொன்றில் வரவு வைக்கப்பட்டுள்ள நிதியத்திற்கெதிராக இலங்கையிலுள்ள கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட கம்பனியின் பங்குகளைக் கொள்வனவு செய்வது தொடர்பாக இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவரின் (அதாவது முதலீட்டாளர்) சார்பில் வழங்கப்படும் உத்தரவாதமொன்று.

3. **ஏனைய உத்தரவாதங்கள்**

(அ) 2021ஆம் ஆண்டின் 09ஆம் இலக்கப் பணிப்புரையின் கீழ் அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட வணிகரிடமிருந்து கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு அத்தகைய வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு உடமையாளரை இயலுமைப்படுத்தும் விதத்தில் மற்றொரு அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் பெயரில் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு உடமையாளரின் சார்பில் உத்தரவாதமொன்று.

(ஆ) சொத்து அபிவிருத்தியாளரொருவரிடமிருந்து தொடர்மாடி மனையொன்றினைக் கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக உள்முக முதலீட்டுக் கணக்கொன்றினூடாகச் செய்யப்பட்ட கொடுப்பனவுகளில் 50 சதவீதம் வரையிலான தொகையினை உள்முக முதலீட்டுக் கணக்கு உடமையாளரின் பெயரில் (அதாவது சொத்தின் கொள்வனவாளர்) சொத்து அபிவிருத்தியாளரின் சார்பில் (சொத்தின் விற்பனையாளர்) அத்தகைய சொத்தின் கட்டுமானக் காலப்பகுதிக்கான உத்தரவாதமொன்று.

4. **ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள்**

(அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், மூன்றாந்தரப்பினருக்கு இதுவரை வழங்கப்பட்ட உத்தரவாதங்கள் தொடர்பில் கம்பனியின் எதிர்பாராத பொறுப்புக்களையும் வழங்கப்படவுள்ள உத்தரவாதத்திலிருந்து தோன்றுகின்ற ஏதேனும் எதிர்பாராத பொறுப்புக்களைப் பூர்த்தி செய்வதற்கான நிதியியல் பலத்தினையும் இலங்கையிலுள்ள கம்பனியினால் குறிப்பிட்ட உத்தரவாதத்தினால் பாதுகாக்கப்பட வேண்டிய இதன் கடப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கான உத்தரவாதத்தின் நன்மைபெறுநரது இயலாற்றலையும் மதிப்பிட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.

(ஆ) இப்பணிப்புரைகளின் 2ஆம் பந்தியின் (அ), (ஆ) மற்றும் (இ) ஆகிய துணைப் பந்திகளில் உத்தரவாதங்களை வழங்கும் சந்தர்ப்பத்தில் பின்வரும் நிபந்தனைகள் ஏற்புடைத்தாதல் வேண்டும்:

(i) குறிப்பிட்ட உத்தரவாதங்களை வழங்குவதற்கு முன்னர் கோரலின் பெறுமதியினை அறவிட்டுக் கொள்வதற்காக (செலுத்தத் தவறும் சந்தர்ப்பத்தில் மேற்கொள்வதற்காக) முதலீட்டைப் பெறுபவருடன் முதலீட்டாளர்/ உத்தரவாதமளிப்பவர் பொருத்தமான சட்ட ரீதியான உடன்படிக்கையினை செய்துகொள்ளுதல் வேண்டும்.

(ii) மேலேயுள்ள (i)ஆம் துணைப்பந்தியில் குறிப்பிடப்பட்டவாறான அத்தகைய அறவிடல்கள், கோரலின் கொடுப்பனவு எதனூடாக மேற்கொள்ளப்பட்டதோ அந்த முதலீட்டாளர், உத்தரவாதமளிப்பவரின் முதலீட்டாளர் அல்லது ரூபாக் கணக்கின் அதே வெளிமுக முதலீட்டுக் கணக்கிற்கு அல்லது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு வரவு வைத்தல் வேண்டும்.

(iii) முதலீட்டினைப் பெறுபவருக்குச் செய்யப்பட்ட முதலீடு, முதலீட்டாளரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கினூடாகச் செய்யப்பட்டிருப்பின், உத்தேச உத்தரவாதம், இத்தகைய உத்தரவாதத்திலிருந்து தோன்றுகின்ற ஏதேனும் வெளிமுகப் பணவனுப்பல்கள் முதலீட்டாளரின் வியாபார வெளிநாட்டு நாணய நிதியிலிருந்தே கோரப்பட வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு வழங்கப்படுதல் வேண்டும்.

(iv) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பின்வருவன தொடர்பான ஆவணச்சான்றுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்:

(அ) மேலேயுள்ள (ஆ)(i)ஆம் துணைப்பந்திக்கு இணங்கியொழுகுவது.

(ஆ) கம்பனிச் செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட, கம்பனியின் பணிப்பாளர் சபையினால் (அதாவது முதலீட்டாளர் மற்றும் உத்தரவாதமளித்தவர்) நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் திருப்திப்படும் விதத்தில் இப்பணிப்புரைகளின் 4(ஆ)(ii) மற்றும் 4(ஆ)(iii) துணைப்பந்திகளுக்கு இணங்கியொழுகுவது தொடர்பில் சத்தியக்கடதாசி/ சத்தியக்கடதாசிகள் அல்லது வேறு ஏதேனும் சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணம்.

(இ) இப்பணிப்புரைகளின் 2 மற்றும் 3ஆம் பந்திகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட உத்தரவாதங்களை நிறைவேற்றும்

பொழுது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள்.

(i) உத்தேச உத்தரவாதத்திற்கான ஒப்புதல் மற்றும் இதே நோக்கத்திற்காக வேறு எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிடமிருந்து வேறு உத்தரவாதங்கள் பெறப்படவில்லை என்பதனை நிரூபிக்கும் விதத்திலும்;

(ii) வழங்கப்படவுள்ள உத்தரவாதத்திலிருந்து தோன்றுகின்ற ஏதேனும் எதிர்பாராத பொறுப்பினை ஈடுசெய்வதற்கான நிதியியல் பலத்தினைக் கம்பனி கொண்டிருக்கின்றது என்பதனை உறுதிப்படுத்தும் விதத்திலும்;

கம்பனிச் செயலாளர்களினால் உறுதிப்படுத்தப்பட்ட பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(ஈ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், மேற்கொள்ளப்படவுள்ள குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கலின் சட்டபூர்வ தன்மையினையும் நம்பகத்தன்மையினையும் நிறுவுவதற்குச் சரியான சட்ட ரீதியான ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணச்சான்றைப் (தேவைப்படுத்தப்பட்டவாறு) பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் ஒழுங்குவிதிகளுக்கும் இப்பணிப்புரைகளுக்கும் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்தலும் வேண்டும்.

(உ) பிரதான கடன்பாட்டாளர் அல்லது இலங்கையிலுள்ள முகவரிடமிருந்தான கோரிக்கையின் அடிப்படையில், இலங்கையிலுள்ள அத்தகைய வதியும் ஆளின் பெயரில், இலங்கையில் வதியும் ஆளொருவருடன் நடைமுறைக் கொடுக்கல்வாங்கலில் ஈடுபடுவதற்கு விரும்புகின்ற இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவரின் (அதாவது பிரதான கடன்பாட்டாளர்) சார்பில் உத்தரவாதமொன்றினை வழங்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில், அத்தகைய உத்தரவாதம் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரினால் ஏற்றுக்கொள்ளத்தக்க தரமிடலைக் கொண்ட இலங்கைக்கு வெளியேயுள்ள புகழ்பூத்த பன்னாட்டு வங்கியொன்றிடமிருந்தான நடைமுறைப்படுத்தத்தக்க இணை உத்தரவாதமொன்றினைப் பெற்றுக்கொள்வதன் மீதே அத்தகைய உத்தரவாதத்தினை வழங்குதல் வேண்டும்.

(ஊ) பின்வருவனவற்றை வழங்குகின்ற சந்தர்ப்பத்தில்:

(i) முற்பணக் கொடுப்பனவு உத்தரவாதங்கள்;

(அ) உத்தரவாதப் பெறுமதி, இலங்கையில் வதியும் ஆளினால் இலங்கைக்கு வெளியே வதியுமாளிடமிருந்து பெறப்படுகின்ற முற்பணக் கொடுப்பனவின் பெறுமதி குறைவானதாக அல்லது முற்பணக் கொடுப்பனவுப் பெறுமதிக்குச் சமமானதாக இருத்தல் வேண்டுமென்பதுடன் இப்பணிப்புரைகளின் 3(ஆ)ஆம் பந்திக்குட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) இலங்கைக்கு வெளியே வதியும் ஆளிடமிருந்து முற்பணக் கொடுப்பனவு இலங்கையில் வதியும் ஆளின் இலங்கையிலுள்ள கணக்கிற்குப் பெறப்பட்டதன் பின்னர் மாத்திரமே உத்தரவாதம் செல்லுபடியாகும் என்ற நிபந்தனை உத்தரவாதத்தினால் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

(ii) செயலாற்றுகை முறி, இது உடன்படிக்கை வழங்கப்பட்டமையை நிரூபிப்பது மற்றும் அதில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனை என்பனவற்றிற்குட்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) விலைக்குறிப்பீட்டு முறி, இது விலைக்கோரல் அல்லது விலைமனுவில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

**5. செல்லுபடியாகக்கூடிய கோரல்கள் மீதான வெளிமுகப் பணவனுப்பல்கள்**

(அ) இப்பணிப்புரைகளில் அனுமதிக்கப்பட்ட உத்தரவாதங்கள் தொடர்பில் செல்லுபடியாகும் கோரல்களிலிருந்து தோன்றுகின்ற வெளிமுகப் பணவனுப்பல்கள்/ கொடுப்பனவுகளையும் “2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கையில் வதியுமாளொருவரினால் இலங்கைக்கு வெளியே மேற்கொள்ளப்படும் மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகளின் அட்டவணை ஐ இன் 11ஆம் பந்தியின் கீழ் அனுமதிக்கப்பட்ட கம்பனி உத்தரவாதங்களையும்” “2021ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (பல்வகை மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகளின் அட்டவணை Iஇன் கீழ் அனுமதிக்கப்பட்ட நாட்டிற்கான உத்தரவாதங்களையும் குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்களின் நம்பகத்தன்மையிட்டு திருப்தியடைவதன் மேல் பின்வருவனவற்றிற்குட்பட்டு அனுமதிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

(i) உத்தரவாதத்தின் கீழ் செல்லுபடியாகும் கோரலின் உயர்ந்தபட்சத் தொகை குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கலின் வெளிநின்ற கடப்பாட்டின் விகிதாசாரத்திற்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

(ii) இப்பணிப்புரைகளின் 2(அ)ஆம் துணைப்பந்தியின் கீழ் வழங்கப்பட்ட உத்தரவாதத்தின் செல்லுபடியாகும் கோரலைப் பொறுத்தவரை, கோரலின் உயர்ந்தபட்சத் தொகை, கோரலின் நேரத்தில் முதலீட்டினைப் பெறுபவரின் வெளிநின்ற கடப்பாட்டில் முதலீட்டாளரின் பங்குடமையின் சதவீதத்திற்கு விகிதசமமாக அல்லது குறைவாக இருத்தல் வேண்டும்.

(iii) இப்பணிப்புரைகளின் 3(அ) மற்றும் 3(ஆ)ஆம் துணைப்பந்திகளின் என்பனவற்றின் கீழ் வழங்கப்பட்ட உத்தரவாதங்களிலிருந்து தோன்றுகின்ற ஏதேனும் செல்லுபடியாகும் கோரலைப் பொறுத்தவரை, முதலீடுகள் முதலீட்டாளரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கினூடாக மேற்கொள்ளப்பட்டிருக்குமிடத்து, அது, முதலீட்டாளரின் வியாபார வெளிநாட்டு நாணயக்

கணக்குகளிலுள்ள நிதியத்திலிருந்தே மேற்கொள்ளபப்பட்டல் வேண்டும்.

(iv) இப்பணிப்புரைகளின் 3(அ) மற்றும் 3(ஆ)ஆம் துணைப்பந்திகளின் கீழ் வழங்கப்பட்ட உத்தரவாதங்களிலிருந்து தோன்றுகின்ற ஏதேனும் செல்லுபடியாகும் கோரலை, விடயத்தினைப் பொறுத்து, கடன்பாட்டாளரின் அல்லது சொத்து அபிவிருத்தியாளரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியிலிருந்து மேற்கொள்ளப்படல் வேண்டும்.

6. இப்பணிப்புரைகளின் அதிகாரவரம்பிற்குள் வராத ஏதேனும் நோக்கத்திற்காக, ஏதேனும் உத்தரவாதத்தின் பொருட்டு, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் முன்னொப்புதலைப் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

7. **அறிக்கையிடும் தேவைப்பாடு**

இணைப்பு Iஇன்படி, இப்பணிப்புரைகளில் அனுமதிக்கப்பட்டவாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் உத்தரவாதங்களை வழங்கல் மற்றும் புதுப்பித்தல் மீதான காலாண்டு அறிக்கையிடலை அடுத்த மாதம் 15ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். கையொப்பமிடப்பட்ட அறிக்கையின் ஸ்கான் பிரதியும் அதன் எம்எஸ் எக்சல் பதிப்பும் dfem@cbsl.lk ஊடாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

8. **இப்பணிப்புரைகளின் நோக்கத்திற்காக**

(அ) “நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள்” என்பது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) “மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள்” என்பது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

9. இப்பணிப்புரைகளினால் அனுமதிக்கப்பட்டதெதுவும், இப்பணிப்புரைகளின் கீழ், வெளிநாட்டுச் செலாவணி வணிகத்தில் ஈடுபடுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களை அல்லது வேறு எவரேனும் ஆளினை வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கான தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கின்றது, விடுவிக்கின்றது அல்லது தடுக்கின்றது எனப் பொருள்கோடலாகாது.

10. 2017 நவெம்பர் 20ஆம் திகதியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கப் பணிப்புரைகளின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட/ முன்னைய பணிப்புரைகள் வங்கி உத்தரவாதங்கள், முறிகள், துணைநில் நாணயக் கடிதங்கள் மற்றும் கம்பனி உத்தரவாதங்கள் என்பனவற்றின் வழங்கல் மற்றும் புதுப்பித்தல் தொடர்பில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

11. மேலேயுள்ள பந்தி 10இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள குறித்துரைக்கப்பட்ட முன்னைய பணிப்புரைகளின் இரத்தானது, இரத்துச் செய்யப்படுவதற்கு முன்னர் அவற்றின் கீழ் உறப்பட்ட ஏதேனும் உரிமைகள் அல்லது தண்டங்கள் அல்லது பொறுப்புக்களைப் பாதிப்பதாக இருக்கக்கூடாது.

12. இப்பணிப்புரைகள் 2021 மாச்சு 22ஆம் திகதியிலிருந்து தொழிற்பாட்டிற்கு வருதலாதல் வேண்டும்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**
**2021 மாச்சு 18**

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

**2220/69ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26ஆந் திகதி வெள்ளிக்கிழமை**

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

பகுதி I : தொகுதி (I) - பொது

**அரசாங்க அறிவித்தல்கள்**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

**4ஆம் பிரிவின் கீழான கட்டளை**

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் 2ஆம் துணைப் பிரிவின் பந்தி (இ) இனால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளையின் மூலம் இத்தால் குறித்துரைக்கப்பட்டவாறான நோக்கங்கள், நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி

அதிகாரசபையுடன் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் ஹோட்டல் இலங்கைக்குள் வெளிநாட்டுச் செலாவணி வணிகத்தில் ஈடுபடலாம் என குறித்துரைக்கின்றேன்.

சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ், அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை ஒன்றின் மூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு அத்தகைய மட்டுப்படுத்தல்கள் வரையில் வெளிநாட்டு நாணயத்தினை தமது உடைமையில் வைத்திருக்கின்ற இலங்கையில் வதியும் ஆட்களிடமிருந்து அத்தகைய ஆட்களுக்கு ஹோட்டலினால் வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பில், வெளிநாட்டுச் செலாவணியினை ஏற்றுக்கொள்வதற்கு இத்தால் ஹோட்டல்கள் அனுமதிக்கப்படுகின்றன.

எது எவ்வாறிருப்பினும், அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயத்தினை அத்தகைய ஹோட்டல்கள் பின்வருவனவற்றை மேற்கொள்ளாமல் ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து ஏழு (7) நாட்களுக்கும் கூடுதலான காலப்பகுதிக்கு தமது உடைமையில் வைத்திருக்கக் கூடாது:

(அ) தொடர்பான ஹோட்டலின் பெயரில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வணிகருடன் திறந்து பேணி வரும் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கில் வைப்புச் செய்தல்; அல்லது

(ஆ) அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகளைச் சமர்ப்பிப்பதன் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருக்கு விற்றுவிடல்.

மஹிந்த ராஜபக்ஷ,
**நிதி அமைச்சர்.**

கொழும்பு,
2021, மாச்சு 26.

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

**2222/37ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 07ஆந் திகதி புதன்கிழமை**

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**

**அரசாங்க அறிவித்தல்கள்**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

1. 2020, ஏப்பிறல் 08ஆந் திகதியிடப்பட்ட 2170/4ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 2020, நவெம்பர் 17ஆந் திகதியிடப்பட்ட 2202/7ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் திருத்தப்பட்டு வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

   (அ) பந்தி 1இல் காணப்படுகின்ற "பன்னிரண்டு மாதங்கள்" என்ற சொற்கள் இத்தால் நீக்கப்பட்டு "இருபத்தினான்கு மாதங்கள்" எனப் பதிலீடு செய்யப்படுகின்றது.

2. 2020, யூலை 01ஆந் திகதியிடப்பட்ட 2182/32ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 2020, நவெம்பர் 17ஆந் திகதியிடப்பட்ட 2202/7ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் திருத்தப்பட்டு வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

   (அ) பந்தி 1 மற்றும் பந்தி 2இல் காணப்படுகின்ற "பன்னிரண்டு மாதங்கள்" என்ற சொற்கள் இத்தால் நீக்கப்பட்டு "இருபத்தினான்கு மாதங்கள்" எனப் பதிலீடு செய்யப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ,
**நிதி அமைச்சர்.**

கொழும்பு,
2021, மாச்சு 26.

**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழான 2021ஆம் ஆண்டின் 21ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

சிறப்பு வைப்புக்கள் கணக்கு மீது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்படும் பணிப்புரைகள்

2020 ஏப்பிறல் 08ஆம் திகதியிடப்பட்ட 2170/4ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதியினைத் தொடர்ந்து, 2020 யூலை 01ஆம் திகதியிடப்பட்ட 2182/32ஆம் இலக்க, 2020 ஒத்தோபர் 06ஆம் திகதியிடப்பட்ட 2196/22ஆம் இலக்க மற்றும் 2021 ஏப்பிறல் 07ஆம் திகதியிடப்பட்ட 2222/37ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் (அதிவிசேட) வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் (ஒழுங்குவிதிகள்) மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் (சட்டம்) 09ஆம் பிரிவு ஆகியவற்றின் நியதிகளின் பிரகாரம் பின்வருவனவற்றுக்கு உட்பட்டு உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளில் சிறப்பு வைப்புக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

2. **தகைமையுடைய ஆட்கள்**

(அ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் வதிகின்ற தனிப்பட்ட இலங்கையர்கள்

(ஆ) இரட்டைப் பிரசாவுரிமையுடையோர்

(இ) இலங்கையை பூர்வீக நாடாகக் கொண்ட வேறு நாடுகளின் பிரசைகள்

(ஈ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் வதிகின்ற இலங்கையரல்லாதோர்

(உ) இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட/ பதிவுசெய்யப்பட்ட நிதியங்கள், கூட்டு நிறுவனங்கள், அமைப்புக்கள்

(ஊ) எவரேனும் வேறு நலன்விரும்பிகள்

3. **சிறப்பு வைப்புக் கணக்கினை திறத்தலும் பேணுதலும்**

(அ) சிறப்பு வைப்புக் கணக்குகள், 2020 ஏப்பிறல் 08ஆம் திகதியிலிருந்து இருபத்திநான்கு மாதகாலப்பகுதியின் போது திறக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) சிறப்பு வைப்புக் கணக்குகள் நிலையான வைப்புக்கள் வடிவில் மாத்திரமே திறக்கப்பட்டு பேணப்படுதல் வேண்டும். சிறப்பு வைப்புக் கணக்கு தவணை வைப்புக்களில் வைப்பிலிடுவதற்கு நிதியங்களைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் சிறப்பு வைப்புக் கணக்கு தவணை வைப்புக்களிலுள்ள நிதியங்களை திருப்பியனுப்புதல் நோக்கத்திற்காக மாத்திரம் தொழிற்பாட்டுக் கணக்குகளாக சிறப்பு வைப்புக் கணக்குகள், சேமிப்புக் கணக்குகள் வடிவில் திறக்கப்படலாம்.

(இ) சிறப்பு வைப்புக் கணக்குகள் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்திலோ அல்லது இலங்கை ரூபாவிலோ திறந்து பேணப்படல் வேண்டும்.

(ஈ) சிறப்பு வைப்புக் கணக்குகள், தகைமையுடைய ஆட்களினால் இணைந்த கணக்குகளாக வைத்திருக்கப்படலாம்.

4. **குறைந்தபட்ச கால அளவு: ஆறு (06) மாதங்கள்**

5. செலுத்தத்தக்க வட்டி: தொடர்புடைய அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் மூலம் அதனையொத்த முதிர்ச்சிகளைக் கொண்ட சாதாரண வைப்புக்களுக்கு ஏற்புடைய வைப்பு வட்டி வீதங்களுக்கு மேலதிகமாக, சிறப்பு வைப்புக் கணக்குகளின் முதிர்ச்சியில் செலுத்தத்தக்க, (வைப்பு நாணயத்தில்) 6 மாதங்கள் மற்றும் 12 மாதங்கள் கொண்ட காலத்துடன் கூடிய சிறப்பு வைப்புக் கணக்குகளுக்காக ஆண்டுக்கு முறையே ஒரு (1) சதவீதப் புள்ளி மற்றும் இரண்டு (2) சதவீதப் புள்ளிகள்.

குறிப்பு : இலங்கை மத்திய வங்கியானது வைப்பின் முதிர்ச்சியில் செலுத்தப்படக்கூடிய அத்தகைய வட்டிக் கொடுப்பனவு திகதியன்று ஏற்புடைய இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட குறியீட்டு வீதமொன்றினைப் பயன்படுத்தி மாற்றம்செய்யப்பட்ட மேலதிக வட்டியினை ரூபாவில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு காலமுறையாக மீள்நிரப்பல் செய்யும்.

6. நிதியங்களை சொந்த நாட்டுக்குத் திருப்பியனுப்புதல்: தவணை வைப்புக்கள் முதிர்ச்சியடையும் போது தங்குதடையின்றி மாற்றக்கூடியது என்பதுடன் இலங்கைக்கு வெளியில் சொந்தநாட்டிற்கு திருப்பியனுப்பக்கூடியவை.

7. **அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) வங்கித்தொழில் முறைமையின் ஊடாக கணக்கு வைத்திருப்பவர் சார்பில் இலங்கைக்கு வெளியிலிருந்து கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு நாணயத்திலான உள்முகப் பணவனுப்பல்கள்.

(ஆ) கணக்கு வைத்திருப்பவரின் சார்பில் 2020 ஏப்பிறல் 08ஆம் திகதியிலிருந்து இருபத்து நான்கு மாத காலப்பகுதியினுள் உள்முகப் பணவனுப்பல்களாகக் கிடைக்கப்பெற்ற பெறுகைகளிலிருந்து, உள்முக முதலீட்டுக் கணக்குகளில் அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளில் பேணப்படுகின்ற கணக்குகளில் இருந்தான மாற்றல்கள்.

(இ) சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையொன்றின் மூலம் அமைச்சரினால்

விதித்துரைக்கப்பட்டவாறு வந்திறங்குகின்ற தளத்தில் சுங்கத் திணைக்களத்திற்குச் செய்யப்பட்ட வெளிப்படுத்தலொன்றுக்குட்பட்டு 2020 சனவரி 01ஆம் திகதி அல்லது அதற்கு பின்னா் இலங்கைக்கு வந்திறங்கிய கணக்கு வைத்திருப்பவா் மூலம் சட்டமுறையாகப் பெற்றுக்கொள்ளப்பட்டு கொண்டுவரப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி.

(ஈ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் பொருத்தமான வெளிப்படுத்தலொன்றுக்குட்பட்டு 2020 சனவரி 01ஆம் திகதிக்குப் பின்னா் இலங்கைக்கு வந்திறங்கிய கணக்கு வைத்திருப்பவரினால் சட்டமுறையாகப் பெற்றுக்கொள்ளப்பட்டு கொண்டுவரப்பட்ட ஐ.அ.டொலா் 15,000 அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதனையொத்த தொகைக்குச் சமமான அல்லது குறைவான வெளிநாட்டுச் செலாவணி.

(உ) நிதியங்களின் மூலம் பற்றி அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்கான வெளிப்படுத்தலொன்றுக்குட்பட்டு சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் வா்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையொன்றின் மூலம் அமைச்சரினால் விதித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய வரையறைகள் வரை அத்துடன் அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு இலங்கையிலுள்ள அல்லது வதிகின்ற எவரேனும் ஆளின் உடைமையில் உள்ள வெளிநாட்டு நாணயத் தாள்கள்.

**8. அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) வைப்பு முதிா்ச்சியடைதலின் மீது முதிா்ச்சியின் பெறுகைகளின் வெளிமுகப் பணவனுப்பல்கள்.

(ஆ) சிறப்பு வைப்புக் கணக்கு தவணை வைப்புக்களின் முதிா்ச்சிப் பெறுகைகளை கணக்கு வைத்திருப்பவரின் உள்முக முதலீட்டுக் கணக்கொன்றிற்கு அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படுகின்ற கணக்கொன்றிற்கு மாற்றல்.

(இ) சிறப்பு வைப்புக் கணக்குகளின் வட்டி உள்ளடங்கலாக முதிா்ச்சிப் பெறுகைளை அதே கணக்கு வைத்திருப்பவரின் உள்முக முதலீட்டுக் கணக்கினுள் மாற்றல் செய்தல் ஆயினும், அத்தகைய சிறப்பு வைப்புக் கணக்கு வைத்திருப்பவா் 2021 பெப்புருவரி 03ஆம் திகதியிடப்பட்ட இல. 2213/35 ஆம் இலக்க வா்த்தமானியில் (அதிவிசேடம்) வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க ஒழுங்குவிதிகளுக்கமைவாக உள்முக முதலீட்டுக் கணக்கொன்றினைப் பேணுவதற்கு தகைமையுடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) சிறப்பு வைப்புக் கணக்குகளின் வட்டி உள்ளடங்கலாக முதிா்ச்சிப் பெறுகைளை அதே கணக்கு வைத்திருப்பவரின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளினுள் மாற்றல் செய்தல் ஆயினும், அத்தகைய சிறப்பு வைப்புக் கணக்கு வைத்திருப்பவா் 2021 பெப்புருவரி 03ஆம் திகதியிடப்பட்ட இல. 2213/38ஆம் இலக்க வா்த்தமானியில் (அதிவிசேடம்) வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க ஒழுங்குவிதிகளுக்கமைவாக தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றினைப் பேணுவதற்கு தகைமையுடையவராக இருத்தல் வேண்டும்.

**9. ஏனைய நிபந்தனைகள்**

(அ) அதே கணக்கு வைத்திருப்பவரின், உள்முக முதலீட்டுக் கணக்கொன்றின் அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவொன்றில் பேணப்படுகின்ற கணக்கொன்றின் ஊடாக நிதியங்கள் கிடைக்கப்பெறுகின்ற சந்தா்ப்பத்தில், அத்தகைய நிதியங்கள், 2020 ஏப்பிறல் 08 அன்று அல்லது அதற்குப் பின்னா் இலங்கையினுள் உள்முகப் பணவனுப்பல்களாகக் கிடைக்கப்பெற்றவை என்பதனை அதிகாரமளிக்கப்பட்ட வணிகா்கள் உறுதிசெய்தல் வேண்டும்.

(ஆ) ஏற்றுமதிப் பெறுகைகள், வதிகின்ற முதலீட்டாளா் மூலம் இலங்கைக்கு வெளியில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் ஆதாயங்கள்.'. விற்பனைப் பெறுகைகள் அல்லது எவையேனும் வேறு நியதிச்சட்டத் தேவைப்படுத்தல்களுக்குட்படுகின்ற வேறு உள்முகப் பணவனுப்பல்கள் போன்ற வேறு ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்குட்பட்டுள்ள உள்முகப் பணவனுப்பல்கள், சிறப்பு வைப்புக் கணக்கொன்றுக்கு வரவு வைக்கப்படுவதற்கு தகைமையுடையனவல்ல என்பதனை அதிகாரமளிக்கப்பட்ட வணிகா்கள் உறுதிசெய்தல் வேண்டும்.

(இ) குறைந்தபட்சம் 6 மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்கு முன்னா் முதிா்ச்சியுறா மீளெடுப்புகள் ஊக்கமிழக்கச் செய்யப்படல் வேண்டும். சிறப்பு வைப்புக் கணக்குகளின் முதிா்ச்சியுறா மீளெடுப்புக்கள் மேலே 5ஆம் பந்தியின் பிரகாரம் ஏதேனும் செலுத்தத்தக்க மேலதிக வட்டிக்கு தகைமை பெறாதிருத்தல் வேண்டும்.

(ஈ) 6 மாதங்கள் முதிா்ச்சிக் காலப்பகுதியுடன்கூடிய சிறப்பு வைப்புக் கணக்குகள், மேலும் 6 மாதங்கள் தவணையொன்றுக்காக மாத்திரம் (வட்டியற்ற) நீடிக்கப்படலாம் என்பதுடன் 6 மாத கால சிறப்பு வைப்புக் கணக்குகளுக்கென வழங்கப்படுகின்ற மேலதிக வட்டிக்கு மாத்திரம் (அதாவது தொடா்புடைய வங்கி மூலம் அதனையொத்த முதிா்ச்சியைக் கொண்ட சாதாரண வைப்புக்களுக்கு ஏற்புடைய வைப்பு வட்டி வீதங்களுக்கு மேலதிகமாக, வைப்பின் முதிா்ச்சியில் செலுத்தத்தக்க ஆண்டுக்கு 1 சதவீதப்புள்ளி) தகைமையுடையதாகவிருக்கும்.

(உ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகா்கள், இலங்கையில் வதிகின்ற ஆட்களுக்கான இலங்கை ரூபாய்களில் வழங்கப்படும் கடன்களுக்கான பிணைய உறுதியாக சிறப்பு வைப்புக் கணக்குகளை கருத்திற்கொள்ளலாம். மேலும், 2021 பெப்புருவரி 03ஆம் திகதியிடப்பட்ட 2213/37ஆம் இலக்க வா்த்தமானியில் (அதிவிசேட) வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க ஒழுங்குவிதிகளில் அனுமதிக்கப்பட்டவாறான அத்தகைய ஆட்களுக்கு வழங்கப்படுகின்ற கடன்கள் மீதான இயைபுடைய ஒழுங்குவிதிகளுக்குட்பட்டு இலங்கைக்கு வெளியில் வதிகின்ற எவரேனும் ஆளுக்கு இலங்கை ரூபாய்க் கடன்களை

அல்லது வெளிநாட்டு நாணயக் கடன்களை வழங்குவதற்கான பிணைய உறுதிகளாக சிறப்பு வைப்புக் கணக்குகளைப் பயன்படுத்தப்படலாம்.

(ஊ) மேலே 8(உ) பந்தியின் கீழ் மீளெடுப்புச் செய்த நிதியங்கள் சிறப்பு வைப்புக் கணக்கொன்றிற்கு மீளவும் வரவு வைக்கப்பட முடியாது.

(எ) ஏதேனும் தொடர்புடைய வங்கித்தொழில் உறவின் காரணமாக வேறொரு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் ஊடாக வழிப்படுத்தப்பட்ட கணக்கு வைத்திருப்பவர் சார்பில் உள்முகப் பணவனுப்பல் நிகழும் சந்தர்ப்பத்தில், உள்முகப் பணவனுப்பலை பெறுநரான அதிகாரமளிக்கப்பட்ட வணிகர், அத்தகைய நிதியங்கள் மாற்றல் செய்யப்படுகின்ற நேரத்தில் அத்தகைய நிதியங்கள் தகைமையுடைய உள்முகப் பணவனுப்பல்களாகக் கிடைக்கப் பெற்றுள்ளமையினைக் குறிப்பிட்டு, சிறப்பு வைப்புக் கணக்குகள் திறக்கப்படவுள்ள அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்கு உறுதிப்படுத்தலொன்றினை வழங்குதல் வேண்டும்.

(ஏ) கணக்கு வைத்திருப்பவரின் சார்பிலான வெளிமுகப் பணவனுப்பல்கள், சிறப்பு வைப்புக் கணக்கு பேணப்படுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் தவிர்ந்த அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் ஒருவர் ஊடாக மேற்கொள்ளப்படலாம், ஆயினும் கணக்கு வைத்திருப்பவரின் சிறப்பு வைப்புக் கணக்கிலிருந்தும் ஒழுங்குவிதிகளுக்கு இசைவாக வரவு வைக்கப்பட்ட நிதியங்களிலிருந்தும் நிதியங்கள் பற்றுவைக்கப்பட்டுள்ளன என்பதனைக் குறிப்பிட்டு சிறப்பு வைப்புக் கணக்கு பேணப்படுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகரிடமிருந்து உறுதிப்படுத்தலொன்று பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

(ஐ) வைப்பினை ஆரம்பிக்கின்ற நேரத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர், சிறப்பு வைப்புக் கணக்கு நியதிகள் மற்றும் நிபந்தனைகள் பற்றி வாடிக்கையாளரை தெளிவுபெறச் செய்தல் வேண்டும்.

(ஒ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், ஒழுங்குவிதிகளின் கீழ் திறக்கப்பட்ட சிறப்பு வைப்புக் கணக்குகளை அத்தகைய சிறப்பு வைப்புக் கணக்குகளின் குறித்துரைக்கப்பட்ட முதிர்வுத் திகதியைத் தாண்டி உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளில் "சிறப்பு வைப்புக் கணக்கு" என்ற பெயரில் சாதாரண வைப்புக்களாகத் தொடர்ந்தும் பேணலாம். முதிர்வுத் திகதிகளைத் தாண்டி அவ்வாறு வெளிப்படுகின்ற இச்சிறப்பு வைப்புக் கணக்குகளுக்கு வேறு தவணை வைப்புக்களுக்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் மூலம் வழங்கப்படுகின்ற சாதாரண வைப்பு வட்டி வீதங்கள் மாத்திரம் வழங்கப்படல் வேண்டும்.

**10. அறிக்கையிடுதல் தேவைப்பாடு**

(அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், சிறப்பு வைப்புக் கணக்குகள் தொடர்பான தகவல்களை னகநஅளூஉடிளட.டம என்ற மின்னஞ்சல் ஊடாக பின்வரும் அடிப்படையில் இத்திணைக்களத்திற்கு சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

i. வாராந்த அடிப்படையில், இணைப்பு Iஇல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டமைவிற்கமைவாக, தொடர்ந்துவரும் வாரத்தின் 2வது வேலைநாளில் தொழில் முடிவுக்குப்பிந்தாதும்,

ii. மாதாந்த அடிப்படையில், இணைப்பு IIஇல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டமைவிற்கமைவாக, தொடர்ந்துவரும் மாதத்தின் 15ஆவது நாளன்று அல்லது அதற்கு முன்னர்.

(ஆ) மேற்குறிப்பிடப்பட்ட அறிக்கையிடல் தேவைப்பாடுகளின் அடிப்படையில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், அவர்களுடைய வங்கிக் கணக்கு ஏடுகளிலிருந்து பொருத்தமான தகவல்களை உருவாக்க அல்லது பெற்றுக்கொள்ள வங்கியுனுள் முறைமையொன்றினை செயற்படுத்துவதற்கு வேண்டப்படுகின்றனர்.

11. 2020 யூலை 06ஆம் திகதியிடப்பட்ட 2020ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க, 2020 ஒத்தோபர் 07ஆம் திகதியிடப்பட்ட 2020ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க மற்றும் 2020 நவெம்பர் 25ஆம் திகதியிடப்பட்ட 2020ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க சிறப்பு வைப்புக் கணக்குகள் மீதான பணிப்புரைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

12. மேலே 11ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட முன்னைய பணிப்புரைகளை இரத்துச்செய்தமை இரத்துச்செய்வதற்கு முன்னர் அவற்றின் கீழ் ஒன்றுசேர்ந்து எவையேனும் உரிமைகளை அல்லது உறப்பட்ட தண்டங்களை அல்லது பொறுப்புக்களை பாதிக்கலாகாது.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**
**2021 ஏப்பிறல் 07**

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

**2222/60ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09ஆந் திகதி வெள்ளிக்கிழமை**

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**

**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

**1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டம்**

**1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 68ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10(இ)ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விதிகள்.**

பேராசிரியர் டபிள்யூ. டி. லக்ஷ்மன்,
நாணயச் சபையின் தலைவரும்,
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்.

இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு,
2021, ஏப்பிறல் 9.

**ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல்**

1. இவ்விதிகள், "2021ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க, ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்பும் விதிகள்" என எடுத்துக்காட்டப்படுதல் வேண்டும்.

2. 2021, மாச்சு 9ஆந் திகதியிடப்பட்ட 2218/38ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல் விதிகள் மூலம் திருத்தப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்டு 2021, பெப்புருவரி 18ஆந் திகதியிடப்பட்ட 2215/39ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல் விதிகள், அதன் 4ஆம் விதியினை நீக்கி பின்வரும் புதிய விதியினை அதற்குப் பதிலீடு செய்வதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகிறது.

"4. பொருட்களின் ஒவ்வொரு ஏற்றுமதியாளரும் மேலே 3ஆம் விதியின் கீழ் வேண்டப்பட்டவாறு, அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகள் இலங்கைக்கு கிடைக்கப்பெற்றதன் மீது முப்பது (30) நாட்களினுள் இலங்கையில் கிடைக்கப்பெற்ற சொல்லப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளின் மொத்தத்திலிருந்து மற்றும் மொத்தத்தில் பத்து சதவீதத்தினை (10%) உரிமம்பெற்ற வங்கியொன்றினூடாக இலங்கை ரூபாய்க்கு மாற்றிக் கொள்ளுதல் வேண்டும்.

ஆயினும், எவ்வாறிருப்பினும், அத்தகைய மாற்றும் திகதி, மேலே விதி 3(௭)இல் தேவைப்படுத்தப்பட்டவாறு ஏற்றுமதிப் பெறுகைகள் இலங்கையில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதற்கு முன்னரான திகதியினை விடப் பிந்திய திகதியொன்றாக இருத்தலாகாது (அதாவது கப்பலேற்றப்பட்ட திகதியிலிருந்து நூற்றியெண்பது (180) நாட்களுக்குப் பிந்தியதல்ல)."

**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 22ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபையுடன் பதிவுசெய்யப்பட்ட சுற்றுலாவிடுதிகளுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2021.03.26ஆம் திகதியிடப்பட்ட 2220/69ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) அறிவித்தலில் வெளியிடப்பட்டவாறு (கட்டளை) 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் 2ஆம் துணைப்பிரிவின் (இ) பந்தியின் கீழ் விடுக்கப்பட்ட கட்டளையினதும் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் பிரிவு 9(4) பிரிவினதும் நியதிகளில், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவுசெய்யப்பட்டுள்ள சுற்றுலாவிடுதிகள் இலங்கையில் வதியும் ஆட்களிடமிருந்து, அத்தகைய ஆட்களுக்கு அவர்கள் ஆற்றிய பணிகளுக்காக வெளிநாட்டு நாணயத்தினை ஏற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காக பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

2. சுற்றுலாவிடுதிகளினால் அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயத்தினை, ஏற்றுக்கொண்ட திகதியிலிருந்து ஏழு நாட்களுக்கு (7) மேல் அவர்களின் உடைமையில் வைத்திருக்கக்கூடாது என்பதுடன்;

   (அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் திறந்து பேணிவரும் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கில் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வணிகரிடம் சுற்றுலாவிடுதியின் பெயரில் வைப்புச் செய்தல் வேண்டும்; அல்லது

   (ஆ) அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகளைச் சமர்ப்பிப்பதன் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்கு விற்றுவிட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**3. ஏனைய நிபந்தனைகள்**

3.1 ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டு நாணயத்தின் தொகை, சுற்றுலாவிடுதியினால் வழங்கப்பட்ட பணிகளின் பெறுமதிக்கு மட்டுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் இது, அத்தகைய ஏற்றுக்கொள்ளலுக்காகச் செல்லுபடியாகக்கூடிய பற்றுச்சீட்டுக்களை வழங்குகின்ற நிபந்தனைக்கும் உட்பட்டதாகும்.

3.2 சுற்றுலாவிடுதிக்கு விஜயம் செய்யும் விருந்தினர்களுக்கு ஏதேனும் மீதி வழங்கப்பட வேண்டியிருப்பின் அவர் இலங்கையில் வதியும் ஆளாகவிருப்பின் அதனை இலங்கை ரூபாவில் செலுத்தலாம்.

3.3 வெளிநாட்டு நாணயத்தினை ஏற்றுக்கொள்வது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் வழங்கப்படும் அப்போது நிலவும் செலாவணி வீதங்களில் இருத்தல் வேண்டும்.

3.4 வெளிநாட்டு நாணயத் தாள்களை ஏற்றுக்கொள்வதுடன் தொடர்பான அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களும் குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கலின் நம்பகத்தன்மையினை நிறுவுவதற்கான தொடர்பான ஆவணச்சான்றுடன் சேர்த்து தனியான பதிவேடொன்றில் பதிவுசெய்யப்படல் வேண்டும் என்பதுடன், தேவைப்பட்டவாறு இலங்கை மத்திய வங்கியின் பரிசோதனைக்கு இயலும் விதத்தில் சுற்றுலாவிடுதிப் பணிமனையிலேயே வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

3.5 2006ஆம் ஆண்டின் 05ஆம் இலக்கப் பணம் தூயதாக்கல் தடைச் சட்டத்தின் 5.1ஆம் பிரிவின் நியதிகளில், சுற்றுலாவிடுதி வழங்கிய பணிகள் தொடர்பில் இலங்கையில் வதியும் ஆளிடமிருந்து உம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயம், ஏதேனும் சட்ட முறையற்ற நடவடிக்கையிலிருந்து அடையப்பட்டதென அல்லது தேறல் பெறப்பட்டதென நம்புவதற்கு உங்களுக்கு ஏதேனும் காரணமிருக்குமாயின் நீங்கள் அது பற்றி இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

4. **அறிக்கையிடுகின்ற தேவைப்பாடு**

இப்பணிப்புரைகளினால் அனுமதிக்கப்பட்ட சுற்றுலாவிடுதிகள், இணைப்பு ஐஇல் உள்ளவாறு, அறிக்கையொன்றை காலாண்டு அடிப்படையில் அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ னகநஅளூஉடிளட.டமம என்ற மின்னஞ்சலூடாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

5. **இப்பணிப்புரைகளின் நோக்கத்திற்காக**

(அ) “அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்” என்பது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) “மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்” என்பது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) “கட்டளை” என்பது இணைப்பு IIஇல் உள்ள 2021.03.26 திகதியிடப்பட்ட 2220/69ஆம் இலக்க அரச வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) அறிவித்தலில் வெளியிடப்பட்ட கட்டளையாக இருத்தல் வேண்டும்.

6. இப்பணிப்புரைகளினால் அனுமதிக்கப்பட்டதெதுவும், இப்பணிப்புரைகளின் கீழ், வெளிநாட்டுச் செலாவணியில் சுற்றுலாவிடுதி வணிகத்தில் ஈடுபடுகின்ற சுற்றுலாவிடுதிகளை வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது வேறு ஏதேனும் எழுதப்பட்ட சட்டங்களுக்கிணங்கி ஒழுகுவதற்கான தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கின்றது, விடுவிக்கின்றது அல்லது தடுக்கின்றது எனப் பொருள்கோடலாகாது.

**மேலதிகப் பணிப்பாளர்**
**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**
**2021 மே 04**

**2021ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு I**

**இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபையுடன் பதிவுசெய்துள்ள சுற்றுலாவிடுதிகளினால் வழங்கப்பட்ட பணிகள் தொடர்பில் இலங்கையில் வதியும் ஆட்களிடமிருந்து வெளிநாட்டு நாணயத்தினை ஏற்றுக்கொள்ளுதல்**

சுற்றுலாவிடுதியின் பெயர்: ........................................................................

அறிக்கையிடும் காலாண்டு/ ஆண்டு: ...............................

| ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை (ஐ.அ.டொலருக்குச் சமமாக)* | வெளிநாட்டு நாணயங்களின் வைப்புக்கள்/ விற்பனைகளின் விபரங்கள் (ஐ.அ.டொலருக்குச் சமமாக)* | |
|---|---|---|
| | அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன்/ மட்டுப்படுத்தப்பட்ட வணிகருடன் பேணப்படும் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு வைப்புச் செய்யப்பட்ட தொகை | அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருக்கு விற்பனை செய்யப்பட்ட தொகை |

| | | |
|---|---|---|
| | | |
| | | |

* ஒவ்வொரு கொடுக்கல்வாங்கல்களும் கொடுக்கல்வாங்கல் திகதியன்று நிலவிய செலாவணி வீதங்களைப் பயன்படுத்தி ஐ.அ.டொலரில் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

சுற்றுலாவிடுதியின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட/ தயாரிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட தகவல்கள் உண்மையானதும் துல்லியமானதும் என நாங்கள் உறுதிப்படுத்துகின்றோம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் மற்றும் பதவி: ......................................

கையொப்பம் மற்றும் முத்திரை: ..........................................

திகதி: .......................................................

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

**2229/5ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு மே மாதம் 25ஆந் திகதி செவ்வாய்க்கிழமை**

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

பகுதி I : தொகுதி (I) - பொது

**அரசாங்க அறிவித்தல்கள்**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

**4ஆம் பிரிவின் கீழான கட்டளை**

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் 2ஆம் துணைப் பிரிவின் பந்தி (இ) மூலம் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளையின் மூலம் 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் இலங்கையினுள் வெளிநாட்டுச் செலாவணியில் ஈடுபடல் வேண்டுமென்பதற்குட்பட்டு, இதன் கீழ் குறித்துரைக்கப்பட்டவாறான நோக்கங்களை, நியதிகளை அத்துடன் நிபந்தனைகளை விதித்துரைக்கின்றேன்.

2. 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் (இதனகத்துப் பின்னர் "தாய்க் கம்பனி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பின்வருவனவற்றுக்குட்பட்டு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் முன்கூட்டிய அனுமதியுடன் வெளிநாட்டுச் செலாவணியை உழைக்கின்ற இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட அவற்றின் துணைக் கம்பனிகளுக்கு ஏதேனும் பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் கடன் வழங்குவதற்கு இத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளன.

(i) தாய்க் கம்பனியானது, 2021 பெப்புருவரி 03ஆந் திகதியிடப்பட்ட 2213/35ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகளுக்கும் (இதனகத்துப் பின்னர் "2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க ஒழுங்குவிதிகள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்துடன் இக்கட்டளையின் கீழ் குறிப்பிடப்பட்ட நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவரிடமிருந்து தாய்க் கம்பனி மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட கடனொன்றின் கிடைப்பனவுகளிலிருந்து மாத்திரம் (இதனகத்துப் பின்னர் "வெளிநாட்டுக் கடன்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) துணைக் கம்பனிக்குச் சொல்லப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடனை (இதனகத்துப் பின்னர் "வெளிநாட்டு நாணயக் கடன்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வழங்குதல் வேண்டும்.

(ii) தாய்க் கம்பனியானது, துணைக் கம்பனிகளிடமிருந்து கிடைக்கப்பெறும் மேற்குறித்த அனுமதியின் கீழ் வழங்கப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களின் மீள்கொடுப்பனவுகளாக இருக்கின்ற வெளிநாட்டுச் செலாவணி உள்ளடங்கலாக கம்பனியின் வெளிநாட்டுச் செலாவணி உழைப்புக்களிலிருந்து சொல்லப்பட்ட வெளிநாட்டுக் கடனின் மீள்கொடுப்பனவுகளைச் செலுத்தல் வேண்டும். சொல்லப்பட்ட வெளிநாட்டுக் கடனின் மீள்கொடுப்பனவுகளுக்கான ரூபா மாற்றல், மத்திய வங்கி மூலம் வழங்கப்படும் பணிப்புரைகளுக்குட்பட்டு இறுதி முயற்சியொன்றாக மாத்திரம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

(iii) துணைக் கம்பனியினால் தாய்க் கம்பனியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன், மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட அனுமதிக்கமைவாக அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருடன் துணைக் கம்பனியினால் திறக்கப்பட்ட விசேட வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் சொல்லப்பட்ட கடனின் அனைத்து மீள்கொடுப்பனவுகளும் (முதன்மைத் தொகை மற்றும் வட்டி) அதே விசேட வெளிநாட்டு நாணயக் கணக்கினூடாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(iv) துணைக் கம்பனியானது, வாய்ப்புமிக்க எதிர்கால வெளிநாட்டுச் செலாவணி உழைப்புக்களைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், தாய்க் கம்பனியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சொல்லப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடனின் அனைத்து மீள்கொடுப்பனவுகளும், துணைக் கம்பனியின் வெளிநாட்டுச் செலாவணி உழைப்புக்களிலிருந்து மாத்திரம் செலுத்தப்படல் வேண்டும்.

(v) துணைக் கம்பனி, சொல்லப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடனின் கிடைப்பனவுகளை அதன் வியாபாரத் தொழிற்பாடுகளுக்கு மாத்திரம் உபயோகிக்கலாம் (இலங்கைக்கு வெளியிலான ஏதேனும் மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக).

(vi) எந்தவொரு சூழ்நிலையின் கீழும் சொல்லப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடனின் மீள்கொடுப்பனவுகள் முதன்மைத் தொகை மற்றும் வட்டி) துணைக் கம்பனி மூலம் ரூபாக்களை வெளிநாட்டுச் செலாவணியாக மாற்றுவதன் மூலம் மேற்கொள்ளப்பட முடியாது.

மஹிந்த ராஜபக்ஷ,
**நிதி அமைச்சர்.**

நிதி அமைச்சு,
கொழும்பு,
2021, மே 25.

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

**2229/9ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு மே மாதம் 28ஆந் திகதி வெள்ளிக்கிழமை**

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**

**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

**1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டம்**

**1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 68ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10(இ)ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள்.**

பேராசிரியர் டபிள்யூ. டி. லக்ஷ்மன்,
நாணயச் சபையின் தலைவரும்,
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்.

இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு,
2021, மே 28.

**ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல்**

1. இவ்விதிகள், "2021ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்பும் விதிகள்" என எடுத்துக்காட்டப்படுதல் வேண்டும்.

2. இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்டு 2021, பெப்புருவரி 18ஆந் திகதியிடப்பட்ட 2215/39ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்டு, 2021, மாச்சு 09ஆந் திகதியிடப்பட்ட 2218/38ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல் விதிகள் மற்றம் 2021, ஏப்பிறல் 09ஆந் திகதியிடப்பட்ட 2222/60ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல் விதிகள் மூலம் திருத்தப்பட்டவாறான 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல் விதிகள் இத்தால் மேலும் திருத்தப்படுகிறது.

(அ) அதன் 4ஆம் விதியினை நீக்கி பின்வரும் புதிய விதியினை அதற்குப் பதிலீடு செய்வதன் மூலம் -

"4. பொருட்களின் ஒவ்வொரு ஏற்றுமதியாளரும் மேலே 3ஆம் விதியின் கீழ் வேண்டப்பட்டவாறு, அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகள் இலங்கைக்கு கிடைக்கப்பெற்றதன் மீது முப்பது (30) நாட்களினுள் இலங்கையில் கிடைக்கப்பெற்ற சொல்லப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளிலிருந்தும் மொத்தத்திலும் இருபத்தைந்து சதவீதத்திற்குக் (25%) குறையாமல் உரிமம்பெற்ற வங்கியொன்றினூடாக இலங்கை ரூபாய்க்கு மாற்றிக் கொள்ளுதல் வேண்டும்".

"4அ. எவ்வாறிருப்பினும், நாணயச் சபையானது, அத்தகைய ஏற்றுமதித் துறையின், கைத்தொழிலின் அல்லது ஏற்றுமதியாளரின் ஏற்றுமதிப் பொருட்களும் செயன்முறைகளும் உள்நாட்டில் பெற்றுக்கொள்ள முடியாத இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மிக உயர்வான சதவீதமொன்றினைப் பயன்படுத்துகின்றன என அதன் தற்றுணிபில், நாணயச் சபை திருப்தியடையுமாயின், இலங்கையில் கிடைக்கப்பெற்ற ஏற்றுமதிப் பெறுகைகளின் மொத்தத்தின் இருபத்தைந்து சதவீதத்தினைவிடக் குறைவாக மாற்றுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய குறிப்பான ஏற்றுமதித் துறைகளை அல்லது கைத்தொழில்களை அல்லது தனிப்பட்டவர்களை நிர்ணயிக்கலாம்.

ஆயினும், எவ்வாறாயினும், எத்தகைய சந்தர்ப்பத்திலும், உடனடியாக மேலே குறிப்பீடு செய்யப்பட்டவாறு நாணயச் சபை, அதன் தற்றுணிபில் வழங்கக்கூடிய அத்தகைய பகுதியளவான விலக்களிப்பானது மொத்த ஏற்றுமதிப் பெறுகைகளில் பத்து சதவீதத்திற்கு (10%) கீழ் இருத்தலாகாது".

"4ஆ மேலே 4 மற்றும் 4அ விதியில் குறிப்பிடப்பட்ட அத்தகைய மாற்றும் திகதி, மேலே விதி 3(ஐ)இல் தேவைப்படுத்தப்பட்டவாறு ஏற்றுமதிப் பெறுகைகள் இலங்கையில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதற்கு முன்னரான திகதியினை விடப் பிந்திய திகதியொன்றாக இருத்தலாகாது (அதாவது கப்பலேற்றப்பட்ட திகதியிலிருந்து நூற்றியெண்பது (180) நாட்களுக்குப் பிந்தியல்ல)".

(ஆ) அதன் 5ஆம் விதியினை நீக்கி பின்வரும் புதிய விதியினை அதற்குப் பதிலீடு செய்வதன் மூலம் -

"5. நாணயச் சபையானது, பொதுவாக வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவத்தன்மை நிலைமையினையும் இலங்கையில் மொத்த அலுவல்சார் ஒதுக்கு மட்டங்களையும் பரிசீலனையில் கொண்டு, நிலவுகின்ற சூழ்நிலைகளில் பொருத்தமானதென அத்துடன் இயைபானதென நாணயச் சபை கருதக்கூடியவாறு விடயத்திற்கேற்ப உரிமம்பெற்ற வங்கியொன்றினூடாக இலங்கை ரூபாய்களினுள் மாற்றல் செய்யப்பட வேண்டிய இலங்கையில் கிடைக்கப்பெற்ற ஏற்றுமதிப் பெறுகைகளின், அத்தகைய வேறு சதவீதத்தை காலத்திற்குக் காலம் நிர்ணயிக்கலாம்".

**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் இராசதந்திர ரூபாக் கணக்குகள் என்பன தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2021.02.03ஆம் திகதியிடப்பட்ட 2213/38ஆம் இலக்க அரச வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற நோக்கத்திற்காக கணக்குகளைத் திறந்து மற்றும் பேணிவருதல்) ஒழுங்குவிதிகள் மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவு என்பனவற்றின் நியதிகளில் 2021.03.18ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 06ஆம் இலக்கப் பணிப்புரைகளின் 1.3.2ஆம் பந்தியின் விடயம் (ஆ) இத்தால் திருத்தப்பட்டு பின்வருமாறு பதிலீடு செய்யப்படுகிறது.

"(அ) பயண நோக்கங்களுக்கானவை உட்பட கணக்கு உடமையாளரின் உள்நாட்டுச் செலவுகளுக்கான வெளிநாட்டு நாணயத்திலான எடுப்பனவுகள்"

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**
**2021 யூன் 11**

**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 24ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2021.02.03ஆம் திகதியிடப்பட்ட 2213/38ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) அறிவித்தலில் வெளியிடப்பட்டவாறு (கட்டளை) 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற நோக்கத்திற்காக கணக்குகளைத் திறந்து மற்றும் பேணி வருதல்) ஒழுங்குவிதிகள் மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவு என்பனவற்றின் நியதிகளில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட 2021.03.18ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்கப் பணிப்புரைகள் (பணிப்புரைகள்) பின்வருமாறு வாசிக்கப்படும் விதத்தில் இத்தால் திருத்தப்படுகிறது.

I. பணிப்புரைகளின் இணைப்பு I இத்தால் திருத்தப்பட்டு இங்கே இணைக்கப்பட்டவாறு பதிலீடு செய்யப்படுகிறது.

II. பணிப்புரைகளின் 1.5ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளுக்கும் புறம்பாக பின்வருவன உள்ளடக்கப்பட்டு இங்கே விடயம் (உ)இல் உள்ளவாறு வாசிக்கப்படுதல் வேண்டும்.

(உ) வெளிநாட்டுச் செலாவணி இலங்கைக்கு வெளியே வதிபவரிடமிருந்து ஈட்டப்பட்டது என்ற விடயம் எது எப்படியிருப்பினும், நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளில் அல்லது இப்பணிப்புரைகளுக்கு முன்னைய வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகளின் நியதிகளில், ஏற்கனவே திறக்கப்பட்ட வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளை இப்பணிப்புரைகளின் இணைப்பு Iஇன் விடயம் 16இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட பிரமாணங்களை பொருட்களின் மறைமுகமான ஏற்றுமதியாளர் என்ற ரீதியில் பூர்த்திசெய்த ஆள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பேணி வரலாம்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**
**2021 யூன் 17**

**இணைப்பு** I

**ஆட்களின் வகை**

1. பொருட்களின் ஏற்றுமதியாளர்கள் (வணிகப்பொருட்கள்)
2. தொழில்சார் பணிகளின் ஏற்றுமதியாளர்கள்
3. இடையேற்பாட்டாளர்களாக துறைமுகத்திலான வர்த்தக வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆட்கள்
4. பயண முகவர்கள் பயண தொழிற்பாட்டாளர்கள்
5. சுற்றுலாவிடுதிகள் மற்றும் உணவகங்கள்
6. இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண வணிகர்கள்
7. வெளிநாட்டு தொழில் முகவர்கள்
8. இலங்கை வணிக கப்பற்படுத்தல் பணிப்பாளர் நாயகத்தினால் உரிமம்பெற்ற/ அதிகாரமளிக்கப்பட்ட சரக்கு அனுப்புவோர் மற்றும் ஏனைய ஏற்பாட்டு பணிகளை வழங்குவோர்.
9. இலங்கை வணிக கப்பற்படுத்தல் பணிப்பாளர் நாயகத்தினால் உரிமம்பெற்ற அதிகாரமளிக்கப்பட்ட கப்பற்படுத்தல் முகவர்கள்.
10. இலங்கை விமான போக்குவரத்து அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தினால் உரிமம்பெற்ற/ அதிகாரமளிக்கப்பட்ட பொது விற்பனை முகவர்கள்
11. தொடர்பான நிரல் அமைச்சினால் உரிமம் வழங்கப்பட்ட நீர்க்கல எரிபொருள் தொழிற்பாட்டாளர்கள்.
12. துறைமுக முனைக்கோடி தொழிற்பாட்டாளர்கள்
13. வானூர்திநிலைய முனைக்கோடி பணி வழங்குவோர்
14. கப்பற்படுத்தல் வான் பயணங்களுக்கு உணவு மற்றும் குடிபானங்களை விநியோகிப்போர்
15. தீர்வையற்ற கடைகள் (தீர்வையற்ற சலுகைகளின் கீழ் பொருட்கள் மற்றும் பணிகளை வழங்கும் அனுமதிக்கப்பட்ட வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்கள்)
16. இலங்கை முதலீட்டுச் சபை அல்லது ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அல்லது தற்காலிக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி பதனிடல் திட்டம் மற்றும் பதனிடலுக்காகப் பொருட்களை இறக்குமதி செய்தல் மற்றும் அத்தகைய பொருட்களை நேரடி ஏற்றுமதியாளர்களுக்கு விநியோகித்தல் என்பனவற்றின் தேவைப்பாடுகள் அத்துடன் அல்லது விதந்துரைப்புக்களுக்கு இணங்கியொழுகும் பொருட்களின் மறைமுக ஏற்றுமதியாளர்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

**2234/19ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு யூன் மாதம் 30ஆந் திகதி புதன்கிழமை**

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.**

முறையே 2020, ஏப்பிறல் 8, 2020, யூலை 1 மற்றும் 2020, ஒற்றோபர் 6ஆந் திகதிகளிடப்பட்ட 2170/4ஆம் இலக்க, 2182/32ஆம் இலக்க மற்றும் 2196/22ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களில் வெளியிடப்பட்டு முறையே 2020, நவெம்பர் 17 மற்றும் 2021, ஏப்பிறல் 7ஆந் திகதிகளிடப்பட்ட 2202/7ஆம் இலக்க மற்றும் 2222/37ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் திருத்தப்பட்டவாறான "சிறப்பு வைப்புக் கணக்குகள்" மீதான ஒழுங்குவிதிகளுக்கு (ஒழுங்குவிதிகள்) மேலதிகமாக, ஒழுங்குவிதிகளின் கீழ் திறக்கப்பட்ட சிறப்பு வைப்புக் கணக்குகளை ஆறு மாதங்கள் அல்லது பன்னிரண்டு மாத காலத்துடன் நீடிப்பதற்கு (வட்டி நீங்கலாக) அனுமதி வழங்கப்படுகிறது. ஆயினும், சொல்லப்பட்ட சிறப்பு வைப்புக் கணக்குகளின் ஒன்றுதிரண்ட காலம், மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கமைவாக அத்தகைய வைப்புக்களை வைப்பிலிடுகின்ற ஆரம்பத் திகதியிலிருந்து இருபத்துநான்கு மாதங்களைக் கொண்ட உயர்ந்தபட்சத்தினை விஞ்சுதலாகாது.

அவ்வாறு நீடிக்கப்பட்ட சிறப்பு வைப்புக் கணக்குகள், சிறப்பு வைப்புக் கணக்குகள் மீது மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்குட்பட்டு 2020, ஏப்பிறல் 8ஆந் திகதியிடப்பட்ட 2170/4ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளில் குறித்துக்காட்டப்பட்டவாறு அரசாங்கத்தினால் வழங்கப்படும் மேலதிக வட்டிக்கு தகைமையுடையதாக இருக்கும்.

மஹிந்த ராஜபக்ஷ,
**நிதி அமைச்சர்.**

கொழும்பு,
2021, யூன் 30.

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

**2234/20ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு யூன் மாதம் 30ஆந் திகதி புதன்கிழமை**

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.**

மஹிந்த ராஜபக்ஷ,
**நிதி அமைச்சர்.**

கொழும்பு,
2021, யூன் 30.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2021ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க, வெளிநாட்டு செலாவணி (இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளில் முதலீடு) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கிணங்க, இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவரிடமிருந்து வெளிநாட்டு நாணயத்தினைக் கடன்பட்டிருக்கும் இலங்கையிலுள்ள 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் (2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க, நிதித்தொழில் சட்டத்தின்படி நிதி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள கம்பனிகள் நீங்கலாக) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டும் இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்படும் பணிப்புரைகளுக்கு இணங்கவும் குறிப்பிட்ட கடன்பாடுகளில் ஐம்பது சதவீதத்தினைப் பயன்படுத்தி இரண்டாந்தரச் சந்தையிலிருந்து இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளைக் கொள்வனவு

செய்வதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.

(i) இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை அத்தகைய கோரிக்கைகளைப் பரிசீலனையில் கொண்டு ஒவ்வொரு விடயமாக ஆராய்ந்து ஒப்புதலை வழங்கும்.

(ii) குறிப்பிட்ட கடன்பாட்டின் மீதி ஐம்பது சதவீதம் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடு செய்யப்படல் வேண்டும்.

(iii) இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகளில் செய்யப்பட்ட முதலீடுகளுக்கான நிதியின் மூலங்கள் வெளிநாட்டுக் கடன்பாடுகளாக வெளிநாடுகளிலிருந்து பிரத்தியேகமாகவும் இலங்கைக்கான உள்முக பணவனுப்பல்களாக பெறப்பட்டனவாகவும் இருத்தல் வேண்டும்.

(iv) தகைமையுடைய கம்பனிகள், 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் கீழ் வெளிநாட்டுக் கடன்பாடுகள் மீது விடுக்கப்பட்ட தற்போதைய ஒழுங்குவிதிகளுக்குட்பட்டு அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருடன் திறக்கப்பட்ட வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுக் கணக்கிற்குள் அத்தகைய கடன் பெறுகைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் என்பனவற்றில் செய்யப்படும் முதலீடுகள் தொடர்பான பணவனுப்பல்கள் இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்படும் பணிப்புரைகளுக்கிணங்கி அதே வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டு கணக்கிற்கூடாகவே செய்யப்படல் வேண்டும்.

(v) அவ்வாறு வாங்கப்பட்ட இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகளின் கூப்பன் மற்றும் முதிர்ச்சிப் பெறுகைகள் எந்த வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுக் கணக்கினூடாக முதலீடு மேற்கொள்ளப்பட்டதோ அதே கணக்கிற்கு மீண்டும் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(vi) தொடர்பான கடன்பாடுகளின் வட்டி மற்றும் மூலதனத்தின் மீள்கொடுப்பனவுகள் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகளில் செய்யப்பட்ட தொடர்பான முதலீடுகளின் கூப்பன் மற்றும் முதிர்ச்சிப் பெறுகைகளுடன் ஒத்திசைவானதாக இருக்கும் விதத்தில் (கடன்பாட்டாளர் மற்றும் கடன் வழங்கியவர் இருவருக்குமிடையிலான இணக்கப்பாட்டின்படி) அட்டவணையிடப்படுதல் வேண்டும்.

(vii) எந்தவொரு சூழ்நிலையின் கீழும், இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடு செய்யும் நோக்கத்திற்காக வெளிநாடுகளிலிருந்து பெறப்பட்ட குறிப்பிட்ட கடன்களின் மீள் கொடுப்பனவுகள் இலங்கை ரூபாவினை வெளிநாட்டுச் செலாவணிக்கு மாற்றிக் கொள்வதன் மூலம் மேற்கொள்ளப்படக் கூடாது.

(viii) மேலும், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், தகைமையுடைய கம்பனிகள் உரிய விழிப்புக் கவனத்துடனும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகும் விதத்திலும் நடந்து கொள்வதனை எப்பொழுதும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

**2234/49ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு யூலை மாதம் 02ஆந் திகதி வெள்ளிக்கிழமை**

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**

**அரசாங்க அறிவித்தல்கள்**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

**22ஆம் பிரிவின் கீழான கட்டளை**

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளையின் மூலம்,

(i) 2021, பெப்புருவரி மாதம் 3ஆந் திகதியிடப்பட்ட 2213/36ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் (இதனகத்துப்பின்னர் "2021ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க ஒழுங்குவிதிகள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அட்டவணையின் பகுதி ஐஇல் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் இலங்கையிலுள்ள ஏதேனும் சொத்திலிருந்து (அசையக்கூடிய, அசையாத, உருவ மற்றும் அருவச் சொத்துக்கள் அடங்கலாக) தேறிய நிதியங்களாகவிருக்கின்ற, உடனடிக் குடும்ப உறுப்பினரொருவரிடமிருந்து புலம்பெயர்ந்த ஒருவரினால் பண அன்பளிப்புக்களாகப் பெறப்பட்ட நிதியங்களிலிருந்து புலம்பெயர் முற்கொடுப்பனவின் கீழ் நிதியங்களை சொந்த நாட்டுக்கு அனுப்புவதை இடைநிறுத்துகின்றேன்.

(ii) இக்கட்டளையின் திகதியிலிருந்து இக்கட்டளை செயற்பாட்டிலுள்ள காலத்தின் போது, 2021ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் ஏற்கனவே புலம்பெயர் முற்கொடுப்பனவினைக் கோரியுள்ள புலம்பெயர்ந்தவர்களினால் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாய்க் கணக்குகளூடாக புலம்பெயர் முற்கொடுப்பனவின் கீழ் நிதியங்களைச் சொந்த நாட்டிற்குத் திருப்பியனுப்புவதை உயர்ந்தபட்சம் ஐ.அ. டொலர் 10,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.

(iii) இக்கட்டளை செயற்பாட்டிலுள்ள காலத்தின் போது, 2021ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் புலம்பெயர் முற்கொடுப்பனவினை முதற் தடவையாகக் கோருகின்ற புலம்பெயர்ந்தவர்களுக்கான தகைமையுடைய புலம்பெயர் முற்கொடுப்பனவினை உயர்ந்தபட்சம் ஐ.அ. டொலர் 30,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.

(iv) இக்கட்டளை செயற்பாட்டிலுள்ள காலத்தின் போது, 2021ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாய்க் கணக்குகள் அல்லது புலம்பெயர்ந்தவர்களின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்குகள் ஊடாக புலம்பெயர்ந்தவர்களினால் ஏதேனும் நடப்பு வருமானத்தினை அல்லது திரண்ட நடப்பு வருமானத்தினை (ஊழிய சேமலாப நிதியம், ஊழிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், பணிக்கொடை மற்றும் ஓய்வூதியங்கள் அல்லது வேறு ஏதேனும் ஓய்வுநலன்கள் அடங்கலாக) சொந்த நாட்டிற்கு அனுப்புவதை உயர்ந்தபட்சம் ஐ.அ. டொலர் 30,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.

(v) 2021ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் வதிகின்ற அத்துடன் வேறொரு நாடொன்றில் தற்காலிக வதிவிட வீசாவைப் பெற்றுக்கொண்டுள்ள எவரேனும் தனிப்பட்ட இலங்கையருக்கான வெளிமுகப் பணவனுப்பல்களை அல்லது வெளிநாட்டுச் செலாவணி வழங்கலை ஆளொருவருக்கு உயர்ந்தபட்சம் ஐ.அ. டொலர் 20,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.

(vi) 2021ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 3ஆந் திகதியிடப்பட்ட 2213/37ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் அட்டவணையில் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் வேறொரு நாட்டின் தற்காலிக வீசாவின் கீழ் இலங்கையிலிருந்து வெளிச்செல்வதற்கு உத்தேசிக்கின்ற இலங்கையில் வதிகின்ற எவரேனும் ஆளுக்கான வெளிநாட்டுச் செலாவணி வழங்கலை ஆளொருவருக்கு உயர்ந்தபட்சம் ஐ.அ. டொலர் 10,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.

(vii) 2021ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 3ஆந் திகதியிடப்பட்ட 2213/34ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் அட்டவணையில் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் இலங்கையில் வதிகின்ற ஆட்களினால் வெளிநாடுகளில் முதலீடுகளை மேற்கொள்கின்ற நோக்கத்திற்காக பின்வருவன நீங்கலாக, வெளிமுக முதலீட்டுக் கணக்குகள் ஊடாக கொடுப்பனவுகளை மேற்கொள்வதை இடைநிறுத்துகின்றேன்.

(அ) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கைக்கு வெளியில் வதிகின்ற ஆளொருவரிடமிருந்து முதலீட்டாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடனொன்றிலிருந்து நிதியளிக்கப்படவுள்ள முதலீடுகள், அல்லது

(ஆ) சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கி முதலீட்டினைப் பெறுபவரின் நாட்டிலுள்ள கம்பனியொன்றில் அல்லது கிளை அலுவலகமொன்றில் ஏற்கனவே செய்யப்பட்ட முதலீடு மீது பிரயோகிக்கப்படக்கூடிய அந்நாட்டின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்படுத்தலினை நிறைவுசெய்வதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய மேலதிக முதலீடொன்று, அல்லது

(இ) முதலீட்டினைப் பெறுபவரின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகள் நோக்கத்திற்காக, உயர்ந்தபட்சம் ஐ.அ. டொலர் 15,000 அல்லது ஏதேனும் வேறு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குட்பட்டு வெளிநாடுகளில் கூட்டிணைக்கப்பட்ட/ தாபிக்கப்பட்ட ஏற்கனவே தாபிக்கப்பட்ட துணை நிறுவனங்களில் அல்லது கிளை அலுவலகங்களில் தகைமையுடைய வதியும் கம்பனிகளினால் மேற்கொள்ளப்படவுள்ள நிதியங்களின் மேலதிக முதலீடு/ மேலதிக உட்செலுத்தல் (ஏற்புடையவாறு), அல்லது

(ஈ) தகைமையுடைய வதியும் கம்பனிகளால் சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குட்பட்டு வெளிநாட்டில் ஏற்கனவே தாபிக்கப்பட்ட தொடர்புபடுத்தல், சந்தைப்படுத்தல், முகவராண்மை, கருத்திட்டம், பிரதிநிதி அல்லது வேறு ஏதேனும் அதனையொத்த அலுவலகங்களின் பராமரிப்பு நோக்கத்திற்காக உயர்ந்தபட்ச ஐ.அ. டொலர் 30,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரையான பணவனுப்பல்கள்,

ஆயின், வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் தலைவர் அத்தகைய தேவைப்படுத்தலினை நிறைவுசெய்தல் பற்றி திருப்தியடைய வேண்டும்.

(viii) இக்கட்டளை செயற்பாட்டிலுள்ள காலத்தின் போது, இலங்கையில் வதிகின்ற ஆளொருவரினால் வைத்திருக்கப்படுகின்ற வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது/ அத்துடன் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளூடாக மூலதனக் கொடுக்கல்வாங்கல் மீதான வெளிமுகப் பணவனுப்பல்களை உயர்ந்தபட்சம் ஐ.அ. டொலர் 20,000 அல்லது ஏதேனும் வேறு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.

(ix) 2021ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஒழுங்குவிதிகளில் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியில் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளை விஞ்சுகின்ற முதலீடுகளுக்காக விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7(10)ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் அனுமதி வழங்குவதற்கு நாணயச் சபை அதிகாரத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆயின்,

(அ) முன்மொழியப்பட்ட முதலீடானது வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவரிடமிருந்து முதலீட்டாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன் ஒன்றிலிருந்து நிதியளிக்கப்படுவதாக இருத்தல், அல்லது

(ஆ) முன்மொழியப்பட்ட முதலீடானது சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க முதலீட்டினைப் பெறுபவரின் நாட்டிலுள்ள கம்பனியொன்றில் அல்லது கிளை அலுவலகமொன்றில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட முதலீடு மீது ஏற்புடைய அந்நாட்டின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டினை நிறைவுசெய்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டியதாக இருத்தல்.

இக்கட்டளையானது, இக்கட்டளையின் திகதியிலிருந்து 6 மாத காலப் பகுதிக்கு செல்லுபடியானதாகும்.

மஹிந்த ராஜபக்ஷ,
**நிதி அமைச்சர்.**

கொழும்பு,
2021, யூன் 30.

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

**2235/22ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு யூலை மாதம் 06ஆந் திகதி செவ்வாய்க்கிழமை**

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.**

மஹிந்த ராஜபக்ஷ,
**நிதி அமைச்சர்.**

கொழும்பு,
2021, யூலை 06.

**ஒழுங்குவிதிகள்**

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021, பெப்புருவரி மாதம் 03ஆந் திகதியிடப்பட்ட 2213/35ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவரினால் இலங்கையில் பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகள் பின்வருமாறு திருத்தப்படுகின்றன.

(1) ஒழுங்குவிதிகளின் அட்டவணையின் பகுதி I இன் அ தலைப்பின் கீழ் 1ஆம் பந்தியின் துணைப்பந்தி (8)இன் விடயம் "எ" இத்தால் இரத்துச் செய்யப்பட்டு பின்வரும் விடயம் பதிலீடு செய்யப்படுகிறது :-

(எ) "கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட இலங்கை ரூபாவில் அமைந்த படுகடன் பிணையங்கள்".

(2) ஒழுங்குவிதிகளின் அட்டவணையின் பகுதி I இன் அ தலைப்பின் கீழ் 1ஆம் பந்தியின் துணைப்பந்தி (8)இன் விடயம் "ஏ" ஆகப் பின்வரும் விடயம் உட்புகுத்தப்படுகிறது :-

(ஏ) "கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்திலமைந்த படுகடன் பிணையங்கள்".

(3) ஒழுங்குவிதிகளின் அட்டவணையின் பகுதி I இன் அ தலைப்பின் கீழ் 1 ஆம் பந்தியின் (11) ஆம் துணைப்பந்தியாகப் பின்வரும் விடயம் உட்புகுத்தப்படுகிறது:-

(11) "அட்டவணையின் இப்பகுதியின் அ தலைப்பின் கீழ் 7ஆம் மற்றும் 8ஆம் பந்திகளில் கூறப்பட்ட விலக்கல்களுக்கும் வரையறைகளுக்கும் அமைய 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளினால் கொழும்புப் பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டு வழங்கப்பட்ட (பங்குகளுக்கு அல்லது பங்குகளுக்கு மாற்றல் செய்வதற்கான உரித்துடமையொன்றின் கீழான பங்குகள் உட்பட) ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களிலுள்ள பங்குகளின் அனைத்து வகுப்புக்களையும் கொள்வதற்கு, உடைமையில் வைத்திருப்பதற்கு அல்லது உரிமை துறப்பதற்கு".

(4) பின்வரும் பந்தியானது, ஒழுங்குவிதிகளின் அட்டவணையினது பகுதி Iஇன் அ தலைப்பின் கீழ் 4ஆம் பந்தியினது (9)ஆம் துணைப்பந்தியாக உட்புகுத்தப்படுகிறது:-

(9) "எந்தவொரு சூழ்நிலைகளின் கீழும், அட்டவணையின் பகுதி ஐஇன் அ தலைப்பின் கீழ் 1ஆம் பந்தியின் (8)ஆம் துணைப்பந்தியின் விடயம் "ஏ" இன் மற்றும் (11)ஆம் துணைப் பந்திகளின் கீழ் இலங்கையிலுள்ள கம்பனிகளினால் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் வழங்கப்பட்ட குறிப்பிடப்பட்டவாறான பட்டியலிடப்பட்ட பங்குகளை அல்லது பட்டியலிடப்பட்ட படுகடன் பிணையங்களை உள்முக முதலீட்டுக் கணக்குகளூடாக அத்தகைய முதலீடுகளைச் செய்கின்றவர்களும் இலங்கையில் வதிகின்றவர்களுமான இலங்கையரல்லாதவர்கள் நீங்கலாக இலங்கையில் வதியும் எந்தவொரு ஆளுக்கும் விற்பனை செய்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது".

(5) ஒழுங்குவிதிகளின் அட்டவணையினது பகுதி Iஇன் 4ஆம் பந்தியின் (10)ஆம் துணைப்பந்தியாக பின்வருவன உட்புகுத்தப்படுகிறது:-

(10) "ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் பட்டியலிடப்பட்ட பங்குகள் மற்றும் பட்டியலிடப்பட்ட படுகடன் பிணையங்களில் செய்யப்பட்ட முதலீடுகள் தொடர்பில் மேலும் நிபந்தனைகள் பிரயோகிக்கப்படுகின்றன.

(அ) கம்பனியானது, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்படுவதற்கு உடனடியாக முற்போந்த மூன்றாண்டு காலப்பகுதிக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களின்படி கம்பனியின் மொத்த ஆண்டு வருமானத்தில் குறைந்தபட்சம் 50% இனை வெளிநாட்டுச் செலாவணி வருவாயாக அதாவது குறைந்தபட்சம் ஐ.அ. டொலர் 5 மில்லியனுக்குச் சமமான தொகையினை தொடர்ச்சியாக ஈட்டுகின்றதொன்றாக இருத்தல் வேண்டும் (அதாவது முதலீட்டைப் பெறுபவர்). இவ்வொழுங்குவிதிகளின் கீழ் அவ்வாறு தகைமையுடைய முதலீட்டைப் பெறுபவர் அதே மட்டத்தில் வெளிநாட்டுச் செலாவணியினை உழைக்கத்தக்க வாய்ப்பினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) வதிவற்ற முதலீட்டாளரொருவரின் உள்முக முதலீட்டுக் கணக்கினூடாகப் பெறப்பட்ட ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் வழங்கப்பட்ட பட்டியலிடப்பட்ட பங்குகளின் முதலீட்டுத் தொகையானது, மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்குட்பட்டு அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருடன் முதலீட்டினைப் பெறுபவரினால் திறக்கப்பட்டு பேணப்பட்டு வரும் சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு வரவு வைக்கப்படல் வேண்டும்.

(இ) மேலேயுள்ள 10ஆவது துணைப் பந்தியின் விடயம் (ஆ) இன் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட பெறுகைகளில் 60% இற்குச் சமமானதொரு தொகையினை, முதலீட்டினைப் பெறுபவர் இலங்கைக்கு வெளியே ஏதேனும் மூலதனக் கொடுக்கல்வாங்கல்களுக்குப் பயன்படுத்தலாம்.

(ஈ) முதலீட்டினைப் பெறுபவர், இவ்வொழுங்குவிதியில் அனுமதிக்கப்பட்டவாறு, சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கினூடாகச் செய்யப்பட்ட குறிப்பிடப்பட்ட முதலீடுகளின் ஏதேனும் வருமானத்தினை அல்லது மூலதனப் பெறுகைகளை, இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்குட்பட்டு அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் முதலீட்டினைப் பெறுபவரினால் திறந்து பேணப்படுகின்ற எந்த சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கினூடாக முதலீடு செய்யப்பட்டதோ அதே கணக்கிற்கு கொடுப்பனவு பெறப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் இலங்கைக்கு அனுப்பி வைக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(உ) அவ்வாறு பெறப்பட்ட பெறுகைகளின் மூலதன நன்மைகளில் 50% இற்குச் சமமான தொகையொன்றினை இலங்கைக்கு வெளியே ஏதேனும் மூலதனக் கொடுக்கல்வாங்கல்களுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்காக விசேட வெளிநாட்டு நாணயக் கணக்கினூடாக அனுப்பி வைக்கலாம். அத்தகைய தொடரும் முதலீடுகளில் ஏதேனும் வருமானம் அல்லது மூலதனப் பெறுகைகளும் கூட, மேலுள்ள துணைப் பந்தி (10)இன் விடயம் (ஈ)இன் கீழான நிபந்தனைக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(ஊ) வதிவற்ற முதலீட்டாளரொருவரின் உள்முக முதலீட்டுக் கணக்கினூடாகப் பெறப்பட்ட ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் வழங்கப்பட்ட பட்டியலிடப்பட்ட படுகடன் பிணையங்களின் முதலீட்டுத் தொகையானது,

மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்குட்பட்டு அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருடன் முதலீட்டினைப் பெறுபவரினால் திறக்கப்பட்டு பேணப்பட்டு வரும் சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு வரவு வைக்கப்படல் வேண்டும்.

(எ) குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் வழங்கப்பட்ட பட்டியலிடப்பட்ட படுகடன் பிணையங்கள் அல்லது பட்டியலிடப்பட்ட பங்குகள் மீதான ஏதேனும் வருமானம் அல்லது முதிர்ச்சிப் பெறுகைகளை, மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்குட்பட்டு அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருடன் திறக்கப்பட்டு பேணப்பட்டு வரும் சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கில் வைத்திருக்கப்படும் முதலீட்டைப் பெறுபவரின் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களிலிருந்து மாத்திரம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(ஏ) முதலீட்டினைப் பெறுபவர், இது தொடர்பில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையினால் விடுக்கப்பட்ட விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் பின்பற்றுதல் வேண்டும்."

**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 25ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

சிறப்பு வைப்புக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2020 ஏப்பிறல் 08ஆம் திகதியிடப்பட்ட 2170/4ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) அறிவித்தலில் வெளியிடப்பட்டவாறான ஒழுங்குவிதிகள், அதனைத் தொடர்ந்து 2020 யூலை 01ஆம் திகதியிடப்பட்ட 2182/32ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேடமானது) அறிவித்தலில் வெளியிடப்பட்ட மற்றும் 2020 ஒத்தோபர் 06ஆம் திகதியிடப்பட்ட 2196/22ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேடமானது) அறிவித்தலில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் 2021 ஏப்பிறல் 07ஆம் திகதியிடப்பட்ட 2222/37ஆம் இலக்க மற்றும் 2021.06.30ஆம் திகதியிடப்பட்ட 2234/19ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேடமானது) அறிவித்தலில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவு ஆகிய நியதிகளில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவில் சிறப்பு வைப்புக் கணக்குகளைத் திறந்து மற்றும் பேணி வருவதற்கு இத்தால் அனுமதிக்கப்படுகின்றனர்.

**2. தகைமையுடைய ஆட்கள்**

(அ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் வதிகின்ற தனிப்பட்ட இலங்கையர்கள்

(ஆ) இரட்டைப் பிரசாவுரிமையுடையோர்

(இ) இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட மற்றைய நாடுகளின் பிரசைகள்

(ஈ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் வதிகின்ற இலங்கையரல்லாதோர்

(உ) இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட/ பதிவுசெய்யப்பட்ட நிதியங்கள், கம்பனிச் சபைகள் மற்றும் சங்கங்கள்

(ஊ) வேறு எவரேனும் நலன்விரும்பிகள்

**3. சிறப்பு வைப்புக் கணக்குகளைத் திறந்து மற்றும் பேணிவருதல்**

(அ) சிறப்பு வைப்புக் கணக்குகள் 2020 ஏப்பிறல் 08ஆம் திகதியிலிருந்து இருபத்து நான்கு மாத காலப்பகுதியில் திறக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) சிறப்பு வைப்புக் கணக்குகளை கால வைப்புக்கள் வடிவில் மாத்திரமே திறந்து மற்றும் பேணி வருதல் வேண்டும். சிறப்பு வைப்புக் கணக்குகளில் வைப்பிலிடுவதற்கான நிதியங்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்திற்காக மற்றும் சிறப்பு வைப்புக் கணக்கின் கால வைப்புக்களிலுள்ள நிதிகளை வெளியில் அனுப்புவதற்காகவும் மாத்திரம் தொழிற்பாட்டுக் கணக்குகளாக சிறப்பு வைப்புக் கணக்குகளை சேமிப்பு கணக்குகள் வடிவில் திறக்க முடியும்.

(இ) சிறப்பு வைப்புக் கணக்குகளை ஒன்றில் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அல்லது இலங்கை ரூபாவில் திறந்து மற்றும் பேணி வருதல் வேண்டும்.

(ஈ) சிறப்பு வைப்புக் கணக்குகளை தகைமையுடைய ஆட்கள் கூட்டாகவும் பேணி வரலாம்.

**4. குறைந்தபட்ச காலம்: ஆறு (06) மாதங்கள்**

5. செலுத்தத்தக்க வட்டி: தொடர்பான அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் இதையொத்த முதிர்ச்சிகளைக் கொண்ட வழமையான வைப்புக்களுக்கு வழங்கப்படும் வட்டி வீதங்களுக்கு மேலதிகமாக, முறையே 6 மாத மற்றும் 12 மாத காலங்களுடன் கூடிய சிறப்பு வைப்புக்களுக்காக (வைப்பு நாணயத்தில்) முதிர்ச்சியில் செலுத்தத்தக்க வட்டி ஆண்டிற்கு ஒரு (1) சதவீத புள்ளியாகவும் இரண்டு (2) சதவீதப் புள்ளியாகவும் காணப்படும்.

குறிப்பு: இலங்கை மத்திய வங்கி, வைப்புக்களின் முதிர்ச்சியில் அத்தகைய வட்டி செலுத்தப்படுகின்ற திகதியன்று, ஏற்புடைத்தானவாறு இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட குறியீட்டு வீதமொன்றினைப் பயன்படுத்தி மாற்றல் செய்யப்பட்ட இலங்கை ரூபாவினை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான மேலதிக வட்டியைக் காலாந்தர அடிப்படையில் மீளஅனுப்பி வைக்கும்.

6. நிதியங்களைச் சொந்த நாட்டிற்குள் திருப்பியனுப்புதல்: கால வைப்புக்கள் முதிர்ச்சியடையும் போது எவ்வித கட்டுப்பாடுமின்றி மாற்றி இலங்கைக்கு வெளியே சொந்த நாட்டிற்கு அனுப்பி வைக்கலாம்.

7. **அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) வங்கித்தொழில் முறைமையினூடாகக் கணக்கு உடமையாளரின் பெயரில் இலங்கைக்கு வெளியிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட்ட உள்முகப் பணவனுப்பல்கள்.

(ஆ) கணக்கு உடமையாளரின் பெயரில் 2020 ஏப்பிறல் 08ஆம் திகதியிலிருந்து 24 மாத காலப்பகுதியில், உள்முக பணவனுப்பல்களாகப் பெறப்பட்ட பெறுகைகளிலிருந்து கணக்கு உடமையாளரினால் பேணப்படும் உள்முக முதலீட்டுக் கணக்கு அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கிலிருந்தான மாற்றல்கள்.

(இ) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையொன்றின் மூலம் அமைச்சரினால் விபரிக்கப்பட்டவாறு துறையில் வந்திறங்கிய வேளையில் சுங்கத் திணைக்களத்திற்கு பிரகடனம் செய்யப்படுவதற்குட்பட்டு 2020 சனவரி அன்றோ அல்லது அதற்கு பின்னரோ இலங்கைக்கு வருகை தந்த கணக்கு உடமையாளரினால் சட்ட ரீதியாக கையேற்கப்பட்டு கொண்டு வரப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி.

(ஈ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்குச் செய்யப்படுகின்ற பொருத்தமான பிரகடனமொன்றிற்குட்பட்டு, 2020 சனவரி 01 இற்கு பின்னர் இலங்கைக்கு வருகை தந்த கணக்கு உடமையாளரினால் சட்ட ரீதியாக கையேற்கப்பட்டு கொண்டு வரப்பட்ட ஐ.அ.டொலர் 15,000 இற்குச் சமமான அல்லது அதற்குக் குறைவான அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் நாணயத்திலமைந்த வெளிநாட்டுச் செலாவணி.

(உ) நிதியத்தின் மூலம் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்குச் செய்யப்படும் பிரகடனமொன்றிற்குட்பட்டு, சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையொன்றின் மூலம் அமைச்சரினால் விபரிக்கப்பட்டவாறு அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு, அத்தகைய வரையறைகள் வரை இலங்கையில் வதியும் எவரேனுமாளின் உடமையிலுள்ள வெளிநாட்டு நாணயத் தாள்கள்.

8. **அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) வைப்பின் முதிர்ச்சியையடுத்து முதிர்ச்சிப் பெறுகைகளின் வெளிமுகப் பணவனுப்பல்கள்.

(ஆ) சிறப்பு வைப்புக் கணக்கினது கால வைப்புக்களின் முதிர்ச்சியடைந்த பெறுகைகள் தொடர்பில் இதே கணக்கு உடமையாளரினால் பேணப்படும் உள்முக முதலீட்டுக் கணக்கொன்றிற்கு அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவிலுள்ள கணக்கொன்றிற்குச் செய்யப்படும் மாற்றல்.

(இ) சிறப்பு வைப்புக் கணக்குகளின் உடமையாளர் 2021 பெப்புருவரி 03ஆம் திகதியிடப்பட்ட 2213/35ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் நியதிகளில், உள்முக முதலீட்டுக் கணக்கினைப் பேணுவதற்கு தகைமையுடையவர் என்ற நிபந்தனைக்குட்பட்டு அதே கணக்கு உடமையாளரின் உள்முக முதலீட்டுக் கணக்கிற்குச் செய்யப்படும் சிறப்பு வைப்புக் கணக்கின் வட்டி உட்பட முதிர்ச்சிப் பெறுகைகளின் மாற்றல்கள்.

(ஈ) 2021 பெப்புருவரி 03ஆம் திகதியிடப்பட்ட 2213/38ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் நியதிகளில் அத்தகைய சிறப்பு வைப்புக் கணக்கு உடமையாளர் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கினைப் பேணுவதற்கு தகைமையுடையவராக இருக்குமிடத்து, அதே கணக்கு உடமையாளரின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்குச் செய்யப்படும் சிறப்பு வைப்புக் கணக்குகளின் வட்டி உட்பட முதிர்ச்சிப் பெறுகைகளின் மாற்றல்.

(உ) இலங்கை ரூபாவில் இலங்கையில் செய்யப்படும் பகிர்ந்தளிப்புக்கள்.

9. **ஏனைய நிபந்தனைகள்**

(அ) அதே கணக்கு உடமையாளரின் உள்முக முதலீட்டுக் கணக்கொன்று அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படுகின்ற கணக்கொன்றினூடாக நிதியங்கள் பெறப்படுகின்ற சந்தர்ப்பத்தில், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், அத்தகைய நிதிகள் 2020 ஏப்பிறல் 08 அன்று அல்லது அதற்குப் பின்னர் உள்முகப் பணவனுப்பல்களாக இலங்கைக்குள் பெறப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(ஆ) ஏற்றுமதிப் பெறுகைகள், வதிகின்ற முதலீட்டாளர் மூலம் இலங்கைக்கு வெளியில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் வருமானம்/ விற்பனைப் பெறுகைகள் அல்லது உள்முகப் பணவனுப்பல்கள் போன்ற வேறு ஏதேனும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைகளுக்குட்பட்டுள்ள உள்முகப் பணவனுப்பல்கள் சிறப்பு வைப்புக் கணக்கொன்றில் வரவு வைக்கப்படுவதற்குத்

தகைமையுடையனவல்ல என்பதனை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(இ) குறைந்தபட்சம் 6 மாத காலப்பகுதிக்கு முன்னரான முதிர்ச்சியடையாத மீள்எடுப்பனவுகள் ஊக்கமிழக்கச் செய்யப்படல் வேண்டும். சிறப்பு வைப்புக் கணக்குகளின் முதிர்ச்சியடையாத மீள்எடுப்பனவுகள் மேலேயுள்ள 5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறான மேலதிக வட்டிக் கொடுப்பனவுகளுக்குத் தகைமையுடையனவல்ல.

(ஈ) ஆறு மாத அல்லது 12 மாத காலங்களுடன் கூடிய ஒழுங்குவிதிகளின் கீழ் மீண்டும் புதுப்பிக்கத்தக்க சிறப்பு வைப்புக் கணக்குகள் 2020 ஏப்பிறல் 08ஆம் திகதியிடப்பட்ட 2170/4ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டவாறு இக்காலப்பகுதிக்கான மேலதிக வட்டியைப் பெறத் தகைமையுடையதாக இருக்கும்.

(உ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், இலங்கையில் வதியும் ஆட்களுக்கு இலங்கை ரூபாவில் வழங்குகின்ற கடன்களுக்கான பிணையுறுதியாக சிறப்பு வைப்புக் கடன்களைப் பரிசீலனையில் கொள்ளலாம். மேலும், 2021 பெப்புருவரி 03ஆம் திகதியிடப்பட்ட 2213/37ஆம் இலக்க அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க ஒழுங்குவிதிகளில் அனுமதிக்கப்பட்டவாறு இலங்கைக்கு வெளியே வதியும் எவரேனும் ஆட்களுக்கு கடன்களை வழங்குவது தொடர்பான ஒழுங்குவிதிகளுக்குட்பட்டு அத்தகைய ஆட்களுக்கு இலங்கை ரூபாக் கடன்களை அல்லது வெளிநாட்டு நாணயக் கடன்களை வழங்குவதற்கான பிணையுறுதியாகச் சிறப்பு வைப்புக் கணக்குகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

(ஊ) மேலேயுள்ள 8ஆம் பந்தி (உ)இன் கீழ் எடுப்பனவு செய்யப்பட்ட நிதிகளை மீண்டும் சிறப்பு வைப்புக் கணக்கொன்றில் வரவு வைக்க முடியாது.

(எ) ஏதேனும் தொடர்புடைய வங்கித்தொழில் உறவின் காரணமாக, வேறொரு அதிகாரமளிக்கப்பட்ட வணிகரூடாக கணக்கு உடமையாளரின் பெயரில் உள்முகப் பணவனுப்பல்கள் வழிப்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் உள்முகப் பணவனுப்பலைப் பெறுகின்றவரான அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் அத்தகைய நிதியங்கள் மாற்றல் செய்யப்படுகின்ற நேரத்தில், உள்முகப் பணவனுப்பலைப் பெறுகின்றவரான அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் அத்தகைய நிதியங்கள் மாற்றல் செய்யப்படுகின்ற நேரத்தில், அத்தகைய நிதியங்கள் தகைமையுடைய உள்முகப் பணவனுப்பல்களாகவே கிடைத்தன என்பதனைக் குறிப்பிட்டு சிறப்பு வைப்புக் கணக்கு திறக்கப்படவுள்ள அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்கு உறுதிப்படுத்தலொன்றினை வழங்குதல் வேண்டும்.

(ஏ) சிறப்பு வைப்புக் கணக்கு பேணப்படுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் தவிர்ந்த வேறொரு அதிகாரமளிக்கப்பட்ட வணிரூடாகவும் கணக்கு உடமையாளரின் பெயரில் வெளிமுகப் பணவனுப்பல்களை மேற்கொள்ள முடியும். ஆயின் கணக்கு உடமையாளரின் சிறப்பு வைப்புக் கணக்கில் ஒழுங்குவிதிகளுக்கிணங்க வரவு வைக்கப்பட்ட நிதியங்களிலிருந்து இந்நிதியங்கள் பற்று வைக்கப்பட்டுள்ளன என்பதனைத் தெரிவிக்கின்ற உறுதிப்படுத்தலொன்றினைச் சிறப்பு வைப்புக் கணக்கு பேணப்படுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகரிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(ஐ) வைப்புக்களைத் திறக்கும் நேரத்தில், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வாடிக்கையாளர்களுக்குச் சிறப்பு வைப்புக் கணக்கின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் பற்றி தெளிவுபடுத்துதல் வேண்டும்.

(ஒ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், இவ்வொழுங்குவிதிகளின் கீழ் திறக்கப்பட்ட சிறப்பு வைப்புக் கணக்குகளை, அத்தகைய சிறப்பு வைப்புக் கணக்குகளின் குறித்துரைக்கப்பட்ட முதிர்ச்சித் திகதிக்கு அப்பால் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவில் "சிறப்பு வைப்புக் கணக்கு" என்ற பெயரில் தொடர்ந்தும் பேணி வரலாம். முதிர்ச்சித் திகதிக்கு அப்பால் பேணப்படுகின்ற இச்சிறப்பு வைப்புக் கணக்குகளுக்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மற்றைய கால வைப்புக்களுக்கு வழங்கப்படும் வழமையான வைப்பு வட்டி வீதங்களை மாத்திரமே வழங்குதல் வேண்டும்.

(ஓ) வழமையான கால வைப்புக்களுக்காக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் வழங்கப்பட்ட வட்டி வீதங்களுக்கு மாத்திரம் தகைமையுடையதாகவிருந்த சிறப்பு வைப்புக் கணக்கு என்ற பெயரில் வழமையான கால வைப்பாகத் தொடரப்பட்ட சிறப்பு வைப்புக் கணக்குகள் 2021 ஏப்பிறல் 8இலிருந்து 2021.06.30ஆம் திகதியிடப்பட்ட 2234/19 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளின் திகதி வரையிலான காலப்பகுதியில் ஒழுங்குவிதிகளின் கீழ் மீண்டும் புதுப்பிக்கத்தக்க சிறப்பு வைப்புக் கணக்காகப் பயன்படுத்த முடியுமென்பதுடன் ஒழுங்குவிதிகளில் அனுமதிக்கப்பட்டவாறு, கணக்கு உடமையாளரின் கோரிக்கையினைத் தொடர்ந்து மேலதிக வட்டி வீதத்திற்கும் தகைமையுடையதாக இருக்கும்.

**10. அறிக்கையிடும் தேவைப்பாடு**

(அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களின், சிறப்பு வைப்புக் கணக்குகள் தொடர்பான தகவல்களை dfem@cbsl.lk என்ற மின்னஞ்சலூடாக இத்திணைக்களத்திற்கு பின்வரும் விதத்தில்;

(i) இப்பணிப்புரைகளின் இணைப்பு Iஇல் உள்ள படிவத்திற்கமைவாக வாராந்த அடிப்படையில் அடுத்துவரும் வாரத்தின் 2ஆவது வேலை நாளன்று வியாபாரம் முடிவடைவதற்குப் பிந்தாமலும்.

(ii) இப்பணிப்பரைகளின் இணைப்பு IIஇல் உள்ள படிவத்திற்கு அமைவாக மாதாந்த அடிப்படையில் அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ

சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(ஆ) மேற்குறித்த அறிக்கையிடும் தேவைப்பாடுகளுக்கமைய தமது தொடர்பான வங்கிகளின் கணக்கேடுகளிலிருந்து தொடர்பான தகவல்களை உருவாக்கும் அல்லது பிரித்தெடுக்கும் பொருட்டு வங்கியினுள் முறைமையொன்றினை நடைமுறைப்படுத்துமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

11. சிறப்பு வைப்புக் கணக்குகள் மீது 2021 ஏப்பிறல் 07ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 21ஆம் இலக்கப் பணிப்புரைகளின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட முன்னைய பணிப்புரைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

12. மேலேயுள்ள 11ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட பணிப்புரைகளின் இரத்தானது இரத்துச் செய்யப்படுவதற்கு முன்னர் அவற்றின் கீழ் உறப்பட்ட ஏதேனும் உரிமைகள், அல்லது உறப்பட்ட, தண்டங்கள் அல்லது பொறுப்புக்களைப் பாதித்தலாகாது.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**
**2021 யூலை 08**

**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 26ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட முதலீடுகளுக்கு வசதியளிப்பதற்காக சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2021.07.06ஆம் திகதியிடப்பட்ட 2235/22ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்டவாறான ஒழுங்குவிதிகளினால் (ஒழுங்குவிதி) திருத்தப்பட்டவாறான 2021.02.03ஆம் திகதியிடப்பட்ட 2213/35ஆம் இலக்க அரச வர்த்தமானி (அதிவிசேடம்) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களினால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகள் மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 6ஆம் மற்றும் 7ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 9ஆம் பிரிவு ஆகியவற்றின் நியதிகளில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட முதலீடுகளுக்கு வசதியளிப்பதற்காக சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறந்து மற்றும் பேணி வருவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

**2. தகைமையுடைய ஆட்கள்**

ஒழுங்குவிதிகளினால் அனுமதிக்கப்பட்டவாறு கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட பட்டியலிடப்பட்ட பங்குகள்/ படுகடன் பிணையங்களைக் கொண்டுள்ள 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனிகள்.

**3. கணக்குகளைத் திறந்து மற்றும் பேணி வருதல்**

(அ) கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ள பங்குகள் அல்லது படுகடன் பிணையங்கள் எந்த வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளனவோ அந்நாணயத்தில், சேமிப்பு அல்லது கால வைப்புக் கணக்குகள் வடிவில் சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறந்து மற்றும் பேணிவரலாம்.

(ஆ) சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு கால வைப்புக் கணக்குகளை, வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வினைத் தணிக்கும் பொருட்டு, அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவரிடமிருந்து கணக்கு உடமையாளரால் பெறப்படவுள்ள இலங்கை ரூபாக் கடனுக்கான உரிமையினைப் பேணும் நோக்கத்திற்காக மாத்திரம் பேணமுடியும்.

(இ) தகைமையுடைய ஆட்கள், இப்பணிப்புரைகளினால் அனுமதிக்கப்பட்டவாறு வங்கித்தொழில் முறைமையில் ஒரு சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கினை மட்டுமே திறக்கலாம் என்பதுடன் ஏக கணக்காகவும் அதனை வைத்திருத்தல் வேண்டும்.

**4. அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) ஒழுங்குவிதிகளின் நியதிகளில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் வகைப்படுத்தப்பட்ட பட்டியலிடப்பட்ட பங்குகளின் பெறுகைகளாக தகைமையுடைய முதலீட்டாளரொருவரின் உள்முக முதலீட்டுக் கணக்கொன்றிலிருந்தான நிதிய மாற்றல்கள்;

(ஆ) ஒழுங்குவிதிகளின் நியதிகளில், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் வகைப்படுத்தப்பட்ட பட்டியலிடப்பட்ட படுகடன் பிணையங்களின் பெறுகைகளாகத் தகைமையுடைய முதலீட்டாளரொருவரின் உள்முக முதலீட்டுக் கணக்கொன்றிலிருந்தான நிதிய மாற்றல்கள்;

(இ) ஒழுங்குவிதிகளின் நியதிகளில் இலங்கைக்கு வெளியே செய்யப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் வருமானமாக அல்லது மூலதனப் பெறுகைகளாக வங்கித்தொழில் முறைமையினூடாக கணக்கு

உடமையாளரின் பெயரில் இலங்கைக்கு வெளியிலிருந்து பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலமைந்த பணவனுப்பல்கள்;

(ஈ) கீழே பந்தி 5(அ)இல் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காக கணக்கு உடமையாளரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியில் ஈட்டப்பட்ட வருவாய்களின் மாற்றல்;

(உ) கணக்கில் வைக்கப்பட்டுள்ள நிதியத்திலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் ஈட்டப்பட்ட வட்டி.

5. **அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) ஒழுங்குவிதிகளின் கீழ், அனுமதிக்கப்பட்டவாறு, உள்முக முதலீட்டுக் கணக்கின் உடமையாளரினால் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் பட்டியலிடப்பட்ட பங்குகளில் அல்லது பட்டியலிடப்பட்ட பிணையங்களில் செய்யப்பட்ட முதலீடுகளின் விளைவாகக் கிடைத்த ஏதேனும் வருமானம் அல்லது முதிர்ச்சிப் பெறுகைகளின் கொடுப்பனவாக தகைமையுடைய முதலீட்டாளரொருவரின் உள்முக முதலீட்டுக் கணக்கிற்கான மாற்றல்கள்;

(ஆ) கணக்கு உடமையாளரின் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலான வெளிமுகப் பணவனுப்பல்கள்;

(இ) ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு படுகடன் பிணையங்களின் பெறுகைகள் நீங்கலாக, மேலேயுள்ள பந்தி 4(அ) மற்றும் 4(இ) என்பனவற்றின் நியதிகளில் பெறப்பட்ட நிதிகளென்ற ரீதியில் கணக்கு உடமையாளரின் மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான வெளிமுகப் பணவனுப்பல்கள்.

(ஈ) இலங்கை ரூபாவில் இலங்கையில் செய்யப்படும் பகிர்ந்தளிப்புக்கள்.

6. **ஏனைய நிபந்தனைகள்**

(அ) எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கில் மேலதிக எடுப்பனவுகள் எதுவும் இடம்பெறக்கூடாது.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், விண்ணப்பதாரியின் தகைமையினைத் தீர்மானிப்பதற்காக சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கினைத் திறக்கின்ற நேரத்தில், ஏற்புடைத்தானவாறு, தொடர்பான அதிகாரி/ அதிகாரிகளின் சான்றுபடுத்தல் உட்படப் போதுமான ஆவணச்சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(இ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் இப்பணிப்புரைகளின் நியதிகளில் இது சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளூடாக வெளிநாட்டுச் செலாவணியில் புரியப்படும் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் அனைத்து உரிய விழிப்புக் கவனத்தினையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

(ஈ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர், கணக்கு பேணப்படும் காலப்பகுதியில் சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளூடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் ஆவணச்சான்றுகளை (ஒன்றில் வன்பிரதியாக அல்லது இலத்திரனியல்/ டிஜிட்டல் வடிவில்) ஏதேனும் நியதிச்சட்ட தேவைப்பாடுகளுக்கு அப்பாலும் பதிவேடுகளைப் பேணி வருதல் வேண்டும்.

7. **அறிக்கையிடும் தேவைப்பாடு**

(அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், இணைப்பு Iஇல் உள்ளவாறு அறிக்கையினை காலாண்டு அடிப்படையில், அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ dfem@cbsl.lk என்ற மின்னஞ்சல் மூலம் பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) மேற்குறித்த அறிக்கையிடும் தேவைப்பாடுகளுக்கமைய, தமது தொடர்பான வங்கிகளின் கணக்கேடுகளிலிருந்து தொடர்பான தகவல்களை உருவாக்கும் அல்லது பிரித்தெடுக்கும் பொருட்டு வங்கியினுள் முறைமையொன்றினை நடைமுறைப்படுத்துமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

8. **சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளை மூடிவிடுதல்**

(அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், கணக்கு உடமையாளரினால் வழங்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் வகைப்படுத்தப்பட்ட பங்குகள் அல்லது படுகடன் பிணையங்கள் கொழும்புப் பங்குப் பரிவாத்தனையின் பட்டியலிலிருந்து நீக்கப்படும் சந்தர்ப்பமொன்றில் அத்துடன் அல்லது கணக்கு உடமையாளர் சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கினைப் பேண இனிமேல் தகைமையற்றவராக இருக்குமிடத்து சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கினை மூடிவிடுதல் வேண்டும்.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், கணக்கு மூடப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் அவ்வாறு மூடப்பட்டமை பற்றி பணிப்பாளர்/ வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கு dfem@cbsl.lk ஊடாக மின்னஞ்சல் மூலம் அறிவித்தல் வேண்டும்.

9. இப்பணிப்புரைகளின் அதிகாரவரம்பிற்குள் வராத ஏதேனும் நோக்கத்திற்காக சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கான அல்லது/ கணக்கிலிருந்தான ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களுக்கு அல்லது மாற்றல்களுக்குப் பணிப்பாளர்/ வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் முன்னொப்புதலைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றன.

10. **இப்பணிப்புரைகளின் நோக்கத்திற்காக**

(அ) “பணவனுப்பல்கள்” என்பது தந்தி மாற்றல்கள், ஏனைய வங்கிகளிடையேயான மாற்றல்கள், வங்கி வரைவுகள், ஏனைய கொடுப்பனவுச் சாதனங்கள், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு கொடுப்பனவுப் பொறிமுறைகள் அல்லது தளங்களூடாகப் பெறப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் நாணயத் தாள்கள் தவிர, வெளிநாட்டிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் பரிவர்த்தனைக் கம்பனிகளிலிருந்து/ இல்லங்களிலிருந்து பெறப்பட்ட நிதிகள் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(ஆ) “பங்குகள் மற்றும் படுகடன் பிணையங்கள்” என்பது திருத்தப்பட்டவாறான 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளினால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகளின் நியதிகளிலுள்ள அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) “நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள்” என்பது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஈ) “மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள்” என்பது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(உ) “குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம்” என்பது 2021.02.03ஆம் திகதியிடப்பட்ட 2213/38ஆம் இலக்க அரச வர்த்தமானி (அதிவிசேடம்) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கலில் ஈடுபடுகின்ற நோக்கத்திற்காக கணக்குகளைத் திறந்து மற்றும் பேணி வருதல்) ஒழுங்குவிதிகளின் நியதிகளிலுள்ள அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஊ) “தகைமையுடைய முதலீட்டாளர்” என்பது திருத்தப்பட்டவாறான 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியே வதியும் ஆளினால் இலங்கையில் மேற்கொள்ளப்படும் மூலதனக் கொடுக்கல்வாங்கல் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணையின் பகுதி ஏஐஇன் 1ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறான உள்முக முதலீட்டுக் கணக்குகளைத் திறந்து பேணுகின்ற தகைமையுடைய ஆள் என்ற கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

11. இப்பணிப்புரைகளினால் அனுமதிக்கப்பட்டதெதுவும், இப்பணிப்புரைகளின் கீழ், வெளிநாட்டுச் செலாவணி வணிகத்தில் ஈடுபடுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களை அல்லது வேறு எவரேனும் ஆளினை வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கான தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கின்றது, விடுவிக்கின்றது அல்லது தடுக்கின்றது எனப் பொருள்கோடலாகாது.

**மேலதிகப் பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**
**2021 யூலை 30**

2021ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க பணிப்புரைகளுக்கான இணைப்பு I

கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு நாணயத்திலமைந்த முதலீடுகளுக்கு வசதிகளை வழங்குவதற்கான சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கின் காலாண்டுக் கூற்று

வங்கியின் பெயர்: ........................................................................

அறிக்கையிடுகின்ற காலாண்டு மற்றும் ஆண்டு: ................................

ஐ.அ.டொலரில்

| கணக்கு உடமையாளரின் பெயர் | காலாண்டு தொடக்கத்திலுள்ளவாறு நிலுவை | வரவுகள் | | | | | பற்றுக்கள் | | | | காலாண்டு இறுதியிலுள்ளவாறு நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | உள்முக முதலீட்டுக் கணக்கிலிருந்தான மாற்றல்கள் | மூலதனக் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து கிடைத்த ஏதேனும் வருமானம் அல்லது மூலதனப் பெறுகைகளாகப் பெறப்பட்ட பணவனுப்பல்கள் | வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்தான மாற்றல்கள் | கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்தான மாற்றல்கள் | வட்டி | உள்முக முதலீட்டுக் கணக்கிற்கான மாற்றல்கள் | நடைமுறைக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் வெளிமுகப் பணவனுப்பல்கள் | மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் வெளிமுகப் பணவனுப்பல்கள் | உள்நாட்டுப் பகிர்ந்தளிப்புக்கள் | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அறிக்கையின் ஸ்கான் செய்யப்பட்ட பிரதியையும் மேலேயுள்ளவாறு எம்எஸ் எக்ஸ்செல் பதிப்பினையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வங்கியின் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட/ தயாரிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட தகவல்கள் துல்லியமானவை என்பதனை நாங்கள் உறுதிப்படுத்துகின்றோம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் மற்றும் பதவி: ....................................... இணங்குவிப்பு அலுவலரின் பெயர்: .......................................

கையொப்பம்: ........................................... கையொப்பம்: ...........................................

திகதி: ........................................................ திகதி: ........................................................

**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 27ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2021.07.06ஆம் திகதியிடப்பட்ட 2235/22ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை அதிவிசேட அறிவித்தலில் வெளியிடப்பட்டவாறு ஒழுங்குவிதிகளினால் திருத்தப்பட்டவாறான 2021.02.03ஆம் திகதியிடப்பட்ட 2213/35ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேடம்) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களினால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகள் மற்றும் 2017ஆம் ஆண்டின் 12 இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் நியதிகளில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில் 2021.03.18ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்கப் பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்ட பற்றுக்களுக்குப் புறம்பாக, வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கின் பின்வரும் பற்றுக்களுக்கு வசதியளிப்பதற்கு இத்தால் அனுமதிக்கப்படுகின்றனர்.

**1.4 அனுமதிக்கப்பட்ட பற்று**

(த) ஒழுங்குவிதிகளின் கீழ் அனுமதிக்கப்பட்டவாறு, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் வகைப்படுத்தப்பட்ட பட்டியலிடப்பட்ட பங்குகள் அல்லது படுகடன் பிணையங்கள் தொடர்பில் தகைமையுடைய முதலீட்டாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் காரணமாகக் கிடைத்த ஏதேனும் வருமானம் அல்லது முதிர்ச்சிப் பெறுகைகளின் கொடுப்பனவுகளைச் செய்வதற்காக கணக்கு உடமையாளரினால் 2021 யூலை 30ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 26அம் இலக்கப் பணிப்புரைகளின் நியதிகளில் திறக்கப்பட்ட சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு வெளிநாட்டுச் செலாவணியில் செய்யப்படும் வருவாய்களின் மாற்றல்.

**மேலதிகப் பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**
**2021 யூலை 30**

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

**2251/42ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு ஒத்தோபர் மாதம் 28ஆந் திகதி வியாழக்கிழமை**

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**

**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

**1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டம்**

**1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 68ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10(இ)ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள்.**

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்,
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு,
2021, ஒத்தோபர் 28.

**ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல்**

1. இவ்விதிகள் "2021ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்பும் விதிகள்" என எடுத்துக்காட்டப்படுதல் வேண்டும்.

2. இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது, திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 10(இ) பிரிவின் ஏற்பாடுகளுடன் ஒன்றிணைத்து வாசிக்கப்படும் 68ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைய செயற்பட்டு, இலங்கையினுள் ஏற்றுமதிப் பெறுகைகளின் கிடைப்பனவு அத்துடன் அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கை ரூபாவாக மாற்றுதல் தொடர்பில் இத்தால் விதிகளை வழங்குகின்றது.

3. பொருட்களின் மற்றும் பணிகளின் ஒவ்வொரு ஏற்றுமதியாளரும்;

(i) இலங்கைக்கு வெளியில் ஏற்றுமதி செய்யப்படும் எல்லாப் பொருட்கள் அல்லது வழங்கப்படும் பணிகள் தொடர்பிலும், விடயத்திற்கேற்றவாறு, கப்பலேற்றும் அல்லது பணிகளை வழங்கும் திகதியிலிருந்து நூற்றியெண்பது (180) நாட்களினுள் ஏற்றுமதிப் பெறுகைகளை கட்டாயமாக இலங்கையில் பெறுதல் வேண்டும்.

(ii) கிடைக்கப்பெறுகின்ற ஏற்றுமதிப் பெறுகைகளின் எல்லா மற்றும் ஒவ்வொரு கிடைப்பனவின்/ கிடைப்பனவுகளின் மீதும், பொருட்களின் மற்றும் பணிகளின் ஒவ்வொரு ஏற்றுமதி தொடர்பிலும் ஒவ்வொரு ஏற்றுமதிப் பெறுகைகள் மீதுமான அனைத்து தொடர்புடைய ஆவண ரீதியான சான்றினையும், இலங்கையில் அத்தகைய பெறுகைகளை பெறுகின்ற உரிய உரிமம்பெற்ற வர்த்தக வங்கிக்கு அல்லது உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிக்கு (இதனகத்துப் பின்னர் “உரிமம்பெற்ற வங்கி” எனக் குறிப்பீடு செய்யப்படும்) தாமதமின்றி உடனடியாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. மேலே 3ஆம் விதியின் நியதிகளின் பிரகாரம், இலங்கையில் ஏற்றுமதிப் பெறுகைகளைப் பெறுகின்ற பொருட்கள் மற்றும் பணிகளின் ஒவ்வொரு ஏற்றுமதியாளரும், கீழே குறிப்பிடப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் மாத்திரம் அத்தகைய பெறுகைகளைப் பயன்படுத்தி இலங்கை கிடைக்கப்பெற்ற அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகளின் எஞ்சியதை தொடர்ந்துவருகின்ற மாதத்தின் ஏழாவது (07வது) நாளன்று அல்லது அதற்கு முன்னர் இலங்கை ரூபாவாக கட்டாயமாக மாற்றுதல் வேண்டும்.

(i) பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதியாளரின் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல் தொடர்பிலான வெளிமுக பணவனுப்பல்கள்;

(ii) பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதியாளரின் பயண நோக்கத்திற்கான வெளிநாட்டு நாணயத் தாள்களின் எடுப்பனவு அல்லது நிதியங்களின் மாற்றல்;

(iii) அத்தகைய வெளிநாட்டு நாணயக் கடன் மற்றும் வசதி, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் அல்லது திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகளின் நியதிகளின் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட கடன்பெறுகையொன்றாக இருக்கின்றவிடத்து பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியாளர்களினால் பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களினதும் வசதிகளினதும் படுகடன் தீர்ப்பனவுச் செலவுகள் அத்துடன் மீள்கொடுப்பனவு;

(iv) வெளிநாட்டு நாணயத்தில், அதனுடன் தொடர்புபடுகின்ற ஒரு மாத கடமைப்பெறுப்புக்கள் உள்ளடங்கலாக அத்தகைய பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளுடன் தொடர்புபட்ட பொருட்களின் கொடுப்பனவுகளுக்கான அத்துடன் பணிகளைப் பெற்றுக்கொள்வதற்கான பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதியாளர்களினால் கொடுப்பனவுகள்;

(v) அவ்வாறு கிடைக்கப்பெற்ற ஏற்றுமதிப் பெறுகைகளின் பத்த சதவீதம் (10%) வரை வெளிநாட்டு நாணயத்தில் இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடுகளைச் செய்வது தொடர்பிலான கொடுப்பனவுகள்.

5. மேலே 4ஆம் விதியில் குறிப்பிடப்பட்ட அத்தகைய மாற்றல் திகதியானது மேலே 3(அ)ஆம் விதியினால் வேண்டப்பட்டவாறு ஏற்றுமதிப் பெறுகைகள் இலங்கைக்குக் கிடைத்திருக்க வேண்டிய முந்திய திகதியினைவிட பிந்திய திகதியொன்றாக இருத்தலாகாது (அதாவது கப்பலேற்றல் அல்லது பணிகள் வழங்குதல் திகதியிலிருந்து நூற்றியெண்பது (180) நாட்களுக்குப் பிந்தாது).

6. மேலே 3ஆம் விதியில் எடுத்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் இலங்கையில் ஏற்றுமதிப் பெறுகைகளின் கிடைப்பனவுகளையும் மேலே 4ஆம் விதியில் வேண்டப்பட்டவாறு அத்தகைய பெறுகைகளின் மாற்றலையும் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் கண்டிப்பாகவும் கட்டாயமாகவும் கண்காணிப்பதற்கு வேண்டப்படுதல் வேண்டுமென்பதுடன் அது தொடர்பிலான அல்லது அதனுடன் இணைந்த எல்லா அவசியமான ஆவண ரீதியான சான்றினையும் எல்லா நேரங்களிலும் பேணுதலும் வேண்டும்.

7. காலத்திற்குக் காலம் வேண்டப்படக்கூடியவாறு அறிக்கைகளை அத்துடன் அல்லது கூற்றுக்களை இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணிப் பணிப்பாளருக்கு அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் மேலே 6ஆம் விதியின் கீழ் பேணப்படுகின்ற பதிவுகளைப் பரிசோதிப்பதற்கு அல்லது பரீட்சிப்பதற்கும் இவ்விதிகளுடன் முழுமையாகவும் கண்டிப்பாகவும் இணங்குவதை உறுதிசெய்வதில் அத்தகைய உரிமம்பெற்ற வங்கிகளினால் எடுக்கப்பட்ட எல்லா நடவடிக்கைகளையும் மீளாய்வதற்கும், விடயத்திற்கு ஏற்றவாறு ஆளுநர் அல்லது பிரதி ஆளுநரால் அதிகாரமளிக்கப்படக்கூடியவாறான இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களுக்கு தங்குதடையற்ற பெறுவழியினை வழங்குதல் வேண்டும்.

8. இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி திணைக்களப் பணிப்பாளர், இவ்விதிகளின் நியதிகளுக்கமைய பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதி தொடர்பில் எவரேனும் பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதியாளர் அல்லது உரிமம்பெற்ற வங்கி இவ்விதிகளுடன் இணங்காமைக்கு அல்லது இவ்விதிகளின் மீறுகைக்கெதிராக நடவடிக்கையினைத் தொடங்குவதற்கு உரிமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

9. இவ்விதிகள் செயற்பாட்டுக்கு வரும் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பொருட்களின் மற்றும் பணிகளின் எல்லா மற்றும் ஒவ்வொரு ஏற்றுமதி தொடர்பிலும் இவ்விதிகள் ஏற்புடையதாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பொருட்களின் கப்பலேற்ற அல்லது பணிகள் வழங்கல் திகதியிலிருந்து நூற்றியெண்பதாவது (180வது) தினமானது இவ்விதிகள்

வலுவுக்கு வந்தபின்னர் ஏதேனும் திகதியன்று வருகின்றகின்றவிடத்து, இவ்விதிகள் செயற்பாட்டுக்கு வருகின்ற திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதிக்கு ஏற்புடையதாதலும் வேண்டும்.

10. ஏதேனும் சந்தேகத்தைத் தவிர்ப்பதற்கும் இவ்விதிகளின் நோக்கங்களுக்காகவும் "ஏற்றுமதிப் பெறுகைகள்" என்பது திருத்தப்பட்டவாறான 2021.02.03ஆம் திகதியிடப்பட்ட 2213/37ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (நானாவித மூலதனக் கொடுக்கல்வாங்கல் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகளின் கீழும் நியதிகளுக்கமைவாகவும் இலங்கையினுள் அனுப்பப்படவேண்டிய அத்தகைய பெறுகைகளையும் இலங்கைக்கு வெளியில் வதியும் ஆளொருவருக்கு தொழில்சார், வாழ்க்கைத்தொழில், தொழில் அல்லது வியாபாரப் பணிகள் உள்ளடங்கலாக வழங்கப்பட்ட பணிகளுக்காக இலங்கையில் வதிகின்ற ஆளொருவரினால் வெளிநாட்டுச் செலாவணியில் பெற்றுக்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளையும் உள்ளடக்குதல் வேண்டும்.

11. இவ்விதிகளின் நோக்கங்களுக்காக, "உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்" மற்றும் "உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள்" என்ற சொற்பதங்கள், திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைவாக அவற்றிற்கு குறித்தொதுக்கப்பட்ட பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

12. இவ்விதிகளின் நோக்கங்களுக்காக "நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள்" என்ற சொற்பதம் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

13. இவ்விதிகளின் நோக்கங்களுக்காக, "பயண நோக்கங்களுக்காக வெளிநாட்டு நாணயத் தாள்களின் மீளெடுப்பு அல்லது நிதியங்களின் மாற்றல்" என்ற சொற்பதம் அது சார்பில் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்ட பணிப்புரைகளின் நியதிகளுக்கமைவானதாக இருத்தல் வேண்டும்.

14. இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்டு, 2021 மாச்சு 09ஆம் திகதியிடப்பட்ட 2218/38ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்பும் விதிகள், 2021 ஏப்பிறல் 09ஆம் திகதியிடப்பட்ட 2222/60ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்பும் விதிகள் மற்றும் 2021 மே 28ஆம் திகதியிடப்பட்ட 2229/09ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்பும் விதிகளினால் திருத்தப்பட்டவாறான 2021 பெப்புருவரி 18ஆம் திகதியிடப்பட்ட 2215/39ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்பும் விதிகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

**2258/23ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15ஆந் திகதி புதன்கிழமை**

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**

**அரசாங்க அறிவித்தல்கள்**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

**22ஆம் பிரிவின் கீழான கட்டளை**

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் (சட்டம்) பிரிவு 22இன் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம், 2021 யூலை 2ஆம் திகதியிடப்பட்ட 2234/49ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட சட்டத்தின் பிரிவு 22இன் கீழான கட்டளையின் செல்லுபடியாகும் காலத்தினை 2022 சனவரி 2ஆம் திகதியிலிருந்து மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கின்றேன்.

பசில் ராஜபக்ஷ
**நிதி அமைச்சர்**

கொழும்பு 01,
நிதி அமைச்சு,
2021 திசெம்பர் 13

## வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்

## இலங்கை மத்திய வங்கி

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

முதலீட்டினைப் பெறுபவர்களுக்கு நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளிப்பதற்காக சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2021.02.03ஆம் திகதியிடப்பட்ட 2213/38ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்டவாறு 2021ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற நோக்கத்திற்காக கணக்குகளைத் திறந்து பேணிவருதல்) ஒழுங்குவிதிகள் மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் (வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்) 6ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 9ஆம் பிரிவு ஆகியவற்றின் நியதிகளில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, கம்பனியின் பங்கு மூலதனத்திற்கான முதலீடுகளாக இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களிடமிருந்து (அதாவது வதிவற்ற முதலீட்டாளர்கள்) பெறப்படுகின்ற பெறுகைகளிலிருந்து நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளிக்கும் பொருட்டு, முதலீட்டினைப் பெறுபவர், சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகொன்றினை திறந்து பேணிவருவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

**2. தகைமையுடைய ஆட்கள்**

நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களின் கொடுப்பனவுகள் மற்றும் வெளிநாட்டு நாணயக் கடன்களின் மீள்கொடுப்பனவுகள் என்பனவற்றை பூர்த்திசெய்யும் தேவைப்பாடுகளுக்காக, திருத்தப்பட்டவாறான 2021.02.03ஆம் திகதியிடப்பட்ட 2213/35ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுகின்றவையும் கம்பனியின் பங்கு மூலதனத்திற்கு வதிவற்ற முதலீட்டாளரிடமிருந்து முதலீட்டினைப் பெற்றுக்கொள்ளுகின்றவையுமான, 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்.

**3. கணக்குகளைத் திறந்து மற்றும் பேணி வருதல்**

(அ) சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகள் - முதலீட்டினை பெறுபவர் கணக்கினை முதலீட்டினைப் பெறுபவர் வதிவற்ற முதலீட்டாளர்களின் உள்முக முதலீட்டுக் கணக்குகளினூடாக வழிப்படுத்தப்பட்ட, கம்பனியின் பங்கு மூலதனத்திற்கான முதலீடாகப் பெறப்பட்ட பெறுகைகளிலிருந்து கிடைத்த ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் நடைமுறை (மேலதிகப் பற்று வசதி மற்றும் காசோலை எடுப்பனவு வசதி இல்லாமல்) அல்லது சேமிப்புக் கணக்காகத் திறந்து பேணிவரமுடியும்.

(ஆ) தகைமையுடைய ஆட்கள் இப்பணிப்புரைகளினால் அனுமதிக்கப்பட்டவாறு வங்கித்தொழில் முறைமையில் ஒரு சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - முதலீட்டினைப் பெறுபவர் கணக்கினை மாத்திரம் திறக்கலாம் என்பதுடன் அதனைத் தனியான கணக்கொன்றாக வைத்திருத்தலும் வேண்டும்.

(இ) சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - முதலீட்டினைப் பெறுபவர் கணக்கினைத் திறந்து மற்றும் பேணி வருதல் இப்பணிப்புரைகளின் திகதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதிக்கு மாத்திரமே செல்லுபடியாதல் வேண்டும்.

**4. அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) கம்பனியின் பங்கு மூலதனத்திற்கான முதலீடாக முதலீட்டாளர்/ முதலீட்டாளர்களின் உள்முக முதலீட்டுக் கணக்கொன்றிலிருந்தான நிதிகளின் மாற்றல்.

(ஆ) கணக்கிலுள்ள நிதியிலிருந்து பெறப்பட்ட வட்டி

**5. அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) கணக்குடமையாளரின் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலான வெளிமுகப் பணவனுப்பல்கள்.

(ஆ) சொல்லப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்ட அத்தகைய வெளிநாட்டு நாணயக் கடன்கள்/ கடன் வசதிகளின் மீள்கொடுப்பனவுகள்/ தீர்ப்பனவுகள் தொடர்பான நடைமுறைகளைப் பின்பற்றும் விதத்தில், கணக்குடமையாளரினால் பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்கள் அல்லது கடன் வசதிகள் திருத்தப்பட்டவாறான வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் கட்டளைகள் மற்றும் பணிப்புரைகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களாகவும் கடன் வசதிகளாகவுமிருக்குமிடத்து அவற்றின் மீள்கொடுப்பனவு.

(இ) இலங்கை ரூபாவில் செய்யப்படுகின்ற உள்நாட்டு பகிர்ந்தளிப்புகள்.

**6. ஏனைய நிபந்தனைகள்**

(அ) கணக்கின் தேவைப்பாட்டு நியதிகளில் விண்ணப்பதாரியின் தகைமையினை தீர்மானிப்பதற்காக சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - முதலீட்டினைப் பெறுபவர் கணக்கினை திறக்கின்ற நேரத்தில், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் போதுமான

ஆவணச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இப்பணிப்புரைகளின் நியதிகளில், இச்சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - முதலீட்டினைப் பெறுபவர் கணக்கினூடாக வெளிநாட்டுச் செலாவணியில் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கையில் அனைத்து உரிய விழிப்புக்கவனத்தினையும் புரிதல் வேண்டும்.

(இ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - முதலீட்டினைப் பெறுபவர் கணக்கு மூடப்பட்டதிலிருந்து 6 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்கு சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - முதலீட்டினைப் பெறுபவர் கணக்கினூடாக செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலான ஆவணச் சான்றுகளை (ஒன்றில் வன்பிரதியாக அல்லது இலத்திரனியல்/ டிஜிட்டல் வடிவில்) பேணுதல் வேண்டும்.

**7. அறிக்கையிடும் தேவைப்பாடு**

(அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளரினால் விபரிக்கப்பட்ட படிவத்தில், இப்பணிப்புரைகளின் கீழ் சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - முதலீட்டினைப் பெறுபவர் கணக்கினைத் திறந்து மற்றும் பேணி வருவது தொடர்பிலான தகவல்களை dfem@cbsl.lk என்ற முகவரிக்கு மின்னஞ்சல் ஊடாக அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் திகதிக்கு முன்னதாக இத்திணைக்களத்திற்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(ஆ) மேற்குறித்த அறிக்கையிடும் தேவைப்பாடுகளுக்கமைய, தமது தொடர்பான வங்கிகளின் கணக்கேடுகளிலிருந்து தொடர்பான தகவல்களை உருவாக்கும் அல்லது பிரித்தெடுக்கும் பொருட்டு வங்கியினுள் முறைமையொன்றினை நடைமுறைப்படுத்துமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**8. சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - முதலீட்டினைப் பெறுபவர் கணக்கினை மூடிவிடுதல்**

(அ) சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - முதலீட்டினைப் பெறுபவர் கணக்குடமையாளர் கருத்திற்கொண்ட நோக்கங்களுக்காக, கணக்கிலுள்ள நிதியினை முழுமையாக பயன்படுத்தியிருக்குமிடத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - முதலீட்டினைப் பெறுபவர் கணக்கினை மூடிவிடுதல் வேண்டும்.

(ஆ) அனைத்து சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - முதலீட்டினைப் பெறுபவர் கணக்குகளை இப்பணிப்புரையின் திகதியிலிருந்து ஓராண்டு (1) முடிவடைந்ததும் மூடிவிடுதல் வேண்டும். கணக்கில் ஏதேனும் வெளிநின்ற நிலுவைகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் அவை கணக்குடமையாளரின் மூலக் கணக்கிற்கு மாற்றல் செய்யப்படுதல் வேண்டும்.

(இ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், கணக்கு மூடப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் அவ்வாறு மூடப்பட்டமை பற்றி பணிப்பாளர்/ வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கு dfem@cbsl.lk என்ற மின்னஞ்சல் ஊடாக அறிவித்தல் வேண்டும்.

9. இப்பணிப்புரைகளின் அதிகாரவரம்பிற்குள் வராத ஏதேனும் நோக்கத்திற்காக சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கு - முதலீட்டினைப் பெறுபவர் கணக்கிற்கு அல்லது கணக்கிலிருந்தான ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களுக்கு அல்லது மாற்றல்களுக்குப் பணிப்பாளர்/ வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் முன்னொப்புதலைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**10. இப்பணிப்புரைகளின் நோக்கத்திற்காக**

(அ) "நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள்" என்பது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) "குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம்" என்பது 2021.02.03ஆம் திகதியிடப்பட்ட 2213/38ஆம் இலக்க அரச வர்த்தமானி (அதிவிசேடம்) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கலில் ஈடுபடுகின்ற நோக்கத்திற்காக கணக்குகளைத் திறந்து மற்றும் பேணி வருதல்) ஒழுங்குவிதிகளின் நியதிகளிலுள்ள அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

11. இப்பணிப்புரைகளினால் அனுமதிக்கப்பட்டதெதுவும், இப்பணிப்புரைகளின் கீழ், வெளிநாட்டுச் செலாவணி வணிகத்தில் ஈடுபடுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களை அல்லது வேறு எவரேனும் ஆளினை வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கான தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கின்றது, விடுவிக்கின்றது அல்லது தடுக்கின்றது எனப் பொருள்கோடலாகாது.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**
**2021 திசெம்பர் 27**

**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 29ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு உடமையாளர்களுக்கான கடன் வசதிகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் நியதிகளில், வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு உடமையாளர்களுக்கான கடன் வசதிகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட 2021.03.18ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 9ஆம் இலக்கப் பணிப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது.

I. பணிப்புரைகளின் பந்தி 5.1இல் குறித்துரைக்கப்பட்ட வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கான அனுமதிக்கப்பட்ட வரவுகளுக்கு, மேலதிகமாக, பின்வருவன உள்ளடக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் விடயம் பந்தி 5.1இன் விடயம் ஈ ஆக வாசிக்கப்படுதலும் வேண்டும்

   ஈ. வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு உடமையாளர் இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவரிடமிருந்து (அதாவது வதிவற்ற முதலீட்டாளர்) பங்குரிமை முதலீட்டுப் பெறுகைகளைப் பெற்றிருக்கின்ற சந்தர்ப்பமொன்றில்; இப்பணிப்புரைகளின் கீழ் பெறப்பட்ட கடன் வசதிகளைத் தீர்ப்பனவு செய்தல், மீள்கொடுப்பனவு செய்தல் நோக்கத்திற்காக, 2021ஆம் ஆண்டின் 27ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கப் பணிப்புரைகளின் நியதிகளில் திறந்து பேணிவரும் கணக்கு உடமையாளரின் 'நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்துவதற்கு முதலீட்டினைப் பெறுபவருக்கான சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கில்' இருந்தான மாற்றல்கள்.

**மேலதிகப் பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**
**2021 திசெம்பர் 27**

**சுற்றறிக்கை - 01/21** 2021 ஏப்பிறல் 27
**தொடர்பு இல: 037/05/006/0004/018**

**சேரல்: நிதியியல் நிறுவனங்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்/ பொது முகாமையாளர்கள்/ முகாமைத்துவப் பணிப்பாளர்கள்**

கனம் ஐயா/ அம்மணி,

**இணையவழிக் கொடுப்பனவு தளங்களுடன் ஈடுபடுகின்ற தரப்பினர்கள் மீது பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல்**

கடந்த அண்மைக் காலத்தில் நிதியியல் நிறுவனங்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு இணையவழி கொடுப்பனவு தளங்களில் ஈடுபட்டுள்ள தரப்பினர்கள் (வாடிக்கையாளர்கள் மற்றும் வணிகர்கள்) தொடர்பில் முன்னெடுக்கப்படுகின்ற பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் வழிமுறைகளை நடைமுறைப்படுத்தலில் கடுமையான குறைபாடுகள் காணப்படுவதை நிதியியல் உளவறிதல் பிரிவு அவதானித்துள்ளது.

அத்தகைய இணையவழி கொடுப்பனவு தளங்களுடன் ஈடுபடுகின்ற தரப்பினர்களுக்காக பின்வருவன தொடர்பில் 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டம், 2016ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனம்) விதிகள் அத்துடன் அதன்கீழ் வழங்கப்பட்ட ஏனைய விதிகள், ஒழுங்குவிதிகள், வழிகாட்டல்கள் என்பவற்றுடன் இணங்குவித்தலை உறுதிப்படுத்துவதற்கான அத்தகைய இணையவழி கொடுப்பனவு தளங்களுடன் ஈடுபடுகின்ற அனைத்து தரப்பினரினதும் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான இணங்குவிப்பை உறுதிப்படுத்துவது தொடர்புடைய இணையவழி கொடுப்பனவு முறைமையினை வசதிப்படுத்துகின்ற நிதியியல் நிறுவனத்தின் பொறுப்பாகும்.

- வாடிக்கையாளர்களை அடையாளம் காணுதல் மற்றும் சரிபார்த்தல்
- வாடிக்கையாளர் மீது முன்னெடுக்கப்படுகின்ற உரிய விழிப்புக் கவனத்தையும் கொடுக்கல்வாங்கல்களின் நுண்ணாய்வினையும் மேற்கொள்ளல்
- சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களை இனங்கண்டு அறிக்கையிடுதல்
- இலத்திரனியல் மாற்றல் தேவைப்பாடுகள் (குறிப்பாக, தோற்றுவிக்கும் நிதியியல் நிறுவனம், பயன்பெறுநர் நிதியியல் நிறுவனத்திற்கு தோற்றுவிப்பாளரின் தகவலை கிடைக்கச்செய்தல் வேண்டும்)
- இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகளை பரிசோதித்தல்
- பதிவேடுகளைப் பேணுதல்
- ஏனைய அறிக்கையிடல் தேவைப்பாடுகள்

உங்கள் உண்மையுள்ள,
**பணிப்பாளர்**
**நிதியியல் உளவறிதல் பிரிவு**

பிரதி: இணங்குவிப்பு அலுவலர்

முதன்மை நிறைவேற்று அலுவலர் லங்கா கிளியர் (பிறைவட்) லிமிடட்

பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் - இலங்கை மத்திய வங்கி

பணிப்பாளர், வங்கி மேற்பார்வைத் திணைக்களம் - இலங்கை மத்திய வங்கி

பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் - இலங்கை மத்திய வங்கி

**சுற்றறிக்கை - 02/21**2021 2021 ஏப்பிறல் 28

தொடர்பு இல: 037/03/009/0001/021

**சேரல்: நிதியியல் நிறுவனங்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்/பொது முகாமையாளர்கள்/ முகாமைத்துவப் பணிப்பாளர்கள்**

கனம் ஐயா/அம்மணி,

**தன்னியக்க கூற்றுப் பொறிகளினூடாக வெளிநாட்டு நாணய வெளிப்பாய்ச்சல்களில் காணப்படுகின்ற போக்குகள்: வெளிநாடுகளில் பண மீளெடுப்புக்கள்**

மேலே குறிப்பிடப்பட்ட சந்தேகத்துடன் தொடர்புடைய சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களின் அதிகரிக்கின்ற போக்கொன்றை நிதியியல் உளவறிதல் பிரிவு அவதானித்துள்ளது. அதற்கமைய, வாடிக்கையாளர் வங்கியுடன் தொடர்பினை ஏற்படுத்தும் செயன்முறையின் போது அத்துடன் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கின்ற போது 2016ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனம்) விதிகளினால் வேண்டப்பட்டவாறு வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன வழிமுறைகளை செயலாற்றுமாறு உங்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றது.

மேலும், 2ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளிற்கமைய வேண்டப்பட்டவாறு திருப்திகரமான அடையாளச் சான்றினை சமர்ப்பிக்காதவிடத்து, நீங்கள் கொடுக்கல்வாங்கல்களை முன்னெடுக்கக் கூடாது என உங்களை வேண்டுகின்ற 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் 3ஆம் பிரிவிற்கு உங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது. அதற்கமைய, அறிக்கையிடப்பட்ட கணக்குகளின் அல்லது வேறு ஏதேனும் கணக்கின் கீழ் வழங்கப்பட்ட இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையை இரத்துச்செய்வதற்கு நீங்கள் உரிய வழிமுறைகளை எடுக்கலாம், இது, வேண்டப்பட்டவாறு கொடுக்கல்வாங்கலை மேற்கொள்கின்ற ஆள் இனங்காணப்படாதவிடத்து அல்லது அதிகாரமளிக்கப்படாத, அடையாளங்காணப்படாத மூன்றாந்தரப்பினரொருவரினால் கொடுக்கல்வாங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளவிடத்து எதிர்காலத்தில் அதே சந்தேகத்தின் கீழ் இனங்காணப்படும்.

உங்கள் உண்மையுள்ள,
**பணிப்பாளர்**
**நிதியியல் உளவறிதல் பிரிவு**

பிரதி: இணங்குவிப்பு அலுவலர்

பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் - இலங்கை மத்திய வங்கி

பணிப்பாளர்/ வங்கி மேற்பார்வைத் திணைக்களம் - இலங்கை மத்திய வங்கி

பணிப்பாளர்/ வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் - இலங்கை மத்திய வங்கி

பணிப்பாளர்/ வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் - இலங்கை மத்திய வங்கி

**சுற்றறிக்கை - 03/2021** 2021 மே 04

தொடர்பு இல: 37/05/003/0010/016

**சேரல்: நிதியியல் நிறுவனங்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்/ பொது முகாமையாளர்கள்/ முகாமைத்துவப் பணிப்பாளர்கள்**

கனம் ஐயா/அம்மனி,

**கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலையின் போது தோற்றம்பெற்று வரும் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடநேர்வுகளை தணிப்பதற்கான மேலதிக வழிமுறைகள்**

2020.06.15ஆம் திகதியிடப்பட்ட 03/2020ஆம் இலக்க எமது சுற்றறிக்கைக்கு மேலதிகமாக, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலையின் போது தோற்றம்பெற்று வரும் ஏதேனும் சாத்தியமான பணம் தூயதாக்கல்/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வுகள் பற்றி விழிப்புடன் இருக்குமாறு மற்றும் அவற்றிலிருந்து நிதியியல் நிறுவனங்களையும் நிதியியல் முறைமையையும் பாதுகாப்பதற்கான மேலதிக வழிமுறைகளை மேற்கொள்ளுமாறும் நிதியியல் நிறுவனங்கள் அறிவுறுத்தப்படுகின்றன.

குற்றம்புரிபவர்கள், தமது உத்தேசிக்கப்பட்ட சட்டவிரோத நடவடிக்கைகளுக்காக நிதியியல் நிறுவனங்களை தவறாகப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பொன்றாக நோய்த்தொற்றினைப் பயன்படுத்துவதற்கு எத்தணிக்கலாம். எனவே, தோற்றம்பெற்றுள்ள இடர்நேர்வை தணிப்பதற்கு ஏதேனும் காணப்படின், வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத்தை நடாத்துதல், வாடிக்கையாளர் தொடர் கண்காணிப்பு மற்றும் கொடுக்கல்வாங்கல்களின் நுண்ணாய்வு அத்துடன் சாத்தியமான இடர்நேர்வுகள் தொடர்பில் அனைத்து மட்ட ஊழியர்கள் மத்தியிலான விழிப்புணர்வு ஆகியவற்றை வலுப்படுத்துமாறு நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

உங்கள் உண்மையுள்ள,
**மேலதிகப் பணிப்பாளர்**
**நிதியியல் உளவறிதல் பிரிவு**

பிரதி: இணங்குவிப்பு அலுவலர்கள், அனைத்து நிதியியல் நிறுவனங்கள்

பணிப்பாளர் நாயகம், பிணையங்கள் மற்றும் செலாவணி பரிவர்த்தனை ஆணைக்குழு

பணிப்பாளர் நாயகம், இலங்கை காப்புறுதி ஒழுங்குப்படுத்தல் அணைக்குழு

பணிப்பாளர், வங்கி மேற்பார்வைத் திணைக்களம் - இலங்கை மத்திய வங்கி

பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் - இலங்கை மத்திய வங்கி

பணிப்பாளர், கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் - இலங்கை மத்திய வங்கி

**2021/02ஆம் இலக்க வழிகாட்டல்கள்** 2020 பெப்புருவரி 05

தொடர்பு: 037/06/008/0006/020

**சேரல்: அனைத்து நிதியியல் நிறுவனங்களினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்/ பொது முகாமையாளர்கள்/ முகாமைத்துவப் பணிப்பாளர்கள்**

ஐயா/அம்மணி,

**2021இன் 2ஆம் இலக்க பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் நோக்கங்களுக்காக சிசிரிவி தொழிற்பாடுகள் மீதான நிதியியல் நிறுவனங்களுக்கான வழிகாட்டல்கள்**

மேற்குறித்த வழிகாட்டல்கள் உடனடியாக அமுல்படுத்தப்படும் என்பதுடன் 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்துடனும் 2016ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனம்) விதிகளுடன் சேர்த்து வாசிக்கப்படுதல் வேண்டும்.

தங்கள் உண்மையுள்ள
**ஈ. எச். மொஹொட்டி**
**பணிப்பாளர்/ நிதியியல் உளவறிதல் பிரிவு**

பிரதி: பணிப்பாளர், இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

பணிப்பாளர், இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்

பணிப்பாளர் நாயகம், இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

அனைத்து நிதியியல் நிறுவனங்களின் இணங்குவிப்பு அலுவலர்கள்

**2021ஆம் ஆண்டின் 2ஆம் இலக்கப் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் நோக்கங்களுக்காக சிசிரிவி தொழிற்பாடுகள் மீதான நிதியியல் நிறுவனங்களுக்கான வழிகாட்டல்கள்**

**பகுதி I**

**அறிமுகம்**

1. இவ்வழிகாட்டல்கள் 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் (இதனகத்துப்

பின்னர் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) 15(1)(ஒ) ஆம் பிரிவினை அனுசரித்து வழங்கப்படுகின்றன.

2. இவ்வழிகாட்டல்கள், இயைபானவிடத்து மூடப்பட்ட - சுற்றமைப்புத் தொலைக்காட்சி (இதனகத்துப் பின்னர் சிசிரிவி எனக் குறிப்பீடு செய்யப்படும்) முறைமைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்ற நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 33ஆம் பிரிவில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு "நிதித்தொழில்" இல் ஈடுபட்டுள்ள அல்லது கொண்டுநடாத்துகின்ற நிதியியல் நிறுவனங்களுக்கு (இதனகத்துப் பின்னர் நிதியியல் நிறுவனங்கள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஏற்புடையதாகும்.

3. இவ்வழிகாட்டல்கள் 1951/13ஆம் இலக்க 2016 சனவரி 27ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனம்) விதிகள் (இதனகத்துப் பின்னர் வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டும். மேலும் குறிப்பாக, பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியிடல் இடர்நேர்வுகளை முகாமைசெய்து தணிப்பதற்கும் நிதியியல் நிறுவனம் தொடர்பில் ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவத்துடன் நிதியியல் நிறுவனத்தின் பணம் துயதாக்குதல் மற்றும் பயங்கரவாதி நிதியிடல் இடர்நேர்வு முகாமைத்துவத்தினை இணைப்பதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் உள்ளகக் கொள்கைகளை, கட்டுப்பாடுகளை மற்றும் நடைமுறைகளைக் கொண்டிருப்பதன் மூலம் முறையான இடர்நேர்வுக் கட்டுப்பாடு மற்றும் தணிப்பு வழிமுறைகளைக் கொண்டிருக்கின்ற நோக்கத்திற்காக அதில் குறித்துரைக்கப்பட்ட வழிமுறைகளை எடுப்பதற்கு வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன விதிகளின் 7ஆம் மற்றும் 11ஆம் விதிகளுடன் சேர்த்து இவ்விதிகள் தொடர்புபடுத்தப்படுதல் வேண்டும்.

4. இவ்வழிகாட்டல்கள் சிசிரிவி முறைமைகள் தொடர்பில் உரிய துறைசார் ஒழுங்குமுறைப்படுத்துனர்களினால் வழங்கப்பட்ட தொழிற்பாட்டுப் பணிப்புரைகளுக்கும் சுற்றறிக்கைகளுக்கும் மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளன. இவ்வழிகாட்டல்கள், அனைத்தையுமுள்ளடக்கியதாக இருக்க முனையவில்லை என்பதுடன் நிதியியல் உளவறிதல் பிரிவிலிருந்தான சட்ட ரீதியான மதியுரையினைத் தோற்றுவிக்காது.

5. இவ்வழிகாட்டல்களில் எதுவும் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் எவையேனும் அவற்றின் கடப்பாடுகளிலிருந்து அத்துடன் அதன் கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளில் மற்றும் விதிகளிலிருந்து நிதியியல் நிறுவனங்களை விடுவிப்பதாக தோற்றம் பெறாது.

**பகுதி II**

**சிசிரிவி முறைமைகளுக்கான தேவைப்பாடுகள்**

6. பணம் தூயதாக்கலுக்கான மற்றும் பயங்கரவாத நிதியிடல்களுக்காக தவறாகப் பயன்படுத்தப்படுகின்ற இடர்நேர்வுகளுக்கு எதிராக தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவத்தினை அதிகரிப்பதற்கும் வங்கித்தொழில் தொழிற்பாடுகளைப் பாதுகாப்பதற்குமான தொடர்ச்சியான கடமைப்பொறுப்பின் பாகமாக, ஒவ்வொரு நிதியியல் நிறுவனமும், வளாகத்தின் உட்பகுதி மற்றும் வெளிப்பகுதி இரண்டிலும் முழுமையாகத் தொழிற்படுகின்ற இயக்கவாற்றல்மிக்க பொருத்தப்பட்ட சிசிரிவி முறைமையினைக் கொண்டிருக்குமாறு ஆலோசனை வழங்கப்படுகின்றது. அலுவல்சார் வளாகங்கள் என்பது தலைமை அலுவலகம், கிளைகள், தானியக்கக் கூற்றுப்பொறி இயந்திரம், பணம் மீள்சுழற்சி இயந்திரம் மற்றும் பண வைப்பு இயந்திரங்களைக் கொண்ட பிரதேசங்கள் (யுவுஆ,.ஊசுஆ,.ஊனுஆ) காசு நிலையங்கள், விற்பனை நிலையங்கள் மற்றும் வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனம் கொண்டு நடாத்தப்படுகின்ற வேறு ஏதேனும் இடம் அல்லது இடங்கள் என்பவற்றைக் குறிப்பீடு செய்கின்றது.

7. பொருத்தப்பட்ட சிசிரிவி முறைமையானது அலுவல் நடவடிக்கைகள் பற்றிய முறையான கண்காணிப்பினையும் மேற்பார்வையினையும் இயலச்செய்வதற்கு செயற்திறன் வாய்ந்ததாகக் காணப்படுவதை உறுதிசெய்வதில், அனைத்து நிதியியல் நிறுவனங்களும் இவ்வழிகாட்டல்களில் குறிக்கப்பட்ட குறைந்தபட்ச தேவைப்பாடுகளை உள்ளடக்குகின்ற முறையான செயன்முறைகள் மற்றும் கட்டுப்பாடுகளுடன்கூடிய அவசியமான தரநியம முறைமையொன்றினை அமைத்துக்கொள்வதைப் பரிசீலனையில் கொள்ளவேண்டும்.

**சிசிரிவி படக் கருவிகளை அமைத்தல்**

8. சிசிரிவி முறைமையின் செயற்திறன்வாய்ந்த பயன்பாட்டினை அதிகரிக்கும்பொருட்டு, வியாபாரத் தொழிற்பாடுகள் இடம்பெறுகின்ற தொடர்புடைய பிரதேசங்களை தெளிவாகப் படம்பிடித்துக் கண்காணித்துப் பதிவுசெய்வதற்கு படக் கருவிக்கு இயலுமாக இருக்கின்ற விதத்தில் சிசிரிவி படக் கருவிகள் இயைபான அமைவிடங்களில் பொருத்தப்பட்டுள்ளன என்பதை நிதியியல் நிறுவனங்கள் உறுதிசெய்ய வேண்டும். இவ்வமைவிடங்கள், கருமபீடங்கள், வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனம் இடம்பெறுகின்ற வாடிக்கையாளர் இடைத்தொடர்பு பிரதேசங்கள், பாதுகாப்பு வைப்புப் பெட்டிகள் அமைந்துள்ள பிரதேசங்கள், பெட்டகம் அல்லது பணப்பை அத்துடன் காசு கையாளுகின்ற பிரதேசங்கள், தன்னியக்கக் கூற்றுப்பொறி இயங்திரங்கள்/ பண வைப்பு இயந்திரங்கள், வாகனத் தரிப்பிட பிரதேசங்கள், வியாபார வளாகத்திற்கான உள்நுழைவு மற்றும் வெளியேறும் வழி, ஏதேனும் வேறு பொருத்தமான பிரதேசங்கள், நிதியியல் நிறுவனங்களினால் நிர்ணயிக்கப்பட்டவாறு கட்டடத்தின் உட்புறம் மற்றும் வெளிப்புறம் இரண்டும் ஆகியவற்றை உள்ளடக்க வேண்டும்.

9. இடத்தின் முழுமையான மற்றும் தடையற்ற காட்சியினைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் பொருத்தமான முறையிலும் கோணத்திலும் சிசிரிவி கண்காணிப்பு முறைமைகள் அணிசேர்ந்திருக்க வேண்டும். மேலும், சிசிரிவி முறைமையின் படம்பிடித்தல் மற்றும் தகவல் செயன்முறைப்படுத்தலானது உள்ளக அல்லது வெளிவாரி வெளிச்சம், கூச்சொளி அல்லது ஏதேனும் பொருள் மூலம்

குறுக்கிடாது அல்லது தடைபடாது இருக்கும் விதத்தில் நிலைநிறுத்தப்பட வேண்டும்.

**சிசிரிவி முறைமையின் தொழிற்பாடுகள்**

10. சிசிரிவி படக் கருவிகள் மூலம் பிடிக்கப்படுகின்ற அனைத்துப் படங்களும் பதிவுகளும் இனங்காணத்தக்கவை மற்றும் தெளிவாகத் தெரிகின்றவை என்பதை அனைத்து நிதியியல் நிறுவனங்களும் உறுதிசெய்யவேண்டும். சிசிரிவி படக் கருவிகளூடாக வழங்கப்படுகின்ற கட்புலப் புகைப்படங்கள் மற்றும் காணொளிகள் கொடுக்கல்வாங்கலை மேற்கொள்கின்ற எவரேனும் இருப்பின், தனிப்பட்டவர்களின் அம்சங்களை இனங்காணும் இயலளவினைக் கொண்டிருக்க வேண்டும் அத்துடன் ஒரு புகைப்படத்திலிருந்து இன்னொரு புகைப்படத்தைத் தெளிவாக கவனிக்கக்கூடியதாக இருக்க வேண்டும். இதற்கு மேலதிகமாக, தெளிவான சிசிரிவி காணொளியைப் பதிவுசெய்யும் பொருட்டு போதுமான வெளிச்சம் பேணப்பட வேண்டும்.

11. தனிப்பட்டவர்களின் தெளிவான முன்புற புகைப்படங்களை படம்பிடிப்பதற்கு சிசிரிவி முறைமைகளில் உயர்தர டிஜிட்டல் உபகரணங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். சிசிரிவி முறைமையில் உள்ளடங்கியுள்ள அனைத்துத் தகவல்களையும் (உதாரணம் மேம்படுத்தப்பட்ட பெருப்பித்துக் காட்டும் இயலளவிற்கான போதிய படமூல எண்ணிக்கை) உயர்தரப் புகைப்படங்களை எளிதாகப் பார்த்தல், பதிவுசெய்தல் மற்றும் மீட்டெடுத்தல் என்பவற்றை அனுமதிக்க வேண்டும். வினைத்திறன்மிக்க கண்காணிப்பினை அடைந்துகொள்வதற்கு அவசியமான தொழில்நுட்ப விபரக் குறிப்புகள் (பிரிதிறன், சட்டக வீதம்) நியமமான மட்டத்தில் சிசிரிவி பேணப்பட வேண்டும்.

12. தானியக்கக் கூற்றுப்பொறி இயந்திரங்கள், காசு சுழற்சி இயந்திரங்கள், பணம் வைப்பு இயந்திரங்கள், போன்றவற்றின் சிசிரிவி முறைமைகள், அலுவல்களுக்காக நிதியியல் நிறுவனங்கள் மூடப்பட்டுள்ள நேரங்கள் உள்ளடங்கலாக ஆண்டின் ஒவ்வொரு நாளின் 24 மணித்தியாலங்கள் முழுவதும் தொழிற்பாட்டில் இருக்க வேண்டும்.

**நிகழ்நேரக் கண்காணித்தல்**

13. நிதியியல் நிறுவனங்கள், நடைமுறைக்குச் சாத்தியமான வரையில் தலைமை அலுவலகத்தில் அத்துடன்/ அல்லது கிளைகளில் அல்லது மத்திய கண்காணித்தல் பிரிவொன்றில் நிகழ்நேரக் கண்காணிப்பினை உறுதிசெய்ய வேண்டும்.

14. அத்தகைய இடர்நேர்வு நிகழ்நேர அடிப்படையில் பெற்றுக்கொண்ட சிசிரிவி காணொலியினை அடிப்படையாகக் கொண்டு கண்டுபிடிக்கப்படுமாயின் நிதியியல் நிறுவனங்களின் வளாகங்களுக்கு அல்லது உபகரணங்களுக்கு, அதன் வாடிக்கையாளர்களுக்கு அல்லது வாடிக்கையாளர்களாக வரக்கூடியவர்களுக்கு அல்லது சிசிரிவி படக் கருவியின் அயலிலுள்ள எவரேனும் ஆளுக்கு ஏற்படக்கூடிய உடனடி இடர்நேர்வினைத் தவிர்ப்பதற்கு நிதியியல் நிறுவங்கள் அதன் பாதுகாப்புச் சேவைகள் ஆளணியின் அல்லது சட்ட அமுலாக்கல் முகவராண்மைகளின் உதவியினைப் பெற்றுக்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்படுகின்றது.

**பதிவுகளைப் பேணுதல்**

15. நிதியியல் நிறுவனங்கள், சிசிரிவி முறைமையில் படம்பிடிக்கப்பட்ட அனைத்து தகவல்களையும் குறைந்தபட்சம் 180 நாட்களைக் கொண்ட காலப்பகுதிக்குப் பேணப்பட வேண்டும்.

16. நிதியியல் நிறுவனங்கள், அவற்றின் தற்றுணிபில், அவதானிக்கப்பட்ட சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சிசிரிவி பதிவுகளை நீண்டகாலத்திற்கு வைத்திருக்கலாம்.

17. நிதியில் உளவறிதல் பிரிவுக்கான சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கையொன்றுடன் தொடர்புடைய சிசிரிவி பதிவுகளை அல்லது ஏதேனும் வேறு தவறிழைக்கின்ற சாத்தியமான சிசிரிவி காணொளிகளை தொடர்புபட்ட சட்ட அமுலாக்கல் முகவராண்மை அல்லது வேறு தொடர்புடைய தகைமைவாய்ந்த அதிகாரிகள் மூலம் தொடர்புடைய விசாரணைகள் முடிவுறுத்தப்படும் வரை வைத்திருக்குமாறு நிதியியல் உளவறிதல் பிரிவு, சட்ட அமுலாக்கல் முகவராண்மைகள் அல்லது ஏதேனும் வேறு தகைமையுடைய அதிகாரி காலத்திற்குக் காலம் நிதியியல் நிறுவனங்களை அறிவுறுத்தலாம்.

18. நிதியியல் நிறுவனங்களின் சிசிரிவி முறைமைகள், கணினிகள் போன்ற இலத்திரனியல் சாதனங்கள் மீது சிசிரிவி பதிவுகளை மீட்டுப்பார்த்து இயலச்செய்யும் தரவு சேமிப்பக சாதனங்களுக்கு தகவல்களை மாற்றல் செய்வதற்கான இயலளவைக் கொண்டுள்ளன என்பதை அந்நிறுவனங்கள் உறுதிசெய்ய வேண்டும்.

19. சிசிரிவி பதிவுகளின் நம்பகத் தன்மையினை உறுதிசெய்யும் பொருட்டு, சிசிரிவி பதிவுசெய்கின்ற நேரம் முறையாக அமைக்கப்பட்டுள்ளது, ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டுள்ளது அத்துடன் அலுவலக வளாகத்தினுள் இடம்பெறுகின்ற தொழிற்பாடுகளின் நேரத்துடனும் திகதியுடனும் இசைவாகவுள்ளது என்பதனை நிதியியல் நிறுவனங்கள் உறுதிசெய்ய வேண்டும்.

**முறைமையினை நிருவகித்தலும் பராமரித்தலும்**

20. சிசிரிவி கண்காணிப்பு முறைமைகளுக்காக நிதியியல் நிறுவனங்கள் போதிய வளங்களை ஒதுக்கீடு செய்வதற்கும் சிசிரிவி முறைமையைத் தொழிற்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆளணியினை அத்துடன் அலுவலர்களைப் போதியளவு பயிற்றுவிக்கப்படுவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றன.

21. வியாபாரத் தொழிற்பாடுகளின் வினைத்திறன் வாய்ந்த கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையினை உறுதிசெய்யும் பொருட்டு, பணிக்கமர்த்தப்பட்டுள்ள சிசிரிவி முறைமை (முறைமைகள்) முறையாகப் பராமரிக்கப்படுகின்றன மற்றும் தொழிற்படுகின்றன

அத்துடன் எல்லா நேரங்களிலும் சிறப்பாகப் பணியாற்றும் நிலைமையின் கீழ் காணப்படுகின்றன. என்பதனை நிதியியல் நிறுவனங்கள், உறுதிசெய்ய வேண்டும்.

22. அத்தகைய முறைமை எவரேனும் அதிகாரமளிக்கப்படாத தரப்பினர்களால் சூட்சமமாகக் கையாளப்படுவதிலிருந்து அல்லது தவறாகப் பயன்படுத்தப்படுவதிலிருந்து தடுக்கின்ற கட்டுப்பாட்டு வழிமுறைகளை நடைமுறைப்படுத்தி இயலச்செய்வதுடன் தொடர்புடைய அம்சங்கள் மற்றும் தொழிற்பாடுகளுடன்கூடிய சிசிரிவி முறைமை வசதியளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

23. சிசிரிவி முறைமைகளின் அனைத்துத் தகவல்களும் பதிவுகளும் அதிகாரமளிக்கப்படாத அணுகுவழியின்றி பாதுகாப்பாகவும் ஆபத்தின்றியும் பேணப்படுகின்றதென்பதனையும் முறையான பொறுப்புகள் மற்றும் அதிகார மட்டங்களுடன் பெயர்குறித்தல் மற்றும் அலுவலர்களை நியமித்தல், குறித்தொதுக்கப்பட்ட தொழிற்பாடுகளுக்காக முறையான பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கு தொடர்புடைய ஆளணிக்கு மாத்திரம் முறைமைக்கான நுழைவினை மட்டுப்படுத்தல் என்பன மூலம் அதிகாரமளிக்கப்படாத தரப்பினர்களால் பதிவுகள் அதிகாரமின்றி மாற்றியமைக்கப்படுவதையும் நுழைவதையும் தடுப்பதற்கு போதுமான கட்டுப்பாடுகள் செயற்பாட்டிலுள்ளன என்பதனையும் நிதியியல் நிறுவனங்கள் உறுதிசெய்ய வேண்டும்.

24. பணம் துயதாக்குதல் புலனாய்வுகள் மற்றும் வழக்குத் தொடுத்தல் தொடர்பில் ஒழுங்குமுறைப்படுத்துனர்கள், சட்ட அமுலாக்க முகவராண்மைகள் மற்றும் நிதியியல் உளவறிதல் பிரிவு என்பன தரவுகளையும் பதிவுகளையும் கோரிக்கையின் பேரில் தாமதமின்றிப் பெற்றுக்கொள்கின்றன என்பதனை உறுதிசெய்வதற்கு நிதியியல் நிறுவனங்கள் நடைமுறைகளையும் பொறிமுறைகளையும் கொண்டிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

25. பொருத்துதல், தொழிற்படுகின்றதன்மை, கண்காணித்தல், பதிவு பேணல், முறைமைப் பராமரிப்பு மற்றும் நிருவகித்தல் என்பன மீது உள்ளகத் தொழிற்பாட்டு வழிகாட்டல்களை வழங்குவதற்கும் பணம் துயதாக்கலுக்கெதிராக பயங்கரவாத நிதியிடலை ஒழித்தல் கொள்கையின் பாகமொன்றாகவும் அதேபோன்று பணிப்பாளர் சபையின் அனுமதியுடனும் உள்ளடக்க வேண்டும்.

26. கிளை மட்டத்தில், வளாகங்களில் அத்துடன் தனியான தானியக்கக் கூற்றுப்பொறி/ பண வைப்பு இயந்திரம் அமையப்பெற்றுள்ள இடங்களில் காணப்படுகின்ற படக் கருவிகளின் எண்ணிக்கைக்கான சிசிரிவி முறைமை (முறைமைகளின்) காலமுறையான மீளாய்வு மற்றும் கணக்காய்விற்கான நடைமுறைகள் செயற்பாட்டிலிருக்க வேண்டும். கணக்காய்வுகளும் மீளாய்வுகளும் படக் கருவிகளின் போதுமான எண்ணிக்கை, தொழிற்படும் தன்மை, செம்மை, இயங்கும் தன்மை, பதிவைப் பேணுதல் மற்றும் ஏனைய முக்கிய தேவைப்பாடுகளை உறுதிசெய்ய வேண்டும். சிசிரிவி செயற்பரப்பின் போதுமான தன்மை மீதான அத்தகைய மீளாய்வு/ கணக்காய்வு அறிக்கை பணிப்பாளர் சபைக்கும் மூத்த முகாமைத்துவத்திற்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

27. பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் சிசிரிவி முறைமைகளின் தரம் மற்றும் செயற்பரப்பு என்பன போதியதாக இல்லாவிடின் அல்லது மேலும் தரம் அல்லது செயற்பரப்பு விரும்பப்படுமாயின், அத்தகைய குறைபாட்டினை நிவர்த்திசெய்வதற்கு அல்லது பொருத்தமானவாறு செயற்பரப்பினை அதிகரிப்பதற்கு பொருத்தமான நடவடிக்கையினை எடுக்க வேண்டுமென பணிப்பாளர் சபைக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது. மேலும், ஏதேனும், இயங்காமை கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் உடனடியாக உபகரணத்தை மாற்றீடு செய்வதற்கு அல்லது தரமுயர்த்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

28. முறைமையினைத் தரமுயர்த்துதல், மீள வடிவமைத்தல் மற்றும் பதிவுகளை நீக்குதல் உள்ளடங்கலாக சிசிரிவி முறைமையின் பராமரிப்புடன் மற்றும் மீளளவு அமைத்தலுடன் தொடர்புபட்ட நடவடிக்கைகள் முறைமைப் பராமரித்தல் பதிவேட்டில் தெளிவாகப் பதிவுசெய்யப்படுவதையும் பொருத்தமானவாறு மூத்த முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடப்படுவதையும் நிதியியல் நிறுவனங்கள் உறுதிசெய்ய வேண்டும்.

சுற்றறிக்கை இல: 04/2021 2021 ஒத்தோபர் 01

**சேரல்: உரிமம்பெற்ற வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்/ பொது முகாமையாளர்கள்/ முகாமைத்துவப் பணிப்பாளர்கள்**

கனம் ஐயா/அம்மணி,

**2021ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வைப்புக்கள்**

2021ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் எவரேனும் ஆள்/ நிறுவனம், உரிமம்பெற்ற வங்கியொன்றின் ஊடாக நிதியங்களை வைப்பிலிடுகின்ற போது, அத்தகைய உரிமம்பெற்ற வங்கி, 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் அத்துடன் அதன் கீழ் வழங்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின், விதிகளின், பணிப்புரைகளின், வழிகாட்டல்களின் கீழ் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுமாறு வேண்டப்படுகின்றது.

மேலும், வாடிக்கையாளர் மேலே குறிப்பிடப்பட்ட திட்டத்தின் கீழ் வைப்பொன்றினை மேற்கொள்கின்ற போது, அத்தகைய "வைப்பு 2021ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது" என வைப்புச் சீட்டில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**பணிப்பாளர்**
**நிதியியல் உளவறிதல் பிரிவு**

பிரதி: பணிப்பாளர்/ வங்கி மேற்பார்வைத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

இணங்குவிப்பு அலுவலர்கள்

**தொடர்பு எண்: 33/04/012/0011/005** 2021 சனவரி 01

**சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு**

**"தொழிலாளர் உள்முகப் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம் தொடர்பான"**
**தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்கள்**

இது, 2020.12.22ஆம் நாளன்று விடுக்கப்பட்ட "தொழிலாளர் உள்முகப் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம்" தொடர்பில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் (தொடர்பு: 33/04/012/0011/004) தொடர்பானதாகும்.

மேற்குறிப்பிட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் பந்தி 2(i) "வெளிநாட்டில் தொழில்புரிகின்ற/ தொழில்புரிந்த இலங்கையரொருவரினால் தொழில்புரிந்தமையின் மூலம் உழைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்திலான வருமானம் அல்லது இலங்கையில் வதிகின்ற இலங்கைப் பிரசையொருவரினால் வெளிநாட்டிற்கு தொழில்முறை ரீதியில் பணிகளை வழங்குவதனூடாக வெளிநாட்டு நாணயத்தில் ஈட்டப்பட்ட வருமானம் 2020.12.28 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ இலங்கை ரூபாவிற்கு மாற்றப்படும் ஒவ்வொரு ஐ.அ.டொலரும் மேலதிகமாக இல.ரூபா. 2.00 இனைப் பெறத் தகைமையுடையனவாகும்" என இத்தால் திருத்தப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படவுள்ள காலாண்டு தகவல்களுக்கான படிவ முறைகள் இணைப்பு I இல் ஐதொடர்பு: முன்னர் விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் பிரிவு 5(ஐ)ஸ தரப்பட்டிருக்கிறது. இணைக்கப்பட்ட படிவ முறைகளின்படியான முதலாவது அறிக்கையிடல், 2020.12.28 இலிருந்து 2021.03.31 வரையான காலப்பகுதிக்கானதாக இருத்தல் வேண்டுமென்பதனைத் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும். முன்னர் விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் (தொடர்பு இல: 33/04/012/0011/004) மற்றைய தேவைப்பாடுகள் மாற்றமின்றியிருக்கும்.

ஏதேனும் மேலதிகத் தகவல்களுக்கு நீங்கள் இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தினை 0112398711, 0112477595 அல்லது 0761754680இல் தொடர்பு கொள்ளமுடியும்.

தேசமான்ய பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷ்மன்
**ஆளுநர்**
**இலங்கை மத்திய வங்கி**

**இணைப்பு** 1

**தொழிலாளர்களின் உள்முக பணவனுப்பல்களுக்கான சிறப்பு ஊக்குவிப்புத் திட்டம்**
**காலாண்டு ரீதியாக பணம் மீளவனுப்பல் கோரிக்கை**

வங்கியின் பெயர்: ....................................
அறிக்கையிடுகின்ற காலம்: ........................... முடிவடைகின்ற காலாண்டு

| இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்ட திகதி (நாள்/மாதம்/ ஆண்டு) | உள்முகப் பணவனுப்பல் நாணயம் | மாற்றப்பட்ட தொகை | | | இலங்கை ரூபாவில் செலுத்தப்பட்ட ஊக்குவிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ஐ.அ.டொலரில் சமமான தொகை | வீதம் | இலங்கை ரூபாவில் சமமான தொகை | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| ........................... இல் முடிவடைகின்ற காலாண்டிற்காக மீளவனுப்பப்படவுள்ள மொத்தத் தொகை | | | | | |

நாங்கள், மேலேயுள்ள கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் துல்லியமானவையும் பூரணமானவை எனவும் வங்கியினால் பேணப்படும்

கணக்கேடுகள் மற்றும் வாடிக்கையாளர் பட்டியல்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவை எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| கையொப்பம்: | ..................................... | ............................................ | ................................................ |
| பெயர்: | முதன்மை நிறைவேற்று அலுவலர் | முதன்மை இணங்குவிப்பு அலுவலர் | முதன்மை நிதியியல் அலுவலர் |
| பதவி: | ..................................... | ............................................ | ................................................ |
| திகதி: | ..................................... | ............................................ | ................................................ |

**தொடர்பு எண்: 33/04/012/0011/006** 2021 சனவரி 27

சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

**"உள்முக பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம்" தொடர்பாக உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்கள்**

இது, "தொழிலாளர் உள்முக பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம்" தொடர்பாக முறையே 2020.12.22 மற்றும் 2021.01.01ஆம் திகதிகளில் விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் (33/04/012/0011/004 மற்றும் 33/04/012/0011/005 ஆகிய தொடர்பு இலக்கங்களின் கீழ்) தொடர்பானதாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறிப்பிடப்பட்டவாறு ஐ.அ.டொலரொன்றிற்கான ரூ.2 கொண்ட ஊக்குவிப்புச் செலவு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்டவற்றினைத் தொடர்ந்து உடனடியாக நடைமுறைக்குவரும் விதத்தில், கீழே பட்டியலிடப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கிணங்க, இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்ட உள்முக வேலையாட்களின் பணவனுப்பல்களில் பத்து சதவீதத்தினை, ஐ.அ.டொலரில் இலங்கை மத்திய வங்கிக்கு விற்பனை செய்ய வேண்டுமென அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

1. இலங்கை மத்திய வங்கிக்கான ஐ.அ.டொலர் விற்பனையின் கால இடைவெளியும் ஆரம்ப மட்டமும்

   (அ) குறிப்பிட்ட வேலை நாளன்று உரிமம்பெற்ற வங்கியொன்றின் மாற்றப்பட்ட தொழிலாளர்களின் உள்முக மொத்த பணவனுப்பல்கள் ஐ.அ.டொலர் 1.0 மில்லியனுக்குச் சமமாக இருக்குமிடத்து, அத்தகைய வர்த்தக வங்கி குறிப்பிட்ட தொகையின் 10 சதவீதத்தினை இலங்கை மத்திய வங்கிக்கு ஐ.அ.டொலரில் விற்பனை செய்யுமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

   (ஆ) மேலேயுள்ள பந்தி 1(அ)இன் ஏற்பாடுகள் எது எப்படியிருப்பினும் ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கியும் ஏதேனும் குறிப்பிட்ட காலாண்டுப் பகுதியில் அத்தகைய தொழிலாளர் உள்முக பணவனுப்பல்களில் மாற்றப்பட்ட மொத்தத் தொகையில் பத்து சதவீதத்தினை ஐ.அ.டொலரில் இலங்கை மத்திய வங்கிக்கு விற்பனை செய்யப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

   (இ) மேலேயுள்ள பந்தி 1இன் (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பிடப்பட்ட இலங்கை மத்திய வங்கிக்கான வெளிநாட்டு நாணயத்தின் விற்பனை

      (i) தொழிலாளர் உள்முக பணவனுப்பல்களின் மாற்றப்பட்ட மொத்தத் தொகையின் பத்து சதவீதம் ஐ.அ.டொலர் 1.0 மில்லியனுக்குச் சமமாக இருக்கின்ற வேலை நாளுக்கு பின்னர் வருகின்ற, அல்லது

      (ii) குறிப்பிட்ட காலாண்டின் இறுதி வேலை நாளுக்குப் பின்னர் வரும் முதல் வேலை நாளன்று இதில் எது முதலில் வருகின்றதோ அந்நாளில் செய்யப்படுதல் வேண்டும்.

2. இலங்கை மத்திய வங்கிக்கு ஐ.அ.டொலரை விற்பனை செய்வதற்கு பிரயோகிக்கத்தக்க ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபாவின் செலாவணி வீதம்

   ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா செலாவணி வீதத்தின் அளவு நிறையேற்றப்பட்ட சராசரி, இலங்கை மத்திய வங்கிக்கான ஐ.அ.டொலரின் விற்பனைக்குப் பிரயோகிக்கப்படுதல் வேண்டும். ஐ.அ.டொலர் தவிர்ந்த, மாற்றப்பட்ட நாணயங்களைப் பொறுத்தவரையில் ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா வீதம் பொருத்தமான விதத்தில் பெறப்படல் வேண்டும்.

3. தீர்ப்பனவிற்கான கால அடிப்படை

   இலங்கை மத்திய வங்கிக்கும் உரிமம்பெற்ற வங்கிகளுக்குமிடையிலான ஒவ்வொரு கொடுக்கல்வாங்கல்களும் "நாளை" (அதாவது hp + 1) என்ற அடிப்படையில் இருத்தல் வேண்டும்.

4. தீர்ப்பனவு அறிவுறுத்தல்கள்

   தீர்ப்பனவினைப் பொறுத்தவரையில், உரிமம்பெற்ற வங்கிகள் நியம ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா தீர்ப்பனவு அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. இதனை நிறைவேற்றுகையில், உரிமம்பெற்ற வங்கிகள் "தோம்சன் றொயிட்டர்ஸ்"

அல்லது "புளூம்போக்" வர்த்தகப்படுத்தல் தளம்களூடாக வணிகத்தினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. எனினும், ஏதேனும் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அத்தகைய வர்த்தகப்படுத்தல் தளம்களை அணுகுவதற்கு வசதியில்லாதவிடத்து, குறிப்பிட்ட உரிமம்பெற்ற வங்கி அலுவல்சார் மின்னஞ்சலை வணிகத்தினை நிறைவேற்றுவதற்கான அலுவல்சார் மின்னஞ்சலாகப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

5. தகவல்களைச் சமர்ப்பித்தல்

உரிமம்பெற்ற வங்கிகள் ..................... (உரிமம்பெற்ற வங்கியின் பெயர்) இவ்வாரத்தில்/ காலாண்டில் முடிவடைகின்ற காலப்பகுதிக்கான பணவனுப்பல் மாற்றல்கள் என அழைக்கப்படும் பின்வரும் படிவத்தினை "எம்எஸ் எக்சல் படிவத்தில்" சரியான முறையில் பூரணப்படுத்தி பொருத்தமான விதத்தில் வாராந்தம்/ காலாண்டு அடிப்படையில் மின்னஞ்சலில் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

மேலதிக தகவல்களுக்கு அல்லது தெளிவுபடுத்தல்களுக்கு, இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தினை 0112398711, 0112477595 அல்லது 0761754680 ஆகிய இலக்கங்களில் தொடர்பு கொள்ளமுடியும்.

தேசமான்ய பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷ்மன்
**ஆளுநர்**
**இலங்கை மத்திய வங்கி**

**தொடர்பு எண்: 33/04/012/0011/007** 2021 பெப்புருவரி 18

சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

**"ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல்" தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

இது, ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கையில் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கை ரூபாவிற்கு மாற்றிக் கொள்ளுதல் தொடர்பில் திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 68ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10(இ)ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் வாசிக்கப்படுகின்ற நியதிகளில் செயற்படுகின்ற விதத்தில் இலங்கை மத்திய வங்கியின் (இதனகத்துப் பின்னர் இ.ம.வங்கி எனக் குறிப்பீடு செய்யப்படும்) நாணயச் சபையினால் விடுக்கப்பட்டிருக்கும் 2021.02.18ஆம் திகதியிடப்பட்ட 2215/39ஆம் இலக்க (இதனகத்துப் பின்னர் "விதிகள்" என அழைக்கப்படும்) அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திரும்ப அனுப்புதல் தொடர்பானதாகும் (விதிகளின் பிரதி, இணைப்பு 1இல் தரப்பட்டுள்ளது).

விதிகளின்படி, மற்றைய விடயங்களுடன் பொருட்களின் ஒவ்வொரு ஏற்றுமதியாளர்களும் அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கையில் பெற்றுக்கொண்டதனை உடனடுத்து, மறுஅறிவித்தல் வரை இலங்கையில் பெற்றுக்கொண்ட குறிப்பிட்ட ஏற்றுமதிப் பெறுகைகளின் மொத்தத்தில் இருபத்தைந்து சதவீதத்தினை (25%) உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றினூடாக அல்லது உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்றினூடாக (இதனகத்துப் பின்னர் "உரிமம்பெற்ற வங்கி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை ரூபாவிற்கு மாற்றிக் கொள்ளுதல் வேண்டும்.

அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் (இதனகத்துப் பின்னர் வர்த்தக வங்கிகள் என அழைக்கப்படும்) விதிகளின்படி, பொருட்களின் ஏற்றுமதியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பல்வேறுபட்ட நாணயங்களிலமைந்த ஏற்றுமதிப் பெறுகைகளில் ஐம்பது சதவீதத்தினை (50%) ஐ.அ.டொலரில் (இதனகத்துப் பின்னர் ஐ.அ.டொலர் எனக் குறிப்பிடப்படும்) கீழே தரப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கமைய, மறுஅறிவித்தல் வரை, உடனடியாக நடைமுறைக்குவரும் விதத்தில், இலங்கை மத்திய வங்கிக்கு விற்பனை செய்தல் வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

1. இலங்கை மத்திய வங்கிக்கான ஐ.அ.டொலர் விற்பனையின் கால இடைவெளி மற்றும் ஆரம்பத் தொகை

பொருட்களின் ஏற்றுமதியாளர்களினால் இலங்கை ரூபாவிற்கு அவ்வாறு மாற்றப்பட்ட பல்வேறு நாணயங்களிலமைந்த ஏற்றுமதிப் பெறுகைகளின் மொத்தப் பெறுமதியில் ஐம்பது சதவீதம் (50%) ஏதேனும் வேலை நாளன்று ஐ.அ.டொலர் 1.0 மில்லியனுக்குச் சமமானதாக அல்லது அதற்கும் கூடுதலாகக் காணப்படுகின்றவிடத்து தொடர்ந்தியங்கும் அதே அடிப்படையில், உரிமம்பெற்ற வங்கியொன்று அத்தகைய தொகையினை ஐ.அ.டொலரில் இலங்கை மத்திய வங்கிக்கு விற்றுவிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது (இணைப்பு IIஇல் எடுத்துக்காட்டப்பட்டுள்ள உதாரணத்தினைப் பார்க்கவும்).

2. இலங்கை மத்திய வங்கிக்கு ஐ.அ.டொலரை விற்பனை செய்வதற்காக பிரயோகிக்கத்தக்க ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா செலாவணி வீதம்

மாற்றப்பட்ட ஐ.அ.டொலரின் அளவு நிறையேற்றப்பட்ட சராசரியினை இலங்கை மத்திய வங்கிக்கும் உரிமம்பெற்ற வங்கிகளுக்குமிடையிலான விற்பனைக்கு பிரயோகித்தல் வேண்டும். ஐ.அ.டொலர் தவிர்ந்த மற்றைய மாற்றப்பட்ட நாணயங்களைப் பொறுத்தவரையில், ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா வீதம் பொருத்தமானதொரு முறையில் கணிக்கப்படல் வேண்டும்.

3. தீர்ப்பனவிற்கான கால அடிப்படை

இலங்கை மத்திய வங்கிக்கும் உரிமம்பெற்ற வங்கிகளுக்குமிடையிலான ஒவ்வொரு கொடுக்கல்வாங்கல்களும் "நாளை (அதாவது hp + 1)" என்ற அடிப்படையில் இருத்தல் வேண்டும்.

4. தீர்ப்பனவு அறிவுறுத்தல்கள்

தீர்ப்பனவினைப் பொறுத்தவரையில், உரிமம்பெற்ற வங்கிகள் நியம ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா தீர்ப்பனவு அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. இதனை நிறைவேற்றுகையில் உரிமம்பெற்ற வங்கிகள் "தோம்சன் றொயிட்டர்ஸ்" அல்லது "புளூம்போக்" வர்த்தகப்படுத்தல் தளம்களூடாக வணிகத்தினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. எனினும், ஏதேனும் உரிமம்பெற்ற வங்கிக்கு அத்தகைய வர்த்தகப்படுத்தல் தளம்களை அணுகுவதற்கு வசதியில்லாதவிடத்து, குறிப்பிட்ட உரிமம்பெற்ற வங்கி அலுவல்சார் மின்னஞ்சலை, வணிகத்தினை நிறைவேற்றுவதற்கான அலுவல்சார் மின்னஞ்சலாகப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

5. ஏற்றுமதிப் பெறுகைகள், பதிவேடுகளைப் பேணுதல் மற்றும் கணக்கீடு என்பனவற்றைக் கண்காணித்தல்

அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் விதிகளுக்கிணங்க, இலங்கைக்குள் ஏற்றுமதிப் பெறுகைகள் பெற்றுக்கொள்ளப்படுவதனையும் அத்தகைய பெறுகைகள் இலங்கை ரூபாவிற்கு மாற்றப்படுவதனையும் கடுமையாகக் கண்காணிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவதுடன் இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் விசாரணையின் போது சமர்ப்பிக்கப்படத்தக்க விதத்தில் சான்றுபடுத்தும் ஆவணங்களுடன் தேவையான அனைத்துப் பதிவேடுகளையும் பேணுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. மேலும், உரிமம்பெற்ற வங்கிகள், மேலேயுள்ள தேவைப்பாடுகளின் கீழ், அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகள் மற்றும் இலங்கை மத்திய வங்கிக்கான ஐ.அ.டொலரின் விற்பனை என்பன தொடர்பில் தனியான கணக்குகளைப் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

6. **தகவல்களைச் சமர்ப்பித்தல்**

மேலேயுள்ள பந்தி 1இல் தெரிவிக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்கின்ற விதத்தில், அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் "....................... (உரிமம்பெற்ற வங்கியின் பெயர்) உள்ளவாறான ஏற்றுமதிப் பெறுகைகளின் மாற்றல்" என அழைக்கப்படுகின்ற "எம்எஸ் எக்சல் படிவத்தில்" உள்ள பின்வரும் படிவத்தினை சரியான முறையில் பூரணப்படுத்தி உடனடுத்துவரும் வேலை நாளன்று சமர்ப்பிக்குமாறும் அதே விடயத்தினை னகஒளுஉடிலட.டமஇற்கு மின்னஞ்சல் செய்யுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

| **இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்ட திகதி (நாள்/ மாதம்/ ஆண்டு)** | **தொடர்பான நாணயத்தில் 25% தேவைப்பாடுகளின் கீழ் மாற்றப்பட்ட மொத்த ஏற்றுமதிப் பெறுகைகள்** | **மாற்றப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளில் 50% (B* 50%)** | **"இ"இன் ஐ.அ.டொலருக்குச் சமமான தொகை (முழுத் தொகைக்கு அணித்தாக)** | **பிரயோகிக்கத்தக்க ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா வீதம்** |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| **..................... இல் உள்ளவாறு, ஐ.அ.டொலர்/ இல.ரூபாவிற்கு பிரயோகிக்கத்தக்க அளவு (ஐ.அ.டொலர்) நிறையேற்றப்பட்ட சராசரி வீதம் (இரண்டு தசமதானத்திற்கு முழு எண்ணாக்கப்படுதல் வேண்டும்)** | | | | xxx.xx |

மேலதிக தகவல்களுக்கு அல்லது தெளிவுபடுத்தல்களுக்கு, இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தினை 0112398715, 0112477595 அல்லது 0761754680 ஆகிய இலக்கங்களில் தொடர்பு கொள்ளமுடியும்.

தேசமான்ய பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷ்மன்
**ஆளுநர்**
**இலங்கை மத்திய வங்கி**

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

**2215/39ஆம் இலக்க - 2021ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 18ஆந் திகதி வியாழக்கிழமை**

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**

**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

**1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டம்**

**1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 68ஆம் பிரிவுடன் வாசிக்கப்படும் வேண்டிய 10(இ)ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள்**

பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷ்மன்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

இலங்கை மத்திய வங்கி
கொழும்பு
2021 பெப்புருவரி 18

**ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல்**

1. இவ்விதிகள் “2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல் விதிகள்” என எடுத்துக்காட்டப்படுதல் வேண்டும்.

2. திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 68ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10(இ) பிரிவின் ஏற்பாடுகளினது நியதிகளில் செயற்படுகின்ற விதத்தில் இலங்கைக்குள் ஏற்றுமதிப் பெறுகைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலும் அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கை ரூபாவிற்கு மாற்றிக் கொள்வது தொடர்பிலும் இத்தால் இவ்விதிகள் விடுக்கப்படுகின்றன.

3. மறுஅறிவித்தல் வரை பொருட்களின் ஒவ்வொரு ஏற்றுமதியாளர்களும்:

 (i) ஏற்றுமதி செய்யப்பட்ட அனைத்து பொருட்கள் தொடர்பிலும் கப்பலேற்றப்பட்ட திகதியிலிருந்து நூற்றியெண்பது (180) நாட்களுக்கிடையில் ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கையில் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்; அத்துடன்

 (ii) பொருட்களின் ஒவ்வொரு ஏற்றுமதிகள் தொடர்பிலும் ஏற்றுமதிப் பெறுகைகளின் ஒவ்வொரு பெறுகைகள் தொடர்பிலுமான அனைத்துத் தொடர்பான ஆவணச்சான்றுகளையும் இலங்கையில் அத்தகைய பெறுகைகளைப் பெற்றுக்கொள்ளப்பட்டமை தொடர்பாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிக்கு அல்லது உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிக்கு (இதனகத்துப் பின்னர் “உரிமம்பெற்ற வங்கி” எனக் குறிப்பிடப்படும்) உடனடியாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. பொருட்களின் ஒவ்வொரு ஏற்றுமதியாளரும் மேலேயுள்ள 3ஆம் விதியின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு, அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கையில் பெற்றுக்கொண்டதும் உரிமம்பெற்ற வங்கியொன்றினூடாக, இலங்கையில் பெறப்பட்ட குறிப்பிட்ட ஏற்றுமதிப் பெறுகைகளின் மொத்தத்தில் இருபத்தைந்து சதவீதத்தினை (25%) இலங்கை ரூபாவிற்கு மாற்றிக் கொள்ளுதல் வேண்டும்.

5. இலங்கையில் பெறப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளிலிருந்து இருபத்தைந்து சதவீதத்தினை (25%) மாற்றுகின்ற மேற்குறிப்பிட்ட தேவைப்பாடு, காலத்திற்குக் காலம் நாணயச் சபையினால் வேறு ஏதேனும் சதவீதம் தீர்மானிக்கப்படும் வரை தொடர்ந்துமிருக்கும்.

6. அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் மேலேயுள்ள விதி 3இல் குறித்துரைக்கப்பட்டவாறு, குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் ஏற்றுமதிப் பெறுகைகள் இலங்கைக்குள் பெற்றுக்கொள்ளப்படுவதனையும் மேலேயுள்ள விதி 4இல் தேவைப்படுத்தப்பட்டவாறு அத்தகைய பெறுகைகள் மாற்றிக் கொள்ளப்படுவதனையும் கட்டாயமாகவும் கடுமையான விதத்திலும் கண்காணித்தல் வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுவதுடன் இவை தொடர்பிலான அல்லது இவற்றுடன் தொடர்புபட்ட ஆவணச்சான்றுகளைப் பேணிவருதலும் வேண்டும்.

7. அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் காலத்திற்குக் காலம் கேட்டுக் கொள்ளப்படுகின்றவாறு, இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளருக்கு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், விடயத்தினைப் பொறுத்து ஆளுநரினால் அல்லது துணை ஆளுநரினால் அதிகாரமளிக்கப்படக் கூடிய இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்கள் மேலே விதி 6இன் கீழ் பேணப்படும் பதிவேடுகளைப் பரீட்சிப்பதற்கும் பரிசோதனை செய்வதற்கும் தங்குதடையற்ற விதத்தில் அவற்றை அணுகுவதற்கு வசதிகளை அளித்தலும் வேண்டும் என்பதுடன் இவ்விதிகளுக்கு அத்தகைய வர்த்தக வங்கிகள்

கடுமையாகவும் முழுமையாகவும் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் அவற்றினால் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் மீளாய்வு செய்தலும் வேண்டும்.

8. இவ்விதிகள் செயற்பாட்டிற்கு வரும் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பொருட்களின் ஒவ்வொரு ஏற்றுமதி தொடர்பிலும் ஏற்புடைத்தாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய பொருட்களின் கப்பலேற்றல் திகதியிலிருந்து நூற்றியெண்பதாவது (180ஆவது) நாளானது இவ்விதிகள் வலுவுக்கு வந்த பின்னர் ஏதேனும் திகதியில் வருகின்றவிடத்து இவ்விதிகள் அவற்றிற்கும் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

9. இவ்விதிகள் உடனடியாகவும் அதிலுள்ள திகதியிலிருந்தும் நடைமுறைக்கு வருதலாதல் வேண்டும்.

10. ஏதேனும், சந்தேகங்களைத் தவிர்ப்பதற்காகவும் இவ்விதிகளின் நோக்கங்களுக்காகவும் "ஏற்றுமதிப் பெறுகைகள்" என்பது இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்ட அத்தகைய பெறுகைகளையும் 2019.10.17ஆம் திகதியிடப்பட்ட இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2145/49ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளின் கீழானவற்றையும் உள்ளடக்குதல் வேண்டும்.

11. இவ்விதிகளின் நோக்கங்களுக்காக, "உரிமம்பெற்ற வர்த்தக வங்கி" மற்றும் "உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி" என்ற சொற்பதங்கள் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளில் அவற்றிற்கு வழங்கப்பட்ட அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## இணைப்பு II

### உதாரணம்: வங்கி அ - ஏற்றுமதிப் பெறுகைகள்

| (அ) | (ஆ) | (இ) | (ஈ) | (உ) | (ஊ) | (எ) | (ஏ) | (ஐ) | (ஒ) | (ஓ) | (ஔ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்ட திகதி | நாணயம் | தொடர்பான நாணயத்தில் மொத்த ஏற்றுமதிப் பெறுகைகள் | மாற்றலுக்கு பிரயோகிக்கத் தக்க ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா வீதம் | ஐ.அ.டொலருக்குச் சமமான மொத்த ஏற்றுமதிப் பெறுகைகள் | 25% ஐ.அ.டொலரில் இருத்தல் வேண்டும் என்ற தேவைப்பாடுகளின் கீழ் மாற்றப்பட்ட மொத்தத் தொகை [(<)*25%] | மாற்றப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளில் 50% [(C)*50%] | ஐ.அ.டொலரின் ஒன்றுசேர்ந்த பெறுமதி (பிரயோகிக்கத் தக்கது) | இ.ம. வங்கிக்கு விற்கப்பட வேண்டிய தொகை ஐ.அ.டொலர் | பிரயோகிக்கத் தக்க வீதம் | விற்பனைத் திகதி | தீர்ப்பனவுத் திகதி |
| 01.02.2021 | ஐ.அ.டொ | 10,000,000 | 194.00 | 10,000,000 | 2,500,000 | 1,250,000 | 1,250,000 | 1,250,000 | 194.00 | 02.02.2021 | 03.02.2021 |
| 02.02.2021 | ஐ.அ.டொ | 5,000,000 | 194.20 | 5,000,000 | 1,250,000 | 625,000 | 625,000 | வி.கி | வி.கி | வி.கி | வி.கி |
| 03.02.2021 | ஐ.அ.டொ | 6,000,000 | 194.30 | 6,000,000 | 1,500,000 | 750,000 | 1,375,000 | 1,375,000 | 194.2545* | 04.02.2021 | 05.02.2021 |
| 04.02.2021 | யூரோ | 10,000,000 | 194.50** | 12,000,000*** | 3,000,000 | 1,500,000 | 1,500,000 | 1,500,000 | 194.50 | 05.02.2021 | 08.02.2021 |
| 05.02.2021 | யூரோ | 5,000,000 | 194.10 | 6,000,000*** | 1,500,000 | 750,000 | 750,000 | வி.கி | வி.கி | வி.கி | வி.கி |
| 08.02.2021 | யூரோ | 6,000,000 | 194.20 | 7,200,000*** | 1,800,000 | 900,000 | 1,650,000 | 1,650,000 | 194.1545**** | 09.02.2021 | 10.02.2021 |

குறிப்பு: மேலேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள அனைத்து எண் தொகைகள், வீதங்கள் மற்றும் திகதிகள் தன்னிச்சையானவையாகும் என்பதுடன் தெளிவுபடுத்தும் நோக்கத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன.

எடுகோள்: 2021.02.01 ஒரு திங்கள் கிழமையாகும் (வியாபார நாள்) என்பதுடன் 2021 பெப்புருவரியில் வார இறுதி நாட்கள் தவிர விடுமுறைகள் எதுவுமில்லை.

மூ பிரயோகிக்கத்தக்க அளவு நிறையேற்றப்பட்ட சராசரி வீதம் = [(194.20*1.25 மில்லியன்) + (194.30*1.5 மில்லியன்)]/(1.25 மில்லியன் + 1.5 மில்லியன்)

= (242.75 + 291.45)/2.75 மில்லியன்
= 194.2545

மூமூ ஐ.அ.டொலர்/ இல.ரூபா வீதம் யூரோ/ இல. ரூபா மற்றும் யூரோ/ ஐ.அ.டொலர் வீதங்களை அடிப்படையாகக் கொண்டு பெறப்படுகிறது. இவ்விளக்கத்தில் யூரோ ஏற்றுமதிப் பெறுகைகளை மாற்றுவதற்குப் பயன்படுத்தப்பட்ட யூரோ/ இல. ரூபா வீதம் 233.40 ஆக அனுமானிக்கப்படுகிறது. மேலும், யூரோ/ ஐ.அ.டொலர் வீதம் 1.2 என அனுமானிக்கப்படுகிறது.

மூமூமூ மாற்றலுக்கான பிரயோகிக்கத்தக்க யூரோ/ ஐ.அ.டொலர் வீதம் 1.2 ஆகும்.

மூமூமூமூ பிரயோகிக்கத்தக்க அளவு நிறையேற்றப்பட்ட சராசரி வீதம் = [(194.10*1.50 மில்லியன்) + (194.20*1.80 மில்லியன்)ஸ/(1.50 மில்லியன் + 1.80 மில்லியன்)

= (291.15 + 349.56)/3.30 மில்லியன்
= 194.1545

2021 மார்ச்சு 17

**எமது தொடர்பு இல.: 33/04/012/0011/008**

சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

**"உள்முகப் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம்" தொடர்பாக உரிமம்பெற்ற வங்கிகளுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்கள்**

இது, இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்ட உள்முக தொழிலாளர் பணவனுப்பல்களில் பத்து சதவீதத்தினை (10%) ஐ.அ.டொலரில் இலங்கை மத்திய வங்கிக்கு விற்குமாறு உரிமம்பெற்ற வங்கிகளைக் கோருகின்ற விதத்தில் 2021.01.27 அன்று தொழிலாளர் உள்முக பணவனுப்பல்கள் தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான (தொடர்பு இல.33/04/012/0011/006) திருத்தங்கள் தொடர்பானதாகும்.

தற்பொழுது நிலவுகின்ற சந்தை நிலைமைகளைப் பரிசீலனையில் கொண்டு தொழிலாளர் பணவனுப்பல்களை மாற்றுவது தொடர்பில், உள்முக தொழிலாளர் பணவனுப்பல்களில் பத்து சதவீதத்தினை (10%) இலங்கை மத்திய வங்கிக்கு விற்பனை செய்ய வேண்டுமென்ற உரிமம்பெற்ற வங்கிகளுக்கான மேற்குறிப்பிட்ட தேவைப்பாடு 2021.03.17 இலிருந்து உடனடியாக நடைமுறைக்குவரும் விதத்தில் மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தப்படுகிறது.

தேசமான்ய பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷ்மன்
**ஆளுநர்**
**இலங்கை மத்திய வங்கி**

2021 மார்ச்சு 17

**எமது தொடர்பு இல.: 33/04/012/0011/009**

சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

**"ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவது" தொடர்பாக உரிமம்பெற்ற வங்கிகளுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்கள்**

இது, விதிகளின்படி, பொருட்களின் ஏற்றுமதியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பல்வேறு நாணயங்களிலமைந்த ஏற்றுமதிப் பெறுகைகளில் ஐம்பது சதவீதத்தினை (50%) ஐ.அ.டொலரில் இலங்கை மத்திய வங்கிக்கு விற்குமாறு உரிமம்பெற்ற வங்கிகளைக் கோருகின்ற விதத்தில் 2021.02.18 அன்று இலங்கைக்கு ஏற்றுமதிப் பெறுகைகளை மீள அனுப்புவது தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுடன் (தொடர்பு இல. 33/04/012/0011/007) தொடர்பானதாகும்.

தற்பொழுது நிலவுகின்ற சந்தை நிலைமைகளைப் பரிசீலனையில் கொண்டு, 2021.03.17 இலிருந்து பெறப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளின் மாற்றல்களில் ஐம்பது சதவீதத்தினை (50%) இலங்கை மத்திய வங்கிக்கு விற்பனை செய்ய வேண்டுமென்ற உரிமம்பெற்ற வங்கிகளுக்கான மேற்குறிப்பிட்ட தேவைப்பாடு, மறுஅறிவித்தல் வரை, உடனடியாக நடைமுறைக்குவரும் விதத்தில் இடைநிறுத்தப்படுகிறது.

தேசமான்ய பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷ்மன்
**ஆளுநர்**
**இலங்கை மத்திய வங்கி**

2021 மார்ச்சு 29

**தொடர்பு எண்: 33/04/012/0011/002**

சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் திறைசேரிகளின் தலைவர்களுக்கு

**இலங்கை மத்திய வங்கியினால் நடத்தப்படும் வாங்கல்-விற்றல், ஐ.அ.டொலர்/இல.ரூபா வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் ஏலங்களில் பங்கேற்பதற்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கிக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் தேசிய சேமிப்பு வங்கியும் இலங்கை மத்திய வங்கியினால் நடத்தப்படும் வாங்கல் - விற்றல், ஐ.அ.டொலர்/ இல. ரூபா வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் ஏலங்களில் பங்கேற்பது தொடர்பில் பின்வரும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

1. **பங்கேற்பதற்கு தகைமையுடைய வங்கிகள்**

அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் தேசிய சேமிப்பு வங்கியும் தகைமையுடைய வங்கிகளாகும். தகைமையுடைய வங்கிகள் ஏலங்களில் பங்கேற்பது அவர்களது சொந்தத் தற்றுணிபாக இருப்பதுடன் பங்கேற்பது கட்டாயமானதொன்றல்ல.

2. **அணித்தான பிரிவு ஐ.அ.டொலர்/ இல. ரூபா வீதம்**

2.1 அணித்தான பிரிவு, "உடன் அடிப்படையின்" மீதானதாக இருப்பின், அணித்தான பிரிவிற்கான பிரயோகிக்கத்தக்க ஐ.அ.டொலர்/ இல. ரூபா செலாவணி வீதம் இலங்கை மத்திய வங்கியின் அலுவல்சார் வெப்தளத்தில் வெளியிடப்பட்ட "குறியீட்டு ஐ.அ.டொலர்/ இல. ரூபா செலாவணி வீதம்" இல் கிடைக்கத்தக்க பிந்திய வீதமாக இருத்தல் வேண்டும்.

2.2 அணித்தான பிரிவின் காலம் "உடன் அடிப்படை" (அதாவது ஒன்றில் காசு, நாளை அல்லது முன்னோக்கிய அடிப்படை) இலிருந்து பிறழ்ந்திருக்குமாயின் நாளொன்றிற்கு 2 சதவீதம் கொண்ட சீராக்கம் வெளியிடப்பட்ட பிந்திய கிடைக்கத்தக்க "குறியீட்டு ஐ.அ.டொலர்/ இல.ரூபா உடன் செலாவணி" வீதத்திற்குப் பொருந்தத்தக்கவாறு பிரயோகிக்கப்படும் (அதாவது: நாளொன்றிற்கு 2 சதவீதம் முன்னோக்கிய காலங்களுக்காகக் கூட்டப்படுவதுடன் காசு மற்றும் நாளைய காலங்களுக்காகக் குறைக்கப்படும்).

3. **ஏல காலப்பகுதி**

ஏலம் திறக்கப்பட்டதிலிருந்து 30 நிமிடங்களின் பின்னர் ஏலம் மூடப்படும்.

4. **பொறிமுறை**

4.1 வாங்கல்விற்றல், ஐ.அ.டொலர்/ இல. ரூபா வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் ஏலங்களுக்காக குறித்துரைக்கப்பட்ட இ.ம.வங்கியின் மின்னஞ்சல் (fxswaps.iod@cbsl.lk) ஆக இருக்கும்.

4.2 ஏலம் தொடர்பான அறிவித்தல் ஒவ்வொரு தகைமையுடைய வங்கியினதும் திறைசேரிகளின் தலைவருக்கும் மற்றொருவருக்கும் இலங்கை மத்திய வங்கியின் விசேடமான மின்னஞ்சலூடாக (fxswaps.iod@cbsl.lk) குறித்துரைக்கப்பட்ட மின்னஞ்சலுக்கு ஏலம் தொடர்பான தேவையான தகவல்களுடன் மின்னஞ்சல் செய்யப்படும். சமகாலத்தில் ஏலம் தொடர்பான தகவல்களுடன் செய்தியொன்று "வங்கிகளுக்கிடையிலான மத்திய சந்தைக் கண்காணிப்பாளர் முகப்புத் திரையில் தோன்றும்".

4.3 ஏதேனும் தொழில்நுட்ப ரீதியான வரையறைகளைத் தவிர்க்கும் பொருட்டு தகைமையுடைய வங்கிகள் அவற்றின் தற்றுணிபின் அடிப்படையில் வெட்டுநேரத்திற்கு மிக முன்னதாகவே அவற்றின் விலைக்குறிப்பீடுகளைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

(அதாவது: வெட்டுநேரம் நண்பகல் 12.00 ஆக இருக்குமாயின், குறித்துரைக்கப்பட்ட மின்னஞ்சலான கஒளறயிள.ழைனளூ உடிளட.டம இற்கு அனைத்து விலைக்குறிப்பீடுகளும் நண்பகல் 12.00 மணிவரை (நண்பகல் 12.00 மணி உட்பட) இலங்கை மத்திய வங்கியினால் பெறப்படுவதற்குப் பரிசீலனையில் கொள்ளப்படும் என்பதுடன் பி.ப. 12.01 இலிருந்து ஏதேனும் விலைக்குறிப்பீடுகள் பெறப்படுமாயின் அவை பரிசீலிக்கப்படமாட்டா).

4.4 வங்கிகள் அவற்றின் தொடர்பான விலைக்குறிப்பீட்டு தொகைகளையும் பரஸ்பர பரிமாற்றல் புள்ளிகளையும் (ஒரு வழியில்) குறித்துரைக்கப்பட்ட எக்சல் படிவத்தில் (ஒவ்வொரு ஏல அறிவிப்பு தொடர்பான அறிவித்தலுடன் இணைக்கப்பட்டிருக்கும்) fxswaps.iod@cbsl.lk இற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

4.5 இலங்கை மத்திய வங்கியின் விலைக்கோரல் சபை, முன்வைக்கப்பட்ட அளவினைக் கருத்திற்கொள்ளாமல் தகைமையுடைய வங்கிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்தையும்/ பகுதியளவு விலைக்குறிப்பீடுகளை ஏற்றுக்கொள்வதற்கான அல்லது அனைத்தையும்/ பகுதியளவிலான விலைக்கோரல்களையும் நிராகரிப்பதற்கான தற்றுணிபினைக் கொண்டிருக்கிறது.

5. **பெறுபேறுகளைத் தொடர்பூட்டுதல்**

5.1 ஏலத்தின் பெறுபேறுகள் விசேட மின்னஞ்சல் முகவரியூடாக (கஒளறயிள.ழைனளூஉடிளட.டம) அனைத்துத் தகைமையுடைய வங்கிகளுக்கும் தொடர்பூட்டப்படும்.

5.2 ஏலத்தில் எவ்வங்கிகளின் விலைக்குறிப்பீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டனவோ அவ்வங்கிகளுக்கு குறித்துரைக்கப்பட்ட மின்னஞ்சலூடாக அறிவிக்கப்படும் என்பதுடன் அத்தகைய மின்னஞ்சல் கிடைத்தமை பற்றி அவ்வங்கி உறுதிப்படுத்தலும் வேண்டும்.

5.3 இம்மின்னஞ்சல்கள், தீர்ப்பனவு நடைமுறைகளுக்காக, இரு இணைத்தரப்பினர்களினாலும் மேற்கொள்ளப்பட்ட வணிக உறுதிப்படுத்தலாக பரிசீலனையில் கொள்ளப்படும்.

5.4 இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் தேவையானவிடத்து தேவையானவாறு வேறு ஏதேனும் தகவல்களை தகைமையுடைய வங்கிகளிடமிருந்து கோருவதற்கான தற்றுணிபினைக் கொண்டிருக்கிறது.

6. **தீர்ப்பனவு அறிவுறுத்தல்கள்**

வங்கிகள் நியம தீர்ப்பனவு நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

**7. இலங்கை மத்திய வங்கியைத் தொடர்பு கொள்வதற்கான இலக்கங்கள்**

இது தொடர்பில் மேலதிக தகவல்கள் அல்லது தெளிவுபடுத்தல்கள் தேவைப்படுமாயின், நீங்கள் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்கள அலுவலர்கள் 0112398715, 0112477595 மற்றும் 0112477084 ஆகிய தொலைபேசி இலக்கங்களில் தொடர்பு கொள்ளமுடியும்.

டி. கே. மாயாதுன்ன
**மேலதிகப் பணிப்பாளர்**
**பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்**

2021 மே 28

**தொடர்பு எண்: 33/04/012/0011/10**

சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

**"உள்முகப் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம்" தொடர்பாக வர்த்தக வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

இது, "உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம்" தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு 2020.12.22, 2021.01.01, 2021.01.27 மற்றும் 2021.03.17ஆம் திகதிகளில் விடுக்கப்பட்ட (முறையே 33/04/012/0011/004, 33/04/012/0011/005, 33/04/012/0011/006 மற்றும் 33/04/012/0011/008 ஆகிய தொடர்பு இலக்கங்களின் கீழ்) தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமானதாகும்.

குறிப்பிட்ட திட்டத்தின் கீழ், அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்ட பல்வேறு நாணயங்களிலுமமைந்த உள்முக தொழிலாளர் பணவனுப்பல்களில் பத்து சதவீதத்தினை (10%) ஐக்கிய அமெரிக்க டொலர்களில் 2021.05.28 இலிருந்து இலங்கை மத்திய வங்கிக்கு, வாராந்த அடிப்படையில், மறுஅறிவித்தல் வரை விற்பனை செய்ய வேண்டுமென இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றன. முன்னர் விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் (இணைப்பு I இல் உள்ள 2021.01.27ஆம் திகதியிடப்பட்ட 33/04/012/0011/006 தொடர்பு இலக்கத்தின் கீழ்) குறித்துரைக்கப்பட்டவாறு பந்திகள் 2, 3 மற்றும் 4இன் கீழுள்ள தேவைப்பாடுகள் மாற்றமின்றி அப்படியே தொடர்தல் வேண்டும்.

மேலும், அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் இத்தால் இணைப்பு IIஇல் தரப்பட்டுள்ளவாறு தொழிலாளர்களின் உள்முகப் பணவனுப்பல்களின் விற்பனை தொடர்பான வாராந்த சான்றுபடுத்தலை அதன் கணிப்பினை நிரூபிக்கின்ற எக்சல் செய்முறைத் தாளுடன் சேர்த்து நேர்த்தியான விதத்தில் சமர்ப்பிக்குமாறும் அதே விடயத்தினை, குறிப்பிட்ட வாரத்திற்குரிய மத்திய வங்கிக்கான ஐ.அ.டொலரின் விற்பனையுடன் சேர்த்து fxsales.mandatory@cbsl.lk இற்கு மின்னஞ்சல் செய்யுமாறும் வங்கிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

மேலதிக தகவல்களுக்கு அல்லது தெளிவுபடுத்தல்களுக்கு நீங்கள் இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் 0112398715, 0112477595 அல்லது 0761754460 இல் தொடர்பு கொள்ளலாம்.

தேசமான்ய பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷ்மன்
**ஆளுநர்**
**இலங்கை மத்திய வங்கி**

2021 மே 28

**தொடர்பு எண்: 33/04/012/0011/11**

சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

**"ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல்" தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

இது, ஏற்றுமதிப் பெறுகைககளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல் மற்றும் அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கை ரூபாவாக மாற்றுதல் தொடர்பில் 2021.03.09 திகதியிடப்பட்ட 2218/38ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல் விதிகள், 2021.04.09ஆம் திகதியிடப்பட்ட 2222/60ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல் விதிகள், 2021.05.28ஆம் திகதியிடப்பட்ட 2229/09ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல் ஆகிய விதிகளினால் திருத்தப்பட்டவாறான இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்டு 2021.02.18ஆம் திகதியிடப்பட்ட 2215/39ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல்

தொடர்பானதாகும்.

2021.05.28ஆம் திகதியிடப்பட்ட 2229/09ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் பிரதியொன்று இணைப்பு ஐஇல் இணைக்கப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட “ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல் விதிகளின் நியதிகளில் பொருட்களின் ஒவ்வொரு ஏற்றுமதியாளர்களும் மறுஅறிவித்தல் வரை அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகள் இலங்கைக்கு கிடைக்கப்பெற்றதன் மீது முப்பது (30) நாட்களினுள் இலங்கையில் கிடைக்கப்பெற்ற சொல்லப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளிலிருந்தும் மொத்தத்திலும் இருபத்தைந்து சதவீதத்திற்கு (25%) இற்குக் குறையாமல் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றினூடாக அல்லது உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்றினூடாக (இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பிடப்படும்) இலங்கை ரூபாவிற்கு (இதனகத்துப் பின்னர் இலங்கை ரூபா எனக் குறிப்பீடு செய்யப்படும்) நாணயச் சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படக் கூடியவாறான வேறு ஏதேனும் சதவீதத்திற்குக் கட்டாயமாக மாற்றிக் கொள்ளுதல் வேண்டும்.

இதற்கமைய, அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் (இதனகத்துப் பின்னர் “உரிமம்பெற்ற வங்கிகள்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) மேற்குறிப்பிட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் கேட்டுக் கொள்ளப்பட்டவாறு, அவ்வாறு இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்ட அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகளின் இருபத்தைந்து சதவீதத்தில் பத்து (10) சதவீதத்தினை வாராந்த அடிப்படையில் ஐ.அ.டொலரில் 2021.05.28 இலிருந்து மறுஅறிவித்தல் வரை இலங்கை மத்திய வங்கிக்கு விற்பனை செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

முன்னர் விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் (இணைப்பு II இலுள்ள 2021.02.18ஆம் திகதியிடப்பட்ட 33/04/012/0011/001 என்ற தொடர்பு இலக்கத்தின் கீழ்) குறித்துரைக்கப்பட்டவாறு பந்திகள் 2, 3, 4 மற்றும் 5இன் கீழுள்ள மற்றைய தேவைப்பாடுகள் மாற்றமின்றியிருக்கும்.

மேலும், அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் இத்தால் இணைப்பு IIIஇல் தரப்பட்டுள்ளவாறு, ஏற்றுமதிப் பெறுகைகளின் விற்பனை தொடர்பான வாராந்தச் சான்றுபடுத்தல்களை அதன் கணிப்பிற்கு ஆதரவளிக்கும் விதத்தில் எச்சல் செய்முறைத் தாளுடன் சேர்த்து நேர்த்தியான முறையில் சமர்ப்பிக்குமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுவதுடன் அதே விடயத்தினை குறிப்பிட்ட வேலை வாரத்திற்கான இலங்கை மத்திய வங்கிக்கான ஐ.அ.டொலர் விற்பனையுடன் சேர்த்து fxsales.mandatory@cbsl.lk என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் விளைவாந்தன்மையின் ஏதேனும் தேவைப்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய விதிகளுக்கு இணங்கியொழுகுவதற்குத் தவறுவது நாணய விதிச் சட்டத்தின் நியதிகளில் தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதனைத் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

மேலதிகத் தகவல்கள் அல்லது தெளிவுபடுத்தல்களுக்கு, நீங்கள் இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தினை 0112398715, 0112477595 அல்லது 0761754680 ஆகிய இலக்கங்களில் தொடர்பு கொள்ளமுடியும்.

தேசமான்ய பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷ்மன்
**ஆளுநர்**
**இலங்கை மத்திய வங்கி**

**இணைப்பு** I

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

**2229/9ஆம் இலக்க - 2021ஆம் ஆண்டு மே மாதம் 28ஆந் திகதி வெள்ளிக்கிழமை**

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

பகுதி I : தொகுதி (I) - பொது

**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

**1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க, நாணய விதிச் சட்டம்**

**1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 68ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10(இ)ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள்.**

பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷ்மன்
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

இலங்கை மத்திய வங்கி

கொழும்பு
2021 மே 28

**ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல்**

1. இவ்வதிகள், "2021ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்பும் விதிகள்" என எடுத்துக்காட்டப்படுதல் வேண்டும்.

2. இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்டு 2021 பெப்புருவரி 18ஆந் திகதியிடப்பட்ட 22155/39ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்டு, 2021 மாச்சு 09ஆந் திகதியிடப்பட்ட 2218/38ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல் விதிகள் மற்றும் 2021 ஏப்பிறல் 09ஆந் திகதியிடப்பட்ட 2222/60ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல் விதிகள் மூலம் திருத்தப்பட்டவாறான 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல் விதிகள் இத்தால் மேலும் திருத்தப்படுகிறது.

   (அ) அதன் 4ஆம் விதியினை நீக்கி பின்வரும் புதிய விதிகளை அதற்குப் பதிலீடு செய்வதன் மூலம் -

   "4. பொருட்களின் ஒவ்வொரு ஏற்றுமதியாளரும் 3ஆம் விதியின் கீழ் வேண்டப்பட்டவாறு, அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகள் இலங்கைக்குக் கிடைக்கப்பெற்றதன் மீது முப்பது (30) நாட்களினுள் இலங்கையில் கிடைக்கப்பெற்ற சொல்லப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளிலிருந்தும் மொத்தத்திலும் இருபத்தைந்து சதவீதத்திற்குக் (25%) குறையாமல் உரிமம்பெற்ற வங்கியொன்றினூடாக இலங்கை ரூபாய்க்கு மாற்றிக் கொள்ளுதல் வேண்டும்".

   "4அ. எவ்வாறாயினும், நாணயச் சபையானது, அத்தகைய ஏற்றுமதித் துறையின், கைத்தொழிலின் அல்லது ஏற்றுமதியாளரின் ஏற்றுமதிப் பொருட்களும் செயன்முறைகளும் உள்நாட்டில் பெற்றுக்கொள்ள முடியாத இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மிக உயர்வான சதவீதமொன்றினைப் பயன்படுத்துகின்றன என அதன் தற்றுணிபில், நாணயச் சபை திருப்தியடையுமாயின், இலங்கையில் கிடைக்கப்பெற்ற ஏற்றுமதிப் பெறுகைகளின் மொத்தத்தின் இருபத்தைந்து சதவீதத்தினைவிடக் குறைவாக மாற்றுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய குறிப்பான ஏற்றுமதித் துறைகளை அல்லது கைத்தொழில்களை அல்லது தனிப்பட்டவர்களை நிர்ணயிக்கலாம்.

   ஆயினும், எவ்வாறாயினும், எத்தகைய சந்தர்ப்பத்திலும், உடனடியாக மேலே குறிப்பீடு செய்யப்பட்டவாறு நாணயச் சபை, அதன் தற்றுணிபில் வழங்கக்கூடிய அத்தகைய பகுதியளவான விலக்களிப்பானது மொத்த ஏற்றுமதிப் பெறுகைகளில் பத்து சதவீதத்திற்கு (10%) கீழ் இருத்தலாகாது".

   "4ஆ. மேலே 4 மற்றும் 4அ விதியில் குறிப்பிடப்பட்ட அத்தகைய மாற்றும் திகதி, மேலே விதி 3 (I) இல் தேவைப்படுத்தப்பட்டவாறு ஏற்றுமதிப் பெறுகைகள் இலங்கையில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதற்கு முன்னரான திகதியினை விட பிந்திய திகதியொன்றாக இருத்தலாகாது (அதாவது கப்பலேற்றப்பட்ட திகதியிலிருந்து நூற்றியெண்பது (180) நாட்களுக்குப் பிந்தியதல்ல)".

   **(ஆ) அதன் 5ஆம் விதியினை நீக்கப் பின்வரும் புதிய விதியினை அதற்குப் பதிலீடு செய்வதன் மூலம் -**

   "5. நாணயச் சபையானது, பொதுவாக வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவத்தன்மை நிலைமையினையும் இலங்கையில் மொத்த அலுவல்சார் ஒதுக்கு மட்டங்களையும் பரிசீலனையில் கொண்டு, நிலவுகின்ற சூழ்நிலைகளில் பொருத்தமானதென அத்துடன் இயைபானதென நாணயச் சபை கருதக்கூடியவாறு விடயத்திற்கேற்ப உரிமம்பெற்ற வங்கியொன்றினூடாக இலங்கை ரூபாய்களினுள் மாற்றல் செய்யப்பட வேண்டிய இலங்கையில் கிடைக்கப்பெற்ற ஏற்றுமதிப் பெறுகைகளின், அத்தகைய வேறு சதவீதத்தை காலத்திற்குக் காலம் நிர்ணயிக்கலாம்".

**இணைப்பு** II

திகதி:
தொடர்பு:

பணிப்பாளர்
**பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**

**மாற்றப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளின் 25 சதவீதத்தில் 10 சதவீதத்தினை இலங்கை மத்திய வங்கிக்கு விற்பனை செய்தல்**

இணைக்கப்பட்டுள்ள எக்சல் செய்முறைத் தாளில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் துல்லியமானவை எனவும் ............................ ........... (வங்கியின் பெயர்) கணக்கேடுகளுக்கிணங்க பிரித்தெடுக்கப்பட்டவை எனவும் நாங்கள் இத்தால் உறுதிப்படுத்துகின்றோம். இது ......................... இருந்து ................... வரையான வாரத்திற்கான ஐ.அ.டொலர் ............. மில்லியன் பெறுமதியான ஏற்றுமதிப்

பெறுகைகளின் மாற்றல்களையும் அதற்கேற்ப ................... திகதியன்று ................ கொண்ட தீர்ப்பனவுத் திகதியுடன் இலங்கை மத்திய வங்கிக்கான ஐ.அ.டொலர் ................. மில்லியன் கொண்ட விற்பனையும் உள்ளடக்கியிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| கையொப்பம்: | ...................................... | ............................................ | .................................................. |
| பெயர்: | முதன்மை நிறைவேற்று அலுவலர் | முதன்மை இணங்குவிப்பு அலுவலர் | முதன்மை நிதியியல் அலுவலர் |
| பதவி: | ...................................... | ............................................ | .................................................. |
| திகதி: | ...................................... | ............................................ | .................................................. |

(கையொப்பமிடப்பட்ட கடிதத்தின் ஸ்கான் செய்யப்பட்ட பிரதி எக்சல் செய்முறைத் தாளுடன் இணைக்கப்படல் வேண்டும்)

2021 ஓகத்து 06

**எமது தொடர்பு எண்: 33/04/012/0011/12**

சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளினதும் தேசிய சேமிப்பு வங்கியினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

**ஏற்றுமதியாளர்களின் தொடர்பான (வெளிநாட்டு நாணய) கணக்குகளுக்கு ஏற்றுமதிப் பெறுகைகளை வரவு வைத்தல் மீது உரிமம்பெற்ற வங்கிகளுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் தேசிய சேமிப்பு வங்கியும் (இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பிடப்படும்) ஏற்றுமதியாளர்கள் தொடர்பான ஆவணங்களை தொடர்பான வங்கிகளுக்குச் சமர்ப்பிக்கும் வரை ஏற்றுமதிப் பெறுகைகளை அத்தகைய ஏற்றுமதியாளர்களின் வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கு வரவு வைப்பதனைத் தாமதித்து வருவது அவதானிக்கப்பட்டிருப்பதுடன் உரிமம்பெற்ற வங்கிகளின் இத்தகைய நடைமுறையானது ஏற்றுமதியாளர்களுக்கு பொருண்மிய ரீதியான இழப்புக்கள் ஏற்படவும் காரணமாகிறது.

எனவே, அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும், அத்தகைய பெறுகைகள் தொடர்பாக வங்கிகளுக்குக் கிடைக்கப்பெற்றதனை உடனடுத்து, வங்கிகளில் பேணப்படும் தொடர்பான ஏற்றுமதியாளர்களின் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு (கணக்குகளுக்கு) ஏற்றுமதிப் பெறுகைகளை வரவு வைக்குமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. தொடர்பான வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கு அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகள் வரவு வைக்கப்பட்டதும் உரிமம்பெற்ற வங்கிகள், ஏற்றுமதியாளர்களினால் தேவையான ஆவணங்கள் அத்துடன்/ அல்லது தகவல்கள் சமர்ப்பிக்கப்படும் வரை தொடர்பான வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்து அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகளை எடுப்பனவு செய்வதனை அத்துடன்/ அல்லது மாற்றிக் கொள்வதனை நிறுத்துவதற்கு வழிமுறைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

இது தொடர்பில் ஏதேனும் மேலதிக தெளிவுபடுத்தல்கள் தேவையாயின், நீங்கள் இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தினை 0112398715, 0112398711 அல்லது 0112477084 ஆகிய இலக்கங்களில் தொடர்பு கொள்ளமுடியும்.

தேசமான்ய பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷ்மன்
**ஆளுநர்**
**இலங்கை மத்திய வங்கி**

2021 நவெம்பர் 01

**தொடர்பு எண்: 33/04/012/0011/13**

சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

**“ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல்” தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்கள்**

இது, ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குள் கொண்டு வருவது அத்துடன் அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கை ரூபாவிற்கு மாற்றுவது தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்டு 2021.10.28ஆம் திகதியிடப்பட்ட 2251/42ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திரும்ப அனுப்புவது தொடர்பானதாகும்.

2021.10.28ஆம் திகதியிடப்பட்ட 2251/42ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரதி, இணைப்பு ஐ இல் தரப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட “ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்பும் விதிகளின் நியதிகளின் கீழ், இலங்கையில்

ஏற்றுமதிப் பெறுகைகளைப் பெறுகின்ற பொருட்கள் மற்றும் பணிகளின் ஒவ்வொரு ஏற்றுமதியாளரும் இலங்கையில் பெறப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளின் எஞ்சியவற்றை இலங்கை ரூபாவிற்கு கட்டாயமாக மாற்றிக் கொள்ள வேண்டுமென்பதுடன் (இதனகத்துப் பின்னர் இலங்கை ரூபா எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய பெறுகைகளைப் பயன்படுத்துவதன் மீது முன்னர் சொல்லப்பட்ட விதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறு அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் அத்தகைய பெறுகைகளைப் பயன்படுத்தி, இலங்கையில் கிடைக்கப்பெற்ற அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகளின் எஞ்சிய தொகையினைத் தொடர்ந்துவரும் மாதத்தின் ஏழாவது (7ஆவது) நாளன்று அல்லது அதற்கு முன்னர் மறுஅறிவித்தல் வரை, உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றினூடாக அல்லது உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்றினூடாக (இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பிடப்படும்) இலங்கை ரூபாவிற்கு கட்டாயமாக மாற்றிக் கொள்ளுதல் வேண்டும்.

இதற்கமைய, அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் இலங்கை ரூபாவிற்கு கட்டாயமாக மாற்றப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளில் அத்தகைய எஞ்சியவற்றில் பத்து சதவீதத்தினை (10%) மேலே குறிப்பிடப்பட்ட விதிகளின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு இலங்கை மத்திய வங்கிக்கு, ஐ.அ.டொலரில், வாராந்த அடிப்படையில் 2021.11.01 இலிருந்து மறுஅறிவித்தல் வரை விற்றுவிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

முன்னர் விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களிலுள்ள (2021.05.28ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு எண் 33/04/012/0011/11 மற்றும் 2021.02.18ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு எண் 33/04/012/0011/0007 என்பனவற்றில் குறித்துரைக்கப்பட்டவாறு பந்திகள் 2, 3, 4 மற்றும 5 இலுள்ளவை) மற்றைய தேவைப்பாடுகள் மாற்றமின்றியிருத்தல் வேண்டும்.

மேலதிகத் தகவல்கள் அல்லது தெளிவுபடுத்தல்களுக்கு, நீங்கள் இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தினை 0112398715, 0112477084 அல்லது 0112398711 ஆகிய இலக்கங்களில் தொடர்பு கொள்ளமுடியும்.

உங்கள் உண்மையுள்ள
நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**ஆளுநர்**
**இலங்கை மத்திய வங்கி**

இணைப்பு I

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

**2251/42ஆம் இலக்க - 2021ஆம் ஆண்டு ஒத்தோபர் மாதம் 28ஆந் திகதி வியாழக்கிழமை**

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) பொது**

**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

**1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டம்**

**1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 68ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10(இ)ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள்.**

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

இலங்கை மத்திய வங்கி
கொழும்பு
2021 ஒத்தோபர் 28

**ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல்**

1. இவ்விதிகள், “2021ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்பும் விதிகள்” என எடுத்துக்காட்டப்படுதல் வேண்டும்.

2. இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது, திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 10(இ)ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் ஒன்றிணைத்து வாசிக்கப்படும் 68ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைய செயற்பட்டு, இலங்கையினுள் ஏற்றுமதிப் பெறுகைகளின் கிடைப்பனவு மற்றும் அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கை ரூபாவாக மாற்றுதல் தொடர்பில் இத்தால் விதிகளை வழங்குகின்றது.

3. **பொருட்கள் மற்றும் பணிகளின் ஒவ்வொரு ஏற்றுமதியாளரும்:**

(i) இலங்கைக்கு வெளியில் ஏற்றுமதி செய்யப்படும் எல்லாப் பொருட்கள் அல்லது வழங்கப்படும் பணிகள் தொடர்பில், விடயத்திற்கேற்றவாறு, கப்பலேற்றும் அல்லது பணிகளை வழங்கும் திகதியிலிருந்து நூற்றியெண்பது (180) நாட்களினுள் ஏற்றுமதிப் பெறுகைகளைக் கட்டாயமாக இலங்கையில் பெறுதல் வேண்டும், மற்றும்

(ii) கிடைக்கப்பெறுகின்ற ஏற்றுமதிப் பெறுகைகளின் எல்லா மற்றும் ஒவ்வொரு கிடைப்பனவின்/ கிடைப்பனவுகளின் மீதும், பொருட்கள் மற்றும் பணிகளின் ஒவ்வொரு ஏற்றுமதி தொடர்பிலும் ஒவ்வொரு ஏற்றுமதிப் பெறுகைகள் மீதுமான அனைத்துத் தொடர்புடைய ஆவண ரீதியான சான்றினையும், இலங்கையில் அத்தகைய பெறுகைகளைப் பெறுகின்ற உரிய உரிமம்பெற்ற வர்த்தக வங்கிக்கு அல்லது உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிக்கு (இதனகத்துப் பின்னர் "உரிமம்பெற்ற வங்கி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தாமதமின்றி உடனடியாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. மேலே 3ஆம் விதியின் நியதிகளின் பிரகாரம், இலங்கையில் ஏற்றுமதிப் பெறுகைகளைப் பெறுகின்ற பொருட்கள் மற்றும் பணிகளின் ஒவ்வொரு ஏற்றுமதியாளரும், கீழே குறிப்பிடப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் மாத்திரம் அத்தகைய பெறுகைகளைப் பயன்படுத்தி இலங்கையில் கிடைக்கப்பெற்ற அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகளின் எஞ்சியதைத் தொடர்ந்து வருகின்ற மாதத்தின் ஏழாவது (07ஆவது) நாளன்று அல்லது அதற்கு முன்னர் இலங்கை ரூபாவாக கட்டாயமாக மாற்றுதல் வேண்டும்.

(i) பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியாளரின் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல் தொடர்பிலான வெளிமுகப் பணவனுப்பல்கள்;

(ii) பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதியாளரின் பயண நோக்கத்திற்கான வெளிநாட்டு நாணயத் தாள்களின் எடுப்பனவு அல்லது நிதியங்களின் மாற்றல்;

(iii) அத்தகைய வெளிநாட்டு நாணயக் கடன் மற்றும் வசதி, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் அல்லது திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகளின் நியதிகளின் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட கடன் பெறுகையொன்றாக இருக்கின்றவிடத்து பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியாளர்களினால் பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களினதும் வசதிகளினதும் படுகடன் தீர்ப்பனவுச் செலவுகள் அத்துடன் மீள்கொடுப்பனவு;

(iv) வெளிநாட்டு நாணயத்தில் அதனுடன் தொடர்புபடுகின்ற ஒரு மாத கடமைப் பொறுப்புக்கள் உள்ளடங்கலாக அத்தகைய பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளுடன் தொடர்புபட்ட பொருட்களின் கொள்வனவுகளுக்கான அத்துடன் பணிகளைப் பெற்றுக்கொள்வதற்கான பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதியாளரினால் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள்;

(v) அவ்வாறு கிடைக்கப்பெற்ற ஏற்றுமதிப் பெறுகைகளின் பத்து சதவீதம் (10%) வரை வெளிநாட்டு நாணயத்தில் இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடுகளைச் செய்வது தொடர்பிலான கொடுப்பனவுகள்.

5. மேலே 4ஆம் விதியில் குறிப்பிடப்பட்ட அத்தகைய மாற்றல் திகதியானது மேலே 3(ை)ஆம் விதியினால் வேண்டப்பட்டவாறு ஏற்றுமதிப் பெறுகைகள் இலங்கைக்குக் கிடைத்திருக்க வேண்டிய முந்திய திகதியினைவிட பிந்திய திகதியொன்றாக இருத்தலாகாது (அதாவது கப்பலேற்றல் அல்லது பணிகள் வழங்குதல் திகதியிலிருந்து நூற்றியெண்பது (180) நாட்களுக்குப் பிந்தாது).

6. மேலே 3ஆம் விதியில் எடுத்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் இலங்கையில் ஏற்றுமதிப் பெறுகைகளின் கிடைப்பனவுகளையும் மேலே 4ஆம் விதியில் வேண்டப்பட்டவாறு அத்தகைய பெறுகைகளின் மாற்றலையும் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் கண்டிப்பாகவும் கட்டாயமாகவும் கண்காணிப்பதற்கு வேண்டப்படுதல் வேண்டும் என்பதுடன் அது தொடர்பிலான அல்லது அதனுடன் இணைந்த எல்லா அவசியமான ஆவண ரீதியான சான்றினையும் எல்லா நேரங்களிலும் பேணுதலும் வேண்டும்.

7. காலத்திற்குக் காலம் வேண்டப்படக்கூடியவாறு அறிக்கைகளை அத்துடன் அல்லது கூற்றுக்களை இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணிப் பணிப்பாளருக்கு அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் மேலே 6ஆம் விதியின் கீழ் பேணப்படுகின்ற பதிவுகளைப் பரிசோதிப்பதற்கு அல்லது பரீட்சிப்பதற்கும் இவ்விதிகளுடன் முழுமையாகவும் கண்டிப்பாகவும் இணங்குவதை உறுதிசெய்வதில் அத்தகைய உரிமம்பெற்ற வங்கிகளினால் எடுக்கப்பட்ட எல்லா நடவடிக்கைகளையும் மீளாய்வதற்கும், விடயத்திற்கு ஏற்றவாறு ஆளுநர் அல்லது பிரதி ஆளுநரால் அதிகாரமளிக்கப்படக்கூடியவாறான இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களுக்குத் தங்குதடையற்ற பெறுவழியினை வழங்குதல் வேண்டும்.

8. இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளர், இவ்விதிகளின் நியதிகளுக்கமைய பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதி தொடர்பில் எவரேனும் பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதியாளர் அல்லது உரிமம்பெற்ற வங்கி இவ்விதிகளுடன் இணங்காமைக்கு அல்லது இவ்விதிகளின் மீறுகைக்கெதிராக நடவடிக்கையினைத் தொடங்குவதற்கு உரிமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

9. இவ்விதிகள் செயற்பாட்டுக்கு வரும் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளின் எல்லா மற்றும் ஒவ்வொரு ஏற்றுமதி தொடர்பிலும் இவ்விதிகள் ஏற்புடையதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய பொருட்களின்

கப்பலேற்ற அல்லது பணிகள் வழங்கல் திகதியிலிருந்து நூற்றியெண்பதாவது (180 ஆவது) நாளானது இவ்விதிகள் வலுவுக்கு வந்த பின்னர் ஏதேனும் திகதியன்று வருகின்றவிடத்து, இவ்விதிகள் செயற்பாட்டுக்கு வருகின்ற திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதிக்கு ஏற்புடையதாதலும் வேண்டும்.

10. ஏதேனும் சந்தேகத்தைத் தவிர்ப்பதற்கும் இவ்விதிகளின் நோக்கங்களுக்காகவும் "ஏற்றுமதிப் பெறுகைகள்" என்பது திருத்தப்பட்டவாறான 2021.02.03ஆம் திகதியிடப்பட்ட 2213/37ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (நானாவித மூலதனக் கொடுக்கல்வாங்கல் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகளின் கீழும் நியதிகளுக்கமைவாகவும் இலங்கையினுள் அனுப்பப்பட வேண்டிய அத்தகைய பெறுகைகளையும் இலங்கைக்கு வெளியில் வதியும் ஆளொருவருக்கு தொழில்சார், வாழ்க்கைத்தொழில், தொழில் அல்லது வியாபாரப் பணிகள் உள்ளடங்கலாக வழங்கப்பட்ட பணிகளுக்காக இலங்கையில் வதிகின்ற ஆளொருவரினால் வெளிநாட்டுச் செலாவணியில் பெற்றுக்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளையும் உள்ளடக்குதல் வேண்டும்.

11. இவ்விதிகளின் நோக்கங்களுக்காக, "உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்" மற்றும் "உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்" என்ற சொற்பதங்கள், திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைவாக அவற்றிற்கு குறித்தொதுக்கப்பட்ட பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

12. இவ்விதிகளின் நோக்கங்களுக்காக "நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள்" என்ற சொற்பதம் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

13. இவ்விதிகளின் நோக்கங்களுக்காக "பயண நோக்கங்களுக்காக வெளிநாட்டு நாணயத் தாள்களின் மீளெடுப்பு அல்லது நிதியங்களின் மாற்றல்" என்ற சொற்பதம் அது சார்பில் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்ட பணிப்புரைகளின் நியதிகளுக்கமைவானதாக இருத்தல் வேண்டும்.

14. இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்டு, 2021 மாச்சு 09ஆம் திகதியிடப்பட்ட 2218/38ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்பும் விதிகள், 2021 ஏப்பிறல் 9ஆம் திகதியிடப்பட்ட 2222/60ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்பும் விதிகள் மற்றும் 2021 மே 28ஆம் திகதியிடப்பட்ட 2229/9 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்பும் விதிகளினால் திருத்தப்பட்டவாறான 2021 பெப்புருவரி 18ஆம் திகதியிடப்பட்ட 2215/39ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்பும் விதிகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

2021 திசெம்பர் 01

**எமது தொடர்பு இல: 33/04/012/0011/014**

சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

**"தொழிலாளர் உள்முகப் பணவனுப்பல்கள் மீதான மேலதிக ஊக்குவிப்புக்கள்" தொடர்பான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

இது, 2021.01.01 மற்றும் 2021.01.27ஆம் திகதிகளில் (தொடர்பு இல.33/04/012/0011/004, 33/04/012/0011/005 மற்றும் 33/04/012/0011/006 என்பனவற்றின் கீழ்) திருத்தப்பட்டவாறான "தொழிலாளர் உள்முகப் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம்" தொடர்பில் 2020.12.22 அன்று உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் தொடர்பானது.

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை, மேலே குறிப்பிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவித்தலின்படி "தொழிலாளர் உள்முக பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டத்தின்" கீழ் தகைமையுடைய தொழிலாளர் பணவனுப்பல்களுக்கு ஐ.அ.டொலரொன்றிற்கு ரூ.8.00 கொண்ட மேலதிக ஊக்குவிப்பினை, 2020.12.22ஆம் திகதியிடப்பட்ட (தொடர்பு இல. 33/04/012/0011/004) முன்னர் விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் கீழ் செலுத்தப்படுகின்ற ஐ.அ.டொலரொன்றிற்கு ரூ.2.00 கொண்ட ஊக்குவிப்பிற்குப் புறம்பாக 2021.12.01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 2021.12.31 வரை செலுத்துவதற்குத் தீர்மானித்திருக்கிறது. இதற்கமைய, 2021 திசெம்பர் மாதத்தில் இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்ட தொழிலாளர் உள்முகப் பணவனுப்பல்கள் மீதான மொத்த ஊக்குவிப்பு டொலரொன்றிற்கு ரூ.10 ஆக இருத்தல் வேண்டும்.

உரிமம்பெற்ற வங்கிகள், தகைமையுடைய வாடிக்கையாளர்களுக்குச் செலுத்திய ஐ.அ.டொலரொன்றிற்கான ரூ.8.00 கொண்ட மேலதிக ஊக்குவிப்பு தொடர்பாக, 2022.01.15 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ முன்னர் பயன்படுத்தப்பட்ட படிவத்திலுள்ளவாறு கோரல் விண்ணப்பங்களை இலங்கை மத்திய வங்கிக்குச் சமர்ப்பிக்குமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

முன்னர் விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் (தொடர்பு இல. 33/04/012/0011/004, 33/04/012/0011/005 மற்றும் 33/04/012/0011/006) ஆகிய அனைத்து அறிவுறுத்தல்களும் தேவைப்பாடுகளும் மாற்றமின்றியிருத்தல் வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தினை நீங்கள் 0112398707, 0112398718 அல்லது 0112398711 ஆகிய இலக்கங்களில் தொடர்பு கொள்ளமுடியும்.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

2021 திசெம்பர் 13

**தொடர்பு இல: 33/04/012/0011/015**

சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

**“கையில் வைத்திருக்கும் வெளிநாட்டு நாணயத்தினை வைப்புச் செய்தல், மாற்றிக் கொள்ளுதல் மற்றும் முதலீடு செய்வதற்காக பொதுமக்களுக்கு வழங்கப்படும் ஊக்குவிப்புக்கள்” தொடர்பான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

1. நாட்டிலுள்ள அனைத்து வெளிநாட்டு நாணயத்தினையும் முறைசார்ந்த வங்கித்தொழில் முறைமையூடாக வழிப்படுத்தப்படுவதனை மேம்படுத்தும் குறிக்கோளொன்றுடன் உரிமம்பெற்ற வங்கியொன்றினூடாக கையிலுள்ள வெளிநாட்டு நாணயத்தினை உடனடியாக வைப்புச் செய்வதற்கு, மாற்றுவதற்கு அல்லது முதலீடு செய்வதற்கு பொதுமக்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

2. பொதுமக்கள் கையிலுள்ள வெளிநாட்டு நாணயம் பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது:

   (i) வெளிநாட்டுப் பயண நோக்கங்களுக்காக உரிமம்பெற்ற வங்கி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுநரொருவரிடமிருந்து கொள்வனவு செய்து பயன்படுத்தப்படாது இலங்கைக்கு மீண்டும் கொண்டுவரப்பட்டவை (ஐ.அ.டொலர் 15,000 வரையிலான அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயம்);

   (ii) வெளிநாட்டுப் பயண நோக்கங்களுக்காக தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து எடுப்பனவு செய்யப்பட்டு, பயன்படுத்தப்படாமல் இலங்கைக்கு மீண்டும் கொண்டுவரப்பட்டவை (ஐ.அ.டொலர் 15,000 வரையிலான அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் நாணயம்);

   (iii) வெளிநாட்டில் இருந்த போது தொழில்புரிந்தமை மூலம் தொழில்சார் நிபுணத்துவம் அல்லது வியாபாரத்திலிருந்து உழைக்கப்பட்டு இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டவை;

   (iv) 2020 சனவரி 01 அன்று அல்லது அதற்குப் பின்னர் சிறப்பு வைப்புக் கணக்குகளில் வைப்புச் செய்வதற்காக கையேற்கப்பட்டு இலங்கைக்கு கொண்டுவரப்பட்டவை.

3. 2021 திசெம்பர் 13 - 31 வரையான காலப்பகுதியில் மேலே பந்தி 2இல் உள்ளவாறான வெளிநாட்டு நாணயத்தினை வைப்புச் செய்கின்ற, மாற்றுகின்ற அல்லது முதலீடு செய்கின்ற பொதுமக்களுக்குப் பின்வரும் ஊக்குவிப்புக்களை வழங்குமாறு உரிமம்பெற்ற வங்கிகள் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

   (i) அத்தகைய வெளிநாட்டு நாணயத்தினை இலங்கை ரூபாவிற்கு மாற்றுகின்ற போது ஐ.அ.டொலரொன்றிற்கு அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் நாணயத்திற்கு இலங்கை ரூ.210 இனைச் செலுத்துதல் (2021 திசெம்பர் மாத காலப்பகுதியில்).

   (ii) அத்தகைய வெளிநாட்டு நாணயத்தினை மாற்றி இலங்கை ரூபா வைப்புக் கணக்கொன்றிற்கு வைப்புச் செய்யும் போது ஐக்கிய அமெரிக்க டொலரொன்றிற்கு அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்திற்கு இலங்கை ரூ.210 இனைச் செலுத்துதல் (2021 திசெம்பர் மாத காலத்தில்).

   (iii) அத்தகைய வெளிநாட்டு நாணயத்தினை வாடிக்கையாளரின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு அல்லது சிறப்பு வைப்புக் கணக்கிற்கு வைப்புச் செய்ய அனுமதித்தல்.

   (iv) இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடு செய்ய அனுமதித்தல்.

4. மேலும், அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் 2021 திசெம்பர் 13 இலிருந்து 2021 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் (இரண்டு நாட்களும் உட்பட) இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்ட அத்தகைய வெளிநாட்டு நாணயத்தில் இருபது (20%) சதவீதத்தினை மேலே பந்தி 3(i) மற்றும் 3(ii)இல் உள்ளவாறு வாராந்த அடிப்படையில் ஐ.அ.டொலர்களில் இலங்கை மத்திய வங்கிக்கு விற்றுவிடுமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. இதற்கமைய, உரிமம்பெற்ற வங்கிகள் 2021 திசெம்பர் 17 இலிருந்து அத்தகைய ஐ.அ.டொலர்களைக் குறிப்பிட்ட வேலை வாரத்தில் (திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை) அதே வாரத்தின் வெள்ளிக்கிழமையானது (அல்லது இறுதி வேலை நாளன்று வழமையான வெளிநாட்டுச் செலாவணி சந்தை விடுமுறை நாள் பாரம்பரியங்களுக்குட்பட்டு விற்பனை செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

5. இலங்கை மத்திய வங்கிக்கான ஐ.அ.டொலர் விற்பனைக்கான பிரயோகிக்கத்தக்க ஐ.அ.டொலர்/ இல. ரூபா செலாவணி வீதம்

   இலங்கை மத்திய வங்கிக்கும் உரிமம்பெற்ற வங்கிகளுக்குமிடையிலான கொடுக்கல்வாங்கல்கள் ஐ.அ.டொலரொன்றிற்கு ரூ.200.00

என்ற செலாவணி வீதத்தில் இருத்தல் வேண்டும்.

**6. தீர்ப்பனவுக் காலம்**

இலங்கை மத்திய வங்கிக்கும் உரிமம்பெற்ற வங்கிகளுக்குமிடையிலான கொடுக்கல்வாங்கல்கள் நாளைய (அதாவது hp + 1) அடிப்படையில் இருத்தல் வேண்டும்.

**7. தீர்ப்பனவு அறிவுறுத்தல்கள்**

தீர்ப்பனவினைப் பொறுத்தவரையில், உரிமம்பெற்ற வங்கிகள் நியம ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா தீர்ப்பனவு அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. இதனை நிறைவேற்றுகையில், உரிமம்பெற்ற வங்கிகள் "தோம்சன் றொயிட்டர்ஸ்" அல்லது "புளூம்பேர்க்" வர்த்தகப்படுத்தல் தளம்களூடாக வணிகத்தினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. எனினும், ஏதேனும் உரிமம்பெற்ற வங்கியொன்றுக்கு அத்தகைய வர்த்தகப்படுத்தல் தளம்களை அணுகுவதற்கு வசதியில்லாதவிடத்து, குறிப்பிட்ட உரிமம்பெற்ற வங்கி அலுவல்சார் மின்னஞ்சலை வணிகத்தினை நிறைவேற்றுவதற்கான அலுவல்சார் மின்னஞ்சலாகப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

| 5.10 | பிணையுறுதிகள் | (i) | பிணையுறுதிகளிலும் பார்க்க வேளாண்மையாளர்களின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை பரிசீலனையில் கொண்டு கடன்களை வழங்குமாறு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது. |
| | | (ii) | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிடையே உடன்பாடொன்றினை அல்லது தனியாள் உத்தரவாதத்தினைப் பெற்றுக்கொள்ளுதல். |

## 6. நிதியியல் அளவு

6.1 அளவுகள், தற்பொழுது நிலவுகின்ற பயிர்ச்செய்கை செலவில் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு பயிருக்குமாக வேளாண்மைத் திணைக்களத்தினால் நிர்ணயிக்கப்படும் நிதியின் அளவினை ஒவ்வொரு பயிர்ச்செய்கைப் பருவகாலத்தின் ஆரம்பத்திலும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகத்திற்கு இலங்கை மத்திய வங்கி அறிவிக்கும்.

6.2 திட்டத்தின் கீழான வசதிகள், நிதியியல் அளவில் குறிப்பிடப்பட்டுள்ள நிலத்தின் அளவிற்கேற்ப வழங்கப்படுகின்றன. பங்கேற்கும் நிதியியல் நிறுவனமொன்று மேலே குறிப்பிடப்பட்டதிலும் பார்க்க கூடுதலான கடன்களை வர்த்தக வீதத்தில் வழங்கமுடியும். இதற்கு (மிகையான தொகைக்கு) வட்டி உதவுதொகை வழங்கப்படமாட்டாது.

6.3 கடன் தொகை பயிர்ச்செய்கையின் மொத்தச் செலவில் 75 சதவீதத்தினை விஞ்சக்கூடாது. வேளாண்மையாளர் பயிர்ச்செய்கையின் மொத்தச் செலவில் குறைந்தபட்சம் 25 சதவீதத்தினை காசாகவோ பொருளாகவோ பங்களித்தல் வேண்டும்.

6.4 இலங்கை மத்திய வங்கி, வேளாண்மைத் திணைக்களம் மற்றும் ஏனைய தொடர்பான நிறுவனங்களின் ஆலோசனையுடன் நிதியின் அளவில் மாற்றங்களைச் செய்வதற்கான உரிமையினை தன்னகத்தே கொண்டுள்ளது.

## 7. வட்டி உதவுதொகைக் கொடுப்பனவு

நிதி அளவுகளில் குறிப்பிடப்பட்டவாறு, இலங்கை மத்திய வங்கி, தமது சொந்த மூலவளங்களிலிருந்து கடன் முற்பணங்களை வழங்குகின்ற பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு இலங்கை அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்படுகின்ற வீதத்தில் வட்டி உதவுதொகைகளை வழங்கும். இவ்வுதவுதொகைக்கு தகைமைபெறும் பொருட்டு, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட வட்டி வீதத்தில் வேளாண்மையாளர்களுக்கு கடன்களை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படும்.

7.1 வட்டி உதவுதொகைக் கொடுப்பனவுகள் இரண்டு கட்டங்களில் அதாவது முன்கூட்டிய கொடுப்பனவாகவும் இறுதிக்

கொடுப்பனவாகவும் வழங்கப்படும்.

7.1.1 முன்கூட்டிய கொடுப்பனவானது, ஒப்புதலளிக்கப்பட்ட தொகை மீது மேலேயுள்ள பிரிவு 5.5 இன்படி 90 நாட்களைக் கொண்ட காலப்பகுதிக்காக கணிக்கப்படும். இந்நோக்கத்திற்காக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இணைப்பு ஐஐஐ இல் தரப்பட்டுள்ள குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் சரியாக நிரப்பபட்ட இணைப்பு ஐஏ ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/ஐஎஸ்/1 இனைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

7.1.2 270 நாட்களைக் கொண்ட காலப்பகுதியின் பின்னரும்கூட கடன்களை அறவிடுவது பிரச்சனைக்குரியதாக இருக்குமிடத்து விடயத்திற்கேற்றவாறு உயர்ந்தபட்சம் 180 நாள் என்ற நிபந்தனைக்குட்பட்டு எஞ்சிய காலப்பகுதிக்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் அறவிடல் திகதிகள் அறிவிக்கப்பட்ட பின்னர் இறுதிக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். இந்நோக்கத்திற்காக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அவை வழங்கிய தொகை, திகதி மற்றும் பயிர்ச்செய்கைக் கடன்களின் அறவிடப்பட்ட தொகை என்பனவற்றை அறிக்கையிடுவதனை இயலச்செய்யும் பொருட்டு, படிவம் ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/ஐஎஸ்/2 (இணைப்பு V இல் தரப்பட்டுள்ளது) அனுப்பிவைக்கப்படும்.

7.2 கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை ஒப்புதலளிக்கப்பட்ட தொகையிலும் பார்க்க கூடுதலாக இருக்குமிடத்து, வட்டி உதவுதொகை ஒப்புதலளிக்கப்பட்ட தொகைக்கே வழங்கப்படும் என்பதுடன் வழங்கப்பட்ட தொகை ஒப்புதலளிக்கப்பட்ட தொகையிலும் பார்க்கக் குறைவாக இருக்குமிடத்து வட்டி உதவுதொகை வழங்கப்பட்ட தொகைக்கு மட்டுமே வழங்கப்படும்.

7.3 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இலங்கை மத்திய வங்கியிடமிருந்து முறையே வட்டி உதவுதொகை முற்பணக் கொடுப்பனவுகளையும் வட்டி உதவுதொகை இறுதிக் கொடுப்பனவுகளையும் கோருவதற்கு படிவம் ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/ஐஎஸ்/1 (இணைப்பு IV) மற்றும் ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/ஐசி/2 (இணைப்பு V) என்பனவற்றை பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன. இந்நோக்கத்திற்காக பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் விபரிக்கப்பட்ட படிவங்களை அனைத்து நிதியியல் நிறுவனங்களினதும் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கும்.

7.4 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகம் கிளைவாரியாக தகவல்களைத் தொகுத்து, வட்டி உதவுதொகை விண்ணப்பங்களுடன் (ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/ஐஎஸ்/2 மற்றும் ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/ஐஎஸ்/2 இணைப்பு IV மற்றும் V உடன் சேர்த்து பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

7.5 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகங்கள் வட்டி உதவுதொகைக் கோரல்களை (மென்பிரதிகள் மற்றும் வன்பிரதிகள் இரண்டிலும்) தகைமையுடைய கட்டுப்பணத்துடன் சேர்த்து உரிய திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இணைப்பு IV இல் தரப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

7.6 வட்டி உதவுதொகை கோரல் விண்ணப்பங்களின் வன்பிரதி, தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகத்தினூடாக பணிப்பாளர் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் இலங்கை மத்திய வங்கி, இல.30 சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01 இனை அடைதல் வேண்டும்.

7.7 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் அனைத்து விண்ணப்பங்களும் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் இலங்கை மத்திய வங்கியினால் பெறப்பட்டதும், கோரல் சரிபார்ப்புக்கள் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் செய்முறைப்படுத்தப்பட்டு இத்திட்டத்தின் கீழ் அரையாண்டு அடிப்படையில் ஒவ்வொரு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்குமான ஏற்புடைத்தான வட்டி உதவுதொகைக் கோரல்களைக் கோருகின்ற விதத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்கப்படுவதுடன் இலங்கை அரசாங்கத்திடமிருந்து சேரவேண்டிய தொகை கிடைத்ததன் பின்னர் கோரல்கள் தீர்ப்பனவு செய்யப்படும்.

**8. செலுத்தத்தவறிய கடன்கள்**

பயிர்ச்செய்கைக் காலம் முடிவடைகையில் கிளை முகாமையாளர் செலுத்தத்தவறிய கடன்பாட்டாளர்களை அதாவது வேண்டுமென்றே செலுத்தத்தவறியவர்கள் மற்றும் வேண்டுமென்றில்லாமல் செலுத்தத்தவறியோர் என இரண்டு வகையினராக வகைப்படுத்தல் வேண்டும். வகைப்படுத்தலானது கள அலுவலரூடாக கிளை முகாமையாளருக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

8.1 வேண்டுமென்று செலுத்தத்தவறியவர்கள்

கிடைக்கத்தக்க தகவல்களின் நியதிகளில், கடன்பாட்டாளர்களுக்கு சிறந்த அறுவடை கிடைத்திருந்தும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கான அவர்களின் கடப்பாடுகளைத் தீர்ப்பனவு செய்யத்தவறியிருக்கின்றார்கள் என்பதனை கிளை அலுவலர்/ கள அலுவலர் அவதானிக்குமிடத்து அத்தகைய கடன்பாட்டாளர்களை வேண்டுமென்றே செலுத்தத்தவறியவர் என வகைப்படுத்தல் வேண்டும்.

8.2 வேண்டுமென்றில்லாமல் செலுத்தத்தவறியவர்கள்

வெள்ளம், வரட்சி அல்லது பூச்சியின் தாக்கம் அல்லது கடன்பாட்டாளரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாலான வேறு ஏதேனும் குறிப்பிட்ட காரணங்கள் போன்ற இயற்கை அனர்த்தங்களினால் பயிர் சேதமடைந்தமையின் காரணமாக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் கடப்பாடுகளை பூர்த்திசெய்வதில் இடர்பாடுகளை கடன்பாட்டாளர் எதிர்நோக்கியிருப்பாராயின் அத்தகைய கடன்பாட்டாளர்கள் வேண்டுமென்றில்லாமல் செலுத்தத்தவறியவர்கள் என வகைப்படுத்தப்பட வேண்டும்.

**9. அறவிடல்கள்**

9.1 இந்த இரண்டு வகைகளையும் பொறுத்தவரையில் அறவிடல் நடவடிக்கைகளுக்கான நடைமுறைகள் பிரிவு 9.2, 9.3 மற்றும் 9.4இல் குறிப்பிடப்பட்டவாறு இருக்கும்.

9.1.1 சட்ட நடவடிக்கையினூடாக செலுத்தத்தவறியவர்களிடமிருந்து வரவேண்டிய தொகையினை அறவிடுவதற்கு உடனடி நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். மேற்கொள்ளப்படக்கூடிய சட்ட நடவடிக்கைகளின் தொகுப்பொன்று பிரிவு 10இல் தரப்பட்டுள்ளன.

9.2 வேண்டுமென்றில்லாமல் செலுத்தத்தவறியவர்களைப் பொறுத்தவரையில், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கடன்பாட்டாளருடன் தனிப்பட்ட தொடர்புகளை நிறுவிக்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன், இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் பிரிவு 14இல் குறிப்பிடப்பட்டவாறு கடன்பாட்டாளருக்கு மீள் அட்டவணைப்படுத்தல் வசதியை வழங்குதல் வேண்டும் என்பதுடன், கடன்பாட்டாளர்களினால் அறவிடல்கள் முழுமையாக தீர்ப்பனவு செய்யப்படும் வரை கிரமமான முறையில் கண்காணித்தல் வேண்டும்.

9.3 வரவேண்டிய எந்தவொரு தொகையினையும் அறவிடுவதற்காக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் சாத்தியமான அனைத்து வழிகளிலும் பொருத்தமானதும் சாத்தியமானதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கோரல்களைச் சமர்ப்பித்த பின்னரும்கூட, இலங்கை அரசாங்கத்திடமிருந்து கொடுகடன் உத்தரவாதங்களைப் பெற்ற பின்னரும்கூட பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அறவிடல் நடவடிக்கைகளில் தீவிரமாக இருக்க வேண்டும். எனவே பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இலங்கை மத்திய வங்கியினால் ஆலோசனை தெரிவிக்கப்படக்கூடிய எந்தவொரு நடவடிக்கையினையும் மேற்கொள்ள கடமைப்பட்டனவாகும்.

9.4 கடனொன்று நிலுவையில் இருக்கும்போது, பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் முகாமையாளர் கடனை சரியான முறையில் செலுத்துவதற்கு கடன்பாட்டாளரை தூண்டும் விதத்தில் உடனடியாக அறவிடல் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் பின்பற்றக்கூடிய நடவடிக்கைகள் வருமாறு:

(i) செலுத்தாமைக்கான காரணங்களை கண்டறியும் பொருட்டு கடன்பாட்டாளர்களிடம் (குறைந்தபட்சம் இரண்டு தடவைகள் விஜயம் செய்தல்) வேண்டுமென்பதுடன் வரவேண்டிய தொகையினை மீளச்செலுத்துவதற்கு அவர்களைத் தூண்டுதலும் வேண்டும்.

(ii) கடன்பாட்டாளரினால் எதிர்நோக்கப்பட்ட இடர்பாடுகளாகக் கண்டறிந்து பரீட்சிக்க வேண்டியதுடன் கடன்பாட்டாளர் அத்தகைய இடர்நேர்வுகளை வெற்றிகொள்வதற்கு அவர்கள் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகளை விதந்துரைத்தல்.

(iii) இடர்நேர்வுகள் நம்பகத்தன்மையினை கொண்டனவாகவும் கடன்பாட்டாளரின் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டதாகவும் இருக்குமிடத்து கடன்களை மீள் அட்டவணைப்படுத்தி கடன்பாட்டாளரின் வருமான மாதிரியினைப் பரிசீலனையில் கொண்டு புதிய மீள்கொடுப்பனவுத் திட்டத்தினை வழங்குதல்.

(iv) வேண்டுமென்றே கடனைச் செலுத்தாதவர்களைப் பொறுத்தவரை கடன்பாட்டாளர் மற்றும் உத்தரவாதி இருவர் மீதும் கோரிக்கை அறிவித்தலை விடுத்தல்.

(v) கடன் தொகை தவறாகப் பயன்படுத்தப்பட்டிருப்பது கண்டறியப்பட்டிருக்குமிடத்து கேள்வி அறிவித்தல் உடனடியாக விடுக்கப்பட வேண்டும் என்பதுடன் அத்தகைய கடன்பாட்டாளருக்கெதிராக உடனடியாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும் வேண்டும்.

**10. சட்ட நடவடிக்கைகள்**

10.1 பிரிவு 9.3இல் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளை எடுத்தபின்னரும்கூட, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் செலுத்தத்தவறியவர்களிடமிருந்து வரவேண்டிய தொகையினை சேகரிக்கத்தவறுமிடத்து அத்தகைய வழக்குகள் ஆரம்பத்தில் முதல் தவணை நிலுவைக்கு வந்த நாளிலிருந்து 6-9 மாதங்களுக்குள் மத்திய சபையிடம் பாரப்படுத்தப்படல் வேண்டும்.

10.2 செலுத்தத்தவறியவர்கள் தீர்வொன்றிற்கு வராதபொழுது முதல் தவணை நிலுவைக்கு வந்த செலுத்தப்படவேண்டிய நாளிலிருந்து 9-12 மாதங்களுக்கிடையில் அத்தகைய செலுத்தத்தவறியவர்களுக்கெதிராக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பொருத்தமான நீதிமன்றமொன்றில் அவர்களுக்கெதிராக வழக்கினை தொடர்தல் வேண்டும்.

**11. கொடுகடன் உத்தரவாதத் தீர்ப்பனவுகள்**

நாணயவிதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) உபபிரிவு 108அ இன் நியதிகளில் இலங்கை மத்திய வங்கி இணைப்பு ஐஇல் தரப்பட்டுள்ள நோக்கங்களுக்காக வழங்கப்பட்டுள்ள கடன்கள் தொடர்பாக புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்திலுள்ள பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு உத்தரவாதங்களை வழங்கும். எதிர்பார்க்கப்பட்ட கடன் மீள்கொடுப்பனவுத் தவணைகள் செலுத்தப்படாமையின் காரணமாக எழுகின்ற திரவத்தன்மைப் பற்றாக்குறைக்கு வசதியளிக்குமொன்றாக இலங்கை மத்திய வங்கி கொடுகடன் உத்தரவாதங்களை வழங்குவதுடன் செலுத்தத்தவறியவர்களிடமிருந்து வரவேண்டிய தொகையினைப் பெற்றுக்கொண்டதும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அத்தகைய கொடுகடன் உத்தரவாதத் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளை

இலங்கை மத்திய வங்கிக்கு மீளவனுப்புதலும் வேண்டும்.

11.1 பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளருக்கு கட்டுப்பணத்தினை சேகரித்தல், அரசாங்கத்தின் பங்களிப்புக்களைப் பெற்றுக்கொள்ளுதல், மிகையான நிதியினை முதலீடு செய்தல், உத்தரவாதக் கோரல்களை கொடுப்பனவு செய்தல் மற்றும் கோரல்களைத் தீர்ப்பனவு செய்தபின்னர் அறவிடல்களுக்காக மீள அழைப்பு விடுத்தல் போன்றவற்றிற்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

11.2 தகைமையுடைய கடன்கள்

இத்திட்டத்தின் நோக்கத்திற்காக, இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனைத்துக் கடன்களும் உத்தரவாதப் பாதுகாப்பிற்கு தகைமையுடையனவாகும். இத்திட்டத்தின் கீழான உத்தரவாதப் பாதுகாப்பு பின்வரும் கடன்களை வழங்குமிடத்து தேவைப்படுத்தப்படுகின்றன.

11.2.1 இணைப்பு I இல் தரப்பட்டுள்ள நோக்கங்களுக்காக வழங்கப்பட்டவை.

11.2.2 கடன் தொகை இணைப்பு II இல் தரப்பட்டுள்ள நிதியியல் அளவிற்குள் இருத்தல் வேண்டும்.

11.2.3 கட்டுப்பணங்கள் சரியான நேரத்தில் இலங்கை மத்திய வங்கிக்கு செலுத்தப்பட்டிருத்தல்.

11.3 உத்தரவாதப் பாதுகாப்பு தகைமையிழத்தல்

11.3.1 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் காப்புறுதிப் பாதுகாப்பு உட்பட அரசாங்கத்தின் உத்தரவாதங்கள் அல்லது வேறு ஏதேனும் அரச நிறுவனங்களின் உத்தரவாதங்களை எக்கடனுக்குப் பெற்றுக்கொண்டனவோ அக்கடன்கள்.

11.3.2 கொடுகடன் உத்தரவாதக் கட்டணங்கள் உரிய காலத்தில் மத்திய வங்கிக்குச் செலுத்தப்பட்டிராத கடன்கள்.

11.4 உத்தரவாதத்தின் அளவு

11.4.1 திட்டமானது, இழப்பிலுள்ள வெளிநிற்கும் மூலதனத்தொகையில் 60 சதவீதம் அல்லது உத்தரவாதப்படுத்தப்பட்ட தொகை இதில் எது குறைவானதோ அத்தொகைக்கான உத்தரவாதப் பாதுகாப்பினை வழங்கும்.

11.4.2 கோரலில் 75 சதவீதம் கொண்ட முதல் தவணைப் பணம் விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதும் செலுத்தப்படும். மீதி 25 சதவீதம் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் செலுத்தத்தவறிய கடன்பாட்டாளருக்கெதிராக சட்ட நடவடிக்கைகளை எடுத்து வழக்கு இலக்கத்தினை பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு அறிவித்ததன் பின்னர் செலுத்தப்படும்.

11.5 கட்டுப்பணம்

11.5.1 கட்டுப்பணம் என்பது, இத்திட்டத்தின் கீழ் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் விடுவிக்கப்பட்ட ஒவ்வொரு பயிர்ச்செய்கைக் கடன்கள் தொடர்பிலும் இலங்கை மத்திய வங்கிக்கு செலுத்தப்படவேண்டிய அரை (1/2) சதவீதம் கொண்டதொரு தொகையாகும். உத்தரவாதத்திற்கென தனியான விண்ணப்பமெதுவும் இல்லை என்பதனால் கட்டுப்பணமானது வட்டி உதவுதொகைக்கான விண்ணப்பத்துடன் சேர்த்துச் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், இது இணைப்பு II இல் தரப்பட்டுள்ள நிதியின் அளவின்படி இத்திட்டத்தின் கீழ் தகைமையுடைய மொத்த கடன் தொகையின் மீது கணிக்கப்படுதலும் வேண்டும்.

11.5.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தொடர்பான பருவகாலங்களுக்கான கட்டுப்பணத்தினை தொடர்பான தலைமை அலுவலகத்தினூடாக செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன. கட்டுப்பணத்தினை பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் பெயரில் எழுதப்பட்ட காசோலையின் மூலம் அத்துடன், அல்லது, அதேநேர மொத்தத் தீர்ப்பனவிற்கு பிரதேச அபிவிருத்தித் திணைக்கள வங்கிக் கணக்கு இல. 2 - 54518 இற்கு, வட்டி உதவுதொகை விண்ணப்பங்களின் தொடர்பான மென்பிரதிகள் மற்றும் வன்பிரதிகளுடன் சேர்த்து குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். எனினும், இத்திட்டத்தின் கீழ் கட்டுப்பணமில்லாமல் பெறப்படுகின்ற வட்டி உதவுதொகை விண்ணப்பங்கள் வட்டி உதவுதொகைக் கோரல்களுக்கு அல்லது உத்தரவாதப் பாதுகாப்புக்களைப் பெறுவதற்கு தகைமையுடையனவாகா.

11.5.3 கொடுகடன் உத்தரவாதத்திற்கான கட்டுப்பணம் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட வேண்டுமேயொழிய அவற்றை கடன்பாட்டாளர் மீது சுமத்தக்கூடாது.

11.5.4 காசோலை தேறல் செய்யப்பட்டதும் அல்லது அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைக் கொடுப்பனவுகள் பெற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து வலிதுடையதாக மாறும். சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு விண்ணப்பத் தொகுதிக்கும் இலங்கை மத்திய வங்கி தனித்தனியாக உத்தரவதப் பாதுகாப்பு குறிப்புக்களை வழங்கமாட்டாது.

11.6 கோரல்கள்

11.6.1 இவ்வுத்தரவாதத்தின் நோக்கத்திற்காக இழப்பிலுள்ளவை என வரைவிலக்கணம் செய்யப்பட்ட ஏதேனும் தொகை காணப்படுமிடத்து, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அதன் தலைமை அலுவலகத்தினூடாக இணைப்பு VI இல்

தரப்பட்டுள்ள படிவத்தில் (ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/சிஜி/1) பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு கோரலொன்றினை சமர்ப்பித்தல் வேண்டும். பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் நேர அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு அனைத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினதும் தலைமை அலுவலகத்திற்கு இப்படிவத்தினை அனுப்பிவைக்கும்.

11.6.2 இத்திட்டத்தின் கீழான கடனொன்று பின்வரும் நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் இழப்பிலுள்ளதாக கருதப்படும்.

(அ) கடனை அறவிடுவதற்கு கடன்பாட்டாளரைத் தூண்டும் விதத்தில் அவரிடம் விஜயம் செய்தல், உத்தரவாதங்கள் எவரிடமிருந்து பெறப்பட்டனவோ அந்த உத்தரவாதியின் உதவியினை தயவாகப் பெற்றுக்கொள்ளுதல், மற்றும் கடன்பாட்டாளருக்கு கேள்வி அறிவித்தலை வழங்குதல் போன்ற கிடைக்கத்தக்க அனைத்து வழிவகைகளையும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் மேற்கொண்டதன் பின்னர் அக்கடன் இழப்பிலுள்ளதாகக் கருதப்படும். இலங்கை மத்திய வங்கிக்கு கோரல்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் கடன்பாட்டாளரிடம் குறைந்தபட்சம் இரண்டு விஜயங்களையாவது மேற்கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய விஜயங்கள் தொடர்பான பதிவேடுகளை இத்திட்டம் தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பரிசோதிக்கும் போது இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களுக்கு கிடைக்கச்செய்தல் வேண்டும். பொருத்தமானவிடத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கேள்வி அறிவித்தலை கடன்பாட்டாளருக்கும் உத்தரவாதிக்கும் வழங்குதல் வேண்டும்.

(ஆ) மேலே 11.6.2(அ) இல் குறிப்பிடப்பட்ட நடவடிக்கையிலிருந்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை அடையாதவிடத்து, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அத்தகைய விடயங்களை பிரிவு 10.1 இல் குறித்துரைக்கப்பட்டவாறு மத்தியஸ் சபைக்கு பாரப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

11.6.3 இதற்கமைய, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டும் என்பதுடன், குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பொருத்தமான சட்ட நடவடிக்கைகளையும் ஆரம்பித்தல் வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் இணைப்பு VI இல் (ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/சிஜி/1) உள்ளவாறு 1 ஆவது தவணைக்கான கொடுகடன் உத்தரவாதக் கோரல் விண்ணப்பங்கள் அனுப்பப்படுகின்ற திகதியில் செலுத்தத்தவறியவர்களுக்கெதிரான வழக்குகள் மத்தியஸ் சபையிடம் பாரப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

11.6.4 கொடுகடன் உத்தரவாதங்கள் செலுத்தப்பட்டிருக்கின்ற கடன்களை எந்தவொரு சூழ்நிலையிலும், இலங்கை மத்திய வங்கியின் முன்னொப்புதல் இல்லாமல் பதிவளிப்பதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு அதிகாரமில்லை. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், இலங்கை மத்திய வங்கியிடமிருந்து கொடுகடன் உத்தரவாதக் கோரல்களைப் பெற்றதன்பின்னரும்கூட கடன்களை அறிவிடுவதற்கு நியாயமான அனைத்து முயற்சிகளையும் எடுத்தல் வேண்டும்.

11.6.5 மீள் அட்டவணையிடப்பட்ட கடன்களைப் பொறுத்தவரையில், கடன்பாட்டாளர் மீள் அட்டவணையிடப்பட்ட கடன்கள் தொடர்பான அவரின் கடப்பாடுகளை நிறைவேற்றத்தவறுமிடத்து கடன் இழக்கப்படுவதற்கு முன்னதாக 11.6.2இல் தரப்பட்டுள்ள நடவடிக்கைகளைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டுமென்பதுடன் கோரல்களைச் சமர்ப்பிக்கவும் முடியும்.

11.6.6 கோரல்படிவம் ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/சிஜி/1 பெறப்பட்டதும் இலங்கை மத்திய வங்கி, தேவையான மேற்பார்வைகளைப் புரிவதற்கு கிளை தவறியிருக்கிறது அல்லது பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் பின்னாளில் சேரவேண்டிய தொகைகளை அறவிட்டுக்கொண்டு அதனை மத்திய வங்கிக்கு அறிவிக்காமல் இருக்கின்றது என்பதனை கண்டறியுமிடத்து கோரல்களை மீளப்பெற்றுக்கொள்வதற்கான உரிமைக்கு உட்பட்டு, மத்திய வங்கி அதன் பொறுப்பில் 75 சதவீதத்தினைச் செலுத்தும்.

11.6.7 கோரலில் மீதி 25 சதவீதமும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/சிஜி/2 (இணைப்பு VII) படிவத்தினை சட்ட நடவடிக்கையிலிருந்து பெறப்பட்ட நீதிமன்ற வழக்கு இலக்கத்துடன் சேர்த்து இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கும் போது செலுத்தப்படும். பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மேலே 11.6.6இல் உள்ள முதலாவது கொடுப்பனவிலிருந்து ஆறு மாதத்திற்குள் அனைத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினதும் தலைமை அலுவலகங்களுக்கு இந்நோக்கத்திற்காக விதந்துரைக்கப்பட்ட படிவத்தினை (ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/சிஜி/2) அனுப்பிவைக்கும் என்பதுடன் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் சட்ட நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட நீதிமன்ற வழக்கு இலக்கங்களுடன் எஞ்சிய கோரல்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

11.6.8 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் 2 ஆவது தவணைக்கான கோரல் படிவம் ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/சிஜி/2 உடன் நீதிமன்ற வழக்கு இலக்கத்தினையும் சேர்த்து சமர்ப்பிக்கப்படாதவிடத்து கொடுகடன் உத்தரவாதத்தின் 1 ஆவது தவணைக்காக செலுத்தப்பட்ட தொகைகளை மீளக்கோரும் அதிகாரத்தின் மத்திய வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.

11.7 இழப்புக்களையும் கோரல்களையும் கணித்தல்

இழப்பிலுள்ள தொகையினைக் கணிக்கும் நோக்கத்திற்காக, பிரிவு 11.4.1இல் விபரிக்கப்பட்டவாறு வெளிநின்ற மூலதனம் பரிசீலனைக்கு எடுக்கப்படுகிறது.

**12. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் வகிபாகமும் பொறுப்புக்களும்**

திட்டத்திற்கு தகைமை பெறும்விதத்தில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பின்வரும் வகிபாகத்தினையும் பொறுப்புக்களையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

12.1 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் சொந்த மூலவளங்களைப் பயன்படுத்தி கடன்களை வழங்கவேண்டியதுடன் திட்டத்தின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கி நடத்தல்.

12.2 இணைப்பு I இல் தரப்பட்டுள்ள நோக்கங்களுக்காக மாத்திரம் கடன்களை வழங்குதல்.

12.3 இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் தீர்மானிக்கப்படுகின்ற வட்டி வீதத்தினை (தற்பொழுது ஆண்டிற்கு 4 சதவீதம்) கடன்பாட்டாளரிடம் விதித்தல்.

12.4 இத்திட்டத்தின் கீழ் கடன்களை வழங்குவதனை பரிசீலனையில் கொள்கையில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தகைமையுடைய கடன்பாட்டாளர்களாக உண்மையான வேளாண்மையாளர்களை அடையாளம் காண்பது அவற்றின் பொறுப்பாகும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் கிளை முகாமையாளர்கள் கள அலுவலர்களினூடாக கடன்பாட்டாளர் உண்மையான வேளாண்மையாளரா இல்லையா என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

12.5 மேலும், கடன்களை வழங்கும்பொழுது நிலத்தின் பொருத்தமான தன்மை, நீரின் கிடைப்பனவு, வேளாண்மைக்கான உள்ளார்ந்த வளம் போன்ற கடன்பாட்டாளரின் உண்மையான தேவைப்பாடுகள் போன்ற பயிர்ச்செய்கைக்குத் தேவையான மூலவளங்களின் கிடைப்பனவினையும் கடன்பாட்டாளரின் மீள்கொடுப்பனவு இயலாற்றல்களையும் உறுதிப்படுத்துவதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பொறுப்புடையனவாக இருத்தல் வேண்டும்.

12.6 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் ஏற்புடைத்தானவிடத்து, கடன்பாட்டாளரிடமிருந்து வாக்குறுதிச் சான்றிதழொன்றினையும் பயிர்க் காப்புறுதிப் பூட்கையொன்றினையும் ஒப்படைக்குமாறும் கடனை ஒழுங்காகச் செலுத்திய இரண்டு வேளாண்மையாளர்களின் உத்தரவாதங்களையும் கோரமுடியும்.

12.7 கடன்பாட்டாளரின் வேளாண்மைத் தொழிற்பாடுகளின் பல்வேறு காலகட்டங்களின் தேவைப்பாடுகளுடன் பொருந்தும் விதத்தில் கடன்களை கட்டம் கட்டமாக விடுவித்தல் வேண்டும். ஒவ்வொரு தவணைத் தொகையும் முன்னைய தவணைத் தொகைகள் அதற்குரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறதா என்பதனை சரிபார்த்த பின்னர் விடுவிக்கப்பட வேண்டும் என்பதுடன் கடன்கள் மூன்று அல்லது அதற்குக் கூடுதலான தவணைகளில் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும்.

12.8 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பின்வருவனவற்றிற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

12.8.1 கட்டுப்பணத்தினை தரப்பட்ட காலத்திற்குள் மத்திய வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும்.

12.8.2 வட்டி உதவுதொகை, கொடுகடன் உத்தரவாதம் மற்றும் கோரல்களுக்குப் பின்னயவை தொடர்பில் தேவையான தரவுகளையும் தகவல்களையும் சமர்ப்பித்தல். கோரலுக்குப் பின்னைய அறவிடல்களை தொடர்பான தலைமை அலுவலலகர்களினூடாக தொடர்பான படிவங்களில் இலங்கை மத்திய வங்கிக்கு முடிவுத்திகதிக்கு முன்னதாக அனுப்புதல் வேண்டும். அத்தகைய தகவல்களை சமர்ப்பிப்பதற்கான நேரகாலம் இணைப்பு ஐஐஐ இணைக்கப்பட்டுள்ள நேரஅட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

12.9 முடிவுத்திகதிக்குப் பின்னர் செய்யப்படும் வட்டி உதவுதொகை விண்ணப்பங்கள், கொடுகடன் உத்தரவாத விண்ணப்பங்கள் மற்றும் கட்டுப்பணக் கொடுப்பனவுகள் என்பன தன்னியக்கமாகவே நிராகரிக்கப்படும்.

12.10 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கடன்பாட்டாளர்களுக்கு வழங்கிய கடன்கள் தொடர்பில் முன் மற்றும் பின் மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். இது பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் கடப்பாடொன்றாகும்.

12.10.1 கடன்பாட்டாளர்களுக்கு கடன்களை பகிர்ந்தளிப்பதில் வழமையான கவனத்தினையும் முன்மதியையும் கவனத்திற்கொள்ள வேண்டியதுடன் கடன்கள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக நியாயமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

12.10.2 வரவேண்டிய தொகைகளை அறிவிடுவதற்கு சாத்தியமான சகல நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அறவிடல் நடவடிக்கைகளை அறுவடைக் காலத்தில் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றன.

12.11 சரியான மேற்பார்வை, கவனிப்பு கடன் வழங்கலில் முன்மதியுடைய தன்மை என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்கும் போதுமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் வேண்டுமென்றே அசட்டையாக நடந்து கொண்டமையின் விளைவாக போலியான கடன்கள் பெறப்பட்டமைக்கு அல்லது கடன்பாட்டாளர்களினால் கடன்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டமைக்கு அல்லது கடன் வழங்குவதில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் ஏதாவது தவறான நடத்தையினை இழைக்கின்றன என்பதற்கு சான்றுகள் காணப்படுமிடத்து மத்திய வங்கி அதன் பொறுப்பினை மறுக்கலாம் என்பதுடன், கோரல்கள் அனுமதிக்கப்பட்டிருக்குமிடத்து அவற்றின் மீது பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் தொகையினை நிராகரிப்பதற்கான உரிமையினையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

**13. இலங்கை மத்திய வங்கியின் பொறுப்புக்கள்**

இத்திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தும் முகவர் என்ற தகைமையின் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கி பின்வரும் தொழிற்பாடுகளை ஆற்றும்.

13.1 இலங்கை மத்திய வங்கி, அரசாங்கத்தின் சார்பில் திட்டத்தின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு செயன்முறைகளை மேற்கொள்ளும் என்பதுடன் தேவைப்படுமிடத்து அவசியமான கொள்கை நடவடிக்கைகளையும் நடைமுறைக்கிடும்.

13.2 இலங்கை மத்திய வங்கி, களப்பரீட்சிப்புக்களை மேற்கொள்வதற்கும், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு விஜயம் செய்வதற்கும் பேரேடுகளையும் ஏடுகளையும் பரீட்சிப்பதற்கும் அத்துடன் அவசியமெனக்கருதுமிடத்து வேறு மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமான உரிமையினைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

13.3 இலங்கை மத்திய வங்கி நடைமுறையாண்டிற்கான வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதக் கொடுப்பனவு என்பனவற்றிற்கான வரவுசெலவுத் திட்ட ஒதுக்குகளை எதிர்வுகூறும் என்பதுடன் ஒப்புதலுக்காக இலங்கை அரசாங்கத்திற்கு அவற்றினை அனுப்பியும் வைக்கும்.

13.4 இலங்கை மத்திய வங்கி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு செலுத்தப்படத்தக்க வட்டி உதவுதொகையினை கணித்து விதந்துரைப்பதுடன் அத்தகைய தகவல்களை கிரமமாக அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்கும்.

13.5 இலங்கை அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் நிதியத்திற்கு உட்பட்டு, வேண்டுமென்றே செலுத்தத்தவறியவர்களின் செலுத்தத்தவறிய தொகை தொடர்பில் இலங்கை மத்திய வங்கி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு கொடுகடன் உத்தரவாதத்தினை வழங்கும்.

13.6 ஒன்றிற்கு மேற்பட்ட பயிர்களுக்கு ஒரு வேளாண்மை வாடிக்கையாளருக்கு கடன்கள் வழங்கப்பட்டிருக்குமிடத்து இலங்கை மத்திய வங்கி உயர்ந்தபட்ச தகைமையுடைய கடன் தொகையினை தீர்மானிப்பதற்கான உரிமையினை தன்னகத்தே கொண்டுள்ளது.

13.7 தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில், நிதியியல் அளவில் அல்லது வேறு ஏதேனும் தகவல்களில் மாற்றங்கள் காணப்படுமிடத்து, இலங்கை மத்திய வங்கி அத்தகைய மாற்றங்களை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகத்திற்கு அறிவிக்கும்.

**14. வேண்டுமென்றில்லாமல் செலுத்தத்தவறியவர்களின் கடன்களை மீள் அட்டவணைப்படுத்தல்**

14.1 இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட மீள் அட்டவணைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின்படி, நிலுவையிலுள்ள கடன்களை மீள் அட்டவணைப்படுத்தும் வசதியானது வெள்ளம், வரட்சி, பூச்சிகளின் தாக்கம், இயற்கை அனர்த்தங்கள் போன்ற வேளாண்மையாளர்களின் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்ட காரணிகள் மற்றும் மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய காரணங்கள் என்பனவற்றின் விளைவாக பயிர் இழப்புக்களினால் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு கிடைக்கத்தக்கதாக இருக்கிறது. பாதிக்கப்பட்ட பிரதேசம் மற்றும் பயிர்களுக்கு ஏற்பட்ட அல்லது எதிர்பார்க்கும் விளைச்சல்களுக்கு ஏற்பட்ட சேதங்களின் அளவு என்பன தொடர்பான பிரதேசத்தில் ஏற்படுத்தப்பட்ட குழுவினால் மதிப்பிடப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

14.2 ஒவ்வொரு மாவட்டத்திலும் மீள் அட்டவணைப்படுத்தலைத் தீர்மானிப்பதற்கு பொறுப்பான குழு பின்வரும் அலுவலர்களை உள்ளடக்கியிருக்கும்.

அ) பிரதேச முகாமையாளர் - இலங்கை வங்கி
ஆ) பிராந்திய முகாமையாளர் - மக்கள் வங்கி
இ) துணைப் பொது முகாமையாளர் - பிரதேச சங்வர்த்தன வங்கி
ஈ) ஏனைய பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மூத்த அலுவலர் - பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பெருமளவு கடன்களை வழங்கியிருக்கும் (மேலேயுள்ள மூன்று வங்கிகள் நீங்கலாக) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து.
உ) தொடர்பான மாகாணத்தின் மாகாண முகாமையாளர் - இலங்கை மத்திய வங்கி
ஊ) காப்புறுதிச் சபையின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்

மேலும், தொடர்பான வேளாண்மை அலுவலர்களிடமிருந்து அல்லது வேறு எவரேனும் அலுவலரிடமிருந்து விதந்துரைப்புக்களை பெறுவதற்கு குழுவிற்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது. குழுவானது பயிருக்கு அல்லது எதிர்பார்க்கப்பட்ட விளைச்சலுக்கு ஏற்பட்ட சேதங்களின் அளவினை தீர்மானிப்பதுடன் இலங்கை மத்திய வங்கிக்கும் அது பற்றி அறிவிக்கும். இலங்கை மத்திய வங்கி குழுவினால் கண்டறியப்பட்ட விடயங்களை இறுதியானதாகக் கொள்ளும்.

14.3 மேலே பிரிவு 14.2இல் குறிப்பிடப்பட்ட தொடர்பான குழு, பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்கள் மீள் அட்டவணையிடல் வசதியைப் பயன்படுத்துவதற்கும் அதே போன்று வேளாண்மையாளர்கள் புதிய கடன்களைப் பெறுவதற்கும் அனுமதிக்கும் விதத்தில் அத்தகைய காரணிகளினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களினை தீர்மானிக்கின்ற பணியினை உயர்ந்தபட்சம் ஒரு மாதத்திற்கிடையில் பூரணப்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

14.4 மீள் அட்டவணைப்படுத்துகின்ற நேரத்தில் கடன்பாட்டாளர்களினால் 10 சதவீதம் கொண்ட ஆரம்ப கொடுப்பனவொன்று செய்யப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்பட்ட தேவைப்பாட்டினைத் தளர்த்துவதற்காக பயிர் இழப்புக்களின் அளவு முழுமையாக ஏற்பட்டதா அல்லது கணிசமான அளவினதா என்பதனை குழு தீர்மானித்தல் வேண்டும்.

14.5 மேலே பிரிவு 14.1 இல் குறிப்பிடப்பட்ட வேண்டுமென்றில்லாமல் செலுத்தத்தவறியவர்கள் என இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடன்பாட்டாளரொருவர் பின்வரும் சலுகைகளுக்கு தகைமையுடையவராவார்.

அ) தொடர்பான கடன்பாட்டாளரினால் கடன் தொகையில் குறைந்தபட்சம் 10 சதவீதம் அல்லது அதற்கு கூடுதலான தொகை மேலே 14.4ஆம் பிரிவிற்குட்பட்டு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களில் வைப்புச்செய்யப்படல் வேண்டும்.

ஆ) தொடர்ச்சியாக 4 இற்கு மேற்பட்ட பயிர்ச்செய்கைப் பருவகாலங்களாக அல்லது கீழே 14.6 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான முறையில் 36 மாதங்களுக்கு மேல் நிலுவையிலிருந்த கடனை மீள் அட்டவணைப்படுத்தும் வசதி.

இ) கடன்பாட்டாளரின் மீள்கொடுப்பனவு இயலாற்றலை பரிசீலனையில் கொண்டு எதிர்வரும் பருவகாலத்திற்காக புதிய பயிர்ச்செய்கைக் கடன்களைப் பெறுதல்.

ஈ) நிலுவையிலுள்ள கடன்கள் மீது தண்ட வட்டிவீதம் விதிக்கப்படமாட்டாது.

உ) மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட கடன்கள் தொடர்பில் கடன்பாட்டாளர்களிடமிருந்து தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் நிர்ணயிக்கப்பட்ட வட்டிவீதமொன்று விதிக்கப்படும்.

14.6 மேலே குறிப்பிடப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைய மீள் அட்டவணையிடப்பட்ட கடன்கள் தொடர்பில் வட்டி உதவுதொகைக்கான விண்ணப்பங்கள் படிவம் ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/ஆர்ஈஎஸ்/1 (இணைப்பு ஏஜஐஜ)இல் செய்யப்படுதல் வேண்டும். 36 மாத காலப்பகுதியை உள்ளடக்கிய அட்டவணையிடப்பட்ட கடன்களுக்காக தொடர்பான கடன்பாட்டாளரிடமிருந்து கேள்வி வாக்குறுதிச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

14.7 4 தொடர்ச்சியான பயிர்ச்செய்கைப் பருவகாலத்திற்கு அல்லது 36 மாதகாலப்பகுதிக்கு மேலான நிலுவையிலுள்ள கடன்கள் நடுத்தரகால கடனாக மீள் அட்டவணைப்படுத்தப்படும். அத்தகைய மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட வசதிக்காக செலுத்தப்படத்தக்க வட்டி உதவுதொகை வீதம் இலங்கை அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட அப்போது நிலவுகின்ற வட்டி வீதமாக இருக்கும்.

14.8 மீள் அட்டவணையிடப்பட்ட கடன்கள் தொடர்பில் தொடர்ச்சியாக பயிர்ச்செய்கை பருவகாலத்தில் செய்யப்பட்ட அறவிடல்கள் இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். 36 மாதகாலம் முடிவடைவதற்கு முன்னதாக கடன்பாட்டாளர் மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட கடன்களை மீளச் செலுத்துமிடத்து அத்தகைய அறவிடல்கள் இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

14.9 கடன் மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட பின்னர் கடன் தவணைப்பணம் கிரமமாகச் செலுத்தப்பட்டுவருமிடத்து, தொடர்பான பருவகாலத்தின் இறுதியில் வெளிநின்ற கடன் நிலுவை படிவ இலக்கம் ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/ஆர்ஈஎஸ்/1 இன் 5 ஆவது நிரலில் காட்டப்படுதல் வேண்டும்.

உதாரணம்: மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட கடன் தொகை ரூ.10,000 ஆக இருக்குமிடத்து பின்வரும் கால இறுதியில் வெளிநின்ற கடன் நிலுவை முறையே:

முதலாவது பயிர்ச்செய்கைப் பருவகாலத்தில் ரூ. 7,500 ஆகவும்

இரண்டாவது பயிர்ச்செய்கைப் பருவகாலத்தில் ரூ.5,000 ஆகவும்,

மூன்றாவது பயிர்ச்செய்கைப் பருவகாலத்தில் ரூ.2,500 ஆகவும் இருக்கும்.

14.10 அட்டவணையிடப்பட்ட கடன்களின் நன்மைகளை கடன்பாட்டாளருக்கு வழங்காமல் மீள் அட்டவணைப்படுத்தல் வசதியின் கீழ் கிடைக்கத்தக்கதாகவுள்ள நன்மைகளுக்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டாமென பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு கடுமையாக அறிவுறுத்தப்படுகின்றது.

14.11 மீள் அட்டவணையிடப்பட்ட கடன்கள் தொடர்பில் வட்டி உதவுதொகைக் கொடுப்பனவுகள் பின்வருமாறு இருக்கும்.

அ) வட்டி உதவுதொகைக் கொடுப்பனவுகள், ஒவ்வொரு பயிர்ச்செய்கைப் பருவகாலத்தின் இறுதியிலும் செலுத்தப்படவேண்டிய தொகையினைக் கழித்தபின்னர் செலுத்தப்படத்தக்கதாகவுள்ள மீதி அல்லது கடன் தவணைத் தொகையினைக் கழித்த பின்னர் எஞ்சியுள்ள மீதி இதில் எது குறைவானதோ அதற்கிணங்க செலுத்தப்படும்.

ஆ) மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட கடன்கள் தொடர்பான வட்டி உதவுதொகைக் கொடுப்பனவுகள் உயர்ந்தபட்சம் 36 மாதகாலப் பகுதிக்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும். பயிர்ச்செய்கைக் காலம் 270 நாட்களாகக் கருதப்படுகிறது.

14.12 மீள் அட்டவணையிடப்பட்ட கடன்கள் தொடர்பிலான சரியாக நிரப்பப்பட்ட விண்ணப்பங்களை குறிப்பிட்ட பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகங்களினூடாக பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, கொழும்பு 01 என்ற முகவரிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

14.13 இலங்கை மத்திய வங்கி மீள் அட்டவணையிடப்படுகின்ற கடன்களுக்கான விண்ணப்பங்களைப் பின்வரும் காலப்பகுதியில் ஏற்றுக்கொள்ளும்.

1 ஆவது காலம் - மே 1 இலிருந்து யூன் 30 வரை
2 ஆவது காலம் - நவெம்பர் 1 இலிருந்து திசெம்பர் 31 வரை

**15. கோரலுக்குப் பின்னரான தீர்ப்பனவுகள்**

15.1 இலங்கை மத்திய வங்கியினால் கோரல்கள் தீர்ப்பனவு செய்யப்பட்ட பின்னர், கடன்பாட்டாளர்களிடமிருந்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் அறவிடப்படும் அனைத்துத் தொகைகளும் 60:40 என்ற விகிதாசாரத்தில் இலங்கை மத்திய வங்கிக்கும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்குமிடையே பகிர்ந்துகொள்ளப்படுதல் வேண்டும். கோரல்களின் தீர்ப்பனவிற்குப் பின்னர் செய்யப்படும் எந்தவொரு அறவிடல்களில் 60 சதவீத்தினை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இலங்கை மத்திய வங்கிக்கு வழங்குதல் வேண்டும். இந்நோக்கத்திற்காக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இணைப்பு ஓ இலும் ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/பிசி/1 இனைப் பயன்படுத்தல் வேண்டும்.

அ) உத்தரவாதக் கோரல்களை இணைப்பு VI மற்றும் VII இல் உள்ளவாறு, ஒவ்வொரு ஆண்டும் சனவரியிலிருந்து யூன் வரையான காலப்பகுதியையும் யூலையிலிருந்து திசெம்பர் வரையான காலப்பகுதியையும் உள்ளடக்கி ஆண்டிற்கு இரு தடவை சமர்ப்பித்தல் வேண்டும். அறவிடல் பெறுகைகள் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகமூடாக முறையே 30 யூனிலும் திசெம்பர் 31 இலும் 30 கலண்டர் நாட்களுக்குள் மத்திய வங்கிக்கு கிடைக்கச்செய்தல் வேண்டும்.

15.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கடன்பாட்டாளரிடமிருந்து சேகரிக்கப்பட்ட நிதியினை மத்திய வங்கிக்கு அனுப்புவதில் தாமதம் காணப்படுமிடத்து அறவிடல் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியான யூன் 30 மற்றும் திசெம்பர் 31 இலிருந்தான 30 கலண்டர் நாளிற்கு அப்பால் தாமதம் காணப்படுமாயின் தாமத காலப்பகுதிக்காக 0.1 சதவீதம் கொண்ட தண்ட வீதம் விதிக்கப்படும். தாமதம் ஏற்படுமிடத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பணவனுப்பல்களை அனுப்பும் போது அத்தகைய தண்ட வட்டி வீதத் தொகையினையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றன.

15.3 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், இலங்கை மத்திய வங்கியிலிருந்து பெறப்பட்ட மொத்த உத்தரவாதங்கள், விதிக்கப்பட்ட வட்டி, மேற்கொள்ளப்பட்ட அறவீடுகள் என்பனவற்றைக் காட்டும் பதிவேடொன்றிறைப் பேணுதல் வேண்டுமெனவும் பரீட்சிப்பின் போது அப்பதிவேட்டினை மத்திய வங்கியின் அலுவலர்களுக்கு கிடைக்கச்செய்ய வேண்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

15.4 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகம் ஒவ்வொரு கிளையினாலும் செலுத்தப்பட வேண்டிய தொகையினைக் கூட்டி பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டிய விதத்தில் அறவிடல் படிவங்களுடன் சேர்த்து ஒவ்வோராண்டும் யூன் 30 மற்றும் திசெம்பர் 31 இலிருந்து 30 நாட்களுக்கிடையில் சமர்ப்பித்தல் வேண்டும். ஏதேனும் தாமதம் காணப்படும் பொழுது தலைமை அலுவலகம், காசோலையும் படிவங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித் திகதியிலிருந்து ஆரம்பமாகும் தாமத காலத்திற்காக இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்பட்ட வீதத்தில் தண்ட வட்டி வீதத்தினையும் சேர்த்து அனுப்பி வைத்தல் வேண்டும்.

**16. பரீட்சிப்பு**

இத்திட்டத்தின் கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்ட ஏதேனும் கடன் தொடர்பாக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் கணக்கேடுகளையும் மற்றைய பதிவுகளையும் பரீட்சிக்கின்ற உரிமைகளையும் கள விஜயங்களை மேற்கொள்கின்ற உரிமைகளையும் மத்திய வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.

**17. திருத்தியமைத்தல் மற்றும் துணை நிரப்பு ஏற்பாடுகள்**

இலங்கை அரசாங்கமும் இலங்கை மத்திய வங்கியும் திருத்தியமைத்தல்களை அல்லது புறக்கீடுகளை, அத்தகைய அறிவித்தல் திகதிக்கு முன்னதாக திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் உத்தரவாதங்களிலிருந்து எழக்கூடிய உரிமைகள் அல்லது கடப்பாடுகளைப் பாதிக்காமல் மேற்கொள்வதற்கான உரிமைகளைத் தம்மகத்தே கொண்டுள்ளன. இத்திட்டத்தில் குறிப்பிட்டுச் சொல்லப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பில் எது எப்படியிருப்பினும் இலங்கை மத்திய வங்கி இத்திட்டத்தின் நோக்கத்திற்கு அவசியமான அத்தகைய துணை நிரப்பு அல்லது மேலதிக ஏற்பாடுகளை ஆக்கலாம்.

இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 2021.04.05 இலிருந்து நடைமுறைக்கு வருதலாதல் வேண்டும்.

பீ. எல். ஜே. எஸ். பாலசூரிய
**பணிப்பாளர்/ பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**

இணைப்பு அ

## புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்

### கடன் வழங்குவதற்கான தகைமைப் பிரமாணம்

1. புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வசதிகளைப் பெறுவதற்கு பின்வரும் பயிர்களின் பயிர்ச்செய்கைகள் தகைமையுடையனவாகும்.

| பயிர் வகை | பயிர் |
|---|---|
| நெல் | நெல் |
| மிளகாய் | மிளகாய் |
| வெங்காயம் | வெங்காயம் |
| பருப்பு வகை | தட்டைப் பயறு, பயறு, உழுந்து, சோயா அவரை, சோளம், குரக்கன் |
| எண்ணெய் விதை | நிலக்கடலை, எள்ளு, சூரியகாந்தி |
| கிழங்கு வகை | உருளைக்கிழங்கு, வத்தாளைக் கிழங்கு , மரவள்ளிக் கிழங்கு, பால் கிழங்கு |
| காய்கறிகள் | கத்தரிக்காய், வெண்டிக்காய், பீட்ரூட், அவரை, கோவா, கரட், கறிமிளகாய், தக்காளி, லீக்ஸ், முள்ளங்கி, நோகோல், லூவா, பாவற்காய், புடலங்காய், பூசணிக்காய் |
| ஏனையவை | எள்ளு |
| | கரும்பு |

2. மேற்குறிப்பிட்ட பயிர்களின் நாற்றுமேடைகள் (பொருத்தமானவிடத்து)

3. வீட்டுத் தோட்டம் அமைத்தல்

இணைப்பு II

## புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்

### தகுதி பெற்ற பயிர்களுக்கான நிதியின் அளவு

| பயிர் மற்றும் குறியீடு | | நிலம் பண் படுத்தல் | நாற்று மேடை மற்றும் பயிரிடல் | வளமாக்கி | இரசாயனம் பூச்சி/ களை பங்கசுக் கொல்லி | மற்றையவை | மொத்த செலவு | ஏக்கர் ஒன்றிற்கான உயர்ந்தபட்சக் கடன் எல்லை | நில அலகுகளின் பரப்பு (ஏக்கர்) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | குறைந்தது | கூடியது |
| 1. | நெல் | | | | | | | | | |
| | நீர்ப்பாசனம் (PI) | 12,274 | 4,796 | 1,870 | 3,677 | 17,348 | 39,965 | 30,000 | 0.25 | 10 |
| | மழை நீர் (PR) | 13,241 | 6,844 | 2,336 | 5,290 | 15,066 | 42,777 | 32,000 | 0.25 | |
| 2. | மிளகாய் (C) | 24,002 | 17,959 | 17,468 | 31,832 | 25,680 | 116,941 | 88,000 | 0.125 | 2 |
| 3. | வெங்காயம் (O) | 14,089 | 74,589 | 34,727 | 15,895 | 48,010 | 187,310 | 140,000 | 0.125 | 2 |
| 4. | பருப்பு வகை | | | | | | | | | |
| | தட்டைப்பயறு (M1) | 4,147 | 4,838 | - | 8,262 | 11,215 | 28,462 | 21,000 | 0.125 | |
| | பயறு (M2) | 10,108 | 4,269 | - | 6,715 | 14,726 | 35,818 | 27,000 | 0.125 | |
| | உழுந்து (M3) | 12,509 | 2,830 | - | 1,645 | 11,317 | 28,301 | 21,000 | 0.125 | 5 |
| | சோயா அவரை (M4) | 5,612 | 3,904 | 4,963 | 6,710 | 8,113 | 29,302 | 22,000 | 0.125 | |
| | குரக்கன் (M5) | 11,367 | 5,969 | - | - | 7,537 | 24,873 | 19,000 | 0.125 | |
| | சோளம் (M) | 13,617 | 9,572 | 7,268 | 7,704 | 7,421 | 45,582 | 34,000 | 0.125 | 10 |
| 5. | எண்ணெய் விதைகள் | | | | | | | | | |
| | நிலக்கடலை (L1) | 5,085 | 16,077 | - | 8,897 | 11,799 | 41,858 | 31,000 | 0.125 | |
| | எள்ளு (L2) | 9,329 | 4,979 | | | 10,694 | 25,002 | 19,000 | 0.125 | 5 |
| | சூரியகாந்தி (L3) | 5,160 | 3,870 | 3,225 | 1,290 | 5,160 | 18,705 | 14,000 | 0.125 | |
| 6. | கிழங்கு வகை | | | | | | | | | |
| | உருளைக்கிழங்கு (T) | 31,291 | 176,812 | 70,804 | 29,640 | 27,069 | 335,616 | 252,000 | 0.125 | 2 |
| | வத்தாளை (T1) | 10,449 | 5,515 | 7,013 | 6,192 | 16,254 | 45,423 | 34,000 | 0.125 | |
| | மரவள்ளி (T2) | 3,225 | 7,869 | 8,483 | 8,514 | 14,964 | 43,055 | 32,000 | 0.125 | 5 |
| | பால் கிழங்கு (T) | 25,800 | 15,480 | 6,450 | - | 10,320 | 58,050 | 44000 | 0.125 | |
| 7. | காய்கறிகள் | | | | | | | | | |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கத்தரிக்காய் (V1) | 7,920 | 6,336 | 14,494 | 27,324 | 24,288 | 80,362 | 60,000 | 0.125 | |
| | | வெண்டிக்காய் (V2) | 5,720 | 7,260 | 9,479 | 7,480 | 11,220 | 41,159 | 31,000 | 0.125 | |
| | | பீட்ரூட் (V3) | 32,844 | 21,349 | 11,885 | 10,532 | 16,065 | 92,674 | 70,000 | 0.125 | |
| | | அவரை (V4) | 12,180 | 33,640 | 17,400 | 15,776 | 12,760 | 91,756 | 69,000 | 0.125 | |
| | | கோவா (V5) | 37,513 | 30,246 | 29,389 | 30,236 | 31,492 | 158,876 | 119,000 | 0.125 | |
| | | கரட் (V6) | 36,740 | 16,636 | 34,618 | 27,052 | 27,858 | 142,904 | 107,000 | 0.125 | |
| | | குடை மிளகாய் (V7) | 27,086 | 18,503 | 23,108 | 43,305 | 37,888 | 149,890 | 112,000 | 0.125 | |
| | | தக்காளி (V8) | 23,457 | 9,343 | 22,050 | 42,430 | 55,234 | 152,514 | 114,000 | 0.125 | 2 |
| | | லீக்ஸ் (V9) | 34,748 | 19,100 | 15,148 | 13,328 | 28,917 | 111,240 | 83,000 | 0.125 | |
| | | முள்ளங்கி (V10) | 18,088 | 9,282 | 5,614 | 5,593 | 10,829 | 49,406 | 37,000 | 0.125 | |
| | | நோகோல் (V11) | 18,088 | 14,923 | 5,614 | 6,188 | 9,996 | 54,809 | 41,000 | 0.125 | |
| | | லூவா (V12) | 6,050 | 11,220 | 8,847 | 12,100 | 33,220 | 71,437 | 54,000 | 0.125 | |
| | | பாவற்காய் (V13) | 6,380 | 14,410 | 8,472 | 10,450 | 35,970 | 75,682 | 57,000 | 0.125 | |
| | | புடலங்காய் (V14) | 6,050 | 12,760 | 9,750 | 11,770 | 34,210 | 74,540 | 56,000 | 0.125 | |
| | | பூசணிக்காய் (V15) | 19,986 | 8,313 | 7,498 | 8,686 | 6,256 | 50,739 | 38,000 | 0.125 | |
| 8. | ஏனையவை | | | | | | | | | | |
| | | இஞ்சி (W1) | 4,640 | 75,400 | 6,960 | - | 5,800 | 92,800 | 70,000 | 0.250 | 2 |
| | | கரும்பு (W2) | 6,206 | 4,137 | 13,653 | 5,792 | 37,650 | 67,438 | 50,000 | 1.00 | 5 |
| | | மஞ்சள் | 72,000 | 295,000 | 35,500 | 12,000 | 224,100 | 638,600 | 480,000 | 0.125 | 1 |
| 9. | வீட்டுத் தோட்டம் அமைத்தலுக்கான உயர்ந்தபட்சத் தொகை ரூ.40,000.00 | | | | | | | | | | |
| 10. | நாற்றுமேடைகளுக்கான உயர்ந்தபட்சத் தொகை ரூ.500,000.00 | | | | | | | | | | |

*குறிப்பு:* மொத்தக் கடன் தொகையில் உயர்ந்தபட்சம் 60 சதவீதம் வரையிலான தொகையினை நிலத்தினைப் பண்படுத்தல், விதை, பயிர், வளமாக்கி, பூஞ்சணவன், பூச்சிகளின் தாக்கம் போன்றவற்றிற்காக முதல் தவணையிலும் மீதியினை கள அலுவலரின் விதந்துரைப்பின்படி வளமாக்கியின் கொள்வனவு அல்லது அறுவடைக்கான ஒன்று அல்லது இரண்டு தவணைகளிலும் வழங்க வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு கடன்பாட்டாளர்களின் தேவைப்பாடுகளுக்கிணங்க பயிர்ச்செய்கைக் கடன்களை வழங்குவதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

கிளை முகாமையாளர்கள் ஒவ்வொரு வேளாண்மையாளரினாலும் தேவைப்படுத்தப்பட்ட தொகையினை அத்தகைய மேற்குறிப்பிட்ட செலவினை ஈடுசெய்வதற்கான அவரின் இயலாற்றலை பரிசீலனையில் கொண்டு அவரின் சொந்தக் கருத்தின்படி கடனை விடுவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பயிர்ச்செய்கை மாதிரி, நீர்ப்பாய்ச்சப்படுகின்ற நிலமா அல்லது மழை நீரை நம்பிய நிலமா, பயிர்ச்செய்கைப் பருவகாலம் - சிறுபோகம் அல்லது பெரும்போகம், கலப்புப் பயிர்ச்செய்கை மற்றும் மீள்கொடுப்பனவிற்கான வேளாண்மையாளர்களின் இயலாற்றல் போன்றவற்றிற்கிணங்க ஏக்கரொன்றிற்கான மேற்குறிப்பிட்ட உயர்ந்தபட்சக் கடன் தொகைக்குட்பட்டு, ஒவ்வொரு வேளாண்மையாளர்களுக்கும் கடன்களை வழங்குவதற்கான தீர்மானத்தினை மேற்கொள்ள கிளை முகாமையாளர்கள் தகுதியுடையவர்களாவர்.

**இணைப்பு III**

## புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்

### பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கான கால அட்டவணை

**அடுத்த ஆண்டின் வரவுசெலவுத் திட்ட ஒதுக்கிற்காக ஒவ்வொரு ஆண்டும் யூன் 15ஆம் திகதி திறைசேரியைக் கோருதல் வேண்டும்.**

| கொடுப்பனவு அட்டவணை | பருவகாலம் I<br>சனவரி 1ஆம் திகதி - யூன் 15ஆம் திகதி | | பருவகாலம் II<br>யூன் 15ஆம் திகதி - திசெம்பர் 31ஆம் திகதி | |
|---|---|---|---|---|
| **1. வட்டி உதவுதொகை 1ஆம் தவணை** | | | | |
| 1.1 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து மத்திய வங்கிக்கு வட்டி உதவுதொகை விண்ணப்பத்தினை அனுப்புவதற்கான முடிவுத் திகதி | யூன் 15 | 1 ஆண்டு | திசெம்பர் 31 | 1 ஆண்டு |
| 1.2 திறைசேரிக்கு விதந்துரைக்கப்பட்ட 1ஆவது தவணைக் கொடுப்பனவு | யூலை 31 | 1 ஆண்டு | சனவரி 31 | 2 ஆண்டு |
| **2. வட்டி உதவுதொகை 2ஆம் தவணை** | | | | |
| 2.1 பங்கேற்கும் நிறுவனங்களுக்கு *அறவிடல் அறிக்கையின்* அச்சுப்பிரதியை அனுப்பி வைத்தல் | திசெம்பர் 31 | 1 ஆண்டு | யூலை 15 | 2 ஆண்டு |
| 2.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து மத்திய வங்கிக்கு அறவிடல் அறிக்கையின் அச்சுப் பிரதியை அனுப்பி வைப்பதற்கான இறுதித் திகதி | பெப்புருவரி 28 | 2 ஆண்டு | செத்தெம்பர் 15 | 2 ஆண்டு |
| 2.3 திறைசேரிக்கு விதந்துரைக்கப்பட்ட 2ஆவது தவணைக் கொடுப்பனவு | ஏப்பிறல் 31 | 2 ஆண்டு | நவெம்பர் 15 | 2 ஆண்டு |
| **3. கொடுகடன் உத்தரவாதம் 1** | | | | |
| 3.1 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு கொடுகடன் உத்தரவாதம் 1 படிவத்தினை அனுப்பி வைத்தல் | யூலை 01 | 2 ஆண்டு | பெப்புருவரி 01 | 3 ஆண்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| 3.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து மத்திய வங்கிக்கு கொடுகடன் உத்தரவாதப் படிவம் 1 அனுப்பி வைப்பதற்கான இறுதித் திகதி | ஓகத்து 15 | 2 ஆண்டு | மாச்சு 15 | 3 ஆண்டு |
| 3.3 கொடுகடன் உத்தரவாத இழப்பீட்டின் 1ஆவது தவணைக் கொடுப்பனவு | செத்தெம்பர் 30 | 2 ஆண்டு | ஏப்பிறல் 31 | 3 ஆண்டு |
| **4. கொடுகடன் உத்தரவாதம் 2** | | | | |
| 4.1 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு கொடுகடன் உத்தரவாதம் 2 படிவத்தினை அனுப்பி வைத்தல் | பெப்புருவரி 28 | 3 ஆண்டு | நவெம்பர் 31 | 3 ஆண்டு |
| 4.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து மத்திய வங்கிக்கு கொடுகடன் உத்தரவாதப் படிவம் 2 இனை அனுப்பி வைப்பதற்கான இறுதித் திகதி | மாச்சு 31 | 3 ஆண்டு | திசெம்பர் 31 | 3 ஆண்டு |
| 4.3 கொடுகடன் உத்தரவாத இழப்பீட்டின் 2 ஆவது தவணைக் கொடுப்பனவு | ஏப்பிறல் 30 | 3 ஆண்டு | சனவரி 31 | 4 ஆண்டு |

**இணைப்பு IV**

ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/ஜஎஸ்/1

## புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்

### 1ஆம் தவணை வட்டி உதவுதொகைக்கான விண்ணப்பம்

**வங்கி:** ............................ **பருவகாலம்:** ............................

**கிளை:** ............................ **மாவட்டம்:** ................................

| தொடர் இல.: (1) | கடன்பாட்டாளரின் பெயர் (2) | கடன்பாட்டாளரின் முகவரி (3) | கடன்பாட்டாளரின் தே.அ.அட்டை இலக்கம் (4) | நிதியிடப்பட்ட பயிர் வகை (5) | பயிரிடப்பட்ட நிலப்பரப்பு (ஏக்கர்) (6) | ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தக் கடன் தொகை (7) | தொகை விடுவிக்கப்பட்ட திகதி (மா/நாள்/ஆண்டு) (8) | 0.5 சதவீதத்தில் கொடுகடன் உத்தரவாதக் கட்டணம் (ரூ.) (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | ......./..... /...... | |
| 2 | | | | | | | ......./..... /...... | |
| 3 | | | | | | | ......./..... /...... | |
| 4 | | | | | | | ......./..... /...... | |
| 5 | | | | | | | ......./..... /...... | |
| 6 | | | | | | | ......./..... /...... | |
| 7 | | | | | | | ......./..... /...... | |
| 8 | | | | | | | ......./..... /...... | |
| 9 | | | | | | | ......./..... /...... | |
| 10 | | | | | | | ......./..... /...... | |
| | | | | | - | - | | - |

மேலே காட்டப்பட்டுள்ள கடன்கள் ஆண்டிற்கு .... சதவீத வட்டியில் வங்கியின் சொந்த மூலவளங்களிலிருந்து வழங்கப்பட்டுள்ளன என்பதனையும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல.: ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/2011இன் நியதிகளுக்கிணங்க வட்டி உதவுதொகையினைப் பெற வங்கி தகுதியுடையதெனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

கிளை முகாமையாளரின் பெயர்: ............................................................ கிளை முகாமையாளரின் கையொப்பம்: ............................................................

திகதி: .................................................... கிளை முத்திரை: ............................................................

**இணைப்பு** V
ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/ஐஎஸ்/2

**புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்**

**2ஆம் தவணை வட்டி உதவுதொகைக்கான விண்ணப்பம்**

**பருவகாலம்**

**பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்**

**கிளை:** ............................ **மாவட்டம்:** ............................

| தொடர் இல.: (1) | கடன்பாட்டாளரின் பெயர் (2) | ஒப்புதலளிக்கப்பட்ட தொகை (ரூ.) (3) | தொகை விடுவிக்கப்பட்ட (மா/திகதி/ஆண்டு) (4) | விடுவிக்கப்பட்ட மொத்தக் கடன் தொகை (ரூ.) (5) | அறவிடப்பட்ட தொகை (ரூ.) (6) | அறவிடப்பட்ட நாள் (மா/திகதி/ஆண்டு) (7) |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | ......./..... /...... | | | ......./..... /...... |
| 2 | | | ......./..... /...... | | | ......./..... /...... |
| 3 | | | ......./..... /...... | | | ......./..... /...... |
| 4 | | | ......./..... /...... | | | ......./..... /...... |
| 5 | | | ......./..... /...... | | | ......./..... /...... |
| 6 | | | ......./..... /...... | | | ......./..... /...... |
| 7 | | | ......./..... /...... | | | ......./..... /...... |
| 8 | | | ......./..... /...... | | | ......./..... /...... |
| 9 | | | ......./..... /...... | | | ......./..... /...... |
| 10 | | | ......./..... /...... | | | ......./..... /...... |
| | மொத்தம் | - | | - | - | |

புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் தொடர்பாக விடுவிக்கப்பட்ட தொகை மற்றும் அறவிடப்பட்ட தொகைகளைக் காட்டுகின்ற நிரல் (5) மற்றும் நிரல் (6) இல் உள்ள தொகைகள் சரியானவை என்பதனை நான் உறுதிப்படுத்துகின்றேன். விடுவிக்கப்பட்ட மற்றும் அறவிடப்பட்ட திகதிகளைக் காட்டுகின்ற நிரல் (4) மற்றும் நிரல் (7) உம் சரியானவையே.

கிளை முகாமையாளரின் பெயர்: ............................................ கையொப்பம்: ......................................................

திகதி: .......................................................... கிளை முத்திரை: .......................................................

இணைப்பு VI
ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/ஆர்ஈஎஸ்/1

## புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்
## மீள் அட்டவணையிடப்பட்ட கடன்களுக்கான கூற்று - வட்டி உதவுதொகைக்கான விண்ணப்பம்
## பருவகாலம்
## பங்கேற்கும் நிதியியல் நிறுவனம்

கிளை: ............................ மாவட்டம்: ............................

| தொடர் இல.: (1) | கடன்பாட்டாளரின் பெயர் (2) | வழங்கப்பட்ட கடன் தொகை (ரூ.) (3) | மீள் அட்டவணையிடப்பட்ட கடன் தொகை (ரூ.) (4) | மீள் அட்டவணையிடப்பட்ட திகதி (மா/திகதி/ஆண்டு) (5) | முதலாவது (1ஆவது) பருவகாலம் (ரூ.)* (6) | இரண்டாவது (2ஆவது) பருவகாலம் (ரூ.)* (7) | மூன்றாவது (3ஆவது) பருவகாலம் (ரூ.)* (8) | நான்காவது (4ஆவது) பருவகாலம் (ரூ.)* (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ......./..... /...... | | | | |
| | | | | ......./..... /...... | | | | |
| | | | | ......./..... /...... | | | | |
| | | | | ......./..... /...... | | | | |
| | | | | ......./..... /...... | | | | |
| | | | | ......./..... /...... | | | | |
| | | | | ......./..... /...... | | | | |
| | | | | ......./..... /...... | | | | |
| | | | | ......./..... /...... | | | | |
| | | | | ......./..... /...... | | | | |
| மொத்தம் | | | | | | | | |

*தொடர்பான பயிர்ச்செய்கைப் பருவகாலத்தினையும் ஒவ்வொரு பருவ காலத்திற்குமான மீள் அட்டவணையிடப்பட்ட கடன் நிலுவைகளையும் தயவு செய்து குறிப்பிடவும்.

உ-ம்: 1ஆவது பருவகாலம் - ரூ.10,000 2ஆவது பருவகாலம் - ரூ.7,500
3ஆவது பருவகாலம் - ரூ.5,000 4ஆவது பருவகாலம் - ரூ.2,500

கிளை முகாமையாளரின் பெயர்: ............................................................ கையொப்பம்: ............................................................

திகதி: ............................................................ கிளை முத்திரை: ............................................................

இணைப்பு VII

ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/ஆர்ஈஎஸ்/2

## புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்

## மீள் அட்டவணையிடப்பட்ட கடன்களுக்கான அறிவிடல் தொடர்பான கூற்று

பருவகாலம்

பங்கேற்கும் நிதியியல் நிறுவனம்

கிளை: ............................ மாவட்டம்: ............................

| தொடர் இல.: (1) | கடன்பாட்டாளரின் பெயர் (2) | வழங்கப்பட்ட கடன் தொகை (ரூ.) (3) | மீள் அட்டவணையிடப் பட்ட கடன் தொகை (ரூ.) (4) | மீள் அட்டவணையிடப் பட்ட திகதி (மா/திகதி/ஆண்டு) (5) | கிரமமாக மீளச் செலுத்தப்படுகின்ற தெனின், வெளிநிற்கும் மூலதன நிலுவை (ரூ.) (6) | 1ஆம்/ 2ஆம்/ 3ஆம் பருவகாலங்களில் மேற்கொள்ளப்பட்ட அறவிடல்கள்* (7) | பருவகால முடிவில் உள்ளவாறு வெளிநின்ற நிலுவை (ரூ) (8) | அறவிடப்பட்ட திகதி (மா/திகதி/ஆண்டு) (9) | வட்டி உதவுதொகைக்கு தகுதியுடைய தொகை (ரூ.) (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ....../..... /...... | | | | | |
| | | | | ....../..... /...... | | | | | |
| | | | | ....../..... /...... | | | | | |
| | | | | ....../..... /...... | | | | | |
| | | | | ....../..... /...... | | | | | |
| | | | | ....../..... /...... | | | | | |
| | மொத்தம் | | | | | | | | |

*பொருத்தமற்றவற்றை வெட்டி விடவும்

நிரல் 06: கடன் மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட பின்னர் கடன் தவணைப் பணம் கிரமமாக செலுத்தப்பட்டிருப்பின் தொடர்பான பயிர்செய்கை பருவகாலத்தின் இறுதியிலுள்ளவாறான வெளிநின்ற நிலுவை நிரல் 06இல் காட்டப்படல் வேண்டும்.

நிரல் 07: கடன் மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட பின்னர், பயிர்ச்செய்கை பருவகாலத்தினை உடனடுத்த காலப்பகுதியில் அதாவது, முதலாவது, இரண்டாவது அல்லது மூன்றாவது பருவகாலங்களில் செலுத்தப்பட்ட தவணைக் கடன்கள் நிரல் 07இல் காட்டப்படல் வேண்டும்.

நிரல் 08: மீள் அட்டவணையிடப்பட்ட கடன் தொகையிலிருந்து நிரல் 07இல் குறிப்பிடப்பட்ட தொடர்பான தவணைப் பணத்தினைக் கழித்த பின்னர் கடன் பேரேட்டில் எஞ்சியுள்ள வெளிநிற்கும் நிலுவை நிரல் 08இல் காட்டப்படல் வேண்டும்.

நிரல் 09: வட்டி உதவுதொகைக் கொடுப்பனவிற்கு தகுதியுடைய தொகை: கடன் தவணைப் பணத்தினை கிரமமாக மீளச் செலுத்திய பின்னர் எஞ்சியுள்ள வெளிநிற்கும் நிலுவைகள் (நிரல் 05) அல்லது கடன் பேரேட்டின்படி வெளிநிற்கும் உண்மையான நிலுவை இதில் எது குறைவானதோ அது வட்டி உதவுதொகைக்கு தகைமை பெறும். இத்தொகை நிரல் 10இல் காட்டப்படல் வேண்டும்.

கிளை முகாமையாளரின் பெயர்: .................................................... கையொப்பம்: .............................................................
.........

திகதி: .......................................................... கிளை முத்திரை: .............................................................

இணைப்பு VIII

ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/சிஜி/1

**புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்**

**கொடுகடன் உத்தரவாதம் 1ஆம் தவணைக்கான கோரல் விண்ணப்பம்**

**பருவகாலம்**

**பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்**

**கிளை: ............................** **மாவட்டம்: .............................**

| தொடர் இல.: (1) | கடன்பாட்டாளரின் பெயர் (2) | வழங்கப்பட்ட தொகை (ரூ.) (3) | அறவிடப்பட்ட தொகை (ரூ.) (4) | அறிக்கையிடும் திகதியன்று வெளிநிற்கும் தொகை (வெளிநிற்கும் மூலதனத்திலிருந்து) (ரூ.) (5) | மத்தியஸ்த சபையின் பெயர் (6) | எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கை (மத்தியஸ்த சபை வழக்கு இல.) (7) | சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்ட திகதி (மா/திகதி/ஆண்டு) (8) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| மொத்தம் | | - | - | - | | | |

1ஆவது தவணைக் கொடுகடன் உத்தரவாதக் கோரலில் வட்டி மற்றும் ஏனைய கட்டணங்கள் உள்ளடக்கப்படக்கூடாது.

முகாமையாளரின் பெயர்: ............................................ கையொப்பம்: ......................................................

திகதி: .......................................................... கிளை முத்திரை: .......................................................

இணைப்பு IX

ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/சிஜி/2

## புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்

## கொடுகடன் உத்தரவாத 2ஆம் தவணைக்கான கோரல் விண்ணப்பம்

பருவகாலம்

பங்கேற்கும் நிதியியல் நிறுவனம்

கிளை: .............................    மாவட்டம்: .............................

| தொடர் இல.: (1) | கடன்பாட்டாளரின் பெயர் (2) | வழங்கப்பட்ட தொகை (ரூ.) (3) | இழப்பிலுள்ள தொகை (ரூ.) (4) | முதலாவது கோரல் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரான அறவிடல்கள் (ரூ.) (5) | வேண்டுமென்றே செலுத்தத் தவறியவர்களுக்கெதிராக எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கை | | | தேறிய இழப்பு (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | வழக்கு தொடுக்கப்பட்ட திகதி (மா/திகதி/ஆண்டு) (6) | நீதிமன்றத்தின் பெயர் (7) | நடுவர் வழக்கு இல. (8) | |
| | | | | | ......./..... /...... | | | |
| | | | | | ......./..... /...... | | | |
| | | | | | ......./..... /...... | | | |
| | | | | | ......./..... /...... | | | |
| | | | | | ......./..... /...... | | | |
| | | | | | ......./..... /...... | | | |
| | | | | | ......./..... /...... | | | |
| | | | | | ......./..... /...... | | | |
| | | | | | ......./..... /...... | | | |
| | | | | | ......./..... /...... | | | |
| மொத்தம் | | | | | ......./..... /...... | | | |

குறிப்பு:

நிரல் (5): 1ஆவது கோரல் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரான மீளப்பெறல்கள்

நிரல் (9): நிரல் (3) அல்லது நிரல் (4), நிரல் (5) இனைக் கழித்த (-) பின் எது குறைவானதோ அது.

முகாமையாளரின் பெயர்: .............................................................    கையொப்பம்: .............................................................

திகதி: ..........................................................    கிளை முத்திரை: .............................................................

இணைப்பு X

ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/பிசி/1

புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்

கடன் அறவிடல்கள் பற்றிய விபரங்கள்

பருவகாலம்

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்

கிளை: ........................... மாவட்டம்: ............................

| பருவகாலம் (1) | தொடர் இல.: (2) | கடன்பாட்டாளரின் பெயர் (3) | வழங்கப்பட்ட கடன் தொகை (ரூ.) (4) | கொடுகடன் உத்தரவாதமாக தீர்ப்பனவு செய்யப்பட்ட தொகை (ரூ) (5) | கடன்பாட்டாளரிடமிருந்து அறவிடப்பட்ட தொகை (ரூ,) (6) | மத்தய வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய தொகை (ரூ.) (7) |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| மொத்தம் | | | - | - | - | - |

முகாமையாளரின் பெயர்: ............................................ கையொப்பம்: .............................................

திகதி: .......................................................... கிளை முத்திரை: ...........................................

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல: ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/2011/2021/02**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல.30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு - 01
தொலைபேசி: 2477452, 2398748
தொலைநகல்: 2477724
2021 ஏப்பிறல் 20

சேரல்: அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்

கனம் ஐயா/ அம்மணி

**புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தம்**

2021 ஏப்பிறல் 05ஆம் நாளன்றும் 2020 ஏப்பிறல் 08ஆம் நாளன்றும் 2016 ஓகத்து 22ஆம் நாளன்றும் 2015 யூலை 06ஆம் நாளன்றும் 2014 யூன் 06ஆம் நாளன்றும் 2013 சனவரி 10ஆம் நாளன்றும் திருத்தியமைக்கப்பட்ட 2011ஆம் ஆண்டின் செத்தெம்பர் 23ஆம் திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/2011 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் பின்வருமாறு திருத்தப்படுவது பற்றி புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அதற்கிணங்க, பின்வரும் திருத்தங்கள் 2021 ஏப்பிறல் 16ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதலாதல் வேண்டும்.

(I) இணைப்பு I (ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/2011/2021/01) - அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் நிதியிடுவதற்கு இணைப்பு I இலுள்ள "ஏனைய" வகையின் கீழ் (கடன்களை வழங்குவதற்கான தகைமைப் பிரமாணம்) மஞ்சள் தகைமையுடைய பயிரொன்றாக உள்ளடக்கப்படுகிறது.

(II) இணைப்பு II (ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/2011/2021/01) - மஞ்சள் தொடர்பான விபரங்களும் இணைப்பு II இன் கீழ் (தகைமையுடைய பயிர்களுக்கான நிதியின் அளவு) பின்வருமாறு உள்ளடக்கப்படுகிறது.

| பயிர் | நிலத்தைப் பண்படுத்துதல் (ரூ.) | விதை நாற்றுமேடை மற்றும் பயிர் நடுதல் (ரூ.) | வளமாக்கி (ரூ.) | இரசாயனம் (ரூ.) | ஏனையவை (ரூ.) | மொத்தச் செலவு (ரூ.) | ஏக்கரொன்றிற்கு உயர்ந்தபட்ச கடன் வரையறை (ரூ.) | நில அலகின் பரப்பு (ஏக்கர்) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | குறைந்தபட்சம் | உயர்ந்தபட்சம் |
| மஞ்சள் | 72,000 | 295,000 | 35,500 | 12,000 | 224,100 | 638,600 | 480,000 | 0.125 | 1 |

(III) 5.6ஆம் பிரிவு (ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/2011/2021/01) - கடனின் உயர்ந்தபட்ச மீள்கொடுப்பனவுக் காலம் (கரும்பு மற்றும் மஞ்சள் நீங்கலாக) 270 நாட்களாகும். கரும்பு மற்றும் மஞ்சளுக்கான உயர்ந்தபட்ச மீள்கொடுப்பனவுக் காலம் 365 நாட்களாகும். சலுகைக் காலமோ அல்லது ஒரே தடவையிலான கொடுப்பனவோ இல்லை.

(IV)7.1ஆம் பிரிவு (ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/2011/2021/01) -

கரும்பு மற்றும் மஞ்சள்

7.1.3(அ) முற்பணக் கொடுப்பனவுகள், ஒப்புதலளிக்கப்பட்ட தொகையின் மீது மேலேயுள்ள பிரிவு 5.5ஆம் பிரிவின்படி 180 நாட்கள் கொண்ட காலப்பகுதிக்காகக் கணிக்கப்படும். இந்நோக்கத்திற்காக, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் சரியான முறையில் நிரப்பப்பட்ட இணைப்பு IV ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/ஜஎஸ்/1 இனை இணைப்பு III(அ) இல் தெரிவிக்கப்பட்டுள்ள குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) குறிப்பிட்ட தொடர்பான கடன் 365 நாட்களைக் கொண்ட காலப்பகுதிக்குப் பின்னரும் அறவிடப்படாதிருக்குமாயின், விடயத்தினைப் பொறுத்து, மீதிக் காலம் உயர்ந்தபட்சம் 185 நாட்கள் என்ற நிபந்தனைக்குட்பட்டு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் அறவிடல் திகதிகள் அறிவிக்கப்பட்ட பின்னர் இறுதிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். இந்நோக்கத்திற்காக, பயிர்ச்செய்கைக் கடனாக வழங்கப்பட்ட தொகை, திகதி மற்றும் அறவிடப்பட்ட தொகை பற்றி அறிக்கையிடுவதற்குப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களை இயலுமைப்படுத்துவதற்காக படிவம் ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/ஜஎஸ்/2 (இணைப்பு V இல் தரப்பட்டுள்ளது) அவற்றிற்கு அனுப்பி வைக்கப்படும்.

7.1.4 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கரும்பு மற்றும் மஞ்சள் பயிர்களுக்காகச் சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட படிவங்களைத் தனித்தனியாக (வட்டி உதவுதொகை/ கொடுகடன் உத்தரவாதம் மற்றும் மீள்அட்டவணைப்படுத்தல்) இணைப்பு IIIஅ இல் குறித்துரைக்கப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் சமர்ப்பித்தல் வேண்டும்.

புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் முன்னர் வெளியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்டுள்ள மற்றைய அனைத்து நியதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றியிருக்கும்.

சுற்றறிக்கையின் இத்திருத்தங்களினது உள்ளடக்கத்தினைத் தயவுசெய்து தொடர்பான அலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டு வரவும்.

பீ. எல். ஜே. எஸ். பாலசூரிய
**பணிப்பாளர்/ பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல: ஆர்டிடி/டிஏடி-பிபி/2021/01**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 590
இல.30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு - 01
2021.05.04

சேரல்: பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்

**உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னோடிச் செயற்றிட்டத்தின் நடைமுறைப்படுத்தலுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

தெரிந்தெடுக்கப்பட்ட வேளாண்மை பெறுமதிச் சங்கிலிகளின் நிதியியல் தேவைப்பாடுகளுக்கு வசதியளிப்பதற்கு பங்கேற்கும் நிதியியல்

நிறுவனங்களை இயலுமைப்படுத்துகின்ற உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி முன்னோடிச் செயற்றிட்டம் என அழைக்கப்படும் மீள்நிதியிடல் திட்டமொன்றினை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துகின்ற நோக்குடன் தெரிவுசெய்யப்பட்ட பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளரினால் 2021.05.04ஆம் திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/டிஏடி-பிபி/2021/01 கொண்ட இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

1. அறிமுகம்

1.1 வேளாண்மைத் துறையின் அனைத்தையுமுள்ளடக்கிய அபிவிருத்தியின் தேசிய முக்கியத்துவம் மற்றும் சிறப்பாக கொவிட்-19 தொற்றின் காரணமாக வேளாண்மை தொடர்பில் மக்கள் மனங்களில் தோன்றியுள்ள சாதகமான மாற்றங்களினால் உருவாக்கப்பட்டுள்ள தூண்டுதலளிக்கும் சூழல் என்பனவற்றின் பின்னணியில் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், வெற்றிகரமான வேளாண்மை பெறுமதிச் சங்கிலியை நிறுவுவதனூடாக சிறுஉடமையாளர் ஆதிக்கம் செலுத்தும் உள்நாட்டு வேளாண்மைக்கு உதவுவதற்காக அனைத்தையுமுள்ளடக்கிய முன்மொழிவுவொன்றினை உருவாக்கியிருக்கிறது. முன்மொழிவானது 2020இன் தொடக்கத்தில் இலங்கை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

1.2 இலங்கையின் வேளாண்மைத் துறைக்கு சாத்தியமானளவிற்கு விரைவாக இப்பொறிமுறையினை அறிமுகப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தினைப் பரிசீலனையில் கொண்டு, இலங்கை மத்திய வங்கி நிதி அமைச்சு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பனவற்றின் ஆலோசனையுடன், உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கான சாத்தியமான ஆய்வுகள் நிறைவடையும் வரை முன்னோடி நிகழ்ச்சித்திட்டமொன்றாக உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தினை நடைமுறைப்படுத்த தீர்மானித்தது. உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தியின் முன்னோடிக் கட்டமாக காய்கறிகள், பாற்பண்ணை உற்பத்திகள், வாசனைத்திரவியங்கள் துறையின் அபிவிருத்தி பரிசீலனையில் கொள்ளப்படும்.

1.3 களமட்டத்தில், வெற்றிகரமான தொழிற்பாடுகளுக்காக பொருத்தமான நடைமுறைப்படுத்தல் முறையியலொன்றினை அபிவிருத்தி செய்வதற்கும் உள்நாட்டு வேளாண்மைத் துறையில் அடையாளம் காணப்பட்ட தெரிவுசெய்யப்பட்ட வேளாண்மை பெறுமதிச் சங்கிலியினூடாக சாத்தியமான நடைமுறைப் பிரச்சனையை அடையாளம் காண்பதற்கும் உள்நாட்டில் வேளாண்மை அபிவிருத்தி முன்னோடிச் செயற்றிட்டத்தினைப் பயன்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

1.4 இதற்கமைய, பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் உருவாக்கப்பட்ட முன்மொழிவின் மூலம் அடையாளம் காணப்பட்டவாறு, உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி - முன்னோடிச் செயற்றிட்டம் நிறைவடைந்ததன் பின்னர் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் தேசிய மட்டத்தில் தானியங்கள், சிறுஉணவு வகைகள், காய்கறிகள், பழங்கள், ஏற்றுமதி வேளாண்மைப் பயிர்கள், பாற்பண்ணை உற்பத்திகளை உள்ளடக்கிய துணைத் துறை உட்பட வலுவானதும் நன்கு இணைக்கப்பட்டதும் தொழிற்படுத்தக்கூடியதுமான பத்து (10) வேளாண்மை பெறுமதிச் சங்கிலிகளை உள்ளடக்குகின்ற உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

2. திட்டத்தின் குறிக்கோள்கள்

2.1 உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி - முன்னோடிச் செயற்றிட்டத்தின் முக்கிய குறிக்கோள் யாதெனில் உற்பத்தியையும் உற்பத்தியின் தரத்தையும் உயர்த்துகின்ற வேளையில், உள்நாட்டு வேளாண்மைத் துறையிலுள்ள சிறுஉடமை உற்பத்தியாளர்களின் சமூக, பொருளாதார நிலைமைகளையும் உயர்த்துகின்ற விதத்தில் நிதி மற்றும் சந்தை வாய்ப்புக்களை அவர்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் அவற்றை ஊக்குவிப்பதும் வேளாண்மை ஏற்றுமதிகளை ஊக்குவிக்கின்ற அதேவேளையில் முக்கிய உணவ விடயங்கள் சந்தையில் கிடைப்பதனை உறுதிப்படுத்துவதுமேயாகும்.

2.2 மேலே குறிப்பிடப்பட்ட முக்கிய குறிக்கோளுக்குப் புறம்பாக, உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி - முன்னோடிச் செயற்றிட்டம் பின்வரும் துணைக் குறிக்கோள்களிலும் கவனம் செலுத்துகிறது:

(i) தொடர்பான அரசாங்க, தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் வேளாண்மைச் சமூகம் என்பனவற்றின் இயலாற்றல்களை ஒருங்கிணைப்பதன் மூலம் உள்நாட்டு வேளாண்மைத் துறையில் மூன்று வலுவானதும் நன்கு ஒன்றுடனொன்று இணைக்கப்பட்டதும் தொழிற்பாடு மிகுந்ததுமான வேளாண்மை பெறுமதிச் சங்கிலிகளை நிறுவுதல்.

(ii) உள்நாட்டுத் துறையில் ஏற்றுமதிப் பயிர்கள் (வாசனைத் திரவியங்கள்) மற்றும் பாற்பண்ணை உற்பத்திகளில் ஈடுபட்டிருக்கும் வேளாண்மைச் சமூகத்திற்கு நீடித்துநிலைத்திருக்கக்கூடிய வருமான உருவாக்க வழிகள் கிடைப்பதனை உறுதிப்படுத்துதற்காக நிதி ஏற்பாடுகள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட பெறுமதிச் சங்கிலிகளிலுள்ள மற்றைய ஆர்வலர்களுடன் சிறுஉடமை வேளாண்மையாளர்களை இணைத்துவிடுதல்.

(iii) புதிய தொழில்நுட்பங்களையும் சிறந்த நடைமுறைகளையும் பின்பற்றுவதற்கான நிதி மற்றும் தொழில்நுட்ப அறிவினை வழங்குவதன் மூலம் பண்ணை மட்டத்தில் உற்பத்தியையும் தேறிய வருமானத்தினையும் அதிகரித்தல்.

(iv) தேவையான சந்தை நியமங்களைப் பூர்த்தி செய்யும் விதத்தில் உற்பத்தித் தரங்களை மேம்படுத்துவதற்கு வேளாண்மையாளர்களுக்கு வசதியளிக்கின்ற வேளையில் சந்தை வசதிகளை உறுதிப்படுத்தல்.

(v) பெறுமதிச் சங்கிலியிலுள்ள அனைத்து துறைகளுக்குமான உயர்ந்த வருமானத்தினை உறுதிப்படுத்துவதற்கும் பெறுமதிகூட்டப்பட்ட ஏற்றுமதி சார்ந்த வேளாண்மை உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கும் பெறுமதிகூட்டப்பட்ட

உற்பத்திகளை ஊக்குவித்தல்.

(vi) வேளாண்மை சமூகத்தின் நிதியியல் வசதிக்குட்படுத்தல் மட்டத்தினை உயர்த்துகின்ற வேளையில் அவர்களிடையேயான நிதியியல் அறிவினையும் நிதியினைப் பெற்றுக் கொள்ளக்கூடிய தன்மையினையும் அதிகரித்தல்.

**3. திட்டத்தின் தொழிற்பாடு மற்றும் நிதி மூலம்**

உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி - முன்னோடிச் செயற்றிட்டம் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தீவு முழுவதும் தொழிற்படுத்தப்படவுள்ளதுடன் இலங்கை மத்திய வங்கியினால் நிதியிடப்படும்.

**4. உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி - முன்னோடிச் செயற்றிட்டத்தில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்**

உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தியின் முன்னோடிச் செயற்றிட்டத்திற்காக பின்வரும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பங்கேற்கவுள்ளன:

இலங்கை வங்கி, கார்கில்ஸ் வங்கி லிமிடெட், மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, சனச அபிவிருத்தி வங்கி லிமிடெட்.

**5. திட்டம் நடைமுறைக்குவரும் நாள்**

இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல: ஆர்டிடி/டிஏடி/பிபி/2021/1, 2021.05.04 இலிருந்து நடைமுறைக்கு வரும்.

**6. வரைவிலக்கணங்கள்**

6.1 **"வேளாண்மை பெறுமதிச் சங்கிலி"** என்பது காய்கறிகள், பாற்பண்ணை உற்பத்திகள் மற்றும் வாசனைத்திரவியங்களை உள்ளடக்கிய பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினாலும் இலங்கை மத்திய வங்கியினாலும் உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி - முன்னோடிச் செயற்றிட்டத்தின் கீழ் நிதியியல் மற்றும் நிதியியல் அல்லாத உதவிகளுக்காக தெரிவுசெய்யப்பட்ட ஏதேனும் வேளாண்மை பெறுமதிச் சங்கிலி எனப் பொருள்படும்.

6.2 **"பெறுமதிச் சங்கிலி தொழிற்பாட்டாளர்"** என்பது உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி முன்னோடிச் செயற்றிட்டத்தின் கீழ்வரும் வேளாண்மைப் பெறுமதிச் சங்கிலியில் தீவிரமாக ஈடுபட்டுள்ள எவரேனும் பங்கேற்பாளர் எனப் பொருள்படும்.

6.3 **"பெறுமதிச் சங்கிலி பங்கேற்புச் சான்றிதழ்"** என்பது தொடர்பான வேளாண்மை பெறுமதிச் சங்கிலியில் பங்கேற்றமையினை நிரூபிக்கும் விதத்தில் தலைமை தொழிற்பாட்டாளரினால் பெறுமதிச் சங்கிலி தொழிற்பாட்டாளருக்கு வழங்கப்பட்ட உறுதிப்படுத்தல் ஆவணம் எனப் பொருள்படும்.

6.4 **"தலைமை தொழிற்பாட்டாளர்"** என்பது இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அமைப்பு எனப் பொருள்படும். இது அடையாளம் காணப்பட்ட வேளாண்மை பெறுமதிச் சங்கிலியினை ஒழுங்குமுறைப்படுத்துவதில் முன்னணி வகிக்கின்றதுடன் பெறுமதிச் சங்கிலிப் பங்கேற்பினையும் உறுதிப்படுத்துகிறது. தலைமை தொழிற்பாட்டாளர் சந்தைப்படுத்தல் அமைப்பு, பதனிடல் கம்பனி அல்லது தலைமை தொழிற்பாட்டாளர் வகிபாகத்தினை ஆற்றுவதற்கு இணங்கிய வேறு ஏதேனும் பெறுமதிச் சங்கிலி பங்கேற்பு நிறுவனமொன்றாக இருத்தல் வேண்டும்.

6.5 **"பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்"** என்பது திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் வர்த்தக வங்கி அல்லது சிறப்பியல்பு வாய்ந்த வங்கியாகவும் விளங்குகின்றவையும் உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி - முன்னோடிச் செயற்றிட்டத்தின் நடைமுறைப்படுத்தலுக்காக இலங்கை மத்திய வங்கியுடன் ஒப்பந்தமொன்றினைச் செய்த பின்னர் உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி முன்னோடிச் செயற்றிட்டத்தில் பங்கேற்கின்ற நிறுவனங்கள் எனப் பொருள்படும்.

6.6 **"உடன்படிக்கை"** என்பது உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி - முன்னோடிச் செயற்றிட்டத்தின் நடைமுறைப்படுத்தலுக்காக இலங்கை மத்திய வங்கிக்கும் பங்கேற்கும் ஒவ்வொரு நிதியியல் நிறுவனங்களுக்குமிடையேயும் அவற்றினாலும் மேற்கொள்ளப்படுகின்ற உடன்படிக்கை எனப் பொருள்படும்.

6.7 **"தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்"** என்பது இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு விடுக்கப்படுகின்ற உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி - முன்னோடிச் செயற்றிட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களும் அதன் பின்னர் செய்யப்படக்கூடிய ஏதேனும் திருத்தங்களும் எனப் பொருள்படும்.

6.8 **"தகைமையுடைய கடன்பாட்டாளர்கள்"** என்பது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்டவாறு உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி - முன்னோடிச் செயற்றிட்டத்தின் கீழ் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிலிருந்தும் துணைக் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமைப் பிரமாணத்தினைப் பூர்த்திசெய்த ஆளொருவர் எனப் பொருள்படும்.

6.9 **"துணைக் கடன்பாட்டாளர்"** என்பது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்டவாறு உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி - முன்னோடிச் செயற்றிட்டத்தின் கீழ் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து துணைக் கடன்களைப் பெறுவதற்கு தகைமையுடைய கடன்பாட்டாளர் எனப் பொருள்படும்.

6.10 **"துணைக்கடன் உடன்படிக்கை"** என்பது தகைமையுடைய துணைக் கடன்பாட்டாளர்களுக்கும் பங்கேற்கும் நிதியியல்

நிறுவனங்களுக்குமிடையில் நேரடியாக கையெழுத்தான உடன்படிக்கை எனப் பொருள்படும்.

6.11 **“துணைக் கடன்கள்”** என்பது தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் நேரடியாக வழங்கப்படும் கடன்கள் எனப் பொருள்படும்.

6.12 “துணைச் செயற்றிட்டம்” என்பது உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி - முன்னோடிச் செயற்றிட்டத்தின் கீழ் துணைக் கடன்பாட்டாளர் துணைக் கடன்களைப் பெறுவதற்கான செயற்றிட்டம் எனப் பொருள்படும்.

6.13 **“மீள்நிதியிடல் கடன்”** என்பது பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும் கடன்களாகும்.

6.14 **“பண்ணையல்லா நடவடிக்கைகள்”** என்பது சிறியளவு தயாரிப்பு, போக்குவரத்து, சமூகப் பணிகள் போன்றன உட்பட அனைத்து வேளாண்மையல்லா நடவடிக்கைகள் எனப் பொருள்படும்.

**7. உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி - முன்னோடிச் செயற்றிட்டத்தின் தொழிற்பாட்டுச் செய்முறை**

உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி - முன்னோடிச் செயற்றிட்டத்தின் தொழிற்பாட்டுச் செய்முறை குறிப்பிட்ட வேளாண்மை பெறுமதிச் சங்கிலிகளுடன் உள்ளக ரீதியில் இணைக்கப்பட்டிருக்கிறது. இது பெறுமதிச் சங்கிலியிலுள்ள அவற்றின் மட்டத்தினைக் கருத்திற் கொள்ளாது, இவ்வேளாண்மை பெறுமதிச் சங்கிலிகளின் பெறுமதிச் சங்கிலி தொழிற்பாட்டாளர்களின் நிதி மற்றும் நிதியல்லாத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. முன்மொழியப்பட்டுள்ள வேளாண்மை பெறுமதிச் சங்கிலிகள் இணைப்பு I இல் தரப்பட்டுள்ளன.

உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி - முன்னோடிச் செயற்றிட்டத்தின் தொழிற்பாட்டுச் செய்முறை கீழே தரப்படுகிறது.

| | |
|---|---|
| படிமுறை 01 | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் உதவியுடன் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் முன்னோடிக் கட்டத்திற்காகப் பொருத்தமான தலைமை தொழிற்பாட்டாளர்களைத் தெரிவுசெய்யும். |
| படிமுறை 02 | பெறுமதிச் சங்கிலி தொழிற்பாட்டாளர்களுக்காக உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி - முன்னோடிச் செயற்றிட்டம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினாலும் பிரதேச அலுவலகங்களினாலும் நடத்தப்படும். |
| படிமுறை 03 | தலைமை தொழிற்பாட்டாளர்களினால் பெறுமதிச் சங்கிலி தொழிற்பாட்டாளர்களுக்கு பெறுமதிச் சங்கிலி பங்கேற்பு சான்றிதழ் வழங்கப்படும். |
| படிமுறை 04 | உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி - முன்னோடிச் செயற்றிட்டத்தின் கீழ் நிதியியல் வசதிகளைப் பெற விரும்புகின்ற பெறுமதிச் சங்கிலி தொழிற்பாட்டாளர்கள் பெறுமதிச் சங்கிலி பங்கேற்புச் சான்றிதழுடன் தாங்கள் விரும்பிய பங்கேற்கும் நிதியியல் நிறுவனமொன்றின் கிளைக்குச் செல்லலாம். |
| படிமுறை 05 | பெறுமதிச் சங்கிலி பங்கேற்பு சான்றிதழுடன் செல்லும் தொடர்பான பெறுமதிச் சங்கிலி தொழிற்பாட்டாளர்கள் கொடுகடன் நம்பகத்தன்மை மீது பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் கிளையினால் கட்டாய பூர்வாங்க பகுப்பாய்வொன்று (கொடுகடன் தகவல் பணியகத்துடன் பரிசோதித்துப் பார்த்தல்) நடத்தப்படுமென்பதுடன் உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி - முன்னோடிச் செயற்றிட்டத்தின் கீழ் நிதியியல் வசதிகளைப் பெறுவதற்கு தமது விருப்பத்தினைத் தெரிவித்த பெறுமதிச் சங்கிலி தொழிற்பாட்டாளர்களிடையேயிருந்து தகைமைபெற்ற கடன்பாட்டாளர்கள் தெரிவுசெய்யப்படுவர். |
| படிமுறை 06 | குறிப்பிட்ட வேளாண்மை பெறுமதிச் சங்கிலியின் மூலதன முதலீட்டின் ஆற்றல் வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக, தகைமையுடைய துணைக் கடன்பட்டாளர்/ கடன்பாட்டாளர்களின் ஆதரவுடன் பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தினால் பண்ணைத் திட்டமும் செயற்றிட்ட முன்மொழிவுகளும் தயாரிக்கப்படுதல் வேண்டும்.<br><br>திட்டத்தின் கீழ் நிதியியல் வசதியைப் பெறுவதற்கான செயற்றிட்ட முன்மொழிவினைத் தயாரிப்பதற்கு பின்னிணைப்பு I மற்றும் பின்னிணைப்பு II இல் தரப்பட்டுள்ள படிவத்தினைப் பயன்படுத்த முடியும் (ரூ.1,000,000 இற்குக் குறைவான கடன் தொகைக்கு பின்னிணைப்பு ஐ இனையும் ரூ.1,000,000 இற்கு மேற்பட்ட கடன் தொகைக்கு பின்னிணைப்பு II இனையும் பயன்படுத்த முடியும். |
| படிமுறை 07 | பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் கிளை முன்மொழியப்பட்ட செயற்றிட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு கொடுகடன் மதிப்பீட்டு அறிக்கையினைத் தயாரிப்பதுடன், செயற்றிட்ட முன்மொழிவுகள்/ பண்ணை திட்டத்தின் ஆற்றல் வாய்ந்த தன்மையினையும் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும். |
| படிமுறை 08 | பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் கிரமமான செயற்கிரமங்களைத் தொடர்ந்து, பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் கிளை இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் தரப்பட்டுள்ள பதிவுகள், கடன் பகிர்ந்தளிப்பு மற்றும் மீள்நிதியிடல் செயன்முறைகளைத் தொடரும். |

| | |
|---|---|
| படிமுறை 09 | துணைக் கடன்களின் வழங்கலுக்குப் பின்னரான கண்காணிப்பு, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தொடர்பான கிளைகளின் உதவியுடன் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் பிரதேச அலுவலகங்களினால் மேற்கொள்ளப்படும்.<br>மேலும், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் பிரிவு 16.4 இல் தரப்பட்டுள்ள கண்காணிப்புத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. |

**8. உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி - முன்னோடி செயற்றிட்டத்தின் முக்கிய பண்புகள்**

**8.1 துணைக் கடன்பாட்டாளர்களுக்கான தகைமைப் பிரமாணம்**

(i) துணைக் கடன்பாட்டாளர்கள் வேளாண்மை பெறுமதிச் சங்கிலியின் தொடர்பான மற்றைய பங்கேற்பாளர்களுடனான ஏற்றுக்கொள்ளத்தக்க சந்தை இணைப்பொன்றுடன் கூடிய விதத்தில் இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு பெறுமதிச் சங்கிலித் தொழிற்பாட்டாளராக இருத்தல் வேண்டும். இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவேயுள்ள மற்றும் புதிய பெறுமதிச் சங்கிலி தொழிற்பாட்டாளர்கள் இருவரும் பரிசீலனையில் கொள்ளப்படுவர்.

(ii) நிதியியல் நிறுவனமொன்றிடமிருந்து முன்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட எந்தவொரு கடன் தொடர்பிலும் துணைக் கடன்பாட்டாளர் வேண்டுமென்றே திரும்பச் செலுத்தத் தவறாதவராக இருத்தல் வேண்டும். எனினும், கடன்பாட்டாளருக்கு எந்தவொரு கடனையும் வழங்குவது தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்திற்கு தற்றுணிபு வழங்கப்பட்டிருக்கிறது.

(iii) உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி - முன்னோடி செயற்றிட்டத்தின் கீழ் கொடுகடன் வசதியைப் பெறும் பொருட்டு, 65 வயது அல்லது அதற்குமேற்பட்ட வயதினைக் கொண்ட துணைக் கடன்பாட்டாளர்கள் குடும்ப உறுப்பினரொருவரை இணைக் கடன்பாட்டாளராக, இணைத்துக் கொள்ளுதல் வேண்டும் (அதாவது வாழ்க்கைத்துணைவர் அல்லது 18 வயதிற்கு மேற்பட்ட பிள்ளை).

(iv) பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளத்தக்க விதத்தில் குறிப்பிட்ட கடன்பாட்டாளரினால் தொழிற்படுத்தப்படவுள்ள துணைச் செயற்றிட்டம் தொழிற்படவுள்ள நிலத்திற்கான ஏதேனும் உரிமையினை அல்லது வேறு ஏதேனும் சொத்துக்களை துணைக் கடன்பாட்டாளர் கொண்டிருத்தல் வேண்டும்.

**8.2 தகைமையுடைய நடவடிக்கைகள்**

(i) தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட செயற்றிட்ட மதிப்பீட்டு அறிக்கையினால் தீர்மானிக்கப்பட்டவாறு ஆற்றல் வாய்ந்த கொடுகடன் தீர்ப்பனவு விகிதத்துடன் கூடிய போதுமான காசுப்பாய்ச்சலைக் கொண்டுள்ள தெரிவுசெய்யப்பட்டுள்ள பெறுமதிச் சங்கிலிகளிலுள்ள பொருளாதார ரீதியான மற்றும் நிதியியல் ஆற்றல் வாய்ந்த வருமான உருவாக்க நடவடிக்கை அல்லது வியாபார நடவடிக்கை.

(ii) பெறுமதிச் சங்கிலியிலுள்ள ஒவ்வொரு வகையினதும் தேவைப்பாடும் பொருத்தமான வசதிகளும் இணைப்பு ஐஐஇல் தரப்பட்டுள்ளன.

**8.3 உயர்ந்தபட்ச கடன் தொகை**

இலங்கை ரூபா இருபத்தைந்து (25) மில்லியன் அல்லது மதிப்பிடப்பட்ட மொத்தச் செயற்றிட்ட செலவில் எண்பத்தைந்து (85 சதவீதம்) இதில் எது குறைவானதோ அத்தொகை.

**8.4 பங்குரிமை மூலதனப் பங்களிப்பு**

செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவில் குறைந்தபட்சம் பதினைந்து (15) சதவீதம் துணைக் கடன்பாட்டாளரினால் செயற்றிட்டத்தின் பங்குரிமை மூலதனமாக, காசாக அல்லது பண்டமாக வழங்கப்படுதல் வேண்டும்.

**8.5 மீள்நிதியிடல்**

இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் தெரிவிக்கப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு, சரியான முறையில் பூரணமாக நிரப்பப்பட்ட மீள்நிதியிடல் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமிடத்து, பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டு, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் பகிர்ந்தளிக்கப்பட்ட அனைத்து துணைக் கடன்களுக்கும் இலங்கை மத்திய வங்கி 100 சதவீத மீள்நிதியிடலை வழங்கும்.

**8.6 வட்டி வீதம்**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், எந்தவொரு சூழ்நிலையிலும் கீழே 8.6 (ii)இல் தரப்பட்டுள்ள வட்டி வீதத்திற்கு மேலே துணைக் கடன்பாட்டாளருக்கு எந்தவொரு கடனையும் வழங்காது:

(i) இலங்கை மத்திய வங்கியிலிருந்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு

அ. ரூ.1 மில்லியனுக்குக் கீழே - ஆண்டிற்கு ஒரு (1) சதவீதம் (1%)

ஆ. ரூ.1 மில்லியனிலிருந்து ரூ.25 மில்லியன் வரை - ஆண்டிற்கு இரண்டு (2) சதவீதம் (2%)

(ii) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து துணைக் கடன்பாட்டாளருக்கு

அ. ரூ.1 மில்லியனுக்குக் கீழே - ஆண்டிற்கு நான்கு (4) சதவீதம் (4%)

ஆ. ரூ.1 மில்லியனிலிருந்து ரூ.25 மில்லியன் வரை - ஆண்டிற்கு ஐந்து (5) சதவீதம் (5%)

**8.7 மீள்கொடுப்பனவுக் காலம்**

இணைப்பு I இல் தரப்பட்டுள்ள விதந்துரைக்கப்பட்ட, காலப்பகுதிக்குட்பட்டு, துணைச் செயற்றிட்டத்தின் வருவாய் இயலளவினைப் பரிசீலனையில் கொண்டு செயற்றிட்டத்தின் தேவைப்பாடுகளுக்கிணங்க உயர்ந்தபட்சம் 1 ஆண்டு சலுகைக் காலம் உட்பட உயர்ந்தபட்சம் 5 ஆண்டுகள்

**8.8 சலுகைக் காலம்**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்திலிருந்து துணைக் கடன்பாட்டாளரினால் செய்யப்பட்ட கோரிக்கைக்கிணங்க உயர்ந்தபட்சம் ஓராண்டு சலுகைக் காலம். துணைக் கடன்பாட்டாளர் சலுகைக் காலத்தில் வட்டி செலுத்தல் வேண்டும்.

**8.9 பிணையுறுதி**

பிணையுறுதிகளில் தங்கியிருப்பதிலும் பார்க்க செயற்றிட்டத்தின் ஆற்றல் வாய்ந்த தன்மை, களப் பரீட்சிப்புக்களின் போது சரிபார்க்கப்பட்ட வேளாண்மையாளர் நடவடிக்கைகள் மற்றும் புகழ்பெற்ற வாங்குநர்கள்/ சங்கிலியிலுள்ள பெறுமதிச் சங்கிலிப் பங்காளர்களுடன் நிறுவப்பட்டுள்ள சந்தை இணைப்புக்கள் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு கடன்களை வழங்குமாறு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது. இது தொடர்பில், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், கடன் பெறுவதற்கான பிணையுறுதியாக சந்தையின் கிடைப்பனவினை உறுதிப்படுத்துகின்ற பெறுமதிச் சங்கிலி பங்கேற்புச் சான்றிதழை அல்லது வேளாண்மை பெறுமதிச் சங்கிலி வாங்குநர்/ பெறுமதிச் சங்கிலி தொழிற்பாட்டாளர்களினால் வழங்கப்பட்ட உறுதிப்பாட்டினைப் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்.

**9. கடன்பாட்டாளர்களைப் பதிவுசெய்தல்**

9.1 பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் வேளாண்மை பெறுமதிச் சங்கிலியிலுள்ள தகைமையுடைய துணைக் கடன்பாட்டாளர்களை அடையாளம் காண்பது, அத்தகைய துணைக் கடன்பாட்டாளர்களிடமிருந்தான கடன் விண்ணப்பங்களைச் சேகரித்தல் மற்றும் இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் தரப்பட்டுள்ள தொழிற்பாட்டுச் செய்முறைகளுக்கு இணங்கியொழுகுதல் என்பன தொடர்பில் கிளைகளின் அலுவலர்களுக்கு தொடர்பான வழிகாட்டல்களையும் அறிவுறுத்தல்களையும் வழங்குதல் வேண்டும்.

9.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இணைப்பு IIIஇல் தரப்பட்டுள்ள கடனைப் பதிவுசெய்தல் படிவத்தினைச் சரியான முறையில் நிரப்பி ஏனைய துணை ஆவணங்களுடன் ஒப்புதலுக்காக பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தில் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். எந்தவொரு கடனுக்கும் ஒப்புதலளிக்கும் போது பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளருக்கு அனுப்பி வைப்பதற்காக ஒவ்வொரு பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்திலும் பின்வரும் ஆவணங்கள் வைத்திருக்கப்படல் வேண்டும்.

(அ) வியாபாரப் பதிவுச் சான்றிதழ்ழூ

(ஆ) ஊ.சே.நிதியம் மற்றும் ஊ.ந.நிதியத்தின் கொடுப்பனவுகளை நிரூபிக்கும் ஆவணங்கள்ழூ

(இ) வரிக் கொடுப்பனவினை நிரூபிக்கும் ஆவணங்கள்ழூ

(ஈ) ஏதேனும் கொள்வனவுகளுடன் தொடர்பான புதிய விலைக்குறிப்பீடுகள்/ பொருட்பட்டியல்கள்

(உ) செயற்றிட்ட மதிப்பீட்டு அறிக்கை

(ஊ) செயற்றிட்டத்தின் பொருத்தப்பாட்டினையும் ஆற்றல் வாய்ந்த தன்மையினையும் உறுதிப்படுத்துகின்ற ஏனைய சான்றிதழ்கள்

* வேளாண்மையல்லா நடவடிக்கைகளுக்கு ரூ.1 மில்லியனை விஞ்சிய கடன்களுக்கும் ஏற்புடைத்தானவை.

9.3 பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தலைமை அலுவலகம், இணைப்பு ஐஐஐஇல் தரப்பட்டுள்ள கடன் பதிவுசெய்தல் படிவத்தினைப் பூரணமாக நிரப்பி அதன் வன்பிரதியை சமர்ப்பிப்பதன் மூலம் உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி - முன்னோடிச் செயற்றிட்டத்தின் கீழ் கடன்களைப் பெற்றுக்கொள்ள விரும்பிய விண்ணப்பதாரிகளின் விபரங்களை பிரதேச அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தனிப்பட்ட கடன்பாட்டாளர்களின் கோரிக்கைகளினைப் பரிசீலனையில் கொண்டு ஒரு கடன் பதிவுசெய்தல் விண்ணப்பம் பல விண்ணப்பங்களை உள்ளடக்கியிருக்கலாம்.

9.4 மேலே 9.2இல் குறித்துரைக்கப்பட்ட அனைத்து துணை நிரப்பு ஆவணங்களையும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின்

தலைமை அலுவலகத்தில் கட்டுக்காப்பாக வைத்திருத்தல் வேண்டும்.

9.5 ஒவ்வொரு கடன் பதிவு படிவத்தினூடாகவும் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட தகவல்களின் துல்லியத்தன்மையினையும் ஒத்த தன்மையினையும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

9.6 கடன் பதிவுசெய்தல் பத்திரத்தில் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி - முன்னோடிச் செயற்றிட்டத்தின் கீழ் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியினைப் பொறுத்து முதலில் வந்தவை முதலில் என்ற அடிப்படையில் துணைக் கடன்பாட்டாளர்களைப் பதிவுசெய்து கொள்ளும்.

9.7 அத்தகைய விண்ணப்பங்களைப் பதிவுசெய்யும் நோக்கத்திற்காக பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு ஏதேனும் மேலதிகத் தகவல்கள் அல்லது தெளிவுபடுத்தல்கள் தேவைப்படும் சந்தர்ப்பத்தில், விண்ணப்பங்களைப் பதிவுசெய்வது தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களை மீண்டும் தொடர்பு கொள்ளும் உரிமையினைப் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் தன்னகத்தே கொண்டுள்ளது.

9.8 துணைக் கடன்பாட்டாளர்கள் பதிவுசெய்யப்பட்டதும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு கடனுக்கும் குறிப்பிட்ட பதிவு இலக்கமொன்றினை ஒதுக்குவதுடன் அத்தகைய பதிவு இலக்கத்தினைத் தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்திற்கும் அறிவிக்கும். திட்டத்திலுள்ள குறிப்பிட்ட துணைக் கடன்பாட்டாளர் தொடர்பில் மத்திய வங்கியுடன் செய்யப்படும் எந்தவொரு கடிதத் தொடர்பிலும் இப்பதிவு இலக்கமே பயன்படுத்தப்படல் வேண்டும்.

9.9 கடன் பதிவுசெய்தல் படிவத்தில் வழங்கப்பட்ட தகவல்களில் ஏதேனும் குறைபாடுகள் அவதானிக்கப்படும் சந்தர்ப்பமொன்றில், இது தொடர்பில் 9.10இல் தரப்பட்டுள்ளவாறு தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனமும் எந்தவொரு நடவடிக்கையினையும் எடுக்காதவிடத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்திற்கு 14 நாள் அறிவித்தலை வழங்குவது என்ற நிபந்தனைக்குட்பட்டு, துல்லியமற்றவை எனக் கண்டறியப்பட்ட தகவல்களைக் கொண்ட தொடர்பான துணைக் கடன்பாட்டளர் தொடர்பான பதிவுகளை இரத்துச் செய்வதற்கான உரிமையினை பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் தன்னகத்தே கொண்டுள்ளது. எவ்வாறெனினும் பிரதேச அபிவிருத்தி பணிப்பாளரினால் மீள்நிதியிடல் விடுவிக்கப்பட்ட பின்னர் ஏதேனும் குறைபாடுகள் அவதானிக்கப்படுமாயின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மீள்நிதியிடப்பட்ட தொகையினை மீளப்பெற்றுக் கொள்வதற்கான அல்லது அத்திகதியிலுள்ளவாறான வெளிநின்ற நிலுவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமையினை தன்னகத்தே கொண்டுள்ளதுடன் பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் கடன்பாட்டாளரிடமிருந்து மேலதிக தொகை எதனையும் விதிக்காமல் இலங்கை மத்திய வங்கிக்குச் சேரவேண்டிய மொத்தத் தொகையினை மாற்றல் செய்தல் வேண்டும்.

9.10 மேலேயுள்ள பிரிவு 9.9இல் உள்ளவாறு பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட அறிவித்தல் பெற்றுக் கொள்ளப்பட்டதும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் எழுப்பப்பட்ட கரிசனைகள் மீதான விளக்கங்களை வழங்குவதற்கு எண்ணியுள்ளதா என்பது பற்றி பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு உடனடியாக அறிவித்தல் வேண்டுமென்பதுடன் குறிப்பிட்ட கரிசனை தொடர்பான விளக்கங்கள் அத்துடன்/ அல்லது எடுத்துக்காட்டப்பட்ட விடயத்தினை திருத்தி அத்தகைய அறிவித்தல்கள் கிடைத்த 14 நாட்களுக்குள் சமர்ப்பித்தலும் வேண்டும். இக்கரிசனை தொடர்பான இறுதித் தீர்மானம் பணிப்பாளர்/ பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் எடுக்கப்படும்.

**10. துணைக் கடன்களைப் பகிர்ந்தளித்தல்**

10.1 இலங்கை மத்திய வங்கியுடன் அத்தகைய பதிவுகளை மேற்கொண்ட 3 வாரத்திற்குள் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பதிவுசெய்யப்பட்ட துணைக் கடன்பாட்டாளர்களுக்கு கடன்களை விடுவித்தல் வேண்டும்.

10.2 குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கள் பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் ஏதேனும் துணைக் கடன்களைப் பகிர்ந்தளிக்க முடியாமல் போகுமாயின், பகிர்ந்தளிப்பில் காணப்படும் தாமதத்திற்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களைப் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும். தாமதத்திற்காகத் தரப்பட்ட காரணங்களைப் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் பரிசீலனையில் கொண்டு பதிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் தொடர்பில் பொருத்தமான தீர்மானத்தினை/ நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

10.3 30 நாட்களுக்குள் துணைக் கடன்களைப் பகிர்ந்தளிப்பதற்கும் மற்றும் வலிதான காரணங்களை வழங்குவதற்கும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தவறுமாயின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட துணைக் கடன்பாட்டாளர்களின் பதிவு, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கான முன்னறிவித்தல் இன்றியே இரத்துச் செய்யப்படுவதற்கு காரணமாகலாம்.

**11. இலங்கை மத்திய வங்கியின் மீள்நிதியிடல் பகிர்ந்தளிப்பின் நடைமுறை**

11.1 கீழே குறித்துரைக்கப்பட்டவாறு பதிவுசெய்யப்பட்ட துணைக் கடன்பாட்டாளர்களுக்கு துணைக் கடன்களை விடுவித்ததன் பின்னர் மீள்நிதியிடலுக்காகச் சரியான முறையில் நிரப்பப்பட்ட விண்ணப்பங்களை மீள்நிதியிடலைக் கோருவதற்காக பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) மீள்நிதியிடலுக்கான விண்ணப்பம் - இணைப்பு IV

(ii) மீள்நிதியிடலுக்காகப் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் விண்ணப்பக் கூற்று - இணைப்பு V

(iii) கோரிக்கையின் பேரிலான வாக்குறுதிச் சான்றிதழ் - இணைப்பு VI

(iv) வழங்கல் குறிப்பு - இணைப்பு VII

(v) இலங்கை மத்திய வங்கிக்கு உத்தரவாதமளிப்பதன் மூலம் வழங்கப்படுகின்ற சாட்டுதல் படிவம் - இணைப்பு ஏஜஜஜ

(vi) பகிர்ந்தளிப்புக் கடிதம் - இணைப்பு IX

11.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் இலங்கை மத்திய வங்கியிலிருந்த பகிர்ந்தளிப்பினைக் கோருவதற்கு இணைப்பு IV, V மற்றும் VI இனைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

11.3 சரியாக நிரப்பப்பட்ட இணைப்பு VII, VIII மற்றும் IX என்பனவற்றைப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுடன் வைத்திருக்கப்படல் வேண்டுமென்பதுடன் தேவைப்படும் போதும் மத்திய வங்கியினால் கேட்டுக் கொள்ளப்படுமிடத்தும் அவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

11.4 பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மீள்நிதியிடலுக்கான விண்ணப்பம் (இணைப்பு IV), மீள்நிதியிடலுக்கான கடன்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட விண்ணப்பக் கூற்று (இணைப்பு V), கோரிக்கை வாக்குறுதிக் குறிப்பு (இணைப்பு VI) என்பனவற்றுடன் சேர்த்து மீள்நிதியிடல் விண்ணப்பங்களில் கேட்டுக் கொள்ளப்பட்ட தகவல்களுடன் நிரப்பப்பட்ட மீள்நிதியிடல் விண்ணப்பம் தொடர்பில் திருப்தியடைந்ததும், அத்தகைய மீள்நிதியிடல் விண்ணப்பங்களுக்கு ஒப்புதலளித்து, மேலே குறிப்பிடப்பட்ட சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்கள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் 14 வேலைநாட்களுக்குள் முதலில் வந்தது முதலில் என்ற ஒழுங்கில் மீள்நிதியிடலை விடுவிக்கும்.

11.5 பதிவுசெய்யப்பட்ட துணைக் கடன்பாட்டாளருக்கு கடன் பகிர்ந்தளிக்கப்பட்ட 30 கலண்டர் நாட்களுக்குள் பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தினூடாக மாத்திரம் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு மீள்நிதியிடல் கோரல்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

11.6 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் கிளைகளினால் நேரடியாகச் சமர்ப்பிக்கப்படும் மீள்நிதியிடல் கோரல்களை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளாது.

**12. கடன்களை அறவிடல்**

12.1 ஒவ்வொரு துணைக் கடன்களுக்கும் ஏற்புடைத்தான நிபந்தனைகளுக்கிணங்க, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் துணைக் கடன்பாட்டாளர்களிடமிருந்து மூலதனத்தினையும் வட்டியையும் அறவிட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

12.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்திற்கு இலங்கை மத்திய வங்கியினால் விடுவிக்கப்பட்ட மீள்நிதியிடலுக்கான மூலதனமும் வட்டியும் உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி - முன்னோடிச் செயற்றிட்டத்தின் கீழ் விடுவிக்கப்பட்ட மீள்நிதியிடலின் அடிப்படையில் ஒவ்வொரு துணைக் கடன்பாட்டாளருக்காகவும் உருவாக்கப்பட்ட மீள்கொடுப்பனவு அட்டவணைக்கிணங்க ஒவ்வொரு ஆண்டும் அரையாண்டிற்குகொரு தடவை அதாவது யூன் 30ஆம் திகதியும் திசெம்பர் 31ஆம் திகதியும் அறவிடப்படுதல் வேண்டும்.

**13. ஆவணங்களின் கட்டுக்காப்பு**

13.1 பரிசோதனைக்காக ஒவ்வொரு துணைக் கடன்பாட்டாளர்களுக்குமான கடன் மதிப்பீடுகள் மீதான அனைத்துச் சான்றுகளையும் ஆவணங்களையும் பேணுவதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஆவணங்களைப் பரீட்சிப்பதற்காக அல்லது வேறு ஏதேனும் நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கி கேட்கும் போது அத்தகைய எந்தவொரு ஆவணத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

13.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் அல்லது பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் கிளை அலுவலகம் மேலேயுள்ள பிரிவு 9.2 மற்றும் 11.1இன் அதிகாரவரம்பின் கீழ் வராத உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி - முன்னோடிச் செயற்றிட்டத்தின் நடைமுறைப்படுத்தலுடன் தொடர்புபடாத வேறு ஏதேனும் ஆவணங்களைப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் அதன் தற்றுணிபின் அடிப்படையில் வைத்திருக்கலாம்.

**14. திட்டத்தின் கண்காணிப்பு**

14.1 திட்டத்தின் கீழ் விடுவிக்கப்பட்ட கடன்களின் ஆற்றல் வாய்ந்த தன்மை பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நேரடியாகக் கண்காணிக்கப்படவுள்ளதுடன் அத்துடன்/ அல்லது தேவைப்படுமிடத்து பிரதேச செயலகத்தின் அலுவலர்களினது ஆதரவினையும் பெற்றுக்கொள்ள முடியும்.

**15. கணக்குளைக் கணக்காய்வு செய்தல்**

15.1 பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி - முன்னோடிச் செயற்றிட்டத்தின் கீழ்

வருடாந்த நிதியியல் கூற்றுக்களைத் தயாரிப்பதுடன் அத்தகைய நிதியியல் கூற்றுக்கள் கணக்காய்வு நோக்கங்களுக்காக கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

15.2 மேலும், உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி - முன்னோடிச் செயற்றிட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளைப் சரிபார்ப்பதற்காகவும் துணைக் கடன்பாட்டாளர்களிடமிருந்து தோன்றுகின்ற ஏதேனும் இழப்புக்களை மதிப்பிடுவதற்காகவும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் சிறப்பு உள்ளகக் கணக்காய்வொன்றினை நடத்தல் வேண்டும்.

**16. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் வகிபாகமும் பொறுப்புக்களும்**

இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் தீவிரமான வகிபாகமொன்றினை ஆற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றது. இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாகப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பின்வருவனவற்றிற்கு இணங்கியொழுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

16.1 பெறுமதிச் சங்கிலி தொழிற்பாட்டாளர்களின், குறிப்பாக சிறுஉடமையாளர் வேளாண்மையாளர்களின் வியாபாரம் மற்றும் தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்துவதற்காகத் தேவையான உதவிகளை வழங்குதல் மற்றும் பெறுமதிச் சங்கிலி தொழிற்பாட்டாளர்களிடையே சந்தை இணைப்புக்களையும் நிறுவுதல்.

16.2 உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி - முன்னோடி செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இலங்கை மத்திய வங்கியுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதற்காக பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் அலுவலகரொருவரைப் பதவி குறித்துரைத்தல் மற்றும் உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி - முன்னோடிச் செயற்றிட்டம் பற்றிய திட்டத்தின் தொடர்ச்சியான கலந்துரையாடல்களைப் பேணுதல்

16.3 துணைக் கடன்பாட்டாளர்களுக்கு கொடுகடன்களை வழங்குதல மற்றும் மீள்நிதியின் அறவிடலைச் சரியான நேரத்தில அறவிடல் பற்றிய முழுப் பொறுப்புக்களையும் ஏற்றுக்கொள்ளுதல்.

16.4 திட்டத்தின் அந்தஸ்தினதும் தொழிற்பாடுகளினதும் கிரமமான மேற்பார்வையினை உறுதிப்படுத்தல் மற்றும் திட்டத்திற்காக தனியான கடன் கணக்கொன்றினைப் பேணுகின்ற வேளையில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு ஏற்படக்கூடிய ஏதேனும் இழப்புக்களைக் குறைப்பதற்கு அவசியமானவிடத்து, பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல்

16.5 கணக்குகளையம் நிதியியல் கூற்றுக்களையும் பேணுதல்:

(i) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், மற்றைய விடயங்களுடன் துணைக் கடன் மதிப்பீடுகள், ஒப்புதல்கள், பகிர்ந்தளிப்புக்கள் மற்றும் அறவிடல்கள் என்பனவற்றை எடுத்துக்காட்டும் விதத்தில் பொருத்தமான பேரேட்டுக் கணக்குகளையம் பதிவுகளையும் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

(ii) கடன்பெறுகைகள் மற்றும் மீள்நிதியிடல் தொழிற்பாடுகளுக்காக தனியான கணக்கொன்றினைப் பேணுமாறு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

(iii) பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் இத்திட்டம் தொடர்பில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் கேட்டுக் கொள்ளப்படுகின்ற கணக்குகள் மற்றும் நிதியியல் கூற்றுக்கள், கணக்குகளின் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிலுவை உறுதிப்படுத்தல் அல்லது வேறு ஏதேனும் தொடர்பான தகவல்களைக் கேட்டுக் கொள்ளப்படுகின்ற நேரத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

**17. இலங்கை மத்திய வங்கியின் வகிபாகம்**

இலங்கை மத்திய வங்கி, இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்ட தொழிற்பாடுகளுக்குப் புறம்பாக, இத்திட்டத்தின் வெற்றிகரமான நடைமுறைப்படுத்தலை உறுதிப்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தும் முகவர் என்ற அதன் இயலாற்றலில் பின்வரும் தொழிற்பாடுகளையும் ஆற்றும்.

17.1 தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை விடுத்தல் மற்றும் தேவையானவிடத்து அத்தகைய தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களைத் திருத்துதல்.

17.2 திட்டத்தின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுச் செய்முறைகளை ஆற்றுதல் மற்றும் காலத்திற்குக் காலம் தேவையான கொள்கை நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல்.

17.3 களப் பரிசோதனைகளை மேற்கொள்ளுதல், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு விஜயம் செய்தல், பேரேடுகள், நூல்கள் மற்றும் ஆவணங்கள் போன்றவற்றைப் பரீட்சித்தல் மற்றும் அவசியமானவை எனக் கருதுகின்ற ஏனைய மேற்பார்வை நடவடிக்கைகளை எடுத்தல்.

17.4 மற்றைய தொடர்பான முகவராண்மைகளுடன் இணைப்புக்களை மேற்கொள்ளல். தேவைப்படுகின்றவாறு விழிப்புணர்வு அமர்வுகள், தொழில்நுட்ப செயலமர்வுகள் மற்றும் சந்தை இணைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவற்றை நடத்துவதற்குப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு உதவுதல்.

17.5 பெறுமதிச் சங்கிலி நிதியிடல் தொடர்பில் தெரிவுசெய்யப்பட்ட பெறுமதிச் சங்கிலி தொழிற்பாட்டாளர்களுக்காக நிதியியல் அறிவு

நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களில் அலுவலர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.

**18. ஏனையவை**

இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் பின்வரும் உரிமைகளை தன்னகத்தே கொண்டிருக்கின்றார்.

18.1 2021.05.04ஆம் திகதியிடப்பட்ட ஆர்டிடி/டிஏடி-பிபி/2021/01 இலக்க தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்டுள்ள நியதிகளையும் நிபந்தனைகளையும் தேவைப்படும் வேளையில் திருத்துவதற்கு.

18.2 உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி - முன்னோடிச் செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வழிகாட்டல்களை விடுக்கவும் தேவையானவிடத்து அத்தகைய வழிகாட்டல்களைத் திருத்துவதற்கு.

18.3 இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்கியொழுகுவில்லை என அவதானிக்கும் சந்தர்ப்பத்தில், உடன்படிக்கையின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி - முன்னோடிச் செயற்றிட்டத்திலிருந்து ஏதேனும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தினை நீக்குவதற்கு.

18.4 இக்கடன் திட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் ஏனைய கடன் திட்டங்களூடாக தேவையான நிதியியல் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு தகைமையுடைய துணைக் கடன்பாட்டாளர்களை நெறிப்படுத்துவதற்கு.

உங்கள் உண்மையுள்ள

பி. எல். ஜே. எஸ். பாலசூரிய
**பணிப்பாளர்/ பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**




வரைபடம் 1: காய்கறிகளின் பெறுமதிச் சங்கிலி




வரைபடம் 2: பண்ணை பெறுமதிச் சங்கிலி




வரைபடம் 3: ஏற்றுமதிப் பயிர் பெறுமதிச் சங்கிலி (பல்வகை)

**இணைப்பு** I

**உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி - முன்னோடிச் செயற்றிட்டத்திற்கான வேளாண்மைப் பெறுமதிச் சங்கிலி**

**இணைப்பு** II

**பெறுமதிச் சங்கிலி பங்கேற்பாளர்களின் நிதியியல் தேவைப்பாடுகள்**

| **பெறுமதிச் சங்கிலியிலுள்ள பங்கேற்பாளர்களின் வகை** | **தேவைப்பாடுகள்** | **விதந்துரைக்கப்பட்ட நிதியியல் வசதி** |
|---|---|---|
| உள்ளீடுகளின் வழங்குநர்கள் | வேளாண்மையாளர்களினால் தேவைப்படுகின்ற உள்ளீடுகளை (விதைகள், வளமாக்கி, பொறி மற்றும் சாதனங்கள் போன்றவை) தொகை வடிவில் கொள்வனவு செய்தல் | முக்கியமாக குறுங்கால* தொழிற்படு மூலதனக் கடன்கள் |
| சிறு உடமை வேளாண்மையாளர்கள் | தேவையான சீரமைப்புக்கள் மற்றும் சாதனங்களுடன் நீடித்துநிலைத்திருக்கக் கூடிய பண்ணையை நிறுவுதல் மற்றும் பயிர்ச்செய்கைக்கான செலவினை ஈடுசெய்தல் | 3 இலிருந்து 5 ஆண்டுகள் வரையிலான மீள்கொடுப்பனவுக் காலப்பகுதியுடன் மூலதன தொழிற்பாட்டுக் கடன்கள்.<br>குறுங்காலப் பயிர்ச்செய்கைக் கடன்கள்<br>களஞ்சியசாலை பெறுகைகள்<br>களஞ்சியப்படுத்தலுக்கான நிதிக் கடன் |
| பண்டச் சேகரிப்பாளர்கள் போக்குவரத்தாளர்கள் விநியோகஸ்தர்கள் | பன்னாட்டு/ இலங்கை நியமங்களுடன் இணங்கிச்செல்லும் விதத்தில் பண்டங்களைச் சேகரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்துவதற்கான கட்டுமானம் அல்லது புனரமைப்பு<br>குளிரூட்டப்பட்ட இழுபொறிகள் ஏனைய சாதனங்கள் பண்டங்களின் கொள்வனவிற்கான தொழிற்படு மூலதனம் | 3 - 5 ஆண்டு கால மீள்கொடுப்பனவுக் காலப்பகுதியுடன் கூடிய மூலதன முதலீடு.<br>குறுங்கால தொழிற்படு மூலதனக் கடன்கள்.<br>சங்கிலியிலுள்ள பண்டங்களின் வாங்குநர்களுடனான ஏற்பாடுகளுடன் ஒழுங்கு செய்யக்கூடிய காரணிப்படுத்தல் வசதிகள் |
| பதனிடுவோர் பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகளின் தயாரிப்பாளர்கள் களஞ்சியசாலைகளைப் பேணுவோர் ஏற்றுமதியாளர்கள் | பன்னாட்டு நியமங்களுடன் இணங்கியொழுகும் விதத்தில் பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான அதிநவீனத்துவம் வாய்ந்த தொழில்நுட்பங்களையும் அமைப்புக்களையும் பின்பற்றுதல்<br>பொறி மற்றும் கருவிகள் களஞ்சியப்படுத்தல்<br>வேளாண்மையாளர்கள் அல்லது சேகரிப்பாளர்களிடமிருந்தான மூலப் பண்டங்கள் அல்லது பதனிடுபவர்கள் அல்லது தயாரிப்பாளர்களிடமிருந்தான முடிந்த உற்பத்திகள்<br>ஏற்றுமதிப் பெறுகைகளைப் பெறும் வரை காசுப்பாய்ச்சல் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல் | 3 - 5 ஆண்டு கால மீள்கொடுப்பனவு காலப்பகுதியுடன் மூலதன முதலீடுகள், குறுங்கால தொழிற்படு மூலதனக் கடன்கள்<br>களஞ்சியசாலை பெறுகைகள்<br>நிதியியல் வசதிகள்<br>நியம ஏற்றுமதிக் கொடுகடன் வசதிகள் அல்லது தேவைப்பாடுகளுக்கிணங்க காரணிப்படுத்தல் வசதிகள் |

| | | |
|---|---|---|
| சில்லறை விற்பனையாளர்கள் | தெரிவுசெய்யப்பட்டுள்ள பெறுமதிச் சங்கிலியிலுள்ள தயாரிப்பாளர்கள் அல்லது விநியோகஸ்தருடனான வலையமைப்பில் பதிவுசெய்யப்பட்டுள்ள சில்லறை விற்பனையாளர்கள்<br>பண்டங்கள்/ உற்பத்திகளின் கொள்வனவிற்கான வசதிகளுக்கு விண்ணப்பிக்கத் தகைமையுடையவர்களாவர் | சங்கிலியிலுள்ள தயாரிப்பாளர்/ விநியோகஸ்தரின் விதந்துரைப்புக்கள் மீதான தொழிற்படு மூலதனக் கடன்கள் |

* **பன்னிரண்டு (12) மாதங்கள் வரை**

**இணைப்பு III**

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/டிஏடி-பிபி/2021/01:**

**விண்ணப்ப இல:** ............................................

**கடன் திட்டம்:** ................................................

## கடன் பதிவு விண்ணப்பம் (திட்டம்)

**பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்:** .....................................

| இல. | பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தகவல்கள் | | | கடன்பாட்டாளர் தொடர்பான தகவல்கள் | | | | | | | மாவட்டம் | செயற்றிட்டத் தகவல்கள் | | | | | | | | செலவு மதிப்பீடுகள் மற்றும் ஒப்புதல்கள் | | இ.ம. வங்கியின் பாவனைக்கு மாத்திரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கிளை | தொலைபேசி/ தொலைநகல் | பெறுமதிச் சங்கிலியின் பெயர் | விண்ணப்பதாரியின் பெயர் (வியாபாரப் பெயர்) | முகவரி | தே.அ.அ. இல. | விண்ணப்பதாரியின் தொடர்பு இல. | வியாபாரப் பதிவு இல. | பால் | உயர் கல்வித் தகைமை | | செயற்றிட்டத்தின் வகை | துறை/ செயற்றிட்டக் குறியீடு | செயற்றிட்ட அந்தஸ்து | ஆண்டு மொத்தப் புரள்வு (ரூ.) | தற்போதுள்ள ஊழியர்கள் (நிரந்தரம்/ ஒப்பந்தம் | எதிர்பார்க்கப்படுகின்ற தொழில் வாய்ப்பு உருவாக்கம் (1-3 ஆண்டுகள்) | செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு | விண்ணப்பதாரியின் பங்களிப்பு (ரூ.) | எதிர்பார்க்கப்படுகின்ற நிதித் தேவைப்பாடு (ரூ.) | பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட தொகை (ரூ.) | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | | | | | | | | | | | | | | |

மேற்குறிப்பிட்ட தகவல்கள் கிளை மட்டத்தில் ஒப்புதலளிக்கப்பட்ட விண்ணப்பம்/ விண்ணப்பங்களினைப் பரிசீலனையில் கொண்டு சரியாக நிரப்பப்பட்டுள்ளன என்பதனையும் இலங்கை மத்திய வங்கிக்கு இணைப்பு III சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னதாக என்னால்/ தலைமை அலுவலகத்திலுள்ள கடன் அலுவலரினால் பரிசீட்சிக்கப்பட்டன என்பதனையும் உறுதிப்படுத்துகிறோம். மேலும் இத்திட்டத்தின் கீழ் பதிவுசெய்வது தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு நன்மைபெறுநர்/ நன்மைபெறுநர்கள் இணங்கி நடப்பர் எனவும் இலங்கை மத்திய வங்கியினால் அத்தகைய கடன்பாட்டாளர்/ கடன்பாட்டாளர்களின் பதிவுகள் பெறப்பட்டதன் பின்னர் கிளை வலையமைப்பினூடாக குறிப்பிட்ட நேரக் கட்டமைப்பிற்குள் நிதியினை விடுவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுனெவும் உறுதிப்படுத்துகிறோம்.

திகதி: ..........................................................

தலைமை அலுவலகத்திலுள்ள அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்: ....................................................................................

இறப்பர் முத்திரை: ...............................

**இணைப்பு V**

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/ஆர்எப்/எல்எஸ்/2021/01**

**விண்ணப்ப இல:** ............................................

**கடன் திட்டம்:** ................................................

## கடன் பகிர்ந்தளிப்பிற்கான விண்ணப்பம்

**பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்:** ....................................

| இல. | இ.ம. வங்கியினால் வழங்கப்பட்ட கடன் பதிவு இலக்கம் | கிளை | விண்ணப்ப தாரியின் பெயர் (வியாபாரத்தின் பெயர்) | இ.ம. வங்கியினால் ஒப்புதலளிக் கப்பட்ட மொத்தத் தொகை (ரூ.) | கடன் திட்டத்தின் நிலை | இ.ம. வங்கியிட மிருந்து எதிர்பார்க்கப் படுகின்ற மீள்நிதியிடல் தொகை (ரூ.) | கிளை யினால் பகிர்ந்தளிக் கப்பட்ட திகதி (திதி/மாமா/ ஆஆஆஆ) | விண்ணப் பதாரிக்கு வழங்கப் பட்ட சலுகைக் காலம் | இ.ம. வங்கிக்குச் செலுத்தப் பட வேண்டிய தவணைப் பணத்தின் எண்ணிக்கை | தவணைப் பணத்தின் தொகை (ரூ.) | 1ஆம் தவணைப் பணம் செலுத்தப் பட வேண்டிய திகதி (திதி/மாமா/ ஆஆஆஆ) | இறுதி தவணைப் பணம் செலுத்தப் பட வேண்டிய திகதி (திதி/மாமா/ ஆஆஆஆ) | இன்றை திகதி வரை விண்ணப் பதாரிக்கு வழங்கப் பட்ட தொகை (ரூ.) | விண்ணப் பதாரிக்கு விடுவிக்கப் பட வேண்டிய மீதி தொகை (ரூ.) | இ.ம. வங்கியின் பாவனைக்கு மாத்திரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | மொத்தம் | | | | | | | | | | | | | | |

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கிணங்க மேற்குறிப்பிட்ட கடனினை இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்துவோம் என இத்தால் வாக்குறுதியளிப்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட தொகை இத்திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள நோக்கத்திற்காக மாத்திரமே பயன்படுத்தப்படும் என்பதனையும் பிரகடனப்படுத்துகிறோம்.

மேற்குறிப்பிட்ட விபரங்கள் திட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட ஒவ்வொரு கடன் விண்ணப்பதாரிக்குமான எமது கிளை/ கிளைகளினால் வழங்கப்பட்ட கடன் பகிர்ந்தளிப்பு அட்டவணை/ அட்டவணைகளைப் பரிசீலனையில் கொண்டு சரியான முறையில் நிரப்பப்பட்டுள்ளன என்பதனை நாம் உறுதிப்படுத்துகிறோம். இத்திட்டத்தின் விண்ணப்பதாரிக்கு/ விண்ணப்பதாரிகளுக்கு விடுவிக்கப்பட்ட கடன்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு எம்மை இயலுமைப்படுத்தும் விதத்தில் மொத்தமாக ரூ................. இனைப் பகிர்ந்தளிக்குமாறு இலங்கை மத்திய வங்கியைக் கேட்டுக் கொள்கிறோம். மேலும், தொழிற்பாட்டு அறிவுறுத்தலில் குறித்துரைக்கப்பட்ட அனைத்து தேவையான ஆவணங்களும் தகவல்களும் எந்தவொரு நேரத்திலும் மத்திய வங்கியின உசாவுகைக்கும் ஆய்விற்குமாக தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன என்பதனையும் நாம் அறியத்தருகிறோம்.

தலைமை அலுவலகத்திலுள்ள அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களின் கையொப்பம்:

1. ................................................

2. ................................................

திகதி: ...........................................................

இறப்பர் முத்திரை: ................................

இணைப்பு IV

மீள்நிதியிடல் விண்ணப்ப இலக்கம்: ................................................

(2021.05.04 திகதியிடப்பட்ட இலக்கம் ஆர்டிடி/டிஏடி-பிபி/2021/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு)

முகவரி:

திகதி:

**உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னோடிச் செயற்றிட்டத்தின் கீழ் மீள்நிதியிடலுக்கான விண்ணப்பம்**

சேரல்: இலங்கை மத்திய வங்கி

கனவான்களே

1 காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 88(ஊ) இன் பொருட்கோடலுக்குட்பட்டு ஒரு கொடுகடன் நிறுவனம்/ பதிவுசெய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனமும் அச்சிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட எங்கள் யாப்பினை ஏற்கனவே சமர்ப்பித்த/ சமர்ப்பிக்கின்றவர்களுமாகிய நாங்கள் ................................................................................. நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 88(அ) இன் ஏற்பாடுகளின் கீழ் ரூ. ...................................................................................... (ரூ...............) கொண்ட கடனைப் பெறுவதற்காக இத்தால் விண்ணப்பிக்கின்றோம்.

2. இவ்விண்ணப்பத்தினைத் தயாரிக்கையில், தங்களின் 2021.05.04 திகதியிடப்பட்ட இல.ஆர்டிடி/டிஏடி-பிபி/2021/01 தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகுவதற்கு நாம் உடன்படுகின்றோம்.

3. மேலே குறிப்பிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களினால் தேவைப்படுத்தப்பட்டவாறும் அதிலுள்ள விடயங்களுக்கு இணங்கிச் செல்லும் விதத்திலும் உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னோடிச் செயற்றிட்டத்தின் கீழ் எங்களால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத் திகதிக்கு உடனடியாக முற்போந்த ஆறு மாதங்களுக்கு முற்படாத காலப்பகுதியில் வழங்கப்பட்ட கடன்களின் கூற்றுக்களை இரட்டைப் பிரதிகளில் இத்தால் அனுப்பி வைக்கின்றோம். இக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கடன்கள் மீள்நிதியிடல் கடனுக்கான விண்ணப்பமொன்றிற்கு ஆதரவளிக்கும் விதத்தில் ஏதேனும் முன்னைய கூற்றில் பிரதிபலிக்கப்பட்டிருக்கவில்லை என்பதனையும் உறுதிப்படுத்துகின்றோம்.

4. இவ்விண்ணப்பத்தின் நியதிகளில் எமக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட பணத்தினைத் தங்களுக்கு ................ (தவணைகளின் எண்ணிக்கை) ........... மாதாந்தம்/ காலாண்டு ரீதியில்/ அரையாண்டு (கால இடைவெளியினைக் குறிப்பிடவும்) ஒவ்வொன்றும் ரூ....................... கொண்ட தொகையில் மீள்செலுத்துவதற்கும் முதலாவது தவணையினை 20 ................... மாதம் ................ ஆம் திகதியிலிருந்து ஆரம்பிப்பதற்கும் இணங்குகின்றோம்.

5. பின்வருவன தொடர்பில் நாம் திருப்தியடைந்துள்ளோம் என்பதனை இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

(௯) மேலேயுள்ள பந்தி 3இல் குறிப்பிடப்பட்டுள்ள கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன்கள் அவர்களது கடன்பாட்டு வரையறைக்குள்ளேயே காணப்படுகின்றன; அத்துடன்

(ஊ) அத்தகைய, கடன்களின் மீள்கொடுப்பனவிற்காகப் பெறப்பட்ட உத்தரவாதங்களைப் பொறுத்த வரையில் உத்தரவாதிகள் அத்தகைய உத்தரவாதங்களை வழங்கும் அதிகாரங்களைக் கொண்டிருக்கின்றனர்

**இறப்பர் முத்திரை**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்/(கள்) இன் கையொப்பம் பெயர் மற்றும் விபரங்கள்
முகாமையாளர், மீள்நிதியிடல் பிரிவு

இணைப்பு VI

மீள்நிதியிடல் விண்ணப்ப இல.:- ........................................................

(2021.05.04 திகதியிடப்பட்ட இலக்கம் ஆர்டிடி/டிஏடி-பிபி/2021/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு)

விண்ணப்ப இல.: ............................. திகதி: ....................................

**கோரிக்கை வாக்குறுதிக் குறிப்பு**

**(உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னோடிச் செயற்றிட்டம்)**

ரூ. ................................................

கோரலின் பேரில் கீழே கையொப்பமிட்டுள்ள ..........................................................................................................................

.............................................................................................................................................................................................................

(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி)

ஆகிய நாங்கள் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கு அல்லது கட்டளையின்படி கொழும்பில், பெறப்பட்ட பெறுமதியையும் இங்கே குறிப்பிட்டுள்ள திகதியிலிருந்து ஆண்டொன்றிற்கு .....................% வீதத்திலமைந்த அதற்கான வட்டியையும் சேர்த்து ரூபா ........................................................................................ (ரூ....................) இனைச் செலுத்த இத்தால் உறுதியளிக்கின்றோம்.

(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்) இற்காக
மீள்நிதியிடல் பிரிவு
தலைமை அலுவலகம்

**இறப்பர் முத்திரை**

1. .......................................................
2. .......................................................

(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்/ அலுவலர்களின் கையொப்பம்)

சாட்சிகள்

1. ..........................................
2. ..........................................

இணைப்பு VII

**மீள்நிதியிடல் விண்ணப்ப இல.:- ..........................................................**

**(2021.05.04 திகதியிடப்பட்ட இலக்கம் ஆர்டிடி/டிஏடி-பிபி/2021/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு)**

**வழங்கல் கடிதம்**

கொழும்பு
திகதி: ................................

சேரல்: இலங்கை மத்திய வங்கி

காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 88(அ)இன் கீழ் தங்களின் 2021.05.04ஆம் திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல.ஆர்டிடி/டிஏடி-பிபி/2021/01 இல் குறிப்பிடப்பட்டுள்ள கொடுகடன் திட்டத்தின் கீழ் மீள்நிதியிடல் திட்டத்திற்கு எங்களால் மேற்கொள்ளப்பட்ட கடன்வழங்கல் தொழிற்பாடுகள் தொடர்பில் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மீள்நிதியிடல் நோக்கத்துடன் ரூபா................................................................................................ (ரூ..............) இனை கடன் வழங்க உடன்பட்டுள்ளீர்கள் என்பதனைக் கவனத்தில் கொண்டு இத்தால் நாங்கள் தங்களின் சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பேரில் அதற்கான வட்டியுடன் சேர்த்துச் செலுத்தத்தக்க ரூபா................................................ இற்கான (ரூ...............) வாக்குறுதிச் சான்றிதழை வழங்குகின்றோம்.

கொடுப்பனவிற்கான சமா்ப்பித்தலை நாம் இத்தால் வலியுறுத்தாமல் விடுவதுடன் எமது குறிப்பிட்ட வாக்குறுதிச்சான்றிதழ் தொடர்பில் மறுப்பது பற்றிய அறிவித்தல் வழங்கப்பட வேண்டுமென்ற அவசியமுமில்லை என நாம் இத்தால் தெரிவித்துக் கொள்கிறோம்.

(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்) இற்காக
மீள்நிதியிடல் பிரிவு
தலைமை அலுவலகம்

**இறப்பர் முத்திரை**

1. .......................................................
2. .......................................................

(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்/ அலுவலர்களின் கையொப்பம்)

இணைப்பு VIII

**மீள்நிதியிடல் விண்ணப்ப இல.:- ........................................................**

**(2021.05.04 திகதியிடப்பட்ட இலக்கம் ஆர்டிடி/டிஏடி-பிபி/2021/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு)**

**நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 88அ இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கு உத்தரவாதமளிப்பதன் மூலமான சாட்டுதல் படிவம்***

கொழும்பு

திகதி: ...................

1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச் சட்டம் மற்றும் 1968ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க நாணய விதிச் சட்டம் (திருத்தப்பட்டது) என்பனவற்றினால் திருத்தப்பட்டவாறான நாணய விதிச் சட்டத்தின் 88(அ) பிரிவின் நியதிகளில் ...................................................................
..........................................................................................................................................................

(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி)

ஆகிய நாங்கள் இங்கே தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களின்படி எமக்கு வழங்கப்பட்டுள்ள படுகடனை மீளச்செலுத்துவதற்கான பிணையாக/ மேலும் பிணையமாக, வங்கியினால் எமக்கு வழங்கப்பட்ட கடனை ஆண்டிற்கு ................... வட்டியுடன் ரூபா.........................................(ரூ..........) கொண்ட கடனை இலங்கை மத்திய வங்கிக்கு மீளச்செலுத்துவதற்கான சாட்டுதலை இத்தால் மேற்கொள்கிறோம்.

**அட்டவணை**

| படுகடன் தொகை (ரூ.) | கடன்பாட்டாளர் பெயர் மற்றும் முகவரி | திகதி | நொத்தாரிசு |
|---|---|---|---|
| | | | |

........................................................................

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்

**இறப்பர் முத்திரை** (பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்) இற்காக

மீள்நிதியிடல் பிரிவு

தலைமை அலுவலகம்

* உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினால் பயன்படுத்தப்படுவதற்கு மட்டும்.

இணைப்பு IX

**பகிர்ந்தளிப்புக் கடிதம்**

**(2021.05.04 திகதியிடப்பட்ட இலக்கம் ஆர்டிடி/டிஏடி-பிபி/2021/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு)**

வங்கியின் பெயர்:
வங்கியின் குறியீட்டு இல:
கிளையின் பெயர்:
கிளையின் குறியீட்டு இல:
கடனின் பதிவு இல:
திகதி:
பகிர்ந்தளிப்பு:

| * | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

**உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னோடிச் செயற்றிட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் கூற்று**

**விசாரணை இலக்கம்:**

1. **கடன்பாட்டாளரின் விபரங்கள் :**

 1.1 கடன்பாட்டாளரின் பெயர் :

1.2 கடன்பாட்டாளரின் முகவரி :

**2. கடனின் விபரங்கள்**

2.1 கடனின் நோக்கம் :

2.2 துணைச் செயற்றிட்டத்தின் அமைவிடம் :

2.3 ஒப்புதலளிக்கப்பட்ட கடனின் மொத்தத் தொகை: ஆரம்பத் தொகை ரூ. ...............................................

அதிகரித்த செலவிற்காக பின்னர் அதிகரிக்கப்பட்ட கடன் ரூ. ...............................................

மொத்தம் ரூ. ...............................................

2.4 மூலக் கடன் தொகைக்கு ஒப்புதலளித்த திகதி:

கடன் அதிகரிப்பிற்கு ஒப்புதலளிக்கப்பட்ட திகதி:

2.5 மீள்நிதியிடல் விண்ணப்பிக்கப்பட்ட தவணைப் பணத்திற்கான மீள்கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம்:

திகதி: தொகை ரூ.: ...............................................

2.6 வட்டி வீதம்

**3. கடனின் நிலை**

3.1 முன்னர் வழங்கப்பட்ட தொகை )

மற்றும் இ.ம. வங்கியிலிருந்து கோரப்பட்ட மீள்நிதியிடல் ) ரூ. ...............................................

3.2 தற்பொழுது வழங்கப்பட்ட தொகை )

மற்றும் இதற்காக எதிர்பார்க்கப்படுகின்ற மீள்நிதியிடல் ) ரூ. ...............................................

மொத்தம் ரூ. ...............................................

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென நான் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி: கிளை முகாமையாளரின் கையொப்பம் **இறப்பர் முத்திரை**

கிளை முகாமையாளரின் பெயர்

* பொருத்தமான கூட்டில் புள்ளடி அடையாளத்தினை இடுவதன் மூலம் இது 1ஆவது, 2ஆவது அல்லது எந்தத் தவணைக்குரியது என்பதனை தயவுசெய்து காட்டவும்.

அலுவலகப் பயன்பாட்டிற்கு மாத்திரம்
செயற்றிட்ட தொடர்பு:

அட்டவணை I

**செயற்றிட்ட முன்மொழிவுப் படிவம் (ரூ.1 மில்லியனுக்கும் குறைவான கடன் தொகை)**

1. செயற்றிட்ட அடையாளப்படுத்தல்/ மாதிரிப்படுத்தல்

1.1 செயற்றிட்ட தொடர்பு:

1.2 செயற்றிட்ட தலைப்பு:

1.3 செயற்றிட்ட அமைவிடம்:

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | கிராமசேவகர் பிரிவு |
|---|---|---|---|
| | | | |

1.4 அமைவிடத்தின் முகவரி:

1.5 செயற்றிட்டத்தின் வகை

| | | | |
|---|---|---|---|
| **ஆரம்பிக்கப்படவுள்ளவை** | | **ஏற்கனவேயுள்ளவை** | |

1.6 செயற்றிட்ட வகை

| காய்கறிகள் | | பாற்பண்ணை | | வாசனைத்திரவியங்கள் | |
|---|---|---|---|---|---|

1.7 முழுமையான செயற்றிட்ட முன்மொழிவினைச் சமர்ப்பிக்கும் திகதி:

**2. தனிப்பட்ட/ வியாபாரத் தகவல்கள்**

2.1 தனிப்பட்டவரின் முழுப்பெயர்/ வியாபாரத்தின் பெயர்:

2.2 தே.அ.அ. இல./ வியாபாரப் பதிவு இலக்கம் மற்றும் திகதி (ஏதேனுமிருப்பின்)

2.3 வியாபாரம் தொடங்கும் திகதி:

2.4 சட்டபூர்வ நிலை (ஏதேனுமிருப்பின்)

2.5 வங்கி விபரங்கள்

| வங்கி | கிளை | கணக்கின் வகை | கணக்கு இல. |
|---|---|---|---|
| | | | |
| | | | |

2.6 தொடர்பு கொள்வதற்கான விபரங்கள்

- அஞ்சல் முகவரி:
- தொடர்பு கொள்ளும் இல:

2.7 கணக்காய்வாளர் விபரங்கள் (ஏதேனுமிருப்பின்):

**3. தற்போதைய நிதியியல் நிலைமை (ஏற்கனவேயுள்ள பெறுமதி சங்கிலி தொழிற்பாட்டாளர்களுக்காக)**

3.1 கடந்த மூன்று ஆண்டுகளில் வருமானம்/ வருவாய் (ஏதேனுமிருப்பின்)

| நிதியியல் ஆண்டு | மொத்த வருமானம்/ வருவாய் (ரூ.) |
|---|---|
| | |
| | |

3.2 தொடங்கப்படவுள்ள/ஏற்கனவேயுள்ள வியாபாரங்கள் தொடர்பில் முன்னர் பெறப்பட்ட கடன்களின் விபரங்கள்

| வங்கி | கடன் தொகை (ரூ.) | காலம் | கடன் எடுத்த திகதி | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

**4. முன்மொழியப்பட்ட செயற்றிட்டத்தின் விபரணம்**
(செயற்றிட்டத்தைச் சுருக்கமாக விளக்கவும்)

4.1 குறிக்கோள்கள்
(செயற்றிட்டத்தின் கீழ் எய்தப்படவுள்ள முக்கிய குறிக்கோள்கள் இங்கே விளக்கப்படுதல் வேண்டும்)

4.2 புதிய உற்பத்திகள்/ புதிய தொழில்நுட்பவியல்
(வியாபாரத்தின் புதிய உற்பத்தி மற்றும் வியாபாரத்திற்குப் பயன்படுத்தப்படவுள்ள பிந்திய தொழில்நுட்பங்கள் விளக்கப்படுதல் வேண்டும்)

உற்பத்தி வகைகள்/ பணிகளின் சொத்துப்பட்டியல்

| உற்பத்திகளின்/பணிகளின் பெயர் | அளவிடலின் அலகு | உற்பத்திச் செலவு | விற்பனை விலை (ரூ.) | மொத்த இலாபம் (ரூ.) |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

4.3 திட்டம் மற்றும் செய்முறைப்படுத்தல்
(உற்பத்தித் திட்டம் விளக்கப்படுதல் வேண்டும்)

**5. அநுகூலங்கள் மற்றும் பாதுகாப்பு முறைகள்**

(கிராமம்/ நகரம்/ பிரதேசம் அல்லது நாட்டிற்கான அநுகூலம் மற்றும் வியாபாரங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டிய பாதுகாப்பு முறைகள் விளக்கப்படுதல் வேண்டும்)

**6. சூழல் பற்றிய பாதுகாப்பு**

(சூழல் பற்றிய பாதுகாப்பிற்காக பிரயோகிக்கப்பட வேண்டிய முறைகள் விளக்கப்படுதல் வேண்டும்)

**7. தொழில்நுட்ப இயலாற்றல்**

7.1 தொழில்நுட்பவியல்

(வியாபாரத்திற்காகப் பயன்படுத்தப்படவுள்ள தொழில்நுட்பவியல்/ புதிய முறைகள் விளக்கப்படுதல் வேண்டும்)

7.2 தொழில்நுட்பவியலைப் பின்பற்றுவதற்காகத் தீர்மானிக்கப்பட்ட இயலளவு

(தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துவதற்கான தீர்மான இயலாற்றல் விளக்கப்படுதல் வேண்டும்)

7.3 பொறி/ தொழிற்சாலை இயலளவு

| பொறியின் பெயர் | வர்த்தக நாமம்/ வர்த்தகப் பெயர் | உயர்ந்தபட்ச இயலளவு | பயன்படுத்தப் படவுள்ள உத்தேச இயலளவு | நாளொன்றிற்கான உற்பத்தி | பயன்பாட்டின் நோக்கம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

**8. நிதியியல் எதிர்வுகூறல்**

திரும்ப வழங்கும் காலம்:

மாதாந்த தவணைப் பணம் (மூலதனம் மற்றும் வட்டி தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்):

**9. முக்கிய சட்ட ஆவணங்கள் மீதான கருத்துரை**

9.1 வியாபாரப் பதிவு (ஏதேனுமிருப்பின்)

9.2 ஏனைய சட்ட ஆவணங்கள் (ஏதேனுமிருப்பின்)

**10. முன்மொழியப்பட்டுள்ள வரவு செலவுத்திட்ட விபரங்கள்**

| விடய இல. | விடயம்/ நடவடிக்கை | ஏற்கனவேயுள்ளவை | | முன்மொழியப்பட்டவை | | மொத்த முதலீடு (ரூ.) |
|---|---|---|---|---|---|---|
| | | வங்கி (ரூ.) | பங்குரிமை மூலதனம் (ரூ.) | வங்கி (ரூ.) | பங்குரிமை மூலதனம் (ரூ.) | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| மொத்தம் | | | | | | |

இப்பத்திரத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேலேயுள்ள விடயங்களும் எண் தொகைகளும் எனது அறிவுக்கு எட்டியவரை துல்லியமானவை.

..........................................................................................................

பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்

..........................................................................

விண்ணப்பதாரி

மேலேயுள்ள முன்மொழிவினை ஏற்றுக்கொள்வதற்கும் உயர்ந்தபட்சக் கடன் தொகையான ரூ............. வழங்குவதற்கும் முகாமையாளரின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

ஒப்புதலளிக்கப்பட்டது/ ஒப்புதலளிக்கப்படவில்லை

.......................................................................

தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனக் கிளையின் முகாமையாளர்

**இறப்பர் முத்திரை**

அலுவலகப் பயன்பாட்டிற்கு மாத்திரம்
செயற்றிட்ட தொடர்பு:

**அட்டவணை II**

**செயற்றிட்ட முன்மொழிவுப் படிவம் (ரூ.1 மில்லியனுக்கும் கூடுதலான கடன் தொகை)**

**1. செயற்றிட்ட அடையாளப்படுத்தல்/ மாதிரிப்படுத்தல்**

1.1 செயற்றிட்ட தொடர்பு:

1.2 செயற்றிட்ட தலைப்பு:

1.3 செயற்றிட்ட அமைவிடம்:

| மாகாணம் | மாவாட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | கிராமசேவகர் பிரிவு |
|---|---|---|---|
| | | | |

1.4 அமைவிடத்தின் முகவரி:

1.5 செயற்றிட்டத்தின் வகை

| | | | |
|---|---|---|---|
| **ஆரம்பிக்கப்படவுள்ளவை** | | **ஏற்கனவேயுள்ளவை** | |

1.6 செயற்றிட்ட வகை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **காய்கறிகள்** | | **பாற்பண்ணை** | | **வாசனைத்திரவியங்கள்** | |

1.7 முழுமையான செயற்றிட்ட முன்மொழிவினைச் சமர்ப்பிக்கும் திகதி:

**2. தனிப்பட்ட/ வியாபாரத் தகவல்கள்**

2.1 தனிப்பட்டவரின் முழுப்பெயர்/ வியாபாரத்தின் பெயர்:

2.2 தே.அ.அ. இல./ வியாபாரப் பதிவு இலக்கம் மற்றும் திகதி (ஏதேனுமிருப்பின்)

2.3 வியாபாரம் தொடங்கும் திகதி:

2.4 சட்டபூர்வ நிலை (ஏதேனுமிருப்பின்)

2.5 வங்கி விபரங்கள்

| வங்கி | கிளை | கணக்கின் வகை | கணக்கு இல. |
|---|---|---|---|
| | | | |
| | | | |

2.6 தொடர்பு கொள்வதற்கான விபரங்கள்

- அஞ்சல் முகவரி:
- தொடர்பு கொள்ளும் இல:

2.7 கணக்காய்வாளர் விபரங்கள் (ஏதேனுமிருப்பின்):

**3. தற்போதைய நிதியியல் நிலைமை (ஏற்கனவேயுள்ள பெறுமதிச் சங்கிலி தொழிற்பாட்டாளர்களுக்காக)**

3.1 கடந்த மூன்று ஆண்டுகளில் வருமானம்/ வருவாய் (ஏதேனுமிருப்பின்)

| நிதியியல் ஆண்டு | மொத்த வருமானம்/ வருவாய் (ரூ.) |
|---|---|

| | |
|---|---|
| | |
| | |

3.2 தொடங்கப்படவுள்ள/ஏற்கனவேயுள்ள வியாபாரங்கள் தொடர்பில் முன்னர் பெறப்பட்ட கடன்களின் விபரங்கள்

| வங்கி | கடன் தொகை (ரூ.) | காலம் | கடன் எடுத்த திகதி | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

**4. முன்மொழியப்பட்ட செயற்றிட்டத்தினைச் சுருக்கமாகத் தருக**

(செயற்றிட்டத்தின் விபரணம் இங்கே குறிப்பிடுதல் வேண்டும்)

4.1 குறிக்கோள்கள்

(செயற்றிட்டத்தின் கீழ் எய்தப்படவுள்ள முக்கிய குறிக்கோள்கள் இங்கே விளக்கப்படுதல் வேண்டும்)

4.2 செயற்றிட்டங்களின் விளைவுகள்/ பெறுபேறு

| குறிகாட்டிகள் | அளவிடலின் அலகு | ஆண்டு 0* | இலக்கிடல் பெறுமானங்கள் (ஒன்றுசேர்ந்த இலக்கங்கள்) | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | ஆண்டு 1 | ஆண்டு 2 | ஆண்டு 3 | ஆண்டு 4 | ஆண்டு 5 |
| | | | | | | | |

ஆண்டு 0* - புதிய செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர்

4.3 புத்தாக்கம்/ புதிய தொழில்நுட்பவியல்

(வியாபாரத்தின் புதிய உற்பத்தி மற்றும் வியாபாரத்திற்காகப் பயன்படுத்தப்படவுள்ள பிந்திய தொழில்நுட்பங்கள் விளக்கப்படுதல் வேண்டும்)

4.4 பெறுமதிகூட்டப்பட்டவை

(உற்பத்தியுடன் தொடர்பான பெறுமதிகூட்டப்பட்ட பாதை/ உற்பத்தியுடன் தொடர்பான செய்முறைகள் விளக்கப்படுதல் வேண்டும்)

உற்பத்தி வகை/ பணிகளின் சொத்துப்பட்டியல்

| உற்பத்திகளின்/பணிகளின் பெயர் | அளவிடலின் அலகு | உற்பத்திச் செலவு | விற்பனை விலை (ரூ.) | மொத்த இலாபம் (ரூ.) |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

4.5 திட்டம் மற்றும் செய்முறைப்படுத்தல்

(உற்பத்தித் திட்டம் மற்றும் உற்பத்திக்காகப் பயன்படுத்தக்கூடிய உபாயங்கள் இங்கே விளக்கப்படுதல் வேண்டும்)

**5. சமூக நன்மைகள் மற்றும் பாதுகாப்பு**

(சமூகம்/ கிராமம்/ நகரம்/ பிரதேசம் அல்லது நாட்டிற்கான நன்மைகள் மற்றும் வியாபாரங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டிய பாதுகாப்பு முறைகள் விளக்கப்படுதல் வேண்டும்)

**6. சூழல் பற்றிய பாதுகாப்பு**

(சூழல் பற்றிய பாதுகாப்பிற்காக பிரயோகிக்கப்பட வேண்டிய முறைகள் விளக்கப்படுதல் வேண்டும்)

**7. தொழில்நுட்ப சாத்தியங்கள்**

7.1 தொழில்நுட்பவியல்

(வியாபாரத்திற்காகப் பயன்படுத்தப்படவுள்ள தொழில்நுட்பவியல்/ புதிய முறைகள் விளக்கப்படுதல் வேண்டும்)

7.2 தொழில்நுட்பவியலைப் பின்பற்றுவதற்காக தீர்மானிக்கப்பட்ட இயலளவு

(தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துவதற்கான தீர்மான இயலாற்றல் விளக்கப்படுதல் வேண்டும்)

7.3 பொறி/ தொழிற்சாலை இயலளவு

| பொறியின் பெயர் | வர்த்தக நாமம்/ வர்த்தகப் பெயர் | உயர்ந்தபட்ச இயலளவு | பயன்படுத்தப் படவுள்ள உத்தேச இயலளவு | நாளொன்றிற்கான உற்பத்தி | பயன்பாட்டின் நோக்கம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

**8. நிதியியல் எதிர்வுகூறல்**

வருவாயின் உள்ளக விகிதம் :

திரும்ப வழங்கும் காலம் :

0* ஆண்டிற்கான உடனடி வருமானம் :

(ஏற்கனவேயுள்ள செயற்றிட்டங்களுக்கு மாத்திரம்

1 ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம் (ரூ.) :

2 ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம் (ரூ.) :

0* ஆண்டிற்கான புதிய செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட முன்னர் :

**9. முக்கிய சட்ட ஆவணங்கள் மீதான கருத்துரை**

9.1 வியாபார அந்தஸ்து

(அதாவது தனிப்பட்டவர்/ பிறைவேற் லிமிடெட்/ ஏக உரிமையாளர்/ பங்குடமையாளர்/ கூட்டுறவு/ சங்கம். அத்துடன், அந்தஸ்துடன் தொடர்பான ஆவணங்கள் வழங்கப்படல் வேண்டும்)

9.2 செயற்றிட்டக் காணி

(சொத்துடமையின் அந்தஸ்து, தொடர்பான ஆவணங்கள் மற்றும் செயற்றிட்டக் காணியின் ஏனைய விபரங்கள்)

9.3 ஏனைய சட்ட ஆவணங்கள்

**10. முன்மொழியப்பட்டுள்ள வரவு செலவுத்திட்ட விபரங்கள்**

| விடய இல. | விடயம்/ நடவடிக்கை | ஏற்கனவேயுள்ளவை | | முன்மொழியப்பட்டவை | | மொத்த முதலீடு (ரூ.) |
|---|---|---|---|---|---|---|
| | | வங்கி (ரூ.) | பங்குரிமை மூலதனம் (ரூ.) | வங்கி (ரூ.) | பங்குரிமை மூலதனம் (ரூ.) | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| மொத்தம் | | | | | | |

இப்பத்திரத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேலேயுள்ள விடயங்களும் எண் தொகைகளும் எனது அறிவுக்கு எட்டியவரை துல்லியமானவை.

..........................................................................................................

பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்

.........................................................................

விண்ணப்பதாரி

மேலேயுள்ள முன்மொழிவினை ஏற்றுக்கொள்வதற்கும் உயர்ந்தபட்சக் கடன் தொகையான ரூ............. வழங்குவதற்கும் முகாமையாளரின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

ஒப்புதலளிக்கப்பட்டது/ ஒப்புதலளிக்கப்படவில்லை

.......................................................................

**தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனக் கிளையின் முகாமையாளர்**

**இறப்பர் முத்திரை**

2021 யூன் 09

தொடர்பு இல: 32/04/034/0001/001

சேரல்: அனைத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்/ பொது முகாமையாளர்

கனம் ஐயா/ அம்மணி,

**சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி: சலுகைகளை நீடித்தல்**

தற்பொழுது காணப்படும் கொவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக வியாபாரங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் எதிர்நோக்கப்பட்ட சவால்களை அடையாளம் கண்ட இலங்கை மத்திய வங்கி, சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி கட்டம் I. II மற்றும் III இன்கீழ் வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட தொழிற்படு மூலதனக் கடன்களுக்கு மாத்திரம் சலுகைக் காலத்தினை 2021 செத்தெம்பர் 30ஆம் திகதிவரையும் மீள்கொடுப்பனவுக் காலப்பகுதியை பன்னிரண்டு (12) மாதங்களினாலும் (அதாவது சலுகைக்காலம் உட்பட மொத்த மீள்கொடுப்பனவுக் காலம் 36 மாதங்கள் வரை) நீடிப்பதற்குத் தீர்மானித்தது.

சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதியின் கட்டம் III இன்கீழ் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் 2021 மாச்சு 24ஆம் திகதி விடுக்கப்பட்ட கடிதத்தின்படி மேலேயுள்ள சலுகைகளின்கீழ் நீடிக்கப்பட்ட கடன் மீள்கொடுப்பனவுக் காலம் மற்றும் சுற்றுலாத் துறையிலுள்ள கடன்பாட்டாளர்களுக்காக ஏற்கனவே நீடிக்கப்பட்ட கடன் மீள்கொடுப்பனவுக் காலம் தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பூஜ்யம் புள்ளி இரண்டு ஐந்து சதவீதம் (0.25%) கொண்ட மேலதிகக் கொடுகடன் உத்தரவாதக் கட்டுப்பணத்தினை செலுத்துதல் வேண்டும். இலங்கை மத்திய வங்கிக்கு செலுத்தப்படவேண்டிய கட்டுப்பணம் ஆரம்பத்தில் விடுவிக்கப்பட்ட துணைக் கடன் தொகையின் பெறுமதியிலிருந்து கணிக்கப்படுதல் வேண்டும். கொடுகடன் உத்தரவாதத்திற்கான கட்டுப்பணச் செலவினை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தாங்கிக்கொள்ள வேண்டும் என்பதுடன் அவற்றை கடன்பாட்டாளர் மீது சுமத்தக்கூடாது.

சலுகைகளைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகின்ற தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் அத்தகைய சலுகைகளைப் பெறுவதற்காக தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு 2021 யூன் 30ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கோரிக்கையொன்றினை விடுவித்தல் வேண்டும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் சலுகைகள், காலவரையறைகள் மற்றும் சமர்ப்பிப்பதற்கான விண்ணப்பப்படிவம் என்பன பற்றி தகைமையுடைய அனைத்து கடன்பாட்டாளர்களையும் மின்னஞ்சல் மற்றும் குறுந்தகவல் உட்பட அச்சு அத்துடன்/ அல்லது இலத்திரனியல் ஊடகங்களூடாக விரைவாக தொடர்புகொள்ளுதல் வேண்டும்.

இதற்கமைய, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் சலுகைகளை நீடிக்கவிரும்பும் கடன்பாட்டாளர்களிடமிருந்து கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளுமாறும் இணைக்கப்பட்ட படிவத்தில் (ஆர்டிடி 09.06.2021 - இணைப்பு 1) உள்ளவாறு ஒவ்வொரு கட்டத்திற்குமான விபரங்களை தனித்தனியாக கட்டம் III இன்கீழ் உள்ள ஒவ்வொரு துணைக் கடனுக்குமாக பூஜ்யம் - புள்ளி இரண்டு ஐந்து சதவீதம் (0.25%) கொண்ட உத்தரவாதக் கட்டுப்பணத்துடன் 2021 யூலை 31ஆம் நாளன்று பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளருக்கு அறிக்கையிடுதல் வேண்டும். விபரங்களின் மென்பிரதியை எக்சல் படிவத்தில் bashika@cbsl.lk மற்றும் sehan@cbsl.lk இற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

இக்கடிதத்தின் உள்ளடக்கத்தினை தங்கள் வங்கியின் தொடர்பான திணைக்களத்தின்/ கிளைகளிலுள்ள அலுவலர்களது கவனத்திற்கு தயவுசெய்து கொண்டு வரவும்.

உங்கள் உண்மையுள்ள,

பீ.எல்.ஜே.எஸ். பாலசூரிய
**பணிப்பாளர்**
**பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**

**இணைப்பு I**

ஆர்டிடி 09.06.2021

**"சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி"**

கட்டம்1: ......................

**வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளின் நீடிப்பு பற்றிய விபரங்கள்**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்: .................................................

| # | இ.ம. வங்கியின் பதிவு இலக்கம் | இ.ம. வங்கியின் மீள்நிதியிடல் இல. (ஏற்புடைய தாயின்) | கடன்பாட்டாளரின் பெயர் | தே.அ. அட்டை | கடன்பாட்டாளர் இல் (ஏதுமிருப்பின்) | இ.ம. வங்கியினால் ஒப்புதலளிக் கப்பட்ட கடன் தொகை (ரூ.) | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களினால் விடுவிக்கப்பட்ட கடன் தொகை (ரூ.) | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களினால் கடன் விடுக்கப்பட்ட திகதி | 2-சேரவேண்டிய கட்டுப்பணம் (மொத்த கடன் தொகையில் 0.25 சதவீதம்) ரூ. | சலுகை நீடிக்கப்பட்ட திகதி | சலுகைக் காலம் | | | | சலுகைக் காலம் உட்பட மீள்கொடுப்பனவுக் காலம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | ஏற்கனவே யுள்ளவை (மாதங்களின் எண்ணிக்கை) | 3-கோரப்பட்ட/ அனுமதிக் கப்பட்ட எண்ணிக்கை | 4 - அனுமதிக் கப்பட்டவை (மாதங்களின் எண்ணிக்கை) | முடிவுத் திகதி | மூலம் (மாதங்களின் எண்ணிக்கை) | கேட்டுக் கொள்ளப் பட்டது (மாதங்களின் எண்ணிக்கை) |
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |

............................................................................

(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர், கையொப்பம்

மற்றும் அலுவலக முத்திரை)

............................................................

திகதி

1 திட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திற்குமாக தனித்தனியாக தாளினை வழங்கவும்.

2 கட்டம் III இன்கீழ் உள்ள கடன்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்.

3 2021 யூன் 09ஆம் திகதியிடப்பட்ட பிரதேச அபிவிருத்தித் திணைக்களக் கடிதத்தின்படி ஏற்புடையதான சலுகைகளுக்கு மாத்திரமே பொருந்தும்.

4 சுற்றுலாத் துறை கடன்களுக்காக முன்னர் வழங்கப்பட்ட சலுகைகளுக்கு மாத்திரமே பொருந்தும்.

தொடர்பு இல: 32/04/034/0001/001 2021 யூன் 17

சேரல்: அனைத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்/ பொது முகாமையாளர்

கனம் ஐயா/ அம்மணி

1. **சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி: சுற்றுலாத் தொழிற்துறையிலுள்ள வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை நீடித்தல்.**

2. **சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி: சலுகைகளை நீடித்தல்.**

இது, மேலேயுள்ள விடயங்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளரினால் முறையே 2021.03.24ஆம் திகதியிலும் 2021.06.09ஆம் திகதியிலும் விடுக்கப்பட்ட கடிதங்கள் தொடர்பிலான பின்வரும் விடயங்களை தெளிவுபடுத்த விரும்புகின்றது.

அனைத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களும் நீடிக்கப்பட்ட சலுகைக் காலத்தில் உருவாகின்ற ஒன்றுசேர்ந்த மூலதனத்தின் மீதான வட்டி வீதத்தினை, சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி கட்டம் I, II மற்றும் III இன் நடைமுறைப்படுத்தல் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட தொடர்பான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களிலும் அதன்பின்னர் செய்யப்பட்ட திருத்தங்களிலும் வழங்கப்பட்டவாறு ஆண்டிற்கு 4 சதவீத வட்டி வீதத்துடன் இணங்கிச்செல்கின்ற விதத்தில் கணித்தல் வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றன.

சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி கட்டம் I மற்றும் II இனைப் பெறுத்தவரை, எவரேனும் துணைக் கடன்பாட்டாளர் சலுகைக் காலப்பகுதியில் வட்டியினை கொடுப்பனவு செய்யாதிருப்பதனை தேர்வுசெய்வாராயின் அத்தகைய சலுகைக் காலத்தில் ஒன்றுசேர்ந்த வட்டியை எஞ்சியுள்ள கடன் தவணைகளுக்கிடையே சமமாக பகிர்ந்துகொள்ளுதல் வேண்டும். சலுகைக் காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த வட்டியின் மீது வட்டி எதுவும் விதிக்கப்படக்கூடாது என்பதுடன் சலுகைக் காலத்தில் ஏதேனும் கூட்டு வட்டியும் இடம்பெறக்கூடாது. மேலும், ஏதேனும் தெளிவுபடுத்தல்களுக்கு நீங்கள் bashika@cbsl.lk அல்லது sehan@cbsl.lk இல் தொடர்புகொள்ளலாம்.

மேலும், வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட கொடுகடன் வசதிகளை செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தல் தொடர்பான ஒழுங்குவிதிகளுடன் இணங்கிச்செல்வதற்குட்பட்டு, நீடிக்கப்பட்ட சலுகைக் காலத்தினை பிரயோகிக்க முடியும். இவ்வறிவித்தல்களுடன் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்காக, இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் ஏற்பாடுகள் செய்யப்படும்.

தங்கள் வங்கியின் தொடர்பான திணைக்களங்கள்/ கிளைகளின் அலுவலர்களின் கவனத்திற்கு இக்கடிதத்தின் உள்ளடக்கத்தினை தயவுசெய்து கொண்டுவரவும்.

உங்கள் உண்மையுள்ள,

பீ.எல்.ஜே.எஸ். பாலசூரிய
**பணிப்பாளர்**
**பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல: ஆர்டிடி/சிஜி/ஆர்எம்/2021/01**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ.இல. 590
இல.30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு - 01
2021.09.01

சேரல்: அனைத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**
**இலங்கையிலுள்ள அரிசி ஆலைச் சொந்தக்காரர்களுக்கு வழங்கப்படவுள்ள கடன்களுக்கான**
**கொடுகடன் உத்தரவாதத் திட்டம்**

இலங்கையிலுள்ள அரிசி ஆலைச் சொந்தக்காரர்களுக்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்படவுள்ள கடன்களுக்காக கொடுகடன் உத்தரவாதத் திட்டமொன்றினை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துவதற்காக அனைத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் (இதனகத்துப் பின்னர் "பங்கேற்கும் நிதியியல் நிறுவனம்" எனக் குறிப்பிடப்படும்) இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளரினால் (இதனகத்துப்பின்னர் "நிருவகிப்பவர்" எனக் குறிப்பிடப்படும்) 2021.09.01ஆம் திகதியிடப்பட்ட ஆர்டிடி/சிஜி/ஆர்எம்/2021/01ஆம் இலக்க தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

1. **அறிமுகம்**

1.1 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் அரிசி ஆலைச் சொந்தக்காரர்களுக்கு நெற்கொள்வனவுக்காக அவர்களின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக (இதனகத்துப்பின்னர் "கடன்பாட்டாளர்" எனக் குறிப்பிடப்படுவர்) வழங்கப்படவுள்ள கடன்களுக்காக கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் (இதனகத்துப் பின்னர் "திட்டம்" எனக் குறிப்பிடப்படும்) கீழ் தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் வழங்கிய கடன்களுக்காக கொடுகடன் உத்தரவாதத்தினை வழங்குவதற்கான திட்டம் இலங்கை அரசாங்கத்தின் வழிகாட்டலின் கீழ் நிருவகிப்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

1.2 அரிசி ஆலைச் சொந்தக்காரர்களினால் அவர்களது தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்வதில் எதிர்நோக்கப்படும் இடர்பாடுகளை பரிசீலனையில் கொண்டு, 2021.01.07ஆம் திகதி மாண்புமிகு பிரதம மந்திரி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

1.3 இத்திட்டத்தின் கீழ் நிருவகிப்பவர், தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்படவுள்ள கடன்தொகையில் அறுபது சதவீதம் வரையிலான (60%) தொகைக்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு கொடுகடன் உத்தரவாதப் பாதுகாப்பினை வழங்குகின்றார். கடன் தொகையில் மீதி நாற்பது சதவீதமான (40%) கொடுகடன் இடர்நேர்வினை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பொறுத்துக்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

2. **திட்டத்தின் நடைமுறைப்படுத்தல்**

திட்டமானது பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் பங்கேற்புடன் நிருவகிப்பவரால் நடைமுறைப்படுத்தப்படுகிறது

3. **திட்டத்தின் குறிக்கோள்கள்**

திட்டத்தின் குறிக்கோள்கள் வருமாறு

3.1 நெல்லினை கொள்வனவு செய்யும் நேரத்தில் அரிசி ஆலைச் சொந்தக்காரர்களினால் எதிர்நோக்கப்படும் நிதியியல் தடைகளுக்கு தீர்வு காண்பதற்கு அவர்களுக்கு வசதியளிப்பது.

3.2 அடையாளம் காணப்பட்ட துறைகளுக்கு காத்திரமானதொரு விதத்தில் கொடுகடன் நுழைவுகளை அதிகரிப்பது.

3.3 அரிசி ஆலைச் சொந்தக்காரர்களின் வாய்ப்புக்களை வலுப்படுத்துவதன் மூலம் அரிசியில் தன்னிறைவினை அடையும் தேசிய குறிக்கோளினை எய்துவதற்காக அரிசி ஆலைச் சொந்தக்காரர்களின் பங்களிப்பினை அதிகரிப்பது.

3.4 கொடுகடன் இடர்நேர்வினைத் தணிப்பதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு ஆதரவளித்தல்.

4. **நியதிகள் மற்றும் நிபந்தனைகள்**

**4.1 பொதுவான தேவைப்பாடுகள்**

4.1.1 நெற்கொள்வனவு நோக்கங்களுக்காக, தமது சொந்த நிதியினைப் பயன்படுத்தி தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கு கடன்களை வழங்கிய பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இத்திட்டத்தின் கீழ் கொடுகடன் உத்தரவாத வசதிகளைப் பெறத் தகைமையுடையனவாகும்.

4.1.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கொடுகடன் இடர்நேர்வினைத் தணிக்கும்பொருட்டு போதுமான பிணையுறுதியினைப் பெற்றுக்கொள்ளலாம்.

4.1.3 தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கு கடன்களை வழங்குவதற்கு முன்னர் நிருவகிப்பவரிடமிருந்து கொடுகடன் உத்தரவாத ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளுமாறு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

4.2 தொழிற்பாட்டு பிரதேசம்: நாடு முழுவதும்

4.3 தகைமைப் பிரமாணம்

4.3.1 ரூ.750 மில்லியனுக்கும் குறைவான வருடாந்த மொத்தப் புரள்வினைக் கொண்டுள்ள அரிசி ஆலைச் சொந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்ட தொழிற்படு மூலதனக் கடன்களுக்காக கீழே காட்டப்பட்டவாறான சலுகைகளைப் பயன்படுத்திக்கொள்வதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தகைமையுடையனவாகும்.

4.3.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், தொடர்பான கடன்பாட்டாளரின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளின் நிதியியல் இடைவெளியினை நிரப்புவதற்காக, கடன்பாட்டாளர் தொடர்பில் சரியான கொடுகடன் மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு உட்பட்டு, இத்திட்டத்தின் கீழ் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கடன்களை வழங்கலாம்.

4.3.2.1 இத்திட்டத்தின் கீழ், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் உயர்ந்தபட்சம் இலங்கை ரூபா இருபத்தைந்து மில்லியன் (ரூ.25 மில்லியன்) என்பதற்குட்பட்டு, கடன்பாட்டாளரின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாட்டிற்குச் சமமான கடனொன்றினை வழங்குவது பற்றி பரிசீலிக்கலாம்.

4.3.2.2 இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடனின் உயர்ந்தபட்ச மீள்கொடுப்பனவுக் காலம் ஒன்பது (09) மாதங்களாகவிருக்கும்.

4.3.2.3 திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடனுக்கான வட்டி வீதம் அப்போது நிலவுகின்ற வட்டி வீதமாக இருக்கமுடியும். (வங்கி நிதியிட்ட கடன்)

**5. தகைமையுடைய பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்**

திட்டமானது இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி என்பனவற்றினூடாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**6. கொடுகடன் உத்தரவாதத்திற்கான விண்ணப்பம்**

6.1 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்தல் வேண்டும்.

6.1.1 இணைப்பு I இல் வழங்கப்பட்ட தகவல்களின் துல்லியத்தன்மை மற்றும் இணக்கத்தன்மை (ஆர்டிடி/சிஜி/ஆர்எம்/ஐ)

6.1.2 இத்திட்டத்தின் கீழ் தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் சரியான முறையில் மதிப்பிடப்பட்டுள்ளமை.

6.1.3 அத்தகைய மதிப்பீடுகள் தொடர்பான அனைத்து ஆவணங்களும் சேகரித்து வைக்கப்பட்டுள்ளமை.

6.1.4 தகைமையுடைய கடன்பாட்டாளரிடமிருந்து எழுத்துமூலமான உத்தரவாதமொன்றினைப் பெற்றுக்கொள்வதன் மூலம் ஒரு பருவகாலத்தில் ஒரு அரிசி ஆலைக்கு ஒரு கடனுக்கு மேற்பட்ட கடன்களை தகைமையுடைய கடன்பாட்டாளர் பெறவில்லை என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுதல்.

6.2 திட்டத்தின் கீழ், தகைமையுடைய கடன்பாட்டாளர்களின் விபரங்களை பதிவுசெய்வதற்காக மென்பதிப்பில் தரப்பட்ட படிவங்களைப் பயன்படுத்தி தனியான படிவத்தில் (ஆர்டிடி/சிஜி/ஆர்எம்/ஐ- இணைப்பு I) இந்நோக்கத்திற்காக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகத்தினால் நியமிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினூடாக பிரதேச அபிவிருத்திப் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு/ முகவரிகளுக்கு முற்போந்த வாரத்திற்கான விபரங்களை வாராந்த அடிப்படையில் ஒவ்வொரு வாரத்திலும் செவ்வாய்க்கிழமையன்றோ அல்லது அதற்கு முன்னரோ வழங்குதல் வேண்டும்.

6.3 இணைப்பு Iஇல் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட தகவல்கள் போதுமானதற்றவை அல்லது துல்லியமற்றவை என நிருவகிப்பவர் கண்டறிவராயின் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தொடர்பான இணைப்பு I இனை மீண்டும் பரிசீலனை செய்வதற்கும் தெளிவுபடுத்தல்களுக்காக கூடுதலான தகவல்களையும் ஆவணப்படுத்தல்களை பார்வையிடுவதற்குமான உரிமையினை நிருவகிப்பவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

6.4 இணைப்பு I இல் தரப்பட்டுள்ள தகவல்கள் துல்லியமற்றவை அல்லது நிருவகிப்பவரை திருப்திப்படுத்துகின்ற அளவிற்கு இல்லை என கண்டறியப்படுமிடத்து பதிவுசெய்தலை மறுப்பதற்கான உரிமையினை நிருவகிப்பவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

6.5 பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திலிருந்து பதிவு இலக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து 10 வேலைநாட்களுக்குள் தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கு கடன்கள் வழங்கப்படுதல் வேண்டும்.

6.6 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், இத்திட்டத்தின் கீழ், கொடுகடன் உத்தரவாத வசதிகளை எதிர்பார்க்கின்ற, பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் முற்போந்த மாதத்தின் விபரங்களை மாதாந்த அடிப்படையில், ஒவ்வொரு மாதமும் 10ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இணைப்பு IIஇல் தரப்பட்டுள்ளவாறான படிவத்தினைப் பயன்படுத்தி பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு/ முகவரிகளுக்கு ஏற்புடைத்தான கட்டுப்பணத்துடன் சேர்த்து அனுப்பிவைத்தல் வேண்டும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இணைப்பு I/ II இன் கையொப்பமிடப்பட்ட வன்பிரதிகளை (ஏற்கனவே மின்னஞ்சல் செய்யப்பட்டவை) ஒவ்வொரு மாதமும் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும்.

6.7 சரியான முறையில் பூர்த்திசெய்யப்பட்ட இணைப்பு II முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டதும் நிருவகிப்பவர், அத்தகைய பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் உத்தரவாத கட்டுப்பணம் தொடர்பான கொடுப்பனவு நிறைவடைவதற்கு உட்பட்டு, இணைப்பு III இல் தரப்பட்டுள்ள உத்தரவாதப் பாதுகாப்பு குறிப்பினை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்குவார்.

**7. கொடுகடன் உத்தரவாதத்தின் அளவு**

7.1 இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன் இழப்பின் வெளிநின்ற மூலதனத் தொகையில் அறுபது சதவீதம் (60%) வரையிலான தொகைக்கு மட்டுமே இத்திட்டம் உத்தரவாதப் பாதுகாப்பினை வழங்கும்.

**8. கொடுகடன் உத்தரவாதத் தீர்ப்பனவு**

8.1 நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 108அ(1) இன் நியதிகளில் நிருவகிப்பவர் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களுக்கு உத்தரவாதங்களை வழங்கலாம்.

8.2 நிருவரிப்பவர் கட்டுப்பணத்தினை சேகரிப்பதற்கு, கோரல்களை செலுத்துவதற்கு மற்றும் கோரல்களைத் தீர்ப்பனவு செய்ததன்

பின்னர் அறவிடல்களுக்கான அழைப்பை விடுப்பதற்கு அதனுடன் தொடர்பான விடயங்களை மேற்கொள்வதற்குமான அதிகாரங்களைக் கொண்டிருக்கின்றார்.

**9. உத்தரவாதப் பாதுகாப்பு**

9.1 உத்தரவாதப் பாதுகாப்பானது, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் நிருவகிப்பவருக்கு உத்தரவாதக் கட்டுப்பணம் செலுத்தப்பட்டிருக்கிறது என்பதற்குட்பட்டு, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடனின் முதலாவது தவணைப் பணம் பகிர்ந்தளிக்கப்பட்ட திகதியிலிருந்து நடைமுறைக்குவரும்.

9.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் வழமையான கவனத்தினையும் முன்மதியுடைய தன்மையினையும் அவதானிக்க தவறியிருக்கின்றதெனவும் கடன்களின் பகிர்ந்தளிப்பிலும் கணக்குகளைக் கண்காணிப்பதிலும் காத்திரமான அறவிடல் செய்முறை/ நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அசட்டையாக நடந்திருக்கின்றன எனவும் நிருவகிப்பவர் கருதுவாரேயானால் உத்தரவாதப் பாதுகாப்பினை தொழிற்படுத்துவது நிறுத்தப்படும்.

**10. உத்தரவாத கட்டுப்பணத்தின் கொடுப்பனவு**

10.1 நிருவகிப்பவருக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டுப்பணம் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடனின் மொத்தத் தொகையில் ஒரு சதவீதமாக (1%) இருக்கும். (உதாரணமாக கடன்தொகை ரூ.100 ஆக இருக்குமாயின் கட்டுப்பணத்தொகை 0.01இல் (1% கட்டுப்பணம்) ரூ.100 இற்கு = ரூ.1.00 ஆக இருக்கும்)

10.2 உத்தரவாத கட்டுப்பணத்தினை செலுத்தத்தவறுவது உத்தரவாதப் பாதுகாப்பினைப் பெறுவதற்கான பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தகைமையினை இழக்கச்செய்யும்.

10.2.1 கட்டுப்பணத்தினை அதேநேர மொத்தக் கொடுப்பனவு முறை மாற்றலாக பிரதேச அபிவிருத்தி வங்கிக் கணக்கு இல.2-54518 (விபரத்தில் “வங்கியின் பெயரையும்” “திட்டத்தின் பெயரையும்” தயவுசெய்து குறிப்பிடவும்) இற்கு மேற்கொள்ளவும். தொடர்பான அதேநேர மொத்த தீர்ப்பனவுக் கொடுப்பனவின் விபரங்களை எக்செல் படிவத்தில் மின்னஞ்சலூடாக மாற்றல் செய்யப்பட்ட நாளன்று பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

10.3 கொடுகடன் உத்தரவாதத்திற்கான கட்டுப்பணத்தின் செலவு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் செலுத்தப்படவேண்டுமேயொழிய அவற்றைக் கடன்பாட்டாளர் மீது சுமத்தக்கூடாது.

**11. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் கடப்பாடுகள்**

11.1 கடன்களை பகிர்ந்தளிப்பதற்கு முன்னர், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கடன்பாட்டாளர்/ வியாபாரங்களின் தகைமையினையும் உண்மையான நிதியியல் தேவைப்பாடுகளையும் மதிப்பிடுவதற்கு நியாயமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

11.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், ஒரு பருவகாலத்தில் அதே அரிசி ஆலைக்காக இத்திட்டத்தின் கீழ் ஒன்றிற்கு மேற்பட்ட கடனைப் பெறவில்லை என்பதை உறுதிப்படுத்தும் உத்தரவாதமொன்றினை துணைக் கடன்பாட்டாளரிடமிருந்து எழுத்துமூலம் பெற்றுக்கொள்வதன் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். அதே பருவகாலத்தில் அதே அரிசி ஆலைக்காக வேறுபட்ட பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து இரண்டோ அல்லது அதற்கும் கூடுதலான கடன்களை கடன்பாட்டாளர் பெற்றிருக்கும் ஏதேனும் சந்தர்ப்பத்தில், கொடுகடன் உத்தரவாத வசதியை வழங்குவதில், கடன் கடன்பாட்டாளருக்கு/ கடன்பாட்டாளர்களுக்கு கடன் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது என்பதற்கும் ஏற்புடைத்தான கட்டுப்பணம் நிருவகிப்பவருக்கு செலுத்தப்பட்டுள்ளது என்ற நிபந்தனைக்கும் உட்பட்டு இத்திட்டத்தின் குறிப்பிட்ட கடன்பாட்டாளர்/ கடன்பாட்டாளர்கள் தொடர்பில் பதிவு செய்யப்பட்ட முதலாவது கடனுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

11.3 மேலும், ஒரு பருவகாலத்தில் அதே அரிசி ஆலைக்காக அதே கடன்பாட்டாளர்களுக்காக பதிவுசெய்யப்பட்டிருக்கும் வேறு ஏதேனும் கடன்களுக்கு இத்திட்டத்தின்கீழ் உத்தரவாதம் வழங்கப்படமாட்டது. எனினும், அத்தகைய கடன் மேலேயுள்ள பிரிவு 11.2இல் எடுத்துக்காட்டப்பட்டவாறு கடன் பகிர்ந்தளிக்கப்படாதும் கட்டுப்பணம் செலுத்தப்படாதும் காணப்படுமாயின், தொடர்பான கடனுக்காக பதிவுசெய்யப்பட்ட அடுத்த கடன்பாட்டாளருக்கு/ கடன்பாட்டாளர்களுக்கு கடன் பகிர்ந்தளிக்கப்பட்டு கட்டுப்பணம் செலுத்தப்பட்டிருக்கிறது என்ற நிபந்தனைக்குட்பட்டு திட்டத்தின்கீழ் கொடுகடன் உத்தரவாத வசதியை வழங்குவதற்கு பரிசீலிக்கப்படும்.

11.4 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், எல்லா நேரங்களிலும் கடன்பாட்டாளர்களுக்கு கடன்களை பகிர்ந்தளிப்பதில் உரிய கவனத்தினையும் முன்மதியுடைய தன்மையினையும் பயன்படுத்தல் வேண்டும் என்பதுடன் கடன்கள் எந்த நோக்கத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்றதோ அந்நோக்கத்திற்கு அவை பயன்படுத்தப்படுவதனையும் செயற்படாக் கடன் வகையிலுள்ள முன்னைய கடன்களை தீர்ப்பனவு செய்வதற்கோ அல்லது வேறுஏதேனும் நோக்கத்திற்கோ பயன்படுத்தப்படவில்லை என்பதனையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

11.5 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கணக்கின் நிலையினையும் தொழிற்பாடுகளையும் மேற்பார்வையிடல் வேண்டுமென்பதுடன் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு ஏற்படக்கூடிய இழப்புக்களைக் குறைப்பதற்கு, அவசியமானவிடத்து சரியான நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

11.6 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுவதற்கு அவசியமானதும் போதுமானதுமான வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

11.7 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கட்டுப்பணத்தினை தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் 10ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறு நிருவகிப்பவருக்கு செலுத்துதல் வேண்டும்.

11.8 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் ஒவ்வொரு கடன்கள் தொடர்பிலும் பதிவேடுகளைப் பேணவேண்டும் என்பதுடன் நிருவகிப்பவருக்கு தரவுகளையும் தகவல்களையும் சமர்ப்பித்தலும் வேண்டும்.

11.9 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், நிருவகிப்பவரின் எழுத்துமூலமான ஒப்புதல் இல்லாமல் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் கடன்களை பதிவழிப்புச் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டா.

11.10 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல் சுற்றறிக்கையிலுள்ள அனைத்து பணிப்புரைகளுக்கும் இணங்கியொழுவதனை உறுதிப்படுத்திக்கொள்ளும் விதத்தில் விசேட உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுடன் நிருவகிப்பவர் அத்தகைய கணக்காய்வு நடவடிக்கைகளின் அறிக்கையினையும் கோரலாம்.

12. நிருவகிப்பவரின் கடப்பாடுகள்

12.1 தேவையான பொழுது திருத்தங்கள் வெளியிடப்படும் என்பதற்குட்பட்டு, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை விடுத்தல்.

12.2 இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் 10ஆம் பிரிவின் நியதிகளில், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் உத்தரவாதக் கட்டுப்பணம் செலுத்தப்படுதல் வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு உத்தரவாதப் பாதுகாப்பினை வழங்குதல்.

12.3 தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் விபரிக்கப்பட்டவாறு, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து கட்டுப்பணத்தினைச் சேகரித்தல்.

12.5 இத்திட்டத்தின் கீழ் கடன்களை வழங்கும் போது பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் திட்டத்தின் தேவைப்பாடுகள்/ நியதிகள் மற்றும் நிபந்தனைகளை அல்லது முன்மதியுடைய வங்கித்தொழில் நடவடிக்கைகளை மீறுகின்றன என்பதனை கண்டறியுமிடத்து வழங்கப்பட்ட கொடுகடன் உத்தரவாதங்களை இரத்துச்செய்யும் உரிமைகளை நிருவகிப்பவர் தன்னகத்தே கொண்டிருக்கின்றார்.

13. நிலுவையிலுள்ளவற்றையும் செலுத்தத்தவறியவைகளையும் அறிக்கையிடல்

13.1 கடன் அல்லது அதன் ஏதேனும் தவணைப் பணம் உரிய திகதியில் செலுத்தப்படாதிருக்குமாயின் அத்தகைய நிலுவைகளைக் கடன்பாட்டாளரிடமிருந்து/ கடன்பாட்டாளர்களிடமிருந்து அறவிட்டுக்கொள்வதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் உடனடியானதும் காத்திரமானதுமான நடவடிக்கையினை எடுத்தல் வேண்டும்.

13.2 இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களை, கடன்களின் கொடுகடன் வசதிகளில் வகைப்படுத்தல் மற்றும் பாதிக்கப்படும் தன்மை தொடர்பான ஏற்புடைத்தான ஒழுங்குவிதிகள், வருமான அங்கீகரிப்பு மற்றும் ஒதுக்கங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட ஏனைய தொடர்பான பணிப்புரைகள் என்பனவற்றுடன் இணங்கிச்செல்லும் விதத்தில் செயற்படாக்கடன்களாக வகைப்படுத்தும் போது, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கடன்பாட்டாளரின் நிலையினை விளக்கும் அறிக்கையொன்றினை, கோரல்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும். அறிக்கையானது பின்வரும் தகவல்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும் -

13.2.1 கடன்பாட்டாளரினால் எதிர்நோக்கப்படும் பிரச்சனை/ பிரச்சனைகளின் மதிப்பீடொன்று

13.2.2 கடனை மீளச்செலுத்துவதற்கான கடன்பாட்டாளரின் இயலாற்றலைப் பற்றிய மதிப்பீடொன்று

13.2.3 கடன்களை அறவிடுவதற்காக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள எதிர்கால நடவடிக்கைகள்

13.2.4 அறவிடல்/ புனரமைப்பு தொடர்பான நிலை பற்றிய பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் அபிப்பிராயம்

13.2.5 நிருவகிப்பவருக்குத் தேவைப்படக்கூடிய அத்தகைய வேறு ஏதேனும் தகவல்கள்.

14. கோரல் நடைமுறை

14.1 இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் ஏதேனும் தொகையினைச் செலுத்தத்தவறியிருக்குமிடத்து, பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் தொடர்பான கடனை செயற்படாக்கடன் வகைக்கு மாற்றம் செய்த திகதியிலிருந்து ஒரு (1) மாதத்திற்குள் கடன்பாட்டாளருக்கு கேள்வி அறிவித்தலை அனுப்பிவைத்தல் வேண்டும்.

14.2 அதனைத்தொடர்ந்து, பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் ஒரு (1) மாதம் கழிந்தபின்னர், ஆனால் கடன்பாட்டளருக்கு

கேள்வி அறிவித்தல் வழங்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டு (2) மாதங்களுக்குள் பிரதேச அபிவிருத்திப் பணிப்பாளருக்கு ஆர்டிடி/சிஜி/ஆர்எம்/IV (இணைப்பு IV) படிவத்தினைப் பயன்படுத்தி கோரலொன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

14.3 மேலேயுள்ள பிரிவு 14.1 இன் நோக்கத்திற்காக, கேள்வி அறிவித்தலை கோரிக்கைக் கடிதம் மூலமாக செலுத்தத்தவறிய கடன்பாட்டாளருக்கு வழங்கலாம்.

14.4 கடன்பாட்டாளருக்கு வழங்கப்பட்ட கேள்வி அறிவித்தல் மற்றும் சட்ட நடவடிக்கையினை முன்னெடுத்தமைக்கான சான்றுகளின் உறுதிபடுத்தப்பட்ட பிரதிகளை கோரல் விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

14.5 செலுத்தப்படாதிருக்கும் தொகை உத்தரவாதப் பாதுகாப்பினைப் பெற்ற முதல் தொகையாகக் கருதப்படல் வேண்டும்.

14.6 கோரல் படிவம் கிடைக்கப்பெற்றதும், நிருவகிப்பவர், 14.7 மற்றும் 14.8 இற்குட்பட்டு, இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடனின் வெளிநின்ற மூலதனத் தொகையில் அறுபது சதவீதத்தினை (60%) இரண்டு தவணைகளில் செலுத்துவார். எனினும், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தேவையான மேற்பார்வையினை மேற்கொள்வதற்கும் இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் கீழ் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் தவறியிருக்கிறது அல்லது கவனமின்றியிருந்திருக்கிறது என நிருவகிப்பவர் கண்டறியுமிடத்து செலுத்தப்பட்ட தொகையினை மீளக்கோருவதற்கான உரிமையினை தன்னகத்தே கொண்டிருக்கின்றார்.

14.7 இணைப்பு IV (ஆர்டிடி/சிஜி/ஆர்எம்/IV) இல் தரப்பட்டுள்ள குறித்துரைக்கப்பட்ட வடிவத்திலமைந்த கோரல் படிவம் கிடைக்கப்பெற்றதும் நிருவகிப்பவர் தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் பிரிவு 7.1இல் தெரிவிக்கப்பட்ட வரையறைகளுக்குட்பட்டு, திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடனின் வெளிநின்ற மூலதனத் தொகையில் ஐம்பது சதவீதத்தினை (50%) செலுத்துவார். பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அறவிடல் நடவடிக்கைகள் தொடர்பான விபரமான அறிக்கையினை அனைத்து தொடர்பான ஆவணச்சான்றுகளுடன் சேர்த்து நிருவகிப்பவருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

14.8 முதல் கொடுப்பனவின் பின்னர், எஞ்சியுள்ள நிலுவை அதாவது திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடனின் வெளிநின்ற மூலதனத் தொகையிலிருந்து நிருவகிப்பவரினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட கோரலின் ஐம்பது சதவீதம் (50%) மேலேயுள்ள பிரிவு 14.7இல் குறிப்பிடப்பட்ட முதல் கொடுப்பனவிலிருந்து ஒன்பது (9) மாதத்திற்குள், சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமையிலிருந்து கிடைத்த வழக்கு இலக்கத்துடன் நிருவகிப்பவருக்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் படிவம் ஆர்டிடி/சிஜி/ஆர்எம்/V (இணைப்பு V) இனை சமர்ப்பிப்பதன் மீது செலுத்தப்படும்.

14.9 நிருவகிப்பவர், பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட கணிசமான அறவிடல் நடவடிக்கைகளுக்கும் நிருவகிப்பவரினால் மேற்கொள்ளப்பட்ட வியாபார பரீட்சிப்புக்களுக்குமுட்பட்டு மேலே 14.8இல் குறிப்பிட்ட வழக்கு இலக்கமில்லாத உத்தரவாத கோரல்களை ஒவ்வொரு விடயமாக ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளலாம்.

14.10 பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் 2ஆம் தவணைக்கான கோரல் படிவம் இணைப்பு V உடன் நீதிமன்ற வழக்கு இலக்கத்தினை சமர்ப்பிக்காதவிடத்தும் அத்துடன்/ அல்லது முதலாவது கொடுப்பனவுத் திகதியிலிருந்து 09 மாதத்திற்குள் கணிசமான அறவிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருக்குமிடத்தும் கொடுகடன் உத்தரவாதத்திற்கான முதலாவது தவணைக்காக செலுத்தப்பட்ட தொகையினை மீளக்கோருவதற்கான உரிமையினை நிருவகிப்பவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

## 15. செலுத்தத்தவறிய கடன்கள்

15.1 கோரல் எப்பொழுது தீர்ப்பனவு செய்யப்படுகின்றதோ அப்பொழுது பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், தொடர்பான கடன்களுக்காக செலுத்தப்பட்ட கொடுகடன் உத்தரவாத கோரல்களுக்கெதிராக இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் செயற்படாக்கடன் நிலுவைகளை எதிரீடுசெய்தல் வேண்டும்.

## 16. அறவிடல் நடவடிக்கை

16.1 கொடுகடன் உத்தரவாதம் கிடைக்கத்தக்கதாக இருப்பினும்கூட, இத்திட்டத்தின் கீழ் கடன்களின் அறவிடலைக் கண்காணிப்பதற்காக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறையொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

16.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் நிலுவையிலுள்ள ஏதேனும் தொகையினை அறவிடுவதற்கும் கிடைக்கத்தக்க ஏதேனும் வழிமுறையில் உடனடியானதும் காத்திரமானதுமான நடவடிக்கைகளுக்கும் முயற்சித்தல் வேண்டும் என்பதுடன் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் செயற்றிட்ட முன்னேற்றத்தினையும் நிருவகிப்பவருக்கு காலத்திற்குக் காலம் அறிவித்தலும் வேண்டும்.

16.3 செலுத்தத்தவறிய கடன்பாட்டாளர்களுக்கெதிராக அறவிடல் நடவடிக்கையினை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக நிருவகிப்பவரால் யோசனை தெரிவிக்கப்படக்கூடிய எந்தவொரு நடவடிக்கையினையும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் மேற்கொள்ளலாம். உத்தரவாதத் திட்டத்தின் கீழ் கோரல் தீர்ப்பனவு செய்யப்பட்ட பின்னரும்கூட பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அத்தகைய கடன்பாட்டாளர்களுக்கெதிராக ஏற்கனவே எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை நிறுத்தக்கூடாது.

## 17. கோரலுக்குப் பின்னரான தீர்ப்பனவு

17.1 உத்தரவாத கோரலொன்றின் கொடுப்பனவின் பின்னர், கடன்பாட்டாளரிடமிருந்து அறிவிடப்பட்ட அனைத்துத் தொகைகளும், கடன் இழப்பு பகிரப்பட்ட விதத்தில் முறையே 60:40 என்ற விதத்தில் நிருவகிப்பவருக்கும் பங்கேற்கும் நிதியியல்

நிறுவனங்களிடையே பகிரப்படல் வேண்டும். இந்நோக்கத்திற்காக, இணைப்பு VI இல் (ஆர்டிடி/சிஜி/ஆர்எம்/VI) தரப்பட்டுள்ள படிவம் பயன்படுத்தப்படல் வேண்டும்.

17.2 மேற்குறிப்பிட்ட படிவத்தினை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், (ஆர்டிடி/சிஜி/ஆர்எம்/VI - இணைப்பு VI) அரையாண்டிற்கொரு தடவை சனவரியிலிருந்து யூன் வரையிலான காலப்பகுதிக்கும் யூலையிலிருந்து திசெம்பர் வரையான காலப்பகுதிக்கும் சமர்ப்பித்தல் வேண்டும். அறவிடல் பெறுகைகள் ஒவ்வொரு ஆண்டும் யூன் 30 இலிருந்தும் திசெம்பர் 31 இலிருந்தும் 30 நாட்களுக்குள் நிருவகிப்பவருக்கு கிடைக்கச்செய்தல் வேண்டும்.

17.3 பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் நிருவகிப்பவரிடமிருந்து பெறப்பட்ட மொத்த உத்தரவாதத் தொகை மற்றும் அறவிடல்களை எடுத்துக்காட்டும் பதிவேடொன்றினைப் பேணுதல் வேண்டும் என்பதுடன் பதிவேட்டினை நிருவகிப்பவருக்கு அல்லது இது தொடர்பில் அவரால் அதிகாரமளிக்கப்பட்ட மற்றைய எவரேனும் அலுவலர்களுக்கு பரீட்சிப்புக் காலத்தின் போது கிடைக்கச்செய்தலும் வேண்டும்.

17.4 சட்டச் செலவுகள் உட்பட, இத்திட்டத்தின் கீழான கடன்களை அறிவிடுவதன் மீது உறப்பட்ட செலவுகள் கடன்பாட்டாளரிடமிருந்து அறவிடப்பட்ட தொகையின் மீது முதலில் விதிக்கப்படல் வேண்டும். அறவிடப்பட்ட மீதித் தொகை மேலேயுள்ள பிரிவு 17.1இல் குறித்துரைக்கப்பட்ட விதத்தில் பகிரப்படல் வேண்டும். மற்றைய அனைத்துக் கட்டணங்களும், நிருவாகத்தினரின் பங்குகள் மீளளிக்கப்பட்டதன் பின்னர் மாத்திரமே ஈடுசெய்யப்படல் வேண்டும்.

**18. பரீட்சிப்புக்கள்**

18.1 நிருவகிப்பவர், இத்திட்டத்தின் நோக்கத்திற்கான அவசியத்தினைப் பொறுத்து, இத்திட்டத்தின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்ட ஏதேனும் கடன் தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் கணக்கேடுகளையும் ஏனைய பதிவேடுகளையும் பரீட்சிப்பதற்கான உரிமையினைக் கொண்டிருக்கின்றார்.

18.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் ஒவ்வொரு கடன்களினதும் நிபந்தனையொன்றாக கடன்பாட்டாளர் நிருவகிப்பவருக்கு அத்துடன்/ அல்லது இலங்கை அரசாங்கத்திற்கு இத்திட்டத்தின் கீழ் நிதியிடப்பட்ட நடவடிக்கை தொடர்பில் கேட்டுக்கொள்ளபட்டவாறு அத்தகைய ஆவணங்களையும் கணக்கேடுகளையும் சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன் நிருவகிப்பவரும் அத்துடன்/ அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களும் தேவையான வேளையில் செயற்றிட்டத்தினைப் பரீட்சிப்பதற்கும் அனுமதித்தல் வேண்டும்.

18.3 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இத்திட்டத்தின் நியதிகளையும் நிபந்தனைகளையும் மீறியுள்ளமை கண்டறியப்படுமிடத்து நிருவகிப்பவர், உத்தரவாதப் பாதுகாப்பினையும் அத்துடன்/ அல்லது கோரல்களின் தீர்ப்பனவிற்காகச் செய்யப்பட்ட ஏதேனும் கொடுப்பனவுகளையும் இரத்துச்செய்வதற்கான உரிமையினை தன்னகத்தே கொண்டுள்ளார்.

**19. கூற்றுக்களையும் தகவல்களையும் சமர்ப்பித்தல்**

இத்திட்டத்தின்கீழ் உத்தரவாதமளிக்கப்பட்ட ஏதேனும் கடன் தொடர்பில் நிருவகிப்பவர் தகவல்களை கேட்கும்போது பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் அத்தகைய கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதுடன் அத்தகைய தகவல்களை வழங்குதலும் வேண்டும்.

**20. திருத்தியமைத்தல் மற்றும் துணைநிரப்பு ஏற்பாடுகள்**

20.1 இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் உத்தரவாதத்திலிருந்து தோன்றுகின்ற உரிமைகள் அல்லது கடப்பாடுகளைப் பாதிக்காமல் திட்டத்தினை திருத்தியமைப்பதற்கான அல்லது புறக்கீடு செய்வதற்கான உரிமையினை நிருவகிப்பவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

20.2 இத்திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் தொடர்பில், தேவையானவிடத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குவதற்கான உரிமையினை நிருவகிப்பவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

20.3 இத்திட்டத்தில் விசேடமாக குறிப்பிடப்படாத ஏதேனும்விடயம் தொடர்பில் நிருவகிப்பவர், திட்டத்தின் நோக்கத்திற்கு தேவையெனக்கருதும் அத்தகைய துணை நிரப்பியினை அல்லது மேலதிக ஏற்பாடுகளை மேற்கொள்ளலாம்.

திட்டம் நடைமுறைக்குவரும் நாள் 2021.09.01ஆக இருக்கும்.

பீ. எல். ஜே. எஸ். பாலசூரிய
**பணிப்பாளர்/ பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**

ஆர்டிடி/சிஜி/ஆர்எம்/I - இணைப்பு I

**இலங்கையிலுள்ள அரிசி ஆலை சொந்தக்காரர்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டம்**

**பதிவுசெய்வதற்கான விண்ணப்பப்படிவம்**

4.1 நாணயச் சபையின் சுற்றறிக்கை பிரிவு 2(இ) உடன் இசைந்துசெல்லும் விதத்தில், இதே சுற்றறிக்கையின் வழிகாட்டல்களுக்கிணங்க செலுத்தத்தவறிய கடன்பாட்டாளர் தொடர்பில் சிறு உடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் மீளெழுச்சிச் செயற்றிட்டத்தின் இடைநிறுத்தப்படவுள்ள அனைத்துத் தேவையான ஆரம்ப அறவிடல் நடவடிக்கைகளையும் அனைத்து பங்கேற்கும் நிறுவனங்களுக்கும் 2021.12.31 இற்குப் பின்னர் ஒரு மாதத்திற்குள் முன்னெடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

**5. செயற்படாக் கடன் வகையிலுள்ள கடன்களுக்காக சலுகைகளை வழங்குதல்**

5.1 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தீர்மானங்களை எடுக்கும்போது செயற்படாக் கடன்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட அனைத்து பணிப்புரைகளுக்கும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இணங்கியொழுதல் வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு, இனிவரும் கடன் தவணைகளுக்காக செயற்படாக் கடன் வகைக்கு சட்ட இசைவுத்தாமதத்தினை வழங்குதல் வேண்டும். மேலும், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் ஏற்கனவே செயற்படாக் கடன் வகையிலுள்ள கடன்பாட்டாளர்களுக்கான படுகடன் சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியினை பிற்திகதியிடவோ அத்தகைய கடன்பாட்டாளர்களை செயற்படுகின்ற வகைக்கு மாற்றவோகூடாது.

6. இவ்வறிவுறுத்தல்களுடன் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

7. இக்கடிதத்தின் உள்ளடக்கத்தினை தங்கள் வங்கியின் தொடர்பான திணைக்களங்கள்/ கிளைகளிலுள்ள அலுவலர்களின் கவனத்திற்குகொண்டு வருவதனையும் சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் மீளெழுச்சிச் செயற்றிட்டத்தின் தொழிற்பாட்டு வினைத்திறனைப் பேணுவதற்கு மேலே குறிப்பிடப்பட்ட காலவரையறை பூர்த்திசெய்யப்படுவதனையும் தயவுசெய்து உறுதிப்படுத்தவும்.

உங்கள் உண்மையுள்ள,
பீ.எல்.ஜே.எஸ். பாலசூரிய
**பணிப்பாளர்**
**பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**

பிரதி: 1. செயற்றிட்டப் பணிப்பாளர், சிறு உடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் மீளெழுச்சிப்படுத்தும் செயற்றிட்டம்

2. செயலாளர், பெருந்தோட்ட அமைச்சு

**ஆர்டிடி-எஸ்டிஏஆர்ஆர்-21.09.2021-இணைப்பு I**

**“சிறு உடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் மீளெழுச்சிப்படுத்தும் செயற்றிட்டம்”**

**வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான வழங்கப்பட்ட சலுகைகளை நீடிப்பது பற்றிய விபரங்கள்**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்: ...............................................

| # | கிளையின் பெயர் | செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவின் பதிவு இலக்கம் | கடன்பாட்டாளரின் பெயர் | தே.அ.அட்டை | ஒப்புதலளிக்கப்பட்ட கடன் தொகை (ரூ.) | 1 ஆவது பகிர்ந்தளிப்பு | | கடன் சுற்று வட்டம் (மாதங்கள்) | படுகடன் சட்ட இசைவுத்தாதம்/ சலுகைக்காலம் | | | கேட்டுக்கொள்ளப்பட்ட சட்ட இசைவுத் தாமதம்/ சலுகைக் காலத்தின் தொடக்கத்தில் வெளிநின்ற கடன் தொகை | | கேட்டுக்கொள்ளப்பட்ட சட்ட இசைவுத் தாமத கால வசதி மூலதனம் மாத்திரம்/ (மூலதனம் மற்றும் வட்டி இரண்டும்)* |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பகிர்ந்தளிக்கப்பட்ட கடன் தொகை (ரூ.) | பகிர்ந்தளிக்கப்பட்ட திகதி | | தற்போதுள்ள (மாதங்களின் எண்ணிக்கை) | கேட்டுக்கொள்ளப்பட்டவை (மாதங்களின் எண்ணிக்கை) | தொடங்குகின்ற திகதி | மூலதனம் | வட்டி | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |

* தயவுசெய்து பொருத்தமானவாறு குறிப்பிடவும்.

2021.09.21

சேரல்: வழங்கல் சங்கிலி மீள்வலுவூட்டல் கடன் திட்டத்தின் அனைத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்/ பொது முகாமையாளர்

கனம் ஐயா/ அம்மணி,

**2021.09.01ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க நாணயச் சபைச் சுற்றறிக்கையின் நியதிகளில் வழங்கல் சங்கிலி மீள்வலுவூட்டல் கடன் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட கடன்களுக்காக வழங்கப்படவுள்ள சலுகைகள்**

1. நீங்கள் ஏற்கனவே அறிந்தவாறு, நாட்டின் பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிக்கும் நோக்குடன் கொவிட்-19 பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்ட தனிப்பட்டவர்கள் மற்றும் வியாபாரங்களுக்கு படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினை வழங்குவதற்காக (இணைப்பு அ) இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை 2021.09.01ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க சுற்றறிக்கையினை (நாணயச் சபை சுற்றறிக்கை) விடுத்தது. அதற்கமைய, பின்வருவன தொடர்பில் தங்களின் தயவான கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. வழங்கல் சங்கிலி மீள்வலுவூட்டல் கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ள படுகடன் சட்ட இசைவுத்தாமதம்

   2.1 நாணயச் சபை சுற்றறிக்கையின் பிரிவு 09 உடன் இசைந்துசெல்லும் விதத்தில், இது, வழங்கல் சங்கிலி மீள்வலுவூட்டல் கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்காக 2021.09.01 இலிருந்து 2021.12.31 வரை ஒவ்வொரு விடயமாக ஆராய்ந்து அதன் அடிப்படையில் சட்ட இசைவுத்தாமத வசதியை வழங்க தீர்மானித்திருக்கிறது.

   2.2 சட்ட இசைவுத்தாமதத்தினை துணைக் கடன்பாட்டாளர்களினால் கேட்டுக்கொள்ளப்பட்டவாறு, தொடர்பான கடன்களின் மூலதன மீள்கொடுப்பனவுகளுக்கு மாத்திரம் அல்லது மூலதனம் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் இரண்டிற்கும் வழங்கமுடியும். உத்தேச சலுகைகளை கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட துணைக் கடன்பாட்டாளர்களுக்கு ஒவ்வொரு விடயமாக,

ஆராய்ந்து வழங்குதல் வேண்டும்.

2.3 சலுகைகளை பயன்படுத்திக்கொள்ள விரும்புகின்ற தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் அத்தகைய சலுகைகளை பெறுவதற்காக தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு 2021.10.20ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கோரிக்கையொன்றினை விடுத்தல் வேண்டும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் சலுகைகள், காலவரையறைகள் பற்றி மற்றும் சமர்ப்பிப்பதற்கான விண்ணப்பப்படிவம் என்பனவற்றை தமைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கு அச்சு அத்துடன்/ அல்லது மின்னஞ்சல் மற்றும் குறுந்தகவல் உட்பட இலத்திரனியல் ஊடகங்களுடாக விரைவாக தெரியப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

2.4 இதற்கமைய, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் சலுகைகளைப் பயன்படுத்த விரும்பும் தகைமையுடைய கடன்பாட்டாளர்களிடமிருந்து கோரிக்கையினை ஏற்றுக்கொள்ளுமாறும் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் (ஆர்டிடி-எஸ்சிஆர்இஎல்-2021.09.27 - இணைப்பு I) உள்ளவாறு கடன் திட்டங்களுக்கான விபரங்களை தனித்தனியாக 2021.10.30ஆம் நாளளவில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளருக்கு அறிக்கையிடுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றன. விபரங்களின் மென்பிரதியை எக்சல் படிவத்தில் lakminiws@cbsl.lk இற்கும் chamali@cbsl.lk இற்கும் எதைவொயிளூ உடிளட.டம இற்கான பிரதியுடன் அனுப்பிவைத்தல் வேண்டும்.

3. நீடிக்கப்பட்ட படுகடன் சட்ட இசைவுத்தாமத காலங்கள் தொடர்பான வட்டியைக் கணித்தல்

3.1 அனைத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களும் வழங்கல் சங்கிலி மீள்வலுவூட்டல் கடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதன் மீது இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட தொடர்பான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களிலும் அதன்பின்னர் செய்யப்பட்ட திருத்தங்களிலும் தரப்பட்ட வட்டி வீதங்களுடன் இணங்கிச்செல்லும் விதத்தில் நீடிக்கப்பட்ட படுகடன் சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியிலிருந்து தோன்றுகின்ற மூலதனத் திரட்சியின் மீதான வட்டி வீதங்கள் கணிக்கப்படவேண்டும் என்பது பற்றி இத்தால் அறியத்தரப்படுகிறது.

3.2 ஏதேனும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் எவரேனும் துணைக் கடன்பாட்டாளரிடமிருந்து, எந்தவொரு நேரத்திலும் எந்தவொரு சூழ்நிலையின் கீழும் மேலே குறிப்பிடப்பட்ட வட்டி வீதத்திற்கும் மேலாக வட்டி வீதத்தினை விதித்திருக்கும் சந்தர்ப்பத்தில், துணைக் கடன்பாட்டாளர்களின் பெயரிலான வட்டி விதிப்புக்களை பழைய நிலைக்கு மாற்றுவதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் உடனடியாக ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும் என்பதுடன் அவ்வேறுபாட்டினை தொடர்பான துணைக் கடன்பாட்டாளர்களுக்கு திரும்பச் செலுத்துவதற்கும் ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

3.3 எவரேனும் துணைக் கடன்பாட்டாளர் படுகடன் சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் வட்டிக் கொடுப்பனவுகளை செலுத்தாமல் விடுவதற்கு விரும்புவாராயின், அத்தகைய காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த வட்டி வீதங்களை எஞ்சியுள்ள கடன் தவணைக் காலப்பகுதிகளுக்கிடையே சமமான விதத்தில் பிரித்துக்கொள்ளுதல் வேண்டும். படுகடன் சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் திரண்ட வட்டி மீது வட்டி விதிக்கப்படக்கூடாது என்பதுடன் சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் எந்தவொரு கூட்டு வட்டியும் விதிக்கப்படவும் கூடாது.

4. செயற்படாக் கடன்களுக்காக அறவிடல் நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்

4.1 நாணயச் சபைச் சுற்றறிக்கையின் பிரிவு2(இ) உடன் இசைந்துசெல்லும் விதத்தில், இதே சுற்றறிக்கையின் வழிகாட்டல்களுக்கிணங்க வழங்கல் சங்கிலி மீள்வலுவூட்டல் கடன் திட்டத்திலுள்ள செலுத்தத்தவறிய துணைக் கடன்பாட்டாளர்கள் மீது இடைநிறுத்தப்படவுள்ள ஆரம்ப அறவிடல் நடவடிக்கைகளை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் 2021.12.31 இற்குப் பின்னர் ஒரு மாத காலப்பகுதிக்குள் முன்னெடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

5. செயற்படாக் கடன் வகையிலுள்ள கடன்களுக்கு சலுகைகளை வழங்குதல்

5.1 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தீர்மானங்களை எடுக்கின்றபோது, செயற்படாக் கடன்கள் தொடர்பில், இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட அனைத்துப் பணிப்புரைகளுக்குமிணங்கி நடத்தல் வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு இனிவரும் கடன் தவணைகளுக்கு செயற்படாக் கடன் வகைக்கு படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினை வழங்குதல் வேண்டும். மேலும், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் ஏற்கனவே செயற்படாக்கடன் வகையிலுள்ள கடன்பாட்டாளர்களுக்காக படுகடன் சட்ட இசைவுத்தாமதக் கால வசதியினை பிற்திகதியிடவோ அல்லது ஏற்கனவே செயற்படாக் கடன் வகையிலுள்ள அத்தகைய கடன்பாட்டாளர்களை செயற்படும் கடன் வகைக்கு மாற்றவோ கூடாது.

6. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இவ்வறிவுறுத்தல்களுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

7. தங்கள் வங்கியின் தொடர்பான திணைக்களங்கள்/ கிளைகளிலுள்ள அலுவலர்களின் கவனத்திற்கு இக்கடிதத்திலுள்ள உள்ளடக்கத்தினை கொண்டு வருமாறும் வழங்கல் சங்கிலி மீள்வலுவூட்டல் கடன் திட்டத்தின் வினைத்திறன் மிக்க தொழிற்பாட்டினை பேணும் விதத்தில் மேற்குறிப்பிட்ட காலவரையறைகள் பூர்த்திசெய்யப்படுவதனை உறுதிப்படுத்துமாறும் தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

உங்கள் உண்மையுள்ள,

பீ.எல்.ஜே.எஸ். பாலசூரிய
**பணிப்பாளர்**
**பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**

பிரதி: 1. பணிப்பாளர் நாயகம், இலங்கை தேயிலைச் சபை, 574, காலி வீதி, கொழும்பு 03.

2. பெருந்தோட்ட அமைச்சு, செயலாளர், 11ஆவது மாடி, செத்சிறிபாய, 2ஆம் கட்டம், பத்தரமுல்ல.

**ஆர்டிடி-எஸ்ஏபிபி-21.09.2021-இணைப்பு** I

**"வழங்கல் சங்கிலி மீள்வலுவூட்டல் கடன் திட்டம்"**

**வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்குமாக வழங்கப்பட்ட சலுகைகளின் நீடிப்பு பற்றிய விபரங்கள்**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்: .................................................

| # | இ.ம. வங்கியின் பதிவு இலக்கம் | இ.ம.வங்கியின் மீள்நிதியிடல் இல. (ஏற்புடையதாயின்) | கடன்பாட்டாளர்/ கடன்பாட்டாளர்களின் பெயர் | தே.அ. அட்டை/ கடன்பாட்டாளரின் இல. | இ.ம. வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட கடன் தொகை (ரூ.) | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களினால் விடுவிக்கப்பட்ட கடன் தொகை (ரூ.) | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களினால் கடன் விடுவிக்கப்பட்ட திகதி | இ.ம.வங்கியினால் மீள்நிதியிடல் வழங்கப்பட்ட திகதி | மீள்கொடுப்பனவுக் காலம் | படுகடன் சட்ட இசைவுத்தாமதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | கேட்டுக்கொள்ளப்பட்ட படுகடன் சட்ட இசைவுத்தாமதத் காலம் (மாதங்களின் எண்ணிக்கை) | சட்ட இசைவுத்தாமதம் முடிவடைகின்ற திகதி | கேட்டுக்கொள்ளப்பட்ட சட்ட இசைவுத்தாமதத் திகதி (மூலதனம் மட்டும்/ மூலதனம் மற்றும் வட்டி இரண்டும்) |
| | | | | | | | | | | | | |

* தயவுசெய்து பொருத்தமானவாறு குறிப்பிடவும்.

குறிப்பு: இப்படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தின் மூலம் மீள்கொடுப்பனவுக் காலம் நீடிக்கப்படக்கூடாது.

2021.09.23

**தொடர்பு எண்: 32/04/034/0001/001**

சேரல்: சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதியின் அனைத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்/ பொது முகாமையாளர்

கனம் ஐயா/ அம்மணி

**1. சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி: சுற்றுலாத் தொழிற்துறையிலுள்ள வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை நீடித்தல்.**

**2. சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி: சலுகைகளை நீடித்தல்.**

1 இது, மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளரினால் 2021.03.24, 2021.06.09 மற்றும் 2021.09.10ஆம் திகதிகளில் விடுக்கப்பட்ட கடிதங்களுக்கு மேலதிகமானது.

2. சுற்றுலாத் தொழிற்துறையிலுள்ள வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்காக சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதியின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்காக நீடிக்கப்பட்ட சலுகைகள்

2.1 இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட 2021.09.13ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க நாணயச் சபை சுற்றறிக்கையுடன் இசைந்துசெல்லும் விதத்தில் (நாணயச் சபை சுற்றறிக்கை) (இணைப்பு

அ) சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி கட்டம் I, II மற்றும் III இன்கீழ் சுற்றுலாத் துறைக்கான படுகடன் சட்ட இசைவுத்தாமத வசதியை ஒவ்வொரு விடயமாக ஆராய்ந்து அதன் அடிப்படையில் 2022.06.30 வரை நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

2.2 2021.06.09 திகதியிடப்பட்ட பிரதேச அபிவிருத்திப் பணிப்பாளரின் கடிதத்தின் மூலம் நீடிக்கப்பட்ட 36 மாதங்கள் கொண்ட உயர்ந்தபட்ச மீள்கொடுப்பனவுக் காலத்தினை பயன்படுத்திக்கொள்ள விரும்பாத சுற்றுலாத் துறையிலுள்ள கடன்பாட்டாளர்களுக்கு மீள்கொடுப்பனவுக் காலத்தினை சலுகைக் காலம் உட்பட 36 மாதங்கள் வரை அதிகரிப்பதற்கு வழங்கப்பட்ட படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தின் தாக்கத்தினை பரிசீலனையில் கொண்டு ஒவ்வொரு விடயமாக ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2.3 சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி கட்டம் III கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தினைப் பொறுத்தவரை, மீள்கொடுப்பனவுக் காலம் நீடிக்கப்பட்ட கடன்கள் மீது பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிடமிருந்து பூஜ்யம் புள்ளி இரண்டு ஐந்து சதவீதம் (0.25%) கொண்ட மேலதிகக் கொடுகடன் உத்தரவாத கட்டணமொன்றை விதித்தல்.

2.4 பின்வரும் நிறுவனங்களுடன் பதிவுசெய்து கொண்டுள்ள வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்கள் இச்சலுகை நீடிப்பினை பெற்றுக்கொள்ள தகைமையுடையவர்களாவர்.

(i) சுற்றுலா அமைச்சு

(ii) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

(iii) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் கீழுள்ள முகவர்கள்

(iv) கலாச்சார அலுவல்கள் திணைக்களம்

(v) இலங்கை சுற்றுலா விடுதிகள் சங்கம்

2.5 படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினை துணைக் கடன்பாட்டாளர் கேட்டுக்கொள்கின்றவாறு, கடனின் மூலதன மீள்கொடுப்பனவிற்கு மாத்திரம் அல்லது மூலதனம் மற்றும் வட்டி இரண்டிற்கும் வழங்கமுடியும். உத்தேச சலுகைகள் கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட துணைக் கடன்பாட்டாளர்களுக்கு ஒவ்வொரு விடயமாக ஆராய்ந்து வழங்கப்படும்.

2.4 அத்தகைய சலுகைகளை பயன்படுத்திக்கொள்ள விரும்புகின்ற தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் அத்தகைய சலுகைகளை எதிர்பார்ப்பது பற்றி தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு 2021.10.20 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கோரிக்கையொன்றினை விடுத்தல் வேண்டும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் சலுகைகள், காலவரையறை மற்றும் சமர்ப்பிதற்கான விண்ணப்பப்படிவம் என்பன பற்றி அனைத்து தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கும் அச்சு அத்துடன்/ அல்லது மின்னஞ்சல் மற்றும் குறுந்தகவல் பணியூடாக விரைவான முறையில் அறிவிக்கும்.

2.5 இதற்கமைய, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் சலுகைகளைப் பயன்படுத்திக்கொள்ள விரும்பும் தகைமையுடைய கடன்பாட்டாளர்களிடமிருந்தான கோரிக்கையினை ஏற்றுக்கொண்டு, இணைக்கப்பட்டுள்ள படிவத்தின்படி (ஆர்டிடி-எஸ்சிஆர்எவ்-22.09.2021-இணைப்பு I) திட்டத்தின் ஒவ்வொரு கட்டங்களுக்குமான விபரங்களை, தனித்தனியான சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி கட்டம் III இன்கீழ், ஒவ்வொரு துணைக் கடன்களுக்குமாக பூஜ்யம் புள்ளி இரண்டு ஐந்து சதவீதம் (0.25%) கொண்ட உத்தரவாத கட்டுப்பணத்துடன் பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளருக்கு 2021.10.30 அளவில் அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன. விபரங்களின் மென்பிரதியை எக்சல் வடிவத்தில் bashika@cbsl.lk மற்றும் indeewarie@cbsl.lk இற்கும் vijithap@cbsl.lk இற்கான பிரதியுடன் அனுப்பிவைத்தல் வேண்டும்.

3. நீடிக்கப்பட்ட படுகடன் சட்ட இசைவுத்தாமத காலப்பகுதி தொடர்பில் வட்டி வீதத்தினைக் கணித்தல்

3.1 நீடிக்கப்பட்ட சட்ட இசைவுத்தாமத காலப்பகுதிக்கான ஒன்றுசேர்ந்த மூலதனத்தின் மீதான வட்டியினை, சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி கட்டம் I, II மற்றும் III இன் நடைமுறைப்படுத்தல் மீது இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட தொடர்பான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களிலும் அதன்பின்னர் செய்யப்பட்ட திருத்தங்களிலும் வழங்கப்பட்டவாறான ஆண்டொன்றிற்கு 4 சதவீத வட்டிவீதத்துடன் இணங்கிச்செல்லும் விதத்தில் கணிக்குமாறு அனைத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

3.2 எந்தவொரு குறிப்பிட்ட நேரத்திலும் ஏதேனும் சூழ்நிலையின் கீழும் ஏதேனும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் எவ்ரேனும் துணைக் கடன்பாட்டாளரிடம் விதித்த வட்டி, மேலே குறிப்பிடப்பட்ட வட்டி வீதத்திலும் பார்க்க உயர்வானதாக இருக்கும் சந்தர்ப்பத்தில் அத்தகைய பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் துணைக் கடன்பாட்டாளர் சார்பிலான அத்தகைய வட்டி விதிப்புக்களைத் திருத்திக்கொள்வதற்கும் வேறுபாடுகளை தொடர்பான துணைக் கடன்பாட்டாளர்களுக்கு மீளச்செலுத்துவதற்கும் உடனடியாக ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

3.3 சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி கட்டம் I, II மற்றும் III இன்கீழ் எவரேனும் துணைக் கடன்பாட்டாளர் சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் வட்டி வீத கொடுப்பனவுகளை செலுத்தாமல் விடுவதற்கு விரும்புவாராயின் அத்தகை காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த வட்டியை எஞ்சியுள்ள கடன் தவணைகளிடையே சமமாகப் பகிர்ந்துகொள்ளுதல் வேண்டும்.

படுகடன் சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த வட்டியின் மீது வட்டி எதுவும் விதிக்கப்படக்கூடாது என்பதுடன் சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் ஏதேனும் கூட்டுவட்டியும் கணிக்கப்படக்கூடாது.

4. செயற்படாக் கடன்களுக்கான அறவிடல் நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்

4.1 நாணயச் சபையின் சுற்றறிக்கை பிரிவு பீ3 உடன் இசைந்துசெல்லும் விதத்தில், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், இதே சுற்றறிக்கையின் வழிகாட்டல்களுக்கிணங்க, இடைநிறுத்தப்படவுள்ள சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி கட்டம் I, II மற்றும் III இன் செலுத்தத்தவறிய கடன்பாட்டாளர்கள் மீதான அறவிடல்களை 2022.06.30 இற்குப் பின்னர் ஒரு மாதத்திற்குள் முன்னெடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

4.2 சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி கட்டம் III இன் தற்போதுள்ள தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்டவாறு கோரல்கள் தொடர்பான அனைத்து தேவையான அறவிடல் நடவடிக்கைகளையும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் மேற்கொண்ட பின்னர் கொடுகடன் உத்தரவாதக் கோரல்களை பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

5. செயற்படாக் கடன்வகையிலுள்ள கடன்களுக்காக சலுகைகளை வழங்குதல்

5.1 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தீர்மானங்களை எடுக்கும்போது செயற்படாக் கடன்கள் தொடர்பில் மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட அனைத்து பணிப்புரைகளுக்கும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இணங்கியொழுதல் வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு, இனிவரும் கடன் தவணைகளுக்காக செயற்படாக் கடன் வகைக்கு சட்ட இசைவுத்தாமதத்தினை வழங்குதல் வேண்டும். மேலும், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் ஏற்கனவே செயற்படாக் கடன் வகையிலுள்ள கடன்பாட்டாளர்களுக்கான படுகடன் சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியினை பிற்திகதியிடவோ அத்தகைய கடன்பாட்டாளர்களை செயற்படுகின்ற வகைக்கு மாற்றவோகூடாது.

6. 2021.09.10ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு இல. 32/04/034/0001/001 கொண்ட பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதிக்கு வழங்கப்பட்ட சலுகைகளுக்கு மேலதிகமாக, சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி கட்டம் I, II மற்றும் III இற்கு வழங்கப்பட்ட கடனின் கீழ் ஒவ்வொரு விடயமாக ஆராய்ந்து துணைக் கடன்பாட்டாளர்களுக்கு சலுகைக் காலம் உட்பட உயர்ந்தபட்சம் 36 மாத மீள்கொடுப்பனவினை வழங்குவதன் மூலம் மீள்கொடுப்பனவுக் காலம் நீடிக்கப்பட்ட கடன்கள் மீது பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிடமிருந்து பூஜ்யம் புள்ளி இரண்டு ஐந்து சதவீதம் (0.25%) கொண்ட மேலதிக கொடுகடன் உத்தரவாதக் கட்டுப்பணம் விதிக்கப்படும். சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி கட்டம் III இன்கீழ் ஒவ்வொரு துணைக் கடனுக்குமான உத்தரவாதக் கட்டுப்பணம் 2021.09.10ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்ட விபரங்களுடன் 2021.10.30 அளவில் பிரதேச அபிவிருத்திப் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

7. இவ்வறிவுறுத்தல்களுடன் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இணங்கியொழுவதனை உறுதிப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

8. இக்கடிதத்தின் உள்ளடக்கத்தினை தங்கள் வங்கியில் தொடர்பான திணைக்களங்கள்/ கிளைகளிலுள்ள அலுவலர்களின் கவனத்திற்கொண்டு வருவதனையும் சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் மீளெழுச்சிச் செயற்றிட்டத்தின் தொழிற்பாட்டு வினைத்திறனைப் பேணுவதற்கு மேலே குறிப்பிடப்பட்ட காலவரையறைக்குள் பூர்த்திசெய்யப்படுவதனையும் தயவுசெய்து உறுதிப்படுத்தவும்.

உங்கள் உண்மையுள்ள,<br>
பீ.எல்.ஜே.எஸ். பாலசூரிய<br>
**பணிப்பாளர்**<br>
**பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**

**ஆர்டிடி-எஸ்சிஆர்எவ்-23.09.2021(சுற்றுலா)-இணைப்பு** I

**"சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி"**

**சுற்றுலாத் துறையின் வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை நீடிப்பது பற்றிய விபரங்கள்**

கட்டம்: .......................

பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்: .................................................

| # | இலங்கை மத்திய வங்கியின் பதிவு இலக்கம் | இலங்கை மத்திய வங்கியின் மீள்நிதியிடல் இலக்கம் (ஏற்புடையதாயின்) | கடன்பாட்டாளர்/ கடன்பாட்டாளர்களின் பெயர் | கடன்பாட்டாளர்/ தே.அ.அட்டை | இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட கடன் தொகை (ரூ.) | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் விடுவிக்கப்பட்ட கடன் தொகை ரூ | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் விடுவிக்கப்பட்ட கடனின் திகதி | இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட மீள்நிதியிடல் திகதி (சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி கட்டம் I மற்றும் II) | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் சலுகைகள் நீடிக்கப்பட்ட திகதி | மீள் அட்டவணைப் படுத்தப்படவுள்ள வெளிநின்ற மூலதனம் | நிலுவையிலுள்ள கட்டுப்பணம்* (ஆரம்ப மொத்த கடன் தொகையில் 0.25 சதவீதம்) | சலுகைக் காலம்/ படுகடன் சட்ட இசைவுத் தாமதம் | | | | சலுகைக் காலம்/ படுகடன் இசைவுத்தாமதம் உட்பட மீள்கொடுப்பனவுக் காலம் | | | கேட்டுக் கொள்ளப்பட்ட சட்ட இசைவுத்தாமத கால வசதி (மூலதனம் மாத்திரம்/ மூலதனம் மற்றும் வட்டி இரண்டும்)** |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | கடனுக்கு வழங்கப்பட்ட ஆரம்ப சலுகைக் காலம் (மாதங்களின் எண்ணிக்கை) | முன்னர் வழங்கப்பட்ட சட்ட இசைவுத் தாமத காலம் (மாதங்களின் எண்ணிக்கை) | கோரப்பட்ட புதிய சட்ட இசைவுத் தாமத காலம் (மாதங்களின் எண்ணிக்கை) | சலுகைக் காலம்/ சட்ட இசைவுத் தாமதத்தின் முடிவுத் திகதி | ஆரம்பத்தில்/ தற்போதுள்ளவை (மாதங்களின் எண்ணிக்கை) | கேட்டுக் கொள்ளப்பட்டவை (மாதங்களின் எண்ணிக்கை) | புதிய மீள் கொடுப்பனவுக் காலம் (மாதங்களின் எண்ணிக்கை) | |
| | | | | | | | | | | | | | | | | | | | |

* சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி கட்டம் III இன்கீழ் மீள்கொடுப்பனவுக் காலத்தினை நீடிப்பதற்கு கோரப்பட்டிருக்கின்ற கடன்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்.

** தயவுசெய்து பொருத்தமானவாறு குறிப்பிடவும்.

2021.09.27

சேரல்: சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் அனைத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்/ பொது முகாமையாளர்

கனம் ஐயா/ அம்மணி

**2021.09.01ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க நாணயச் சபை சுற்றறிக்கையின் நியதிகளில் சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் திட்டங்களின் கீழ் பெறப்பட்ட கடன்களுக்காக வழங்கப்படவுள்ள சலுகைகள்**

1 நீங்கள் ஏற்கனே அறிந்துள்ளவாறு, நாட்டின் பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிக்கும் நோக்குடன் கொவிட்-19 பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்ட தனிப்பட்டவர்கள் மற்றும் வியாபாரங்களுக்கு படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினை வழங்குவதற்காக, (இணைப்பு அ) இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை 2021.09.01ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க சுற்றறிக்கையொன்றினை (நாணயச் சபை சுற்றறிக்கை) விடுத்தது. அதற்கமைய, பின்வருவன தொடர்பில் தங்களின் தயவான கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. சிறுஉடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டக் கடன் திட்டங்களின் கீழ் வழங்கப்படவுள்ள படுகடன் சட்ட இசைவுத்தாமதம்

2.1 நாணயச் சபைச் சுற்றறிக்கையின் 9ஆம் பிரிவுடன் இசைந்துசெல்லும் விதத்தில், 2021.09.01 இலிருந்து 2021.12.31 வரையான காலப்பகுதியில் சிறுஉடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டக் கடன் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்காக படுகடன் சட்ட இசைவுத்தாமத கால வசதியை ஒவ்வொரு விடயமாக ஆராய்ந்து வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

2.2 படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினை துணைக் கடன்பாட்டாளர் கேட்டுக்கொள்கின்றவாறு, தொடர்பான கடனின் மூலதன மீள்கொடுப்பனவிற்கு மாத்திரம் அல்லது மூலதனம் மற்றும் வட்டி இரண்டிற்கும் வழங்கமுடியும். உத்தேச சலுகைகளை கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட துணைக் கடன்பாட்டாளர்களுக்கும் ஒவ்வொரு விடயமாக ஆராய்ந்து வழங்குதல் வேண்டும்.

2.3 அத்தகைய சலுகைகளை பயன்படுத்திக்கொள்ள விரும்புகின்ற தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் அத்தகைய சலுகைகளை எதிர்பார்ப்பது பற்றி தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு 2021.10.15 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கோரிக்கையொன்றினை விடுத்தல் வேண்டும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் சலுகைகள், காலவரையறை மற்றும் சமர்ப்பிதற்கான விண்ணப்பப்படிவம் என்பன பற்றி அனைத்து தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கும் அச்சு அத்துடன்/ அல்லது மின்னஞ்சல் மற்றும் குறுந்தகவல் உட்பட இலத்திரனியல் ஊடாக விரைவான முறையில் அறிவிக்கும்.

2.4 இதற்கமைய, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் சலுகைகளைப் பயன்படுத்திக்கொள்ள விரும்பும் தகைமையுடைய

கடன்பாட்டாளர்களிடமிருந்தான கோரிக்கையினை ஏற்றுக்கொண்டு, இணைக்கப்பட்டுள்ள படிவத்தின்படி (ஆர்டிடி-எஸ்ஏபிபி-21.09.2021-இணைப்பு I) கடன் திட்டங்களுக்கான விபரங்களை தனித்தனியாக பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளருக்கும் சிறுஉடமையாளர் தேயிலை மற்றம் இறப்பர் மீளெழுச்சி செயற்றிட்டத்தின் முகாமைத்துவப் பிரிவிற்கும் 2021.10.31 அளவில் அறிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றன. விபரங்களின் மென்பிரதியை எக்சல் வடிவத்தில் bashika@cbsl.lk மற்றும் indeewarie@cbsl.lk இற்கும் vijithap@cbsl.lk இற்கான பிரதியுடன் அனுப்பிவைத்தல் வேண்டும்.

3. நீடிக்கப்பட்ட படுகடன் சட்ட இசைவுத்தாமத காலப்பகுதி தொடர்பில் வட்டி வீதத்தினைக் கணித்தல்

3.1 நீடிக்கப்பட்ட சட்ட இசைவுத்தாமத காலப்பகுதிக்கான ஒன்றுசேர்ந்த மூலதனத்தின் மீதான வட்டியினை, சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டக் கடன் திட்டங்களுக்கான நடைமுறைப்படுத்தல் மீது இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட தொடர்பான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களிலும் அதன்பின்னர் செய்யப்பட்ட திருத்தங்களிலும் வழங்கப்பட்டவாறான வட்டி வீதங்களுடன் இணங்கிச்செல்லும் விதத்தில் கணிக்குமாறு அனைத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

3.2 எந்தவொரு குறிப்பிட்ட நேரத்திலும் ஏதேனும் சூழ்நிலையின் கீழும் ஏதேனும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் எவரேனும் துணைக் கடன்பாட்டாளரிடம் விதித்த வட்டி, மேலே குறிப்பிடப்பட்ட வட்டி வீதத்திலும் பார்க்க உயர்வானதாக இருக்கும் சந்தர்ப்பத்தில் அத்தகைய பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் துணைக் கடன்பாட்டாளர் சார்பிலான அத்தகைய வட்டி விதிப்புக்களைத் திருத்திக்கொள்வதற்கும் வேறுபாடுகளை தொடர்பான துணைக் கடன்பாட்டாளர்களுக்கு மீளச்செலுத்தவதற்கும் உடனடியாக ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

3.3 எவரேனும் துணைக் கடன்பாட்டாளர் சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் வட்டி வீத கொடுப்பனவுகளை செலுத்தாமல் விடுவதற்கு விரும்புவாராயின் அத்தகைய காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த வட்டியை எஞ்சியுள்ள கடன் தவணைகளிடையே சமமாகப் பகிர்ந்துகொள்ளுதல் வேண்டும். படுகடன் சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த வட்டியின் மீது வட்டி எதுவும் விதிக்கப்படக்கூடாது என்பதுடன் சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் ஏதேனும் கூட்டுவட்டியும் கணிக்கப்படக்கூடாது.

4. செயற்படாக் கடன்களுக்கான அறவிடல் நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்

4.1 நாணயச் சபையின் சுற்றறிக்கை பிரிவு 2(இ) உடன் இசைந்துசெல்லும் விதத்தில், இதே சுற்றறிக்கையின் வழிகாட்டல்களுக்கிணங்க சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டக் கடன் திட்டங்களின் செலுத்தத்தவறிய கடன்பாட்டாளர்கள் தொடர்பில் இடைநிறுத்தப்படவுள்ள அனைத்துத் தேவையான ஆரம்ப அறவிடல் நடவடிக்கைகளையும் அனைத்து பங்கேற்கும் நிறுவனங்களுக்கும் 2021.12.31 இற்குப் பின்னர் ஒரு மாதத்திற்குள் முன்னெடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

5. செயற்படாக் கடன் வகையிலுள்ள கடன்களுக்கான சலுகைகளை வழங்குதல்

5.1 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தீர்மானங்களை எடுக்கும்போது செயற்படாக் கடன்கள் தொடர்பில் மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட அனைத்து பணிப்புரைகளுக்கும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இணங்கியொழுதல் வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு, இனிவரும் கடன் தவணைகளுக்காக செயற்படாக் கடன் வகைக்கு சட்ட இசைவுத்தாமதத்தினை வழங்கலாம். மேலும், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் ஏற்கனவே செயற்படாக் கடன் வகையிலுள்ள கடன்பாட்டாளர்களுக்கான படுகடன் சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியினை பிற்திகதியிடவோ அத்தகைய கடன்பாட்டாளர்களை செயற்படுகின்ற வகைக்கு மாற்றவோகூடாது.

6. இவ்வறிவுறுத்தல்களுடன் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இணங்கியொழுவதனை உறுதிப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

7. இக்கடிதத்தின் உள்ளடக்கத்தினை தங்கள் வங்கியின் தொடர்பான திணைக்களங்கள்/ கிளையிலுள்ள அலுவலர்களின் கவனத்திற்கொண்டு வருவதனையும் சிறுஉடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டக் கடன் திட்டங்களின் தொழிற்பாட்டு வினைத்திறனைப் பேணுவதற்கு மேலே குறிப்பிடப்பட்ட காலவரையறை பூர்த்திசெய்யப்படுவதனையும் தயவுசெய்து உறுதிப்படுத்தவும்.

உங்கள் உண்மையுள்ள,
பீ.எல்.ஜே.எஸ். பாலசூரிய
**பணிப்பாளர்**
**பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**

பிரதி:
1. முனைவர் (திருமதி) ஜசந்தா மாபட்டுண, நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர்/ சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்
2. செயலாளர், வேளாண்மை அமைச்சு

ஆர்டிடி-எஸ்சிஆர்எவ்-27.09.2021-இணைப்பு I

### "சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்"

### கொவிட்-19 பாதித்த வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான படுகடன் சட்ட இசைவுத்தாமத கோரிக்கைகளின் விபரங்கள்

கடன் திட்டம்: ......................

பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்: .................................................

| # | இலங்கை மத்திய வங்கியின் பதிவு இலக்கம் | இலங்கை மத்திய வங்கியின் மீள்நிதியிடல் இலக்கம் (ஏற்புடையதாயின்) | கடன்பாட்டாளர்/ கடன்பாட்டாளர்களின் பெயர் | கடன்பாட்டாளர்/ தே.அ. அட்டை | இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட கடன் தொகை (ரூ.) | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் விடுவிக்கப்பட்ட கடன் தொகை ரூ | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் விடுவிக்கப்பட்ட கடனின் திகதி | இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட மீள்நிதியிடல் திகதி | மீள்கொடுப்பனவுக் காலம் | கடனுக்காக வழங்கப்பட்ட ஆரம்ப சலுகைக் காலம் (மாதங்களின் எண்ணிக்கை) | படுகடன் சட்ட இசைவுத்தாமதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | கேட்டுக் கொள்ளப்பட்ட படுகடன் இசைவுத்தாமதக் காலம் (மாதங்களின் எண்ணிக்கை) | படுகடன் இசைவுத் தாமதத்தின் முடிவுத் திகதி | கேட்டுக் கொள்ளப்பட்ட சட்ட இசைவுத்தாமத கால வசதி (மூலதனம் மாத்திரம்/ மூலதனம் மற்றும் வட்டி இரண்டும்;)* |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |

* தயவுசெய்து பொருத்தமானவாறு குறிப்பிடவும்.

2021.09.30

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல: ஆர்டிடி/எஸ்ஏபிபி/4பி/2019/01 (திருத்தம் - 02)

சேரல்: சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சி கடன் திட்டங்களின் அனைத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்

கனம் ஐயா/ அம்மணி,

### சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரசாங்க தனியார் உற்பத்தியாளர் பங்குடமை கடன் திட்டங்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான இரண்டாவது திருத்தம்

சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமை கடன் திட்டங்களின் அனைத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் 2018.04.10ஆம் திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல ஆர்டிடி/எஸ்ஏபிபி/4பி/2018/01 (2018.12.05 அன்று திருத்தப்பட்டவாறு) இற்கு மேலதிக விடுக்கப்பட்ட 2019.08.06ஆம் திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/எஸ்ஏபிபி/4பி/2019/01 (2020.11.03 அன்று திருத்தப்பட்டவாறு) கீழேயுள்ளவாறு திருத்தப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1. தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் பிரிவு 9 (ஈ)இல் குறித்துரைக்கப்பட்ட "கடன்பாட்டாளர்களைப் பதிவுசெய்தல்" நீக்கப்பட்டு அது பின்வருமாறு பதிலீடு செய்யப்படுகிறது.

   "கடன்பாட்டாளர் அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமை இளைஞர் கடன் திட்டம், அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமை ஊக்குவிப்பாளர் கடன் திட்டம், மற்றும் அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமை ஊக்குவிப்பாளர் தொகை வடிவிலான கடன் திட்டம் என்பனவற்றின் கீழ் கடனைப் பெறுகின்றவராக இருக்குமிடத்து, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், பொருத்தமான விதத்தில், ஒவ்வொரு கடன்பாட்டாளருக்குமாக உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட இணைப்பு I(அ) (i அல்லது ii) மற்றும் இணைப்பு I(ஆ) (i அல்லது ii) இனை இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினூடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

   எனினும், கடன்பாட்டாளர் அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமை இளைஞர் கடன் திட்டத்தின் கீழ் ரூ.1,000,000 இற்குக் குறைவான கடனொன்றினைப் பெற்றிருக்குமிடத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், ஒவ்வொரு கடன்பாட்டாளர் தொடர்பிலும் சரியாக பூரணப்படுத்தப்பட்ட இணைப்பு I(அ) (i) இனை தம்முடன் வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் சரியான முறையில் நிரப்பப்பட்ட இணைப்பு I(ஆ) (i) இனை இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு

செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் (திருத்தப்பட்டவாறு) மற்றைய அனைத்து நியதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றியிருக்கும்.

இத்திருத்தம் 2021.09.30 அன்று நடைமுறைக்குவரும்.

இத்திருத்தத்தின் உள்ளடக்கத்தினை தங்கள் வங்கிக் கிளைகளிலுள்ள தொடர்பான அலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டுவருமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

உங்கள் உண்மையுள்ள
பீ.எல்.ஜே.எஸ். பாலசூரிய
**பணிப்பாளர்**
**பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**

பிரதி: முனைவர் (திருமதி) ஜசந்தா மாபட்டுன, நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர், சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்

2021.09.30

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல: ஆர்டிடி/எஸ்ஏபிபி/ஆர்எவ்/2019/01 (திருத்தம் - 02)**

சேரல்: சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்ட கடன் திட்டங்களின் அனைத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்

கனம் ஐயா/ அம்மணி

**சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சுழலும் நிதியக் கடன் திட்டங்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான இரண்டாவது திருத்தம்**

சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சுழலும் நிதிய கடன் திட்டங்களின் அனைத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் 2018.04.10ஆம் திகதியிடப்பட்ட இல ஆர்டிடி/எஸ்ஏபிபி/ஆர்எவ்/2018/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக (2018.12.05 அன்று திருத்தப்பட்டவாறு) விடுக்கப்பட்டிருக்கும் 2019.08.06ஆம் திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/எஸ்ஏபிபி/ஆர்எவ்/2019/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் (2020.11.03 அன்று திருத்தப்பட்டவாறு) பின்வருமாறு திருத்தப்படுவதாக என்பது பற்றி இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1. தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் பிரிவு 9 (ஈ)இல் குறித்துரைக்கப்பட்ட “கடன்பாட்டாளர்களைப் பதிவுசெய்தல்” நீக்கப்பட்டு அதற்கு பின்வருவன பதிலீடு செய்யப்படல் வேண்டும்.

   “கடன்பாட்டாளர் சுழலும் நிதிய இளைஞர் கடன் திட்டம், சுழலும் நிதிய ஊக்குவிப்பாளர் கடன் திட்டம், சுழலும் நிதிய ஊக்குவிப்பாளர் தொகை வடிவிலான கடன் திட்டம் மற்றும் சுழலும் நிதிய தேயிலை, இறப்பர் துறைக் கடன் திட்டம் என்பனவற்றின் கீழ் கடனொன்றினை பெற்றவராகவிருப்பின் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பொருத்தமானவாறு, ஒவ்வொரு கடன்பாட்டாளருக்குமாக பூரணமாக நிரப்பப்பட்ட தொடர்பான இணைப்பு I(அ) (i அல்லது ii) மற்றும் இணைப்பு I(ஆ) (i அல்லது ii) இனை இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினூடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

   எனினும், கடன்பாட்டாளர் சுழலும் நிதிய இளைஞர் மற்றும் சுழலும் நிதிய தேயிலை மற்றும் இறப்பர் துறைக் கடன் திட்டங்கள் என்பனவற்றின் கீழ் ரூ.1,000,000 இற்குக் குறைவான கடனொன்றினைப் பெற்றிருக்குமிடத்து, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், ஒவ்வொரு கடன்பாட்டாளர் தொடர்பிலும் சரியாக பூரணப்படுத்தப்பட்ட இணைப்பு I(ஆ) (i) இனை தம்முடன் வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் சரியான முறையில் நிரப்பப்பட்ட இணைப்பு I(ஆ) (i) இனை பொருத்தமானவாறு இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் (திருத்தப்பட்டவாறு) மற்றைய அனைத்து நியதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றியிருக்கும்.

இத்திருத்தம் 2021.09.30 அன்று நடைமுறைக்குவரும்.

இத்திருத்தத்தின் உள்ளடக்கத்தினை தங்கள் வங்கிக் கிளைகளிலுள்ள தொடர்பான அலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டுவருமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

உங்கள் உண்மையுள்ள
பீ.எல்.ஜே.எஸ். பாலசூரிய
**பணிப்பாளர்**
**பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**

பிரதி: முனைவர் (திருமதி) ஜசந்தா மாபட்டுன, நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர், சிறு உடமையாளர் வேளாண் வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல: ஆர்டிடி/கொவிட்-19-கட்டம் IV/2021/01**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல.30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு - 01
2021.10.26

சேரல்: அனைத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

**அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை மீள்வலுவூட்டுவதற்கான புதிய மீள்நிதியிடல் திட்டம்**

**("சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி கட்டம்-IV")**

கொவிட்-19 நோய்ப்பரவலினால் பாதிக்கப்பட்ட அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளுக்கு வசதியளிப்பதற்காகவும் அவற்றின் நியதிச் சட்டக் கடப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்காகவும் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளரினால் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு 2021.10.26ஆம் திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/கொவிட்-19-கட்டம் IV/ 2021/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன.

**1. அறிமுகம்**

1.1 அரச தொழில்முயற்சிகளுக்கு மீள்வலுவூட்டுவதற்காக (அமைச்சரவையின் தீர்மானம்) சலுகை நியதிகளின் கீழ் தொழிற்படு மூலதனக் கடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக 2021.08.09 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, நியதிச் சபைகள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் உட்பட, அரச தொழில்முயற்சிகளுக்கு தொழிற்படு மூலதன கடன்களை வழங்குவதற்காக இலங்கை மத்திய வங்கி மீள்நிதியிடல் கடன் திட்டமொன்றினை வடிவமைத்ததுடன் சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதியின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் அறவிடல்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் "சௌபாக்யா நிதியம்" என்பனவற்றினூடாகப் பெறப்பட்ட ரூ.10 பில்லியனை அதற்காக ஒதுக்கியது.

1.2 மேலும், மேலே 1.1 பிரிவில் குறிப்பிடப்பட்ட அதே கடன் திட்டத்தினூடாக அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சபைகள் என்பனவற்றின் நியதிச் சட்ட கடப்பாடுகளை பூர்த்திசெய்வதற்குத் தேவையான நிதிகளை வழங்குவதற்கு 2021.08.17 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

1.3 இப்புதிய மீள்நிதியிடல் வசதி இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட பிரதான கொடுகடன் கூறான சௌபாக்யா கடன் திட்டத்தினை சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதியின் பின்னரான கூறுகளிலிருந்தும் வேறுபடுத்திக்கொள்ளும் நோக்கத்திற்காக "சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி கட்டம் IV" என்ற புதிய பெயரின்கீழ் குறிப்பிடப்படுகிறது.

**2. செயற்றிட்டத்தின் ஒட்டுமொத்த முகாமைத்துவம்**

இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் இக்கடன் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலுக்கும் பொறுப்பாக இருக்கும்.

**3. கடன் திட்டம்**

| | | |
|---|---|---|
| 3.1 | திட்டத்தின் பெயர் | சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி - கட்டம் IV |
| 3.2 | திட்டத்தின் தன்மை | அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளை நிறைவுசெய்வதற்கும் நியதிச் சட்ட கடப்பாடுகளைத் தீர்ப்பதற்குமான மீள்நிதியிடல் திட்டம். |
| 3.3 | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் | இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி |
| 3.4 | நிதியிடுகின்ற மூலம் | இலங்கை மத்திய வங்கி |
| 3.5 | நிதி ஒதுக்கம் | ரூ.10 பில்லியன் |

| | | |
|---|---|---|
| 3.6 | துணைக் கடன்பாட்டாளரொருவருக்கான (அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள்) உயர்ந்தபட்ச கடன் தொகை | தொடர்பான அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் வியாபாரத் திட்டத்தினை பரிசீலனையில் கொண்டதன் பின்னர் உயர்ந்தபட்சம் 03 மாதகாலப்பகுதிக்கான தொழிற்படு மூலதனம் மற்றும் நியதிச் சட்டக் கடப்பாடுகள் அல்லது நிதியமைச்சின் பொது முயற்சிகள் திணைக்களத்தினால் விதந்துரைக்கப்பட்ட உயர்ந்தபட்ச தகைமைத் தொகை இதில், எது குறைவானதோ அது. |
| 3.7 | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கான மீள்நிதியிடல் கடன்கள் தொடர்பான வட்டி வீதம்* | ஆண்டொன்றிற்கு 1 சதவீதம் (ஆண்டிற்கு 1%) |
| 3.8 | துணைக் கடன்களுக்கான வட்டி வீதம் | ஆண்டொன்றிற்கு நான்கு சதவீதம் (ஆண்டிற்கு 4%) |
| 3.9 | பங்கேற்கும் நிறுவனங்களுக்கான இலாபம் | ஆண்டொன்றிற்கு மூன்று சதவீதம் (ஆண்டிற்கு 3%) |
| 3.10 | உயர்ந்தபட்ச மீள்கொடுப்பனவுக் காலம் | 36 மாதங்கள் (சலுகைக் காலம் உட்பட) |
| 3.11 | உயர்ந்தபட்ச சலுகைக் காலம் | 06 மாதங்கள் |
| 3.12 | பிணையுறுதி | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் ஏற்றுக்கொள்ளத்தக்க ஏதேனும் பிணையுறுதி |
| 3.13 | நடைமுறைப்படுத்தும் நாள் | திட்டமானது 2021.10.26 இலிருந்து நடைமுறைக்கு வருகிறது. |
| 3.14 | தொழிற்பாட்டு பிரதேசம் | நாடு முழுவதும் |

* இணங்கியொழுகாத சந்தர்ப்பத்தில் துணைக் கடன் உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கிணங்க துணைநில் கடன் வழங்கல் வீதத்தில் வட்டி விதிக்கப்படும்.

**4. தகைமையுடைய துணைக் கடன்பாட்டாளர்கள்**

4.1 நிதியமைச்சின் அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் விதந்துரைக்கப்பட்ட அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி - கட்டம் IV இன்கீழ் தகைமையுடைய துணைக் கடன்பாட்டாளர்களாக கருதப்படல் வேண்டும்.

4.2 நிதியமைச்சின் அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்ட அத்தகைய தகைமையுடைய துணைக் கடன்பாட்டாளர்களின் பட்டியலொன்று இணைப்பு I இல் தரப்பட்டுள்ளது.

4.3 அவசியமானது எனக் கருதப்படுமிடத்து, இது தொடர்பில் அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் ஆலோசனையுடன் திருத்தப்பட்ட தகைமையுடைய துணைக் கடன்பாட்டாளர் பட்டியலொன்றினை வழங்குவதற்கான உரிமையினை மத்திய வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.

**5. தகைமையுடைய நடவடிக்கைகள்**

5.1 தகைமையுடைய துணைக் கடன்பாட்டாளர்களின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளுக்கு வசதியளிப்பதற்காகவும் நியதிச் சட்ட கடப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்காகவும் சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி - கட்டம் IV இன்கீழ் துணைக் கடன்கள் வழங்கப்பட வேண்டும்.

5.2 தொழிற்படு மூலதனக் கடன்கள் வழங்கப்படுகின்ற தகைமையுடைய தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகள் மற்றும் நியதிச் சட்ட கடப்பாடுகளின் பட்டியல் இணைப்பு IIஇல் தரப்பட்டுள்ளன.

5.3 ஒவ்வொரு தகைமையுடைய துணைக் கடன்பாட்டளரினதும் தகைமையுடைய தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகள் மற்றும் நியதிச் சட்ட கடப்பாடுகளுக்காக நிதியமைச்சின் அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் சம்மதம்/ விதந்துரைப்பினை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

5.4 தகைமையுடைய துணைக் கடன்பாட்டாளரொருவர் பல வங்கிகளில் வங்கித்தொழில் வசதிகளை கொண்டிருப்பினும்கூட, இத்திட்டத்தின் கீழ், ஒரு கடனை மாத்திரமே பெறத்தகுதியுடையவராவர். அத்தகைய சூழ்நிலைகளில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், துணைக் கடன்பாட்டாளர் மற்றைய வங்கிகளை அணுகவில்லை என்பதனை உறுதிப்படுத்துகின்ற எழுத்துமூலமான உறுதிப்படுத்தலொன்றினை துணைக் கடன்பாட்டாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

**6. கடன்பாட்டாளர்களைப் பதிவுசெய்தல்**

6.1 பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் அதன் கிளைகளுக்கு தொடர்பான வழிகாட்டல்களை வழங்குவதுடன் தகைமையுடைய துணைக் கடன்பாட்டாளர்களுக்கு கடன் விண்ணப்பங்களை வழங்கி அத்தகைய

தகைமையுடைய கடன்பாட்டாளர்களிடமிருந்து கடன் விண்ணப்பங்களை சேகரித்துக்கொள்ளுதலும் வேண்டும் என்பதனை அறிவுறுத்தல் வேண்டும்.

6.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகம், இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் இணைப்பு III(அ) மற்றும் இணைப்பு III(ஆ) இல் தரப்பட்டுள்ளவாறான கடன் பதிவு செய்தல் படிவங்களைச் சரியான முறையில் பூர்த்திசெய்து அதன் வன்பிரதியை பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதன் மூலம் "சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி - கட்டம் IV இன்கீழ் துணைக் கடன்களைப் பெற விரும்புகின்ற தகைமையுடைய துணைக் கடன்பாட்டாளர்களின் விபரங்களை அனுப்பிவைத்தல் வேண்டும்.

6.3 விரைவான நடைமுறைப்படுத்தலுக்காக, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தகைமையுடைய துணைக் கடன்பாட்டாளர்களிடமிருந்து துணைக் கடன் விண்ணப்பங்களைப் பெற்று 7 வேலைநாட்களுக்கிடையில் இணைப்பு III(ஆ) இன் மென்பிரதியை இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளரினால் அறிவிக்கப்படவுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் செய்தல் வேண்டும்.

6.4 இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் தரப்பட்ட இணைப்புக்களிலும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் தரப்பட்ட அத்தகைய இணைப்புக்களின் மென்பிரதிகள் மற்றும் வன்பிரதிகளிலும் வழங்கப்பெற்ற தகவல்களின் துல்லியமான தன்மையினையும் ஒத்த தன்மையினையும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

6.5 இணைப்பு III(ஆ) இல் தரப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் 14 வேலைநாட்களுக்கிடையில் முதலில் வந்தவை முதலில் என்ற அடிப்படையில் துணைக் கடன்பாட்டாளர்களை பதிவுசெய்துகொள்ளும்.

6.6 அவ்வாவணங்களின் வன்பிரதிகள் பெறப்பட்டதன் பின்னர் இணைப்பு III(அ) மற்றும் இணைப்பு III(ஆ) வழங்கப்பட்டுள்ள தகவல்களுக்கிடையில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படுமாயின் வன்பிரதியில் தரப்பட்டுள்ள தகவல்களை பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் ஏற்றுக்கொள்ளும்.

6.7 அத்தகைய துணைக் கடன் விண்ணப்பங்களை பதிவுசெய்கின்ற நோக்கத்திற்காக பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் ஏதேனும் மேலதிகத் தகவல்கள் அல்லது தெளிவுபடுத்தல்கள் கேட்டுக்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பங்களை பதிவுசெய்வது தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களை மீண்டும் தொடர்புகொள்ளும் உரிமையினை பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் தன்னகத்தே கொண்டுள்ளது.

6.8 துணைக் கடன்பாட்டாளர்கள் பதிவு செய்யப்பட்டதும், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு கடனுக்கும் குறிப்பிட்ட பதிவு இலக்கமொன்றினை ஒதுக்கி அத்தகைய பதிவு இலக்கத்தினை தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்திற்கும் அறிவிக்கும். குறிப்பிட்ட துணைக் கடன்பாட்டாளர் தொடர்பில் மத்திய வங்கியுடன் செய்யப்படும் எந்தவொரு கடிதத் தொடர்பிலும் இப்பதிவு இலக்கம் பயன்படுத்தப்படல் வேண்டும்.

**7. துணைக் கடன்களை பகிர்ந்தளித்தல்**

7.1 இலங்கை மத்திய வங்கியுடன் அத்தகைய பதிவுகளை மேற்கொண்ட 21 வேலைநாட்களுக்குள், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பதிவுசெய்யப்பட்ட துணைக் கடன்பாட்டாளர்களுக்கு கடன்களை விடுவித்தல் வேண்டும்.

7.2 குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் ஏதேனும் துணைக் கடன்களை பகிர்ந்தளிக்க முடியாமல் போகுமாயின், பகிர்ந்தளிப்பில் காணப்படும் தாமதத்திற்கான ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய காரணங்களை பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும். தாமதத்திற்குத் தரப்பட்ட காரணங்களைப் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் பரிசீலனையில் கொண்டு பதிவுசெய்யப்பட்ட துணைக் கடன்பாட்டாளர்கள் தொடர்பில் பொருத்தமான தீர்மானத்தினை/ நடவடிக்கைகளை எடுக்கும்.

7.3 30 நாட்களுக்குள் துணைக் கடன்களைப் பகிர்ந்தளிப்பதற்கும் வலிதான காரணங்களை வழங்குவதற்கும் ஏதேனும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தவறுமாயின் அது பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட துணைக் கடன்பாட்டாளர்களின் பதிவு இரத்துச் செய்யப்படுதவற்கு காரணமாகலாம்.

7.4 பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் கேட்டுக்கொள்ளப்படும் வேளையில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கடன்கள் பகிர்ந்தளிக்கப்படாத அத்தகைய பதிவுசெய்யப்பட்ட கடன்கள் தொடர்பிலான அறிக்கையினை ஒவ்வொரு விண்ணப்பத்திற்குமான குறிப்பிட்ட காரணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

**8. மீள்நிதியிடல் நடைமுறை**

8.1 இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் தெரிவிக்கப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட அனைத்து துணைக் கடன்களுக்கும் இலங்கை மத்திய வங்கி 100 சதவீத மீள்நிதியிடலை வழங்கும்.

8.2 பதிவுசெய்யப்பட்ட துணைக் கடன்பாட்டாளர்களுக்கு துணைக் கடன்களை விடுவித்ததன் பின்னர் மீள்நிதியிடலுக்காக

சரியான முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை, நிதியினை மீளப்பெற்றுக்கொள்வதற்காக பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு சமா்ப்பித்தல் வேண்டும். ஒவ்வொரு மீள்நிதியிடல் விண்ணப்பத்துடனும் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(i) மீள்நிதியிடலுக்கான விண்ணப்பம் - இணைப்பு IV

(ii) மீள்நிதியிடலுக்கான கடன் பகிா்ந்தளிப்பு விண்ணப்பத்தின் கூற்று - இணைப்பு V

(iii) கோரிக்கையின் பேரிலான வாக்குறுதிச் சான்றிதழ் - இணைப்பு VI

(iv) வழங்கல் கடிதம்- இணைப்பு VII

(v) இலங்கை மத்திய வங்கிக்கு உத்தரவாதமளிப்பதன் மூலம் வழங்கப்படுகின்ற சாட்டுதல் படிவம் - இணைப்பு VIII

(vi) பகிா்ந்தளிப்புக் கடிதம் - இணைப்பு IX

8.3 பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தொடா்பான ஆவணங்களுடன் சோ்த்து, மீள்நிதியிடல் விண்ணப்பங்களில் கேட்டுக்கொள்ளப்பட்ட தகவல்களுடன் பூரணப்படுத்தப்பட்ட மீள்நிதியிடல் விண்ணப்பம் தொடா்பில் திருப்தியடைந்தும் அத்தகைய மீள்நிதியிடல் விண்ணப்பங்களுக்கு ஒப்புதலளித்து சரியாக பூா்த்திசெய்யப்பட்ட மீள்நிதியிடல் விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதன் பின்னா் 14 வேலைநாட்களுக்குள், முதலில் வந்தது முதலில் என்ற ஒழுங்கில் நிதியின் கிடைப்பனவு மற்றும் தொடா்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிடல் அனுமதிப்பங்கு என்பனவற்றிற்குட்பட்டு அத்தகைய ஒதுக்குகள் இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்டிருக்குமிடத்து மீள்நிதியிடல் விடுவிக்கப்படும்.

8.4 பகிா்ந்தளிக்கப்பட்ட திகதியிலிருந்து 90 நாட்களுக்குள் மீள்நிதியிடல் கோரல்கள் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகங்களினூடாக மாத்திரம் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு சமா்ப்பிக்கப்படுதல் வேண்டும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் கிளைகளினால் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு நேரடியாக அனுப்பப்படும் மீள்நிதியிடல் கோரல்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**9. கடன்களை அறவிடல்**

9.1 ஒவ்வொரு துணைக் கடனுக்கும் ஏற்புடைத்தான நிபந்தனைகளுக்கிணங்க பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் துணைக் கடன்பாட்டாளா்களிடமிருந்து மூலதனத்தினையும் வட்டியையும் அறவிட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

9.2 ஒவ்வொரு துணைக் கடன்பாட்டாளரின் மீள்கொடுப்பனவு அட்டவணையினை அடிப்படையாகக் கொண்டு மத்திய வங்கியினால் தயாரிக்கப்பட்ட மீள்நிதியிடலுக்கான மீள்கொடுப்பனவு அட்டவணைக்கிணங்க பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட மீள்நிதியிடலுக்கான மூலதனமும் வட்டியும் அரையாண்டிற்கொரு தடவை அதாவது ஒவ்வொரு ஆண்டும் யூன் 30ஆம் திகதியும் திசெம்பா் 31ஆம் திகதியும் மத்திய வங்கியினால் அறவிடப்படும்.

**10. ஆவணங்களின் கட்டுக்காப்பு**

10.1 துணைக் கடன்பாட்டாளா்களின் இழப்புக்களையும் மீள்கொடுப்பனவு இயலாற்றலையும் மதிப்பிடுவதற்காக பயன்படுத்தப்பட்ட அனைத்து சான்றுகளையும் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் ஒழுங்குகளை செய்தல் வேண்டும். அத்தகைய ஆவணங்களை பரீட்சிப்பதற்காக அல்லது வேறு ஏதேனும் நோக்கத்திற்காக மத்திய வங்கி கேட்குமிடத்து அத்தகைய ஆவணங்களைச் சமா்ப்பித்தல் வேண்டும்.

10.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகம் அல்லது கிளை அலுவலகம் கடன் பகிா்ந்தளிப்பு தொடா்பான வேறு ஏதேனும் ஆவணங்களை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் ஏக தற்றுணிபின்படி வைத்திருக்கலாம்.

**11. கணக்குகளை கணக்காய்வு செய்தல்**

11.1 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி கட்டம் IV இன்கீழ் வழங்கப்பட்ட துணைக் கடன்கள் மீது விசேட உள்ளகக் கணக்காய்வுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**12. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் வகிபாகமும் பொறுப்புக்களும்**

“சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி கட்டம் IV” இனை நடைமுறைப்படுத்துவதில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தீவிரமான வகிபாகமொன்றினை ஆற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றன. இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்குப் புறம்பாக, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் மேலதிக வகிபாகத்துடனும் பொறுப்புக்களுடனும் இணங்கியொழுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன. இது தொடா்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பின்வருவனவற்றை மேற்கொள்ளுதல் வேண்டும்.

12.1 “சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி கட்டம் IV” இனைக் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் நடைமுறைப்படுத்துவதனை விரைவுபடுத்துவதற்காகப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகத்திலும்

கிளைகளிலும் போதுமான அலுவலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்தல்.

12.2 "சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி - கட்டம் ஐஏ" இனை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினை தொடர்புறுத்துவதற்காகப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகத்தில் மூத்த அலுவலரொருவரைப் பதவி குறித்துரைத்தல்.

12.3 துணைக் கடன்பாட்டாளர்களுக்கு கடன்களை பகிர்ந்தளிக்கின்ற எல்லா நேரங்களிலும் உரிய விழிப்புக்கவனத்தினையும் முன்மதியுடைய தன்மையினையும் பின்பற்றுவதுடன் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்கள் "சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி - கட்டம் IV" நோக்கத்திற்காக மாத்திரமே பயன்படுத்தப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்கு அனைத்து நியாயமான நடவடிக்கைகளையும் எடுத்தல்.

12.4 சரியான நேரத்தில் கொடுகடன்களை வழங்குவதற்கும் அறவிடுவதற்குமான பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல்.

12.5 பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் எந்தவொரு கிளையும் "சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி கட்டம் IV" இன்கீழ் பதிவுசெய்யப்பட்ட துணைக் கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களுக்கு எந்தவொரு சூழ்நிலையிலும் இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ள வீதத்திலும் பார்க்க உயர்ந்த வீதத்தில் வட்டியை விதிக்கக்கூடாது என்பதனை உறுதிப்படுத்தல்.

12.6 தொடர்பான கணக்கு ஏடுகளிலுள்ள கடன் தொழிற்பாடுகளையும் நிலையினையும் கிரமமான முறையில் மேற்பார்வை செய்வதனை உறுதிப்படுத்துவதுடன் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு ஏற்படக்கூடிய இழப்புக்களைக் குறைக்கும் விதத்தில் தேவையானவிடத்து சரியான நடவடிக்கையினையும் எடுத்தல்.

12.7 கணக்குகளையும் நிதியியல் கூற்றுக்களையும் பேணுதல்

(i) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் மற்றைய விடயங்களுடன் துணைக்கடன் மதிப்பீடுகள், ஒப்புதல்கள், பகிர்ந்தளிப்புக்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் என்பனவற்றை எடுத்துக்காட்டும் விதத்தில் பொருத்தமான பேரேட்டுக் கணக்குகளையும் பதிவுகளையும் பேணுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

(ii) கடன் பெறுகைகளின் பயன்பாடு மற்றும் மீள்நிதியிடல் தொழிற்பாடுகளுக்காக தனித்தனியான கணக்குகளைப் பேணுமாறு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

(iii) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பரீட்சிப்பிற்காகவும் மீளாய்விற்காகவும் கணக்குகளையும் நிதியியல் கூற்றுக்களையும் கிடைக்கச் செய்தல் வேண்டும். மேலும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் "சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி - கட்டம் IV" தொடர்பில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் கேட்டுக்கொள்ளப்படும் தகவல்களை, அவ்வாறு கேட்கப்படும் நேரத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

12.8 இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்டுள்ள பதிவுசெய்தல் தொடர்பான செயன்முறைகளையும் மீள்நிதியிடல் நடைமுறைகளையும் பின்பற்றுதல் வேண்டும்.

**13. ஏனையவை**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இத்திட்டம் தொடர்பான ஏதேனும் தெளிவுபடுத்தல்களுக்காக பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் செயற்றிட்ட நிதிப் பிரிவின் தலைவரை 0112477348 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் பின்வருவனவற்றிற்கான உரிமையினை தன்னகத்தே கொண்டிருக்கின்றார்.

13.1 அவசியமானவிடத்து இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்டுள்ள நியதிகளையும் நிபந்தனைகளையும் திருத்துவதற்கு,

13.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்குத் தேவையான வழிகாட்டல்களையும் தெளிவுபடுத்தல்களையும் வழங்குதல் மற்றும் சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி - கட்டம் IV இனை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தேவையான காலவரையறையினை நிர்ணயித்தல்.

13.3 இத்திட்டத்தின் கீழ் தொழிற்படுகின்ற ஏதேனும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனமொன்று இலங்கை மத்திய வங்கிக்கும் அத்தகைய பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்திற்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட துணைக் கடன் உடன்படிக்கைக்கு இணங்க, இத்திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்கியொழுகாத சந்தர்ப்பத்தில் அது நீக்கப்படலாம்.

உங்கள் உண்மையுள்ள
பீ. எல். ஜே. எஸ். பாலசூரிய
**பணிப்பாளர்**
**பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**

தொழிற்படு மூலதனக் கடனொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு பரிசீலிக்கப்பட வேண்டிய அரசிற்குச் சொந்தமான நிறுவனங்களின் பட்டியல்

| இல. | நிறுவனம் | 2021 யூன் 30இல் உள்ளவாறு உண்மையான ஊழியர்கள் | 2020.12.31இல் உள்ளவாறு மொத்தப்புரள்வு (ரூ.மில்.) | 3 மாதங்களுக்கான எதிர்வுகூறப்பட்ட தொழிற்படு மூலதனம் (ரூ.மில்.) |
|---|---|---|---|---|
| | சிறியது | | | |
| 1. | வரையறுக்கப்பட்ட தேர்ச்சி அபிவிருத்தி நிதியம் | 36 | 17 | 5 |
| 2. | கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் | 306 | 21 | 50 |
| 3. | வரையறுக்கப்பட்ட தேசிய காகிதக் கம்பனி | 110 | 22 | 16 |
| 4. | சி-நோர் பவுண்டேசன் லிமிடெட் | 72 | 37 | 10 |
| 5. | இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம் | 35 | 85 | 5 |
| 6. | இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் | 129 | 108 | 19 |
| 7. | ககட்ட ஹக கிறபைட் லங்கா லிமிடெட் | 116 | 126 | 17 |
| 8. | லக்திவ என்ஜினியறிங் கம்பனி லிமிடெட் | 104 | 130 | 15 |
| 9. | பனை அபிவிருத்திச் சபை | 207 | 133 | 30 |
| 10. | சிறிலங்கா பவுண்டேசன் | 155 | 153 | 22 |
| 11. | சிறிலங்கா முந்திரிகைக் கூட்டுத்தாபனம் | 372 | 155 | 54 |
| 12. | நெல் சந்தைப்படுத்தும் சபை | 192 | 179 | 28 |
| 13. | இலங்கை நனோ தொழில்நுட்பவியல் நிறுவகம் (பிறைவேட்) லிமிடெட் | 86 | 192 | 130 |
| 14. | தேசிய போக்குவரத்து ஆணைக்குழு | 195 | 194 | 50 |
| 15. | இலங்கை கைவினைச் சபை (லக்சல) | 139 | 194 | 30 |
| 16. | மாந்தை சோல்ட் லிமிடெட் | 173 | 202 | 25 |
| 17. | லங்கா பொசுப்பேட் லிமிடெட் | 25 | 218 | 21 |
| 18. | நோர்த் சீ லிமிடெட் | 250 | 245 | 50 |
| | நடுத்தரம் | | | |
| 19. | பிசிசி லங்கா லிமிடெட் | 52 | 306 | 10 |
| 20. | பரந்தன் கெமிக்கல் கம்பனி லிமிடெட் | 55 | 307 | 8 |
| 21. | எல்கடுவ பிளான்டேசன் லிமிடெட் | 1545 | 328 | 222 |
| 22. | இலங்கை சுற்றுலா மற்றும் சுற்றுலா விடுதி நிறுவகம் | 190 | 341 | 27 |
| 23. | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை | 197 | 377 | 120 |
| 24. | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் | 710 | 545 | 102 |
| 25. | வைத்திய கலாநிதி. நெவில் பர்ணாந்து போதனா வைத்தியசாலை | 656 | 570 | 150 |
| 26. | இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் | 1219 | 596 | 200 |
| 27. | இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம் | 337 | 676 | 150 |
| | பெரியவை | | | |
| 28. | தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் | 317 | 771 | 46 |
| 29. | சிலோ பினான்டேசன் லிமிடெட் | 805 | 791 | 130 |
| 30. | இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் | 3,550 | 925 | 511 |
| 31. | இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் | 88 | 1,037 | 50 |
| 32. | இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் | 898 | 1,049 | 300 |
| 33. | ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை | 3,870 | 1,134 | 557 |
| 34. | வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு | 756 | 1,150 | 300 |
| 35. | வரையறுக்கப்பட்ட களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலை | 80 | 1,175 | 100 |
| 36. | றக்ன அராக்ஷன லங்கா லிமிடெட் | 3,616 | 1,224 | 250 |
| 37. | வரையறுக்கப்பட்ட கொழும்பு வர்த்தக வளமாக்கிக் கம்பனி | 132 | 1,330 | 250 |
| 38. | மத்திய கலாச்சார நிதியம் | 2,509 | 1,415 | 150 |
| 39. | அரச அபிவிருத்தி மற்றும் கட்டுமான கூட்டுத்தாபனம் | 594 | 1,449 | 400 |

| தொழிற்படு மூலதனக் கடனொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு பரிசீலிக்கப்பட வேண்டிய அரசிற்குச் சொந்தமான நிறுவனங்களின் பட்டியல் | | | | |
|---|---|---|---|---|
| இல. | நிறுவனம் | 2021 யூன் 30இல் உள்ளவாறு உண்மையான ஊழியர்கள் | 2020.12.31இல் உள்ளவாறு மொத்தப்புரள்வு (ரூ.மில்.) | 3 மாதங்களுக்கான எதிர்வுகூறப்பட்ட தொழிற்படு மூலதனம் (ரூ.மில்.) |
| 40. | (தேசிய பொறித்தொகுதி தேசிய கருவிகள் நிறுவனம் உட்பட) இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் | 2,260 | 1,532 | 500 |
| 41. | அரச அச்சகக் கூட்டுத்தாபனம் | 602 | 1,843 | 300 |
| 42. | அசோசியேட்டட் நியூஸ்பேப்பர் சிலோன் லிமிடெட் (லேக்கவுஸ்) | 1,341 | 1,911 | 150 |
| 43. | இலங்கை திரிபோசா லிமிடெட் | 246 | 1,996 | 300 |
| 44. | சேர் ஜோன் கொத்தலாவ பாதுகாப்பு பல்கலைக்கழகம் | 1,709 | 2,062 | 264 |
| 45. | வரையறுக்கப்பட்ட இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனம் | 367 | 2,101 | 400 |
| 46. | எஸ்ரிசி ஜெனரல் ரேடிங் கம்பனி லிமிடெட் | 352 | 2,454 | 400 |
| 47. | விமான போக்குவரத்து அதிகார சபை | 182 | 2,504 | 26 |
| 48. | இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் | 672 | 2,900 | 500 |
| 49. | வரையறுக்கப்பட்ட தேசிய விலங்குவளர்ப்பு அபிவிருத்திச் சபை | 1,988 | 3,232 | 300 |
| 50. | இலங்கை கப்பற்படுத்தல் கூட்டுத்தாபனம் | 120 | 3,849 | 500 |
| 51. | மத்திய பொறியியற்படுத்தல் ஆலோசனைப் பணியகம் | 1,289 | 6,131 | 500 |
| 52. | இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் | 1,480 | 7,366 | 250 |
| 53. | மில்கோ (பிறைவேட்) லிமிடெட் | 1,422 | 11,047 | 1,000 |

**இணைப்பு II**

**பின்வருமாறு கடன்களை வழங்குவதன் மூலம் தகைமையுடைய தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளையும் நியதிச் சட்ட கடப்பாடுகளையும் உள்ளடக்குதல் வேண்டும்.**

1. **3 மாதங்களுக்கான தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகள்**
   - சம்பளங்கள் மற்றும் கூலிகள்
   - மூலப்பொருட்களின் கொள்வனவு (அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் தொழிற்படாதிருக்குமாயின் இது கருத்திற்கொள்ளப்படமாட்டாது).
   - கடன் வழங்கியவர்களுக்கு தீர்ப்பனவு செய்தல்
   - பொதுப் பயன்பாட்டு பட்டியல்களை தீர்ப்பனவு செய்தல்
   - ஏனைய மீண்டெழும் செலவினங்கள்
   - பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் ஏற்றுக்கொள்ளத்தக்க வேறு ஏதேனும் தொழிற்படு மூலதனம்
   - நிதியமைச்சின் அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் விதந்துரைக்கப்பட்ட ஏதேனும் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடு
2. **நியதிச்சட்ட கடப்பாடுகளைத் தீர்ப்பனவு செய்தல்**
   - செலுத்தப்படத்தக்க ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்
   - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பனவற்றிற்கான மேலதிக விதிப்புக்கள்
   - செலுத்தப்படத்தக்க பணிக்கொடை
   - முற்பணங்கள் மற்றும் கடன்கள் (நிதியல்லா/ வங்கித்தொழில் துறை)
   - இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகளுக்குட்பட்டு வங்கிக் கடன், குத்தகை மற்றும் வங்கி மேலதிகப் பற்றுக்கள் (இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகள்/ சுற்றறிக்கைகளின் கீழ் வழங்கப்பட்ட சலுகைகள் காரணமாக இடைநிறுத்தப்படுவதற்கு/ பிற்போடப்படுவதற்கு தகைமையுடையவை நீக்கப்படுதல் வேண்டும்.

- பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் ஏற்றுக்கொள்ளத்தக்க வேறு ஏதேனும் நியதிச் சட்டக் கடப்பாடுகள்
- நிதியமைச்சின் அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் விதந்துரைக்கப்பட்ட வேறு ஏதேனும் நியதிச் சட்டக் கடப்பாடுகள்

**இணைப்பு III(அ)**

பதிவு இலக்கம்: ..........................................

**"சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி - கட்டம் IV"**

**பதிவுசெய்தல் படிவம்**

| | |
|---|---|
| 1. பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர் மற்றும் கிளை | |
| 2. கிளையின் முகவரி | |
| 3. தொலைபேசி/ தொலைநகல் இலக்கம் | |

4. விண்ணப்பதாரியின் அந்தஸ்து: நியதிச்சட்ட சபை கூட்டுத்தாபனம் ஏனையவை

தயவுசெய்து குறிப்பிடவும் ..........................................................................................................................................................................
...

5. அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் பெயர் மற்றும் தொடர்பு கொள்வதற்கான விபரங்கள்:

| அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சியின் பெயர் | அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் வியாபார பதிவு/ சட்ட இலக்கம் | பணிப்பாளர்களின் பெயர் | பதவி | பணிப்பாளர்களின் தே.அ.அட்டை இல. | தொடர்பு கொள்வதற்கான இலக்கம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

6. முழுமையான முகவரி/ அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் அமைவிடம்

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

7. மாவட்டம்: ......................................................

8. அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் வகை: சிறியது நடுத்தரம் பெரியது

9. சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி கட்டம் IV இன் கீழ் உள்ளடக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் மற்றும் செலவினம் பற்றிய சுருக்கமான விபரணம் (கடனின் நோக்கம்)

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

10. நிதியமைச்சின் அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் விதந்துரைப்புக்கள்/ சம்மதம் சமர்ப்பிக்கப்பட்ட திகதி (பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்) ..........................................

| | |
|---|---|
| 11. மதிப்பிடப்பட்ட தொழிற்படு மூலதன மற்றும் நியதிச் சட்ட கடப்பாடுகள்* | |
| 12. தேவையான கடன் தொகை | |
| 13. பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தினால் விதந்துரைக்கப்பட்ட/ ஒப்புதலளிக்கப்பட்ட கடன் தொகை | |

மேலே 9இல் முன்மொழியப்பட்டு விபரிக்கப்பட்டுள்ள செயற்றிட்டம் என்னால்/ கொடுகடன் அலுவலரினால் பரீட்சிக்கப்பட்டதென்றும் அது இலாபத்தன்மைக்கான போதுமான காசுப்பாய்ச்சலைக் கொண்டிருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளதென்றும் இது நிதியமைச்சின் அரச

தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் செய்யப்பட்ட விதந்துரைப்புக்களுடன் பொருந்துகின்றதெனவும் நான் உறுதிப்படுத்துவதுடன் எனவே சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதியின் கீழ் நிதியிடுவதற்கும் விதந்துரைக்கின்றேன்.

....................................................... .................................................................

திகதி: கிளை முகாமையாளரின் கையொப்பம்/ இறப்பர் முத்திரை

.....................................................................

பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தின்
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பமும்
இறப்பர் முத்திரையும்

* 3 மாத தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகள் மற்றும் நியதிச் சட்ட கடப்பாடுகளின் பட்டியலொன்றினை கணிப்புக்களுடன் இணைத்தல் வேண்டும்.

**இணைப்பு III (ஆ):**

**"சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி கட்டம் IV"**

**துணைக் கடன்பாட்டாளர்களை (அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள்) பதிவுசெய்தல்**

விண்ணப்ப இலக்கம்: .......................

சேரல் : இலங்கை மத்திய வங்கி

ஊடாக: பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தலைமை அலுவலகம்

பங்கேற்கும் நிறுவனத்தின் பெயர் :

பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் கிளையின் பெயர் : கிளையின் மாவட்டம்

| # | அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் பெயர் | முகவரி | வியாபாரப் பதிவு/ சட்ட இல. | பணிப்பாளரின் பெயர் | பதவி | தே.அ. அட்டை | செயற்றிட்டத்தின் அமைவிடம் | | கடன் விபரங்கள் | | | இ.ம.வங்கியின் பதிவு இலக்கம்* |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | முகவரி | மாவட்டம் | நோக்கம் | மதிப்பிடப் பட்ட செலவு (ரூ.) | விதந்துரைக் கப்பட்ட தொகை (ரூ.) | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |

மேலேயுள்ள அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் உத்தேச நடவடிக்கைகளும் செலவினமும் என்னால்/ வங்கியின் கொடுகடன் அலுவலரினால் பரீட்சிக்கப்பட்டன எனவும் அவை சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி கட்டம் IV இன்கீழ் நிதியிடப்படுவதற்குத் தகைமையுடையன எனவும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

....................................................... .................................................................

திகதி: (அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர், கையொப்பம்
மற்றும் அலுவலக முத்திரை)

* இலங்கை மத்திய வங்கியின் உபயோகத்திற்கு மாத்திரம்

இணைப்பு IV: மீள்நிதியிடலுக்கான விண்ணப்பம்

மீள்நிதியிடல் விண்ணப்ப இலக்கம்: ..................................................

(தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இலக்கம் ஆர்டிடி/கொவிட்19-கட்டம் ஐஏ/2021/01)

முகவரி:

திகதி:

**"சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி கட்டம் IV" இன்**

**மீள்நிதியிடலுக்கான விண்ணப்பம்**

**சேரல்: இலங்கை மத்திய வங்கி**

கனவான்களே

1 காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 88 (ஊ) இன் பொருட்கோடலுக்குட்பட்டு ஒரு கொடுகடன் நிறுவனம்/ பதிவுசெய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனமும் அச்சிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட எங்கள் யாப்பினை ஏற்கனவே சமர்ப்பித்த/ சமர்ப்பிக்கின்றவர்களுமாகிய .................................................................................................. நாங்கள் நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 88(அ) இன் ஏற்பாடுகளின் கீழ் ரூ. ..................................................................................... (ரூ...............) கொண்ட கடனைப் பெறுவதற்காக இத்தால் விண்ணப்பிக்கின்றோம்.

2. இவ்விண்ணப்பத்தினைத் தயாரிக்கையில், தங்களின் 2021.10.26 திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/கொவிட்19-கட்டம்-ஐஏ/2021/01 தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகுவதற்கு நாம் உடன்படுகின்றோம்.

3. மேலே குறிப்பிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களினால் தேவைப்படுத்தப்பட்டவாறும் அதிலுள்ள விடயங்களுக்கு இணங்கிச் செல்லும் விதத்திலும் "சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி கட்டம் ஐஏ" இன் கீழ் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகள் மற்றும் நியதிச் சட்டக் கடப்பாட்டுத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்தலுக்காக எங்களால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத் திகதிக்கு உடனடியாக முற்போந்த ஆறு மாதங்களுக்கு முற்படாத காலப்பகுதியில் வழங்கப்பட்ட கடன்களின் கூற்றுக்களை இரட்டைப் பிரதிகளில் இத்தால் அனுப்பி வைக்கின்றோம். இக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கடன்கள் மீள்நிதியிடல் கடனுக்கான விண்ணப்பமொன்றிற்கு ஆதரவளிக்கும் விதத்தில் ஏதேனும் முன்னைய கூற்றில் பிரதிபலிக்கப்பட்டிருக்கவில்லை என்பதனையும் உறுதிப்படுத்துகின்றோம்.

4. இவ்விண்ணப்பத்தின் நியதிகளில் எமக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட பணத்தினைத் தங்களுக்கு ................ (தவணைகளின் எண்ணிக்கை) ............ மாதாந்தம்/ காலாண்டு ரீதியில்/ அரையாண்டு (கால இடைவெளியினைக் குறிப்பிடவும்) ஒவ்வொன்றும் ரூ........................ கொண்ட தொகையில் மீள்செலுத்துவதற்கும் முதலாவது தவணையினை 20 ................... மாதம் ................ ஆம் திகதியிலிருந்து ஆரம்பிப்பதற்கும் இணங்குகின்றோம்.

5. பின்வருவன தொடர்பில் நாம் திருப்தியடைந்துள்ளோம் என்பதனை இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

   (i) மேலேயுள்ள பந்தி 3இல் குறிப்பிடப்பட்டுள்ள அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கடன்கள் அவர்களது கடன்பாட்டு வரையறைக்குள்ளேயே காணப்படுகின்றன; அத்துடன்

   (ii) அத்தகைய, கடன்களின் மீள்கொடுப்பனவிற்காகப் பெறப்பட்ட உத்தரவாதங்களைப் பொறுத்த வரையில் உத்தரவாதிகள் அத்தகைய உத்தரவாதங்களை வழங்கும் அதிகாரங்களைக் கொண்டிருக்கின்றனர்

**பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் அதிகாரமளிக்கப்பட்ட**
**அலுவலர்/(கள்) இன் கையொப்பம் பெயர் மற்றும் பதவி**
**முகாமையாளர், மீள்நிதியிடல் பிரிவு**

**இணைப்பு V: மீள்நிதியிடல் விண்ணப்பத்திற்கான பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் கூற்று**

மீள்நிதியிடல் விண்ணப்ப இலக்கம்: ........................

**"சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி கட்டம் IV" கீழ்**

**பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் கூற்று**

(தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இலக்கம்: ஆர்டிடி/கொவிட்19-கட்டம்-ஐஏ/2021/01) கொண்ட

சேரல் : இலங்கை மத்திய வங்கி

இலிருந்து : மீள்நிதியிடல் பிரிவு: ..................................

பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் : ............................................. கிளை: ........................... மாவட்டம்: ......................

| விசாரணை இல. | அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் பெயர் மற்றும் முகவரி | செயற்றிட்ட விபரணம் மற்றும் கடனின் நோக்கம் | துணைக் கடன் தொகை (ரூ.) | பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை (ரூ.) | பகிர்ந்தளிக் கப்பட்ட திகதி | மீள்நிதியிடல் எதிர்பார்க்கப்படும் பகிர்ந்தளிக் கப்பட்ட தொகை | சலுகைக் காலம் | மீள்கொடுப்பனவு அட்டவணை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | தவணைகள் | | முதல் தவணைப் பணம் செலுத்தும் திகதி | இறுதித் தவணைப் பணம் செலுத்தும் திகதி |
| | | | | | | | | தவணைகளின் எண்ணிக்கை | தவணைப் பணத்தின் பெறுமதி (ரூ.) | | |
| | | | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | | | |

இலங்கை மத்திய வங்கிக்கும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்குமிடையிலான மீள்நிதியிடல் உடன்படிக்கையில் இணங்கப்பட்டவாறு, மேலேயுள்ள மீள்கொடுப்பனவு அட்டவணையில் தரப்பட்டுள்ள விதத்தில் வருடாந்தம் இரு தவணைகளில் இலங்கை மத்திய வங்கிக்கு மேற்குறிப்பிட்ட கடனைச் செலுத்த நாம் இத்தால் வாக்குறுதி வழங்குகிறோம்.

........................................................ ...................................................................

திகதி: (அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர், கையொப்பம்

இணைப்பு VI: கோரலின் பேரிலான வாக்குறுதிச் சான்றிதழ்

மீள்நிதியிடல் விண்ணப்ப இல.:- ..........................................................

**(2021.10.26 திகதியிடப்பட்ட இலக்கம் ஆர்டிடி/கொவிட்19-கட்டம்-ஐஏ/2021/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு)**

**கோரலின் பேரிலான வாக்குறுதிச் சான்றிதழ்**

கொழும்பு

திகதி: ...................

ரூ. .................................................

கோரலின் பேரில் கீழே கையொப்பமிட்டுள்ள ..................................................................................................................................

.............................................................................................................................................................................................

(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி)

ஆகிய நாங்கள் இலங்கை மத்திய வங்கிக்கு அல்லது கட்டளையின்படி கொழும்பில், பெறப்பட்ட பெறுமதியையும் இங்கே குறிப்பிட்டுள்ள திகதியிலிருந்து ஆண்டொன்றிற்கு .....................% வீதத்திலமைந்த அதற்கான வட்டியையும் சேர்த்து ரூபா ................................................ ......................................... (ரூ....................) இனைச் செலுத்த இத்தால் உறுதியளிக்கின்றோம்.

.................................................................

(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்) இற்காக

மீள்நிதியிடல் பிரிவு

தலைமை அலுவலகம்

........................................... 1. ........................................................

(முத்திரை) 2. ........................................................

(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்)

சாட்சிகள்:

1. ..........................................

2. ..........................................

இணைப்பு VII: வழங்கல் கடிதம்

மீள்நிதியிடல் விண்ணப்ப இல.:- ........................................................

**(2021.10.26 திகதியிடப்பட்ட இலக்கம் ஆர்டிடி/கொவிட்19-கட்டம்-IV/2021/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு)**

**வழங்கல் கடிதம்**

கொழும்பு

திகதி: ...................

சேரல்: இலங்கை மத்திய வங்கி

காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 88(அ)இன் கீழ் தங்களின் 2021.10.26ஆம் திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/கொவிட்19-கட்டம்-IV/2021/01 இல் குறிப்பிடப்பட்டுள்ள கொடுகடன் திட்டத்தின் கீழ் (சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி கட்டம் IV) என்ற பெயரிலான மீள்நிதியிடல் திட்டத்திற்கு எங்களால் மேற்கொள்ளப்பட்ட கடன்வழங்கல் தொழிற்பாடுகள் தொடர்பில் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மீள்நிதியிடல் நோக்கத்துடன் ரூபா..... .............................................................................................. (ரூ.............) இனை கடன் வழங்க உடன்பட்டுள்ளீர்கள் என்பதனைக் கவனத்தில் கொண்டு இத்தால் நாங்கள் தங்களின் சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பேரில் அதற்கான வட்டியுடன் சேர்த்துச் செலுத்தத்தக்க ரூபா................................................ இற்கான (ரூ...............) வாக்குறுதிச் சான்றிதழை வழங்குகின்றோம்.

கொடுப்பனவிற்கான சமர்ப்பித்தலை நாம் இத்தால் வலியுறுத்தாமல் விடுவதுடன் எமது குறிப்பிட்ட வாக்குறுதிச்சான்றிதழ் தொடர்பில் மறுப்பது பற்றிய அறிவித்தல் வழங்கப்பட வேண்டுமென்ற அவசியமுமில்லை என நாம் இத்தால் தெரிவித்துக் கொள்கிறோம்.

(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்) இற்காக

மீள்நிதியிடல் பிரிவு

தலைமை அலுவலகம்

1. .......................................................

2. .......................................................

(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்/ அலுவலர்களின் கையொப்பம்)

இணைப்பு VIII: இலங்கை மத்திய வங்கியின் உத்தரவாதமளிப்பதன் மூலமான சாட்டுதல் படிவம்

மீள்நிதியிடல் விண்ணப்ப இல.:- ........................................................

**(2021.10.26 திகதியிடப்பட்ட இலக்கம் ஆர்டிடி/கொவிட்19-கட்டம்-ஐஏ/2021/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு)**

**நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 88அ இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கு உத்தரவாதமளிப்பதன் மூலமான சாட்டுதல் படிவம்***

கொழும்பு

திகதி: ...................

1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச் சட்டம் மற்றும் 1968ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க நாணய விதிச் சட்டம் (திருத்தப்பட்டது) என்பனவற்றினால் திருத்தப்பட்டவாறான நாணய விதிச் சட்டத்தின் 88(அ) பிரிவின் நியதிகளில் ................................................................. ........................................................................................................................................................................................

(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி)

ஆகிய நாங்கள் இங்கே தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களின்படி எமக்கு வழங்கப்பட்டுள்ள படுகடனை மீளச்செலுத்துவதற்கான பிணையாக/ மேலும் பிணையமாக, வங்கியினால் எமக்கு வழங்கப்பட்ட கடனை ஆண்டிற்கு ................... வட்டியுடன் ரூபா.........................................(ரூ..........) கொண்ட கடனை இலங்கை மத்திய வங்கிக்கு மீளச்செலுத்துவதற்கான சாட்டுதலை இத்தால் மேற்கொள்கிறோம்.

**அட்டவணை**

| படுகடன் தொகை (ரூ.) | கடன்பாட்டாளர் (அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள்) பெயர் மற்றும் முகவரி | திகதி | நொத்தாரிசு |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| | | | |

.........................................................................

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் மற்றும் கையொப்பம்
(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்) இற்காக
மீள்நிதியிடல் பிரிவு
தலைமை அலுவலகம்

-----------------------------------------------------------------------

* அரசிற்குச் சொந்தமான உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்.

இணைப்பு IX: பகிர்ந்தளிப்புக் கடிதம்

**பகிர்ந்தளிப்புக் கடிதம்**

**(2021.10.26 திகதியிடப்பட்ட இலக்கம் ஆர்டிடி/கொவிட்19-கட்டம்-ஐஏ/2021/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு)**

வங்கியின் பெயர்:
வங்கியின் குறியீட்டு இல:
கிளையின் பெயர்:
கிளையின் குறியீட்டு இல:
கடனின் தொடர் இல:
திகதி:
பகிர்ந்தளிப்பு:

| * | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|

**"சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதியின் கட்டம் IV"**
**கடன் திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் கூற்று**

| **விசாரணை இலக்கம்:** |
|---|

**1. கடன்பாட்டாளரின் விபரங்கள்** :

1.1 கடன்பாட்டாளரின் பெயர் (அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சி) :

1.2 கடன்பாட்டாளரின் முகவரி (அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சி) :

1.3 தொடர்பு கொள்வதற்கான/ பொறுப்பான ஆள் இல. :

1.4 கடன்பாட்டாளரைத் தொடர்பு கொள்வதற்கான இல. :

**2. கடனின் விபரங்கள்**

2.1 கடனின் நோக்கம் :

2.2 துணைச் செயற்றிட்டத்தின் அமைவிடம் :

2.3 ஒப்புதலளிக்கப்பட்ட கடனின் மொத்தத் தொகை: ஆரம்பத் தொகை ரூ.

அதிகரித்த செலவிற்காக பின்னர் அதிகரிக்கப்பட்ட கடன் ரூ.

மொத்தம் ரூ.

2.4 மூலக் கடன் தொகைக்கு ஒப்புதலளித்த திகதி:

கடன் அதிகரிப்பிற்கு ஒப்புதலளிக்கப்பட்ட திகதி:

2.5 மீள்நிதியிடல் விண்ணப்பிக்கப்பட்ட தவணைப் பணத்திற்கான மீள்கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம்:

திகதி: தொகை (ரூ.):

2.6 வட்டி வீதம்

**3. கடனின் நிலை**

| | | |
|---|---|---|
| 3.1 முன்னர் விடுவிக்கப்பட்ட தொகை | ) | |
| மற்றும் இ.ம. வங்கியிலிருந்து கோரப்பட்ட மீள்நிதியிடல் | ) | ரூ. |
| 3.2 தற்பொழுது விடுவிக்கப்பட்ட தொகை | ) | |
| மற்றும் இதற்காக எதிர்பார்க்கப்படுகின்ற மீள்நிதியிடல் | ) | ரூ. |
| | மொத்தம் | ரூ. |

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென நான் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி: கிளை முகாமையாளரின் கையொப்பம்

கிளை முகாமையாளரின் பெயர்

* பொருத்தமான கூட்டில் புள்ளடி அடையாளத்தினை இடுவதன் மூலம் இது 1ஆவது, 2ஆவது அல்லது எந்தத் தவணைக்குரியது என்பதனை தயவுசெய்து காட்டவும்.

2021.10.29

**தொடர்பு எண்: 32/004/021/001/005**

சேரல்: அனைத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்/ பொது முகாமையாளர்

கனம் ஐயா/ அம்மணி,

**"சுவசக்தி - பத்து இலட்சம் தொழில் வாய்ப்புக்களை நோக்கி" கடன் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட கடன்களுக்காக வழங்கப்படவுள்ள சலுகைகள்**

1 நீங்கள் ஏற்கனவே அறிந்துள்ளவாறு, நாட்டின் பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிக்கும் நோக்குடன் கொவிட்-19 பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்ட தனிப்பட்டவர்கள் மற்றும் வியாபாரங்களுக்கு படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினை வழங்குவதற்காக, இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை 2021.09.01ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க சுற்றறிக்கையொன்றினை (நாணயச் சபை சுற்றறிக்கை) விடுத்தது (இணைப்பு அ). அதற்கமைய, பின்வருவன தொடர்பில் தங்களின் தயவான கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. "சுவக்தி - பத்து இலட்சம் தொழில்வாய்ப்புக்களை நோக்கி" கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்காக நீடிக்கப்பட்ட சலுகைகள்

2.1 நாணயச் சபைச் சுற்றறிக்கையின் 9ஆம் பிரிவுடன் இசைந்துசெல்லும் விதத்தில், 2021.09.01 இலிருந்து 2021.12.31 வரையான காலப்பகுதியில் சுவசக்தி கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்காக படுகடன் சட்ட இசைவுத்தாமத கால வசதியை ஒவ்வொரு விடயமாக ஆராய்ந்து வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

2.2 படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினை துணைக் கடன்பாட்டாளர்கள் கேட்டுக்கொள்கின்றவாறு, தொடர்புடைய கடன்களின் மூலதன மீள்கொடுப்பனவிற்கு மாத்திரம் அல்லது மூலதனம் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் இரண்டிற்கும் வழங்கமுடியும். நாணயச் சபை சுற்றறிக்கையில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, உத்தேச சலுகைகள் கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட துணைக் கடன்பாட்டாளர்களுக்கு ஒவ்வொரு விடயமாக ஆராய்ந்து வழங்குதல் வேண்டும்.

2.3 அத்தகைய சலுகைகள் பயன்படுத்திக்கொள்ள விரும்புகின்ற தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் அத்தகைய சலுகைகளை எதிர்பார்ப்பது பற்றி தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு கோரிக்கையொன்றினை விடுத்தல் வேண்டும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் சலுகைகள், காலவரையறை மற்றும் சமர்ப்பிப்பதற்கான விண்ணப்பப்படிவம் என்பன பற்றி அனைத்து தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கும் அச்சு அத்துடன்/ அல்லது மின்னஞ்சல் மற்றும் குறுந்தகவல் உட்பட இலத்திரனியல் ஊடகமூடாக விரைவான முறையில் அறிவிக்கும்.

2.4 இதற்கமைய, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் சலுகைகளைப் பயன்படுத்திக்கொள்ள விரும்பும் தகைமையுடைய கடன்பாட்டாளர்களிடமிருந்தான கோரிக்கையினை ஏற்றுக்கொண்டு, இணைக்கப்பட்டுள்ள படிவத்தின்படி (ஆர்டிடி-சுவசக்தி-29.10.2021-இணைப்பு I) கடன் திட்டங்களுக்கான விபரங்களை தனித்தனியாக பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளருக்கு 2021.11.30 அளவில் அறிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றன. விபரங்களின் மென்பிரதியை எக்சல்

வடிவத்தில் ளைநெநறயசநைளூஉடிளட.டம மற்றும் உாயஅயடளைஞூஉடிளட.டம இற்கும் எதைவொயிளூஉடிளட.டம இற்கான பிரதியுடன் அனுப்பிவைத்தல் வேண்டும்.

3. நீடிக்கப்பட்ட படுகடன் சட்ட இசைவுத்தாமத காலப்பகுதி தொடர்பில் வட்டி வீதத்தினைக் கணித்தல்

3.1 நீடிக்கப்பட்ட சட்ட இசைவுத்தாமத காலப்பகுதிக்கான ஒன்றுசேர்ந்த மூலதனத்தின் மீதான வட்டியினை, சுவசக்தி கடன் திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் மீது இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட தொடர்பான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களிலும் அதன்பின்னர் செய்யப்பட்ட திருத்தங்களிலும் வழங்கப்பட்டவாறான வட்டி வீதங்களுடன் இணங்கிச்செல்லும் விதத்தில் கணிக்குமாறு அனைத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

3.2 எந்தவொரு குறிப்பிட்ட நேரத்திலும் ஏதேனும் சூழ்நிலையின் கீழும் ஏதேனும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் எவரேனும் துணைக் கடன்பாட்டாளரிடம் விதித்த வட்டி, மேலே குறிப்பிடப்பட்ட வட்டி வீதத்திலும் பார்க்க உயர்வானதாக இருக்கும் சந்தர்ப்பத்தில், அத்தகைய பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் துணைக் கடன்பாட்டாளர் சார்பிலான அத்தகைய வட்டி விதிப்புக்களைத் திருத்திக்கொள்வதற்கும் வேறுபாடுகளை தொடர்பான துணைக் கடன்பாட்டாளர்களுக்கு மீளச்செலுத்தவதற்கும் உடனடியாக ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

3.3 எவரேனும் துணைக் கடன்பாட்டாளர் சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் வட்டி வீத கொடுப்பனவுகளை செலுத்தாமல் விடுவதற்கு விரும்புவாராயின் அத்தகைய காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த வட்டியை எஞ்சியுள்ள கடன் தவணைகளிடையே சமமாகப் பகிர்ந்துகொள்ளுதல் வேண்டும். படுகடன் சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த வட்டியின் மீது வட்டி எதுவும் விதிக்கப்படக்கூடாது என்பதுடன் சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் ஏதேனும் கூட்டுவட்டி கணிக்கப்படவும்கூடாது.

4. செயற்படாக் கடன்களுக்கான அறவிடல் நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்

4.1 நாணயச் சபையின் சுற்றறிக்கை பிரிவு 2(இ) உடன் இசைந்துசெல்லும் விதத்தில், இதே சுற்றறிக்கையின் வழிகாட்டல்களுக்கிணங்க, செலுத்தத்தவறிய கடன்பாட்டாளர்கள் தொடர்பில் சுவசக்தி கடன் திட்டத்தின் இடைநிறுத்தப்படவுள்ள அனைத்துத் தேவையான ஆரம்ப அறவிடல் நடவடிக்கைகளையும் அனைத்து பங்கேற்கும் நிறுவனங்களுக்கும் 2021.12.31 இற்குப் பின்னர் ஒரு மாதத்திற்குள் முன்னெடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

5. செயற்படாக் கடன்வகையிலுள்ள கடன்களுக்கு சலுகைகளை வழங்குதல்

5.1 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தீர்மானங்களை எடுக்கும்போது செயற்படாக் கடன்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட அனைத்து பணிப்புரைகளுக்கும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இணங்கியொழுகுதல் வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு, இனிவரும் கடன் தவணைகளுக்காக செயற்படாக் கடன் வகைக்கு படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினை வழங்கலாம். மேலும், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் ஏற்கனவே செயற்படாக் கடன் வகையிலுள்ள கடன்பாட்டாளர்களுக்கான படுகடன் சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியினை பிற்திகதியிடவோ அத்தகைய கடன்பாட்டாளர்களை செயற்படுகின்ற வகைக்கு மாற்றவோகூடாது.

6. இவ்வறிவுறுத்தல்களுடன் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

7. இக்கடிதத்தின் உள்ளடக்கத்தினை தங்கள் வங்கியில் தொடர்பான திணைக்களங்கள்/ கிளையிலுள்ள அலுவலர்களின் கவனத்திற்கொண்டு வருவதனையும் சுவசக்தி கடன் திட்டத்தின் தொழிற்பாட்டு வினைத்திறனைப் பேணுவதற்கு மேலே குறிப்பிடப்பட்ட காலவரையறையினைப் பூர்த்திசெய்யப்படுவதனையும் தயவுசெய்து உறுதிப்படுத்தவும்.

உங்கள் உண்மையுள்ள,
பீ.எல்.ஜே.எஸ். பாலசூரிய
பணிப்பாளர்
பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

பிரதி: 1. செயலாளர், இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சு

2021.11.02

சேரல்: அனைத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்/ பொது முகாமையாளர்

கனம் ஐயா/ அம்மணி,

**இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களின் கீழ் கடன்களைப்பெற்ற கடன்பாட்டாளர்களுக்கு சலுகைகளை வழங்குதல்**

இது, இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்வரும் திட்டங்களின் கீழ் கடன்களைப் பெற்றுக்கொண்ட கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் தொடர்பில் 2021.09.10, 2021.09.19 மற்றும் 2021.09.23ஆம் திகதிகளைக் கொண்ட எங்கள் கடிதங்களுக்கு மேலதிகமானது.

- சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி கடன் திட்டம் கட்டம் I, II மற்றும் III
- சௌபாக்யா (சுபீட்சம்) கடன் திட்டம்
- வழங்கல் சங்கிலி மீள்வலுவூட்டல் கடன் திட்டம்
- சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் திட்டங்கள்
- சிறு உடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் மீளெழுச்சிப்படுத்தல் திட்டம்

ஒவ்வொரு விடயங்களின் அடிப்படையில், சட்ட இசைவுத்தாமதத்திற்கான வாடிக்கையாளர்கள் கோரிக்கையினை ஏற்றுக்கொள்கின்ற காலவரையறையும் மேலே குறிப்பிடப்பட்ட திட்டங்களுக்காக மத்திய வங்கியிடம் சட்ட இசைவுத்தாமதக் கோரிக்கையினைச் சமர்ப்பிக்கின்ற காலவரையறையும் 2021.11.15 வரை நீடிக்கப்பட்டிருக்கின்றது என்பதனை தங்களுக்கு அறியத்தருகிறோம். இதற்கமைய, சட்ட இசைவுத்தாமதத்திற்கான அனைத்து கோரிக்கைகளும் இலங்கை மத்திய வங்கிக்கு 2021.11.15 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மேலே கூறப்பட்ட காலவரையறையினைப் பூர்த்திசெய்யும் சட்ட இசைவுத்தாமதக் கோரிக்கைகளை மாத்திரமே வட்டி உதவுதொகையினை செலுத்தவதற்கு, அல்லது, 2021ஆம் ஆண்டின் பின்னரைப் பகுதிக்கான வழங்கப்பட்ட சட்ட இசைவுத்தாமதத்தின் கீழான மீள்நிதி அறவிடல் கணிப்புக்களுக்காக பரிசீலனையில் கொள்ளும்.

இக்கடிதத்தின் உள்ளடக்கத்தினை தங்கள் வங்கியின் தொடர்பான திணைக்களங்கள்/ கிளைகளின் அலுவலர்களது கவனத்திற்கு கொண்டுவருமாறும் திட்டத்தின் தொழிற்பாட்டு வினைத்திறனை பேணுவதற்காக மேலேகுறிப்பிடப்பட்ட காலவரையறை பூர்த்திசெய்யப்படுவதனை உறுதிப்படுத்துமாறும் தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் உண்மையுள்ள,
**பணிப்பாளர்**
**பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல: ஆர்டிடி/ஜஎஸ்/எஸ்எவ்/2021/01

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 590
இல.30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு - 01
2021.12.21

சேரல்: அனைத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

**இலங்கையில் இறால் வளர்ப்புப் பண்ணைகளைச் செறிவுபடுத்துவதற்கான வட்டி உதவுதொகைக் கடன் திட்டம்**

இலங்கையில் இறால் வளர்ப்புப் பண்ணைகளைச் செறிவுபடுத்துவதற்கான வட்டி உதவுதொகைக் கடன் திட்டமொன்றினை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துவதற்காக (இதனகத்துப்பின்னர் “திட்டம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளரினால் அனைத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் (இதனகத்துப்பின்னர் “பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2021.12.21ஆம் திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/ஜஎஸ்/எஸ்எவ்/2021/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருக்கின்றன.

1. அறிமுகம்

1.1 இத்திட்டமானது மீன் வளர்ப்பு, நன்னீர் மீன்பிடி மற்றும் இறால் பண்ணை, மீன்பிடித் துறைமுக அபிவிருத்தி, பல நாள் மீன்பிடி நடவடிக்கைகள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சின் (இதனகத்துப்பின்னர் “மீன்பிடி இராஜாங்க அமைச்சு” என குறிப்பீடு செய்யப்படும்) கோரிக்கையின் மீது உற்பத்தியை அதிகரிப்பதற்காக இறால் வளர்ப்போரின் வசதிகளை தரமுயர்த்துவதன் மூலம் (இதனகத்துப்பின்னர் “கடன்பாட்டாளர்கள்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கையில் இறால் வளர்ப்புப் பண்ணைகளைச் செறிவுபடுத்துவதற்காக சலுகை நியதிகளின் கீழ் வட்டி உதவுதொகைக் கடன் திட்டமொன்றினை

நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்படுகிறது.

1.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கு சலுகை வட்டி வீதங்களில் தமது நிதிகளைப் பயன்படுத்தி கடன்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன. வட்டி உதவுதொகையானது இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு ஏற்படும் நிதியச் செலவுகளை உள்ளடக்கும் விதத்தில் மத்திய வங்கியினால் வழங்கப்படும்.

1.3. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இத்திட்டத்தின் கீழ் கடன்பாட்டாளர்களுக்கு வழங்கிய கடன்களுக்காக இலங்கை மத்திய வங்கியிலிருந்து வட்டி உதவுதொகையினைக் கோருவதற்கு தகைமையுடையனவாகும்.

1.4. நடைமுறைப்படுத்தல் முகவராண்மையாக திட்டத்தினை தொழிற்படுத்துவதற்கான அதிகாரம் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

**2. நிதியிடல்**

2.1 கடன் பகிர்ந்தளிப்பிற்கான நிதியம்: பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் சொந்த நிதியங்கள்

2.2 வட்டி உதவுதொகை ஏற்பாடுகளுக்கான நிதியிடல்: மீன்பிடிகள் இராஜாங்க அமைச்சு

**3. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள்**

இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி

**4. திட்டத்தின் முக்கிய அடிப்படைப் பண்புகள்**

4.1 திட்டத்தின் முக்கிய பண்புகள்

| | | |
|---|---|---|
| (i) கடன்பாட்டாளரொருவருக்கான உயர்ந்தபட்ச கடன் தொகை | | ரூ.100 மில் (உத்தரவாதமொன்றிற்கு உயர்ந்தபட்சம் ரூ.5 மில்.) |
| (ii) கடன்பாட்டாளருக்கு ஏற்புடைத்தான வட்டி வீதம் | முதல் 18 மாத காலப்பகுதிக்கு | ஆண்டிற்கு 4.5 சதவீதம் |
| | அடுத்த 06 மாதங்களுக்கு | ஆண்டிற்கு 8.5 சதவீதம் |
| (iii) வட்டி உதவுதொகை | முதல் 18 மாத காலப்பகுதிக்கு | ஆண்டிற்கு 4 சதவீதம் |
| | அடுத்த 06 மாதங்களுக்கு | வட்டி உதவுதொகை செலுத்தப்படமாட்டது |
| (iv) சலுகைக் காலம் உட்பட உயர்ந்தபட்ச மீள்கொடுப்பனவுக் காலம் | | இரண்டு (02) ஆண்டுகள் |
| (v) சலுகைக் காலம் | | ஆறு (06) ஆண்டுகள் |

4.2 பொதுவான பண்புகள்

(i) செயற்றிட்டத்தின் தன்மை - இறால் பண்ணைகளை செறிவுபடுத்துவதற்காக சலுகை நியதிகளின் கீழ் வட்டி உதவுதொகைக் கடன் திட்டம்

(ii) திட்டத்தின் குறிக்கோள்கள் - இறால் வளர்ப்போர் அவர்களது பண்ணைகளை தரமுயர்த்துவதற்கு உதவுதல்

(iii) இலக்கிடல் குழு/ கடன்பாட்டாளர்கள் - இறால் பண்ணை வளர்ப்பில் "பீ" தரம் மற்றும் "சி" தரத்தினை தற்பொழுது கொண்டுள்ள இறால் வளர்ப்போர்

(iv) செயற்பாட்டுப் பிரதேசம் - தீவு முழுவதும்

(v) கடன்பாட்டாளர்களைத் தெரிவுசெய்தல் - கடன்பாட்டாளர்கள், தொழில்நுட்ப ரீதியாகவும் நிதியியல் ரீதியாகவும் இயலாற்றலைக் கொண்ட தகைமையுடைய இறால் வளர்ப்போரிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருவதன் மூலம், தெரிவுசெய்யும் செயன்முறையொன்றின் வாயிலாக மீன்பிடி இராஜாங்க அமைச்சினால் அத்துடன்/ அல்லது இலங்கை தேசிய நீரியல் வாழ் உயிரினங்கள் அபிவிருத்தி அதிகாரசபையினால் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும்.

- கிடைக்கத்தக்க நிதியின் அடிப்படையில், நன்மைபெறுநர்களைத் தெரிவுசெய்வது மீன்பிடி இராஜாங்க அமைச்சினால் அத்துடன்/ அல்லது இலங்கை தேசிய நீரியல் வாழ் உயிரினங்கள் அபிவிருத்தி அதிகாரசபையினால் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(vi) பிணையுறுதி - தேசிய நீரியல் வாழ் உயிரினங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் பணிகளை உரிமம்/ மீண்டும் வாங்கிக்கொள்ளும் உத்தரவாதம்/ ஏற்றுமதியாளர்களிடமிருந்தான வழமையான கூட்டுறவு உத்தரவாதம் அல்லது பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் ஏற்றுக்கொள்ளத்தக்க வேறு ஏதேனும் பிணையுறுதி

4.3 கடன்பாட்டாளர்கள் 06 மாத சலுகைக் காலத்திற்கு உரித்துடையவர்களாகவிருப்பதுடன் அதன்பின்னர் கடனை ஓராண்டிற்குள் இரு தவணைகளில் செலுத்தவேண்டியிருக்கும். கடன் தொகையில் அரைப்பங்கினை (மூலதனத்திலும் ஏற்புடைத்தான வட்டி வீதத்திலும் அரைப்பங்கு) கடன் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 12 மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் கடன்பாட்டாளர்களினால் செலுத்தப்படல் வேண்டும். மீதிக் கொடுப்பனவினை கடன் காலம் முடிவடைவதற்கு முன்னதாக அடுத்த 06 மாதங்களுக்குள் செலுத்துதல் வேண்டும்.

4.4 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இணங்கிக்கொள்ளுமிடத்து, கடன்பாட்டாளர்கள் அவர்களது கடன் காலத்தினை மேலும் 06 மாத காலப்பகுதிக்கு (அதாவது, சலுகைக்காலம் உட்பட மொத்த மீள்கொடுப்பனவுகளுக்கான காலம் உயர்ந்தபட்சம் இரண்டு ஆண்டுகள் வரை இருக்கும்) நீடிக்கமுடியும். எனினும், இவ்விடயத்தில் நீடிக்கப்பட்ட காலத்திற்கு வட்டி உதவுதொகை வழங்கப்படமாட்டாது என்பதுடன் கடன்பாட்டாளர் மொத்த வட்டியையும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு செலுத்தவேண்டியிருக்கும். இது உயர்ந்தபட்சம் ஆண்டிற்கு 8.5 சதவீதமாக இருக்கும்.

4.5 கடன் காலத்தினைக் கருத்திற்கொள்ளாது, வட்டி உதவுதொகை கடனின் 18 மாத காலப்பகுதிக்கு மாத்திரம் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும்.

4.6 மேலும், 4.3இல் குறிப்பிடப்பட்ட சலுகைக் காலத்தில் வட்டியை செலுத்தாதிருப்பதற்கான தெரிவுரிமையை கடன்பாட்டாளர்கள் கொண்டிருப்பதுடன் ஒன்றுசேர்ந்த வட்டித்தொகை எஞ்சியுள்ள கடன் காலப்பகுதியில் சமமாக பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும். சலுகைக் காலத்தின் பின்னர் ஒன்றுசேர்ந்த வட்டியை (முதல் 06 மாதங்கள்) முழுமையாக செலுத்தவேண்டியிருக்கும் அதேவேளையில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கான முதல் கொடுப்பனவும் கடன்பாட்டாளர்களினால் செலுத்தப்படுகிறது. சலுகைக் காலத்தில் ஒன்றுசேர்ந்த வட்டியின் மீது வட்டி எதுவும் விதிக்கப்படக்கூடாது.

**5. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் வகிபாகமும் பொறுப்புக்களும்**

5.1 கடன் தொழிற்பாடுகளை கிளை அலுவலகங்கள், மீன்பிடி இராஜாங்க அமைச்சு, தேசிய மீன் வளர்ப்பு உயிரின அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை மத்திய வங்கி என்பனவற்றுடன் இணைப்பதற்கும் மேற்பார்வை செய்வதற்குமாக பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் மூத்த அலுவலரொருவரை நியமித்தல்.

5.2 கிளை வலையமைப்பினூடாக திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருப்பதனை உறுதிப்படுத்தல்.

5.3 கடன்களை வழங்குவதற்காக பொருத்தமான கிளைகளின் எண்ணிக்கையினை குறித்துரைத்தல் மற்றும் அத்தகைய கிளைகளிலுள்ள அலுவலர்களுக்கு திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் பற்றி விழிப்புணர்வூட்டுதல்.

5.4 கடன்களை வழங்குதல் மற்றும் அறவிடல் தொடர்பில் முழுப்பொறுப்பினையும் ஏற்றுக்கொள்ளுதல்.

5.5 மீன்பிடி இராஜாங்க அமைச்சு அத்துடன்/ அல்லது தேசிய மீன் வளர்ப்பு உயிரின அபிவிருத்தி அதிகாரசபை என்பனவற்றினால் மேற்கொள்ளப்பட்ட விதந்துரைப்புக்களின் ஏக அடிப்படையில் மாத்திரமே கடன்களுக்கு தெரிவுசெய்யப்படுவதனையும் வழங்குவதனையும் உறுதிப்படுத்தல்.

5.6 இத்திட்டத்தின் கீழ் தனியொரு கடன்பாட்டாளர் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து பல கடன்களைப் பெறுவதனை தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதனை உறுதிப்படுத்தல்.

5.7 தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் எந்தவொரு கடனுக்கும் எந்தவொரு சூழ்நிலையிலும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் எந்தவொரு கிளையும் மேலே 4.1(ஐ)ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட வட்டி வீதத்திலும் பார்க்கக்கூடிய விதத்தில் வட்டியை விதிக்கப்படக்கூடாது என்பதனை உறுதிப்படுத்தல்.

5.8 ஒவ்வொரு செயற்றிட்டமும் சிக்கனமானதும் நிதியியல் ரீதியில் ஆற்றல்வாய்ந்ததுமென தாமே திருப்திப்பட்டுக்கொள்ளுதல்.

5.9 கடன் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் கண்டறிவதற்கு வசதியளிக்கின்ற விதத்தில் திட்டம் தொடர்பில் தனியான பதிவேடுகளையும் தரவுகளையும் பேணுதல்.

5.10 இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியம் முழுவதும் உள்ளீர்த்துக்கொள்ளப்பட்டமையினை உறுதிப்படுத்தும் விதத்தில், கடன் வழங்குவது தொடர்பில் திட்டத்தின் இலக்குகளை எய்துவதற்கு நன்மைபெறுநர்கள் இயலளவு அபிவிருத்தி தொடர்பிலும் கடற்றொழில் இராஜாங்க அமைச்சுடனும் அத்துடன்/ அல்லது மீன் வளர்ப்பு உயிரின அபிவிருத்தி அதிகாரசபையுடன் ஒத்துழைத்தல்.

5.11 காலத்திற்குக் காலம் இலங்கை மத்திய வங்கியினால் கோரப்படும் திட்டம் தொடர்பாக தரவுகளையும் தகவல்களையும் தொடர்பான படிவத்தில் தொடர்பான தலைமை அலுவலகங்களூடாக சமர்ப்பித்தல்.

5.12 திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் செயலாற்றத்தினை முன்பும் பின்பும் மேற்பார்வை செய்தல்.

5.13 தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கு கடன்களை பகிர்ந்தளிக்கையில் வழமையான கவனத்தினையும் முன்மதியுடைய தன்மையினையும் பின்பற்றுதல் வேண்டுமென்பதுடன் கடன்கள் அவை வழங்கப்பட்ட நோக்கத்திற்கே பயன்படுத்தப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்கு நியாயமான நடவடிக்கைகள் எல்லாவற்றையும் எடுத்தல் வேண்டும்.

5.14 கணக்குகளையும் நிதியியல் கூற்றுக்களையும் பேணுதல்.

அ) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் மற்றைய விடயங்களுடன் கடன் மதிப்பீடு, ஒப்புதல்கள், பகிர்ந்தளிப்புக்கள் மற்றும் அறவிடல் என்பனவற்றை எடுத்துக்காட்டுகின்ற விதத்தில் பொருத்தமான பதிவேடுகளையும் பேரேட்டுக் கணக்குகளையும் பேணுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

ஆ) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கடன் பெறுகைகளின் பயன்பாடு மற்றும் வட்டி உதவுதொகைத் தொழிற்பாடுகளுக்காக தனியான கணக்குகளைப் பேணுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

இ) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கணக்குகளையும் நிதியியல் கூற்றுக்களையும் இலங்கை மத்திய வங்கியின் பரீட்சிப்பிற்கும் மீளாய்விற்குமாக கிடைக்கச்செய்தல் வேண்டும். மேலும், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்படும் வேளையில் மத்திய வங்கிக்கு அவற்றைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

5.15 அ) இணைப்பு I இற்கிணங்க, கடன் பகிர்ந்தளிப்பு விபரங்கள் தொடர்பான முன்னைய மாதத்திற்கான மாதாந்த அறிக்கையினை ஒவ்வொரு மாதமும் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ மீன்பிடி இராஜாங்க அமைச்சிற்கும் இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கான பிரதிகளுடன் இலங்கை மத்திய வங்கிக்கும்

ஆ) இணைப்பு III இற்கிணங்க, கடன்பாட்டாளர்களின் உரியகாலத்திற்கு முன்னரான கடன்களின் தீர்ப்பனவு மற்றும் கடன் தவணைகளின் மிகையான கொடுப்பனவு என்பன மீதான முன்னைய மாதத்திற்கான மாதாந்த அறிக்கையினை ஒவ்வொரு மாதமும் 15 ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ மீன்பிடி இராஜாங்க அமைச்சிற்கும் இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி சபைக்கான பிரதிகளுடன் இலங்கை மத்திய வங்கிக்கும்

இ) இணைப்பு IV இல் உள்ளவாறு பகிர்ந்தளிக்கப்பட்ட செயற்படாக்கடன்களின் அந்தஸ்து தொடர்பில் அரையாண்டு அறிக்கையினை மத்திய வங்கிக்கும்

அறிக்கையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

5.16 மேலே குறிப்பிடப்பட்ட இணைப்பு I, III, மற்றும் IVஇன் அனைத்து வன்பிரதிகளும், பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01 என்ற முகவரிக்கும் மென்பிரதிகள் பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் அறிவிக்கப்படவுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

5.17 வட்டி உதவுதொகையினைக் கோரும் பொழுது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றவும்.

**6. இலங்கை மத்திய வங்கியின் வகிபாகம்**

6.1 அவசியமானவிடத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களையும் திருத்தங்களையும் விடுவித்தல்.

6.2 இத்திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுடன் இணங்கிச்செல்லும் விதத்தில், சரியாக நிரப்பப்பட்ட வட்டி உதவுதொகை விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமையினைத் தொடர்ந்து முதல் வந்தவர்களுக்கு முதலில் என்ற அடிப்படையில் திட்டத்தின் கீழான உதவுதொகையினை விடுவிப்பதுடன் வட்டி உதவுதொகை விடுவிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தொடர்பான தலைமை அலுவலகத்திற்கு அனுப்புதல்.

6.3 சரியான முறையில் பூரணமாக நிரப்பப்பட்ட வட்டி உதவுதொகை விண்ணப்பம் பெறப்பட்ட நாற்பத்தைந்து (45) நாட்களுக்கிடையில், அரையாண்டுகளில் வட்டி உதவுதொகை கணிக்கப்பட்டு விதந்துரைக்கப்படுவதனை உறுதிப்படுத்தல்.

6.4 மீன்பிடி இராஜாங்க அமைச்சு, இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் பங்கேற்குடன் மீன்பிடி இராஜாங்க அமைச்சு அத்துடன்/ அல்லது இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிபாரசபையினால் சமர்ப்பிக்கப்பட்ட நன்மைபெறுநர்கள் தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் நிதிப்பகிர்ந்தளிப்பின் முன்னேற்றத்தினை தேவையானவிடத்து மீளாய்வு செய்தல்.

**7. மீன்பிடி இராஜாங்க அமைச்சின் வகிபாகம்**

7.1 இலங்கை மத்திய வங்கி, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் மற்றும் இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை என்பனவற்றுடன் இணைப்புக்களை ஏற்படுத்தும் விதத்தில் மீன்பிடி இராஜாங்க அமைச்சு மூத்த அலுவலரொருவரை நியமித்தல்.

7.2 திட்டத்தின் செயன்முறை தொடர்பில் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டினை மேற்கொள்ளுதல், அவசியமான கொள்கை நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் கடன் பகிர்ந்தளிப்பின் பின்னர் தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுடன் தொடர்புகளை மதிப்பீடு செய்தல்.

7.3 இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தொழிற்பாடுகள் நிருவாக உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் இசைந்துள்ளனவா என்பதனை உறுதிபடுத்துவதற்காக அதன் தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்தல்.

7.4 இலங்கை மத்திய வங்கியினால் சமர்ப்பிக்கப்பட்ட விதந்துரைக்கப்பட்ட வட்டி உதவுதொகை கோரல்களுக்காக இலங்கை மத்திய வங்கியூடாக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு கொடுப்பனவுகளைச் செய்தல்.

7.5 இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு விதந்துரைக்கப்பட்ட கடன் தொகைக்கான ஆரம்ப கடன் எறிவுகளும் வட்டி உதவுதொகை கணிப்புக்களும் ஒப்புதலளிக்கப்பட்ட வரையறைகளுக்குள் பேணப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்தல்.

7.6 தேவையான போது, தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் பங்கேற்புடன், தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் சமர்ப்பிக்கப்பட்ட கடன்பாட்டாளர்கள் தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் நிதிப் பகிர்ந்தளிப்பின் முன்னேற்றம் தொடர்பான மீளாய்வினை மேற்கொள்தல்.

7.7 தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் ஒத்துழைப்புடன் திட்டத்தின் நிதிப்பாய்ச்சலை மேற்பார்வை செய்து நடத்துதல்.

## 8. தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வகிபாகம்

8.1 இலங்கை மத்திய வங்கி, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் மற்றும் மீன்பிடி இராஜாங்க அமைச்சு என்பனவற்றுடன் இணைப்புக்களை மேற்கொள்வதற்காக தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மூத்த அலுவலரொருவரை நியமித்தல்.

8.2 திட்டத்தின் கீழ் கடன்களைப் பெறுவதற்கு கடன்பாட்டாளர்களைத் தெரிவுசெய்தல்.

8.3 தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் தெரிவுசெய்யப்பட்ட கடன்பாட்டாளர்கள் கடன்களைப் பெறுவதற்கு அவர்களின் முன்னுரிமை அடிப்படையில் பங்கேற்கும் நிறுவனங்களைத் தெரிவுசெய்வதற்கு சந்தர்ப்பமளித்தல்.

8.4 கடன்பாட்டாளர்களின் தகைமையினை நிரூபிப்பதற்கான அனைத்து விபரங்களும் உட்பட, செல்லுபடியாகும் ஆவணங்களுடன் அவர்களை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்துவதுடன் திட்டத்தின்கீழ் கடன்களை வழங்குமாறு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு அறிவித்தல் மற்றும் கடன் தொகையினை விதந்துரைக்கின்ற அதேவேளையில் முன்மொழிவில் தரப்பட்டுள்ள ஆரம்ப கணிப்புக்களையும் பேணுதல்.

8.5 இத்திட்டத்தின் கீழ் ஒரு வாடிக்கையாளர் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து பல கடன்களைப் பெறுவதனைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதனை உறுதிப்படுத்தல்.

8.6 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கான விதந்துரைக்கப்பட்ட கடன் தொகை செயற்பாட்டிற்குள் ஆரம்ப கடன் எறிவுகளும் வட்டி உதவுதொகைக் கணிப்புக்களும் ஒப்புதலளிக்கப்பட்ட வரையறைகளுக்குள் பேணப்படுகின்றமையினை உறுதிப்படுத்தல்.

8.7 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட கடன்பாட்டாளர், அவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்கள் மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட ஒவ்வொரு கடன்களுக்குமாக இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வட்டி உதவுதொகை என்பன தொடர்பில் பதிவேடுகளைப் பேணுதல்.

8.8 மீன்பிடி இராஜாங்க அமைச்சின் ஒத்துழைப்புடன் திட்டத்தின் நிதிப்பாய்ச்சலை மேற்பார்வை செய்து மேற்கொள்ளுதல்.

8.9 கடன்கள் அவை பெறப்பட்ட நோக்கங்களுக்கே பயன்படுத்தப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்கு நியாயமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும் என்பதுடன் செயற்றிட்டங்கள் எதிர்பார்க்கப்பட்ட மட்டங்கள் வரை தொழிற்படுத்தப்பட்டு வருகின்றன என்பதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் இத்திட்டத்தின் கீழான செயற்றிட்டங்களை பின்னர் மேற்பார்வை செய்தலும் வேண்டும்.

## 9. வட்டி உதவுதொகைக் கொடுப்பனவுகள்

9.1 இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கிணங்க, தமது சொந்த நிதியிலிருந்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கடன்களுக்காக இலங்கை மத்திய வங்கி இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்ட வீதத்தில் வட்டி உதவுதொகையொன்றினை வழங்கும்.

9.2 இத்திட்டத்தின் கீழ் வட்டி உதவுதொகைக்கான தகைமையினைப் பெறுவதற்கு, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மேமேல 4.1 (ii) இல் குறித்துரைக்கப்பட்டுள்ள வட்டி வீதத்தில் தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கு கடன்களை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. இத்தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யாத கடன்கள் இத்திட்டத்தின் கீழ் வட்டி உதவுதொகைக்கு தகைமையுடையனவாகா.

9.3 பின்பற்றவேண்டிய நடைமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன்

அ) கடன்களை விடுவித்தன் பின்னர் கீழேயுள்ள 9.3(இ) பிரிவில் தரப்பட்டுள்ள இறுதித்திகதிக்கு ஏற்றவிதத்தில் (இணைப்பு II) இல் தரப்பட்டுள்ள வட்டி உதவுதொகை விண்ணப்பங்கள் சரியாக பூரணப்படுத்தப்பட்டு பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தினால் அரையாண்டு அடிப்படையில் இலங்கை மத்திய வங்கிக்கு சமா்ப்பிக்கப்படல் வேண்டும். வட்டி உதவுதொகை விண்ணப்பங்களின் மென் மற்றும் வன் பிரதிகள் இரண்டும் மத்திய வங்கிக்கு கிடைக்கச்செய்தல் வேண்டும்.

ஆ) குறைந்துசெல்லும் நிலுவை முறை மற்றும் உண்மையான/365 நாள் கணக்கு அடிப்படையினைப் பயன்படுத்தி, மாதாந்த அடிப்படையிலான சலுகைக் காலம் உட்பட, கடன்களின் முதல் 18 மாதங்களுக்காக ஆண்டொன்றிற்கு 4 சதவீதத்தில் கடன்களின் வெளிநின்ற மூலதனத்தின் மீது இலங்கை மத்திய வங்கி வட்டி உதவுதொகையினைச் செலுத்தும். வெளிநின்ற மூலதனத்தினைக் கணிப்பிடும் போது, கடன்களின் முழுமையான அல்லது பகுதியளவிலான நேரகாலத்துடனான தீர்ப்பனவு பரிசீலனையில் எடுத்துக்கொள்ளப்படும்.

இ) இத்திட்டத்தின் கீழ் வட்டி உதவுதொகையினை விடுவிப்பதனை பரிசீலனையில் கொள்வதற்காக, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், ஒவ்வொரு ஆண்டும் யூலை மற்றும் சனவரி மாதங்களின் 31ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ, இங்கேதரப்பட்டுள்ள இணைப்பு II இனை சரியாக நிரப்பி இலங்கை மத்திய வங்கியிடம் சமா்ப்பித்தல் வேண்டும்.

ஈ) பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் அனைத்து கோரல் விண்ணப்பங்களும் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் இலங்கை மத்திய வங்கியினால் பெற்றுக்கொள்ளப்பட்டதும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் வட்டி உதவுதொகை விண்ணப்பங்களுக்கு ஒப்புதலளித்து, மீன்பிடி இராஜாங்க அமைச்சிற்கு அனுப்பிவைப்பதுடன் இத்திட்டத்தின் கீழ் அரையாண்டு அடிப்படையில் ஒவ்வொரு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்குமான ஏற்புடைத்தான வட்டி உதவுதொகை கோரல்கள் கோருவதுடன் மீன்பிடி இராஜாங்க அமைச்சிலிருந்து சேரவேண்டிய தொகை பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னா் கோரல்கள் தீா்ப்பனவு செய்யப்படும்.

9.4 இத்திட்டத்தின் கீழ் வட்டி உதவுதொகையினைக் கோருகின்ற அனைத்து விண்ணப்பங்களினதும் வன்பிரதிகள் பணிப்பாளா், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01இனை அடைதல் வேண்டும் என்பதுடன் மென்பிரதிகள் பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளரினால் அறிவிக்கப்படவுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் வேறுஎவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

9.5 மேலும், தெளிவுபடுத்தல்கள் தேவைப்படுகின்ற சந்தா்ப்பத்தில், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் வட்டி உதவுதொகை விண்ணப்பங்களைப் பாா்வையிடுவதற்கான உரிமையினை இலங்கை மத்திய வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.

**10. பொதுவான நிபந்தனைகள்**

இலங்கை மத்திய வங்கி பின்வருவனவற்றிற்கான உரிமையினை தன்னகத்தே கொண்டுள்ளது

10.1 அவசியமானது எனக் கருதுகின்றவிடத்து, களப்பரீட்சிப்புக்களை நடத்துதல் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு விஜயம் செய்தல் மற்றும் பேரேடுகளையும் கணக்கேடுகளையும் பரீட்சித்தல் மற்றும் ஏனைய மேற்பாா்வை மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கையினை மேற்கொள்ளுதல்.

10.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கடன் வழங்கல் தொடா்பில் சரியான மேற்பாா்வை மற்றும் கவனிப்பு மற்றும் முன்மதியுடைய நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதற்குப் போதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாது வேண்டுமென்றே புறக்கணித்தமையின் விளைவாக, கடன்பாட்டாளா்களினால் போலியான கடன்களின் தவறான பயன்படுத்துகை அல்லது பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் இழைக்கப்பட்ட ஏதேனும் தவறான நடத்தைகள் தொடா்பில் சரியான சான்றுகள் காணப்படுமிடத்து அத்தகைய பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் கோரல்களின் மீது செலுத்தப்பட்ட ஏதேனும் தொகையினை மீளப்பெற்றுக்கொள்வதற்கும் அது தொடா்பான பொறுப்புக்களையும் அனுமதிக்கப்பட்ட ஏதேனும் கோரல்களையும் மறுப்பதற்கும் மத்திய வங்கிக்கு உரிமையுண்டு.

10.3 ஏதேனும் வங்கி இத்திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்கியொழுகாத சந்தா்ப்பத்தில், இத்திட்டத்தின் கீழ் பங்கேற்கும் நிதியியல் நிறுவனமாக தொழிற்படுவதற்கான அதன் தகைமையினை இரத்துச்செய்யலாம்.

10.4 அவசியமானவிடத்து இத்திட்டத்தின் நியதிகளும் நிபந்தனைகளும் திருத்தப்படலாம்.

இத்திட்டம் 2021 திசெம்பா் 21ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவருதலாதல் வேண்டும்.

எம். எஸ். கே. தர்மவர்த்தன
**பணிப்பாளர்**
**பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**

**இணைப்பு I**

**இலங்கையில் இறால் வளர்ப்புப் பண்ணைகளை செறிவுபடுத்துவதற்கான வட்டி உதவுதொகைக் கடன் திட்டம்**

புதிய கடன்களின் விபரங்கள் - மாதாந்த அறிக்கை

வங்கி: அறிக்கையிடும் மாதம்/ ஆண்டு

| தொடர் இலக்கம் | இ.தே.நீ.ஒ. அதிகார சபை | பெயர் | விண்ணப்ப தாரியின் இறுதிப் பெயர் | விண்ணப்ப தாரியின் முதலெழுத்து | தே.அ.அ. இலக்கம் | முகவரி 1 | முகவரி 2 | முகவரி 3 | மாவட்டம் | வங்கிக் குறியீடு | கிளைக் குறியீடு | கிளையின் பெயர் | ஒப்புதலளிக் கப்பட்ட கடன் தொகை (ரூ.) | பகிர்ந்தளிக் கப்பட்ட திகதி (தி/மா/ ஆண்டு) | பகிர்ந்தளிக் கப்பட்ட கடன் தொகை (ரூ.) | சலுகைக் காலம் (மாதங்கள்) | மீள் கொடுப்பனவுக் காலம் மாதங்களில் (சலுகைக் காலம் உட்பட) | கடன் தவணை களின் எண்ணிக்கை | கடன் தவணைத் தொகை (ரூ.) | முதல் கடன் தவணைத் திகதி (தி/மா/ ஆண்டு) | இறுதி கடன் தவணைத் திகதி (தி/மா/ ஆண்டு) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | |

நான், மேலேகுறிப்பிடப்பட்டுள்ள கடன் விபரங்கள் உண்மையானதெனவும் சரியானதெனவும் வங்கியின் சொந்த மூலவளத்திலிருந்து ஆண்டொன்றிற்கு ................. வட்டி வீதத்தில் வழங்கப்பட்டதெனவும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/ஐஎஸ்/எஸ்எவ்/2021/01இன் நியதிகளில் வட்டி உதவுதொகைகளைப் பெற வங்கி தகைமையுடையதெனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

(பகிர்ந்தளிப்புக் கடிதம் இணைக்கப்பட்டுள்ளது)

.................................................................. ............................................................

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் கிளை முகாமையாளரின் கையொப்பம்

.................................................................. ............................................................

திகதி கிளையின் முத்திரை

குறிப்பு: ஒவ்வொரு தாளிலும் முத்திரையும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பமும் இடப்படுதல் அவசியமாகும்.

**இணைப்பு II**

**இலங்கையில் இறால் வளர்ப்புப் பண்ணைகளை செறிவுபடுத்துவதற்கான வட்டி உதவுதொகைக் கடன் திட்டம்**

**வட்டி உதவுதொகை கோரல் விண்ணப்பம்**

வங்கி: அறிக்கையிடும் காலம்:

| தொடர் இலக்கம் | இ.தே.நி.அ. அதிகார சபை | கடன்பாட்டாளரின் விபரங்கள் | | | | | கடன்களின் மூலதன மீள்கொடுப்பனவு விபரங்கள் (இ.ரூபா) | | | | | | | | | | | காலப் பகுதிக்கான மொத்த வட்டிக் கோரல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பெயர் | விண்ணப்பதாரியின் இறுதிப் பெயர் | விண்ணப்பதாரியின் முதலெழுத்து | தே.அ.அ. இலக்கம் | கிளை | பகிர்ந்தளிக்கப்பட்ட திகதி (தி/மா/ ஆண்டு) | பகிர்ந்தளிக்கப்பட்ட கடன் தொகை (ரூ.) | சலுகைக் காலம் (மாதங்கள்) | காலத் தொடக்கத்தில் வெளிநின்ற மூலதனம் | கால முடிவில் வெளிநின்ற மூலதனம் | | | | | | கால இறுதியில் வெளிநின்ற மூலதனம் | |
| | | | | | | | | | | | 1 மாதம் | 2 மாதம் | 3 மாதம் | 4 மாதம் | 5 மாதம் | 6 மாதம் | | |
| | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |

நான், மேலேகுறிப்பிடப்பட்டுள்ள கடன் விபரங்கள் உண்மையானதெனவும் சரியானதெனவும் வங்கியின் சொந்த மூலவளத்திலிருந்து ஆண்டொன்றிற்கு ........... வட்டி வீதத்தில் வழங்கப்பட்டதெனவும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. ஆர்டிடி/ஜஎஸ்/எஸ்எவ்/2021/01இன் நியதிகளில் வட்டி உதவுதொகைகளைப் பெற வங்கி தகைமையுடையதெனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

.................................................................. ............................................................

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் கிளை முகாமையாளரின் கையொப்பம்

.................................................................. ............................................................

திகதி கிளையின் முத்திரை

குறிப்பு: ஒவ்வொரு தாளிலும் முத்திரையும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பமும் இடப்படுதல் அவசியமாகும்.

**இணைப்பு** III

**இலங்கையில் இறால் வளர்ப்புப் பண்ணைகளை செறிவுபடுத்துவதற்கான வட்டி உதவுதொகைக் கடன் திட்டம்**

**முதிர்ச்சிக்கு முன்னதாக/ மிகையாக தீர்ப்பனவு செய்யப்பட்ட கடன்களின் கூற்று**

வங்கி: அறிக்கையிடும் மாதம்/ ஆண்டு:

| தொடர் இலக்கம் | இ.தே.நி.அ. அதிகார சபை | கடன்பாட்டாளரின் விபரங்கள் | | | | | | கடன்களின் மூலதன மீள்கொடுப்பனவு விபரங்கள் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பெயர் | விண்ணப்பதாரியின் இறுதிப் பெயர் | விண்ணப்பதாரியின் முதலெழுத்து | தே.அ.அ. இலக்கம் | முகவரி | மாவட்டம் | கிளை | மாதத்தின் ஆரம்பத் திகதியன்று உள்ளவாறு வெளிநின்ற தொகை (ரூ.) | 1ஆம் கொடுப்பனவு | | 2ஆம் கொடுப்பனவு | | 3ஆம் கொடுப்பனவு | | மாத இறுதியில் உள்ளவாறு வெளிநின்ற தொகை |
| | | | | | | | | | | திகதி (ஆ/மா/தி) | செலுத்தப்பட்ட தொகை (ரூ.) | திகதி (ஆ/மா/தி) | செலுத்தப்பட்ட தொகை (ரூ.) | திகதி (ஆ/மா/தி) | செலுத்தப்பட்ட தொகை (ரூ.) | |
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |

நான், மேலேகுறிப்பிடப்பட்டுள்ள துணைக் கடன் விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென உறுதிப்படுத்துகின்றேன்.

.................................................................. ............................................................

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் கிளை முகாமையாளரின் கையொப்பம்

.................................................................. ............................................................

திகதி கிளையின் முத்திரை

குறிப்பு: ஒவ்வொரு தாளிலும் முத்திரையும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பமும் இடப்படுதல் அவசியமாகும்.

**இணைப்பு IV**

**இலங்கையில் இறால் வளர்ப்புப் பண்ணைகளை செறிவுபடுத்துவதற்கான வட்டி உதவுதொகைக் கடன் திட்டம்**

**செயற்படாக் கடன் நிலை**

வங்கியின் பெயர்: அறிக்கையிடும் காலம் (அரையாண்டு):

| மாவட்டம் | கிளை | ..... இல் உள்ளவாறு வெளிநின்ற மொத்த நிலுவை | | சிறப்பாக குறிப்பிடத்தக்கது | | கீழ்நிலையில் உள்ளது | | ஐயத்துக்குரியது | | இழப்பு | | மொத்த செயற்படாக் கடன் (ரூ.) | செயற்படாக் கடன்* (%) | செயற்படாக் கடன்** (%) | செயற்படாக் கடன்*** (%) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கடன் இல. | தொகை (ரூ.) | கடன் இல. | தொகை (ரூ.) | கடன் இல. | தொகை (ரூ.) | கடன் இல. | தொகை (ரூ.) | கடன் இல. | தொகை (ரூ.) | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |

* அதே திட்டத்தின் கீழ், வழங்கப்பட்ட மொத்தக் கடன்களின் சதவீதமாக மீன்பிடியின் வட்டி உதவுதொகைத் திட்டத்தின் செயற்படாக் கடன்.

** வங்கியின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சதவீதமாக மீன்பிடியின் வட்டி உதவுதொகைத் திட்டத்தின் செயற்படாக் கடன்கள்.

*** வங்கியின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சதவீதமாக வங்கியின் செயற்படாக் கடன்கள்.

வங்கியின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் (ரூ.மில்.) :.................................................................

வங்கியின் மொத்தச் செயற்படாக் கடன்கள் (ரூ.மில்.) :.................................................................

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் மற்றும் பதவி

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை**
**அதிவிசேடமானது**
**2221/55ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01ஆந் திகதி வியாழக்கிழமை**
**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**
**பகுதி I : தொகுதி (I) - பொது**
**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**
**நாணய விதிச் சட்டம்**

நாணயவிதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) 32உ பிரிவின் கீழ் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

பேராசிரியர். டபிள்யு. டி. லக்ஷ்மன்
**தலைவர், நாணயச் சபை**

இலங்கை மத்திய வங்கி
கொழும்பு
2021 ஏப்பிறல் 01

**இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்ட ஒழுங்குவிதிகள்**

**2010ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்ட ஒழுங்குவிதிகளுக்கான திருத்தம்**

**எடுத்துக்காட்டல்**

1. இவ்வொழுங்குவிதிகள், “2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்ட ஒழுங்குவிதிகள்” என எடுத்துக்காட்டப்படல் வேண்டும்.

**முதன்மை ஒழுங்குவிதிக்கான திருத்தம்**

2. 2010 செத்தெம்பர் 28ஆம் திகதியிடப்பட்ட 1673/11ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2010ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) அதன் ஒழுங்குவிதி 9இல், அவ்வொழுங்குவிதியின் 9.4ஆம் பந்தியினை நீக்கி பின்வரும் பந்தியினை பதிலீடு செய்வதன் மூலம்:-

“9.4 குறித்துரைக்கப்பட்டவாறான வரையறைகளினுள் நட்டஈடு, உரிமம் இடைநிறுத்தல் அல்லது இரத்துச் செய்தல் திகதியிலிருந்து விடயத்திற்கேற்றவாறு விரைவாகக் கொடுப்பனவு செய்யப்படும். மேலும் தொடர்கின்ற காலப்பகுதியில் வட்டி எதுவும் செலுத்தப்படாது”.

(ஆ) அதன் ஒழுங்குவிதி 9இல், அவ்வொழுங்குவிதியின் 9.6ஆம் பந்தியினை நீக்கி அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியினை பதிலீடு செய்வதன் மூலம்:-

“9.6 வைப்பாளர் ஒருவருக்கு கொடுப்பனவு செய்யப்படற்பாலதான நட்டஈட்டுத் தொகையானது, இலங்கை ரூபாய் வைப்புக்கள் தொடர்பில் உயர்ந்தபட்சம் பதினொரு இலட்சம் (ரூ.1,100,000) அல்லது வெளிநாட்டு நாணய வைப்பு விடயத்தில் அதற்குச் சமமான ரூபாவில் மற்றும் அத்தகைய தொகை பதினொரு இலட்சம் ரூபாவை (ரூ.1,100,000) விஞ்சுமாயின் அத்தொகை வரையில் மேலே கணிக்கப்பட்டவாறு மொத்தக் காப்புறுதி செய்யப்பட்ட வைப்புகளுக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்”.

(இ) அதன் ஒழுங்குவிதி 9இல், 9.10ஆம் பந்திக்கு உடன் அடுத்ததாகப் பின்வரும் பந்தியினை உட்சேர்ப்பதன் மூலம்:-

“9.11உரிமம் இரத்துச்செய்யப்பட்டுள்ள அங்கத்துவ நிறுவனமொன்றின் விடயத்தில், அதன் காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்கள், அத்தகைய அங்கத்துவ நிறுவனத்தின் தீர்த்துக்கட்டல் தொடர்பில் தகைமைவாய்ந்த நீதிமன்றத்தினால் தீர்த்துக்கட்டுபவர் நியமிக்கப்படுவதற்கு முன்னர், தகைமையுடைய நட்டஈட்டிற்காக உரியவாறு பூர்த்திசெய்யப்பட்ட கோரிக்கையினை அத்தகைய காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்கள் சமர்ப்பித்த வரையில் மாத்திரம் இவ்வொழுங்குவிதியின் கீழ் நட்டஈட்டுக் கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவராக இருத்தல் வேண்டும்.

**நிலைமாறு கால ஏற்பாடுகள்**

3. இவ்வொழுங்குவிதித் திகதிக்கு முன்னர் உரிமங்கள் இரத்துச்செய்யப்பட்டுள்ள அல்லது இடைநிறுத்தப்பட்டுள்ள அங்கத்துவ நிறுவனங்களின் காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்கள், விடயத்திற்கேற்றவாறு இவ்வொழுங்குவிதியின் கீழ் உயர்ந்தபட்சம் பதினொரு இலட்சம் (ரூ.1,100,000) அல்லது வெளிநாட்டு நாணய வைப்புகள் விடயத்தில் அதற்குச் சமமான நட்டஈட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவராக இருத்தல் வேண்டும். ஆயினும், அத்தகைய காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்கள்:-

அ. ஒன்றில் அத்திகதியில் நட்டஈட்டினை கோரியிருக்காதவர்களாகவிருத்தல் வேண்டும்; அல்லது

ஆ. அவர்களது கோரிக்கையினை ஏற்கனவே மேற்கொண்டு, ஆனால் அத்திகதியில் நட்டஈடு செலுத்தப்படாதவர்களாகவிருத்தல் வேண்டும்; அல்லது

இ. ஏற்கனவே நட்டஈட்டுத் தொகைகள் செலுத்தப்பட்டுள்ள, ஆனால் அத்தகைய நட்டஈடு பதினொரு இலட்சம் ரூபாவை (ரூ.1,100,000) விடக் குறைவானதாகவிருத்தல் வேண்டும்.

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

**2239/52ஆம் இலக்கம் - 2021ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 06ஆந் திகதி வெள்ளிக்கிழமை**

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**

**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

**நாணய விதிச் சட்டம்**

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 32(உ)இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் (நாணயச் சபை) வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள், (அத்தியாயம் 422).

பேராசிரியர். டபிள்யு. டி. லக்ஷ்மன்
**தவிசாளர்**
**நாணயச் சபை**

கொழும்பு
2021 ஓகத்து 06

**இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்ட ஒழுங்குவிதிகள்**

**1. எடுத்துக்காட்டல்**

1.1 இவ்வொழுங்குவிதிகள், "2021ஆம் ஆண்டின் 021ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்ட ஒழுங்குவிதிகள்" என எடுத்துக்காட்டப்படுதல் வேண்டும்.

**2. திட்டத்தின் குறிக்கோளும் செயற்படுத்தும் ஏற்பாடுகளும்**

2.1 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 5ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம், அத்தகைய சட்டத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட நடவடிக்கையினால் (அ) பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு, மற்றும் (ஆ) நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு ஆகிய இரு குறிக்கோள்களை இயலுமானவரை பாதுகாக்கும் கடமை இலங்கை மத்திய வங்கிக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

2.2 நாணய விதிச் சட்டத்தின் 32(அ) முதல் 32(உ) வரையான பிரிவுகளின் நியதிகளின் பிரகாரம், மத்திய வங்கி காலத்திற்குகாலம் நாணயச் சபையினால் நிர்ணயிக்கப்பட்டவாறு, வங்கித்தொழில் நிறுவனங்களால் வைத்திருக்கப்படும் வைப்புக்களிற்கான காப்புறுதித் திட்டமொன்றினை நிறுவலாம், பராமரிக்கலாம், நிர்வகிக்கலாம் மற்றும் கட்டுப்படுத்தலாம்.

2.3 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76(ஒ) பிரிவுகளின் நியதிகளின் பிரகாரம், வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல்வாய்ந்த தன்மையை உறுதிசெய்யும் பொருட்டு அத்தகைய வங்கியில் ஏதேனும் தொழில்நோக்கினைக் கொண்டு நடாத்தப்பட வேண்டிய விதம் தொடர்பில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்கும் பணிப்புரைகளை வழங்குவதற்கான அதிகாரம் நாணயச் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

2.4 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 38, 39 மற்றும் 41ஆம் பிரிவுகளின் நியதிகளின் பிரகாரம், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளால் வைத்திருக்கப்படும் வைப்புக்களின் காப்புறுதிக்கான திட்டமொன்றினை நாணயச் சபை செயற்படுத்தலாம் என்பதுடன் நாணயச் சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட திட்டமொன்றின் கீழ் அல்லது நிறுவனக் கூட்டொன்றின் கீழ் அவர்களது வைப்புப் பொறுப்புக்களை காப்பீடு செய்வதற்கு அத்தகைய நிதிக் கம்பனிகளைக் கோரலாம்.

2.5 அதன் பிரகாரம், நாட்டின் ஒட்டுமொத்த நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டின் மீதான கரிசணையினால் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டம் நிறுவப்பட்டுள்ளது (இதனகத்துப் பின்னர் “திட்டம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்). நிதியியல் முறைமையின் மீதான பொது நம்பிக்கையை நிலைநிறுத்தும் நோக்கில் அங்கத்துவ நிறுவனமொன்று தோல்வியுறும் சந்தர்ப்பத்தில் சிறிய வைப்பாளர்களைப் பாதுகாப்பதற்கான பொறிமுறையொன்றினை இது எடுத்துரைக்கும்.

**3. திட்டத்தின் தலைப்பும் நடைமுறைக்குவரும் திகதியும்**

3.1 இத்திட்டம் “இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டம்” எனத் தலைப்பிடப்பட வேண்டும்.

3.2 இவ்வொழுங்குவிதிகளின் கீழ் திட்டமானது 2021, ஓகத்து 6ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**4. திட்டத்தினால் ஆளப்படும் அங்கத்துவ நிறுவனங்கள்**

4.1 ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கியும் மற்றும் உரிமம்பெற்ற நிதிக்கம்பனியும் இத்திட்டத்தின் அங்கத்தவராக இருத்தல் வேண்டும் (இவ்வொழுங்குவிதிகளில் “அங்கத்துவ நிறுவனம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்).

**5. காப்பீடு செய்வதற்கு தகுதிவாய்ந்த வைப்புக்கள்**

5.1 காப்பீடு செய்வதற்கு தகுதிவாய்ந்த வைப்புக்களானது, அங்கத்துவ நிறுவனங்களினுடைய கேள்வி, காலம் மற்றும் சேமிப்பு மற்றும் பொறுப்பு வைப்புச்சான்றிதழ்கள், 2012.01.01 இற்கு முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட வியாபார மறுசீரமைப்பு திட்டங்களின் பகுதியொன்றாக 2010 மற்றும் 2011 இல் நாணயச் சபையின் பணிப்புரைகளின் கீழ் பங்குரிமை மூலதனமாக மாற்றப்பட்ட வைப்புக்களின் ஆரம்ப வைப்பாளர்களாகவிருந்து பின்னர் பங்குதாரரானவர்களின் பங்குகளின் பெறுமதி போன்றவற்றை உள்ளடக்க வேண்டும் என்பதுடன் எந்தவொரு வாக்குறுதிப் பத்திரம், கலப்புப் பங்குரிமை மூலதனம் மற்றும் நாணயச் சபையினால் நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் வேறு படுகடன் சாதனம் உள்ளிட்ட அனைத்துப் படுகடன் சாதனங்களும் உள்ளடக்கப்படாதிருத்தல் வேண்டும்.

இந்நோக்கத்திற்காக, பங்குரிமை மூலதனமாக மாற்றப்பட்ட வைப்புக்களின் உடமையாளர்களான பங்குதாரர்களின் பங்குகளின் பெறுமதி, பங்குகளாக மாற்றப்பட்டிருந்த வைப்பு/ வைப்புக்களின் பெறுமதியாகயிருத்தல் வேண்டும்.

5.2 பின்வரும் வைப்புப் பொறுப்புக்கள் திட்டத்திலிருந்து உள்ளடக்கப்படாதிருத்தல் வேண்டும்:

(i) அங்கத்துவ நிறுவனங்களிற்கான வைப்புப் பொறுப்புக்கள்,

(ii) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை தொடர்பான 2007ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை, உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை தொடர்பான 2007ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான 2008ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டப் பணிப்புரை (கம்பனி ஆளுகை) என்பவற்றினால் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறான பங்குதாரர்கள் நீங்கலாக ஏனைய தொடர்பான தரப்பினர்கள், பணிப்பாளர்கள் அல்லது முக்கியமான முகாமைத்துவ ஆளணியினர், வேறு தொடர்புடைய தரப்பினர்களினால் தனிப்பட்ட வகையில் அல்லது கூட்டாக பேணப்படும் வைப்புப் பொறுப்புக்கள்.

(iii) (அ) அதன் வைப்பாளர்கள் மற்றும் பிற கடன் வழங்குநர்கள் நலனுக்கு தீங்கு விளைவிக்கும் எந்தவொரு வலுவற்ற, முறையற்ற, நேர்மையற்ற, வஞ்சகமான அல்லது மோசடியான நிதியியல் நடத்தை அல்லது நடத்தைகளைப் பின்பற்றுதல் ஊடாக அங்கத்துவ நிறுவனத்தின் தொழில் நடவடிக்கைகளை அல்லது முகாமைத்துவத்தை நடாத்திச் செல்லல், அத்தகைய பணிப்பாளர்கள் மற்றும் முக்கிய ஆளணியினரினால் தொடர்புபட்ட அல்லது சம்பந்தப்படுதல் காரணமாக அத்தகைய பணிப்பாளரை அல்லது பணிப்பாளர்களை விடயத்திற்குத் தக்கவாறு, அத்தகைய ஆளணியினரால் தொடர்புபட்ட அங்கத்துவ நிறுவனத்தில் கொண்டிருந்த பதவியில் அல்லது பதவிகளிலிருந்து பணிப்பாளர் சபை மற்றும்/அல்லது முக்கிய முகாமைத்துவ ஆளணியிலிருந்து நீக்குவதற்கு நாணயச்சபை பணிப்புரையை விடுத்துள்ளவிடத்து,

(ஆ) அத்தகைய பணிப்பாளர் அல்லது பணிப்பாளர்கள் மற்றும்/ அல்லது ஏதேனும் ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் மோசடி, ஏமாற்றுதல், முறைகேடு, வஞ்சகம், நேர்மையின்மை அல்லது இதேபோன்ற குற்றச்செயல் என்பவற்றுடன் தொடர்புபட்ட செயலொன்றுக்காக பொலிஸ், ஏதேனும் ஒழுங்குமுறை அல்லது மேற்பார்வை அதிகாரி, தொழில்சார் அமைப்பு, விசாரணை ஆணைக்குழு, தீர்ப்பாயம் அல்லது சட்டத்தால் நிறுவப்பட்ட ஏதேனும் அமைப்பு என்பவற்றினால் உள்நாட்டில் அல்லது ஏதேனும் பிற ஆட்சி எல்லைக்குள் நடத்தப்பட்ட புலன் விசாரணை அல்லது விசாரணைக்கு அவர்கள் உட்பட்டிருக்கின்ற அளவிற்கு அல்லது மோசடி, ஏமாற்றுதல், முறைகேடு, வஞ்சகம், நேர்மையின்மை, முறையற்ற நடத்தை அல்லது ஏதாவது சட்டம் அல்லது அதன்கீழ் மேற்கொள்ளப்பட்ட விதிமுறைகள், ஒழுங்குவிதிகள், பணிப்புரைகள், தீர்மானங்கள் ஆகியவற்றின் ஏற்பாடுகளுடன் இணங்கிச்செல்லாமை என்பவற்றுடன் தொடர்புபடுகின்ற எந்தவொரு செயலுக்காகவும் ஏதேனும் நீதிமன்றம், ஒழுங்குபடுத்தல் அல்லது மேற்பார்வை அதிகாரசபை, தொழில்சார் அமைப்பு, விசாரணை ஆணைக்குழு, தீர்ப்பாயம் அல்லது ஏனைய சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஏனைய நிறுவனம் என்பனவற்றால் உள்நாட்டில் அல்லது ஏதேனும் பிற ஆட்சி எல்லைக்குள், குற்றவாளி என நிரூபிக்கப்பட்டமையால் அங்கத்துவ நிறுவனத்தில் பதவி வகிக்க பொருத்தம் மற்றும் தகுதியற்றவர் அல்லது/ அத்துடன் அற்றவர்கள் என்று வங்கி மேற்பார்வை பணிப்பாளர்/ வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் தீர்மானித்துள்ளவிடத்து,

(இ) அதன் வைப்பாளர்கள் மற்றும் பிற கடன் வழங்குநர்கள் நலனுக்கு தீங்கு விளைவிக்கும் எந்தவொரு வலுவற்ற, முறையற்ற, நேர்மையற்ற, வஞ்சகமான அல்லது மோசடியான நிதியியல் நடத்தை அல்லது நடத்தைகளைப் பின்பற்றுதல் ஊடாக அங்கத்துவ நிறுவனத்தின் தொழில் நடவடிக்கைகளை அல்லது முகாமைத்துவத்தை நடாத்திச் செல்வதில் தொடர்புபட்டிருக்கின்ற அல்லது ஈடுபட்ட அல்லது ஈடுபடுகின்ற அல்லது பொறுப்பாக இருப்பதன் காரணமாக ஏதேனும் அங்கத்துவ நிறுவனத்தின் எந்தவொரு பணிப்பாளரும், பணிப்பாளர்களும், அல்லது எந்தவொரு முக்கிய முகாமைத்துவ ஆளணியினரும் திட்டத்தின் கீழான ஏதாவது நலனைப் பெறுவதற்கு உரிமையற்றிருக்கின்றார் அல்லது உரிமையற்றிருக்கின்றார்கள் என்று கிடைக்கக்கூடிய விடயங்களில் திருப்திப்படுவதன் மீது நாணயச் சபை அதன் சொந்த இணக்கத்தைத் தீர்மானிக்கின்றவிடத்து,

ஒன்றில் தனிப்பட்டவகையில் அல்லது கூட்டாக, அந்தந்த அங்கத்துவ நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர்கள் அல்லது முக்கிய முகாமைத்துவ ஆளணியினரால் ஏதேனும் வேறு எந்த தரப்பினருடன் பேணப்படும் வைப்புப் பொறுப்புக்களாகும்.

(iv) வங்கித்தொழில் சட்டத்தின் பிரகாரம், கைவிடப்பட்ட சொத்தின் கருத்திற்குள் வரும் வைப்புக்கள், நாணய சபையால் வழங்கப்பட்ட தொடர்புடைய பணிப்புரைகளின் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கிக்கு மாற்றப்பட்டுள்ள தொகைகள்.

(v) நிதித்தொழில் சட்டத்தின் நியதிகளில் செயற்படா வைப்புக்கள், நாணயச் சபையால் வழங்கப்பட்ட தொடர்புடைய பணிப்புரைகளின் நியதிகளில் இலங்கை மத்திய வங்கிக்கு மாற்றப்பட்டுள்ள தொகைகள்.

5.3 வெளிநாட்டு நாணய வைப்புப் பொறுப்புக்கள் விடயத்தில், இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட நாளாந்த குறிகாட்டல் செலாவணி வீதம் வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்களை உள்நாட்டு நாணயமாக மாற்றியமைக்க பயன்படுத்தல் வேண்டும்.

5.4 தகைமையுடைய அனைத்து வைப்புக்களும் அங்கத்துவ நிறுவனங்களால் காப்பீடு செய்யப்படல் வேண்டும்.

**6. செய்யப்பட்ட வைப்புக்கள் மீது அறவிடப்பட வேண்டிய காப்புறுதித் தவணைக் கட்டணம்**

6.1 ஒவ்வொரு அங்கத்துவ நிறுவனமும் மேலே ஒழுங்குவிதி 5.2இல் குறிப்பிடப்பட்ட நாணயச் சபையினால் காலத்திற்கு காலம் நிர்ணயிக்கப்பட்டவாறான காலாண்டின் இறுதியிலுள்ளவாறான வைப்புக்கள் தவிர, ஏதேனும் அட்டுறு வட்டி உள்ளடங்கலாக மொத்த வைப்புத்தொகையின் மீது கணிக்கப்பட்ட கட்டுப்பணம் ஒன்றினை 7ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட இலங்கை வைப்பு காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவி நிதியத்துக்கு காலாண்டின்/ மாதத்தின் இறுதியில் செலுத்தப்படல் வேண்டும்.

6.2 கட்டுப்பணக் கணிப்பு மறுஅறிவித்தல் வரும்வரையில் பின்வருமாறு செல்லுபடியாதல் வேண்டும்:

(i) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்டவாறு அதன் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளின் உடனடியாக முன்வருகின்ற நேர் முந்தைய நிதியாண்டின் இறுதியில் 14 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட மூலதனப் போதுமை விகிதத்தைப் பேணுகின்ற உரிமம்பெற்ற வங்கிகள் - காலாண்டின் இறுதியிலுள்ளவாறான தகுதியுடைய அனைத்து வைப்புக்களின் மொத்தத் தொகையின் மீது கணிக்கப்பட்ட காலாண்டு அடிப்படையில் ஆண்டிற்கு செலுத்தப்படற்பாலதான 0.10 சதவீதக் கட்டுப்பணம்.

(ii) ஏனைய அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் - காலாண்டின் இறுதியிலுள்ளவாறான தகுதியுடைய அனைத்து வைப்புக்களின் மொத்தத் தொகையின் மீது கணிக்கப்பட்ட காலாண்டு அடிப்படையில் ஆண்டிற்கு செலுத்தப்படற்பாலதான 0.125 சதவீதக் கட்டுப்பணம்.

(iii) பதிவு செய்யப்பட்ட உரிமம்பெற்ற நிதி நிதிக்கம்பனிகள் - மாத இறுதியிலுள்ளவாறான தகுதியுடைய அனைத்து வைப்புக்களின் மொத்தத் தொகையின் மீது கணிப்பிடப்பட்ட மாத அடிப்படையில் செலுத்தப்படற்பாலதான ஆண்டிற்கான 0.15 சதவீதக் கட்டுப்பணம்.

6.3 ஒவ்வொரு அங்கத்துவ நிறுவனமும் ஏற்புடையதான கட்டுப்பணத் தொகையை வைப்புக் காப்புறுதி நிதியத்தின் கணக்கிற்கு தொடர்புடைய காலாண்டின் அல்லது மாதத்தின் இறுதியிலிருந்து பதினைந்து (15) பஞ்சாங்க நாட்களுக்குள் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் வைப்புக்கள் மற்றும் தவணைக்கட்டணக் கணிப்பீடு என்பவற்றின் விபரங்களை ஒழுங்குவிதி 10.1இல் குறித்துரைக்கப்பட்டவாறு திட்டத்தின் தொழிற்பாடு மற்றும் நிர்வாக ஏற்பாடுகளுக்குப் பொறுப்புமிக்க இலங்கை மத்திய வங்கியின் திணைக்களப் பணிப்பாளரினால் குறித்துரைக்கப்பட்ட வடிவில் சமர்ப்பித்தல் வேண்டும்.

6.4 குறைவான தவணைக் கட்டுப்பணத் தொகையைச் செலுத்துகின்ற சந்தா்ப்பங்கள் உள்ளடங்கலாக தாமதமாக தவணைக்கட்டணத்தைச் செலுத்தும் சந்தா்ப்பங்களில் அப்போதுள்ள 91 நாட்கள் முதன்மைத் திறைசேரி உண்டியல் விளைவு வீதத்தின் நிறையேற்றப்பட்ட சராசரியுடன் சேர்த்து 200 அடிப்படைப் புள்ளிகள் சேர்ந்த அல்லது நாணயச் சபையால் தீர்மானிக்கப்படக்கூடிய தொகையொன்று தண்டப்பணமாக விதிக்கப்படும்.

**7. வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவி நிதியம்**

7.1 இத்திட்டமானது, "இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவி நிதியம்" என்றவொரு தலைப்பினை நிதியம் கொண்டிருத்தல் வேண்டும் (இதனகத்துப்பின்னா் "நிதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்)என்பதுடன் இது நாணயச் சபையால் தொழிற்படுத்தப்பட்டு முகாமை செய்யப்படல் வேண்டும் என்பதுடன் தேவை எனக் கருதும் பட்சத்தில் இதற்கான பொறுப்பு இலங்கை மத்திய வங்கியின் அலுவலா் ஒருவருக்கு அல்லது திணைக்களமொன்றிற்கு ஒப்படைக்கப்படலாம். அத்துடன் கீழேயுள்ள ஒழுங்குவிதி 10.1 தற்போதைய தொழிற்பாட்டு மற்றும் முகாமைத்துவ ஏற்பாடுகளைக் குறித்துரைக்கின்றது

7.2 இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவி நிதியத்தின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ ஏற்பாடுகள், ஏதேனும் இயற்கையான அல்லது ஏனைய ஆர்வ முரண்பாடுகளைத் தவிர்க்கும் பொருட்டு அங்கத்துவ நிறுவனங்களின் மேற்பார்வை திணைக்களத்திலிருந்து தன்னிச்சையாகவும் சுயாதீனமாகவும் இருத்தல் வேண்டும்.

7.3 நிதிக்கான வரவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்: அங்கத்துவ நிறுவனங்களால் செலுத்தப்பட்ட கட்டுப்பணங்கள் மற்றும் தண்டப்பணங்கள், இலாபங்களின் அனைத்துப் பெறுகைகள், நிதியத்தில் பணங்களின் முதலீடுகளிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானங்கள் மற்றும் இலாபங்கள், ஏதேனும் அங்கத்துவ நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பிணையளிக்கப்பட்ட முற்பணங்கள் அல்லது கடன்களின் மீட்பு, வைப்பாளா்களுக்கச் செலுத்தப்பட்ட நட்டஈட்டின் மீட்பு, ஏற்புடையவாறு வங்கித்தொழில் சட்டத்தின் பகுதி IX 72ஆம் மற்றும் 76ஆம் பிரிவுகள் மற்றும் நிதித்தொழில் சட்டத்தின் 23ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் நாணயச் சபையால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளின் நியதிகளுக்கு அமைவாக இலங்கை மத்திய வங்கிக்கு உரிமம்பெற்ற வங்கிகள் விடயத்தில் கைவிடப்பட்ட ஆதனங்களிருந்தும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் விடயத்தில் செயற்படுத்தப்படாத வைப்புக்களிலிருந்தும் எடுத்துக்கொள்ளக்கூடியதான அத்தகைய தொகைகள், அரசிடமிருந்தான கடன்கள் மற்றும் பங்களிப்புக்கள் அத்துடன்/ அல்லது நாணயச் சபையால் ஒப்புதலளிக்கப்பட்ட ஏதேனும் ஏனைய நிதி மூலங்கள்.

7.4 நிதிக்கான பற்றுகள் பின்வருவனவாக இருக்கலாம்: வைப்பாளா்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவுகள், நிதியத்திலுள்ள கைவிடப்பட்ட சொத்துக்கள்/ செயற்படாத வைப்புக்களின் மீள்செலுத்துகைகள் மற்றும் நாணயச் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறான திட்டத்தின் தொழிற்பாட்டுச் செலவினங்கள்.

**8. நிதியங்களிலுள்ள பணத்தின் பயன்பாடு**

8.1 நிதியத்திற்கான ஏதேனும் பற்றுக்கள் தவிர்ந்த, நிதியத்திலுள்ள பணங்கள் இதனகத்துப்பின்னா் ஏற்பாடு செய்யப்பட்டவாறு பயன்படுத்தப்படுத்தல் வேண்டும்:

(i) அரச பிணையங்களில் முதலீடுகள் - இவ்வரச பிணையங்கள் திறைசேரி உண்டியல், திறைசேரி முறி மற்றும் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஏனைய சந்தைப்படுத்தக்கூடிய பிணையங்களை உள்ளடக்கும். சந்தேகத்தைத் தவிர்ப்பதற்காகவும், இவ்வொழுங்குமுறையின் நோக்கங்களுக்காகவும், நோ்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கை மூலம் மேற்கொள்ளப்படுகின்ற முதலீடுகளை இவை உள்ளடக்கும்.

(ii) அத்தகைய அங்கத்துவ நிறுவனத்தில் கடுமையான திரவத்தன்மை நெருக்கடி ஏற்படும் சூழ்நிலையில், நாணயச்சபையின் அபிப்பிராயத்தில் (உரிமம்பெற்ற வங்கி விடயத்தில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் மூலம் அல்லது உரிமம்பெற்ற நிதிக் கம்பனி விடயத்தில் வங்கி அல்லாத நிதி நிறுவனங்களின் மேற்பார்வை திணைக்களத்தின் பணிப்பாளர் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட திரவத்தன்மை நிலை தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையையொன்றை பரிசீலித்த பின்னர்) அத்தகைய முற்பணம் அல்லது கடன், குறித்துரைக்கப்பட்ட நிறுவனத்தில் அல்லது அந்த நிறுவன விடயத்தில் அல்லது ஒட்டுமொத்த நிதி முறைமையில் மற்றும் அதே விடயம் தொடர்ந்துவரும் சூழ்நிலைகளில் பூரணத் தன்மையை உத்தரவாதப்படுத்துமிடத்து, உடனடி நிதி நெருக்கடியொன்றைத் தடுத்தல் அல்லது தவிர்த்தல் மூலம் அத்தகைய அங்கத்துவ நிறுவனத்திற்கு கணிசமானளவு பங்களிக்கும் எனக்கருதும் பட்சத்தில் அத்தகைய அங்கத்துவ நிறுவனத்திற்கு வழங்கிய பிணையளிக்கப்பட்ட கடன்கள் அல்லது முற்பணங்கள்.

8.2 நடைமுறையிலுள்ள சந்தை வட்டி வீதங்களில் அல்லது வேறுவகையில் ஒழுங்குவிதி 8.1(ii)இன் நியதிகளுக்கமைவாக அங்கத்துவ நிறுவனத்திற்கு இத்தகைய கடன்கள் அல்லது முற்பணங்கள், நிதியத்தின் நம்பகத்தன்மை மற்றும் அத்தகைய தீர்மானத்தின் மூலம் நிதியத்துக்கான அமையச்செலவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு நாணயச் சபை மூலம் ஏகமனதாக தீர்மானிக்கப்படக் கூடியவாறு அரச பிணையங்களின் வடிவத்திலான பிணைய உறுதியை நிதியத்திற்கு வாக்குறுதியளிப்பதன் மீது வழங்கப்படுதல் வேண்டும்.

8.3 அத்தகைய கடன்களின் அல்லது முற்பணங்களின் மீளச்செலுத்தும் காலம், நாணயச் சபையால் தீர்மானிக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

8.4 அத்தகைய கடன்கள் அல்லது முற்பணங்களை வழங்குவது தொடர்பாக, இத்தகைய ஒழுங்குவிதிகளுக்கு துணையாக, நாணயச் சபை தொழிற்பாட்டு வழிகாட்டுதல்களை வெளியிடலாம்

**9. காப்புறுதி செய்யப்பட்ட வைப்புக்கள் மீதான இழப்பீடு**

9.1 காப்புறுதி செய்யப்பட்ட வைப்புக்கள் மீதான வைப்பாளர்களுக்கான இழப்பீடு காலத்திற்கு காலம் நாணயச் சபையால் வழங்கப்பட்ட விதிமுறைகளுக்கமைவாக அல்லது இதனகத்துப்பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு செலுத்தப்படும்.

9.2 அங்கத்துவ நிறுவனங்கள் ஒவ்வொரு வைப்பாளருக்குமான தனித்துவமான அடையாள இலக்கமொன்றுடன் அனைத்து வைப்பாளர்களினதும் பதிவுகளையும் பேணுதல் வேண்டும் அனைத்து வைப்பாளர்களின் விபரங்களையும் சமர்பித்தல் வேண்டும். ஒழுங்குவிதி 10.1இல் குறித்துரைக்கப்பட்டவாறு திட்டத்தின் செயற்பாட்டு மற்றும் நிர்வாக ஏற்பாடுகளுக்குப் பொறுப்பாகவுள்ள இலங்கை மத்திய வங்கியின் திணைக்களத்திற்கு அத்தகைய திணைக்களத்தின் பணிப்பாளர் மூலம் காலத்திற்குக்காலம் குறித்துரைக்கப்பட்ட வடிவத்தில் உரிமம்பெற்ற வங்கிகள் மூலம் காலாண்டு ரீதியாக மற்றும் உரிமம்பெற்ற நிதி நிறுவனங்கள் மூலம் மாதாந்த ரீதியாக வைப்பாளர்களின் அத்தகைய விபரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். வதிவுள்ள தனிப்பட்டவர்களின் விடயத்தில், தனித்துவமான அடையாள அட்டை இலக்கம் தேசிய அடையாள அட்டை இலக்கமாக இருத்தல் வேண்டும். கம்பனிகள் சட்டத்தின் கீழாகப் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளின் விடயத்தில், கம்பனி பதிவு இலக்கம் கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் அனைத்து ஏனைய தனியாள் அல்லாதவர்கள், தொடர்பான மற்றும் ஒப்புதலளிக்கும் அதிகாரசபை மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டு வழங்கப்பட்ட பதிவு இலக்கம் தனித்துவ அடையாள இலக்கமாக கருதப்படுதல் வேண்டும்.

9.3 நாணயச் சபையால் வங்கித்தொழிலை அல்லது நிதித்தொழிலை முன்னெடுப்பதற்கான அங்கத்துவ நிறுவனத்தின் உரிமத்தை இரத்து செய்த பின்னர் ஒரு அத்தகைய அங்கத்துவ நிறுவனம் இந்த திட்டத்தின் அங்கத்தவராக இருப்பதை முடிவுறுத்தல் வேண்டும்.

9.4 அங்கத்துவ நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட உரிமம் தொடர்புடைய நியதிச்சட்ட ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைவாக நாணயச் சபையால் இரத்து செய்யப்படுகின்ற போது மாத்திரம் அங்கத்துவ நிறுவனத்தின் காப்புறுதி செய்யப்பட்ட வைப்புப் பொறுப்புக்கள் மீதான இழப்பீடு செலுத்தப்படும்.

9.5 உரிமத்தை இரத்து செய்வதற்கான நாணயச்சபை தீர்மானம் அறிவிக்கப்பட்டதிலிருந்து பதினான்கு (14) பஞ்சாங்க நாட்களுக்குள், இரத்துச் செய்வதற்கான நாணயச் சபைக் கட்டளையின் திகதியில் உள்ளவாறான இழப்பீட்டுக் கொடுப்பனவு நோக்கத்தின் பொருட்டு, ஒழுங்குவிதி 10.1இல் குறித்துரைக்கப்பட்டவாறு திட்டத்தின் செயற்பாட்டு மற்றும் நிர்வாக ஏற்பாடுகளுக்குப் பொறுப்பாக இருக்கவேண்டிய இலங்கை மத்திய வங்கியின் திணைக்களப் பணிப்பாளரால் குறித்துரைக்கப்பட்ட வடிவத்தில் உரிமம்பெற்ற வங்கியின் விடயத்தில் வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர், அல்லது உரிமம்பெற்ற நிதிக்கம்பனியின் விடயத்தில் வங்கியல்லாத நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளருடைய சான்றுப்படுத்தலுடன்கூடிய வைப்பாளர்களின் பட்டியலை அங்கத்துவ நிறுவனம் சமர்ப்பித்தல் வேண்டும். வைப்பாளர்களின் பட்டியலை சான்றுப்படுத்தும் நோக்கத்திற்காக, வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் தேவைப்படுமிடத்து வெளிவாரி கணக்காய்வாளர் ஒருவரின் சேவையைப் பெறலாம்.

9.6 ஒரு அங்கத்துவ நிறுவனத்தின் காப்புறுதி செய்யப்பட்ட வைப்புப் பொறுப்புக்களுக்கள் மீதான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் உரிமம் இரத்து செய்யப்பட்ட திகதியிலிருந்து அறுபது (60) பஞ்சாங்க நாட்களுக்குள் தொடங்கப்படுதல் வேண்டும் மற்றும் உரிமம் இரத்துச் செய்யப்பட்ட திகதியிலிருந்து இரண்டு (02) ஆண்டுகளுக்கு தாமதிக்காமல் சமர்ப்பிக்கப்பட்ட காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்களின் உரிமைகோரல்களை மதித்தல் வேண்டும். இவ்வொழுங்குவிதிகளின் திகதிக்கு முன்னதாக உரிமங்கள் இரத்து செய்யப்பட்ட/ இடைநிறுத்தி வைக்கப்பட்ட அங்கத்துவ நிறுவனங்களின் காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்கள், தொடர்பான நிறுவனத்திற்கு விடுக்கப்பட்ட உரிமத்தை இரத்துசெய்த/ இடைநிறுத்திவைத்த திகதியிலிருந்து நான்கு (04) ஆண்டுகளுக்கு தாமதிக்காமல் உரிமைகோரல்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

9.7 அதன் உரிமம் இரத்துசெய்யப்பட்ட ஒரு அங்கத்துவ நிறுவனத்தின் விடயத்தில், அதன் காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்கள், அத்தகைய அங்கத்துவ நிறுவனத்தை கலைப்பது தொடர்பாக தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் மூலம் கலைப்பதிகாரியின் நியமனத்திற்கு முன்னர் அல்லது மேலே ஒழுங்குவிதி 9.6இல் குறித்துரைக்கப்பட்டவாறு உரிமைகோரல்களைச் சமர்ப்பிப்பதற்கான காலப்பகுதிகளின் காலாவதிக்கு முன்னர் ஏதேனுமொன்று முன்னதாக நிகழும் முன்னர் உரிய இழப்பீட்டுக்காக முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட உரிமைகோரல்களை அதுவரையில் சமர்ப்பிக்கின்ற அத்தகைய காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்கள் மாத்திரம் இவ்வொழுங்குவிதியின் கீழாக இழப்பீட்டுத் தொகையைப் பெற உரித்துடையவராதல் வேண்டும்.

9.8 அங்கத்துவ நிறுவனமொன்றின் காப்புறுதி செய்யப்பட்ட வைப்புக்கள் தொடர்பாக செலுத்த வேண்டிய இழப்பீடு, அங்கத்துவ நிறுவனத்தின் உரிமத்தை இரத்துசெய்த திகதியில் உள்ளவாறான எந்தவொரு அட்டுறுவட்டி உள்ளடங்கலாக ஒவ்வொரு வைப்பாளருக்குமான அனைத்துக் காப்புறுதி செய்யப்பட்ட வைப்புக்களையும் ஒன்றிணைத்து "தலா ஒரு வைப்பாளருக்கு" என்ற அடிப்படையில் கணக்கிடப்படும். அடுத்து வரும் காலத்திற்கு எந்தவொரு வட்டியும் செலுத்தப்படலாகாது.

9.9 வைப்பாளர் ஒருவருக்கு கொடுப்பனவு செய்யப்படவேண்டிய இழப்பீட்டுத் தொகை இலங்கை ரூபா வைப்புக்கள், தொடர்பில் உயர்ந்தபட்சம் பதினொரு இலட்சம் ரூபா (ரூ. 1,100,000) அல்லது வெளிநாட்டு நாணய வைப்பு விடயத்தில், அதற்குச் சமமான ரூபாவில், மற்றும் அத்தகைய தொகை பதினொரு இலட்சம் ரூபாவை (ரூ. 1,100,000) விஞ்சுமாயின் அத்தொகை வரையில், மேலே கணிக்கப்பட்டவாறு மொத்த காப்புறுதி செய்யப்பட்ட வைப்புகளுக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்.

9.10 2021.04.01 ஆம் திகதிக்கு முன்னர், உரிமங்கள் இரத்துச்செய்யப்பட்டுள்ள அல்லது இடைநிறுத்தப்பட்டுள்ள அங்கத்துவ நிறுவனங்களின் காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்கள், விடயத்திற்கேற்றவாறு இவ்வொழுங்குவிதியின் கீழாக உயர்ந்தபட்சம் பதினொரு இலட்சம் ரூபா (ரூ. 1,100,000) அல்லது வெளிநாட்டு நாணய வைப்புகள் விடயத்தில் அதற்குச் சமமானவற்றுக்கு உட்பட்டு கொடுப்பனவு செய்யப்படவேண்டிய இழப்பீட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையவராக இருத்தல் வேண்டும். ஆயினும், அத்தகைய காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்கள்:-

(அ) 2021.04.01ஆந் திகதியளவில் இழப்பீட்டினை கோரியிருக்காதவர்களாகவோ; அல்லது,

(ஆ) அவர்களது கோரிக்கையினை 2021.04.01 நாளன்று மேற்கொண்டு, ஆனால் இவ்வொழுங்குவிதிகள் அமுலுக்குவரும் திகதியில் இழப்பீடு செலுத்தப்படாதவர்களாக; அல்லது

(இ) 2021.04.01 நாளன்று இழப்பீட்டுத் தொகைகள் செலுத்தப்பட்டுள்ள, ஆனால் அத்தகைய இழப்பீடு பதினொரு இலட்சம் ரூபாவை (ரூ.1,100,000) விடக் குறைவானதை பெற்றவர்களாகவிருத்தல் வேண்டும்.

9.11 தொடர்பான வைப்பாளர்களால் வைப்புப் பொறுப்புக்களை ஒரு சமமான தொகையொன்றாக மீட்டெடுக்கின்றவேளை, இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் மூலம் அங்கத்துவ நிறுவனத்தின் வைப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட எந்தவொரு இழப்பீட்டையும் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்திற்கான அதனுடைய வைப்புப் பொறுப்பாக அங்கத்துவ நிறுவனத்தின் ஏடுகளில் கணக்கிடப்படுதல் வேண்டும்.

9.12 இழப்பீட்டுக் கொடுப்பனவு செலுத்தப்படும் காலத்தில் எந்தவொரு வைப்பாளர் உரித்துடைய இழப்பீட்டைப் பெற இயலாதவிடத்து, அல்லது பெற்றுக்கொள்ளாதவிடத்து ஏற்புடைத்தான சட்ட ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைகளின் நியதிகளில் வைப்பாளரின் சட்டரீதியான பயனாளிகளுக்கு இழப்பீடு வழங்கப்படுதல் வேண்டும்.

9.13 உரிமம் இரத்துசெய்யப்பட்டுள்ள ஒரு குறிப்பிட்ட அங்கத்துவ நிறுவனத்தின் வைப்பாளர்களுக்கான இழப்பீட்டுத் கொடுப்பனவுகளை விரைவுபடுத்துதல் மிகவும் அவசியமானதென நாணயச் சபை கருதுகின்றவேளை, நாணயச் சபையானது உரிமம்பெற்ற வங்கி/ வங்கிகளுடன் ஒப்பந்தமொன்றை மேற்கொள்ள முடியும்.

9.14 அங்கத்துவ நிறுவனங்களின் காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுச் செயன்முறையுடன் தொடர்பான ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்கள், காலத்திற்குக் காலம், நாணயச் சபை மூலம் தீர்மானிக்கப்படலாம்.

9.15 இழப்பீட்டுக் கொடுப்பனவு எந்தவொரு சூழ்நிலையிலும் நாணயச் சபையின் அல்லது இலங்கை மத்திய வங்கியின் பொறுப்பாதலாகாது மற்றும் அது ஏதேனும் அனுமதிக்கப்பட்ட கடன்கள் மற்றும் பெறப்பட்ட பங்களிப்புகள் உள்ளடங்கலாக இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவி நிதியத்தில் கிடைக்கத்தக்க அல்லது திரட்டப்பட்ட நிதியத்துக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

**10. நிதியத்தின் ஏடுகளும் கணக்குகளும**

10.1 நாணயச் சபையினால் காலத்திற்குக் காலம் ஒப்பதலளிக்கப்பட்டவாறு பணிப்புரைகளின்/ ஒழுங்குவிதிகளின் அத்துடன் கொள்கைகளின் நியதிகளின் பிரகாரம் தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் பணிப்பாளரின் அறிவுறுத்தல்களின் அத்துடன் மேற்பார்வையின் கீழ், தொழிற்பாட்டு மற்றும் முகாமைத்துவ ஏற்பாடுகளுக்குப் பொறுப்பாகவிருக்கின்ற இலங்கை மத்திய வங்கியின் தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்தில் தாபிக்கப்பட்ட வைப்புக் காப்புறுதிப் பிரிவொன்று இருத்தல் வேண்டும் (இதனகத்துப் பின்னர் “பிரிவு” எனக் குறிப்பீடு செய்யப்படும்).

10.2 பிரிவானது ஏற்புடையதான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் நியதிகளுக்கமைய நிதியத்தின் நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலான ஏடுகள், கணக்குகள் மற்றும் கூற்றுக்கள் என்பனவற்றைப் பேணுதல் வேண்டும்.

10.3 நிதியத்தின் நிதியியல் ஆண்டாக பஞ்சாங்க ஆண்டு இருத்தல் வேண்டும் என்பதுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதி கணக்காய்வாளராக இருத்தல் வேண்டும்.

10.4 பிரிவு, ஒவ்வொரு நிதியாண்டிற்குமான வருமானம் மற்றும் செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், காசுப்பாய்ச்சல்கள் மற்றும் முதலீடுகள் மீதான நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை தொடர்ந்து வருகின்ற ஆண்டின் மாச்சு 31ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் நாணயச் சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அங்கத்துவ நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களின் தகவலுக்காக அத்தகைய கூற்றுக்களை வெளிப்படுத்துதலும் வேண்டும்.

10.5 இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்டத்தின் நிதியியல் கூற்றுக்கள் இலங்கை மத்திய வங்கியின் நிதிக் கூற்றுக்களிலிருந்து முற்றிலும் வேறாக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும் என்பதோடு அதற்கிணங்க, பிரிவின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை மத்திய வங்கியின் கூற்றுக்களுடன் ஒருங்கிணைக்கப்படலாகாது.

**11. பொருள்கோடல்**

11.1 இவ்வொழுங்குவிதியின் நோக்கங்களுக்காக,

(i) “உரிமமளிக்கப்பட்ட வங்கிகள்” என்பது திருத்தப்பட்டவாறான, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட அனைத்து வங்கிகளும் எனப் பொருள்படும் என்பதுடன், “உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகள்” என்பது திருத்தப்பட்டவாறான, 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம்பெற்றுள்ள அனைத்து நிதிக் கம்பனிகளும் எனப் பொருள்படுதல் வேண்டும்.

(ii) “கடன்கள் மற்றும் முற்பணங்கள்” என்பது மீளச்செலுத்தலுக்காக குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்காக, குறித்துரைக்கப்பட்ட பிணைய உறுதிகள் மீது குறித்துரைக்கப்பட்ட வட்டி வீதமொன்றில் அங்கத்துவ நிறுவனமொன்றிற்கு கடனாக வழங்கப்படும் குறித்துரைக்கப்பட்ட ஒரு பணத்தொகை எனப் பொருள்படும்.

(iii) “காப்பீடு செய்யப்பட்ட வைப்புக்கள்” என்பது அனைத்து தகுதியான வைப்புகளும் எனப் பொருள்படுதல் வேண்டும், ஆயினும், எவ்வாறாயினும் ஒரு வைப்பாளருக்குச் செலுத்தப்படற்பாலதான உயர்ந்தபட்ச இழப்பீட்டுத் தொகை, மேலே 9.9 ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட தொகைக்கு மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(iv) “காப்பீடு செய்யப்பட்ட வைப்பாளர்கள்” என்பது தகுதியான வைப்புகளின் உடமையாளர்கள் எனப் பொருள்படுதல் வேண்டும், ஆயினும், எவ்வாறாயினும் ஒரு வைப்பாளருக்குச் செலுத்தப்படற்பாலதான உயர்ந்தபட்ச இழப்பீட்டுத் தொகை மேலே ஒழுங்குவிதி 9.9 இல் குறித்துரைக்கப்பட்ட தொகைக்கு மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்.

**12. ஒழுங்குவிதிகளை நீக்குதல்**

12.1 தொடர்ந்துவந்த ஒழுங்குவிதிகளினால் திருத்தப்பட்டவாறான 2010ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்ட ஒழுங்குவிதிகள், இத்தால் நீக்கப்படுகின்றன (இதனகத்துப் பின்னர் “நீக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்” எனக் குறிப்பீடு செய்யப்படும்). இவ்வேற்பாடுகளின் கீழ் செய்யப்பட்ட நீக்குதல் எவ்வாறிருப்பினும், சொல்லப்பட்ட நீக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டம் தொடர்ந்திருத்தல் வேண்டும் என்பதுடன் பேணிக்காக்கப்படலும் வேண்டும் அத்துடன் இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின் கீழும் உட்பட்டும் இடைத்தளங்கள் அல்லது தடையூறு தொடர்ந்தும் நிலைத்திருத்தல் வேண்டும்.

12.2 இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்குவரும் திகதியில் உள்ளவாறான, சொல்லப்பட்ட நீக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் தொழிற்படும் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்டத்தின் வரவில் காணப்படுகின்ற தொகைகள், நடைமுறைக்குவரும் திகதியில் உள்ளவாறு இவ்வொழுங்குவிதிகளின் கீழ் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவி நிதியமாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

12.3 நீக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் தொழிற்பட்ட திட்டத்திற்கு உடமையாகக் கருதப்பட்ட எல்லா உரிமைகளும் கடப்பாடுகளும் சொத்துக்களும் ஆதனங்களும் பொறுப்புகளும் தத்துவங்களும் சிறப்புரிமைகளும் அதிகாரங்களும் அத்துடன் அத்தகைய உரிமைகள், சொத்துக்கள், ஆதனங்கள் போன்றவற்றில் அல்லது அவற்றிலிருந்து தோன்றுகின்ற அக்கறைகள் அத்துடன் நீக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் தொழிற்பட்ட திட்டத்துடன் தொடர்புடைய அல்லது உரித்தாயிருக்கின்ற அத்தகைய பொறுப்புக்களும், எல்லா ஏடுகளும், கணக்குகளும் அத்துடன் ஆவணங்களும் மற்றும் நடைமுறைத் திகதியன்று உள்ளவையும், இவ்வொழுங்குவிதியின் கீழான திட்டத்தின் உரிமைகளாக கடப்பாடுகளாக சொத்துக்களாக ஆதனங்களாக பொறுப்புக்களாக தத்துவங்களாக சிறப்புரிமைகளாக அதிகாரங்களாக அக்கறைகளாக ஏடுகளாக கணக்குகளாக மற்றும் ஆவணங்களாக இருப்பவையாகக் கருதப்படல் வேண்டும்.

**2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள்** **2021 சனவரி 01**

**அசையாச் சொத்துக்களின் மதிப்பீட்டிற்கான திருத்தம்**

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12 ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில், இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பாக 2018ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கு பின்வரும் திருத்தங்களை நாணயச் சபை விடுத்திருக்கிறது.

இதற்கமைய, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பான 2018ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரையின் பணிப்புரை 4 மற்றும் பணிப்புரை 6 என்பன பின்வரும் பணிப்புரைகள் மூலம் பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்.

**4. மதிப்பீட்டாளர்களுக்கான தகைமைப் பிரமாணங்கள்**

4.1 ஒவ்வொரு உரிமம்பெற்ற நிதிக் கம்பனியும் பின்வருவனவற்றை உறுதிப்படுத்தல் வேண்டும்.

அ. மதிப்பீட்டாளர்களுக்கான தகைமைப் பிரமாணங்கள் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன.

அ.1 இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவகத்தின் உறுப்பினராக இருத்தல் வேண்டும். அவர்:

i. ஒரு ஆட்சியியல் உறுப்பினராக் அல்லது

ii. தொழில்சார் நிபுணத்துவத்தின் உறுப்பினராகவும் அத்தகைய உறுப்பினர் தரத்தில் 5 ஆண்டு அனுபவத்துடன் கூடியதொருவராகவும் இருத்தல் வேண்டும்.

தொழில்சார் நிபுணத்துவ சங்க உறுப்பினர் தரத்திலிருந்த அனுபவ ஆண்டுகளின் எண்ணிக்கையினை தீர்மானிக்கும் நோக்கத்திற்காக 2019ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவக (திருத்தச்) சட்டத்தின் 24ஆம் பிரிவின் கீழ் கூறப்பட்டுள்ள இடைக்கால ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

அ.2 ஐக்கிய இராச்சியத்தின் பட்டய அளவீட்டாளர் றோயல் நிறுவகத்தின் பட்டய மதிப்பீட்டு அளவையாளரொருவராக இருத்தல் வேண்டும். அவர்:

i. ஒரு ஆட்சியியல் உறுப்பினராக (ஐக்கிய இராச்சியத்தின் பட்டய அளவீட்டாளர் றோயல் நிறுவகத்தின் உறுப்பினர்) அல்லது

ii. உறுப்புரிமையின் அத்தகைய தரத்தில் 05 ஆண்டு கால அனுபவத்துடன் கூடிய பட்டய அளவீட்டாளர்களின் றோயல் நிறுவகத்தின் ஏனைய உறுப்பினர்களாக

இருத்தல் வேண்டும்.

ஆ. மேலே பணிப்புரை 4.1(அ) இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளின்படி உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் மதிப்பீட்டாளர் குழுவிற்கு தெரிவுசெய்யப்பட்ட மதிப்பீட்டாளர்கள் தொடர்பான தொழில்சார் நிபுணத்துவ சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட/

விதந்துரைக்கப்பட்ட தொழில்சார் அபிவிருத்திகளை தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

இ. அசையாச் சொத்துக்களின் மதிப்பீட்டினை மேற்கொள்கின்ற உள்ளக மதிப்பீட்டாளர்கள் மேலே பணிப்புரை 4.1 (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைப் பிரமாணங்களைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

ஈ. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடுகளை மேற்கொள்வதில் உயர்மட்டத்திலுள்ள தொழில்சார் நிபுணத்துவ நடத்தை, ஒழுக்கவியல் மற்றும் நேர்மைத்தன்மை என்பனவற்றைக் கொண்டுள்ளவர்கள் மதிப்பீட்டாளர் குழுவில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றனர்.

**6. மதிப்பீடுகளின் கால இடைவெளி**

6.1 அசையாச் சொத்துக்களின் மதிப்பீடுகளது கால இடைவெளி பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

அ. செயற்படாதனவாக விளங்கும் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கெதிராக பிணையுறுதியாக பெறப்பட்ட அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு எந்தவொரு ஒழுங்குமுறைப்படுத்தல் நோக்கத்திற்குமாக பின்வருமாறான கால இடைவெளியினை கொண்டிருத்தல் வேண்டும்.

i. கடன்பாட்டாளரினால் வதியும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டு வருகின்ற வதிவிட சொத்திற்கெதிராக வழங்கப்பட்ட கொடுகடன் வசதியைப் பொறுத்தவரை அறிக்கை ஐந்தாண்டுக்குக் கூடுதலான பழமையானதாக இருக்கக்கூடாது.

ii. மற்றைய அனைத்து கொடுகடன் வசதிகள்: அறிக்கையானது நான்கு ஆண்டுகளுக்குக் கூடுதலான பழமையானதாக இருத்தல்கூடாது.

ஆ. செயற்படுகின்ற கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கெதிராக பிணையுறுதியாக பெறப்பட்ட அசையாச் சொத்துக்களின் மதிப்பீடுகள் கடன் வழங்கப்படுகின்ற ஆரம்ப கட்டத்தின் போதும் அதனைத் தொடர்ந்து கொடுகடன் வசதி அதிகரிக்கப்படுகின்ற ஏதேனும் நேரத்திலும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

இ. அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பில் 2018ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரையின் பணிப்புரை 3.1 (ஆ) மற்றும் (இ) இல் குறிப்பிடப்பட்டவாறு அசையாச் சொத்துக்களின் மீள்மதிப்பீடானது பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட உள்ளகக் கொள்கைகளுக்கு இசைந்த விதத்தில் அல்லது அத்தகைய அசையாச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியில் ஏற்படுகின்ற ஏதேனும் குறிப்பிடத்தக்க தளம்பல் மாற்றங்களுக்கேற்ப மேற்கொள்ளப்படல் வேண்டும். எனினும், அத்தகைய இலாபங்கள் ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்குகொருமுறை மட்டுமே அடுக்கு 2 மூலதனத்தில் உள்ளடக்கப்படலாம்.

**முன்னைய பணிப்புரைகளை இரத்துச் செய்தல்**

அசையாச் சொத்துக்களின் மதிப்பீட்டிற்கான திருத்தங்கள் மீதான 2019ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

ஒப்பம்
பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டப் பணிப்புரைகள்** **2021 சனவரி 01**

**அசையாச் சொத்துக்களின் மதிப்பீட்டிற்கான திருத்தம்**

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டத்தின் 34 ஆம் பிரிவினால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தின் நியதிகளில், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பாக இலங்கையிலுள்ள சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு விடுக்கப்பட்ட 2018ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரைக்கு பின்வரும் திருத்தங்களை விடுத்திருக்கிறார்.

இதற்கமைய, சிறப்பியல்பு வாய்ந்த நிதிக் குத்தகைக்குவிடும் கம்பனிகளின் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பான 2018ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரையின் 5 மற்றும் பணிப்புரை 7 பின்வரும் பணிப்புரைகள் மூலம் பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்.

**5. மதிப்பீட்டாளர்களுக்கான தகைமைப் பிரமாணங்கள்**

5.1 ஒவ்வொரு சிறப்பியல்பு வாய்ந்த நிதிக் குத்தகைக்குவிடும் கம்பனியும் பின்வருவனவற்றை உறுதிப்படுத்தல் வேண்டும்.

அ. மதிப்பீட்டாளர்களுக்கான தகைமைப் பிரமாணங்கள் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன.

அ.1 இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவகத்தின் உறுப்பினராக இருத்தல் வேண்டும். அவர்:

i. ஒரு ஆட்சியியல் உறுப்பினராக் அல்லது

ii. தொழில்சார் நிபுணத்துவத்தின் உறுப்பினராகவும் அத்தகைய உறுப்பினர் தரத்தில் 5 ஆண்டு அனுபவத்துடன் கூடியதொருவராகவும் இருத்தல் வேண்டும்.

தொழில்சார் நிபுணத்துவ சங்க உறுப்பினர் தரத்திலிருந்த அனுபவ ஆண்டுகளின் எண்ணிக்கையினை தீர்மானிக்கும் நோக்கத்திற்காக 2019ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவக (திருத்தச்) சட்டத்தின் 24ஆம் பிரிவின் கீழ் கூறப்பட்டுள்ள இடைக்கால ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

அ.2 ஐக்கிய இராச்சியத்தின் பட்டய அளவீட்டாளர் றோயல் நிறுவகத்தின் பட்டய மதிப்பீட்டு அளவையாளரொருவராக இருத்தல் வேண்டும். அவர்:

i. ஒரு ஆட்சியியல் உறுப்பினராக (ஐக்கிய இராச்சியத்தின் பட்டய அளவீட்டாளர் றோயல் நிறுவகத்தின் உறுப்பினர்) அல்லது

ii. உறுப்புரிமையின் அத்தகைய தரத்தில் 05 ஆண்டு கால அனுபவத்துடன் கூடிய பட்டய அளவீட்டாளர்களின் றோயல் நிறுவகத்தின் ஏனைய உறுப்பினர்களாக

இருத்தல் வேண்டும்.

ஆ. மேலே பணிப்புரை 5.1 அ) இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளின்படி சிறப்பியல்பு வாய்ந்த நிதிக் குத்தகைக்குவிடும் கம்பனிகளின் மதிப்பீட்டாளர் குழுவிற்கு தெரிவுசெய்யப்பட்ட மதிப்பீட்டாளர்கள் தொடர்பான தொழில்சார் நிபுணத்துவ சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட/ விதந்துரைக்கப்பட்ட தொழில்சார் அபிவிருத்திகளை தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

இ. அசையாச் சொத்துக்களின் மதிப்பீட்டினை மேற்கொள்கின்ற உள்ளக மதிப்பீட்டாளர்கள் மேலே பணிப்புரை 5.1(அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைப் பிரமாணங்களைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

ஈ. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடுகளை மேற்கொள்வதில் உயர்மட்டத்திலான தொழில்சார் நிபுணத்துவம் மிக்க நடத்தை, ஒழுக்கவியல் மற்றும் நேர்மைத்தன்மை என்பனவற்றைக் கொண்டுள்ள மதிப்பீட்டாளர்கள், மதிப்பீட்டாளர் குழுவில் உள்ளடக்கப்படுகின்றனர்.

**7. மதிப்பீடுகளின் கால இடைவெளி**

7.1 அசையாச் சொத்துக்களின் மதிப்பீடுகளது கால இடைவெளி பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

அ. செயற்படாதனவாக விளங்கும் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கெதிராக பிணையுறுதியாக பெறப்பட்ட அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு எந்தவொரு ஒழுங்குமுறைப்படுத்தல் நோக்கத்திற்குமாக பின்வருமாறான கால இடைவெளியினை கொண்டிருத்தல் வேண்டும்.

i. கடன்பாட்டாளரினால் வதியும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டு வருகின்ற வதிவிட சொத்திற்கெதிராக வழங்கப்பட்ட கொடுகடன் வசதியைப் பொறுத்தவரை அறிக்கை ஐந்தாண்டுக்குக் கூடுதலான பழமையானதாக இருக்கக்கூடாது.

ii. மற்றைய அனைத்து கொடுகடன் வசதிகள்: அறிக்கையானது நான்கு ஆண்டுகளுக்கும் கூடுதலான பழமையானதாக இருத்தல்கூடாது.

ஆ. செயற்படுகின்ற கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கெதிராக பிணையுறுதியாக பெறப்பட்ட அசையாச் சொத்துக்களின் மதிப்பீடுகள் கடன் வழங்கப்படுகின்ற ஆரம்ப கட்டத்தின் போதும் அதனைத் தொடர்ந்து கொடுகடன் வசதி அதிகரிக்கப்படுகின்ற ஏதேனும் நேரத்திலும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

இ. அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பில் 2018ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரையின் பணிப்புரை 4.1 (ஆ) மற்றும் (இ) இல் குறிப்பிடப்பட்டவாறு அசையாச் சொத்துக்களின் மீள்மதிப்பீடானது பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட உள்ளகக் கொள்கைகளுக்கு இசைந்த விதத்தில் அல்லது அத்தகைய அசையாச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியில் ஏற்படுகின்ற ஏதேனும் குறிப்பிடத்தக்க தளம்பல் மாற்றங்களுக்கேற்ப மேற்கொள்ளப்படல் வேண்டும். எனினும், அத்தகைய இலாபங்கள் ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்குகொருமுறை மட்டுமே அடுக்கு 2 மூலதனத்தில் உள்ளடக்கப்படலாம்.

**முன்னைய பணிப்புரைகளை இரத்துச் செய்தல்**

அசையாச் சொத்துக்களின் மதிப்பீட்டிற்கான திருத்தங்கள் மீதான 2019ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டப்

பணிப்புரை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

ஒப்பம்
ஜே டி எஸ் ஜே நாணயக்காரா
**பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின்**
**மேற்பார்வைத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி**

**2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள்** 2021 பெப்புருவரி 17

**உந்து ஊர்திகள் தொடர்பாக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் தொடர்பான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்**

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படுகிறது.

உந்து ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்படுத்தல் நோக்கங்களுக்காக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் தொடர்பில் பெறுமதிக்கான கடன் விகிதத்தின் நடைமுறைப்படுத்தலுக்காக இலங்கை மத்திய வங்கி பின்வரும் பணிப்புரைகளை விடுத்திருக்கிறது.

1. **உந்து ஊர்திகள் தொடர்பாக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் தொடர்பான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் மீதான 2020ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரையின் பணிப்புரை 1(i)(ஆ) பின்வருவனவற்றின் மூலம் பதிலீடு செய்யப்படுகிறது.**

   "(ஆ)முதல் பதிவின் பின்னர் ஓராண்டிற்கும் கூடுதலான காலப்பகுதியில் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள் தொடர்பில் 80 சதவீதம்."

ஒப்பம்
பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டப் பணிப்புரைகள்** 2021 பெப்புருவரி 17

**உந்து ஊர்திகள் தொடர்பாக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் தொடர்பான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்**

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் 34ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படுகிறது.

உந்து ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்படுத்தல் நோக்கங்களுக்காக சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் தொடர்பில் பெறுமதிக்கான கடன் விகிதத்தின் நடைமுறைப்படுத்தலுக்காக இலங்கை மத்திய வங்கி பின்வரும் பணிப்புரைகளை விடுத்திருக்கிறது.

1. **உந்து ஊர்திகள் தொடர்பாக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் தொடர்பான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் மீதான 2020ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நிதிக் குத்தகைக்கு விடுதல் சட்டப் பணிப்புரையின் பணிப்புரை 1(i)(ஆ) பின்வருவனவற்றின் மூலம் பதிலீடு செய்யப்படுகிறது.**

   (ஆ) "முதல் பதிவின் பின்னர் ஓராண்டிற்கும் கூடுதலான காலப்பகுதியில் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள் தொடர்பில் 80 சதவீதம்".

ஒப்பம்
ஜே டி எஸ் ஜே நாணயக்காரா
**பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின்**
**மேற்பார்வைத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி**

**2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்கச் சுற்றிக்கை** 2021 மாச்சு 12

**பயணிகள் போக்குவரத்துத் துறையிலுள்ள வியாபாரங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் பெறப்பட்ட குத்தகை வசதிகளுக்கான சலுகைகள்**

தற்பொழுது காணப்படும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக பயணிகள் போக்குவரத்துத் துறையில் ஈடுபட்டுள்ள வியாபாரங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் எதிர்நோக்கப்படும் சவால்களை எதிர்கொள்ளும் நோக்குடன், இலங்கை மத்திய வங்கி

உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளையும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளையும் (இதனகத்துப் பின்னர் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் எனக் குறிப்பிடப்படும்) பயணிகள் போக்குவரத்துப் பணிகளில் ஈடுபட்டுள்ள கொவிட்-19இனால் பாதிக்கப்பட்டிருக்கும் வியாபாரங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் பெறப்பட்ட குத்தகை வசதிகளின் கொடுப்பனவுகளுக்காக (இதனகத்துப் பின்னர் திட்டம் எனக் குறிப்பிடப்படும்) கீழே குறிப்பிடப்பட்டவாறு 2021 ஏப்பிறல் 1ஆம் நாளிலிருந்து ஆறு மாத காலப்பகுதிக்கு சலுகைகளை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறது.

இதற்கமைய, இச்சுற்றறிக்கையானது, அனைத்து வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்கிடையேயும் ஒத்திருக்கின்றவாறு திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக விடுக்கப்படுகிறது.

**1. குத்தகைத் தவணைகளைப் பிற்போடும் காலம்**

1.1 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் தகைமையுடைய கடன்பாட்டாளர்களினால் எதிர்நோக்கப்படும் நிதியியல் இடர்ப்பாடுகளைப் பரிசீலனையில் கொண்டு 2021 ஏப்பிறல் 01 இலிருந்து ஆரம்பிக்கும் விதத்தில் 6 மாத காலத்தினை விஞ்சாததொரு காலப்பகுதிக்கு அல்லது ஏற்புடைத்தானவிடத்து குறைவானதொரு காலப்பகுதிக்கு குத்தகைத் தவணைகளைப் பிற்போடுதல் வேண்டும்.

1.2 குத்தகை தவணையினை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் (மூலதனம் மற்றும் வட்டி) பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளரின் கோரிக்கை மீது பிற்போடலாம்.

**2. விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி**

2.1 தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் 2021 ஏப்பிறல் 19 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ குத்தகை தவணைகளை பிற்போடுவதற்கான கோரிக்கையினை எழுத்து மூலமோ அல்லது இலத்திரனியல் முறை மூலமோ விடுத்தல் வேண்டும். வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் விரைவான முறையில் சலுகைகள், விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி, விண்ணப்பங்களின் படிவம் போன்றவற்றை தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கு அச்சிடப்பட்ட வடிவில் அத்துடன் அல்லது மின்னஞ்சல் மற்றும் குறுந்தகவல் உட்பட இலத்திரனியல் முறையில் அறிவித்தல் வேண்டும்.

2.2 2021 ஏப்பிறல் 19ஆம் திகதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் தொடர்பில், அத்தகைய கோரிக்கையினைச் செய்வதில் காணப்பட்ட தாமதத்திற்கான காரணங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருப்பின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் அதனை ஏற்றுக்கொள்ளலாம்.

**3. தகைமையுடைய கடன்பாட்டாளர்கள்**

3.1 பொதுமக்கள் பயணிகள் போக்குவரத்துக்கள், பாடசாலைப் போக்குவரத்துப் பணிகள், அலுவலகப் போக்குவரத்துப் பணிகள், முச்சில்லு வண்டிகள் உட்பட ரக்சி போன்ற தனியார் பயணிகள் போக்குவரத்துக்கள் மற்றும் சுற்றுலாத்துறைக்கு பயணிகள் போக்குவரத்துப் பணிகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்கள்.

3.2 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேலே 3.1இல் குறிப்பிடப்பட்ட துறைகளுக்குப் பயணிகள் போக்குவரத்தினை வழங்குவதற்கு ஊர்திகள் பயன்படுத்தப்பட்டமையினை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு தகைமையுடைய கடன்பாட்டாளர்களைக் கேட்டுக் கொள்ளலாம்.

**4. தகைமையுடைய கொடுகடன் வசதிகள்**

மேலேயுள்ள பந்தி 3இன் கீழ் குறிப்பிடப்பட்ட தகைமையுடைய கடன்பாட்டாளர்களினால் பெறப்பட்ட 2021 மாச்சு 31இல் உள்ளவாறான சட்ட இசைவுத்தாமதத்தின் கீழான குத்தகை வசதிகள் உட்பட செயற்படுகின்ற குத்தகை வசதிகள்.

**5. சலுகைகளை சீரமைத்தல்**

5.1 குத்தகை வசதிகளின் தற்போதுள்ள காலப்பகுதியை நீடித்தல்

(அ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் பிற்போடுவதற்கு தகைமையுடைய குத்தகை வசதிகளின் தற்போதுள்ள காலத்தினை, தொடர்பான பிற்போடல் காலத்தினால் நீடிக்கலாம்.

(ஆ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் பிற்போடப்பட்ட காலப்பகுதிக்குள் செலுத்தப்பட வேண்டிய குத்தகை தவணைப் பணத்தின் மீது மாத்திரம், 2021 ஏப்பிறல் 01 அன்று கிடைக்கத்தக்க 364 நாட்கள் திறைசேரி உண்டியலுக்கான மிகப் பிந்திய ஏல வீதத்துடன் ஆண்டிற்கு 5.5 சதவீதத்தினை கூட்டி ஆண்டிற்கு 11.5 சதவீதத்தினை விஞ்சாத வீதத்தில் வட்டி வீதமொன்றினை விதிக்கலாம்.

(இ) அத்தகைய ஒன்றுசேர்ந்த வட்டி வீதத்தினை இக்காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய ஏற்கனவேயுள்ள குத்தகை தவணையுடன் சேர்த்து 2023 ஏப்பிறலிலிருந்து மாதாந்த அடிப்படையில் அறவிட்டுக் கொள்ளுதல் வேண்டும். குத்தகை வசதியின் எஞ்சியுள்ள காலம் 2023 ஏப்பிறலுக்கு முன்னர் முடிவடைகின்ற விடயத்தினைப் பொறுத்தவரை, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் குத்தகை வசதியின் எஞ்சியுள்ள காலம் நிறைவடையும் போது அத்தகைய வட்டியினை அறவிட்டுக் கொள்ளத் தொடங்கலாம்.

(ஈ) தற்போதுள்ள குத்தகை வசதியின் எஞ்சியுள்ள காலம் முடிவடைந்ததும், கடன்பாட்டாளர்கள் மேலே பந்தி 5.1(அ)இல் குறிப்பிடப்பட்ட பிற்போடப்பட்ட தவணைகளின் மீள்கொடுப்பனவுகளை ஆரம்பித்தல் வேண்டும்.

5.2 சட்ட இசைவுத்தாமதத்தின் போது செலுத்தப்பட வேண்டிய தொகையினை அறவிடல்

(அ) பள்ளிக்கூடங்கள் (அநேகமான போக்குவரத்து பணிகளை வழங்குவோர் மாதாந்த கொடுப்பனவுகளை தடங்கலின்றி தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்கின்றனர்), அலுவலகங்கள், விமானநிலையம் போன்றன மீளத்திறக்கப்பட்டமையின் காரணமாக அரச மற்றும் தனியாள் போக்குவரத்து படிப்படியாக வழமைக்குத் திரும்புகின்றமை, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மீதான படுகடன் சட்ட இசைவுத்தாமதம் நீடிக்கப்பட்டமையின் உள்ளார்ந்த தாக்கம் மற்றும் தற்போது இடம்பெற்று வருகின்ற தடுப்பு மருந்து ஏற்றும் நிகழ்ச்சித்திட்டம் என்பனவற்றினைப் பரிசீலனையில் கொண்டு, 2019 ஏப்பிறல் 1 இலிருந்து 2020 மாச்சு 31 வரையிலும் 2020 ஏப்பிறல் 01 இலிருந்து 2020 செத்தெம்பர் 30 வரையிலும் 2020 ஒத்தோபர் 01 இலிருந்து 2021 மாச்சு 31 வரையிலுமான காலப்பகுதியில் (இதனகத்துப் பின்னர் சட்ட இசைவுத்தாமதம் எனக் குறிப்பிடப்படும்) வழங்கப்பட்ட சட்ட இசைவுத்தாமதம் தொடர்பில் செலுத்தப்பட வேண்டிய தவணைப் பணத்தினை, ஏற்புடைத்தான விதத்தில் மேலே பந்தி 5.1(அ)இல் குறிப்பிடப்பட்ட தற்போதுள்ள குத்தகை வசதியின் பிற்போடப்பட்ட காலப்பகுதியில் அறவிடத் தொடங்குதல் வேண்டும்.

(ஆ) மேலேயுள்ள பந்தி 5.2(அ) இல் குறிப்பிடப்பட்ட முன்னைய சட்ட இசைவுத்தாமதத்தின் மீது செலுத்தப்பட வேண்டிய எஞ்சியிருக்கும் தவணைப் பணத்தின் மீள்கொடுப்பனவினை தற்போதுள்ள குத்தகை வசதியின் பிற்போடப்பட்ட காலம் உட்பட எஞ்சியுள்ள காலப்பகுதி முடிவடையும் வரை பிற்போடப்படுதல் வேண்டும்.

(இ) சட்ட இசைவுதாமதத்தின் மீது செலுத்தப்பட வேண்டிய தவணைப் பணத்தின் அத்தகைய பிற்போடப்பட்ட காலப்பகுதிக்காக, 2021 ஏப்பிறல் 01ஆம் திகதியில் கிடைக்கத்தக்கதாகவுள்ள 364 நாள் திறைசேரி உண்டியல்களுக்கான பிந்திய ஏல வீதத்துடன் ஆண்டொன்றிற்கு 5.5 சதவீதத்தினை கூட்டி ஆண்டிற்கு 11.5 சதவீதத்தினை விஞ்சாததொரு வீதத்தில் வட்டியை ஒன்றுசேர்க்கலாம்.

(ஈ) அத்தகைய வட்டியினை, மேலேயுள்ள பந்தி 5.1(ஆ) மற்றும் (இ)இல் குறிப்பிடப்பட்ட வட்டியைப் பூரணமாகச் செலுத்தி முடித்தவுடன் உடனடியாக மாதாந்த அடிப்படையில் பந்தி 5.2(ஆ) இல் குறிப்பிடப்பட்டவாறு சட்ட இசைவுத்தாமதத்துடன் தொடர்பான பிற்போடப்பட்ட தவணைப் பணம் மற்றும் தற்போதுள்ள குத்தகை வசதி மீதான தவணைப் பணம் என்பனவற்றுடன் சேர்த்து, ஏற்புடைத்தானதொரு விதத்தில் அறவிடுதல் வேண்டும்.

(உ) தற்போதுள்ள குத்தகை வசதியின் பிற்போடப்பட்ட காலம் உட்பட, எஞ்சியுள்ள காலம் முடிவடைந்ததும் கடன்பாட்டாளர்கள் மேலேயுள்ள பந்தி 5.2(ஆ) இல் குறிப்பிடப்பட்ட சட்ட இசைவுத்தாமதம் தொடர்பான பிற்போடப்பட்ட தவணைப் பணத்தின் மீள்கொடுப்பனவுகளைத் தொடங்குதல் வேண்டும்.

5.3 சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டியவை மற்றும் பிற்போடப்பட்ட காலப்பகுதிக்கான வட்டி என்பன உட்பட, பிற்போடப்பட்ட காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய குத்தகை தவணைப் பணத்தினை உரிய காலத்திற்கு முன்னர் தீர்ப்பனவு செய்வதற்கு கடன்பாட்டாளர் எழுத்து மூலமான கோரிக்கையொன்றினை சமர்ப்பிப்பாராயின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் அத்தகைய கோரிக்கைக்கு வசதியளிக்கலாம். அத்தகைய விடயத்தில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களும் கடன்பாட்டாளரும் சீரமைப்பு, வட்டி வீதம் மற்றும் காலம் தொடர்பில் உடன்பாடொன்றிற்கு வருதல் வேண்டும்.

5.4 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், கடன்பாட்டாளரின் கோரிக்கையின் மீது கடன்பாட்டாளருக்கு வேறு ஏதேனும் மேலதிகத் தேர்வுகளை வழங்கலாம். எனினும், கடன்பாட்டாளருக்கான ஒட்டுமொத்த நன்மைகள் இச்சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்படுகின்ற நன்மைகளிலும் பார்க்கக் குறைவானதாக இருக்கக்கூடாது. அத்தகைய விடயத்தில், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் இச்சுற்றறிக்கையில் முன்மொழியப்பட்ட சீரமைப்பு உட்பட, அனைத்துத் தேர்வுகளின் கீழுமான வட்டி வீதக் கணிப்புக்களை, அத்தகைய சலுகைகளுக்கு ஒப்புதலளிப்பதற்கு முன்னர் தெளிவாக விளக்குதல் வேண்டும்.

5.5 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் 2021 ஏப்பிறல் 01 வரை ஒன்றுசேர்ந்த மற்றும் செலுத்தப்படாத தண்ட வட்டி ஏதுமிருப்பின் அவற்றையும் தள்ளுபடி செய்தல் வேண்டும். பிற்போடப்பட்ட காலப்பகுதியில் தண்ட வட்டி வீதங்களை ஒன்றுசேர்க்கவோ விதிக்கவோ கூடாது.

5.6 சலுகைகளை வழங்குவது தொடர்பில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மிகையான கட்டணங்களையோ விதிப்புக்களையோ மேற்கொள்ளக்கூடாது.

5.7 கோரிக்கைகளை நிராகரிப்பது தொடர்பில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் அத்தகைய நிராகரிப்பிற்கான காரணங்களைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

**6. குத்தகை தவணைப் பணத்தினைப் பிற்போட்டமை தொடர்பான கணக்கீட்டுப் பரிசீலனைகள்**

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் குத்தகை தவணைப் பணத்தினைப் பிற்போட்டமை தொடர்பான கணக்குகளை இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படியும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக நிதியியல் அறிக்கையிடல் சிக்கல்கள் தொடர்பில் இலங்கை கணக்கீட்டு நியமத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் மேலதிக வழிகாட்டிகளுக்கேற்பவும் பரிசீலித்தல் வேண்டும்.

இது தொடர்பில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்கு மேலதிக வழிகாட்டல்கள்/ தெளிவுபடுத்தல்கள் தேவைப்படுமிடத்து இலங்கை கணக்கீட்டு நியமங்களையும் கணக்காய்வாளர்களையும் நாடலாம்.

**7. அறிக்கையிடும் தேவைப்பாடு**

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் கடன்பாட்டாளர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட குத்தகை தவணைப் பணத்தினைப் பிற்போட்டமை தொடர்பான விபரங்களை 2021 ஏப்பிறல் 30ஆம் நாளிலிருந்து 15 வேலைநாட்களுக்குள் ஒவ்வொரு மாத இறுதியிலுள்ளவாறு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திற்கு அறிக்கையிடல் வேண்டும். அறிக்கையிடும் படிவம் காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

ஒப்பம்
பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்கச் சுற்றறிக்கை** 2021 மாச்சு 19

**கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட சுற்றுலாத் தொழில் துறையிலுள்ள வியாபாரங்கள் தனியாட்களுக்கான படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினை நீடித்தல்**

தற்பொழுது காணப்படும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக சுற்றுலாத் துறையில் ஈடுபட்டுள்ள வியாபாரங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் எதிர்நோக்கப்படும் சவால்களுக்கு முகம்கொடுக்கும் நோக்குடன், இலங்கை மத்திய வங்கி, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளையும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளையும் (இதனகத்துப் பின்னர் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் எனக் குறிப்பிடப்படும்) 2020 செத்தெம்பர் 30ஆம் திகதியிடப்பட்ட 2020இன் 09ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் கீழ் சுற்றுலாத் துறைக்காக வழங்கப்பட்ட படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தின் கீழே குறித்துரைக்கப்பட்டவாறு 2021 ஏப்பிறல் 1ஆம் நாள் தொடக்கம் மற்றுமொரு ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்குமாறு கோரியிருக்கிறது. எனினும், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் கடன்பாட்டாளரின் கோரிக்கையின் மீது, கடன்பாட்டாளருக்கு ஏதேனும் மேலதிக தெரிவுகளை வழங்கலாமெனினும் அத்தகைய வழியில் கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்படும் ஒட்டுமொத்த நன்மைகள் இச்சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்படும் நன்மைகளை விடக் குறைவானதாக இருக்கக்கூடாது. மேலே குறிப்பிடப்பட்ட நீடிப்பு, நீண்ட கால ஏற்பாடுகளுக்கான முன்மொழிவுகளுடன் கடன்பாட்டாளர்கள் முன்வருவதற்குப் போதுமான நேரத்தினை வழங்கும் பொருட்டு வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, கடன்பாட்டாளர்கள், நீடிக்கப்பட்ட சட்ட இசைவுத்தாமத காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னதாக நீண்ட காலப்பகுதியில் கொடுகடன் வசதிகளை மறுசீரமைப்பதற்காக வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க திட்டமொன்றினை சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய திட்டங்கள் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களினால் ஒவ்வொரு விடயமாக ஆராய்ந்து மதிப்பீடு செய்யப்படும். இதற்கமைய, இச்சுற்றறிக்கையானது அனைத்து வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்கிடையேயும் ஒத்திருக்கின்ற விதத்தில் விடுக்கப்படுகிறது.

2020ஆம் ஆண்டின் 09ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் பின்வரும் ஏற்பாடுகள் திருத்தப்பட்டிருப்பதுடன் குறிப்பிட்ட சுற்றறிக்கையின் மற்றைய ஏற்பாடுகள் தொடர்ந்தும் மாற்றமின்றியிருக்கும்.

**1. பொதுவான நியதிகளும் நிபந்தனைகளும்**

(iii) படுகடன் சட்ட இசைவுத்தாமதம் 2021 ஏப்பிறல் 1 இலிருந்து 2021 செத்தெம்பர் 30 வரையான மேலுமொரு ஆறு மாத காலப்பகுதிக்கான மூலதனம் மற்றும் வட்டி இரண்டிற்குமான சட்ட இசைவுதாமதத்தினைக் குறிக்கிறது.

(iv) சட்ட இசைவுத்தாமதத்தினைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பும் தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் அத்தகைய சட்ட இசைவுத்தாமதத்தினைப் பெற எதிர்பார்த்திருப்பது பற்றி தொடர்பான வங்கியல்லா நிதியியல் நிறுவனத்திற்கு 2021 ஏப்பிறல் 19 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கோரிக்கையொன்றை விடுத்தல் வேண்டும். 2021 ஏப்பிறல் 19 இற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஏதேனும் கோரிக்கை தொடர்பில், அத்தகைய கோரிக்கையினைத் தாமதமாக செய்வதற்கான காரணங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியனவாக இருப்பின் அத்தகைய கோரிக்கையினை ஏற்றுக்கொள்ளுமாறு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் நியதிகளையும் நிபந்தனைகளையும் இறுதிப்படுத்திக் கொண்டு 2021 மே 31இற்கு முன்னதாக தகைமையுடைய கடன்பாட்டாளருடன் புதிய உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

(vii) 2020ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க மற்றும் 2020ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க விளக்கக்குறிப்பின்படி, வட்டியற்ற தவணைக் கடன் மீது சேரவேண்டிய தவணைப் பணம் (அதாவது 2020 ஏப்பிறல் 1 இலிருந்து 2020 செத்தெம்பர் 30 வரையான முதலாவது சட்ட இசைவுத் தாமத காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த வட்டி) மற்றும் 2020ஆம் ஆண்டின் 09ஆம் இலக்கச் சுற்றறிக்கையின்படி, மாற்றப்பட்ட தவணைக் கடன் மீது சேரவேண்டிய தவணைப் பணம் என்பனவற்றை அறவிடுமாறு வாடிக்கையாளர் கேட்டுக்கொள்கின்றவிடத்து 2021 ஒத்தோபர் 01 இலிருந்து தகைமையுடைய கடன்பாட்டாளர்களிடமிருந்து அறவிட்டுக் கொள்ளலாம்.

**2. படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினைச் சீரமைத்தல்**

(i) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் 2021 ஏப்பிறல் 1 இலிருந்து தொடங்கி 2021 செத்தெம்பர் 30 வரையான சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய மூலதனத்தினையும் வட்டியையும் தவணைக் கடனொன்றிற்கு மாற்றுதல் வேண்டும்.

(ii) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் அவ்வாறு மாற்றப்பட்ட கடன்களின் அறவிடலை, நீடிக்கப்பட்ட சட்ட இசைவுத்தாமத காலப்பகுதி முடிவடைந்ததும் தொடங்கலாம்.

(v) இச்சுற்றறிக்கையின் கீழ் கருத்திற் கொள்ளப்படும் கடன் வசதிகள் மீது 2021 ஏப்பிறல் 01இல் உள்ளவாறான ஒன்றுசேர்ந்த மற்றும் செலுத்தப்படாத தண்ட வட்டிகள் ஏதுமிருப்பின் அவற்றினை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் தள்ளுபடி செய்யலாம். சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் தண்ட வட்டி வீதங்களை விதிக்கவோ ஒன்றுசேர்க்கவோ கூடாது.

ஒப்பம்
பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள்** 2021 மாச்சு 31

**திரவச் சொத்துக்கள் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்**

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படுகிறது.

நாணயச் சபை கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் இரண்டாவது அலையின் நீண்ட காலத் தாக்கத்தின் காரணமாக ஏற்பட்ட தற்போதைய சவால்மிக்க சூழ்நிலையினைப் பரிசீலனையில் கொண்டு, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் திரவச் சொத்துக்கள் மீதான பணிப்புரைகளுக்குப் பின்வரும் திருத்தங்களை இத்தால் விடுத்திருக்கின்றது.

இதற்கமைய, 2020ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க நிதித்தொழில் சட்ட (திரவச் சொத்துக்கள் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்) பணிப்புரையின் 05ஆம் இலக்கப் பணிப்புரையினை பின்வருவன பதிலீடு செய்யும்.

5. செல்லுபடியாகும் காலம்

5.1 தற்போதைய சவால்மிக்க சூழ்நிலை காரணமாக திரவத்தன்மை மீதான அழுத்தத்தினை வெற்றி கொள்வதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு, பணிப்புரைகள் 2, 3 மற்றும் 4.1 என்பன 2021.06.30 வரையான நீடிக்கப்பட்டதொரு மூன்று (3) மாதங்களுக்கு நடைமுறையில் இருத்தல் வேண்டும்.

5.2 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், 2013ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (திரவச் சொத்துக்கள்) பணிப்புரையின் நியதிகளில், திரவச் சொத்துத் தேவைப்பாடுகள் மேலேயுள்ள 5.1இல் தரப்பட்டுள்ள நீடிப்பு முடிவடையும் போது இணங்கியொழுகப்படும் என்பதனை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான வழிமுறைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

ஒப்பம்
பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டப் பணிப்புரைகள்** 2021 மாச்சு 31

**திரவச் சொத்துக்கள் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்**

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் 34ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படுகிறது.

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் இரண்டாவது அலையின் நீண்ட காலத் தாக்கத்தின் காரணமாக ஏற்பட்ட தற்போதைய சவால்மிக்க சூழ்நிலையினைப் பரிசீலனையில் கொண்டு, 2020ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் (திரவச் சொத்துக்கள் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்) பணிப்புரைகளுக்கு பின்வரும் திருத்தங்களை இத்தால் விடுத்திருக்கின்றார்.

இதற்கமைய, 2020ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்ட (திரவச் சொத்துக்கள் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்) பணிப்புரையின் 02ஆம் இலக்கப் பணிப்புரையினைப் பின்வருவன பதிலீடு செய்யும்.

2. செல்லுபடியாகும் காலம்

2.1 தற்போதைய சவால்மிக்க சூழ்நிலை காரணமாக திரவத்தன்மை மீதான அழுத்தத்தினை வெற்றி கொள்வதற்கு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு, இப்பணிப்புரைகள் 2021.06.30 வரையான நீடிக்கப்பட்டதொரு மூன்று (3) மாதங்களுக்கு நடைமுறையில் இருத்தல் வேண்டும்.

2.2 சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள், 2012ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க நிதிக் குததகைக்குவிடுதல் (திரவச் சொத்துக்கள்) பணிப்புரையின் நியதிகளில், திரவச் சொத்துத் தேவைப்பாடுகள் மேலேயுள்ள 2.1இல் தரப்பட்டுள்ள நீடிப்பு முடிவடையும் போது இணங்கியொழுகப்படும் என்பதனை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான வழிமுறைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

ஜே டி எஸ் ஜே நாணயக்காரா
**பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின்**
**மேற்பார்வைத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி**

**2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள்** 2021 ஏப்பிறல் 09

**வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள்**

**1. சட்ட ஏற்பாடுகள்**

1.1 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவினால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில், நாணயச் சபை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் மீது இப்பணிப்புரையினை விடுக்கிறது.

**2. இப்பணிப்புரைகளின் குறிக்கோள்கள்**

2.1 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறையின் வெளிநாட்டு நிதியிடல் பாதிப்புக்களுக்குள்ளாகும் தன்மையினால் உருவாகக்கூடிய நாட்டின் ஏதேனும் தேவையற்ற பேரண்டப் பொருளாதாரம் மற்றும் நிதியியல் துறை தளம்பல்களை உறுதிப்படுத்தல்.

2.2 வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் பாதிப்புக்களுக்குள்ளாகும் தன்மை தொடர்பில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்காக இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பொன்றினை வழங்குதல்

**3. ஏற்புடைத்தன்மை மற்றும் செயற்பரப்பு**

3.1 இப்பணிப்புரைகள் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் மேற்கொள்ளப்படும் அனைத்து வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளுக்கும் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

**4. பணிப்பாளர் சபையின் பொறுப்பாண்மை**

4.1 உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றின் அனைத்து வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளும் கடன்பாடுகளின் சிக்கனத்தன்மை, செலவு நன்மைகள் பகுப்பாய்வு மற்றும் போதுமான இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகள் என்பன பணிப்பாளர் சபையினால் மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்படல் வேண்டும்.

4.2 பணிப்பாளர் சபை, சபை ஒப்புதலளித்த முன்மதியுடைய வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகளையும் நடவடிக்கை முறைகளையும் நிறுவுதல் வேண்டும் என்பதுடன் அவை நடைமுறைப்படுத்தப்படுவதனை மேற்பார்வை செய்தலும் வேண்டும்.

5. காலம்

5.1 வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் 2 ஆண்டுகள் அல்லது அதற்கும் கூடுதலான முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**6. வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் மீதான வரையறைகள்**

6.1 குறிப்பிட்டதொரு நேரத்தில், உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றினால் கடன்பட்ட வெளிநாட்டு நாணயத்தின் உயர்ந்தபட்ச வெளிநின்ற தொகை அதன் மொத்தச் சொத்துக்களின் சதவீதமொன்றாகத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

6.2 உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் சதவீதம் கீழேயுள்ள அட்டவணை 1இல் ஒவ்வொரு மட்டத்திற்குமாக வழங்கப்பட்டுள்ள பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

**அட்டவணை 1: வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் வரையறைகள், பிரமாணம் மற்றும் தேவையான ஒப்புதல்**

| மட்டம் | பிரமாணம் | மொத்தச் சொத்தின் சதவீதமாக வரையறை | தேவைப்படும் ஒப்புதல் |
|---|---|---|---|
| 1 | கடன்படும் நேரத்தில் பிரிவு 8.2இல் குறித்துரைக்கப்பட்ட முன்மதியுடைய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் | 10.0 | கடன்பாட்டிற்கு முன்னரும் பின்னரும் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும். |
| 2 | i. மட்டம் 1இல் உள்ள பிரமாணத்தினைப் பூர்த்தி செய்தல்<br>ii. குறைந்தபட்ச மூலதனப் போதுமைத் தேவைப்பாட்டிற்குப் புறம்பாக 1 சதவீதம் கொண்ட மூலதனப் பாதுகாப்பு தாங்கிருப்பினைப் பேணுதல், அத்துடன்<br>iii. முதலீட்டுத் தரம் (BBB-) மற்றும் அதற்கு மேற்பட்ட வெளியிடத்தக்க கொடுகடன் தரமிடல் | 10.0 இற்கு மேல் - 15.0 | பணிப்பாளரின் முன்னொப்புதல் |
| 3 | i. மட்டம் 2இல் உள்ள பிரமாணத்தினைப் பூர்த்தி செய்தல்<br>ii. அத்தகைய கடன்பாடுகள் பிணையிடப்படாதனவாகவும் வைப்பாளர்களின் கோரலுக்கு கீழ்நிலைப்பட்டனவாகவும் இருத்தல், அத்துடன்<br>iii. அத்தகைய கடன்பாடுகள் ஏற்றுமதிகள், இறக்குமதிப் பதிலீடுகள், அரச அபிவிருத்திச் செயற்றிட்டங்கள், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள், வெளிநாட்டு வருமானத்தினை உருவாக்குகின்ற செயற்றிட்டங்கள், நாணயச் சபையினால் முன்னுரிமைத் துறை எனக் கருதப்படக்கூடிய ஏதேனும் வேறு துறைகளின் அபிவிருத்தி நோக்கங்களுக்கான கடன்வழங்கல்/ முதலீடுகளுக்குத் தனியாகப் பயன்படுத்தப்படுதல் | 15.0 இற்கு மேல் - 20.0 | நாணயச் சபையின் முன்னொப்புதல் |

**7. ஒப்புதலுக்கான தேவைப்பாடுகள்**

7.1 மேலே, 6ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான மட்டங்களின் மீது வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளுக்கான ஒப்புதல்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதேனும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனி பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்து கொள்ளுதல் வேண்டும்.

i. மட்டம் 1 -

அ. உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட ஒப்புதல், கால விபரங்கள், வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் வாய்ப்பு விபரணங்கள் பற்றிய விபரங்கள் மற்றும் ஏனைய தொடர்பான விபரங்கள் என்பனவற்றின் வசதிகளை பெற்றுக்கொள்வதற்கு முன்னதாக பணிப்பாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்; அத்துடன்

ஆ. கடன்பாடுகள் பெறப்பட்டதன் பின்னர் 3 வேலை நாட்களுக்குள் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் விபரங்கள் மற்றும் வங்கி உறுதிப்படுத்தல் பற்றி பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

ii. மட்டம் 2 - உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட ஒப்புதல், வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் எதிர்கால வாய்ப்பு விபரங்கள் மற்றும் ஏனைய தொடர்பான விபரங்கள் என்பனவற்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் பணிப்பாளரின் எழுத்து மூலமான முன்னொப்புதலைப் பெற்றுக்கொள்ளல்.

iii. மட்டம் 3 - உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட ஒப்புதல், வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் எதிர்கால வாய்ப்பு விபரங்கள் மற்றும் ஏனைய தொடர்பான விபரங்கள் என்பனவற்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் நாணயச் சபையின் எழுத்து மூலமான முன்னொப்புதலைப் பெற்றுக்கொள்ளல்.

7.2 விடயத்தினைப் பொறுத்து, பணிப்பாளரினால் அல்லது நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளை அத்தகைய ஒப்புதல் திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

**8 ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள்**

8.1 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் பெறப்படும் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்புடைத்தான ஏற்பாடுகள் மற்றும் அதன் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்/ ஒழுங்குவிதிகள் என்பனவற்றுடன் இணங்கிக் கொள்வதாக இருத்தல் வேண்டும்.

8.2 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் குறைந்தபட்ச மூலதனப் போதுமை விகிதங்கள், குறைந்தபட்ச மைய மூலதனம் மற்றும் திரவச் சொத்துக்கள் என்பன மீதான பணிப்புரைகள் உட்பட, ஆனால் அவற்றுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிராத விதத்தில், முன்மதியுடைய தேவைப்பாடுகளுக்கும் இணங்கியொழுகுவதாக இருத்தல் வேண்டும்.

8.3 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளை, இணைத்தரப்பினருடன் செய்துகொண்ட கடன் உடன்படிக்கைகளில் தரப்பட்டுள்ள நோக்கத்திற்கு (நோக்கங்கள்) மட்டுமே கட்டாயமாகப் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

8.4 உரிமம்பெற்ற நிதிக் கம்பனி, இலங்கை மத்திய வங்கியில் தற்பொழுது காணப்படும் பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கைகளுக்கான வழிகாட்டல்களுக்கிணங்க, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினூடாக இலங்கை மத்திய வங்கியுடன் நாணயப் பரஸ்பர பரிமாற்றல் முறையினைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் வெளிநாட்டு நாணயக் கடன்பெறுகைகளின் வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்விலிருந்து கட்டுக்காப்பொன்றினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். மேலும், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் பொருத்தமான சந்தைப் பெறுமதிச் சாதனங்களைப் பயன்படுத்துவதன் மூலமும் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் போன்றவற்றிலிருந்து தோன்றுகின்ற வட்டி வீத இடர்நேர்வுகளை முகாமைப்படுத்திக் கொள்வதன் மூலமும் வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வுகளைப் பொருத்தமான விதத்தில் கட்டுக்காப்பு செய்துகொள்ளுதல் வேண்டும்.

8.5 வட்டி வீதம், கட்டுக்காப்புச் செலவு மற்றும் கடன்பாடுகள் தொடர்பான அனைத்துச் செலவுகளையும் உள்ளடக்கிய மொத்தக் கடன்பாட்டுச் செலவுகள், வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் தொடர்பான பணிப்புரை அல்லது அது தொடர்பான ஏதேனும் திருத்தங்கள் தொடர்பில் உயர்ந்தபட்ச வட்டி வீதங்களில் தரப்பட்டுள்ள படுகடன் சாதனங்களுக்காக குறித்துரைக்கப்பட்டுள்ள உச்ச வட்டி வீதங்களை விடக் குறைவாக இருத்தல் வேண்டும்.

**9. இடைக்கால ஏற்பாடுகள்**

இப்பணிப்புரைகளின் திகதியிலுள்ளவாறு ஏதேனும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்று பெற்றுக்கொண்ட வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் மேலேயுள்ள 6ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான உயர்ந்தபட்ச வரையறைகளுக்கு மேலதிகமாக பெற்றுக் கொண்டவற்றை தற்போதுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க தீர்த்துக் கொள்வதற்கு அனுமதிக்கப்படுகின்றன.

**10. பொருள்கோடல்**

10.1 'வெளிநாட்டு நாணயம்' என்பது குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம் எனப் பொருள் கொள்ளப்படல் வேண்டும்.

10.2 'பணிப்பாளர்' என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் எனப் பொருள்படும்.

10.3 'மொத்தச் சொத்துக்கள்' என்பது இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த நிதியியல் கூற்றுக்கள் அல்லது உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் வெளிவாரிக் கணக்காய்வாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட இடைக்கால நிதியியல் கூற்றுக்களின்படியான தொகை எனப் பொருள்படல் வேண்டும்.

ஒப்பம்
பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2021ஆம் ஆண்டின் 06ஆம் இலக்கச் சுற்றறிக்கை** 2021 யூன் 09

**கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான சலுகைகள்**

இலங்கையில் கொவிட்-19இன் மூன்றாவது அலையின் தோற்றத்துடன் தொடர்பான கரிசனைக்குரிய தரப்பினர்களிடமிருந்தும் அரச அதிகாரிகளிடமிருந்தும் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்கள்/ வாடிக்கையாளர்களுக்கும் குறிப்பிட்ட சலுகைகள் வழங்குமாறு இலங்கை மத்திய வங்கியிடம் பல கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. இதற்கமைய கொவிட்-19இன் மூன்றாவது அலை காரணமாக வியாபாரங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் எதிர்நோக்கப்பட்ட சவால்களை ஈடுசெய்யும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கி கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் பின்வரும் சலுகைகளை (இதனகத்துப் பின்னர் திட்டம் எனக் குறிப்பிடப்படும்) வழங்குமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளையும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளையும் (இதனகத்துப் பின்னர் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் எனக் குறிப்பிடப்படும்) கேட்டுக் கொள்கின்றது. மேலும், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் கொவிட்-19இன் மூன்றாவது அலையின் காரணமாக பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் அவர்களது கோரிக்கையின் மீது மேலதிக சலுகைகளை, இச்சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்படும் நன்மைகளிலும் பார்க்க குறையாத விதத்தில் ஒட்டுமொத்த நன்மைகளாக வழங்கலாம். இதற்கமைய வியாபாரங்கள்/ வருமான

உருவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட தற்போதைய இடையூறுகளினால் பாதிக்கப்பட்ட வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் கடன்பாட்டாளர்கள் அவர்களது கடன்களை உரிய முறையில் திருப்பிச் செலுத்தும் விதத்தில் அவர்கள் மீதான சுமையினைத் தளர்த்தும் நோக்குடன் அனைத்து வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களிடையேயும் இத்திட்டம் ஒத்திருக்கின்றவாறு இச்சுற்றிக்கை விடுக்கப்படுகிறது.

**1. 2021 மே 15ஆம் நாளன்று செயற்படும் வகையில் காணப்படும் தற்போதுள்ள கொடுகடன் வசதிகளைப் பிற்போடுதல் அல்லது மறுசீரமைத்தல்**

(அ) கொவிட்-19இன் மூன்றாவது அலையினால் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களின் தற்போதுள்ள கொடுகடன் வசதிகளின் மூலதனம், வட்டி அல்லது இரண்டினையும் அறவிடுவதனை 2021 ஓகத்து 31 வரையான காலப்பகுதியில், வேலையிழப்பு, வருமானம்/ சம்பளங்கள் அல்லது விற்பனைகளில் ஏற்பட்ட குறைப்பு, வியாபாரம் மூடப்பட்டமை போன்ற தகைமையுடைய கடன்பாட்டாளர்களினால் எதிர்நோக்கப்பட்ட நிதியியல் இடர்ப்பாடுகளைப் பரிசீலனையில் கொண்டு, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் ஒவ்வொரு விடயங்களாக ஆராய்ந்து பிற்போடுதல் வேண்டும்.

(ஆ) தகைமையுடைய கடன்பாட்டாளர்களின் நிதியியல் இடர்ப்பாடுகள் மற்றும் மீள்கொடுப்பனவு இயலாற்றல் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு வழங்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கும் கூடுதலான தற்போதுள்ள கொடுகடன் வசதிகளுக்கு மூலதனம், வட்டி அல்லது இரண்டினையும் பிற்போடும் வசதியை வழங்குதல் வேண்டும்.

(இ) மேற்குறிப்பிட்ட பிற்போடலுக்காகப் பரிசீலனையில் கொள்ளப்பட்ட வசதிகளைப் பொறுத்தவரையில், பிற்போடப்பட்ட காலப்பகுதிக்காக 2021 மே 19ஆம் நாளன்று உள்ளவாறான 364 நாள் திறைசேரி உண்டியலின் ஏல வீதத்துடன் ஆண்டிற்கு 5.5 சதவீதத்தினைக் கூட்டிய வீதத்தினை விஞ்சாத விதத்தில் (அதாவது 5.18 சதவீதம் + 5.5 சதவீதம் = ஆண்டிற்கு 10.68 சதவீதம்) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் வட்டி வீதமொன்றினை விதிக்கலாம் என்பதுடன் பிற்போடப்பட்ட தொகைக்கு மாத்திரமே அவ்வாறு விதிக்கலாம்.

(ஈ) மாற்று ஏற்பாடொன்றாக, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் கடன்பாட்டாளரின் மீள்கொடுப்பனவு இயலாற்றலையும் ஏற்றுக்கொள்ளத்தக்க மீளெழுச்சித் திட்டத்தினையும் பரிசீலனையில் கொண்டு தற்போதுள்ள கொடுகடன் வசதிகளை நீண்ட காலப்பகுதியொன்றிற்கு மறுசீரமைத்துக் கொள்ளலாம். இவ்விடயத்தில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களும் கடன்பாட்டாளரும் தற்போது நிலவுகின்ற குறைந்த வட்டி வீதங்களைப் பரிசீலனையில் கொண்டு வட்டி வீதமொன்றிற்கு இணங்கிக் கொள்ளலாம்.

(உ) சலுகைக் காலத்தில் அதாவது 2021 மே 15 இலிருந்து 2021 ஓகத்து 31 வரையான காலப்பகுதியில் தண்ட வீதங்கள் ஒன்றுசேர்க்கப்படவோ அல்லது விதிக்கப்படவோ கூடாது.

(ஊ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், தற்பொழுது காணப்படும் பயணத் தடைகள் காரணமாக பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளரிடமிருந்து கடன்களின் மீள்கொடுப்பனவுகளை ஒரு சில நாட்களினால் (உயர்ந்தபட்சம் 10 வேலைநாட்கள்) தாமதிக்குமாறு விடுக்கப்படும் கோரிக்கைகளை, அத்தகைய வசதிகளைப் பிற்போடாமல் அல்லது மறுசீரமைப்புச் செய்யாமல் அனுமதிக்கலாம். வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் அத்தகைய தாமதத்திற்காக மேலதிக வட்டியையோ அல்லது வேறு ஏதேனும் விதிப்புக்களையோ அறவிடக்கூடாது.

(ஏ) 2021 மாச்சு 12ஆம் திகதியில் விடுக்கப்பட்ட 2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழ் குத்தகை மீள்கொடுப்பனவுகளைப் பிற்போடும் வசதி அல்லது 2021 மாச்சு 19ஆம் திகதியில் விடுக்கப்பட்ட 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழான சட்ட இசைவுத்தாமதம் என்பவற்றைத் தற்பொழுது அனுபவிக்கின்ற கடன்பாட்டாளர்கள் மேலே வழங்கப்படும் சலுகைகளுக்கு தகைமையுடையவராகார்.

**2. 2021 மே 15ஆம் நாளன்று செயற்படா வகையிலுள்ள கொடுகடன் வசதிகளுக்கான சலுகைகள்**

(அ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் 2021 மே 15ஆம் நாளன்று உள்ளவாறான தற்போதுள்ள செயற்படாக் கடன் வசதிகள், கடன்பாட்டாளரின் மீள்கொடுப்பனவு இயலாற்றல் மற்றும் ஏற்றுக்கொள்ளத்தக்க மீளெழுச்சித் திட்டம் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு நீண்ட காலப்பகுதிக்கு மீள்அட்டவணைப்படுத்தலாம். இவ்விடயத்தில், வங்கியல்லா நிதியியல் நிறுவனமும் கடன்பாட்டாளரும் வட்டி வீதம் உட்பட நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்குதல் வேண்டும்.

(ஆ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், 2020 ஏப்பிறல் 1ஆம் நாளிலிருந்து 2021 மே 15ஆம் நாள் வரையான காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த அல்லது விதிக்கப்பட்ட தண்ட வட்டி வீதங்களை, அத்தகைய வசதிகள் இத்திட்டத்தின் கீழ் மேலே 2(அ)இல் குறித்துரைக்கப்பட்டவாறு மீள்அட்டவணைப்படுத்தலின் பொருட்டு பரிசீலனைக்கு கொள்ளப்பட்டுள்ளன என்ற நிபந்தனைக்குட்பட்டு தள்ளுபடி செய்ய வேண்டும்.

(இ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் 2020 ஏப்பிறல் 01 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ செயற்படாக் கடனாக வகைப்படுத்தப்பட்டிருக்கும் கொடுகடன் வசதிகளுக்கெதிராக 2021 ஓகத்து 31 வரை அனைத்து வகையான அறவிடல் நடவடிக்கைகளையும் இடைநிறுத்துதல் வேண்டும்.

(ஈ) சலுகைகளை வழங்குவது தொடர்பில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மிகையான கட்டணங்களையோ விதிப்புக்களையோ

விதிக்கக்கூடாது.

3. **வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், வெளிப்படையாகவே பாதிக்கப்பட்டவர்களுக்காக கொடுகடன் அட்டைகள் மற்றும் ஏனைய கொடுகடன் வசதிகள் மீதான பிந்திய கொடுப்பனவுகளுக்கான கட்டணத்தினை 2021 யூன் 30 வரையான காலப்பகுதியில் நிறுத்துதல் வேண்டும்.**

4. **வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், இச்சுற்றறிக்கையின் கீழ் கடன்பாட்டாளர் தற்போதுள்ள கொடுகடன் வசதியை/ வசதிகளைப் பிற்போடுவது அல்லது மறுசீரமைப்பதற்கான தேர்விற்குப் பதிலாக 2021 ஓகத்து 31 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அவரின்/ அவளின் தற்போதைய கொடுகடன் வசதிகளைத் தீர்ப்பனவு செய்வதற்கான அவரின் விருப்பத்தினைத் தெரிவிக்குமிடத்து, அவ்விடயத்தில் நேரகாலத்துடனான தீர்ப்பனவிற்கான கட்டணத்தினை விதிக்கக்கூடாது.**

5. **இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்திற்கு அறிக்கையிடுதல்**

(அ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், இத்திட்டத்தின் கீழ், தகைமையுடைய கடன்பாட்டாளர்களிடமிருந்தான கடன் விண்ணப்பங்களை கொடுகடன் தகவல் பணியகத்தின் மோசமான பதிவேடுகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு நிராகரிக்கக்கூடாது.

(ஆ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், கொடுகடன் தகவல் பணியகத்தின் ஆலோசனையுடன் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பிற்போடல்/ மறுசீரமைத்தல் அறிக்கை தொடர்பில் அறிக்கையிடுகின்ற மாதிரியொன்றினைத் தயாரித்தல் வேண்டும். இதன் மூலம் இத்திட்டத்தில் பங்கேற்பது, எதிர்காலத்தில் கடன்பாட்டாளரின் கொடுகடன் மதிப்பெண்ணின் மீது தாக்கத்தினையோ அல்லது எதிர்காலக் கொடுகடன் தகவல் பணியகத்தின் எதிர்கால அறிக்கைகள் எதிர்மறையான தன்மையினைப் பிரதிபலிக்கவோமாட்டாது.

6. **கோரிக்கையினைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி**

(அ) தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் 2021 யூலை 15 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ எழுத்து மூலமாக அல்லது இலத்திரனியல் வழிமுறையூடாக மேற்குறிப்பிட்ட சலுகைகளுக்கான கோரிக்கையினை விடுத்தல் வேண்டும். வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் அனைத்து தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கு அச்சு அத்துடன் அல்லது மின்னஞ்சல் மற்றும் குறுஞ்செய்தி உட்பட இலத்திரனியல் ஊடகங்களூடாக சலுகைகள், இறுதித் திகதி, சமர்ப்பிப்பதற்கான விண்ணப்பப் படிவம் என்பன பற்றி விரைவாக தொடர்பூட்டுதல் வேண்டும்.

(ஆ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் 2021 யூலை 15இற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கையினையும் அத்தகைய கோரிக்கை தாமதமாக செய்யப்படுவதற்கான காரணங்களை ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருப்பின் ஏற்றுக்கொள்ளலாம்.

(இ) கடன் மீள்கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்வதற்கான இயலாற்றலைக் கொண்டுள்ள எவரேனும் தகைமையுடைய கடன்பாட்டாளர் கொடுகடன் வசதிகளைப் பிற்போடுவதற்கான அல்லது மறுசீரமைத்தலுக்கான கோரிக்கைக்குப் பதிலாக, அத்தகைய கடன்களை மீள்கொடுப்பனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றார்.

(ஈ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் கொடுகடன் வசதிகளைப் பிற்போடுவது அல்லது மறுசீரமைப்பது தொடர்பில் கடன்பாட்டாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது என்பதனை ஒப்புதலளிப்பதற்கு முன்னர் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். கோரிக்கையினை நிராகரிப்பது தொடர்பில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் அத்தகைய நிராகரிப்பதற்கான காரணங்களைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

7. **சட்ட இசைவுத்தாமதம் தொடர்பான கணக்கீட்டுப் பரிசீலனைகள்**

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சலுகைகளுக்கான கணக்குகளை இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படியும் 2020 திசெம்பர் 31ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் கீழ், இலங்கை மத்திய வங்கியினால், வழங்கப்பட்ட மேலதிக வழிகாட்டல்களுக்கு இணங்கவும் கணக்கீடு செய்யவேண்டும். இது தொடர்பில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்கு மேலதிக வழிகாட்டல்கள்/ தெளிவுபடுத்தல்கள் தேவைப்படுமிடத்து இலங்கை பட்டயம்பெற்ற கணக்காளர்களையும் மற்றும் கணக்காய்வாளர்களையும் நாடலாம்.

8. **அறிக்கையிடும் தேவைப்பாடு**

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் கடன்பாட்டாளர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சலுகைகளின் விபரங்களை 2021 யூலை 30ஆம் நாளிலிருந்து ஒவ்வொரு மாதமும் அம்மாதத்தின் 30ஆம் திகதியிலுள்ளவாறு 15 வேலை நாட்களுக்குள் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும். அறிக்கையிடுகின்ற படிவம் காலக்கிரமத்தில் சுற்றோட்டப்படுத்தப்படும்.

ஒப்பம்
பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் மற்றும் பதிவுசெய்யப்பட்ட பங்கு மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டப் பணிப்புரைகள்** 2021 யூலை 09

**முதனிலை வணிகர் கம்பனிகளின் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடு**

2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்குவிதிகளின் 11(1) உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய ஒழுங்குவிதிகள் 6(1) இனால், அல்லது திருத்தப்பட்டவாறான 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்குவிதிகளின் 11(1) உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய ஒழுங்குவிதிகள் 6(1) இனால், அல்லது திருத்தப்பட்டவாறான 1923ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் 1937ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நிதியமைச்சரினால் முறையே வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில், நாணயச் சபை முதனிலை வணிகர் முறைமையின் ஆற்றல்வாய்ந்த தன்மையினையும் உறுதிப்பாட்டினையும் கருத்திற்கொண்டு முதனிலை வணிகர் கம்பனிகளின் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளின் மீது பின்வரும் பணிப்புரைகளை விடுக்கின்றது.

1. **உள்நாட்டு திறைசேரி உண்டியல் (முதனிலை வணிகர்) ஒழுங்குவிதிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்குவிதிகளின் கீழான அதிகாரவளிப்பு**

1.1 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்குவிதிகளின் 11(1) ஆம் இலக்க ஒழுங்குவிதி, அல்லது திருத்தப்பட்டவாறான மற்றும் 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்குவிதிகளின் 11(1) இலக்க ஒழுங்குவிதிகள், அல்லது திருத்தப்பட்டவாறான நியதிகளில், முதனிலை வணிகர்களின் மூலதனம், ஒதுக்குகள் மூலதனப் போதுமை மற்றும் ஏனைய முன்மதியுடைய மற்றும் தொழிற்பாட்டு தேவைப்பாடுகளின் மீதான பணிப்புரைகள் உட்பட, ஒழுங்குவிதிகளுடன் இணங்கிச் செல்வதனை உறுதிப்படுத்துவதற்காக மத்திய வங்கி முதனிலை வணிகர்களுக்கு பணிப்புரைகளை விடுக்கலாம்

1.2 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்குவிதிகளின் 6(1) ஆம் இலக்க ஒழுங்குவிதி, அல்லது திருத்தப்பட்டவாறான மற்றும் 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்குவிதிகளின் 6(1)ஆம் இலக்க ஒழுங்குவிதி, அல்லது திருத்தப்பட்டவாறான நியதிகளில் நாணயச் சபை முதனிலை வணிகர்களின் ஆற்றல்வாயந்த தன்மை மற்றும் உறுதிப்பாடு என்பனவற்றை கருத்திற்கொண்டு நாணயச் சபை முதனிலை வணிகர் கம்பனியொன்றினால் பேணப்படவேண்டிய மூலதனத்தினை தீர்மானிக்கலாம் என்பதுடன் அத்தகைய தீர்மானம் காலத்திற்குக் காலம் வேறுபடலாம்.

2. **குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகள்**

2.1 ஒவ்வொரு முதனிலை வணிகர் கம்பனியும், எல்லா நேரங்களிலும் 2021.12.31 வரை ரூ.1.0 பில்லியனுக்கும் குறையாத மட்டத்தில் மைய மூலதனத்தினை பேணவேண்டியதுடன் அதன் பின்னர் அத்தகைய மூலதனத்தினை தொடர்பான திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் கீழேயுள்ள அட்டவணை 1இல் குறித்துரைக்கப்பட்டவாறான தொகைக்கு குறையாததொரு மட்டத்தில் பேணுதல் வேண்டும்.

**அட்டவணை 1: முதனிலை வணிகர்கள் கம்பனிகளுக்கான குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகள்**

| நடைமுறைக்குவரும் திகதி | தொகை (ரூ.பில்லியன்) |
|---|---|
| 2022.01.01 | 2.0 |
| 2023.01.01 | 2.5 |

3. **சிறப்பு இடர்நேர்வு ஒதுக்கு**

3.1 முதனிலை வணிகர் கம்பனியினதும் முதனிலை வணிகர் முறைமையினதும் பாதுகாப்பு, ஆற்றல்வாய்ந்த தன்மை மற்றும் உறுதிப்பாடு என்பனவற்றை மேம்படுத்தும் பொருட்டும் முதனிலை வணிகர் கம்பனியின் மூலதனத் தளத்தினைக் கட்டியெழுப்புவதற்காகவும் ஒவ்வொரு முதனிலை வணிகர் கம்பனியும், எல்லா நேரங்களிலும் சிறப்பு இடர்நேர்வு ஒதுக்கொன்றினைப் பேணுதல் வேண்டும்.

3.2 ஒவ்வொரு முதனிலை வணிகர் கம்பனியும் ஒவ்வொரு நிதியியல் ஆண்டும் கணக்காய்வு செய்யப்பட்ட (வரிக்குப்பின்னர்) இலாபத்திலிருந்து சிறப்பு இடர்நேர்வு ஒதுக்கிற்கு அத்தகைய இலாபத்தில் 10 சதவீதத்திற்கும் குறையாததொரு தொகையினை மாற்றல் செய்தல் வேண்டும்.

3.3 மேலேயுள்ள பணிப்புரை 3.2இல் எதுஎவ்வாறிருப்பினும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைப் பணிப்பாளர், எந்தவொரு நேரத்திலும் முதனிலை வணிகர் கம்பனியினை பணிப்புரை 3.2 இனால் தேவைப்படுத்தப்பட்ட தொகையினைவிட உயர்வான தொகையொன்றினை மாற்றல் செய்யுமாறு கேட்டுக்கொள்ளலாம்.

3.4 முதனிலை வணிகர் கம்பனி வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைப் பணிப்பாளருக்குச் செய்யப்பட்ட

விண்ணப்பத்தினை அடுத்து, முதனிலை வணிகர் கம்பனியின் செயலாற்றம், மூலதன நிலைமை மற்றும் இடர்நேர்வுத் தோற்றப்பாடு மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் அவசியமானது எனக் கருதுகின்றவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு, பணிப்புரை 3.2இன் மூலம் தேவைப்படுத்தப்பட்ட தொகையிலும்பார்க்க குறைந்த தொகையொன்றினை மாற்றல் செய்வதற்கு அல்லது சிறப்பு இடர்நேர்வு ஒதுக்கினைக் குறைப்பதற்கு அனுமதிக்கலாம்.

4. மூலதன மதிப்பீடு மற்றும் திட்டமிடல் செய்முறை

4.1 ஒவ்வொரு முதனிலை வணிகர் கம்பனியும் ஆற்றல்வாய்ந்த மூலதன மதிப்பீட்டுச் செய்முறையொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும். இது, மூலதனத்தின் மட்டத்தினையும் அனைத்து பொருண்மிய ரீதியான இடர்நேர்வுகளுக்கெதிராகவும் பேணப்படவேண்டிய தாங்கிருப்பொன்றினையும் தீர்மானிப்பதுடன் வழமையான மற்றும் அழுத்த நிலைமைகளின் கீழ் இதனை நம்பகமான முறையாக அளவிடவும் முடியும்.

4.2 ஒவ்வொரு முதனிலை வணிகர் கம்பனியும் கம்பனியின் உபாயங்கள், இடர்நேர்வுத் தோற்றப்பாடு, மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடு என்பனவற்றுடன் இசைந்துசெல்லும் விதத்தில் நடைமுறை மற்றும் எதிர்கால மூலதனத் தேவைப்பாடுகளை எவ்வாறான விதத்தில் பூர்த்திசெய்வது என கம்பனி எண்ணியுள்ளது என்பதனை குறித்துரைக்கின்ற, குறைந்தபட்சம் மூன்றாண்டுகளுக்காக பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட காலவரையறையுடன் கூடிய மூலதனத் திட்டத்தினை அபிவிருத்தி செய்தல் வேண்டும். அத்தகைய திட்டம் எதிர்கால விரிவாக்கங்கள், நிதியங்களின் ஏனைய மூலங்கள் பகிர்ந்தளிப்புக் கொள்கைகள் மற்றும் சாத்தியமான நிச்சயமற்ற தன்மைகள் என்பனவற்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

4.3 இப்பணிப்புரைகள் நடைமுறைக்குவரும் திகதியன்று அல்லது அதன் பின்னர் எந்தவொரு நேரத்திலும் முதனிலை வணிகர் கம்பனியொன்று பேணுகின்ற மைய மூலதனம் ரூ.2.5 பில்லியனுக்கும் குறைவான மட்டத்தில் காணப்படுமிடத்தும் அத்துடன் அத்தகைய பற்றாக்குறை 3 மாதங்களுக்கும் கூடுதலான காலப்பகுதிக்கு தொடர்ந்தும் காணப்படுமிடத்தும், அத்தகைய கம்பனியானது மேலேயுள்ள பணிப்புரை 2.1இல் குறித்துரைக்கப்பட்டவாறான குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் 3 மாதங்களுக்குள் மூலதனத்தினை பெருக்குவதற்கான காலவரையறையுடன் கூடிய, திட்டமொன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் இது, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரினால் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும் இருத்தல் வேண்டும்.

5. பகிர்ந்தளிப்புக்கள்

5.1 ஒவ்வொரு முதனிலை வணிகர் கம்பனியும் அதன் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறு அதன் வருவாய்களை பகிர்ந்தளிப்புச் செய்வதற்கான பிரமாணங்களை குறித்துரைக்கின்ற பகிர்ந்தளிப்புக் கொள்கையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5.2 பகிர்ந்தளிப்புக்களை மேற்கொள்வதற்கு முன்னர், முதனிலை வணிகர் கம்பனியொன்று அத்தகைய பகிர்ந்தளிப்பு தொடர்பில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு தெரியப்படுத்தல் வேண்டும் என்பதுடன் பகிர்ந்தளிப்பு பின்வரும் சூழ்நிலைகளின் கீழ் இடம்பெறும் போது வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் திணைக்களத்தின் பணிப்பாளரது எழுத்துமூலமான முன் ஒப்புதல் தேவைப்படுத்தப்படுகிறது.

(i) காலப்பகுதிக்கான ஒன்றுசேர்ந்த பகிர்ந்தளிப்புக்களைப் பொறுத்தவரை அத்தகைய பகிர்ந்தளிப்பு (உத்தேச பகிர்ந்தளிப்பு உட்பட) குறிப்பிட்ட காலப்பகுதிக்கான இலாபத்தினை (வரிக்குப்பின்னர்) விஞ்சுவதுடன் தொடர்பானதாக அல்லது கிடைக்கத்தக்கதாகவுள்ள பிந்திய நிதியியல் கூற்றுக்களின்படி முதனிலை வணிகர் கம்பனிக்கு இக்காலப்பகுதிக்காக ஒன்றுசேர்ந்த இழப்புக்களை ஏற்படுத்துவதாக இருக்குமிடத்து; அல்லது

(ii) முன்னைய நிதியியல் ஆண்டுகளின் வருவாய்களைப் பயன்படுத்தி தேவையான பகிர்ந்தளிப்புக்களை மேற்கொள்ளுமிடத்து; அல்லது

(iii) முன்னைய நிதியியல் ஆண்டுகளின் ஒன்றுசேர்ந்த வருவாய்கள் உத்தேச பகிர்ந்தளிப்புக்களுக்கு முன்னர் அல்லது பின்னர் எதிர்க்கணியமாக தொடர்ந்துமிருக்குமிடத்து; அல்லது

(iv) உத்தேச பகிர்ந்தளிப்புக்களின் பின்னர் அல்லது முன்னர் மைய மூலதனம் ரூ.2.5 பில்லியனுக்கும் கீழே தொடர்ந்துமிருக்குமிடத்து.

5.3 முதனிலை வணிகர் கம்பனி இடைக்காலமொன்றிற்கு பகிர்ந்தளிப்புக்களை மேற்கொள்வதற்கு, அல்லது, வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் கிடைப்பதற்கு முன்னர் பகிர்ந்தளிப்புக்களை மேற்கொள்ள தீர்மானிக்குமிடத்து கம்பனியானது இதன் பிந்திய கிடைக்கத்தக்க நிதியியல் கூற்றுக்களின்படி, அத்தகைய பகிர்ந்தளிப்புக்கள் தொடர்பான இலாபத்தின் (வரிக்குப் பின்னர்) அடிப்படையில் மேலேயுள்ள பணிப்புரைகள் 3.2, 3.3 மற்றும் 3.4 இனால் தேவைப்படுத்தப்பட்ட தொகைக்குக் குறையாத தொகையொன்றினை அது கொண்டிருப்பதனை ஏற்புடைத்தான விதத்தில் உறுதிப்படுத்தல் வேண்டும்.

5.4 முதனிலை வணிகர் கம்பனியொன்று மேலேயுள்ள பணிப்புரை 2.1 இல் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச மூலதனத்

தேவைப்பாடுகளுடன் அல்லது, பகிர்ந்தளிப்புடன் தொடர்பான காலப்பகுதியின் இறுதியிலுள்ளவாறு குறைந்தபட்ச இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதத்துடன் இணங்கியொழுகத் தவறுமிடத்து அல்லது முதனிலை வணிகர் கம்பனி உத்தேச பகிர்ந்தளிப்பின் பின்னர் சொல்லப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத்தவறுமிடத்து, அத்தகைய முதனிலை வணிகர் கம்பனி அத்தகைய இணங்குவிப்பு மேற்கொள்ளப்பட்டு அது வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரினால் உறுதிப்படுத்தப்படும் வரை அத்தகைய முதனிலை வணிகர் கம்பனி எந்தவொரு பகிர்ந்தளிப்புக்களையும் மேற்கொள்ளக்கூடாது.

5.5 முதனிலை வணிகர் கம்பனியின் பகிர்ந்தளிப்புக்கள் தொடர்பில், முதனிலை வணிகர் கம்பனி ஒவ்வொன்றும் ஏனைய மற்றைய சட்டங்கள் அத்துடன்/ அல்லது ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

5.6 முதனிலை வணிகர் கம்பனியொன்று, கம்பனியின் இலாபங்களை அல்லது இழப்புக்களை நியாயமின்றி மாற்றல் செய்கின்ற நோக்குடன் ஏதேனும் இணைத்தரப்பினருடன் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளக்கூடாது.

**6. வெளிப்படுத்துகை**

6.1 முதனிலை வணிகர் கம்பனியொன்று அதன் வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களில் விளக்கக் குறிப்பொன்றாக பின்வரும் வெளிப்படுத்துகையினை மேற்கொள்ளல் வேண்டும்.

(i) முதனிலை வணிகர் கம்பனியொன்று, மேலேயுள்ள பணிப்புரை 2.1இல் குறித்துரைக்கப்பட்டவாறு, நேரக் கட்டமைப்பொன்றிற்குள் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுமிடத்து, அது உண்மையில் மைய மூலதனத்தின் பெறுமதியில் குறைப்பினை ஏற்படுத்தும்.

(ii) மைய மூலதனம் மேலேயுள்ள பணிப்புரை 2.1இல் குறித்துரைக்கப்பட்டவாறு குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளுக்கு கீழேயுள்ள மட்டத்திற்கு குறைவடைய வழிவகுக்கின்ற விதத்தில் அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதிக்கும் நிதியியல் கூற்றுக்கள் வெளியிடுவதற்கு அங்கீகரிக்கப்படுகின்ற திகதிக்குமிடையில் இடம்பெறுகின்ற நிகழ்வுகள் ஏதேனுமிருப்பின், அத்தகைய நிகழ்வுகளின் விபரங்கள்

**7. நடைமுறைக்குவரும் நாள் மற்றும் முன்னைய பணிப்புரைகளை இரத்துச்செய்தல்**

7.1 இப்பணிப்புரையானது 2021.08.01 இலிருந்து நடைமுறைக்குவருதலாதல் வேண்டும்.

7.2 இப்பணிப்புரைகள் நடைமுறைக்குவரும் நாளிலிருந்து 2015ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க முதனிலை வணிகர் கம்பனிகள் (குறைந்தபட்சம் மைய மூலதனம்) பணிப்புரை இரத்துச்செய்யப்படுகிறது.

**8. வரைவிலக்கணங்கள்**

8.1 இப்பணிப்புரைகளின் நோக்கங்களுக்காக;

(i) “பகிர்ந்தளிப்பு” என்பது திருத்தப்பட்டவாறான 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறான அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ii) “முதனிலை வணிகர் கம்பனி” என்பது 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்குவிதிகளில் அல்லது திருத்தப்பட்டவாறான 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் ஒழுங்குவிதிகளின் நியதிகளில் நியமிக்கப்பட்ட முதனிலை வணிகர்களைக் குறிப்பதுடன் முதனிலை வணிகராக நியமிக்கப்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளை நீக்குகிறது.

(iii) “இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம்” என்பது 2006.06.22ஆம் திகதியிடப்பட்ட அல்லது திருத்தப்பட்டவாறான முதனிலை வணிகர்களுக்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதன போதுமை கட்டமைப்பு தொடர்பான பணிப்புரைகளின்படி கணிப்பிடப்பட்ட விகிதம் என பொருள்படுதல் வேண்டும்.

(iv) “மைய மூலதனம்” என்பது 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் (முதனிலை வணிகர்) ஒழுங்குவிதிகள் அல்லது திருத்தப்பட்டவாறான 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் (முதனிலை வணிகர்) ஒழுங்குவிதிகளில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறான அடுக்கு ஐ மூலதனம் எனக் கருத்தப்படல் வேண்டும்.

பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2021ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கச் சுற்றறிக்கை** 2021 செத்தெம்பர் 10

**கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான சலுகைகள் மீதான 2021இன் 6ஆம் இலக்க சுற்றறிக்கைக்கான திருத்தம்**

கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான சலுகைகள் மீதான 2021இன் 6ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு பின்வரும் திருத்தங்களை இலங்கை மத்திய வங்கி வழங்குகின்றது.

பந்தி 1(அ), 1(உ), 1(ஊ), 2(இ) மற்றும் பந்தி 4 என்பன பின்வருமாறு திருத்தம் செய்யப்படும். அனைத்து ஏனைய வாசகங்களும் மாற்றமின்றியிருக்கும்.

1. (அ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் 2021இன் 6ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழ் 2021 செத்தெம்பர் 30ஆம் திகதி வரை பிற்போடுதலை அனுபவிக்கின்ற கடன்பெறுநர்களின் ஏற்கனவே காணப்படுகின்ற கடன் வசதிகளின் மூலதனம், வட்டி அல்லது இரண்டினதும் அறவீட்டின் பிற்போடுதலை நீடித்தல் வேண்டும்.

1. (உ) சலுகைக் காலத்தின் போது அதாவது 2021 செத்தெம்பர் 30 வரை தண்ட வட்டி ஒன்றுசேர்க்கப்பட அல்லது அறவிடப்படலாகாது.

1. (ஊ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் அத்தகைய கடன் வசதிகளை பிற்போடாது அல்லது மீள்கட்டமைக்காது தனிமைப்படுத்தல் முடக்கல் காரணமாக சில நாட்களால் (உயர்ந்தபட்சம் 15 வேலைநாட்கள்) கடன் மீள்கொடுப்பனவின் உரிய திகதிகளை தாமதப்படுத்துவதற்கான பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களிடமிருந்து கிடைக்கும் ஏதேனும் கோரிக்கைக்கு இடமளிக்க வேண்டும். அத்தகைய தாமதத்திற்கு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் ஏதேனும் மேலதிக வட்டியினை அல்லது வேறு கட்டணங்களை அறவிடுதலாகாது.

2. (இ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், 2020 ஏப்பிறல் 01 அன்று அல்லது அதற்குப்பின்னர் செயற்படாக் கடனாக வகைப்படுத்தப்பட்டிருக்கும் தகைமையுடைய கடன்பெறுநர்களின் கொடுகடன் வசதிகளின் அனைத்து வகையான அறவீட்டு நடவடிக்கைகளையும் 2020 செத்தெம்பர் 30ஆம் திகதி வரை இடைநிறுத்துதல் வேண்டும்.

4. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் ஏற்கனவே காணப்படுகின்ற கொடுகடன் வசதி/ வசதிகளின் பிற்போடுதலை அல்லது மீள்கட்டமைத்தலை தெரிவுசெய்வதற்கு பதிலாக 2021 செத்தெம்பர் 30 அன்று அல்லது அதற்குமுன்னர் அவரது ஏற்கனவே காணப்படுகின்ற கொடுகடன் வசதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு அவரது விருப்பத்தை கடன்பெறுநர் வெளிப்படுத்தியுள்ள சந்தர்ப்பத்தில் இச்சுற்றறிக்கையின் கீழ் தகைமையுடைய கடன்பெறுநர்களுக்காக ஏதேனும் முன்கூட்டிய தீர்ப்பனவுக் கட்டணத்தை அறவிடலாகாது.

பேராசிரியர் டபிள்யு டி லக்ஷ்மன்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2021ஆம் ஆண்டின் 08ஆம் இலக்கச் சுற்றறிக்கை** 2021 செத்தெம்பர் 24

**ஏற்றுக்கொள்ளத்தக்க கடன்தரப்படுத்தல் முகவராண்மையாக லங்கா ரேட்டிங் ஏஜன்சி லிமிடெட்டினை அங்கீகரித்தல்**

பின்வரும் நோக்கத்திற்காக ஏற்றுக்கொள்ளத்தக்க வெளிவாரி கடன் மதிப்பீட்டு நிறுவனமொன்றாக லங்கா ரேட்டிங் ஏஜன்சி லிமிடெட்டினை இலங்கை மத்திய வங்கி அங்கீகரிக்கின்றது.

i. 2018இன் 01ஆம் இலக்க சுற்றறிக்கை - கடன் தரப்படுத்தல்;

ii. 2018இன் 03ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் - 2018இன் 3ஆம் இலக்க உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் உரிமம்பெற்ற குத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரைகளுக்குமான மூலதனப் போதுமைத் தேவைப்பாடு மற்றும் 2018இன் 03ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரைகள் - சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கான மூலதனத் தேவைப்பாடுகள்;

iii. 2020இன் 01ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் - கொடுகடன் வசதிகளின் வகைப்படுத்தலும் அளவீடும் மற்றும் 2020இன் 01ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுத்தல் சட்டப் பணிப்புரைகள் - கொடுகடன் வசதிகளின் வகைப்படுத்தலும் அளவீடும்;

iv. 2021இன் 04ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் - வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள்

v. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் தொடர்பிலான வேறு தொடர்புபட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள்.

அதற்கமைய, பகுதி 2இன் 2.3ஆம் இலக்க விடயத்தின் கீழ் அட்டவணை 5 - 2018இன் 03ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப்பணிப்புரைகளின் அட்டவணை 1இன் மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களைக் கணித்தல் - உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான மூலதனப் போதுமைத் தேவைப்பாடு மற்றும் 2018இன் 03ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரைகள் - சிறப்பியல்புவாய்ந்த

குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கான மூலதனப் போதுமைத் தேவைப்பாடுகள் இணைப்பிலுள்ளவாறு திருத்தப்பட்டுள்ளன.

ஜே. பி. கம்லத்
**பணிப்பாளர், வங்கியல்லா நிதி நிறுவனங்களின்**
**மேற்பார்வைத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி**

**அட்டவணை 5 - இலங்கையில் கடன் தரப்படுத்தல் முகராண்மைகளின் குறிப்புக்களின் கருத்தமைவு**

| பிட்ஜ் ரேட்டிங் லங்கா | ஐசிஆர்சி லங்கா லிமிடெட் | லங்கா ரேட்டிங் ஏஜன்சி லிமிடெட் | மூலதன விகிதாசாரங்களுக்கான தரப்படுத்தல் அளவுத்திட்டம் |
|---|---|---|---|
| AAA (lka) | (SL) AAA | AAA | AAA |
| AA+ (lka) | (SL) AA+ | AA+ | AA+ |
| AA (lka) | (SL) AA | AA | AA |
| AA- (lka) | (SL) AA- | AA- | AA- |
| A+ (lka) | (SL) A+ | A+ | A+ |
| A (lka) | (SL) A | A | A |
| A- (lka) | (SL) A- | A- | A- |
| BBB+ (lka) | (SL) BBB+ | BBB+ | BBB+ |
| BBB (lka) | (SL) BBB | BBB | BBB |
| BBB- (lka) | (SL) BBB- | BBB- | BBB- |
| BB+ (lka) | (SL) BB+ | BB+ | BB+ |
| BB (lka) | (SL) BB | BB | BB |
| BB- (lka) | (SL) BB- | BB- | BB- |
| B+ (lka) | (SL) B+ | B+ | B+ |
| B (lka) | (SL) B | B | B |
| B-(lka) & Lower | (SL) B- & Lower | B- & Lower | B- & Lower |

**2021ஆம் ஆண்டின் 09ஆம் இலக்கச் சுற்றறிக்கை** 2021 ஒத்தோபர் 06

**கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான சலுகைகளை நீடித்தல்**

இலங்கையில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பரவலினால் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை நீடிக்குமாறு தொடர்பான தரப்பினர்களிடமிருந்தும் அரச அதிகாரிகளிடமிருந்தும் இலங்கை மத்திய வங்கி அநேக கோரிக்கைகளைப் பெற்றிருக்கிறது. இதற்கமைய, வியாபாரங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் எதிர்நோக்கப்பட்ட சவால்களை ஈடுசெய்யும் பொருட்டு, இலங்கை மத்திய வங்கி உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளையும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளையும் (இதனகத்துப் பின்னர் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் பின்வரும் சலுகைகளை வழங்குமாறு (இதனகத்துப் பின்னர் திட்டம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) கோருகின்றது.

மேலும், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் அவர்களின் கோரிக்கையின் மீது இத்திட்டத்தில் வழங்கப்பட்டவற்றிலும் பார்க்க கூடுதலான சலுகைகளை வழங்கலாம். இதற்கமைய, இச்சுற்றறிக்கையானது வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் கடன்பாட்டாளர்கள் அவர்களது கடனைச் சரியாக மீளச் செலுத்துவதில் அவர்கள் மீது காணப்படும் சுமையினை தளர்த்தும் நோக்குடன் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் பாதிக்கப்பட்ட அனைத்துக் கடன்பாட்டாளர்களுக்கும் ஒரே மாதிரியான தன்மையில் சலுகைகளை வழங்குவதற்காக விடுக்கப்படுகிறது.

**1. தகைமையுடைய கடன்பாட்டாளர்கள்**

1.1 கொவிட்-19இன் காரணமாக வருமானம்/ சம்பளங்கள் அல்லது விற்பனைகளில் ஏற்பட்ட இழப்பு அல்லது குறைப்பு, வியாபாரம் மூடப்பட்டமை அல்லது தொழில் இழப்பு போன்றவற்றினால் நிதியியல் இடர்ப்பாடுகளை எதிர்நோக்குகின்ற வங்கியல்லா

நிதியியல் நிறுவனங்களின் கடன்பாட்டாளரொருவர் இச்சலுகைகளைப் பெறத் தகுதியுடையவராக இருப்பார்.

1.2 2021ஆம் ஆண்டின் சுற்றறிக்கை இல.04 மற்றும் இல.05இன் கீழ் சலுகைகளைப் பெற்றுள்ள போக்குவரத்து மற்றும் சுற்றுலாத் துறைகளின் தகைமையுடைய கடன்பாட்டாளர்களும் இத்திட்டத்தின் கீழ் சலுகைகளைப் பெறத் தகைமையுடையவர்களாவர்.

**2. தகைமையுடைய சலுகைகள்**

2.1 இத்திட்டத்தின் கீழ் சலுகைகளைப் பெற விரும்பும் தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் கீழே தரப்பட்டுள்ள மூன்று தேர்வுகளில் ஒன்றைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

**(i) தேர்வு 01: கொடுகடன் வசதிகளை மறுசீரமைத்தல்**

(அ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் கடன்பாட்டாளரின் மீள்கொடுப்பனவு இயலாற்றலையும் இருதரப்பினர்களினாலும் இணங்கிக் கொள்ளப்பட்ட ஏற்றுக்கொள்ளத்தக்க புத்துயிரளித்தல் திட்டத்தினையும் பரிசீலனையில் கொண்டு நீண்டதொரு காலப்பகுதிக்கு (2021 ஒத்தோபர் 01இல் உள்ளவாறு செயற்படுகின்ற மற்றும் செயற்படாத) தற்போதுள்ள கொடுகடன் வசதிகளை மறுசீரமைத்தல் வேண்டும்.

(ஆ) மேலேயுள்ள 2.1(i)(அ) இற்கு ஏற்புடைத்தான வட்டி வீதமானது ஆண்டிற்கு 11.5 சதவீதமான கீழ் வீதம் மற்றும் ஆண்டொன்றிற்கு 15 சதவீதம் கொண்ட உச்ச வீதம் என்பனவற்றிற்குட்பட்டு ஆண்டிற்கு 3 சதவீதத்தினைக் கழித்த ஆரம்ப ஒப்பந்த ரீதியான வட்டி வீதமாக இருத்தல் வேண்டும்.

(இ) மறுசீரமைக்கப்பட்ட நியதிகளுக்கிணங்க, தவணைப் பணத்தின் மூலதனப் பங்கினை மீளச் செலுத்தத் தொடங்குவதற்கு குறைந்தபட்சம் 3 மாத சலுகைக் காலத்தினை வழங்குதல் வேண்டும்.

(ஈ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் முன்னைய சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய தொகையினை (அதாவது மூலதனம், வட்டி மற்றும் சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த மேலதிக சலுகை வட்டி) மறுசீரமைப்புக் காலப்பகுதியில் வெளிநின்ற மீதி மூலதனத்துடன் ஒன்றுசேர்த்துக் கொள்ளலாம்.

(உ) இணங்கிக் கொள்ளப்பட்ட நியதிகளின்படி மீளச்செலுத்த இயலாமல் போன தவணைப் பணத்தின் மீது விதிக்கப்பட்ட மேலதிக வட்டி வீதங்கள் ஆண்டிற்கு 2 சதவீதத்தினை விஞ்சக்கூடாது என்பதுடன் நிலுவையிலுள்ள தொகையின் மீது மட்டுமே விதிக்கப்படுதலும் வேண்டும்.

(ஊ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் 2020 ஏப்பிறல் 01இலிருந்து 2021 செத்தெம்பர் 30 வரையான காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த அல்லது விதிக்கப்பட்ட தண்ட வட்டி வீதங்களைத் தள்ளுபடி செய்தல் வேண்டும்.

**(ii) தேர்வு 02: உரிய காலத்திற்கு முன்னரான தீர்ப்பனவிற்கு வசதியளித்தல்**

தகைமையுடைய கடன்பாட்டாளரொருவர் தற்போதுள்ள கொடுகடன் வசதிகளை 2022 மாச்சு 31 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ தீர்ப்பனவு செய்ய விரும்புவாராயின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் எதிர்கால வட்டி, கட்டணம் மற்றும் ஏற்புடைத்தான விதிப்புக்களை முழுமையாக தள்ளுபடி செய்தல் வேண்டும்.

**(iii) தேர்வு 03: 2021 ஒத்தோபர் 01ஆம் நாளில் உள்ளவாறான செயற்படுகின்ற கொடுகடன் வசதிகளுக்கான சட்ட இசைவுத்தாமதத்தினை நீடித்தல்**

(அ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மூலதனம், வட்டி அல்லது இரண்டினதும் அறவிடல்களை 2022 மாச்சு 31 வரை பிற்போடுதல் வேண்டும்.

(ஆ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய மூலதனத்தினையும் வட்டியையும் தவணைக் கடனொன்றிற்கு மாற்றுதல் வேண்டும்.

(இ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் முன்னைய சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் செலுத்த வேண்டிய தொகைகளை (அதாவது சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியின் மூலதனம், வட்டி மற்றும் மேலதிக ஒன்றுசேர்ந்த சலுகை வட்டி வீதங்கள்) ஒன்றுசேர்க்கலாம் என்பதுடன் மேலே 2.1 (iii)(ஆ)இல் குறிப்பிடப்பட்ட தவணைக் கடனைப் புதிய கடனொன்றிற்கு மாற்றுதலும் வேண்டும்.

(ஈ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் புதிய கடனின் மீது ஆண்டொன்றிற்கு 11.5 சதவீதத்தினை விஞ்சாத வட்டி வீதமொன்றினை விதிக்கலாம்.

(உ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேலே 2.1(iii)(இ)இல் குறிப்பிடப்பட்ட புதிய கடனை, 2022 யூலை 01 இலிருந்து குறைந்தபட்சம் 12 மாதங்களைக் கொண்ட மீள்கொடுப்பனவு காலப்பகுதியுடன் அறவிடத் தொடங்கலாம்.

(ஊ) கடன்பாட்டாளர் ஆரம்பக் கடன் தவணைத் தொகையின் மீள்கொடுப்பனவினை 2022 ஏப்பிறல் 01 இலிருந்து தொடங்குதல் வேண்டும்.

(எ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் சுழலும் கொடுகடன் வசதிகள் செலுத்தப்பட வேண்டிய திகதிகள், 2021

ஒத்தோபர் 01 இலிருந்து 2022 மாச்சு 31 வரையான காலப்பகுதிக்குள் வருமாயின் அவற்றை 2022 மாச்சு 31 வரை நீடிக்கலாம்.

(ஏ) சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் தண்ட வட்டி ஒன்றுசேர்க்கப்படவோ விதிக்கப்படவோ கூடாது.

2.2 **அறவிடல் நடவடிக்கைகளை இடைநிறுத்துதல்:** வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் தகைமையுடைய கடன்பாட்டாளர்களின் அத்தகைய கொடுகடன் வசதிகள் 2020 ஏப்பிறல் 01 அன்றோ அல்லது அதற்கு பின்னரோ செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தப்பட்டிருந்து, தொடர்பான கடன்பாட்டாளர்களின் வழமையான வருமானமீட்டும் நடவடிக்கைகளுக்கு இடையூறுகள் ஏற்பட்டமையின் காரணமாக, கடன்களைத் தொடர்ந்தும் செலுத்த/ உடனடியாக கடன்களின் மீள்கொடுப்பனவினை ஆரம்பிக்கும் நிலையில் இல்லாது இருப்பார்களாயின் கொடுகடன் வசதிகளுக்கெதிரான அனைத்து வகை அறவிடல் நடவடிக்கைகளையும் 2022 மாச்சு 31 வரை இடைநிறுத்துதல் வேண்டும்.

**3. இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்திற்கு அறிக்கையிடுதல்**

3.1 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் தகைமையுடைய கடன்பாட்டாளரிடமிருந்தான கடன் விண்ணப்பங்களை கொடுகடன் தகவல் பணியகத்தின் மோசமான பதிவேடுகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு நிராகரிக்கக்கூடாது.

3.2 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், கொடுகடன் தகவல் பணியகத்தின் ஆலோசனையுடன் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சட்ட இசைவுத்தாமதம்/ மறுசீரமைத்தல் அறிக்கை தொடர்பில் அறிக்கையிடுகின்ற மாதிரியொன்றினைத் தயாரித்தல் வேண்டும். இதன் மூலம் இத்திட்டத்தில் பங்கேற்பது எதிர்காலத்தில் கடன்பாட்டாளரின் கொடுகடன் மதிப்பெண்ணின் மீது தாக்கத்தினையோ அல்லது கொடுகடன் தகவல் பணியகத்தின் எதிர்கால அறிக்கைகள் எதிர்மறையான தன்மையினையோ பிரதிபலிக்கமாட்டாது.

**4. கோரிக்கைகளையும் மேன்முறையீட்டு மனுக்களையும் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி**

4.1 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களும் இச்சுற்றறிக்கையினை அனைத்துக் கிளைகளுக்கும் 3 வேலை நாட்களுக்கிடையில் சுற்றோட்டப்படுத்தல் வேண்டுமென்பதுடன் தேவையான உள்ளக வழிகாட்டல்கள்/ சுற்றறிக்கைகளை 7 நாட்களுக்குள் வழங்குதலும் வேண்டும்.

4.2 மேலேயுள்ள தேர்வு 01 மற்றும் தேர்வு 03இன் கீழ் சலுகைகளைப் பெற விரும்புகின்ற தகைமையுடைய கடன்பாட்டாளர்கள், மேற்குறிப்பிட்ட சலுகைகளுக்காக 2021 நவெம்பர் 01 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ எழுத்தில் அல்லது இலத்திரனியல் ஊடகமூடாக விண்ணப்பித்தல் வேண்டும். வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் அனைத்து தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கும் மின்னஞ்சல் மற்றும் குறுஞ்செய்தி சேவை உட்பட அச்சு அத்துடன்/ அல்லது இலத்திரனியல் ஊடாக சலுகைகள், இறுதித் திகதி மற்றும் சமர்ப்பிப்பதற்கான விண்ணப்பப் படிவம் என்பன பற்றி விரைவாக தொடர்பூட்டுதல் வேண்டும்.

4.3 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் 2021 நவெம்பர் 01 இற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கைகளை, அத்தகைய கோரிக்கைகள் தாமதமாக செய்யப்படுவதற்கான காரணங்கள் ஏற்றுக்கொள்ளதாக இருப்பின் அவற்றை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

4.4 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், ஒப்புதலுக்கு முன்னதாக, கொடுகடன் வசதிகளின் சட்ட இசைவுத்தாமதம் அல்லது மறுசீரமைத்தல் அமைப்பு தொடர்பில் கடன்பாட்டாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

4.5 கோரிக்கைகள் நிராகரிக்கப்படுவது தொடர்பில், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் எழுத்து மூலம் அல்லது இலத்திரனியல் ஊடாக அறிவித்தல் வேண்டுமென்பதுடன் நிராகரிப்பதற்கான காரணங்களையும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

4.6 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் அத்தகைய நிராகரிப்பிற்கெதிராக பணிப்பாளர், நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம் இலங்கை மத்திய வங்கிக்கு மீளாய்வு செய்யுமாறு கோரிக்கை விடுப்பதற்கான தேர்வு காணப்படுவது பற்றி வாடிக்கையாளருக்குத் தெரியப்படுத்தல் வேண்டும்.

**5. சட்ட இசைவுத்தாமதம் தொடர்பான கணக்கீட்டுப் பரிசீலனைகள்**

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படட சலுகைகளை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும் 2020 திசெம்பர் 31 திகதியிடப்பட்ட கடிதத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட மேலதிக வழிகாட்டல்களுக்கு இணங்கவும் கணக்கிடல் வேண்டும். இடர்நேர்வுகளை அதிகரிக்கின்ற கடன்பாட்டாளர்கள் அல்லது துறைகளைப் பொறுத்தவரை, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் போதுமான பழுதுறும் கட்டணங்களை விதிக்குமாறு கேட்டு கொள்ளப்படுகின்றன. இது தொடர்பில் மேலதிக வழிகாட்டல்/ தெளிவுபடுத்தல்களுக்கு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம் மற்றும் கணக்காய்வாளர்களிடமிருந்து மதியுரைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

**6. அறிக்கையிடும் தேவைப்பாடு**

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் கடன்பாட்டாளர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சலுகைகளின் விபரங்களை

ஒவ்வொரு மாதமும் 30ஆம் திகதியிலுள்ளவாறு 2021 நவெம்பர் 30ஆம் நாளிலிருந்து தொடங்குகின்ற 15 வேலை நாட்களுக்குள், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திற்கு அறிக்கையிடல் வேண்டும். அறிக்கையிடுகின்ற படிவம் காலக்கிரமத்தில் சுற்றோட்டப்படுத்தப்படும்.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

**2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள்** 2021 திசெம்பர் 31

**கம்பனி ஆளுகை**

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவினால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை கம்பனி ஆளுகை தொடர்பான பணிப்புரைகளை விடுத்திருப்பதுடன், இது நிதித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்ட ஒவ்வொரு நிதிக் கம்பனிக்கும் ஏற்புடைத்தாதலும் வேண்டும்.

**1. சபையின் ஒட்டுமொத்தப் பொறுப்புக்கள்**

1.1 சபையானது, முகாமைத்துவத்தினால் உருவாக்கப்பட்ட நிதிக் கம்பனியின் வியாபார உபாயத்திற்கு ஒப்புதலளித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தலை மேற்பார்வை செய்தல், ஆளுகைக் கட்டமைப்பினை ஏற்படுத்துதல், கம்பனி கலாச்சாரத்தன்மையினை நிறுவுதல், ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்தல் என்பன உட்பட நிதிக் கம்பனியின் தொழிற்பாடுகளுக்கான ஒட்டுமொத்தப் பொறுப்பையும் பொறுப்புக்கூறும் தன்மையினையும் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். சபையானது அதன் பொறுப்புக்களை காத்திரமான விதத்தில் புரியும் பொருட்டு, பணிப்புரையில் கீழே 1.2 இலிருந்து 1.6 வரை பட்டியலிடப்பட்டுள்ள ஆனால் அவற்றிற்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாத விதத்தில் தொழிற்பாடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**1.2 வியாபார உபாயம் மற்றும் ஆளுகைக் கட்டமைப்பு**

(அ) வியாபாரச் சூழலில் ஏற்படும் அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டு அடுத்த மூன்றாண்டுகளில் அளவிடத்தக்க இலக்குகளுடன் நிதிக் கம்பனியின் ஒட்டுமொத்த வியாபார உபாயத்தின் நடைமுறைப்படுத்தலுக்கு ஒப்புதலளித்து மேற்பார்வை செய்வதுடன் இதனை ஆண்டுதோறும் இற்றைப்படுத்தல்.

(ஆ) நிதிக் கம்பனியின் அளவு, சிக்கலான தன்மை, வியாபார உபாயம், மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் என்பனவற்றின் பின்னணியில் நிதிக் கம்பனிகளின் ஆளுகைக் கட்டமைப்பிற்கு ஒப்புதலளித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

(இ) இதன் ஆளுகைக் கட்டமைப்பின் காத்திரமான தன்மையினை காலத்திற்குக் காலம் மதிப்பிடல்.

(ஈ) தலைவரையும் முதன்மை நிறைவேற்று அலுவலரையும் நியமித்தல் மற்றும் தொழிற்பாடுகள், வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்களை வரையறுத்தல்.

**1.3 கம்பனிக் கலாச்சாரம் மற்றும் பெறுமானங்கள்**

(அ) ஒழுக்கவியல், முன்மதியுடைய தன்மை மற்றும் தொழில்சார் நிபுணத்துவ நடத்தை என்பனவற்றைப் பலப்படுத்துகின்ற ஆற்றல்வாய்ந்த கம்பனி ஆளுகை நிதிக் கம்பனிக்குள் நிலவுவதனை உறுதிப்படுத்தல்.

(ஆ) நன்னடத்தைக் கோவையினை அபிவிருத்தி செய்வது உட்பட, நிதிக் கம்பனியின் கம்பனி கலாச்சாரத்தினையும் பெறுமானங்களையும் நிறுவுவதில் முன்னணி வகிபாகத்தினை ஆற்றுதல் மற்றும் அக்கறையின் முரண்பாடுகளை முகாமை செய்தல்.

(இ) நிதிக் கம்பனியின் வியாபார உபாயங்களில் பொருத்தமான சூழல், சமூக மற்றும் ஆளுகை பரிசீலனைகளினூடாக நீடித்துநிலைத்திருக்கும் நிதியினை ஊக்குவித்தல்.

(ஈ) நிதிக் கம்பனியின் செயலாற்றம், நிலைமை மற்றும் பொதுமக்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துநரின் வாய்ப்புக்களில் சமநிலையிலமைந்த நோக்கினை எறிவு செய்யும் முகமாக வைப்பாளர்கள், பங்குடமையாளர்கள், கடன்பாட்டாளர்கள் மற்றும் ஏனைய கொடுகடன் வழங்குநர் உட்பட, அனைத்து அக்கறைதாரர்களுடனான தொடர்பூட்டல் கொள்கைக்கு ஒப்புதலளித்தல்.

**1.4 இடர்நேர்வுகளை ஏற்றல், இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள்**

(அ) நிதிக் கம்பனியின் உபாயக் குறிக்கோள்களுக்கு இசைவான விதத்தில் இடர்நேர்வேற்புக் கூற்றினை மீளாய்வு செய்தல்.

(ஆ) இடர்நேர்வுகளை முன்மதியுடன் அடையாளம் காண்பதற்கும் தணிப்பதற்கும் முகாமைப்படுத்துவதற்கும் பொருத்தமான முறைமைகளும் கட்டுப்பாடுகளும் நடைமுறைக்கிடப்படுவதனை உறுதிப்படுத்தல்.

(இ) நிதிக் கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் மற்றும் முகாமைத்துவத் தகவல் முறைமைகளின் போதுமாந்தன்மையினையும் ஒருங்கிணைந்த தன்மையினையும் மேற்கொள்ளுதல் மற்றும் காலாந்தர ரீதியில் மீளாய்வு செய்தல்.

(ஈ) எதிர்பாராத சூழ்நிலைகளின் கீழ் உறுதிப்பாடு, நிதியியல் பலம் மற்றும் இன்றியமையாத தொழிற்பாடுகளையும் பணிகளையும் பாதுகாப்பது என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்காக, நிதிக் கம்பனிகளுக்காக தடங்கலற்ற வியாபாரம் மற்றும் அனர்த்த மீட்புத் திட்டத்திற்கு ஒப்புதலளித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

**1.5 சபை நேரம் மற்றும் திறன்**

(அ) சபையின் அனைத்து உறுப்பினர்களும் கம்பனியின் அலுவல்கள் தொடர்பான விடயங்களைக் கையாள்வதில் போதுமான நேரத்தினை அர்ப்பணித்தல் வேண்டும்.

(ஆ) சபையின் அனைத்து உறுப்பினர்களும் தேவையான தகைமைகளையும் போதுமான தேர்ச்சியையும் அறிவையும் அனுபவத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) சபையானது கிரமமான முறையில் மீளாய்வுகளை மேற்கொண்டு அனைத்து உறுப்பினர்களுக்கும் தேவையான பயிற்சிக்கும் அபிவிருத்திக்கும் இணங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

(ஈ) சபையானது, ஒவ்வொரு பணிப்பாளரினதும் தனிப்பட்ட செயலாற்றம் தொடர்பில் வருடாந்தம் சுயமதிப்பீடொன்றினை மேற்கொள்ளும் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதுடன் பொதுவாக சபையும் அதன் குழுக்களும் அத்தகைய மதிப்பீடுகளின் பதிவேடுகளைப் பேணுதலும் வேண்டும்.

(உ) நிதிக் கம்பனியின் கடமைகளை ஆற்றுவதற்கு தொடர்பான பணிப்பாளருக்கு உதவுவதற்காக பணிப்பாளர்கள் சுயாதீனமான வெளிவாரி தொழில்சார் நிபுணத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் சபையானது தீர்மானங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**1.6 மூத்த முகாமைத்துவத்தின் மேற்பார்வை**

(அ) கொள்கையின் மீது கணிசமானளவு செல்வாக்கினைச் செலுத்துகின்ற, நடவடிக்கைகளை நெறிப்படுத்துகின்ற; அத்துடன் வியாபாரத் தொழிற்பாடுகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மீது கட்டுப்பாடுகளை புரியக்கூடியவர்களாக இருப்பவர்களை அடையாளம் கண்டு மூத்த முகாமைத்துவத்தினராகப் பதவியைக் குறித்துரைத்தல்.

(ஆ) மூத்த முகாமைத்துவத்தின் அதிகாரத்திற்குரிய துறைகளையும் அதற்கான முக்கிய பொறுப்புக்களையும் வரைவிலக்கணம் செய்தல்.

(இ) நிதிக் கம்பனியின் உபாயக் குறிக்கோளை எய்துவதற்குத் தேவையான தகைமைகள், தேர்ச்சிகள், அனுபவம் மற்றும் அறிவினை மூத்த முகாமைத்துவம் கொண்டிருப்பதனை உறுதிப்படுத்தல்.

(ஈ) நிதிக் கம்பனியின் அலுவல்களின் மீது மூத்த முகாமைத்துவம் பொருத்தமான மேற்பார்வையினை கொண்டிருப்பதனை உறுதிப்படுத்தல்.

(உ) நிதிக் கம்பனியானது மூத்த முகாமைத்துவத்திற்காகப் பொருத்தமான தொடர்ந்துவரும் திட்டமொன்றினைக் கொண்டிருப்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(ஊ) கொள்கைகளை மீளாய்வு செய்வதற்கும் தொடர்பூட்டல்களை நிறுவுவதற்கும் கம்பனி குறிக்கோள்கள் தொடர்பில் முன்னேற்றங்களை கண்காணிப்பதற்குமாக மூத்த முகாமைத்துவத்துடன் கூட்டங்களைக் கிரமமாக நடத்துதல்.

**1.7 தற்போதுள்ள சட்டக் கட்டமைப்பினை பின்பற்றுதல்**

(அ) நிதிக் கம்பனி, வைப்பாளர்கள், பங்குடமையாளர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்களின் நலவுரித்துக்களுக்கும் கடப்பாடுகளுக்கும் தீங்கினை ஏற்படுத்தும் விதத்தில் செயற்படவில்லை என்பதனை உறுதிப்படுத்தல்.

(ஆ) ஒழுங்குமுறைப்படுத்தல் சூழலைப் புரிந்துகொள்ளுதல் மற்றும் தொடர்பான சட்டங்கள், ஒழுங்குவிதிகள், பணிப்புரைகள் மற்றும் ஒழுக்கவியல் நியமங்களுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்தல்.

(இ) உரிய விழிப்புக் கவனத்துடனும் முன்மதியுடனும் நேர்மையாகவும் செயற்பட வேண்டும் என்பதுடன், கடமையினை மிகுந்த கவனத்துடனும் சுறுசுறுப்பாகவும் செய்வதற்கு அவர்கள் தவறுவதனால் ஏற்படக்கூடிய குடியியல் மற்றும் குற்றவியல் பொறுப்புக்கள் பற்றியும் அறிந்திருத்தல் வேண்டும்.

**2. ஆளுகைக் கட்டமைப்பு**

2.1 சபையானது, இப்பணிப்புரைகளின் ஏற்பாடுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் ஆளுகைக் கட்டமைப்பொன்றினை அபிவிருத்தி செய்து நடைமுறைப்படுத்தி வருதல் வேண்டுமென்பதுடன் பின்வருவனவற்றிற்கு அவை மட்டுப்படுத்தப்பட்டிருப்பதாகக் கருதப்படலாகாது.

(அ) சபையின் வகிபாகம் மற்றும் பொறுப்புக்கள்;

(ஆ) சபைக்கு ஒப்படைக்கப்பட்ட விடயங்கள்;

(இ) அதிகாரம் வழங்கல்;

(ஈ) சபையின் உள்ளமைப்பு;

(உ) சபையின் சுயாதீனம்

(ஊ) பணிப்பாளர்களின் பெயர் குறித்த நியமனம், தெரிவு நியமனம் மற்றும் தெரிவு மற்றும் மூத்த முகாமைத்துவத்தினரின் நியமனம்;

(எ) அக்கறைகளின் முரண்பாடுகளினது முகாமைத்துவம்;

(ஏ) தகவல்களை அணுகுதல் மற்றும் சுயாதீனமான மதியுரைகளைப் பெற்றுக்கொள்ளுதல்;

(ஐ) சபை உறுப்பினர்களின் இயலாற்றலைக் கட்டியெழுப்புதல்;

(ஒ) சபையின் செயலாற்றல் மதிப்பீடு;

(ஓ) தலைவரினதும் முதன்மை நிறைவேற்று அலுவலரினதும் வகிபாகம் மற்றும் பொறுப்புக்கள்;

(ஔ)கம்பனிச் செயலாளரின் வகிபாகம்

(க) சபையின் துணைக் குழுக்கள் மற்றும் அவற்றின் வகிபாகம்; மற்றும்

(ங) தொடர்பான தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்கள் மீது வரையறைகள்

**3. சபையின் உள்ளமைப்பு**

3.1 சபையின் உள்ளமைப்பானது நிதிக் கம்பனியின் அளவு, சிக்கலான தன்மை மற்றும் இடர்நேர்வுத் தோற்றப்பாடு என்பனவற்றின் தேவைப்பாடுகளுக்கேற்ப பொருத்தமானதும் விரும்பத்தக்கதுமாக கருதப்படுகின்றவாறான சமச்சீரான தேர்ச்சிகளையும் அனுபவத்தினையும் கொண்டிருப்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

3.2 சபையிலுள்ள பணிப்பாளர்களின் எண்ணிக்கை 7இற்குக் குறைவாகவோ மற்றும் 13 இற்குக் கூடுதலானதாகவோ இருத்தலாகாது.

3.3 முதன்மை நிறைவேற்று அலுவலர்/ நிறைவேற்றுப் பணிப்பாளர் பதவியை வகிக்கின்ற பணிப்பாளர் தவிர்ந்த பணிப்பாளர்களின் மொத்த பணிக்காலம் ஒன்பது ஆண்டுகளை விஞ்சலாகாது என்பது பணிப்புரை 3.4 இற்குட்பட்டது.

3.4 நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ 10 சதவீதத்திற்கும் கூடுதலாக வாக்களிக்கும் உரிமையினைக் கொண்டுள்ள/ கணிசமான நலவுரித்துக்களை அல்லது குறிப்பிடத்தக்க சான்றுகளைச் சமர்ப்பிப்பதன் மூலம் 10 சதவீதத்திற்கும் கூடுதலான வாக்களிக்கும் உரிமையினைக் கொண்டுள்ள பங்குடமையாளரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு நியமிக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள், பணிப்புரை 4.2 மற்றும் 4.3இல் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்குட்பட்டு, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரின் முன்னொப்புதலுடன் 9 ஆண்டுகளுக்கும் கூடுதலான காலம் பதவி வகிக்கத் தகுதியுடையவர்களாவர். எனினும், 9 ஆண்டுகளை விஞ்சிய காலப்பகுதிக்கு பதவி வகிக்க தகுதியுடைய நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களின் எண்ணிக்கை பணிப்பாளரின் மொத்த எண்ணிக்கையில் இற்கு மட்டுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

**3.5 நிறைவேற்றுப் பணிப்பாளர்கள்**

(அ) நிறைவேற்றுப் பணிப்பாளர்களின் எண்ணிக்கை சபையின் பணிப்பாளர்களது மொத்த எண்ணிக்கையில் மூன்றிலொன்றினை விஞ்சக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு நிதிக் கம்பனியின் ஒரு ஊழியர் மாத்திரம் நிதிக் கம்பனியின் நிறைவேற்றுப் பணிப்பாளரொருவராக நியமிக்கப்பட வேண்டும் அல்லது தெரிவுசெய்யப்பட அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட வேண்டும். முதன்மை நிறைவேற்று அலுவலர் நிறைவேற்றுப் பணிப்பாளர்களிலொருவராக இருத்தல் வேண்டுமென்பதுடன் கம்பனியின் முகாமைத்துவப் பணிப்பாளராக பதவி குறித்து அமர்த்தப்படலாம்.

(ஆ) வாக்களிக்கும் உரிமையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ 10 சதவீதத்திற்கும் கூடுதலான உரிமையினை/ நிதிக் கம்பனியின் கணிசமான நலவுரித்துக்களைக் கொண்டுள்ள பங்குடமையாளரொருவர், நிறைவேற்றுப் பணிப்பாளராகவோ அல்லது மூத்த முகாமைத்துவ அலுவலராகவோ நியமிக்கப்படக்கூடாது. எது எவ்வாறெனினும், ஒப்பந்த முறையில் விசேட நோக்கங்களுடன் தொழில்புரிகின்ற தற்போதுள்ள நிறைவேற்றுப் பணிப்பாளர்களும் தற்போதைய மூத்த முகாமைத்துவத்தினரும் நிதிக் கம்பனியின் ஓய்வுபெறும் வயது வரை நிறைவேற்றுப் பணிப்பாளராக/ மூத்த முகாமைத்துவ அலுவலராக தொடர்வதற்கு அனுமதிக்கப்படுவர் என்பதுடன் பணிப்புரையின் 4.2 மற்றும் 4.3இல் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்குட்பட்டு நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராக மீண்டும் நியமிக்கப்படலாம். ஒப்பந்த ரீதியான தொழில்நிலையினைக் கொண்டிராத அல்லது விசேட நோக்கங்களுக்கான தொழிற்பாட்டுப் பணியினை

ஆற்றுபவர்கள் இப்பணிப்புரையின் திகதியிலிருந்து நிறைவேற்றுப் பணிப்பாளர் பதவியிலிருந்து விலகிக் கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் பணிப்புரை 4.2 மற்றும் 4.3இல் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்குட்பட்டு நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராக மீள நியமிக்கப்படலாம்.

(இ) நிறைவேற்றுப் பணிப்பாளர் முன்னிலையில் தலைமை நிறைவேற்று அலுவலர் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஒருவராக இருப்பார் மற்றும் நிதி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக நியமிக்கப்படலாம்.

(ஈ) நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் முதன்மை நிறைவேற்றுப் பணிப்பாளரூடாகச் சபைக்கு அறிக்கையளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(உ) நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் வேறு ஏதேனும் நிறுவனங்களின் நிறைவேற்றுப் பதவியை அல்லது மூத்த நிருவாகப் பதவியை வகிப்பதனைத் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

**3.6 நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள்**

(அ) நிறைவற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள் நேர்மையான பதிவேடுகளைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் உபாயம், செயலாற்றம், மூலவளங்கள் மற்றும் வியாபார நடத்தையின் நியமங்கள் ஆகிய விடயங்களில் சுயாதீனமான தீர்ப்பொன்றினை வழங்கக்கூடிய விதத்தில் தேவையான தகைமைகளையும் தேர்ச்சிகளையும் அனுபவத்தினையும் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

(ஆ) நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் நிதிக் கம்பனியின் முதன்மை நிறைவேற்று அலுவலராகவோ அல்லது நிறைவேற்றுப் பணிப்பாளராகவோ நியமிக்கப்பட முடியாது.

**3.7 சுயாதீனமான பணிப்பாளர்கள்**

(அ) சபையில் சுயாதீனமான பணிப்பாளர்களின் எண்ணிக்கை குறைந்தபட்சம் மூன்றாக அல்லது பணிப்பாளர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றிலொன்றாக இதில் எது கூடுதலானதோ அதுவாக இருத்தல் வேண்டும்.

(ஆ) நியமிக்கப்பட்ட சுயாதீனமான பணிப்பாளர்கள் உயர்ந்த பண்புகளையும் தொழில்சார் தகைமைகளையும் நிரூபிக்கப்பட்ட மிகச் சிறந்த வழிநடப்பவர்களாகவும் போதுமான அனுபவத்தினைக் கொண்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(இ) நிறைவேற்று அதிகாரத்தினைக் கொண்டிராத பணிப்பாளர்கள் பின்வரும் தன்மைகளைக் கொண்டிருப்பார்களாயின் சுயாதீனமானவர்கள் எனக் கருதப்படமாட்டார்கள்:

(i) நிதிக் கம்பனியின் 5 சதவீதத்திற்கும் கூடுதலான நேரடியான அல்லது மறைமுகமாக வாக்களிக்கும் உரிமையைக் கொண்டுள்ள அல்லது வேறு ஏதேனும் நிதிக் கம்பனியில் 10 சதவீதத்திற்கும் கூடுதலான வாக்களிக்கும் உரிமையினைக் கொண்டுள்ள பணிப்பாளரொருவர்.

(ii) பணிப்பாளராக நியமிக்கப்பட்டதிலிருந்து உடனடியாக முற்போந்த ஓராண்டு காலப்பகுதியில் பணிப்பாளர் அல்லது அவரின் நெருங்கிய உறவினர் இங்குள்ள பணிப்புரை 12.1(ஈ)இல் விபரிக்கப்பட்டவாறு நிதிக் கம்பனியின் பொருண்மிய வியாபாரத் தொடர்புகளின் வெளிநின்ற மொத்தப் பெறுமதி எந்தவொரு குறிப்பிட்ட நேரத்திலும் கடைசியாக கணக்காய்வு செய்யப்பட்ட அதன் நிதியியல் கூற்றில் காட்டப்பட்டவாறு நிதிக் கம்பனியின் கூறப்பட்ட மூலதனத்தில் 10 சதவீதத்தினை விஞ்சியிருக்குமிடத்து.

(iii) பணிப்பாளராக நியமிக்கப்பட்டதிலிருந்து உடனடியாக முற்போந்த ஓராண்டு காலப்பகுதியில் நிதிக் கம்பனியினால் அல்லது அதன் இணை நிறுவனத்தில் தொழில்புரிந்திருக்குமிடத்து அல்லது அதன் இணை நிறுவனத்தில் பணிப்பாளராக இருந்திருக்குமிடத்து.

(iv) பணிப்பாளராக நியமிக்கப்பட்டதிலிருந்து உடனடியாக முற்போந்த ஓராண்டு காலப்பகுதியில் நிதிக் கம்பனியில் அல்லது அதன் இணைக்கம்பனியில் தொழில்சார் மதியுரையாளராக அல்லது ஆலோசனையாளராக இருந்த பணிப்பாளரொருவர்.

(v) பணிப்பாளராக நியமிக்கப்பட்டதிலிருந்து உடனடியாக முற்போந்த ஓராண்டு காலப்பகுதியில் நிதிக் கம்பனியில் பணிப்பாளராக அல்லது மூத்த முகாமைத்துவ அலுவலராக அல்லது நிதிக் கம்பனியின் பணிப்பாளராக அல்லது மூத்த முகாமைத்துவ அலுவலராகவுள்ள ஒருவரை நெருங்கிய உறவினராகவுடைய அல்லது நிதிக் கம்பனியின் வாக்களிக்கும் உரிமைகளில் 10 சதவீதத்தினை அல்லது மற்றொரு நிதிக் கம்பனியின் வாக்களிக்கும் உரிமையில் 20 சதவீதத்தினை விஞ்சிய பங்குகளை வைத்திருக்குப் பணிப்பாளரொருவர்.

(vi) நிதிக் கம்பனியின் பங்குடமையாளரொருவரை, கடன்பாட்டாளரை, கடன் வழங்கியவரை அல்லது அத்தகைய அதே போன்ற ஆர்வலரை பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளரொருவர்.

(vii) நிதிக் கம்பனியின் வேறு எவரேனும் பணிப்பாளர்கள் (பெரும்பாலானவர்கள்) தொழில்புரிபவர்களாக அல்லது பணிப்பாளராகவுள்ள கம்பனியொன்றில் அல்லது வியாபார அமைப்பில் ஊழியரொருவராக அல்லது

பணிப்பாளரொருவராக அல்லது வாக்களிக்கும் உரிமையில் 10 சதவீதம் அல்லது அதற்கும் கூடுதலான நேரடியான அல்லது மறைமுகமான பங்குடமையைக் கொண்டிருக்கும் பணிப்பாளரொருவர்.

(viii) பணிப்புரை 12(இ)இல் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, நிதிக் கம்பனியொன்றுடன் கொடுக்கல்வாங்கல்களைக் கொண்டிருக்கும் கம்பனியொன்றில் அல்லது அமைப்பொன்றில் ஊழியரொருவராக அல்லது பணிப்பாளராகவுள்ள அல்லது பணிப்புரை 12.1(இ)இல் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு நிதிக் கம்பனியின் மற்றைய பணிப்பாளர்களில் வேறு எவரேனும் பணிப்பாளர் வாக்களிக்கும் உரிமையில் 10 சதவீதம் அல்லது கூடுதலான நேரடி அல்லது மறைமுக பங்குடமைகளின் வெளிநின்ற மொத்தப் பெறுமதி எந்தவொரு குறிப்பிட்ட நேரத்திலும் கடைசியாக கணக்காய்வு செய்யப்பட்ட அதன் நிதியியல் கூற்றில் காட்டப்பட்டவாறு நிதிக் கம்பனியின் கூறப்பட்ட மூலதனத்தில் 10 சதவீதத்தினை விஞ்சியிருக்குமிடத்து.

(ஈ) பணிப்பாளர்களின் சுயாதீனத்தினை அல்லது சுயாதீனத்தின் நோக்கத்தினைப் பாதிக்கக்கூடிய, பணிப்புரை 3.7இல் பட்டியலிடப்படாத ஏதேனும் சந்தர்ப்பங்கள் அல்லது தொடர்பு முறைகள் காணப்படுகின்றதா என்பது பற்றி பெயர் குறித்து நியமிக்கும் குழுவும் சபையும் தீர்மானித்தல் வேண்டும்.

(உ) சுயாதீனமான பணிப்பாளரொருவர் சுயாதீனமான பணிப்பாளர் என்ற அந்தஸ்தினைப் பாதிக்கக்கூடிய விதத்தில் சூழ்நிலையில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படுமிடத்து அதனைச் சபைக்கு உடனடியாகத் தெரியப்படுத்தல் வேண்டும். அத்தகைய விடயத்தில் சபை சுயாதீனமான பணிப்பாளர் என்ற அவரின் பதவியை மீளாய்வு செய்தல் வேண்டுமென்பதுடன் பதவியை உறுதிப்படுத்தும் அல்லது மாற்றும் தீர்மானம் பற்றி வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

**3.8 மாற்றுப் பணிப்பாளர்கள்**

(அ) மாற்றுப் பணிப்பாளரொருவரினூடான பிரதிநிதித்துவப்படுத்தல் பின்வருவனவற்றிற்கு மாத்திரமே அனுமதிக்கப்படுகிறது;

(i) நிதித்தொழில் சட்டப் (முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்களின் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடல்) அல்லது திருத்தப்பட்ட பணிப்புரையின் கீழ் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரின் முன்னொப்புதலுடன்; அத்துடன்

(ii) நீண்ட கால சுகயீனம் அல்லது வெளிநாட்டில் இருந்ததன் காரணமாக தொடர்ச்சியாக மூன்று கூட்டங்களுக்கும் கூடுதலான கூட்டங்களுக்கு சமூகமளிக்க முடியாமையினால் பணிப்பாளரொருவராக கடமையினை ஆற்ற முடியாமல் போன தற்போதைய பணிப்பாளர்.

(ஆ) தற்போதுள்ள பணிப்பாளர்கள், ஏற்கனவேயுள்ள மற்றொரு பணிப்பாளருக்கு மாற்றுப் பணிப்பாளராக நியமிக்கப்பட முடியாது.

(இ) பணிப்பாளர்களில் ஒருவருக்கு மாற்றுப் பணிப்பாளரொருவராக நியமிக்கப்படுகின்ற ஆள் அதே சபையிலுள்ள மற்றொரு பணிப்பாளருக்கு மாற்றுப் பணிப்பாளரொருவராகச் செயற்படுவதன் மூலம் அவரின் வகிபாகத்தினை ஆற்ற முடியாது.

(ஈ) மாற்றுப் பணிப்பாளரொருவரை நிறைவேற்றுப் பணிப்பாளரை பிரதிநிதித்துவப்படுத்த நியமிக்க முடியாது.

(உ) மாற்றுப் பணிப்பாளரைச் சுயாதீனப் பணிப்பாளரொருவரை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு நியமிக்கின்ற சந்தர்ப்பத்தில், அவ்வாறு நியமிக்கப்பட்டவர் சுயாதீனமான பணிப்பாளருக்கு ஏற்புடைத்தான பிரமாணங்களையும் பூர்த்திசெய்பவராக இருத்தல் வேண்டும்.

**3.9 பொறுதிக் காலம்**

(அ) மற்றொரு நிதிக் கம்பனியில் முதன்மை நிறைவேற்று அலுவலராக அல்லது பணிப்பாளரொருவராக முன்னர் தொழில்புரிந்த எவரேனுமாள் நிதிக் கம்பனியின் பணிப்பாளரொருவராக அல்லது முதன்மை நிறைவேற்று அலுவலராக நியமிக்கப்படும் பொழுது நியமனத்திற்கு முன்னர் ஆறு மாத பொறுதிக் காலமொன்று இருத்தல் வேண்டும். நிதிக் கம்பனிகளை மீளக் கட்டியெழுப்புவதற்கு ஓய்வுபெறுகின்ற ஆட்களின் அனுபவம் தேவைப்படுகின்ற விதிவிலக்கான சூழ்நிலையொன்று காணப்படுகையில் அதன் பொருட்டு நாணயச் சபையின் முன்னொப்புதலுடன் அவற்றில் மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

(ஆ) சுயாதீனமான பணிப்பாளரொருவராக மாறக்கூடிய பிரமாணங்களைப் பூர்த்தி செய்த பணிப்பாளரொருவரைப் பொறுத்த வரையில், அத்தகைய பணிப்பாளர் இப்பணிப்புரையின் ஏற்பாடுகளின் கீழ் சுயாதீனமற்றவராக முன்னர் பரிசீலிக்கப்பட்டிருக்குமிடத்து, ஓராண்டு கால பொறுதிக் காலத்திற்குப் பின்னர் மட்டுமே அத்தகைய நியமனம் பரிசீலனையில் கொள்ளப்படும்.

**3.10 பொதுவான பணிப்பாளர் பதவி**

நிதிக் கம்பனியொன்றின் பணிப்பாளர் அல்லது மூத்த முகாமைத்துவ அலுவலர், அத்தகைய நிதிக் கம்பனி தாய்க் கம்பனியாக, துணைநிலைக் கம்பனியாக அல்லது இணைக் கம்பனியாக அல்லது பணிப்புரை 3.5(உ)இல் குறித்துரைக்கப்பட்ட

நிபந்தனைகளுக்குட்பட்டு, முதலில் குறிப்பிடப்பட்ட நிதிக் கம்பனியுடன் கூட்டு உடன்படிக்கையினைச் செய்திருந்தாலொழிய மற்றொரு நிதிக் கம்பனியின் பணிப்பாளராக நியமிக்கப்படவோ, தெரிவு செய்யப்படவோ பெயர் குறித்து நியமனம் செய்யப்படவோ கூடாது.

3.11 நிதிக் கம்பனியின் விவகாரங்களுக்கு முழு அர்ப்பணிப்பு மற்றும் போதுமான நேரம் வழங்கப்படுவதை உறுதிசெய்ய, பணிப்பாளர்கள் வைத்திருக்கக்கூடிய பணிப்பாளர் பதவிகளக்கான பொருத்தமான வரையறையினை சபை தீர்மானிக்கும். எனினும், நிதிக் கம்பனியின் பணிப்பாளரொருவர் நிதிக் கம்பனியின் துணைநிலை நிறுவனங்கள் அல்லது இணை நிறுவனங்கள் உட்பட 20 இற்கும் மேற்பட்ட கம்பனிகள்/ சங்கங்கள்/ கூட்டாண்மை சபைகளில் (மாற்று பணிப்பாளர் உட்பட) பணிப்பாளர்களாக அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் பதவிகளில் பதவியொன்றினைக் கொண்டிருத்தலாகாது.

**4. பொருத்தம் மற்றும் தகுதிப் பிரமாணங்களை மதிப்பிடுதல்**

4.1 நிதித்தொழில் சட்ட (முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்களில் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடுதல்) பணிப்புரைக்கிணங்க, நிதிக் கம்பனியொன்றின் பணிப்பாளராக பதவி வகிப்பதற்கு ஆளொருவர் பொருத்தம் மற்றும் தகுதியுடைய ஆளாக இருந்தாலொழிய அந்த ஆள் அத்தகைய நிதிக் கம்பனியின் பணிப்பாளராக நியமிக்கப்படவோ, தெரிவுசெய்யப்படவோ அல்லது பதவி குறித்து நியமனம் செய்யப்படவோ கூடாது.

4.2 70 வயதிற்கு மேற்பட்ட ஆளொருவர் நிதிக் கம்பனியின் பணிப்பாளரொருவராகப் பணியாற்ற முடியாது.

4.3 மேலேயுள்ள 4.2இல் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் எது எப்படியிருப்பினும், இப்பணிப்புரையின் திகதியில் ஏற்கனவே பணிப்பாளரொருவராகப் பதவி வகித்து 2025.03.31 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ 70 வயதினை அடையுமொருவர், பின்வருவனவற்றிற்குட்பட்டு 70 வயதினைக் கடந்த அதிகபட்சம் 75 வயது வரை பின்னரும் தொடர்ந்தும் பணிப்பாளராக பதவி வகிக்க அனுமதிக்கப்படுவார்.

(அ) நிதித்தொழில் சட்ட (முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்களின் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடுதல்) பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்ட பிரமாணங்களின் அடிப்படையில்/ பணிப்பாளர் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின மேற்பார்வைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் பொருத்தம் மற்றும் தகுதி பற்றிய மதிப்பீடு.

(ஆ) 4.3(அ) இலுள்ளவாறு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் நாணயச் சபையின் முன்னொப்புதல்

(இ) 70 வயதிற்கு மேற்பட்ட பணிப்பாளர்களின் உயர்ந்தபட்ச எண்ணிக்கை பணிப்பாளர்களின் எண்ணிக்கையில் 1/5இற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

(ஈ) குறிப்பிட்ட பணிப்பாளர் ஒப்புதலளிக்கப்படும் திகதியன்று, அப்பதவியில் குறைந்தபட்சம் 3 ஆண்டுகாலத்தினைத் தொடர்ச்சியாக நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

**5. பணிப்பாளர்கள் மற்றும் மூத்த முகாமைத்துவ அலுவலர்களின் நியமனம் மற்றும் இராஜினாமா**

5.1 நியமனமங்கள், இராஜினாமாக்கள் அல்லது விலக்குதல்கள் என்பன நிதித்தொழில் சட்ட (முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்களின் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடல்) பணிப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

**6. தலைவர்/ முதன்மை நிறைவேற்று அலுவலர்**

6.1 தலைவர் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலருக்குமிடையிலான பொறுப்புக்களிடையே தெளிவான தன்மையொன்று காணப்படல் வேண்டுமென்பதுடன் இவ்வாட்கள் ஒவ்வொருவரினதும் பொறுப்புக்கள் எழுத்து மூலம் நிர்ணயிக்கப்படுதலும் வேண்டும்.

6.2 தலைவர் கீழேயுள்ள 6.3 இற்கு இணங்க சுயாதீனமான பணிப்பாளரொருவராக இருத்தல் வேண்டும்.

6.3 தலைவர் சுயாதீனமானவராக இல்லாதவிடத்து, சபையானது பெருமளவு சுயாதீனமான அம்சங்களை உறுதிப்படுத்துவதற்காக பொருத்தமான ஆவணப்படுத்தப்பட்ட விசாரணை நியதிகளுடன் சுயாதீனமான பணிப்பாளர்களிலொருவரை மூத்த பணிப்பாளராக நியமித்தல் வேண்டும். மூத்த பணிப்பாளர் மற்றைய பணிப்பாளர்களுக்கும் பங்குடமையாளர்களுக்குமிடையில் இடையேற்பாட்டாளராகப் பணியாற்றுவார். மூத்த பணிப்பாளரின் தலைமையில் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள் தலைவரின் செயலாற்றத்தினை குறைந்தபட்சம் ஆண்டுதோறும் மதிப்பிடல் வேண்டும்.

**6.4 தலைவரின் பொறுப்புக்கள்**

சிறந்த கம்பனி ஆளுகையினைப் பேணுவதில் தலைவரின் வகிபாகம் மிக இன்றியமையாததாகும். தலைவர் பின்வருவனவற்றை மேற்கொள்ளுதல் வேண்டும்:

(அ) சபைக்கு தலைமைத்துவத்தினை வழங்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களிடையே சமநிலையான அதிகாரத்தினைப் பேணுதல்

மற்றும் உறுதிப்படுத்துதல்.

(இ) நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள் இருவரினதும் காத்திரமான பங்களிப்பினை பெற்றுக்கொள்ளுதல்.

(ஈ) சபை காத்திரமான முறையில் தொழிற்படுவதனையும் அதன் பொறுப்புக்களை ஆற்றுவதனையும் உறுதிப்படுத்துதல்.

(உ) அனைத்து முக்கியமான பிரச்சனைகளும் உரிய நேரத்தில் சபையினால் ஆராயப்படுவதனை உறுதிப்படுத்தல்.

(ஊ) ஒழுங்குமுறைப்படுத்துநரின் தீர்மானங்களை/ பணிப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பாக இருத்தல்.

(எ) ஒவ்வொரு சபைக் கூட்டத்திற்குமான நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதற்குப் பொறுப்பாக இருத்தல் மற்றும் நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதற்கும் உரிய ஒழுங்கான முறையில் கூட்டக் குறிப்புக்களைப் பேணுவதற்குமான தொழிற்பாடுகளை கம்பனிச் செயலாளரிடம் ஒப்படைத்தல்.

(ஏ) மூத்த முகாமைத்துவத்தின் நேரடி மேற்பார்வைகளில் அல்லது நாளாந்த தொழிற்பாட்டு நடவடிக்கைகளுடன் தொடர்பான நடவடிக்கைளுடன் தொடர்புபடுகின்ற நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது; அத்துடன்

(ஐ) பங்குடமையாளர்களுடன் காத்திரமான தொடர்புகளைப் பேணுவதற்கும் பங்குடமையாளர்களின் கருத்துக்களைச் சபைக்கு தொடர்பூட்டுவதற்கும் ஏற்றவிதத்தில் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதனை உறுதிப்படுத்தல்

(ஒ) கடந்த 12 மாத காலப்பகுதியில் சபை உறுப்பினர்களின் செயலாற்றம் மற்றும் பங்களிப்புக்கள் தொடர்பில் வருடாந்த மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**6.5 முதன்மை நிறைவேற்று அலுவலரின் பொறுப்புக்கள்**

முதன்மை நிறைவேற்று அலுவலர் நிதிக் கம்பனியின் தொழிற்பாடுகள் மற்றும் வியாபாரங்களின் நாளாந்த முகாமைத்துவத்திற்குப் பொறுப்பான உச்ச நிறைவேற்று அலுவலராகத் தொழிற்படுதல் வேண்டும். முதன்மை நிறைவேற்று அலுவலரின் பொறுப்புக்கள் பின்வருவனற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:

(அ) நிதிக் கம்பனியின் உபாயக் குறிக்கோள்களை எய்தும் பொருட்டு வியாபார மற்றும் இடர்நேர்வு உபாயங்களை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

(ஆ) நிதிக் கம்பனியின் தொழிற்பாடுகளூடாகப் பொறுப்புக்கூறும் தன்மையினையும் வெளிப்படைத்தன்மையினையும் ஊக்குவிக்கின்ற முகாமைத்துவ அமைப்பினை நிறுவுதல் மற்றும் கட்டுப்பாட்டுத் தொழிற்பாடுகளின் காத்திரமான தன்மையினையும் சுயாதீனத்தினையும் பேணிக் காத்தல்.

(இ) நிதிக் கம்பனியில் ஒழுக்கவியல், முன்மதியுடைய தன்மை மற்றும் தொழில்சார்நிபுணத்துவ நடத்தை என்பனவற்றை வலுப்படுத்துகின்ற ஆற்றல்மிக்க கம்பனிக் கலாச்சாரமொன்றினைச் சபையுடன் சேர்த்து ஊக்குவித்தல்.

(ஈ) பொருத்தமான இணங்குவிப்புக் கலாச்சாரமொன்று நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதுடன் ஒழுங்குமுறைப்படுத்துபவருக்கு துல்லியமான தகவல்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கு பொறுப்புக்கூறக் கூடியவராகவும் இருத்தல்.

(உ) ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பினை வலுப்படுத்துதல்; அத்துடன்

(ஊ) மேற்பார்வை தொடர்பான கரிசனைகளையும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் அல்லது உள்ளகக் கொள்கைகளுடன் சரியான நேரத்தில் பொருத்தமான விதத்தில் இணங்கியொழுகாமையைக் கட்டுப்படுத்தல்.

(எ) முதன்மை நிறைவேற்று அலுவலர் தொழில்சார்நிபுணத்துவ நேரம் முழுவதையும் நிதிக் கம்பனிக்கு அர்ப்பணித்தல் வேண்டுமென்பதுடன் பணிப்புரை 3.10 இற்குட்பட்டு மற்றொரு கம்பனியின் நிவேற்றுப் பணிப்பாளர் தவிர்ந்த, மற்றைய ஏதேனும் வியாபாரங்களை மேற்கொள்ளக்கூடாது.

**7. சபையின் கூட்டங்கள்**

7.1 சபையானது ஏறத்தாழ மாதாந்த இடைவெளியில், நிதியாண்டில் குறைந்தபட்சம் பன்னிரண்டு தடவைகளாவது கூடுதல் வேண்டும். எந்தளவிற்கு சாத்தியமோ அந்தளவிற்குப் பத்திரங்களை சுற்றோட்டப்படுத்துவதனூடாக சபையின் சம்மதத்தினைப் பெற்றுக்கொள்வது தவிர்க்கப்பட வேண்டும்.

7.2 அட்டவணைப்படுத்தப்பட்ட சபைக் கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரலில் விடயங்களையும் முன்மொழிவுகளையும் உள்ளடக்குவதற்கு அனைத்துப் பணிப்பாளர்களையும் இயலச்செய்யும் விதத்தில் அதற்கான ஒழுங்குகள் நடைமுறையிலிருப்பதனை சபை உறுதிப்படுத்தல் வேண்டும்.

7.3 சபைக் கூட்டங்களில் அனைத்துப் பணிப்பாளர்களும் கலந்து கொள்வதற்கு சந்தர்ப்பத்தினை வழங்கும் பொருட்டு அட்டவணையிடப்பட்ட சபைக் கூட்டங்களுக்காக குறைந்தபட்சம் 3 நாள் அறிவித்தல் வழங்கப்படல் வேண்டும். மற்றைய

அனைத்துச் சபைக் கூட்டங்களுக்கும் நியாயமான அறிவித்தல் வழங்கப்படல் வேண்டும்.

7.4 பணிப்பாளரொருவர் சபைக் கூட்டத்தினை ஒழுங்கு செய்வதற்கும் கலந்து கொள்வதற்கும் போதுமான நேரத்தினை அர்ப்பணித்தல் வேண்டுமென்பதுடன் கருத்துக்களையும் யோசனைகளையும் வழங்குவதன் மூலம் தீவிரமாக பங்களித்தலும் வேண்டும்.

7.5 சபையின் கூட்டமொன்றிற்கான நிறைவுவெண் பற்றி சரியாகக் குறிப்பிடப்படாத போதும் கூட்ட நிறைவெண்ணிற்காக இருக்க வேண்டிய பணிப்பாளர்களின் எண்ணிக்கை சமூகமளித்திருந்த அத்தகைய கூட்டத்தில் கூட்ட நிறைவெண்ணிற்கான பணிப்பாளர்களின் எண்ணிக்கையில் குறைந்தபட்சம் நான்கிலொரு பங்கினர் சுயாதீனமான பணிப்பாளர்களாக இருத்தல் வேண்டும்.

7.6 அவசியமானவிடத்து, தலைவர் குறைந்தபட்சம் ஆண்டிற்கு இரு தடவைகள் நிறைவேற்று பணிப்பாளர்கள் கலந்து கொள்ளாமலேயே நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களுடன் கூட்டங்களை நடத்தலாம்.

7.7 பணிப்பாளரொருவர் அவர் தொடர்பான விடயமொன்றில் அல்லது அவரின் உறவினர் தொடர்பான விடயமொன்றில் அல்லது அவர் கணிசமான ஈடுபாடுகளைக் கொண்ட விடயம் தொடர்பில், விடயம் மீது சபையின் தீர்மானம் தொடர்பில் அவர் வாக்களிப்பதிலிருந்தும் ஒதுங்கிக் கொள்ளல் வேண்டும் என்பதுடன் சபைக் கூட்டத்தில் தொடர்பான நிகழ்ச்சிநிரலில் அவ்விடயம் பற்றிய கூட்ட நிறைவெண்ணில் அவர் கணக்கிலெடுக்கப்படவும் கூடாது.

7.8 பணிப்பாளரொருவர், உடனடியாக முற்போந்த பன்னிரண்டு மாத காலப்பகுதியில் குறைந்தபட்சம் மூன்றிலிரண்டு பங்கு கூட்டங்களில் கலந்து கொள்ளாதிருந்தால் அல்லது தொடர்ச்சியாக மூன்று கூட்டங்களில் பிரசன்னமாகாது இருந்தால் அவர் பணிப்பாளர் பதவியிலிருந்தும் நிறுத்தப்படுதல் வேண்டும். எனினும், மாற்றுப் பணிப்பாளர்களுக்கான ஏற்புடைத்தான பணிப்புரைகளுக்குட்பட்டு, மாற்றுப் பணிப்பாளரொருவரூடாக பணிப்பாளர் கூட்டத்தில் பங்கேற்குமிடத்து அது, அவர் கூட்டத்தில் கலந்து கொண்டதாக ஏற்றுக்கொள்ளப்படும்.

**7.9 அட்டவணையிடப்பட்ட கூட்டங்கள் மற்றும் அவ்வப்போது நடைபெறும் கூட்டங்கள்**

அட்டவணையிடப்பட்ட கூட்டத்தில் பங்கேற்பாளர்கள் நேரடியாக வருகை தருமாறு ஊக்குவிக்கப்படுவர். அவ்வப்போது நடைபெறும் கூட்டத்தில் குறுகிய கால அறிவித்தலில் பணிப்பாளர்கள் கலந்து கொள்ளமுடியாதவிடத்து இலத்திரனியல் ஊடகமூடான பங்கேற்பு ஏற்றுக்கொள்ளப்படும்.

**8. கம்பனிச் செயலாளர்**

8.1 (அ) சபையானது கம்பனியின் செயலாளரை மூத்த முகாமைத்துவ அலுவலராகப் பதவி குறித்து நியமிக்க வேண்டுமென்பதுடன் அவரின் முதன்மைப் பொறுப்பு சபையின் செயலகப் பணிகளை பங்குடமையாளர்களின் கூட்டங்கள் மற்றும் நியதிச் சட்டங்கள் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட தொழிற்பாடுகளையும் கொண்டு நடத்துவதாகும்.

(ஆ) கீழே 19.2இல் குறிப்பிடப்பட்டவாறு, இடைக்கால ஏற்பாடொன்றிற்குட்பட்டு, 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 222இன் கீழ் கம்பனியொன்றின் செயலாளருக்காக விபரிக்கப்பட்டவாறான அத்தகைய தகைமைகளைக் கொண்ட ஆளொருவரை நிதிக் கம்பனி கம்பனிச் செயலாளராக நியமித்தல் வேண்டும். அவ்வாறு கம்பனிச் செயலாளராக நியமிக்கப்படுகின்ற ஆள் கம்பனியின் ஊழியரொருவராக மாற வேண்டும் என்பதுடன் அவர் மற்றொரு கம்பனியின் ஊழியராக மாறவும்கூடாது.

8.2 சபையின் நடைமுறைகள் மற்றும் அனைத்து ஏற்புடைத்தான சட்டங்கள், பணிப்புரைகள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் பின்பற்றப்படுவதனை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் அனைத்துப் பணிப்பாளர்களும் மதியுரைக்காகவும் பணிகளுக்காகவும் கம்பனிச் செயலாளரை அணுகக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

8.3 தலைவர் சபைக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்கும் பொறுப்பினை கம்பனிச் செயலாளரிடம் ஒப்படைத்திருக்குமிடத்து, கம்பனிச் செயலாளர் அத்தகைய தொழிற்பாட்டினைக் கொண்டு நடத்துவதற்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

8.4 கம்பனிச் செயலாளர் குரல் பதிவு அல்லது காணொளி பதிவு அத்துடன் அல்லது சபையின் கூட்டக் குறிப்புக்களைக் குறைந்தபட்சம் 6 ஆண்டுகளுக்குப் பேண வேண்டுமென்பதுடன் இது சபைக்கான அனைத்துச் சமர்ப்பிப்புக்களையும் உள்ளடக்கியிருத்தலும் வேண்டும்.

8.5 ஒழுங்கானதொரு முறையில் கூட்டக் குறிப்புக்களைப் பேணுவது கம்பனிச் செயலாளரின் பொறுப்பாக இருப்பதுடன் நிதிக் கம்பனியின் அமைப்பு அகவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள சரியான நடைமுறைகளைப் பின்பற்றவும் வேண்டும்.

8.6 சபையின் கூட்டக் குறிப்புக்கள் போதுமான விபரங்களுடன் பதிவுசெய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு திரட்டப்படும் கூட்டக் குறிப்புக்கள் மூலம் சபை அதன் கடமைகளை ஆற்றும் பொழுது உரிய விழிப்புக் கவனத்துடனும் முன்மதியுடனும் நடந்து கொண்டிருக்கின்றதா என்பதனை அறிவதும் சாத்தியமாகும். சபைக் கூட்டத்தின் கூட்டக் குறிப்புக்கள் பின்வருவனவற்றைத் தெளிவாக உள்ளடக்கியிருத்தல் வேண்டும் அல்லது குறிப்பிடுதல் வேண்டும்: (அ) வாதம் பிரதிவாதங்களில் சபையினால் பயன்படுத்தப்பட்ட தரவு மற்றும் தகவல்களின் தொகுப்பு; (ஆ) சபையினால் பரிசீலனைக்கெடுக்கப்பட்ட விடயங்கள்; (இ)

உண்மையினைக் கண்டறியும் கலந்துரையாடல்கள் மற்றும் வாதங்கள் மற்றும் முரண்பாடுகள் தொடர்பான பிரச்சனைகள். இது சபையானது அதன் கடமைகளை உரிய கவனத்துடனும் முன்மதியுடனும் மேற்கொண்டிருந்ததா என்பதனை தெளிவுபடுத்தும் என்பதுடன் இது தனிப்பட்ட ஒவ்வொரு பணிப்பாளரினதும் பங்களிப்பினையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்; (ஈ) தொடர்பான தரப்பினரின் விளக்கங்கள் மற்றும் உறுதிப்படுத்தல்கள். இது, சபையின் உபாயங்கள் கொள்கைகளுடன் இணங்குவிப்புக்கள், தொடர்பான சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகளைப் பின்பற்றுதல்; (உ) நிதிக் கம்பனி உள்ளாகக்கூடிய இடர்நேர்வுகளைப் பற்றிய சபையின் அறிவு மற்றும் புரிந்துகொள்ளும் தன்மை மற்றும் பின்பற்றப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ வழிமுறைகளின் பொதுநோக்கு; மற்றும் (ஊ) தீர்மானங்கள் மற்றும் சபை தீர்மானங்கள்.

8.7 கூட்டக் குறிப்பினை ஏதேனும் நியாயமான காலப்பகுதியில் நியாயமான அறிவித்தலின் பேரில் பணிப்பாளரினால் திறந்து பரிசோதிக்க முடியும்.

**9. சபையினால் தொழிற்பாடுகளைக் கையளித்தல்**

9.1 சபை அதிகாரங்களைக் கையளிப்பதற்கு ஒப்புதலளித்தல் வேண்டுமென்பதுடன், நிதிக் கம்பனியின் சார்பில் மூத்த முகாமைத்துவத்தினால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் அவ்விடயங்களுக்கு ஒப்புதலளித்திருத்தலும் வேண்டும்.

9.2 கீழேயுள்ள பணிப்புரை 10இல் குறிப்பிடப்பட்ட ஏதேனும் குழுக்கள் இல்லாதவிடத்து, அத்தகைய குழுவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட தொழிற்பாடுகள் சபையினால் மேற்கொள்ளப்படும் என்பதனைச் சபை உறுதிப்படுத்தல் வேண்டும்.

9.3 சபையானது, சபைத் தீர்மானங்களுக்கு உதவும் விதத்தில் பொருத்தமான அதிகாரக் கையளிப்புடன் பொருத்தமான முகாமைத்துவ மட்டத்திலான துணைக் குழுக்களை நிறுவலாம்.

9.4 சபையானது, பொதுவாக அதன் தொழிற்பாடுகளைப் புரிவது தொடர்பில் அதன் இயலாற்றலுக்கு இடையூறாக அல்லது அதன் இயலாற்றலைக் குறிப்பிடத்தக்களவிற்கு குறைவடையச் செய்கின்ற அளவிற்கு அத்தகைய விடயங்கள் தொடர்பிலான அதிகாரங்களைச் சபைக் குழுவிற்கு, நிறைவேற்றுப் பணிப்பாளர்களுக்கு அல்லது மூத்த முகாமைத்துவத்திற்கு வழங்கக்கூடாது.

9.5 சபையானது, நடைமுறையில், செயற்படுகின்ற அதிகார வழங்கல்கள் நிதிக் கம்பனியின் தேவைகளுக்கேற்ப காணப்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் காலாந்தர அடிப்படையில் மீளாய்வுகளைச் செய்தல் வேண்டும்.

**10. சபை துணைக் குழுக்கள்**

10.1 அ சபைக் குழுக்களுக்கான தேவைப்பாடுகளைக் குறித்துரைக்கின்ற நோக்கங்களுக்காக, நிதிக் கம்பனிகள் இறுதியாக கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையின் திகதியிலுள்ளவாறான சொத்துத் தளத்தினை அடிப்படையாகக் கொண்டு நிதிக் கம்பனிகள் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. 19.3இல் தெரிவிக்கப்பட்டுள்ள இடைக்கால ஏற்பாடுகளுக்குட்பட்டு நிதிக் கம்பனிகள் ரூ.20 பில்லியனுக்குக் கூடுதலான சொத்துத் தளத்தினைக் கொண்டவை எனவும் ரூ.20 பில்லியனுக்குக் குறைவான சொத்துத் தளத்தினைக் கொண்டவை எனவும் பிரிக்கப்படுகின்றன.

| | ரூ.20 பில்லியனுக்கும் கூடுதலான சொத்துத் தளத்துடன் கூடிய நிதிக் கம்பனிகள் | ரூ.20 பில்லியனுக்கும் குறைவான சொத்துத் தளத்துடன் கூடிய நிதிக் கம்பனிகள் |
|---|---|---|
| **சபை துணைக் குழுக்கள்** | சபைக் கணக்காய்வுக் குழு, ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு, பெயர் குறித்து நியமிக்கும் குழு, மனிதவள மற்றும் ஊதியக் குழு, தொடர்பான தரப்பினர் கொடுக்கல்வாங்கல் மீளாய்வுக் குழு என்பனவற்றை நிறுவுதல் வேண்டும். | குறைந்தபட்சம் சபைக் கணக்காய்வுக் குழு, ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் தொடர்பான தரப்பினர் கொடுக்கல்வாங்கல் மீளாய்வுக் குழு என்பனவற்றை நிறுவுதல் வேண்டும். |
| **கூட்டங்கள்** | சபைக் கணக்காய்வுக் குழு, ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு என்பனவற்றின் கூட்டங்கள் குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கொரு தடவையாவது நடத்தப்பட வேண்டும். மற்றைய குழுக்களின் கூட்டம் குறைந்தபட்சம் வருடாந்தம் நடைபெறல் வேண்டும். | சபைக் கணக்காய்வுக் குழு, ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு என்பனவற்றின் கூட்டங்கள் குறைந்தபட்சம் காலாண்டுகொரு தடவையாவது இடம்பெறல் வேண்டும். மற்றைய குழுக்களின் கூட்டம் குறைந்தபட்சம் வருடாந்தம் நடைபெறல் வேண்டும் |

(ஆ) ஒவ்வொரு சபை துணைக் குழுவும் அதன் அதிகாரத்தினையும் கடமைகளையும் தெளிவாகக் குறித்துரைக்கின்ற, சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட எழுத்திலான விசாரணை நியதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) சபையானது, கம்பனியின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் ஒவ்வொரு சபை துணைக் குழுவினதும் கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளின் செயலாற்றம் தொடர்பான அறிக்கையினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஈ) ஒவ்வொரு துணைக் குழுவும் குழுவின் தலைவரது மேற்பார்வையின் கீழ் அதன் கூட்டங்களை ஒழுங்குசெய்தல், கூட்டக் குறிப்புக்களைப் பேணுதல், குரல் மற்றும் காணொளியினைப் பதிவுசெய்தல், பதிவேடுகளைப் பேணுதல் மற்றும் ஏனைய செயலகப் பணிகளை மேற்கொள்ளுதல் என்பனவற்றிற்காகச் செயலாளரொருவரை நியமித்தல் வேண்டும்.

(உ) ஒவ்வொரு சபை துணைக் குழுவும் குறைந்தபட்சம் மூன்று சபை உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் சபை உள்ளடக்கியுள்ள உறுப்பினர்கள் தேர்ச்சி, அறிவு மற்றும் குழுவின் தொடர்பான பொறுப்புக்களில் போதுமான அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஊ) அதிகாரங்கள் தேவையற்ற விதத்தில் குவிவதைத் தவிர்ப்பதற்கும் புதிய வாய்ப்புக்களை ஊக்குவிப்பதற்காகவும் சபையானது உறுப்பினர்களையும் தலைவரையும் அவ்வப்போது சுழற்சி முறையில் மாற்றுவது பற்றி பரிசீலிக்கலாம்.

**10.2 சபை கணக்காய்வுக் குழு**

சபைக் கணக்காய்வுக் குழு தொடர்பில் பின்வருவன ஏற்புடைத்தாதல் வேண்டும்:

(அ) குழுவின் தலைவர் சுயாதீனமான பணிப்பாளரொருவராக இருத்தல் வேண்டுமென்பதுடன் கணக்கீடு அத்துடன்/ அல்லது, கணக்காய்வில் தகைமைகளையும் அனுபவத்தினையும் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) குழுவிற்கு நியமிக்கப்பட்ட சபை உறுப்பினர்கள் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களாக இருத்தல் வேண்டுமென்பதுடன் பெரும்பாலானவர்கள் தேவையான தகைமைகள் மற்றும் குழுவின் நோக்கத்துடன் தொடர்புடைய அனுபவத்துடன் கூடிய சுயாதீனமான பணிப்பாளர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(இ) கணக்காய்வுக் குழுவிற்கான செயலாளர் முதன்மை உள்ளகக் கணக்காய்வாளராக இருப்பது விரும்பத்தக்கது.

(ஈ) வெளிவாரிக் கணக்காய்வுத் தொழிற்பாடு

(i) குழுவானது, கணக்காய்வு பணிகளுக்கான வெளிவாரிக் கணக்காய்வாளரின் நியமனம் தொடர்பான நியதிச் சட்டங்களுக்குள் இணங்கியொழுவதாக இருத்தல் என்ற நிபந்தனை, பணிக்காலம், கணக்காய்வுக் கட்டணம் மற்றும் கணக்காய்வாளரின் ஏதேனும் இராஜினாமா அல்லது பதவியிலிருந்து நீக்குதல், என்பன தொடர்பான விடயங்களில் விதந்துரைப்புக்களைச் செய்தல் வேண்டும்.

(ii) கணக்காய்வுப் பங்காளரொருவர் பணியில் ஈடுபடும் காலம் ஐந்து ஆண்டுகளை விஞ்சக்கூடாது என்பதுடன், முன்னைய பதவிக்காலம் முடிவடைந்த திகதியிலிருந்து மூன்று ஆண்டுகள் காலாதியாவதற்கு முன்பாக அவர் கணக்காய்வுப் பணிகளில் மீண்டும் ஈடுபடக்கூடாது. மேலும், நிதிக் கம்பனி அதே வெளிவாரி கணக்காய்வுக் கம்பனியின் பணிகளைத் தொடர்ச்சியாக பத்தாண்டுகளுக்கு மேல் பயன்படுத்தக்கூடாது.

(iii) நிதிக் கம்பனியொன்றின் கணக்காய்வுப் பங்காளர் ஏதேனும் நிதிக் கம்பனிகள் கணிசமான பங்குடமையாளராக, பணிப்பாளராக அல்லது மூத்த முகாமைத்துவ அலுவலராக அல்லது ஊழியராக இருக்கக்கூடாது.

(iv) குழுவானது, வெளிவாரிக் கணக்காய்வாளரின் சுயாதீனமான தன்மை, குறிக்கோள் மற்றும் ஏற்புடைத்தான நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுடன் இணங்கிச் செல்லும் விதத்திலமைந்த கணக்காய்வுச் செயன்முறைகளின் காத்திரமான தன்மை என்பன பற்றி மீளாய்வு செய்து கண்காணித்தல் வேண்டும்.

(v) கணக்காய்வுப் பங்காளர்களுக்கு அவர்கள் கணக்காய்வுகளை மேற்கொண்டுவரும் அதே நிதியியல் ஆண்டுப்பகுதியில் நிதிக் கம்பனியில் ஏதேனும் ஆலோசனை அல்லது மற்றைய கணக்காய்வு அல்லாத பணிகள் எதனையும் வழங்கக்கூடாது. தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் கீழ் அனுமதிக்கப்பட்ட கணக்காய்வல்லாப் பணிகளை வழங்குவதற்கான வெளிவாரிக் கணக்காய்வு நிறுவனமொன்றின் நடவடிக்கை தொடர்பில் குழுவானது சபையின் ஒப்புதலுடன் கொள்கையொன்றினை உருவாக்கி நடைமுறைக்கிடல் வேண்டும். அவ்வாறு செய்யும் போது, வெளிவாரிக் கணக்காய்வு நிறுவனத்தின் கணக்காய்வு அல்லாத பணிகள் வெளிவாரிக் கணக்காய்வாளர்களின் சுயாதீன தன்மையினையோ குறிக்கோளினையோ பாதிக்காதிருப்பதனை குழு உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(vi) குழுவானது, கணக்காய்வு தொடங்குவதற்கு முன்னதாக, (i) சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்கு நிதிக் கம்பனியின் இணங்கியொழுகும் தன்மை நிதியியல் அறிக்கையிடல் தொடர்பான முகாமைத்துவத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பனவற்றை மதிப்பிடல் (ii) தொடர்பான கணக்கீட்டுத் தத்துவங்கள் மற்றும் அறிக்கையிடுகின்ற கடப்பாடுகளுக்கிணங்க நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் (iii) ஒன்றிற்கும் மேற்பட்ட கணக்காய்வாளர்கள் தொடர்புபட்டிருக்கும் போது கணக்காய்வாளர்களிடையே இணைப்புக்களை ஏற்படுத்தல் என்பன உள்ளிட்ட கணக்காய்வின் தன்மை மற்றும் செயற்பரப்பு பற்றி வெளிவாரிக் கணக்காய்வாளர்களுடன் கலந்தாராய்ந்து இறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(vii) குழுவானது, நிதிக் கம்பனியின் ஆண்டறிக்கை, கணக்குகள் மற்றும் வெளிப்படுத்துகைக்காகத் தயாரிக்கப்பட்ட காலாந்தர அறிக்கைகள் மற்றும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள குறிப்பிடத்தக்க நிதியியல் அறிக்கையிடல்

நியாயப்படுத்தல்கள் என்பனவற்றிலுள்ள நிதிக் கம்பனியின் நிதியியல் கூற்றுக்களின் நேர்மைத்தன்மையினைக் கண்காணிக்கும் பொருட்டு நிதிக் கம்பனியின் நிதியியல் தகவல்களை மீளாய்வு செய்தல் வேண்டும். சபைக்குச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் நிதிக் கம்பனியின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் மற்றும் காலாந்தர அறிக்கைகள் மீளாய்வு செய்யும் போது குறிப்பாக (i) முக்கியமாக நியாயப்படுத்தல்களுக்குரிய துறைகள்; (ii) கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நடைமுறையில் காணப்படும் ஏதேனும் மாற்றங்கள்; (iii) கணக்காய்விலிருந்து தோன்றுகின்ற குறிப்பிடத்தக்க சீராக்கங்கள்; (iv) இடம்பெற்று வருகின்ற கரிசனைக்குரிய அனுமானங்கள்; மற்றும் (vi) தொடர்பான கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் என்பன மீது மிகுந்த கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும்.

(viii) குழு, இடைக்கால மற்றும் இறுதிக் கணக்காய்வுகளிலிருந்து தோன்றுகின்ற வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள், பிரச்சனைகள், ஆட்சேபனைகளை அவசியமானவிடத்து, மூத்த முகாமைத்துவத்தினர் சமூகமளிக்காத போது கலந்துரையாட வேண்டிய விடயங்கள் உட்பட கணக்காய்வாளர் கலந்துரையாட விரும்புகின்ற விடயங்களையும் குழு கலந்துரையாடுதல் வேண்டும்.

(ix) வெளிக் கணக்காய்வாளரின் முகாமைத்துவக் கடிதத்தினையும் அதற்கான முகாமைத்துவத்தின் பிரதிபலிப்பினையும் அது சமர்ப்பிக்கப்பட்ட 3 மாதங்களுக்குள் குழு மீளாய்வு செய்து சபைக்கு அறிக்கையளித்தல் வேண்டும்.

(உ) குழுவானது, உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் காத்திரமான தன்மை பற்றி குறைந்தபட்சம் வருடாந்தமாவது மீளாய்வினை மேற்கொள்ள வேண்டும்.

(ஊ) உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலயீனங்கள், கொள்கைகள், சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகாமை மற்றும நிதிக் கம்பனிகளின் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகள் தொடர்பில் கணக்காய்வாளர்களினாலும் மேற்பார்வைச் சபைகளினாலும் அடையாளம் காணப்பட்ட மற்றைய பிரச்சனைகளையும் கட்டுப்படுத்துவதற்குச் சரியான நேரத்தில் மூத்த முகாமைத்துவக் குழு தேவையான சரிப்படுத்தல் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதனைக் குழு உறுதிப்படுத்தல் வேண்டும்.

(எ) உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடு:

(i) குழுவானது, நிதிக் கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடு, இடர்நேர்வு முகாமைத்துவம் ஆளுகை முறைமை மற்றும் செயன்முறைகள் என்பனவற்றின் தரம் மற்றும் காத்திரமான தன்மை தொடர்பில் குழுவிற்கு வெளிப்படையான உத்தரவாதத்தினை வழங்கக்கூடிய சுயாதீனமான உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடொன்றினை (ஒன்றில் அலுவலகத்தில் அல்லது வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் நிதித்தொழில் சட்ட வியாபாரத் தொழிற்பாடுகளை வெளியாட்களிடம் ஒப்படைத்தல் அல்லது திருத்தப்பட்ட பணிப்புரை ஏற்பாடுகளுக்கிணங்க) நிறுவுதல் வேண்டும்.

(ii) உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகள் தெளிவான பொறுப்பாணையினைக் கொண்டதாகவும் சபைக் கணக்காய்வுக் குழுவிற்குப் பொறுப்புக்கூறக் கூடியதாகவும் அதன் கணக்காய்வு நடவடிக்கைகளில் சுயாதீனமானதாகவும் இருத்தல் வேண்டும். இது, அவற்றின் பொறுப்புக்களைக் காத்திரமாகவும் குறிக்கோள் வாய்ந்த விதத்திலும் மேற்கொள்ளும் விதத்தில் நிதிக் கம்பனிக்குள் போதுமான நிபுணத்துவத்தினையும் அதிகாரத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(iii) நிதிக் கம்பனியின் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகள் தொடர்பில் சபைக் கணக்காய்வுக் குழுவானது பின்வரும் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்:

(i) உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் செயற்பரப்பு, தொழிற்பாடுகள் மற்றும் தேர்ச்சி மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் வளங்களின் போதுமாந்தன்மை பற்றி மீளாய்வு செய்தல் வேண்டுமென்பதுடன் திணைக்களம் அதன் வேலைகளை மேற்கொள்வதற்கு அவசியமான அதிகாரங்களைக் கொண்டிருப்பது பற்றி அதுவாகவே திருப்திப்பட்டுக் கொள்ளுதலும் வேண்டும்.

(ii) உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் உள்ளகக் கணக்காய்வுச் செயன்முறைகளின் பெறுபேறுகளையும் மீளாய்வு செய்வதுடன், தேவையானவிடத்து உள்ளகக் கணக்காய்வு விதந்துரைப்புக்களின் மீது பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமையினையும் உறுதிப்படுத்தல்.

(iii) உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் தலைவர் மற்றும் மூத்த அலுவலக உறுப்பினர்களினது செயலாற்றத்தினை மதிப்பிடல்.

(iv) உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகள் அதன் கணக்காய்வு நடவடிக்கைகளில் சுதந்திரமானது என்பதனையும் இது பக்கச்சார்பற்ற முறையில் தேர்ச்சியுடனும் உரிய தொழில்சார் நிபுணத்துவக் கவனிப்புடனும் தொழிற்படுவதனை உறுதிப்படுத்தல்.

(v) இலங்கை மத்திய வங்கிக்கு இணங்குவிப்புத் தொழிற்பாடுகளையும் ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கையிடலையும் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகள் காலாந்தர அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுவதனையும்

உறுதிப்படுத்தல்.

(vi) குழுவானது உள்ளகப் புலனாய்வுகளில் கண்டறியப்பட்ட முக்கிய விடயங்களையும் அது தொடர்பான முகாமைத்துவத்தின் பதிலிறுப்புக்களையும் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்.

(ஏ) சபைக் கணக்காய்வுக் குழுவானது இலங்கை மத்திய வங்கியின் நியதிச்சட்ட பரீட்சிப்பு அறிக்கைகளை மீளாய்வு செய்தல் வேண்டுமென்பதுடன் சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட சீர்செய்யும் நடவடிக்கைகளை உறுதிப்படுத்த வேண்டியதுடன் நடவடிக்கைத் திட்டங்கள் காலவரையறைக்குள் நடைமுறைப்படுத்தப்படுவதன் முன்னேற்றத்தினையும் காலாண்டு அடிப்படையில் கண்காணித்தல் வேண்டும்.

(ஐ) குழுவின் கூட்டங்கள்

(i) கலந்துரையாடப்படவுள்ள விடயங்களை உரிய நேரத்தில் அறிவிப்பதுடன் சபைக் கணக்காய்வுக் குழுவானது அதன் கடமைகளை நிறைவேற்றுவதிலும் அதன் கடமைகளையும் பொறுப்புக்களையும் ஆற்றுவதில் அதன் முடிவுகளைப் பதிவுசெய்தலிலும் மேலே 10.1இல் குறித்துரைக்கப்பட்ட விடயங்களைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(ii) ஏனைய சபை உறுப்பினர்கள், மூத்த முகாமைத்துவத்தினர் அல்லது ஊழியர்கள் அவர்களது அதிகாரவரம்பிற்குள் வரும் விடயங்களை ஆராயும் பொழுது, குழுவின் அழைப்பின் பேரில் கூட்டங்களில் கலந்து கொள்ளலாம்.

(iii) சபைக் கணக்காய்வுக் குழுவானது ஆண்டிற்கு இரு தடவைகளாவது எவரேனும் மற்றைய பணிப்பாளர்கள்/ ஊழியர்களின் பிரசன்னமில்லாமல், வெளிவாரிக் கணக்காய்வாளர்களைச் சந்தித்தல் வேண்டும்.

**10.3 சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு**

சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு தொடர்பில் பின்வரும் விடயங்கள் ஏற்புடைத்தாதல் வேண்டும்:

(அ) குழுவிற்கு சுயாதீனமான பணிப்பாளரொருவர் தலைமை தாங்குதல் வேண்டும். அங்கத்துவமானது நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களையும் வங்கித்தொழில், நிதி, இடர்நேர்வு முகாமைத்துவப் பிரச்சனைகள் மற்றும் நடைமுறைகளில் அறிவும் அனுபவமும் கொண்டவர்களை உறுப்பினர்களாக உள்ளடக்குதல் வேண்டும். முதன்மை நிறைவேற்று அலுவலரும் முதன்மை இடர்நேர்வு அலுவலரும் அழைப்பின் பேரில் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம். குழு, முக்கியமான ஆளணியினருடன் மிக நெருக்கமாகப் பணியாற்ற வேண்டுமென்பதுடன் அதிகாரசபையின் உட்கட்டமைப்பு மற்றும் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களுக்குட்பட்டு சபையின் சார்பாக தீர்மானங்களை எடுத்தலும் வேண்டும்.

(ஆ) குழுவின் செயலாளராக முதன்மை இடர்நேர்வு அலுவலர் இருப்பது விரும்பத்தக்கது.

(இ) குழுவானது நிதிக் கம்பனிக்கு ஏற்படக்கூடிய அனைத்து இடர்நேர்வுகளையும் அதாவது கொடுகடன், சந்தை, திரவத்தன்மை, தொழிற்பாடு, உபாய, இணங்குவிப்பு மற்றும் தொழில்நுட்ப இடர்நேர்வுகளை குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கொரு தடவை என்ற அடிப்படையில் பொருத்தமான இடர்நேர்வு குறிகாட்டிகள் மற்றும் முகாமைத்துவ தகவல்களினூடாக மதிப்பீடு செய்தல் வேண்டுமென்பதுடன் இடர்நேர்வு உபாயங்கள் மற்றும் சபையின் இடர்நேர்வேற்பு என்பன மீது விதந்துரைப்புக்களையும் செய்தல் வேண்டும்.

(ஈ) இடர்நேர்வேற்பு கூற்றின் மூலமாக நிதிக் கம்பனியின் இடர்நேர்வேற்பினை உருவாக்குதல் மற்றும் விபரித்தல். இது, இடர்நேர்வின் தனிடப்பட்ட மற்றும் ஒன்றுசேர்ந்த மட்டத்தினையும் நிதிக் கம்பனியொன்று அதன் உபாய வியாபாரக் குறிக்கோள்களை எய்தும் பொருட்டு ஏற்றுக்கொள்ளக்கூடிய, அல்லது, தவிர்க்கக்கூடிய இடர்நேர்வுகளின் வகையினையும் தெளிவுபடுத்துகின்றது. இடர்நேர்வேற்பு உபாயமானது வருவாய்கள், மூலதனம், திரவத்தன்மை போன்றவற்றுடன் தொடர்பானவற்றை விளக்கும் கணியம்சார் வழிமுறைகளையும் புகழ் மற்றும் இணங்குவிப்பு இடர்நேர்வுகளையும் அதேபோன்று பணம் தூயதாக்கல் மற்றும் ஒழுக்கவியல் சார்ந்த இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கான தரம்சார்ந்த வழிமுறைகளையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். வியாபார உபாயங்களைப் பின்பற்றுகின்ற பொழுது தொழிற்படுத்துவதற்கு நிதிக் கம்பனி எதிர்பார்க்கின்றமைக்கிணங்க, இடர்நேர்வற்ற உபாய எல்லைகளையும் வியாபாரத்தின் தன்மைகளையும் விபரித்தல் வேண்டுமென்பதுடன் இதன் இடர்நேர்வேற்பினை நாளாந்த தொழிற்பாட்டு தீர்மானங்களை எடுப்பதுடன் இணைத்து நிதிக் கம்பனி முழுவதிலும் இடர்நேர்வுப் பிரச்சனைகள் மற்றும் உபாயக் கரிசனைகளை அதிகரிக்கின்ற வழிமுறைகளை நிறுவுதலும் வேண்டும்.

(உ) சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவானது குறைந்தபட்சம் ஆண்டுதோறுமாவது நிதிக் கம்பனியின் இடர்நேர்வேற்பு அறிக்கை உட்பட, இடர்நேர்வுக் கொள்கைகளை மீளாய்வு செய்தல் வேண்டும்.

(ஊ) சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவானது, குறித்துரைக்கப்பட்ட இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்காகவும் குழுவினால் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய இடர்நேர்வுகளை தரம்சார்ந்த மற்றும் கணியம்சார்ந்த இடர்நேர்வு வரையறைகளுக்குள் முகாமைப்படுத்துவதற்காகவும் முகாமைத்துவ மட்டக் குழுக்களின் (கொடுகடன், சந்தை, திரவத்தன்மை மற்றும் தொழிற்பாடு போன்றவை) போதுமாந்தன்மையினையும் காத்திரமான தன்மையினையும் மீளாய்வு செய்தல் வேண்டும்.

(எ) குழுவானது, இற்றைப்படுத்தப்பட்ட தடங்கலற்ற வியாபாரம் மற்றும் அனர்த்த மீட்புத் திட்டங்கள் உட்பட இடர்நேர்வு முகாமைத்துவத்தின் அனைத்து அம்சங்களையும் மதிப்பீடு செய்தல் வேண்டும்.

(ஏ) சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவானது முதன்மை இடர்நேர்வு அலுவலர் மற்றும் இணங்குவிப்பு அலுவலரின் செயற்றிறன்களை ஆண்டுதோறும் மதிப்பீடு செய்தல் வேண்டும்.

(ஐ) இணங்குவிப்புத் தொழிற்பாடுகள்

(i) சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவானது, நிதிக் கம்பனியானது சட்டங்கள், ஒழுங்குவிதிகள், பணிப்புரைகள், விதிகள், ஒழுங்குமுறைப்படுத்தல் வழிகாட்டல்கள் மற்றும் வியாபாரத் தொழிற்பாடுகளின் அனைத்து துறைகளின் மீதுமான ஒப்புதலளிக்கப்பட்ட கொள்கைகள் என்பனவற்றுடன் இணங்கியொழுகுவதனை மதிப்பிடுவதற்காக சுயாதீனமான இணங்குவிப்புத் தொழிற்பாடொன்றினை நிறுவுதல் வேண்டும்.

(ii) ரூ.20 பில்லியனுக்கும் கூடுதலான சொத்துத் தளத்துடன் கூடிய உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மூத்த அலுவலராகக் கருதப்படக்கூடிய, போதுமான மூத்த தகைமையினைக் கொண்ட, நாளாந்த முகாமைத்துவத்தினைச் சுயாதீனமாக மேற்கொள்ளக்கூடிய சிறப்பு முதன்மை இணங்குவிப்பு அலுவலரொருவரே இணங்குவிப்பு தொழிற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டுமென்பதுடன் குழுவிற்கு நேரடியாக அறிக்கையளித்தலும் வேண்டும். இணங்குவிப்பு அலுவலர் ஏதேனும் தொழிற்பாட்டு வியாபார நடவடிக்கைகளிலோ அல்லது வருமான உருவாக்கத் தொழிற்பாடுகளிலோ எந்தவொரு முகாமைத்துவத்தினையோ அல்லது நிதியியல் பொறுப்புக்களையோ கொண்டிருக்கக்கூடாது என்பதுடன் "இரட்டைப் பதவிகளை" வகிக்கும் தன்மையும் அதாவது முதன்மைத் தொழிற்பாட்டு அலுவலர், முதன்மை நிதி அலுவலர், முதன்மை உள்ளகக் கணக்காய்வாளர், முதன்மை இடர்நேர்வு அலுவலர் அல்லது வேறு எவரேனும் மூத்த முகாமைத்துவத்தினைச் சேர்ந்த ஒருவர் இணங்குவிப்பு அலுவலராகப் பணியாற்றக்கூடாது.

(iii) ரூ.20 பில்லியனுக்கும் குறைவான சொத்துத் தளத்தினைக் கொண்ட நிதிக் கம்பனிகளின் அக்கறையின் முரண்பாட்டினைத் தவிர்க்கும் விதத்தில், போதுமான மூத்த அனுபவத்தினையும் மூத்த முகாமைத்துவ அலுவலராகவும் கருதப்படக்கூடிய ஒருவரை இணங்குவிப்பு அலுவலராக நியமித்தல் வேண்டும்.

(iv) குழுவானது, இணங்குவிப்பு அலுவலகரொருவரின் பொறுப்புக்கள் பின்வருவனவற்றைப் பரந்தளவிற்கு உள்ளடக்கியிருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்: (அ) ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை மீறுகின்ற இடர்நேர்வினை ஒழிப்பதற்கு அல்லது குறைப்பதற்கு ஏற்றவிதத்தில் வடிவமைக்கப்பட்ட கொள்கைகளையும் நடைமுறைகளையும் உருவாக்கி நடைமுறைக்கிடல்; (ஆ) அனைத்து மட்டங்களிலும் இணங்குவிப்புக் கலாச்சாரத்தினை அதிகரிக்கும் விதத்தில் நிதிக் கம்பனியில் அனைத்து மட்டத்திலுள்ளவர்களுக்கும் இணங்குவிப்புக் கொள்கைகளும் நடைமுறைகளும் சென்றடைவதனை உறுதிப்படுத்தல்; (இ) ஒழுங்குமுறைப்படுத்தல் விதிகள் மற்றும் உள்ளக இணங்குவிப்பு நியமங்கள் இணங்கியொழுகுவதனை மதிப்பிடுவதற்காக மீளாய்வுகள் பொருத்தமான கால இடைவெளிகளில் மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்தல்; (ஈ) நிதிக் கம்பனியின் வியாபாரங்களுடன் தொடர்பான புதிய அனைத்துச் சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்திகளைப் புரிந்துகொண்டு அவற்றைப் பிரயோகித்தல்; (உ) புதிய சாதனங்களினதும் முறைமைகளினதும் வடிவமைப்பும் அமைப்பியல்பும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள், உள்ளக இணங்குவிப்புக்கள் மற்றும் ஒழுக்கவியல் சார்ந்த நியமங்கள் என்பனவற்றுடன் இணங்கிச் செல்வதனை உறுதிப்படுத்தும் விதத்தில் நேரகாலத்துடன் அவற்றில் ஈடுபாடு கொள்ளல்; (ஊ) கடுமையான அல்லது விடாப்பிடியான இணங்குவிப்புப் பிரச்சனைகளை எடுத்துக்காட்டுதல் மற்றும் பொருத்தமானவிடத்து ஏற்றுக்கொள்ளக்கூடிய நேரத்திற்கென அவை சீர்செய்யப்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் முகாமைத்துவத்துடன் பணியாற்றுதல்; அத்துடன் (எ) தெளிவான மற்றும் சரியான நேரத்திலான தொடர்பூட்டல் மற்றும் மிக உயர்ந்த ஒருங்கிணைப்புடன் ஒழுங்குமுறைப்படுத்துநர்களின் குறிக்கோள்கள் பற்றி பரஸ்பரம் புரிந்துகொள்வதன் அடிப்படையில் ஒழுங்குமுறைப்படுத்துநர்களுடன் கிரமமான தொடர்புகளைப் பேணுவதுடன் சிறந்த உறவுமுறைகளுடன் பணியாற்றுதல்.

(ஒ) இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடு

(i) சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவானது, நிதிக் கம்பனி முழுவதிலும் காணப்படும் இடர்நேர்வுகளை ஏற்கும் நடவடிக்கைகளை முகாமைப்படுத்துவதற்குப் பொறுப்பாக சுயாதீனமான இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடொன்றினை நிறுவுதல் வேண்டும்.

(ii) ரூ.20 பில்லியனுக்கும் கூடுதலான சொத்துத் தளத்துடன் கூடிய நிதிக் கம்பனிகளைப் பொறுத்தவரை, தனியான இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தினையும் மூத்த முகாமைத்துவ அலுவலராகக் கருதப்படக்கூடிய சிறப்பு இடர்நேர்வு அலுவலரையும் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அவர் இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாட்டினை மேற்கொள்ள வேண்டுமென்பதுடன் காலாந்தர அடிப்படையில் அறிக்கையளித்தலும் வேண்டும்.

(iii) நிதிக் கம்பனியின் இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடு அதன் உபாயக் குறிக்கோள்களுக்கு ஆதரவளிக்கக்கூடிய

விதத்திலும் பல்வேறுபட்ட ஆர்வலர்களுக்கான பரந்தளவு பொறுப்புக்களை நிறைவேற்றக்கூடிய விதத்திலும் உத்வேகம் மிக்கதும் காத்திரமானதுமானதுமாகக் காணப்படுவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு முதன்மை இடர்நேர்வு அலுவலர் இடர்நேர்வேற்பு உபாயம் உட்பட, சபை ஒப்புதலளித்த இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகளையும் செயன்முறைகளையும் நடைமுறைப்படுத்துவதற்கான பிரதான பொறுப்பினைக் கொண்டிருக்கின்றார்.

(iv) சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவானது, முதன்மை இடர்நேர்வு அலுவலர் சபை ஒப்புதலளித்த பின்வருவனவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினை அபிவிருத்தி செய்வதற்கும் நடைமுறைப்படுத்துவதற்குமான பொறுப்புகளைக் கொண்டிருக்கின்றார் என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்: (அ) சாத்தியமான பல்வேறுபட்ட இடர்நேர்வுகள் மற்றும் மோசடிகள்; (ஆ) அத்தகைய இடர்நேர்வுகள் மற்றும் மோசடிகளுக்குச் சாத்தியமான மூலங்கள்; (இ) அழுத்தப் பரீட்சிப்பு உட்பட தரம்சார் மற்றும் கணியம்சார் பகுப்பாய்வுகளை உள்ளடக்கிய அத்தகைய இடர்நேர்வுகளை அடையாளம் காணுதல், மதிப்பிடுதல், கண்காணித்தல் மற்றும் அறிக்கையளித்தல் பொறிமுறைகள்; (ஈ) முன்மதியுடைய மட்டத்தில் இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கும் தணிப்பதற்கும் காத்திரமான வழிமுறைகள்; அத்துடன் (உ) அத்தகைய கட்டுப்பாடுகளுக்கும் தணிப்புக்களுக்கும் பொறுப்பான தொடர்பான அலுவலர்கள் மற்றும் குழுக்கள். இக்கட்டமைப்பு வேலைகளைக் குறைந்தபட்சம் ஆண்டுதோறுமாவது மீளாய்வு செய்து இற்றைப்படுத்தல் வேண்டும்.

(v) முதன்மை இடர்நேர்வு அலுவலர் மூலதனம் மற்றும் திரவத்தன்மை திட்டமிடல், புதிய சாதனங்கள் அல்லது சேவைகளின் அபிவிருத்தி போன்ற முக்கிய தீர்மானங்களை எடுக்கின்ற செயன்முறைகளில் பங்கேற்றல் வேண்டுமென்பதுடன் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கு விதந்துரைப்புக்களைச் செய்தலும் வேண்டும்.

(vi) முதன்மை இடர்நேர்வு அலுவலர் இற்றைப்படுத்தப்பட்ட இடர்நேர்வு பதிவேடொன்றினைப் பேணுதல் வேண்டுமென்பதுடன் அதனைக் காலாண்டு அடிப்படையில் குழுவிற்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(vii) சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவானது, சபைக் கூட்டத்தினை உடனடுத்து சபையின் கருத்து, இணக்கம் அத்துடன்/ அல்லது குறிப்பிட்ட பணிப்புரைகளை எதிர்பார்த்து இடர்நேர்வு மதிப்பீட்டு அறிக்கையினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

### 10.4 நியமனக் குழு

நியமனக் குழு தொடர்பில் பின்வருவன ஏற்புடைத்தாதல் வேண்டும்.

(அ) குழுவானது நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டுமென்பதுடன் பெரும்பான்மையினர் சுயாதீனமான பணிப்பாளர்களாக இருப்பதும் விரும்பத்தக்கது. சுயாதீனமான பணிப்பாளரொருவர் கூட்டத்திற்கு தலைமை தாங்குதல் வேண்டும். முதன்மை நிறைவேற்று அலுவலர் குழுவின் அழைப்பின் பேரில் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம்.

(ஆ) கம்பனிச் செயலாளர், நியமனக் குழுவின் செயலாளராகவும் இருப்பது விரும்பத்தக்கது.

(இ) குழுவானது புதிய பணிப்பாளர்கள், மூத்த முகாமைத்துவத்தினரைத் தெரிவுசெய்வதற்கு/ நியமிப்பதற்கு முறைசார்ந்த மற்றும் வெளிப்படையான நடைமுறையை நடைமுறைப்படுத்தல் வேண்டும். முதன்மைக் கணக்காய்வாளர், முதன்மை இடர்நேர்வு அலுவலர் மற்றும் முதன்மை இணங்குவிப்பு அலுவலர் தவிர்ந்த, ஏனைய மூத்த முகாமைத்துவத்தினர் தேவையானவிடத்து முதன்மை நிறைவேற்று அலுவலரின் விதந்துரைப்புடன் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) குழுவானது, பணிப்பாளர்கள் மற்றும் மூத்த முகாமைத்துவத்தினர் அவர்களுடைய தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கு நிதித்தொழில் சட்ட முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்களின் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடல் பணிப்புரைக்கமைய இருப்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(உ) தெரிவுசெய்யும் செயன்முறையானது, உத்தேசப் பணிப்பாளர்களின்

(i) அறிவு, தேர்ச்சி, சுயாதீனம் மற்றும் சபை தொடர்பில் அவர்களது பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கான குறிக்கோள் என்பனவற்றைக் கொண்டிருக்கின்றார்களா என்பதனை மீளாய்வு செய்தல்; (ii) நேர்மை மற்றும் சிறந்த புகழ் தொடர்பான பதிவுகளைக் கொண்டிருத்தல் மற்றும் (iii) அவர்களது பொறுப்புக்களை முழுமையாக நிறைவேற்றுவதற்குப் போதுமான நேரத்தினைக் கொண்டிருத்தல் தொடர்பான மீளாய்வுகளை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

(ஊ) சபையின் உள்ளமைப்பானது, வைப்பாளர்களின் நலவுரித்துக்களுக்கும் பொதுவாக நிதிக் கம்பனிக்கும் தீங்குகளை விளைவிக்கும் விதத்தில் எவரேனும் தனிப்பட்டவர்கள் அல்லது தனிப்பட்டவர்களின் சிறிய குழுவினால் ஆதிக்கம் செலுத்தப்படாததாக இருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு முயற்சிக்க வேண்டும்.

(எ) குழுவானது பணிப்பாளர்களும் மூத்த முகாமைத்துவத்தினரும் நிதித்தொழில் சட்டத்தின்படி (முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்களின் பொருத்தம் மற்றும் தகுதியின் மதிப்பீடு) அவர்களது தொழிற்பாடுகளை ஆற்றுவதற்கு பொருத்தமும் தகுதியுமுடைய ஆட்களாக இருக்கின்றனரா என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(ஏ) புதிய பணிப்பாளரொருவர் சபைக்கு நியமிக்கப்பட்டதையடுத்து, நிதிக் கம்பனி உடனடியாக பங்குடமையாளர்களுக்கு

(i) பணிப்பாளரின் நியமனம் பற்றியும்; (ii) தொடர்பான தொழிற்பாட்டுத் துறையில் அவர் கொண்டிருக்கும் நிபுணத்துவ தன்மை பற்றியும்; (iii) பணிப்பாளர், பணிப்பாளர் சபைக் குழுக்களில் பணிப்பாளராக பதவி வகித்த கம்பனிகளின் பெயர்கள் பற்றியும்; (iv) அத்தகைய பணிப்பாளரைச் சுயாதீனமானவராகக் கருதமுடியுமா என்பது பற்றியும் உடனடியாக வெளிப்படுத்தல் வேண்டும்.

(ஐ) குழுவானது, இணைந்த அறிவு, நிதிக் கம்பனியினால் எதிர்நோக்கப்பட்ட உபாயக் கேள்வியை நோக்கிய செயலாற்றம் மற்றும் சபையின் ஒட்டுமொத்தப் பொறுப்புக்களை ஆற்றுவதில் தொடர்பான பணிப்பாளரினால் வழங்கப்பட்ட பங்களிப்பு என்பனவற்றினைப் பரிசீலனையில் கொண்டு தற்போதுள்ள பணிப்பாளர்களை மீண்டும் தெரிவுசெய்வதற்கு விதந்துரைக்கலாம் (விதந்துரைக்காமலும் விடலாம்).

(ஒ) குழுவானது காலத்திற்குக் காலம் மேலதிக/ புதிய நிபுணத்துவத்திற்கான தேவைப்பாடுகள் மற்றும் ஓய்வுபெறுகின்ற பணிப்பாளர்கள் மற்றும் மூத்த முகாமைத்துவத்தினரின் பதவிகளுக்கு மற்றவர்களை நியமிக்கும் ஏற்பாடுகள் பற்றி பரிசீலனையில் கொண்டு விதந்துரைத்தல் வேண்டும்.

(ஓ) நியமனக் குழுவின் உறுப்பினரொருவர் அவரின் சொந்த நியமனம்/ மீள்நியமனம் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் கூட்டத்தில் பங்கேற்கக்கூடாதென்பதுடன் அவரைத் தொடர்ந்து வருபவரின் நியமனம் இடம்பெறும் வேளையில் குழுவின் தலைவர் தலைமை தாங்கக்கூடாது.

**10.5 மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு**

மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு தொடர்பில் பின்வருவன ஏற்புடைத்தாதல் வேண்டும்:

(அ) குழுவிற்கு நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளரொருவர் தலைமை தாங்க வேண்டுமென்பதுடன் பெரும்பான்மையான உறுப்பினர்கள் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) மனிதவளம் மற்றும் ஊதியக் குழுவின் செயலாளர், கம்பனிச் செயலாளராக இருப்பது சிறந்ததாக இருக்கும்.

(இ) குழுவானது, நிதிக் கம்பனியின் நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் மற்றும் மூத்த முகாமைத்துவத்தினர் தொடர்பான ஊதியக் கொள்கையினையும் (சம்பளங்கள், படிகள் மற்றும் ஏனைய நிதியியல் கொடுப்பனவுகள்) நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களுக்கான கட்டணங்கள் மற்றும் படிகளின் அமைப்பியல்புகளையும் தீர்மானிக்கும்.

(ஈ) ஊதியக் கொள்கையினை உருவாக்குவதில் முறைசார்ந்த மற்றும் வெளிப்படையான நடைமுறைகள் பின்பற்றப்படுதல் வேண்டும்.

(உ) குழுவானது நிதிக் கம்பனியின் அனைத்து ஊழியர்களுக்குமான சம்பளங்கள், படிகள் மற்றும் ஏனைய நிதியியல் ஊக்குவிப்புக்களின் கொடுப்பனவு தொடர்பான சபையின் ஒப்புதலுக்காக ஊதியக் கொள்கையினை விதந்துரைத்தல் வேண்டும். கணிசமான பொருண்மிய மாற்றங்களைச் செய்யும் வேளை உட்பட கொள்கையானது காலாந்தர மீளாய்விற்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(ஊ) ஊதிய அமைப்பு, நிதிக் கம்பனியின் வியாபார உபாயம், குறிக்கோள்கள், பெறுமானங்கள், நீண்ட கால நலவுரித்துக்கள் மற்றும் செலவு அமைப்பு என்பனவற்றுடன் இசைந்து செல்வதாக இருத்தல் வேண்டும். இது, அக்கறைகளின் முரண்பாட்டினைத் தவிர்க்கும் விதத்தில் வழிமுறைகளையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். குறிப்பாக, ஊதிய அமைப்புக்களிடையே பதிந்து காணப்படும் ஊக்குவிப்புக்கள், அலுவலர்கள் மிகையான இடர்நேர்வுகளை ஏற்றுக்கொள்ள அல்லது சுய ஈடுபாடுகளுடன் செயற்படத் தூண்டுவதாக இருத்தலாகாது.

(எ) குழுவானது, குறைந்தபட்சம் ஆண்டுதோறும் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ள இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை நிர்ணயிப்பது தொடர்பில் மூத்த முகாமைத்துவத்தினரின் (முதன்மை உள்ளகக் கணக்காய்வாளர், முதன்மை இணங்குவிப்பு அலுவலர், முதன்மை இடர்நேர்வு அலுவலர் நீங்கலாக) செயலாற்றத்தினை மீளாய்வு செய்தல் வேண்டுமென்பதுடன் ஊதியம், நன்மைகள் மற்றும் ஊக்குவிப்புக்களை அடிப்படையாகக் கொண்ட செயலாற்றத்தின் மற்றைய கொடுப்பனவுகளைத் திருத்துவதற்கான அடிப்படையினையும் தீர்மானித்தல் வேண்டும்.

(ஏ) குழுவானது, மூத்த முகாமைத்துவத்தினர் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்படும் போது குழுக் கூட்டத்தில் மூத்த முகாமைத்துவத்தினர் கலந்து கொள்ளாமல் இருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

**11. உள்ளகக் கட்டுப்பாடுகள்**

11.1 நிதிக் கம்பனியானது நிறுவன ரீதியான அமைப்பு, கடமைகளை வெவ்வேறாகப் பிரித்தல், தெளிவான முகாமைத்துவ அறிக்கையிடல் வழிகள் மற்றும் தொழிற்பாடு சார்ந்த இடர்நேர்வுகளைத் தணிக்கும் பொருட்டான போதுமான தொழிற்பாட்டு நடைமுறைகள் என்பனவற்றை உள்ளடக்கிய நன்கு நிறுவப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

11.2 பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையானது: (அ) காத்திரமானதும் வினைத்திறன் கொண்டதுமான தொழிற்பாடுகளை ஊக்குவித்தல்; (ஆ) நம்பகமான நிதியியல் தகவல்களை வழங்குதல்; (இ) சொத்துக்களைப் பாதுகாத்தல்; (ஈ) ஒழுங்கீனங்கள்,

மோசடி மற்றும் தவறுகள் என்பனவற்றிலிருந்து தோன்றுகின்ற தொழிற்பாட்டு இடர்நேர்வுகளின் இழப்புக்களைக் குறைத்தல்; (உ) காத்திரமான இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகளை உறுதிப்படுத்தல்; மற்றும் (ஊ) சட்டங்கள், ஒழுங்குவிதிகள், பணிப்புரைகள் மற்றும் உள்ளகக் கொள்கைகளுடன் தொடர்பான இணங்குவிப்புக்களை உறுதிப்படுத்தல் என்பனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

11.3 அனைத்து ஊழியர்களுக்கும் குறிக்கோள்களை எய்துவதற்கான அவர்களது பொறுப்புக்கூறும் தன்மையின் ஒரு பகுதியாக உள்ளகக் கட்டுப்பாடுகளுக்கான பொறுப்பு வழங்கப்படுதல் வேண்டும்.

**12. தொடர்பான தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்கள்**

12.1 (அ) சபையானது பின்வருவனவற்றை உள்ளடக்குகின்ற தொடர்பான தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்களுக்காக கொள்கையொன்றினை நிறுவிக் கொள்ளுதல் வேண்டும்.

(ஆ) அனைத்து நிதிக் கம்பனிகளும் தொடர்பான தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள் மீளாய்வுக் குழுவொன்றினை நிறுவுதல் வேண்டுமென்பதுடன் தலைவர் சுயாதீனமான பணிப்பாளராக இருத்தல் வேண்டுமென்பதுடன் உறுப்பினர்கள் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

(இ) இப்பணிப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ள தொடர்பான தரப்பினருடனான வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டும்:

(i) கடன் வசதிகளை வழங்குதல்.

(ii) வைப்புக்கள், கடன்பாடுகள் மற்றும் வேறு ஏதேனும் கொடுபடத்தக்கவைகள் வடிவிலமைந்த நிதிக் கம்பனிகளுக்கான பொறுப்புக்களை உருவாக்குதல்.

(iii) நிதிக் கம்பனிகளுக்கு நிதியியல் அல்லது நிதியியலல்லாத பணிகளை வழங்குதல் அல்லது அத்தகைய பணிகளை நிதிக் கம்பனிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல்.

(iv) சொத்துரிமைகளைப் பகிர்ந்து கொள்ளுதல் அல்லது பகிரங்கமான முறையில் கிடைக்காத இரகசியமான அல்லது தகவல்களை அல்லது அத்தகைய தொடர்பான தரப்பினருக்கு பயனளிக்கக்கூடிய வேறு ஏதேனும் உணர்வுபூர்வமான தகவல்களுக்கு இட்டுச்செல்லக்கூடிய நிதிக் கம்பனிகளுக்கும் தொடர்பான தரப்பினர்களுக்குமிடையில் அறிக்கையிடல் தொடர்புகளையும் தகவல் பாய்ச்சல்களையும் உருவாக்குதல் அல்லது பேணுதல்.

12.2 குழுவானது, நிதிக் கம்பனிக்கும் எவரேனுமாளுக்குமிடையிலான ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களிலிருந்து, குறிப்பாக, இப்பணிப்புரைகளின் நோக்கத்திற்காக “தொடர்பான தரப்பினர்” எனக் கருதப்படக்கூடிய ஆட்களின் பின்வரும் வகையினருடனான கொடுக்கல்வாங்கல்களிலிருந்து தோன்றக்கூடிய ஏதேனும் அக்கறைகளின் முரண்பாட்டினைத் தவிர்ப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். இது தொடர்பில் தொடர்பான தரப்பினர் என அடையாளம் காணப்பட்ட இயல்பான ஆட்கள்/ நிறுவனங்களின் பெயர் பட்டியலொன்று இருத்தல் வேண்டும். இது காலாந்தர மற்றும் தேவையேற்படும் போதுமான மீளாய்வுகளுக்குட்பட்டதாகும்.

(அ) பணிப்பாளர்கள் மற்றும் மூத்த முகாமைத்துவத்தினர்.

(ஆ) நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நிதிக் கம்பனியின் 10 சதவீதத்திற்கு மேற்பட்ட வாக்களிக்கும் உரிமையினைக் கொண்டிருக்கும் பங்குகளைக் கொண்ட பங்குடமையாளர்கள்.

(இ) நிதிக் கம்பனிகளில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தக்கூடிய அல்லது மறுதலையான தன்மைகளைக் கொண்ட துணைநிலை நிறுவனங்கள், இணை நிறுவனங்கள், இணைந்த நிறுவனங்கள் (சகோதர கம்பனிகள்) உடமைக் கம்பனிகள், தாய்க் கம்பனிகள் மற்றும் ஏனைய தரப்பினர்கள் (அவர்களின் துணைநிலை நிறுவனங்கள், இணை நிறுவனங்கள் மற்றும் இணைந்தவைகள் உட்பட).

(ஈ) பணிப்பாளர்கள் மற்றும் பந்தி (ஆ) அல்லது (இ)இல் உள்ள சட்ட ஆட்களின் மூத்த முகாமைத்துவம்.

(உ) பந்தி (அ), (ஆ) அல்லது (ஈ)இல் விபரிக்கப்பட்டுள்ள இயல்பான ஆட்களின் உறவினர்கள்.

(ஊ) ஏதேனும் நிதிக் கம்பனியின் பணிப்பாளர்கள், மூத்த முகாமைத்துவத்தினர் அல்லது ஏதேனும் நிதிக் கம்பனியின் பணிப்பாளர் அல்லது மூத்த முகாமைத்துவத்தினர் அல்லது வாக்களிக்கும் உரிமையின் கணிசமான ஈடுபாடுகளில் 10 சதவீதத்திற்கும் கூடுதலான உடமைகளைக் கொண்டுள்ள இதன் பங்குடமையாளர்களின் நெருங்கிய உறவினர்கள் தொடர்பிலான எவரேனும் கரிசனைக்குரியவர்கள்.

12.3 குழுவானது, நிதிக் கம்பனியானது தொடர்பான தரப்பினருடன் வியாபாரக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் போது, நிதிக் கம்பனியின் இவர்களையொத்த மற்றைய தரப்பினருக்கு வழங்குகின்ற விதத்தினை விட இவர்களுக்கு “மிகச் சாதகமான வாய்ப்புக்களை” வழங்கும் விதத்தில் நடந்து கொள்ளக்கூடாது என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும். இப்பந்தியின் நோக்கத்திற்காக “மிகச் சாதகமான வாய்ப்பு” என்பது:

(i) குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு நிதிக் கம்பனியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தின் முன்மதியுடைய சதவீதத்தினை விஞ்சுகின்ற விதத்தில் "மொத்த கடன் வசதிகளை" வழங்குதல்.

(ii) குறைந்த வட்டி வீதங்களை விதித்தல் அல்லது தொடர்பற்ற ஒப்பிடத்தக்க இணைத்தரப்பினருடனான ஒப்பிடத்தக்க கொடுக்கல்வாங்கல்களுக்குச் செலுத்தப்பட்ட வீதத்தினை விஞ்சிய வீதமொன்றினைச் செலுத்துதல்.

(iii) தொடர்பற்ற தரப்பினர்களுடனான வியாபாரத்தின் வழமையான காலப்பகுதியில் வழங்கப்பட்ட நியதிகளுக்கும் அப்பால் மிகச் சாதகமான நியதிகள் போன்ற முன்னுரிமை வாய்ந்த வாய்ப்புக்களை வழங்கல்.

(iv) சரியான மதிப்பீட்டு நடைமுறைகள் இல்லாமல் தொடர்பான தரப்பினருக்கு அல்லது அவர்களிடமிருந்து பணிகளை வழங்கல் அல்லது பெற்றுக்கொள்ளுதல்.

(v) சட்டபூர்வமான கடமைகளை ஆற்றுவதற்கும் தொழிற்படுவதற்கும் தேவைப்படக்கூடியவை தவிர, பங்குச் சொத்துரிமை, இரகசியத்தன்மை அல்லது அத்தகைய தொடர்பான தரப்பினருக்கு நன்மைகளையளிக்கக்கூடிய வேறுவகையிலான உணர்வுபூர்வமான தகவல்களுக்கு இட்டுச் செல்லக்கூடிய விதத்தில் நிதிக் கம்பனிக்கும் எவரேனும் தொடர்பான தரப்பினர்களுக்குமிடையில் அறிக்கையிடும் வழிகளையும் தகவல் பாய்ச்சல்களையும் பேணுதல்.

## 13. குழும ஆளுகை

### 13.1 உடமைக் கம்பனியொன்றாக நிதிக் கம்பனியின் பொறுப்புக்கள்

(அ) நிதிக் கம்பனி அதன் துணைநிலைக் கம்பனிகள் மற்றும் இணைக் கம்பனிகள் தொடர்பில் போதுமான மேற்பார்வையினை மேற்கொள்வதற்குப் பொறுப்பாக இருக்கின்ற வேளையில் அவற்றிற்கு ஏற்புடைத்தான சுயாதீனமான சட்ட, ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் ஆளுகைகளுக்கு இணங்கி நடப்பதற்கும் பொறுப்புடையதாகும்.

(ஆ) உச்ச நிதிக் கம்பனியின் சபையானது:

(i) குழும ஆளுகைக் கட்டமைப்பு, குழும வாரியான கொள்கைகளை மேற்பார்வை செய்வதற்கும் நடைமுறைப்படுத்துவதற்குமான வகிபாகங்களினையும் பொறுப்புக்களையும் தெளிவாக வரையறுப்பதனை உறுதிப்படுத்துதல்.

(ii) ஒவ்வொரு கம்பனிக்குமான சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் உட்பட, தொழிற்பாட்டு சூழலில் காணப்படும் வேறுபாடுகள் சரியான முறையில் விளக்கப்பட்டு குழும ஆளுகைக் கட்டமைப்பில் பிரதிபலிப்பதனை உறுதிப்படுத்துதல்.

(iii) உச்ச நிதிக் கம்பனியினையும் அதன் துணைநிலைக் கம்பனிகளையும் பாதிக்கக்கூடிய பொருண்மிய இடர்நேர்வினையும் அதன் அபிவிருத்தியையும் புரிந்துகொள்ளுதல் மற்றும் முகாமைத்துவம் செய்தலை ஊக்குவிக்கின்ற அறிக்கையிடுகின்ற ஏற்பாடுகளைக் கொண்டிருத்தல்.

(iv) குழுமத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டுக் கட்டமைப்பு, குழுமங்களிடையேயான கொடுக்கல்வாங்கல்களிலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வுகள் உட்பட, குழுமம் முழுவதிலுமுள்ள இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்தக்கூடிய தன்மையினைக் கொண்டிருக்கின்றதா என்பதனை மதிப்பிடல்; அத்துடன்

(v) ஏற்புடைத்தான அனைத்துச் சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் நிதிக் கம்பனியினதும் அதன் துணைநிலை நிறுவனங்களினதும் இணங்குவிப்புக்களைக் காத்திரமான முறையில் கண்காணிப்பதற்குப் போதுமான மூலவளங்கள் காணப்படுவதனை உறுதிப்படுத்தல்.

(இ) உச்ச நிறுவனம் என்ற ரீதியில் நிதிக் கம்பனி, குழும கட்டமைப்பானது காத்திரமான மேற்பார்வையினைப் புரிவதற்கான இயலாற்றலைக் குறைக்கவில்லை என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். சபையானது அதன் முகாமைத்துவத்தின் கீழ் புதிய சட்டபூர்வமான நிறுவனங்களின் உருவாக்கத்திற்கு ஒப்புதலளிக்கின்ற செயன்முறையைப் போதுமானதும் காத்திரமானதுமான கொள்கைகள் மற்றும் கட்டுப்பாடுகளூடாக அனைத்துப் பொருண்மிய ரீதியான குழும அடிப்படையிலான இடர்நேர்வுகளை அடையாளம் கண்டு முகாமைப்படுத்துவதற்குமான தெளிவான வரையறையொன்றினை நிறுவிக் கொள்ளுதல் வேண்டும்.

(ஈ) நிதிக் கம்பனியின் சபையும் மூத்த முகாமைத்துவமும் குழும மட்டத்திலான குறிக்கோள்கள், உபாயங்கள், கொள்கைகள் மற்றும் ஆளுகைக் கட்டமைப்பு என்பன நிதிக் கம்பனியின் ஒழுங்குமுறைப்படுத்தல் கடப்பாடுகளுடன் முழுமையாக இணங்கிச் செல்கின்றமையினை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியதுடன் கம்பனி தொடர்பான இடர்நேர்வுகள் போதுமானளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளமையினையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(உ) குறைவான பொருளாதார ஆற்றலை அல்லது வியாபார நோக்கத்தினைக் கொண்ட, தொழிற்பாடுகளின் சிக்கலான தன்மையினைக் கணிசமானளவிற்கு அதிகரிக்கின்ற சிக்கல் வாய்ந்த கட்டமைப்புக்களை உருவாக்குவதனை நிதிக் கம்பனி தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

13.2 துணைநிலைக் கம்பனியென்ற ரீதியில் பொறுப்புக்கள்

முன்மதியுடைய ஒழுங்குவிதிகளுக்குட்பட்ட மற்றொரு நிதியியல் நிறுவனமொன்றின் துணைநிலைக் கம்பனியாக இருக்குமிடத்து, நிதிக் கம்பனி அதன் சொந்த சட்டபூர்வமான மற்றும் ஆளுகைப் பொறுப்புக்களை ஆற்றுதல் வேண்டும்.

**14. கம்பனிக் கலாச்சாரம்**

14.1 நிதிக் கம்பனியானது பொருத்தமான நடத்தை மற்றும் இரகசியத்தன்மை, அக்கறைகளின் முரண்பாடு, நேர்மையான அறிக்கையிடல், கம்பனிச் சொத்துக்களைச் சரியான முறையில் பயன்படுத்தல் மற்றும் பாதுகாத்தல், வாடிக்கையாளர்களைச் சரியான முறையில் நடத்துதல் என்பன தொடர்பான விடயங்களை வலியுறுத்துகின்றமை தொடர்பான வழிகாட்டல்களை உள்ளடக்கிய ஒழுக்கக்கோவையொன்றினைப் பின்பற்றுதல் வேண்டும்.

14.2 நிதிக் கம்பனி ஒழுக்கக்கோவையினை மீறுவது தொடர்பில் பதிவேடொன்றினைப் பேணுதல் வேண்டுமென்பதுடன் உயர்ந்த நேர்மைத்தன்மையினை நிலைநிறுத்தும் விதத்தில் அத்தகைய மீறுதல்களைக் கட்டுப்படுத்தவும் வேண்டும்.

14.3 நிதிக் கம்பனியானது பருப்பொருள் ரீதியான புலனாய்வு செய்யப்பட்டு கட்டுப்படுத்தப்பட வேண்டிய முறையான கரிசனைகளுக்கு வழியமைக்கின்ற சட்டத்திற்கு மாறான நடவடிக்கைகள் பற்றிய தகவல்களைப் பெறுகின்ற கொள்கையொன்றினை நிறுவுதல் வேண்டும். ஊழியர்கள் சட்டத்திற்கு மாறான, ஒழுக்கவிழுமியங்களற்ற அல்லது பிரச்சனைக்குரிய நடைமுறைகள் பற்றிய கரிசனைகளை இரகசியமாகவும் இடர்நேர்வு அல்லது பிரதித்தீங்குகள் இல்லாத விதத்தில் கரிசனைகளை எழுப்பக்கூடியதாக இருத்தல் வேண்டும். சபைக் கணக்காய்வுக் குழு இக்கொள்கையினை காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்தல் வேண்டும்.

**15. அக்கறைகளின் முரண்பாடு**

15.1 (அ) பணிப்பாளர்களுக்கிடையேயான உறவுமுறைகள், நியாயமற்ற செல்வாக்கினை அல்லது நிர்ப்பந்தத்தினை ஏற்படுத்தக்கூடாது. பணிப்பாளரொருவர் அவர் தொடர்பான விடயம் பற்றிய அல்லது எவரேனும் உறவினர் அல்லது அத்தகைய பணிப்பாளர் கணிசமான ஈடுபாட்டினைக் கொண்டுள்ள கரிசனைகள் தொடர்பில் ஏதேனும் சபைத் தீர்மானம் பற்றி வாக்கெடுப்பின் போது அதிலிருந்தும் விலகியிருத்தல் வேண்டுமென்பதுடன் சபைக் கூட்டங்களில் தொடர்பான நிகழ்ச்சிநிரலுக்கான கூட்ட நிறைவெண் தொடர்பிலும் அவர் கணக்கிலெடுக்கப்படக்கூடாது.

(ஆ) சபையானது முறையான எழுத்து மூலமான கொள்கையொன்றினையும் தொடர்பான தரப்பினர்களுடனான சாத்தியமான அக்கறைகளின் முரண்பாட்டினைக் கட்டுப்படுத்துவதற்கான கொள்கை நடைமுறைப்படுத்தலுக்கான பருப்பொருள் சார்ந்த இணங்குவிப்புச் செயன்முறையினையும் கொண்டிருத்தல் வேண்டும். கொள்கையானது, பின்வருவனவற்றை மேற்கொள்ளுதல் வேண்டும்.

(i) அக்கறைகளின் முரண்பாடுகளை உருவாக்குகின்ற அல்லது அதனை அதிகரிக்கின்ற சூழ்நிலைகளை அடையாளம் காணுதல்.

(ii) அக்கறைகளின் முரண்பாடுகளை தோற்றுவிக்கக்கூடிய நடவடிக்கைகளைச் சாத்தியமானளவிற்குத் தவிர்ப்பதற்கு பணிப்பாளர்களுக்கும் மூத்த முகாமைத்துவத்திற்கும் பொறுப்புக்களை வெளிப்படுத்துதல்

(iii) அக்கறைகளின் முரண்பாடுகளை அதிகரிக்கக்கூடிய விதத்தில் சூழ்நிலைகளில் காணப்படக்கூடிய ஏதேனும் மாற்றங்களைச் சபைக்கு அறிவிக்கும் விதத்தில் பணிப்பாளர்களினதும் மூத்த முகாமைத்துவத்தினரதும் செயன்முறைகளை வரைவிலக்கணம் செய்தல்.

(iv) பணிப்பாளர்களும் மூத்த முகாமைத்துவமும் அக்கறைகளின் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கக்கூடிய குறிப்பிட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு முன்னர் அவர்களுக்காக கடுமையான மீளாய்வினையும் ஒப்புதல் செய்முறைகளையும் நடைமுறைப்படுத்தல்.

(v) தொடர்பான தரப்பினருடனான அக்கறைகளின் முரண்பாடு தொடர்பான இற்றைப்படுத்தப்பட்ட பதிவேடுகளைப் பேணுவதற்காக அப்பொறுப்புக்களையுடையவர்களை அடையாளம் காணுதல்.

(vi) கொள்கையுடன் இணங்கிக் கொள்ளாத விடயங்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பதனைத் தெளிவுபடுத்துதல்.

**16. வெளிப்படுத்துகைகள்**

16.1 (அ) மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைகளினால் விபரிக்கப்பட்ட படிவங்கள் மற்றும் ஏற்புடைத்தான கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க, வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களையும் காலாந்தர நிதியியல் கூற்றுக்களையும் தயாரித்து பிரசுரிப்பதனையும் அத்துடன் (ஆ) அத்தகைய கூற்றுக்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படுவதனையும் சபை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

நிதிக் கம்பனியின் ஆண்டறிக்கையில் குறைந்தபட்சம் பின்வருவன வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்பதனை சபை உறுதிப்படுத்தல் வேண்டும்.

| விடயம் | வெளிப்படுத்துகை |
|---|---|
| i. நிதியியல் கூற்றுக்கள் | இலங்கை கணக்கீட்டு நியமம் அல்லது ஏற்புடைத்தான நியமங்களுக்கிணங்கிய நிதியியல் கூற்று தொகுதிக்குப் புறம்பாக நியம ஆண்டறிக்கை பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:<br>• வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் ஏற்புடைத்தான கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு இசைவாக, குறித்துரைக்கப்பட்ட வெளிப்படுத்துகைகளை உள்ளடக்கும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதனை நிரூபிக்கும் கூற்றொன்று.<br>• நிதி அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் வழங்குதலில் சபையின் பொறுப்பு |
| ii. தலைவர், முதன்மை நிறைவேற்று அலுவலர் மற்றும் சபை தொடர்பான வெளிப்படுத்துகைகள் | • பெயர், தகைமை மற்றும் தொடர்பான அவர் பற்றிய விபரங்கள்.<br>• ஒன்றில், நிறைவேற்று, நிறைவேற்று அதிகாரமற்ற அத்துடன்/ அல்லது சுயாதீனமான பணிப்பாளரா என்பது<br>• மூத்த பணிப்பாளராக எவரேனும் பணியாற்றுமிடத்து அப்பணிப்பாளரின் விபரங்கள்<br>• தொடர்பான தொழிற்படும் துறையில் கொண்டிருக்கும் அனுபவத்தின் தன்மை<br>• கம்பனியின் மற்றைய பணிப்பாளருடனான நெருக்கமான உறுப்பினர்கள் அத்துடன்/ அல்லது வணிக பரிவர்த்தனை உறவுமுறைகள்<br>• தொடர்பான பணிப்பாளரொருவர்/ முதன்மை நிறைவேற்று அலவலர் ஒருவர் பணிப்பாளராகப் பணியாற்றும் மற்றைய கம்பனிகளின் பெயர்கள் அத்துடன் அவர் நிறைவேற்றுப் பணிப்பாளராகவா அல்லது நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராகவா பணியாற்றுகின்றனர் என்ற விபரம்.<br>• ஆண்டு காலப்பகுதியில் அவர் கலந்து கொண்ட நிதிக் கம்பனியின் சபைக் கூட்டங்களினது எண்ணிக்கை/ சதவீதம்; அத்துடன்<br>• பணிப்பாளர் தலைவராக அல்லது உறுப்பினராகக் கலந்து கொண்ட சபைக் குழுக்களின் பெயர்கள் |
| iii. சபை செயலாற்றத்தின் மதிப்பீடு | • சபையினதும் அதன் குழுக்களினதும் செயலாற்றம் எவ்வாறு மதிப்பிடப்பட்டிருக்கிறது என்பது பற்றிய பொதுநோக்கு |
| iv. ஊதியம் | • சபைக் கட்டண அமைப்பு மற்றும் மூத்த முகாமைத்துவத்தினரின் ஊதியம் தொடர்பான பிரிப்புக்கள், ஊதியத்தின் மட்டம் மற்றும் கலப்பு (நிதியியல் மற்றும் நிதியியல் சாராதவை ஊதியத்தினை நிர்ணயிப்பதற்கான நடைமுறை மற்றும் ஊதியம், செயலாற்றம் மற்றும் பெறுமான உருவாக்கம் என்பனவற்றிற்கிடையிலான தொடர்பு) என்பனவற்றை உள்ளடக்கிய ஊதியக் கொள்கை தொடர்பான கூற்றொன்று.<br>• நிதிக் கம்பனியினால் அதன் பணிப்பாளர்களுக்கும் மூத்த முகாமைத்துவத்திற்கும் செலுத்தப்பட்ட ஊதியத்தின் ஒன்றுசேர்ந்த பெறுமதி. |
| v. தொடர்பான தரப்பினருடனான கொடுக்கல்வாங்கல்கள் | • தலைவருக்கும் முதன்மை நிறைவேற்று அலுவலருக்கும் மற்றும் சபையின் மற்றைய உறுப்பினர்களுக்குமிடையே உறவுகள் ஏதேனுமிருப்பின், (நிதியியல், வியாபாரம், குடும்பம் அல்லது மற்றைய பொருண்மியம் சார்ந்த/ தொடர்பான உறவுமுறை/ உறவுமுறைகள் உட்பட) அதன் தன்மை.<br>• தொடர்பான தரப்பினரின் ஒவ்வொரு வகை தொடர்பிலும் வெளிநின்ற தொகை மற்றும் நிதிக் கம்பனியின் மைய மூலதனத்தின் சதவீதமாக தொடர்பான தரப்பினரின் ஒவ்வொரு வகை தொடர்பிலும் வெளிநிற்கும் தேறிய கடன் வசதி.<br>• நிதியாண்டுப் பகுதியில் நிதிக் கம்பனி மூத்த முகாமைத்துவத்தினருடன் செய்து கொண்ட கொடுக்கல்வாங்கல்களின் மொத்தப் பெறுமதி வழங்கப்பட்ட கடன் வசதிகள் மற்றும் வைப்புக்கள் அல்லது நிதிக் கம்பனியில் செய்யப்பட்ட முதலீடுகள் பற்றிய பரந்த வகைகள். |
| vi. சபை நியமித்த குழுக்கள் | • சபைக் குழுக்களின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் விபரங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களில் கலந்து கொண்டவர்களின் விபரங்கள். |

| | |
|---|---|
| vii. குழும அமைப்பு | • நிதிக் கம்பனியில் தொழிற்படுகின்ற குழுமத்தின் அமைப்பு<br>• குழு ஆளுகைக் கட்டமைப்பு |
| viii. பணிப்பாளரின் அறிக்கை | சபையினால் செய்யப்பட்ட வெளிப்படுத்துகைகளை உள்ளடக்கிய அறிக்கையொன்று:<br>• சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் மாறாக எந்தவொரு நடவடிக்கையிலும் நிதிக் கம்பனி ஈடுபட்டிருக்கவில்லை.<br>• நிதிக் கம்பனியுடனான அனைத்துத் தொடர்பான தரப்பினருடனுமான கொடுக்கல்வாங்கல்களை வெளிப்படுத்தியிருப்பதுடன் அவர்கள் பொருண்மிய ரீதியாக ஈடுபாடு கொண்டுள்ள விடயங்கள் மீதான வாக்களிப்பினைத் தவிர்த்திருக்கின்றார்கள்.<br>• நிதிக் கம்பனி அனைத்து ஆர்வலர்கள் தொடர்பிலும் குறிப்பாக வைப்பாளர்கள் தொடர்பில் நியாயமாக நடத்துவதனை உறுதிப்படுத்துவதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறது.<br>• ஆதரவளிக்கும் அனுமானங்களுடன் தொடர்ந்தியங்கும் கரிசனைகள்; அத்துடன்<br>• நிதிக் கம்பனிக்கு ஏற்படக்கூடிய பொருண்மிய ரீதியான இடர்நேர்வுகள் உட்பட உள்ளகக் கட்டுப்பாடுகள் பற்றி சபை நடத்திய மீளாய்வொன்று மற்றும் அவற்றின் காத்திரமான தன்மை பற்றி பெற்றுக்கொண்ட நியாயமான உத்தரவாதம். |
| ix. உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான கூற்று | • நிதியியல் அறிக்கையிடல் முறைமையானது நிதியியல் அறிக்கையிடலில் நம்பகமான தன்மை பற்றிய நியாயமான உறுதிப்பாட்டினை வழங்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது என்பதனையும் வெளிவாரி நோக்கங்களுக்காகவும் நிதியியல் கூற்றுக்கள் தொடர்பான கணக்கீட்டுத் தத்துவங்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு இணங்கவும் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்துகின்ற நிதிக் கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான சபையின் அறிக்கையொன்று.<br>• தயாரிக்கப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட ஏதேனும் கூற்றுக்கள் தொடர்பில் மேலே குறிப்பிடப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறையின் காத்திரமான தன்மை தொடர்பான வெளிவாரிக் கணக்காய்வாளரின் உத்தரவாதக் கூற்று.<br>• முன்மதியுடைய தேவைப்பாடுகள், ஒழுங்குவிதிகள், சட்டங்கள், உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பனவற்றிற்கு இணங்கியொழுகுதல் மற்றும் ஏதேனும் இணங்கிக் கொள்ளாமையினைச் சரிசெய்வதற்காக எடுக்கப்பட்ட வழிமுறைகள் என்பனவற்றைக் காட்டுகின்ற அறிக்கையொன்று.<br>• நிதிக் கம்பனியின் இடர்நேர்வு முகாமைத்துவம், அல்லது சட்டம், விதிகள் மற்றும் பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாமை பற்றிய தவறுகள் தொடர்பிலான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கரிசனைகள் பற்றிய அறிக்கையொன்று. |
| x. கம்பனி ஆளுகை அறிக்கை | • கம்பனி ஆளுகை பணிப்புரையுடன் கம்பனி இணங்கியொழுகியிருக்கின்ற அளவு மற்றும் தன்மை மற்றும் வெளிவாரிக் கணக்காய்வாளரின் கம்பனி ஆளுகைப் பணிப்புரையுடன் இணங்கியொழுகுகின்ற உத்தரவாதக் கூற்று என்பனவற்றை வெளிப்படுத்தல். |
| xi. வியாபார நடத்தை மற்றும் ஒழுக்கவியல் கோவை | • நிதிக் கம்பனியின் பணிப்பாளர்கள், மூத்த முகாமைத்துவத்தினர் மற்றும் ஊழியர்களுக்கான வியாபார நடத்தை மற்றும் ஒழுக்கவியல் கோவை.<br>• தலைவர், கம்பனி இவ்வொழுக்கக் கோவையின் எந்தவொரு ஏற்பாட்டினையும் மீறவில்லை என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும். |
| xii. முகாமைத்துவ அறிக்கை | • தொழில் துறையின் அமைப்பு மற்றும் அபிவிருத்திகள்<br>• வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்கள்<br>• இடர்நேர்வு மற்றும் கரிசனைகள் |

| | |
|---|---|
| | • கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட நீடித்துநிலைத்திருக்கக்கூடிய நிதியியல் நடவடிக்கைகள்<br>• எதிர்காலத்திற்கான வாய்ப்புக்கள் |
| xiii. பங்குடமையாளர் களுடனான தொடர்பூட்டல்கள் | • பங்குடமையாளர்களுடனான தொடர்பூட்டல்களுக்கான கொள்கைகள் மற்றும் முறையியல்கள்<br>• அத்தகைய தொடர்பூட்டலுக்காக தொடர்பு கொள்ள வேண்டிய ஆள் |

**17. வரைவிலக்கணங்கள்**

“சட்டம்” என்பது 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதி வியாபாரச் சட்டம் அல்லது அதன் திருத்தங்கள் எனப் பொருள்படும்.

நிதிக் கம்பனிகள் தொடர்பில் “இணைந்தவை” என்பது நேரடியாக அல்லது மறைமுகமாகக் கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ள கட்டுப்படுத்தப்படுகின்ற ஏதேனும் கூட்டுத்தாபனம் அல்லது நிதிக் கம்பனியுடன் பொதுவான கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ள துணைநிலை, இணை மற்றும் உடமைக் கம்பனிகள் மற்றும் பொதுவான குழுமத்தின் கீழுள்ள கம்பனிகள் எனப் பொருள்படும்.

“சபை” என்பது நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் அல்லது வேறு ஏதேனும் வகையினரான அல்லது மாற்றுப் பணிப்பாளர்களையும் உள்ளடக்குகிறது.

“உறவினர்” என்பது நிதி வியாபாரச் சட்டத்தின் பிரிவு 74இல் உள்ளவாறு எனப் பொருள்படும்.

“நேரடியான அல்லது மறைமுகமான பங்குடமை” என்பது கம்பனியொன்றினால், கூட்டிணைக்கப்பட்ட சபையொன்றினால் அல்லது தனிப்பட்டவரினால் அல்லது மொத்தமாகக் கொண்டுள்ள வாக்களிப்பு உரிமை கொண்டுள்ள பங்குரிமைகள்:

(அ) ஒரு கம்பனியினால் மற்றும் பின்வருவனவற்றுள் ஒன்றினால் அல்லது அதற்கு மேற்பட்டவரினால்:

(i) அதன் துணைநிலைக் கம்பனியினால்

(ii) அதன் உடமைக் கம்பனியினால்

(iii) அதன் உடமைக் கம்பனியின் துணைநிலைக் கம்பனியினால்; அல்லது

(iv) அத்தகைய கம்பனி அல்லது அதன் துணைநிலைக் கம்பனி அல்லது அதன் உடமைக் கம்பனியினால் அல்லது அதன் உடமைக் கம்பனியின் துணைநிலைக் கம்பனி எந்தக் கம்பனியினால் கணிசமானளவிலான அக்கறையினைக் கொண்டுள்ளதோ அந்தக் கம்பனியினால்; அல்லது

(ஆ) தனிப்பட்டவரினால் மற்றும் பின்வருவோரில் ஒருவரினால் அல்லது அதற்கு மேற்பட்டோரினால்:

(i) உறவினர்கள்

(ii) அவர்/அவள் எந்தக் கம்பனியில் கணிசமானளவிலான அக்கறையைக் கொண்டுள்ளாரோ அல்லது அவரின்/ அவளின் உறவினர் எந்தக் கம்பனியில் கணிசமானளவிலான அக்கறையினைக் கொண்டுள்ளாரோ அந்தக் கம்பனியினால்; அத்தகைய கம்பனியின் துணைநிலைக் கம்பனியினால்; அத்தகைய கம்பனியின் உடமைக் கம்பனியினால் அத்தகைய கம்பனியின் உடமைக் கம்பனியின் துணைநிலைக் கம்பனியினால் அத்தகைய கம்பனி அல்லது அதன் துணைநிலைக் கம்பனி அல்லது உடமைக் கம்பனி அல்லது அதன் உடமைக் கம்பனியின் துணைநிலைக் கம்பனி எந்தக் கம்பனியில் கணிசமானளவிலான அக்கறையினைக் கொண்டுள்ளதோ அந்தக் கம்பனியினால்; அல்லது

(iii) அத்தகைய தனிப்பட்டவர் அல்லது அவரின்/ அவளின் உறவினர் கம்பனியொன்று தவிர்ந்த எந்த கூட்டிணைக்கப்பட்ட சபையினால் அல்லது அந்தக் கம்பனி ஒவ்வொன்றினதும் விடயத்திற்கேற்ப தனியாள் அல்லது கம்பனியொன்று ஒன்றில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாவோ அல்லது நன்மை பயக்கும் வகையில் கணிசமானளவிலான அக்கறையினை அல்லது குறிப்பிடத்தக்க முகாமைத்துவ அக்கறையினைக் கொண்டுள்ளாரோ அல்லது கொண்டுள்ளதோ அந்தக் கம்பனியினால் கூட்டுமொத்தமாக வைத்திருக்கக்கூடியதுமான தொகை எனப் பொருள்படும்.

“நிறைவேற்றுப் பணிப்பாளர்” என்பது நிதிக் கம்பனியின் முழு நேரச் சம்பளம் பெறும் ஊழியராக இருப்பதுடன் அவர் நிதிக் கம்பனியின் சம்பளப் பட்டியலிலுள்ள ஒப்பந்த ரீதியான பணியின் கீழுள்ளவராகவும் நாளாந்த முகாமைத்துவப் பொறுப்புக்களுடன் தொடர்புபட்டவராகவும் இருப்பவர் எனப் பொருள்படும்.

“நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்” என்பது நிதிக் கம்பனியின் ஊழியரொருவராக இருக்கமாட்டார் என்பதுடன் அவர் நிதிக் கம்பனியின் சம்பளப் பட்டியலிலும் இடம்பெறமாட்டார் என்பதுடன் நிதிக் கம்பனியின் நாளாந்த முகாமைத்துவத்திலும் ஈடுபடமாட்டார்.

“கணக்காய்வு அல்லாத பணிகள்” என்பது திருத்தப்பட்டவாறான 2012 திசெம்பரில் விடுக்கப்பட்ட வெளிவாரிக் கணக்காய்வாளர் குழுவிற்கான வழிகாட்டலில் உள்ளவாறான அதே கருத்தினைக் கொண்டிருக்கும்.

உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றின் “மூத்த முகாமைத்துவத்தினர்” என்பதன் பொருள்

(i) முதன்மை நிறைவேற்று அலுவலர்

(ii) உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் நிறுவன ரீதியான அமைப்பில் முதன்மை நிறைவேற்று அலுவலரின் மட்டத்திற்கு நேரடியாக இரண்டு அடுக்குகள் கீழேயுள்ள இணங்குவிப்பு அலுவலர், உள்ளகக் கணக்காய்வாளர், முதன்மை இடர்நேர்வு அலுவலர், முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் மற்றும் கம்பனிச் செயலாளர் ஆகியோரை உள்ளடக்கிய அலுவலர்கள். அத்தகைய அலுவலர்கள் நிறுவனத்தின் திட்டமிடல், நெறிப்படுத்தல் மற்றும் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தல் என்பனவற்றிற்கான அதிகாரத்தினையும் பொறுப்புக்களையும் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் “முக்கிய முகாமைத்துவ ஆளணியினர்” என்ற வகையின் கீழ்வரும் வேறு எவரேனும் ஆட்கள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படக்கூடிய ஆட்கள்.

“கணிசமான அக்கறை” என்பது நிதித்தொழில் சட்டத்தின் 74ஆம் பிரிவிலுள்ளவாறான அதே கருத்தினைக் கொண்டிருக்கும்.

**18. நடைமுறைக்கு வரும் நாள்**

இப்பணிப்புரையானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடைக்கால ஏற்பாடுகளுக்குட்பட்டு 2022.07.01 இலிருந்து நடைமுறைக்கு வருதலாதல் வேண்டும்.

**19. இடைக்கால ஏற்பாடுகள்**

19.1 (அ) பணிப்புரை 3.2, பணிப்புரை 3.5(அ) மற்றும் பணிப்புரை 3.7 என்பன 2024.07.01 இலிருந்து நடைமுறைக்கு வருதலாதல் வேண்டும். இடைக்கால ஏற்பாட்டு காலப்பகுதியில் 2008ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (கம்பனி ஆளுகை) பணிப்புரையின் “பிரிவு 4: சபை உள்ளமைப்பு” இல் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் ஏற்புடைத்தானவையாக இருக்கும்.

(ஆ) பணிப்புரை 3.4 உடனடியாக நடைமுறைக்கு வருதலாதல் வேண்டும்.

19.2 பணிப்புரை 8.1(ஆ): இடைக்கால ஏற்பாட்டுக் காலப்பகுதி 2024.07.01 வரை வழங்கப்படும்.

19.3 பணிப்புரை 10.1: இடைக்கால ஏற்பாட்டுக் காலப்பகுதி 2024.07.01 வரை வழங்கப்படும். எனினும், இடைக்காலத்தில் 2008ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (கம்பனி ஆளுகை) பணிப்புரையின் “பிரிவு 8: சபை நியமித்த குழுக்கள்” இல் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகள் ஏற்புடைத்தானவையாக இருக்கும்.

**20. முன்னைய பணிப்புரைகளை இரத்துச் செய்தல்**

20. பணிப்புரை 19இல் தெளிவாகத் தரப்பட்டுள்ள இடைக்கால ஏற்பாடுகளுக்குட்பட்டு, 2008ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (கம்பனி ஆளுகை) பணிப்புரை, 2008ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (கம்பனி ஆளுகைத் திருத்தம்) பணிப்புரை, 2013ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (கம்பனி ஆளுகைத் திருத்தம்) பணிப்புரை மற்றும் 2020ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க நிதித்தொழில் சட்டம் (கம்பனி ஆளுகைக்குத் திருத்தம்) பணிப்புரை என்பன இப்பணிப்புரை நடைமுறைக்குவரும் நாளிலிருந்து இரத்துச் செய்யப்படும்.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவர் மற்றும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**

**2021ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள்** 2021 திசெம்பர் 31

**முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்களின் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடல்**

**1. சட்ட ஏற்பாடுகள்**

1.1 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில், நாணயச் சபையானது உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்களின் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடுவது தொடர்பில் இத்தால் இப்பணிப்புரைகளை விடுக்கிறது.

**2. பணிப்புரைகளின் குறிக்கோள்கள்**

2.1 உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றின் முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்கள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளை ஆற்றல் வாய்ந்த விதத்திலும் முன்மதியுடனும் முகாமைப்படுத்தப்படக்கூடிய விதத்தில் தமது பொறுப்புக்களை வினைத்திறனுடன் கூடிய இயலாற்றலுடன் இருப்பதனை உறுதிப்படுத்துதல்.

2.2 கம்பனியின் உறுதிப்பாட்டிற்கு வழிவகுக்கின்ற உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வியாபாரத்தினைக் கொண்டு நடத்துவது

தொடர்பில் நிதிக் கம்பனியொன்றின் முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆள் சிறந்த ஆளுகை நடைமுறைகளை ஊக்குவித்தல் வேண்டும்.

2.3 உரிமம்பெற்ற நிதிக் கம்பனியானது அத்தகைய நபரை திறமையாகவும் பங்குதாரரின் சிறந்த நலன்களுக்காகவும் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குப் பொருத்தமானவர் மற்றும் சரியானவர் என்பதை பொறுப்புக்கூற வேண்டும்.

**3. இப்பணிப்புரைகளின் ஏற்புடைத்தன்மை**

3.1 இப்பணிப்புரைகள் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளிலுள்ள அனைத்து முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்களுக்கும் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

3.2 உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றில் நியமிக்கப்படுவதற்கு, நியமனம் செய்யப்படுவதற்கு அல்லது தெரிவு செய்யப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ள முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்கள் நியமிக்கப்படுவதற்கு அல்லது குறித்துரைக்கப்பட்ட பதவியில் தொடர்வதற்கு இப்பணிப்புரைகளின் ஏற்பாடுகளினது நியதிகளில், பணிப்பாளரின் முன்னொப்புதலைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

3.3 உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் தொடர்ந்திருக்கின்ற பணிப்பாளர் சபை, தலைமை நிர்வாக அலுவலர் மற்றும் பிற முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்களின் பொருத்தம் மற்றும் தகுதி ஆகியவை பணிப்புரை 7 இற்குட்பட்டு மதிப்பிடப்படுகிறது.

3.4 நிதிக் கம்பனியொன்றின் முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்களின் ஏதேனும் இராஜினாமா, ஓய்வுபெறல் அல்லது நீக்குவதும் பணிப்புரை 8 இற்குட்பட்டது.

**4. முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆளின் வரைவிலக்கணம்**

4.1 உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்று தொடர்பில் முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆள் என்பதன் கருத்து,

(அ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் பணிப்பாளர் சபை (நிறைவேற்று அல்லது வேறு வகையான ஆள் மற்றும் மாற்றுப் பணிப்பாளர்)

(ஆ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் மூத்த முகாமைத்துவம்

(i) முதன்மை நிறைவேற்று அலுவலர்

(ii) இணங்குவிப்பு அலுவலர், உள்ளகக் கணக்காய்வாளர், முதன்மை இடர்நேர்வு அலுவலர், முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் மற்றும் கம்பனிச் செயலாளர் உள்ளிட்ட உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் நிறுவன அமைப்பு தொடர்பில் முதன்மை நிறைவேற்று அலுவலரின் மட்டத்திற்கு உடனடியாகக் கீழே இரண்டு அடுக்குகளிலுள்ள அலுவலர்கள். அத்தகைய அலுவலர்கள் நிறுவனத்தின் நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கும் பணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் உரிய அதிகாரத்தையும் பொறுப்பினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் பணிப்பாளர் சபை, சபையின் துணைக் குழுக்கள் அல்லது மூத்த முகாமைத்துவத்திற்கு ஆலோசனை வழங்குபவர்கள்; அல்லது மதியுரை வழங்குபவர்கள்; அத்துடன்

(ஈ) பணிப்பாளரினால் தீர்மானிக்கப்பட்டவாறு, 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் "முக்கிய முகாமைத்துவ ஆட்கள்" என்ற வரைவிலக்கணத்திற்குள் வரும் வேறு எவரேனும் ஆட்கள்.

**5. பொருத்தம் மற்றும் தகுதிப் பிரமாணம்**

5.1 முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆளொருவரின் பொருத்தம் மற்றும் தகுதி பின்வரும் பிரமாணங்களின் கீழ், ஆனால் பின்வருவனவற்றிற்கு மட்டுப்படுத்தப்படாத விதத்தில் மதிப்பிடப்படல் வேண்டும்.

5.1.1 முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்களின் புதிய நியமனங்கள்/ பெயர் குறித்துரைத்த நியமனங்கள்/ தெரிவுசெய்த நியமனங்கள்

(அ) கண்ணியம், நேர்மை மற்றும் புகழ்பூத்த தன்மை

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 21ஆம் பிரிவின் கீழ் அல்லது திருத்தப்பட்டதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்படல் வேண்டும்.

(ஆ) தகுதி மற்றும் இயலாற்றல்

முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆள் தொழிலின் தன்மையுடன் பொருந்தக்கூடியவராக இருத்தல் வேண்டுமென்பதுடன் பின்வரும் காரணிகளின் அடிப்படையில் அவர் மதிப்பிடப்படுதலும் வேண்டும்.

(i) கல்விசார் அல்லது தொழில்சார் தகைமைகள் அல்லது வங்கித்தொழில், நிதி, வியாபாரம் அல்லது நிருவாகம் அல்லது பொருளாதாரம், கணக்கீடு/ கணக்காய்வு நிதியியல் ஆய்வு, முதலீட்டு முகாமைத்துவம்/ மூலதனச் சந்தைகள், தகவல் தொழில்நுட்பம், உபாயத் திட்டமிடல், இடர்நேர்வு முகாமைத்துவம், மனித வள முகாமைத்துவம், சட்டம், சந்தைப்படுத்தல் போன்ற வேறு ஏதேனும் தொடர்பான துறைகளில் காத்திரமான அனுபவம் மற்றும்

உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் பொறுப்பாணைக்கிணங்க குறிப்பிட்ட தகைமைகள்.

(ii) வியாபாரத்தின் தொழில்நுட்ப தேவைப்பாடுகளைப் புரிந்து கொள்வதற்கும் இயல்பாகவே இணைந்து காணப்படும் இடர்நேர்வுகளையும் முகாமைத்துவச் செயற்பாடுகளையும் அடையாளம் காண்பதற்குமான இயலாற்றலை வழங்குகின்ற தேர்ச்சிகள்.

(iii) தேர்ச்சிகள் தொழில் நடவடிக்கை ஒப்பந்த நியதிகள் அல்லது பணிப்பாளர் பணி என்பனவற்றில் நிறுவனத்தின் வெற்றியை நோக்கிய பயணத்தில் செயலாற்றம் மற்றும் பங்களிப்பின் மட்டம்.

(இ) நிதியியல் ஆற்றல் வாய்ந்த தன்மை

இலங்கையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ அவர் அல்லது அவள் அவர்களின் நிதியியல் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் இருந்திருக்கின்றார்களா என்பதன் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும்.

(ஈ) பின்னணியின் தரத்தினைப் பரிசோதித்தல்

பொருத்தமானவாறு தொடர்பானவிடத்து கொடுகடன் தகவல் பணியகம், தொடர்பான பரிசோதனைகள், தொழில்சார் சபைகள், ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைகள் அத்துடன்/ அல்லது வேறு ஏதேனும் அதிகாரசபைகளினூடாக மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

5.1.2 தற்போதுள்ள/ தொடர்ந்து பணிபுரிவதற்கான முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்கள்

(அ) பணிப்பாளர் சபை மற்றும் முதனிலை நிறைவேற்று அலுவலர்,

(i) பணிப்புரை 5.1.1(ஆ)(ii)யை நீங்கலாக 5.1.1இல் தரப்பட்டுள்ள பிரமாணம்.

(ii) தற்போதுள்ள பணிப்பாளர் பதவி/ தொழிலாளரைப் பொறுத்த வரையில் நிறுவனத்தின் வெற்றிக்கு துணைநின்ற அவர்களின் செயலாற்றம் மற்றும் பங்களிப்பின் மட்டம்.

(iii) குறிப்பிட்ட உரிமம்பெற்ற நிதிக் கம்பனியினைப் பொறுத்தவரை ஒழுங்குமுறைக் கட்டமைப்பு மற்றும் நாணயச் சபையின் பணிப்புரைகளுக்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் இணங்கியொழுகின்ற மட்டம்.

(ஆ) ஏனைய முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்கள்

(i) பணிப்புரை 5.1.1(ஆ)(ii)யை நீங்கலாக பணிப்புரை 5.1.1இல் தரப்பட்டுள்ள பிரமாணம்.

(ii) தற்போதைய தொழில்நிலை அல்லது ஒப்பந்த நியதிகள் தொடர்பில் நிறுவனத்தின் வெற்றிக்கு துணைநின்ற அவர்களின் செயலாற்றம் மற்றும் பங்களிப்பின் மட்டம்.

**6. ஒப்புதலளிக்கும் செயன்முறை மற்றும் பொருத்தம் மற்றும் தகுதியில் அடுத்தடுத்த மாற்றங்கள்**

6.1 முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்களின் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடுவதற்காக, இணைப்பு IIஇல் கேட்டுக் கொள்ளப்பட்டவாறு, தகவல்களையும் ஆவணங்களையும் மதிப்பிடும் பொருட்டு அவற்றை உறுதிப்படுத்தி இரகசியமான உறையிலிட்டு பணிப்பாளருக்கு அனுப்பி வைப்பது உரிமம்பெற்ற நிதிக் கம்பனியினது கம்பனிச் செயலாளரின் பொறுப்பாக இருத்தல் வேண்டும். இணைப்பு Iஇல் கேட்டுக் கொள்ளப்பட்டவாறு கம்பனிச் செயலாளரின் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடுவதற்கான தகவல்களையும் ஆவணங்களையும் உறுதிப்படுத்தி இரகசியமான உறையிலிட்டு பணிப்பாளருக்கு அனுப்பி வைப்பது உரிமம்பெற்ற நிதிக் கம்பனியினது முதன்மை நிறைவேற்று அலுவலர் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

6.2 பணிப்புரை 5.1 இல் தரப்பட்டுள்ள பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்டு இணைப்பு IIஇல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களையும் ஆவணங்களையும் பணிப்பாளர் மதிப்பீடு செய்தல் வேண்டும். இதற்கமைய, பணிப்பாளர் முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆளின் உத்தேச நியமனத்திற்கு அல்லது அவர் பதவியில் தொடர்வதற்கு ஒப்புதலளிக்கின்ற அல்லது நிராகரிக்கின்ற கடிதத்தினை வழங்குதல் வேண்டும்.

6.3 ஆலோசனையாளர் அல்லது மதியுரையாளர் நிறுவனமொன்றாக இருக்கும் சந்தர்ப்பத்தில், பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடுவது தொடர்பான பிரமாணத்தினை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிக்கு ஆலோசனைகளை, மதியுரை வழங்குகின்ற தொடர்பான பிரதான ஆலோசனையாளர் அல்லது மதியுரையாளர் மீது பிரயோகித்தல் வேண்டும்.

6.4 வழங்கப்பட்ட தகவல்கள் பொருத்தம் மற்றும் தகுதி தொடர்பான மதிப்பீட்டில் தாக்கமொன்றினைக் கொண்டிருக்கக்கூடியமை தொடர்பாக, அதன் பின்னர் ஏற்படக்கூடிய அனைத்து சம்பவங்களையும் சாத்தியமானளவிற்கு விரைவாக கம்பனியின் செயலாளருக்கு முழுமையாக அறிவிப்பதற்கான பொறுப்பினை முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்கள் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

6.5 உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் கம்பனிச் செயலாளர், பொருத்தம் மற்றும் தகுதி தொடர்பான மதிப்பீட்டில் தாக்கமொன்றினைக் கொண்டிருக்கக்கூடிய தகவல்களை முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்கள் சமர்ப்பித்ததன் பின்னர் அது தொடர்பில், அதன் பின்னர் ஏற்படக்கூடிய அனைத்துச் சம்பவங்களையும் அத்தகைய விடயங்கள் தெரியவந்த ஏழு(7) நாட்களுக்குள்

பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

6.6 உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றின் எவரேனும் முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆள் தொடர்பில் மேற்பார்வைக் கரிசனைகள் காணப்படுமிடத்து எந்தவொரு நேரத்திலும், பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆளின் பொருத்தம் மற்றும் தகுதி பற்றி ஆராயப்படல் வேண்டும்.

**7. பொருத்தம் மற்றும் தகுதி மதிப்பீட்டினை சமர்ப்பிக்கும் திகதி**

7.1 முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்களின் புதிய நியமனங்கள்/ பெயர் குறித்துரைத்த நியமனங்கள்/ தெரிவுசெய்த நியமனங்கள்

நியமனம் செய்வதற்கு எதிர்பார்த்துள்ள திகதிக்கு இருபது (20) வேலை நாட்களுக்கு முன்னதாக தகவல்களையும் ஆவணங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

7.2 தற்போதுள்ள/ தொடர்ந்து பணிபுரிவதற்கான முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்கள்

(அ) பணிப்பாளர் சபையின் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர்

உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வருடாந்த பொதுக்கூட்டத்திற்கு இருபது (20) வேலை நாட்களுக்கு முன்னதாக அல்லது உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் நிதியியல் ஆண்டின் பின்னர் மூன்று மாதங்களுக்குள் இதில் எது முதலில் வருகின்றதோ அதற்கு முன் வருடாந்த தகவல்களையும் ஆவணங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) ஏனைய முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்கள்

பதவி உயர்வுகள், ஒப்பந்தங்களைப் புதுப்பித்தல் மற்றும் ஏற்படக்கூடிய மாற்றங்களையும் பதவிகள் தொடர்பில் தேவைப்படும் விசேட அறிவு/ அல்லது தேர்ச்சி போன்றவற்றை அறிமுகப்படுத்துவது போன்ற மாற்றங்களுக்கு இருபது (20) வேலை நாட்களுக்கு முன்னதாக தகவல்களையும் ஆவணங்களையும் சமர்ப்பித்தல்.

**8. இராஜினாமா/ஓய்வு/ விலக்குதல்**

8.1 சபையின் பணிப்பாளர் அல்லது முதன்மை நிறைவேற்று அலுவலர் பணிப்பாளரின் முன்னொப்புதல் இல்லாமல் இராஜினாமாச் செய்யவோ/ ஓய்வுபெறவோ விலக்கப்படவோ கூடாது. இராஜினாமாக செய்யும் சந்தர்ப்பத்தில் அல்லது விலக்கப்படும் சந்தர்ப்பத்தில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் காரணங்களை பணிப்பாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

8.2 உரிமம் பெற்ற நிதிக் கம்பனி சபையின் பணிப்பாளர் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர் தவிர்ந்த முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்களின் இராஜினாமா/ ஓய்வு/ விலக்குதல் தொடர்பில் அத்தகைய சம்பவம் இடம்பெற்ற மூன்று (3) வேலை நாட்களுக்குள் காரணங்களை பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

**9. நாணயச் சபைக்கு மனுச் செய்தல்**

9.1 மேலேயுள்ள பணிப்புரை 6.2இன் கீழ், பணிப்பாளரின் மறுப்பு அல்லது தீர்மானத்தின் மூலம் பாதிக்கப்பட்ட ஆளொருவர் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியினால் அனுப்பப்பட்ட தகவலைப் பெற்ற பத்து (10) வேலை நாட்களுக்குள் நியாயமொன்றினைப் பெற்றுக் கொள்ளும் விதத்தில் காரணங்களை விளக்கி நாணயச் சபைக்கு எழுத்து மூலம் மனுச்செய்யலாம்.

9.2 பணிப்பாளரினால் வழங்கப்பட்ட காரணங்களையும் பாதிக்கப்பட்ட தரப்பினரின் ஆட்சேபங்களையும் பரிசீலனையில் கொண்ட பின்னர் நாணயச் சபை பணிப்பாளரினால் செய்யப்பட்ட மறுப்பினை/ தீர்மானத்தினை ஒன்றில் உறுதிப்படுத்தும் அல்லது நிராகரிக்கும்.

**10. நடைமுறைக்குவரும் நாள்**

10.1 இப்பணிப்புரைகள் 2022.04.01 தொடக்கம் நடைமுறைக்கு வருதலாதல் வேண்டும்.

**11. விளக்கம்**

11.1 “பணிப்பாளர்” என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் எனப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

**12. பணிப்புரைகளை நீக்கி விடுதல்**

12.1 2011ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (பணிப்பாளர்கள் மற்றும் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதியினை மதிப்பீடு செய்யும்) பணிப்புரைகள், பணிப்புரையின் 12.2 இற்குட்பட்டு இப்பணிப்புரைகள் நடைமுறைக்குவரும் திகதியிலிருந்து நீக்கப்படுதல் வேண்டும்.

12.2 பணிப்புரை 4.1இல் குறிப்பிடப்பட்டவாறு 2011ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (பணிப்பாளர் மற்றும் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதியினை மதிப்பீடு செய்யும்) பணிப்புரையின் கீழ் பொருத்தமும் தகுதியுமுடையவர்கள் எனத் தீர்மானிக்கப்பட்ட உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றின் முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்கள் இப்பணிப்புரையின்படி பொருத்தம் மற்றும் தகுதியினை மதிப்பிடும் வரை பொருத்தமும்

தகுதியுமுடையவர்களாகக் கருதப்படுவர்.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவர் மற்றும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**

**இணைப்பு I**

**முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்களின் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடுவதற்குத் தேவையான தகவல்கள் மற்றும் ஆவணங்கள்**

**1. தேவையான தகவல்கள் மற்றும் ஆவணங்கள்**

1.1 முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்களின் புதிய நியமனங்கள்/ பெயர் குறித்துரைக்கும் நியமனங்கள்/ தெரிவுசெய்த நியமனங்கள்

(அ) பணிப்புரையில் வழங்கப்பட்ட வழிகாட்டல்களின்படி அட்டவணை Iஇல் தரப்பட்டுள்ளவாறு வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்பட்ட சத்தியக்கடதாசியின் மூலப்பிரதி.

(ஆ) நியமனத்திற்கு உடனடியாக முற்போந்த முன்னைய தொழில்தருநரிடமிருந்து குறிப்பிட்ட நிறுவனத்தில் அவருக்கு/ அவளுக்கு ஒப்படைக்கப்பட்ட கடமைகளின் செயலாற்ற மட்டம் தொடர்பான கடிதமொன்று.

(இ) மேற்குறிப்பிட்டவற்றிற்குப் புறம்பாக, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிப் பணிப்பாளர் சபை, சபைத் துணைக் குழுக்கள் அல்லது மூத்த முகாமைத்துவத்திற்கு ஆலோசனையாளர் அல்லது மதியுரையாளரை நியமிப்பது பற்றிய நியாயப்படுத்தல்களுடன் கூடிய சபையின் தீர்மானம்.

**1.2 தற்போதுள்ள/ தொடருகின்ற முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்கள்**

1.2.1 பணிப்பாளர் சபை மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர்

| | தேவையான தகவல்கள் மற்றும் ஆவணங்கள் | தலைவர் | பணிப்பாளர் சபை | முதன்மை நிறைவேற்று அலுவலர் |
|---|---|---|---|---|
| அ) | <u>சத்தியக்கடதாசியின் மூலப்பிரதி</u><br><br>அட்டவணை Iஇல் தரப்பட்டவாறு, பணிப்புரைகளில் வழங்கப்பட்ட வழிகாட்டல்களின்படி பூரணப்படுத்தப்பட்டவை. | x | x | x |
| ஆ) | <u>சுயமதிப்பீடு</u><br><br>கடந்த 12 மாத காலப்பகுதியில் நிதியியல் செயலாற்றத்தின் முன்னேற்றம், ஏதேனும் விசேட ஒப்படைகளின் விபரம், அவரின்/ அவளின் தலைமைத்துவத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்கள் மற்றும் நிதியியல் நிறுவனத்தின் பெறுமானத்தினை அதிகரிப்பதற்கான அவரின்/ அவளின் எதிர்காலத் திட்டங்களை விளக்குதல் | x | x | x |
| இ) | <u>தலைவரின் மதிப்பீடு</u><br><br>கடந்த 12 மாத காலப்பகுதியில் முக்கிய சாதனைகளுடன் கூடிய செயலாற்றம் மற்றும் பங்களிப்பு | - | x | x |
| ஈ) | <u>சபையின் தீர்மானம்</u><br><br>70 வயதிற்கும் மேல் பணிப்பாளர் சபையில் தொடர்ச்சியாகப் பணிப்பாளர் பதவியில் அதிகபட்சம் 75 வயது வரை இருந்தவர்கள். அத்தகைய பணிப்பாளர், சபையில் தொடர்ந்தும் பதவி வகிப்பதன் மூலம் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்குக் கிடைக்கின்ற நன்மைகளைப் போதுமானளவிற்கு விபரிக்க வேண்டுமென்பதுடன் சாத்தியமானவிடத்து ஆவணப்படுத்தல்கள்/ சான்றுகள் மூலம் அத்தகைய தீர்மானமானது நிரூபிக்கப்படுதல் வேண்டும். | - | x | - |

| | | | | |
|---|---|---|---|---|
| உ) | தலைவரின் செயற்றிறனினால் நிர்வாகமற்ற பணிப்பாளரின் மதிப்பீடு<br><br>தலைவரின் செயற்றிறனுக்கான நிறைவேற்று அற்ற பணிப்பாளர்களினால் வருடாந்த சுயாதீன மதிப்பீடு | x | - | - |

**2.2.1 மற்றைய முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்கள்**

அ) மூல சத்தியக்கடதாசி

அட்டவணை ஐஇல் தரப்பட்டுள்ளவாறு பணிப்புரையிலுள்ள வழிகாட்டல்களுக்கிணங்க இதன் வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.

ஆ) சுய மதிப்பீடு

கடந்த 12 மாத காலப்பகுதியில் நிதியியல் செயலாற்றத்தின் மேம்பாடுகள், ஏதேனும் சிறப்பு ஒப்படைகளின் விபரங்கள், அவரின்/ அவளின் தலைமைத்துவத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்கள் நிதியியல் நிறுவனத்தின் பெறுமானத்தினை அதிகரிப்பதற்கான எதிர்காலத் திட்டங்கள் என்பனவற்றை உள்ளடக்குதல்.

இ) மேற்குறிப்பிட்டவற்றிற்குப் புறம்பாக, கடந்த 12 மாத காலப்பகுதியில் எய்தப்பட்ட செயலாற்றம் மற்றும் பங்களிப்புக்களை உள்ளடக்கிய பின்வரும் மதிப்பீடுகள் தேவைப்படுத்தப்படுகின்றன:

(i) முதன்மை நிறைவேற்று அலுவலரின் மதிப்பீடு

- மூத்த முகாமைத்துவத்திற்கான ஆலோசனையாளர் அல்லது மதியுரையாளர்கள்
- ஏனைய முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்கள்

(ii) தலைவரின் மதிப்பீடு

- பணிப்பாளர் சபை அல்லது பணிப்பாளர் சபையின் துணைக் குழுக்களுக்கான ஆலோசனையாளர் அல்லது மதியுரையாளர்கள்

**அட்டவணை I**

**உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்களின் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடுதல்**

**சத்தியக்கடதாசி**

**பிரிவு 1: 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவின் நியதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய தகவல்கள்**

| |
|---|
| கடவுச்சீட்டு அளவிலான புகைப்படம் (6 மாதங்களுக்குள் எடுக்கப்பட்டது) |

**உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் பெயர்:**

..................................... என்ற (*முகவரியில்*) வசிப்பவரும் ................. என்ற தேசிய அடையாள அட்டை இலக்கத்தினையும்[1] ............ ........................... என்ற கடவுச்சீட்டு இலக்கத்தினையும் கொண்டவருமான .............................. (*முழுப்பெயர்*) ஆகிய நான் இத்தால் பின்வருமாறு [பௌத்த/ இந்து/ முஸ்லீம்/ கிறிஸ்தவர்/ கத்தோலிக்கர்/ஏனையவர் (தயவுசெய்து குறிப்பிடவும்)] என்ற வகையில் இத்தால் பின்வருமாறு [உண்மையாகவும் பயபக்தியுடனும் விசுவாசமாகவும் பிரகடனம் செய்து உறுதிப்படுத்துகிறேன்/ சத்தியம் செய்து] பின்வருவனவற்றை (தயவுசெய்து பொருத்தமான விதத்தில் குறிப்பிடவும்) தெரிவித்துக் கொள்கிறேன்.

1. மேற்குறிப்பிட்ட பெயரைக் கொண்ட (உறுதிப்படுத்துபவர்/ வாக்கு மூலமளிப்பவர்[2]) ஆகிய நான் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியாக விளங்கும் ..................... என்ற முகவரியிலுள்ள ....... ............................ *(உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் பெயர்)* கம்பனியில் .............................. (பதவிக்கு) நியமிக்கப்பட்டுள்ளேன்/ தெரிவுசெய்யப்பட்டுள்ளேன்/ பெயர் குறித்து நியமனம் செய்யப்பட்டுள்ளேன்.

**2. எனது தனியாள் விபரங்கள் பின்வருமாறு இருப்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்:**

| | | | | |
|---|---|---|---|---|
| 2.1 | (i) | பெயர் முதலெழுத்துக்களுடன் | | |
| | (ii) | தலைப்பு திரு/ திருமதி/ செல்வி/ முனைவர்/ பேராசிரியர்/ ஏனையவை (*தயவுசெய்து குறிப்பிடவும்*) | (iii) | சத்தியக்கடதாசியில் கையொப்பமிடும் திகதியில் வயது: நாட்கள்/மாதங்கள்/ ஆண்டுகள் |
| | (iv) | பிறந்த திகதி: நாள்/ மாதம்/ ஆண்டு | (v) | பால்: |
| | (vi) | திருமணமானவரா: | (vii) | தேசிய இனம்: |
| | (viii) | பிரசாவுரிமை[3] | (ix) | உள்நாடு/ வெளிநாடு: |
| 2.2 | (i) | தொடர்புகொள்வதற்கான விபரங்கள் | நிரந்தர முகவரி: | |
| | | | வதிவிட முகவரி: | |
| | (ii) | தொலைபேசி: | செல்லிடத் தொலைபேசி: | |
| | | | நிலையான தொலைபேசி: | |
| | | | தொலைநகல்: | |
| | (iii) | மின்னஞ்சல் | மின்னஞ்சல் - அலுவலகம்: | |
| | | | மின்னஞ்சல் - தனிப்பட்டது: | |

1 வெளிநாட்டவர்களுக்கு ஏற்புடைத்தாகாது

2 உறுதிப்படுத்தும் ஆளொருவர் உறுதிப்படுத்துபவர் என அழைப்படுகின்ற வேளையில் சத்தியப்பிரமாணம் செய்பவர் வாக்குமளிக்கப்பவர் என அழைக்கப்படுகிறார். சத்தியப்பிரமாணத்தினைச் செய்ய ஒருவர் உணர்வுபூர்வமாக ஆட்சேபிப்பாராயின் அவர், சத்தியப்பிரமாணம் செய்வதற்குப் பதிலாக உறுதிப்படுத்தலொன்றினைச் செய்யலாம்.

3 இரட்டைப் பிரசாவுரிமையினைக் கொண்டுள்ள அவர்/ அவள் உள்நாட்டைச் சேர்ந்தவராக பரீசிலிக்கப்பட வேண்டுமா அல்லது வெளிநாட்டைச் சேர்ந்தவராக பரிசீலிக்கப்பட வேண்டுமா என்பதனைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

| | | | | |
|---|---|---|---|---|
| 2.3 | தொழில் அல்லது தொழில்சார்நிபுணத்துவம் | | | |
| 2.4 | (i) | உரிமம்பெற்ற நிதிக் கம்பனியில் நியமிக்கப்பட்ட/ தெரிவுசெய்யப்பட்ட/ பெயர் குறிக்கப்பட்ட வேலை/ பதவியின் பெயர் | (ii) | வேலை/ பதவிக்கான நியமனத் திகதி: (திகதி/மாதம்/ஆண்டு) |
| 2.5 | நியமனத்தின் தன்மை (தொடர்பான பெட்டிக்குள்/ பெட்டிகளுக்குள் X அடையாளமிடவும்) | | | |
| | சுயாதீனமானவர்[4] | | நிறைவேற்றுப் பதவி | |
| | சுயாதீனமற்றவர் | | நிறைவேற்று அல்லாத பதவி | |
| | மூத்த பணிப்பாளர் | | மாற்று ஏற்பாட்டாளர் | |
| | ஏனையவை (குறிப்பிடவும்) | | | |
| | சுயாதீனமற்றவராயின், சுயாதீனமற்றவராக தீர்மானிக்கப்பட்டமைக்கான காரணங்கள்: | | | |
| | பிரதான பங்குடமையாளர்/ பங்குடமையாளர்களால் பெயர் குறிக்கப்பட்டு நியமிக்கப்பட்டவராயின் அவ்வாறு பெயர் குறித்த பங்குடமையாளர்/ பங்குடமையாளர்களின் பெயர்/ பெயர்கள்: | | | |
| | மாற்று ஏற்பாட்டாளராயின் பிரதான பணிப்பாளரின் பெயர்: | | | |
| 2.6 | (i) | வருடாந்த ஊதியம் (விபரமான தகவல்களுடன்): | | |
| | (ii) | பணிப்பாளரினால் அல்லது நிறுவனத்தில் கணிசமான அக்கறையினைக் கொண்டிருக்கும் ஆளினால் அத்துடன்/ அல்லது அவரின்/ அவளின் குடும்பத்தவர்களினால் கம்பனிச் சொத்துக்களிலிருந்து பெறப்படும் நன்மைகளின் அல்லது வருமானத்தின் பெறுமதி: | | |
| | (iii) | மேலே குறிப்பிடப்பட்ட சொத்துக்களைப் பேணுவது தொடர்பில் கம்பனிக்கு ஏற்படும் செலவு அல்லது வேறு ஏதேனும் செலவுகளின் மீளச்செலுத்தல் (கொடுகடன் அட்டை பட்டியல்கள், பொதுப் பயன்பாட்டு பட்டியல்கள் போன்றவை): | | |
| 2.7 | 2.7.1 நிதித்தொழில் சட்டத்தின் 74ஆம் பிரிவின் நியதிகளில் உறவினரின் விபரம்: | | | |
| | (i) | வாழ்க்கைத் துணையின் முழுப்பெயர்: | | |
| | (ii) | தேசிய அடையாள அட்டை இல.[1]: | (iii) | கடவுச்சீட்டு இலக்கம்: |

| | 2.7.2 தங்கியுள்ள பிள்ளைகளின் விபரங்கள்: | | |
|---|---|---|---|
| | முழுப்பெயர் | தே.அ.அட்டை இல.[1] | கடவுச்சீட்டு இல. |
| | | | |
| | | | |

3. நான் பின்வரும் கல்விசார் அத்துடன்/ அல்லது தொழில்சார் தகைமையை/ தகைமைகளைக் கொண்டிருக்கின்றேன் என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன்:

| தகைமைகள் (கல்விசார்) | தொடர்பான துறை[5] | நாடு | நிறுவனத்தின் பெயர் | நிறைவுசெய்த ஆண்டு |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| தகைமைகள் (தொழில்சார் நிபுணத்துவம்) | | | | |
| | | | | |

4 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் கம்பனி ஆளுகை

4. வங்கித்தொழில், நிதி, வியாபாரம் அல்லது நிருவாகம் அல்லது வேறு ஏதேனும் தொடர்பான துறைகளில்[5] நான் கொண்டுள்ள காத்திரமான அனுபவத்தினைப் பின்வருமாறு தெரிவித்துக் கொள்கிறேன்.

| தற்போது வகிக்கும் பதவி | | நிறுவனத்தின் பெயர் | பதவி/ நிலை | நியமனத்தின் தன்மை (விடயம் 2.5இன்படி ஏற்புடைத் தானவாறு) | பணியின் விசேடித்த அனுபவம் | நியமனத் திகதி (திகதி/ மாதம்/ ஆண்டு) | பணிக் காலம் (திகதி/ மாதம்/ ஆண்டு) இலிருந்து (திகதி/ மாதம்/ ஆண்டு) வரை |
|---|---|---|---|---|---|---|---|
| முன்னைய பதவிகள் | | | | | | | |
| (i) | பணிப்பாளர் பதவி | | | | | | |
| (ii) | ஏனையவை | | | | | | |
| தற்போதைய பதவிகள் | | | | | | | |
| (i) | பணிப்பாளர் பதவி | | | | | | |
| (ii) | ஏனையவை | | | | | | |

இது தொடர்பில், உரிமம்பெற்ற நிதிக் கம்பனி ஆவணச்சான்றுகளைப் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்படுவதுடன் பணிப்பாளர் கேட்டுக் கொள்ளும் போது அத்தகைய சான்றுகளைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

5. மேற்குறிப்பிட்ட தகவல்களுக்குப் புறம்பாக, நான் பின்வரும் மேலதிக தகைமைகளையும் கொண்டிருக்கிறேன் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

| **விசேட பொறுப்புக்கள்/ ஆலோசனை** | **நிறுவனத்தின் பெயர்** | **விபரணம்** | **பணிக்காலம் (திகதி/ மாதம்/ ஆண்டு) இலிருந்து (திகதி/ மாதம்/ ஆண்டு) வரை** |
|---|---|---|---|
| (i) | | | |
| (ii) | | | |
| மிகச் சிறந்த பங்களிப்புக்கள் (வெளியீடுகள், ஆய்வரங்குகள், ஆராய்ச்சி போன்றவை) | | | |
| **ஆய்வு/ வெளியீட்டின் தலைப்பு** | | **நிறுவனம்/ இடம்** | **ஆண்டு** |
| | | | |

| | | |
|---|---|---|
| | | |

6. நான் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியிலும் அவை தொடர்பான கம்பனிகளிலும் (துணைநிலைக் கம்பனிகள்[6], இணைக் கம்பனிகள்[6] மற்றும் ஏனைய கம்பனிகள்[7]) பதிவுசெய்யப்பட்ட/ இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகள், குத்தகைக்குவிடும் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர்களிலும் பங்குகளை வைத்திருக்கின்றேன்/ வைத்திருக்கவில்லை என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

| நிறுவனத்தின்/ நிறுவனங்களின் பெயர் | வாக்களிக்கும் உரிமையுள்ள/ உரிமையில்லாதவை | பங்குகளின் எண்ணிக்கை | | உடமைகளின் சதவீதம் | |
|---|---|---|---|---|---|
| | | நேரடி | மறைமுகம் | நேரடி | மறைமுகம் |
| | | | | | |

**7. வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள்**

7.1 நியமனத்திற்கு உடனடியாக முற்போந்த இரண்டாண்டு காலப்பகுதியில் நான் தற்பொழுது பின்வரும் வியாபாரக் கொடுக்கல்வாங்கல்களை உரிமம்பெற்ற நிதிக் கம்பனி மற்றும் அவற்றுடன் தொடர்பான கம்பனிகளில் (துணை நிறுவனங்கள்/ இணை நிறுவனங்கள் மற்றும் ஏனைய கம்பனிகள்) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் தொடர்பான தரப்பினர்களுடன் இலங்கை மத்திய வங்கியுடன் பதிவுசெய்யப்பட்ட/

5 வங்கித்தொழில்/ நிதி, வியாபாரம்/ நிருவாகம், பொருளாதாரம், கணக்கீடு/ கணக்காய்வு/ நிதியியல் பகுப்பாய்வு, முதலீட்டு முகாமைத்துவம்/ மூலதனச் சந்தைகள், தகவல் தொழில்நுட்பம், உபாயத் திட்டமிடல், இடர்நேர்வு முகாமைத்துவம், மனிதவள முகாமைத்துவம், சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகள், சந்தைப்படுத்தல் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் பொறுப்பாண்மைக்கிணங்க குறித்துரைக்கப்பட்ட தகைமைகள்

6 நிதித்தொழில் சட்டத்தின் 74ஆம் பிரிவின் நியதிகளில்

7 நிதித்தொழில் சட்டத்தின் 74ஆம் பிரிவின் நியதிகளில் ஏனைய கம்பனிகளில் வைத்திருக்கும் கணிசமான அக்கறைகள்

உரிமம்பெற்ற வங்கிகள், குத்தகைக்குவிடும் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர்களுடன் வியாபாரத் தொடர்புகளைக் கொண்டுள்ளேன்/ கொண்டிருக்கவில்லை என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

| | நிறுவனம்/ நிறுவனங்களின் பெயர் | கொடுக்கல் வாங்கல் திகதி (திகதி/ மாதம்/ ஆண்டு) | திகதி/ மாதம்/ ஆண்டிலுள்ளவாறு தொகை (ரூ.மில்) | | வகைப் படுத்தல் (செயற்படுகின்ற/ செயற் படாதவை) | பிணையுறுதிகளின் வகை மற்றும் பெறுமதி (ரூ.மில்.) | உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் மைய மூலதனத்தின் % |
|---|---|---|---|---|---|---|---|
| | | | வரையறை | வெளிநின்றவை | | | |
| **கடன்பாடுகள்** | | | | | | | |
| (i) | தற்போது | | | | | | |
| (ii) | நியமனத்திற்கு முன்னர் | | | | | | |
| **முதலீடுகள்[8]** | | | | | | | |
| (i) | தற்போதுள்ளவை | | | | | | |
| (ii) | நியமனத்திற்கு முன்னர் உள்ளவை | | | | | | |
| **வைப்புக்கள்** | | | | | | | |
| (i) | தற்போதுள்ளவை | | | | | | |
| (ii) | நியமனத்திற்கு முன்னர் உள்ளவை | | | | | | |

**8. நெருங்கிய உறவினர்களின் நியமனங்கள், பங்குடமைகள் மற்றும் வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள்**

8.1 ஏதேனும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளில், அதனுடன் தொடர்பான கம்பனிகளில் (துணைநிலைக் கம்பனிகள், இணைக் கம்பனிகள் மற்றும் ஏனைய கம்பனிகள்) இலங்கை மத்திய வங்கியுடன் பதிவுசெய்யப்பட்ட/ உரிமம்பெற்ற வங்கிகளில், குத்தகைக்குவிடும் கம்பனிகளில் முதனிலை வணிகர்கள் கம்பனிகளில் பணிப்பாளர்களாக, முதன்மை நிறைவேற்று அலுவலர்களாக அல்லது மூத்த முகாமையாளராக தற்பொழுது தொழில்புரியும் எனது நெருங்கிய உறவினர்களின் பின்வரும்

விபரங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

| நெருங்கிய உறவினரின் பெயர் | நிறுவனத்தின் பெயர் | வகிக்கும் பதவி |
|---|---|---|
| | | |
| | | |

8.2 ஏதேனும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளில், அதனுடன் தொடர்பான கம்பனிகளில் (துணைநிலைக் கம்பனிகள், இணைக் கம்பனிகள் மற்றும் ஏனைய கம்பனிகள்) இலங்கை மத்திய வங்கியுடன் பதிவுசெய்யப்பட்ட/ உரிமம்பெற்ற வங்கிகள், குத்தகைக்குவிடும் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர் ஆகியோருடன் எனது நெருங்கிய உறவினர்கள் வைத்திருக்கும் ஏதேனும் நேரடியாக அல்லது மறைமுகமாக வைத்திருக்கும் பங்குடமைகள் பற்றிய பின்வரும் விபரங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

| நெருங்கிய உறவினரின் பெயர் | நிறுவனத்தின்/ நிறுவனங்களின் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | | சதவீத உடமைகள் | |
|---|---|---|---|---|---|
| | | நேரடி | மறைமுகம் | நேரடி | மறைமுகம் |
| | | | | | |

8.3 எனது நெருங்கிய உறவினர் தற்பொழுது உரிமம்பெற்ற நிதிக் கம்பனி, அதன் தொடர்பான கம்பனிகள் (துணைநிலைக் கம்பனிகள், இணைக் கம்பனிகள் மற்றும் ஏனைய கம்பனிகள்) இலங்கை மத்திய வங்கியுடன் பதிவுசெய்யப்பட்ட/ உரிமம்பெற்ற வங்கிகள், குத்தகைக்குவிடும் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர்களுடன் எனது நியமனத்திற்கு உடனடியாக முற்போந்த இரண்டாண்டு காலப்பகுதியில் பின்வரும் வியாபாரக் கொடுக்கல்வாங்கல்களைக் கொண்டிருக்கின்றார்/ கொண்டிருந்தார் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

8 படுகடன் சாதனங்களிலுள்ள முதலீடுகள்

| நிறுவனத்தின்/ நிறுவனங்களின் பெயர் | கொடுக்கல் வாங்கல் திகதி (திகதி/ மாதம்/ ஆண்டு) | திகதி/ மாதம்/ ஆண்டிலுள்ளவாறு தொகை (ரூ.மில்.) | | வகைப்படுத்தல் (செயற்படு கின்றவை/ செயற்படாதவை) | பிணை யுறுதியின் வகை மற்றும் பெறுமதி (ரூ.மில்.) | உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் மைய மூலதனத்தின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | | வரையறை | வெளிநின்றவை | | | |
| கடன்பாடுகள் | | | | | | |
| | | | | | | |
| முதலீடுகள்[8] | | | | | | |
| | | | | | | |

9. மோசடி, ஏமாற்றுதல், நேர்மையீனம் அல்லது அதேபோன்ற குற்றவியல் நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ சட்டத்தினால் ஆக்கப்பட்ட பொலிஸ் ஏதேனும் ஒழுங்குமுறைப்படுத்தல் அல்லது மேற்பார்வை செய்யும் அதிகாரசபையினால், தொழில்சார்நிபுணத்துவச் சங்கத்தினால், விசாரணை ஆணைக்குழுவினால், நியாயசபையினால் அல்லது வேறு ஏதேனும் அமைப்பினால் நடத்தப்பட்ட புலன்விசாரணைக்கு அல்லது விசாரணைக்கு உட்பட்டிருக்கின்றேன்/ உட்பட்டிருக்கவில்லை எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10. மோசடி, ஏமாற்றுதல், நேர்மையீனம் அல்லது அதேபோன்ற குற்றவியல் நடவடிக்கைகள் அல்லது ஏதேனும் சட்டம் அல்லது விதிகள் அல்லது ஒழுங்குவிதிகள் பணிப்புரைகள் அல்லது அவற்றின் கீழ் விடுக்கப்பட்ட தீர்மானங்கள் என்பனவற்றிற்கு இணங்கியொழுகாமை போன்றவற்றுடன் தொடர்பான ஏதேனும் நடவடிக்கைகளை இழைத்தமை அல்லது அத்தகைய நடவடிக்கைகளைப் புரிய எத்தனித்தமை என்பனவற்றுடன் தொடர்பானவை என இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ சட்டத்தினால் ஆக்கப்பட்ட எந்தவொரு ஒழுங்குமுறைப்படுத்தல் அல்லது மேற்பார்வை செய்யும் அதிகாரசபையினால், தொழில்சார்நிபுணத்துவச் சங்கத்தினால், விசாரணை ஆணைக்குழுவினால், நியாயசபையினால் அல்லது வேறு ஏதேனும் அமைப்பினால் கண்ட ஒருவராக நான் இல்லை/ இருக்கிறேன் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

11. நிதியியல் முகாமைத்துவம் அல்லது ஒழுக்கமற்ற தீய நடத்தையுடன் தொடர்பான ஏதேனும் குற்றம் தொடர்பில் குற்றமிழைக்கப்பட்டமை தொடர்பில் இலங்கையிலோ வெளிநாட்டிலோ ஏதேனும் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறேன்/ குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கவில்லை எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

12. இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ விடுவிக்கப்படாத கடன் தீராற்றலற்றவராக நான் இருக்கிறேன்/ இருக்கவில்லை

எனவும் வங்குரோத்துக்காரர் எனப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறேன்/ பிரகடனப்படுத்தப்பட்டிருக்கவில்லை எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

13. ஒன்றில் இலங்கையிலோ அல்லது வேறு எங்கேயுமோ எனது நிதியியல் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்யக்கூடியனவாக நான் இருக்கிறேன்/ இருக்கவில்லை எனத் தெரிவிக்கின்றேன்.

14. இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ ஏதேனும் நீதிமன்றத் தீர்ப்பினை அல்லது கட்டளையினை திருப்திச் செய்யத் தவறியவனாக அல்லது படுகடனொன்றினை மீளச்செலுத்துவதற்கு நான் தவறியிருக்கிறேன்/ தவறவில்லை எனத் தெரிவிக்கின்றேன்.

15. இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ தகுதிவாய்ந்த நியாயாதிக்க நீதிமன்றமொன்றினால் சித்தசுவாதீனமற்றவர் எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளேன்/ பிரகடனப்படுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கின்றேன்.

16. இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ உள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் அல்லது மேற்பார்வை அதிகாரசபையினால் உரிமம்பெற்ற வங்கி அல்லது ஏதேனும் நிதியியல் நிறுவனங்கள் அல்லது கூட்டாண்மை சபையில் பணிப்பாளராக/ முதன்மை நிறைவேற்று அலுவலராக/ நிறைவேற்றுப் பணிகளை ஆற்றுகின்ற அலுவலராக அல்லது வேறு ஏதேனும் அலுவலராக பணியாற்றுவதிலிருந்தும் நீக்கப்பட்ட அல்லது இடைநிறுத்தி வைக்கப்பட்டவனாக நான் இருக்கிறேன்/ இருக்கவில்லை எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

17. (i) உரிமம் இடைநிறுத்தப்பட்டுள்ள அல்லது இரத்துச் செய்யப்பட்டுள்ள; அல்லது

(ii) இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ மூடப்பட்டுள்ள அல்லது மூடப்பட்டுக் கொண்டிருக்கின்ற அல்லது கட்டாயமாக ஒடுக்கிவிடப்பட்ட

ஏதேனும் உரிமம்பெற்ற வங்கியில் அல்லது ஏதேனும் நிதியியல் நிறுவனத்தில் பணிப்பாளராக அல்லது முதன்மை நிறைவேற்று அலுவலராக அல்லது அதிகாரமிக்க மற்றைய பணிகளை ஆற்றுபவராக நான் இருந்திருக்கிறேன்/ இருக்கவில்லை எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

18. எனது பதவியின் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடுவது தொடர்பில் நிதித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகள் பற்றி நான் அறிவேன் என்று மேற்குறிப்பிட்ட தகவல்கள் எனது அறிவிக்கெட்டிய வரை உண்மையானவை எனவும் பூரணமானவை எனவும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பில் பின்னர் இடம்பெறக்கூடிய அனைத்துச் சம்பவங்களையும் சாத்தியமானளவிற்கு விரைவாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிக்கு முழுமையாக அறிவிப்பதற்கு பொறுப்பேற்றுக் கொள்கிறேன்.

19. மேற்குறிப்பிட்ட பதவிக்கு என்னை நியமிப்பதிலிருந்தும் ஏதேனும் எழுதப்பட்ட சட்டம் என்னைத் தடைசெய்யவில்லை என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

20. எனது சிறந்த அறிவிற்கெட்டியவரை நிதித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளில் .............................. (பதவி) ஆக நியமிக்கப்படுவதற்கு, பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கு அல்லது தெரிவுசெய்யப்படுவதற்கு நான் பொருத்தமும் தகுதியுமான ஆள் என்பதனை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

| | | |
|---|---|---|
| இதில் அடங்கப்பட்டுள்ள பிரதிக்ஞைகளைச் செய்யும் உறுதிப்படுத்துபவர்/ தெரிவிக்காமல் வாசித்து விளங்கப்படுத்திய பிற்பாடு அதனை விளங்கிக் கொண்டு அதனை உண்மையெனவும் ஏற்றுக்கொண்டு உறுதிப்படுத்தி சத்தியம் செய்து என்முன்னால் தனது கையொப்பத்தினை ................. இல் ......... திகதி ........... மாதம் .......... ஆம் ஆண்டில் வைக்கின்றார் | ........................................ ........ ஏற்புடைத்தான முத்திரையினை ஒட்டவும் | எனக்கு முன்னால் சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர் |

பிரிவு 2: கம்பனிச் செயலாளரினால் நிரப்பப்பட வேண்டியது

1. கம்பனித் தகவல்கள்

| நியமனக் குழுவின்/ பணிப்பாளர்களை நியமிக்கின்ற அதிகாரசபையின் விதந்துரைப்புக்கள் | |
|---|---|
| மதிப்பீட்டு பிரமாணம்<br><br>(நியமனக் குழுவினால்/ நியமிக்கின்ற அதிகாரசபையினால் பரிசீலிக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட அறிவு/ திறன்களின் தேவையினைத் தயவுசெய்து குறிப்பிடவும்) | |

| விதந்துரைப்பு<br>(நியமனக் குழுவின்/ நியமிக்கின்ற அதிகாரசபையின் தீர்மானம்/ முடிவின் கூட்டக் குறிப்பினைத் தயவுசெய்து இணைக்கவும்) | |
|---|---|

2. **பணிப்பாளர் சபையின் குறிப்புக்கள்**

(i) மேலே சமர்ப்பிக்கப்பட்டுள்ள விபரங்கள் தொடர்பான வேறு ஏதேனும் விளக்கம்/ தகவல்கள்.

(ii) உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட/ மேற்குறிப்பிட்ட நியமனத்திற்காகப் பணிப்பாளர் சபையினால் பெயர் குறித்த நியமனங்கள் அல்லது தெரிவுகள்/ முன்மொழியப்பட்ட நியமனங்கள், பெயர் குறித்த நியமனங்கள் அல்லது தெரிவுகளுக்கு .......... ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது (திகதி/ மாதம்/ ஆண்டு).

**பெயர்:** **கம்பனிச் செயலாளரின் கையொப்பம் மற்றும்**

**செயலாளர் மற்றும் திகதி:** **அலுவலர்சார் முத்திரை**

**உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்களினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சத்தியக் கடதாசியைச் சரியாக நிரப்புவதற்கான வழிகாட்டல்**

இவ்வழிகாட்டலானது, இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆளின் பொருத்தம் மற்றும் தகுதி பற்றி மதிப்பிடுவதற்காக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் வழங்கப்படும் தகவல்களின் போதுமான தன்மையினையும் துல்லியமான தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்காக விடுக்கப்படுகிறது.

1. **சத்தியக்கடதாசியைப் பெற்றுக்கொள்வதன் நோக்கம்**

(i) உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்களின் சத்தியக்கடதாசியைப் பெற்றுக்கொள்கின்றமையின் நோக்கம், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம், நிதித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அவர்களின் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடுவதனை இயலுமைப்படுத்துவதாகும். இதன்படி, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்களின் பொருத்தமான தன்மையினை மதிப்பிட்டுக் கொள்வதற்காக நிதித்தொழில் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட மற்றைய தேவைப்பாடுகளுடன் தகைமைகள், அனுபவம், நேர்மை மற்றும் இணங்கியொழுகும் தன்மை என்பனவற்றை மதிப்பிடுவதற்கு அனைத்தையுமுள்ளடக்கிய தகவல்கள் தேவைப்படுகின்றன. ஏதேனும் பிணக்கு ஏற்படும் சந்தர்ப்பத்தில் இச்சத்தியக்கடதாசியானது சட்ட ரீதியாகப் பிணிக்கின்ற ஆவணமாக இருத்தல் வேண்டும்.

2. **சத்தியக்கடதாசி**

(i) தேவையற்ற சொற்களைத் தவிர்க்கும் விதத்தில், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட படிவத்தின் அடிப்படையில், சத்தியக் கடதாசியை புதியதொரு ஆவணமாகத் தயாரிப்பது விரும்பத்தக்கதாகும். எனினும், வழங்கப்பட்ட படிவம் நிரப்பப்பட்டிருக்குமிடத்து, அனைத்து மாற்றங்கள், அழித்தல்கள் மற்றும் வரிகளுக்கிடையிலான செருகல்கள் தொடர்பில் அத்தகைய அனைத்துத் திருத்தங்களும் செய்யப்பட்டதும் சத்தியப்பிரமாண ஆணையாளரினால்/ சமாதான நீதிவானால் முதலெழுத்துக்கள் இடப்படுதல் வேண்டும்.

(ii) அனைத்து வெற்றிடங்களும் பொருத்தமான விதத்தில் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.

(iii) அலுவலரின் சமயத்தின் அடிப்படையில் பொருத்தமான சொற்கள் பயன்படுத்தப்படல் வேண்டும். அலுவலர் அவரின்/ அவளின் சமயத்தினை வெளிப்படுத்துவதனை தவிர்ப்பாராயின்/ ஆட்சேபிப்பாராயின் அலுவலர் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு உறுதிப்படுத்தலொன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) அவர்/ அவள் ஒரு நாஸ்திகர் அல்லது அவர் சேர்ந்த சமயம் இச்சத்தியக்கடதாசியில் குறிப்பிடப்பட்டிருக்கப்படவில்லை; அல்லது

(ஆ) அவர்/ அவள் அவரின்/ அவளின் சமயத்தினை வெளிப்படுத்த விரும்பவில்லை.

(iv) தொடர்பற்ற சொல்லை/ சொற்களை நீக்கிவிடவும். தொடர்பற்ற சொற்கள் நீக்கப்பட்டிருப்பின் சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சமாதான நீதிவான் அத்தகைய அனைத்து திருத்தங்களையும் உடனடுத்து அவரது முதலெழுத்துக்களை இடுதல் வேண்டும்.

(v) ஆள் வெளிநாட்டவராகவும் சத்தியக்கடதாசியில் கையொப்பமிடும் வேளையில் அவர் வெளிநாட்டிலும் இருக்குமிடத்து:

(அ) ஆளின் கையொப்பமானது சத்தியப்பிரமாண ஆணையாளரினால் அல்லது அவர் வதியும் நாட்டிலுள்ள அவருக்குச் சமமான ஆளினால் உறுதிப்படுத்தப்பட்டு கையொப்பமிடப்படல் வேண்டும்.

(ஆ) உறுதிப்படுத்தலானது, முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆள் எந்நாட்டில் வாழ்கின்றாரோ அந்நாட்டிலுள்ள இராசதந்திரி

அல்லது காவற்றுதராக அலுவலரின் அல்லது அத்தகைய நாட்டிலுள்ள ஏற்புடைத்தான சட்டங்களின் நியதிகளில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(vi) சத்தியக்கடதாசியில் கையொப்பமிடும் நாளன்று உள்ளவாறு, ஏற்புடைத்தான விதத்தில் பொருத்தமான பெறுமதியில் முத்திரை ஒட்டப்படல் வேண்டும்.

(vii)'எனக்கு முன்னால்' உள்ள இடத்தில் ஆள் கையொப்பமிட்டதனை உடனடுத்து சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சமாதான நீதிவானினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(viii)பிரிவு 2 கம்பனிச் செயலாளரினால் நிரப்பப்படுதல் வேண்டும் என்பதுடன் தொடர்பான நியமனம் தொடர்பில் நியமனக் குழுவில் அல்லது ஒப்புதலளிக்கும் அதிகாரசபையின் கூட்டக்குறிப்பின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.

(ix) பிரிவு 2இன் விடயம் 2(1)இல் அபிப்பிராயங்கள் எதுவும் தெரிவிக்கப்படாதுவிடின், ஏற்புடைத்தானதல்ல/ இல்லை/ ஒன்றுமில்லை எனத் தெரிவிக்கப்படல் வேண்டும்.

# பகுதி IV

# பகுதி IV

## 2021ஆம் ஆண்டின் இலங்கை மத்திய வங்கியினதும் இலங்கையிலுள்ள வங்கித்தொழில் நிறுவனங்களினதும் செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பான முக்கிய சட்டவாக்கங்கள்(அ)

பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் | 1 |
| 2. | 2021 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தச்) சட்டம் | 28 |
| 3. | 2021 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கொரோனா வைரஸ் தொற்றுநோய் 2019 (கொவிட்-19) (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் | 28 |
| 4. | 2021 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, நிதிச் சட்டம் | 31 |
| 5. | 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம் | 40 |
| 6. | 2021 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிய (திருத்தச்) சட்டம் | 104 |
| 7. | 2021 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, ஒதுக்கீடு (திருத்தச்) சட்டம் | 105 |
| 8. | 2021 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, வேலையாளர்களின் குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயதுச் சட்டம் | 105 |
| 9. | 2021 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, வேலையாட்களின் வேலையை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் | 111 |
| 10. | 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம் | 111 |


(அ) மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் பிரசுரிக்கப்பட்டுள்ள உரைக்கும் அரசாங்க அச்சுத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்பட்டுள்ள உரைக்குமிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் அரசாங்க அச்சுத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்பட்ட உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்

[2021 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

**விசேட பொருளாதார வலயமொன்றின் தாபிப்புக்கென ஏற்பாடு செய்வதற்கும்; பதிவுசெய்தல்கள், உரிமங்கள், அதிகாரவளிப்புக்கள் மற்றும் வேறு அங்கீகாரங்களை அளிப்பதற்கும் அத்தகைய வலயத்திலும் வலயத்திலிருந்தும் வியாபாரங்களையும் வேறு செயற்பாடுகளையும் கொண்டு நடாத்துவதற்கும் தத்துவமளிக்கப்பட்ட ஆணைக்குழு வொன்றை தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்தகைய வலயத்தினுள் செய்கின்ற வியாபாரத்தின் எளிதாக்கலின் மேம்படுத்துகைக்கான ஒற்றைச் சாளர முதலீட்டு வசதிப்படுத்துநரொருவரின் அடையாளப்படுத்துகைக்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்தகைய வலயத்தினுள் செயல்நுணுக்க முக்கியத்துவமான வியாபாரங்களின் மேம்படுத்துகைக்கான ஊக்குவிப்புகள் மற்றும் வேறு விலக்களிப்புகளைத் தீர்மானிப்பதற்கும் அளிப்பதற்கும்; அத்தகைய வலயத்தினுள் அரசாங்க சந்தைப்படுத்தபடற்பாலதான காணி மற்றும் கருத்திட்ட கம்பெனி சந்தைப்படுத்தப்படற்பாலதான காணி மற்றும் வளவுகளினதும் மற்றும் அதிலுள்ள கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளினதும் ஏற்பாடுசெய்யப்பட்டவாறான கொடுக்கல்வாங்கல்களைச் செய்துகொள்வதற்கும்; அத்தகைய வலயத்தினுள் சர்வதேச வர்த்தகம், கப்பற்றொழில் முகாமைத்துவ தொழிற்பாடுகள், கரைகடந்த வங்கித்தொழில் மற்றும் நிதிசார் சேவைகள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் வியாபார வழிமுறை, வெளியாட்களை பணிக்கமர்த்தல் முறை, கூட்டிணைக்கப்பட்ட தலைமையகங்களின் தொழிற்பாடுகள், பிராந்திய விநியோக தொழிற்பாடுகள், சுற்றுலாப் பயணத்துறை மற்றும்வேறு துணையாய சேவைகளை மேம்படுத்துவதற்கும் வசதிப்படுத்துவதற்கும்; அத்தகைய வலயத்தினுள் சர்வதேச பிணக்குத் தீர்வு நிலையமொன்றை தாபிப்பதற்கும்; நகர வசதி தொழிற்பாடுகள் மற்றும் அத்தகைய வலயத்தினுள் வதிவிட சமூகமொன்றின் குடியேற்றங்களை மேம்படுத்துவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் உத்தரவாதப்படுத்தப்பட்ட அரச கொள்கை வழிகாட்டிக் கோட்பாடுகளை முன்னேற்றுவதில், நாட்டின் விரைவான அபிவிருத்தியை பகிரங்க மற்றும் தனியார் பொருளாதார செயற்பாடு என்ற வாயிலாக உறுதிப்படுத்துவதற்கு அரசைத் தேவைப்படுத்துவதாதலாலும், தேசிய நலனில் பகிரங்க மற்றும் தனியார் பொருளாதாரச் செயற்பாட்டை ஒருங்கிணைப்பதில் அத்தகைய வலயத்தினுள் வெளிநாட்டுச் செலாவணியின் உள்வருகையை மேம்படுத்துவதற்கும், தொழில்நுட்ப, உயர்தொழில்சார், தொழில்நுட்பவியல்சார், மற்றும் தொழில் முனைவோர்சார் நிபுணத்துவத்தை வசதிப்படுத்துகின்ற அதேவேளை அத்தகைய வலயத்தினுள் புதிய தொழில் வாய்ப்புக் களை உருவாக்குவதற்கும் மற்றும் வதிவிட சமூகமொன்றின் குடியேற்றத்தின் ஊடாக அத்தகைய வலயத்தினுள் நகரவசதி தொழிற்பாடுகளின் மேம்படுத்துகையை வசதிப்படுத்துவதற்கும் சேவைப் பொருளாதாரத்தின் பன்முகப்படுத்தலை வசதிப்படுத்துவதற்கு ஆரம்பமாக புதிய முதலீடுகளை கவரச் செய்கின்ற வியாபாரம் செய்தலை எளிதாக்குகின்ற விசேட பொருளாதார வலயமொன்றைத் தாபிப்பது அவசியமென இலங்கை அரசாங்கம் கருதியுள்ளதாதலாலும்:

அத்துடன் சர்வதேச வர்த்தகம், கப்பற்றொழில் முகாமைத்துவ தொழிற்பாடுகள், கரைகடந்த வங்கித்தொழில் மற்றும் நிதிசார் சேவைகள், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் வியாபார வழிமுறையில் வெளியாட்களை பணியிலமர்த்துதல் முறை, கூட்டிணைக்கப்பட்ட தலைமையகங்களின் தொழிற்பாடுகள், பிராந்திய விநியோக தொழிற்பாடுகள், சுற்றுலாப் பயணத்துறை மற்றும் வேறு துணையாய சேவைகள் உட்பட பொருளாதார செயற்பாட்டின் மேம்படுத்தல் மற்றும் வசதிப்படுத்தலுக்காக, அத்தகைய வலயத்தினுள் விசேடித்த உட்கட்டமைப்பு மற்றும் வேறு வசதிகளுடன் சர்வதேச வியாபாரம் மற்றும் சேவைகள் மையமாகவிருக்கும் "கொழும்புத் துறைமுக நகர விசேட பொருளாதார வலயம்" என அழைக்கப்பட வேண்டிய விசேட பொருளாதார வலயம் ஒன்றைத் தாபிப்பது தேசிய நலனை அல்லது தேசிய பொருளாதார முன்னேற்ற நலனைக் கருத்திற்கொண்டு அவசியமாக வந்திருப்பதாதலாலும்:

ஆகவே இப்பொழுது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

### பாகம் I

### கொழும்புத் துறைமுக நகர விசேட பொருளாதார வலயம் மற்றும் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு என்பவற்றைத் தாபித்தல்

2. (இதனகத்துப்பின்னர் "கொழும்புத் துறைமுக நகரம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "கொழும்புத் துறைமுக நகர விசேட பொருளாதார வலயம்" என அழைக்கப்பட வேண்டிய விசேட பொருளாதார வலயமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். இதனகத்து தாபிக்கப்படும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பு இச்சட்டத்திற்கான அட்டவணை I இல் தரப்பட்ட எல்லைகளைக் கொண்டமைந்ததாதல் வேண்டும்.

3. (1) (இச்சட்டத்தில் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு எனவழைக்கப்படும் ஆணைக்குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்; கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் அத்துடன் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் வியாபாரங்கள் மற்றும் வேறு தொழிற்பாடுகளுடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களினதும் நிருவாகம், ஒழுங்குபடுத்துகை மற்றும் கட்டுப்பாடு இச்சட்டத்தில் தரப்பட்ட முறையில் அதற்குப் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதற்கு குறித்தளிக்கப்பட்ட பெயரைக்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், இடையறாவழியுரிமையையும் பொது இலச்சினையையும் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அது அப்பெயர்கொண்டு வழக்குத்தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

(3) ஆணைக்குழு இச்சட்டத்தில் தரப்பட்டுள்ளவாறான குறிக்கோள்கள் மற்றும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைக் கொண்டதாதல் வேண்டும்.

(4) ஆணைக்குழு, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் ஏற்புடையனவான எல்லா சமூக விதிகளையும் தயாரித்தலுக்கும், அபிவிருத்தி செய்தலுக்கும், திருத்துவதற்கும், நாளது வரையாக்குதலுக்கும், வெளியிடுதலுக்கும், வலுவுறுத்தலுக்கும், வசதிப்படுத்துவதற்கும் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

(5) ஆணைக்குழுவானது, அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்று வதிலும், ஏதேனும் ஒழுங்குபடுத்தும் அதிகாரிக்கு ஏற்புடையதான முறையான எழுத்திலான சட்டங்களினால் அவ்வாறு தேவைப்படுத்தப்படுமிடத்து, அத்தகைய அதிகாரிக்குரித்தாக்கப்பட்ட அல்லது குறித்தளிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் இச்சட்டத்தில் குறிப்பாக ஏற்பாடு செய்யப்பட்ட

அளவுவரையும் இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகாரியின் ஒருப்பாட்டைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்: ஆயின், நாடப்பட்ட இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகாரியின் ஒருப்பாடு, அத்தகைய ஒழுங்குபடுத்தும் அதிகாரிக்கு ஏற்புடையதான முறையான எழுத்திலான சட்டங்களை ஆணைக்குழு கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் நடைமுறைப்படுத்தலுக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்.

(6) அத்தகைய ஒருப்பாடு எந்த இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகாரியிடமிருந்து நாடப்படுகின்றதோ அந்த இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகாரி, சூழ்நிலைகளில் செயல்முறைக்குகந்தவரை விரைவாக, முன்னுரிமை விடயமொன்றாக, ஆணைக்குழுவுக்கு அதன் முடிபை அறிவித்தல் வேண்டும்.

4. (1) சனாதிபதியின் ஒருப்பாட்டுடன் அல்லது கொழும்புத் துறைமுக நகரம் என்னும் விடயம் ஓர் அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படும் ஏதேனும் பட்சத்தில், அத்தகைய அமைச்சரின் ஒருப்பாட்டுடன், ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறான முதன்மைத் திட்டம், எந்த அடிப்படைமீது கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் எல்லா வலயவமைப்பு மற்றும் வேறு பௌதீக அபிவிருத்தி செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமோ அந்த அடிப்படையாக இருத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழு, கருத்திட்டக் கம்பெனியின் கலந்தாலோசனையுடனும், சனாதிபதியின் ஒருப்பாட்டுடனும், அல்லது கொழும்புத் துறைமுக நகரம் என்னும் விடயம் ஓர் அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படும் ஏதேனும் பட்சத்தில், அத்தகைய அமைச்சரின் ஒருப்பாட்டுடன், கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் கொண்டுநடாத்தப்படும் வியாபாரங்களின் விரிவாக்கத்தை அதனது நம்பகத்தன்மை ஊடாக உறுதிப்படுத்துவதற்கு தேசிய நலனில் அல்லது தேசிய பொருளாதார முன்னேற்றத்தின் நலனில் முதன்மைத் திட்டத்திற்கான எவையேனும் திருத்தங்கள் அவசியமென கருதப்படின், அத்தகைய திருத்தங்களை அடையாளங்காணலாம்.

(3) ஆணைக்குழுவுக்கு முதன்மைத் திட்டம் மற்றும் இச்சட்டத்தின் நியதிகளின்படி ஆக்கப்படவேண்டியவாறான அபிவிருத்திக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின் உரிய நடைமுறைப்படுத்துகையை உறுதிப்படுத்துகின்ற பொறுப்பு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(4) ஆணைக்குழு, முதன்மைத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் மீதான முன்னேற்றத்தை தருகின்ற ஆண்டு முன்னேற்ற அறிக்கையொன்றை சனாதிபதிக்கு அல்லது கொழும்புத் துறைமுக நகரம் என்னும் விடயம் ஓர் அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படும் பட்சத்தில் அத்தகைய அமைச்சருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(5) ஆணைக்குழு, கருத்திட்ட கம்பெனியுடன் கலந்துரையாடலை நடாத்தி, அத்தகைய ஆண்டு முன்னேற்ற அறிக்கையுடன் சேர்த்து முதன்மைத் திட்டத்திற்கான ஏதேனும் மீளாய்வுமீதான அதனது விதப்புரைகளை சனாதிபதியின் அல்லது கொழும்புத் துறைமுக நகரம் என்னும் விடயம் ஓர் அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படும் பட்சத்தில் அத்தகைய அமைச்சரின் கருத்திற்கெடுத்தலுக்கென சமர்ப்பித்தல் வேண்டும்.

(6) சனாதிபதி அல்லது கொழும்புத் துறைமுக நகரம் என்னும் விடயம் ஓர் அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படும்பட்சத்தில் அத்தகைய அமைச்சர் தேசிய நலனில் அல்லது தேசிய பொருளாதார முன்னேற்றத்தின் நலனில் அவ்வாறு தேவைப் பட்டால், ஆணைக்குழுவுக்கு எழுத்தில் அத்தகைய பொதுவான அல்லது விசேடமான பணிப்புக்களை இப்பிரிவின் நோக்கங்களுக்காக வழங்கலாம்.

## பாகம் II

### ஆணைக்குழுவின் குறிக்கோள்களும் அத்துடன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளும்

5. ஆணைக்குழுவின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் -

(அ) பிராந்தியத்தில் முன்னணியான விசேட பொருளாதார வலயமொன்றாகவும் ஈர்ப்பான முதலீட்டு சேரிடமாகவும் இருக்க வேண்டியதாக கொழும்புத் துறைமுக நகரத்தை மேம்படுத்துதல்;

(ஆ) நாட்டினுள் அதிகரித்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்த்தல்;

(இ) பாதுகாப்பானதும் உசிதமானதுமான வியாபாரச் சூழலை உருவாக்குதலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் வியாபாரம் செய்தலின் எளிதாக்குகையை வசதிப்படுத்துதலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்புத் தொடர்பில் வியாபாரம் செய்தலின் எளிதாக்கல் சுட்டி, பிராந்தியத்திலுள்ள வேறு ஈர்க்கக்கூடிய பொருளாதார வலயங்களுக்கு அதையொத்த ஒரு மட்டத்தில் பேணப்படுகின்றது என உறுதிப்படுத்த முயற்சித்தலும்;

(ஈ) முதலீட்டாளர்களின் நம்பிக்கையை அதிகரிக்கும் நோக்கில் அதனது வினைத்திறமையான, நம்பகத் தன்மையான மற்றும் வெளிப்படைத்தன்மையான வியாபாரத் தொழிற்பாடுகள் மற்றும் நிருவாக கொடுக்கல்வாங்கல்களைச் செய்வதில் எளிதாக்கலை உறுதிப்படுத்துதல்;

(உ) சர்வதேச வர்த்தகம், கப்பற்றொழில் முகாமைத்துவ தொழிற்பாடுகள், கரைகடந்த வங்கித்தொழில் மற்றும் நிதி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் வியாபார வழிமுறையில் வெளியாட்களைப் பணியிலமர்த்துதல் முறை, கூட்டிணைக்கப்பட்ட தலைமையகங்களின் தொழிற்பாடுகள், பிராந்திய விநியோகத் தொழிற்பாடு கள், சுற்றுலாப்பயணத்துறை மற்றும் வேறு துணையாய சேவைகளில் உலகளாவிய மற்றும் பிராந்திய முதலீடுகளை ஊக்குவித்தலும் மேம்படுத்துதலும்;

(ஊ) புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவோர் செயற்பாட்டை மேம்படுத்துதலும் அபிவிருத்தி செய்தலும்;

(எ) தீர்வையற்ற பொருட்கொள்வனவு, பொழுதுபோக்கு மற்றும் வேறு அதையொத்த வசதிகளை வசதிப்படுத்துவதன்மூலம் சுற்றுலாப்பயணத்துறை மற்றும் துணையாய சேவைகளை மேம்படுத்துதல்;

(ஏ) தொழில் வாய்ப்புகளை தோற்றுவித்தல்;

(ஐ) நிலைபெறுதகு அபிவிருத்தியை மேம்படுத்துதல்; அத்துடன்

(ஒ) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் வதிவுள்ள சமூகமொன்றின் குடியமர்த்தலுடனான நகர வசதி தொழிற்பாடுகளை மேம்படுத்துதல்.

6. (1) ஆணைக்குழு தேசிய நலனை அல்லது தேசிய பொருளாதார முன்னேற்றத்தின் நலனை முன்னேடுத்துச்செல்வதில் கீழே தரப்பட்டவாறான தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்:-

(அ) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு ஒரு பதிவுசெய்தல், உரிமம், அதிகாரவளிப்பு மற்றும் வேறு அங்கீகாரத்தை வழங்குதலும் அல்லது அளித்தலும் அத்துடன் இச்சட்டத்தின் நியதிகளின்படி அத்தகைய வியாபாரங்களுக்கும் முதலீடுகளுக்கும் வசதியளித்தலும்;

(ஆ) இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகாரியுடனான ஒருப்பாட்டுடன் இச்சட்டத்தின் நியதிகளின்படி கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் எல்லா முதலீடுகள் மற்றும் வியாபாரங்கள்மீதும் ஒழுங்குபடுத்துதல்சார்ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டை வசதிப்படுத்தலும் பிரயோகித்தலும்: ஆயின், நாடப்பட்ட இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகாரியின் ஒருப்பாடு, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள், அத்தகைய அதிகாரிக்கு ஏற்புடையதான முறையான எழுத்திலான சட்டங்களின் நடைமுறைப்படுத்தலுக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்;

(இ) இச்சட்டத்தின் நியதிகளின்படி ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் அமைந்துள்ள அரசாங்கம் சந்தைப்படுத்தப்படற்பாலதான காணியை இச்சட்டத்தினதும் ஏனைய ஏற்புடையனவான எழுத்திலான சட்டங்களினதும் ஏற்பாடுகளுக்கமைய குத்தகைக்கு விடுதல்;

(ஈ) கருத்திட்ட கம்பெனி சந்தைப்படுத்தப்படற்பாலதான காணி தொடர்பில் எக்கருத்திட்ட கம்பெனி முதன்மைக் குத்தகைகளை வைத்திருக்கின்றதோ அக்கம்பெனியுடன் சேர்த்து இச்சட்டத்தின் நியதிகளின்படி ஆணைக் குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் அமைந்துள்ள அக்காணியை இச்சட்டத்தினதும் ஏனைய ஏற்புடையனவான எழுத்திலான சட்டங்களினதும் ஏற்பாடுகளுக்கமைய குத்தகைக்கு விடுதல்;

(உ) விடயத்துக்கேற்ப, முறையான முதலீட்டாளர் அல்லது அபிவிருத்தியாளருடன் சேர்த்து இச்சட்டத்தின் நியதிகளின்படி ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் அரசாங்கம் சந்தைப்படுத்தப்படற்பாலதான காணியிலுள்ள கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளை இச்சட்டத்தினதும் ஏனைய ஏற்புடையனவான எழுத்திலான சட்டங்களினதும் ஏற்பாடுகளுக்கமைய குத்தகைக்கு விடுதல் அல்லது இறையிலி அடிப்படைமீது கைமாற்றுதல்;

(ஊ) எக்கருத்திட்ட கம்பெனி சந்தைப்படுத்தப்படற்பாலதான காணி தொடர்பிலான முதன்மைக் குத்தகைகளை வைத்திருக்கின்றதோ அக்கம்பெனியுடன் சேர்த்து இச்சட்டத்தின் நியதிகளின்படி ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் அமைந்துள்ள கருத்திட்டக் கம்பெனியின்மீது அமைந்துள்ள கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளை இச்சட்டத்தினதும் ஏனைய ஏற்புடையனவான எழுத்திலான சட்டங்களினதும் ஏற்பாடுகளுக்கமைய குத்தகைக்கு விடுதல் அல்லது இறையிலி அடிப்படைமீது கைமாற்றுதல்;

(எ) முதலீட்டாளர்களின் தனித்த தொடர்பு புள்ளியாகவுள்ள ஒற்றைச் சாளர முதலீட்டு வசதிப்படுத்துநராக இருப்பதுடன் இயைபான ஏதேனும் ஒழுங்குபடுத்தும் அதிகாரியுடனான ஒருப்பாட்டுடன் அத்தகைய ஒழுங்குபடுத்தும் அதிகாரிக்கு ஏற்புடையதான முறையான எழுத்திலான சட்டங்களினால் அவ்வாறு தேவைப்படுத்தப்படுமிடத்து, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு தேவைப்படுத்தப்படும் எல்லா பதிவுசெய்தல்கள், உரிமங்கள், அதிகாரவளிப்புகள் மற்றும் வேறு அங்கீகாரங்கள் அவ்வாறு தேவைப்படுத்தப்படுமிடத்து, அவற்றின் விரைவான வசதிப்படுத்தல் மற்றும் வழங்கல் ஊடாக வியாபாரம் செய்தலின் எளிதாக்கலை மேம்படுத்துதல்;

(ஏ) ஒற்றைச் சாளர முதலீட்டு வசதிப்படுத்துநராக செயலாற்றுதலும் இச்சட்டத்தின் பாகம் VI இன் நியதிகளின்படி கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் மற்றும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கென ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படும் முன்மொழிவுகளை மதிப்பீடு செய்தலும் அவற்றின்மீது விதப்புரைகளைச் செய்தலும் அங்கீகரித்தலும் இச்சட்டத்தில் தரப்பட்டவாறாக அங்கீகரிப்புகளை வசதிப்படுத்துதலும்;

(ஐ) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் மற்றும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும், வியாபாரங்கள், பொருட்களைக் கொள்வனவு செய்தல், மற்றும் பந்தய செயற்பாடுகள் மற்றும் அத்தகைய வேறு வசதிகள் உட்பட பொழுதுபோக்குகளைத் தொழிற்படுத்துவதற்கும், வர்த்தக வதிவிட வசதிகளின் உடைமையைப் பெற்றுக்கொள்வதற்கும் தேவைப்படக்கூடியவாறான வேறு எல்லா அனுமதிப்பத்திரங்கள், அனுமதிகள், வேலை அனுமதிப் பத்திரங்கள் மற்றும் அத்தகைய வேறு அங்கீகாரங்களைத் திட்டமிடுதலும், வழங்குதலும் மற்றும் அவற்றுக்கு இணங்கியொழுகுதலைக் கண்காணித்தலும்;

(ஒ) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான சூழல்சார் தராதரங்களை அபிவிருத்தி செய்தலும் அங்கீகரித்தலும் சூழல்சார் சீராக்கங்களைத் திட்டமிடுதலும், கண்காணித்தலும், நிறைவேற்றுதலும்;

(ஓ) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள்ளான அபிவிருத்தி வேலை, (கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளை இச்சட்டத்தின் பாகம் X இன் ஏற்பாடுகளுக்கிணங்க நிர்மாணித்தல் உட்பட), செயற்பாடுகள் மற்றும் சேவைகளை நடைமுறைப்படுத்துதல், சனாதிபதியினால் அல்லது கொழும்புத் துறைமுக நகரம் என்னும் விடயம் ஓர் அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படும் பட்சத்தில் அத்தகைய அமைச்சரினால் விடுக்கப்படக்கூடியவாறான எவையேனும் பணிப்புகளுக்கு அமைய, முதன்மைத் திட்டம் மற்றும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அபிவிருத்திக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுவதாக நிறைவேற்றப்படுவதனை உறுதிப்படுத்துதல்;

(ஔ) அதனது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளின் பிரயோகம், புரிகை மற்றும் நிறைவேற்றுகைக்கென அவசியமாகக்கூடியவாறாக எவரேனும் ஆளுடன் ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளுதல்;

(க) அதனது குறிக்கோள்களை எய்துவதற்கெனவும் அதனது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கெனவும் சர்வதேச நிதிசார் மற்றும் வியாபார நிலையங்கள், ஒழுங்குபடுத்துநர்கள் மற்றும் வேறு குழுக்கள், நிறுவனங்கள், ஒழுங்கமைப்புகள் மற்றும் ஆட்களுடன் ஒத்துழைத்தலும் உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளுதலும்;

(ங) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் நேரடியாக ஆணைக்குழுமூலம் அல்லது சொத்து முகாமையாளர் ஊடாக வழங்கப்படும் துணைநிலைச் சேவைகள் மற்றும் வசதிகளுக்கென ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான கட்டணங்களையும் வேறு விதிப்பனவுகளையும் அறவிடுதல்;

(ச) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் ஆணைக்குழுவினால் அல்லது சொத்து முகாமையாளரினூடாக வழங்கப்பட்ட ஏதேனும் சேவை அல்லது வசதி தொடர்பாக நிபந்தனைகளை அல்லது தேவைப்பாடுகளை விதித்தலும் பணிப்புகளை வழங்குதலும்;

(ஞ) விதித்துரைக்கப்பட வேண்டியவாறான வீதத்தில், இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டவாறாக கொழும்புத் துறைமுக அதிகார இடப்பரப்பினுள் ஏற்புடையதான உள்ளூர் வரிமதிப்பீட்டு வீதங்கள் மற்றும் வேறு விதிப்பனவுகளை அடையாளங் காணுதலும்;

(ட) விதித்துரைக்கப்படக்கூடியவறான அத்தகைய நியதிகள், நிபந்தனைகள் மற்றும் நடவடிக்கைமுறைகளுக்கு அமைய, குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் வர்த்தகம் செய்வதற்காக, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களினால் தொழிற்படுத்தப்பட வேண்டிய ஏதேனும் பங்குத்தொகுதி, விலைமதிப்புள்ள உலோகம் அல்லது பொருள் பரிவர்த்தனை அல்லது சந்தை தாபிக்கப்படுவதற்கு மற்றும் தொழிற்படுத்தப்படுவதற்கு வசதியளித்தல்;

(ண) அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவராக பதிவு செய்யப்படுவதற்காக ஆணைக்குழுவுக்கு ஏதேனும் கம்பெனி அல்லது ஆளினால் செய்யப்படும் ஏதேனும் விண்ணப்பம் தொடர்பில் தேவைப்படக்கூடியவாறான ஆவணங்களை அல்லது தகவலை கேட்டுப்பெறுதல்;

(த) அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரின் கோரிக்கையின் பேரில் ஏதேனும் பதிவுசெய்தல், உரிமம், அதிகாரவளிப்பு அல்லது வேறு அங்கீகாரத்தைத் திருத்துதல், கைமாற்றுதல், குறித்தளித்தல், புதுப்பித்தல் அல்லது அதனது ஒப்படைப்பை ஏற்றுக்கொள்ளுதல்;

(ந) அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினாலான பொருளளவிலான தவறுகை அல்லது மீறுகையின் விடயத்தில், ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஏதேனும் பதிவுசெய்தல், உரிமம், அதிகாரவளிப்பு அல்லது வேறு அங்கீகாரத்தை திருத்துதல், இரத்துச்செய்தல், இடைநிறுத்திவைத்தல் அல்லது இல்லாதொழித்தல்;

(ப) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள்ளான எல்லா சமூக விதிகளையும் தயாரித்தல், அபிவிருத்தி செய்தல், திருத்துதல், நாளதுவரையாக்குதல், வெளியிடுதல் மற்றும் வலுவுறுத்தல் அத்துடன் விதித் துரைக்கப்படக்கூடியவாறான அபிவிருத்திக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளை வலுவுறுத்தல்;

(ம) இச்சட்டத்தின் நியதிகளின்படி விதித்துரைக்கப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்படும் கருமங்கள் மீதான ஒழுங்குவிதிகளை உருவாக்க வசதியளித்தல்;

(ய) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் ஏற்புடையதாக வேண்டியனவான ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளின் உரிய நிருவாகம் மற்றும் முகாமைக்கென தேவைப்படுத்தப்படக்கூடியவாறாக இச்சட்டத்தில் தரப்பட்டுள்ள கருமங்கள் தொடர்பில் விதிகளையும் கோவைகளையும் ஆக்குதலும், நடவடிக்கைமுறைகள் மற்றும் தராதரங்களை குறித்துரைத்தலும், பணிப்புகள் மற்றும் வழிகாட்டு நெறிகளை வழங்குதலும்;

(ர) இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் சம்பந்தப்படுகின்ற ஏதேனும் வணிகப் பிணக்கின் விரைவான தீர்வை வசதிப் படுத்துதல்;

(ல) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்புத் தொடர்பான ஏதேனும் கருமம்மீது சனாதிபதிக்கு அல்லது கொழும்புத் துறைமுக நகரம் என்னும் விடயம் ஓர் அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படும் பட்சத்தில் அத்தகைய அமைச்சரின் கொள்கை உருவாக்கம் தொடர்பான விதப்புரைகளை செய்தல்;

(வ) சனாதிபதியினால் அல்லது கொழும்புத் துறைமுக நகரம் என்னும் விடயம் ஓர் அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படும் பட்சத்தில் அத்தகைய அமைச்சரினால் கோரப்படக் கூடியவாறாக கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பு தொடர்பாக ஏதேனும் குறிப்பிட்ட கருமம் மீது அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்;

(அஅ) பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுவதற்கென ஆணைக்குழுவின் தொழிற்பாடுகள், வருமானம் மற்றும் செலவினம் மீதான ஆண்டறிக்கையொன்றை சனாதிபதிக்கும் அல்லது கொழும்புத் துறைமுக நகரம் என்னும் விடயம் ஓர் அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படும் பட்சத்தில் அத்தகைய அமைச்சருக்கும் நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சருக்கும் சமர்ப்பித்தல்;

(ஆஅ) பணிப்பாளர் தலைமையதிபதியை நியமித்தல், அகற்றுதல் மற்றும் அவர்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டை பிரயோகித்தல் அத்துடன் சனாதிபதியின் அல்லது கொழும்புத் துறைமுக நகரம் என்னும் விடயம் ஓர் அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படும் பட்சத்தில் அத்தகைய அமைச்சரின் கலந்தாலோசனையுடன் சம்பளம் மற்றும் வேறெவையேனும் படிகள் உட்பட அவரது சேவை நியதிகள் மற்றும் நிபந்தனைகளை தீர்மானித்தலும் ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து பணிப்பாளர் தலைமையதிபதிக்கு ஊதியமளித்தலும்;

(இஅ) ஆணைக்குழுவின் பணியாட்டொகுதியினரை நியமித்தல், பதவிநீக்கல் மற்றும் அவர்களின் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டை பிரயோகித்தல் அத்துடன் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான சம்பளங்கள், வேதனங்கள் மற்றும் வேறெவையேனும் படிகள் உட்பட அவர்களது சேவைகளின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளைத் தீர்மானித்தல்;

(ஈஅ) சனாதிபதி அல்லது கொழும்புத்துறைமுக நகரம் என்னும் விடயம் அமைச்சரொருவருக்கு குறித்தளிக்கப்படும் பட்சத்தில், அத்தகைய அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய தொகைகளிலும் அதனது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை ஆணைக்குழு பிரயோகித்தலிலும், புரிதலிலும், நிறைவேற்றுதலிலும் அதற்கு உதவுவதற்கு அவசியமாகக்கூடியவாறான ஆலோசகர்கள் அல்லது மதியுரைநர்களின் சேவைகளை ஈடுபடுத்துதலும், ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து அவர்களுக்கு ஊதியமளித்தலும்;

(உஅ) ஆணைக்குழுவின் தொழிற்பாட்டு அல்லது நிருவாக நோக்கங்களுக்கென தேவைப்படக் கூடியவாறான ஏதேனும் அலுவலக மற்றும் வேறு இடத்தை ஆணைக்குழுவின் பெயரில் வைத்திருத்தல், குத்தகைக்கு எடுத்தல் அல்லது வாடகைக்கு எடுத்தல்;

(ஊஅ) இச்சட்டத்தின் நியதிகளின்படி விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக, ஆணைக்குழுவின் நிதியத்தை முகாமை செய்தல், முதலீடுகளைச் செய்தல், வங்கிக் கணக்குகளைத் தொழிற்படுத்துதலும் பேணுதலும் நிதிகளைக் கடனாகப் பெறுதலும் மற்றும் ஆணைக்குழுவின் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தை அங்கீகரித்தலும் முகாமை செய்தலும்;

(எஅ) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் பந்தய செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துதலும் மற்றும் அத்தகைய செயற்பாடுகளை முகாமை செய்வதற்கு தேவைப்படுமிடத்து, ஒழுங்குவிதிகளை ஆக்குதலும்;

(ஏஅ) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் நியதிகளின்படி கூட்டிணைக்கப்பட்டதும் இச்சட்டத்தின் 59 ஆம் பிரிவின் நியதிகளின்படி சொத்து முகைாமையாளர் எனப் பெயர்குறிக்கப்பட்டதுமான கம்பெனிக்கு, ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக் கூடியவையும் கூட்டாட்சியாதன முகாமைத்துவம் மற்றும் இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மை என்னும் விடயங்களுடன் சம்பந்தப்பட்டவாறானவையுமான அத்தகைய பணிகளை அல்லது வேறேதேனும் குறித்தளிக்கப்பட்ட பணியைக் கையளித்தலும் அல்லது குறித்தளித்தலும்; அத்துடன்

(ஐஅ) இச்சட்டத்தின் நியதிகளின்படி ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட, குறித்தளிக்கப்பட்ட அல்லது கையளிக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதலின் இடைநேர்விளைவான அல்லது அதன் விளைவாந்தன்மையான வேறு எல்லா செயல்களையும் காரியங்களையும் பொதுவாகச் செய்தல்.

(2) ஓராம் உட்பிரிவில் தரப்பட்டுள்ளவாறான அதனது தத்துவங்களின் பிரயோகத்தில், புரிகையில் மற்றும் நிறைவேற்றுகையில் ஆணைக்குழு கொழும்புத் துறைமுக நகரம் தொடர்பாக சர்வதேச மேம்படுத்தல்சார் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றபோது, ஆவணப்படுத்தல்களின் அபிவிருத்தி, உள்ளடக்கத்தின் தயாரிப்பு, வடிவமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆதரவு மற்றும் அத்தகைய மேம்படுத்தல்சார் செயற்பாடுகளில் உள்ஷர் சூட்சும புத்தி மற்றும் திறமைகளின் பங்கெடுத்தலொன்றை சாத்தியமான அளவிற்கு உறுதிப்படுத்துதல் வேண்டும்.

## பாகம் III

### ஆணைக்குழுவின் அமைத்துருவாக்கமும் அலுவல்களின் நிருவாகமும் முகாமைத்துவமும்

7. (1) ஆணைக்குழு ஐந்து உறுப்பினர்களுக்கு குறையாதவர்களும் ஏழு உறுப்பினர்களுக்கு மேற்படாதவர்களுமான உறுப்பினர் களைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழுவின் தவிசாளர் உட்பட, பெரும்பான்மையோர் இலங்கையராக இருப்பதனை உறுதிப்படுத்தும் அதேவேளையில், அவர்கள் சனாதிபதியினால் நியமிக்கப்படுதலும் வேண்டும். அத்தகைய நியமனங்களைச் செய்வதில், அத்தகைய உறுப்பினர்கள் முதலீடு, நிதி, சட்டம், தகவல் தொழில்நுட்பம், பொறியியல், வியாபாரம் அல்லது கணக்கியல் துறைகளில் இயைபான அறிவு, நிபுணத்துவம், அனுபவம் மற்றும் சர்வதேச ஏற்றங்கீகாரம் கொண்டிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு அவதானம் செலுத்தப்படுதல் வேண்டும். சனாதிபதி ஆணைக்குழுவின் தவிசாளராக இருப்பதற்கென அத்தகைய உறுப்பினர்களிடையேயிருந்து உறுப்பினர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமிப்பதில், ஆணைக்குழுவின் அமைத்துருவாக்கம், (1) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட துறைகளில் அறிவு, நிபுணத்துவம் மற்றும் அனுபவம் அத்துடன் தேசிய அல்லது சர்வதேச ஏற்றங்கீகாரம் என்பவற்றின் நியதிகளின்படி பிரதிநிதித்துவப்படுத்துவதாக இருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு அவதானம் செலுத்தப்படுதல் வேண்டும்.

8. ஆணைக்குழுவின் தவிசாளரும் உறுப்பினர்களும், அத்தகைய ஆள் 9 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் இறப்பினால், பதவிவிலகலினால் அல்லது பதவிநீக்கத்தினால் முன்னதாக பதவியை வறிதாக்கினாலொழிய, நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றிற்கு பதவி வகித்தல் வேண்டும்.

9. (1) ஆணைக்குழுவின் தவிசாளர் அல்லது உறுப்பினர்கள், அத்தகைய எவரேனுமாள் இதன்கீழான (3) ஆம் உட்பிரிவின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தாலொழிய, மீளநியமிக்கப்பட தகவுடையவராதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் தவிசாளர் அல்லது உறுப்பினரொருவர் அது தொடர்பில் சனாதிபதிக்கு அல்லது கொழும்புத் துறைமுக நகரம் என்னும் விடயம் ஓர் அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படும் பட்சத்தில், அத்தகைய அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட எழுத்திலான தொடர்பாடல் ஒன்றின் மூலம் தமது பதவியிலிருந்து விலகலாமென்பதுடன், அத்தகைய பதவிவிலகலானது சனாதிபதியினால் அல்லது அத்தகைய அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதன்மேல் பயனுறுதலும் வேண்டும்.

(3) சனாதிபதி -

(அ) தவிசாளர் அல்லது எவரேனும் உறுப்பினர் தமது பதவிக்குரிய கடமைகளை வினைத்திறனாக புரிவதற்கு உடற் சுகவீனம் காரணமாக இயலாதவராகவரின், எழுத்திலான அறிவித்தலின் மீது;

(ஆ) தவிசாளர் அல்லது எவரேனும் உறுப்பினர் அவ்வாறு நியமிக்கப்பட்டபின்னர் தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுள்ள நீதிமன்றமொன்றினால் வங்கிமுறிந்தவராக வெளிப்படுத்தப்படின் அல்லது குற்றவியல் தவறொன்றிற்கு குற்றத்தீர்ப்பளிக்கப்படின் உடனடியாகப் பயனுறுவதாக; அல்லது

(இ) தவிசாளர் அல்லது எவரேனும் உறுப்பினர், பதவியிலிருந்து அவரை அகற்றுவதனை அனுமதிக்கின்ற மோசடி, பாரதூரமான துர்நடத்தை அல்லது பாரிய கவனயீனத்திற்கு குற்றவாளியாக இருக்கின்றாரென செய்யப்பட்ட முறைபீடுகளை கவனத்திற்கெடுத்ததன் மேல் திருப்திப்படின்,

ஆணைக்குழுவின் தவிசாளர் அல்லது உறுப்பினரொருவரை பதவியிலிருந்து அகற்றலாம்.

(4) இறப்பினால், பதவிநீக்கலினால் அல்லது பதவியகற்றலினால் விடயத்துக்கேற்ப, ஆணைக்குழுவின் தவிசாளரின் அல்லது உறுப்பினரின் பதவி வறிதாக்கப்படுவதன்மேல், சனாதிபதி அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறோர் ஆளை நியமித்தல் வேண்டுமென்பதுடன்,

அத்தகைய ஆள் அவ்வாறு பதவியை வறிதாக்கிய தவிசாளர் அல்லது உறுப்பினரின் பதவிக் காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலத்திற்கு பதவிவகித்தலும் வேண்டும்.

(5) ஆணைக்குழுவின் தவிசாளர் அல்லது உறுப்பினரொருவர் சுகவீனம், இலங்கையில் இல்லாமை அல்லது வேறேதேனும் ஏதுவின் காரணத்துக்காக குறிப்பிடத்தக்க காலப்பகுதியொன்றிற்கு தனது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு தற்காலிகமாக இயலாதுள்ளவிடத்து, சனாதிபதி விடயத்துக்கேற்ப, தவிசாளரின் அல்லது உறுப்பினரின் சமூகமின்மையின்போது அத்தகைய தவிசாளரின் இடத்தில் செயலாற்றுவதற்கு வேறோர் உறுப்பினரை அல்லது உறுப்பினராக ஆளொருவரை நியமிக்கலாம்.

10. (1) ஆணைக்குழுவின் கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண் நான்கு உறுப்பினர்களாதல் வேண்டும். ஆணைக்குழுவின் கூட்டங்கள் ஆணைக்குழுவின் தவிசாளரால் தலைமைதாங்கப்படுதல் வேண்டும். ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கு தவிசாளர் சமூகம்தராவிடின், சமூகமாகவுள்ள உறுப்பினர்களினால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரொருவரினால் கூட்டம் தலைமை தாங்கப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான எல்லா விடயங்களும் அத்தகைய கூட்டத்தில் சமூகமாகவிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும் விடயத்தில், தவிசாளர் தனது வாக்கிற்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் கூட்டமொன்று, ஒன்றில் -

(அ) கூட்டத்திற்கென நியமிக்கப்பட்ட இடத்திலும், தேதியிலும் நேரத்திலும் கூடுகின்றவர்களாக கூட்ட நடப்பெண்ணாக அமைகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையினால்; அல்லது

(ஆ) பங்குபற்றுகின்ற மற்றும் கூட்ட நடப்பெண்ணொன்றாக அமைகின்ற எல்லா உறுப்பினர்களும் கூட்டத்தின் காலப்பகுதியின்போது பங்குபற்றுகின்ற உறுப்பினர் ஒவ்வொருவரையும் ஒரேநேரத்தில் பார்க்கவும் கேட்கவும் முடியுமாகவுள்ள செவிப்புல-கட்புல தொடர்பாடல் வழிவகைகள் மூலம், நடாத்தப்படலாம்.

(4) ஆணைக்குழுவின் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் அதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை என்பனவற்றுக்கென ஆணைக்குழுவானது விதிகளையும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் ஆணைக்குழுவின் நாளாந்தச் செயற்பாடுகளில் அதற்கு வழிகாட்டுவதற்குத் தேவைப்படுகின்றவாறான சமூக விதிகளையும் ஆக்கலாம்.

11. ஆணைக்குழுவின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அதனது உறுப்பினர்களிடையிலான ஏதேனும் வெற்றிடம் உள்ளமையின் அல்லது அதன் உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு உள்ளமையின் காரணத்தால் மட்டும் செல்லுபடியற்றதாதலாகாது அல்லது செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

12. ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் வேறு உறுப்பினர்களின் ஊதியம் சனாதிபதியினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறாக இருத்தல் வேண்டும்.

13. (1) அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர்தொடர்பில் ஏதேனும் அக்கறையை நேரடியாகவோ அல்லது நேரடியாக வல்லாமலோ கொண்டிருக்கின்ற ஆணைக்குழுவின் தவிசாளர் அல்லது வேறெவரேனும் உறுப்பினர் அத்தகைய அக்கறையின் தன்மை மற்றும் அளவு பற்றி எழுத்தில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும். அத்தகைய உறுப்பினர் அதன்பின்னர் அத்தகைய அக்கறை தொடர்பாக நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ ஏதேனும் முடிபில் பங்குபற்றுதலோ அல்லது அதன்மீது வாக்களித்தலோ ஆகாது.

(2) அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர்தொடர்பில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ ஏதேனும் அக்கறையைக் கொண்டுள்ள ஆணைக்குழுவின் தவிசாளர் அல்லது வேறு எவரேனும் உறுப்பினர் ஏதேனும் முடிபில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ பங்குபற்றினால், அத்தகைய முடிபு வறிதாக்கப்படற்பாலதாக இருத்தல் வேண்டும்.

14. (1) ஆணைக்குழுவானது, ஆணைக்குழுவின் அலுவல்களின் நிதி முகாமைக்கும் இச்சட்டத்தின் 23ஆம் பிரிவின் நியதிகளின்படி தாபிக்கப்பட்ட நிதியத்தின் உரிய தொழிற்பாட்டுக்கும் முகாமைக்கும் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழான பணிகளை நிறைவேற்றுகையில், ஆணைக்குழுவானது முதலீடுகளைச் செய்யலாம், வங்கிக் கணக்குகளை தொழிற்படுத்தி பேணலாம் மற்றும் இச்சட்டத்தின் நியதிகளின்படியும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கு அமைவாகவும் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக நிதிகளைக் கடனாகப்பெறலாம் அத்துடன் ஆணைக்குழுவின் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தை அங்கீகரிக்கலாம் மற்றும் முகாமை செய்யலாம்.

(3) ஆணைக்குழுவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

15. (1) ஆணைக்குழுவின் கணக்குகள் அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி தகைமைவாய்ந்த கணக்காய்வாளரொருவரினால் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும். இப்பிரிவின் நோக்கங்களுக்காக, அவ்வாறு நியமிக்கப்படும் தகைமைவாய்ந்த கணக்காய்வாளர் கணக்காளர்களின் சர்வதேச நிறுவனமொன்றாக இருக்கலாம்.

(2) இறுதிக் கணக்காய்வறிக்கை சனாதிபதிக்கு, அல்லது கொழும்புத் துறைமுக நகரம் என்னும் விடயம் ஓர் அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படும் பட்சத்தில் அத்தகைய அமைச்சருக்கு, பாராளுமன்றத்தில் பட்டியலில் இடப்படுவதற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

16. (1) ஆணைக்குழு ஏற்புடையனவான சர்வதேச நிதிசார் அறிக்கையிடுதல் தராதரங்களுக்கு இணங்கியொழுக புத்தகங்கள், கூட்டக்குறிப்புகளின் இடாப்புகள் மற்றும் பதிவேடுகள், கணக்குகள், காசுப் பிணையங்கள், உறுதிச்சீட்டுகள் மற்றும் வேறு ஆவணங்களைப் பேணுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, சர்வதேச நிதிசார் அறிக்கையிடுதல் தராதரங்களுக்கு இணங்கியொழுக நிதிக்கூற்றொன்றை வருடாந்தம் தயாரித்தல் வேண்டும். ஆணைக்குழுவானது, அதன் நிதிக்கூற்றைக் கணக்காய்வுசெய்து அதன்மீது அறிக்கையிடுவதற்கும், அதன் அபிப்பிராயப்படி அவ்வாறு கணக்காய்வுசெய்யப்பட்ட நிதிக்கூற்று ஆணைக்குழுவின் நிதியலுவல்களின் உண்மையானதும் நியாயமானதுமான நோக்கை வழங்குகின்றதாவென்பதுபற்றி குறிப்பிடுவதற்கும் சர்வதேச கணக்காளர்கள் குழுமமொன்றையும் ஆண்டுதோறும் நியமித்தல் வேண்டும்.

17. ஆணைக்குழு, தேவைப்படுமிடத்து, இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்கு அவசியமென அது கருதுகின்றவாறான தகவல் மற்றும் அறிக்கைகளைக் கேட்டுப்பெறலாம்.

18. ஆணைக்குழுவானது அது தீர்மானிக்கக்கூடியவாறான இச்சட்டத்தின்கீழான அதனது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுள் அத்தகையவற்றை, ஒன்றில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு, ஆணைக்குழுவின் எவரேனும் அலுவலருக்கு அல்லது ஆணைக்குழுவினால் தொழிலுக்கமர்த்தப்பட்ட பொறுப்புள்ள பதவிகளை வகிக்கின்ற எவரேனும் ஆளொருவருக்கு கையளிக்கலாமென்பதுடன், பணிப்பாளர் தலைமையதிபதி, ஆணைக்குழுவின் அலுவலர் அல்லது ஆணைக்குழுவினால் தொழிலுக்கமர்த்தப்பட்ட பொறுப்புள்ள பதவியை வகிக்கின்ற ஆளொருவர், ஆணைக்குழுவின் பணிப்பு மற்றும் மேற்பார்வைக்கு அமைய அத்தகைய கையளிக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தலும், புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

19. (1) ஆணைக்குழு, இச்சட்டத்தின் நியதிகளின்படி அதனது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை வினைத்திறனாக பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்குமென தேவைப்படுத்தப்படக்கூடியவாறாக ஆணைக்குழுவினுள் அத்தகைய எண்ணிக்கையான நிருவாக அலகுகளை தாபித்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன், காலத்துக்குக்காலம் அவசியமெனக் கருதப்படக்கூடியவாறாகப் பணிப்பாளர் தலைமையதிபதியின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுள் அத்தகையவற்றை ஆணைக்குழுவின் ஏதேனும் நிருவாக அலகிற்கு அல்லது ஊழியருக்கு எழுத்தில் கையளிக்கலாமென்பதுடன், எவையேனும் அத்தகைய தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் கையளிக்கப்பட்டுள்ள ஏதேனும் அத்தகைய நிருவாக அலகு அல்லது ஊழியர் அதற்கு பொறுப்பாதல் வேண்டும்; அத்துடன், ஆணைக்குழுவின் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியின் பணிப்பு மற்றும் மேற்பார்வைக்கு அமைய அவற்றை பிரயோகித்தல் வேண்டும்.

20. ஆணைக்குழு, அதனது அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் இச்சட்டத்தின்கீழ் அதனது அல்லது அவர்களது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதலின் போது நன்னோக்கில் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாக கொள்ளப்பட்ட அல்லது ஏதேனும் செய்யாமைக்காகப் பொறுப்பாதலாகாது, ஆயின், அத்தகைய விடுபாட்டுரிமை பின்வருவனவற்றுக்கு நீடித்தலாகாது -

(அ) அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழான குற்றவியல் தவறுக்கான பொறுப்பு;

(ஆ) இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் ஏற்புடையதான எழுத்திலான சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு முரணாக செய்யப்பட்ட ஏதேனும் செயல்.

21. ஏதேனும் நீதிமன்றத்தின் அல்லது இச்சட்டத்தின் நியதிகளின்படி தாபிக்கப்பட்ட சர்வதேச வர்த்தகப் பிணக்குத் தீர்வு நிலையத்தின் அல்லது அத்தகைய வேறு குழுவின்முன் ஆணைக்குழுவினால் அல்லது ஆணைக்குழுவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சி அல்லது வழக்கு நடவடிக்கையில் ஆணைக்குழுவினால் உறப்பட்ட ஏதேனும் செலவு ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், ஏதேனும் அத்தகைய துடர்ச்சி அல்லது வழக்கு நடவடிக்கையில் ஆணைக்குழுவுக்குச் செலுத்தப்பட்ட அல்லது ஆணைக்குழுவினால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுதொகைகள் ஆணைக்குழுவின் நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

22. இச்சட்டத்தின் நியதிகளின்படி அல்லது ஆணைக்குழுவின் பணிப்பின்மீது செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றம் அல்லது இச்சட்டத்தின் நியதிகளின்படி தாபிக்கப்பட்ட சர்வதேச வர்த்தக பிணக்குத் தீர்வு நிலையம் அல்லது அத்தகைய வேறு குழுவின்முன் ஆணைக்குழுவின் உறுப்பினர், அலுவலர் அல்லது ஊழியருக்கு எதிராக கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சி அல்லது வழக்குநடவடிக்கையில் அத்தகைய ஆளினால் உறப்பட்ட ஏதேனும் செலவு ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப் படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் துடர்ச்சி அல்லது வழக்கு நடவடிக்கையில் ஆணைக்குழுவுக்குச் செலுத்தப்பட்ட அல்லது ஆணைக்குவினால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுதொகைகள் ஆணைக்குழுவின் நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய செயல் நன்னோக்குடன் செய்யப்படவில்லை என நீதிமன்றம், அல்லது சர்வதேச வர்த்தக பிணக்குத் தீர்வு நிலையம் அல்லது அத்தகைய வேறு குழு தீர்ப்பளிக்குமாயின், ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட அத்தகைய செலவு அத்தகைய ஆளிடமிருந்து அறவிடப்பட்டு ஆணைக்குழுவின் நிதியத்திற்கு வரவு வைக்கப் படுதல் வேண்டும்.

## பாகம் IV

### ஆணைக்குழுவின் நிதியம்

23. (1) ஆணைக்குழுவானது அதனது சொந்த நிதியத்தைக்கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் நிதியத்தினுள் பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் -

(அ) கொழும்புத் துறைமுக நகர முதலீட்டு வசதிப்படுத்துநரின் பணிகளை மற்றவற்றுக்கிடையே ஆணைக்குழு நிறைவேற்றுகின்ற கணக்கால், ஆணைக்குழுவின் நிதியத்திற்கு கருத்திட்ட கம்பெனியால் செலுத்தப்படற்பாலதான ஆரம்ப பங்களிப்பாகவிருக்கின்ற நானூறு மில்லியன் இலங்கை ரூபா தொகையொன்று; அத்தொகை கொழும்புத் துறைமுக நகரத்தினதும் இலங்கையினதும் சர்வதேச மேம்படுத்தல்சார் செலவினம் மற்றும் இச்சட்டத்தின் நியதிகளின்படி ஆணைக்குழுவினால் உறப்படக்கூடியவாறான அத்தகைய வேறு செலவுகள் உட்பட ஆணைக்குழுவின் ஆரம்ப நிறுவுகை மற்றும் தொழிற்பாட்டு செலவினத்தை கொடுத்துத்தீர்ப்பதற்கு ஆணைக்குழுவினால் பயன்படுத்தப்பட வேண்டும்;

(ஆ) இச்சட்டம் தொடங்குகின்றதும் 2028 யூன் 30 ஆந் தேதியில் முடிவடைகின்றதுமான தேதியிலிருந்து நிறைவேற்றப்பட்ட கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் அமைந்துள்ள சந்தைப்படுத்தப்படற்பாலதான காணி தொடர்பாக முதலீட்டு வசதிப்படுத்துநரின் பணிகளை மற்றவற்றுக்கிடையே ஆணைக்குழு நிறைவேற்றுகின்ற கணக்கால், கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் அமைந்துள்ள கருத்திட்டக் கம்பெனி சந்தைப்படுத்தப்படற்பாலதான காணியின் ஏதேனும் குத்தகையிலிருந்து பெறப்பட்ட எல்லாத் தொகைகளிலிருந்தும் மேலே (அ) என்னும் பந்தியின் நியதிகளின்படி கருத்திட்ட கம்பெனியால் செய்யப்பட்ட ஆரம்ப பங்களிப்பு

மற்றும் செலுத்தப்படற்பாலனவான எவையேனும் வரிகள் கழிக்கப்பட்ட பின்னர் அத்தொகையின் ஒரு சதவீதத்திற்கு சமமான எல்லாப் பணத்தொகைகளும்; அத்தொகை, இச்சட்டத்தின் நியதிகளின்படி ஆணைக் குழுவினால் உறப்பட்ட மேலே (அ) என்னும் பந்தியில் தரப்பட்டவாறான செலவினத்தைக் கொடுத்துத்தீர்க்க ஆணைக்குழுவினால் பயன்படுத்தப்பட வேண்டும் (ஆணைக்குழு கருத்திட்ட கம்பெனி சந்தைப்படுத்தப்படற்பாலதான காணியின் குத்தகை ஒப்பந்தங்களின் நிறைவேற்றத்தின்போது கருத்திட்டக் கம்பெனியினால் அவ்வாறு பெறப்பட்ட எல்லாத் தொகைகளும் முழுமீதியும் அனுப்பப்படுதல் வேண்டும்.);

(இ) கொழும்புத் துறைமுக நகரத்தினதும் இலங்கையினதும் சர்வதேச மேம்படுத்துகைசார் செலவினத்துக்காக ஆணைக்குழுவினால் உறப்பட்ட செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்கு (அவ்வாறு பெறப்பட்ட எல்லாத் தொகைகளினதும் முழுமீதியையும் ஆணைக்குழு முறையான குத்தகை ஒப்பந்தங்களை நிறைவேற்றிய அதே நேரத்தில் திரட்டு நிதியத்திற்கு அனுப்பியதுடன் அப்பணத்தொகைகள் அரசாங்க வருமானமாகவும் அமையும்) சேவைக்கட்டணமொன்றாக ஆணைக்குழுவினால் வைத்திருக்கப்பட்டதும் கொழும்புத்துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் அமைந்துள்ளதுமான அரசாங்கச் சந்தைப்படுத்தலான காணியின் ஏதேனும் குத்தகையிலிருந்து 2023 யூலை 1 ஆந் தேதியிலிருந்து 2028 யூன் 30 ஆந் தேதியன்று முடிவடைகின்றவரை பெறப்பட்ட எல்லாப் பணத் தொகைகளிலிருந்தும் ஒரு சதவீதத்துக்கு சமமான எல்லாப் பணத்தொகைகளும்;

(ஈ) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய வீதங்களில் ஆணைக்குழுவினால் அறவிடப்பட்ட உள்ளூர் வரிமதிப் பீட்டு வீதவரிகளும் விதிக்கப்படும் வேறேதேனும் விதிப்பனவுகளும் என்றவகையாக ஆணைக்குழுவினால் பெறப்படக்கூடிய எல்லாப் பணத்தொகைகளும், (இப்பணத்தொகைகள், காலாண்டு அடிப்படையில் திரட்டு நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அரசாங்க வருமானத்தின் பாகமாகவும் அமையும்);

(உ) இச்சட்டத்தின் நியதிகளின்படி ஆணைக்குழுவுக்கு அல்லது சொத்து முகாமையாளருக்கு குறித்தளிக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதலில் ஆணைக்குழுவினால் தீர்மானிப்படக்கூடியவாறான கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் ஏற்பாடு செய்யப்பட்ட எல்லாச் சேவைகளும் அல்லது வசதிகளுக்குமென விடயத்துக்கேற்ப, ஆணைக்குழுவினால் அல்லது சொத்து முகாமையாளரால் விதிக்கப்படும் கட்டணங்கள் மற்றும் விதிப்பனவுகள் என்றவகையாக ஆணைக்குழுவினால் பெறப்படக்கூடியவாறான எல்லாப் பணத்தொகைகளும்;

(ஊ) பொதுத் திறைசேரியின் வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தினூடாக ஆணைக்குழுவினால் பெறப்பட வேண்டிய உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ எத்தன்மைத்தான ஏதேனும் சட்டமுறையான மூலத்திலிருந்தான எல்லா மானியக்கொடைகளும், நன்கொடைகளும், கொடைகளும் அல்லது விருப்பாவணக் கையளிப்புகளும்;

(எ) அத்தகைய நோக்கத்துக்காக ஆக்கப்படவேண்டிய ஒழுங்குவிதிகளுக்கிணங்க ஆணைக்குழுவினால் கடனாகப் பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(ஏ) ஆணைக்குழுவின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கையில், புரிகையில் மற்றும் நிறைவேற்றுகையில் ஆணைக்குழுவுக்குத் திரளக்கூடியவாறான வேறெவையேனும் பணத்தொகைகளும்.

(3) (அ) சர்வதேச மேம்படுத்துகைசார் செயற்பாடுகளினூடாக ஆணைக்குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்குத் தொடர்புபட்டதாகவுள்ள (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் தரப்பட்டுள்ள வரையறைகளுக்கு அமைந்தொழுகப்படுகின்றது;

(ஆ) இரண்டாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் கருத்திட்டக் கம்பெனிக்கு அனுப்பப்பட வேண்டிய மீதி அவ்வாறு அனுப்பப்படுகின்றன; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் நியதிகளின்படி திரட்டுநிதியத்துக்கு வரவுவைக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட எல்லா நிதிகளும் அவ்வாறு வரவுவைக்கப்படுகின்றன, என்பதை உறுதிப்படுத்துகையில், இச்சட்டத்தின் நியதிகளின்படி ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதிலும், புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் ஆணைக்குழுவினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்கு தேவைப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் மற்றும் இச்சட்டத்தினது ஏற்பாடுகளின் நியதிகளின்படி திரட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டிய நிதிகளும் ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவின் நிதியம் அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி தகைமைவாய்ந்த கணக்காய்வாளர் ஒருவரால் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்படவேண்டும். இப்பிரிவின் நோக்கங்களுக்காக, அவ்வாறு நியமிக்கப்பட்ட தகைமைவாய்ந்த கணக்காய்வாளர் கணக்காளர்களின் சர்வதேச நிறுவகமொன்றாக இருக்கலாம்.

(5) இறுதியான கணக்காய்வறிக்கை பாராளுமன்றத்தில் இடப்படுவதற்கு சனாதிபதிக்கு அல்லது அமைச்சரொருவருக்கு கொழும்புத் துறைமுக நகரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்படும் பட்சத்தில், அத்தகைய அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(6) ஆணைக்குழு 2028 யூலை 1ஆந் தேதியளவில் தானாக நிலைபெறுதகு தன்மையுடையதாக இருக்கும் என மதிப்பீடு செய்யப்படுகின்றது என்று இத்தால் கவனிக்கப்படுகின்றது.

(7) இரண்டாம் உட்பிரிவின் நோக்கங்களுக்கென கொழும்புத் துறைமுக நகர மற்றும் இலங்கையின் சர்வதேச மேம்படுத்தல்சார் செயற்பாடுகளை நிறைவேற்றுகின்றபோதும், தொடர்புபட்ட செலவினம் உறப்பட்டபோதும், ஆணைக்குழு சர்வதேச மற்றும் உள்நாட்டு நிபுணத்துவம் மற்றும் சூட்சும புத்தி ஈடுபாட்டினை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

## பாகம் V

### பணிப்பாளர் தலைமையதிபதியும் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதியினரும்

24\. (1) ஆணைக்குழு, சனாதிபதியுடனான கலந்தாலோசனையுடனும் அங்கீகாரத்துடனும் (இச்சட்டத்தில் “பணிப்பாளர் தலைமையதிபதி” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியாக இருப்பதற்கென அத்தகைய தகைமைகள் மற்றும்

அனுபவம் அத்துடன் உள்நாட்டு அல்லது சர்வதேச வெளிக்காட்டுதலைக் கொண்டுள்ள பொருத்தமான ஆளொருவரை நியமித்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி ஆணைக்குழுவின் பிரதான நிறைவேற்று அலுவலராதல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி சனாதிபதியின் கலந்தாலோசனையுடனும் அங்கீகாரத்துடனும் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள்மீது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டு காலமொன்றிற்கென நியமிக்கப்படுதல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி இப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய மீள்நியமனத்திற்கு தகவுடையவராதல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி ஆணைக்குழுவின் பொதுவான பணிப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்கு அமைய, ஆணைக்குழுவின் எல்லா அலுவல்களினதும் நடாத்துகைக்கு பொறுப்பாதல் வேண்டும்.

(5) பணிப்பாளர் தலைமையதிபதிக்கு சனாதிபதியுடனான கலந்தாலோசனையுடன் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(6) ஆணைக்குழு, சனாதிபதியுடனான கலந்தாலோசனையுடனும் அங்கீகாரத்துடனும் குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக பணிப்பாளர் தலைமையதிபதியை பதவியிலிருந்து அகற்றலாம்.

(7) பணிப்பாளர் தலைமையதிபதி ஆணைக்குழுவுக்கும் சனாதிபதிக்கும் முகவரியிட்டனுப்பப்பட்ட அது தொடர்பிலான எழுத்திலான அறிவித்தலொன்றுமூலம் தனது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன், அத்தகைய பதவிவிலகல் சனாதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதன்மேல் பயனுறுதலும் வேண்டும்.

(8) ஒன்பதாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் பணிப்பாளர் தலைமையதிபதியை பதவியிலிருந்து அகற்றுதல் தொடர்பாக ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

25. பணிப்பாளர் தலைமையதிபதியின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் -

(அ) ஆணைக்குழுவுக்கென அர்ப்பணிக்கப்பட்ட செயலகமொன்றை தாபித்து முகாமை செய்தலும் ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதிலும், புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் ஆணைக்குழுவுக்கு அனுசரணையளித்தலும் உதவியளித்தலும்;

(ஆ) ஆணைக்குழுவின் அலுவல்களின் நாளாந்த முகாமைத்துவம் மற்றும் நிருவாகத்தை நடாத்துதலும்;

(இ) ஆணைக்குழுவினால் குறித்தளிக்கப்படக்கூடியவாறான அல்லது கையளிக்கப்படக்கூடியவாறான மனிதவள மற்றும் தொடர்புபட்ட சேவைகளை முகாமை செய்தல்;

(ஈ) ஆணைக்குழுவுடனான கலந்தாலோசனையுடன் ஆணைக்குழுவின் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தை தயாரித்தலும், அதனை நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனையுடன் சனாதிபதியின் அங்கீகாரத்திற்கென அவருக்கு அனுப்பிவைத்தலும்;

(உ) பதிவுசெய்தல், உரிமம், அதிகாரவளிப்பு, அனுமதிப் பத்திரம், சான்றிதழ் மற்றும் தேவைப்படுத்தப்படக் கூடியவாறான அத்தகைய வேறு அங்கீகாரம் வழங்கப்படுதல் அல்லது அளிக்கப்படுதல் உட்பட ஆணைக்குழுவினால் வழங்கப்படும் சேவைகள் மற்றும் வசதிகளுக்கென விதிக்கப்படவேண்டிய கட்டணங்கள் மற்றும் வேறு விதிப்பனவுகளை ஆணைக்குழுவுக்கு விதந்துரைத்தலும்;

(ஊ) இச்சட்டத்தின் நியதிகளின்படி ஆணைக்குழுவினால் வழங்கப்படும் அல்லது அளிக்கப்படும் ஏதேனும் பதிவுசெய்தலை, உரிமத்தை, அதிகாரவளிப்பை, அனுமதிப்பத்திரத்தை, சான்றிதழை மற்றும் அத்தகைய வேறு அங்கீகாரத்தை புதுப்பித்தல், இடைநிறுத்தி வைத்தல், இல்லாதொழித்தல், இரத்துச்செய்தல் அல்லது முடிவுறுத்தலுக்கு ஆணைக்குழுவுக்கு விதந்துரைத்தலும்;

(எ) பணிப்பாளர் தலைமையதிபதியாக தனது பணிகளை நிறைவேற்றுவதில் தேவைப்படுத்தப்படக்கூடியவாறாக ஏதேனும் செயலை நிறைவேற்றுதலும்; அத்துடன்

(ஏ) ஆணைக்குழுவினால் குறித்தளிக்கப்படக்கூடியவாறான அல்லது கையளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு பணிகளைப் புரிதல்.

## பாகம் VI

### அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவராகவிருப்பதற்கான விண்ணப்பமும் அங்கீகாரமும், கையொப்பமிடப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்படும் உடன்படிக்கை, ஒற்றைச் சாளர முதலீட்டு வசதி, வியாபாரம், தொழில், கொள்வனவு செய்தல், ஆதனத்தை குத்தகைக்கு விடுதல் அல்லது வாடகைக்கு விடுதல் அல்லது வசதிகளை மற்றும் சேவைகளை பயன்படுத்துதல் என்பவற்றில் ஈடுபடுகின்ற இலங்கைப் பிரசைகள்

26. (1) இச்சட்டத்தின் நியதிகளின்படி அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் தவிர்ந்த ஆளொருவர் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்படுதலாகாது.

(2) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு உட்கருதுகின்ற ஆளொருவரின் விடயத்தில், இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் உரிமமொன்று விண்ணப்பகாரரொருவர் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவராகத் தகைமையுடையவராக இருப்பதற்கும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்டவராக இருப்பதற்கும் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு உட்கருதுகின்ற கம்பெனியொன்றின் விடயத்தில் -

(அ) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் உரிமமொன்று; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் பாகம் VII இன்கீழ் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழொன்று, விண்ணப்பகாரரொருவர் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவராகத் தகைமையுடையவராக இருப்பதற்கும் கொழும்புத்துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத்துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கும் அனுமதிக்கப்பட்டவராக இருப்பதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) கரைகடந்த வங்கித்தொழிலில் ஈடுபட உட்கருதுகின்ற கம்பெனியொன்றின் விடயத்தில்-

(அ) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் ஆணைக் குழுவினால் வழங்கப்படும் உரிமமொன்று;

(ஆ) இச்சட்டத்தின் பாகம் VII இன்கீழ் வழங்கப்படும் பதிவுச்சான்றிதழொன்று; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் பாகம் VIII இன்கீழ் வழங்கப்படும் உரிமமொன்று, விண்ணப்பகாரரொருவர் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவராகத் தகைமையுடையவராக இருப்பதற்கும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்டவராக இருப்பதற்கும் தேவைப்படுத்தல் வேண்டும்.

27. (1) இச்சட்டத்தின் நியதிகளின்படி கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு தேவைப்படுத்தப்படக்கூடியவாறான பதிவுசெய்தல், உரிமம் அல்லது அதிகாரவளிப்பு அல்லது அத்தகைய வேறு அங்கீகாரத்திற்கான விண்ணப்பமொன்று விதித்துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும், ஒரு பதிவுசெய்தலை, உரிமத்தை அல்லது அதிகாரவளிப்பை அல்லது அத்தகைய வேறு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்புடையதான கட்டணக் கொடுப்பனவின் மீதும் ஆணைக்குழுவுக்கு செய்யப்படுதல் வேண்டும்.

(2) விண்ணப்பம் ஒவ்வொன்றும் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தகவல், ஆவணங்கள் மற்றும் மீளச்செலுத்தப்படற்பாலதற்ற செய்முறைப்படுத்தல் கட்டணத்துடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

(3) விண்ணப்பம் ஒவ்வொன்றும் இலங்கை ரூபா தவிர்ந்த ஏதேனும் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் செய்யப்பட வேண்டிய முன்மொழியப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீட்டின் மொத்தப் பெறுமதியைக் குறித்துரைத்தல் வேண்டும்; அது, இச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் நியதிகளின்படி ஆணைக்குழு மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் நிறைவேற்றப்பட வேண்டிய இயைபான உடன்படிக்கையில் தரப்படுதலும் வேண்டும்.

(4) வங்கித்தொழில் சட்டத்தின் கருத்தெல்லையினுள் ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியில் இலங்கையில் பேணப்படும் அல்லது தொழிற்படுத்தப்படும் கணக்கொன்றில் வெளிநாட்டு நாணய வைப்பு எதுவும் அத்துடன் ஏதேனும் அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியிடமிருந்து பெறப்படும் வெளிநாட்டு நாணய கடனொன்றின் ஊடாக பெறப்பட்ட வெளிநாட்டு நாணயம் எதுவும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் அத்தகைய முதலீட்டு நோக்கத்திற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் பயன்படுத்தப்படுதலாகாது. ஆகவே, இச்சட்டத்தினது இப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவினதும் 39 ஆம் பிரிவினதும் ஏற்பாடுகளுக்கமைய, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் வியாபாரத்தைக் கொண்டுநடாத்துவதற்கு செய்யப்பட்ட எல்லா முதலீடுகளும் தேசிய பொருளாதார நலனில் இலங்கைக்கு வெளியே பெறப்படுதல் வேண்டும்.

(5) இரண்டாயிரத்துப்பதினான்காம் ஆண்டின் 38 ஆம் இலக்க, காணி (பராதீனப்படுத்தலின்மீதான மட்டுப்பாடுகள்) சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட மட்டுப்பாடுகள் ஏற்புடையனவாகவிராத மற்றும் இச்சட்டத்தின் 38 ஆம், 39 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படி அனுமதிக்கப்பட்டவாறு இலங்கை ரூபாக்களில் காணியைக் குத்தகைக்கெடுத்துள்ள எவரேனும் ஆள் அல்லது கம்பெனி, அவ்வாறு குத்தகைக்கெடுக்கப்பட்ட காணியின் பெறுமதி அத்தகைய முதலீட்டின் பாகமாக அமைகின்றதென்ற அடிப்படையில், இலங்கை ரூபாக்கள் தவிர்ந்த வேறேதேனும் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் அதிலிருந்தும் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு விண்ணப்பிக்கின்ற ஒரு முதலீட்டாளருடன் அல்லது முதலீட்டாளர்களின் கூட்டமைப்புடன் ஒன்றுசேரலாம். அத்தகைய முதலீட்டின்மீதான பங்கிலாபம் அல்லது வேறு நிதிசார் நன்மை விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு நிபந்தனைகளுக்கமைய, இலங்கை ரூபாக்கள் தவிர்ந்த வேறு குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் செய்யப்படுதல் வேண்டுமென்ற அடிப்டையில் ஆணைக்குழு அத்தகைய அங்கீகாரத்தை வழங்கலாம்: ஆயின், இச்சட்டத்தின் 39 ஆம் பிரிவின்கீழ் இலங்கை ரூபாக்களில் செலுத்தப்பட்ட முறையான குத்தகைத் தேதியிலிருந்து ஐந்தாண்டு காலப்பகுதியினுள் அத்தகைய ஆளுக்கு அல்லது கம்பெனிக்குப் பங்கிலாபம் அல்லது வேறு ஏதேனும் நிதிசார் நன்மை ஒன்றுதிரளும் பட்சத்தில், அத்தகைய ஆள், 39 ஆம் பிரிவின்கீழ் இலங்கை ரூபாக்களில் குத்தகைக்காகச் செலுத்திய ஆளின் அல்லது கம்பெனியின் பெயரில் தொழிற்படுத்தப்பட்டுப் பேணப்பட்ட கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்புக்கு வெளியே இலங்கையிலுள்ள வதிவுள்ள வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றுக்கு அத்தகைய பங்கிலாபத்தை அல்லது வேறேதேனும் நிதிசார் நன்மையை அனுப்புவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

28. (1) ஆணைக்குழு, 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பம் தொடர்பாகத் தேவைப்படக்கூடியவாறான ஏதேனும் மேலதிக தகவலையும் ஆவணங்களையும் கேட்டுப்பெறலாமென்பதுடன், விண்ணப்பகாரர், ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டு விண்ணப்பகாரருக்கு அறிவிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் அத்தகைய தகவலையும் ஆவணங்களையும் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் நியதிகளின்படி ஆணைக்குழுவினால் வழங்கப்படும் அல்லது அளிக்கப்படும் பதிவுசெய்தல், உரிமம், அதிகாரவளிப்பு அல்லது அத்தகைய வேறு அங்கீகாரம் ஒவ்வொன்றும் -

(அ) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் இருத்தல் வேண்டும்;

(ஆ) அது எந்த வகையான வியாபாரத்திற்கு வழங்கப்படுகின்றதோ அந்த வகையான வியாபாரத்தை மற்றவற்றுக்கிடையே கவனத்திற்கொண்டு ஆணைக்குழுவினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையிலான கொடுப்பனவின்மீது வழங்கப்படுதல் வேண்டும்;

(இ) பதிவுசெய்தல், உரிமம், அதிகாரவளிப்பு அல்லது அத்தகைய வேறு அங்கீகாரத்தின் செல்லுபடியாந்தன்மைக் காலத்தை, ஏதேனுமிருப்பின், குறித்துரைத்தல் வேண்டும்;

(ஈ) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் ஈடுபட வேண்டிய வியாபாரத்தைக் குறித்துரைத்தல் வேண்டும்; அத்துடன்

(உ) அத்தகைய பதிவுசெய்தல், உரிமம், அதிகாரவளிப்பு அல்லது அத்தகைய வேறு அங்கீகாரத்துடன் இணைக்கப்பட வேண்டிய நிபந்தனைகள் எவையேனுமிருப்பின் அவற்றைக் குறித்துரைத்தல் வேண்டும்.

(3) (அ) அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவராக விண்ணப்பகாரரொருவரின் அங்கீகாரம்;

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரின் கோரிக்கையின் பேரில் பதிவுசெய்தல், உரிமம் அல்லது அதிகாரவளிப்பு அல்லது வேறு அங்கீகாரமொன்றின் திருத்தம், ஒப்படைப்பு, கைமாற்றம், சாட்டுதல் அல்லது புதுப்பித்தல்; அத்துடன்

(இ) அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினாலான பொருளளவிலான தவறுகையொன்று அல்லது மீறுகையொன்று ஏற்படும் பட்சத்தில் அதற்கான காரணங்களை அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு எழுத்தில் அறிவித்து, ஆணைக்குழுவினால் அளிக்கப்பட்ட பதிவுசெய்தல், உரிமம் அல்லது அதிகாரவளிப்பு அல்லது வேறு அங்கீகாரத்தை இடைநிறுத்தல், இல்லாதொழித்தல் அல்லது இரத்துச்செய்தல், என்பவற்றுக்கான நடவடிக்கை முறை விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(4) ஆணைக்குழு இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்; அது எல்லா அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களினதும் விபரங்கள், அவர்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட பதிவுசெய்தல், உரிமம், அதிகாரவளிப்பு அல்லது வேறு அங்கீகாரத்தின் வகை என்பவற்றை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் கொண்டிருத்தல் வேண்டும்.

29. விண்ணப்பகாரர் எவரும் -

(அ) இச்சட்டத்தின் இப்பாகத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்படும் ஏதேனும் விண்ணப்பம் தொடர்பாக; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் நியதிகளின்படி விண்ணப்பகாரர் கொடுத்துதவுவதற்குத் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் தகவல் அல்லது விபரங்கள் தொடர்பாக, ஏதேனும் பொருளளவிலான விபரத்தில் பொய்யானதென அல்லது தவறாக இட்டுச்செல்லும் என விண்ணப்பகாரர் அறிந்துள்ள ஏதேனும் பிரதிநிதித்துவத்தை அல்லது கூற்றைச் செய்தலாகாது. இப்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின் நியதிகளின்படி தவறொன்றைப் புரிகின்றார்.

30. (1) இச்சட்டத்தின் பாகம் VII, பாகம் VIII மற்றும் 33 ஆம் பிரிவு என்பவற்றுக்கு அமைய, ஆணைக்குழுவானது, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு, முதலீடுசெய்வதற்கு, வசிப்பதற்கு அல்லது தொழிலுக்கமர்த்தப்படுவதற்கு, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பை பார்வையிடுவதற்கு பதிவுசெய்தல், உரிமம், அதிகாரவளிப்பு அல்லது அவசியமாகக்கூடியவாறான வேறு அங்கீகாரத்திற்கென ஆணைக்குழுவுக்குச் செய்யப்படும் ஏதேனும் விண்ணப்பத்தை நற்காரணத்திற்காக ஏற்றுக்கொள்வதா அல்லது நிராகரிப்பதா என விரைவானதும் ஒருங்கிணைக்கப்பட்ட முறையொன்றிலும் கவனத்திற்கெடுப்பதற்கும் தீர்மானிப்பதற்கும் பொறுப்பான ஒற்றைச் சாளர முதலீட்டு வசதிப்படுத்துநராக இருத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழு, ஒற்றைச் சாளர முதலீட்டு வசதிப்படுத்துநரென்ற அதனது தன்மையில் 27 ஆம் பிரிவின் நியதிகளின்படி ஆணைக்குழுவினால் பெறப்பட்ட விண்ணப்பமொன்றை ஒன்றில் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கு தீர்மானித்தல் வேண்டும். விண்ணப்பமொன்று ஏற்றுக்கொள்ளத்தக்கதாக விருப்பதாக காணப்படின், ஆணைக்குழு அதனது முடிபை எழுத்தில் விண்ணப்பகாரருக்கு அறிவித்தல் வேண்டும். விண்ணப்பமொன்று நிராகரிக்கப்படும் பட்சத்தில், ஆணைக்குழு அத்தகைய முடிபுக்கான அதனது காரணங்களுடன் சேர்த்து நிராகரிப்புப் பற்றிய நிகழ்வை விண்ணப்பகாரருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும். ஆணைக்குழுவின் முடிபு இறுதியானதாதல் வேண்டும்.

(3) ஆணைக்குழு ஏதேனும் இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகாரிக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது குறித்தளிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் இச்சட்டத்தில் குறிப்பாக ஏற்பாடு செய்யப்பட்ட அளவுக்கும், அத்தகைய அதிகாரிக்கு ஏற்புடையதான முறையான எழுத்திலான சட்டங்களினால் அவ்வாறு தேவைப்படுத்தப்படுமிடத்து, அத்தகைய பதிவுசெய்தலை, உரிமத்தை, அதிகாரவளிப்பை அல்லது வேறு அங்கீகாரத்தை வழங்கும் நடைமுறையில் அத்தகைய அதிகாரியின் ஒருப்பாட்டைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்: ஆயின், நாடப்பட்ட இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகாரியின் ஒருப்பாடு, அத்தகைய ஒழுங்குபடுத்தும் அதிகாரிக்கு ஏற்புடைய தான முறையான எழுத்திலான சட்டங்களைக் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தலுக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்: ஆயின், மேலும், அத்தகைய ஒருப்பாடு எந்த இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகாரியிடமிருந்து நாடப்படுகின்றதோ அந்த இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகாரி, சூழ்நிலைகளில் செயல் முறைக்குகந்தவரை விரைவாக, முன்னுரிமை விடயமொன்றாக, ஆணைக்குழுவுக்கு அதன் முடிபை அறிவித்தல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவுக்கு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் செயல்முறைப்படுத்தல் துரிதமானவொரு முறையில் நிறைவேற்றப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு ஆணைக்குழு, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் அலுவலகமொன்றை தொழிற்படுத்துமாறு எவரேனும் இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகாரியை தேவைப்படுத்துதல் வேண்டும். இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகாரி, அத்தகைய அலுவலகம், செயல் முறைப்படுத்தலை விரைவாக்குவதனை உறுதிப்படுத்துவதற்கும் அதனது முடிவை அறிவிப்பதற்கும் போதுமான முதுமை மற்றும் அதிகாரமுடைய அலுவலர்களினால் முகாமைசெய்யப்படுகின்றது என உறுதிப்படுத்துதல் வேண்டும்.

31. (1) ஆணைக்குழு, இச்சட்டத்தின் 27 ஆம் பிரிவின் நியதிகளின்படி பெறப்பட்ட விண்ணப்பமொன்றின் மதிப்பீட்டின் பின்னர், தேசிய நலனில் அல்லது தேசிய பொருளாதாரத்தின் முன்னேற்ற நலனில் அத்தகைய விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படற்பாலதாக உள்ளதென கருதுமிடத்து, அது விண்ணப்பிக்கப்பட்ட பதிவுசெய்தல், உரிமம், அதிகாரவளிப்பு அல்லது வேறு அங்கீகாரத்தை வழங்குவதற்கு அல்லது அளிப்பதற்கு முற்படுதல் வேண்டும்.

(2) அவ்வாறு வழங்கப்படும் அல்லது அளிக்கப்படும் அல்லது அளிப்பதற்கு பதிவுசெய்தல், உரிமம், அதிகாரவளிப்பு அல்லது வேறு அங்கீகாரம் ஆணைக்குழு அவசியமெனக் கருதுகின்றவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைய இருக்கலாம்.

(3) ஆணைக்குழுவினால் பதிவுசெய்தல், உரிமம், அதிகாரவளிப்பு அல்லது வேறு அங்கீகாரமொன்று அவ்வாறு வழங்கப்படுமிடத்து அல்லது அளிக்கப்படுமிடத்து, அத்தகைய அதிகாரிக்கு ஏற்புடையதான முறையான எழுத்திலான சட்டங்களினால் அவ்வாறு தேவைப்படுமிடத்து இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகாரிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட உரிய ஒருப்பாட்டுக்குப்பின்னர், இயைபான பதிவுசெய்தல்,

உரிமம், அதிகாரவளிப்பு அல்லது வேறு அங்கீகாரம் தொடர்பில் எல்லாச் சட்டப்படியான மற்றும் ஒழுங்குபடுத்தும் தேவைப்பாடுகள் முறையாக இணங்கியொழுகப்பட்டுள்ளனவெனத் திருப்தியடைவது, அத்தகைய ஏதேனும் ஆவணத்தில் முரணான ஏதேனும் நிபந்தனை குறித்துரைக்கப்பட்டாலொழிய, ஆணைக்குழுவின் பொறுப்பாதல் வேண்டும்.

32. ஆணைக்குழு, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் ஈடுபடுத்தப்பட வேண்டிய முதலீடு தொடர்பாக மற்றவற்றுக்கிடையே, இணைக்கப்பட்ட எவையேனும் நியதிகள், நிபந்தனைகள், மட்டுப்பாடுகள், (39 ஆம் பிரிவின் நியதிகளின்படி செலுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகை உட்பட) செய்யப்படவிருக்கும் உறுதிசெய்யப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீட்டின் மொத்தப் பெறுமதி அத்துடன் அளிக்கப்பட்ட எவையேனும் சலுகைகள் அல்லது விலக்களிப்புகள் மற்றும் எக்காலப்பகுதிக்கு அவை இச்சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்டுள்ளனவோ அக்காலப்பகுதி என்பவற்றை தருகின்றதாக ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட ஆளுடனும் உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்ளுதல் வேண்டும். அத்தகைய உடன்படிக்கை ஒவ்வொன்றும் இச்சட்டத்தின் பாகம் XIII இன் நியதிகளின்படி நடுத்தீர்ப்பு என்ற வகையாக அது சம்பந்தமாக அல்லது அதிலிருந்து எழுகின்ற ஏதேனும் பிணக்கின் தீர்வுக்கு திறத்தவர்கள் அதன்மூலம் உடன்படுவதான ஏற்பாடொன்றை உள்ளடக்குதல் வேண்டும். 27 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறான ஏதேனும் ஒப்புரவுப் பங்களிப்பும் அதன்கண் தனிவேறாகப் பிரதிபலிக்கப்படுதல் வேண்டும்.

33. (1) ஒற்றைச் சாளர முதலீட்டு வசதிப்படுத்துநராக ஆணைக்குழு, அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால், அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரின் எவரேனும் ஆலோசகரினால், அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரின் ஊழியரொருவரினால் மற்றும் அவசியமாகக்கூடியவாறாக, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு, முதலீடு செய்வதற்கு, வசிப்பதற்கு அல்லது தொழிலுக்கமர்த்தப்படுவதற்கு உட்கருதுகின்ற ஆளொருவரினால் தேவைப்படுத்தப்படக் கூடியவாறான ஏதேனும் விசா, நுழைவு அனுமதிப்பத்திரம், வேலை அனுமதிப்பத்திரம் மற்றும் வேறு அங்கீகாரங்களின் செய்முறைப்படுத்தலுக்கான விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளுதலும் அதனை வசதிப்படுத்துதலும் வேண்டும்.

(2) ஆணைக்குழு (1) ஆம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்றின் மதிப்பீட்டின்பின்னர், தேசிய நலனில் அல்லது தேசிய பொருளா தாரத்தின் முன்னேற்ற நலனில் அத்தகைய விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாகவிருப்பதாக கருதுமிடத்து, அது அத்தகைய நிகழ்வை குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளருக்கு அறிவிக்கலாமென்பதுடன் அத்தகைய விசா, நுழைவு அனுமதிப்பத்திரம் அல்லது வேலை அனுமதிப்பத்திரம் அல்லது வேறு அங்கீகாரம் முன்னுரிமை விடயமொன்றாக வழங்கப்பட வேண்டுமென விதந்துரைக்கலாம்.

(3) குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளரின் முடிபை அடிப்படையாகக் கொண்டு, ஆணைக்குழு, விண்ணப்பம் குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளரினால் ஏற்றுக்கொள்ளப்படின், எழுத்தில் விண்ணப்பகாரருக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன் விடயத்துக்கேற்ப, அத்தகைய விசா, நுழைவு அனுமதிப்பத்திரம் அல்லது வேலை அனுமதிப்பத்திரம் அல்லது வேறு அங்கீகாரத்தின் வழங்குதலை வசதிப்படுத்துதலும் வேண்டும் அல்லது விண்ணப்பம் நிராகரிக்கப்படின், குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் அறிவித்தவாறு அதற்கான காரணங்களை தருகின்றதாக எழுத்தில் விண்ணப்பகாரருக்கு அறிவித்தலும் வேண்டும். குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளரின் முடிபு இறுதியானதாதல் வேண்டும்.

34. ஆணைக்குழு -

(அ) 31 ஆம் பிரிவின் நியதிகளின்படி ஏதேனும் பதிவு செய்தல், உரிமம், அதிகாரவளிப்பு அல்லது வேறு அங்கீகாரத்தின்; அல்லது

(ஆ) 33 ஆம் பிரிவில் தரப்பட்டவாறாக ஏதேனும் விசா, நுழைவு அனுமதிப்பத்திரம் அல்லது வேலை அனுமதிப்பத்திரம் அல்லது வேறு அங்கீகாரத்தின், வசதிப்படுத்தலினை மற்றும் வழங்கலினை அல்லது அளிப்பினைத் தொடர்ந்து குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் அவசியமெனக் கருதுகின்றவாறாக அவற்றை இடைநிறுத்த, இல்லாதொழிக்க அல்லது இரத்துச்செய்ய அவருக்கு விதந்துரைப்பதற்கு ஆணைக்குழுவை வலுக்கட்டாயப்படுத்துகின்ற காரணமொன்றை அறியவருமிடத்து, ஆணைக்குழு, அதுபற்றிக் குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளருக்கும் அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கும் அறிவித்தல் வேண்டும். குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர், அதன்மேல், விடயத்துக்கேற்ப, பதிவு செய்தல், உரிமம், அதிகாரவளிப்பு அல்லது வேறு அங்கீகாரத்தை இடைநிறுத்துவதற்கான, இல்லாதொழிப்பதற்கான அல்லது இரத்துச்செய்வதற்கான நடவடிக்கையை எடுத்தல் வேண்டும். விடயத்துக்கேற்ப, அத்தகைய இடைநிறுத்துகை, இல்லாதொழிப்பு அல்லது இரத்துச்செய்கைக்காக நடவடிக்கை எடுக்கப்படுவதன் மேல், குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் அதுபற்றி ஆணைக்குழுவுக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன் ஆணைக்குழு அதன்மேல் உடனடியாக அதற்கிணங்க இயைபான அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு அறிவித்தலும் வேண்டும். குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளரின் முடிபு இறுதியானதாதல் வேண்டும்.

35. கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட ஆள், வதிவுள்ள அல்லது வதிவற்ற எவரேனும் ஆளை தொழிலுக்கமர்த்தலாமென்பதுடன் அத்தகைய ஊழியருக்கு, இலங்கை ரூபா தவிர்ந்த குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமொன்றில் ஊதியமளிக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் -

(அ) அவ்வாறு பெறப்படும் வதிவுள்ள ஊழியரொருவரின் ஏதேனும் ஊழிய வருமானம் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வதிவுள்ள ஊழியரின் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு அனுமதிக்கப்படற்பாலதான வரவொன்றாகக் கருதப்படுதலும் வேண்டும்;

(ஆ) அவ்வாறு பெறப்படும் வதிவற்ற ஊழியரொருவரின் ஏதேனும் ஊழிய வருமானம் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அத்தகைய வதிவற்ற ஊழியர் இலங்கைக்கு வெளியே உழைத்த ஏதேனும் வருமானம்மீது இலங்கையில் வருமானவரிக்கு ஆளாதலுமாகாது.

36. கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் வியாபாரத்தில் ஈடுபடுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட ஆள் இலங்கைப் பிரசையொருவருக்கு அல்லது வதிவுள்ளவரொருவருக்கு அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் வழங்கப்படும் எவையேனும் பண்டங்கள் மற்றும் சேவைகள் தொடர்பில் இலங்கை ரூபாவில் கொடுப்பனவுகளை ஏற்கலாம். அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் அவ்வாறு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஏதேனும் இலங்கை ரூபா, விதித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய நிபந்தனைகளுக்கு அமையவும் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்றப்படலாம்.

37. (1) அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஒருவர், அப்போதைக்கு வலுவிலுள்ள எழுத்திலான எல்லாச் சட்டங்களினதும் இதன்கீழ் ஆக்கப்படக்கூடிய ஒழுங்குவிதிகளினதும் ஏற்புடைமைக்கமைய, தேசிய நலன்கருதியும் உள்நாட்டுப் பொருளாதாரத்தின் நலனைப் பாதுகாப்பதற்கெனவும், இலங்கையில் வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கின்ற இலங்கைப் பிரசையுடன் அல்லது வதிவுள்ளவருடன் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்புக்கு வெளியே இலங்கையில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கான அதிகாரவளிப்பொன்றுக்கென ஆணைக்குழுவுக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) அத்தகைய வேண்டுகோளை கவனத்திற்கொண்டு, ஆணைக்குழு, தேசிய நலன் அல்லது தேசிய பொருளாதார முன்னேற்ற நலனில் மற்றும் உள்நாட்டுப் பொருளாதார நலனை உறுதிப்படுத்துகையிலும், விதித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய நிபந்தனைகளுக்கு அமையவும் அத்தகைய அதிகாரவளிப்பொன்றை வழங்கலாம்.

(3) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்புக்கு வெளியே ஓர் இலங்கைப் பிரசையுடன் அல்லது வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவொரு வதிவுள்ளவருடன் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருக்கு அதிகாரவளிப்பொன்றை ஆணைக்குழு வழங்குமிடத்து, அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட ஆள், கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்புக்கு வெளியே, ஓர் இலங்கைப் பிரசையுடன் அல்லது ஒரு வதிவுள்ளவருடன் இலங்கையில் வியாபாரத்தில் ஈடுபடுதல் தொடர்பாக, இச்சட்டத்தின் பாகம் IX இல் அல்லது இச்சட்டத்தின் வேறு ஏதேனும் பாகத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக எவையேனும் விலக்களிப்புகளை அல்லது ஊக்குவிப்புகளை உரிமைகோருவதற்கு அல்லது பெறுவதற்கு உரித்துடையவராதலாகாது.

38. ஆணைக்குழு, இச்சட்டத்தினதும் 2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, காணி (பராதீனப்படுத்தல்மீதான மட்டுப்பாடுகள்) சட்டத்தினதும் மற்றும் வேறு எவையேனும் ஏற்புடையனவான எழுத்திலான சட்டங்களினதும் ஏற்பாடுகளுக்கமைய

(அ) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் அமைந்துள்ளதும் இச்சட்டத்தின் நியதிகளின்படி ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டதுமான அரசாங்க சந்தைப்படுத்தற்படற்பாலதான காணியை எவரேனுமாளுக்கு குத்தகைக்கு விடலாம்;

(ஆ) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் அமைந்துள்ளதும் இச்சட்டத்தின் நியதிகளின்படி ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டதுமான கருத்திட்டக் கம்பெனி சந்தைப்படுத்தற்படற்பாலதான காணியை, அது தொடர்பான முதன்மைக் குத்தகைகளைக் கொண்ட கருத்திட்டக் கம்பெனியுடன் கூட்டாக எவரேனுமாளுக்கு குத்தகைக்குவிடலாம்;

(இ) விடயத்துக்கேற்ப, முறையான முதலீட்டாளர் அல்லது அபிவிருத்தியாளருடன் கூட்டாக, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் அமைந்துள்ளதும் இச்சட்டத்தின் நியதிகளின்படி ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டதுமான அரசாங்க சந்தைப்படுத்தற் படற்பாலதான காணியின்மீதுள்ள கூட்டாட்சியாதன சிறுகூறுகளை எவரேனுமாளுக்கு குத்தகைக்கு விடலாம் அல்லது இறையிலி அடிப்படைமீது கைமாற்றலாம்;

(ஈ) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் அமைந்துள்ளதும் இச்சட்டத்தின் நியதிகளின்படி ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டதுமான கருத்திட்டக் கம்பெனி சந்தைப்படுத்தற்படற்பாலதான காணியை, அதுதொடர்பான முதன்மைக் குத்தகைகளைக் கொண்ட கருத்திட்டக் கம்பெனியுடன் கூட்டாக, அக்காணியின் மீதுள்ள கூட்டாட்சியாதன சிறுகூறுகளை எவரேனுமாளுக்கு குத்தகைக்கு விடலாம் அல்லது இறையிலி அடிப்படைமீது கைமாற்றலாம்; அதற்கான கொடுப்பனவு இலங்கை ரூபா தவிர்ந்த குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

39. பிரிவு 38 இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஆணைக்குழுவானது அதனால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைய, இலங்கை ரூபாவில், 2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட மட்டுப்பாடுகள் ஏற்புடையனவாகாத எவரேனுமாளுக்கு அல்லது கம்பெனிக்கு அரசாங்கம் சந்தைப் படுத்தற்படற்பாலதான காணியை அல்லது கருத்திட்டக் கம்பெனி சந்தைப்படுத்தற்படற்பாலதான காணியை குத்தகைக்கு விடலாம் அல்லது ஒன்றில் அரசாங்கம் சந்தைப்படுத்தற்படற்பாலதான காணி அல்லது கருத்திட்டக் கம்பெனி சந்தைப்படுத்தற்படற்பாலதான காணியிலுள்ள எவையேனும் கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளை குத்தகைக்கு விடலாம் அல்லது இறையிலி அடிப்படை மீது கைமாற்றலாம்:

ஆயின், 2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட மட்டுப்பாடுகள் ஏற்புடையனவாகாதவரும் இலங்கை ரூபாவில் கொடுப்பனவைச் செய்துள்ளவரும் முறையான கொடுக்கல்வாங்கல் தேதியிலிருந்து ஐந்தாண்டு காலப்பகுதியினுள் இலங்கை ரூபாவில் செலுத்தியவருமான அத்தகைய எவரேனுமாள் அல்லது கம்பெனி, இலங்கை ரூபா தவிர்ந்த ஏதேனும் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் செய்யப்பட்ட கொடுப்பனவின்மீது மூன்றாம் திறத்தவரொருவருக்கு அத்தகைய ஆதனத்தைக் கைமாற்றினால், குத்தகைக்கு விட்டால் அல்லது வாடகைக்கு விட்டால், அவ்வாறு பெறப்பட்ட தொகையை விதித்துரைக்கப்பட வேண்டிவாறான அத்தகைய முறையில், மேற்சொல்லப்பட்ட ஆள் அல்லது கம்பெனியின் பெயரில் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்புக்கு வெளியே இலங்கையில் தொழிற்படுத்தப்பட்டு பேணப்படும் வதிவுள்ளோர் வெளிநாட்டுக் கணக்கொன்றிற்கு இலங்கை ரூபா தவிர்ந்த குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அனுப்புமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

40. (1) இலங்கைப் பிரசையொருவர் அல்லது இலங்கையில் வதிவுள்ளவரொருவர் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் உணவகங்கள், சினிமாக்கள், களியாட்ட வசதிகள், பொருட்களை கொள்வனவு செய்தல் வசதிகள் அல்லது வாகனத் தரிப்பிட வசதிகள் என்பவற்றை, இலங்கை ரூபாவில் தொடர்புடைய கொடுப்பனவுகளைச் செய்வதன்மேல், எவையேனும் சில்லறை வசதிகளை அல்லது சேவைகளை பயன்படுத்தலாம்.

(2) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்து வெளியில் எடுத்துச்செல்லப்படுவதற்கு, (1) ஆம் உட்பிரிவில் தரப்பட்டவாறாக சில்லறை செயலிடங்களில் கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்கள்மீது இலங்கைப் பிரசை அல்லது இலங்கையில் வதிவுள்ளவரொருவரினால் செலுத்தப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான ஏதேனும் அறவீடு விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(3) இலங்கைப் பிரசையொருவர் அல்லது இலங்கையில் வதிவுள்ளவரொருவர் (1) ஆம் உட்பிரிவில் தரப்பட்டவாறாக எவையேனும் சில்லறை செயலிடங்களை அல்லது சேவைகளைப் பயன்படுத்தும்போது எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் பெறப்பட்ட தொகை விதித்துரைக்கப்பட வேண்டிய அத்தகைய முறையிலும் அத்தகைய நிபந்தனைகளுக்கமையவும் ஏதேனும் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்திற்கு அத்தகைய அதிகார மளிக்கப்பட்ட ஆளினால் மாற்றப்படலாம்.

## பாகம் VII

### கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் கரைகடந்த கம்பெனிகள் தொழிற்படுதல்

41. (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகள், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் பாகம் XI இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு கூட்டிணைக்கப்பட்ட கரைகடந்த கம்பெனிகள் தொடர்பாக ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் கரைகடந்த கம்பெனியொன்றாக பதிவுசெய்யப்படுவதற்கு கம்பெனியொன்றிடமிருந்து விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்றதன்மீது, ஆணைக்குழு, அத்தகைய விண்ணப்பம் தேசிய நலனை அல்லது தேசிய பொருளாதார முன்னேற்ற நலனைக் கருத்திற்கொண்டு, ஆணைக்குழுவுக்கு ஏற்றுக்கொள்ளப்படற்பாலதாக இருப்பின், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் பாகம் XI இன் நியதிகளின்படி கரைகடந்த கம்பெனியொன்றாக அத்தகைய கம்பெனியை பதிவுசெய்வதற்கு முற்படுமாறு கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதிக்கு விதந்துரைத்தல் வேண்டுமென்பதுடன், கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்ட கரைகடந்த கம்பெனியொன்றாக விண்ணப்பகாரர் கம்பெனிக்கு பதிவுச் சான்றிதழை வழங்குதலும் வேண்டும்.

(3) கரைகடந்த கம்பெனியொன்றாக பதிவுசெய்யப்படுவதற்கு ஆணைக்குழுவுக்கான விண்ணப்பமொன்று பின்வருவனவற்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும் :-

(அ) கம்பெனியின் பட்டயம், நியதிச்சட்டம் அல்லது அமைப்பகவிதிகளின் அல்லது கம்பெனியை அமைத்துரு வாக்குகின்ற அல்லது அதன் அமைத்துருவாக்கத்தை வரைவிலக்கணம் செய்கின்ற அத்தகைய வேறு சாதனத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று; அத்துடன் அத்தகைய சாதனம் அரசகரும மொழியொன்றில் அல்லது ஆங்கிலத்தில் இல்லாதவிடத்து, அச்சாதனத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு ஒன்று;

(ஆ) பணிப்பாளர்களின் அல்லது கம்பெனியின் அலுவல்களை முகாமை செய்கின்றவர்களின் முழுப்பெயர்கள், முகவரிகள், தான்புரிதொழில்கள் மற்றும் கம்பெனியில் அவர்கள் வதிக்கும் பதவியைக் கொண்டுள்ள நிரலொன்று;

(இ) வெளிநாடுகளில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றின் விடயத்தில், இலங்கையில் வதிவுள்ள மற்றும் இலங்கையின் பிரசைகளாகவுள்ள கம்பெனியை பிரதிநிதித்துவம் செய்ய அதிகாரமளிக்கப்பட்டவர்களான ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களின் பெயர்களும் முகவரிகளும்;

(ஈ) வெளிநாடுகளில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றின் விடயத்தில் -

(i) கூட்டிணைக்கப்பட்ட நாட்டில் கம்பெனியின் பதிவுசெய்யப்பட்ட அல்லது பிரதான அலுவலகத்தினதும் இலங்கையில் கம்பெனியின் அலுவலகத்தினதும் முழு முகவரியும் அடங்கிய கூற்றொன்று; அத்துடன்

(ii) விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் முப்பது நாட்களுள் வழங்குகின்ற அதிகாரியினால் சான்றுப்படுத்தப்பட்ட கூட்டிணைப்புச் சான்றிதழின் பிரதியொன்று;

(உ) அத்தகைய கம்பெனி கரைகடந்த கம்பெனியொன்றாக வியாபாரத்தைக் கொண்டுநடாத்த பதிவுசெய்யப்படுவதற்கு அத்தகைய கம்பெனியின் கூட்டிணைக்கப்பட்ட நாட்டில் சட்டத் தடைகள் எவையுமில்லை என்ற பயன்பட, கம்பெனியினால் வழங்கப்பட்ட முறையாக மெய்யென்றுறுதிப்படுத்தப்பட்ட கூற்றொன்று;

(ஊ) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையில் மீளளிக்கப்படற்பாலதல்லாத செய்முறைப்படுத்தற் கட்டணம்.

(4) விண்ணப்பகாரர் அவ்வாறு அளிக்கப்பட்ட விண்ணப்பமொன்றில் தரப்பட்ட விபரங்களுக்கு ஏதேனும் மாற்றம் அல்லது திருத்தம் இருக்கும் பட்சத்தில், அத்தகைய மாற்றம் அல்லது திருத்தம் பற்றி ஆணைக்குழுவுக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழு அவசியமாகக்கூடியவாறாக அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கென அதுபற்றி கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தலும் வேண்டும்.

(5) இச்சட்டத்தின் இப்பாகத்தின் நியதிகளின்படி கரைகடந்த கம்பெனியொன்றாக தொழிற்படுவதற்கு விண்ணப்பகாரரொருவரின் பெயரில் கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழொன்று, கம்பெனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதிலிருந்து கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு பதிவுச் சான்றிதழொன்று வழங்கப்பட்ட அத்தகைய கம்பெனியை விலக்களிப்பதாக கருதப்படுதல் வேண்டும்.

(6) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் கரைகடந்த கம்பெனியொன்றாக வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு அத்தகைய கம்பெனியை அனுமதித்து எக்கம்பெனிக்கு பதிவுச்சான்றிதழொன்று இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் நியதிகளின்படி வழங்கப்பட்டிருக்கின்றதோ அக்கம்பெனி 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கருத்தெல்லையினுள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் வதிவற்ற கம்பெனியொன்றாக இருப்பதாக கருதப்படுதல் வேண்டும்.

(7) காலத்திற்குக்காலம் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான ஏதேனும் ஒழுங்குவிதி, இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் பதிவுசெய்யப்படுவதற்கு விண்ணப்பித்த கம்பெனி அதனது கூட்டிணைப்பு நாட்டில் ஒழுங்குபடுத்தப்படுகின்றது என்ற அடிப்படைமீது இதனகத்து கூட்டிணைக்கப்பட்ட கரைகடந்த கம்பெனிகளுக்கு ஏற்புடையற்பாலனவாக இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்கு ஆக்கப்படலாம்.

(8) இப்பாகத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட கரைகடந்த கம்பெனியொன்று இச்சட்டத்தின் நியதிகளின்படி கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் மட்டுமே ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்டவாறாக வியாபாரத்தைக் கொண்டு நடாத்தலாம்.

(9) இச்சட்டத்தின் நியதிகளின்படி கரைகடந்த கம்பெனியொன்றாக அதனது வியாபாரத்தை தொடருவதற்கு உட்கருதுகின்ற கரைகடந்த கம்பெனியொன்று, ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட வேண்டியவாறான அத்தகைய தொகையில் ஆண்டுக் கட்டணக் கொடுப்பனவின் எண்பிப்பை கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதிக்கு குறித்துரைக்கப்பட்ட முறையில், அவ்வாண்டின் தொடக்கத்திலும் ஒவ்வோர் அடுத்துவரும் ஆண்டின் சனவரி முப்பத்தோராம் நாளுக்கு பிந்தாமலும், காண்பித்தல் வேண்டும்.

(10) அவ்வாறு பதிவுசெய்யப்பட்ட கரைகடந்த கம்பெனியொன்று ஆணைக்குழுவுக்கு எழுத்தில் அறிவித்தல் கொடுப்பதன்மூலம் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் கரைகடந்த கம்பெனியொன்றாக தொழிலைக் கொண்டுநடாத்தாதொழிவதற்கான அதனது உட்கருத்தை ஆணைக்குழுவுக்கு அறிவிக்கலாம். ஆணைக்குழு, கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதியுடனான கலந்தாலோசனையுடன் தேவைப்படுத்தப்படக் கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(11) ஆணைக்குழு, நற்காரணத்துக்காக, வழங்கப்பட்ட ஏதேனும் பதிவுச் சான்றிதழை இரத்துச்செய்யும்படி அதற்கான காரணங்களை குறிப்பிட்டு கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதிக்கு விதந்துரைக்கலாமென்பதுடன், கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதி அத்தகைய பதிவுச் சான்றிதழை இரத்துச் செய்தலும் வேண்டும். அத்தகைய இரத்துச் செய்தலின்மேல், கரைகடந்த கம்பெனி இச்சட்டத்தின்கீழ் அல்லது விளைவாந் தன்மையாக இலங்கையின் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட சிறப்புரிமைகள் மற்றும் நன்மைகளை துய்க்கா தொழிதல் வேண்டும். கம்பெனிகள் பதிவாளர் தலைமையதி பதியினால் ஏதேனும் அத்தகைய இரத்துச் செய்தல் இடம்பெறும் பட்சத்தில், ஆணைக்குழு, அதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு அதுபற்றி எழுத்தில் விண்ணப்பகாரருக்கு அறிவித்தல் வேண்டும்.

## பாகம் VIII

### கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் கரைகடந்த வங்கித்தொழில்

42. (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகள், வங்கித் தொழிற் சட்டத்தின் பாகம் IV இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் ஈடுபடவேண்டிய கரைகடந்த வங்கித்தொழில் தொடர்பாக ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) வங்கித்தொழிற் சட்டத்தின் நியதிகளின்படி வங்கித் தொழிலில் ஈடுபடுவதற்கு உரிமமளிக்கப்பட்ட கம்பெனியொன்று அல்லது ஏதேனும் வேறு நாட்டில் ஏதேனும் சட்டத்தின், பட்டயத்தின், நியதிச்சட்டத்தின், அமைப்பகவிதியின் அல்லது அத்தகைய அமைத்துருவாக்கத்தை அமைத்துருவாக்குகின்ற அல்லது வரைவிலக்கணம் செய்கின்ற வேறு சாதனத்தின்கீழ் வங்கித்தொழிலை கொண்டு நடாத்துவதற்கு உரிமமளிக்கப்பட்டதும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் கரைகடந்த வங்கித்தொழிலில் ஈடுபடுவதற்கு உட்கருதுகின்றதுமான கம்பெனியொன்று இச்சட்டத்தின் நியதிகளின்படி கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் கரைகடந்த வங்கித்தொழிலில் ஈடுபடுவதற்கான உரிமமொன்றுக்கென ஆணைக்குழுவுக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(3) ஆணைக்குழு, அத்தகைய விண்ணப்பமானது தேசிய நலனை அல்லது தேசிய பொருளாதார முன்னேற்ற நலனைக் கருத்திற் கொண்டு ஆணைக்குழுவுக்கு ஏற்றுக்கொள்ளப்படற்பாலதாக இருப்பின், சனாதிபதியின் அல்லது கொழும்புத் துறைமுக நகரம் என்னும் விடயம் ஓர் அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படும் பட்சத்தில் அத்தகைய அமைச்சரின், ஒருப்பாட்டுடன், கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் கரைகடந்த வங்கித்தொழிலில் ஈடுபடுவதற்கு வங்கித்தொழிற் சட்டத்தின்கீழ் உரிமமொன்றை அளிக்க முற்படுவதற்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சருக்கு இச்சட்டத்தில் தரப்பட்டுள்ள வரையறைகளின் நோக்கெல்லையினுள் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைய விதந்துரைத்தல் வேண்டும்.

(4) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் கரைகடந்த வங்கித்தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கான உரிமமொன்று, இச்சட்டத்தில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகள் பற்றி திருப்தியடைந்ததன்மேல், பணச்சபையுடனான ஒருப்பாட்டுடன் நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினால் வழங்கப்படலாம்.

43. இச்சட்டத்தினது இப்பாகத்தின் நியதிகளின்படி கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் கரைகடந்த வங்கித்தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கான உரிமமொன்று, அவ்வாறு ஈடுபடுத்தப்பட்டுள்ள கரைகடந்த வங்கித்தொழில் தேசிய நலனில் அல்லது தேசிய பொருளாதார முன்னேற்ற நலனில் இல்லையென அல்லது கொண்டு நடாத்தப்படுகின்ற கரைகடந்த வங்கித் தொழிலின் கவனமுள்ள முகாமைத்துவம் மற்றும் புலனாகும் உறுதிப்பாட்டிலான குறைபாடொன்று இருப்பதாக தோன்று கின்றதென அவரது எதிர்வாதம் கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்றை உரிமம்பெற்றவருக்கு அளித்த பின்னர் எண்பிக்கப்படின், பணச்சபையுடனான ஒருப்பாட்டுடன் ஆணைக் குழுவினால் இடைநிறுத்தப்படலாம், இல்லாதொழிக்கப்படலாம் அல்லது இரத்துச் செய்யப்படலாம்.

44. சனாதிபதி அல்லது கொழும்புத் துறைமுக நகரம் என்னும் விடயம் ஓர் அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படும் பட்சத்தில் அத்தகைய அமைச்சர், நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சருடனானதும் பணச்சபையுடனானதுமான கலந்தாலோசனையுடன், இச்சட்டத்தின் நோக்கெல்லைக்கு விளைவு பயன்கொடுப்பதற்கும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப் பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் ஈடுபட்டுள்ள கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தில் கவனமுள்ள முகாமைத்துவம் மற்றும் நம்பிக்கை பேணுதலை உறுதிப்படுத்துவதற்கும் தேவைப்படக்கூடியவாறான ஒழுங்கு விதிகளை காலத்துக்குக்காலம் ஆக்கலாம்.

45. இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக பணச் சபையின் ஒருப்பாட்டுடன் மற்றவற்றுக்கிடையே, உரிமங்களை அளித்தல், இடைநிறுத்தல் மற்றும் இரத்துச் செய்தல், கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரம், ஒதுக்கு மற்றும் மூலதனத் தேவைப்பாடுகள், ஒதுக்கு நிதியங்கள், திரவச் சொத்துக்களை பேணுதல், நிதிசார் மற்றும் தொழிற்பாட்டு ஆபத்துக்களின் முகாமைத்துவம், இச்சட்டத்தின் பாகம் VII இன் நியதிகளின்படி கரைகடந்த கம்பெனியின் பதிவுசெய்தலுக்கென விண்ணப்பித்த கம்பெனியின் தரப்படுத்தலின் எண்பிப்பை சமர்ப்பிப்பதற்கான தேவைப்பாடு, கொண்டுநடாத்தப்படுகின்ற கரைகடந்த வங்கித் தொழிலின் நியாயமாக நிலைநாட்டப்பட்ட பிழையான செய்கை அல்லது புலனாகும் உறுதிப்பாடற்ற தன்மை ஏற்படும் பட்சத்தில் ஏற்புடையனவான மட்டுப்பாடுகள் மற்றும் தண்டங்கள் மற்றும் அத்தகைய வேறு இயைபான கருமங்களுக்கு ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.

46. ஆணைக்குழு, சனாதிபதியின் அல்லது கொழும்புத் துறைமுக நகரம் என்னும் விடயம் ஓர் அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படும் பட்சத்தில் அத்தகைய அமைச்சரின் ஒருப்பாட்டுடன், தேசிய நலனில் அல்லது தேசிய பொருளாதாரத்தின் முன்னேற்ற நலனில் பின்வரும் எல்லா அல்லது எவையேனும் வியாபாரங்களைக் கொண்டுநடாத்த கரைகடந்த வங்கித்தொழிலில் ஈடுபட்டுள்ள ஏதேனும் கம்பெனிக்கு அதிகாரமளிப்பதற்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சருக்கு விதந்துரைக்கலாம்:-

(அ) எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட ஆள் அல்லது ஒரு வதிவற்றவரிடமிருந்து ஏதேனும் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் சேமிப்புக்கள், கால மற்றும் கேள்வி வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல்;

(ஆ) எவரேனும் வதிவற்றவரிடமிருந்து குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமொன்றில் ஏதேனும் தொகையை கடனாகப் பெறுதல்;

(இ) ஏதேனும் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் எவரேனும் வதிவற்றவருக்கு கடனுதவியை விசாலித்தல்;

(ஈ) வேறேதேனும் கரைகடந்த கூறொன்றுடன் ஏதேனும் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் வேறு ஏதேனும் கொடுக்கல்வாங்கலில் ஈடுபடுதல்;

(உ) வதிவற்றவரொருவருடன் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமொன்றில் வேறேதேனும் கொடுக்கல்வாங்கலில் ஈடுபடுதல்;

(ஊ) இச்சட்டத்தின்கீழ் எதிர்பார்க்கப்படக்கூடியவாறாக ஏதேனும் வேறு கொடுக்கல்வாங்கலில் ஈடுபடுதல்; அல்லது

(எ) அவசியமாகக்கூடியவாறாக பணச்சபையுடனான அத்தகைய ஒருப்பாட்டின்மேல் அத்துடன் ஆணைக் குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் வேறு ஏதேனும் கொடுக்கல்வாங்கலில் ஈடுபடுதல்.

47. இச்சட்டத்தின் இப்பாகத்தின் நியதிகளின்படி கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு உரிமமொன்று வழங்கப்பட்டுள்ள கம்பெனி ஒவ்வொன்றும் சர்வதேச நிதிசார் அறிக்கையிடுதல் நியமங்களுக்கு இணங்கியொழுக நிதிசார் கூற்றொன்றை ஆண்டுதோறும் தயாரித்தல் வேண்டும்.

48. (1) கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு இச்சட்டத்தின் இப்பாகத்தின் நியதிகளின்படி உரிமமொன்று வழங்கப்பட்டுள்ள கரைகடந்த கம்பெனி ஒவ்வொன்றும் 47 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும் அதனது நிதிசார் கூற்றை கணக்காய்வு செய்வதற்கும் அதன்மீது அறிக்கையிடுவதற்கும் சர்வதேச கணக்காளர்கள் குழுமமொன்றை ஆண்டுதோறும் நியமித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சர்வதேச கணக்காளர்கள் குழுமம் அத்தகைய அறிக்கையை சமர்ப்பித்தலும் வேண்டும்; அத்துடன், அதனது அபிப்பிராயத்தில், அவ்வாறு கணக்காய்வு செய்யப்பட்ட நிதிசார் கூற்று அத்தகைய கரைகடந்த கம்பெனியின் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தின் உண்மையானதும் நியாயமானதுமான நோக்கை வழங்குகின்றதா என்பதையும், அது தொழிற்படுகின்ற அமைப்பாக உள்ளதா என்பதையும் அதன்கண் மற்றவற்றுக்கிடையே குறிப்பிடுதல் வேண்டும்.

(2) அத்தகைய கணக்காய்வு அறிக்கையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டு மென்பதுடன், அத்தகைய சர்வதேச கணக்காளர்கள் குழுமம் சர்வதேச நிதிசார் அறிக்கையிடுதல் நியமங்களுக்கு இணங்க அதனது கடமைகளை நிறைவேற்றியிருக்கவில்லை எனக் கருதின், ஆணைக்குழு, அதையொத்தறிவையும் மதிப்பையும் உடைய வேறொரு சர்வதேச கணக்காளர்கள் குழுமத்திலிருந்து புதிய கணக்காய்வு அறிக்கையொன்றை தேவைப்படுத்தலாம்.

49. (1) ஆணைக்குழு, அதன் சார்பில் ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் தகுதிவாய்ந்த ஆளை, இச்சட்டத்தின் இப்பாகத்தின் நியதிகளின்படி எந்த கரைகடந்த கம்பெனிக்கு கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு உரிமமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்த கரை கடந்த கம்பெனியின் பரிசோதனையொன்றை நிறைவேற்றும்படியும், பின்வருவன வெளிப்படையாகவிருப்பின் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கும்படியும் தேவைப்படுத்தலாம்:-

(அ) சர்வதேச கணக்காளர்கள் குழுமம் கணக்காய்வறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கத் தவறியுள்ளது;

(ஆ) மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் போதியதற்றதன்மையொன்று உள்ளது;

(இ) தொடர்புபட்ட கம்பெனியின் நிதிசார் உறுதிப்பாட்டை சந்தேகிப்பதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளன அல்லது கம்பெனி மோசடியான, பாதுகாப்பற்ற அல்லது புத்திசாதுரியமற்ற வங்கித்தொழில் செயல்முறைகளில் ஈடுபடுகின்றது; அல்லது

(ஈ) அதனது கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தைக் கொண்டுநடாத்துவதில் இச்சட்டத்தின் இப்பாகத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்குக் கம்பெனி தவறியுள்ளது.

(2) ஓராம் உட்பிரிவின் நியதிகளின்படி பரிசோதனையொன்றினை பூர்த்திசெய்ததன்மீதும் அறிக்கையின் சமர்ப்பணத்தின்மீதும், கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட ஆள் மோசடியான, பாதுகாப்பற்ற அல்லது புத்திசாதுரியமற்ற வங்கித்தொழில் செயல்முறைகளில் ஈடுபடுகின்றார் என அல்லது அதனது நிதிசார் உறுதிப்பாடு ஐயத்திலுள்ளது என நிலைநாட்டப்படின், ஆணைக்குழு, பணச்சபையின் ஒருப்பாட்டுடன் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தைக் கொண்டுநடாத்துவதன்மீது மட்டுப்பாடுகளை விதிக்கலாம் அல்லது பொருத்தமானதெனத் தோன்றுகின்றவாறாக தண்டமொன்றை அல்லது தோதானவையெனக் கருதப்படக் கூடியவாறான ஒரு தண்டத்தை அல்லது அத்தகைய வேறு நிபந்தனைகளை விதிக்கலாம்.

50. இச்சட்டத்தினது இப்பாகத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பெனி ஒவ்வொன்றும் ஏற்புடையனவான சர்வதேச நிதிசார் அறிக்கையிடுதல் நியமங்களுடன் இணங்கியொழுகுவதாக புத்தகங்கள், நிகழ்ச்சிக்குறிப்புகள், கணக்குகள், காசு பிணைப் பொறுப்புகள், உறுதிச்சீட்டுகள், வேறு ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளைப் பேணுதல் வேண்டும்.

51. இச்சட்டத்தினது இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கமைய, பணச்சபை, இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக அது அவசியமானதென கருதக்கூடியவாறான தகவல் மற்றும் அறிக்கைகளை ஆணைக்குழு ஊடாக காலத்துக்குக்காலம் கேட்டுப்பெறலாம்.

பாகம் IX

**செயல்நுணுக்க முக்கியத்துவம்வாய்ந்த வியாபாரங்களை மேம்படுத்துவதற்காக விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புகளைத் தீர்மானித்தலும் வழங்குதலும்**

52. (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகள், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் அங்கீகரிக்கப்படக் கூடியவாறான செயல்நுணுக்க முக்கியத்துவம்வாய்ந்த வியாபாரமொன்றினைக் கொண்டுநடாத்துகின்ற எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும், ஆணைக்குழு, சனாதிபதியுடனான அல்லது கொழும்பு துறைமுக நகரம் என்னும் விடயம் அமைச்சரொருவருக்கு குறித்தளிக்கப்படும் பட்சத்தில், அத்தகைய அமைச்சருடனான கலந்தாலோசனையுடன், "செயல்நுணுக்க முக்கியத்துவம்வாய்ந்த வியாபாரங்கள்" என குறிக்கப்படக்கூடியனவும், தேசிய நலனை அல்லது தேசிய பொருளாதாரத்தின் முன்னேற்ற நலனைக் கருத்திற்கொண்டு, கொழும்புத் துறைமுக நகரத்தைத் தாபிப்பதில் குறிக்கோள்களின் வெற்றியை உறுதிப்படுத்துவனவுமான வியாபாரங்களை அடையாளங்காணலாம்.

(3) செயல்நுணுக்க முக்கியத்துவம்வாய்ந்த வியாபாரமொன்றாக வியாபாரமொன்று அவ்வாறு அடையாளங்காணப்பட்டதன்மேல் இப்பாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புகள், கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் அதனது தொழிற்பாடுகள் தொடர்புபடுகின்ற அளவுவரை, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக் கிணங்க அவற்றுக்கு வழங்கப்படலாம். வரி தொடர்புபட்ட விலக்களிப்புகளின் விடயத்தில், அத்தகைய விலக்களிப்புகளை, ஒன்றில் முழுமையாக அல்லது பகுதியளவில், அத்துடன் இதற்கான அட்டவணை IIஇல் தரப்பட்டுள்ள சட்டவாக்கங்களில் எல்லா வற்றிலிருந்தும் அல்லது எவற்றிலிருந்தும் வழங்கலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின் நியதிகளின்படி வழங்கப்பட்ட விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புகள், ஆணைக்குழு மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட ஆள் இடையில் கையொப்பமிடப்படவேண்டிய இச்சட்டத்தின் 32 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் உடன்படிக்கையில் உள்வாங்கப்படுதல் வேண்டும்.

(5) இச்சட்டத்தின் இப்பாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக, விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புகளை வழங்குதல்மீதான வழிகாட்டுநெறிகளை விதித்துரைக்கின்ற ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.

(6) ஆணைக்குழு, கொழும்புத் துறைமுக நகரத்திற்கு செயல்நுணுக்க முக்கியத்துவம்வாய்ந்த வியாபாரங்களை ஈர்ப்பதற்கு ஊக்குவிப்புகளாக அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு உதவி அல்லது வசதிப்படுத்துகையையும் அளிக்கலாம்.

(7) இப்பிரிவின் நியதிகளின்படி வழங்கப்பட்ட அத்தகைய விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புகளின் செல்லுபடிக்காலப் பகுதி நாற்பது ஆண்டுகளை விஞ்சுதலாகாது.

53. (1) செயல்நுணுக்க முக்கியத்துவம்வாய்ந்த வியாபாரமொன்றாக வியாபாரமொன்று அவ்வாறு அடையாளங்காணப்படுவதன்மேல், ஆணைக்குழு, அத்தகைய வியாபாரத்தைச் செயல்நுணுக்க முக்கியத்துவம்வாய்ந்த வியாபாரமொன்றாகக் குறித்தலும் இச்சட்டத்தின் 52 ஆம் பிரிவின் நியதிகளின்படி எவையேனும் விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புகளை வழங்குதலும் தொடர்பாக சனாதிபதிக்கு அல்லது கொழும்புத் துறைமுக நகரம் என்னும் விடயம் அமைச்சரொருவருக்கு குறித்தளிக்கப்படும் பட்சத்தில், அத்தகைய அமைச்சருக்கு விதப்புரைகளைச் செய்தல் வேண்டும்.

(2) சனாதிபதி அல்லது கொழும்புத் துறைமுக நகரம் என்னும் விடயம் ஓர் அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படும்பட்சத்தில் அத்தகைய அமைச்சர், விதப்புரைகளை கவனத்திற்கெடுத்தும், தேசிய நலனை அல்லது தேசிய பொருளாதாரத்தின் முன்னேற்ற நலனைக் கருத்திற்கொண்டும், நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனையுடன், இச்சட்டத்தின் 52 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக, செயல்நுணுக்க முக்கியத்துவம்வாய்ந்த வியாபாரமாக அத்தகைய வியாபாரத்தைக் குறிப்பதற்கும் அத்தகைய வியாபாரத்திற்கு விலக்களிப்புகள் மற்றும் ஊக்குவிப்புகளை வழங்குவதற்கும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப்பெறுவதற்கென அமைச்சரவைக்கு பின்வருவனவற்றை அறிவிப்பதற்கு அவசியமாகவுள்ளவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கலாம் -

(அ) செயல்நுணுக்க முக்கியத்துவம்வாய்ந்த வியாபாரமொன்றாக அத்தகைய வியாபாரத்தை கருதுகின்றமைக்கான நியாயமானதன்மை;

(ஆ) அத்தகைய செயல்நுணுக்க முக்கியத்துவம்வாய்ந்த வியாபாரத்திற்கு ஏற்புடையனவாக்கப்படுவதற்கு முன்மொழியப்படுகின்ற, இச்சட்டத்துக்கான அட்டவணை II இல் நிரலிலிடப்பட்ட அச்சட்டவாக்கங்களிலிருந்தான குறிப்பான விலக்களிப்புகளும் மற்றும் வேறெவையேனும் ஊக்குவிப்புகளும்;

(இ) அத்தகைய விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புகளின் முன்மொழியப்பட்ட தொடக்கத் தேதியும் அவை தொழிற்படாதொழிய வேண்டிய தேதியும்; எவ்வாறாயினும், இது அத்தகைய விலக்களிப்புகளின் அல்லது ஊக்குவிப்புகளின் தொடக்கத் தேதியிலிருந்து நாற்பது ஆண்டுகளை விஞ்சுதலாகாது;

(ஈ) செயல்நுணுக்க முக்கியத்துவம்வாய்ந்த வியாபாரமொன்றாக அடையாளங்காணப்படுகின்ற வியாபாரத்தினது விண்ணப்பகாரரின் பெயர்.

(3) அமைச்சரவை, செயல்நுணுக்க முக்கியத்துவம்வாய்ந்த வியாபாரமொன்றாக ஒரு வியாபாரம் குறிக்கப்படுதலை எத்தேதியன்று அங்கீகரிக்கின்றதோ மற்றும் அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புகள் எத்தேதியன்று வழங்கப்படுகின்றனவோ அத்தேதியிலிருந்து இரண்டு வார காலப் பகுதியினுள், சனாதிபதி அல்லது கொழும்புத் துறைமுக நகரம் என்னும் விடயம் ஓர் அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படும் பட்சத்தில் அத்தகைய அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் பின்வருவனவற்றைக் குறித்துரைத்தல் வேண்டும் -

(அ) செயல்நுணுக்க முக்கியத்துவம்வாய்ந்த வியாபாரமொன்றாக அத்தகைய வியாபாரத்தை கருதுகின்றமைக்கான நியாயமானதன்மை;

(ஆ) அத்தகைய செயல்நுணுக்க முக்கியத்துவம்வாய்ந்த வியாபாரத்திற்கு ஏற்புடையனவாகின்ற, இச்சட்டத்துக்கான அட்டவணை II இல் நிரலிலிடப்பட்ட அச்சட்டவாக்கங்களிலிருந்தான குறிப்பான விலக்களிப்புகள் மற்றும் அளிக்கப்பட்ட வேறெவையேனும் ஊக்குவிப்புகள்;

(இ) அத்தகைய விலக்களிப்புகள் மற்றும் ஊக்குவிப்புகளின் தொடக்கத் தேதியும் அவை தொழிற்படாதொழிய வேண்டிய தேதியும்; அத்துடன்

(ஈ) செயல்நுணுக்க முக்கியத்துவம்வாய்ந்த வியாபாரமொன்றாக அடையாளங்காணப்படுகின்ற வியாபாரத்தினது விண்ணப்பகாரரின் பெயர்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் வர்த்தமானியில் வெளியிடப்படும் அத்தகைய கட்டளைத் தேதியிலிருந்து முப்பது நாட்கள் முடிவடைந்ததன்மேல், அறிவித்தலில் தரப்பட்ட விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புகள் இச்சட்டத்தின் பாகம் IX இன் நியதிகளின்படி ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவனவாக உள்ளன என்பதனை உறுதிப்படுத்துகின்ற ஆணைக்குழுவின் கைப்பட வழங்கப்பட்ட எழுத்திலான உறுதிப்படுத்தலுடன் சேர்த்து அத்தகைய கட்டளை தகவலுக்காக பாராளுமன்றத்தின் முன் இடப்படுதல் வேண்டும்.

(5) இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக, "செயல்நுணுக்க முக்கியத்துவம்வாய்ந்த வியாபாரம்" என்பது, தேசிய நலனை அல்லது தேசிய பொருளாதாரத்தின் முன்னேற்ற நலனைக் கருத்திற்கொண்டு கொழும்புத் துறைமுக நகரத்தை தாபிக்கின்றமையின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு திட்டமிடப்படுகின்றதும், நாட்டிற்கு பொருளாதார, சமூக நன்மைகளைக் கொண்டுவருவதற்கு சாத்தியமுள்ளதும் அல்லது கொழும்புத் துறைமுக நகர வனப்புடைமையை மாற்றுவதற்கு சாத்தியமுள்ளதும், பிரதானமாக பின்வருவனவற்றின் ஊடாக உலகளாவிய அல்லது பிராந்திய வியாபார அல்லது சேவை இணைப்புகளை இயலச்செய்யும் வியாபாரமொன்று எனப் பொருளாதல் வேண்டும்

(அ) முன்மொழியப்பட்ட வியாபாரத்துடன் இணைந்த செயல்நுணுக்க முக்கியத்துவம்;

(ஆ) அத்தகைய வியாபாரத்தினுள் வெளிநாட்டு நேரடி முதலீடொன்றாக கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் வெளிநாட்டுச் செலாவணியின் உள்வருகை அல்லது அத்தகைய வியாபாரத்தின் ஊடாக தோற்றுவிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் உள்வருகை;

(இ) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் தொழிலுக்கமர்த்தப்பட்டவர்களுக்கு, இலங்கை ரூபா தவிர்ந்த குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் வருமானம் உழைக்கின்ற வாய்ப்புக்களை இயலச்செய்யும் தொழிலைத் தோற்றுவித்தல்;

(ஈ) தகவல் தொழில்நுட்பம் உட்பட, சேவைகளை மேம்படுத்துதல் அல்லது தொழில்நுட்பத்தின் அபிவிருத்தி அல்லது பயன்பாடு என்ற நியதிகளில் அறிவின் எதிர்பார்க்கப்பட்ட உருமாற்றம்;

(உ) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் சுற்றுலாப் பயணத்துறை, களியாட்டம் மற்றும் பொருட்களைக் கொள்வனவு செய்தல் என்ற செயற்பாடுகள் ஊடாகவும் வதிவிட சமூகமொன்றின் குடியமர்த்தலுடன் நகர வசதி தொழிற்பாடுகளின் மேம்படுத்தல் ஊடாகவும் இலங்கைக்காக எதிர்பார்க்கப்பட்ட இலக்கை மேம்படுத்தல்; அத்துடன்

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட தலைமையகங்களின் தொழிற்பாடுகள் மற்றும் பிராந்திய விநியோக தொழிற்பாடுகளை உருவாக்குவதுடன், கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் சேவைகளை மேம்படுத்துதல்மூலம் எதிர்பார்க்கப்பட்ட உத்வேகம்.

## பாகம் X

### கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபைச் சட்டத்தினதும் இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச்சட்டத்தினதும் ஏற்புடைமை

54. (1) இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும், இதன்கண் வேறுவகையில் முரணாகக் கூறப்பட்டாலொழிய, கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபைச் சட்டமும் இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டமும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பயனுற நடைமுறைப்படுத்தும் நோக்கத்துக்காக, (2) ஆம் உட்பிரிவிற்றரப்பட்டுள்ள முறையிலும் திரிபுகளுக்கமையவும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பரப்பினுள் பயனுடையனவாதல் வேண்டும்:

ஆயின், கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் அல்லது இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டவையும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று வலு விலுள்ளவையுமான ஒழுங்குவிதிகள், இச்சட்டத்தின்கீழான ஒழுங்குவிதிகள் ஆக்கப்படும்வரை கொழும்புத் துறைமுக அதிகார இடப்பரப்பினுள்ளும் நடைமுறையில் இருத்தல் வேண்டும்:

ஆயின், மேலும், கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் அல்லது இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும் கொழும்புத் துறைமுக அதிகார இடப்பரப்பினுள் ஏற்புடையதாகவுள்ளதுமான ஏதேனும் ஒழுங்குவிதி, இச்சட்டத்தினது இப்பாகத்தின் நியதிகளின்படி நேரொத்த ஒழுங்குவிதியொன்று ஆக்கப்படுவதன்மேல், இச்சட்டத்தின்கீழான ஒழுங்குவிதி நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப் பரப்பினுள் ஏற்புடையதல்லாதொழிதல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் ஆணைக்குழுவானது, சொல்லப்பட்ட கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபைச் சட்டமும் இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டமும், கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் ஏற்புடையனவாகவிருக்கும் ஏதேனும் சந்தர்ப்பத்தில், மேற்கூறப்பட்ட கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபைச் சட்டத்திலும் சொல்லப்பட்ட இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்திலும் உள்ள

(அ) "கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபைக்கான" குறிப்பீடொன்று இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட "கொழும்புத் துறைமுக நகர ஆணைக்குழுவுக்கான" குறிப்பீடொன்றாக இருக்கின்றது; அத்துடன்

(ஆ) "அமைச்சருக்கான" குறிப்பீடொன்று கொழும்புத் துறைமுக நகரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள "சனாதிபதிக்கான" குறிப்பீடொன்றாக இருக்கின்றது,

என்றாற்போன்று அதேமுறையில், கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபைக்குரித்தாக்கப்பட்ட அல்லது குறித்தளிக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் அல்லது அவற்றுள் எவற்றையும், ஏற்றமாற்றங்களுடன், பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

55. (1) ஆணைக்குழு, இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும், இச்சட்டத்தில் குறிப்பாக ஏற்பாடுசெய்யப்பட்ட அளவுக்கு கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபையின் ஒருப்பாட்டினைப் பெறுதல் வேண்டும்.

(2) கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபை சூழ்நிலைகளில் முன்னுரிமை விடயம் என்றவகையாக, ஆணைக்குழுவுக்கு அதன் முடிபை அறிவித்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழு, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் கூட்டாட்சியாதனங்களின் நிர்மாணம் துரிதமானவொரு முறையில் நிறைவேற்றப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் அலுவலகமொன்றைத் தொழிற்படுத்துமாறு கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபையைத் தேவைப்படுத்தலாம். கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபைச் சட்டத்தினதும் இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தினதும் ஏற்பாடுகளைத் துரிதமாக நடைமுறைப்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்கு, போதிய முதுமையையும் அதிகாரத்தையும் கொண்ட அலுவலர்களினால் அத்தகைய அலுவலகம் முகாமை செய்யப்படுவதனை கூட்டாட்சியதான முகாமை அதிகாரசபை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

## பாகம் XI

### பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்புடைமை

56. (1) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் தொழிற்படுத்தப்பட்ட ஏதேனும் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை அல்லது சந்தை, பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக் குழுச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் அத்தகைய சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினதும் நியதிகளின்படி பிணையங்களை நிரற்படுத்துதலையும் வழங்குதலையும் ஒழுங்குபடுத்துதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காகப் "பிணையங்கள்" என்பது, அதன்கண் அல்லது அதுதொடர்பில் (அலகுகளாக அல்லது வேறுவகையாக விபரிக்கப்படினுஞ்சரி), எவையேனும் உரிமைகள், விருப்புத்தெரிவுகள் அல்லது அக்கறை உட்பட, ஏதேனும் அரசாங்கத்தினால் அல்லது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஏதேனும் குழுவினால் நம்பப்படுகின்ற அடிப்படைச் சொத்தின் அல்லது வழங்கப்பட்ட அல்லது வழங்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட பத்திரங்களின் தன்மை எத்தகையதாகவிருப்பினும் எதிர்வுகளும் விருப்புத்தெரிவுகளும் உட்பட, தொகுதிக்கடன்பத்திரங்கள், பங்குத்தொகுதிகள், பங்குகள், நிதிகள், முறிகள் மற்றும் வழிவந்தவை என்று பொருளாகும் ஆனால் நாணயமாற்றுண்டியல்களை அல்லது வாக்குறுதிப்பத்திரங்களை அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட வைப்புச் சான்றிதழ்களை உள்ளடக்கமாட்டாது.

57. (1) இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும், இதன்கண் வேறுவகையில் முரணாகக் கூறப்பட்டாலொழிய, பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம், இச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பயனுற நடைமுறைப்படுத்தும் நோக்கத்துக்காக, (2) ஆம் உட்பிரிவில் இதனகத்துப்பின்னர் தரப்பட்டுள்ளவாறான முறையிலும் திரிபுகளுக்கமையவும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் பயனுடையதாதல் வேண்டும்:

ஆயின், பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று வலுவிலுள்ளதுமான ஏதேனும் ஒழுங்குவிதி, இச்சட்டத்தின்கீழான ஒழுங்குவிதிகள் ஆக்கப்படும்வரை கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் தொழிற்படுதலும் வேண்டும்:

ஆயின், மேலும், பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் மேற்சொல்லப்பட்டவாறு ஏற்புடைய தாகவுள்ளதுமான ஏதேனும் ஒழுங்குவிதி, இச்சட்டத்தினது இப்பாகத்தின் நியதிகளின்படி நேரொத்த ஒழுங்குவிதியொன்று ஆக்கப்படுவதன்மேல், இச்சட்டத்தின்கீழான அத்தகைய ஒழுங்கு விதி வலுவுக்கு வரும் தேதியிலிருந்து கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் ஏற்புடையதாகாதொழிதல் வேண்டும்.

(2) ஆணைக்குழு அதனது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதும், புரிவதும் நிறைவேற்றுவதிலும் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் நியதிகளின்படி இச்சட்டத்தின் இப்பாகத்தின் நியதிகளின்படி ஏற்பாடு செய்யப்பட்ட அளவிற்கு தேவைப்படுத்தப்படுமிடத்து, பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது குறித்தளிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக் குழுவுடனான ஒருப்பாட்டைப் பெறுதல் வேண்டும்:

(3) நாடப்பட்ட பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அத்தகைய ஒருப்பாடு கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் நடைமுறைப்படுத்தலுக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளை பொருள்கோடல் செய்வதில் இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கத்திற்காக தேவைப்படும் அந்தளவிற்கு-

(அ) "பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவுக்கான" குறிப்பீடொன்று இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட "கொழும்புத் துறைமுக நகர ஆணைக்குழுவுக்கான" குறிப்பீடொன்றென்றாற்போன்று இருக்கின்றது; அத்துடன்

(ஆ) "அமைச்சருக்கான" குறிப்பீடொன்று கொழும்புத் துறைமுக நகரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள "சனாதிபதிக்கான" குறிப்பீடொன்றென்றாற்போன்று இருக்கின்றது.

58. (1) ஆணைக்குழுவினால் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவிடமிருந்து அத்தகைய ஒருப்பாடு நாடப்படுமிடத்து, பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக் குழு, சூழ்நிலைகளில் செயல்முறைக்குகந்தவரை விரைவாக, முன்னுரிமை என்றவகையாக, ஆணைக்குழுவுக்கு அதன் முடிபை அறிவித்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழு, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனைகள் அல்லது சந்தைகளின் தொழிற்பாடு துரிதமானவொரு முறையில் நிறைவேற்றப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் அலுவலகமொன்றைத் தொழிற்படுத்துமாறு பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவைத் தேவைப்படுத்தலாம். போதிய முதுமையையும் அதிகாரத்தையும் கொண்ட அலுவலர்களினால் அத்தகைய அலுவலகம் முகாமைசெய்யப்படுவதனை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு உறுதிப்படுத்துதல் வேண்டும்.

## பாகம் XII

### சொத்து முகாமையாளரும் பொதுச் சேவைகளை வழங்குதலும்

59. இரண்டாயிரத்தேழாம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் நியதிகளின்படி கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்று இருத்தல் வேண்டும்; அது, காலத்திற்குக்காலம் சொத்து முகாமையாளருக்கு ஆணைக்குழுவினால் குறித்தளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு சேவைகள் உட்பட கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் இதன்கீழ் தரப்பட்டவாறாக அத்தகைய சேவைகளை வழங்குவதற்கு சொத்து முகாமையாளராக குறிக்கப்படுதல் வேண்டும்.

60. சொத்து முகாமையாளர் ஆணைக்குழுவின் பணிப்பின்கீழும் மேற்பார்வையின்கீழும் செயலாற்றுதல் வேண்டுமென்பதுடன் பின்வரும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்:-

(அ) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பில், அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள், வதிவுள்ளோர், இருப்பாட்சிகொண்டிருப்போர் மற்றும் பார்வையிடுநர்களுக்கு எரிவாயு, நீர், மின்சாரம், இணைய மற்றும் தொடர்பாடல் வசதிகள், கழிவுநீர் மற்றும் வடிகாலமைப்பு, கழிவு மற்றும் குப்பைகூளம் அகற்றல் போன்ற பயன்பாட்டுச் சேவைகளை மற்றும் அத்தகைய வேறு வசதிகளை வழங்குவதில் சேவை வழங்குநர்களுக்கு உதவுதல்;

(ஆ) வீதி விளக்கிடுதலை மற்றும் அத்தகைய வேறு வசதிகளைப் பேணுதல் உட்பட எல்லாப் பொதுவான இடப்பரப்புக்களையும் முகாமை செய்தலும் பேணுதலும்;

(இ) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள், அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களின் ஊழியர்கள், வதிவுள்ளோர், இருப்பாட்சி கொண்டிருப்போர் மற்றும் பார்வையிடுநர்களிடமிருந்து முகாமைக் கட்டணங்கள், பயன்பாட்டு விதிப்பனவு, வாகன தரிப்பிட விதிப்பனவுகள், பயன்படுத்துநர் கட்டணங்கள் மற்றும் அத்தகைய வேறு கட்டணங்கள் அல்லது விதிப்பனவுகள் உட்பட, இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டவாறு, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் மற்றும் கொழும்பு துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் வழங்கப்பட்ட சேவைகளுக்கான கட்டணங்களையும் விதிப்பனவுகளையும் சேகரித்தலும் இடப்பரப்பு தொடர்பான வீதவரிகளையும் அறவீடுகளையும் சேகரிப்பதனை வசதிப்படுத்தலும்;

(ஈ) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் வாகன தரிப்பிடங்கள் போன்ற பொதுப் பயன்படுத்துநர் வசதிகளை நிறுவுதல், தொழிற்படுத்துதல் மற்றும் பேணுதல்;

(உ) கரைகடந்த நீர்த்தடைக்கும் கொழும்புத் துறைமுக நகர கடற்கரைகளுக்குமிடையே நீர்முன்னிலைகள், உள்நாட்டு வாய்க்கால்கள் மற்றும் அத்தகைய வேறு இடப்பரப்புகளை பேணுதலுக்கும் மற்றும் பேணிக்காத்தலுக்கும் பொறுப்பாகவிருத்தல்;

(ஊ) ஆணைக்குழுவினால் விதிக்கப்படுவனவும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் ஏற்புடையனவுமான உள்ளூர் வீதவரிகள், அறவீடுகள் மற்றும் அத்தகைய வேறு விதிப்பனவுகளை ஆணைக்குழுவின் சார்பில் சேகரித்தலும், ஆணைக்குழுவினால் பணிக்கப் பட்டவாறான வங்கிக்கணக்கொன்றிற்கு ஒவ்வோர் ஆண்டின் முடிவிலும் அவ்வாறு சேகரிக்கப்பட்ட மொத்த தொகையை வரவுவைத்தலும்;

(எ) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் வழங்கப்பட்ட சேவைகளின் பாகமாகவுள்ளவையும், வசியமாகக்கூடியவாறானவையுமான கப்பல் நிறுத்தற் கட்டணங்களை அறவிடுதல்;

ஏ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய அபிவிருத்திக் கட்டுப்பாட்டு விதிகளுக்கு இணங்கியொழுகுவதற்கு அமைய, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள், அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களின் ஊழியர்கள், வதிவுள்ளோர், இருப்பாட்சிகொண்டிருப்போர் மற்றும் பார்வையிடுநர்களின் எல்லா வகையான குப்பைகூளங்களின் நாளாந்த சேகரிப்பு, பிரித்தெடுத்தல், மற்றும் அகற்றுதல் மற்றும் அப்புறப்படுத்தலை உறுதிப்படுத்துகின்ற அதேவேளை, வினைத்திறனானதும் பயனுள்ளதுமான குப்பைகூளச் சேகரிப்பு மற்றும் அகற்றல் முறையொன்றின் தொழிற்பாடு மற்றும் பேணுகைக்கு பொறுப்பாகவிருத்தல்; அத்துடன் தேவைப்படுமிடத்து, வெளியாட்களை பணியிலமர்த்தல் உடன்படிக்கைகள் உட்பட எவரேனும் மூன்றாம் திறத்தவருடன் எவையேனும் தொடர்புபட்ட உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளுதல்;

(ஐ) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் வீதிகள் அல்லது அணுகுவழிகள் தொடர்பான எல்லாக் கருமங்களையும் மேற்பார்வை செய்தலும் நிருவகித்தலும் அத்துடன் அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள், அதிகார மளிக்கப்பட்ட ஆட்களின் ஊழியர்கள், வதிவுள்ளோர், இருப்பாட்சிகொண்டிருப்போர் மற்றும் பார்வையிடுநர்களின் வசதி மற்றும் சேமநலனை பாதுகாத்தலும் மேம்படுத்துதலும்; அத்துடன்

(ஒ) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள், அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களின் ஊழியர்கள், வதிவுள்ளோர், இருப்பாட்சி கொண்டிருப்போர் மற்றும் பார்வையிடுநர்களின் சிறந்த முகாமைத்துவம் மற்றும் சேமநலனுக்கென ஆணைக்குழு வினால் பணிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு காரியங்களைச் செய்தல்.

61. சொத்து முகாமையாளர் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவராக இருப்பதாக கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின் நியதிகளின்படி குறித்துரைக்கப்பட்டவாறாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரின் எல்லா நன்மைகள் மற்றும் சிறப்புரிமைகளுக்கு உரித்துடையவராதலும் வேண்டும்.

## பாகம் XIII

### சர்வதேச வர்த்தக பிணக்குத் தீர்வு நிலையம்

62. (1) ஆணைக்குழு, இணக்கம், மத்தியஸ்தம், தீர்த்தளிப்பு, நடுத்தீர்ப்பு மற்றும் வேறு மாற்றீடான பிணக்குத் தீர்வு சேவைகளை முனையும் நோக்கங்களுக்கென, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்றாக கூட்டிணைக்கப்படவேண்டியதும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் அமைந்திருக்க வேண்டியதுமான சர்வதேச வர்த்தக பிணக்குத் தீர்வு நிலைய மொன்றின் தாபிப்புக்கு வசதியளித்தல் வேண்டும்.

(2) பின்வரும் திறத்தவர்களிடையே கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் எழக்கூடிய ஏதேனும் பிணக்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்படும் சர்வதேச வர்த்தக பிணக்குத் தீர்வு நிலையத்தினால் நடாத்தப்படும் நடுத்தீர்ப்பு என்றவகையாக தீர்க்கப்படுதல் வேண்டும் -

(அ) இயைபானவிடத்து, ஆணைக்குழுவுக்கும் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருக்கும் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரின் ஊழியர் ஒருவருக்கும் இடையே; அத்துடன்

(ஆ) ஆணைக்குழுவுக்கும் வதிவுள்ளவரொருவருக்கும் அல்லது இருப்பாட்சிகொண்டிருப்பவரொருவருக்கும் இடையே; ஆயின், அதுதொடர்பாக ஆணைக்குழுவுக்கும் அத்தகைய வதிவுள்ளவருக்கும் அல்லது இருப்பாட்சிகொண்டிருப்ப வருக்கும் இடையே உடன்படிக்கை அல்லது வேறு சட்டரீதியாக பிணிக்கும் ஆவணம் இருத்தல் வேண்டும்.

(3) சட்டத்தின் 32 ஆம் பிரிவின் நியதிகளின்படி ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட ஆளினாலும் செய்துகொள்ளப்பட்ட எல்லா உடன்படிக்கைகளும் இப்பிரிவின் நியதிகளின்படி, அத்தகைய உடன்படிக்கையின்கீழ் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் எழக்கூடிய ஏதேனும் பிணக்கு நடுத்தீர்ப்புக்கான கட்டாய ஆற்றுப்படுத்துகையொன்றை தேவைப்படுத்துகின்ற ஏற்பாடொன்றை கொண்டிருத்தல் வேண்டுமென அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஒவ்வொருவரும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(4) சர்வதேச வர்த்தக பிணக்கு தீர்வு நிலையம், இணக்கம், மத்தியஸ்தம், தீர்ப்பளித்தல், நடுத்தீர்ப்பு மற்றும் சர்வதேச வர்த்தக பிணக்கு தீர்வு நிலையத்தினால் முனையப்படுகின்ற அத்தகைய வேறு எவையேனும் மாற்றீடான பிணக்குத் தீர்வு சேவைகளுக்கென நடவடிக்கைமுறை விதிகளை ஆக்குவதற்கு அல்லது ஏற்றுக் கொள்வதற்கு உரித்துடையதாதல் வேண்டும்.

(5) இச்சட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட சர்வதேச வர்த்தக பிணக்குத் தீர்வு நிலையத்தினால் ஆக்கப்படும் ஏதேனும் நடுத்தீர்த்தளிப்பின் வலுவுறுத்தல் அல்லது புறத்தொதுக்கல், 1995 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நடுத்தீர்ப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க செய்யப்படுதல் வேண்டும்.

(6) சர்வதேசரீதியாக பிரபல்யமான உயர்தொழிலரும் அவ்வாறு சம்பந்தப்படக்கூடிய அதேவேளை, (1) ஆம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட சர்வதேச வர்த்தக பிணக்குத் தீர்வு நிலையத்தின் தொழிற்பாடுகளில் அல்லது எவையேனும் செயற்பாடுகளில் இலங்கைப் பிரசை அல்லது வதிவுள்ளவர் ஒருவர் ஏதேனும் தன்மையில் சேவையாற்றலாம்.

பாகம் XIV

**சட்ட வழக்குநடவடிக்கைகளின் கேட்பில் முன்னுரிமை**

63. தேசிய நலனில் அல்லது தேசிய பொருளாதார முன்னேற்றத்தின் நலனில், வியாபாரஞ் செய்வதிலான இலகுவான தன்மையிலும் ஒப்பந்தங்களை வலுவுறுத்துவதிலும் சர்வதேச முதலீட்டாளர் நம்பிக்கையை வளர்ப்பதற்கென, வழக்குக்கான காரணம் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பில் அல்லது அதிலிருந்து கொண்டுநடாத்தப்பட்ட ஏதேனும் வியாபாரத்தினுள் அல்லது அது தொடர்பாக எழுந்துள்ளவிடத்து, அத்தகைய வழக்குகளைத் துரிதமான முறையில் நாளாந்த அடிப்படையில் கேட்பதற்கு, நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தில், நீதிமன்றத்தினால் பதியப்படவேண்டிய காரணங்களுக்காக, விதிவிலக்கான சூழ்நிலைகள் விளக்கத்தை பின்போடுதலை, தொடங்குதலை அல்லது தொடர்ந்து நடாத்துதலை அனுமதித்தாலொழிய, குடியியல் அல்லது வர்த்தகக் கருமங்களில் தொடுக்கப்பட்ட எவையேனும் சட்ட வழக்குநடவடிக்கைகள் தொடர்பாக நீதிமன்றங்களினால் முன்னுரிமை கொடுக்கப்படுதல் வேண்டும்.

பாகம் XV

**இடைக்கால ஏற்பாடுகளும் முதலீட்டுப் பாதுகாப்பும்**

64. (1) ஆணைக்குழு, இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு, சனாதிபதியினால் அல்லது கொழும்புத் துறைமுக நகரம் என்னும் விடயம் ஓர் அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படும் பட்சத்தில் அத்தகைய அமைச்சரினால், அங்கீகரிக்கப்படக்கூடியவாறாக, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிற்கு வெளியே இலங்கையிலுள்ள குறிக்கப்பட்ட அமைவிடம் ஒன்றிலிருந்து வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரை இடைக்கால வழிமுறையொன்றாக, அவ்வாறு செய்வது அவசியமானதென அது கருதுமிடத்து அனுமதிக்கலாம். அத்தகைய வியாபாரம் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் அமைந்துள்ளதும் அதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுமான வியாபாரமொன்றாகவிருப்பதாகவும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலுமிருந்தான வியாபார மொன்றாக இருப்பதாகவும் அவ்வாறான வியாபாரத்துக்கு அளிக்கப்பட்ட எல்லாச் சிறப்புரிமைகளுக்கும் அத்தகைய ஐந்தாண்டுக் காலப்பகுதிக்கு உரித்துடையதாதல் வேண்டுமென்பதுடன் எல்லா நோக்கங்களுக்காகவும் அவ்வாறானதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நியதிகளின்படி கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்புக்கு வெளியே இலங்கையில் குறிக்கப்பட்ட அமைவிடமொன்றிலிருந்து வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் அனுமதிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய வியாபாரம் இச்சட்டத்தினதும் இதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளுக்கு அமையவிருத்தல் வேண்டும்.

65. (1) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும், கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பை உள்ளடக்குகின்ற எல்லாக் காணிகளும் (3) ஆம் உட்பிரிவில் தரப்பட்ட முறையில் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னர் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் அமைந்துள்ள ஏதேனும் காணி தொடர்பில் ஏதேனும் கைமாற்றல் உறுதி, குத்தகை ஒப்பந்தம், உடன்படிக்கை அல்லது வேறு ஒத்த ஆவணம் நிறைவேற்றப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய கைமாற்றல் உறுதி, குத்தகை ஒப்பந்தம், உடன்படிக்கை அல்லது வேறு ஒத்த ஆவணம் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் இச்சட்டத்தின் நியதிகளின்படி ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்பட்ட ஆவணமொன்றாக விருப்பதாக எல்லா நோக்கங்களுக்காகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், இதன்கீழ் நிறைவேற்றப்பட்டது என்றாற்போன்று செல்லுபடியானதாதலும் பயனுடையதாதலும் வேண்டும்.

(3) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, இச்சட்டம் நடைமுறைக்கு வருவதன்மீது, இச்சட்டத்தின் அட்டவணை I இல் தரப்பட்டுள்ளவாறு கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பைக் கொண்டுள்ள எல்லாக் காணி தொடர்பிலும் சனாதிபதி, ஆணைக்குழுவின் பெயரில் (454 ஆம் அத்தியாயமான) முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டத்தின்கீழ் காணி அளிப்பொன்றை வழங்குதல் வேண்டுமென இத்தால் குறிப்பிடப்படுகின்றது.

66. இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர், ஏதேனும் உடன்படிக்கை, இலங்கை முதலீட்டுச் சபையினால் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் முதலீடொன்று தொடர்பாக 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் மற்றும் 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் நியதிகளின்படி செய்துகொள்ளப்பட்டுள்ளவிடத்தும், ஏதேனும் கட்டளை கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள்ளான முதலீடொன்று தொடர்பாக செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் நியதிகளின்படி வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளவிடத்தும், அத்தகைய உடன்படிக்கை முறையே இச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்பட்ட உடன்படிக்கையொன்றாக இருப்பதாகவும் அத்தகைய கட்டளை இச்சட்டத்தின் பாகம் IX இன்கீழ் வெளியிடப்பட்ட கட்டளையொன்றாக இருப்பதாகவும் எல்லா நோக்கங்களுக்காகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், இதன்கீழ் நிறைவேற்றப்பட்டது என்றாற்போன்று செல்லுபடியானதாதலும் பயனுடையதாதலும் வேண்டும்.

67. வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் நியதிகளின் படி வழங்கப்பட்ட எந்த பதிவுசெய்தல், உரிமம், அதிகாரவளிப்பு, அனுமதிப்பத்திரம் அல்லது வேறு அங்கீகாரம் எதுவும் அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதாக ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் கைமாற்றல் உறுதி, அல்லது குத்தகை ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை, அத்தகைய பதிவுசெய்தல், உரிமம், அதிகாரவளிப்பு, அனுமதிப் பத்திரம், அல்லது வேறு அங்கீகாரத்தில் அல்லது அத்தகைய கைமாற்றல் உறுதி, அல்லது குத்தகை ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்டவாறான காலப்பகுதி அல்லது காலம் முடிவடைவதன்மேல் அல்லது பூர்த்திசெய்யப்படுவதன்மேல் தவிர, முறையான முதலீட்டாளரின் நலன்களுக்கு தீங்குவிளைவிக்கும் ஏதேனும் முறையில் முடிவுறுத்தலோ அல்லது திருத்தப்படுதலோ ஆகாது:

ஆயின், எவ்வாறாயினும், பின்வரும் சந்தர்ப்பங்களில் முன்னதான முடிவுறுத்தல் இடம்பெறலாம் -

(அ) இயைபான திறத்தவர்களிடையிலான உடன்படிக்கையின் விளைவாக;

(ஆ) இயைபான ஆவணத்தில் உள்ளடக்கப்பட்ட நியதி அல்லது நிபந்தனையொன்றின் மீறுகையொன்றைப் பின்பற்றி; அல்லது

(இ) இச்சட்டத்தில் அடங்கியுள்ளதும் முடிவுறுத்தலுக்கு ஏற்பாடு செய்கின்றதுமான வெளிப்படையான ஏற்பாடொன்றின் விளைவாக.

## பாகம் XVI

## நானாவித ஏற்பாடுகள்

68. (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் -

(அ) இச்சட்டத்தின் நியதிகளின்படி பதிவுசெய்தல், உரிமம், அதிகாரவளிப்பு அல்லது அத்தகைய வேறு அங்கீகாரமொன்றை தேவைப்படுத்துகின்ற ஏதேனும் வியாபாரத்தை, இதன்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறாக அதனைப் பெற்றுக்கொள்ளாது ஏதேனும் வியாபாரத்தை தாபிக்கின்ற, தொடங்குகின்ற அல்லது தொழிற்படுத்துகின்ற;

(ஆ) இச்சட்டத்தின் நியதிகளின்படி வழங்கப்பட்ட ஏதேனும் பதிவுசெய்தல், உரிமம், அதிகாரவளிப்பு அல்லது அத்தகைய வேறு அங்கீகாரத்திலுள்ள ஏதேனும் ஏற்பாட்டுக்கு முரணாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவராக வியாபாரத்தில் ஈடுபடுகின்ற;

(இ) அத்தகைய ஆள், ஏதேனும் பொருளளவிலான விபரம் பொய்யானது அல்லது தவறாக இட்டுச்செல்லும் எனத் தெரிந்துகொண்டு இச்சட்டத்தின்கீழ் சமர்ப்பிக்கப்படுகின்ற ஏதேனும் விண்ணப்பம் தொடர்பாக ஏதேனும் பிரதிநிதித்துவம் அல்லது கூற்றை செய்கின்ற;

(ஈ) இச்சட்டத்தின் அல்லது ஏதேனும் வேறு ஏற்புடையதான எழுத்திலான சட்டத்தின் நியதிகளின்படி அத்தகைய ஆள் ஏதேனும் தகவலை, ஆவணங்களை அல்லது விபரங்களைக் கொடுத்துதவுவதற்கு தேவைப்படுத்தப்படும்போது, பொய்யான தகவல், ஆவணங்கள் அல்லது விபரங்களைக் கொடுத்துதவுகின்ற; அல்லது

(உ) இச்சட்டத்தின் நியதிகளின்படி ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதிகளை மீறுகின்ற அல்லது அதற்கு இணங்கியொழுகத் தவறுகின்ற, எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஒரு மில்லியன் ரூபாவுக்குக் குறையாததும் ஐந்து மில்லியன் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மூன்று மாதங்களுக்குக் குறையாததும் இரண்டாண்டுகளுக்கு மேற்படாததுமான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்; அத்துடன், நீதிமன்றம் அத்தகைய குற்றப்பணத்தொகையை அல்லது அத்தகைய மறியற்றண்டனையின் காலப்பகுதியை நிருணயிப்பதில், புரியப்பட்ட தவறின் பாரதூரமான தன்மையைக் கவனத்திற் கெடுக்கலாம்.

(2) ஆளொருவர் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் நியதிகளின்படி தவறொன்றிற்கு குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, நீதிமன்றம், அதனது தற்றுணிபில், அவ்வாறு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் குறித்துரைக்கப்படவேண்டிய காலப்பகுதியொன்றுக்கு விடயத்துக்கேற்ப, தேவைப்படுத்தப்பட்ட பதிவுசெய்தல், உரிமம், அதிகாரவளிப்பு அல்லது அத்தகைய வேறு அங்கீகாரம் பெறாது அவர் ஈடுபட்டுக்கொண்டிருந்ததும் அவர் தேவைப்படுத்தப்பட்டவாறாக அதற்கான பதிவுசெய்தல், உரிமம், அதிகாரவளிப்பு அல்லது அத்தகைய வேறு அங்கீகாரத்தை பெறும்வரை தற்போது தடைசெய்யப்பட்டுள்ளதுமான வியாபாரத்தில் ஈடுபடுவதனை உடனடியாக பயனுறுவதாக தவிர்த்தல் வேண்டும் என்ற பயன்பட மேலதிக கட்டளையொன்றை ஆக்கலாம்.

(3) (அ) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாட்டினை மீறுகின்ற அல்லது அதற்கு இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப் பளிக்கப்பட்டதன்மேல், ஐந்து இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு மில்லியன் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாததும் ஓராண்டுக்கு மேற்படாததுமான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(ஆ) மேலதிகமாக, நீதிமன்றம் தவறு அவ்வாறு தொடருகின்ற ஒவ்வொரு நாள் தொடர்பிலும் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத தொடருகின்ற குற்றப்பணமொன்றை விதிக்கலாம்.

69. இச்சட்டத்தின் நியதிகளின்படி தவறொன்று அதிகாரமளிக்கப்பட்ட ஆள் அல்லது ஆட்களினால் புரியப்படுமிடத்து, அப்போது -

(அ) அவ்வதிகாரமளிக்கப்பட்ட ஆள் அல்லது ஆட்கள், கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருப்பின், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளரும், முகாமையாளரும் அல்லது செயலாளரும்;

(ஆ) அவ்வதிகாரமளிக்கப்பட்ட ஆள் அல்லது ஆட்கள், குழுமமொன்றாக இருப்பின், அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும்; அல்லது

(இ) அவ்வதிகாரமளிக்கப்பட்ட ஆள் அல்லது ஆட்கள், குழுமமொன்று தவிர்ந்த கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாக இருப்பின், அத்தகைய குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும், அத்தவறைப் புரிந்துள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும்: ஆயின் அத்தகைய குழுமத்தின் அதிகாரமளிக்கப்பட்ட ஆள் அல்லது ஆட்கள் அல்லது அத்தகைய கூட்டிணைக்கப்படாத குழுவின் உறுப்பினரொருவர், அத்தகைய தவறு அவரது அறிவுக்கு எட்டாமலேயே புரியப்பட்டது என அல்லது அவர் அத்தகைய தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு எல்லா உரிய விழிப்புக்கவனத்தையும் பிரயோகித்தார் என எண்பிப்பாராயின், அத்தகைய தவறைப் புரிந்தவராகக் கருதப்படுதலாகாது.

70. (1) எவரேனும் ஆள் ஆணைக்குழுவினால் அவர்மீது விதிக்கப்பட்ட ஏதேனும் மிகைக்கட்டணம் அல்லது தண்டத்தைச் செலுத்தத் தவறுகின்றவிடத்து, ஆணைக்குழு, அதன் கைப்பட்ட சான்றிதழொன்று வழங்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(2) அத்தகைய சான்றிதழ், வருமதியான பணத்தொகை பற்றிய விபரங்களையும் தவறுகை புரிந்தவரின் பெயரையும் முகவரியையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) சான்றிதழினால் இன்னலுறும் எவரேனும் ஆள் அத்தகைய சான்றிதழ் அஞ்சலிலிடப்பட்டதிலிருந்து பதினான்கு நாட் காலப்பகுதியினுள் அத்தகைய சான்றிதழை புறத்தொதுக்க அல்லது வேறுபடுத்த செய்வதற்கு மாவட்ட நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் நியதிகளின்படி விண்ணப்பம் எதுவும் செய்யப்படவில்லையாயின், அவ்வாறு சான்றுப்படுத்தப்பட்ட பணத்தொகை ஆணைக்குழுவுக்கு அத்தகைய ஆளிடமிருந்து வருமதியான கடனொன்றாகவிருப்பதாக கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், மாவட்ட நீதிமன்றத்துக்கு சான்றிதழொன்றை வழங்குவதன்மூலம் ஆணைக்குழுவினால் அறவிடவும்படலாம்.

(5) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் (அத்தியாயம் 101) ஏற்பாடுகள் இப்பிரிவின் நியதிகளின்படியான விண்ணப்பத்துக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

71. (1) சனாதிபதி, அல்லது கொழும்புத் துறைமுக நகரம் என்னும் விடயம் ஓர் அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படும்பட்சத்தில் அத்தகைய அமைச்சர், ஆணைக்குழுவுடனான மற்றும் எவரேனும் இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகாரியுடனான கலந்தாலோசனையுடன், எந்தக் கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் விதித்துரைக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றனவோ அல்லது ஆக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படுகின்றனவோ அந்த எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்காகவும் அல்லது அவற்றுள் எவற்றுக்காகவும் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்-

(அ) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் ஏற்புடையதாகவிருக்கவேண்டிய அபிவிருத்திக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளை விதித்துரைத்தல்;

(ஆ) 6 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஞ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் ஏற்புடையனவாகவிருக்க வேண்டிய உள்ஷர் ஆதன வீதவரிகளினதும் விதிப்பனவுகளினதும் வகுதிகளையும், வீதவரிகளாகவும் விதிப்பனவுகளாகவும் செலுத்தப்படற்பாலனவான பணத்தொகைகளையும் அடையாளங்காணல்;

(இ) 6 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ட) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக, பங்குத்தொகுதி, விலையுயர்ந்த உலோகம் அல்லது பொருட்களின் பரிமாற்றங்கள் அல்லது சந்தைகளின் தாபித்தலில் மற்றும் தொழிற்படுத்தலில் அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களுக்கு ஏற்புடையனவான நியதிகள் மற்றும் நிபந்தனைகளை குறித்துரைத்தலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் அவற்றை விற்பனை செய்தலும்;

(ஈ) 6 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (எஅ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் பந்தய அமைவிடங்களின் பண்புக்கூறுகளை அடையாளங்காணுதலும், எம்முறையில் பந்தய செயற்பாடுகள் கொண்டு நடாத்தப்பட வேண்டிய அல்லது தொழிற்படுத்தப்படவேண்டிய முறையையும் அத்துடன் உரிமமொன்றை பெற்றுக் கொள்ளுவதற்கான நடவடிக்கைமுறையையும் செலுத்தப்படற்பாலனவான உரிமக் கட்டணங்களையும் செலுத்தப்படவேண்டிய அரசுரிமைப் பணங்களையும் மற்றும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு தொடர்புபட்ட கருமங்களையும் குறித்துரைத்தலும்;

(உ) கூட்டாட்சியாதன முகாமை மற்றும் இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மை என்னும் விடயங்களுடன் சம்பந்தப் பட்டவாறாக அல்லது அத்தகைய பிரிவின் நோக்கத் துக்காக மேலதிகமாகத் தேவைப்படக்கூடியவாறாக, 6 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஏஅ) என்னும் பந்தியின் நியதிகளின்படி சொத்து முகாமையாளருக்குக் கையளிக்கப்படக்கூடிய அல்லது குறித்தளிக்கப்படக்கூடிய பணிகளைக் குறித்துரைத்தல்;

(ஊ) 27 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் நியதிகளின்படி பதிவு செய்தல், உரிமம், அதிகாரவளிப்பு அல்லது வேறு அங்கீகாரமொன்றிற்கான விண்ணப்பத்தைச் செய்வதில் விண்ணப்பப் படிவம், மற்றும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறையைக் குறித்துரைத்தல்;

(எ) 27 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக ஏற்புடையற்பாலனவாக இருக்கக்கூடிய அத்தகைய நிபந்தனைகளைக் குறித்துரைத்தல்;

(ஏ) ஈடுபடவேண்டியுள்ள வியாபாரத்தின் வகையைக் கவனத்திற்கொண்டு அதற்கான நியதிகளின்படி முறையான பதிவுசெய்தல், உரிமம், அதிகாரவளிப்பு அல்லது வேறு அங்கீகாரத்தின் வழங்குகைக்கென செலுத்தப்படற்பாலதான கட்டணத்தை 28 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்கென குறித்துரைத்தல்;

(ஐ) ஏதேனும் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்திற்கு அத்தகைய இலங்கை ரூபாவை மாற்றுவதற்கு ஏற்புடையதான நடவடிக்கைமுறையை 36 ஆம் பிரிவின் நோக்கங்களுக்கென குறித்துரைத்தல்;

(ஒ) 37 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிற்கு வெளியே இலங்கையில் இலங்கைப் பிரசையுடன் அல்லது இலங்கையில் வதிவுள்ளவரொருவருடன் வியாபாரத்தைச் செய்வதற்கு உட்கருதுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு ஏற்புடையனவான நியதிகள் மற்றும் நிபந்தனைகளையும் குறித்துரைத்தலும், உள்நாட்டுப் பொருளாதாரத்தின் நலனில், கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்புக்கு வெளியே இலங்கையிலுள்ள ஆளொருவருக்கு அல்லது கம்பெனிக்கு வழங்கமுடியாத அல்லது அளிக்கமுடியாத பண்டங்களை அல்லது சேவைகளைக் குறித்துரைத்தலும்;

(ஓ) இலங்கையில் தொழிற்படுத்தப்பட்டு பேணப்படும் வதிவுள்ளோர் வெளிநாட்டு நாணய கணக்கொன்றிற்கு இலங்கை ரூபா தவிர்ந்த குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமொன்றில் பெறப்படும் பணத்தின் பணவனுப்புதலைச் செய்வதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையை 39 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காகக் குறித்துரைத்தல்;

(ஔ)கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் சில்லறைச் செயலிடங்களில் கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்களின்மீது இலங்கைப் பிரசையினால் அல்லது வதிவுள்ளவரொருவரால் செலுத்தப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படக் கூடியவாறான ஏதேனும் அறவீட்டை 40 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காகக் குறித்துரைத்தலும், கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் சில்லறைச் செயலிடங்களை அல்லது உணவகங்கள், சினிமாக்கள், களியாட்ட வசதிகள், பொருட்களை கொள்வனவு செய்தல் வசதிகள் அல்லது வாகனத் தரிப்பிட வசதிகளைப் பயன்படுத்தும்போது இலங்கைப் பிரசையினால் அல்லது வதிவுள்ளவரொருவரால் செய்யப்பட்ட கொடுப்பனவுகளை வேறேதேனும் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்றுவதற்கு ஏற்புடையனவான நடவடிக்கைமுறையை குறித்துரைத்தலும்;

(க) இச்சட்டத்தின்கீழ் கரைகடந்த கம்பெனிகள் தொடர்பாக ஏற்புடையதாகக்கூடியவாறான நடவடிக்கைமுறை, நியதிகள் மற்றும் நிபந்தனைகளை 41 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காகக் குறித்துரைத்தல்;

(ங) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தின் கவனமுள்ள முகாமைத்துவம் மற்றும் நம்பகத்தன்மையைப் பேணுதலை உறுதிப்படுத்துவதற்கென 44 ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறான வழிகாட்டு நெறிகளைக் குறித்துரைத்தல்;

(ச) கரைகடந்த வங்கித்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உரிமங்கள் அளித்தல், அவற்றை இடைநிறுத்தல் மற்றும் இரத்துச் செய்தல், மூலதன தேவைப்பாடுகள், ஒதுக்கு நிதியங்கள், திரவச் சொத்துக்களைப் பேணுதல், நிதிசார் மற்றும் தொழிற்பாட்டு ஆபத்துகளின் முகாமைத்துவம், கம்பெனியின் தரப்படுத்தல் பற்றிய எண்பிப்பை சமர்ப்பிப்பதற்கான தேவைப்பாடு, மீறுகைகளுக்கான மட்டுப்பாடுகளும் தண்டங்களும் தொடர்பில் 45 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக ஒழுங்குவிதிகளை குறித்துரைத்தல்;

(ஞ) செயல்நுணுக்க முக்கியத்துவம்வாய்ந்த வியாபாரமொன்றிற்கான விலக்களிப்புகளை அல்லது ஊக்குவிப்புகளை வழங்குதல்மீதான வழிகாட்டு நெறிகளை 52 ஆம் பிரிவின் நோக்கங்களுக்கென குறித்துரைத்தல்;

(ட) சட்டத்தின் பாகம் X இன் நியதிகளின்படி இறையிலி அடிப்படையின்மீது குத்தகைக்காக அல்லது கைமாற்றுகைக்காகக் கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளை நிர்மாணித்தலுக்கு நடவடிக்கை முறையையும் ஏற்புடையக்கூடியவாறான வேறு தோதான கருமங்களை யும் குறித்துரைத்தல்; அத்துடன்

(ண) சட்டத்தின் பாகம் XI இன் ஏற்பாடுகளை நடைமுறைப் படுத்துவதற்காகத் தேவைப்பட்ட எல்லாக் கருமங்களையும் குறித்துரைத்தல்;

(த) அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்புக்கு வெளியே இலங்கையில் வியாபாரத்தை நடாத்துவதற்கு அனுமதிக்கப்பட்டு மிடத்தான விடயங்களில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையையும் ஏதேனும் ஏற்புடையதான மட்டுப்பாடுகளையும் 64 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்கென குறித்துரைத்தல்; அத்துடன்

(ந) ஆணைக்குழுவிற்கு மிகைக்கட்டணம் அல்லது தண்டமொன்றாக இச்சட்டத்தின் 70 ஆம் பிரிவின் நியதிகளின்படி கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் எவரேனும் ஆளினால் செலுத்தப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்பட்ட தொகைகளை விதித்துரைத்தல்.

(3) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியில் அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியில் வலுவுக்கு வருதலும் வேண்டும்.

(4) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் அது வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்றுமாத காலப்பகுதியினுள் பாராளுமன்றம் அமர்வில் இல்லாமையினால் தடுக்கப்பட்டாலொழிய, அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்தின் முன் கொண்டுவரப்படுதல் வேண்டும். அப்பட்சத்தில் அது, கூடிய விரைவில் பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும்.

(5) பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படாத ஏதேனும் அத்தகைய ஒழுங்குவிதி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) ஐந்தாம் உட்பிரிவின்கீழ் எத்தேதியில் ஏதேனும் அத்தகைய ஒழுங்குவிதி அவ்வாறு ஒழிக்கப்பட்டதாக கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

72. இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட எல்லா விதிகளும் உருவாக்கப்பட்ட மூன்று மாதங்களினுள் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

73. இச்சட்டத்திற்கான IIIஆம் அட்டவணையில் நிரலிலிடப்பட்ட சட்டவாக்கங்கள், அத்தகைய சட்டவாக்கங்களில் கையாளப்படும் விடயங்கள் இச்சட்டத்தில் ஏற்றமாற்றங்களுடன் தரப்பட்டிருக்கின்றன அல்லது மாற்றீடான சட்ட ஒழுங்கேற்பாடுகள் இச்சட்டத்தில் குறிப்பாகத் தரப்பட்டிருக்கின்றன அல்லது அத்தகைய சட்டவாக்கங்கள் தோதானவையல்ல அத்துடன் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் ஏற்புடையனவாகவிருப்பதற்கு தேவைப்படுத்தப்படவில்லை என்பதால் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் ஏற்புடைமை எதனையும் கொண்டிருத்தலாகாது.

74. இச்சட்டத்திலுள்ளதெவும், இச்சட்டத்தில் குறிப்பாக வேறுவகையில் ஏற்பாடு செய்யப்பட்டாலொழிய, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்புத் தொடர்பாக ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் ஏதேனும் ஒழுங்குபடுத்தும் அதிகாரிக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் எவ்வகையிலும் மட்டுப்படுத்துவதாகக் கருதப்படுதலாகாது.

75. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய-

“இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டம்” என்பது, 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டம் எனப் பொருள்படும்.

“ஏற்புடையதான எழுத்திலான சட்டம்” என்பது, இச்சட்டத்தில் வேறுவகையாக வெளிப்படையாக முரணாகக் குறிப்பிடப்பட்டாலொழிய, இலங்கையின் எல்லா எழுத்திலான சட்டங்களும் எனப் பொருள்படும்;

“அதிகாரமளிக்கப்பட்ட ஆள்” என்பது, எவ்வாளுக்கு இச்சட்டத்தின் நியதிகளின்படி தேவைப்படுத்தப் பட்டவாறாக பதிவுசெய்தல், உரிமம், அதிகாரவளிப்பு அல்லது வேறு அங்கீகாரம், அதில் குறிப்பிடக்கூடிய வாறான எவையேனும் நிபந்தனைகளுக்கு அமைய ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டிருக்கின்றதோ அல்லது அளிக்கப்பட்டிருக்கின்றதோ அவ்வாள் எனப் பொருள்படும்;

“வங்கித்தொழில் சட்டம்” என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டம் எனப் பொருள்படும்;

“முதலீட்டுச்சபைச் சட்டம்” என்பது, 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச்சபைச் சட்டம் எனப் பொருள்படும்;

“முதலீட்டுச்சபை” என்பது, 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச்சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச்சபை எனப் பொருள்படும்;

“வியாபாரம்” என்பது, இச்சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டவாறாக நிதிசார் அல்லது நிதிசாரா சேவைகளை வழங்குகின்ற வியாபாரமொன்று மற்றும் கரைகடந்த வியாபாரமொன்று உட்பட ஏதேனும் வகையினதான சட்டமுறையான வியாபாரம் எனப் பொருள்படும்;

“இலங்கைப் பிரசை” என்பது, (451 ஆம் அத்தியாயமான) பிரசாவுரிமைச் சட்டத்தின் கருத்தெல்லையினுள் இலங்கைப் பிரசையொருவர் எனப் பொருள்படும்;

“பொது இடப்பரப்புகள்” என்பது, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் அமைந்துள்ள-

(அ) வாய்க்கால் மற்றும் ஏரிகள்;

(ஆ) தரிப்பிடங்கள் மற்றும் குடிமைவசதி இடப்பரப்புகள்; அத்துடன்

(இ) கடற்கரைகள் மற்றும் வனப்புடைய நிலம், என்பனவும் பொதுவான இடப்பரப்பாக ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஏதேனும் வேறு இடப்பரப்பும் எனப் பொருள்படும்;

“சமூக விதிகள்” என்பது, சுமுகத்தைப் பேணுவதனையும் ஒற்றுமையான வாழிடச் சூழலை மேம்படுத்துவதனையும் உறுதிப்படுத்தும் நோக்குடன், கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் அமைந்துள்ள கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளின் அல்லது வளவுகளின் சொந்தக்காரர்களினாலும் இருப்பாட்சியாளர்களினாலும் இணங்கியொழுகப்படவுள்ளவையும் ஆணைக்குழுவினால் காலத்துக்குக்காலம் வகுத்தமைக்கப்பட்டவாறானவையுமான வழிகாட்டுநெறிகளையும் அறிவுறுத்தல்களையும் குறித்துரைக்கின்ற விதிகள் என்று பொருளாகும்;

“கம்பெனி” என்பது, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் கம்பெனியையும் அல்லது குழுமத்தையும் அல்லது ஏதேனும் சட்டம், பட்டயம், நியதிச்சட்டம் அல்லது கம்பெனியொன்றினை அமைத்துருவாக்குகின்ற அல்லது அமைத்துருவாக்கத்தை வரைவிலக்கணம் செய்கின்ற வேறு சாதனத்தின்கீழ் ஏதேனும் வேறு நியாயாதிக்கத்தில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றையும் உள்ளடக்குவதாகும்;

“கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபைச் சட்டம்” என்பது, 1973 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபைச் சட்டம் எனப் பொருள்படும்;

“கூட்டாட்சியாதன சிறுகூறு” என்பது, 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தில் கொடுக்கப்பட்டவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

“குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம்” என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் நோக்கங்களுக்கென பணச்சபையினால் “குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம்” எனத் தீர்மானிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமொன்று எனப் பொருள்படும்;

“அபிவிருத்திக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள்” என்பது, கொழும்புத் துறைமுக நகர முதன்மைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கென தேவைப்படுத்தப் பட்டவாறாக அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் கட்டுக்கோப்பை நடைமுறைப்படுத்துவதனை வசதிப்படுத்துவதற்கு கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்புத் தொடர்பானவையும் ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் சனாதிபதியினால் விதித்துரைக்கப்பட்டவையும் அல்லது கொழும்புத் துறைமுக நகரம் என்னும் விடயம் ஓர் அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படும்பட்சத்தில், அத்தகைய அமைச்சரினால் விதித்துரைக்கப்பட்டவையுமான ஒழுங்குவிதிகள் எனப் பொருள்படும்;

“அரசாங்க சந்தைப்படுத்தப்படற்பாலதான காணி” என்பது, அரசாங்கத்தினால் வதிவிட, வர்த்தக, ஓய்வு, கல்விசார், கலாசார, சமூக அடிப்படையான அபிவிருத்திகளினதும் வேறு அதையொத்த அபிவிருத்திகளினதும் பொறுப்பு முயற்சிக்கென கிடைக்கக்கூடியதாக செய்யப்பட்ட மீட்கப்பட்ட காணியின் விகிதம் எனப் பொருள்படும்;

“உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி” என்பது, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அங்கீகாரத்துடன் பணச்சபையினால் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் நியதிகளின்படி உரிமம் ஒன்று வழங்கப்பட்டுள்ள உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி எனப் பொருள்படும்;

"முதன்மைத் திட்டம்" என்பது, கொழும்புத் துறைமுக நகரத்தின் எதிர்கால அபிவிருத்தியை வழிகாட்டுவதற்கு கருத்துருதளவமைப்பை ஏற்பாடு செய்கின்ற கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் எனப் பொருள்படும்;

"பணச்சபை" என்பது, (422 ஆம் அத்தியாயமான) பணச்சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் பணச்சபை எனப் பொருள்படும்;

"வதிவற்றவர்" என்பது, வதிவுள்ளவரொருவர் அல்லாத ஆளொருவர் எனப் பொருள்படும்;

"கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரம்" என்பது, இச்சட்டத்தின் நியதிகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டாலொழிய அல்லது விதித்துரைக்கப்பட்டவாறாக இருந்தாலொழிய, இலங்கை ரூபா தவிர்ந்த ஏதேனும் குறிக்கப்பட்ட நெளிநாட்டு நாணயத்தில் செலுத்தப்படற்பாலதான, இச்சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டவாறாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினாலான வங்கித் தொழில் அல்லது நிதிசார் சேவைகளின் வழங்குகை எனப் பொருள்படும்;

"கரைகடந்த வியாபாரம்" என்பது, இச்சட்டத்தின் நியதிகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டவாறாக இருந்தாலொழிய அல்லது விதித்துரைக்கப்படக்கூடியவாறாக இருந்தாலொழிய மற்றும் ஊதியம் இலங்கை ரூபா தவிர்ந்த ஏதேனும் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் செலுத்தப்படற்பாலதாக இருக்கின்றவிடத்து இச்சட்டத்தின் நியதிகளின்படி ஏற்பாடுசெய்யப்பட்ட வாறாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் நிதிசார் சேவைகள் உட்பட சேவைகளின் வழங்குகை எனப் பொருள்படும்;

"ஆள்" என்பது, இயற்கை ஆள், கம்பெனி, பங்காண்மை, வரையறுக்கப்பட்ட பங்காண்மை மற்றும் இலங்கைச் சட்டத்தின்கீழ் அல்லது ஏதேனும் வேறு நியாயாதிக்கத்தின் சட்டத்தின்கீழ் செல்லுபடியாகத் தாபிக்கப்பட்டுள்ள மன்றமொன்றையும் உள்ளடக்கும்;

"கருத்திட்டக் கம்பெனி" என்பது, கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்தியாளர் எனப் பொருள்படும்;

"கருத்திட்டக் கம்பெனி சந்தைப்படுத்தப்படற்பாலதான காணி" என்பது, கருத்திட்டக் கம்பெனியிலான வதிவிட, வர்த்தக, பொழுதுபோக்கு மற்றும் ஓய்வு அடிப்படையிலான அபிவிருத்திகள் மற்றும் வேறு அதையொத்த அபிவிருத்திகளின் பொறுப்பேற்பதற்கென கருத்திட்ட கம்பெனிக்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் வழங்கப்பட்ட முதன்மைக் குத்தகைகள் என்ற வகையாக கருத்திட்டக் கம்பெனிக்குக் கிடைக்கக்கூடியதாக்கப்பட்ட கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் அமைந்துள்ள மீட்கப்பட்ட காணியின் அவ்விகிதம் எனப் பொருள்படும்;

"ஒழுங்குபடுத்தும் அதிகாரி" என்பது, இலங்கை மத்திய வங்கியின் பணச்சபை, கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதி, மத்திய சூழல் அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி, குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி மற்றும் அத்தகைய வேறு ஒழுங்குபடுத்தும் அதிகாரி அல்லது அங்கீகரிக்கும் அதிகாரி அத்துடன் ஏற்புடையதான ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் நியதிகளின்படி இச்சட்டத்தினால் கையாளப்பட்ட முறையான விடயங்கள் தொடர்பாக எவருக்கு தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் உரித்தாக்கப்பட்டுள்ளனவோ அல்லது குறித்தளிக்கப்பட்டுள்ளனவோ அவரையும் உள்ளடக்கும். இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகாரி, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள், அத்தகைய அதிகாரிகளுக்கு ஏற்புடையதான முறையான எழுத்திலான சட்டங்களின் நடைமுறைப்படுத்துகைக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்;

"கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதி" என்பது, கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதி அல்லது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் நியதிகளின்படி கம்பெனிகளின் பதிவுசெய்தல் பணியை பிரயோகிக்கின்ற, புரிகின்ற அல்லது நிறைவேற்றுகின்ற அத்தகைய வேறு அலுவலர் எனப் பொருள்படும்;

"வதிவுள்ளவர்" என்பது, பின்வருவன எனப் பொருள்படுவதுடன் அவற்றையும் உள்ளடக்கும் -

(அ) இலங்கையில் வதிகின்ற இலங்கைப் பிரசையொருவர்;

(ஆ) இலங்கைப் பிரசையொருவரல்லாத, ஆனால் ஆகக் குறைந்தது ஆறு மாதங்களுக்கேனும் இலங்கையில் இருந்துள்ளதுடன், இலங்கையில் தொடர்ந்திருக்கின்ற அல்லது இருப்பதற்கு உட்கருதுகின்ற தனியாளொருவர்;

(இ) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனி ஒன்று, அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழு அல்லது இலங்கையிலுள்ள ஏதேனும் குழுமம், பங்காண்மை அல்லது வேறு ஒழுங்கமைப்பு;

(ஈ) ஏதேனும் வெளிநாட்டு சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டதும் இலங்கையில் தொழிற்படு கின்றதுமான கம்பெனியொன்றின் அல்லது வேறு சட்டமுறையான ஆளின் கிளை, துணையாயது, இணைந்தது, விசாலிப்பு, அலுவலகம் அல்லது ஏதேனும் வேறு அலகு;

"பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம்" என்பது, 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம் எனப் பொருள்படும்; அத்துடன்

"நகர அபிவிருத்தி அதிகாரசபை" என்பது, 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை நகர அபிவிருத்தி அதிகாரசபை எனப் பொருள்படும்.

76. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## அட்டவணை I

(பிரிவுகள் 2 மற்றும் 65)

### கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பின் எல்லைகள் விசேட பொருளாதார வலயம்

பின்வரும் தொடுப்புப் புள்ளிகளில் மேல் மாகாணத்தில் கொழும்பில் அமைந்துள்ளதும் பரப்பளவில் 446.6153 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளதும் நில அளவைப் பணிப்பாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2019.06.11 ஆந் திகதிய CO/DSO/2019/370 ஆம் இலக்கப் படியெடுப்பில் குறித்துக்காட்டப்பட்டதும் "கொழும்புத் துறைமுக நகரம்" என அழைக்கப்பட்டு அறியப்படுவதும் காணித்துண்டங்கள் 2 முதல் 7 வரையாக அடையாளமிடப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் அக்காணித்துண்டின் எல்லைகள் பின்வருமாறு:-

| தொடுப்புப்புள்ளி-கொழும்பு மாவட்டம், கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவின் மேற்கெல்லை | கிழக்கு ஆயத் தொலைவு | வடக்கு ஆயத் தொலைவு |
|---|---|---|
| வடக்குத் தொடுப்புப் புள்ளி | 396913.476 | 492847.764 |
| தெற்கு தொடுப்புப் புள்ளி | 397077.037 | 492290.222 |

1. காணித்துண்டம் : இல. 2; நிலப்பரப்பளவு:155.8376 ஹெக்டேயர்

வடக்கு : காணித்துண்டங்கள் இல. 6, 1 - கொழும்புத் துறைமுகம் மற்றும் சைத்திய வீதி;

கிழக்கு : காணித்துண்டு இல. 1, கொழும்புத் துறைமுகம், சைத்திய வீதி, இந்து சமுத்திரம் மற்றும் காணித்துண்டு இல. 7;

தெற்கு : இந்து சமுத்திரம், காணித்துண்டங்கள் இல. 7, 6 மற்றும் 3;

மேற்கு : காணித்துண்டங்கள் இல. 6, 3 மற்றும் 6.

2. காணித்துண்டம் : இல. 3; நிலப்பரப்பளவு : 15.0933 ஹெக்டேயர்-

வடக்கு : காணித்துண்டம் இல. 2;

கிழக்கு : காணித்துண்டங்கள் இல. 2 மற்றும் 6;

தெற்கு : காணித்துண்டங்கள் இல. 6 மற்றும் 4;

மேற்கு : காணித்துண்டங்கள் இல. 4 மற்றும் 6.

3. காணித்துண்டம் : இல. 4; நிலப்பரப்பளவு : 113.5311 ஹெக்டேயர்

வடக்கு : காணித்துண்டங்கள் இல. 6 மற்றும் 3;

கிழக்கு : காணித்துண்டங்கள் இல. 3 மற்றும் 6;

தெற்கு : காணித்துண்டங்கள் இல. 6, 5 மற்றும் 6;

மேற்கு : காணித்துண்டங்கள் இல. 6, 5 மற்றும் 6.

4. காணித்துண்டம் : இல. 5; நிலப்பரப்பளவு : 14.7856 ஹெக்டேயர்

வடக்கு : காணித்துண்டங்கள் இல. 6 மற்றும் 4;

கிழக்கு : காணித்துண்டங்கள் இல. 6 மற்றும் 4;

தெற்கு : காணித்துண்டம் இல. 6;

மேற்கு : காணித்துண்டம் இல. 6.

5. காணித்துண்டம் : இல. 6; நிலப்பரப்பளவு : 101.1038 ஹெக்டேயர்

வடக்கு : காணித்துண்டங்கள் இல. 7, 1, 2, 3, 4, 5, 4, 3 மற்றும் 2;

கிழக்கு : காணித்துண்டங்கள் இல. 1, 2, 3, 4, 5, 2 மற்றும் 7;

தெற்கு : காணித்துண்டங்கள் இல. 2 மற்றும் 7;

மேற்கு : காணித்துண்டங்கள் இல. 2 மற்றும் 7.

6. காணித்துண்டம் : இல. 7; நிலப்பரப்பளவு : 46.2639 ஹெக்டேயர்

வடக்கு : இந்து சமுத்திரம், காணித்துண்டங்கள் இல. 1, 6மற்றும் 2;

கிழக்கு : காணித்துண்டங்கள் இல. 1, 6, 2 மற்றும் இந்து சமுத்திரம்;

தெற்கு : இந்து சமுத்திரம்;

மேற்கு : இந்து சமுத்திரம்;

## அட்டவணை II

(பிரிவுகள் 52 மற்றும் 53)

**விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புகள் எந்தச் சட்டவாக்கங்களிலிருந்து அல்லது எந்தச் சட்டவாக்கங்களின்கீழ் வழங்கப்படக்கூடுமோ அந்தச் சட்டவாக்கங்கள்**

1. 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்
2. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச்சட்டம்
3. 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம்
4. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச்சட்டம்

5. 1989ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித்தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
6. (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டம்
7. 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமானநிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்
8. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்
9. 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டம்
10. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்
11. (267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச்சட்டம்
12. 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்
13. 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத்தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம்

**அட்டவணை III** (பிரிவு 73)

**கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் ஏற்புடைமையைக் கொண்டிராத சட்டவாக்கங்கள்**

1. 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்
2. (252 ஆம் அத்தியாயமான) மாநகரசபைக் கட்டளைச்சட்டம்
3. 2000 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, இலங்கை வா்த்தக மத்தியஸ்த நிலையச் சட்டம்
4. (269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம்
5. 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்
6. 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, பகிரங்க ஒப்பந்தங்கள் சட்டம்
7. 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டம்

## 2021 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தச்) சட்டம்

[2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

**2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க,**

நிதி முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், 2021, சனவரி 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருப்படுதலும் வேண்டும்.

2. இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

   (அ) அப்பிரிவின் (உ) என்னும் பந்தியில், "பத்து சதவீதத்தை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பதினைந்து சதவீதத்தை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

   (ஆ) அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில், "2020, சனவரி 1 ஆம்" என்னும் எண்களுக்கும் சொற்களுக்கும் பதிலாக, "2030, சனவரி 1 ஆம்" என்னும் எண்களையும் சொற்களையும் இடுவதன் மூலமும்.

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2021 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கொரோனா வைரஸ் தொற்றுநோய் 2019 (கொவிட்-19) (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்

[2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

**கொவிட்-19 சூழ்நிலைகளின் காரணமாக விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் புரியப்படுவதற்கென சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட குறித்தசில வழக்குகளைப் புரிவதற்கு எந்த நிலைமைகள் தொடர்பில் ஆட்கள் இயலாதிருந்தனரோ அந்த நிலைமைகள் தொடர்பிலான தற்காலிக ஏற்பாடுகளை செய்வதற்கும்; கொவிட்-19 சூழ்நிலைகள் காரணமாக நீதிமன்றம் ஒன்று தொழிற்பட முடியாதிருக்கு மிடத்து மாற்று நீதிமன்றங்களைக் குறித்தளிப்பதற்கும்; கொரோனா வைரஸ் தொற்றுநோயை 2019 (கொவிட்-19) கட்டுப்படுத்த வசதியளிப்பதற்கு தொலை தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நீதிமன்ற நடவடிக்கைகளை நடாத்துவதற்கும் மற்றும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடை நேர்விளைவான கருமங்களுக்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. (1) இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கொரோனா வைரஸ் தொற்றுநோய் 2019 (கொவிட்-19) (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். இச்சட்டத்தின் ஏற்பாடுகள் 2020 ஆம் ஆண்டு மாச்சு 1 ஆந் தேதியிலிருந்து தொடங்கும் இரண்டு ஆண்டு காலப்பகுதி ஒன்றிற்கு நடைமுறையில் இருத்தல் வேண்டும்.

(2) அமைச்சர் ஆனவர் இச்சட்டம் நடைமுறையில் இருக்கும் காலப்பகுதி காலாவதியாவதற்கு முன்னர் ஒருமாத காலத்தினுள் ஏதேனும் நேரத்தில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் மேலும் இச்சட்டத்தின் நடைமுறையை மேலுமொரு காலப்பகுதிக்கு நீடிக்கலாம்: ஆயினும், எவ்வாறாயினும் ஏதேனும் நீடிப்பின் மொத்தக் காலப்பகுதி அத்தகைய நீடிப்புத்தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளை விஞ்சுதலாகாது.

## பாகம் I

### விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதிகளுடன் ஒத்திசைவதற்கு இயலாமலிருப்பதற்கான நிவாரணம்

2. (1) ஆளொருவர் ஏதேனும் கொவிட் - 19 சூழ்நிலை காரணமாக-

(அ) அத்தகைய நோக்கத்திற்காக சட்டத்தினால் விதித்துரைக் கப்பட்ட காலப்பகுதியினுள் ஏதேனும் வழக்கு விண்ணப்பம், மேன்முறையீடு அல்லது வேறு சட்ட நடவடிக்கையை தொடருவதிலிருந்து அல்லது கோப்பிடுவதிலிருந்து தடுக்கப்பட்டுள்ளார்; அல்லது

(ஆ) விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றினுள் செய்துகொள்வதற்கு அல்லது புரியப்படுவதற்கு சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்ற ஏதேனும் செயலை புரிவதிலிருந்து தடுக்கப்பட்டுள்ளார் என ஏதேனும் நீதிமன்றம், நியாயசபை அல்லது சட்டத்தினால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் அதிகாரசபை திருப்திப்படுமிடத்து, அத்தகைய நோக்கத்திற்காக சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்ட காலம் கழிவது எவ்வாறிருப்பினும் பந்தி (அ) அல்லது (ஆ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட வழக்கு நடவடிக்கை, விண்ணப்பம், மேன்முறையீடு, வேறு சட்ட நடவடிக்கை அல்லது செயலை அனுமதிப்பதற்கு, ஏற்றுக்கொள்வதற்கு அல்லது ஏற்றுக் கவனிப்பதற்கு அத்தகைய நீதிமன்றம் நியாயசபை அல்லது சட்டத்தினால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் அதிகாரசபை தகுதியானதாக இருத்தல் வேண்டுமென்பதுடன், 9 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, எந்தக் காலப்பகுதியினுள் அத்தகைய ஆள் அத்தகைய கொவிட்-19 சூழ்நிலைக்கு உட்பட்டிருந்தாரோ அந்தக் காலப்பகுதி சொல்லப்பட்ட விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியைக் கணிப்பதில் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட நிவாரணம் எதுவும் எந்த விண்ணப்பத்திற்கு அல்லது மேன்முறையீட்டுக்கு பின்வரும் விதிகள்

(i) 2020, மே 6ஆந் தேதிய 2174/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2020ஆம் ஆண்டு உயர் நீதிமன்ற (தற்காலிக ஏற்பாடுகள்) விதிகள்; அல்லது

(ii) 2021, சனவரி 21ஆந் தேதிய 2211/ 56 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற (தற்காலிக ஏற்பாடுகள்) விதிகள்;

(iii) 2020 ஆண்டு மே 12 ஆந் தேதிய 2175/ 2 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2020 ஆம் ஆண்டு மேன்முறையீட்டு நீதிமன்ற (அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரை யினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்திலிருந்தான மேன்முறையீட்டுக்கான நடவடிக்கைமுறை) (தற்காலிக ஏற்பாடுகள்) விதிகள்; அல்லது

(iv) 2021 ஆம் ஆண்டு சனவரி 21 ஆந் தேதிய 2211/ 56 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் மேன்முறையீட்டு நீதிமன்ற (அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்திலிருந்தான மேன்முறையீடுகளுக்கான நடவடிக்கைமுறை (தற்காலிக ஏற்பாடுகள்) விதிகள்;

(ஆ) ஏதேனும் கொவிட்-19 சூழ்நிலை தொடர்பில் நிவாரணமொன்றாக ஏதேனும் காலத்தினை விலக்காக அளிக்கின்ற, இச்சட்டத்தின் நடைமுறைக் காலத்தினுள் அரசியலமைப்பின் 136 ஆம் உறுப்புரையின்கீழ் ஆக்கப்படக்கூடியவாறான உயர்நீதிமன்ற விதிக்கு அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற விதிக்கு ஏற்புடைய தாகின்ற ஏதேனும் விண்ணப்பம் அல்லது மேன்முறையீடு தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் நிவாரணம் ஏற்புடையதாத லாகாது.

## பாகம் II

### மாற்று நீதிமன்றங்களின் பெயர்குறித்தல்

3. (1) 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 46 ஆம் மற்றும் 47 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளிற்கு அமைய, ஏதேனும் முதனிலை நீதிமன்றங்களுக்கு சாதாரண தொழிற்பாடு ஏதேனும் கொவிட்-19 சூழ்நிலை காரணமாக சீர்குலைந்துள்ள விடத்து, நீதிச்சேவை ஆணைக்குழுவானது கொவிட்-19 சூழ்நிலை காணப்படுகின்ற அக்காலப்பகுதிக்கு அத்தகைய நீதிமன்றத்திற்குப் பதிலாக மாற்று நீதிமன்றம் ஒன்றாக ஒருப்பாட்டு நியாயாதிக்கத்தைக் கொண்ட மிகக் கிட்டிய நீதிமன்றம் ஒன்றை பெயர்குறிக்கலாம். அத்தகைய முதனிலை நீதிமன்றத்தில் அல்லது கோப்பிடப்பட்ட அல்லது அதனால் கவனத்திற்கொள்ளப்பட்ட ஏதேனும் வழக்கு, குற்றவழக்கு, வழக்குநடவடிக்கை அல்லது விடயம் அல்லது கோப்பிடப்பட்ட ஏதேனும் புதிய வழக்கு, குற்றவழக்கு, வழக்குநடவடிக்கை அல்லது விடயம் அவ்வாறு பெயர்குறிக்கப்பட்ட நீதிமன்றத்தினால் கவனத்திற்கெடுக்கப்படுதல் வேண்டும் அல்லது கேட்கப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வழக்கு, குற்றவழக்கு, வழக்கு நடவடிக்கை அல்லது விடயம் பற்றி மாற்றம் எதுவும் -

(அ) அத்தகைய ஏதேனும் முதனிலை நீதிமன்றம் அத்தகைய வழக்கை, குற்றவழக்கை, வழக்கு நடவடிக்கையை அல்லது தீர்புக்கான விடயத்தை கட்டளை அல்லது தீர்ப்பு விளம்பலை ஒதுக்கி வைத்துள்ளவிடத்து; அல்லது

(ஆ) அத்தகைய வழக்கின், குற்றவழக்கின், வழக்கு நடவடிக்கையின் அல்லது விடயத்தின் அனைத்து கேட்புகளும் அத்தகைய முதனிலை

நீதிமன்றத்தின் முன்னர் முடிவுசெய்யப்பட்டிருக்குமிடத்து, செய்யப்படுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட மாற்று நீதிமன்றத்தில் கோப்பிடப்பட்ட அல்லது அதனால் கவனத்திற் கொள்ளப்பட்ட வழக்கு, குற்றவழக்கு, நடவடிக்கை அல்லது விடயமொன்று மாற்று நீதிமன்றத்தின் தலைமைதாங்கும் நீதிபதியினால் அத்தகைய தொடக்க நீதிமன்றத்தின் சாதாரண பணிகளை மீளத் தொடங்குவதன் மேல், அத்தகைய வழக்குத் தொடர்பாக முன்னர் பிரயோகிக்கப்பட்ட நியாயாதிக்கத்தினை முதனிலை நீதிமன்றத்திற்கு மாற்றலாம்:

ஆயின், எவ்வாறாயினும் இவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வழக்கு, குற்றவழக்கு, வழக்கு நடவடிக்கை அல்லது விடயம் பற்றிய மாற்றம் எதுவும் -

(அ) மாற்று நீதிமன்றம் அத்தகைய வழக்கை, குற்றவழக்கை, வழக்கு நடவடிக்கையை அல்லது தீர்ப்புக்கான விடயத்தை, கட்டளையை அல்லது வேறு தீர்ப்பு விளம்பலை ஒதுக்கிவைத்துள்ளவிடத்து; அல்லது

(ஆ) அத்தகைய வழக்கின், குற்றவழக்கின், வழக்கு நடவடிக்கையின் அல்லது விடயத்தின் கேட்புகள் யாவும் அத்தகைய மாற்று நீதிமன்றம் முன்னர் முடிவு செய்துள்ளவிடத்து, செய்யப்படுதலாகாது.

## பாகம் III

### தொலை தொடர்பாடல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி நீதிமன்ற நடவடிக்கை முறைகளை நடாத்துதல்

4. (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் அடங்கியுள்ளவை எது எவ்வாறிருப்பினும், முதனிலை நீதிமன்றத்தின் முன்னரான ஏதேனும் வழக்கு, விண்ணப்பம், மேன்முறையீடு அல்லது வேறு நடவடிக்கைமுறைகளில் ஏதேனும் கொவிட்-19 சூழ்நிலை காரணமாக-

(அ) எவரேனும் ஆள் நீதிமன்றத்தில் தோன்றுவதற்கு இயலாதவிடத்து; அல்லது

(ஆ) நீதிமன்ற நடவடிக்கைமுறைகள் சாதாரண நடவடிக்கை முறையின்கீழ் நடாத்துவதற்கு இயலாதவிடத்து,

அத்தகைய நீதிமன்றத்தின் முன்னரான அத்தகைய வழக்கு, விண்ணப்பம், மேன்முறையீடு அல்லது வழக்கு நடவடிக்கை தொலைத்தொடர்பு தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட நேரலைக் காணொளி அல்லது நேரலைத் தொலைக்காட்சி இணைப்புப் போன்ற வழிமுறைகளினால் நடாத்தப்படலாம்.

(2) (அ) 2021 ஆம் ஆண்டு சனவரி 29 ஆந் தேதிய 2212/ 54 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் உயர்நீதிமன்ற (இலத்திரனியல் கோப்பிடுதல் மற்றும் அவசர எண்ணிமைமாயக் கேட்புகள் (விசேட ஏற்பாடுகள்) விதிகளின்;

(ஆ) 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி 23 ஆந் தேதிய 2216/ 8 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டு மேன்முறையீட்டு நீதிமன்ற (இலத்திரனியல் கோப்பிடுதல் மற்றும் அவசர எண்ணிமை மாயக் கேட்புகள்) (விசேட ஏற்பாடுகள்) விதிகளின்; அத்துடன்

(இ) தொலைத்தொடர்பு தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்தி நீதிமன்ற நடவடிக்கை முறைகளை நடாத்துவது தொடர்பில் இச்சட்டம் நடைமுறையி லிருக்கும் காலப்பகுதியினுள் அரசியலமைப்பின் 136 ஆம் உறுப்புரையின்கீழ் ஆக்கப்படக்கூடியவாறான வேறேதேனும் உயர்நீதிமன்ற விதிகளின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றகளின்,

ஏற்பாடுகள் ஆனவை (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தின் முன்னர் நடாத்தப்படும் ஏதேனும் வழக்கு, விண்ணப்பம் மேன்முறையீடு அல்லது வழக்கு நடவடிக்கை தொடர்பில் சாத்தியமானவளவிற்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

## பாகம் IV

### பொது

5. இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் நிவாரணம் ஒன்றாக விலக்களிக்கப்பட்ட ஏதேனும் காலப்பகுதி பன்னிரெண்டு மாத காலப்பகுதி ஒன்றை விஞ்சுதலாகாது:

ஆயினும், நிவாரணம் ஒன்றாக விலக்களிக்கப்படக்கூடிய பன்னிரெண்டு மாதங்களை விஞ்சுகின்ற காலப்பகுதி நியாயமானதும் ஒப்புரவானதும் என ஏதேனும் சட்டத்தினால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்ட நீதிமன்றம், நியாயசபை அல்லது வேறு ஏதேனும் அதிகாரசபை திருப்திப்படுமிடத்து, அவ்வாறு தவிர்க்கப்படலாம் என்பதுடன், அவ்வாறு விலக்களிக்கப்பட்ட காலப்பகுதி மேலும் ஆறு மாத காலப்பகுதி ஒன்றை விஞ்சுதலாகாது:

ஆயினும், மேலும் நிவாரணம் ஒன்றாக விலக்களிக்கப்பட்ட காலப்பகுதி மொத்தத்தில் பதினெட்டு மாதங்களை விஞ்சுதலாகாது.

6. ஏதேனும் கொவிட்-19 சூழ்நிலை காரணமாக 2 ஆம் பிரிவின் நோக்கத்திற்காக விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியுடன் இணங்கியொழுகுவதற்கு இயலாதிருக்கின்றதென்னும் எண்பிக்கும் பொறுப்பானது அத்தகைய பிரிவின்கீழ் நிவாரணத்திற்காக விண்ணப்பத்தைச் செய்கின்ற திறத்தவர்மீதானதாதல் வேண்டும்.

7. (1) ஏதேனும் கொவிட் - 19 சூழ்நிலை தொடர்பில் அரசாங்கத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் வழிகாட்டுநெறி, பணிப்பு, சுற்றுநிருபம், அறிவித்தல் அல்லது முடிபு அச்சிடப் பட்டதாயினுஞ்சரி அல்லது இலத்திரனியல் வடிவத்திலாயினுஞ்சரி மேலதிக எண்பிப்பு இன்றி இச்சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும் வழக்கில், விண்ணப்பத்தில், மேன்முறையீட்டில் அல்லது வேறு சட்டவழக்கு நடவடிக்கையில் முதற்றோற்றளவிலான சான்றாக ஏல்தகவுடையதாதல் வேண்டும்.

(2) அத்தகைய வழக்கிற்கான விண்ணபத்திற்கான மேன்முறையீட்டுக்கான அல்லது வேறு சட்ட வழக்கு நடவடிக்கைக் கான திறத்தவர்

ஒருவா் சான்றாக அத்தகைய வழிகாட்டுநெறி, பணிப்பு, சுற்றுநிருபம், அறிவித்தல் அல்லது முடிபு என்பவற்றின் ஏல்தகவை பிணக்கிற்கு உட்படுத்துகின்றவிடத்து, எண்பிப்பு பொறுப்பு அத்தகைய ஏல்தகவை பிணக்கிற்கு உட்படுத்துகின்ற திறத்தவா் மீதாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கத்திற்காக, “அரசாங்கம்” என்பது கொவிட் - 19 தொடா்பாக (222 ஆம் அத்தியாயமான) தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியில் வரையறுக்கப்பட்டவாறான எவரேனும் முறையான அதிகாரி எனப் பொருள்படும்.

8. இச்சட்டத்தின் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி-

“கொவிட்-19” என்பது, (222 ஆம் அத்தியாயமான) தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்புத் தொடா்பான கட்டளைச் சட்டத்தின்கீழ் 2020, மாா்ச் 20 ஆந்தேதிய 2167/ 18 ஆம் இலக்க, அதிவிசேட வா்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல்மூலம் தனிமைப்படுத்தத்தகு நோயொன்றாக வெளிப்படுத்தப்பட்ட கொரோனா வைரஸ் தொற்றுநோய் 2019 (கொவிட்-19) எனப் பொருள்படும்;

“கொவிட் 19 சூழ்நிலை” பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது-

(அ) கொவிட் -19; அல்லது

(ஆ) பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட சூழ்நிலைகளிலிருந்து எழுகின்ற அல்லது அதன் விளைவாந்தன்மையினவான வேறு ஏதேனும் சூழ்நிலை;

“அமைச்சா்” என்பது, அரசியலமைப்பின் உறுப்புரை 44 அல்லது 45 இன்கீழ் இச்சட்டத்தில் குறித்தளிக்கப்பட்ட அமைச்சா் எனப் பொருள்படும்;

9. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2021 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, நிதிச் சட்டம்

[2021 ஆம் ஆண்டு செத்தெம்பா் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

**குறித்தசில சட்டங்களின்கீழ் வெளிப்படுத்துவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட வெளிப்படுத்தப்படாத வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைகளையும் வருமானத்தையும் சொத்துக்களையும் தன்னிச்சையாக வெளிப்படுத்துவதற்கு ஆட்களை இயலச்செய்வதற்கும்; அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைகளின்மீது, வருமானத்தின்மீது மற்றும் சொத்துக்களின்மீது வரியொன்றை விதிப்பதற்காக ஏற்பாடு செய்வதற்கும்; அத்தகைய ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான வழங்குகையை, வருமானத்தை அல்லது சொத்தைத் தன்னிச்சையாக வெளிப்படுத்தும் ஆட்களுக்குக் குறித்துரைக்கப்பட்ட சட்டங்களின்கீழான புலனாய்வு, குற்றவழக்கு மற்றும் தண்டங்களிலிருந்தான பொறுப்புக்கெதிராக நட்டோத்தரவாதமளிப்பதற்கும்; குறித்துரைக்கப்பட்ட சட்டங்களின்கீழ் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைகளையும் வருமானத்தையும் சொத்துக்களையும் ஏலவே வெளிப்படுத்தியிருந்த ஆட்களுக்குக் குறித்த சில சலுகைகளை வழங்குவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடா்புபட்டவையும் அவற்றின் இடை நோ்விளைவானவையுமான கருமங்களுக்கானதுமான தொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, நிதிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

### பாகம் I

### தன்னிச்சையான வெளிப்படுத்துகைமீது வரிவிதித்தல்

2. (1) இப்பாகத்தின் ஏற்பாடுகள், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, (இதனகத்துப்பின்னா் இப்பாகத்தில் “வெளிப்படுத்தப்படாத வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகை, வருமானம் அல்லது சொத்து” எனக் குறிப்பீடுசெய்யப்படுகின்றதும்) இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வெளிப்படுத்தப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்டதுமான வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகையின், வருமானத்தின் அல்லது சொத்தின் ஏதேனும் தொகையை 2020, மாச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னா் முடிவடைந்த ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கான ஒரு சோ்பெறுமதி வரி விபரத்திரட்டில் அல்லது 2020, மாச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதற்குமுன்னா் முடிவடைந்த ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கான ஒரு வருமான விபரத்திரட்டில் வெளிப்படுத்தியிராதவரான எவரேனுமாளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) இப்பாகத்தின் ஏற்பாடுகள் -

(அ) வெளிப்படுத்தப்படாத ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகை, வருமானம் அல்லது சொத்துத் தொடா்பாக அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எந்த ஆள் தொடா்பாகப் புலனாய்வுகள் அல்லது சட்ட வழக்கு நடவடிக்கைகள் முடிவுறாதுள்ளனவோ அந்த எவரேனுமாளுக்கு;

(ஆ) வெளிப்படுத்தப்படாத ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகை, வருமானம் அல்லது சொத்துத் தொடா்பாக அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழான தவறொன்றுக்குக் குற்றத்தீா்ப்பளிக்கப்பட்டுள்ள எவரேனுமாளுக்கு; அல்லது

(இ) அட்டவணை I இல் மற்றும் அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் முறையான சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எவரேனுமாளினால் வைத்திருக்கப்பட்ட வெளிப்படுத்தப்படாத எந்த வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகை, வருமானம் அல்லது சொத்துத் தொடா்பில் வரிமதிப்பீடொன்று செய்யப்பட்டுள்ளதோ வெளிப்படுத்தப்படாத அந்த வரிவிதிக்கப்படற் பாலதான வழங்குகையின், வருமானத்தின் அல்லது சொத்தின் ஏதேனும் தொகைக்கு, ஏற்புடையனவாதலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், (இ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள், அப்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒரு வரிமதிப்பீட்டைச் செய்வதில்

கணக்குக்கெடுக்கப்படாதிருந்துள்ள வெளிப்படுத்தப்படாத வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகையின், வருமானத்தின் அல்லது சொத்தின் ஏதேனும் தொகைக்கு ஏற்புடையனவாதலாகாது.

(3) இரண்டாம் உட்பிரிவின் (அ), (ஆ) அல்லது (இ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளாகவிராதவரும் (1)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்டவருமான ஆளொவ்வொருவரும் இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் "இப்பாகம் ஏற்புடையதாகின்ற ஆள்" எனக் குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

3. (1) இப்பாகம் ஏற்புடையதாகின்ற ஆளொருவர், (2)ஆம், (3)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, வெளிப்படுத்தப்படா வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைக்கு, வருமானத்துக்கு அல்லது சொத்துக்குச் சமமான தொகையொன்றை முதலீடுசெய்தல் வேண்டும் அல்லது வைப்பிலிடுதல் வேண்டும்.

(2) இப்பாகம் ஏற்புடையதாகின்ற ஆளொருவர் வெளிப்படுத்தப்படாத வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைக்கு, வருமானத்துக்கு அல்லது சொத்துக்குச் சமமான தொகையொன்றை முதலீடுசெய்வதற்கு உட்கருதினால், அவர்

(அ) அத்தகைய தொகையை அவர் உடனடியாக முதலீடு செய்வதற்கு இயன்றவராக இருக்குமிடத்து -

(i) ஒரு வதிவுள்ள கம்பெனியினால் வழங்கப்பட்ட பங்குகளை;

(ii) இலங்கை அரசாங்கத்தின் சார்பில் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களை அல்லது திறைசேரி முறிகளை;

(iii) இலங்கையில் வதிவுள்ளவொரு கம்பெனியினால் வழங்கப்பட்ட எவையேனும் விலைகூறப்பட்ட தனிசுப் பிணைப்பொறுப்புக்களை; அல்லது

(iv) இலங்கையிலுள்ள ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை,

இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் ஆனால் 2022, மாச்சு 31 ஆந் தேதிக்கு முன்னர் கொள்வனவு செய்தல் வேண்டும்.

(ஆ) இலங்கை ரூபாய்களிலாயினுஞ்சரி அல்லது வெளிநாட்டு நாணயத்திலாயினுஞ்சரி காசாகக் கிடைக்கக்கூடியதான அத்தகைய தொகையை அவர் உடனடியாக முதலீடு செய்வதற்கு இயலாதவராக இருக்குமிடத்து, அவர் அத்தகைய தொகையை இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் ஆனால் 2022, மாச்சு 31 ஆந் தேதிக்கு முன்னர் ஒரு வங்கிக் கணக்கில் வைப்பிலிடுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், இச்சட்டம் தொடங்கும் தேதிக்குமுன்னர் பின்வருவனவற்றைச் செய்துள்ளவரான இப்பாகம் ஏற்புடையதாகின்ற ஆளொருவருக்கு ஏற்புடையனவாதலாகாது:-

(அ) பின்வருவனவற்றைக் கொள்வனவுசெய்வதற்கு வெளிப்படுத்தப்படாத வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைக்கு, வருமானத்துக்கு அல்லது சொத்துக்குச் சமமான தொகையொன்றைப் பயன்படுத்தியுள்ளவர்:-

(i) ஒரு வதிவுள்ள கம்பெனியினால் வழங்கப்பட்ட பங்குகள்;

(ii) இலங்கை அரசாங்கத்தின் சார்பில் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் அல்லது திறைசேரி முறிகள்;

(iii) இலங்கையில் வதிவுள்ளவொரு கம்பெனியினால் வழங்கப்பட்ட எவையேனும் விலைகூறப்பட்ட தனிசுப் பிணைப்பொறுப்புக்கள்; அல்லது

(iv) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம்; அல்லது

(ஆ) வெளிப்படுத்தப்படாத வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைக்கு, வருமானத்துக்கு அல்லது சொத்துக்குச் சமமான தொகையொன்றை ஒரு வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டுள்ளவர்.

4. (1) இப்பாகம் ஏற்புடையதாகின்ற ஆளொருவர், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 5 ஆம் பிரிவின்கீழான வெளிப்படுத்துகையைச் செய்யுமுன்னர் "தன்னிச்சையான வெளிப்படுத்துகைமீதான வரி" எனவழைக்கப்படவேண்டிய வரியொன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

(2) இப்பாகம் ஏற்புடையதாகின்ற ஆளொருவர்

(அ) 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையில் அசைவற்ற அல்லது அசைவுள்ள ஆதனம் அல்லாத வெளிப்படுத்தப்படாத ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான வழங்குகையை, வருமானத்தை அல்லது சொத்தை வெளிப்படுத்துவதற்கு உட்கருதுமிடத்து, அவர் 3 ஆம் பிரிவின்கீழ் முதலீடு செய்யப்பட்ட அல்லது வைப்பிலிடப்பட்ட அத்தகைய தொகையின் அல்லது வருமானத்தின் அல்லது அத்தகைய சொத்தின் ஆகுசெலவின்மீது ஒருசதவீதத்தில் தன்னிச்சையான வெளிப்படுத்துகைமீதான வரியைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ளார்; அல்லது

(ஆ) 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையில் ஏதேனும் அசைவற்ற அல்லது அசைவுள்ள ஆதனத்தை வெளிப்படுத்துவதற்கு உட்கருதுமிடத்து, வெளிப்படுத்துகைத் தேதியன்று அத்தகைய ஆதனத்தின் சந்தைப் பெறுமதியின்மீது ஒருசதவீதத்தில் தன்னிச்சையான வெளிப்படுத்துகை மீதான வரியைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ளார்.

(3) இப்பாகம் ஏற்புடையதாகின்ற ஆளொருவரினால் செலுத்தப்பட்ட தன்னிச்சையான வெளிப்படுத்துகைமீதான வரியின் ஏதேனும் தொகை, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கருத்துக்குட்பட ஒரு வரி வரவாக அல்லது ஒரு செலவினமாகக் கருதப்படுதலாகாது அத்துடன் மீளளிக்கப்படத்தக்கதாக இருத்தலாகாது.

5. (1) மூன்றாம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்டவாறு வெளிப்படுத்தப்படாத ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகையை, வருமானத்தை அல்லது சொத்தை முதலீடுசெய்துள்ளவரும் அல்லது வைப்பிலிட்டுள்ளவரும் 4 ஆம் பிரிவிற்குறித்துரைக்கப்பட்டவாறு தன்னிச்சையான

வெளிப்படுத்துகைமீதான வரியைச் செலுத்தியுள்ளவரும் இப்பாகம் ஏற்புடையதாகின்றவரும் (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் “வெளிப்படுத்துநர்” எனக் குறிப்பீடுசெய்யப்படுகின்றவருமான) எவரேனுமாள், 2022, மாச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர், (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகளுக்கமைய, சொத்தின் சொத்தாண்மை, கொள்ளுதற் தேதி மற்றும் ஆகுசெலவு அல்லது சந்தைப்பெறுமதி என்பவற்றை எண்பிப்பதற்கான ஆவணங்களுடன் சேர்த்து பொருளளவில் இதற்கான அட்டவணை V இன் பாகம் I இல் அல்லது பாகம் II இல் குறித்துரைக்கப்பட்ட இயைபான படிவத்தில், வெளிப்படுத்தப்படாத ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகை, வருமானம் அல்லது சொத்துத் தொடர்பான வெளிப்படுத்துகையொன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை பயனுற நடைமுறைப்படுத்துவதற்காக, ஆணையாளர் தலைமையதிபதி இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதியிலிருந்து ஒரு வாரத்தினுள் செலுத்துகை முறையையும் வெளிப்படுத்துகையைக் கோப்பிடுவதையும் குறித்துரைத்து அவசியமான வழிகாட்டுநெறிகளை வழங்கலாம்.

(3) (அ) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையொன்றைப் பெறுவதன்மேல், ஆணையாளர் தலைமையதிபதி அத்தகைய வெளிப்படுத்துகையானது இச்சட்டத்துக்கிணங்க உள்ளதா என்பதைச் சரிபார்த்தல் வேண்டும்.

(ஆ) வெளிப்படுத்துகையானது இச்சட்டத்துக்கிணங்க உள்ளவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி வெளிப்படுத்துகையை எழுத்துமூலம் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், அவ்வெளிப்படுத்துகை பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் வெளிப்படுத்துநருக்கு அத்தகைய ஏற்புப்பற்றி அறிவித்தலும் வேண்டும்.

(இ) வெளிப்படுத்துகையானது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க இராதவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி வெளிப்படுத்துகையை நிராகரித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளிப்படுத்துகை பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் அவரது நிராகரிப்புக்கான காரணங்களை வெளிப்படுத்துநருக்கு எழுத்துமூலம் அறிவித்தலும் வேண்டும்.

(ஈ) ஆணையாளர் தலைமையதிபதி, (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்டவாறாக முப்பது நாட்களுக்குள் வெளிப்படுத்துநருக்கு அறிவிக்கத்தவறின், வெளிப்படுத்துகையானது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் நியதிகளின்படி எந்த வெளிப்படுதுநரின் வெளிப்படுத்துகை நிராகரிக்கப்பட்டதோ அந்த எவரேனும் வெளிப்படுத்துநர், ஆணையாளர் தலைமையதிபதியின் முடிபைப் பெற்றதிலிருந்து முப்பது நாட்களுக்குள், (3) ஆம் உட்பிரிவின் கீழான ஆணையாளர் தலைமையதிபதியின் முடிபில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் குறைபாடுகளுக்குப் பரிகாரமளித்து புதிய வெளிப்பத்துகையொன்றைச் சமர்ப்பிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையில் பொய்யான அல்லது பிழையான தகவல்களை வழங்குகின்ற எவரேனும் வெளிப்படுத்துநர், அத்தகைய வெளிப்படுத்துகை (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டமை எவ்வாறிருப்பினும், 6 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட விடுபாட்டுரிமைக்கு உரித்துடையவராதலாகாது.

6. (1) ஐந்தாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் எந்த வெளிப்படுத்துநரின் வெளிப்படுத்துகை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதோ மற்றும் 4 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்டவாறு தன்னிச்சையான வெளிப்படுத்துகைமீதான வரியை அவர் செலுத்தியுள்ளாரோ அந்த வெளிப்படுத்துநர்-

(அ) 2020, மாச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பாகவும் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையில் வெளிப்படுத்தப்பட்ட வருமானம் அல்லது சொத்துத் தொடர்பாகவும் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டம் தவிர, இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழான;

(ஆ) அத்தகைய வரி அத்தகைய வெளிப்படுத்துநரினால் சேகரிக்கப்பட்டிருந்தாலொழிய, 2020, மாச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் முடிவடைகின்ற ஏதேனும் காலப்பகுதியின் ஏதேனும் ஆண்டு தொடர்பாகவும் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையில் வெளிப்படுத்தப் பட்ட வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைகளின் தொகை தொடர்பாகவும் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழான,

ஏதேனும் வரியை, தண்டத்தை அல்லது வட்டியைச் செலுத்து வதற்கான பொறுப்பிலிருந்து அல்லது ஏதேனும் புலனாய்விலிருந்து அல்லது குற்றவழக்கிலிருந்து முழு விடுபாட்டுரிமையையும் துய்ப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) ஐந்தாம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, ஆணையாளர் தலைமையதிபதி மேலே குறித்துரைக்கப்பட்டவாறான முழு விடுபாட்டுரிமையும் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனும் வெளிப்படுத்துநருக்கு வழங்கப்படுவதனை உறுதிப் படுத்துதல் வேண்டும்.

7. (1) ஆணையாளர் தலைமையதிபதி அல்லது உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் எவரேனும் அலுவலர், ஒரு வெளிப்படுத்துநரின் ஆளடையாளம் மற்றும் இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஒரு வெளிப்படுத்துகையில் அடங்கியுள்ள ஏதேனும் கருமம் அல்லது விடயம் தொடர்பில் அலுவலகமுறையிலான இரகசியத்தைப் பேணிக்காத்தலும் பேணிக்காத்தலில் உதவுதலும் வேண்டும்.

(2) அலுவலகமுறையான இரகசியத்தைப் பேணுதலுக்கு ஏற்புடையனவான 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளும், அத்தகைய சட்டத்தின் 100 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய இரகசியம் பேணலை மீறுவதற்கான தண்டனையுட்பட, இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையொன்றுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

8. இப்பாகம் ஏற்புடையதாகின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, இதற்கான அட்டவணை I இல் அல்லது அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்ட முறையான சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி அவருக்கெதிராக நடவடிக்கையெடுக்கப்படுவதற்கு அவர் ஆளாதல் வேண்டும்.

9. ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, 2004 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (மன்னிப்பை ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் செய்யப்பட்ட எதுவும் அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் மன்னிப்பு எவ்வாறிருப்பினும், இப்பாகத்தின் ஏற்பாடுகள் இப்பாகம் ஏற்புடையதாகின்ற எவரேனுமாளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

## பாகம் II

### குறித்தசில சட்டங்களின்கீழ் வரி நிலுவைகளைப் பதிவழிப்பதற்கான ஏற்பாடுகள்

10. இப்பாகத்தின் ஏற்பாடுகள், 2020, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக அல்லது 2020, திசெம்பர் 31 ஆந் தேதிக்குமுன்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்காக, அட்டவணை I, அட்டவணை III அல்லது அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எவையேனும் வரி நிலுவைகளைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ளவரும் அல்லது அத்தகைய ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டத்தை செலுத்துவதற்கு ஆளாகவுள்ளவரும், (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் “வரிசெலுத்துநர்” எனக் குறிப்பீடுசெய்யப்படுபவருமான) எவரேனுமாளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

11. இதற்கான அட்டவணை III இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தில் அல்லது ஏதேனும் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டில் அல்லது 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதிவரிச் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஆணையாளர் தலைமையதிபதி, 14 ஆம், 15 ஆம் பிரிவுகளுக்கமைய, ஒரு வரிசெலுத்துநர் தொடர்பாக 2020, திசெம்பர் 31 ஆந்தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் காலப்பகுதி தொடர்பில் இதற்கான அட்டவணை III இன் பாகம் “அ” விலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் அல்லது இதற்கான அட்டவணை III இன் பாகம் “ஆ” வில் குறித்துரைக்கப்பட்ட 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதிவரிச் சட்டத்தின் குறிப்பிட்ட ஏற்பாடுகளின்கீழ் எவையேனும் வரி நிலுவைகளை பதிவழித்தல் வேண்டும்.

12. இரண்டாயிரத்து இருபதாமாண்டு மாச்சு 31 ஆந் தேதியன்று முடிவடைகின்ற வரிமதிப்பீட்டாண்டுக்கானதும் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி கணக்கிடப்பட்டதுமான எந்தத் தனியாளின் வரிமதிப்பிடற்பாலதான வருமானம் மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சாதுள்ளதோ 2020, திசெம்பர் 31 ஆந் தேதியன்றுள்ளவாறு 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதிவரிச் சட்டமல்லாத அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அந்த எவரேனும் தனியாளினால் செலுத்தப்படற்பாலனவான எவையேனும் வரி நிலுவைகளை ஆணையாளர் தலைமையதிபதி, 14 ஆம், 15 ஆம் பிரிவுகளுக்கமைய, பதிவழித்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இப்பிரிவின் ஏற்பாடுகள், பின்வரும் சூழ்நிலைகளின்கீழ் அத்தகைய எவரேனும் தனியாளுக்கு ஏற்புடையனவாதலாகாது:-

(அ) இரண்டாயிரத்துப் பதினேழாமாண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி, கழிக்கப்படாத நட்டமொன்றுட்பட்ட ஏதேனும் நட்டத்தைக் கழிக்காமல் இயைபான தனியாளின் வரிமதிப்பிடற்பாலதான வருமானம் மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சுமிடத்து;

(ஆ) இரண்டாயிரத்துப் பதினேழாமாண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி இறுதி பிடித்துவைத்தற் செலுத்துகைகளியிருந்தான வருமானம், ஈட்டுகைகளும் இலாபங்களும் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்பட்டனவாக இயைபான தனியாளின் வரிமதிப்பிடற்பாலதான வருமானம் கூட்டுமொத்தத்தில் மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சுமிடத்து;

(இ) இயைபான தனியாள் எந்தத் தொழிலின் அல்லது பங்காண்மையின் பங்காளரொருவராக உள்ளாரோ 2020, மாச்சு 31 ஆந் தேதியன்று முடிவடைகின்ற வரிமதிப்பீட்டாண்டுக்காக அந்தத் தொழிலின் அல்லது பங்காண்மையின் வருடாந்த முழுமொத்த மொத்த விற்பனவுவரவு ஐந்நூறு மில்லியன் ரூபாவுக்குக் குறைவாகவிராதவிடத்து; அல்லது

(ஈ) இயைபான தனியாளின் வரிமதிப்பிடற்பாலதான வருமானம் வெறுமனே வேறொரு தொழிலின் இடைநேர்விளைவானதாகவுள்ள அத்தகைய வருமானம் புறநீங்கலாகப் பந்தயம்பிடித்தல் மற்றும் சூதாடுதல் தொழிலொன்றை அல்லது ஏதேனும் மதுபானத் தொழிலை நடாத்துவதிலிருந்து ஈட்டப்பட்ட ஒரு வருமானத்தை உள்ளடக்குமிடத்து.

13. (1) ஆணையாளர் தலைமையதிபதி, ஒரு வரிசெலுத்துநர் தொடர்பாக, இதற்கான அட்டவணை I இல் அல்லது அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி கணக்கிடப்பட்ட எந்தத் தண்டம் அல்லது வட்டி தொடர்பிலான கொடுப்பனவு வருமதியாகவிருந்த தேதி 2020, திசெம்பர் 31 ஆந் தேதியாக அல்லது அத்தேதிக்கு முன்னரான ஒருதேதியாக இருந்ததோ அந்த ஏதேனும் தண்டத்தை அல்லது வட்டியை, வரிசெலுத்துநர், 2022, மாச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதற்குமுன்னர், சொல்லப்பட்ட சட்டங்களின் ஏற்பாடுகளின்கீழ் நிலுவையாகவுள்ள வரியின் முழுத்தொகையையும் செலுத்தியிருத்தல், பதிவழித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிலுள்ளதெதுவும், 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி அல்லது இச்சட்டத்தின் 11 ஆம் அல்லது 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி பதிவழிக்கப்பட்ட எவையேனும் வரி நிலுவைகள் தொடர்பில், அவற்றின்மீதான ஏதேனும் வரியை, வட்டியை அல்லது தண்டத்தைச் செலுத்துவதற்கு வரிசெலுத்துநர்மீது பொறுப்பொன்றைச் சுமத்துவதாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதலாகாது.

14. ஒரு வரிசெலுத்துநர் தொடர்பாகச் செய்யப்பட்ட வரிமதிப்பீட்டின்மீது, இதற்கான அட்டவணை I இல் அல்லது அட்டவணை III இல் குறித்துரைக்கப்பட்ட முறையான ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னர், வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு அல்லது ஏதேனும் சட்ட நீதிமன்றத்தின்முன் முடிவொன்று முடிவுறாதுள்ளது தொடர்பில் அல்லது வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு அல்லது ஏதேனும் சட்ட நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட முடிவொன்று தொடர்பில் 11 ஆம் அல்லது 12 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட எவையேனும் வரிநிலுவைகள் தொடர்பானதுமான ஏதேனும் பிணக்கு உள்ளவிடத்து, அத்தகைய வரி நிலுவைகள், விடயத்துக்கேற்ப, 11 ஆம் மற்றும் 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் பதிவழிக்கப்படுதலாகாது.

15. இரண்டாயிரத்து இருபதாமாண்டு திசெம்பர் 31 ஆந் தேதிக்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் காலப்பகுதிக்காக, இதற்கான அட்டவணை I இல், அட்டவணை III இல் அல்லது அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஒரு வரிசெலுத்துநரினால் உரியமுறையில் உரிமைகோரப்பட்டதும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று கொடுப்பனவு செய்யப்பட வுள்ளதுமான ஏதேனும் வரி மீளளிப்பு,

11ஆம் அல்லது 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் பதிவழிக்கப்பட்ட எவையேனும் வரி நிலுவைகளுக்கெதிராக எதிரீடு செய்யப்படுதல் வேண்டும்: ஆயின், எவ்வாறாயினும், இப்பிரிவின் ஏற்பாடுகள், மீளளிப்பு எந்தக் காலப்பகுதியில் வருமதியாகவுள்ளதோ அந்தக் காலப்பகுதிக்கு அடுத்துப்பின்னரானவொரு காலப்பகுதியில் சட்டத்தினால் விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டத்துக்கு ஏற்புடைமை எதனையும் கொண்டிருத்தலாகாது.

16. (1) ஆணையாளர் தலைமையதிபதி, ஒவ்வொரு வரி செலுத்துநருக்கும், 15 ஆம் பிரிவின் நியதிகளின்படி வரி நிலுவைகளுக்கெதிராக எதிரீடு செய்யப்படவேண்டிய மீளளிப்புத் தொகையை எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

(2) அத்தகைய ஆள் அவ்வாறு பதிவழிக்கப்பட்ட வரி நிலுவைகளுக்கெதிராக எதிரீடுசெய்யப்படவேண்டிய மீளளிப்புத் தொகைகள் பற்றித் திருப்திப்படாதிருப்பின், அவர், ஆணையாளர் தலைமையதிபதியின் தொடர்பாடல் தேதியிலிருந்து பதினான்கு நாட்காலப்பகுதியினுள், ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்டவாறு வரி நிலுவைகளுக்கெதிராக மீளளிப்புகளை எதிரீடுசெய்யவேண்டாமென ஆணையாளர் தலைமையதிபதிக்கு எழுத்திலான கோரிக்கையொன்றைச் செய்தல் வேண்டுமென்பதுடன் 2022, மாச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் வரி நிலுவைகளின் முழுத்தொகையையும் கொடுத்துத்தீர்த்தலும் வேண்டும்.

(3) (அ) ஆணையாளர் தலைமையதிபதி, (2) ஆம் உட்பிரிவின்கீழ் வரிசெலுத்துநரினால் செய்யப்பட்டவொரு கோரிக்கையின்மேல், (2)ஆம் உட்பிரிவின்கீழான கோரிக்கையுடன் சேர்த்துச் சமர்ப்பிக்கப்பட்ட பொருத்தமான கொடுப்பனவுத் திட்டமொன்றுக்கிணங்க 2022, மாச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் (1)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட வரி நிலுவைகளைக் கொடுத்துத்தீர்ப்பதற்கு அத்தகைய வரிசெலுத்துநருக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

(ஆ) அத்தகைய கொடுப்பனவுத் திட்டத்தில் ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட தேதிகளில் அல்லது அவற்றுக்குமுன்னர் பந்தி (அ) வின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுத் திட்டத்துக்கு இணங்கியொழுக வரிசெலுத்துநர் செயலாற்றினால், ஆணையாளர் தலைமையதிபதி அத்தகைய வரி நிலுவைகள்மீதான ஏதேனும் வட்டியை அல்லது தண்டத்தைப் பதிவழித்தல் வேண்டும்.

(4) வரிசெலுத்துநர் (2) ஆம் உட்பிரிவின்கீழ் கோரிக்கை யொன்றைச் செய்யாதவிடத்து அல்லது ஆணையாளர் தலைமை யதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொடுப்பனவுத் திட்டத்துக் கிணங்க வரி நிலுவைகளைக் கொடுத்துத்தீர்க்காதவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி (1) ஆம் உட்பிரிவின்கீழான அவரது தொடர்பாடலில் குறித்துரைக்கப்பட்டவாறு வரி நிலுவைகளுக் கெதிராக மீளளிப்புகளை எதிரீடுசெய்வதற்கு முற்படுதல் வேண்டும்.

17. ஆணையாளர் தலைமையதிபதி, பிரிவுகள் 11, 12 மற்றும் 13இன் ஏற்பாடுகளின்கீழ் பதிவழிக்கப்பட்ட வரி நிலுவைகளும் தண்டங்களும் தொடர்பாகத் தகுந்த பதிவேடுகளைப் பேணுதல் வேண்டும்.

18. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

19. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய-

"சொத்து" என்பது, வங்கி மீதிகள், நிதிசார் சாதனங்கள், பங்குகள், பெறுதிகள், திறைசேரி உண்டியல்கள், நிலையான வைப்புக்கள், கால வைப்புக்கள், முறிகள் அல்லது வேறு வகையினவான வைப்புக்கள், பிணைப்பொறுப்புக்கள் அல்லது கடன்கள் என்றவகையாகக் கொடுக்கப்பட்ட பணம், கையிலுள்ள காசு, இரத்தினக்கல் அல்லது தங்கம், வேறேதேனும் பணவகையான உரிமை என்பனவுட்பட, ஆனால் ஏதேனும் அருவச்சொத்து வரி செலுத்துநரினால் வேறெவரேனும் ஆளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தாலொழிய, ஏதேனும் அருவச் சொத்து நீங்கலாகப் பணம் அல்லது ஏதேனும் அசைவற்ற அல்லது அசைவுள்ள ஆதனம் என்று பொருளாகும்;

"வங்கிக் கணக்கு" என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் உரிமமளிக்கப்பட்டவொரு வங்கியில் ஒரு வெளிப்படுத்துநரினால் திறக்கப்பட்டுப் பேணப்பட்ட ஏதேனும் வங்கிக் கணக்கு என்று பொருளாகும்;

"ஆணையாளர் தலைமையதிபதி" என்பது, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்திலுள்ள வாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"மத்திய வங்கி" என்பது, (422 ஆம் அத்தியாயமான) பணச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி என்று பொருளாகும்;

"இறுதி பிடித்துவைத்தற் செலுத்துகைகள்" என்பது 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 88 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக அத்தகைய செலுத்துகைக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"அசைவற்ற ஆதனம்" என்பது, நிர்மாணிக்கப்பட்டதாயினுஞ்சரி அல்லது நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றதாயினுஞ்சரி இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ள ஏதேனும் கட்டிடம் என்று பொருளாகும்;

"வருமானம்" என்பது, இலங்கையிலாயினுஞ்சரி அல்லது வெளிநாட்டிலாயினுஞ்சரி ஏதேனும் மூலத்திலிருந்து பெறப்பட்ட ஏதேனும் ஈட்டுகை, இலாபம் அல்லது பெறுகை என்று பொருளாகும்;

"நட்டம்" என்பது, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய சொல்லமைப்புக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"பணம்" என்பது, இலங்கையில் அல்லது வெளிநாட்டில் வைத்திருக்கப்பட்டதாயினுஞ்சரி உள்நாட்டு நாணயத்தையும் வெளிநாட்டு நாணயத்தையும் உள்ளடக்கும்;

"அசைவுள்ள ஆதனம்" என்பது, தங்கமுட்பட இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ள எல்லா வகையினதுமான அசைவுள்ள ஆதனத்தையும் உள்ளடக்கும் ஆனால் பணத்தை உள்ளடக்காது;

"ஆள்" என்பது, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் அத்தகைய சொல்லமைப்புக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"விபரத்திரட்டு" என்பது, விபரத்திரட்டுடன் கொடுத்துதவப் பவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் சான்றிதழ், வெளிப்படுத்துகை அல்லது வேறேதேனும் இணைப்பு உட்பட, அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட முறையான சட்டத்தின் நியதிகளின்படி உண்ணாட்டரசிறைத்

திணைக்களத்திடம் கோப்பிடுவதற்கு ஆளொருவர் தேவைப்படுத்தப்பட்ட வருமானம் பற்றியவொரு விபரத்திரட்டு அல்லது சேர்பெறுமதி வரி விபரத்திரட்டு என்று பொருளாகும்;

“வதிவுள்ள கம்பெனி” என்பது, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 69 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கருத்துக்குட்பட்டவொரு கம்பெனி என்று பொருளாகும்;

பாகம் II இல் “வரி” என்பது, அட்டவணை I இல், III இல் அல்லது IV இல் குறித்துரைக்கப்பட்ட முறையான சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான அல்லது அறவிடப்பட்ட ஏதேனும் வரி, மிகைக்கட்டணம், அறவீடு, விதிப்பனவு அல்லது உதவுதொகை என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்;

“வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகை” என்பது, 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதிவரிச் சட்டத்தின் 83 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய சொல்லமைப்புக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

“வரி நிலுவைகள்” என்பது, முறையான சட்டத்திற்கு இணங்கியொழுக, கொடுப்பனவு வருமதியாகவுள்ள தேதிக்குப்பின்னர் செலுத்தப்படாதிருக்கும் ஒரு வரி என்று பொருளாகுமென்பதுடன் ஆணையாளர் தலைமையதிபதியின் பதிவேடுகளுக்கிணங்கச் செலுத்தப்படாதிருக்கும், அத்தகைய ஏதேனும் சட்டத்தின்கீழ் தவணைதவறிய ஒரு வரியையும் அல்லது வேறு தண்டத்தையும் மற்றும் பிடித்துவைத்தல் வரியையும் அல்லது தொழில் தருநரொருவரினால் தொழில் வருமானத்தின்மீது கழிக்கப்பட்ட ஒரு வரியையும் உள்ளடக்கும்;

“வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு” என்பது, 2011 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு என்று பொருளாகும்;

“கழிக்கப்படாத நட்டம்” என்பது, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய சொல்லமைப்புக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

“வரிமதிப்பீட்டாண்டு” என்பது, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய சொல்லமைப்புக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

## அட்டவணை I

(பிரிவுகள் 2,6,8,10,12,13,14, மற்றும் 15)

1. 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்
2. 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்
3. 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்
4. 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்
5. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டம்

## அட்டவணை II

(பிரிவு 2)

1. 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டம்
2. 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல்மீதான சமவாயச் சட்டம்
3. (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டம்
4. 2008 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, போதையூட்டும் அவுடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்டமுரணான வியாபாரத்திற்கெதிரான சமவாயங்கள் சட்டம்

## அட்டவணை III

(பிரிவுகள் 10,11,14, மற்றும் 15)

### பாகம் அ

1. 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட செல்வ வரியும் கொடை வரியும்
2. 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்தவிற்பனவு வரவுவரிச் சட்டம்
3. 1982 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, செல்வவரிமீதான மிகைக்கட்டணச் சட்டம்
4. 1989 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, செல்வவரிமீதான மிகைக்கட்டணச் சட்டம்
5. 1982 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, வருமானவரிமீதான மிகைக்கட்டணச் சட்டம்
6. 1984 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வருமானவரிமீதான மிகைக்கட்டணச் சட்டம்
7. 1989 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வருமானவரிமீதான மிகைக்கட்டணச் சட்டம்

8. 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டம்

9. 1996 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நாட்டைப் பாதுகாத்தல் உதவுதொகைச் சட்டம்

10. 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பண்டங்கள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம்

11. 2001 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, வருமானவரிமீதான மிகைக்கட்டணச் சட்டம்

12. 2002 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பற்றுக்கள் வரிச் சட்டம்

13. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட சமூகப் பொறுப்பு அறவீடு

14. 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டம்

15. 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டம்

16. 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட பொருளாதாரச் சேவை விதிப்பனவு

**பாகம் ஆ**

1. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 25ஏ என்னும் பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட சேர்பெறுமதிவரி

2. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 26அ என்னும் பிரிவின்கீழ் கழிக்கப்பட்ட விருப்புச் சேர்பெறுமதிவரி முற்கொடுப்பனவு

**அட்டவணை IV**

(பிரிவுகள் 2,8,10,13 மற்றும் 15)

1. 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தயம்பிடித்தல் மற்றும் சூதாடுதல் அறவீட்டுச் சட்டம்

2. 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம்

3. 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரைத்தீர்வைச் சட்டம்

4. 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத்தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

**அட்டவணை V**

(பிரிவு 5)

**பாகம் I**

**தன்னிச்சையான வெளிப்படுத்துகைமீதான வரி**

2021 ஆம் ஆண்டின்18 ஆம் இலக்க, நிதிச் சட்டம்

5 ஆம் பிரிவின்கீழான வெளிப்படுத்துகை

தனியாளொருவரினால் கொடுத்துதவப்படுதல் வேண்டும்

தேசிய அடையாள அட்டை இல.: ........................

கடவுச்சீட்டு இல.: ........................

1. .....................................என்னுமிடத்தைச் சேர்ந்தவரும் (முகவரி) ........................ ஆம் இலக்கத் தேசிய அடையாள அட்டையை/ கடவுச்சீட்டை வைத்திருப்பவருமான வண./திரு./திருமதி./செல்வி/........................ (முழுப்பெயர்) ஆகிய நான், 2021 ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் I இன் நியதிகளின்படி வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகை, வருமானம் அல்லது சொத்துத் தொடர்பிலான வெளிப்படுத்துகையொன்றைச் செய்கின்றேன்.

2. இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் 2020, மாச்சு 31ஆந் தேதியன்றுள்ளவாறாக என்னால் வைத்திருக்கப்பட்ட பின்வரும் வரி விதிக்கப்படற்பாலதான வழங்குகை, வருமானம் அல்லது சொத்துக்களை இத்தால் வெளிப்படுத்துகின்றேன்:-

| தொடர் இல. | வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகையின், வருமானத்தின் அல்லது சொத்தின் வகை | வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகை, வருமானம் அல்லது சொத்து வைத்திருக்கப்பட்ட இடம்/ உருவகம்/ முதலீடு செய்யப் பட்ட வங்கி | அளவு/ கணக்கு இல. | தொகை/ சந்தைப் பெறுமதி |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| மொத்தத் தொகை / சந்தைப் பெறுமதி | | | | |

3. மேலே வெளிப்படுத்தப்பட்டவாறான பணம் பின்வருமாறாகவுள்ளது

(i) பின்வருவனவற்றின்மீது முதலீடு செய்யப்பட்டவை

(அ) .............................. அன்று (தேதி) .............................. ரூபாத் தொகையினவான ....................... இன் (கம்பெனியின் பெயர்) ....................... (அளவு) பங்குகள் / தனிசுப் பிணைப்பொறுப்புக்கள்மீது.

(ஆ) ....................... அன்று (தேதி) ....................... இலங்கை ரூபாக்களில் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் / திறைசேரி முறிகள்மீது.

(இ) ....................... அன்று (தேதி) ....................... இலங்கை ரூபாக்களில் இலங்கையிலுள்ள ....................... மீது (காணி, கட்டிடம், மோட்டார் வாகனம், தங்கம் முதலியன போன்ற அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் - குறித்துரைக்கவும்).

(ii) ....................... அன்று (தேதி) ....................... வங்கியின்....................... கிளையில் ....................... ஆம் இலக்கத்தைக் கொண்ட எனது ....................... கணக்கில் வைப்பிலிடப்பட்டவை.

4. உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியின் கணக்குக்கு ....................... ஆம் இலக்கக் குறிப்பீட்டிலக்கத்தின்கீழ்....................... அன்று (கொடுப்பனவுத்தேதி) ....................... ரூபாத் தொகையை 2021ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் 4ஆம் பிரிவின் நியதிகளின்படி 1% வீதத்தில், 2 ஆம் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட கூட்டுமொத்தத் தொகைமீதான / சந்தைப் பெறுமதிமீதான வரியைச் செலுத்தியுள்ளேன்.

5. வெளிப்படுத்தப்பட்ட வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகையின், வருமானத்தின் அல்லது சொத்தின் தொகை தொடர்பாக,

(அ) எனக்குப் புலனாய்வுகள் அல்லது முடிவுறாத வழக்குகள் எவையுமில்லை அல்லது 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தின், 2005 ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல்மீதான சமவாயச் சட்டத்தின், (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் அல்லது 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, போதையூட்டும் அவுடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்டமுரணான சமவாயங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழான தவறொன்றுக்கு எனக்குக் குற்றத்தீர்ப்பளிக் கப்பட்டிருக்கவில்லை; அல்லது

(ஆ) 2021 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் அட்டவணை I இல் அல்லது அட்டவணை IV இல் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் சட்டத்தின்கீழான வரி மதிப்பீடெதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை.

இதன்கண் என்னால் கொடுக்கப்பட்ட மேலேயுள்ள விபரங்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானவையும் சரியானவையும் எனப் பயபக்தியாகவும் நேர்மையாகவும் நான் வெளிப்படுத்துகின்றேன்.

திகதி: .............................................

வெளிப்படுத்துநரின் கையொப்பம்

குறிப்பு :இப்படிவத்தில் இடம் போதாதிருக்குமிடத்து, தனிவேறான ஒரு தாள் வெளிப்படுத்துநரினால் பயன்படுத்தப்பட்டுக் கையொப்பமிடப்படலாம்

(இவ்வெளிப்படுத்துகையானது 2022, மாச்சு 31 ஆந்தேதியன்று அல்லது அதற்குமுன்னர் உண்ணாட்டரசிறை ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்)

(பிரிவு 5)

## பாகம் II

### தன்னிச்சையான வெளிப்படுத்துகைமீதான வரி

2021 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, நிதிச் சட்டம்

5 ஆம் பிரிவின்கீழான வெளிப்படுத்துகை

ஓர் உருவகத்தினால் (கூகம்பெனி, பங்காண்மை, நிதியம், சங்கம், அரசசார்பற்ற ஒழுங்கமைப்பு முதலியவற்றினால்) கொடுத்துதவப்படுதல் வேண்டும்.

வரிசெலுத்துநரின் அடையாளங்காண் இல.: .........................

உருவகத்தின் வகை: ........................

உருவகத்தின் பதிவு இல.: ........................

1. .................... என்னுமிடத்தைச் சேர்ந்தவரும் (முகவரி).................. ஆம் இலக்கத் தேசிய அடையாள அட்டையை வைத்திருப்பவருமான திரு./ திருமதி./ செல்வி/ ........................ (முழுப்பெயர்) ஆகிய நான், ........................இன் (உருவகத்தின் பெயர்) ........................ஆக (பதவிப்பெயர்) இருப்பதனால்,

2021 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் I இன் நியதிகளின்படி மேலேயுள்ள ........................ இன் (உருவகத்தின் வகை) வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகையின், வருமானத்தின் அல்லது சொத்தின் தொகை தொடர்பில் வெளிப்படுத்துகையொன்றைச் செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆளாகவுள்ளேன்.

2. ........................ இனால் (உருவகத்தின் பெயர்) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் 2020, மாச்சு 31 ஆந் தேதியன்றுள்ளவாறு வைத்திருக்கப்பட்ட பின்வரும் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகையை, வருமானத்தை அல்லது சொத்தை இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

| தொடர் இல. | வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகையின், வருமானத்தின் அல்லது சொத்தின் வகை | வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகை, வருமானம் அல்லது சொத்து வைத்திருக்கப்பட்ட இடம்/ உருவகம்/ முதலீடு செய்யப்பட்ட வங்கி | அளவு/ கணக்கு இல. | தொகை/ சந்தைப் பெறுமதி |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| மொத்தத் தொகை / சந்தைப் பெறுமதி | | | | |

3. மேலே வெளிப்படுத்தப்பட்டவாறான பணம் பின்வருமாறாகவுள்ளது -

(i) பின்வருவனவற்றின்மீது முதலீடு செய்யப்பட்டவை -

(அ) ........................ அன்று (தேதி) ........................ ரூபாத்தொகையினவான ........................ இன் (கம்பெனியின் பெயர்)........................ (அளவு) பங்குகள் / தனிசுப் பிணைப்பொறுப்புக்கள்மீது.

(ஆ) ........................ அன்று (தேதி) ........................ இலங்கை ரூபாக்களில் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் /திறைசேரி முறிகள்மீது.

(இ) ........................ அன்று (தேதி) ........................ இலங்கை ரூபாக்களில் இலங்கையிலுள்ள ........................ மீது (காணி, கட்டிடம், மோட்டார் வாகனம், தங்கம் முதலியன போன்ற அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் - குறித்துரைக்கவும்).

(ii) ........................ அன்று (தேதி) ........................ வங்கியின்........................ கிளையில் ........................ஆம் இலக்கத்தைக் கொண்ட (உருவகத்தின் வகை) ........................ கணக்கில் வைப்பிலிடப்பட்டவை.

4. உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியின் கணக்குக்கு ........................ ஆம் இலக்கக் குறிப்பீட்டிலக்கத்தின்கீழ் ........................ அன்று (கொடுப்பனவுத்தேதி) ........................ரூபாத் தொகையை *........................ இன் சார்பில் 2021 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் நியதிகளின்படி 1% வீதத்தில், 2 ஆம் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட கூட்டுமொத்தத் தொகைமீதான / சந்தைப் பெறுமதிமீதான வரியைச் செலுத்தியுள்ளேன்.

5. வெளிப்படுத்தப்பட்ட வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகையின், வருமானத்தின் அல்லது சொத்தின் தொகை தொடர்பாக,

(அ) (கம்பெனி, பங்காண்மை, நிதியம், சங்கம், அரசசார்பற்ற ஒழுங்கமைப்பு முதலியவற்றின் பெயர்) ........................ என்பதற்குப் புலனாய்வுகள் அல்லது முடிவுறாத வழக்குகள் எவையுமில்லை அல்லது (கம்பெனி, பங்காண்மை, நிதியம், சங்கம், அரசு சார்பற்ற ஒழுங்கமைப்பு முதலியனவற்றின் பெயர்) 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தின், 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல்மீதான சமவாயச் சட்டத்தின், (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச்சட்டத்தின் அல்லது 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, போதையூட்டும் அவுடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களி னதும் சட்டமுரணான வியாபாரத்துக்கெதிரான சமவாயங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழான தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கவில்லை; அல்லது

(ஆ) 2021 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் அட்டவணை I இல் அல்லது அட்டவணை IV இல் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் சட்டத்தின்கீழான வரி மதிப்பீடெதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை

........................ என்ற தன்மையில் (பதவிப்பெயர்) ..................... இன் சார்பில் (உருவகத்தின் பெயர்) இதன்கண் என்னால் கொடுக்கப்பட்ட மேலேயுள்ள விபரங்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரை உண்மையானவையும் சரியானவையும் எனப் பயபக்தியாகவும் நேர்மையாகவும் நான் வெளிப்படுத்துகின்றேன்.

திகதி: ............................................

தவிசாளரின்/ முகாமைப் பணிப்பாளரின்/ பங்காளரின்/

தலைவரின் கையொப்பம்

குறிப்பு: இப்படிவத்தில் இடம் போதாதிருக்குமிடத்து, தனிவேறான ஒரு தாள் வெளிப்படுத்துநரினால் பயன்படுத்தப்பட்டுக் கையொப்பமிடப்படலாம்.

(இவ்வெளிப்படுத்துகையானது 2022, மாச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் உண்ணாட்டரசிறை ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்)

**2021ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம்**

[2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

**இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவைத் தாபிப்பதற்கும்; சந்தை நிறுவனங்களையும், பிணையங்கள் பற்றிய குறித்தசில பகிரங்கக் கொடைமுனைவுகளையும், சந்தை இடைத்தரகர்களையும் ஒழுங்குபடுத்துவதற்கும்; முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதற்கும் வலுவுறுத்தல் வழிமுறைகளுக்காக ஏற்பாடுசெய்வதற்கும்; சந்தை தொடர்பிலான துர்நடத்தையைக் கையாளுவதற்கும்; பிணையங்கள் சந்தை ஒழுங்குபடுத்துநர்களினால் எதிர்நோக்கப்பட்ட சவால்களை எதிர்கொள்வதற்கும்; 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தை நீக்குவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**பாகம் I**

அத்தியாயம் 1

முதனிலையானவை

2. இச்சட்டத்தில் வேறுவகையாக ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிர, இச்சட்டமானது, பிணையங்கள், பிணையங்கள் சந்தைகள் மற்றும் தொடர்புபட்ட கருமங்களுக்கு ஏற்புடையதாகும்.

3. இச்சட்டத்தின் குறிக்கோளும் நோக்கமும் பின்வருமாறாதல் வேண்டும்:-

(அ) இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவைத் தாபித்தல்;

(ஆ) நியாயமான, ஒழுங்கான, வினைத்திறனான மற்றும் வெளிப்படையான பிணையங்கள் சந்தையை உருவாக்குதலும் பேணுதலும் அத்தகைய பிணையங்கள் சந்தையை ஒழுங்குபடுத்துதலும்;

(இ) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் அக்கறைகளைப் பாதுகாத்தல்; அத்துடன்

(ஈ) பிணையங்கள் சந்தைகள் தொடர்பான சேவைகளை வழங்குவதில் உயர்வான உயர்தொழிற்சார் நியமங்கள் பேணப்படுவதனை உறுதிப்படுத்துதல்.

அத்தியாயம் 2

இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

4. (1) (இதனகத்துப்பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு எனவழைக்கப்படவேண்டிய ஆணைக்குழுவொன்று இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிருவகிப்பதற்கு தாபிக்கப்படுதல்வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரின்மூலம் கூட்டிணைக்கப்பட்ட குழு வொன்றாதல் வேண்டுமென்பதுடன் இடையறாவழியுரிமையையும் பொது இலச்சினை ஒன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன், அத்தகைய பெயரில் அது வழக்குத்தொடுக்கலாம் மற்றும் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்.

5. (1) ஆணைக்குழுவானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) ஆணைக்குழுவின் பல்தொழிற்சார் தன்மையைப் பிரதிபலிப்பதற்கென, பிணையங்கள் சந்தை தொடர்பான கருமங்கள் தொடர்பில் உயர்தொழிற்சார் நிபுணத்துவத்தையும் நற்கணிப்பையும் கொண்டுள்ளவர்களும், சட்டம், நிதி, கணக்கியல், பொருளியல், வங்கித்தொழில் அல்லது தொழில் என்ற துறைகளில் விசேட அறிவு அல்லது பரந்த அனுபவம் மற்றும் எண்பிக்கப்பட்ட தகுதி என்பவற்றைக் கொண்டுள்ளவர்களும், (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படுபவர்களும்), உறுப்பினர்களாக அமைச்சரினால் நியமிக்கப்பட வேண்டியவர்களுமான ஆறு ஆட்கள்; அவர்களுள் ஆகக்குறைந்தது ஐந்து ஆட்களேனும் தனியார் துறையிலிருந்தானவர்களாதல் வேண்டும்;

(ஆ) இரண்டு பெயர்குறித்துநியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்-

(i) திறைசேரிச் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட திறைசேரிப் பிரதிச் செயலாளர் ஒருவர்; அத்துடன்

(ii) இலங்கைப் பணச்சபையினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் ஒருவர்; அத்துடன்

(இ) இரண்டு பதவிவழி உறுப்பினர்கள்-

(i) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதி; அத்துடன்

(ii) 1959 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பட்டயம்பெற்ற கணக்காளர்கள் நிறுவகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் தலைவர்.

(2) அமைச்சரானவர், ஆணைக்குழுவின் தவிசாளராக விருப்பதற்கான ஓர் உறுப்பினரை ஆணைக்குழுவின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுளிருந்து பெயர்குறித்துநியமித்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆட்களை நியமிப்பதில் அமைச்சர் பின்வருவனவற்றைக் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்:-

(அ) அந்த ஆளின் நேர்மையும் நற்கணிப்பும்; அத்துடன்

(ஆ) ஆணைக்குழுவின் அக்கறைகளுக்கும், அவ்வாள் எந்த அக்கறையைக் கொண்டுள்ளாரோ அல்லது பிரதிநிதித்துவப்படுத்துகின்றாரோ அந்த ஏதேனும் அக்கறைக்கும் இடையேயான ஏதேனும் முரண்பாடு எழக்கூடிய சாத்தியம்.

6. ஆணைக்குழுவின் ஒவ்வொரு நியமிக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரும், நியமிக்கப்படும்போது, அவர் நியமிக்கப்பட்ட நேரத்தில் அவர் கொண்டிருக்கக்கூடிய எவையேனும் அக்கறைகளின் முரண்பாடு பற்றி அமைச்சருக்கு வெளிப்படுத்துகையொன்றைச் செய்வதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

7. ஆணைக்குழுவின் ஒவ்வொரு நியமிக்கப்பட்ட அல்லது பெயர்குறித்துநியமிக்கப்பட்ட உறுப்பினரும், அவர் இறப்பின்மூலம், சட்டநடைமுறையின்மூலம், பதவிவிலகுவதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, மூன்றாண்டுகாலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், எவையேனும் இரண்டு தொடர்ச்சியான அல்லது வேறுவகையான பதவிக்காலங்களைக் கொண்ட அதிகபட்சக் காலப்பகுதிக்கமைய மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

8. (1) ஆணைக்குழுவின் எவரேனும் நியமிக்கப்பட்ட அல்லது பெயர்குறித்துநியமிக்கப்பட்ட உறுப்பினர், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின்மூலம் தமது பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாம் என்பதுடன், அத்தகைய பதவிவிலகுகை எழுத்தில் அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்படுவதன்மேல் பயனுறுதலும் வேண்டும்.

(2) இறப்பு, பதவிவிலகுகை, பதவியிலிருந்து அகற்றப்படுகை அல்லது (4) ஆம் அல்லது (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளினது நடைமுறை என்பன காரணமாகப் பதவிவழி உறுப்பினர் ஒருவர் தவிர்ந்த எவரேனும் உறுப்பினர் பதவியை வறிதாக்கும் பட்சத்தில், அமைச்சர், (5) ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, எந்த உறுப்பினரை அவர் அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகிப்பதற்கென வேறோராளை நியமிக்கலாம்.

(3) தவிசாளர் தவிர்ந்த ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர், சுகவீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காக மூன்று மாதங்களை விஞ்சுகின்றவொரு காலப்பகுதிக்குத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருப்பின், அமைச்சர், 5 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய காலப்பகுதியின்போது அவரினிடத்தில் செயலாற்றுவதற்கு வேறோராளை நியமிக்கலாம்.

(4) ஆணைக்குழுவிடமிருந்து முதலில் அனுமதி பெற்றுக் கொள்ளாமல் ஆணைக்குழுவின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வருகைதராதிருக்கும் ஆணைக்குழுவின் நியமிக்கப்பட்ட அல்லது பெயர்குறித்துநியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் தமது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஆணைக்குழுவின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வருகைதராத தவிசாளராகவுள்ள உறுப்பினரொருவர் தமது பதவியை வறிதாக்கியுள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும்.

9. (1) ஆளொருவர் பின்வரும் சந்தர்ப்பங்களில் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்:-

(அ) அவர் பாராளுமன்றத்தின் உறுப்பினரொருவராக அல்லது ஏதேனும் மாகாணசபையின் அல்லது ஏதேனும் உள்ஷரதிகாரசபையின் உறுப்பினரொருவராக விருந்தால் அல்லது வந்தால்;

(ஆ) அவர் ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட உருவகமொன்றின் பணிப்பாளர், பங்காளர் அல்லது ஊழியரொருவராகவிருந்தால் அல்லது வந்தால்;

(இ) அவர் சித்தசுவாதீனமற்றவராகவிருந்தால் அல்லது வந்தால் அல்லது அவரது கடமைகளை நிறைவேற்றுவதற்கு இயலாதவராகவிருந்தால் அல்லது வந்தால்;

(ஈ) அவர் பொறுப்புவிடுவிக்கப்படாத வங்கி முறிந்தவராகவிருந்தால் அல்லது வந்திருந்தால்;

(உ) அவர் ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டால் அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருந்தால்;

(ஊ) அவர் பதவியிலிருந்து முன்னர் அகற்றப்பட்டிருந்தால்.

(2) அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், ஓர் உறுப்பினர் பதவியில் தொடர்ந்திருத்தல் ஆணைக்குழுவின் அக்கறைகளுக்குத் தீங்குவிளைவிப்பதாகவிருப்பின், அவ்வுறுப்பினர் உறுப்பினரொருவராகத் தொடர்ந்திருப்பதிலிருந்து அவரை அகற்றலாம்.

10. (1) ஆணைக்குழுவின் தவிசாளர், சமுகமாயிருப்பின், ஆணைக்குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். அத்தகைய எவையேனும் கூட்டங்களுக்குத் தவிசாளர் வருகைதராதிருப்பின் சமுகமளித்துள்ள உறுப்பினர்கள் அத்தகைய கூட்டத்தில் தலைமைதாங்குவதற்கென தம்முள் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் கூட்டங்களும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதலும் தொடர்பான நடவடிக்கை முறையை ஆணைக்குழுவானது ஒழுங்குபடுத்தலாம்.

(4) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான எல்லாக் கேள்விகளும் சமுகமளித்துள்ள உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரின் வாக்கின்மூலம் முடிபுசெய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும் விடயத்தில் தலைமை தாங்கும் உறுப்பினர் அறுதியிடும் வாக்கொன்றைக்கொண்டிருத்தல் வேண்டும்.

11. நிதி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சரின் கலந்தாலோசனையுடன், ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம்.

12. (1) ஆணைக்குழுவின் தவிசாளர், சுகவீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதிருப்பின், அமைச்சர், அவரினிடத்தில் செயலாற்றுவதற்கென ஆணைக்குழுவின் வேறோர் உறுப்பினரைப் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்.

(2) தவிசாளர், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின்மூலம் தவிசாளர் பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, தவிசாளரின் பதவிக்காலம், அவர் ஆணைக்குழுவின் உறுப்பாண்மையைக் கொண்டிருக்கும் காலப்பகுதியாதல் வேண்டும்.

13. ஆணைக்குழுவினால் ஏதேனும் கருமத்தின்மீது எடுக்கப்படவுள்ள ஏதேனும் முடிபில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் அக்கறை கொண்டுள்ள உறுப்பினரொருவர் அத்தகைய முடிபு எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் ஆணைக்குழுவின் கூட்டத்தில் அத்தகைய அக்கறையின் தன்மையை வெளிவிடுதல் வேண்டும். அத்தகைய வெளிவிடுகையானது ஆணைக்குழுவின் கூட்டங்களினது நிகழ்ச்சிக்குறிப்புகளில் பதியப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உறுப்பினர் அக்கருமம் தொடர்பாக ஆணைக்குழுவின் ஏதேனும் கலந்தாராய்வில் அல்லது முடிபில் பங்குபற்றுதலுமாகாது; அத்துடன் அத்தகைய கலந்தாராய்வு நடந்துகொண்டிருக்கையில் அல்லது அத்தகைய முடிபு செய்யப்பட்டுக்கொண்டிருக்கையில் அத்தகைய கூட்டத்திலிருந்து அவர் வெளிச்செல்லுதலும் வேண்டும்.

14. ஆணைக்குழுவின் நடவடிக்கை, செயல் அல்லது முடிபு எதுவும், அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன்காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாக்கப்படுதலாகாது.

15. (1) ஆணைக்குழுவின் இலச்சினை, ஆணைக்குழுவின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் இலச்சினை, ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) ஆணைக்குழுவின் இலச்சினை, ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினரினதும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமை யதிபதியினதும் சமுகத்திலன்றி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி வருகைதராதிருப்பின் ஆணைக்குழுவின் எவரேனும் இரு உறுப்பினர்களின் சமுகத்திலன்றி ஏதேனும் சாசனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் தாம் சமுகமாயிருந்தனர் என்பதற்கு அத்தாட்சியாக அச்சாசனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும்.

## அத்தியாயம் 3

## ஆணைக்குழுவின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்

16. ஆணைக்குழுவின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) பிணையங்கள் சந்தையின் அபிவிருத்தி பற்றி அரசாங்கத்துக்கு மதியுரையளித்தலும் பிணையங்கள் சந்தை தொடர்பில் அரசாங்கத்தின் கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் பயனுற அமுலாக்குவதில் உதவுதலும்;

(ஆ) இலங்கையிலுள்ள பிணையங்கள் சந்தைகளின் அபிவிருத்தியை, அதுசம்பந்தமான ஆராய்ச்சி மற்றும் பயிற்சி உட்பட, ஊக்குவித்தலும் மேம்படுத்துதலும்;

(இ) சந்தை நிறுவனங்கள், சந்தை இடைத்தரகர்கள், பதிவுசெய்யப்பட்ட ஆட்கள், தீர்வக உறுப்பினர்கள், வியாபாரஞ்செய்கின்ற பங்குபற்றுநர்கள், வைப்பகப் பங்குபற்றுநர்கள், வழங்குநர்கள், முதலீட்டாளர்கள், ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநர்கள் அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான எவரேனும் ஆளுக்கு அல்லது ஆட்களுக்குக் காலத்துக்குக்காலம் பொதுவான அல்லது குறிப்பிட்ட பணிப்புரைகளை அல்லது அறிவுறுத்தல்களை விடுத்தல்;

(ஈ) சந்தை நிறுவனங்களின், சந்தை இடைத்தரகர்களின், கூட்டு முதலீட்டுத் திட்டங்களின் அல்லது நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனிகளின் குறைநிரப்புச் சேவை வழங்குநர்களுக்குக் காலத்துக்குக்காலம் பொதுவான அல்லது குறிப்பிட்ட பணிப்புரைகளை அல்லது அறிவுறுத்தல்களை விடுத்தல்;

(உ) ஒரு சந்தை நிறுவனமாகத் தொழிற்படுவதற்குக் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுக்கு உரிமமளித்தலும் அது முறையாக நடாத்தப்படுவதனை உறுதிப்படுத்து தலும்;

(ஊ) ஒரு சந்தை இடைத்தரகராகத் தொழிற்படுவதற்கு எவரேனுமாளுக்கு உரிமமளித்தலும் அது முறையாக நடாத்தப்படுவதனை உறுதிப்படுத்துதலும்;

(எ) பதிவுசெய்யப்பட்ட ஆளொவருவராகச் சந்தை இடைத்தரகர் ஒருவருக்காகவும் அவர் சார்பிலும் பிணையங்களின் விற்பனை அல்லது கொள்வனவு பற்றி வாடிக்கையாளர்களுக்கு மதியுரையளிக்கும் ஆளொருவரைப் பதிவுசெய்தலும் அவர்களின் கடமைகளை நிறைவேற்றுவதில் அவர்களின் நடத்தையை ஒழுங்குபடுத்துதலும்;

(ஏ) எவரேனுமாளைச் சந்தைத் தொழிற்படுத்துநரொருவராகப் பதிவுசெய்தல்;

(ஐ) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனிகளுக்கு அல்லது நிரற்படுத்தப்பட்ட வெளிநாட்டு உருவகங்களுக்குக் காலத்துக்குக்காலம் பொதுவான அல்லது குறிப்பிட்ட பணிப்புரைகளை வழங்குதல்;

(ஒ) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியைக் கையேற்றல் அல்லது ஒன்றிணைத்தல் தொடர்பாகக் கொள்ளுபவர், கொடைமுனைபவர் அல்லது ஒரு கொடைமுனைபவருடன் ஒருமித்துச் செயலாற்றுகின்ற ஆட்கள் அல்லது கொடைமுனைவு பெறுபவர் அல்லது இலக்குக் கம்பெனிக்குப் பொதுவான அல்லது குறிப்பிட்ட பணிப்புரைகளை வழங்குதல்;

(ஓ) இச்சட்டத்தின், ஒழுங்குவிதிகளின் அல்லது விதிகளின் உடனடியாக நிகழவுள்ள மீறுகைகளைத் தடுப்பதற்கும் மீறுகையைத் தடைசெய்வதற்கும் எவரேனுமாளுக்குக் குறிப்பான பணிப்புரைகளை வழங்குதல்;

(ஔ) ஒரு பரிவர்த்தனையில் பிணையங்களின் நிரற்படுத்துகையையும் வியாபாரத்தையும் ஒழுங்குபடுத்துதல்;

(க) பிணையங்களின் வழங்குகையை ஒழுங்குபடுத்துதல்;

(ங) எவையேனும் பிணையங்களின் நிரற்படுத்துகையைத் தடைசெய்தல் அல்லது இடைநிறுத்துதல் அல்லது நிரற்படுத்தப்பட்ட பிணையங்களை நிரலிலிருந்து அகற்றுதல் அல்லது எவையேனும் பிணையங்களின் வியாபாரத்தைத் தடைசெய்தல் அல்லது இடைநிறுத்துதல் அல்லது முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதற்காக அல்லது நியாயமான, ஒழுங்கான பிணையங்கள் சந்தையை உறுதிப்படுத்துவதற்காக அல்லது பிணையங்கள் சந்தையின் நேர்மையை உறுதிப்படுத்து வதற்காக ஆணைக்குழு அவசியமென அல்லது உசிதமெனக் கருதுகின்றவாறான அத்தகைய நடபடிகளை எடுத்தல்;

(ச) ஆணைக்குழுவின் குறிக்கோள்களையும் பணிகளையும் நிறைவேற்றும் நோக்கங்களுக்காக அவசியமானவர்களென ஆணைக்குழு கருதக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களைத் தொழிலுக்கமர்த்துதலும் அத்தகைய அலுவலர்களின் சம்பளங்களையும் வேதனங்களையும் அல்லது வேறு ஊதியத்தையும் நன்மைகளையும் நிர்ணயித்தலும்;

(ஞ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எத்தகையதுமான எம்முறையிலேனும் கொள்ளுதலும் வைத்திருத்தலும், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தலும் அல்லது கொடுத்தலும், ஈடுவைத்தலும், அடைமானம் வைத்தலும், விற்பனை செய்தலும் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தலும்;

(ட) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்றின் கையேற்பை அல்லது ஒன்றிணைவை அல்லது அதனோடு சம்பந்தப்பட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான ஏதேனும் கருமத்தை ஒழுங்குபடுத்துதல்;

(ண) ஒரு சந்தை நிறுவனம், சந்தை இடைத்தரகர், பதிவுசெய்யப்பட்ட ஆள், நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி அல்லது நிரற்படுத்தப்பட்ட வெளிநாட்டு உருவகம் என்பவற்றின் ஏதேனும் செயற்பாடு பற்றி விசாரணை செய்தலும் நுண்ணாய்வுகளை நடாத்துதலும்;

(த) எவரேனுமாளினால் புரியப்பட்ட இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி, விதி, அல்லது பணிப்புரையின் ஏற்பாடுகளினது அல்லது அறிவுறுத்தலின் சார்த்தப்பட்ட ஏதேனும் முரண்பாடு அல்லது மீறுகைபற்றிப் புலனாய்வுகளை நடாத்துதலும் ஆணைக்குழுவினால் அவசியமெனக் கருதப்பட்டவாறானவையும் இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டவையுமான எவையேனும் வலுவுறுத்தல் வழிமுறைகளை எடுத்தலும்;

(ந) இச்சட்டத்தின் நோக்கெல்லையினுள் வருகின்ற ஏதேனும் கருமம்தொடர்பாக ஏதேனும் ஒழுங்கமைப்புடன் அல்லது வெளிநாட்டு ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையுடன் உடன்படிக்கைகளை அல்லது புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளுதல்;

(ப) ஏதேனும் சந்தை நிறுவனத்தினால், சந்தை இடைத்தரகரினால் அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆளினால், குறைநிரப்பு சேவை வழங்குநரினால், ஏதேனும் நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியினால் அல்லது ஏதேனும் நிரற்படுத்தப்பட்ட வெளிநாட்டு உருவகத்தினால் புரியப்பட்ட தவறான செயல் பற்றிய கண்டுபிடிப்புகளை வெளியிடுதல்;

(ம) பிணையங்கள் பற்றிய கொடுக்கல்வாங்கல்களின் கண்காணிப்பை நிறைவேற்றுதல்;

(ய) ஆணைக்குழுவினால் அளிக்கப்பட்ட எவையேனும் சேவைகளுக்காகக் கட்டணங்களை அல்லது விதிப்பனவுகளை அறவிடுதல்;

(ர) நிதிசார் முறைமைக்கு முறைமைசார் ஆபத்தைத் தணிப்பதற்கு ஆணைக்குழு அவசியமெனக் கருதக் கூடியவாறான அத்தகைய நடபடிகளை எடுத்தல்;

(ல) பிணையங்களுக்காக ஒப்பப்பணஞ்செலுத்துவதற்குப் பொதுமக்களுக்குக் கொடைமுனைவொன்றைச் செய்துள்ள கம்பெனிகளுக்குக் குறிப்பிட்ட அல்லது பொதுவான பணிப்புகளை விடுத்தல்;

(வ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளிலிருந்து குறித்தசில பகிரங்கக் கொடைமுனைவுகளுக்கு அல்லது வழங்குகைகளுக்கு விலக்களித்தல்;

(அஅ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக உசிதமான வர்களென ஆணைக்குழு கருதுகின்றவர்களான நிபுணர்களை நியமித்தல்; அத்துடன்

(ஆஅ) இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவின் குறிக்கோள்கள், தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் புரிவதற்கு அவசியமாகக் கூடியவாறானவையாக, அவற்றின் இடைநேர்விளைவானவையாக மற்றும் அவற்றுக்குத் துணைநிலையானவையாக கருதப்படக் கூடியவாறான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் செய்தல்.

17. ஆணைக்குழுவானது 16 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்களுடன் சேர்த்து மேலதிகமாகப் பின்வருவனவற்றுக்கான தத்துவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) சந்தை நிறுவனங்கள் அல்லது சந்தை இடைத்தரகர்கள் அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆட்கள் அல்லது கூட்டு முதலீட்டுத் திட்டங்களின் நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் இச்சட்டத்தின், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் ஏற்பாடுகளுக்கு இசைந்தொழுகத் தொழிற்படுகின்றனவா அல்லது தொழிற்படுகின்றனராவென்பதை நிச்சயித்துத் தீர்மானிப்பதற்கென அவற்றின் அல்லது அவர்களின் செயற்பாடுகள் பற்றிய மேற்பார்வையை அல்லது சோதனைகளை நிறைவேற்றுவதற்கும் அத்தகைய சோதனைகளை நிறைவேற்றுவதில் உறப்பட்ட ஆகுசெலவுகளை, விடயத்துக்கேற்ப, சந்தை நிறுவனத்திடமிருந்து அல்லது சந்தை இடைத்தரகரிடமிருந்து அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆளிடமிருந்து அல்லது ஒரு கூட்டு முதலீட்டுத்திட்டத்தின் நம்பிக்கைப்பொறுப்பாளரிடமிருந்து விதிப்பனவு செய்வதற்கும்;

(ஆ) ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலும் முறையிலும் தகைமைபெற்ற கணக்காய்வாளரொருவரினால் சான்றுப்படுத்தப்பட்ட, கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களையும் இடைக்கால நிதிக்கூற்றுக்களையும் ஆணைக்குழுவிடம் கோப்பிடும்படி சந்தை நிறுவனங்களை அல்லது சந்தை இடைத் தரகர்களைத் தேவைப்படுத்துவதற்கும்; அத்துடன்

(இ) ஒவ்வோர் ஆண்டு தொடர்பிலுமான அறிக்கைகளையும் அவ்வாண்டுக்கான ஒரு கூட்டு முதலீட்டுத் திட்டத்தின் செயற்பாடுகள்பற்றிக் குறைந்தபட்சம் இரண்டு அறிக்கைகளையேனும் ஆணைக்குழுவிடம் கோப்பிடும் படி அந்தக் கூட்டு முதலீட்டுத்திட்டத்தின் உரிம மளிக்கப்பட்ட முகாமைக் கம்பெனியைத் தேவைப்படுத்துவதற்கும் அத்தகைய ஒவ்வோர் அறிக்கையும் ஆணைக்குழுவினால் காலத்திற்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். முதலாவது அறிக்கை அவ்வாண்டின் செத்தெம்பர்

மாதத்தின் முப்பதாம் தேதிக்குப் பிந்தாமல் கோப்பிடப்படுதல் வேண்டு மென்பதுடன், இரண்டாவது அறிக்கை அடுத்துவரும் ஆண்டின் மாச்சு மாதம் முப்பத்தோராம் தேதிக்குப் பிந்தாமல் கோப்பிடப்படுதலும் வேண்டும்.

18. ஆணைக்குழுவின் தவிசாளர், சட்டத்தரணி ஒருவராகவுள்ள ஆணைக்குழுவின் எவரேனும் அலுவலருக்கு அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதித் திணைக்களத்தின் எவரேனும் அலுவலருக்கு அல்லது அதற்கெதிரான எவையேனும் சட்ட வழக்கு நடவடிக்கைகளில் அல்லது ஆணைக்குழுவானது எந்த வழக்குநடவடிக்கைகளில் கணிசமானளவு அக்கறையைக் கொண்டுள்ளதோ அந்த எவையேனும் வழக்குநடவடிக்கைகளில் ஆணைக்குழுவின் சார்பில் தோன்றுவதற்கு அதிகாரமளிக்கலாம்.

அத்தியாயம் 4

**ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியும் பணியாட்டொகுதியினரும்**

19. (1) அமைச்சர், ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது, ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியை நியமித்தல் வேண்டும்; அவரே அதன் பிரதான நிறைவேற்றலுவலராகவிருத்தல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதியின் ஊதியம் உட்பட அவரின் தொழில்நிபந்தனைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, பின்வரும் சந்தர்ப்பங்களில் ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியாக எவரேனுமாளின் நியமனத்தை விதந்துரைத்தலாகாது; அத்தகைய ஆள்-

(அ) ஒரு நீதிமன்றத்தினால் அல்லது நியாயசபையினால் பாரதூரமான துர்நடத்தைக்குக் குற்றவாளியாக முன்னர் காணப்பட்டிருந்தால் அல்லது ஓர் ஒழுங்குபடுத்தும் குழுவினால் அல்லது முன்னையவொரு தொழில் தருநரினால் ஓர் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு அமைந்தவராக்கப்பட்டிருந்தால்;

(ஆ) பதவியிலிருந்து முன்னர் நீக்கப்பட்டிருந்தால்; அல்லது

(இ) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் ஏற்பாடுகளினது மீறுகையொன்றைப் புரிந்திருந்தால்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, ஆணைக்குழுவின் பொதுவான பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, ஆணைக்குழுவின் அலுவல்களையும் கொடுக்கல்வாங்கல்களையும் பணிப்பதற்கும், அதன் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும் மற்றும் புரிவதற்கும் அத்துடன் ஆணைக்குழுவின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நிருவகிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பொறுப்பானவராதல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன், இச்சட்டத்தினால் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையை எவரேனும் அலுவலருக்கு மற்றும் சேவையாளருக்குக் கையளித்தல் அவசியமானதென அவர் கருதும்போதெல்லாம், அவ்வாறு செய்யலாமென்பதுடன், அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர், பணிப்பாளர் தலைமையதிபதியின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளுக்கமைய, அத்தகைய தத்துவத்தை, பணியை அல்லது கடமையைப் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும்.

(5) அமைச்சர், ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதியை, அவர் பதவியில் தொடர்ந்திருத்தல் ஆணைக்குழுவின் அக்கறைகளுக்குத் தீங்குவிளைவிப்பதாகவிருப்பின் பதவியிலிருந்து அகற்றலாம்:

ஆயின், ஆணைக்குழுவானது, அத்தகைய பதவி அகற்றுகைக்கு முன்னர் கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்றைப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு வழங்குதல் வேண்டும்.

20. (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஆணைக்குழுவானது, அதன் பணிகளை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு அவசியமென அது கருதுகின்றவாறான ஊழியர்கோப்புப் பதவிகளை உருவாக்கி அலுவலர்களையும் சேவையாளர்களையும் தொழிலுக்கமர்த்தலாமென்பதுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அதன் பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றும் நோக்கங்களுக்காக அவர்களின் சம்பளங்களையும் வேதனங்களையும் அல்லது வேறு ஊதியத்தையும் அத்தகைய சேவையாளர்களினதும் அலுவலர்களினதும் நன்மைகளையும், ஓய்வூதியங்களையும் நிர்ணயிக்கலாம்.

(2) ஆணைக்குழுவானது, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன், பணிப்பாளர் தலைமையதிபதியினதும், அதன் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் அவர்களின் தங்கிவாழுநர்களினதும் நியமத்தர்களினதும் நன்மைக்காக ஓய்வூதிய மற்றும் சகாய நிதியங்களையும் திட்டங்களையும் தாபித்து ஒழுங்குபடுத்தலாமென்பதுடன் அத்தகைய ஏதேனும் நிதியத்துக்கு அல்லது திட்டத்துக்கு உதவுதொகைகளையும் அளிக்கலாம்.

(3) ஆணைக்குழுவானது பிணையங்கள் சந்தைகள், நிதி, சட்டம், பணப் பொருளியல் என்னும் விடயங்களின்மீதும் மற்றும் வேறு விடயங்களின்மீதும் தொழினுட்ப ஆளணியினருக்குப் பயிற்சியளித்தலை மேம்படுத்தலும் அதற்கு அனுசரணையளித்தலும் வேண்டுமென்பதுடன் இந்நோக்கத்துக்காக, ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு எண்பிக்கப்பட்ட திறமையைக்கொண்ட ஆணைக்குழுவின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் இலங்கையிலான அல்லது வெளிநாட்டிலான கற்கைச் செலவு தொகைகளைக் கொடுத்துத்தீர்ப்பதற்கு ஆணைக்குழு அதிகாரமளிக்கப்படுதலும் வேண்டும்.

(4) ஆணைக்குழுவின் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் ஏற்புடையற்பாலதான நடத்தைக்கோவையொன்றை ஆணைக்குழு தாபித்தல் வேண்டும்.

(5) ஆணைக்குழுவானது, பின்வரும் சந்தர்ப்பங்களில் எவரேனுமாளை ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு நியமித்தலாகாது; அத்தகைய ஆள்-

(அ) ஒரு நீதிமன்றத்தினால் அல்லது நியாயசபையினால் பாரதூரமான துர்நடத்தைக்குக் குற்றவாளியாக முன்னர் காணப்பட்டுள்ளவிடத்து அல்லது ஓர் ஒழுக்காற்றுக் குழுவினால் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு அமைந்தவராக்கப்பட்டுள்ளவிடத்து;

(ஆ) பதவியிலிருந்து முன்னர் நீக்கப்பட்டுள்ளவிடத்து; அல்லது

(இ) இச்சட்டத்தின், அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் ஏற்பாடுகளினது மீறுகையொன்றைப் புரிந்துள்ளவிடத்து.

(6) ஆணைக்குழுவின் வேண்டுகோளின்பேரில் பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் அரசியலமைப்பினால் தாபிக்கப்பட்ட பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும் சம்மதத்துடன், ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு ஆணைக்குழுவுக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(7) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(8) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(9) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்குச் சேவையாற்றுவதற்கு உடன்பட்டுள்ள எவரேனுமாளை ஆணைக்குழு தொழிலுக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால் ஆணைக் குழுவுக்கான ஏதேனும் சேவைக்காலப்பகுதி, அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்திற்கான சேவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(10) இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள ஏனைய அரச நிறுவனங்களுக்கு அல்லது ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைகளுக்கு, அத்தகைய நிறுவனத்திற்கும் அல்லது அதிகாரசபைக்கும் மற்றும் ஆணைக்குழுவுக்குமிடையே உடன்பட்டுக் கொள்ளப்பட்ட ஒரு தொழிலுக்கமர்த்துகையின்மீது மூன்று ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு அதன் அலுவலர்கள் அல்லது சேவையாளர்கள் மாற்றுச்சேவைக்கு விடுவிக்கப்படுவதனை ஆணைக்குழுவானது அத்தகைய அலுவலரின் அல்லது சேவையாளரின் சம்மதத்துடன் முன்மொழியலாம். மாற்றுச்சேவைக் காலப்பகுதியானது, ஆணைக்குழுவுக்கான சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

21\. (1) ஆணைக்குழுவின் வேண்டுகோளின்பேரில், ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், அத்தகைய அலுவலரின் அல்லது சேவையாளரின் மற்றும் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஆளும் சபையின் சம்மதத்துடன் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன், ஓய்வூதிய அல்லது சகாயநிதிய உரிமைகள் தொடர்பானவை உட்பட்டவையும் ஆணைக்குழுவினாலும் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஆளும் சபையினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக் கூடியவாறானவையுமான அத்தகைய நியதிநிபந்தனைகளின்மீது, ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எவரேனுமாள் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கப்படுமிடத்து, ஆணைக்குழுவின் வேறெவரேனும் அலுவலர்கள் அல்லது சேவையாளர்கள் எந்த ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராகவுள்ளனரோ அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அவர் அமைந்தவராதல் வேண்டும்.

22\. ஆணைக்குழுவின் எல்லா உறுப்பினர்களும், பணிப்பாளர் தலைமையதிபதியும், அலுவலர்களும் சேவையாளர்களும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையினதும் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தினதும் கருத்துக்குட்படவும் அவற்றின் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

23\. இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட ஆணைக் குழுவானது, அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருளமைத்துக்கொள்ளப்படுதலும் வேண்டும்.

## பாகம் II

## சந்தைகளும் சந்தை நிறுவனங்களும்

24\. இப்பாகத்தின் குறிக்கோளும் நோக்கமும் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) சந்தை நிறுவனங்களைத் தாபிப்பதன் ஊடாக இலங்கையில் நியாயமான, ஒழுங்கான, வெளிப்படையான மற்றும் வினைத்திறனான பிணையங்கள் சந்தையை மேம்படுத்தல்;

(ஆ) ஒரு பிணையங்கள் சந்தையின் பயனுள்ள மற்றும் வினைத்திறனான பணியாற்றுகையை அதிகரித்தல்; அத்துடன்

(இ) பிணையங்கள் சந்தையுடன் இணைந்துள்ள முறைமைசார் ஆபத்தைத் தணித்தல்.

### அத்தியாயம் 1

### பரிவர்த்தனைகள்

25\. (1) ஆளொருவர், ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட உரிமத்தின் அதிகாரத்தினாலன்றி, பரிவர்த்தனை ஒன்றைத் தாபித்தலோ, தொழிற்படுத்துதலோ அல்லது பேணுதலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவை மீறுகின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இருபத்தைந்து மில்லியன் ரூபாவைவிஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந்தாண்டுகளை

விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

26. (1) பரிவர்த்தனை ஒன்றாகத் தொழிற்படுவதற்கான உரிமத்துக்கான விண்ணப்பமொன்று ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட விதிகளின்மூலம் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆவணங்களுடனும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணங்களுடனும் சேர்த்து அத்தகைய முறையிலும் படிவத்திலும் ஆணைக்குழுவுக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, விண்ணப்பமொன்று கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றினால் மட்டுமே செய்யப்படுதல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவானது பின்வருவனபற்றித் திருப்திப்படுமிடத்து, தகுதியானவையென அது கருதுகின்றவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய, பரிவர்த்தனையொன்றாகத் தொழிற்படுவதற்கு விண்ணப்பகாரருக்கு உரிமமொன்றை வழங்கலாம்:-

(அ) விண்ணப்பகாரர் அதன் செயலிடங்களினூடாக வியாபாரஞ்செய்யப்படுகின்ற பிணையங்கள் தொடர்பாக ஒழுங்கான மற்றும் நியாயமான சந்தையைத் தொழிற்படுத்துவதற்கு ஆற்றலுடையதாகவிருக்கின்றது;

(ஆ) விண்ணப்பகாரர் அதன் தொழிலுடனும் தொழிற்பாடுகளுடனும் இணைந்துள்ள எவையேனும் ஆபத்துக்களைச் சாதுரியமானமுறையில் முகாமை செய்வதற்கு அவசியமான உட்கட்டமைப்பைக் கொண்டுள்ளது;

(இ) விண்ணப்பகாரர் (அ) என்னும் பந்தியின்கீழ் அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதில், பரிவர்த்தனையானது பொதுமக்களின் அக்கறைக்கு முரணாகச் செயலாற்றாதிருத்தல் வேண்டுமென்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான ஆளுகைக் கட்டமைப்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(ஈ) விண்ணப்பகாரர், பின்வருவன வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்குப் போதிய நிதிசார், மனித, தன்னியக்கமாக்கப்பட்ட முறைமைகளையும் வேறு மூலவளன்களையும் கொண்டுள்ளது:-

(i) அதன் செயலிடங்களினூடாக வியாபாரஞ் செய்யப்படுகின்ற பிணையங்கள் தொடர்பாக ஓர் ஒழுங்கான மற்றும் நியாயமான சந்தை;

(ii) அதன் தொழிலை நடாத்துவதற்காகப் போதிய மற்றும் தகுந்தமுறையில் சாதனமிடப்பட்ட வளவுகள்;

(iii) அதன் தொழிலை நடாத்துவதற்காகத் தகுதி வாய்ந்த ஆளணியினர்; அத்துடன்

(iv) ஆபத்துக்களை முகாமைசெய்வதற்கும் அவசர நிலைமைகளை எதிர்கொள்வதற்கும் போதிய கொள்ளளவு, பாதுகாப்பு ஒழுங்கேற்பாடுகள் மற்றும் செயலிடங்களுடன் தன்னியக்கமாக்கப்பட்ட முறைமைகள்;

(உ) விண்ணப்பகாரர் விதிகள்மூலம் பின்வருவனவற்றுக்காக ஏற்பாடு செய்கின்றது:-

(i) அதன் செயலிடங்களின் ஊடாக வியாபாரஞ் செய்யப்படுகின்ற பிணையங்கள் தொடர்பாக ஒழுங்கான மற்றும் நியாயமான சந்தைக்காகவும்;

(ii) வியாபாரப் பங்குபற்றுநர்களை அனுமதிப்பதற்காகவும்;

(iii) வாடிக்கையாளர்களைக் கையாளும்போது அதன் வியாபாரப் பங்குபற்றுநர்களின் தொழில் நடத்தையின் முறையான ஒழுங்குபடுத்துகைக்காகவும் மேற்பார்வைக்காகவும்;

(iv) நன்னடத்தையையும் உயர்வான தொழில் நேர்மையையும் கொண்டிராத ஆட்களை வியாபாரப் பங்குபற்றுநர்களாக ஏற்றங்கீகரிக்கப்படுவதிலிருந்து தவிர்ப்பதற்காகவும்;

(v) தொழிலைக் கொண்டுநடாத்துவதில் நீதியானவையும் ஒப்புரவானவையுமான நெறிகளுடன் ஒத்திராத நடத்தைக்காக அல்லது பரிவர்த்தனையின் விதிகளின் அல்லது இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் எவையேனும் ஏற்பாடுகளின் மீறுகைக்காக அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகத் தவறியமைக்காக வியாபாரப் பங்குபற்றுநரொருவரின்மீதும் அத்தகைய வியாபாரப் பங்குபற்றுநரின் சார்பில் செயலாற்றுகின்ற ஆளின்மீதும் குற்றப்பணங்களை விதித்தலுட்பட அவர்களை விலக்குவதற்காகவும் இடைநிறுத்துவதற்காகவும் அல்லது அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையெடுப்பதற்காகவும்;

(vi) எந்த நிபந்தனைகளின்கீழ் பிணையங்கள் நிரற்படுத்தப்படலாமோ அல்லது நிரலிலிருந்து அகற்றப்படலாமோ அந்த நிபந்தனைகளுக்காகவும்;

(vii) அத்தகைய நிரற்படுத்தப்பட்ட பிணையங்களில் வியாபாரஞ்செய்யப்படுவதனை ஆளுகின்ற நிபந்தனைகளுக்காகவும் பரிவர்த்தனையின்மீது அவற்றின் பிணையங்களை நிரற்படுத்தியுள்ள கம்பெனிகளினால் அல்லது வேறு உருவகங் களினால் பின்பற்றப்படவேண்டிய விதிகளுக் காகவும்;

(viii) அதன் செயலிடங்களின்மீது கையாளப்படக்கூடிய அல்லது வியாபாரஞ்செய்யப்படக்கூடிய பிணையங்களின் வகுப்பு அல்லது வகுப்புக்களுக்காகவும்;

(ix) சந்தைத் துர்நடத்தையைத் தடைசெய்தலுக்காகவும் மற்றும் புலனாய்வுகள் நடாத்தப்படும் முறைக்காகவும்;

(x) அதன் வியாபாரப் பங்குபற்றுநர்களின் தொழில் நடத்தைபற்றிய விசாரணைகளை அல்லது புலனாய்வுகளை நடாத்துவதற்காகவும்;

(xi) முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதற்காக அல்லது ஒழுங்கான மற்றும் நியாயமான வியாபாரத்தை நடாத்துவதற்காகக் கொடுக்கப்பட்ட ஏதேனும் பிணையத்தின் வியாபாரத்தை இடைநிறுத்துவதற்காகவும்;

(xii) பின்வருவோருக்கிடையே பிணக்குகளைக் கேட்டுத்தீர்மானிப்பதற்கு, அதன் உறுப்பினர்களுள் பெரும்பான்மையோர் வியாபாரப்

பங்குபற்று நா்களிலிருந்து அல்லது பரிவா்த்தனையிலிருந்து சுதந்திரமானவா்களாகவிருக்கும் ஒழுக்காற்றுக் குழுவொன்றை நியமிப்பதற்காகவும்:-

(அ) வியாபாரப் பங்குபற்றுநா்களுக்கும் அவா்களின் வாடிக்கையாளா்களுக்குமிடையே;

(ஆ) வியாபாரப் பங்குபற்றுநா்களுக்கிடையே;

(இ) வியாபாரப் பங்குபற்றுநா்களுக்கும் ஒரு பரிவா்த்தனைக்கும், ஒரு மத்திய வைப்பகத்துக்கும் அல்லது ஓா் உரிமம்பெற்ற தீா்வகத்துக்குமிடையே;

(ஈ) பரிவா்த்தனையில் நிரற்படுத்தப்பட்ட உருவகத்துக்கும் பரிவா்த்தனைக்குமிடையே;

(xiii) முதலீட்டாளா்களைப் பாதுகாப்பதற்கான தேவைக்கு உரிய கவனஞ்செலுத்தி, பரிவா்த்தனையின் தொழிலைப் பொதுவாகக் கொண்டு நடாத்துவதற்காகவும்; அத்துடன்

(ஊ) உரிமத்தை வழங்குவதன்மூலம் பொதுமக்களின் அக்கறைகள் அல்லது சந்தையின் முறையான ஒழுங்குபடுத்துகை பூா்த்திசெய்யப்படுதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழான விண்ணப்பகாரா் ஒருவா், விண்ணப்பம் தொடா்பாக ஆணைக்குழு தேவைப்படுத்தக் கூடியவாறாக அத்தகைய மேலதிகத் தகவல்களை வழங்குதல் வேண்டும்.

(5) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஆணைக்குழுவானது, முதலீட்டாளா்களைப் பாதுகாப்பதற்காக அல்லது பிணையங்கள் சந்தையின் முறையான ஒழுங்குபடுத்துகைக்காக நியதிநிபந்தனைகளைத் திருத்துதல், இல்லாதொழித்தல் அல்லது விதித்தல் தோதானதாகவுள்ளதென ஆணைக்குழு திருப்திப்படின், அவ்வாறு செய்யலாம்.

27. (1) பரிவா்த்தனையொன்றின் செயலிடங்களின் ஊடாக வியாபாரஞ் செய்யப்படுகின்ற பிணையங்களில் ஒழுங்கான மற்றும் நியாயமான சந்தையை உறுதிப்படுத்துதல் அதன் கடமையாதல் வேண்டும்.

(2) பரிவா்த்தனையானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதன் கடமையைப் புரிவதில் பின்வருமாறு செய்தல் வேண்டும்:-

(அ) முதலீட்டாளா்களின் பாதுகாப்புக்கான தேவையைக் குறிப்பாகக் கருத்திற்கொண்டு பொதுமக்களின் அக்கறை கருதிச் செயலாற்றுதல் வேண்டும்;

(ஆ) கம்பெனிகள் தொடா்பான ஏதேனும் சட்டத்தின்கீழ் பூா்த்திசெய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்ற ஏதேனும் அக்கறை (அ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட அக்கறையுடன் முரண்படுமிடத்து, (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அக்கறை மேலோங்கிநிற்றல் வேண்டுமென உறுதிப்படுத்துதல் வேண்டும்; அத்துடன்

(இ) அதன் தொழிலுடனும் தொழிற்பாடுகளுடனும் இணைந்துள்ள எவையேனும் ஆபத்துக்களைச் சாதுரியமானமுறையில் முகாமைசெய்தல் வேண்டும்.

(3) வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், பரிவா்த்தனையொன்றின் பணிப்பாளா், முதலீட்டாளா்களைப் பாதுகாப்பதற்கான தேவையைக் குறிப்பாகக் கருத்திற்கொண்டு, பொதுமக்களின் அக்கறைகருதி எல்லா நேரங்களிலும் செயலாற்றுவதற்கான கடமையைக் கொண்டுள்ளாரென்பதுடன், இச்சட்டத்தின் கீழான கடமைக்கும் வேறேதேனும் சட்டத்தின்கீழ் பணிப்பாளரின் கடமைக்கும் இடையே ஒரு முரண்பாடு இருக்குமிடத்து, இச்சட்டத்தின்கீழான கடமை மேலோங்கிநிற்றலும் வேண்டும்.

(4) பரிவா்த்தனையானது, அதன் விதிகளுடன் இணங்கியொழுகுவதனைக் கண்காணிக்கும் அல்லது அவற்றுடன் இணங்கியொழுகு வதனை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக அதன் விதிகளின்கீழ் ஏற்பாடுசெய்யப்படக்கூடியவாறான தோதான நடவடிக்கையையெடுப்பது அதன் கடமையாதல் வேண்டும்.

(5) பரிவா்த்தனையொன்று பின்வருவனபற்றி அறியவந்தால் ஆணைக்குழுவுக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்:-

(அ) இச்சட்டத்தின்கீழ், அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்கீழ், விதிகளின்கீழ் அல்லது பணிப்புரைகளின்கீழ் குறித்துரைக்கப்படக்கூடியவாறாகக் குறைந்தபட்ச நிதிசாா் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கு ஏதேனும் வியாபாரப் பங்குபற்றுநருக்குள்ள ஆற்றல் உட்பட, ஏதேனும் வியாபாரப் பங்குபற்றுநா் அதன் உரிமமளிக்கப்பட்ட தொழில் தொடா்பில் அதன் கடப்பாடுகளை எதிா்கொள்வதனைப் பங்கமானமுறையில் பாதிக்கின்ற, அல்லது பங்கமான முறையில் பாதிக்கக்கூடிய சாத்தியங்கொண்ட ஏதேனும் கருமம்; அல்லது

(ஆ) ஏதேனும் ஒழுங்கீனம், இச்சட்டத்தின், ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் ஏதேனும் ஏற்பாட்டின் மீறுகை, அல்லது பரிவா்த்தனையின் அபிப்பிராயத்தில், ஏதேனும் வியாபாரப் பங்குபற்றுநரின் அல்லது சம்பந்தப்பட்ட வியாபாரப் பங்குபற்றுநரின் பிரதான நிறைவேற்றலுவலரின் அல்லது பணிப்பாளா்களின் அல்லது முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் நிதிசாா் நற்கணிப்பு அல்லது நிதிசாா் நோ்மை நியாயமானமுறையில் பாதிக்கப்படலாம் என்பதைச் சுட்டிக்காட்டுகின்ற அல்லது சுட்டிக்காட்டக் கூடிய வேறேதேனும் கருமம்.

(6) பரிவா்த்தனையொன்று, (5) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட செயற்பாடுகள் இடம்பெறுவதன்மேல், அதன் வியாபாரப் பங்குபற்றுநா்களுள் எதற்குமெதிராக எச்சரிக்கையொன்றை வழங்குமிடத்து, ஒரு தண்டத்தை விதிக்குமிடத்து, அதனை இடைநிறுத்துமிடத்து அல்லது வெளியேற்றுமிடத்து அல்லது அதற்கெதிராக வேறேதேனும் ஒழுக்காற்று வழிமுறையை விதிக்குமிடத்து, அது, ஏழு நாட்களினுள் பின்வரும் விபரங்களை ஆணைக்குழுவுக்கு எழுத்தில் கொடுத்தல் வேண்டும்:-

(அ) வியாபாரப் பங்குபற்றுநரின் தொழிலினது பெயரும் முகவரியும்;

(ஆ) எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கான காரணமும் அதன் தன்மையும்;

(இ) இடைநிறுத்தற் காலப்பகுதியும் தண்டம் ஏதேனுமிருப்பின் அதன் தொகையும்; அத்துடன்

(ஈ) எடுக்கப்பட்ட வேறேதேனும் ஒழுக்காற்று வழிமுறை.

28. (1) ஆணைக்குழுவானது,-

(அ) எழுத்திலான அறிவித்தல்மூலம், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதாக 26 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதாக்கலாம்; அல்லது

(ஆ) எழுத்திலான அறிவித்தல்மூலம், அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறும்வகையில் அத்தகைய செயலிடங்களை வழங்காதொழியும்படி அல்லது தொழிற்படுத்தாதொழியும்படி, அல்லது அத்தகைய சேவைகளை வழங்காதொழியும்படி பரிவர்த்தனையைப் பணிக்கலாம்.

(2) ஆணைக்குழுவானது, முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதற்காக அல்லது பொதுமக்கள் அக்கறைகருதி அல்லது பிணையங்கள் சந்தையை முறையாக ஒழுங்குபடுத்துவதற்காக (1) ஆம் உட்பிரிவின்கீழ் உரிமத்தை இல்லாதாக்குதல் அல்லது பணிப்புரை வழங்குதல் தோதானதென ஆணைக்குழு திருப்திப்பட்டாலொழிய, பின்வரும் சூழ்நிலைகளுள் ஏதேனுமொன்று இடம்பெறுமிடத்து அவ்வாறு செய்தலாகாது:-

(அ) பரிவர்த்தனையானது அதன் பிணையங்கள் சந்தையைத் தொழிற்படுத்தாதொழிகின்றமை.

(ஆ) பரிவர்த்தனையானது, இலங்கையினுள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, ஒடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றமை அல்லது வேறுவகையாகக் கலைக்கப்படுகின்றமை;

(இ) பரிவர்த்தனையானது, அதன் உரிமத்தின் ஏதேனும் நியதியை அல்லது நிபந்தனையை மீறியுள்ளமை அல்லது இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறுக்குக் குற்றஞ்சாட்டப்படுகின்றமை;

(ஈ) பரிவர்த்தனையானது, இச்சட்டத்தின்கீழ் வழங்கப்படு கின்ற அதன் உரிமத்தின் அல்லது பணிப்புரையின் ஒரு நிபந்தனைக்கு இணங்கியொழுகத் தவறியுள்ளமை அல்லது இச்சட்டத்தின்கீழான ஏதேனும் ஏற்பாட்டுக்கு அல்லது தேவைப்பாட்டுக்கு வேறுவகையில் இணங்கியொழுகத் தவறுகின்றமை;

(உ) இருபத்தாறாம் பிரிவின் நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட ஏதேனும் தகவல் முக்கியமானவொரு விபரத்தில் பொய்யானதாக அல்லது பிழைவழியுய்ப்பதாக இருந்தமை அல்லது அதிலிருந்து முக்கியமான விட்டுவிடுகையொன்று இருக்கின்றமை;

(ஊ) பரிவர்த்தனைக்கெதிரான தீர்ப்புத் தனிசொன்று முழுமையாக அல்லது பகுதியளவில் கொடுத்துத் தீர்க்கப்படாதுள்ளமை;

(எ) பரிவர்த்தனையின் ஏதேனும் ஆதனம் தொடர்பாக அல்லது அது தொடர்பில் இலங்கையினுள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, பெறுநரொருவர், பெறுநரொருவரும் முகாமையாளரும், ஒழிப்போன் அல்லது சமமான ஆள் நியமிக்கப்பட்டுள்ளமை;

(ஏ) பரிவர்த்தனையானது, இலங்கையினுள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, அதன் கடன்கொடுத்தோருடன் கொடுத்துத்தீர்க்கப்படாதுள்ள ஓர் இணக்கப்பாட்டை அல்லது ஒழுங்கேற்பாட்டுத் திட்டத்தைச் செய்துகொண்டுள்ளமை; அல்லது

(ஐ) பரிவர்த்தனையானது, அதன் சொந்த விருப்பத்தின் பேரில் பரிவர்த்தனையொன்றாக அதன் உரிமத்தை இல்லாதாக்கும்படி ஆணைக்குழுவுக்கு விண்ணப்பித்து, ஆணைக்குழுவானது அவ்வாறு செய்வது தகுதியானதெனக் கருதுகின்றமை.

(3) இரண்டாம் உட்பிரிவின் பந்தி (அ) வின் நோக்கங்களுக்காக, பரிவர்த்தனையொன்று இருவாரங்களை விஞ்சுகின்ற காலப்பகுதிக்கு அதன் பிணையங்கள் சந்தையைத் தொழிற்படுத்தாதொழிந்துள்ளவிடத்து, அது, ஆணைக்குழுவின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் அதன் பிணையங்கள் சந்தையைத் தொழிற்படுத்தாதொழிந்துள்ளதெனக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் உரிமமொன்று இல்லாதாக்கப்படுதல் அல்லது பணிப்புரையொன்று வழங்கப்படுதல் எவ்வாறிருப்பினும், ஆணைக்குழுவானது, பின்வரும் நோக்கங்களுக்காக, ஆணைக்குழு அறிவித்தலில் குறித்துரைக்கக்கூடியவாறு இல்லாதாக்குகையினால் அல்லது பணிப்புரையினால் பாதிக்கப்பட்ட அத்தகைய செயற்பாடுகளைக் கொண்டுநடாத்துவதற்கென, இல்லாதாக்குகை அல்லது பணிப்புரை பயனுடையதாக வரவேண்டிய தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் தொடர்ந்திருப்பதற்குப் பரிவர்த்தனையை அனுமதிக்கலாம்:-

(அ) பரிவர்த்தனையின் தொழிற்பாடுகளை மூடிவிடும் அல்லது அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட சேவைகளை வழங்காதொழியும் நோக்கத்துக்காக;

(ஆ) முதலீட்டாளர்களின் அக்கறையைப் பாதுகாக்கும் நோக்கத்துக்காக; அல்லது

(இ) பொதுமக்களின் அக்கறைகருதி.

(5) நான்காம் உட்பிரிவின்கீழ் தொடர்ந்திருப்பதற்குப் பரிவர்த்தனையொன்றுக்கு ஆணைக்குழுவானது அனுமதி வழங்கியுள்ளவிடத்து, அப்பரிவர்த்தனையானது, அத்தகைய அனுமதிக்கிணங்கச் செயற்பாடுகளை அது கொண்டுநடாத்துவதன் காரணமாக (1) ஆம் உட்பிரிவை மீறியுள்ளதாகக் கருதப்படுதலாகாது.

(6) ஆணைக்குழுவானது (1) ஆம் உட்பிரிவின் பந்தி (அ) வின்கீழ் செயலாற்றுகின்றவிடத்து, ஆணைக்குழு அமைச்சருக்கான அறிவித்தலுடன் முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதனை அல்லது பொதுமக்களின் அக்கறைகளைப் போற்றிக்காப்பதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமெனக் கருதப்படும் எவையேனும் நடபடிகளை எடுத்தல் வேண்டும்.

(7) ஆணைக்குழுவானது, கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்றைப் பரிவர்த்தனைக்கு அளிக்காமல், (1) ஆம் உட்பிரிவின் கீழான ஏதேனும் நடவடிக்கையை எடுத்தலாகாது.

(8) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவின் முடிபினால் இன்னலுறுகின்ற பரிவர்த்தனையொன்று, அத்தகைய அறிவித்தல் பெறப்பட்டபின்னர் பதினான்கு நாட்களினுள் அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(9) எட்டாம் உட்பிரிவின்கீழான மேன்முறையீடொன்று செய்யப்பட்டமை எவ்வாறிருப்பினும், இப்பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கை, அமைச்சரின் முடிபு பெறப்படும்வரை பயனுடையதாகத் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(10) அமைச்சர், (8) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட மேன்முறையீட்டின்மீது-

(அ) மேன்முறையீட்டை அனுமதித்து உரிமத்தின் அல்லது பணிப்புரையின் இல்லாதாக்குகையை இல்லாதொழிக்கும் படி ஆணைக்குழுவைப் பணிக்கலாம்; அல்லது

(ஆ) மேன்முறையீட்டுக்கு அனுமதிமறுக்கலாம்.

(11) ஆணைக்குழுவானது, அமைச்சரின் பணிப்புரைக்குப் பயன்கொடுத்தல் வேண்டும்.

(12) பதினோராம் உட்பிரிவுக்கமைய, இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமத்தின் அல்லது ஏதேனும் பணிப்புரையின் ஏதேனும் இல்லாதாக்குகைபற்றி ஆணைக்குழுவானது பகிரங்க அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

29. இருபத்தெட்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஓர் உரிமத்தின் ஏதேனும் இல்லாதாக்குகை அல்லது ஒரு பணிப்புரையின் ஏதேனும் வழங்குகை-

(அ) பரிவர்த்தனையினால் தொழிற்படுத்தப்பட்ட பிணையங்கள் சந்தையின்மீது செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை, கொடுக்கல்வாங்கல் அல்லது ஒழுங்கேற்பாடு, 28 ஆம் பிரிவின்கீழ் உரிமம் இல்லாதாக்கப்பட்டதற்குமுன்னர் அல்லது பணிப்புரை வழங்கப்பட்டதற்குமுன்னர் அல்லது 28 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவு ஏற்புடையதாகுமிடத்து, அதற்குப் பின்னர் செய்துகொள்ளப்பட்டதாயினுஞ்சரி, அவ்வுடன் படிக்கையை, கொடுக்கல்வாங்கலை அல்லது ஒழுங்கேற்பாட்டை வறிதாக்கும் அல்லது பாதிக்கும் வகையில் தொழிற்படுதலாகாது; அல்லது

(ஆ) அத்தகைய உடன்படிக்கை, கொடுக்கல்வாங்கல் அல்லது ஒழுங்கேற்பாட்டின்கீழ் எழுகின்ற ஏதேனும் உரிமையை, கடப்பாட்டை அல்லது பொறுப்பைப் பாதிக்கும்வகையில் தொழிற்படுதலாகாது.

30. (1) ஆணைக்குழுவானது பரிவர்த்தனையுடனான கலந்தாலோசனையின்பின்னர், பின்வரும் காரணங்களுக்காகப் பிணையங்கள் சந்தையின்மீது பிணையங்களில் வியாபாரஞ் செய்வதற்காக ஒழுங்கான மற்றும் நியாயமான சந்தை தடுக்கப்படுகின்றது அல்லது தடுக்கப்படக்கூடிய சாத்தியமுள்ளதென ஆணைக்குழு அபிப்பிராயப்படின், ஐந்து தொழில்நாட்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு அதன் பிணையங்கள் சந்தையை மூடிவிடும்படி பரிவர்த்தனையைப் பணிக்கலாம்:-

(அ) இலங்கையினுள் அவசரநிலைமை அல்லது இயற்கைப் பேரழிவு இடம்பெற்றுள்ளமை; அல்லது

(ஆ) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே பொருளாதார அல்லது நிதிசார் இக்கட்டானநிலை அல்லது வேறேதேனும் ஒத்த சூழ்நிலை உள்ளமை.

(2) ஆணைக்குழுவானது, ஒவ்வொன்றும் ஐந்து தொழில் நாட்களை விஞ்சாத எவையேனும் மேலதிகக் காலப்பகுதிகளுக்காக (1) ஆம் உட்பிரிவின்கீழ் பிணையங்கள் சந்தையின் மூடிவிடுகையை நீடிக்கலாம்.

(3) ஆணைக்குழுவானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரையில் மூடிவிடுகைக்கான ஏதுக்களையும் (2) ஆம் உட்பிரிவின்கீழ் மூடிவிடுகையின் ஏதேனும் நீடிப்புக்கான ஏதுக்களையும் குறித்துரைத்தல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவானது, செயல்முறைக்குகந்தவரை விரைவாக, (1) ஆம் உட்பிரிவின்கீழான பணிப்புரையின் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழான நீடிப்பின் பிரதியொன்றைப் பரிவர்த்தனைக்குக் கொடுத்தல் வேண்டுமென்பதுடன், அப்பணிப்புரை அல்லது நீடிப்பு வலுவிலிருக்கையில் (1) ஆம் உட்பிரிவின்கீழான பணிப்புரைக்கு அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழான நீடிப்புக்குப் பயன்கொடுப்பதற்கு, நியாயமானமுறையில் அது செய்வதற்கு இயன்றதாகவுள்ள எல்லாவற்றையும் செய்யும்படி பரிவர்த்தனையைப் பணித்தலும் வேண்டும்.

(5) ஆணைக்குழுவானது இப்பிரிவின்கீழ் அதன் தத்துவத்தைப் பிரயோகிக்குமிடத்து, இப்பிரிவின்கீழான தத்துவத்தைப் பிரயோகிப்பதற்கான காரணங்களை எடுத்துக்கூறி அமைச்சருக்கு அது அறிவித்தல் வேண்டும்.

(6) இப்பிரிவில்-

"தொழில் நாள்" என்பது, மூடிவிடுகையில்லாதிருப்பின், எந்த நாளன்று பரிவர்த்தனையின்மீது அலுவலக முறையான வியாபாரஞ்செய்தல் நடைபெறுகின்றதோ அந்த ஏதேனும் நாள் என்று பொருளாகும்;

"நியாயமான சந்தை" என்பது, நிரம்பல் மற்றும் கேள்வி நிர்ப்பந்தங்களைப் பிரதிபலிக்கின்ற ஒரு சந்தையை உள்ளடக்கும்.

31. (1) பரிவர்த்தனையொன்று அத்தகைய பரிவர்த்தனையின்மீது அதன் சொந்தப் பிணையங்களை நிரற்படுத்துவதற்கு முடிபுசெய்யுமிடத்து, அது ஆணைக்குழுவின் மற்றும் நிதியமைச் சின் முன்னங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(2) பரிவர்த்தனையானது பரிவர்த்தனையின் அவசியமான எல்லா நிரற்படுத்தல் தேவைப்பாடுகளுக்கும் இணங்கியொழுகியுள்ளதென ஆணைக்குழு திருப்திப்படுவதன்மீது அத்தகைய பரிவர்த்தனையின்மீது அதன் பிணையங்களை நிரற்படுத்துவதற்குப் பரிவர்த்தனைக்கு அங்கீகாரமளிக்கலாம்.

(3) அத்தகைய அங்கீகாரமளிக்கப்பட்டதன்மீது, அத்தகைய பரிவர்த்தனை-

(அ) அத்தகைய பரிவர்த்தனையின்மீது நிரற்படுத்துவதிலிருந்து எழக்கூடிய நிகழ்தகு அக்கறை முரண்பாடுகளைக் கையாளுவதற்காகவும்;

(ஆ) அத்தகைய பரிவர்த்தனையின் பிணையங்களில் வியாபாரஞ்செய்தலின் நேர்மையை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காகவும்; அத்துடன்

(இ) அத்தகைய பரிவர்த்தனையானது நிரற்படுத்தப்பட்ட கம்பெனியாக வரவிருந்ததாயின், நிரற்படுத்தப்பட்ட கம்பெனியாகக் கடப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்காகவும்,

ஆணைக்குழு தேவைப்படுத்தக்கூடியவாறான ஒழுங்கேற்பாட்டைச் செய்துகொள்ளுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய பரிவர்த்தனை அத்தகைய தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.

(4) அத்தகைய பரிவர்த்தனையின் நிரற்படுத்தல் தேவைப்பாடுகள், அத்தகைய பரிவர்த்தனைக்குப் பதிலாகப் பின்வருவன தொடர்பாக முடிபுகளைச் செய்வதற்கும் நடவடிக்கையெடுப்பதற்கும் ஆணைக்குழுவை அனுமதிப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்:-

(அ) அத்தகைய பரிவர்த்தனையின் அலுவலகமுறையான நிரலுக்குப் பரிவர்த்தனையைச் சேர்த்தல் அல்லது அதிலிருந்து அகற்றுதல்;

(ஆ) பரிவர்த்தனையின் பிணையங்கள் அத்தகைய பரிவர்த்தனையின்மீது நிரற்படுத்தப்படுவதனை அல்லது வியாபாரஞ்செய்யப்படுவதனை நிறுத்துதல் அல்லது இடைநிறுத்துதல்; அல்லது

(இ) தொடர்ச்சியான நிரற்படுத்தல் தேவைப்பாடுகள் அல்லது (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்துக்காக ஆணைக்குழு தகுதியெனக் கருதுகின்றவாறான அத்தகைய வேறு கருமங்கள்.

(5) மூன்றாம் உட்பிரிவின்கீழான ஒழுங்கேற்பாடொன்று, அவ்வொழுங்கேற்பாட்டின்கீழ் அல்லது வேறுவகையாக ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சேவைகளுக்காக ஆணைக்குழு தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய கட்டணங்களைப் பரிவர்த்தனையானது ஆணைக்குழுவுக்குச் செலுத்துவதற்கு ஏற்பாடுசெய்யலாம்.

(6) பரிவர்த்தனையொன்றின் விதிகளை அங்கீகரிப்பதற்கு அல்லது திருத்துவதற்கு ஆணைக்குழுவுக்குள்ள தத்துவங்களுக்குப் பங்கமின்றி, ஆணைக்குழுவானது, எழுத்திலான அறிவித்தல் மூலம் -

(அ) அத்தகைய பரிவர்த்தனையின் பிணையங்களின் நிரற்படுத்தலுக்காக அல்லது வியாபாரஞ்செய்தலுக்காக விண்ணப்பிக்கும் நோக்கத்துக்காக அத்தகைய பரிவர்த்தனையின் நிரற்படுத்தல் தேவைப்பாடுகளைத் திரிபுபடுத்தலாம்; அல்லது

(ஆ) ஏதேனும் நிரற்படுத்தல் தேவைப்பாட்டிலிருந்து அத்தகைய பரிவர்த்தனைக்கு விலக்களிக்கலாம்.

## அத்தியாயம் 2

## தீர்வக இல்லம்

32. இவ்வத்தியாயத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய-

"மத்திய மறுதிறத்தவர்" என்பது, ஒவ்வொரு வியாபாரத்துக்கும் உத்தரவாதமளித்து ஒவ்வொரு விற்பனையாளருக்கும் வாங்குநராகவும், ஒவ்வொரு வாங்குநருக்கும் விற்பனையாளராகவும் வருவதன்மூலம் பிணையங்கள் சந்தையின்மீதான வியாபாரங்களினது தீர்விலும் தீர்ப்பனவிலும் ஈடுபடுகின்றவொரு சட்ட ஆள் என்று பொருளாகும்;

"தவறுகை வழக்குநடவடிக்கைகள்" என்பது, தீர்வக இல்லமொன்றினால் அதன் தவறுகை விதிகளின்கீழ் எடுக்கப்பட்ட எவையேனும் வழக்குநடவடிக்கைகள் அல்லது வேறு நடவடிக்கை என்று பொருளாகும்;

"தவறுகை விதிகள்" என்பது, உரிமமளிக்கப்பட்ட ஒரு தீர்வக இல்லம் தொடர்பாக, ஒரு தீர்வக உறுப்பினர் எந்தத் தீர்த்துவைக்கப்படாத சந்தை ஒப்பந்தங்களுக்குத் திறத்தவரொருவராக உள்ளாரோ அந்தத் தீர்த்து வைக்கப்படாத சந்தை ஒப்பந்தங்கள் எல்லாம் தொடர்பிலும் அல்லது எவை தொடர்பிலுமான அதன் கடப்பாடுகளை எதிர்கொள்வதற்கு அத்தீர்வக உறுப்பினர் தவறியிருப்பின், தவறுகை வழக்குநடவடிக்கைகளைத் தொடங்குவதற்காக ஏற்பாடுசெய்கின்ற தீர்வக இல்லத்தின் அத்தகைய விதிகள் என்று பொருளாகும்;

"தவறுகையாளர்" என்பது, எவையேனும் தவறுகை வழக்குநடவடிக்கைகளின் விடயமாகவுள்ளவொரு தீர்வக உறுப்பினர் என்று பொருளாகும்;

"சந்தை விதிப்பனவு" என்பது,-

(அ) உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தினால் வைத்திருக்கப்படுகின்றதும் அல்லது அதனிடம் வைப்பிலிடப்படுகின்றதும் தீர்வக இல்லமொன்றின் விதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறானதுமான ஏதேனும் ஆதனத்தின் மீது; அத்துடன்

(ஆ) ஒரு சந்தை ஒப்பந்தத்தைத் தீர்ப்பனவு செய்தலை உறுதிப்படுத்தி, உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லம் சம்பந்தமாக நேரடியாக எழுகின்ற பொறுப்புக்களுக்குப் பிணைப்பொறுப்பளிக்கும் நோக்கத்துக்காக,

உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லமொன்றின் சார்பில் வழங்கப்பட்ட, நிலையானதாயினுஞ்சரி அல்லது மிதப்பதாயினுஞ்சரி, ஒரு விதிப்பனவு என்று பொருளாகும்;

"சந்தை இணைப்பொருள்" என்பது, உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லமொன்றினால் சந்தை ஒப்பந்தங்களின் செயல் நிறைவேற்றுகையை உறுதிப்படுத்தி, உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லம் சம்பந்தமாக நேரடியாக எழுகின்ற பொறுப்புக்களுக்குப் பிணைப்பொறுப்பளிக்கும் நோக்கத்துக்காக உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தினால் வைத்திருக்கப்பட்ட அல்லது அதனிடம் வைப்பிலிடப்பட்ட உரிமமளிக்கப்பட்ட அத்தீர்வக இல்லத்தின் விதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறு வேறேதேனும் வடிவத்திலான இணைப்பொருளில் கொடுக்கப்பட்ட ஏதேனும் ஆதனம் அல்லது எவையேனும் உத்தரவாதங்கள் என்று பொருளாகும்;

"சந்தை ஒப்பந்தம்" என்பது,-

(அ) ஓர் உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தின் தீர்வுச் செயலிடத்தைப் பயன்படுத்தி கொடுக்கல்வாங்கல்களின் தீர்வு மற்றும் தீர்ப்பனவு நோக்கத்துக்காக ஒரு புதுப்பித்தலைப் பின்பற்றி ஒரு தீர்வக உறுப்பினருடன் உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தினால் செய்துகொள்ளப்பட்டதும் உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தின் விதிகளுக்கு அமைந்ததுமானவோர் ஒப்பந்தம்; அல்லது

(ஆ) உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லமொன்றின் தீர்வுச் செயலிடத்தைப் பயன்படுத்தியும் உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தின் விதிகளுக்கிணங்கவும், பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்டவொரு புதுப்பித்தல் இடம்பெறவுள்ளதாயினுஞ்சரி அல்ல வாயினுஞ்சரி, தீர்வு காணப்படுகின்றதும் அல்லது தீர்வு காணப்படவுள்ளதும் அல்லது தீர்ப்பனவு செய்யப்படுகின்றதும் அல்லது தீர்ப்பனவு செய்யப்படவுள்ளதுமான ஒரு கொடுக்கல்வாங்கல், என்று பொருளாகும்;

"இயைபான பதவிவகிப்பவர்" என்பது,-

(அ) ஒரு கம்பெனியின் ஒழிப்போனாக, இடையேற்பாட்டு ஒழிப்போனாக, பெறுநராக அல்லது முகாமையாளராக அல்லது சமமான ஆளொருவராக அக்கம்பெனி தொடர்பாகச் செயலாற்றுகின்ற எவரேனும் ஆள்; அல்லது

(ஆ) வங்கிமுறிவு வழக்கு நடவடிக்கைகளைப் பின்பற்றி நியமிக்கப்பட்ட எவரேனுமாள், என்று பொருளாகும்.

33. ஒரு பரிவர்த்தனையில் இடம்பெறுகின்ற பிணையங்கள் கொடுக்கல்வாங்கல்களைத் தீர்வுசெய்து தீர்ப்பனவு செய்வதற்கு உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லமொன்று தாபிக்கப்படலாம்.

34. (1) ஆளொருவர், இவ்வத்தியாயத்தின்கீழ் தீர்வக இல்லம் ஒன்றைத் தாபிப்பதற்கு அல்லது தொழிற்படுத்துவதற்கு அவ்வாளுக்கு உரிமமளிக்கப்பட்டிருந்தாலொழிய, உரிமமளிக்கப்பட்ட பரிவர்த்தனையில் அல்லது சந்தைத் தொழிற்படுத்துநருடன் பிணையங்கள் கொடுக்கல்வாங்கல்களில் தீர்வு அல்லது தீர்ப்பனவு நோக்கத்துக்காக உரிமமளிக்கப்பட்ட தீர்வகச் செயலிடமொன்றைத் தாபித்தலோ, தொழிற்படுத்துதலோ அல்லது பேணுதலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இருபத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் விலக்களிக்கப்பட்ட பிணையங்களுக்கான தீர்வகச் செயலிடங்களை அல்லது இலங்கை மத்திய வங்கியினால் புறநீங்கலாக வழங்கப்பட்ட ஏதேனும் தீர்வகச் செயலிடத்தை அல்லது இச்சட்டத்தில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு பிணையங்களின் மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பிணையங்களின் தீர்ப்பனவுக்கும் தீர்வுக்கும் ஏற்பாடுசெய்கின்ற ஒன்றிணைக்கப்பட்ட மத்திய மறுதிறத்தவராகச் செயலாற்றுகின்ற ஒரு தீர்வகச் செயலிடத்தை வழங்குகின்ற எவரேனுமாளுக்கு (1) ஆம் உட்பிரிவு ஏற்புடையதாதலாகாது.

35. (1) உரிமத்தின்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய தீர்வக இல்லமொன்றைத் தாபித்துத் தொழிற்படுத்துவதற்கு ஆணைக்குழு விண்ணப்பகாரரொருவருக்கு அதனை வழங்கலாம்.

(2) முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதற்காக அல்லது உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லமொன்றின் முறையான ஒழுங்கு படுத்துகைக்காக உரிமத்தைத் திருத்துதல், இல்லாதொழித்தல் அல்லது அதற்குப் புதிய நியதிநிபந்தனைகளை விதித்தல் தோதாகவுள்ளதென ஆணைக்குழு திருப்திப்படின் அவ்வாறு செய்யலாம்.

36. (1) ஓர் உரிமமளிக்கப்பட்ட பரிவர்த்தனையில் அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநரில் பிணையங்கள் கொடுக்கல்வாங்கல்களின் தீர்வுக்கும் மற்றும் தீர்ப்பனவுக்கும் உத்தரவாதமளிப்பதற்கு மத்திய மறுதிறத்தவராக அல்லது வேறுவகையாகச் செயலாற்றுகின்ற தீர்வக இல்லமொன்றைத் தாபிப்பதற்கான அல்லது தொழிற்படுத்துவதற்கான உரிம மொன்றுக்கான விண்ணப்பமொன்று, விதிகளின்மூலம் ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் படிவத்திலும் ஆணைக்குழுவுக்குச் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணத்துடன் சேர்த்து அனுப்பப்படுதலும் வேண்டும்.

(2) உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லமொன்றைத் தாபிப்பதற்கான அல்லது தொழிற்படுத்துவதற்கான உரிமமொன்றுக்கான விண்ணப்பம் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றினால் மட்டுமே செய்யப்படுதல் வேண்டும்.

(3) விண்ணப்பகாரர், விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த நேரத்தில், இச்சட்டத்தின், அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் அல்லது விதிகளின் தேவைப்பாடுகளுக்கிணங்கியொழுகுவதற்கு அவசியமான எல்லா ஒழுங்கேற்பாடுகளையும் விண்ணப்பகாரர் நிலைநாட்டியுள்ளாரென ஆணைக்குழுவைத் திருப்திப்படுத்துவதற்கு அவசியமான எல்லாத் தகவல்களையும் வழங்குதல் வேண்டும்.

(4) (இதனகத்துப்பின்னர் "தீர்வக விதிகள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய தீர்வக இல்லத்தின் விதிகள், பின்வருவனவற்றுக்கு ஏற்பாடுசெய்யலாம்:-

(அ) அதன் தீர்வகச் செயலிடங்களின் ஊடாகத் தீர்வு செய்யப்படுகின்ற பிணையங்கள் தொடர்பாகத் தீர்வகச் செயலிடங்களை வினைத்திறனாக வழங்குதல்;

(ஆ) தீர்வக உறுப்பினர்கள் எந்த ஒப்பந்தங்களின்கீழ் உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தின் விதிகளினால் பிணிக்கப்படுவதற்கு உடன்படுவார்களோ, அந்த ஒப்பந்தங்களைத் தீர்வக உறுப்பினர்களுடன் செய்து கொள்வதற்கான தேவைப்பாடு;

(இ) அத்தகைய தீர்வக உறுப்பினர்களைத் தீர்வக இல்லத்துக்கு அனுமதிப்பதற்கான வெளிப்படையான மற்றும் பக்கச்சார்பற்ற கட்டளைக்கற்கள் உட்பட தீர்வக உறுப்பினர்களை அனுமதித்தல்;

(ஈ) அதன் தீர்வகச் செயலிடங்களைப் பயன்படுத்துகின்ற அதன் தீர்வக உறுப்பினர்களின் பயனுள்ள ஒழுங்குபடுத்துகையும் மேற்பார்வையும்;

(உ) தீர்வக உறுப்பினர்களிடமிருந்து உத்தரவாதங்களை அல்லது இணைப்பொருட்களை ஏற்றுக்கொள்ளல் தொடர்பானவையும் அத்தகைய உத்தரவாதங்களை அல்லது இணைப்பொருட்களை வினைத்திறனாக முகாமைசெய்வதற்கானவையுமான நிபந்தனைகள்;

(ஊ) தீர்ப்பனவு உத்தரவாத நிதியமொன்றைத் தாபித்தலும் ஒரு சாதூரியமான ஆபத்து முகாமை முறைமையை அமுலாக்குதலும்;

(எ) தீர்வக உறுப்பினர்களின் கடப்பாடுகளும் மூலதனம், உள்ளகக் கணக்காய்வு மற்றும் ஆபத்து முகாமை தொடர்பான குறைந்தபட்சத் தேவைப்பாடுகளும்;

(ஏ) (i) தீர்வக இல்லத்துக்கும் அதன் தீர்வக உறுப்பினர்களுக்குமிடையே; அத்துடன்

(ii) தீர்வக உறுப்பினர்களிடையே, பிணக்குகளை நியாயமாகவும் வினைத்திறனாகவும் தீர்த்துவைத்தல்;

(ஐ) உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தின் விதிகளுக்கு இணங்கியொழுகுவதற்குத் தீர்வக உறுப்பினர்கள் தவறியமைக்காகத் தண்டங்களை விதிப்பதற்கு உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தின் தத்துவம் அல்லது அதிகாரமுட்பட, தீர்வக உறுப்பினர்களை விலக்குதல், இடைநிறுத்துதல் மற்றும் அவர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கையெடுத்தல்;

(ஒ) அதன் செயலிடங்களைப் பயன்படுத்தி தீர்வு செய்யப்பட்டுத் தீர்த்துவைக்கப்படக்கூடிய பிணையங்களின் வகுப்பினது அல்லது வகுப்புக்களினது அளவுக்குறிப்பீடு;

(ஓ) பின்வருவனவற்றை வசதிப்படுத்துவதற்குத் தவறுகை விதிகளை உள்ளடக்குதல்:-

(ii) தவறுகை புரியும் ஒரு தீர்வக உறுப்பினரின் தவறுகை அல்லது அவருக்கு வங்கிமுறிவு ஏற்படும் பட்சத்தில் அத்தகைய உறுப்பினரினால் வழங்கப்பட்ட உத்தரவாதங்களை அல்லது இணைப்பொருளை வைப்பிலிடுதலும் மற்றும் வினைத்திறனாக உருவாக்குதலும் தேறி. ஜடப்பெறுதலும் உட்பட, இணைப்பொருளை ஆளுதல்; அத்துடன்

(iii) மேலே (i) மற்றும் (ii) ஆம் உட்பந்திகள் தொடர்பான சூழ்நிலைகளின்கீழ் தீர்வக இல்லத்தின் இடையீடற்ற சேவைகளும் அல்லது ஒரு தீர்வக இல்லத்தின் கடனிறுதகுதன்மைக்கு அச்சுறுத்தலாகவுள்ள வேறெவையேனும் சூழ்நிலைகளும்;

(ஔ) தீர்ப்பனவு முறைமையினுள் தீர்ப்பனவுக் கட்டளைகளைப் பதிவதற்கான நேரமும் அத்தகைய கட்டளைகள் இறுதியானவையாகவும் இல்லாதொழிக்கப்படற்பாலவையற்றனவாகவும் வருகின்ற நேரமும்;

(க) மறுதிறத்தவர் பதிலீட்டுக்கான நேரம்;

(ங) ஒரு மத்திய மறுதிறத்தவராக அல்லது வேறுவகையாகச் செயலாற்றுகின்ற உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்துக்கு இயைபான தெரிவொழுங்கேற்பாடுகள், தீர்ப்பனவுகளின் இறுதித்தன்மை மற்றும் வேறெவையேனும் கடப்பாடுகள்.

37. (1) முப்பந்தைந்தாம் பிரிவின்கீழ் உரிமமொன்று அளிக்கப்பட்டுள்ள தீர்வக இல்லமொன்று-

(அ) பிணையங்கள் கொடுக்கல்வாங்கல்களின் தீர்வு அல்லது தீர்ப்பனவு நோக்கங்களுக்காக காப்பான, வினைத்திறனான மற்றும் பயனுள்ள தீர்வகச் செயலிடத்தைத் தொழிற்படுத்துதல் வேண்டும்;

(ஆ) அதன் தொழிலுடனும் தொழிற்பாடுகளுடனும் இணைந்துள்ள எவையேனும் ஆபத்துக்களைச் சாதுரியமானமுறையில் முகாமைசெய்தல் வேண்டும்;

(இ) அதன் சேவைகளைப் பயன்படுத்தி தீர்வுசெய்யப்பட்டுத் தீர்ப்பனவு செய்யப்படவேண்டிய பிணையங்கள் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாகப் பொறுப்பேற்கப்பட்ட நிதிசார் ஆபத்துக்களுக்கிணங்க மூலதனத்தின் போதிய மட்டத்தைப் பேணுதல் வேண்டும்;

(ஈ) அதன் விதிகளில் நிலைநாட்டப்பட்ட வரையறைகளினுள்ளும் எல்லைக்கடன்கள், விதிப்பனவுகள் மற்றும் இணைப்பொருட்கள் என்ற வடிவத்தில் அதன் தீர்வக உறுப்பினர்களிடமிருந்து எடுக்கப்படவேண்டிய உத்தரவாதங்களின் கட்டுக்கோப்பினுள்ளும் நிதிசார் நிலையுறுதியைப் பொறுப்பேற்றல் வேண்டும்;

(உ) ஆபத்து முகாமைக்கான உள்ளகக் கணக்காய்வு முறைமைகளுட்பட தரவுச் செய்முறைப்படுத்தல் உட்கட்டமைப்பையும் வேறு உள்ளகக் கட்டுப்பாடுகளையும் தாபித்துப் பேணுதல் வேண்டும்;

(ஊ) உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தின் சொத்துக்களிலிருந்து கணக்குவைத்திருப்போரின் உத்தரவாதங்களையும் சொத்துக்களையும் வேறுபிரித்தல் வேண்டும்;

(எ) உத்தரவாதங்கள் அல்லது சொத்துக்கள் எந்நோக்கங்களுக்காக வைப்பிலிடப்பட்டனவோ அந்நோக்கங்கள் தவிர்ந்த நோக்கங்களுக்காக அதன் தீர்வக உறுப்பினர்களிடமிருந்து எடுக்கப்பட்ட உத்தரவாதங்களை அல்லது சொத்துக்களைப் பயன்படுத்தாதிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஏ) முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதற்கான தேவையைக்குறிப்பாகக் கருத்திற்கொண்டு பொதுமக்கள் அக்கறை கருதிச் செயலாற்றுதல் வேண்டும்.

(2) வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஓர் உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தின் பணிப்பாளர், முறைமைசார் ஆபத்தைத் தணிப்பதனைக் குறிப்பாகக் கருத்திற்கொண்டு, பொதுமக்கள் அக்கறைகருதி எல்லா நேரங்களிலும் செயலாற்றுவதற்கான கடமையைக் கொண்டுள்ளாரென்பதுடன், இச்சட்டத்தின்கீழான கடமைக்கும் வேறேதேனும் சட்டத்தின்கீழ் ஒரு பணிப்பாளரின் கடமைக்கும் இடையே முரண்பாடு இருக்குமிடத்து, இச்சட்டத்தின்கீழான கடமையே மேலோங்கிநிற்றலும் வேண்டும்.

(3) உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லமொன்று எல்லா நேரங்களிலும்-

(அ) திறன்மிகு ஆளுகை ஒழுங்கேற்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்; இவை, திடமான நிருவாக மற்றும் கணக்கீட்டு நடவடிக்கைமுறைகளுட்பட, நன்கு வரையறுக்கப்பட்ட, வெளிப்படையான மற்றும் ஒத்திசைவான வழிகளுடனான பொறுப்பின் தெளிவான ஒழுங்கமைப்புச்சார் கட்டமைப்பொன்றையும், அது எந்த ஆபத்துக்களுக்கு முகங்கொடுக்க வேண்டியதாகவுள்ளதோ அல்லது முகங்கொடுக்க வேண்டியதாக இருக்கக்கூடுமோ அந்த ஆபத்துக்களை அடையாளங் காண்பதற்கும், முகாமைசெய்வதற்கும், கண்காணிப்பதற்கும், அறிக்கையிடுவதற்குமான பயனுள்ள நடை முறைகளையும், போதிய உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்புமுறைகளையும் உள்ளடக்குதல் வேண்டும்;

(ஆ) இச்சட்டத்திற்கும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கும் விதிகளுக்கும் அல்லது பணிப்புரைகளுக்கும் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்தும் வகையில் போதியமுறையில் பயனுள்ளனவான கொள்கைகளையும் நடவடிக்கைமுறைகளையும் கடைப்பிடித்தல் வேண்டும்;

(இ) அதன் சேவைகளையும் செயற்பாடுகளையும் புரிவதில் தொடர்ச்சியையும் ஒழுங்கான பணியாற்றுகையையும் உறுதிப்படுத்துகின்ற ஒழுங்கமைப்புச்சார் கட்டமைப்பைப் பேணுதலும் தொழிற்படுத்துதலும் வேண்டுமென்பதுடன், தோதான மற்றும் விகிதாசாரப்படியான முறைமைகளையும், வளன்களையும், நடவடிக்கைமுறைகளையும் பயன்படுத்துதலும் வேண்டும்;

(ஈ) தீர்வக இல்லத்தின் ஆபத்து முகாமைக்கான அறிக்கையிடும் வழிகளுக்கும் அதன் ஏனைய தொழிற்பாடுகளுக்கான அறிக்கையிடும் வழிகளுக்கும் இடையே தெளிவான தனிவேறாக்கத்தைப் பேணுதல் வேண்டும்;

(உ) பேணப்பட்ட தகவல்களின் பாதுகாப்பினது உயர்தரங்களை உறுதிப்படுத்துவதற்கென நேர்மையையும் அந்தரங்கத்தன்மையையும் உறுதிப்படுத்தும் வகையில், புரியப்பட்ட சேவைகளினதும் செயற்பாடுகளினதும் சிக்கலானதன்மை, வேறுபாடு மற்றும் வகையைக் கையாள்வதற்குப் போதிய தகவல் தொழினுட்பவியல் முறைமைகளைப் பேணுதல் வேண்டும்; அத்துடன்

(ஊ) அதன் ஆளுகை ஒழுங்கேற்பாடுகளையும், உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தை ஆளுகின்ற விதிகளையும், உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்ல உறுப்பாண்மைக்கான அதன் அனுமதிப்புக் கட்டளைக்கற்களையும் கட்டணமின்றிப் பொதுமக்களுக்குக் கிடைக்கக்கூடியனவாக்குதலும் வேண்டும்.

38. இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவுக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப்பங்கமின்றி, ஆணைக்குழுவானது உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லம், இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட விதிகளின் ஏற்பாடுகளுக்கும் மற்றும் உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தின் நியதிநிபந்தனைகளுக்கும் இணங்க உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லம் அதன் பணிகளைக் கொண்டு நடாத்துகின்றதெனத் தன்னைத் திருப்திப்படுத்திக் கொள்வதற்கென ஓர் உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்.

39. (1) ஆணைக்குழு, எழுத்திலான அறிவித்தல்மூலம்,-

(அ) அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து தீர்வக இல்லத்துக்கு 35 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதாக்கலாம்; அல்லது

(ஆ) அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து, அத்தகைய செயலிடங்களை வழங்காதொழியும்படி அல்லது தொழிற்படுத்தாதொழியும்படி அல்லது அத்தகைய சேவைகளை வழங்காதொழியும்படி உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தைப் பணிக்கலாம்.

(2) ஆணைக்குழுவானது, பின்வரும் சூழ்நிலைகளுள் எவையும் இடம்பெறுமிடத்து, முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதற்காக அல்லது பொதுமக்கள் அக்கறைகருதி அல்லது பிணையங்களிலான கொடுக்கல்வாங்கல்களின் தீர்வையும் மற்றும் தீர்ப்பனவையும் முறையாக ஒழுங்குபடுத்துவதற்காக (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஓர் உரிமத்தை இல்லாதாக்குதல் அல்லது ஒரு பணிப்புரையை வழங்குதல் தோதானதென ஆணைக்குழு திருப்திப்பட்டாலொழிய, அவ்வாறு செய்தலாகாது:-

(அ) உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லம் தீர்வக வசதிகளை வழங்காதொழிந்தால்;

(ஆ) உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லம், இலங்கையினுள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, ஒடுக்கப்பட்டுக்கொண்டிருந்தால் அல்லது வேறுவகையாகக் கலைக்கப்பட்டுக் கொண்டிருந்தால்;

(இ) உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லம் அதன் உரிமத்தின் ஏதேனும் நியதியை அல்லது நிபந்தனையை மீறியிருந்தால் அல்லது இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறுக்குக் குற்றஞ்சாட்டப்பட்டால்;

(ஈ) உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லமானது, இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதன் உரிமத்தின், தேவைப்பாட்டின் அல்லது பணிப்புரையின் ஒரு நியதிக்கு அல்லது நிபந்தனைக்கு இணங்கியொழுகத் தவறியிருந்தால் அல்லது இச்சட்டத்தின்கீழான ஏதேனும் ஏற்பாட்டுக்கு அல்லது தேவைப்பாட்டுக்கு வேறுவகையில் இணங்கியொழுகத் தவறினால்;

(உ) முப்பத்தாறாம் பிரிவின் நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட ஏதேனும் தகவல், முக்கியமானவொரு விபரத்தில் பொய்யானதாக அல்லது பிழைவழியுய்ப்பதாகவிருந்தால் அல்லது அதிலிருந்து முக்கியமானவொரு விட்டுவிடுகை உள்ளதாகவிருந்தால்;

(ஊ) உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்துக்கெதிரான தீர்ப்புத்தனிசொன்று முழுமையாக அல்லது பகுதியளவில் கொடுத்துத் தீர்க்கப்பட்டிராதிருந்தால்;

(எ) உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தின் ஏதேனும் ஆதனம் தொடர்பாக அல்லது அது தொடர்பில், இலங்கையினுள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, பெறுநரொருவர், பெறுநரும் முகாமையாளரும், ஒழிப்போன் அல்லது சமமான ஆள் நியமிக்கப்பட்டிருந்தால்;

(ஏ) உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லமானது, இலங்கையினுள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, அதன் கடன்கொடுத்தோருடனான இணக்கப்பாட்டை அல்லது ஒழுங்கேற்பாட்டுத் திட்டத்தைச் செய்துகொண்டதாகவிருந்தால்; அல்லது

(ஐ) உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லமானது, அதன் சொந்த விருப்பத்தின் பேரில், அதற்கு வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதாக்கும்படி ஆணைக்குழுவுக்கு விண்ணப்பித்திருந்தால்.

(3) இரண்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக, தீர்வக இல்லமானது, இரண்டு வாரங்களை விஞ்சுகின்றவொரு காலப்பகுதிக்குத் தீர்வக வசதிகளை வழங்காதொழிவதற்கு ஆணைக்குழுவின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் அத்தகைய வசதிகளை அது வழங்காதொழிந்திருப்பின், தீர்வக வசதிகளை வழங்காதொழிந்துள்ளதெனக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் உரிமமொன்று இல்லாதாக்கப்பட்டமை அல்லது பணிப்பொன்று வழங்கப்பட்டமை எவ்வாறிருப்பினும், ஆணைக்குழுவானது, பின்வரும் நோக்கத்துக்காக, அறிவித்தலில் ஆணைக்குழு குறித்துரைக்கக்கூடியவாறாக, இல்லாதாக்குகையினால் அல்லது பணிப்புரையினால் பாதிக்கப்பட்ட அத்தகைய செயற்பாடுகளை இல்லாதாக்குகை அல்லது பணிப்புரை பயனுள்ளதாக வரவேண்டிய தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடர்ந்து கொண்டுநடாத்துவதற்குத் தீர்வக இல்லத்துக்கு அனுமதியளிக்கலாம்:-

(அ) தீர்வக இல்லத்தின் தொழிற்பாடுகளை மூடிவிடுதல் அல்லது அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட சேவைகளை வழங்காதொழிதல்; அல்லது

(ஆ) முதலீட்டாளர்களை அல்லது பொதுமக்களின் அக்கறையைப் பாதுகாத்தல்.

(5) ஆணைக்குழுவானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் செயலாற்றுமிடத்து, ஆணைக்குழு, அவசியமானதென அது கருதுமிடத்து, புதிய பணிப்பாளர் சபை நியமிக்கப்படும்வரை உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தின் அலுவல்களை முகாமைசெய்வதற்கு ஆறுமாத காலப்பகுதிக்கானதும் ஓராண்டு காலப்பகுதிக்கு நீடிக்கப்படக்கூடியதுமான இடைக்காலப் பணிப்பாளர் சபையொன்றை நியமிக்கலாம்.

(6) ஆணைக்குழுவானது, தீர்வக இல்லத்துக்குக் கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்றை அளிக்காமல் (1) ஆம் உட்பிரிவின் கீழான ஏதேனும் நடவடிக்கையை எடுத்தலாகாது.

40. (1) முப்பத்தொன்பதாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஆணைக்குழுவின் முடிபினால் இன்னலுறுகின்ற உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லமொன்று, முடிபுபற்றித் தீர்வக இல்லத்துக்கு அறிவிக்கப்பட்டபின்னர் பதினான்கு நாட்களினுள் அமைச்சருக்கு மேன்முறையீடுசெய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான மேன்முறையீடு செய்யப்பட்டமை எவ்வாறிருப்பினும், இப்பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கை, அமைச்சரின் முடிபு பெறப்படும்வரை தொடர்ந்து பயனுள்ளதாகவிருத்தல் வேண்டும்.

(3) அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட மேன்முறையீட்டின்மீது-

(அ) மேன்முறையீட்டை அனுமதித்து உரிமத்தின் அல்லது பணிப்புரையின் இல்லாதாக்குகையை இல்லாதொழிக்கும் படி ஆணைக்குழுவைப் பணிக்கலாம்; அல்லது

(ஆ) மேன்முறையீட்டுக்கு அனுமதிமறுக்கலாம்.

(4) ஆணைக்குழுவானது, (3) ஆம் உட்பிரிவின்கீழ் அமைச்சரின் முடிபுக்குப் பயன்கொடுத்தல் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவுக்கமைய, இப்பிரிவின்கீழ் உரிமத்தின் இல்லாதாக்குகைபற்றிய அல்லது ஏதேனும் பணிப்புரையின் வழங்குகை பற்றிய பகிரங்க அறிவித்தலை ஆணைக்குழு கொடுத்தல் வேண்டும்.

41. முப்பத்தொன்பதாம் பிரிவின் (1) ஆம் உட்பிாவின்கீழ் ஓர் உரிமத்தின் இல்லாதாக்குகை அல்லது பணிப்புரையின் வழங்குகை-

(அ) உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தினூடாகச் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை, கொடுக்கல்வாங்கல் அல்லது ஒழுங்கேற்பாடு, 39 ஆம் பிரிவின்கீழ் உரிமம் இல்லாதாக்கப்பட்டதற்கு அல்லது பணிப்புரை வழங்கப்பட்டதற்கு முன்னர் அல்லது 39 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவு ஏற்புடையதாகுமிடத்து அதற்குப்பின்னர் செய்துகொள்ளப்பட்டிருப்பினுஞ்சரி, அவ்வுடன்படிக்கையை, கொடுக்கல்வாங்கலை அல்லது ஒழுங்கேற்பாட்டை வறிதானதாக்கும் அல்லது பாதிக்கும்வகையில் தொழிற்படுதலாகாது; அல்லது

(ஆ) அத்தகைய உடன்படிக்கையின், கொடுக்கல்வாங்கலின் அல்லது ஒழுங்கேற்பாட்டின்கீழ் எழுகின்ற ஏதேனும் உரிமையை, கடப்பாட்டை அல்லது பொறுப்பைப் பாதிக்கும்வகையில் தொழிற்படுதலாகாது.

42. (1) உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லமொன்று, ஆபத்து முகாமை நோக்கத்துக்காக, தீர்வக உறுப்பினர் ஒருவர் தீர்ப்பனவு செய்யப்படாத எந்தச் சந்தை ஒப்பந்தங்களுக்குத் திறத்தவராகவுள்ளாரோ தீர்த்துவைக்கப்படாத அந்தச் சந்தை ஒப்பந்தங்கள் எல்லாம் தொடர்பிலும் அல்லது எவை தொடர்பிலும் தீர்வக உறுப்பினர் கடப்பாடுகளை எதிர்கொள்வதற்கு இயலாதவராக விருப்பின் அல்லது இயலாதவராக வரக்கூடிய சாத்தியமிருப்பின், தவறுகை விதிகளின்கீழ் தவறுகை வழக்குநடவடிக்கைகளைத் தொடங்குதல் வேண்டும்.

(2) உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லமொன்று எவையேனும் தவறுகை வழக்குநடவடிக்கைகளைத் தொடங்குமிடத்து, தவறுகையாளர் எந்தச் சந்தை ஒப்பந்தங்களுக்கான திறத்தவரொருவராகவுள்ளாரோ அந்தச் சந்தை ஒப்பந்தங்களைத் தீர்த்துவைக்கும் நோக்கங்களுக்காக அதன் தீர்வக விதிகளின்கீழான எல்லா அடுத்துப்பின்னரான வழக்குநடவடிக்கைகளும் அல்லது எடுக்கப்பட்ட வேறு நடவடிக்கையும், உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தின் தவறுகை விதிகளின்கீழ் நிறைவேற்றப்பட்டுள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

43. (1) கடனிறுக்கவகையறவு, வங்கிமுறிவு அல்லது ஒடுக்குகைக்கமைந்த ஆளொருவரின் சொத்துக்கள் தொடர்பாக அல்லது ஒரு பெறுநரை, ஒரு பெறுநரையும் முகாமையாளரையும், ஓர் ஒழிப்போனை அல்லது சமமான பதவியிலுள்ள ஆளொருவரை நியமித்தல்மீது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஓர் ஒவ்வாமை மட்டுமே எவ்வாறிருப்பினும், பின்வருவன ஏதேனும் அளவுக்குச் சட்டத்தில் செல்லுபடியற்றனவாகவிருத்தலாகாது:-

(அ) ஒரு சந்தை ஒப்பந்தம்;

(ஆ) ஒரு சந்தை ஒப்பந்தத் தீர்ப்பனவு தொடர்பாக ஒரு தீர்வக இல்லத்தின் விதிகள்;

(இ) ஒரு சந்தை ஒப்பந்தத்தைத் தீர்த்துவைத்தல் தொடர்பாகத் தீர்வக இல்லத்தின் விதிகளின்கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைகள் அல்லது எடுக்கப்பட்ட வேறு நடவடிக்கை;

(ஈ) ஒரு சந்தை விதிப்பனவு;

(உ) சந்தை இணைப்பொருள்;

(ஊ) ஒரு தீர்வக இல்லத்தின் தவறுகை விதிகள்; அல்லது

(எ) எவையேனும் தவறுகை வழக்குநடவடிக்கைகள்.

(2) ஓராம் உட்பிரிவுக்கமைய, இயைபான பதவிவகிப்பவர் என்ற அவரது தன்மையில் அத்தகையவரின் தத்துவங்களும், கடனிறுவகையறவுச் சட்டத்தின்கீழ் அல்லது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் ஏதேனும் நீதிமன்றத்தின் தத்துவங்களும், பின்வருவனவற்றைத் தடுக்கும் அல்லது அவற்றுடன் தலையிடும் அத்தகையவொரு வழியில் பிரயோகிக்கப்படுதலாகாது:-

(அ) ஒரு தீர்வக இல்லத்தின் விதிகளுக்கிணங்கச் சந்தை ஒப்பந்தத்தின் தீர்ப்பனவு; அல்லது

(ஆ) எவையேனும் தவறுகை வழக்குநடவடிக்கைகள்.

44. இரண்டாயிரத்தேழாம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் உள்ளதெதுவும், உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தினால் ஏதேனும் சந்தை இணைப்பொருள் தேறிப்பெறப்படுவதிலும் கையுதிர்க்கப்படுவதிலும் உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லமொன்றினால் தொடுக்கப்பட்ட தவறுகை வழக்குநடவடிக்கைகளைத் தடுத்தலோ அல்லது அவற்றுடன் தலையிடுதலோ ஆகாது.

45. (1) எவையேனும் தவறுகை வழக்குநடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டதன்மேல், உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லம், பின்வருவன தொடர்பில் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளுக்கு அல்லது உருவகத்துக்கு ஒவ்வொரு தவறுகையாளர் தொடர்பிலுமான அறிக்கையை வழங்குதல் வேண்டும்:-

(அ) தவறுகையாளரினால் அல்லது அவருக்குச் செலுத்தப்படற்பாலதாகவுள்ளதென உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தினால் சான்றுப்படுத்தப்பட்ட தேறிய பணத் தொகை ஏதேனுமிருப்பின் அது;

(ஆ) பணத்தொகை எதுவும் தவறுகையாளருக்கு அவ்வாறு செலுத்தப்படற்பாலதல்லதென்ற நிகழ்வு; அத்துடன்

(இ) தகுதியானவையென அது கருதுகின்றவாறாக அத்தகைய தவறுகை வழக்குநடவடிக்கைகள் தொடர்பிலான அத்தகைய வேறு விபரங்கள்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட அறிக்கையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று-

(அ) ஆணைக்குழுவுக்கு;

(ஆ) அறிக்கையானது எத்தவறுகையாளர் தொடர்பானதோ அத்தவறுகையாளருக்கு அல்லது அறிக்கையானது எத்தவறுகையாளர் தொடர்பானதோ அத்தவறுகையாளருக்காகச் செயலாற்றுகின்ற இயைபான பதவிவகிப்பவருக்கு அல்லது தவறுகையாளரின் மரணச்சொத்துக்கு; அத்துடன்

(இ) தகுதியானவரென ஆணைக்குழு கருதுகின்றவாறான வேறெவரேனுமாளுக்கு, உடனடியாக வழங்கப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவைப் பின்பற்றி உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லம் அறிக்கையொன்றைத் தயாரித்துள்ளவிடத்து, அறிக்கை யானது எத்தவறுகையாளர் தொடர்பானதோ அத்தவறுகையாளரின் கடன்கொடுத்தோரினது கவனத்துக்கு அதனைக் கொண்டு வருவதற்கு அந்நிகழ்வுபற்றிய அறிவித்தலொன்றைத் தவறுகை யாளரின் இயைபான பதவிவகிப்பவர் வெளியிடுதல் வேண்டும்.

(4) இயைபான பதவிவகிப்பவர் அல்லது தவறுகையாளர் (1) ஆம் உட்பிரிவைப் பின்பற்றி அறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்ளுமிடத்து, அவர், அவரது கடன்கொடுத்தோருள் எவரினதும் கோரிக்கையின் பேரில்-

(அ) அத்தகைய கோரிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டதிலிருந்து இரண்டு நாட்களினுள் அவ்வறிக்கையைக் கடன்கொடுத்தவரின் பார்வைக்குக் கிடைக்கக்கூடிய தாக்குதல் வேண்டும்; அல்லது

(ஆ) இயைபான பதவிவகிப்பவரினால் அல்லது தவறுகையாளரினால் தீர்மானிக்கப்பட்டவாறான இயைபான கட்டணக் கொடுப்பனவின்மீது, கோரப்பட்டவாறு அவ்வறிக்கை முழுவதினதும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தினதும் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றைக் கடன்கொடுத்தவருக்கு வழங்குதல் வேண்டும்.

46. (1) தவறுகை வழக்குநடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்ட தன்மேல், உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லமொன்றினால் 45 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் சான்றுப்படுத்தப்பட்ட தேறிய பணத்தொகை, தவறுகையாளரினால் அல்லது அவருக்குச் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

(2) இரண்டாயிரத்தேழாம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடு எவ்வாறிருப்பினும், ஒரு பெறுநருக்கான அல்லது ஒடுக்கப்படுவதற்கான கட்டளை ஆக்கப்பட்டுள்ள விடத்து அல்லது தன்னிச்சையான ஒடுக்குதலுக்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளவிடத்து, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தேறிய பணத்தொகை 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழான ஒடுக்குதல் வழக்கு நடவடிக்கைகள் தொடர்பாகக் கணக்குக்கெடுக்கப்படுதல் வேண்டும்.

47. (1) தீர்வக உறுப்பினரொருவர் ("முதலாவது தீர்வக உறுப்பினர்"), (3) ஆம் உட்பிரிவில் விவரிக்கப்பட்டவாறான சூழ்நிலைகளில் வேறொரு தீர்வக உறுப்பினருக்கு ("இரண்டாவது தீர்வக உறுப்பினர்") பிணையங்களை மிகைப்பெறுமதியில் விற்பனைசெய்தால் அல்லது அவரிடமிருந்து குறைப்பெறுமதியில் பிணையங்களைக் கொள்வனவு செய்தால் மற்றும் அதன்பின்னர் இயைபான பதவிவகிப்பவர் ஒருவர்-

(அ) இரண்டாவது தீர்வக உறுப்பினருக்காக;

(ஆ) விற்பனையில் அல்லது கொள்வனவில் இரண்டாவது தீர்வக உறுப்பினரின் முதல்வருக்காக; அல்லது

(இ) இரண்டாவது தீர்வக உறுப்பினரின் அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளின் மரணச்சொத்துக்காக,

செயலாற்றினால் நீதிமன்றமொன்று வேறுவகையாகக் கட்டளையிட்டாலொழிய, இயைபான பதவிவகிப்பவர், முதலாவது தீர்வக உறுப்பினரிடமிருந்து அல்லது முதலாவது தீர்வக உறுப்பினரின் முதல்வரிடமிருந்து, முதலாவது தீர்வக உறுப்பினரினால் அல்லது முதலாவது தீர்வக உறுப்பினரின் முதல்வரினால் செய்யப்பட்ட விற்பனைமூலம் அல்லது கொள்வனவு மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அடையாளங்காணப்பட்ட ஈட்டுகைக்குச் சமமான தொகையொன்றை அறவிடலாம்.

(2) அடையாளங்காணப்பட்ட ஈட்டுகைக்குச் சமமான தொகை, விற்பனையானது அல்லது கொள்வனவானது தீர்வக இல்லத்தின் விதிகளுக்கிணங்க நிறைவேற்றப்பட்டு ஒரு சந்தை ஒப்பந்தத்தினால் மாற்றீடு செய்யப்பட்டிருப்பினுங்கூட அறவிடப்படற்பாலதாகும்.

(3) ஒரு விற்பனைக்காக அல்லது கொள்வனவுக்காக (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட சூழ்நிலைகள் பின்வரு மிடத்திலானவையாதல் வேண்டும்:-

(அ) இரண்டாவது தீர்வக உறுப்பினர் தொடர்பாக அல்லது இரண்டாவது தீர்வக உறுப்பினரின் முதல்வர் தொடர்பாக அடையாளங்காணப்பட்ட நிகழ்வொன்று இடம்பெற்றுள்ளவிடத்து; அத்துடன்

(ஆ) ஒன்றில்-

(i) இரண்டாவது தீர்வக உறுப்பினர் தொடர்பாக அல்லது இரண்டாவது தீர்வக உறுப்பினரின் முதல்வர் தொடர்பாக அடையாளங்காணப்பட்ட நிகழ்வொன்று இடம்பெறுவதற்கான சாத்தியம் இருந்ததென முதலாவது தீர்வக உறுப்பினர் அறிந்திருந்தவிடத்து, அல்லது நியாயமான முறையில் அறிந்திருக்கக்கூடியவிடத்து; அல்லது

(ii) இரண்டாவது தீர்வக உறுப்பினருக்கு அல்லது இரண்டாவது தீர்வக உறுப்பினரின் முதல்வருக்கு அடையாளங்காணப்பட்ட நிகழ்வொன்று இடம்பெறுவதற்கான சாத்தியம் இருந்ததென முதலாவது தீர்வக உறுப்பினரின் முதல்வர் அறிந்திருந்தவிடத்து, அல்லது நியாயமான முறையில் அறிந்திருக்கக்கூடியவிடத்து

மற்றும் அந்த அடையாளங்காணப்பட்ட நிகழ்வு, விற்பனை அல்லது கொள்வனவு எத்தேதியன்று செய்து கொள்ளப்பட்டதோ அத்தேதியை உடனடுத்துப் பின்வரும் ஆறுமாத காலப்பகுதியினுள் இடம்பெறுமிடத்து.

(4) இப்பிரிவில்-

(அ) "அடையாளங்காணப்பட்ட நிகழ்வு" என்பது, இரண்டாவது தீர்வக உறுப்பினர் தொடர்பாக அல்லது ஒரு விற்பனை அல்லது கொள்வனவு தொடர்பில் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவராகவுள்ள அல்லது ஆளொருவராகவிருந்த ஆளொருவர் தொடர்பாகப் பின்வருவன என்று பொருளாகும்:-

(i) விடயத்துக்கேற்ப, இரண்டாவது தீர்வக உறுப்பினரினால் அல்லது இரண்டாவது தீர்வக உறுப்பினரின் முதல்வரினால் புரியப்பட்ட வங்கிமுறிவுச்செயல்;

(ii) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தினைப் பின்பற்றி, விடயத்துக்கேற்ப, இரண்டாவது தீர்வக உறுப்பினர் தொடர்பாக அல்லது இரண்டாவது தீர்வக உறுப்பினரின் முதல்வர் தொடர்பாக அழைக்கப்பட்ட கடன்கொடுத்தோரின் கூட்டம்; அல்லது

(iii) விடயத்துக்கேற்ப, இரண்டாவது தீர்வக உறுப்பினரை அல்லது இரண்டாவது தீர்வக உறுப்பினரின் முதல்வரை ஒடுக்குவதற்கான மனுவொன்று நீதிமன்றத்திற்கு முன்வைக்கப்படுதல்;

(ஆ) "அடையாளங்காணப்பட்ட ஈட்டுகை" என்பது, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒரு விற்பனை அல்லது கொள்வனவு தொடர்பாக, பின்வருவனவற்றுக்கிடையேயான வித்தியாசம் என்று பொருளாகும்:-

(i) விற்பனையின் அல்லது கொள்வனவின் விடயப்பொருளாகவுள்ள பிணையங்களின் சந்தைப்பெறுமதி; அத்துடன்

(ii) விற்பனை அல்லது கொள்வனவு செய்து கொள்ளப்பட்ட நேரத்திலுள்ளவாறு, விற்பனைக்கான அல்லது கொள்வனவுக்கான பிரதி பயனின் பெறுமதி.

48. வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், சந்தை ஒப்பந்தமுட்பட உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்ல மொன்றுடனான ஏதேனும் கொடுக்கல்வாங்கலைச் செய்து கொள்கின்ற தீர்வக உறுப்பினரொருவர், முகவராக அக்கொடுக்கல் வாங்கலுக்கான திறத்தவராகவுள்ளாரென்ற நிகழ்வு எவ்வாறிருப்பினும், உரிமமளிக்கப்பட்ட ஒரு தீர்வக இல்லத்தினால் அல்லது அதற்கெதிரான ஏதேனும் குடியியல் வழக்கு, உரிமைக் கோரிக்கை அல்லது கோரிக்கை உட்பட்ட எல்லா நோக்கங்களுக்காகவும், முகவராகவல்லாது முதல்வராக அக்கொடுக்கல்வாங்கலுக்கான திறத்தவரொருவராகவுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

49. வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தின் விதிகளுக்கிணங்க ஒரு சந்தை ஒப்பந்தத் தீர்ப்பனவில் அல்லது ஒரு சந்தை விதிப்பனவின்கீழ் ஓர் உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்துக்குத் தீர்வக உறுப்பினரொருவரினால் சந்தை இணைப்பொருள் ஒப்படைக்கப்படுமிடத்து, ஓர் உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்துக்கு ஒப்படைக்கப்பட்ட சந்தை இணைப்பொருளிலான ஏதேனும் உரிமை, உரித்து அல்லது அக்கறை தொடர்பில் குடியியல் வழக்கு, உரிமைக்கோரிக்கை அல்லது கோரிக்கை எதுவும், உரிமமளிக்கப் பட்ட தீர்வக இல்லத்துக்கெதிராக அனுமதிக்கப்படுதலாகாது.

50. உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லம், ஒரு சந்தை ஒப்பந்தத்துக்கு அல்லது சந்தை விதிப்பனவுக்கு அமைய, இணைப்பொருளை உரிமமளிக்கப்பட்ட ஒரு தீர்வக இல்லத்தின் விதிகளில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைமுறைக்கிணங்க நிறைவேற்ற உரித்துடையதாதல் வேண்டும்.

51. (1) மத்திய வைப்பகமொன்று, ஒரு கணக்கு வைத்திருப்பவரின் பிணையங்கள் கணக்கினுள் அல்லது அதிலிருந்து பிணையங்களின் கைமாற்றத்தைச் செய்வதற்கு ஓர் உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்திடமிருந்தான அறிவுறுத்தலைப் பயனுறுத்துதல் வேண்டும்; ஆயின், அத்தகைய அறிவுறுத்துதல், ஒரு சந்தை ஒப்பந்தத் தீர்ப்பனவின் அல்லது உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தின் விதிகளுக்கிணங்க ஒரு சந்தை ஒப்பந்தத்தை வேறுவகையாகக் கையாளும் நோக்கங்களுக்காகவிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான அறிவுறுத்துதலொன்று, சந்தை ஒப்பந்தமொன்றுக்கான திறத்தவராகவுள்ள கணக்கு வைத்திருப்பவருடன் தொடர்புபட்ட அல்லது தீர்வக உறுப்பினரொருவர் எந்தச் சந்தை ஒப்பந்தத்துக்கான திறத்தவராக வந்துள்ளாரோ அந்தச் சந்தை ஒப்பந்தத்தை விளைவிக்கின்ற ஒரு வியாபாரத்தைச் செய்வதற்குத் தீர்வக உறுப்பினரொருவரை அறிவுறுத்தியிருந்த கணக்குவைத்திருப்பவருடன் தொடர்புபட்ட பிணையங்கள் கணக்குத் தொடர்பாக மட்டுமே ஓர் உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தினால் விடுக்கப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவினைப் பின்பற்றிக் கணக்கு வைத்திருப்பவரொருவரின் பிணையங்கள் கணக்குக்கு அல்லது அதிலிருந்து மத்திய வைப்பகத்தினால் ஒரு சந்தை ஒப்பந்தத்தைப் பின்பற்றிப் பிணையங்களின் ஏதேனும் கைமாற்றம் செய்யப்படுமிடத்து, அத்தகைய பிணையங்களிலான உரித்தெதுவும், ஓர் உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தின் விதிகளின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டவாறுதவிர கணக்குவைத்திருப்பவரொருவரைச் சென்றடைதலாகாது.

(4) ஓராம் உட்பிரிவினைப் பின்பற்றிக் கணக்கு வைத்திருப்பவரொருவரின் பிணையங்கள் கணக்கினுள் அல்லது அதிலிருந்து பிணையங்களின் கைமாற்றம் செய்யப்பட்டுள்ளவிடத்து, மத்திய வைப்பகம், அந்தக் கணக்குவைத்திருப்பவரினாலான ஏதேனும் வழக்குக்கு அல்லது உரிமைக்கோரிக்கைக்கு அமைந்ததாதலாகாது அல்லது அந்தக் கணக்குவைத்திருப்பவருக்கான எவையேனும் சேதவீடுகளுக்கு உட்பட்டதாதலாகாது.

52. (1) உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லமொன்று, உரிமமளிக்கப்பட்ட அத்தீர்வக இல்லத்தின் சார்பில் பிணையங்களின் ஒரு விற்பனையை அல்லது கொள்வனவைச் செய்யும்படி, விடயத்துக்கேற்ப, அத்தகைய விற்பனை அல்லது கொள்வனவு ஏதேனும் சந்தை ஒப்பந்தத்தைத் தீர்ப்பனவு செய்யும் அல்லது தவறுகை வழக்குநடவடிக்கைகளை வசதிப்படுத்தும் அல்லது ஏதேனும் சந்தை விதிப்பனவில் அடங்கியுள்ள அல்லது சந்தை இணைப்பொருளாக வழங்கப்பட்ட ஏதேனும் சொத்தைத் தீர்வக இல்லம் தேறிப்பெறுவதனை இயலச்செய்யும் நோக்கங்களுக்காகச் செய்யப்படின், பரிவர்த்தனையொன்றைத் தேவைப்படுத்தலாமென்பதுடன், அப்பரிவர்த்தனை அத்தகைய ஏதேனும் அறிவுறுத்தலுக்குப் பயன்கொடுத்தலும் வேண்டும்.

(2) பரிவர்த்தனையொன்றினால் (1) ஆம் உட்பிரிவினைப் பின்பற்றி உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தின்சார்பில் பிணையங்களின் விற்பனை அல்லது கொள்வனவு செய்யப்பட்டுள்ளவிடத்து, அப்பரிவர்த்தனையானது, எவரேனுமாளினாலான ஏதேனும் வழக்குக்கு அல்லது உரிமைக் கோரிக்கைக்கு அமைந்ததாதலாகாது அல்லது எவரேனும் ஆளுக்கான எவையேனும் சேதவீடுகளுக்கு உட்பட்டதாதலாகாது.

(3) ஒரு தீர்வக இல்லத்தினால் நிறைவேற்றப்பட்ட பிணையங்களின் தீர்வு அல்லது தீர்ப்பனவுக் கொடுக்கல்வாங்கல் அல்லது ஓர் உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தினால் அல்லது அதற்கான கொடுப்பனவு, உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தின் தீர்வு மற்றும் தீர்ப்பனவு விதிகளுக்கிணங்கவல்லாது வேறுவகையாக எதிர்மாறாக்கப்படுதலோ, வறிதாக்கப்படுதலோ அல்லது இல்லாதாக்கப்படுதலோ ஆகாது.

53. (1) ஆளொருவர், செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட எது தொடர்பிலும் எவையேனும் தவறுகை வழக்கு நடவடிக்கைகள் சம்பந்தமாக ஓர் உரிமமளிக்கப்பட்ட தீர்வாக இல்லத்தின் தவறுகை விதிகளின்கீழ் தத்துவங்களைக் கையளித்தமையின் பயனாக அவரது கடமைகளை நிறைவேற்றுகையில், அக்கடமையை நிறைவேற்றும்போது அல்லது அதன் கொள்ளப்பட்ட நிறைவேற்றுகையின்போது அல்லது அது சம்பந்தமாகத் தாம் நியாயமான கவனத்தைப் பிரயோகித்தார் என்றும் நல்லெண்ணத்துடன் செயலாற்றினார் என்றும் எண்பிப்பது, எவையேனும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில் அவருக்கு எதிர்வாதமொன்றாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆள் பின்வருவோரை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) அந்த ஆளினது பணிப்பாளர் சபையின் எவரேனும் உறுப்பினர்; அத்துடன்

(ஆ) அத்தகைய ஆளினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் குழுவின் எவரேனும் உறுப்பினர்.

(3) உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தின் தவறுகை விதிகளுக்கிணங்கக் கையாளப்படுவதற்கு உட்பட்டதாகவுள்ள எவரேனும் தவறுகையாளரின் ஏதேனும் ஆதனம் தொடர்பாக இயைபான பதவிவகிப்பவர் நடவடிக்கை எடுக்குமிடத்தும், இயைபான பதவிவகிப்பவர், அந்நடவடிக்கையை எடுப்பதற்குத் தாம் உரித்துடையவராக உள்ளாரென நியாயமானமுறையில் நம்புகின்றவிடத்தும் அல்லது நம்புவதற்கு நியாயமான ஏதுக்களைக் கொண்டுள்ளவிடத்தும், அந்த இயைபான பதவிவகிப்பவரின் ஏதேனும் நடவடிக்கையிலிருந்து விளைகின்ற ஏதேனும் இழப்பு அல்லது சேதத்துக்காக, அத்தகைய இழப்பு அல்லது சேதம் இயைபான பதவிவகிப்பவரின் அசட்டையினால் விளைந்திருந்தாலொழிய, இயைபான பதவிவகிப்பவர் எவரேனுமாளுக்குப் பொறுப்பாதல் ஆகாது.

## அத்தியாயம் 3

## மத்திய வைப்பகம்

54. (1) ஆளொருவர், ஆணைக்குழுவிடமிருந்து உரிமமொன்றைப் பெற்றுக்கொள்ளாமல் பிணையங்களானவை, ஏதேனும் பரிவர்த்தனையின்மீது நிரற்படுத்தப்படினுஞ்சரி அல்லவாயினுஞ் சரி, அத்தகைய பிணையங்களைக் கையாள்வதற்கான மத்திய வைப்பகத்தைத் தாபித்தலோ, தொழிற்படுத்துதலோ அல்லது பேணுதலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இருபத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவு பின்வருவோருக்கு ஏற்புடையதாதலாகாது:-

(அ) இலங்கை மத்திய வங்கியினால் தொழிற்படுத்தப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட மத்திய வைப்பகம்;

(ஆ) இலங்கை அரசாங்கத்தினால் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பிணையங்கள் தொடர்பில் தொழிற்படுத்தப்பட்ட மத்திய வைப்பகம்;

(இ) ஆணைக்குழுவினால் விலக்களிக்கப்பட்டுள்ள பிணையங்களின் ஏதேனும் வழங்குகைக்காக மத்திய வைப்பகமொன்றை வழங்குகின்ற எவரேனுமாள்.

55. (1) ஒரு மத்திய வைப்பகத்தைத் தாபிப்பதற்கான அல்லது தொழிற்படுத்துவதற்கான உரிமமொன்றுக்கான விண்ணப்பம், ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் படிவத்திலும் ஆணைக்குழுவுக்குச் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய கட்டணத்துடன் சேர்த்து அனுப்பப்படுதலும் வேண்டும்.

(2) ஒரு மத்திய வைப்பகத்தைத் தாபிப்பதற்கான அல்லது தொழிற்படுத்துவதற்கான உரிமத்துக்கான விண்ணப்பம் ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் மட்டுமே செய்யப்படுதல் வேண்டும்.

(3) மத்திய வைப்பகம், பின்வருவன தொடர்பாகத் திருப்திகரமான ஏற்பாடுகளைக் கொண்டுள்ள விதிகளை ஆக்குதல் வேண்டும்:-

(அ) எந்த நிபந்தனைகளின்கீழ் பிணையங்களானவை பிணையங்கள் பற்றிய இடாப்பில் வைப்பிலிடப்படலாமோ, வைத்திருக்கப்படலாமோ, அதிலிருந்து மீளப்பெறப்படலாமோ அல்லது அதற்குக் கைமாற்றப்படலாமோ மற்றும் அதில் பதியப்படலாமோ அந்த நிபந்தனைகள்;

(ஆ) வைப்பிலிடப்பட்ட பிணையங்களிலான கையாளுகைகளைச் செய்முறைப்படுத்துதல்;

(இ) வைப்பிலிடப்பட்ட பிணையங்களின் தீர்ப்பனவை வசதிப்படுத்துதல்;

(ஈ) கணக்குவைத்திருப்போரின் அக்கறைகளைப் பாதுகாத்தலும் வைப்பிலிடப்பட்ட பிணையங்கள் மற்றும் அவற்றிலான கையாளுகைகள் பற்றிய தகவல்களைப் பாதுகாத்தலும் கட்டுப்படுத்துதலும்;

(உ) வைப்பகப் பங்குபற்றுநர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான வெளிப்படையான மற்றும் பாரபட்சமற்ற கட்டளைக்கற்களும் வைப்பகப் பங்குபற்றுநர்களின் வகுதிகளும்;

(ஊ) வைப்பகப் பங்குபற்றுநர்களைக் கண்காணித்தலும் மேற்பார்வை செய்தலும் விண்ணப்பகாரக் கம்பெனியின் விதிகளை வலுவுறுத்துவதற்காகவும்;

(எ) மத்திய வைப்பகத்தின் விதிகளுக்கு இணங்கியொழுகத் தவறியமைக்காக வைப்பகப் பங்குபற்றுநர்களை விலக்குதலும், இடைநிறுத்துதலும், அவர்களின்மீது தண்டங்களை விதித்தலும் அல்லது அவர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்தலும்;

(ஏ) மத்திய வைப்பகத்துக்கும் வைப்பகப் பங்குபற்றுநர்களுக்கும் இடையேயும், வைப்பகப் பங்குபற்றுநர்களுக்கு இடையேயும், பிணக்குகளைத் தீர்த்துவைத்தல்; அத்துடன்

(ஐ) முதலீட்டாளர்களுக்குச் சொந்தமான பிணையங்கள், வைப்பகப் பங்குபற்றுநர்களின் பிணையங்களிலிருந்து தனிப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துதல்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழான விண்ணப்பகாரர், விண்ணப்பம் தொடர்பாக ஆணைக்குழு அவசியமானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய தகவலை வழங்குதல் வேண்டும்.

(5) உத்தேசிக்கப்பட்ட மத்திய வைப்பகம், எல்லா நேரங்களிலும், பின்வருவனவற்றை வழங்குவதனை உறுதிப்படுத்துவதற்குப் போதிய நிதிசார், மனித மற்றும் வேறு வளன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) அதன் தொழிலை நடாத்துவதற்காகப் போதியதான முறையிலும் முறையாகவும் சாதனமிடப்பட்ட வளவுகள்;

(ஆ) அதன் தொழிலை நடாத்துவதற்காகத் தகுதிவாய்ந்த ஆளணியினர்; அத்துடன்

(இ) ஆபத்துக்களைத் தணிப்பதற்கும் அவசரநிலைமைகளை எதிர்கொள்வதற்கும் போதிய ஆற்றல், பாதுகாப்பு ஒழுங்கேற்பாடுகள் மற்றும் வசதிகளுடனான தன்னியக்கப்படுத்தப்பட்ட முறைமைகள்.

(6) பொதுமக்களின் அக்கறைகருதி அல்லது பிணையங்கள் சந்தையின் முறையான ஒழுங்குபடுத்துகைக்காக ஒரு மத்திய வைப்பகத்தைத் தாபிப்பதற்கான அல்லது தொழிற்படுத்துவதற்கான உரிமமொன்றை விண்ணப்பகாரருக்கு வழங்குவது தோதானதென ஆணைக்குழு திருப்திப்படுமிடத்து ஆணைக்குழு தகுதியானவையெனக் கருதுகின்றவாறான அத்தகைய நியதிகளுக்கு அல்லது நிபந்தனைகளுக்கு அமைய அது அவ்வாறு செய்யலாம்.

(7) ஆறாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட உரிமத்துடன் இணைந்துள்ள நியதிநிபந்தனைகளின் பொதுமையை வரையறுக் காமல், ஆணைக்குழுவானது, முதலீட்டாளர்களின் அக்கறைகருதி அல்லது ஒரு மத்திய வைப்பகத்தின் முறையான ஒழுங்கு படுத்துகைக்காக விதிக்கப்பட்ட நியதிநிபந்தனைகளுள் எவற்றையும் திருத்துதல் அல்லது இல்லாதொழித்தல் அல்லது புதிய நியதிநிபந்தனைகளை விதித்தல் தோதானதென ஆணைக்குழு திருப்திப்படின் அவ்வாறு செய்யலாம்.

56. (1) மத்திய வைப்பகமானது-

(அ) பிணையங்களைக் கையாளுவதற்கான காப்பான, பயனுள்ள மற்றும் வினைத்திறனான முறைமையைத் தொழிற்படுத்துதல் வேண்டும்;

(ஆ) அதன் தொழிலுடனும் தொழிற்பாடுகளுடனும் இணைந்துள்ள எவையேனும் ஆபத்துக்களைச் சாதுரியமானமுறையில் முகாமைசெய்தல் வேண்டும்; அத்துடன்

(இ) கணக்குவைத்திருப்போரின் பாதுகாப்புக்கான தேவையைக் குறிப்பாகக் கருத்திற்கொண்டு பொதுமக்களின் அக்கறைகருதிச் செயலாற்றுதல் வேண்டும்.

(2) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், கணக்குவைத்திருப்போரின் பாதுகாப்புக்கான தேவையைக் குறிப்பாகக் கருத்திற்கொண்டு, பொதுமக்களின் அக்கறைகருதி எல்லா நேரங்களிலும் செயலாற்றுவது ஒரு மத்திய வைப்பகத்தினது பணிப்பாளரின் கடமையாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கடமைக்கும் வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழான பணிப்பாளரொருவரின் கடமைக்கும் இடையே முரண்பாடு இருக்குமிடத்து, இச்சட்டத்தின்கீழான கடமையே மேலோங்கிநிற்றலும் வேண்டும்.

57. (1) ஆணைக்குழுவானது, எழுத்திலான அறிவித்தல்மூலம்,-

(அ) அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து 55 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதாக்கலாம்; அல்லது

(ஆ) அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து, அறிவித்தலிற் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய வசதிகளை வழங்காதொழியும்படி அல்லது தொழிற்படுத்தாதொழியும்படி அல்லது அத்தகைய சேவைகளை வழங்காதொழியும்படி மத்திய வைப்பகத்தைப் பணிக்கலாம்.

(2) பின்வரும் சூழ்நிலைகளுள் ஏதேனுமொன்று இடம்பெறுமிடத்து, ஆணைக்குழுவானது, முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதற்காக அல்லது பொதுமக்களின் அக்கறைகருதி அல்லது பிணையங்கள் சந்தையை முறையாக ஒழுங்குபடுத்துவதற்காக (1) ஆம் உட்பிரிவின்கீழ் உரிமத்தை இல்லாதாக்குதல் அல்லது பணிப்புரையை வழங்குதல் தோதானதென ஆணைக்குழு திருப்திப்பட்டாலொழிய, அவ்வாறு செய்தலாகாது:-

(அ) மத்திய வைப்பகமானது பிணையங்களின் மத்திய கையாளுகைக்கான முறைமையொன்றைத் தொழிற்படுத்தாதொழிகின்றமை;

(ஆ) மத்திய வைப்பகமானது, இலங்கையினுள்ளாயினுஞ்சரி இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றமை அல்லது வேறுவகையாகக் கலைக்கப்படுகின்றமை;

(இ) மத்திய வைப்பகமானது அதன் உரிமத்தின் ஏதேனும் நியதியை அல்லது நிபந்தனையை மீறியுள்ளமை அல்லது இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறுக்குக் குற்றஞ்சாட்டப்படுகின்றமை;

(ஈ) மத்திய வைப்பகமானது இச்சட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்ற ஒரு நிபந்தனையுடன், தேவைப்பாட்டுடன் அல்லது பணிப்புரையுடன் இணங்கியொழுவதற்குத் தவறியுள்ளமை;

(உ) 55 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட ஏதேனும் தகவல் முக்கியமான ஒரு விபரத்தில் பொய்யானதாக அல்லது பிழைவழியுய்ப்பதாக இருந்தமை அல்லது அதிலிருந்து முக்கியமான விட்டுவிடுகையொன்று இருக்கின்றமை;

(ஊ) மத்திய வைப்பகத்துக்கெதிரான தீர்ப்புத் தனிசொன்று முழுமையாக அல்லது பகுதியளவில் கொடுத்துத் தீர்க்கப்படாதுள்ளமை;

(எ) மத்திய வைப்பகத்தின் ஏதேனும் ஆதனம் தொடர்பாக அல்லது அது தொடர்பில், இலங்கையினுள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, ஒரு பெறுநர், ஒரு பெறுநரும் முகாமையாளரும், ஒழிப்போன் அல்லது சமமான ஆள் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமை;

(ஏ) மத்திய வைப்பகமானது, இலங்கையினுள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, அதன் கடன்கொடுத்தோருடன் இணக்கப்பாடொன்றை அல்லது ஒழுங்கேற்பாட்டுத் திட்டமொன்றைச் செய்து கொண்டுள்ளமை; அல்லது

(ஐ) மத்திய வைப்பகமானது அதன் சொந்த விருப்பத்தின் பேரில் அதற்கு வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதாக்கும் படி ஆணைக்குழுவுக்கு விண்ணப்பித்திருந்து அவ்வாறு செய்வது தகுதியானதென ஆணைக்குழு கருதுகின்றமை.

(3) இரண்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக, மத்திய வைப்பகமானது, ஆணைக்குழுவின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் இரண்டுவாரங்களை விஞ்சுகின்றவொரு காலப்பகுதிக்குப் பிணையங்களின் மத்திய கையாளுகைக்கான முறைமையொன்றை அது தொழிற்படுத்தாதொழிந்திருப்பின், அத்தகைய முறைமையைத் தொழிற்படுத்தாதொழிந்துள்ளதெனக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் உரிமமொன்று இல்லாதாக்கப்பட்டமை அல்லது பணிப்புரையொன்று வழங்கப்பட்டமை எவ்வாறிருப் பினும், பின்வரும் நோக்கத்துக்காக ஆணைக்குழுவானது அறிவித்தலிற் குறித்துரைக்கக்கூடியவாறாக இல்லாதாக்குகையினால் அல்லது பணிப்புரையினால் பாதிக்கப்பட்ட அத்தகைய செயற்பாடுகளை இல்லாதாக்குகை அல்லது பணிப்புரை பயனுக்கு வரவேண்டிய தேதியன்று அல்லது அத்தேதிக்குப்பின்னர் தொடர்ந்து கொண்டுநடாத்துவதற்கு ஆணைக்குழு மத்திய வைப்பகத்தை அனுமதிக்கலாம்:-

(அ) மத்திய வைப்பகத்தின் தொழிற்பாடுகளை மூடிவிடும் அல்லது அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட சேவைகளை வழங்காதொழியும் நோக்கத்துக்காக;

(ஆ) வைப்பீட்டாளர்களைப் பாதுகாக்கும் நோக்கத்துக்காக; அல்லது

(இ) பொதுமக்களின் அக்கறைக்காக.

(5) ஆணைக்குழுவானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் செயலாற்றுகின்றவிடத்து, ஆணைக்குழுவானது, அவசியமென அது கருதுமிடத்து புதிய பணிப்பாளர் சபையொன்று நியமிக்கப் படும்வரை மத்திய வைப்பகத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்கு ஆறுமாத காலப்பகுதிக்கானதும் ஓராண்டுக் காலப்பகுதிக்கு நீடிக்கப்படக்கூடியதுமான இடைக்காலப் பணிப்பாளர் சபையொன்றை நியமிக்கலாம்.

(6) நான்காம் உட்பிரிவின்கீழ் மத்திய வைப்பகத்துக்கு ஆணைக்குழுவானது அனுமதி வழங்கியுள்ளவிடத்து, மத்திய வைப்பகமானது, அத்தகைய அனுமதிக்கிணங்கச் செயற்பாடுகளை அது கொண்டுநடாத்துவதன் காரணமாக (1) ஆம் உட்பிரிவை மீறியுள்ளதாகக் கருதப்படுதலாகாது.

(7) ஆணைக்குழுவானது, கேட்கப்படுவதற்கான சந்தர்ப்ப மொன்றை மத்திய வைப்பகத்துக்கு அளிக்காமல், (1) ஆம் உட்பிரிவின்கீழான ஏதேனும் நடவடிக்கையை எடுத்தலாகாது.

(8) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஆணைக்குழுவின் முடிபினால் இன்னலுறுகின்ற மத்திய வைப்பகமொன்று, அம்முடிபுபற்றி மத்திய வைப்பகத்துக்கு அறிவிக்கப்பட்டபின்னர் பதினான்கு நாட்களினுள் அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(9) எட்டாம் உட்பிரிவின்கீழான மேன்முறையீடொன்று செய்யப்பட்டமை எவ்வாறிருப்பினும், இப்பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கை, அமைச்சரின் முடிபு பெறப்படும்வரை பயனுடையதாகத் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(10) அமைச்சர், (8) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட மேன்முறையீட்டின்மீது-

(அ) மேன்முறையீட்டை அனுமதித்து உரிமத்தின் அல்லது பணிப்புரையின் இல்லாதாக்குகையை இல்லாதொழிக்கும் படி ஆணைக்குழுவைப் பணிக்கலாம்; அல்லது

(ஆ) மேன்முறையீட்டுக்கு அனுமதிமறுக்கலாம்.

(11) ஆணைக்குழுவானது, அமைச்சரின் முடிபுக்குப் பயன்கொடுத்தல் வேண்டும்.

(12) பதினோராம் உட்பிரிவுக்கமைய, இப்பிரிவின்கீழ் உரிமத்தின் ஏதேனும் இல்லாதாக்குகைபற்றி அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புரைபற்றி ஆணைக்குழுவானது பகிரங்க அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

58. ஐம்பத்தேழாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் உரிமத்தின் ஏதேனும் இல்லாதாக்குகை அல்லது வழங்கப்பட்ட பணிப்புரை யொன்று-

(அ) மத்திய வைப்பகத்தினால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை, கொடுக்கல்வாங்கல் அல்லது ஒழுங்கேற்பாடு, 57 ஆம் பிரிவின்

(1) ஆம் உட்பிரிவின்கீழான உரிமம் இல்லாதாக்கப்பட்டதற்கு முன்னர் அல்லது பணிப்புரை வழங்கப்பட்டதற்கு முன்னர் அல்லது 57 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவு ஏற்புடையதாகுமிடத்து அதற்குப்பின்னர் செய்து கொள்ளப்பட்டதாயினுஞ்சரி, அவ்வுடன்படிக்கையை, கொடுக்கல்வாங்கலை அல்லது ஒழுங்கேற்பாட்டை வறிதானதாக்கும் அல்லது பாதிக்கும்வகையில் தொழிற்படுதலாகாது; அல்லது

(ஆ) அத்தகைய உடன்படிக்கை, கொடுக்கல்வாங்கல் அல்லது ஒழுங்கேற்பாட்டின்கீழ் எழுகின்ற ஏதேனும் உரிமையை, கடப்பாட்டை அல்லது பொறுப்பைப் பாதிக்கும்வகையில் தொழிற்படுதலாகாது.

59. மத்திய வைப்பகமொன்று வெவ்வேறு வகையினவான பிணையங்கள் கணக்குகளைத் தாபிக்கலாமென்பதுடன், மத்திய வைப்பகத்திடம் திறக்கப்பட்ட அத்தகைய பிணையங்கள் கணக்கு ஒவ்வொன்றும், வைப்பிலிடப்பட்ட பிணையங்களின் பயனுகர் சொந்தக்காரரின் பெயரில் அல்லது நியமத்தரின் பெயரில் இருத்தலும் வேண்டும். நியமத்தரொருவரின் பெயரில் பிணையங்கள் கணக்கு திறக்கப்படுமிடத்து, பயனுகர் சொந்தக்காரரின் பெயர், அத்தகைய கணக்கைத் திறக்கும் ஆளினால் மத்திய வைப்பகத்துக்கு வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

60. மத்திய வைப்பகத்தில் வைத்திருக்கப்பட்ட பிணையங்களின் எல்லாக் கையாளுகைகளும், பங்குச் சான்றிதழ் தொகுதிகளின் உருப்படியான ஒப்படைப்பில்லாமல் மத்திய வைப்பகத்தின் கணக்குகளிலான புத்தகப் பதிவுகளின்மூலம் செய்யப்படுதல் வேண்டும்.

61. மத்திய வைப்பகத்தினால் பேணப்பட்ட கணக்கொன்றிலான பதிவீடு பற்றிய பதிவொன்று அத்தகைய கருமத்தின் மெய்யான தன்மைபற்றி முதற்றோற்றவளவிலான சான்றாதல் வேண்டும்.

62. (1) மத்திய வைப்பகமானது அதன் பிணையங்களை வைத்திருப்போருக்காக நம்பிக்கைப்பொறுப்பில் பிணையங்களை வைத்திருக்குமிடத்து, அப்பிணையங்களானவை எந்த ஆளின் நன்மைக்காக நம்பிக்கைப்பொறுப்பில் வைத்திருக்கப்படுகின்றனவோ அந்த ஆள்-

(அ) அத்தகைய பிணையங்களை வைத்திருப்பவராகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அப்பிணையங்கள் தொடர்பில், அவர் அத்தகைய பிணையங்களை வைத்திருப்பவர் என்றாற்போன்று, விடயத்துக்கேற்ப, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் அத்தகைய பிணையங்கள் தொடர்பில் அல்லது அவற்றிலிருந்து எழுகின்ற அத்தகைய எல்லா உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் துய்த்தலும் அத்தகைய எல்லாக் கடமைகளுக்கும் கடப்பாடுகளுக்கும் அமைந்தவராகவிருத்தலும் வேண்டும்.

(2) நியமத்தர் ஒருவரினால் வைத்திருக்கப்பட்ட மத்திய வைப்பகத்தின் கணக்குகளில் பேணப்பட்ட பிணையங்களுடன் இணைந்துள்ள உரிமைகளும் கடமைகளும், மத்திய வைப்பகத்தில் வைத்திருக்கப்பட்ட முறையான கணக்கில் அடையாளங்காணப்பட்ட பயனுகர் சொந்தக்காரரினால், அவர் அப்பிணையங்களை வைத்திருப்பவர் என்றாற்போன்று, பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஒரு வைப்பகப் பங்குபற்றுநரின் ஏதேனும் கடனிறுக்க வகையறவு அல்லது வங்கிமுறிவு வழக்குநடவடிக்கைகள் தொடர்பில் ஒரு பெறுநரை, ஒரு பெறுநரை அல்லது முகாமையாளரை, ஒழிப்போனை அல்லது எவரேனும் சமமான ஆளை நியமித்தலானது, அந்த வைப்பகப் பங்குபற்றுநரினதாக மத்திய வைப்பகத்தினால் நம்பிக்கைப்பொறுப்பில் வைத்திருக்கப்பட்ட பிணையங்களை வைத்திருப்பவர்களின் உரிமைகளைப் பாதித்தலாகாது.

63. இச்சட்டம் இயற்றப்படுமுன்னர் வைப்பகத்தினால் செய்யப்பட்ட பிணையங்களின் ஏதேனும் பதிவானது, அத்தகைய பதிவு இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கவல்லாமல் செய்யப்பட்டுள்ளதென்ற காரணத்துக்காக மட்டும் செல்லுபடியற்றதாதலாகாது.

## அத்தியாயம் 4

### பொது ஏற்பாடுகள்

64. (1) ஒரு சந்தை நிறுவனத்தின் விதிகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட விதிகள்-

(அ) சந்தை நிறுவனத்துக்கும் பிணையங்களின் ஒவ்வொரு வழங்குநருக்குமிடையேயும்;

(ஆ) சந்தை நிறுவனத்துக்கும், விடயத்துக்கேற்ப, ஒவ்வொரு வியாபாரப் பங்குபற்றுநருக்கும் தீர்வக உறுப்பினருக்கும் அல்லது வைப்பகப் பங்குபற்றுநருக்குமிடையேயும்;

(இ) பிணையங்களின் ஒவ்வொரு வழங்குநருக்கும் ஒவ்வொரு வியாபாரப் பங்குபற்றுநருக்குமிடையேயும்; அத்துடன்

(ஈ) வியாபாரப் பங்குபற்றுநர்கள், தீர்வக உறுப்பினர்கள் அல்லது வைப்பகப் பங்குபற்றுநர்கள் என்போருக்கிடையேயும், பிணிக்கின்ற ஒப்பந்தமாகத் தொழிற்படுதல் வேண்டும்.

(2) முறையே, சந்தை நிறுவனமும், பிணையங்களின் ஒவ்வொரு வழங்குநரும், ஒவ்வொரு வியாபாரப் பங்குபற்றுநரும், தீர்வக உறுப்பினரும், வைப்பக பங்குபற்றுநரும், வீதிகளின் ஏற்பாடுகளின் கீழான கடப்பாடுகளை, அவ்வேற்பாடுகள், விடயத்துக்கேற்ப, சந்தை நிறுவனத்துக்கு வழங்குநருக்கு, வியாபாரப் பற்குபற்றுநருக்கு, தீர்வக உறுப்பினருக்க அல்லது வைப்பகப் பங்குபற்றுநருக்கு ஏற்புடையற்பாலனவாகவிருக்கும் அளவுவரை, பின்பற்றுதலும் புரிதலும் வேண்டும்.

(3) ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் அளவுவரை சந்தை நிறுவனத்தின் வீதிகள், ஆணைக்குழுவின் முன்னங்கீகாரமின்றித் திருத்தப்படுதலாகாது, வேறுபடுத்தப்படுதலாகாது அல்லது ஒழிக்கப்படுதலாகாது.

(4) சந்தை நிறுவனமொன்று அதன் விதிகளைத் திருத்தவதற்கு உத்தேசிக்குமிடத்து, அச்சந்தை நிறுவனம் உத்தேசத் திருத்தத்தை ஆணைக்குவுக்கு எழுத்தில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

(5) ஆணைக்குழுவானது, உத்தேசத் திருத்தம் பெற்றுக் கொள்ளப்பட்டதிலிருந்து தொண்ணூறு நாட்களினுள் அச்சந்தை நிறுவனத்தைக் கேட்டபின்னர் பின்வருவனபற்றிச் சந்தை நிறுவனத்துக்கு எழுத்திலான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்:-

(அ) விதிகளுக்கான அத்தகைய திருத்தங்கள் அனுமதிக்கப்படுகின்றனவா;

(ஆ) விதிகளுக்கான அத்தகைய திருத்தங்களுக்கு அனுமதிமறுக்கப்படுகின்றதா; அல்லது

(இ) விதிகளுக்கான அத்தகைய திருத்தங்கள், திருத்தங்களுடனும், வேறுபாடுகளுடனும் அல்லது திரிபுகளுடனும் அனுமதிக்கப்படுகின்றனவா.

(6) உத்தேசத் திருத்தத்துக்கு அனுமதிமறுக்கப்படுமிடத்து, ஆணைக்குழு அத்தகைய அங்கீகாரமறுப்புக்கான காரணங்களைக் கொடுத்தல் வேண்டும்.

(7) ஆணைக்குழுவானது தொண்ணூறு நாட்களினுள் சந்தை நிறுவனத்துக்குப் பதிலளிக்கத் தவறுமிடத்து, (4) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய விதிகளுக்கான உத்தேசத் திருத்தங்கள் தொண்ணூறு நாட்கள் முடிவுற்றதன்மீது உடனடியாகப் பயனுறுதல் வேண்டும்.

(8) ஐந்தாம் உட்பிரிவின்கீழான அறிவித்தல் கிடைக்கப்பெற்றதன் மேல் சந்தை நிறுவனம் அத்தகைய விதிக்கு உடனடியாகப் பயன்கொடுத்தல் வேண்டும்.

(9) ஐந்தாம் மற்றும் (8) ஆம் உட்பிரிவுகளில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஆணைக்குழுவானது, ஏதேனும் சந்தை நிறுவனத்தின் விதிகளை எந்நேரத்திலும் திருத்தலாம் என்பதுடன், அத்தகைய விதிகள் உடனடியாகப் பயனுறுதலும் வேண்டும் அல்லது ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய தேதியன்று பயனுறுதலும் வேண்டும்.

65\. (1) ஒரு சந்தை நிறுவனத்தின் விதிகளுக்கு இணங்கியொழுகுவதற்கான, அவற்றைப் பின்பற்றுவதற்கான, வலுவுறுத்துவதற்கான அல்லது அவற்றுக்குப் பயன்கொடுப்ப தற்கான கடமையொன்றின்கீழுள்ள எவரேனுமாள் அவ்வாறு செய்யத் தவறுமிடத்து, ஆணைக்குழுவானது, சந்தை நிறுவனம் அத்தகைய விடயத்தை ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்துவதன்மேல் அத்தகைய விதிகளுக்கு இணங்கியொழுகும்படி அல்லது அத்தகைய தவறுதலுக்கான காரணங்களைக் கொடுக்கும்படி அத்தகைய ஆளைப் பணித்தல் வேண்டும்.

(2) அத்தகைய ஆளினாற் கொடுக்கப்பட்ட காரணங்களுடன் ஆணைக்குழு திருப்திப்படாதவிடத்து, ஆணைக்குழுவானது, (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஆளை, விதிகளுக்கும், ஆணைக்குழு அவசியமெனக் கருதுகின்றதும் ஆணைக்குழுவினால் விடுக்கப்பட்டதுமான வேறேதேனும் பணிப்புக்கும் இணங்கியொழுகும்படி பணிக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஆணைக்குழுவின் பணிப்புரையொன்றை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார்.

(4) எவரேனுமாள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பணிப்புரையொன்றுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, ஆணைக்குழுவானது (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு நடவடிக்கையெடுக்கலாம் அல்லது (5) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளைக்காக நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(5) ஒரு சந்தை நிறுவனத்தின் விதிகளுக்கு இணங்கியொழுகும்படி, அவற்றைப் பின்பற்றும்படி, வலுவுறுத்தும்படி அல்லது அவற்றுக்குப் பயன்கொடுக்கும்படி முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட ஆளைப்பணிக்கின்ற கட்டளையொன்றை நீதிமன்றம் ஆக்கலாம்.

66\. (1) அரசாங்கத்தின் பிரதிநிதியொருவர் தவிர்ந்த வேறு ஆளொருவர், ஆணைக்குழுவின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல், ஒரு சந்தை நிறுவனத்திலான வாக்களிக்கும் பங்குகள் எல்லாவற்றினதும் கூட்டுமொத்தத்தில் ஐந்து சதவீதத்தை அல்லது அதற்கு மேற்பட்டதை விஞ்சுகின்ற சந்தை நிறுவனத்தின் எவையேனும் வாக்களிக்கும் பங்குகளை ஒன்றில் தனிப்பட்ட முறையில் அல்லது அவருடன் ஒருமித்துச் செயலாற்றுகின்ற வேறெவரேனுமாளுடன் சேர்ந்து, கொள்ளுதல் செய்வதற்கு ஏதேனும் உடன்படிக்கையை அல்லது ஒழுங்கேற்பாட்டைச் செய்துகொள்ளுதலாகாது.

(2) ஆணைக்குழுவானது, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையொன்று என்றவகையாக ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான குறிப்பிட்டவோர் அக்கறையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒரு தொகுதியினரான ஆட்களினால் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் வைத்திருக்கப்படக் கூடிய வாக்களிக்கும் பங்குகளின் அதிகபட்ச விகிதாசாரத்தின்மீது மட்டுப்பாடுகளை விதிக்கலாம்.

(3) ஆணைக்குழுவானது எந்நேரத்திலேனும் வர்த்தமானியில் அறிவிப்பொன்றை வெளியிடுவதன்மூலம் பிணையங்கள் சந்தை அபிவிருத்தியின் கட்டத்தை அல்லது பொதுமக்களின் அக்கறையைக் கவனத்திற்கொண்டபின்னர் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட தடைமட்டத்தை வேறுபடுத்தலாம்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்கான விண்ணப்பம், அதன்கண் குறிப்பீடுசெய்யப்பட்ட வாக்களிக்கும் பங்குகளைக் கொள்ளுதல் செய்வதற்கு உட்கருதுகின்ற ஆளினால் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான படிவத்திலும் முறையிலும் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.

(5) ஆணைக்குழுவானது, விண்ணப்பகாரரைப் பின்வருமாறு செய்யும்படி தேவைப்படுத்தலாம்:-

(அ) விண்ணப்பமொன்று சம்பந்தமாக மேலதிகத் தகவலைக் கொடுக்கும்படியும்; அத்துடன்

(ஆ) அது குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய ஆட்கள்மூலமும், ஒரு விண்ணப்பத்தை ஆதரித்துச் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் தகவலை விண்ணப்பகாரரின் ஆகுசெலவில் சரிபார்க்கும்படியும்.

(6) ஆணைக்குழுவானது, விதிப்பதற்கு அது தகுதியெனக் கருதுகின்றவாறான அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய, அதன் அங்கீகாரத்தை வழங்கலாம்.

67\. (1) எவரேனுமாள் 66 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறியுள்ளாரென ஆணைக்குழு திருப்திப்படுமிடத்து, எவையேனும் பங்குகள் தொடர்பிலான மீறுகையின் சூழ்நிலைகளில் ஏற்புடையற்பாலவாறாக அல்லது தோதானவாறாக இருக்கக்கூடிய பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தடைகளை விதிக்கின்ற பணிப்புரையொன்றை ஆணைக்குழு வழங்கலாம்:-

(அ) அத்தகைய வாக்களிக்கும் பங்குகளை வாங்குவதனை அல்லது வாங்குவதற்கான உடன்படிக்கையை அல்லது ஒழுங்கேற்பாட்டை நிறைவேற்றுவதனை அல்லது வழங்கப்படாத பங்குகளின் விடயத்தில், வழங்கப்படாத பங்குகளை வாங்குவதற்கான உடன்படிக்கையை அல்லது ஒழுங்கேற்பாட்டை நிறைவேற்றுவதனை அல்லது வழங்கப்படாத பங்குகளுடன் வழங்கப்படுவதற்கான உரிமையை வாங்குவதனைத் தடைசெய்தும்;

(ஆ) அத்தகைய பங்குகள் தொடர்பிலான எவையேனும் வாக்களிக்கும் உரிமைகளின் பிரயோகத்தைத் தடைசெய்தும்;

(இ) அத்தகைய பங்குகளின் உரிமையிலான அல்லது அத்தகைய பங்குகளை வைத்திருப்பவருக்குச் செய்யப்பட்ட ஏதேனும் கொடைமுனைவைப் பின்பற்றி எவையேனும் மேலதிகப் பங்குகளின் வழங்குகையைத் தடைசெய்தும்; அல்லது

(ஈ) ஒழித்துக்கட்டுதலில் தவிர, மூலதனம், பங்கிலாபங்கள் என்பன தொடர்பிலாயினுஞ்சரி அல்லது வேறுவகையாகவாயினுஞ்சரி, அத்தகைய பங்குகளின்மீது சந்தை நிறுவனத்திடமிருந்து வருமதியான எவையேனும் பணத்தொகைகளின் கொடுப்பனவைத் தடைசெய்தும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பணிப்புரையொன்று செயல்முறைக்குகந்தவரை விரைவாக (1) ஆம் உட்பிரிவை மீறுகின்ற ஆளுக்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழு தகுதியானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய முறையில் பிரசித்தப்படுத்தவும்படலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பணிப்புரையொன்று, (1) ஆம் உட்பிரிவை மீறுகின்ற ஆளை அல்லது அத்தகைய பணிப்புரை எந்த வாக்களிக்கும் பங்குகள் தொடர்பானதோ அந்த வாக்களிக்கும் பங்குகளை அப்போதைக்கு வைத்திருக்கின்ற எவரேனுமாளை மற்றும் பணிப்புரையிற் குறித்துரைக்கப்பட்ட வேறெவரேனுமாளைப் பிணிப்பதாதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் எந்த ஆளுக்கெதிராகப் பணிப்புரையொன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்த எவரேனுமாள் அல்லது அத்தகைய பணிப்புரையினால் பங்கமானமுறையில் பாதிக்கப்பட்ட வேறெவரேனுமாள், அப்பணிப்புரை வழங்கப்பட்டதிலிருந்து பதினான்கு நாட்களினுள், அப்பணிப்புரை எந்த ஏற்பாடுகள் தொடர்பாக வழங்கப்பட்டதோ அந்த ஏற்பாடுகளைத் தாம் மீறியிருக்கவில்லை என்ற ஏதுவின்மீது அப்பணிப்புரையைப் புறத்தொதுக்குவதற்காக அல்லது மேன்முறையீட்டில் குறித்துரைக்கப்படவேண்டிய காரணங்களுக்காக அதனை வேறுபடுத்துவது நீதியானதாகவும் முறையானதாகவும் இருக்குமென்ற ஏதுவின்மீது அப்பணிப்புரையை வேறுபடுத்துவதற்காக ஆணைக்குழுவுக்கு எழுத்திலான மேன்முறையீட்டைச் செய்யலாம்.

(5) ஆணைக்குழுவானது (4) ஆம் உட்பிரிவின்கீழான விண்ணப்பமொன்றைப் பெற்றதிலிருந்து நாற்பத்தைந்து நாட்களினுள், அத்தகைய விண்ணப்பத்தினால் செய்யப்பட்ட மேன்முறையீட்டைக் கவனத்திற்கொண்டபின்னர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பணிப்புரையை ஒன்றில் உறுதிப்படுத்தலாம், புறத்தொதுக்கலாம் அல்லது வேறுபடுத்தலாம்.

(6) ஆணைக்குழுவானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரையை உறுதிப்படுத்துமிடத்து, ஆணைக்குழு, பணிப்புரை எந்தப் பங்குகளுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்தப் பங்குகளை வைத்திருப்பவரை அப்பங்குகளைக் கையுதிர்க்கும்படி பணிக்கலாம்.

(7) ஆணைக்குழுவானது, இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஆணைக்குழுவின் ஏதேனும் முடிபுக்குப் பயன்கொடுப்பதற்கு அவசியமாகக்கூடியவாறாக அல்லது அத்தகைய முடிபுக்கு இடைநேர்விளைவானதாக, துணைநிலையானதாக அல்லது அதன் விளைவாந்தன்மையினதாக இருக்கக்கூடியவாறாக, சந்தை நிறுவனத்தின் பணிப்பாளர்களுக்கு அல்லது அலுவலர்களுக்கு ஏதேனும் அறிவுறுத்தலை அல்லது பணிப்புரையை வழங்கலாம்.

(8) ஐந்தாம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புரைக்கு அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும் முடிபுக்கு, அல்லது (7) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் விடுக்கப்பட்ட ஏதேனும் அறிவுறுத்துதலுக்கு அல்லது வழங்கப்பட்ட பணிப்புரைக்கு முரணாகவுள்ள எவையேனும் பங்குகள் தொடர்பான ஏதேனும் உடன்படிக்கை அல்லது ஒழுங்கேற்பாடு உட்பட்ட ஏதேனும் கொடுக்கல்வாங்கல், சட்டத்தில் எப்பயனையும் கொண்டிருப்பதில்லையெனக் கருதப்படுதல் வேண்டும்.

(9) ஐந்தாம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புரையை அல்லது முடிபை அல்லது (7) ஆம் உட்பிரிவின்கீழ் விடுக்கப்பட்ட ஏதேனும் அறிவுறுத்துதலை அல்லது வழங்கப்பட்ட பணிப்புரையை மீறுகின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இருபத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றுக்கு அல்லது ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக் கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

68\. (1) இரண்டாயிரத்தேழாம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஆளொருவர், ஆணைக்குழுவின் முன்னங்கீகாரத்துடன் தவிர, ஒரு சந்தை நிறுவனத்தின் பணிப்பாளராக, பிரதான நிறைவேற்று அலுவலராக அல்லது பிரதான ஒழுங்குபடுத்தும் அலுவலராக நியமனத்தை, மீள்நியமனத்தை, தேர்தலை அல்லது மீள்தேர்தலை ஏற்றுக்கொள்ளுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவின் அங்கீகாரம் தேவைப்படுமிடத்து, ஆணைக்குழுவானது, பின்வருமாறிருப்பின், விடயத்துக்கேற்ப, அங்கீகாரமளித்தல் ஆகாது:-

(அ) முன்மொழியப்பட்ட பணிப்பாளர், பிரதான நிறைவேற்று அலுவலர் அல்லது பிரதான ஒழுங்குபடுத்தும் அலுவலர், இலங்கையினுள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, பொறுப்புவிடுவிக்கப்படாத வங்கிமுறிந்தவராகவிருப்பின்;

(ஆ) முன்மொழியப்பட்ட பணிப்பாளர், பிரதான நிறைவேற்று அலுவலர் அல்லது பிரதான ஒழுங்குபடுத்தும் அலுவலர் என்போருக்கெதிரான தீர்ப்புத் தனிசு, முழுமையாக அல்லது பகுதியளவில் கொடுத்துத்தீர்க்கப்பட்டிராதிருப்பின்;

(இ) முன்மொழியப்பட்ட பணிப்பாளர், பிரதான நிறைவேற்று அலுவலர் அல்லது பிரதான ஒழுங்குபடுத்தும் அலுவலர்-

(i) இலங்கையினுள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, மோசடியை அல்லது நேர்மையீனத்தை உட்படுத்துகின்ற தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப் பளிக்கப்பட்டவராகவிருப்பின் அல்லது அதற்கான குற்றத்தீர்ப்பு, அவர் மோசடியான முறையில் அல்லது நேர்மையீனமானமுறையில் செயலாற்றியுள்ளாரென்ற முடிவெடுப்பை உட்படுத்தியிருப்பின்;

(ii) இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;

(iii) அத்தகைய நியமனத்துக்கு நேர்முற்போந்த மூன்றாண்டு காலப்பகுதியொன்றின்போது இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் ஏதேனும் நிருவாகத் தடைவிதிப்புக்கு அமைந்தவராக விருந்திருப்பின்;

(iv) ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்; அல்லது

(v) அக்கறை முரண்பாட்டைக் கொண்டிருக்கக்கூடிய சாத்தியம் கொண்டவராகவிருப்பின்;

69. சந்தை நிறுவனமொன்று அதன் அமைப்பகவிதிகளை அல்லது ஏலவே கொடுத்துதவப்பட்ட வேறெவையேனும் முக்கிய விபரங்களை மாற்றியமைப்பதற்கு உத்தேசிக்குமிடத்து, அல்லது உரிமமொன்றைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பத்தில் குறித்துரைக்கப்பட்ட நிலையிலிருந்தான மாற்றமொன்றைச் செய்யுமிடத்து அல்லது செய்வதற்கு உட்கருதுமிடத்து, அச்சந்தை நிறுவனமானது அத்தகைய மாற்றியமைத்தல் அல்லது மாற்றம் செய்யப்படுமுன்னர் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

70. ஒப்பந்தங்கள் தொடர்பான ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் உள்ளதெதுவும், இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் விதிகளின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாததாகவிருக்கும் அளவுக்கு, பின்வருவனவற்றைப் பாதித்தல் ஆகாது:-

(அ) இச்சட்டத்தின்கீழான, அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்கீழான, விதிகளின்கீழான அல்லது பணிப்புரைகளின்கீழான பிணையங்கள் தொடர்பாக ஒரு பரிவர்த்தனைக்கு அல்லது தீர்வக இல்லத்துக்கு அளிக்கப்படவேண்டிய எவையேனும் உரிமைகள்;

(ஆ) இச்சட்டத்தின்கீழ், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின்கீழ், விதிகளின்கீழ் அல்லது பணிப்புரைகளின்கீழ் அல்லது விடயத்துக்கேற்ப, ஒரு பரிவர்த்தனையின் அல்லது ஓர் உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தின் அல்லது ஓர் உரிமமளிக்கப்பட்ட மத்திய வைப்பகத்தின் விதிகளின்கீழ் பரிவர்த்தனையொன்றினால் செய்துகொள்ளப்பட்ட பிணையங்களின் கொடுக்கல்வாங்கலுக்கானவொரு திறத்தவருக்கு அளிக்கப்படவேண்டிய எவையேனும் உரிமைகள்; அல்லது

(இ) விடயத்துக்கேற்ப, இச்சட்டத்தின்கீழ், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்கீழ், விதிகளின்கீழ் அல்லது பணிப்புரைகளின்கீழ் பரிவர்த்தனையொன்றினால் அல்லது ஓர் உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தினால் அல்லது ஓர் உரிமமளிக்கப்பட்ட மத்திய வைப்பகத்தினால் செய்துகொள்ளப்பட்ட பிணையங்களினது கொடுக்கல்வாங்கலின்கீழ் அல்லது அது தொடர்பாகச் செய்யப்பட்ட எதுவும் அல்லது செய்யாது விடப்பட்ட எதுவும்.

71. (அ) ஒரு பரிவர்த்தனையினால்; அல்லது

(ஆ) பின்வருவோருட்பட ஒரு பரிவர்த்தனையின் சார்பில் செயலாற்றுகின்ற எவரேனுமாளினால்-

(i) பரிவர்த்தனையின் எவரேனும் பணிப்பாளரினால்; அல்லது

(ii) பரிவர்த்தனையினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் குழுவின் எவரேனும் உறுப்பினரினால், செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட எதற்காகவும் பரிவர்த்தனை அல்லது (ஆ) என்னும் பந்தியின்கீழான அந்த ஆள், இச்சட்டத்தின்கீழ், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்கீழ், விதிகளின்கீழ் அல்லது பணிப்புரைகளின்கீழ் அல்லது அத்தகைய பரிவர்த்தனையின் விதிகளின்கீழ் அதன் கடப்பாடுகளின் நிறைவேற்றுகையின்போது அல்லது அது சம்பந்தமாக நியாயமான எல்லாக் கவனத்தையும் எடுத்தாரென்பதுடன் நல்லெண்ணத்துடன் செயலாற்றினாரெனவும் எண்பிப்பது, ஏதேனும் குற்றவியல் அல்லது குடியியல் வழக்குநடவடிக்கையில் எதிர்வாதமொன்றாதல் வேண்டும்.

72. (1) ஆணைக்குழு அல்லது ஆணைக்குழுவின் சார்பில் அல்லது அதன் அதிகாரத்துடன் செயலாற்றுகின்ற ஆளொருவர் இச்சட்டத்தின் முறையான நிருவாகத்துக்காகத் தேவைப்படுத்தப்படக்கூடியவாறாகச் சந்தை நிறுவனத்தின் தொழிற்பாடுகள் தொடர்பான அத்தகைய விபரத்திரட்டுகளைக் கொடுத்துதவுதலும் அத்தகைய தகவலை வழங்குதலுமுட்பட, ஆணைக்குழு அல்லது அத்தகைய ஆள் நியாயமானமுறையில் தேவைப்படுத்துகின்றவாறான அத்தகைய உதவியைச் சந்தை நிறுவனமொன்று ஆணைக்குழுவுக்கு அல்லது அத்தகைய ஆளுக்கு வழங்குதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் சார்பில் செயலாற்றுகின்ற அல்லது அதனால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர், இச்சட்டத்தின் நோக்கங்களுள் எவற்றுக்காகவும் பரிவர்த்தனையொன்றின் வியாபாரச் செயலிடத்துக்கான முழுமையானதும் சுதந்திரமானதுமான அணுக்கத்துக்கு நியாயமான எல்லா நேரங்களிலும் உரித்துடையவராதல் வேண்டும்.

(3) பரிவர்த்தனையொன்றின் வியாபாரச் செயலிடத்துக்கு (2) ஆம் உட்பிரிவிற்கிணங்கவுள்ள அணுக்கத்தை ஆணைக்குழுவின் சார்பில் செயலாற்றுகின்ற அல்லது அதனால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருக்குச் சட்டமுறையான சாக்கின்றி அனுமதிப்பதற்கு மறுக்கின்ற அல்லது தவறுகின்ற ஆளொருவர் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார்.

73. (1) சந்தை நிறுவனமொன்று அதன் ஐந்தொகைத் தேதியிலிருந்து ஐந்து மாதங்களினுள், பின்வருவனவற்றை உள்ளடக்கவேண்டிய வருடாந்த அறிக்கையொன்றை ஆணைக்குழுவிடம் கோப்பிடுதல் வேண்டும்:-

(அ) சந்தை நிறுவனத்தின் கூட்டிணைக்கப்பட்ட ஆளுகைக் கொள்கையின்மீதான அறிக்கையொன்றும் ஆணைக்குழு வினால் தேவைப்படுத்தப்பட்ட வேறேதேனும் தகவலும்;

(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்கத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட நிதிசார் கூற்றுக்களும் விதிகளில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தேவைப்பாடுகளும்; அத்துடன்

(இ) தோதானவிடத்து சந்தை நிறுவனமானது கொளிக்கம்பெனியொன்றாக அல்லது துணைநிலைக் கம்பெனியொன்றாக இருக்குமிடத்து ஒன்றுதிரட்டப்பட்ட நிதிசார் கூற்றுக்கள்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வருடாந்த அறிக்கையொன்றில் உள்ளடக்கப்படவேண்டிய நிதிசார் கூற்றுகள், இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கிணங்கக் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) தீர்வக இல்லத்தினதும் மத்திய வைப்பகத்தினதும் வருடாந்த அறிக்கை, ஆபத்து முகாமை நடவடிக்கைமுறைகளும் அவற்றின் ஏற்புடைமையும் பற்றிய கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கையொன்றையும் ஆணைக்குழுவினால் தேவைப்படுத்தப்பட்ட வேறேதேனும் தகவலையும் உள்ளடக்குதலும் வேண்டும்.

(4) வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்ற (2) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின்கீழான தகவல், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு மேலதிகமானதாகவிருத்தல் வேண்டும்.

74. (1) சந்தை நிறுவனமொன்றின் கணக்காய்வாளர் ஒருவர், தமது கடமைகளைச் சாதாரணநெறியில் புரிகையில்-

(அ) அவரது அபிப்பிராயத்தில் சந்தை நிறுவனத்தின் நிதி நிலைமையை முக்கியமானளவுக்குப் பங்கமானமுறையில் பாதிக்கின்ற அல்லது பங்கமானமுறையில் பாதிக்கக்கூடிய ஏதேனும் கருமம்பற்றி அறியவந்தால்;

(ஆ) அவரது அபிப்பிராயத்தில் இச்சட்டத்தின், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் ஏதேனும் ஏற்பாட்டின் மீறுகையாக அமைகின்ற அல்லது அமையக்கூடிய ஏதேனும் கருமம்பற்றி அல்லது சந்தை நிறுவனத்தின் நிதிசார் நிலையுறுதியை முக்கியமான அளவுக்குப் பாதிக்கின்ற மோசடியை அல்லது நேர்மையீனத்தை உட்படுத்துகின்ற ஒரு தவறு பற்றி அறியவந்தால்; அல்லது

(இ) பிணையங்களிலான முதலீட்டாளர்களின் நிதிகளை அல்லது ஆதனத்தைப் பங்கமானமுறையில் பாதிக்கின்ற அல்லது பங்கமானமுறையில் பாதிக்கக்கூடிய ஏதேனும் ஒழுங்கீனம் உட்பட, சந்தை நிறுவனத்தின் கணக்குகளின்மீது முக்கியமான விளைவைக் கொண்டுள்ள அல்லது கொண்டிருக்கக்கூடிய ஏதேனும் ஒழுங்கீனம் பற்றி அறியவந்தால், கணக்காய்வாளர், ஆணைக்குழுவுக்கான பிரதியொன்றுடன் அக்கருமம் அல்லது ஒழுங்கீனம் பற்றிய எழுத்திலான அறிக்கையொன்றைப் பணிப்பாளர் சபைக்கு உடனடியாக அனுப்புதல் வேண்டும்.

(2) சந்தை நிறுவனமொன்றின் கணக்காய்வாளர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவரது அறிக்கையில் அளிக்கப்பட்ட ஏதேனும் கூற்றுத் தொடர்பில் எவரேனுமாளினாலான ஏதேனும் துடர்ச்சிக்கு ஆளாதலாகாது; ஆயின், கணக்காய்வாளர் நல்லெண்ணத்துடன் செயலாற்றியிருத்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவானது, சந்தை நிறுவனம் ஒன்றின் கணக்காய்வாளரின்மீது பின்வரும் கடமைகளுள் எல்லாவற்றையும் அல்லது எவற்றையும் சுமத்தலாம்:-

(அ) ஆணைக்குழு அவசியமானவையெனக் கருதக்கூடியவாறு அவரது கணக்காய்வு தொடர்பான அத்தகைய மேலதிகத் தகவல்களையும் அறிக்கைகளையும் சமர்ப்பிப்பதற்கான கடமை;

(ஆ) சந்தை நிறுவனத்தின் தொழிலும் அலுவல்களும் பற்றிய அவரது கணக்காய்வின் நோக்கெல்லையை விசாலிப்பதற்கான, நீடிப்பதற்கான அல்லது மாற்றுவதற்கான கடமை;

(இ) குறிப்பிட்ட ஏதேனும் விடயத்தில் வேறேதேனும் பரிசோதனையை நிறைவேற்றுவதற்கான அல்லது ஏதேனும் நடவடிக்கைமுறையை நிலைநாட்டுவதற்கான கடமை; அல்லது

(ஈ) பந்தி (ஆ) அல்லது (இ) என்பதில் குறிப்பீடுசெய்யப்பட்ட அவரது கணக்காய்வு, பரிசோதனை அல்லது நடவடிக்கைமுறை நிலைநாட்டுகை என்பவற்றிலிருந்து எழுகின்ற ஏதேனும் கருமத்தின்மீது அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்கான கடமை; அத்துடன் கணக்காய்வாளர், நிதிசார் கூற்றுக்களின்மீது அவரது சுயாதீனமான அபிப்பிராயத்தை வழங்குவதற்காக அவரது சாதாரணக் கணக்காய்வு நோக்கெல்லைக்கான நீடிப்பொன்றாக அத்தகைய கடமைகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

(4) சந்தை நிறுவனமானது, (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கடமைகள் எல்லாம் அல்லது அவற்றுள் எவையும் கணக்காய்வாளரினால் நிறைவேற்றப்படுகின்றமை தொடர்பில் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட கட்டணங்கள் பற்றிய அட்டவணையின் நியதிகளின்படி அவருக்கு ஊதியமளித்தல் வேண்டுமென்பதுடன், மேலதிகப் புலனாய்வு தேவைப்படும் சூழ்நிலைகளில் கணக்காய்வாளர்களுக்கான ஊதியம் ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதலும் வேண்டும்.

75. சந்தை நிறுவனமொன்று, ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் அடிக்கடியாகவும், ஆபத்து முகாமைக் கணக்காய்வொன்றுட்பட, அத்தகைய அறிக்கைகளை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். ஆணைக்குழு, மேலதிகமாக, இச்சட்டத்தின் மற்றும் காலத்துக்குக்காலம் ஆணைக்குழுவினால் வழங்கப்படக்கூடிய விதிகளின் ஒழுங்குவிதிகளின் அல்லது பணிப்புரைகளின் ஏற்பாடுகளுக்குச் சந்தை நிறுவனம் இணங்கியொழுகுகின்றதென்பதை நிச்சயிப்பதற்கு ஆணைக் குழுவினாலான மேற்பார்வைக்கும் வருடாந்தக் கணக்காய்வுக்கும் சந்தை நிறுவனத்தை அமைந்த தாக்குதல் வேண்டும்.

76. சந்தை நிறுவனமொன்று, விதித்துரைக்கப்படக்கூடியவாறான வருடாந்தக் கட்டணமொன்றை ஆணைக்குழுவுக்குச் செலுத்துதல் வேண்டும்.

77. (1) ஆளொருவர் ஒரு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையாக, மூலாதாரப் பிணையங்களின் பரிவர்த்தனையாக, உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லமாக அல்லது மத்திய வைப்பகமாகக் காட்டிநிற்றலாகாது என்பதுடன், “பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை”, “மூலாதாரப் பிணையங்களின் பரிவர்த்தனை”, “எதிர்நோக்குகள் பரிவர்த்தனை”, “பங்குத்தொகுதிச் சந்தை”, “மூலாதாரப் பிணையங்களின் சந்தை”, “எதிர்நோக்குகள் சந்தை”, “உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லம்”, “தீர்வகச் செயலிடம்”, “மத்திய வைப்பகம்”, “பிணையங்களின் வியாபாரச் சந்தை”, “மூலாதாரப் பிணையங்களின் வியாபாரச் சந்தை” அல்லது “எதிர்நோக்குகள் வியாபாரச் சந்தை” என்ற பெயரை, தலையங்கத்தை அல்லது விவரணத்தை எடுத்தலாகாது அல்லது பயன்படுத்துதலாகாது அல்லது ஊகத்தின்மூலம் கடைப்பிடித்தலாகாது அல்லது அத்தகைய ஆள் ஒரு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை, மூலாதாரப் பிணையங்களின் பரிவர்த்தனை, உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லம் அல்லது மத்திய வைப்பகமாகவுள்ளார் என்று உட்கிடையாகக் கூறுகின்ற அல்லது நம்பிக்கையை உருவாக்கும் சாத்தியத்தைக் கொண்டுள்ள ஏதேனும் பெயரை, தலையங்கத்தை அல்லது விவரணத்தை எடுத்தலோ அல்லது பயன்படுத்துதலோ அல்லது ஏதேனுமிடத்தில் இணைத்துவைத்தலோ அல்லது வெளிக்காட்டி வைத்தலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளளை மீறுகின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றார்

78. (1) ஆணைக்குழுவின் முடிபினால் இன்னலுறுகின்றவரான ஆளொருவர், அத்தகைய முடிபு அந்த இன்னலுற்ற ஆளுக்கு அறிவிக்கப்பட்டபின்னர் முப்பது நாட்களினுள் அதன் முடிபை மீளாய்வுசெய்யும்படி ஆணைக்குழுவுக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(2) ஆணைக்குழுவானது, விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்பட்ட தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குப் பிந்தாமல் அதன் முடிபை விண்ணப்பகாரருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

## பாகம் III

### பிணையங்களின் வழங்குகை

79. இப்பாகத்தின் குறிக்கோளும் நோக்கமும் பின்வருவனவாதல் வேண்டும்-

(அ) பகிரங்கக் கொடைமுனைவுகள் என்றவகையாகப் பிணையங்களின் வழங்குகையை ஒழுங்குபடுத்துதல்;

(ஆ) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனிகளினால் நிதிசார் தகவல்களின் வெளிப்படுத்துகையை உறுதிப்படுத்தல்;

(இ) நிதிசார் ஒழுங்கீனங்களை வெளிப்படுத்துவதற்கு கணக்காய்வாளர்களைத் தேவைப்படுத்தல்;

(ஈ) சந்தை இடைத்தரகர்களுக்கு உரிமமளித்தலும் அவர்களின் பிரதிநிதிகளைப் பதிவுசெய்தலும்; அத்துடன்

(உ) வாடிக்கையாளர்களின் சொத்துக்களைப் பாதுகாத்தல்.

## அத்தியாயம் I

### பிணையங்களின் பகிரங்கக் கொடைமுனைவு

80. ஆணைக்குழுவினால் அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் அங்கீகரிக்கப்பட்டாலொழிய, பொதுமக்களிடமிருந்து நிதிகளைப் பரிந்துகேட்கும் நோக்கங்களுக்காக, ஒன்றில் நேரடியாகவோ அல்லது முன் விபரணமொன்று அல்லது அதனையொத்த ஆவணமொன்று என்ற வகையாக அல்லது வேறுவகையில் மூன்றாம் திறத்தவரொருவர் மூலமாகவோ பிணையங்களின் பகிரங்கக் கொடைமுனைவொன்றை நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்று அல்லது ஒரு பரிவர்த்தனையில் நிரற்படுத்துகையொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணபித்துள்ள ஏதேனும் பகிரங்கக் கம்பெனி செய்தலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், ஆணைக்குழுவானது, பிணையங்களின் தொகை, பிணையங்களின் வகுப்பு, முதலீட்டாளர்களின் எண்ணிக்கையும் வகையும், வழங்குநரின் தன்மை அல்லது பிணையங்கள் சந்தையின் தன்மை என்பவற்றை கவனத்துட்கொண்டு இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளின்மூலம், நிரற்படுத்தப்படாத கம்பெனிகளின் குறித்தசில வகையினவான பகிரங்கக் கொடைமுனைவுகளுக்கு முன்னர் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டுமெனத் தேவைப்படுத்தலாம்.

81. (1) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி ஒன்று, பின்வருவன தொடர்பில் ஆணைக்குழுவின் அல்லது அங்கீகாரத்தை வழங்குவதற்கு ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(அ) பொதுமக்களுக்குப் பிணையங்களின் ஏதேனும் புதிய வழங்குகை அல்லது விற்பனைக்கான கொடைமுனைவு; அத்தகைய வழங்குகைகள் அல்லது விற்பனைக்கான கொடைமுனைவுகள் பகிரங்கக் கொடைமுனைவொன்றென்ற வகையிலானதாக இருப்பினுஞ்சரி அல்லது வேறுவகையிலானதாக இருப்பினுஞ்சரி;

(ஆ) பிணையங்களின் தனிப்பட்ட இடுகை;

(இ) பிணையங்களின் உரிமைகள் வழங்குகைகள்;

(ஈ) பிணையங்களின் மிகையூதிய வழங்குகைகள்; அல்லது

(உ) ஒழுங்கேற்பாடுகள் பற்றிய திட்டங்கள், மீள்நிர்மாணம் பற்றிய திட்டங்கள், கையேற்புத் திட்டங்கள், பங்குவிருப்புத் திட்டங்கள் மற்றும் பிணையங்களின் வழங்குகைகள் என்றவகையாகச் சொத்துக்களைக் கொள்ளுதல்.

(2) ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட பரிவர்த்தனையின்மீது நிரற்படுத்தப்படுவதனை நாடுகின்ற நிரற்படுத்தப்பட்ட வெளிநாட்டு உருவகமொன்று, பிணையங்களின் பகிரங்கக் கொடைமுனைவொன்றைச் செய்வதற்கான அங்கீகாரத்துக்காக ஆணைக்குழுவுக்கு அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளுக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

(3) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி மற்றும் நிரற்படுத்தப்பட்ட வெளிநாட்டு உருவகம் ஒவ்வொன்றினதும் பணிப்பாளர் சபை, எந்தப் பரிவர்த்தனையில் அது நிரற்படுத்தப்படுகின்றதோ அந்தப் பரிவர்த்தனையின் விதிகளுக்கும் தேவைப்பாடுகளுக்கும், கம்பெனி பரிவர்த்தனையில் நிரற்படுத்தப்பட்டிருக்கும் வரையிலான எல்லா நேரங்களிலும் அக்கம்பெனி அல்லது உருவகம் இணங்கியொழுகுதல் வேண்டும் என உறுதிப்படுத்துதல் வேண்டும்.

82. (1) பொதுமக்களுக்குக் கொடைமுனைவொன்றைச் செய்கின்ற ஆளொருவரால் தயாரிக்கப்பட்ட முன்விபரணம் அல்லது அதையொத்த ஆவணம், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கும் மற்றும் ஆணைக்குழுவினாலும் அத்துடன் பரிவர்த்தனையொன்றின் விதிகளிலும் குறித்துரைக்கப்பட்ட வேறு எவையேனும் தேவைப்பாடுகளுக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(2) பொதுமக்களுக்குப் பிணையங்களின் வழங்குகையொன்றைச் செய்கின்ற ஆளொருவர், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறாக முன்விபரணத்தைப் பதிவுசெய்வதற்கு முன்னதாக, முன்விபரணத்தின் அல்லது அதையொத்த ஆவணத்தின் பிரதியொன்றை ஆணைக்குழுவுக்கு அல்லது அந்நோக்கத்துக்காக ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழு, பொதுமக்களிடமிருந்து நிதிகளைப் பரிந்துகேட்கும் நோக்கத்துக்கென ஆளொருவர் பிணையங்களின் பகிரங்கக் கொடைமுனைவொன்றைச் செய்கின்றபோது, ஏதேனும் முன்விபரணத்தை அல்லது அதையொத்த ஆவணத்தைப் பரிசோதனை செய்யலாம்.

83. (1) ஆணைக்குழு பின்வரும் அபிப்பிராயத்தைக் கொண்டிருப்பின், பகிரங்கக் கொடைமுனைவுகள் தொடர்பாக மேலதிகப் பிணையங்களைப் பிரித்தொதுக்க, வழங்க, கொடை முனைவு செய்ய அல்லது ஒப்பப்பணஞ்செலுத்துவதற்கான அழைப்பொன்றைச்செய்ய அல்லது கொள்வனவுசெய்ய அல்லது விற்பனைசெய்ய வேண்டாமென ஆணைக்குழு வழங்குநருக்குக் கட்டளையொன்றை வழங்கலாம்-

(அ) அதன் நிரற்படுத்தல் விதிகளின்கீழ் அல்லது 80 ஆம் பிரிவின்கீழ் அடங்குகின்ற பகிரங்கக் கொடைமுனைவுகள் தொடர்பில் உரிமமளிக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட முன்விபரணமொன்று அல்லது அதையொத்த ஆவணமொன்று விடயத்துக்கேற்ப, இச்சட்டத்தின் அல்லது பரிவர்த்தனை விதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகவில்லை அல்லது அதற்கிணங்கத் தயாரிக்கப்படவில்லை;

(ஆ) முன்விபரணமொன்று அல்லது அதையொத்த ஆவணமொன்று, பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் அல்லது அதில் முக்கியமான விட்டுவிடுகையொன்றுள்ள கூற்றொன்றை அல்லது தகவலைக் கொண்டிருக்கின்றது; அல்லது

(இ) வழங்குநரொருவர் இச்சட்டத்தின், அதன்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் ஏதேனும் ஏற்பாட்டை மீறியுள்ளார் அல்லது இச்சட்டத்தின்கீழ் விதிக்கப்படும் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகவில்லை.

(2) ஆணைக்குழு (1) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்று ஆக்கப்படுதல் வேண்டுமா என்பது பற்றி கேட்கப்படுவதற்கான நியாயமான சந்தர்ப்பமொன்றை பாதிக்கப்பட்ட எவரேனுமாளுக்கு வழங்கியிருந்தாலொழிய, ஆணைக்குழு அத்தகைய கட்டளையை ஆக்குதலாகாது.

(3) கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்றை அளிப்பதன்மூலம் (1) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்றை ஆக்குவதிலான ஏதேனும் தாமதம் முதலீட்டாளர்களின் அக்கறைக்குப் பங்கம் விளைவிக்குமென ஆணைக்குழு கருதினால், கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்றை அளிக்காமல் ஆணைக்குழு இடைக்காலக் கட்டளையொன்றை ஆக்கலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழான இடைக்காலக் கட்டளையொன்று முன்னரே இல்லாதொழிக்கப்பட்டாலொழிய, அது எந்நாளன்று ஆக்கப்பட்டதோ அந்நாளுக்குப் பின்னர் இருபத்தொரு நாட்கள் முடியும்வரை அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழான கேட்பு நிறைவுசெய்யப்படும்வரை, இவற்றுள் எத்தேதி பிந்தியதோ அத்தேதிவரை, பயனுறுதல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட இடைக்காலக் கட்டளையொன்று, அக்கட்டளையை ஆக்குவதை விளைவித்த சூழ்நிலைகள் தொடர்ந்தும் இல்லாதிருக்கின்றனவென ஆணைக்குழு திருப்தியுற்றால், பணிப்புரை என்றவகையாக ஆணைக்குழுவினால் இல்லாதொழிக்கப்படலாம்.

(6) முன்விபரணம் அல்லது அதையொத்த ஆவணம் எந்தப் பிணையங்கள் தொடர்பானதோ, அந்தப் பிணையங்களுக்கு ஒப்பப்பணஞ்செலுத்துவதற்கான அல்லது அவற்றைக் கொள்வனவு செய்வதற்கான விண்ணப்பங்கள், (1) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளை ஆக்கப்படுமுன்னர் ஆக்கப்பட்டுள்ள விடத்து-

(அ) ஆனால் பிணையங்கள் விண்ணப்பகாரர்களுக்கு வழங்கப்படுமுன்னர், விண்ணப்பங்கள் மீளப்பெறப்பட்டுள்ளனவாகவும் இல்லாதாக்கப்பட்டுள்ளனவாகவும் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன், பணங்களைப் பெற்றுக்கொள்ளும் வழங்குநர் அல்லது அத்தகைய வேறு ஆள் விண்ணப்பகாரர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட எல்லாப் பணங்களையும் உடனடியாக வட்டியின்றி மீளச்செலுத்துதலும் வேண்டும்; அத்துடன் பணமானது கட்டளையிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் மீளச்செலுத்தப்படாவிடின், அக்காலப்பகுதி முடிவுற்றதிலிருந்து, வழங்குநர், ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான பணங்களை வட்டியுடன் மீளச்செலுத்துவதற்குப் பொறுப்புடையவராதல் வேண்டும்; அல்லது

(ஆ) பிணையங்கள் விண்ணப்பகாரர்களுக்கு பிரித்தொதுக்கப்பட்டுள்ளவிடத்து, பிணையங்களின் பிரித்தொதுக்குகை வறிதானதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், வழங்குநர் அல்லது வேறு எவரேனுமாள் விண்ணப்பகாரர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட எல்லாப் பணங்களையும் உடனடியாக வட்டியின்றி மீளச்செலுத்துதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய பணமானது கட்டளை சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் மீளச்செலுத்தப்படாவிடின், அந்தக் காலப்பகுதி முடிவுற்றதிலிருந்து, வழங்குநர், ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான வீதத்தில் அத்தகைய பணங்களை வட்டியுடன் மீளச்செலுத்துவதற்குப் பொறுப்புடையவராதல் வேண்டும்.

(7) இப்பிரிவின் ஏற்பாடுகள், முன்விபரணம் அல்லது அதையொத்த ஆவணம் எந்தப் பிணையங்கள் தொடர்பானதோ, அந்தப் பிணையங்களுள் பரிவர்த்தனையொன்றில் வழங்கப்பட்டு அல்லது நிரற்படுத்தப்பட்டு எவையும் அவற்றிலான வியாபாரஞ்செய்தல் ஆரம்பிக்கப்பட்டு இருந்தால், எவரேனும் வழங்குநர் தொடர்பில் ஏற்புடையதலாகாது.

84. (1) பரிவர்த்தனையொன்றில் நிரற்படுத்தப்பட்டுள்ள கம்பெனியொன்றில் பிணையங்களை வைத்திருக்கும் ஆளொருவர், அத்தகையமுறை உரிமமளிக்கப்பட்ட பரிவர்த்தனையால் கடைப்பிடிக்கப்பட்ட வியாபாரஞ்செய்தல் நடவடிக்கைமுறைக்கு இணங்கியொழுக அத்தகைய பிணையங்களை வாங்குதல், விற்றல், கொடையளித்தல் அல்லது வேறுவகையில் கையாளுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய பரிவர்த்தனையினால் வெளிப்படையான வியாபாரஞ்செய்தல் நடவடிக்கைமுறை எதுவும் கடைப்பிடிக்கப்பட்டிராதவிடத்து, ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறான ஆளொருவர், உத்தேசிக்கப்பட்ட கொடை தொடர்பான விபரங்கள் பற்றி ஆணைக்குழுவுக்கும் உரிமமளிக்கப்பட்ட பரிவர்த்தனைக்கும் அவர் முன்னறிவித்தல் கொடுத்தால், அவர் அத்தகைய வியாபாரஞ்செய்தல் நடவடிக்கைமுறைக்கு இணங்கியொழுகவல்லாது வேறுவகையில், அத்தகைய எவையேனும் பிணையங்களை உறவினரொருவருக்குக் கொடையளிக்கலாம்.

(3) இப்பிரிவில் “உறவினர்” என்பது, அவ்வாளின் பெற்றோரொருவர், வாழ்க்கைத்துணை, மாற்றாள் பிள்ளைகள் உட்பட பிள்ளை அல்லது அவ்வாளின் ஒன்றுவிட்ட சகோதரன் அல்லது ஒன்றுவிட்ட சகோதரி உட்பட சகோதரன் அல்லது சகோதரி அல்லது அவ்வாளின் பிள்ளையொன்றின் வாழ்க்கைத்துணை எனப் பொருள்படும்.

85. (1) பொதுமக்களுக்குச் செய்யப்பட்ட வெளிப்படுத்துகைகளிலிருந்து -

(அ) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்றின் தொழில்,-

(i) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் ஏற்பாடுகளை அல்லது சந்தை நிறுவனமொன்றின் விதிகளை மீறுகின்ற முறையில்; அல்லது

(ii) முதலீட்டாளர்களின் அக்கறைக்கு பங்கமேற்படுத்தும் முறையில், நடாத்தப்பட்டுள்ளதெனக் கருதச்செய்கின்றதான சூழ்நிலைகள் உள்ளதாக;

(ஆ) கம்பெனியொன்று மோசடியான அல்லது சட்ட முரணான நோக்கமொன்றுக்காக நிரற்படுத்தப்பட்டுள்ளனதென்பதற்கான சூழ்நிலைகள் உள்ளதாக;

(இ) கம்பெனியொன்றை நிரற்படுத்துவதுடன் அல்லது நிரற்படுத்தல் தொடர்பிலான அதன் அலுவல்களை முகாமை செய்வதுடன் சம்பந்தப்பட்ட ஆட்கள், மோசடி, தவறான செயல் அல்லது வேறு பிறழ்நடத்தைக்குக் குற்றவாளியாகவிருக்கின்றனரென்பதற்கான சூழ்நிலைகள் உள்ளதாக; அல்லது

(ஈ) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்றின் பணிப்பாளர் அல்லது முகாமைத்துவம், இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின்கீழ் அல்லது பொதுமக்களுக்கு வழங்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்ற அல்லது வெளியிடப்பட வேண்டுமென நியாயமானளவுக்கு எதிர்பார்க்கப்படக்கூடியவாறான, கம்பெனியின் அலுவல்கள் தொடர்பிலான தகவலை வேண்டுமென்று ஒடுக்கியிருக்கின்றாரென்பதற்கான சூழ்நிலைகள் உள்ளதாக,

ஆணைக்குழுவுக்குத் தோன்றுகின்றவிடத்து, ஆணைக்குழு, முற்போந்த ஏற்பாடுகளில் குறித்துரைக்கப்பட்ட கருமங்கள் பற்றி விசாரணை அல்லது புலனாய்வொன்றை நடாத்துவதற்கெனப் பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்கள், இலத்திரனியல் பதிவேடுகள் அல்லது வேறு தகவலைக் குறித்துரைக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் காண்பிக்கும்படி அத்தகைய கம்பெனியைத் தேவைப்படுத்தி நிரற்படுத்தப்பட்ட அப்பகிரங்கக் கம்பெனிக்குப் பணிப்புரைகளை வழங்கலாம்.

(2) ஆணைக்குழு, (1) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக ஆவணங்களின், இலத்திரனியல் பதிவேடுகளின் அல்லது ஏதேனும் வேறு தகவலின் சமர்ப்பிப்பைத் தேவைப்படுத்துவதற்கென எவரேனும் ஆளுக்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதன் அதிகாரத்தைக் கையளிக்கலாம்.

(3) ஆணைக்குழு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர், ஒரு விசாரணையின் அல்லது புலனாய்வின் விடயப்பொருளாகவுள்ள நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்று தொடர்பான அத்தகைய ஆவணங்களினதும் இலத்திரனியல் பதிவேடுகளினதும் காண்பிப்பையும், அவற்றை உடைமையில் வைத்திருக்கும் எவரேனுமாளிடமிருந்து தேவைப்படுத்தலாம்.

(4) உட்பிரிவுகள் (1), (2) மற்றும் (3) ஆகியவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஆவணங்கள் அல்லது இலத்திரனியல் பதிவேடுகள் காண்பிக்கப்படுமிடத்து, ஆணைக்குழு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியை பின்வருவனவற்றைச் செய்யும்படி தேவைப்படுத்துதல் வேண்டும் -

(அ) அத்தகைய ஆவணங்கள் மற்றும் இலத்திரனியல் பதிவேடுகள் பற்றிய விளக்கமொன்றை வழங்குமாறு நிரற்படுத்தப்பட்ட அப்பகிரங்கக் கம்பெனியின் தற்போதைய அல்லது கடந்தகால அலுவலரொருவராகவுள்ள அல்லது நிரற்படுத்தப்பட்ட அப்பகிரங்கக் கம்பெனியினால் ஏதேனும் நேரத்தில் தொழிலுக் கமர்த்தப்பட்டிருந்த அந்த ஆளை அல்லது எவரேனும் வேறு ஆளைத் தேவைப்படுத்துதல்;

(ஆ) பதிவேடுகளும் ஆவணங்களும் இலத்திரனியல் பதிவேடுகளும் தேவைப்படுத்தப்பட்டவாறு காண்பிக்கப்பட்டிராதவிடத்து, அத்தகைய பதிவேடுகளை, ஆவணங்களை அல்லது இலத்திரனியல் பதிவேடுகளைக் காண்பிக்கத் தேவைப்படுத்தப்பட்ட ஆள் அத்தகைய தவறியமைக்கான காரணங்களைக் கொடுத்தல்; அல்லது

(இ) ஆவணங்களும் இலத்திரனியல் பதிவேடுகளும் காண்பிக்கப்பட்டிராதவிடத்து, அவற்றைக் காண்பிப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஆள், அவருடைய அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை அதன் இருப்பிடத்தை வெளிப்படுத்துதல் வேண்டும்.

(5) ஏதேனும் நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி இப்பிரிவுடன் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, ஆணைக்குழு இச்சட்டத்தின் 86 ஆம் பிரிவின்கீழ் நிரற்படுத்தப்பட்ட அப்பகிரங்கக் கம்பெனிக்குப் பணிப்புரையொன்றை வழங்குதல் வேண்டும்.

86. நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்று, சட்டத்தின், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் ஏற்பாடுகளுள் எவற்றையும் மீறியுள்ளது அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகத் தவறியுள்ளது அல்லது பொய்யான, செம்மையற்ற அல்லது பிழைவழியுய்க்கும் தகவல்களை ஆணைக்குழுவுக்குக் கொடுத்துதவியுள்ளது என ஆணைக்குழுவுக்குத் தோன்றுகின்றவிடத்து, ஆணைக்குழுவானது, தோதான தெனக் கருதப்படக்கூடியவாறாக இச்சட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் வலுவுறுத்தல் நடவடிக்கையை எடுக்கலாம்.

87. (1) இச்சட்டத்தின், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின்கீழ் ஆணைக்குழுவுக்குத் தகவலைக் கொடுத்துதவுகின்ற அல்லது தகவலைக் கொடுத்துதவச் செய்கின்ற ஆளொருவர், முக்கியமான ஏதேனும் விபரத்தில் அத்தகவல் பொய்யானதாக அல்லது பிழைவழியுய்ப்பதாக இல்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கான முறையான கவனத்தைப் பிரயோகித்தல் வேண்டும்.

(2) (அ) ஆணைக்குழுவுக்கு வழங்கப்படும் ஆவணமொன்றில் கையொப்பமிடுகின்ற; அல்லது

(ஆ) ஆணைக்குழுவினால் அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் அடையாளத்தை அல்லது மெய்யென்று உறுதிப்படுத்தும் வேறு முறையை அல்லது நடவடிக்கைமுறையைப் பயன்படுத்தி இலத்திரனியல் முறைகள்மூலம் ஆவணமொன்றை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கின்ற, ஆளொருவர், முக்கியமானதொரு விபரத்தில் அவ்வாவணம் பொய்யானதாக அல்லது பிழைவழியுய்ப்பதாக இல்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கான முறையான கவனத்தைப் பிரயோகித்தல் வேண்டும்.

(3) ஓராம் அல்லது (2) ஆம் உட்பிரிவை மீறுகின்ற ஆளொருவர் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார்.

88. இச்சட்டத்தின், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின்கீழ் நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்று கொடுத்துதவவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் தகவல் தொடர்பில், இச்சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட சந்தை நிறுவனமொன்றுக்கு ஏமாற்றும் உட்கருத்துடன் ஏதேனும் பிறழ்வழியுய்க்கும் கூற்றை அளிக்கின்ற அல்லது கொடுத்துதவுகின்ற அல்லது அறிந்துகொண்டும் வேண்டுமென்றும் அதற்கு அதிகாரமளிக்கின்ற அல்லது அதனை அனுமதிக்கின்ற ஆளொருவர் இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிகின்றார்.

89. (1) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி ஒவ்வொன்றினதும் பணிப்பாளர் சபை, கம்பெனியும் அதன் பணிப்பாளர்களும் கம்பெனியானது அத்தகைய பரிவர்த்தனையில் நிரற்படுத்தப்பட்டதாக இருக்கும்வரை தொடர்ச்சியான அடிப்படையில் அது நிரற்படுத்தப்படுகின்ற பரிவர்த்தனையின் விதிகளுக்கும் தேவைப்பாடுகளுக்கும் இணங்கியொழுகுவதனை உறுதிப் படுத்துதல் வேண்டும்.

(2) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியின் பணிப்பாளர்கள் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், விதிகளின்மூலம் அல்லது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பரிவர்த்தனையொன்றின் விதிகளில் ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட தகுதியானவையும் தகுந்தவையுமான கட்டளைகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

90. (1) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்றின் கணக்காய்வாளரொருவர், அவரது கடமைகளின் செயல்நிறை வேற்றுகையின் சாதாரண நெறியின்போது, -

(அ) இச்சட்டத்தின், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின், விதியின் அல்லது பணிப்புரையின் ஏதேனும் தேவைப்பாட்டின் அல்லது ஏற்பாட்டின் மீறுகையொன்று அல்லது இணங்கியொழுகாமையொன்று அல்லது பரிவர்த்தனையொன்றின் ஏதேனும் விதியின் மீறலொன்று அல்லது மோசடியை அல்லது நேர்மையீனத்தை உட்படுத்துகின்ற ஏதேனும் தவறு பற்றி; அல்லது

(ஆ) அவரது அபிப்பிராயத்தில் நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியின் நிதி நிலைமையை முக்கியமானதோர் அளவுக்குப் பாதகமான முறையில் பாதிக்கக்கூடிய அல்லது பாதகமானமுறையில் பாதிக்கும் சாத்தியங்கொண்ட ஏதேனும் விடயம் பற்றி; அல்லது

(இ) பிணையங்களிலான எவரேனும் முதலீட்டாளரின் நிதிகளை அல்லது ஆதனத்தைப் பாதிக்கின்ற அல்லது அதற்குத் தீங்குவிளைவிக்கின்ற அல்லது பாதிக்கக்கூடிய அல்லது அதற்குத் தீங்குவிளைவிக்கக்கூடிய ஏதேனும் ஒழுங்கீனமுட்பட, நிரற்படுத்தப்பட்ட ஒரு பகிரங்கக் கம்பெனியின் கணக்குகளின்மீது முக்கியமானவொரு விளைவைக் கொண்டுள்ள அல்லது கொண்டிருக்கக் கூடிய ஏதேனும் ஒழுங்கீனம் பற்றி,

அறியவரின், பந்திகள் (அ), (ஆ) அல்லது (இ) என்பவற்றில் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய விடயங்களை நிவர்த்தி செய்வதற்கென அக்கணக்காய்வாளர் கணக்காய்வுக் குழுவுக்கு எழுத்துமூலம் உடனடியாக அறிக்கையிடுதல் வேண்டும் என்பதுடன், அதிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் பரிகரிப்பு வழிமுறைகள் எடுக்கப்படாவிடின், மீறலை நிவர்த்திசெய்வதற்கென அத்தகைய விடயங்களைப் பணிப்பாளர் சபைக்கு எழுத்து மூலம் ஆற்றுப்படுத்துதலும் வேண்டும் அல்லது மீறலொன்று இன்னும் நடைபெற்றிராதவிடத்து அது இடம்பெறுவதைத் தடுத்தலும் வேண்டும்.

(2) பந்திகள் (அ), (ஆ) அல்லது (இ) என்பவற்றில் குறிப்பீடுசெய்யப்பட்ட இரண்டு வாரங்களினுள், அத்தகைய விடயங்களை நிவர்த்திசெய்வதற்குப் பணிப்பாளர் சபையினால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாதிருப்பின், கணக்காய்வாளர், அதன்மீது உடனடியாக அவ்விடயங்கள் பற்றிய எழுத்திலான அறிக்கையொன்றை -

(அ) இச்சட்டத்தின், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின், விதியின் அல்லது பணிப்புரையின் ஏதேனும் தேவைப்பாட்டின் அல்லது ஏற்பாட்டின் மீறலொன்றின் அல்லது இணங்கியொழுகாமையொன்றின் அல்லது மோசடியை அல்லது நேர்மையீனத்தை உட்படுத்துகின்ற தவறொன்றின் விடயத்தில், ஆணைக்குழுவுக்கும்; அல்லது

(ஆ) பரிவர்த்தனையொன்றின் விதியின் மீறலொன்றின் அல்லது விதியுடன் இணங்கியொழுகாமையொன்றின் விடயத்தில், இயைபான பரிவர்த்தனைக்கும் ஆணைக் குழுவுக்கும், சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) கணக்காய்வாளரெவரும், கணக்காய்வாளரினால் நல்லெண்ணத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் அறிக்கைக்காகவும், அத்துடன் இப்பிரிவின்கீழ் கணக்காய்வாளர்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் கடமையைப் புரிவதிலும், ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்குத்தொடுக்கப்படுவதற்கு ஆளாதலாகாது.

(4) ஆணைக்குழு, கணக்காய்வொன்றின்போது அல்லது அதன் பின்னர் எந்த நேரத்திலும், நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்றின் கணக்காய்வாளரொருவரை

(அ) அவரது கணக்காய்வு தொடர்பாக ஆணைக்குழு குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய மேலதிக தகவல்களைச் சமர்ப்பிக்குமாறு;

(ஆ) ஆணைக்குழு குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் அல்லது அத்தகைய அளவுக்கு நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியின் தொழில் மற்றும் அலுவல்கள் பற்றிய அவரது கணக்காய்வின் நோக்கெல்லையை விசாலிக்குமாறு அல்லது நீடிக்குமாறு;

(இ) ஏதேனும் குறிப்பிட்ட விடயத்தில், ஏதேனும் குறிப்பான விசாரணையை நிறைவேற்றுமாறு அல்லது ஏதேனும் நடவடிக்கைமுறையை நிலைநாட்டுமாறு; அல்லது

(ஈ) பந்திகள் (அ) முதல் (இ) வரையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் கருமம் பற்றி, இடைக்கால அறிக்கையொன்று உள்ளடங்கலாக, அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு,

தேவைப்படுத்தலாம் என்பதுடன், அத்தகைய தேவைப்பாடுகள் எக்காலப் பகுதியினுள் கணக்காய்வாளரினால் இணங்கி யொழுகப்பட வேண்டுமோ அக்காலப்பகுதியை ஆணைக்குழு குறித்துரைக்கலாம்.

(5) கணக்காய்வாளர், (4) ஆம் உட்பிரிவின்கீழான ஆணைக்குழுவின் ஏதேனும் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுக வேண்டும் என்பதுடன், நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியானது இப்பிரிவின்கீழான எல்லா மேலதிகக் கடமைகளும் கணக்காய்வாளரினால் நிறைவேற்றப்படுதல் தொடர்பில் ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் அவருக்கு ஊதியமளித்தலும் வேண்டும்.

(6) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி, இப்பிரிவின்கீழான எல்லா மேலதிகக் கடமைகளும் கணக்காய்வாளரினால் நிறைவேற்றப்படுதல் தொடர்பில் அவர் தேவைப்படுத்துகின்றவாறான அத்தகைய தகவல்களையும் அத்தகைய தகவல் களுக்கான அணுக்கத்தையும் வழங்குதல் வேண்டும்.

91. (1) ஆளொருவர் -

(அ) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியின் அல்லது அதனோடு தொடர்புபட்ட கம்பெனிகளுள் எவற்றினதும் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் ஈடுபடும்; அல்லது

(ஆ) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியின் அல்லது அதனோடு தொடர்புபட்ட கம்பெனிகளுள் எவற்றினதும் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு பற்றிய செயல்நிறை வேற்றுகையில் ஈடுபடும்,

எவரேனுமாளை, நிதிக்கூற்றுக்கள் அல்லது கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முக்கியமானதொரு விபரத்தில் பொய்யானவையாக அல்லது பிழைவழியுய்ப்பவையாக இருப்பதை விளைவிக்கக்கூடியதென அவர் அறிந்திருக்கின்ற அல்லது நியாயமான முறையில் அறிந்திருக்கக்கூடிய எவற்றையேனும் செய்வதற்கு அவர்மீது செல்வாக்குச் செலுத்துதலோ, அவரை வலுக் கட்டாயப்படுத்தலோ, பிழைவழியுய்க்கச்செய்தலோ அல்லது அவருக்கு அதிகாரமளித்தலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவை மீறுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார்.

## அத்தியாயம் 2

## சந்தை இடைத்தரகர்கள்

92. (1) ஆளொருவர், ஆணைக்குழுவிடமிருந்து உரிமமொன்றைப் பெறாமல் சந்தை இடைத்தரகரொருவராகக் காட்டிநிற்றலாகாது.

(2) ஓராம் உட்பிரிவை மீறுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், நீதிவானொருவரினாலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இருபத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

93. (1) சந்தை இடைத்தரகரொருவராகத் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற எவரேனும் ஆள், அந்நோக்கத்துக்காக ஆணைக்குழுவினால் வழங்கப்படும் உரிமமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவை மீறுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், நீதிவானொருவரினாலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இருபத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத காலப் பகுதியொன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

94. (1) இப்பிரிவின்கீழான உரிமமொன்றின் நோக்கத்துக்கான, அல்லது இப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் உரிமத்தைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பமொன்று, விதிகள் என்றவகையாக ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் அத்தகைய ஆவணங்களுடனும் அத்தகைய கட்டணத்துடனும் சேர்த்து ஆணைக்குழுவுக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழு, பின்வருவனவற்றைச் செய்யுமாறு விண்ணப்பகாரரொருவரைத் தேவைப்படுத்தலாம் -

(அ) விண்ணப்பமொன்றுடன் சம்பந்தப்பட்ட மேலதிகத் தகவல்களை, அது குறித்துரைக்கக்கூடியவாறாகக் கொடுத்துதவுதல்; அத்துடன்

(ஆ) அது குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய ஆட்களினாலும் விண்ணப்பமொன்றை ஆதரித்து சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் தகவலை விண்ணப்பகாரரின் ஆகுசெலவில் சரிபார்த்தல்.

(3) இப்பிரிவின்கீழ் உரிமமொன்றைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பமொன்று, விதித்துரைக்கப்படக்கூடியவாறான புதுப்பித்தற் கட்டணத்துடன் சேர்த்து, உரிமத்தின் காலாவதித் தேதிக்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் செய்யப்படுதல் வேண்டும்.

(4) உரிமம் காலாவதியானதன் பின்னர் உரிமமொன்றைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பமொன்று செய்யப்படுமிடத்து, ஆணைக்குழுவானது, புதுப்பித்தற் கட்டணத்துக்கு மேலதிகமாக, புதுப்பித்தல் செய்யப்படும்வரை தாமதமாகும் ஒவ்வொரு நாளுக்குமென விதித்துரைக்கப்படக்கூடியவாறாக, உரிமமளித்தற் கட்டணத்தின் ஐந்து சதவீதத்தை விஞ்சாத தாமதக் கட்டண மொன்றை விதிக்கலாம்.

(5) ஆணைக்குழு, தகுதியானவையென அது கருதுகின்றவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அல்லது மட்டுப்பாடுகளுக்கு அமைய, இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காக உரிமமொன்றை வழங்கலாம் அல்லது புதுப்பிக்கலாம்.

95. (1) சந்தை இடைத்தரகரொருவராகச் செயலாற்றுவதற்கு உரிமமொன்றை வழங்குவதற்கான அல்லது புதுப்பிப்பதற்கான விண்ணப்பமொன்று செய்யப்படுகின்றவிடத்து, ஆணைக்குழு பின்வரும் ஏதுக்களில் ஏதேனுமொன்றின்மீது அவ்விண்ணப்பத்தை மறுக்கலாம்:-

(அ) விண்ணப்பம் இவ்வத்தியாயத்திற்கிணங்கச் செய்யப்பட்டிராதிருத்தல்;

(ஆ) விண்ணப்பகாரர் இச்சட்டத்தினதும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினதும், விதிகளினதும் ஏதேனும் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகத் தவறியிருத்தல்;

(இ) ஆணைக்குழுவுக்கு விண்ணப்பகாரரினால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் தகவல் அல்லது ஆவணம் பொய்யானதாக அல்லது பிழைவழியுய்ப்பதாக அல்லது அதிலிருந்து முக்கியமான விட்டுவிடுகையொன்று உள்ளதாக இருத்தல்;

(ஈ) விண்ணப்பகாரர் ஒடுக்கப்பட்டுக்கொண்டிருத்தல் அல்லது வேறுவகையாகக் கலைக்கப்பட்டுக் கொண்டிருத்தல் அல்லது பொறுப்புவிடுவிக்கப்படாத வங்கிமுறிந்தவராக இருத்தல்;

(உ) தீர்ப்புத் தனிசொன்று தொடர்பில் விண்ணப்பகாரருக்கெதிரான தீர்ப்புநிறைவேற்றுகை முழுமையாக அல்லது பகுதியளவில் திருப்திப்படுத்தப்படாது திருப்பியனுப்பப்பட்டிருத்தல்;

(ஊ) ஒழிப்போனொருவர் அல்லது பெறுநரொருவர் அல்லது முகாமையாளரொருவர் அல்லது சமமான ஆளொருவர் இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியில் விண்ணப்பகாரரின் ஏதேனும் ஆதனம் தொடர்பில் நியமிக்கப்பட்டிருத்தல்;

(எ) விண்ணப்பகாரர், இலங்கையினுள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, தொடர்ந்தும் தொழிற்பாட்டிலுள்ள

இணக்கப்பாடொன்றாக அல்லது ஒழுங்கேற்பாட்டுத்திட்டமொன்றாக இருக்கின்றதான இணக்கப்பாடொன்றை அல்லது ஒழுங்கேற்பாட்டுத் திட்டமொன்றை அதன் கடன்கொடுத்தோருடன் செய்திருத்தல்;

(ஏ) விண்ணப்பகாரர் அல்லது அதன் பணிப்பாளர்களுள் எவரும், பிரதான நிறைவேற்று அலுவலர், முகாமையாளர்கள் அல்லது கட்டுப்பாட்டாளர்-

(i) இலங்கையினுள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, மோசடியை அல்லது நேர்மையீனத்தை உட்படுத்துகின்ற தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருத்தல் அல்லது எந்தத் தவறின்மீதான குற்றத்தீர்ப்பு அவர் மோசடியாக அல்லது நேர்மையீனமாகச் செயலாற்றியுள்ளாரென்னும் முடிவொன்றை உட்படுத்தியதோ அந்தத் தவறின்மீதான குற்றத்தீர்ப்பாகவிருத்தல்;

(ii) இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவால் எடுக்கப்பட்ட ஏதேனும் நிருவாகத் தடைவிதிப்புக்கு அமைந்தவராக்கப் பட்டிருத்தல்;

(iii) இச்சட்டத்தின்கீழ் அல்லது இலங்கைக்கு வெளியே பிணையங்களை ஆளுகின்ற சட்டங்களின்கீழ் அவர் எத்தவறொன்றுக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்றாரோ அல்லது இணக்கஞ்செய்யப்பட்டிருக்கின்றாரோ அத்தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருத்தல் அல்லது இணக்கஞ் செய்யப்பட்டிருத்தல்;

(iv) நிதிசார் சேவைகளை வழங்குவதுடன் அல்லது கம்பெனிகளின் முகாமையுடன் சம்பந்தப்பட்ட ஆட்களால் நேர்மையீனம், தகுதியின்மை அல்லது முறைகேடான செயல் காரணமாக ஏற்படும் நிதிசார் இழப்புக்கு எதிராக அல்லது பொறுப்புவிடுவிக்கப்பட்ட அல்லது பொறுப்பு விடுவிக்கப்படாத வங்கிமுறிந்தவர்களின் நடத்தை காரணமாக ஏற்படும் நிதிசார் இழப்புக்கு எதிராகப் பொதுமக்களைப் பாதுகாப்பதற்காக இலங்கையினுள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியிலாயினுஞ்சரி இயற்றப்பட்ட ஏதேனும் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் ஏற்பாட்டை மீறியிருத்தல்; அல்லது

(v) இலங்கையினுள்ளாயினுஞ்சரி இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, பொறுப்பு விடுவிக்கப்படாத வங்கிமுறிந்தவரொருவராக இருத்தல்;

(ஐ) ஆணைக்குழுவானது, விண்ணப்பகாரர் அல்லது அதன் பணிப்பாளர்களுள் எவரும் பிரதான நிறைவேற்று அலுவலர் அல்லது கட்டுப்பாட்டாளர், அதன் வாடிக்கையாளர்களின் மதிப்பு, குணவியல்பு, நிதிசார் நேர்மை மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றைக் கருத்திற்கொண்டு அவ்வாடிக்கையாளர்களின் மிகச்சிறந்த அக்கறை தொடர்பில் செயற்படுவதற்கு இயலாதவராகவிருக்கலாம் என நம்புவதற்கான காரணத்தைக் கொண்டிருத்தல்;

(ஒ) ஆணைக்குழு, விண்ணப்பகாரரின் நிதிசார் நிலைமை பற்றி அல்லது விண்ணப்பகாரரின் தொழில் எந்த முறையில் நடாத்தப்படவுள்ளதோ அந்த முறை பற்றித் திருப்தியடையாதிருத்தல்;

(ஓ) ஆணைக்குழு, விண்ணப்பகாரர் உரிமத்தை வைத்திருத்தல் சம்பந்தமாக எந்தத் தொழிலைக் கொண்டுநடாத்துகின்றாரோ அந்தத் தொழிலின் தன்மையைக் கருத்திற்கொண்டு, அவரின் கடந்தகாலச் செயல்நிறைவேற்றுகையின் அல்லது நிபுணத்துவம் பற்றித் திருப்தியடையாதிருத்தலும் அத்துடன்-

(i) விண்ணப்பகாரரால் அல்லது அதன் பணிப்பாளர்களுள் எவரினாலும், பிரதான நிறைவேற்று அலுவலரால் அல்லது கட்டுப்பாட்டாளரால் முறையீனமான தொழில் நடாத்துகைக்கு இட்டுச்செல்லும்; அல்லது

(ii) விண்ணப்பகாரரின் தொழிலை நடாத்துகின்ற முறைமீது மதிப்புக்குறைவைப் பிரதிபலிக்கும்

சாத்தியமுள்ள சூழ்நிலைகள் உளதாகவிருத்தலும்; அல்லது

(ஔ) ஆணைக்குழு, உரிமத்தை வழங்குதல் அல்லது புதுப்பித்தல் முதலீட்டாளர்களின் அக்கறைகளுக்கு முரணாக இருக்கும் என அபிப்பிராயப்படுதல்.

(2) ஆணைக்குழு, விண்ணப்பகாரருக்கு கேட்புக்கான சந்தர்ப்பமொன்றை வழங்காது உரிமமொன்றைப் வழங்குவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு மறுத்தலாகாது.

96. சந்தை இடைத்தரகரொருவர், இவ்வத்தியாயத்தின்கீழ் எத்தொழிலுக்காக அது உரிமமளிக்கப்பட்டுள்ளதோ அத்தொழில் ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அல்லது பரிவர்த்தனையொன்றின் விதிகளில் ஏற்பாடுசெய்யப்படக்கூடியவாறான குறைந்தபட்ச நிதிசார் தேவைப்பாடுகளை எதிர்கொள்ளாதிருப்பின், ஆணைக்குழுவின் எழுத்திலான சம்மதமில்லாது அத்தொழிலைக் கொண்டுநடாத்துதலாகாது.

97. (1) ஆணைக்குழுவானது ஒரு சந்தை இடைத்தரகருக்காகவும் அவர் சார்பிலும் வாடிக்கையாளர்களைக் கையாளுகின்ற ஆளொரு வரை, ஆணைக்குழுவுடன் பதிவுசெய்யும்படி விதிகள் என்றவகையாகக் குறித்துரைக்கலாமென்பதுடன் அத்தகைய ஆள் அந்நோக்கத்துக்காகப் "பதிவுசெய்யப்பட்ட ஓர் ஆள்" என அறியப் படுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான பதிவுசெய்தலை நாடும் நோக்கங்களுக்காக, சந்தை இடைத்தரகரொருவர் (இதனகத்துப் பின்னர் "விண்ணப்பகாரர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (1) ஆம் உட் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அவ்வாள் சார்பில் ஆணைக் குழுவுக்கு விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

98. (1) தொண்ணூற்றேழாம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவராகப் பதிவுசெய்யும் அல்லது பதிவைப் புதுப்பிக்கும் நோக்கத்திற்கான விண்ணப்பமொன்று, ஆணைக்குழுவினால் விதிகளின்மூலம் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் அத்தகைய ஆவணங்களுடனும் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய கட்டணத்துடனும் சேர்த்து, ஆணைக்குழுவுக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, விண்ணப்பகாரரொருவரைப் பின்வருவனவற்றைச் செய்யும்படி தேவைப்படுத்தலாம் -

(அ) அது குறித்துரைக்கக்கூடியவாறாக விண்ணப்பமொன்றுடன் சம்பந்தப்பட்ட மேலதிகத் தகவல்களைக் கொடுத்துதவும்படியும்; அத்துடன்

(ஆ) அது குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய ஆட்களாலும் விண்ணப்பமொன்றுக்கு ஆதரவாகச் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் தகவலை விண்ணப்பகாரரின் செலவில் சரிபார்க்கும் படியும்.

(3) இப்பிரிவின்கீழ் பதிவைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பமொன்று, அப்பதிவு காலாவதியாவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னா் செய்யப்படுதல் வேண்டும்.

(4) பதிவைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பமொன்று அப்பதிவு காலாவதியானதன் பின்னா் செய்யப்படுகின்றவிடத்து, ஆணைக்குழு, புதுப்பித்தல் கட்டணத்துக்கு மேலதிகமாகப் புதுப்பித்தல் செய்யப்படும்வரை தாமதமாகின்ற ஒவ்வொரு நாளுக்குமென விதித்துரைக்கப்படக்கூடியவாறான பதிவுக் கட்டணத்தின் ஐந்து சதவீதத்தினை விஞ்சாத தாமதக்கட்டணமொன்றை விதிக்கலாம்.

(5) ஆணைக்குழு, தகுதியானவையென அது கருதுகின்றவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அல்லது மட்டுப்பாடுகளுக்கமைய, இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காகப் பதிவொன்றை வழங்கலாம் அல்லது புதுப்பிக்கலாம்.

99 (1) இப்பாகத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவராகப் பதிவை வழங்குவதற்கென அல்லது புதுப்பிப்பதற்கென விண்ணப்பமொன்று செய்யப்படுகின்றவிடத்து, ஆணைக்குழு பின்வரும் ஏதுக்களில் ஏதேனுமொன்றின்மீது அவ்விண்ணப்பத்தை மறுக்கலாம்:-

(அ) விண்ணப்பம் 98 ஆம் பிரிவுக்கிணங்கச் செய்யப்பட்டிராதிருத்தல்;

(ஆ) விண்ணப்பகாரா் 98 ஆம் பிரிவின் ஏதேனும் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகத் தவறியிருத்தல்;

(இ) ஆணைக்குழுவுக்கு விண்ணப்பகாரரினால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் தகவல் அல்லது ஆவணம் பொய்யானதாக அல்லது பிழைவழியுய்ப்பதாக அல்லது அதில் முக்கியமான விட்டுவிடுகையொன்று உள்ளதாகவிருத்தல்;

(ஈ) விண்ணப்பகாரா் இலங்கைக்குள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி பொறுப்புவிடு விக்கப்படாத கடனிறுக்க வகையற்றவரொருவராக அல்லது பொறுப்பு விடுவிக்கப்படாத வங்கிமுறிந்தவரொருவராகவிருத்தல்;

(உ) தீா்ப்புத்தனிசொன்று தொடா்பில் விண்ணப்பகாரருக்கெதிரான நிறைவேற்றுகை முழுமையாக அல்லது பகுதியளவில் திருப்திப்படுத்தப்படாது திருப்பியனுப்பப்பட்டிருத்தல்;

(ஊ) விண்ணப்பகாரா் -

(i) இலங்கையினுள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, மோசடியை அல்லது நோ்மையீனத்தை உட்படுத்துகின்ற தவறொன்றுக்கு அல்லது எந்தத் தவறுக்கான குற்றத்தீா்ப்பு அவா் மோசடியாக அல்லது நோ்மையீனமாகச் செயற்பட்டுள்ளாரென்னும் முடிவெடுப் பொன்றை உட்படுத்தியதோ அந்தத் தவறுக்காகக் குற்றத்தீா்ப்பளிக்கப்பட்டிருத்தல்;

(ii) இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவால் எடுக்கப்பட்ட ஏதேனும் நிருவாக நடவடிக்கைக்கு அமைந்தவராக்கப்பட்டிருத்தல்;

(iii) இச்சட்டத்தின்கீழ் அல்லது இலங்கைக்கு வெளியே பிணையங்களை ஆளுகின்ற எவையேனும் சட்டங்களின்கீழ் தவறொன் றுக்குக் குற்றத்தீா்ப்பளிக்கப்பட்டிருத்தல் அல்லது இணக்கப்பட்டிருத்தல்;

(iv) நிதிசாா் சேவைகளை வழங்குவதில் அல்லது கம்பெனிகளை முகாமைசெய்வதில் சம்பந்தப்பட்டுள்ள ஆட்களின் நோ்மையீனம், தகுதியின்மை அல்லது துா்ப்பழக்கம் காரணமான நிதிசாா் இழப்புக்கெதிராக அல்லது பொறுப்புவிடுவிக்கப்பட்ட அல்லது பொறுப்புவிடுவிக்கப்படாத வங்கிமுறிந்தவா்களின் நடத்தைகாரணமாக நிதிசாா் இழப்புக்கெதிராகப் பொதுமக்களைப் பாதுகாப்பதற்காக இயற்றப்படுவதாக ஆணைக்குழுவுக்குத் தோன்றுகின்றதாக இலங்கையிலாயினுஞ்சரி இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் ஏற்பாட்டை மீறியிருத்தல்;

(v) தொழிலை நடாத்துகின்ற முறைமீது சட்டமுரணாகவோ அல்லது அவ்வாறின்றியோ வஞ்சகமாக அல்லது வேறுவகையில் முறைகேடாக இருக்கின்றதென ஆணைக்குழுவுக்குத் தோன்றும் அல்லது வேறுவகையில் மதிப்புக்குறைவைப் பிரதிபலிக்கும் ஏதேனும் தொழில் செயல்முறையில் ஈடுபட்டிருத்தல்; அல்லது

(vi) வேறு எவையேனும் தொழில் செயல்முறைகளில் ஈடுபட்டிருத்தல் அல்லது அவற்றுடன் இணைந்திருத்தல் அல்லது அவரின் தகுதி மற்றும் தீா்ப்பின் வன்மை பற்றி ஐயம் ஏற்படுத்தத்தக்கவாறான அத்தகையதொரு வழியில் வேறுவகையாக அவா் நடந்திருத்தல்;

(எ) ஆணைக்குழு, சந்தை இடைத்தரகருக்காகவும் அவா் சாா்பிலும் புரியப்படவுள்ள கடமைகளின் தன்மையைக் கருத்திற்கொண்டு, விண்ணப்பகாரரின் கல்விசாா் தகைமை அல்லது வேறு தகைமை அல்லது அனுபவம் பற்றித் திருப்தியடையாதிருத்தல்;

(ஏ) விண்ணப்பகாரா், அவரின் மதிப்பு, குணவியல்பு, நிதிசாா் நோ்மை மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றைக் கருத்திற்கொண்டு, அவரது சந்தை இடைத்தரகரின் வாடிக்கையாளா்களின் மிகச்சிறந்த அக்கறை தொடா்பில் செயற்படுவதற்கு இயலாதவராகவிருக்கலாமென ஆணைக்குழு நம்புவதற்கான காரணத்தைக் கொண்டிருத்தல்;

(ஐ) ஆணைக்குழு, சந்தை இடைத்தரகருக்காகவும் அவரது சாா்பிலும் புரியப்படவுள்ள கடமைகளின் தன்மையைக் கருத்திற்கொண்டு, விண்ணப்பகாரரின் கடந்தகால செயல்நிறைவேற்றுகையின் பதிவு அல்லது நிபுணத்துவம் பற்றித் திருப்தியடையாதிருத்தல்;

(ஒ) ஆணைக்குழு, விண்ணப்பகாரா் நோ்மையாக அல்லது நியாயமாக செயற்படவில்லை என நம்புவதற்கான காரணத்தைக் கொண்டிருத்தல்; அல்லது

(ஓ) ஆணைக்குழு, பதிவை வழங்குதல் அல்லது புதுப்பித்தல் முதலீட்டாளா்களின் அக்கறைகளுக்கு முரணாக இருக்கும் என அபிப்பிராயப்படுதல்.

(2) ஆணைக்குழு, கேட்கப்படுவதற்கான சந்தா்ப்பமொன்றை விண்ணப்பகாரருக்கு வழங்காமல் பதிவொன்றை வழங்குவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு மறுத்தலாகாது.

100. ஆணைக்குழு, எந்நேரத்திலும், சந்தை இடைத்தரகரொருவருக்கு மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவருக்கு எழுத்திலான அறிவித்தல்மூலம் முதலீட்டாளா்களின் பாதுகாப்புக்கு அது அவசியமெனக்கருதுகின்றவாறாக ஏதேனும் நிபந்தனையை அல்லது மட்டுப்பாட்டை வேறுபடுத்தலாம் அல்லது அத்தகைய மேலதிக நிபந்தனையை அல்லது மட்டுப்பாட்டை விதிக்கலாம்.

101. (1) இப்பாகத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று, அவ்வுரிமம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்களைக்கொண்டவொரு காலப்பகுதிக்குச் செல்லுபடியாதல் வேண்டும்.

(2) இப்பாகத்தின்கீழ் புதுப்பிக்கப்பட்ட உரிமமொன்று, பன்னிரெண்டு மாதங்களைக்கொண்ட மேலுமொரு காலப் பகுதியொன்றுக்கு அல்லது அது புதுப்பிக்கப்பட்டிராதிருப்பின் அது எத்தேதியன்று காலாவதியாகியிருக்குமோ அத்தேதியன்று தொடங்குகின்றதும் ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக் கூடியதுமான அத்தகைய பிந்திய தேதிக்கு தொடர்ந்தும் வலுவிலிருத்தல் வேண்டும்.

(3) உரிமமொன்று (2) ஆம் உட்பிரிவின் நியதிகளுக்கமைய, பன்னிரெண்டு மாதங்களுக்கு மேற்பட்டவொரு காலப்பகுதிக்குப் புதுப்பிக்கப்படுமிடத்து, சந்தை இடைத்தரகர், விதித்துரைக்கப்பட்ட உரிமக் கட்டணத்தை ஆணைக்குழுவுக்குச் செலுத்துதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் (1) முதல் (3) வரையிலான உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், இப்பாகத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவருக்கு வழங்கப்பட்ட பதிவுக் காலப்பகுதிக்கும் அது தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

102. (1) ஆளொருவர் இப்பாகத்தின்கீழ் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பமொன்று சம்பந்தமாகப் பின்வருபவற்றைச் செய்தலாகாது

(அ) பொய்யானது அல்லது பிழைவழியுய்ப்பதென அவர் அறிந்துள்ள அல்லது அறிந்திருக்கக்கூடுமென நியாயமான முறையில் எதிர்பார்க்கப்படுகின்ற கூற்றொன்றை ஆணைக்குழுவுக்கு அளித்தல் அல்லது அவ்வாறு அளிப்பதற்கு ஆட்கூட்டிவிடுதல்; அல்லது

(ஆ) விட்டுவிடுகையின் காரணமாகக் கூற்றானது முக்கியமான விபரத்தில் பிழைவழியுய்க்கும் என அவர் அறிந்துள்ளவிடத்து, அல்லது அறிந்திருக்கக்கூடுமென நியாயமான முறையில் எதிர்பார்க்கப்படுகின்றவிடத்து, ஆணைக் குழுவுக்கு ஏதேனும் கருமத்தைக் கூறாது விட்டுவிடுதல்.

(2) ஓராம் உட்பிரிவை மீறுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப்புரிகின்றார்.

103. (1) சந்தை இடைத்தரகரொருவர் உரிமமொன்றுக்கான அல்லது உரிமமொன்றைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பத்தில் ஏலவே கொடுத்துதவப்பட்ட முக்கியமான விபரங்களைத் திருத்த உத்தேசிக்குமிடத்து அல்லது அதில் குறித்துரைக்கப்பட்ட விபரங்களை மாற்றுவதற்கு உட்பட்டவராகுமிடத்து அல்லது உட்கருதுகின்றவிடத்து, அத்தகைய திருத்தம் அல்லது மாற்றம் பயனுறுத்தப்படுவதற்கு முன்னர் ஆணைக்குழுவுக்குத் தெரிவித்தலும் அத்துடன் அதன் முற்சம்மதத்தைப் பெறுதலும் அத்தகைய சந்தை இடைத்தரகரின் கடமையாதல் வேண்டும்.

(2) பதிவுசெய்யப்பட்ட ஆளொருவர், பதிவுசெய்யப்பட்ட ஆளொருவராகப் பதிவுசெய்யப்படுவதற்கான அல்லது பதிவைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பத்தில் ஏலவே கொடுத்துதவப்பட்ட எவையேனும் விபரங்களைத் திருத்த உத்தேசிக்குமிடத்து, அல்லது அதில் குறித்துரைக்கப்பட்ட நிலையை மாற்றுவதற்கு அல்லது திருத்துவதற்கு உட்கருதுமிடத்து அத்தகைய திருத்தம் அல்லது மாற்றம் பற்றி ஆணைக்குழுவுக்கு உடனடியாகத் தெரிவித்தல் அத்தகைய பதிவுசெய்யப்பட்ட ஆளினதும், எந்தச் சந்தை இடைத்தரகருக்காகப் பதிவுசெய்யப்பட்ட ஆள் செயற்படுகின்றாரோ அல்லது தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளாரோ அந்தச் சந்தை இடைத்தரகரினதும் கடமையாதல் வேண்டும்.

104. ஆளொருவர், உரிமமளிக்கப்பட்ட சந்தை இடைத்தரகரொருவரின் தொழிலைக் கொண்டுநடாத்துவதில் ஆணைக் குழுவினால் அல்லது ஆணைக்குழுவால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரால் அத்தகைய செயற்பாட்டைக் கொண்டு நடாத்துவதற்கு அவருக்கு முறையாக அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தாலொழிய, முகவரொருவராகச் செயற்படுதலாகாது அல்லது அவ்வாறு செய்வதாக அவ்வாள் காட்டிநிற்றலாகாது.

105. (1) ஆணைக்குழு பின்வருவனதொடர்பில் திருப்திப்படுமிடத்து, இப்பாகத்தின்கீழ் சந்தை இடைத்தரகரொருவருக்கு வழங்கிய உரிமமொன்றை அது இல்லாதாக்குதல் அல்லது இடைநிறுத்துதல் வேண்டும்:-

(அ) உரிமத்துக்கான விண்ணப்பமொன்றை ஆணைக்குழு எந்த ஏதுவின்மீது மறுக்கலாமோ அந்த ஏதுவொன்று இருத்தல்;

(ஆ) சந்தை இடைத்தரகர், அதன் உரிமம் தொடர்பிலான ஏதேனும் நிபந்தனை அல்லது மட்டுப்பாட்டை அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் அவருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புரையை மீறியிருத்தல்; அல்லது

(இ) சந்தை இடைத்தரகர், விடயத்துக்கேற்றவாறு, இச்சட்டத்தின் அல்லது அவரைப் பிணிக்கின்ற ஏதேனும் விதியின் ஏற்பாட்டை மீறியிருத்தல்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளுக்கிணங்கச் சந்தை இடைத்தரகரொருவருக்கு வழங்கப்பட்ட உரிமமொன்றை இல்லாதாக்குவதற்கு அல்லது இடைநிறுத்துவதற்கு முன்னர், சந்தை இடைத்தரகருக்குச் கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்று வழங்கப்படுதல் வேண்டும்.

(3) சந்தை இடைத்தரகரொருவருக்கு வழங்கப்பட்ட உரிமமொன்று இல்லாதாக்கப்படுகின்றவிடத்து, ஆணைக்குழுவுக்கு அதன் உரிமத்தை உடனடியாக ஒப்படைத்தல் அச்சந்தை இடைத்தரகரின் கடமையாதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் உரிமமொன்று இல்லாதாக்கப்படுதலானது இச்சட்டத்தின்கீழ் நிறுவனத்தை அல்லது அத்தகைய சந்தை இடைத்தரகருக்கு எதிரான ஏதேனும் வழக்குநடவடிக்கை தொடுக்கப்படுவதை அல்லது பேணப்படுவதைப் பாதித்தலோ அல்லது பங்கப்படுத்துதலோ ஆகாது.

(5) ஆணைக்குழு, இப்பாகத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவருக்கு வழங்கிய பதிவை இல்லாதாக்குவதற்கான அல்லது இடைநிறுத்துவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) அவரைப் பதிவுசெய்வதற்கு உரித்துடையவரல்லராக்கும் ஏதேனும் ஏது உள்ளதென வெளிக்காட்டப்படின்;

(ஆ) பதிவுசெய்யப்பட்ட ஆள் அவரின் பதிவுதொடர்பிலான ஏதேனும் நிபந்தனையை அல்லது மட்டுப்பாட்டை அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் அவருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புரையை மீறியிருப்பின்; அல்லது

(இ) பதிவுசெய்யப்பட்ட ஆள், விடயத்துக்கேற்ப, இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அவரைப் பிணிக்கின்ற விதிகளுள் எவற்றையும் மீறியிருப்பின்.

(6) இப்பிரிவின் (2) முதல் (4) வரையான உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், இப்பாகத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவருக்கு வழங்கப்பட்ட பதிவொன்றின், விடயத்துக்கேற்ப, ஏதேனும் இடைநிறுத்துதலுக்கு அல்லது இல்லாதாக்குதலுக்கு மற்றும் அதுதொடர்பில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

106. சந்தை இடைத்தரகரொருவர் அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆளொருவர் பின்வருவனவற்றைச் செய்தலாகாது.

(அ) ஆணைக்குழுவின் முன்னங்கீகாரமின்றி, அவர் எந்தப் பரிவர்த்தனையில் வியாபாரஞ்செய்யும் பங்குபற்றுநராக உள்ளாரோ அந்தப் பரிவர்த்தனைக்கு வெளியே பிணையங்களிலான வியாபாரத்தைச் செய்தலோ அல்லது அவற்றை வேறுவகையாகக் கையாளுதலோ ஆகாது;

(ஆ) ஆணைக்குழுவின் அத்தகைய விதிகளை அல்லது சந்தை நிறுவனமொன்றின் விதிகளை மீறிப் பிணையங்களிலான வியாபாரத்தைச் செய்தலாகாது;

(இ) எந்தச் சந்தை நிறுவனத்தில் அவர் வியாபாரஞ்செய்யும் பங்குபற்றுநராகவுள்ளாரோ அந்தச் சந்தை நிறுவனத்தினால் தரப்பட்ட தேவைப்பாடுகளுக்கு முரணான முறையொன்றில் எல்லைக்கடன் கணக்கொன்றில் ஏதேனும் கொடுக்கல்வாங்கலைப் பயனுறுத்துதலாகாது; அல்லது

(ஈ) எவையேனும் பிணையங்களின் கொள்வனவை அல்லது விற்பனையைத் தூண்டுவதற்காக அல்லது தூண்ட எத்தனிப்பதற்காக ஏதேனும் சூழ்ச்சித்திறன்சார்ந்த, வஞ்சகமான அல்லது வேறு மோசடியான உபாயத்தின் அல்லது தந்திரத்தின் வழியாக ஏதேனும் கொடுக்கல் வாங்கலைப் பயனுறுத்துதலாகாது.

107. சந்தை இடைத்தரகரொருவர், எவரேனும் வாடிக்கையாளரின் கணக்குக்கெனக் கொண்டுசெல்லப்படுகின்ற எவையேனும் பிணையங்களை, அவ்வாடிக்கையாளரின் எழுத்திலான சம்மதமின்றிக் கடன்கொடுத்தலோ அல்லது கடன்கொடுத்தலுக்கு ஒழுங்கேற்பாடு செய்தலோ அல்லது இணைப்பொருளாக எவரேனும் வாடிக்கையாளரின் கணக்குக்கெனக் கொண்டுசெல்லப்படுகின்ற பிணையங்களைப் பயன்படுத்தி, அவ்வாடிக்கையாளரின் எழுத்திலான சம்மதமின்றிக் கடன்பெறுதலோ அல்லது கடன்பெறுவதற்கு ஒழுங்கேற்பாடு செய்தலோ ஆகாது.

108. (1) சந்தை இடைத்தரகரொருவரின் கணக்காய்வாளரொருவர், ஒரு கணக்காய்வாளர் என்றவாறான அவரது கடமைகளின் சாதாரணப் புரிகையின்போது, இச்சட்டத்தின், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் ஏதேனும் ஏற்பாட்டின் மீறலொன்று அல்லது இணங்கியொழுகாமையொன்று, அல்லது சந்தை நிறுவனமொன்றின் ஏதேனும் விதியின் மீறலொன்று, அல்லது சந்தை இடைத்தரகரின் நிதி நிலைமையை முக்கியமானதோர் அளவுக்குப் பாதகமான முறையில் பாதிக்கக்கூடிய ஏதேனும் கருமம் இருந்துள்ளதென்ற அபிப்பிராயத்தைக் கொண்டிருப்பின், அக்கணக்காய்வாளர் அக்கருமத்தைப் பற்றி எழுத்திலான அறிக்கையொன்றைப் பணிப்பாளர் சபைக்கும் அவ்வறிக்கையின் பிரதியொன்றை

(அ) இச்சட்டத்தின், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியின், விதியின் அல்லது பணிப்புரையின் ஏதேனும் ஏற்பாட்டின் மீறலொன்றின் அல்லது இணங்கி யொழுகாமையொன்றின் அல்லது மோசடியை அல்லது நேர்மையீனத்தை உட்படுத்துகின்ற ஏதேனும் தவறின் விடயத்தில், ஆணைக்குழுவுக்கும்;

(ஆ) சந்தை நிறுவனமொன்றின் விதிகளுள் எவற்றினதும் மீறலொன்றின் அல்லது இணங்கியொழுகாமையொன்றின் விடயத்தில், இயைபான சந்தை நிறுவனத்திற்கும் ஆணைக்குழுவுக்கும்; அல்லது

(இ) சந்தை இடைத்தரகரின் நிதிநிலைமையை முக்கியமானதோர் அளவுக்குப் பாதகமான முறையில் பாதிக்கின்றதான வேறு ஏதேனும் விடயத்தில், இயைபான சந்தை நிறுவனத்திற்கும் ஆணைக் குழுவுக்கும் உடனடியாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) கணக்காய்வாளரெவரும், கணக்காய்வாளரினால் நல்லெண்ணத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் அறிக்கைக்காகவும், அத்துடன் இப்பிரிவின்கீழ் கணக்காய்வாளர்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் கடமையைப் புரிவதில் ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்குத்தொடுக்கப்படுவதற்கு ஆளாதலாகாது.

(3) ஆணைக்குழு, கணக்காய்வொன்றின்போது அல்லது அதன் பின்னர் எந்த நேரத்திலும் சந்தை இடைத்தரகரொருவரின் கணக்காய்வாளரொருவரை

(அ) அவரது கணக்காய்வு தொடர்பில் ஆணைக்குழு குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய மேலதிக தகவல்களைச் சமர்ப்பிக்குமாறு;

(ஆ) ஆணைக்குழு தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய முறையில் அல்லது அத்தகைய அளவுக்குச் சந்தை இடைத்தரகரின் தொழில் மற்றும் அலுவல்கள் பற்றிய அவரது கணக்காய்வின் நோக்கெல்லையை விசாலிக்குமாறு அல்லது நீடிக்குமாறு;

(இ) ஏதேனும் குறிப்பிட்ட விடயத்தில், ஏதேனும் குறிப்பான விசாரணையை நிறைவேற்றுமாறு அல்லது ஏதேனும் நடவடிக்கைமுறையை நிலைநாட்டுமாறு; அல்லது

(ஈ) பந்திகள் (அ) முதல் (இ) வரையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் கருமம் பற்றி, விடயத்துக்கேற்றவாறு, அறிக்கையொன்றை அல்லது இடைக்கால அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு, தேவைப்படுத்தலாம் என்பதுடன், அத்தகைய தேவைப்பாடுகள் எக்காலப் பகுதியினுள் கணக்காய்வாளரினால் இணங்கியொழுகப்படவேண்டுமோ அக்காலப்பகுதியை ஆணைக்குழு குறித்துரைக்கலாம்.

(4) கணக்காய்வாளர், (3) ஆம் உட்பிரிவின்கீழான ஆணைக் குழுவின் ஏதேனும் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுக வேண்டும் என்பதுடன், சந்தை இடைத்தரகர், இப்பிரிவின்கீழான எல்லா மேலதிகக் கடமைகளும் கணக்காய்வாளரினால் நிறைவேற்றப்படுதல் தொடர்பில் ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் அவருக்கு ஊதியமளித்தலும் வேண்டும்.

(5) சந்தை இடைத்தரகர், இப்பிரிவின்கீழான எல்லா மேலதிகக் கடமைகளும் கணக்காய்வாளரினால் நிறைவேற்றப்படுதல் தொடர்பில் அக்கணக்காய்வாளர் தேவைப்படுத்துகின்றவாறான அத்தகைய தகவல்களையும் அத்தகைய தகவல்களுக்கான அணுக்கத்தையும் வழங்குதல் வேண்டும்.

அத்தியாயம் 3

வாடிக்கையாளர்களின் சொத்துக்களின் பாதுகாப்பு

109. சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய, இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காக -

சந்தை இடைத்தரகரொருவர் தொடர்பாக “வாடிக்கையாளர்” என்பது, எவ்வாள் சார்பாகச் சந்தை இடைத்தரகர் வியாபாரஞ்செய்கின்றாரோ அல்லது பிணையங்களைக் கையாள்வதற்கு எவ்வாளிடமிருந்து சந்தை இடைத்தரகர் அறிவுறுத்தல்களை ஏற்றுக்கொள்கின்றாரோ, அவ்வாளொருவர் எனப் பொருள்படும்.

“பணம் அல்லது வேறு சொத்துக்கள்” என்பது, சந்தை இடைத்தரகர் அவரின் வாடிக்கையாளருக்கு வகை கூறுவதற்கு ஆளாகவுள்ளதும் சந்தை இடைத்தரகரொருவரின் தொழிலின்போது அவரினால் பெறப்பட்டதும் அல்லது வைத்திருக்கப்பட்டதுமான ஏதேனும் பணம், அல்லது அவரிடம் வைப்பிலிடப்பட்ட வேறேதேனும் சொத்து, மற்றும் அதிலிருந்து திரளுகின்ற ஏதேனும் பணம் அல்லது வேறு சொத்துக்கள் எனப் பொருள்படும்.

110. (1) சந்தை இடைத்தரகரொருவர், வாடிக்கையாளரொருவரிடமிருந்து அல்லது வாடிக்கையாளரொருவரின் பெயரில் பணத்தை அல்லது வேறு சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளுமளவுக்கு

(அ) பணத்தை அல்லது வேறு சொத்துக்களை அவர் பெறுகின்றபோது அல்லது அதற்கு முன்னர் வாடிக்கையாளரால் உடன்பட்டுக்கொள்ளப்படக் கூடியவாறான அத்தகைய நோக்கத்துக்கெனப் பணம் அல்லது வேறு சொத்துக்கள் முழுமையாகப் பிரயோகிக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையின்மீது அவ்வாறு செய்தல் வேண்டும்;

(ஆ) வாடிக்கையாளரொருவரின் பெயரில் பெற்றுக்கொண்ட பணத்தையும் வேறு சொத்துக்களையும் அத்தகைய வாடிக்கையாளரின் நன்மைக்காக நம்பிக்கைப் பொறுப்பில் வைத்திருத்தல் வேண்டும்;

(இ) அதன் சொந்த நிதிகளுடன் வாடிக்கையாளரின் பெயரில் பெறப்பட்ட பணத்தை ஒன்றுதிரட்டுதலாகாது, அல்லது அத்தகைய பணத்தை வாடிக்கையாளர் தவிர்ந்த எவரேனுமாளுக்கான எல்லைக்கடனாக அல்லது உத்தரவாதமாக ஏதேனும் கொடுக்கல்வாங்கலுக்குப் பிணைப்பொறுப்பளிப்பதற்கு அல்லது அவருக்குக் கடன் அளிப்பதற்குப் பயன்படுத்துதலாகாது; அத்துடன்

(ஈ) அவ்வாடிக்கையாளரின் பணம் அல்லது வேறு சொத்துக்கள் தொடர்பாக இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் குறித்துரைக்கப்படக் கூடியவாறான எவையேனும் விதிகளுக்கிணங்க, வாடிக்கையாளர் ஒவ்வொருவருக்குமெனத் தனிவேறான பதிவீட்டுப் புத்தகமொன்றைப் பதிதலும் பேணுதலும் வேண்டும்.

(2) ஆணைக்குழு, சந்தை இடைத்தரகரொருவரால் பணம் அல்லது வேறு சொத்துக்கள் கையாளப்படுதல் உட்பட, (1) ஆம் உட்பிரிவிலுள்ள எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவையேனும் கருமங்கள் தொடர்பிலும் விதிகளை ஆக்கலாம்.

(3) இப்பிரிவில் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளில் வேறுவகையில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, சந்தை இடைத்தரகருக்கு வாடிக்கையாளர்களிடமிருந்து அல்லது வாடிக்கையாளர்களின் பெயர்களில் பெறப்பட்ட அல்லது வைப்பிலிடப்பட்ட எல்லாப் பணங்களும் அல்லது வேறு சொத்துக்களும்

(அ) சந்தை இடைத்தரகரின் தனிசுகளின் கொடுப்பனவுக்கெனக் கிடைக்கக்கூடியனவாதலாகாது; அத்துடன்

(ஆ) அச்சந்தை இடைத்தரகரின் ஏதேனும் பொறுப்புத் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் கட்டளையொன்றின் கீழான அல்லது மன்றாணையொன்றின்கீழான நிறைவேற்றுகையில் செலுத்தப்படுவதற்கு அல்லது எடுக்கப்படுவதற்குப் பொறுப்பாதலாகாது.

(4) உட்பிரிவு (1), உட்பிரிவு (3) அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியை மீறுகின்ற எவரேனும் சந்தை இடைத்தரகர் தவறொன்றைப் புரிகின்றார்.

111. (1) ஆணைக்குழு, வாடிக்கையாளர் பாதுகாப்பு அக்கறையிலும் சந்தை இடைத்தரகரொருவரினதும் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவரினதும் உயர்தொழில் தராதரங்களை மேம்படுத்தும் நோக்கத்துக்காகவும், ஆணைக்குழு அவசியமெனக் கருதுகின்ற வாறாகச் சந்தை இடைத்தரகரொருவரின் அல்லது பதிவு செய்யப்பட்ட ஆளொருவரின் தொழில் நடத்தையை ஒழுங்கு படுத்துகின்ற விதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார்.

112. (1) ஒரு சந்தை இடைத்தரகர் அல்லது ஒரு பதிவுசெய்யப்பட்ட ஆள் ஒரு வாடிக்கையாளருக்கு விதப்புரையைச் செய்வதற்கு நியாயமானவோர் அடிப்படையைக்கொண்டிராவிடின், அச்சந்தை இடைத்தரகர் அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆள், அத்தகைய வாடிக்கையாளர் அவ்விதப்புரையின்மீது நம்பியிருப்பதற்கு நியாயமானமுறையில் எதிர்பார்க்கப்படக்கூடியவிடத்து வாடிக்கை யாளருக்கு விதப்புரையொன்றைச் செய்தலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, சந்தை இடைத்தரகரொருவர் அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆளொருவர், பின்வருமாறு இருந்தாலொழிய, ஆளொருவருக்கு விதப்புரையொன்றைச் செய்வதற்கான நியாயமான அடிப்படையொன்றைக் கொண்டிருப்பதில்லை-

(அ) அவர், விதப்புரை தோதானதென நிச்சயித்துக்கொள்ளும் நோக்கங்களுக்காக, வாடிக்கையாளரின் முதலீட்டுக் குறிக்கோள்கள், நிதி நிலைமை மற்றும் குறிப்பான தேவைகள் என்பன சம்பந்தமாக அவரால் வைத்திருக்கப்படும் தகவல்களைக் கருத்திற்கொண்டு, எல்லாச் சூழ்நிலைகளிலும் நியாயமாகவிருக்கின்றவாறு விதப்புரையின் விடயப்பொருளுக்கு அத்தகைய கவனத்தைச்செலுத்தி அதன் பகுப்பாய்வை நடாத்தியிருந்தாலொழியவும்; அத்துடன்

(ஆ) அவர் பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட கருத்து, பகுப்பாய்வு அல்லது புலனாய்வின்மீது விதப்புரையை அடிப்படையாகக் கொண்டிருந்தாலொழியவும்

113. (1) சந்தை இடைத்தரகரொருவர் அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆள் எவையேனும் பிணையங்கள் தொடர்பில் எந்தச் சுற்றறிக்கையொன்றில் அல்லது அதையொத்த வேறு எழுத்திலான தொடர்பாடலொன்றில் விதப்புரையொன்றைச் செய்கின்றாரோ அந்தச் சுற்றறிக்கையை அல்லது

அதையொத்த வேறு எழுத்திலான தொடர்பாடலை அவர் அனுப்புகின்றவிடத்து, அச்சுற்றறிக்கை அல்லது வேறு தொடர்பாடல் அல்லது எத்தேதியன்று அனுப்பப்பட்டதோ அத்தேதியில் அவர் அல்லது அவருடன் இணைந்துள்ள அல்லது சம்பந்தப்பட்டுள்ள ஆளொருவர், பிணையங்களிலான ஏதேனும் அக்கறையின் தன்மை பற்றிய, அல்லது பிணையங்களின் கொள்ளல் அல்லது கையுதிர்த்தலிலுள்ள ஏதேனும் அக்கறை பற்றிய சுருக்கமான கூற்றொன்றைச் சுற்றறிக்கையில் அல்லது வேறு தொடர்பாடலில் அல்லது சுற்றறிக்கையின் அல்லது வேறு எழுத்திலான தொடர்பாடலின் எஞ்சியுள்ள பாகத்தில் பயன்படுத்தப்பட்டதைவிட வாசிக்கமுடியாததாகவிராத அச்சில் உள்ளடக்குதல் வேண்டும்.

(2) சந்தை இடைத்தரகரொருவர் அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆளொருவர் (1) ஆம் உட்பிரிவின் மீறுகையொன்று தொடர்பிலான தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்படுமிடத்து சுற்றறிக்கை அல்லது வேறு தொடர்பாடல் அனுப்பப்பட்ட நேரத்தில் பின்வருவன பற்றி அவர் அறிந்திருக்கவில்லை மற்றும் அறிந்திருக்கவேண்டுமென நியாயமான முறையில் எதிர்பார்க்கப்பட்டிருந்திருக்கமுடியாதென எண்பிப்பது அச்சந்தை இடைத்தரகருக்கான அல்லது பதிவு செய்யப்பட்ட ஆளுக்கான எதிர்வாதமொன்றாதல் வேண்டும்:-

(அ) அவர் பிணையங்களில் அக்கறையொன்றைக் கொண்டிருந்தார், அல்லது பிணையங்களின் கொள்ளல் அல்லது கையுதிர்த்தலில் அக்கறையொன்றைக் கொண்டிருந்தார்; அல்லது

(ஆ) அவருடன் இணைந்துள்ள அல்லது சம்பந்தப்பட்டுள்ள ஆள், விடயத்துக்கேற்றவாறு, பிணையங்களில் அக்கறையொன்றைக் கொண்டிருந்தார், அல்லது பிணையங்களின் கொள்ளல் அல்லது கையுதிர்த்தலில் அக்கறையொன்றைக் கொண்டிருந்தார்.

(3) உட்பிரிவுகள் (1) மற்றும் (2) இன் நோக்கங்களுக்காக

(அ) எவையேனும் பிணையங்களின் கொள்ளல் அல்லது கையுதிர்த்தலில் ஆளொருவரின் அக்கறையொன்று, பிணையங்களின் கொள்ளல் அல்லது கையுதிர்த்தலின் மேல் அல்லது அவற்றிலிருந்து எழுகின்ற, அவ்வாளுக்கு நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் திரளும் அல்லது திரளுவதற்குச் சாத்தியமிருக்கும் ஏதேனும் நிதிசார் நன்மை அல்லது அனுகூலத்தை உள்ளடக்குகின்றது;

(ஆ) பந்தி (அ) இன் பொதுமையை வரையறுக்காமல், எவையேனும் பிணையங்கள் தொடர்பில் ஒப்புறுதி உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டுள்ள ஆளொருவர், பிணையங்களின் கொள்ளல் அல்லது கையுதிர்த்தலில் அக்கறையொன்றைக் கொண்டுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) ஓராம் உட்பிரிவு அல்லது (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தி எவ்வாறிருப்பினும், சுற்றறிக்கை அல்லது வேறு தொடர்பாடலை அனுப்புவது தொடர்பில், ஆளொருவரும் வேறோராளும் கூட்டாகச் செயலாற்றினாலொழிய, அல்லது அவர்களுக்கிடையே செய்துகொள்ளப்பட்ட ஒழுங்கேற்பாடு ஒன்றின்கீழ் அல்லது அதற்கிணங்க வேறுவகையில் செயலாற்றினாலொழிய, அவ்வாள், அவ்வேறாளுடன் சம்பந்தப்பட்டவராக அல்லது இணைந்தவராக இருப்பதில்லை.

(4) சந்தை இடைத்தரகரொருவர், (1)ஆம் உட்பிரிவு எந்தச் சுற்றறிக்கைக்கு அல்லது வேறு தொடர்பாடலுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்தச் சுற்றறிக்கையை அல்லது வேறு தொடர்பாடலை ஆளொருவருக்கு அனுப்பும்போது, சந்தை இடைத்தரகர் சுற்றறிக்கையின் அல்லது வேறு தொடர்பாடலின் பிரதியொன்றை சுற்றறிக்கை அல்லது வேறு எழுத்திலான தொடர்பாடல் அனுப்பப்படும் தேதியிலிருந்து ஆறு ஆண்டுகளுக்குப் பேணிக்காத்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ஆளொருவருக்கு அனுப்பப்பட்ட சுற்றறிக்கை அல்லது வேறு தொடர்பாடலொன்று, சந்தை இடைத்தரகரின் அலுவலரொருவரால் அது கையொப்பமிடப்பட்டிருப்பின், சந்தை இடைத்தரகரால் அனுப்பப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) இப்பிரிவை மீறுகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார்.

114. சந்தை இடைத்தரகரொருவர், சந்தை இடைத்தரகர் மற்றும் அவரது ஊழியர்கள் அவரின் தொழிலுக்கான ஆபத்தைக் கண்காணிப்பதற்கு அவரை இயலச்செய்யக்கூடிய சட்டம், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், விதிகள் அல்லது பணிப்புரைகள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதலைக் கண்காணிக்கும் நோக்கத்துக்காக, அத்தகைய சந்தை இடைத்தரகர் நடவடிக்கை முறைகளையும் நடைமுறைகளையும் நிலைநாட்டுதலும் பேணிவருதலும் வேண்டும்.

115. (1) ஆணைக்குழு, அது தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் சந்தை இடைத்தரகர்கள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஆட்கள் பற்றிய இடாப்பொன்றை வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன், அவ்விடாப்பு ஆணைக்குழு தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் பொதுமக்கள் பார்வைக்கெனக் கிடைக்கக்கூடியதாக்கப்படுதலும் வேண்டும்.

(2) இடாப்பானது இலத்திரனியல் படிவத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன் எல்லா நேரங்களிலும் ஆணைக்குழு அதனை நாளதுவரைப்படுத்தலும் வேண்டும்.

(3) சந்தை இடைத்தரகர் மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஆளுக்கான இடாப்பு பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) சந்தை இடைத்தரகர் அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆளின் பெயர்.

(ஆ) சந்தை இடைத்தரகர் அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆளின் தொழில் முகவரி;

(இ) சந்தை இடைத்தரகர் வைத்திருக்கும் உரிமத்தின் வகை அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆள் வைத்திருக்கும் பதிவின் வகை;

(ஈ) சந்தை இடைத்தரகருக்கு உரிமம் வழங்கப்பட்ட தேதி அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆளுக்குப் பதிவு வழங்கப்பட்ட தேதி;

(உ) சந்தை இடைத்தரகருக்காகச் செயலாற்றுகின்ற அல்லது அவரால் தொழிலுக்கமர்த்தப்பட்ட பதிவுசெய்யப்பட்ட ஆட்களின் பெயர்கள்; அத்துடன்

(ஊ) ஆணைக்குழுதோதானதெனக் கருதுகின்ற வேறு ஏதேனும் கருமம்.

(4) இச்சட்டத்தின்கீழ் சந்தை இடைத்தரகரினால் வைத்திருக்கப்படும் உரிமம் இல்லாதாக்கப்படுமிடத்து அல்லது இடைநிறுத்தப்படுமிடத்து அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆளினால் வைத்திருக்கப்படும் பதிவு இல்லாதாக்கப்படுமிடத்து அல்லது இடைநிறுத்தப்படுமிடத்து, ஆணைக்குழு, சந்தை இடைத்தரகரொருவர் அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆளொருவர் தொடர்பில் அவசியமான திருத்தங்களை இடாப்பில் செய்யலாம்.

## பாகம் IV

## நிரற்படுத்தப்படாத பிணையங்களிலான வியாபாரம்

116. பின்வருவன இப்பாகத்தின் குறிக்கோளும் நோக்கமுமாக இருத்தல் வேண்டும்:-

(அ) இலங்கையிலுள்ள நிரற்படுத்தப்படாத பிணையங்களின் விற்பனை மற்றும் கொள்வனவுக்கென, ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநரொருவர் மூலம் வெளிப்படையானதொரு முறையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு இயங்குதளமொன்றை வழங்குதல். அத்துடன்

(ஆ) ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநரொருவர் மூலம் வெளிப்படையானதொரு முறையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நிரற்படுத்தப்படாத பிணையங்களுடன் தொடர்புடைய தகவல்களின் வெளிப்படுத்துகையை வசதிப்படுத்துதல்.

### அத்தியாயம் 1

### ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநரொருவரை நிலைநிறுத்தல்

117. ஆளொருவர், ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டிருந்தாலொழிய அல்லது அத்தகைய பதிவுசெய்தலிலிருந்து விலக்களிக்கப்பட்டாலொழிய, அத்தகைய ஆள் இப்பாகத்தின்கீழ் சந்தைத் தொழிற்படுத்துநரொருவராகச் செயலாற்றுதலாகாது.

118. (1) நூற்றிப்பதினேழாம் பிரிவின் நோக்கங்களுக்காக ஆணைக்குழு, ஆளொருவரால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மேல், அது அவசியமெனக் கருதுகின்றவாறான எவையேனும் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கமைய, அவ்வாளை ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநரொருவராகப் பதிவு செய்யலாம் அல்லது அத்தகைய பதிவுசெய்தலிலிருந்து விலக்களிக்கலாம்.

(2) ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய, ஆணைக்குழு, 119 ஆம் பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட கட்டளைக்கற்களைக் கருத்திற்கொண்டு சந்தைத் தொழிற்படுத்துநரொருவரை 117 ஆம் பிரிவின்கீழான பதிவுசெய்தலிலிருந்து விலக்களிக்கலாம்.

(3) ஆணைக்குழு, (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட எவையேனும் நியதிகளையும் நிபந்தனைகளையும் காலத்துக்குக்காலம் வேறுபடுத்தலாம், திருத்தலாம் அல்லது இல்லா தொழிக்கலாம்.

(4) ஆணைக்குழு, (2) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்பு எவ்வாறிருப்பினும், அத்தகைய விலக்களிப்பை மீளப்பெறலாமென்பதுடன் முதலீட்டாளர்களின் அக்கறைகருதி அத்தகைய ஆளைப் பதிவுசெய்தல் அவசியமென ஆணைக்குழு கருதினால் அத்தகைய ஆளைப் பதிவுசெய்யும்படி தேவைப் படுத்தலாம்.

119. (1) ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநரொருவராகப் பதிவுசெய்துகொள்வதற்கான விண்ணப்பமொன்று, விதிகளின்மூலம் ஆணைக்குழு குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய ஆவணங்களையும் தகவல்களையும் சேர்த்தும் அத்தகைய படிவத்திலும் அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின்கீழ் அத்தகைய ஆளினால் செய்யப்பட்ட பதிவுசெய்வதற்கான விண்ணப்பமொன்று, அத்தகைய ஆள் இயங்குதளமொன்றின்மீது நிறைவேற்றப்படும் வியாபாரங்களில் அனுபவத்தைக் கொண்டுள்ளாரென ஆணைக்குழுவின் திருப்திக்கு எண்பிக்கும் ஆவணங்களை வழங்குதல் வேண்டும்.

(3) இவ்வத்தியாயத்தின்கீழ் அத்தகைய ஆளினால் செய்யப்பட்ட பதிவுசெய்வதற்கான விண்ணப்பமொன்று, இயங்குதளமொன்றின்மீது நிறைவேற்றப்படும் வியாபாரங்களின் தீர்வுக்கும் தீர்ப்பனவிற்குமாக அத்தகைய இயங்குதளத்தினால் ஒழுங்கேற்பாடுகள் செய்யப்படுகின்றனவென ஆணைக்குழுவின் திருப்திக்கு எண்பிக்கும் ஆவணங்களை வழங்குதல் வேண்டும்.

### அத்தியாயம் 2

### ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநரொருவரின் வகிபாகம்

120. பின்வருவன ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநர் ஒருவரின் பணிகளும் கடமைகளுமாக இருத்தல் வேண்டும்:-

(அ) இலங்கையில் நிரற்படுத்தப்படாத பிணையங்களின் விற்பனைக்கும் கொள்வனவுக்குமான இயங்குதளமொன்றை வழங்குதல்;

(ஆ) இலங்கையில் நிரற்படுத்தப்படாத பிணையங்களுடன் தொடர்புடைய தகவல்களை உள்நாட்டு மற்றும் சர்வதேச நிதிசார் சமூகத்திற்கு வழங்குதல்;

(இ) அதன் வியாபாரஞ்செய்யும் உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வதற்கும் ஒழுங்குபடுத்தும் நியமங்களுக்குமான கட்டளைக்கற்களை வழங்குதல்;

(ஈ) பொதுவான தன்மையினதாகவிருப்பினுஞ்சரி அல்லது குறிப்பான தன்மையினதானதாகவிருப்பினுஞ்சரி, ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற ஏதேனும் பணிப்புரைக்கு இணங்கியொழுகுதல்; அத்துடன்

(உ) ஆணைக்குழுவுக்கு அல்லது ஆணைக்குழு சார்பில் அல்லது அதன் அதிகாரத்துடன் செயற்படுகின்ற ஆளொருவருக்கு, அவ்வாணைக்குழு அல்லது அத்தகைய ஆள் நியாயமானளவுக்குத் தேவைப்படுத்துகின்றவாறான அத்தகைய உதவியை வழங்குதல்.

121. இயங்குதளமொன்றின்மீது பிணையங்களை வாங்கும் மற்றும் விற்கும் எவரேனுமாள் இயங்குதளத்தினால் சேர்த்துக் கொள்ளப்பட்ட வியாபாரஞ்செய்யும் உறுப்பினர்கள்மூலம் அவர்களின் கட்டளைகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

122. ஆணைக்குழு விதிகளை ஆக்கலாம் அல்லது ஆணைக்குழுவின் அங்கீகாரத்துக்கமைய விதிகளை ஆக்கும்படி சந்தைத் தொழிற்படுத்துநரைத் தேவைப்படுத்தலாம்:-

(அ) இயங்குதளமொன்றில் வியாபாரஞ்செய்யப்பட முடியுமான, நிரற்படுத்தப்படாத பிணையங்களின் வகையைத் தீர்மானித்தல்;

(ஆ) இயங்குதளமொன்றுக்கு வியாபாரங்களை அறிக்கையிட முடியுமான வழங்குநர்களின் வகையைத் தீர்மானித்தல்;

(இ) இயங்குதளமொன்றில் வியாபாரஞ்செய்யக்கூடிய முதலீட்டாளர்களின் வகையைத் தீர்மானித்தல்;

(ஈ) இயங்குதளத்தில் வியாபாரஞ்செய்யக்கூடிய வியாபாரஞ்செய்யும் உறுப்பினர்களின் வகையைத் தீர்மானித்தல்;

(உ) இயங்குதளம்மீது வியாபாரஞ்செய்யும் உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளல்;

(ஊ) இயங்குதளத்தினால் செய்யப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படும் வெளிப்படுத்தல்களின் மட்டத்தைத் தீர்மானித்தல்; அத்துடன்

(எ) நிரற்படுத்தப்படாத பிணையங்களின் விற்பனை அல்லது கொள்வனவில் தொழில் நடத்தையின் நியமத்தைத் தீர்மானித்தல்.

123. (1) உட்பிரிவு (3) இற்கமைய, ஆணைக்குழு, முதலீட்டாளர்களின் அக்கறைக்கென அல்லது ஒழுங்குமுறையானதும் நியாய மானதுமான சந்தையைப் பேணுவதற்கென அவ்வாறு செய்வது தோதானதெனத் திருப்திப்படுமிடத்து, ஆணைக்குழு, அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியொன்றிலிருந்து பயனுக்குவரும்வகையில் எழுத்திலான அறிவித்தல் மூலம் ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநரின் பதிவை இல்லாதாக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிவித்தலில் பதிவினை இல்லாதாக்குதலுக்கான ஏதுக்கள் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(3) உட்பிரிவு (1) இன்கீழான இல்லாதாக்குகை எவ்வாறிருப்பினும், இல்லாதாக்குகை எத்தேதியன்று பயனுக்குவருகின்றதோ அத்தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், பின்வரும் நோக்கங்களுக்காக அறிவித்தலில் ஆணைக்குழு குறித்துரைக்கக் கூடியவாறாக இல்லாதாக்குகையினால் பாதிக்கப்பட்ட அத்தகைய செயற்பாடுகளைக் கொண்டுநடாத்துவதைத் தொடர்வதற்கு ஆணைக்குழு ஆளொருவருக்கு அனுமதியளிக்கலாம்:-

(அ) எந்த ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்து நருடன் இல்லாதாக்குகை தொடர்புறுகிறதோ அந்த ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநரின் தொழிற்பாடுகளை மூடிவிடுதல்; அல்லது

(ஆ) முதலீட்டாளர்களின் அக்கறையைப் பாதுகாத்தல்.

(4) ஆணைக்குழு (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆளொருவருக்கு அனுமதி வழங்கியுள்ளவிடத்து, அத்தகைய ஆள் அனுமதிக்கிணங்க செயற்பாடுகளை அவர் கொண்டுநடாத்துவதன் காரணமாக, இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை மீறியவராகக் கருதப்படுதலாகாது.

(5) ஆணைக்குழுவானது, கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்றை ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநருக்குக் கொடுத்திருந்தாலொழிய, ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநர் தொடர்பாக உட்பிரிவு (1) இன்கீழான அதன் தத்துவத்தைப் பிரயோகித்தலாகாது.

(6) இப்பிரிவின்கீழ் செய்யப்பட்ட பதிவுசெய்தலின் ஏதேனும் இல்லாதாக்குகை-

(அ) ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநரால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையை, கொடுக்கல்வாங்கலை அல்லது ஒழுங்கேற்பாட்டை, அவ்வுடன்படிக்கை, கொடுக்கல்வாங்கல் அல்லது ஒழுங்கேற்பாடு (1) ஆம் உட்பிரிவின்கீழான பதிவுசெய்தலின் இல்லாதாக்குகைக்கு முன்னராகச் செய்துகொள்ளப்பட்டிருப்பினுஞ்சரி, அல்லது (3) ஆம் உட்பிரிவு ஏற்புடையதாகுமிடத்து அதற்குப் பின்னராகச் செய்துகொள்ளப்பட்டிருப்பினுஞ்சரி, அதனை வறிதாக்குகின்ற அல்லது பாதிக்கின்றவகையில்; அல்லது

(ஆ) அத்தகைய உடன்படிக்கையின், கொடுக்கல்வாங்கலின் அல்லது ஒழுங்கேற்பாட்டின்கீழ் எழுகின்ற ஏதேனும் உரிமையை, கடப்பாட்டை அல்லது பொறுப்பைப் பாதிக்கின்றவகையில், தொழிற்படுதலாகாது.

124. (1) ஆணைக்குழு, இப்பாகத்தின்கீழான ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநரொருவரின் செயல்நிறைவேற்றுகையைக் காலத்துக்குக்காலம் மீளாய்வு செய்யலாம்.

(2) ஆணைக்குழு, ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநரின் நிலையை மீளாய்வுசெய்வதில் பின்வருவனவற்றைக் கருத்திற்கொள்ளலாம்:-

(அ) இயங்குதளமொன்றில் உள்ளார்ந்ததாகவுள்ள முறைமைசார் ஆபத்து;

(ஆ) பொதுமக்கள் அக்கறை;

(இ) இயங்குதளத்தின் அளவும் கட்டமைப்பும்.

(ஈ) இயங்குதளத்தின்மீது வியாபாரஞ்செய்யப்பட்ட நிரற்படுத்தப்படாத பிணையங்களின் வகுப்பு; அத்துடன்

(உ) இயங்குதளத்தைப் பயன்படுத்தும் முதலீட்டாளர்களினதும் பங்குபற்றுநர்களினதும் தன்மை.

(3) ஆணைக்குழு, ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநருக்குக் கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்றை வழங்காது (1) ஆம் உட்பிரிவின்கீழான அதன் தத்துவங்களைப் பிரயோகித்தலாகாது.

125. இப்பாகத்தின்கீழ் ஆணைக்குழுவினால் அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநரினால் ஆக்கப்பட்ட இவ்வியாபாரஞ்செய்யும் இயங்குதளத்திற்கு ஏற்புடையனவாகத்தக்க நிரற்படுத்தப்படாத பிணையங்கள் தொடர்பான விதிகள், நிரற்படுத்தப்படாத பிணையங்கள் தொடர்பான வேறு எவையேனும் விதிகளிலும் மேலோங்கிநிற்றல் வேண்டும்.

## பாகம் V

## சந்தை தொடர்பிலான துர்நடத்தை

126. இப்பாகத்தின் குறிக்கோளும் நோக்கமும், நியாயமான, ஒழுங்கான மற்றும் வெளிப்படையான பிணையங்கள் சந்தையொன்றைத் தாபிக்கின்ற நோக்குடன் பின்வருவனவற்றைத்தடுத்தலையும் வலுவுறுத்தல் நடவடிக்கை எடுத்தலையும் வசதிப்படுத்துவதற்கானதாதல் வேண்டும்:-

(அ) பொய்யான வியாபாரஞ்செய்தல், சந்தையைச் சூழ்ச்சித்திறத்துடன் கையாளுதல் மற்றும் பிணையங்களிலான மோசடி உட்பட எல்லா வகையினவுமான சந்தைத் தந்திரோபாயங்கள்; அத்துடன்

(ஆ) உள்ளுறைபவர் வியாபாரஞ்செய்தல்.

127. இப்பாகமானது வேறுவகையாக அதன்கண் குறித்துரைக்கப்பட்டாலொழிய, பின்வருவனவற்றிற்கு ஏற்புடையதாதல் வேண்டும்:-

(அ) பிணையங்கள் தொடர்பில் -

(i) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே தாபிக்கப்படுகின்றதும், அல்லது தொழிலைக் கொண்டுநடாத்துகின்றதும் 80 ஆம் பிரிவுக்கிணங்கப் பிணையங்களின் பகிரங்கக் கொடைமுனைவைச் செய்துள்ளதுமான ஏதேனும் நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியின் அல்லது ஏதேனும் நிரற்படுத்தப்படாத கம்பெனியின் பிணையங்கள் தொடர்பாக இலங்கையினுள் நிகழ்கின்ற செயல்கள் அல்லது செய்யாமைகள்;

(ii) இலங்கையினுள் தாபிக்கப்படுகின்றதும் அல்லது தொழிலைக் கொண்டுநடாத்துகின்றதும் 80 ஆம் பிரிவுக்கிணங்கப் பிணையங்களின் பகிரங்கக் கொடைமுனைவைச் செய்துள்ளதுமான ஏதேனும் நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியின் அல்லது ஏதேனும் நிரற்படுத்தப்படாத கம்பெனியின் பிணையங்கள் தொடர்பாக இலங்கைக்கு வெளியே நிகழ்கின்ற செயல்கள் அல்லது செய்யாமைகள்; அல்லது

(iii) ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட பரிவர்த்தனையொன்றின் செயலிடங்களைப் பயன்படுத்தி வியாபாரஞ்செய்யப்படுகின்றனவும் இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டனவுமான எவையேனும் பிணையங் கள் தொடர்பாக நிகழ்கின்ற செயல்கள் அல்லது செய்யாமைகள்; அல்லது

(iv) ஓர் அங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநரினால் தொழிற்படுத்தப்பட்ட ஓர் இயங்கு தளத்தின்மீது வியாபாரஞ்செய்யப்பட்ட பிணையங்கள் தொடர்பாக இடம்பெறுகின்ற செயல்கள் அல்லது செய்யாமைகள்; அத்துடன்

(ஆ) மூலாதாரப் பிணையங்கள் தொடர்பில் -

(i) ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட ஒரு பரிவர்த்தனையின்மீது வியாபாரஞ்செய்யப்பட்ட மூலாதாரப் பிணையங்கள் தொடர்பாக இலங்கையினுள் நிகழ்கின்ற செயல்கள்; அத்துடன்

(ii) ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட ஒரு பரிவர்த்தனையின்மீது வியாபாரஞ்செய்யப்பட்ட மூலாதாரப் பிணையங்கள் தொடர்பாக இலங்கைக்கு வெளியே நிகழ்கின்ற செயல்கள்.

### அத்தியாயம் 1

### தடைசெய்யப்பட்ட நடத்தை

128. (1) (அ) ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட ஒரு பரிவர்த்தனையின்மீது அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநரினால் தொழிற்படுத்தப்பட்ட ஓர் இயங்குதளத்தின்மீது வியாபாரஞ்செய்யப்பட்ட பிணையங்களின் முனைப்பான வியாபாரஞ் செய்தலின் பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் தோற்றமொன்றை; அல்லது

(ஆ) பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய எவையேனும் பிணையங்களுக்கான சந்தை அல்லது அவற்றின் விலை தொடர்பில் பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் தோற்றமொன்றை,

ஆளொருவர் உருவாக்குதலோ அல்லது உருவாக்கச் செய்வித்தலோ அல்லது உருவாக்குவதற்கு உட்கருதப்படுகின்ற எதனையும் செய்தலோ ஆகாது.

(2) ஆளொருவர்

(அ) எவையேனும் பிணையங்களின் பயனுகர் சொத்தாண்மையிலான மாற்றத்தை உட்படுத்தாத அந்த ஏதேனும் பிணையத்தின் ஏதேனும் கொள்வனவு அல்லது விற்பனையின்மூலம்; அல்லது

(ஆ) ஏதேனும் போலியான கொடுக்கல்வாங்கல் அல்லது உபாயத்தின்மூலம்,

அத்தகைய எவையேனும் பிணையங்களுக்காகச் சந்தை விலையைப் பேணுதலோ, அதிகரித்தலோ அல்லது குறைத்தலோ அல்லது அதில் பணவீக்கத்தை ஏற்படுத்துதலோ ஆகாது.

(3) ஓராம் உட்பிரிவின் பொதுமைக்குப் பங்கமின்றி, எவையேனும் பிணையங்களின் சந்தைவிலையைப் பேணுவதற்கென, அதிகரிப் பதற்கென, குறைப்பதற்கென அல்லது அதில் தளம்பல்களை ஏற்படுத்துவதற்கென-

(அ) பிணையங்களின் பயனுகர் சொத்தாண்மையை ஏதேனும் மாற்றத்திற்கு உட்படுத்தாததான கொடுக்கல்வாங்கலாகவுள்ள அத்தகைய பிணையங்களின் விற்பனையின் அல்லது கொள்வனவின் ஏதேனும் கொடுக்கல்வாங்கலை ஒன்றில் நேரடியாகவோ அல்லது நேரடியாக வல்லாமலோ செய்கின்ற, அதில் பங்குபற்றுகின்ற, அக்கறை கொண்டுள்ள அல்லது அதனை நிறைவேற்றுகின்ற; அல்லது

(ஆ) அவர் இன்னொருவருடன் சூழ்ச்சி செய்துள்ளவிடத்து அல்லது அத்தகைய சூழ்ச்சியை இன்னொருவருடன் செய்வித்துள்ளவிடத்து அல்லது அவருடன் இணைந்துள்ள ஆளொருவர் கணிசமானளவு முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட விலைபோன்ற அதேவிலையில் அதே பிணையங்களின் அதே எண்ணிக்கையை அல்லது கணிசமானளவு அதே எண்ணிக்கையைக் கொள்வனவுசெய்வதற்கான கொடைமுனைவொன்றை அவருடன் செய்துள்ளார் அல்லது அவருடன் செய்வித்துள்ளார் என அறிந்துள்ளவிடத்து குறித்துரைக்கப்பட்ட விலையில் அத்தகைய எண்ணிக்கையினவான பிணையங்களை வாங்குவதற்கான அல்லது விற்பதற்கான கொடைமுனைவொன்றைச் செய்கின்ற அல்லது செய்விக்கின்ற ஆளொருவர் அத்தகைய பிணையங்களில் முனைப்பான வியாபாரஞ்செய்தல் பற்றிப் பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் தோற்றமொன்றை உருவாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின் மீறுகையொன்றைக் கையாள்வதில் பிணையங்களை அவர் கொள்வனவுசெய்த அல்லது விற்பனைசெய்த நோக்கம் அல்லது நோக்கங்கள், அத்தகைய பிணையங்களுக்கான சந்தை அல்லது அவற்றின் விலை தொடர்பில் பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் தோற்றத்தை உருவாக்கும் நோக்கமாக இருக்கவில்லை, அல்லது அந்நோக்கத்தை உள்ளடக்கவில்லையென அவ்வாள் நிலைநாட்டினால் அது ஓர் எதிர்வாதமாதல் வேண்டும்.

(5) மூன்றாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக-

(அ) எந்த நோக்கத்திற்காக அவர் அச்செயலைச் செய்துள்ளாரோ அந்த நோக்கம், பரிவர்த்தனை ஒன்றில் அல்லது ஓர் அங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநரினால் தொழிற்படுத்தப்பட்ட ஓர் இயங்கு தளத்தின்மீது முனைப்பான வியாபாரஞ்செய்தலிலான பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் தோற்றத்தை உருவாக்கும் நோக்கமாக இருக்கவில்லை அல்லது அதனை உட்படுத்தவில்லை எனவும்; அத்துடன்

(ஆ) பரிவர்த்தனை ஒன்றில் அல்லது ஓர் ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநரினால் தொழிற்படுத்தப்பட்ட இயங்குதளம் ஒன்றில் முனைப்பான வியாபாரஞ் செய்தலிலான பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் தோற்றமொன்றை அவர் உருவாக்கி இருந்தாலுஞ்சரி அல்லது இல்லாவிட்டாலுஞ்சரி, அவர் அஜாக்கிரதையாகச் செயலாற்றவில்லை எனவும், நிலைநாட்டுவதற்கு ஆளொருவருக்கு இது ஓர் எதிர்வாதமாகவுள்ளது.

(6) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ஆளொருவர் அல்லது அத்தகைய ஆளுடன் இணைந்துள்ள ஆளொருவர் கொள்வனவுக்கு முன்னர் அல்லது விற்பனைக்கு முன்னர் பிணையங்களில் அக்கறை கொண்டு இருந்துள்ளார் எனின், அத்துடன் கொள்வனவின் பின்னர் அல்லது விற்பனையின் பின்னர் அத்தகைய பிணையங்களில் அக்கறையைத் தொடர்ந்து கொண்டுள்ளார் எனின், பிணையங்களின் கொள்வனவு அல்லது விற்பனை, பயனுகர் சொத்தாண்மையிலான மாற்றம் ஒன்றிற்கு உட்படாது.

(7) பிணையங்களின் விற்பனை அல்லது கொள்வனவு பற்றிய கொடுக்கல்வாங்கல் ஒன்றிற்கு (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியிலான குறிப்பீடு பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:-

(அ) பிணையங்களை விற்பனை செய்வதற்கான அல்லது கொள்வனவுசெய்வதற்கான கொடைமுனைவு ஒன்றைச் செய்தல்; அத்துடன்

(ஆ) பிணையங்களை விற்பனை செய்வதற்கான அல்லது கொள்வனவு செய்வதற்கான கொடைமுனைவைச் செய்வதற்கு ஆளொருவரை வெளிப்படையாக அல்லது உட்கிடையாகக் கோருகின்றதான கோரிக்கை ஒன்றைச் செய்தல்.

129. (1) ஆளொருவர் கம்பெனியின் அல்லது தொடர்புபட்ட கம்பெனியின் பிணையங்களைக் கொள்ளுவதற்கு அல்லது கையுதிர்ப்பதற்கு அத்தகைய ஆள் உண்மையாகத் தூண்டப்பட்டாலுஞ்சரி இல்லாவிட்டாலுஞ்சரி வேறு ஆட்களைத் தூண்டும் நோக்கத்திற்காக ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட பரிவர்த்தனையொன்றின்மீது அல்லது ஓர் ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநரினால் தொழிற்படுத்தப்பட்ட ஓர் இயங்கு தளத்தின்மீது வியாபாரஞ்செய்யப்பட்ட அக்கம்பெனியின் பிணையங்களின் விலையை அல்லது தொகையை, பின்வருவன வற்றிற்குச் செயற்கையான முறையில் பயன்கொடுக்கும் அல்லது பயன்கொடுக்கும் சாத்தியங்கொண்ட கொடுக்கல்வாங்கல்களாகவுள்ள கம்பெனி ஒன்றின் பிணையங்களிலான ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கொடுக்கல் வாங்கல்களை ஒன்றில் நேரடி யாகவோ அல்லது நேரடியாக வல்லாமலோ நிறைவேற்றுதலாகாது அல்லது நிறைவேற்றுவதில் சம்பந்தப்படுதலாகாது:-

(அ) உயர்த்துதல்;

(ஆ) குறைத்தல்; அல்லது

(இ) நிறுவுதல், நிர்ணயித்தல், பேணுதல் அல்லது நிலைப்படுத்தல்.

(2) ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட பரிவர்த்தனையொன்றின்மீது அல்லது ஓர் அங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநரினால் தொழிற்படுத்தப்பட்ட ஓர் இயங்குதளத்தின்மீது வியாபாரஞ்செய்யப்பட்ட கம்பெனி ஒன்றின் பிணையங்கள் தொடர்பான கொடுக்கல்வாங்கல் ஒன்றிற்கு இப்பிரிவிலுள்ள குறிப்பீடு பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது -

(அ) கம்பெனியின் அத்தகைய பிணையங்களை விற்பனை செய்வதற்கு அல்லது கொள்வனவு செய்வதற்குக் கொடைமுனைவு ஒன்றைச் செய்தல்; அத்துடன்

(ஆ) கம்பெனியின் அத்தகைய பிணையங்களை விற்பனை செய்வதற்கான அல்லது கொள்வனவு செய்வதற்கான கொடைமுனைவைச் செய்வதற்கு ஆளொருவரை வெளிப்படையாக அல்லது உட்கிடையாகக் கோருகின்றதான கோரிக்கை ஒன்றைச் செய்தல்.

130. ஆளொருவர், முக்கியமான விபரமொன்றில் பொய்யானதாக அல்லது பிழைவழியுய்ப்பதாக உள்ளதும் -

(அ) கூற்று அல்லது தகவலின் செம்மையைச் சரிபார்ப்பதற்கு நியாயமான கவனம் எடுக்காமல்; அல்லது

(ஆ) கூற்று அல்லது தகவல் ஆனது முக்கியமான விபரம் ஒன்றில் பொய்யானது அல்லது பிழைவழியுய்க்கின்றதென அறிந்திருப்பின் அல்லது அறிந்திருக்க வேண்டுமென நியாயமானமுறையில் எதிர்பார்க்கப்பட்டிருப்பின்,

ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட பரிவர்த்தனையொன்றின் மீது அல்லது ஓர் அங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற் படுத்துநரினால் தொழிற்படுத்தப்பட்ட ஓர் இயங்குதளத்தின்மீது வியாபாரஞ்செய்யப்பட்ட பிணையங்களின் சந்தைவிலையை அல்லது தொகையை

உயர்த்துகின்ற, குறைக்கின்ற, பேணுகின்ற அல்லது நிலைப்படுத்துகின்ற பயனைக்கொண்டிருக்கும் சாத்திய முள்ளதுமான கூற்றை அளித்தல் அல்லது தகவலைப் பரப்புதல் ஆகாது.

131. (1) ஆளொருவர் ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட பரிவர்த்தனையொன்றின்மீது அல்லது ஓர் ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநரினால் தொழிற்படுத்தப்பட்ட ஓர் இயங்குதளத்தின்மீது வியாபாரஞ்செய்யப்பட்ட பிணையங்களில் வியாபாரஞ்செய்வதற்கு வேறோர் ஆளைப் பின்வரும் காரணங்கள் மூலம் தூண்டுதலோ அல்லது தூண்டுவதற்கு முயற்சித்தலோ ஆகாது:-

(அ) அவர் பிழைவழியுய்ப்பதாக, பொய்யானதாக அல்லது வஞ்சகமானதாக உள்ளதென அறிந்துள்ள ஏதேனும் கூற்றை அளிப்பதன்மூலம் அல்லது வெளியிடுவதன் மூலம் அல்லது ஏதேனும் எதிர்வுகூறலைச் செய்வதன் மூலம்;

(ஆ) முக்கிய நிகழ்வுகளை ஏதேனும் நேர்மையற்ற முறையில் மறைத்துவைப்பதன்மூலம்;

(இ) பிழைவழியுய்ப்பதாக, பொய்யானதாக அல்லது வஞ்சகமானதாகவுள்ள ஏதேனும் கூற்றை அல்லது எதிர்வுகூறலை நேர்மையற்ற முறையில் அல்லது வேறுவகையில் அஜாக்கிரதையாக அளிப்பதன்மூலம் அல்லது வெளியிடுவதன்மூலம்; அல்லது

(ஈ) முக்கியமான விபரமொன்றில் பொய்யானதாகவுள்ளது அல்லது பிழைவழியுய்க்கின்றது என அவர் அறிந்துள்ள தகவலை ஏதேனும் பொறிமுறை, இலத்திரனியல் அல்லது வேறு உபாயத்தில் பதிவுசெய்வதன்மூலம், அல்லது களஞ்சியப்படுத்துவதன்மூலம் அல்லது அதனைப் பயன்படுத்துவதன்மூலம்.

(2) ஓராம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக, அதன்கண் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆள், தகவலானது பதிவுசெய்யப்பட்டபோது அல்லது களஞ்சியப்படுத்தப்பட்டபோது அத்தகவலானது வேறு எவரேனும் ஆளிற்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கக்கூடுமென நம்புவதற்கான நியாயமான ஏதுக்கள் எவற்றையும் அத்தகைய ஆள் கொண்டிருக்கவில்லை என நிலைநாட்டினால் இது ஓர் எதிர்வாதம் ஆதல் வேண்டும்.

132. ஆளொருவர் ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட பரிவர்த்தனையொன்றின்மீது அல்லது ஓர் ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநரினால் தொழிற்படுத்தப்பட்ட ஓர் இயங்குதளத்தின்மீது வியாபாரஞ்செய்யப்பட்ட எவையேனும் பிணையங்களின் ஒப்பப்பணம், கொள்வனவு அல்லது விற்பனை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ -

(அ) மோசடிக்கான ஏதேனும் உபாயத்தை, திட்டத்தை அல்லது யுக்தியைப் பயன்படுத்தலாகாது;

(ஆ) எவரேனும் ஆள்மீது மோசடி ஒன்றாக அல்லது ஏமாற்றாகத் தொழிற்படுகின்ற அல்லது தொழிற்படக்கூடியதான ஏதேனும் செயலில், செயல்முறையில் அல்லது தொழில் நெறியில் ஈடுபடுதல் ஆகாது; அல்லது

(இ) முக்கியமான நிகழ்வொன்று பற்றிய ஏதேனும் பொய்யான கூற்றை அளித்தலோ அல்லது அத்தகைய கூற்றைப் பொய்யானதாக அல்லது பிழைவழியுய்ப்பதாகச் செய்வதனை விளைவிக்கின்ற முக்கிய நிகழ்வு ஒன்றை வெளிப்படுத்தாது விட்டுவிடுதலோ ஆகாது.

## அத்தியாயம் 2

## உள்ளுறைபவர் வியாபாரம்

133. இவ்வத்தியாயத்தில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டாலொழிய, “தகவல்” என்பது, பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:-

(அ) பொதுமக்களிற்கு அறியத்தருவதனை அனுமதிப்பதற்குப் போதியளவில் திட்டவட்டமாகவிராத நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனிகள் தொடர்பான தகவலையும்;

(ஆ) ஆளொருவரின் உட்கருதப்பட்ட முடிபுகள் தொடர்பான கருமங்களையும்;

(இ) பின்வருவன தொடர்பிலான பேச்சுவார்த்தைகள் அல்லது முன்மொழிவுகள் தொடர்பான கருமங்களையும் -

(i) வர்த்தகக் கையாளுகைகள்; அல்லது

(ii) பிணையங்களிலான கையாளுகைகள்;

(ஈ) கம்பெனி ஒன்றின் நிதிசார் செயல்நிறைவேற்றுகை தொடர்பான தகவலையும்;

(உ) ஆளொருவர் பிணையங்கள் தொடர்பாக ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட கொடுக்கல்வாங்கல்களை அல்லது உடன்படிக்கைகளைச் செய்துகொள்வதற்கு உத்தேசிக்கின்றார் அல்லது செய்துகொண்டார் என்பது பற்றியும் அல்லது அத்தகைய பிணையங்கள் தொடர்பாக ஒரு கூற்றினைத் தயாரித்துள்ளார் அல்லது கூற்றொன்றை வழங்குவதற்கு உத்தேசிக்கின்றார் என்பது பற்றியுமான தகவலையும்; அத்துடன்

(ஊ) எதிர்காலத்தில் நிறைவேற்றப்படுவதற்கு முடிபு செய்யப்பட்டுள்ள நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியுடன் தொடர்புபட்ட கருமங்கள்.

134. (1) இவ்வத்தியாயத்தில், பொதுவாகக் கிடைக்கக்கூடிய தகவல் என்பது,

(அ) எந்த வகையான பிணையங்களின் விலை அல்லது பெறுமதி அத்தகைய தகவல்மூலம் பாதிக்கப்படக்கூடுமோ அந்த வகையான பிணையங்களில் முதலீடு செய்கின்ற அல்லது வியாபாரஞ்செய்கின்ற நியாயமான ஆளின் கவனத்திற்கு அதனைக் கொண்டுவரும் அல்லது கொண்டுவரக்கூடிய முறை ஒன்றில் வெளியிடப்பட்டுள்ள அல்லது அறியத்தந்துள்ள; அத்துடன்

(ஆ) அது அறியப்பட்டதிலிருந்து அத்தகைய ஆட்களிடையே அது பரப்பப்படுவதற்கு நியாயமான காலப்பகுதியொன்று கழிந்துள்ள, தகவல் எனப் பொருள்படும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தகவல் ஆனது அத்தகைய தகவலிலிருந்து மேற்கொள்ளப்பட்ட அல்லது பெறப்பட்ட அனுமானங்களை அல்லது முடிவுகளைக் கொண்டதான தகவலை உள்ளடக்குகின்றது.

135. இவ்வத்தியாயத்தின் நோக்கத்துக்காக, பிணையங்களின் விலை அல்லது பெறுமதிமீது முக்கியமான விளைவைக் கொண்டிருக்கும் தகவலானது, அத்தகைய பிணையங்களைக் கொள்ளும் அல்லது கையுதிர்க்கும் நோக்குடன் அத்தகைய பிணையங்களைக் கொள்ளுவதா அல்லது கையுதிர்ப்பதா அல்லது அத்தகைய பிணையங்களைக் கொள்ளும் அல்லது கையுதிர்க்கும் நோக்குடன் ஓர் உடன்படிக்கையைச் செய்துகொள்வதா அல்லவா என்பதை முடிபுசெய்வதில் பொதுவாகக் கிடைக்கக்கூடியதாக வருவதன்மீது பிணையங்களில் முதலீடு செய்கின்ற நியாயமான ஆள்மீது செல்வாக்கைச் செலுத்தும் அல்லது செலுத்தக்கூடிய அத்தகைய தகவல் எனப் பொருள்படும்.

136. நூற்றிமுப்பத்தேழாம் பிரிவின் நோக்கங்களுக்காக, முதலாவதாகப் பெயர்குறிப்பிடப்பட்ட ஆள் அத்தகைய வேறு ஆள்மூலம் சொல்லப்பட்ட செயல் அல்லது செய்யாமையைச் செயல் தூண்டினால், அதற்கு ஆலோசனையளித்தால், அதனைத் தூண்டினால், ஊக்குவித்தால் அல்லது பணித்தால், ஆளொருவர் வேறோர் ஆளினால் ஒரு செயல் அல்லது செய்யாமை செய்யப்படுவதனை அல்லது செய்யாதுவிடப்படுவதனைப் பெற்றுக்கொடுப்பதாகக் கருதப்படுகின்றார்.

137. (1) இப்பாகத்தின் நோக்கத்துக்காக “உள்ளுறைபவர்” என்பது, ஆளொருவர் -

(அ) பொதுவாகக் கிடைக்கக்கூடியதல்லாத தகவலை உடைமையில் கொண்டிருப்பின் அத்துடன் அது பொதுவாகக் கிடைக்கக்கூடியதாக வருவதன்மீது பிணையங்களின் விலை அல்லது பெறுமதிமீது முக்கியமான விளைவைக் கொண்டிருக்குமென நியாயமான ஆளொருவர் எதிர்பார்ப்பின்; அத்துடன்

(ஆ) தகவலானது பொதுவாகக் கிடைக்கக்கூடியதல்ல என அறிந்திருப்பின் அல்லது அறிவதற்கு நியாயமான முறையில் எதிர்பார்க்கப்படக்கூடியதாக இருப்பின், அத்தகைய ஆள் முறையான கம்பெனியுடன் சம்பந்தப்பட்டிருந்தாலுஞ்சரி இல்லாவிட்டாலுஞ்சரி அந்த ஆள் ஒருவர் எனப் பொருள்படும்.

(2) ஓராம் உட்பிரிவிலான தகவல் எந்தப் பிணையங்களுடன் தொடர்புறுகின்றதோ அந்தப் பிணையங்கள் தொடர்பில் முதல்வராகவோ அல்லது முகவராகவோ உள்ளுறைபவர் ஒருவர் -

(அ) அத்தகைய பிணையங்களை விற்பனைசெய்தலோ அல்லது வாங்குதலோ அல்லது விற்பனை செய்வதற்காக அல்லது கொள்வனவு செய்வதற்காக உடன்படிக்கை ஒன்றை அல்லது கொடுக்கல்வாங்கலொன்றைச் செய்துகொள்ளுதலோ ஆகாது. அல்லது

(ஆ) அத்தகைய பிணையங்களின் கொள்ளுதலை அல்லது கையுதிர்ப்பை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் பெறுதலோ, அல்லது அவற்றைக் கொள்ளும் அல்லது கையுதிர்க்கும் நோக்குடன் உடன்படிக்கை ஒன்றை அல்லது கொடுக்கல்வாங்கலொன்றைச் செய்து கொள்ளுதலோ ஆகாது.

(3) எந்தப் பிணையங்களுடன் (1) ஆம் உட்பிரிவிலான தகவல் தொடர்புபடுகின்றதோ அந்தப் பிணையங்களிலான வியாபாரஞ் செய்தல் பரிவர்த்தனையின் பிணையங்கள் சந்தை ஒன்றின்மீது அல்லது ஓர் ஏற்றங்கீகரிக்கப்பட்ட சந்தைத் தொழிற்படுத்துநரினால் தொழிற்படுத்தப்பட்ட ஓர் இயங்குதளத்தின்மீது அனுமதிக்கப்படுமிடத்து, உள்ளுறைபவர் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட தகவலை அறிவித்தல் ஆகாது அல்லது வேறு ஆள் ஒருவர் பின்வருமாறு இருக்கக்கூடியவராக அல்லது இருக்கக்கூடிய சாத்தியமுடையவராக இருக்கக்கூடுமென அந்த உள்ளுறைபவர் அறிந்திருப்பின் அல்லது அறிந்திருப்பாரென நியாயமான முறையில் எதிர்பார்க்கப்படக் கூடியதாக இருப்பின், அத்தகைய தகவலை வேறோர் ஆளுக்கு அறிவிக்கப்படச் செய்வித்தல் ஆகாது:-

(அ) ஓராம் உட்பிரிவிலான தகவல் எந்தப் பிணையங்கள் தொடர்பானதோ அந்த எவையேனும் பிணையங்களைக் கொள்ளுதல், கையுதிர்த்தல் அல்லது கொள்ளும் அல்லது கையுதிர்க்கும் நோக்குடன் உடன்படிக்கையைச் செய்துகொள்ளுதல்; அல்லது

(ஆ) ஓராம் உட்பிரிவிலான தகவல் எந்தப் பிணையங்கள் தொடர்பானதோ அந்த எவையேனும் பிணையங்களைப் பெறுதல் அல்லது கொள்ளும் அல்லது கையுதிர்க்கும் நோக்குடன் மூன்றாம் திறத்தவர் ஒருவரைக் கொள்ளும்படி, கையுதிர்க்கும்படி அல்லது உடன்படிக்கையைச் செய்துகொள்ளும்படி பணித்தல்.

138. (1) இவ்வத்தியாயத்தில் கம்பெனியொன்று -

(அ) கம்பெனியின் அலுவலரொருவர் -

(i) உடைமையில் கொண்டிருப்பதும் மற்றும் அக்கம்பெனியின் அலுவலரொருவராகத் தனது கடமைகளைப் புரிகையில் அவரது உடைமையில் வந்துள்ளதுமான ஏதேனும் தகவலை; அல்லது

(ii) அவர் கம்பெனியின் அலுவலராக இருப்பதன் காரணத்தால் அவர் அறிகின்ற அல்லது அறிவதற்கு நியாயமான முறையில் எதிர்பார்க்கப்படக்கூடிய ஏதேனும் தகவலை;

(ஆ) (i) கம்பெனியின் அலுவலரொருவர் தகவலை உடைமை கொண்டிருப்பதன் காரணத்தினால் உள்ளுறைபவர் ஒருவராக இருக்குமிடத்து;

(ii) எந்தப் பிணையங்கள் தொடர்பாக அலுவலர் ஒருவர் உள்ளுறைபவர் ஒருவராக இருக்கின்றாரோ அப்பிணையங்களைக் கொள்ளுதலில் அல்லது கையுதிர்த்தலில் அல்லது அத்தகைய பிணையங்களைக் கொள்ளுதலுக்கு அல்லது கையுதிர்த்தலுக்கு உடன்படிக்கை ஒன்றைச் செய்வதில், அத்தகைய பிணையங்களின் கொள்ளுதலுக்கு அல்லது கையுதிர்த்தலுக்கு வேறு ஓர் ஆளைப் பயன் படுத்துவதில் அல்லது அவ்வாறு செய்வதற்கு உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்ளுதலில் அல்லது 137 ஆம் பிரிவின் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளில் குறிப்பீடுசெய்யப்படும் சூழ்நிலைகளில் அத்தகவலைத் தெரிவிப்பதில் முதலாவதாகக் குறிப்பீடுசெய்யப்பட்ட கம்பெனியின் முடிபில், கொடுக்கல்வாங்கலில் அல்லது உடன்படிக்கையில் சம்பந்தப்படுகின்றவிடத்து; அல்லது

(iii) தகவலானது உண்மையாக அவ்வாறு தெரிவிக்கப் படவில்லை என எண்பிக்கப்பட்டாலொழிய, அத்தகையவராகத் தனது பதவியில் செயலாற்று கின்ற முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட கம்பெனியின் வேறோர் அலுவலருக்குத் தகவலை அவ்வலுவலர் தெரிவிப்பார் என எதிர்பார்ப்பது நியாயமாக உள்ளவிடத்து,

கம்பெனியின் அலுவலர் உடைமை கொண்டிருக்கின்றதும் முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட கம்பெனியின் தொடர்புபட்ட கம்பெனி ஒன்றின் அலுவலர் ஒருவராகத் தமது கடமைகளை புரிகையில் தனது உடைமையில் வந்ததுமான, ஏதேனும் தகவலை உடைமை கொண்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

(2) இப்பிரிவில் "தகவல்" என்பது, கம்பெனியொன்று உடைமை கொண்டிருப்பதாகக் கருதப்படுகின்ற தகவலைக் குறிப்பீடுசெய்கின்றது என்பதுடன் "உள்ளூறைபவர்" என்பது, அத்தகைய தகவலை உடைமை கொண்டிருக்கின்ற ஆள் ஒருவர் எனப் பொருள்படும்.

(3) (அ) கொடுக்கல்வாங்கலை அல்லது உடன்படிக்கையைச் செய்துகொள்ளுவதற்கான முடிபு, தகவலை உடைமை கொண்டிருக்கின்ற கம்பெனியின் அலுவலர் ஒருவர் தவிர்ந்த வேறு ஆள் ஒருவரினால் அல்லது ஆட்களினால் கம்பெனி சார்பில் எடுக்கப்பட்டது என;

(ஆ) (i) தகவலானது, கொடுக்கல்வாங்கலில் அல்லது உடன்படிக்கையில் சம்பந்தப்பட்ட அல்லது அதனைச் செய்துகொள்வதற்கு அல்லது அதில் சம்பந்தப்படுவதற்கு முடிபுசெய்த ஆளொருவருக்கு அல்லது ஆட்களுள் ஒருவருக்குத் தெரிவிக்கப்படவில்லை என;

(ii) கொடுக்கல்வாங்கலை அல்லது உடன்படிக்கையைச் செய்துகொள்வதற்கான அல்லது அவற்றில் சம்பந்தப்படுவதற்கான முடிபு தொடர்பிலான மதியுரை எதுவும் தகவலை உடைமையில் கொண்டிருக்கின்ற ஆளினால் அவ்வாளுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை என; அல்லது

(iii) தகவலை உடைமை கொண்டிருக்கின்ற ஆள் கொடுக்கல்வாங்கலை அல்லது உடன்படிக்கையைச் செய்துகொள்வதற்கான அல்லது அவற்றில் சம்பந்தப்படுவதற்கான முடிபில் சம்பந்தப்பட்டிருக்கமாட்டார் என உறுதிப்படுத்துவதற்கு நியாயமாக எதிர்பார்க்கப்பட்ட ஒழுங்கேற்பாடுகளைக் கம்பெனியானது தொழிற்பாட்டில் வைத்திருந்தது என; அத்துடன்

(இ) தகவலானது தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை, அத்தகைய மதியுரை எதுவும் வழங்கப்படவில்லை அத்துடன் தகவலை உடைமை கொண்டிருக்கின்ற ஆள் கொடுக்கல்வாங்கலை அல்லது உடன்படிக்கையைச் செய்துகொள்வதற்கான அல்லது அவற்றில் சம்பந்தப்படுவதற்கான முடிபில் சம்பந்தப்பட்டிருக்கவில்லை என, அக்கம்பெனி எண்பித்தால், ஒரு கொடுக்கல்வாங்கலை அல்லது உடன்படிக்கையைச் செய்துகொண்டதன்மூலம் 137 ஆம் பிரிவின் (2) ஆம் அல்லது (3) ஆம் உட்பிரிவுகளை மீறியமைக்காகக் குற்றஞ்சாட்டப்பட்ட கம்பெனியொன்றுக்கு அது எதிர்வாதமொன்றாதல் வேண்டும்.

139. (1) இவ்வத்தியாயத்தில், பங்காண்மையின்பங்காளர் ஒருவர் -

(அ) பங்காளர் ஒருவர் தகவலை உடைமையில் கொண்டிருப்பின் அத்துடன் அது பங்காண்மையின் பங்காளர் ஒருவராக அவரது தன்மையில் வேறொரு பங்காளரின் உடைமையினுள் வந்திருப்பின்;

(ஆ) பங்காண்மையின் ஊழியர் ஒருவர் அத்தகைய தகவலை உடைமையில் கொண்டிருப்பின் அத்துடன் அது அவரது கடமைகளைப் புரிகையில் ஊழியரது உடைமையினுள் வந்திருப்பின்; அல்லது

(இ) பங்காண்மை ஒன்றின் பங்காளர் ஒருவர் அல்லது ஊழியர் ஒருவர் அத்தகவலை அறிந்துள்ள அல்லது உடைமையில் வைத்திருக்கின்ற வேறொரு பங்காளர் அல்லது ஊழியர் காரணமாக ஏதேனும் கருமம் அல்லது காரியத்தை அறிந்திருப்பின் அல்லது அறிவதற்கு நியாயமான முறையில் எதிர்பார்க்கப்படக்கூடியதாகவிருப்பின், முரணாக எண்பிக்கப்பட்டாலொழிய, பங்காண்மையின் ஒவ்வொரு பங்காளரும் அக்கருமத்தை அல்லது காரியத்தை அறிந்துள்ளார் என அல்லது அறிவதற்கு நியாயமானமுறையில் எதிர்பார்க்கப்படக்கூடியதாக இருக்கும் என ஊகிக்கப்படின், ஏதேனும் தகவலை உடைமையில் கொண்டிருப்பவராகக் கருதப்படுகின்றார்.

(2) நூற்றிமுப்பத்தேழாம் பிரிவின் (2) ஆம் அல்லது (3) ஆம் உட்பிரிவுகளை மீறிக் கொடுக்கல்வாங்கலொன்றைச் செய்துகொண்டுள்ளதெனக் குற்றஞ்சாட்டப்பட்டவொரு பங்காண்மை-

(அ) கொடுக்கல்வாங்கலை அல்லது உடன்படிக்கையைச் செய்துகொள்வதற்கான முடிபு பங்காண்மை சார்பில் பின்வருவோரினால் எடுக்கப்பட்டதென-

(i) தகவலை உடைமையில் கொண்டிராத பங்காளர் ஒருவரினால்; அல்லது

(ii) தகவலை உடைமையில் கொண்டிராத பங்காண்மையின் ஊழியர் ஒருவரினால்;

(ஆ) பின்வருவனவற்றை உறுதிப்படுத்துவதற்கு நியாயமான முறையில் எதிர்பார்க்கப்படக்கூடிய உடன்படிக்கைகளைப் பங்காண்மை அந்நேரத்தில் கொண்டிருந்ததென:-

(i) சம்பந்தப்பட்ட கொடுக்கல்வாங்கலில் அல்லது உடன்படிக்கையில் சம்பந்தப்பட்டிருந்த அல்லது அதனைச் செய்துகொள்வதற்கு உட்படுத்தப்பட்ட பங்காளருக்கு அல்லது ஊழியருக்குத் தகவலானது அறிவிக்கப்பட்டிருக்கவில்லை எனவும்;

(ii) கொடுக்கல்வாங்கலை அல்லது உடன்படிக்கையைச் செய்துகொள்வதற்கான முடிபு தொடர்பில் மதியுரை எதுவும் தகவலை உடைமையில் கொண்டிருந்த அப்பங்காளருக்கு அல்லது ஊழியருக்கு அளிக்கப்பட்டிருக்கவில்லை எனவும்; அல்லது

(iii) தகவலை உடைமையில் கொண்டிருந்த பங்காளர் அல்லது ஊழியர் கொடுக்கல்வாங்கலை அல்லது உடன்படிக்கையைச் செய்துகொள்வதற்கான அல்லது சம்பந்தப்பட்டிருப்பதற்கான முடிபில் சம்பந்தப்படாதிருப்பார் எனவும்; அத்துடன்

(இ) தகவலானது அறிவிக்கப்படவில்லை, மதியுரை எதுவும் அளிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் தகவலை உடைமையில் கொண்டிருந்த பங்காளர் அல்லது ஊழியர் கொடுக்கல்வாங்கலை அல்லது உடன்படிக்கையைச் செய்துகொள்வதற்கான அல்லது அவற்றில் சம்பந்தப் படுவதற்கான முடிபில் சம்பந்தப்பட்டிருக்கவில்லை எனவும், எண்பிப்பது அதற்கு எதிர்வாதமொன்றாதல் வேண்டும்.

(3) ஒரு பங்காளர், பங்காண்மையின் வேறொரு பங்காளரின் அல்லது ஊழியரின் உடைமையில் இருக்கின்றதான தகவலைக் கொண்டிருப்பதாகக் கருதப்படுகின்ற காரணத்தினால் மட்டும் அப்பங்காண்மையின் சார்பில் தவிர வேறுவகையில் அவ்வுட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட கொடுக்கல்வாங்கலை அல்லது உடன்படிக்கையைச் செய்துகொள்வதன்மூலம் 137 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை பங்காண்மை ஒன்றின் பங்காளர் ஒருவர் மீறுவதில்லை.

(4) இப்பிரிவில் “தகவல்” என்பது, பங்காண்மையொன்று உடைமையில் கொண்டிருப்பதாகக் கருதப்படுகின்றதும் அத்துடன் அத்தகவலை உடைமையில் கொண்டிருக்கும் பங்காண்மையின் பங்காளர் அல்லது ஊழியர் ஒருவர் உள்ளுறைபவர் ஒருவராக இருக்கின்றவிடத்துமான தகவலைக் குறிப்பீடுசெய்கின்றது.

140. (1) நூற்றிமுப்பத்தேழாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவானது -

(அ) ஒப்புறுதி உடன்படிக்கை அல்லது உப ஒப்புறுதி உடன்படிக்கையைச் செய்துகொள்ளுதல்; அல்லது

(ஆ) பந்தி (அ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட உடன்படிக்கையில் அவ்வாறு செய்வதற்கான கடப்பாட்டின்கீழ் பிணையங்களைக் கொள்ளுதல் தொடர்பில் ஏற்புடையதாதல் ஆகாது.

(2) நூற்றிமுப்பத்தேழாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவானது -

(அ) அத்தகைய பிணையங்கள் தொடர்பாக ஒப்புறுதி உடன்படிக்கை அல்லது உப ஒப்புறுதி உடன்படிக்கையைச் செய்துகொள்வதற்கு; அல்லது

(ஆ) பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட உடன்படிக்கையில் அவ்வாறு செய்வதற்கான கடப்பாட்டின்கீழ் அத்தகைய பிணையங்களைக் கொள்ளுவதற்கு, ஆளொருவரைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காக மட்டும் அவ்வாளுக்குப் பிணையங்கள் தொடர்பாகத் தகவலை அறிவிப்பது தொடர்பில் ஏற்புடையதாதல் ஆகாது.

141. (1) நூற்றிமுப்பத்தேழாம் பிரிவானது, கம்பெனிகளின் ஒழுங்கேற்பாட்டுத் திட்டங்கள், புனர்நிருமாணம் மற்றும் கம்பெனிகளைக் கையேற்றல் தொடர்பான வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படுகின்றனவான பிணையங்களின் கொள்ளல் அல்லது கையுதிர்த்தல் அல்லது தகவல் அறிவிப்பு என்பவற்றிற்கு ஏற்புடையதாதல் ஆகாது.

(2) நூற்றிமுப்பத்தேழாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவானது, பிணையங்களைக் கொள்ளுதல் அல்லது கையுதிர்த்தல் ஆனது உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லம் ஒன்றின் விதிகளுக்கு இணங்கச் செய்யப்படுகின்றவிடத்து, சந்தை ஒப்பந்தம் ஒன்றைத் தீர்ப்பனவுசெய்யும் நோக்கத்திற்காக அல்லது சந்தை ஒப்பந்தம் ஒன்றைத் தீர்ப்பனவுசெய்வது தொடர்பாகப் எவையேனும் வழக்குநடவடிக்கைகள் அல்லது வேறு வழக்குத் தொடர்பாகப் பிணையங்களைக் கொள்ளுகின்ற அல்லது கையுதிர்க்கின்ற தீர்வக இல்லத்திற்கு ஏற்புடையதாதல் ஆகாது.

(3) நூற்றிமுப்பத்தேழாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவானது உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லம் ஒன்றிலிருந்தான அறிவுறுத்தலின்மீது பரிவர்த்தனையானது அல்லது மத்திய வைப்பகமானது செயலாற்றுகின்றவிடத்து பிணையங்களின் விற்பனை அல்லது கொள்வனவு தொடர்பில் அப்பரிவர்த்தனைக்கு ஏற்புடையதாதலாகாது.

142. (1) கம்பெனி, பிணையங்கள் தொடர்பில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கொடுக்கல்வாங்கல்களை அல்லது உடன்படிக்கைகளைச் செய்துகொள்வதற்கு முன்மொழிவு செய்கின்றதென அல்லது முன்னதாகச் செய்துள்ளது என அக்கம்பெனி அறிந்துள்ளது என்ற காரணத்தினால் மட்டும் கம்பெனியின் அத்தகைய பிணையங்கள் தவிர்ந்த பிணையங்கள் தொடர்பாகக் கொடுக்கல்வாங்கலை அல்லது உடன்படிக்கையைச் செய்துகொள்வதன்மூலம் 137 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை மீறுவதில்லை.

(2) மூன்றாம் உட்பிரிவிற்கு அமைய, கம்பெனியொன்று, பிணையங்கள் தொடர்பாக ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கொடுக்கல்வாங்கல்களை அல்லது உடன்படிக்கைகளைச் செய்துகொள்வதற்கு முன்மொழிவு செய்கின்றது அல்லது முன்னதாகச் செய்துகொண்டுள்ளது என அக்கம்பெனியின் அலுவலர் அறிந்துள்ளார் என்ற காரணத்தினால் மட்டும் அக்கம்பெனியின் பிணையங்கள் தவிர்ந்த அத்தகைய வேறு பிணையங்கள் தொடர்பாகக் கொடுக்கல்வாங்கலை அல்லது உடன்படிக்கையைச் செய்துகொள்வதன்மூலம் 137 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை மீறுவதில்லை.

(3) இரண்டாம் உட்பிரிவானது, கம்பெனியின் அலுவலர் தமது கடமைகளைப் புரிகையில் அவ்வுட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட கருமங்கள் பற்றி அறியவந்திருந்தாலொழிய ஏற்புடையதாதல் ஆகாது.

(4) ஐந்தாம் உட்பிரிவிற்கு அமைய, ஆளொருவர், பிணையங்கள் தொடர்பாக ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கொடுக்கல் வாங்கல்களை அல்லது உடன்படிக்கைகளைச் செய்துகொள்வதற்கு முன்மொழிகின்றது என அல்லது முன்னரே செய்துகொண்டுள்ளது என அவ்வாள் அறிந்துள்ளார் என்ற காரணத்தினால் மட்டும் அக்கம்பெனியின் அப்பிணையங்கள் தவிர்ந்த வேறு பிணையங்கள் தொடர்பாகக் கம்பெனி ஒன்றின் சார்பில் கொடுக்கல்வாங்கல் ஒன்றை அல்லது உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்வதன்மூலம் 137 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை மீறுவதில்லை.

(5) நான்காம் உட்பிரிவானது முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட கம்பெனியின் அலுவலராகத் தமது கடமைகளைப் புரிகையில் அல்லது முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட கம்பெனியில் முகவர் ஒருவராகச் செயலாற்றுகையில் அவ்வாள் குறிப்பீடுசெய்யப்பட்ட கருமங்கள் பற்றி அறிய வந்தாலொழிய ஏற்புடையதாதல் ஆகாது.

143. தனியாள் ஒருவர், பிணையங்கள் தொடர்பாக ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கொடுக்கல்வாங்கல்களை அல்லது உடன்படிக்கைகளைத் தாம் செய்துகொள்வதற்கு உத்தேசிக்கின்றார் அல்லது முன்னரே செய்துகொண்டுள்ளார் எனத் தாம் அறிந்துகொள்வதன் காரணமாக மட்டுமே அப்பிணையங்கள் தொடர்பாகக் கொடுக்கல்வாங்கலை அல்லது உடன்படிக்கையைச் செய்துகொள்வதன்மூலம் 137 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை மீறுவதில்லை.

144. (1) முதலீட்டாளர்கள் அல்லது அதனது பிரதிநிதி சார்பில் பிணையங்களை வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல் என்னும் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற சந்தை இடைத்தரகர் ஒருவர் -

(அ) கொடுக்கல்வாங்கல் அல்லது உடன்படிக்கையானது வேறோர் ஆளினால் குறித்த அறிவுறுத்தல் ஒன்றின்கீழ் செய்துகொள்ளப்பட்டிருப்பின் அத்துடன் பிணையங்களை வாங்குகின்ற மற்றும் விற்பனை செய்கின்ற தொழிலைக் கொண்டு நடாத்தும் சந்தை இடைத்தரகர் ஒருவரினால் அல்லது அதன் பிரதிநிதி ஒருவரினால் பரிந்து கேட்கப்படவில்லை எனின்;

(ஆ) பிணையங்களை வாங்குகின்ற மற்றும் விற்பனை செய்கின்ற தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற சந்தை இடைத்தரகர் அல்லது அதன்

பிரதிநிதி அக்கொடுக்கல்வாங்கல் அல்லது உடன்படிக்கை தொடர்பில் வேறு ஆளிற்கு ஏதேனும் மதியுரையை வழங்காதிருந்துள்ளார் எனின் அல்லது கொடுக்கல்வாங்கல் அல்லது உடன்படிக்கையைச் செய்துகொள்வதற்கான வேறு ஆளினுடைய அறிவுறுத்தல்களைப் பெறுவதற்கு வேறுவகையில் நாடாதிருந்துள்ளார் எனின்; அத்துடன்

(இ) வேறு ஆள் பிணையங்களை வாங்குகின்ற அல்லது விற்பனை செய்கின்ற தொழிலைக் கொண்டு நடாத்தும் சந்தை இடைத்தரகருடன் அல்லது அதன் பிரதிநிதியுடன் இணைந்திருக்கவில்லை எனின், பரிவர்த்தனையின் பிணையங்கள் சந்தைமீது கொடுக்கல்வாங்கல் அல்லது உடன்படிக்கையைச் செய்துகொண்டுள்ள அந்த வேறு ஆளுக்கு முகவராகக் கொடுக்கல்வாங்கலை அல்லது உடன்படிக்கையைச் செய்து கொள்வதன்மூலம் 137 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை மீறுதலாகாது.

(2) இப்பிரிவிலுள்ளது எதுவும், முதல்வர் என்ற அவரது தன்மையில் பிணையங்களை வாங்குகின்ற மற்றும் விற்பனை செய்கின்ற தொழில் தொடர்பில் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவு தொடர்பாகச் சந்தை இடைத்தரகரின் பொறுப்பைப் பாதித்தலாகாது.

145. நூற்றிமுப்பத்தேழாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவானது எந்தக் கூட்டு முதலீட்டுத் திட்டத்திற்குக் கூட்டு முதலீட்டுத்திட்டக் கூறுகள் தொடர்புறுகின்றனவோ அந்தக் கூட்டு முதலீட்டுத் திட்டத்தின் எவையேனும் பொறுப்புக்களைக் கழித்தும் அத்துடன் கூட்டு முதலீட்டுத் திட்டக் கூறுகளைக் கொள்வனவு செய்வதற்கான ஏதேனும் நியாயமான விதிப்பனவைக் கழித்தும் சொத்துக்களின் ஆகக்குறைந்த பெறுமதியைக் குறிப்பீடுசெய்வதன்மூலம் நியாயமானமுறையில் செயல்முறைக்குகந்ததாகும்வரை கணக்கிடப்படவேண்டுமென நம்பிக்கைப்பொறுப்புறுதியினால் தேவைப்படுத்துகின்றதான விலை ஒன்றில் நம்பிக்கைப் பொறுப்புறுதியில் உள்ளடக்கப்பட்ட அல்லது உள்ளடக்கப்படுவதாகக் கருதப்பட்ட கட்டுறுதியினைத் திரும்ப வாங்குவதற்கு இணங்க, கூட்டு முதலீட்டு திட்டம் தொடர்பாக நம்பிக்கைப் பொறுப்புறுதி ஒன்றின்கீழ் நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவரினாலான மீட்புத் தொடர்பில் ஏற்புடையதாதல் ஆகாது.

146. (1) ஆளொருவர் -

(அ) கொடுக்கல்வாங்கல் அல்லது உடன்படிக்கையைச் செய்துகொள்வதற்கு முன்னர் அத்தகவலைக் கொடுக்கல்வாங்கல் அல்லது உடன்படிக்கைக்கான வேறு திறத்தவர் அறிந்திருப்பின் அல்லது நியாயமான முறையில் அறிந்திருக்கக்கூடியதாக இருந்திருப்பின்; அத்துடன்

(ஆ) அவ்வாள் -

(i) தகவலானது பொதுவாகக் கிடைக்கக்கூடியதாக வரும்போது அது கொண்டிருப்பதற்குச் சாத்தியமாகவிருக்கக்கூடிய பயன்காரணமாகத் தனக்காக அல்லது வேறு எவரேனும் ஆளுக்காக, விடயத்திற்கேற்ப, பிணையங்களின் விலையில் அல்லது பெறுமதியில் தேறிப்பெறப்படாத ஈட்டுகை அல்லது தேறிப்பெறப்படாத நட்டத் தவிர்ப்பு உட்பட அவர் ஏதேனும் ஈட்டுகையைப் பெற விருக்கும் அல்லது ஏதேனும் நட்டத்தைத் தவிர்க்காதிருக்கும்; அத்துடன்

(ii) பிணையங்களின் கொள்ளல் அல்லது கையுதிர்த்தல் நோக்கமானது தகவலானது பொதுவாகக் கிடைக்கக்கூடியதாக வரும் போது, அது கொண்டிருப்பதற்குச் சாத்தியமாகவிருக்கக்கூடிய பயன்காரணமாகத் தனக்காக அல்லது வேறு எவரேனும் ஆளுக்காக, விடயத்திற்கு ஏற்றவாறு, ஈட்டுகையைப் பெறும் அல்லது நட்டத்தைத் தவிர்க்கும் ஏதேனும் நோக்கத்தை உள்ளடக்காதிருக்கும் அத்தகைய நியதிகளின்மீதும் அத்தகைய சூழ்நிலைகளிலும் அத்தகைய பிணையங்களைக் கொள்ளுதல் செய்தால் அல்லது கையுதிர்த்தால், 137 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவை மீறுவதில்லை.

(2) நூற்றிமுப்பத்தேழாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் மீறுகை ஒன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவர்

(அ) அத்தகவல் 134 ஆம் பிரிவினைப் பின்பற்றி அதனைப் பொதுவாகக் கிடைக்கக்கூடியதாக்குவதற்குச் சாத்திய மான முறை ஒன்றில் அது அறிவிக்கப்படுகின்ற தன்விளைவாக மட்டும் தகவலை அவ்வாறு அறிவிக்கின்ற ஆளின் உடைமைக்கு வந்தது; அல்லது

(ஆ) தகவல் அறிவிக்கப்படுமுன்னர் அத்தகவலை மற்றைய திறத்தவர் அறிந்திருந்தார் அல்லது அறிவதற்கு நியாயமானமுறையில் எதிர்பார்க்கப்படக் கூடியதாக விருந்தது, என எண்பிப்பது எதிர்வாதம் ஒன்றாக இருத்தல் வேண்டும்.

147. (1) பிரிவுகள் 128, 129,130, 131, 132 என்பவற்றை அல்லது 137 ஆம் பிரிவின் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளை மீறுகின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்து மில்லியன் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணத்துக்கு அல்லது பத்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான தவறொன்றைப் புரிவதற்கு உடந்தையாகவிருக்கின்ற அல்லது சதிசெய்கின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் (1) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான அதே முறையில் தண்டிக்கப்படற்பாலவராதலும் வேண்டும்.

148. இப்பாகத்தின்கீழ் புரியப்பட்ட ஒவ்வொரு தவறும் மேல் நீதிமன்றத்தினாலான குற்றப்பத்திரத்தின்மேல் விளங்கப்படற்பாலதாதல் வேண்டும்.

149. இப்பாகத்தின்கீழான தவறொன்று தொடர்பிலான ஒவ்வொரு குற்றவழக்கும் சட்டத்துறைத் தலைமையதிபதியினால் தொடுக்கப்படுதலும் நடாத்தப்படுதலும் வேண்டும்.

150. நூற்றிமுப்பத்தேழாம் பிரிவின்கீழான தவறொன்றுக்காக எவரேனும் ஆளுக்கு எதிராக 152 ஆம் பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் தொடுக்கப்படும் குற்றவழக்கொன்றில் அல்லது வழக்கொன்றில் அந்நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் இருந்திருப்பின் அவை 138 ஆம், 139 ஆம், 140 ஆம் 141 ஆம், 142 ஆம், 143 ஆம், 144 ஆம், 145 ஆம் மற்றும் 146 ஆம் பிரிவுகளின் பயனைக் கொண்டு 137 ஆம் பிரிவின் (2) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின் மீறுகை ஒன்றாக அமைவதிலிருந்து அச்செயலைத் தடைசெய்வதாக இருக்கும் அந்நிகழ்வு அல்லது சூழ்நிலை இல்லாதிருக்கின்றமையை எண்பிப்பது குற்றவழக்குத்தொடுநருக்கு அல்லது ஆணைக்குழுவிற்கு அவசியமாக இருக்காது.

151. (1) இப்பாகத்தின்கீழ் 128 ஆம், 129 ஆம், 130 ஆம், 131 ஆம், 132 ஆம் பிரிவுகளை அல்லது 137 ஆம் பிரிவின் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளை மீறியுள்ள வேறு ஆளின் நடத்தை காரணமாக அல்லது நடத்தைமீதான நம்பிக்கை காரணமாக நட்டம் அல்லது சேதத்தை உறுகின்ற ஆளொருவர், அவ்வேறு ஆள் மீறுகை தொடர்பில் தவறொன்றுக்குக் குற்றஞ்சார்த்தப்பட்டாலுஞ்சரி அல்லது இல்லாவிட்டாலுஞ்சரி அல்லது மீறுகை ஒன்று குற்றவழக்கொன்றில் எண்பிக்கப்பட்டிருந்தாலுஞ்சரி இல்லாவிட்டாலுஞ்சரி அவ்வேறு ஆளுக்கு எதிராக நீதிமன்றத்தில்

வழக்கொன்றைத் தொடுப்பதன் மூலம் நட்டத்தொகையை அல்லது சேதத்தொகையை அறவிடலாம்.

(2) இப்பிரிவானது மீறுகையாக அமைகின்ற நடத்தை தொடர்பில் வேறு ஏதேனும் சட்டத்தின்கீழான ஏதேனும் பொறுப்பைப் பாதித்தலாகாது.

152. (1) எவரேனும் ஆள் 128 ஆம், 129 ஆம், 130 ஆம், 131 ஆம், 132 ஆம் பிரிவுகளை அல்லது 137 ஆம் பிரிவின் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளை மீறியுள்ளார் என ஆணைக்குழுவிற்குத் தோன்றும்போதெல்லாம் மீறுகையின் தன்மையையும் முறையையும் சந்தை மீது அது கொண்டுள்ள தாக்கம் மற்றும் எவரேனும் முதலீட்டாளருக்கு விளைவிக்கப்பட்ட நட்டத்தின் அளவு என்பவற்றையும் கவனத்துட்கொண்டு அவசியமென அது கருதுமிடத்து, அவ்வாளுக்கு எதிராக நீதிமன்றத்தில் குடியியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் தொடுக்கப்பட்ட வழக்குநடவடிக்கையொன்றில் நீதிமன்றம் நிகழ்தகுச் சமநிலைமீது, அவ்வாள் பிரிவுகள் 128, 129, 130, 131, 132 அல்லது 137 ஆம் பிரிவின் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகள் என்பவற்றின் ஏற்பாடுகளை மீறியுள்ளாரெனத் திருப்திப்படின், அவ்வாளுக்கெதிராகப் பின்வருமாறு கட்டளையொன்றை ஆக்கலாம்:-

(அ) அத்தகைய ஆளினால் செய்யப்பட்ட முழுமொத்தப் பணவகையான ஈட்டுகைத்தொகை அல்லது தவிர்க்கப்பட்ட நட்டத்தொகை என்பவற்றின் மும்மடங்குக்குச் சமமான தொகை ஒன்றை ஆணைக்குழுவுக்குச் செலுத்தும்படியும்; அத்துடன்

(ஆ) நீதிமன்றமானது மீறுகையின் கடுமையான தன்மையை அல்லது பாரதூரமான தன்மையைக் கருத்திற்கொண்டு தோதானதெனக் கருதுகின்றவாறு பத்து மில்லியன் ரூபாவிற்குக் குறையாததும் நூறு மில்லியன் ரூபாவை விஞ்சாததுமான தொகை ஒன்றைக் குடியியல் தண்டமாகச் செலுத்தும்படியும்.

(3) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், நீதிமன்றம், (2) ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள கருமங்கள் தொடர்பில் நியாயாதிக்கத்தைப் பிரயோகித்தல் வேண்டுமென்பதுடன் ஆணைக்குழுவினால் கோப்பிடப்பட்ட பிராதொன்று என்றவகையாக (2) ஆம் உட்பிரிவின்கீழான வழக்குநடவடிக்கைகள் தொடுக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் பிராதொன்று என்றவகையாகத் தொடுக்கப்பட்ட கிரமமான வழக்குகள் தொடர்பாக (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(4) இப்பிரிவிலுள்ளதெதுவும், பொறுப்பை ஏற்றோ அல்லது ஏற்காமலோ, ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறாக அத்தகைய ஆளினால் பெறப்பட்ட பணவகையான ஈட்டுகை அல்லது தவிர்க்கப்பட்ட நட்டத்தின் முழுமொத்தத் தொகையின் மும் மடங்குகளுக்குச் சமமானவொரு தொகையைச் செலுத்துவதற்கு எவரேனுமாளுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொள் வதிலிருந்து ஆணைக்குழுவைத் தடுப்பதாகப் பொருள்கொள்ளப் படுதலாகாது.

(5) ஓராம் உட்பிரிவின்கீழான வழக்கொன்றில் அல்லது (4) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட உடன்படிக்கையின் நியதிகளின் படி ஆணைக்குழுவினால் அறவிடப்படும் தொகையொன்று தொடர்பில் அத்தொகையின் ஒவ்வொரு மூன்றிலொரு பங்கும் -

(அ) மீறுகை தொடர்பில் புலனாய்வு மற்றும் வழக்கு நடவடிக்கைகள் பற்றிய எல்லா ஆகுசெலவுகளுக்குமாக ஆணைக்குழுவிற்கு மீளளிக்கப்படுவதற்கு ஏற்புடையதாக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) மீறுகையின் விளைவு ஒன்றாக நட்டத்தை அல்லது சேதத்தை உற்றிருந்த ஆட்களுக்கு நட்டஈடு அளிப்பதற்கு ஏற்புடையதாக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) நட்டஈட்டு நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், ஆணைக்குழுவானது, விடயத்துக்கேற்றவாறு, ஒவ்வோர் ஆளுக்குமான ஏதேனும் இயல்திறப் பகிர்வுத்தொகை காரணமாக அல்லது எந்த ஆட்களுக்கு நட்டஈடளித்தல் தோதானதாக இருக்கின்றதோ அந்த ஆட்களை நிச்சயித்தலில் அல்லது அறிவிப்பதிலான சிரமம் காரணமாக (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆட்களுக்கு நட்டஈடு அளித்தல் செயல்முறைக்கு உகந்ததாக இருக்காது என்று கருதினால் ஆணைக்குழுவானது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆட்களிற்குப் பகிர்ந்தளிக்காதுவிடுவதற்கு முடிபுசெய்யலாம் என்பதுடன் ஆணைக்குழுவின் நட்டஈட்டு நிதியத்திற்கு அத்தகைய தொகைகளை வரவுவைக்கலாம்.

(6) அவ்வாள் (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் அவர்மீது விதிக்கப்பட்ட குடியியல் தண்டத்தை அல்லது (4) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்டவாறான உடன்படிக்கையின் நியதிகளின்படி செலுத்தப்படவேண்டிய பணத்தொகையைச் செலுத்தத்தவறினால் ஆணைக்குழுவானது விடயத்துக்கேற்ப, குடியியல் தண்டத்தை அல்லது அத்தகைய பணத்தொகையை, ஆணைக்குழுவுக்கு வருமதியான தீர்புத்தனிசு என்றாற்போன்று அறவிடலாம்.

153. நூற்றியைம்பத்திரெண்டாம் பிரிவின்கீழான வழக்கொன்று, இப்பாகத்தின் ஏற்பாடுகளுள் எவற்றினதும் மீறுகைத் தேதியிலிருந்து ஆறாண்டுகள் முடிவுற்ற பின்னர் தொடங்கப் படுதலாகாது.

## பாகம் VI

## நிதி

154. இப்பாகத்தின் குறிக்கோள் மற்றும் நோக்கம் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) ஆணைக்குழுவின் முறையான பணியாற்றுகைக்காகப் பல்வேறு நிதியங்களைத் தாபித்தல்; அத்துடன்

(ஆ) வேறு பரிகாரம் இல்லாத முதலீட்டாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட நட்டஈட்டை வழங்குவதற்கு நிதிய மொன்றைத் தாபித்தல்.

அத்தியாயம் 1

ஆணைக்குழுவின் நிதியங்கள்

155. (1) பரிவர்த்தனை ஒன்றில் பதியப்பட்ட அல்லது கொள்வனவாளரினாலும் விற்பனையாளரினாலும் அதன் விதிகளின்கீழ் அதற்கு அறிவிக்கப்பட்ட பிணையங்களின் ஒவ்வொரு கொள்வனவு மற்றும் விற்பனை பற்றிவர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளினால் அமைச்சரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களில் ஆயவரி ஒன்று விதிக்கப்படுதலும் அறவிடப்படுதலும் செலுத்தப்படுதலும் வேண்டும். வெவ்வேறு வகுப்பினவான பிணையங்கள் தொடர்பில் வெவ்வேறு வீதங்கள் விதித்துரைக்கப்படலாம்.

(2) இப்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட ஆயவரி, வேறேதேனும் சட்டத்தின்கீழ் அறவிடப்பட்ட வேறேதேனும் வரிக்கு அல்லது ஆயவரிக்கு மேலதிகமானதாகவிருத்தல் வேண்டும்.

156. (1) ஆணைக்குழுவினால் நிருவகிக்கப்படவேண்டிய "ஆயவரி நிதியம்" என அழைக்கப்படும் நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் நூற்றியைம்பத்தைந்தாம் பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட ஆயவரியின் வரும்படிகள் அதற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(2) பின்வரும் நோக்கங்களுக்காக மட்டுமே ஆயவரி நிதியத்தின் வரவுக்கிருக்கும் பணங்கள் பயன்படுத்தப்படுதல் வேண்டும் -

(அ) பிணையங்கள் சந்தையை அபிவிருத்தி செய்தல்;

(ஆ) இப்பாகத்தின்கீழ் தாபிக்கப்பட்ட நட்டஈட்டு நிதியத்தின் அல்லது ஆணைக்குழுவின் நிதியத்தின் வரவுக்கிருக்கும் பணங்களை அதிகரித்தல்;

(இ) ஆணைக்குழுவின் கடமைகள் மற்றும் பணிகள் என்பவற்றைப் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதலில் ஆணைக்குழுவின் முகாமை, நிருவாகம் மற்றும் தொழிற்பாடு என்பவற்றில் ஆணைக்குழுவினால் உறப்பட்ட எல்லாச் செலவினத்தையும் எதிர்கொள்ளுதல்;

(ஈ) ஆணைக்குழு தோதானதெனக் கருதுகின்றவாறாக ஆணைக்குழுவின் பணியாட்தொகுதியினருக்கு வீடமைப்பு, கல்விசார், சுகாதார மற்றும் போக்குவரத்து நோக்கங்களுக்காகக் கடன்களை வழங்குதல்;

(உ) பணிப்பாளர் தலைமையதிபதியினதும் அவரின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் அவர்களின் தங்கிவாழுநர்களினதும் நியமத்தர்களினதும் நன்மைக்காகத் தாபிக்கப்பட்ட ஓய்வூதிய மற்றும் சகாய நிதியங்களுக்கும் வேறு திட்டங்களுக்கும் உதவு தொகைகளை அளித்தல்; அத்துடன்

(ஊ) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு எண்பிக்கப்பட்ட திறமைவாய்ந்த ஆணைக்குழுவின் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் கற்கைச்செலவுகளைக் கொடுத்துத்தீர்த்தல்.

(3) ஆயவரி நிதியத்தின் வரவுக்கிருக்கும் ஏதேனும் விஞ்சுதலான பணம், நிதியத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்காக ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் ஆணைக்குழுவினால் முதலீடு செய்யப்படலாம்.

157. (1) ஆணைக்குழு அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நிதியத்துக்குப் பின்வருபவை செலுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) ஆணைக்குழுவின் பயன்பாட்டுக்காகப் பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எல்லாச் சோதனைகளையும் நிறைவேற்றுவதில் உறப்பட்ட செலவுகளாக விதிக்கப்படக்கூடியவாறான அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் கட்டணங்களாகச் செலுத்தப்படக்கூடியவாறான எல்லாப் பணத்தொகைகளும்;

(இ) இச்சட்டத்தின்கீழான மீறுகைகள் தொடர்பில் புலனாய்வுகளை நிறைவேற்றுவதிலும் சட்ட வழக்குநடவடிக்கைகளைத் தொடுப்பதிலும் உறப்பட்ட செலவுகளுக்கான மீளளிப்புகளாக அறவிடப்படுகின்ற அத்தகைய பணத்தொகைகள்;

(ஈ) திரட்டிய நிதியம், அரசாங்கம் அல்லது ஒரு வெளிநாட்டு அரசாங்கம், அரச முகவராண்மைகள் மற்றும் இலங்கையினுள்ளோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ பல்புடை, இருபுடை முகவராண்மைகளிடமிருந்து நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியக் கொடைகள் என்ற வகையாக ஆணைக்குழுவினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(உ) ஆயவரி நிதியத்திலிருந்து வரவு வைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள்.

(3) ஆணைக்குழு, அதனது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளைப் பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும், புரிவதிலும் அதனால் உறப்பட்ட செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவின் நிதியத்துக்குச் சொந்தமான பணங்கள், ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் ஆணைக்குழுவினால் முதலீடு செய்யப்படலாம்.

அத்தியாயம் 2

முதலீட்டாளர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கான நிதியம்

158. (1) எவரேனும் உரிமமளிக்கப்பட்ட பங்குத்தொகுதித் தரகர் அல்லது பங்குத்தொகுதி வியாபாரி அதன் ஒப்பந்தஞ்சார் கடப்பாடுகளை எதிர்கொள்ளுவதற்கு இயலாதுள்ளதென ஆணைக்குழுவினால் காணப்படுவதன் விளைவாகப் பணவகையான இழப்பை உறுகின்ற எவரேனும் முதலீட்டாளருக்கு வரையறுக்கப்பட்ட நட்டஈட்டை வழங்கும் நோக்கத்துக்காக "நட்டஈட்டு நிதியம்" என அழைக்கப்படும் நிதியமொன்று ஆணைக்குழுவினால் தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) நட்டஈட்டு நிதியம் பின்வருனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள்;

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நிதியத்துக்கு வரவு வைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைள்; அத்துடன்

(இ) ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு ஆயவரி நிதியத்திலிருந்து வரவு வைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள்.

(3) நட்டஈட்டு நிதியத்துக்குச் சொந்தமான பணங்கள், ஆணைக் குழுவால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் ஆணைக்குழுவினால் முதலீடு செய்யப்படலாம்.

159. (1) ஆணைக்குழுவானது, ஆணைக்குழுவின் உறுப்பினர்களினுள் இருந்து மூன்று உறுப்பினர்களை நியமித்தல் வேண்டும்; அவர்கள் (இதனகத்துப்பின்னர் "குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆணைக்குழுவின் நட்டஈட்டுக் குழுவாகவிருத்தல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1) இன்கீழ் நியமிக்கப்பட்ட குழு, 162 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பம் தொடர்பில் நட்டஈட்டை மதிப்பீடுசெய்வதற்கும் அளிப்பதற்கும் பொறுப்பாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் மதிப்பீடு அல்லது அளிப்பின் மீதான அத்தகைய குழுவின் முடிபு, இச்சட்டத்தின் நோக்கத்துக்காக இறுதியானதும் முற்றானதுமாதலும் வேண்டும்.

160. (1) எவரேனும் உரிமமளிக்கப்பட்ட பங்குத்தொகுதித் தரகர் அல்லது பங்குத்தொகுதி வியாபாரி அவரது ஒப்பந்தஞ்சார் கடப்பாடுகளை எவரேனும் முதலீட்டாளர் தொடர்பில் எதிர்கொள்வதற்கு இயலாதவராகக் காணப்படுவதன் விளைவாகப் பணவகையான இழப்பை உற்றிருக்கும் அத்தகைய முதலீட்டாளர், நட்டஈட்டு நிதியத்திலிருந்து நட்டஈடு கோரி குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் குழுவுக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(2) குழுவானது, விண்ணப்பகாரரொருவரது நட்டஈட்டு உரிமைக் கோரிக்கைக்கு ஆதரவாக ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு சான்றைக் காண்பிக்கும்படி காலத்துக்குக்காலம் விண்ணப்பகாரரைத் தேவைப்படுத்தலாம். விண்ணப்பகாரர் அத்தகைய கோரிக்கைக்கு இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, குழுவானது விண்ணப்பகாரரின் உரிமைக்கோரிக்கையை அனுமதிக்க மறுக்கலாம்.

(3) குழு, விண்ணப்பகாரரின் உரிமைக்கோரிக்கை பற்றிய விசாரணையொன்றை நடாத்துவது அவசியம் என எந்நேரத்திலும் கருதினால், அது அவ்வாறு செய்யலாம் என்பதுடன் எழுத்திலான அறிவித்தல் மூலம், அந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய தேதியன்றும் அத்தகைய நேரத்திலும் இடத்திலும் சமூகமளிக்கும்படி விண்ணப்பகாரருக்கு அறிவித்தலும் வேண்டும். விண்ணப்பகாரர் அறிவித்தலில் தரப்பட்ட தேதியன்று அத்தகைய விசாரணைக்குத் தோன்றுவதற்குத் தவறுகின்றவிடத்து, குழுவானது விண்ணப்பகாரரின் உரிமைக்கோரிக்கையை அனுமதிக்க மறுக்கலாம்.

161. (1) குழுவானது, விண்ணப்பகாரர் ஒருவரால் உரிமைக்கோரிக்கைக்கு ஆதரவாகக் காண்பிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் வேறு சான்றினைப் பரிசோதித்த பின்னர், அல்லது விசாரணை ஒன்று நடாத்தப்பட்டதான ஏதேனும் விடயத்தில் அத்தகைய விசாரணை நிறைவுசெய்யப்பட்டதன்மீது நட்ட ஈட்டுக்கான அத்தகைய உரிமைக்கோரிக்கையை அனுமதிக்கலாம் அல்லது அதற்கு அனுமதி மறுக்கலாம்.

(2) குழுவானது ஏதேனும் உரிமைக்கோரிக்கையை அனுமதிக்கின்றவிடத்து, செலுத்தப்படற்பாலதான வரையறுக்கப்பட்ட நட்டஈட்டு மதிப்பீடொன்றை அது செய்தல் வேண்டும் என்பதுடன், அது தொடர்பான அளிப்பொன்றைச் செய்தலும் வேண்டும். அத்தகைய அளிப்பு பற்றிய அறிவித்தல் விண்ணப்பகாரருக்கு எழுத்தில் வழங்கப்படுதல் வேண்டும்.

அத்தியாயம் 3

நிதியாண்டும் கணக்குகளைக் கணக்காய்வு செய்தலும்

162. ஆணைக்குழுவின் நிதியாண்டு, ஒவ்வோர் ஆண்டினதும் சனவரி மாதம் முதலாம் நாளன்று தொடங்கும் பன்னிரெண்டு மாதங்களைக் கொண்ட காலப்பகுதியாதல் வேண்டும்.

163. (1) ஆணைக்குழு, அதனது வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருப்பதற்குச் செய்வித்தல் வேண்டும்.

(2) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், ஆணைக்குழுவின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் VII

## பொது

164. இப்பாகத்தின் குறிக்கோள் மற்றும் நோக்கம், ஆவணங்களைக் காண்பித்தல், தகவலை வெளிவிடுதல், முறைப்பாடுகள் தீர்வுக் குழுவொன்றைத் தாபித்தல், விசாரணைகள் மற்றும் புலனாய்வுகளை நடாத்துதல், தகவலைப் பகிர்தல் மற்றும் இடித்துரைப்பாளர்களைப் பாதுகாத்தல் தொடர்பாக இச்சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளின் பயனுள்ள அமுலாக்கத்தை உறுதிப்படுத்துதலாக இருத்தல் வேண்டும்.

அத்தியாயம் 1

அமுலாக்கல் தொடர்பான ஏற்பாடுகள்

165. (1) ஆணைக்குழு அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர், எவரேனும் ஆளை எழுத்திலான அறிவித்தல்மூலம், அந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய காலப்பகுதியினுள், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறும் இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழு அதன் தத்துவங்களை முறையாகப் பிரயோகிப்பதற்கு அல்லது அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானதென அது கருதக்கூடியவாறும் (ஏதேனும் வரியை விதிப்பதும் அறவிடுவதும் தொடர்பான ஏதேனும் சட்டத்தின்கீழ் வெளிவிடுவதிலிருந்து அல்லது காண்பிக்கப்படுவதிலிருந்து தடைசெய்யப்பட்ட ஏதேனும் தகவல் அல்லது ஆவணம் தவிர) ஏதேனும் தகவலைக் கொடுத்துதவுமாறு அல்லது ஏதேனும் ஆவணத்தை அல்லது இலத்திரனியல் பதிவேட்டைக் காண்பிக்குமாறு தேவைப்படுத்தலாம்.

(2) உட்பிரிவு (1) இன்கீழ் அறிவித்தலைப் பெறுகின்ற எவரேனும் ஆள் அதன்கண் குறித்துரைக்கப்பட்டுள்ள காலப்பகுதியினுள் அத்தகைய அறிவித்தலின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவது அவரது கடமையாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அறிவித்தலுக்கு இணங்கியொழுக அத்தகைய ஆள் ஏதேனும் சட்டத்தின்கீழ் ஏதேனும் தகவலை வெளிவிடுவதிலிருந்து அல்லது ஏதேனும் ஆவணத்தை அல்லது இலத்திரனியல் பதிவேட்டைக் காண்பிப்பதிலிருந்து தடைசெய்யப்பட்ட ஏதேனும் தகவலை வெளிவிடுமிடத்து அல்லது ஏதேனும் ஆவணத்தை அல்லது இலத்திரனியல் பதிவேட்டைக் காண்பிக்குமிடத்து, அத்தகைய வெளிவிடுகை அல்லது காண்பிப்பு, அத்தகைய சட்டத்தில் முரணாகவுள்ள எது எவ்வாறிருப்பினும், அத்தகைய சட்டத்தினது ஏற்பாடுகளின் மீறுகையொன்றாகக் கருதப்படுதலாகாது.

(3) இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்றுடன் இணங்கியொழுகக் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் தகவல் அல்லது காண்பிக்கப்பட்ட ஆவணம் ஒன்றின் அல்லது இலத்திரனியல் பதிவேடொன்றின் உள்ளடக்கங்கள்.

(அ) நீதிமன்றக் கட்டளையொன்றின்மூலம்; அல்லது

(ஆ) ஆணைக்குழுவின் பணிகளை நிறைவேற்றும்போது; அல்லது

(இ) அத்தகைய தகவல், ஆவணம் அல்லது இலத்திரனியல் பதிவேட்டைக் கொடுத்துதவும் ஆளின் சம்மதத்துடன் அன்றி வேறு எவரேனும் ஆளுக்கு ஆணைக்குழுவினால் வெளியிடப்படுதலோ அல்லது அறிவிக்கப்படுதலோ ஆகாது.

(4) தகவல், ஆவணம் அல்லது இலத்திரனியல் பதிவேட்டைக் கொடுத்துதவும் ஆள், இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின், விதியின் அல்லது பணிப்புரையின் ஏதேனும் ஏற்பாட்டை மீறியமைக்காக ஆணைக்குழுவினால் புலனாய்வு செய்யப்பட்டுக்கொண்டிருக்கும்போது உட்பிரிவு (3) இன் பந்தி (இ) இன்கீழான சம்மதம் தேவைப்படமாட்டாது.

166. (1) ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தொன்பதாமாண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் முரணாக அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், ஆணைக்குழு அல்லது ஆணைக்குழுவினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும் மற்றும் நிறைவேற்றுவதற்கும் அவசியமானதென அல்லது உசிதமானதென அது கருதக்கூடிய வாறாகப் புலனாய்வுகளை நிறைவேற்றலாம் அல்லது விசாரணைகளை நடாத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக

(அ) பிணையங்களின் கொடுக்கல்வாங்கல்கள், எவரேனும் ஆளினால் முதலீட்டாளர்கள் அல்லது பிணையங்கள் சந்தைக்குத் தீங்குவிளைவிக்கும் முறையொன்றில் கையாளப்படுகின்றன என்றும்; அல்லது

(ஆ) ஏதேனும் சந்தை நிறுவனம், சந்தை இடைத்தரகர், முதலீட்டாளர் அல்லது எவரேனும் வேறு ஆள் இச்சட்டத்தின், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் அல்லது விதிகளின் அல்லது ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளின் எவையேனும் ஏற்பாடுகளை மீறியிருக்கிறார் என்றும், நம்புவதற்கு ஆணைக்குழுவுக்கு நியாயமான ஏதுக்கள் இருக்கின்றவிடத்து, ஆணைக்குழு அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாள், அத்தகைய புலனாய்வு அல்லது விசாரணையின் நோக்கத்திற்காகத் தேவைப்படுகின்றவாறாக எவரேனும் ஆளை அதன்முன் அல்லது அவர்முன்தோன்றி சான்று அளிக்குமாறு அல்லது அத்தகைய ஆளின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள ஏதேனும் புத்தகத்தை அல்லது ஆவணத்தைக் காண்பிக்குமாறு கட்டளைவிட்டழைக்கலாம் அத்துடன் கோரலாம்.

(3) உட்பிரிவு (2) இன்கீழ் ஆணைக்குழுவின்முன் அல்லது ஆணைக்குழுவினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள்முன் தோன்றுமாறு கட்டளைவிட்டழைக்கப்பட்ட அல்லது கோரப்பட்ட எவரேனும் ஆள் வாய்மொழிமூலமாகப் பரிசோதிக்கப்படலாம் என்பதுடன் அவ்வாறு பரிசோதிக்கப்பட்ட ஆளினால் அளிக்கப்பட்ட ஏதேனும் கூற்று எழுத்தில் இருக்கலாம். எழுத்திலான அத்தகைய ஒவ்வொரு கூற்றும் அவ்வாறு பரிசோதிக்கப்பட்ட ஆளினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்; ஆயின், அதற்குக் கையொப்பமிடுவதற்கு முன்னர், அத்தகைய கூற்றை அத்தகைய ஆள் வாசிப்பதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும் அல்லது அது எழுதப்பட்டுள்ள மொழி அவருக்கு விளங்காததாயிருந்தால் அது அவர் விளங்கக்கூடியதான ஒரு மொழியில் அவருக்கு மொழிபெயர்த்துக்கூறப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கூற்றை விளக்குவதற்கு அல்லது அதற்கு எதனையும் சேர்ப்பதற்கு அவர் சுதந்திரமுடைய வராகவிருத்தலும் வேண்டும்.

(4) உட்பிரிவு (2) இன்கீழ் அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தப்படும்போது ஆணைக்குழுவின்முன் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் முன் தோன்றத்தவறுகின்ற அல்லது ஆணைக்குழுவினால் அல்லது ஆணைக்குழுவினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் அவரிடம் கேட்கப்பட்ட ஏதேனும் கேள்விக்கு விடையளிக்கமறுக்கின்ற அல்லது அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தும்போது அவரது உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள ஏதேனும் புத்தகம், ஆவணம் அல்லது இலத்திரனியல் பதிவேட்டினைக் காண்பிக்க அல்லது அவற்றின் பிரதிகளை எடுக்க மறுக்கின்ற அல்லது ஆணைக்குழுவினால் அல்லது ஆணைக்குழுவினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் அவரிடம் கேட்கப்பட்ட ஏதேனும் கேள்விக்கு அறிந்துகொண்டே ஏதேனும் பிழையான விடையை அளிக்கின்ற ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றைப் புரிகின்றார்.

(5) (அ) உட்பிரிவு (1) இன்கீழ் புலனாய்வு அல்லது விசாரணை ஒன்றை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, ஆணைக்குழு, அத்தகைய தொழில் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்

அல்லது விதியின் அல்லது பணிப்புரையின்கீழ் வைத்திருக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் ஆவணத்தை அல்லது இலத்திரனியல் பதிவேட்டைச் சோதிப்பதற்கும் அதன் பிரதிகளை எடுப்பதற்கும், அல்லது ஏதேனும் இலத்திரனியல் உபாயத்தை உடைமையில் எடுப்பதற்கும் சந்தை நிறுவனம் ஒன்றின் அல்லது சந்தை இடைத்தரகரின் அல்லது நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியின் எவையேனும் வளவுகளுக்குள், நாளின் நியாயமான எல்லா நேரங்களிலும் நுழைவதற்கும் அத்துடன் ஆணைக்குழு, சட்டத்தின்கீழ் அதன் கடமைகளை நிறைவேற்றுவதில் அத்தகைய தகவல் தேவைப்படலாம் என நம்புவதற்கு அதற்கு நியாயமான ஏதுக்கள் இருக்கின்றவிடத்து, சான்றைச் சேகரிப்பதற்கு அவர்களின் கணினி முறைமைகளை அணுகுவதற்கும் தேவைப்படுத்தப்படக்கூடியவாறாக 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, கணினிவழிக் குற்றச் சட்டத்தின்கீழ் ஏற்றங்கீகரிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கும் எவரேனும் நிபுணருக்கும் எழுத்துமூலம் அதிகாரமளிக்கலாம்.

(ஆ) ஓராம் உட்பிரிவின்கீழான ஒரு விசாரணையை அல்லது புலனாய்வை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, ஆணைக்குழுவுக்கு அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளுக்கு, ஒரு நீதிவான் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட கட்டளையின்மேல், பந்தி (அ) வில் குறித்துரைக்கப்படாத வேறெவையேனும் வளவுகளை அணுகுவதும் ஏதேனும் ஆதனத்தை, புத்தகத்தை, ஆவணத்தை, பொருளை, பருப்பொருளை அல்லது இலத்திரனியல் பதிவேட்டை அல்லது உபாயத்தை அல்லது வேறுவகையில் எத்தகையதுமான எப்படி வத்திலுமான எதனையும் சோதனையிடுவதும், அத்தகைய புத்தகம், ஆவணம், பொருள், பருப்பொருள் அல்லது இலத்திரனியல் பதிவேடு என்பவற்றை அல்லது வேறுவகையில் எத்தகையதுமான எப்படிவத்திலுமான எதனையும் கைப்பற்றுவதும் அல்லது அவற்றின் பிரதிகளை உடைமையில் எடுப்பதும் சட்டமுறையான தாதல் வேண்டும்; ஆயின், (1) ஆம் உட்பிரிவின்கீழான வெற்றிகரமான புலனாய்வு அல்லது விசாரணைக்கு முக்கியமான சான்றாகவிருப்பனவாக அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களினால் அவை கருதப்படுதல் வேண்டும்.

(6) ஓராம் உட்பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒவ்வொருவரும், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் சமாதான அலுவலர் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) இரண்டாயிரத்தேழாம் ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, கணினிவழிக் குற்றச் சட்டத்தின் ஏற்பாடுகள், இலத்திரனியல் பதிவேடுகள் அல்லது ஆவணங்கள் தொடர்பாக இச்சட்டத்திலுள்ள (5) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது வேறு ஏதேனும் பிரிவின்கீழ் புலனாய்வொன்றை அல்லது விசாரணையொன்றை நிறைவேற்றுவதில் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(8) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஆணைக்குழு, விடயத்துக்கேற்ப, ஒரு புலனாய்வின்போது அல்லது விசாரணையின்போது அல்லது விசாரணையும் புலனாய்வும் ஆகிய இரண்டின்போதும் சேகரிக்கப்பட்ட விடயங்களைக் கவனத்துட்கொண்டதன்மீது, பாகம் V இன்கீழான தவறல்லாத இச்சட்டத்தின்கீழான தவறொன்றை எவரேனுமாள் புரிந்துள்ளாரெனத் திருப்திப்படுமிடத்து, அத்தகைய ஆளுக்கெதிராகக் குற்றவியல் வழக்குநடவடிக்கைகளைத் தொடங்கும்படி அல்லது இச்சட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டவாறு வேறேதேனும் வலுவுறுத்தல் நடவடிக்கையை எடுக்கும்படி பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அது அதிகாரமளிக்கலாம்.

(9) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஆணைக்குழு, தோதானதென அது கருதினால், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் ஏதேனும் தோதான நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு இப்பாகத்தின்கீழ் சேகரிக்கப்பட்டுப்பெறப்பட்ட விடயங்களைச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அல்லது வேறெவரேனும் அதிகாரிக்கு அனுப்பி வைக்கலாம்.

167\. (1) இச்சட்டத்தின், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், விதிகள் அல்லது பணிப்புரைகளின் ஏதேனும் ஏற்பாட்டின் மீறுகை பற்றி நியாயமான சந்தேகம் இருப்பதன்மீது ஆணைக்குழு பிரிவு 165இன் நியதிகளின்படி விசாரணையொன்று நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற அல்லது ஆளொருவர் புலனாய்வு செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்ற எந்நேரத்திலும் (இதனகத்துப்பின்னர் "முடக்குதல் கட்டளை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பணிப்புரையொன்றை

(அ) விசாரணையின்கீழ் அல்லது புலனாய்வின்கீழ் உள்ள கருமத்துடன் தொடர்புபட்ட ஆளொருவரின் சொத்துக்களை அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்தைக் கையுதிர்ப்பதிலிருந்து அத்தகைய ஆளைத் தடைசெய்தும்; அல்லது

(ஆ) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் கொடுக்கல்வாங்கலை அல்லது வகுப்பினவான கொடுக்கல்வாங்கல்களைச் செய்துகொள்வதிலிருந்து ஆளொருவரைத் தடைசெய்தும், வழங்கலாம்.

(2) உட்பிரிவு (1) இன்கீழ் ஆக்கப்பட்ட முடக்குதல் கட்டளையொன்று, அத்தகைய கட்டளை வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஏழு சந்தை நாட்களை விஞ்சுகின்ற காலப்பகுதியொன்றிற்கு வலு விலிருத்தலாகாது.

(3) ஆணைக்குழு உட்பிரிவு (1) இன்கீழ் முடக்குதல் கட்டளையொன்றை வழங்கியதன் பின்னர், முடக்குதல் கட்டளை வலுவில் இருக்கும் காலப்பகுதியினுள் அத்தகைய முடக்குதல் கட்டளையை உறுதிப்படுத்துவதை நாடி நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்தல் வேண்டும் என்பதுடன், சூழ்நிலைகள் அவ்வாறு அவசியமாக்கினால், இன்னலுறும் திறத்தவருக்குக் கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்று அளிக்கப்பட்டபின்னர், தேவைப்பட்டவாறு அதற்கான நீடிப் பொன்றைக் கோருதலும் வேண்டும்.

(4) அத்தகைய முடக்குதல் கட்டளையை வழங்குவதற்குப் போதுமான காரணங்கள் உள்ளன என நீதிமன்றம் திருப்திப்படுகின்றவிடத்து, நீதிமன்றம் முடக்குதல் கட்டளையை உறுதிப்படுத்தலாம் என்பதுடன் அதனை நீடிப்பதற்கான போதுமான காரணங்கள் உள்ளன என அது திருப்திப்படின், தோதானவையெனக் கருதுகின்றவாறான அத்தகைய காலப்பகுதிகளுக்கு அது நீடிப்புக்களை வழங்கலாம்.

(5) உட்பிரிவு (3) இன் நியதிகளின்படி, நீதிமன்றத்துக்கு ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றின்மீது, நீதிமன்றம், முடக்குதல் கட்டளையொன்றின்கீழ் சொத்தை முகாமைசெய்தல் தொடர்பில் தோதான கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

168\. (1) ஆணைக்குழு, உயர் தொழில்சார் துர்நடத்தை அல்லது இச்சட்டத்தின், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் ஏதேனும் ஏற்பாட்டின் அல்லது சந்தை நிறுவனமொன்றின்மீது, சந்தை இடைத்தரகரின்மீது, நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியின்மீது அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆளொருவரின்மீது அல்லது ஆணைக்குழுவின் ஒழுங்குபடுத்தும் நோக்கெல்லையின்கீழ் வருகின்ற வேறெவரேனுமாளின்மீது வழங்கப்பட்ட பணிப்புரைகளின் மீறுதல் தொடர்பாக எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட முறைப்பாடுகளைக் கேட்பதற்கு முறைப்பாடுகளைத் தீர்த்துவைத்தல் குழுவொன்றைத் தாபித்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழு அல்லது ஆணைக்குழுவினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்கு அவசியமானதென அல்லது உசிதமானதென அது அல்லது அவர் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணைகளை நடாத்தலாம் என்பதுடன், அத்தகைய நோக்கத்துக்காக எவரேனும் ஆளைச்சான்று அளிப்பதற்கு முறைபாடுகளைத் தீர்த்துவைத்தல் குழுவின் முன் தோன்றுமாறு அல்லது அத்தகைய விசாரணைகளின் நோக்கத்துக்காகத் தேவைப்படுகின்றவாறானவையும் அத்தகைய ஆளின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ளவையுமான எவையேனும் புத்தகங்களை அல்லது ஆவணங்களைக் காண்பிக்குமாறு கட்டளைவிட்டழைக்கலாம் அத்துடன் கோரலாம்.

(3) ஆணைக்குழு, அத்தகைய முறைப்பாடுகளையும், அதனுடன் தொடர்புடைய எல்லாக் கருமங்களையும் கையாள்வதற்காகத் தோதான நடைமுறைகளையும் நடவடிக்கைமுறைகளையும் விதிகளின்மூலம் நிலைநாட்டுதல் வேண்டும்.

(4) முறைப்பாடுகளைத் தீர்த்துவைத்தல் குழு, ஆளொருவரினால் செய்யப்பட்ட எழுத்திலான ஏதேனும் முறைப்பாட்டைப் பெறுவதன்மீது, இச்சட்டத்தின், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் ஏதேனும் ஏற்பாடு அல்லது சந்தை நிறுவனமொன்றின் எவையேனும் விதிகள் மீறப்பட்டுள்ளனவாவென்பதைக் கண்டுபிடிப்பதற்குக் காண்பிக்கப்பட்ட சான்றைப் பரிசோதிக்கலாம்.

(5) சந்தை நிறுவனமொன்று, சந்தை இடைத்தரகர், நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆள் இச்சட்டத்தின்கீழான, அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியின், விதியின் அல்லது அதன்கீழ் வழங்கப்பட்ட பணிப்புரையின் ஏற்பாடொன்றை, அல்லது சந்தை நிறுவனம் ஒன்றின் விதிகளை மீறியுள்ளார் எனக் கண்டுபிடிக்கப்படுமிடத்து, முறைப்பாடுகளைத் தீர்த்துவைத்தல் குழு ஒன்றில் அத்தகைய விதப்புரைக்குப் பயன்கொடுப்பதற்கு அல்லது உசிதமானதென அது கருதக்கூடிய வாறான வேறேதேனும் நடவடிக்கையை எடுப்பதற்குத் தற்றுணிபைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) ஆணைக்குழு, அத்தகைய சந்தை நிறுவனம், சந்தை இடைத்தரகர், நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆளுக்குக் கேட்கப்படுவதற்கான வாய்ப்பொன்றை அளிக்காமல் இப்பிரிவின்கீழ் ஏதேனும் நடவடிக்கையை எடுத்தல் ஆகாது.

169. (1) ஆணைக்குழுவானது, சந்தை நிறுவனமொன்று, சந்தை இடைத்தரகர் அல்லது நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி தொடர்பில் அல்லது 81 ஆம் பிரிவுக்கிணங்கப் பிணையங்களின் பகிரங்கக் கொடை முனைவைச் செய்துள்ள நிரற்படுத்தப்படாத கம்பெனி தொடர்பில் நிறைவேற்றப்பட்ட உயர்தொழில்சார் சேவைகள் தொடர்பாகக் குறைநிரப்புச் சேவை வழங்குநர்களிடமிருந்து தகவல், தெளிவுபடுத்துகை அல்லது விளக்கத்தை நாடுவதற்கு உரித்துடையதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நியதிகளின்படி அளிக்கப்பட்ட சேவைகள், முதலீட்டாளர்களின் நலனுக்குத் தீங்கு விளைவிக்கும் சாத்தியம் கொண்டுள்ளன என்ற கருத்தை ஆணைக்குழு கொண்டிருக்கின்றவிடத்து, ஆணைக்குழுவானது, ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான திருத்த நடவடிக்கையை எடுக்கும்படி அத்தகைய குறைநிரப்புச் சேவை வழங்குநருக்குப் பணிப்புரையொன்றை வழங்கலாம்.

(3) ஆணைக்குழு, அவசியமெனக்கருதுகின்றவிடத்து, குறைநிரப்புச் சேவை வழங்குநர்களின் கடமைகளுக்கு மற்றும் கடப்பாடுகளுக்கு ஏற்பாடு செய்வதற்கு வழிகாட்டுநெறிகள் அல்லது விதிகளை ஆக்கலாம்.

170. ஆணைக்குழு, பிணையங்கள் சந்தைகளில் பிணையங்கள் மற்றும் முதலீட்டாளர்கள் தொடர்பான ஒழுங்குபடுத்தும் பணிகள் பற்றிய தகவலைப்பகிர்தலுடன் சம்பந்தப்பட்ட அத்தகைய வேறு ஒழுங்கமைப்புகளுடன் உடன்படிக்கைகளை அல்லது புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளலாம்.

171. (1) ஆணைக்குழு, அதன் சொந்தப் பிரேரணையின்மீது அல்லது தகுதிவாய்ந்த சட்ட நீதிமன்றமொன்றினால் வழங்கப்பட்ட கட்டளையொன்றின்மேல் பின்வருவனவற்றைச் செய்யலாம்:-

(அ) இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவின் முன்னர் காண்பிக்கப்பட்டுள்ள, அதனால் கைப்பற்றப்பட்டுள்ள அல்லது அதனால் தடுத்துவைக்கப்பட்டுள்ள அல்லது உடைமையில் எடுக்கப்பட்டுள்ள ஏதேனும் ஆதனம், புத்தகம், ஆவணம், பொருள், பருப்பொருள் அல்லது இலத்திரனியல் பதிவேடு அல்லது வேறுவகையாக ஏதேனும் வடிவத்தில் எத்தகையதுமானதையும் அணுகுவதற்கும் சோதிப்பதற்கும் பொலிசு அலுவலர் ஒருவரை அல்லது எவரேனும் பகிரங்க அலுவலரை அனுமதிக்கலாம்; அல்லது

(ஆ) ஆணைக்குழு எவரேனுமாள் தொடர்பில் அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதில் அல்லது அதன் கடமைகளை நிறைவேற்றுவதில் ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் சோதனையின்போது புலனாய்வுசெய்யும் ஓர் அலுவலரினால் அல்லது ஆணைக்குழுவின் எவரேனும் அலுவலரினால் கைப்பற்றப்பட்ட, தடுத்துவைக்கப்பட்ட அல்லது உடைமையில் எடுக்கப்பட்ட ஏதேனும் புத்தகம், ஆவணம் அல்லது இலத்திரனியல் பதிவேடு அல்லது வேறுவகை யாக ஏதேனும் வடிவத்தில் எத்தகையதுமான பிரதியொன்றைப் பொலிசு அலுவலர் ஒருவருக்கு அல்லது எவரேனும் பகிரங்க அலுவலருக்கு வழங்கலாம்.

(2) ஆணைக்குழு, அது அவசியமெனக் கருதுகின்றவிடத்து, ஏதேனும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மேற்பார்வை அதிகார சபையுடன் ஒத்துழைப்பதற்கு ஒழுங்குபடுத்தும் ஒழுங்கேற்பாடுகளைச் செய்துகொள்ளலாம்; அது பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்:-

(அ) ஏதேனும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மேற்பார்வை அதிகாரசபையிடமிருந்து ஏதேனும் தகவல் அல்லது ஆவணம் அல்லது இலத்திரனியல் பதிவேட்டைப் பெற்றுக்கொள்ளல்; அத்துடன்

(ஆ) ஏதேனும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மேற்பார்வை அதிகாரசபையுடன் ஏதேனும் தகவல் அல்லது ஆவணம் அல்லது இலத்திரனியல் பதிவேட்டைப் பகிர்தல்.

(3) ஆணைக்குழு, வெளிநாட்டு மேற்பார்வை அதிகாரசபையொன்று வலுவுறுத்துகின்ற அல்லது நிருவகிக்கின்ற ஏதேனும் ஒழுங்குபடுத்தும் விடயம் தொடர்பிலான உதவிக்காக வெளிநாட்டு மேற்பார்வை அதிகாரசபையிடமிருந்து எழுத்திலான கோரிக்கையொன்றைப் பெறுவதன்மேல் ஆணைக்குழு அந்த நோக்கத்துக்காகத் தகுதியானதெனக் கருதுகின்றவாறாக அத்தகைய வெளிநாட்டு மேற்பார்வை அதிகாரசபைக்கு அத்தகைய உதவியை வழங்கலாம்.

(4) உட்பிரிவு (3) இன்கீழ் உதவியை அளிப்பதா என்பதைத் தீர்மானிப்பதில் ஆணைக்குழு பின்வருவனவற்றைக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்:-

(அ) வெளிநாட்டு மேற்பார்வை அதிகாரசபைக்கு உதவி வழங்குவதற்காக உறப்பட்ட ஏதேனும் ஆகுசெலவையும் செலவுகளையும் வெளிநாட்டு மேற்பார்வை அதிகாரசபை ஆணைக்குழுவுக்குச் செலுத்துமா என்பதையும்; அத்துடன்

(ஆ) ஆணைக்குழுவிடமிருந்தான உதவிக்கான ஒப்பீட்டளவிலான கோரிக்கையொன்றுக்குப் பதிலளிக்கும் வகையில் பரஸ்பர உதவியை வழங்குவதற்கு வெளிநாட்டு மேற்பார்வை அதிகாரசபை இயன்றதா மற்றும் விரும்புமா என்பதையும்.

(5) இப்பிரிவில் -

"உள்நாட்டு மேற்பார்வை அதிகாரசபை" என்பது, பணச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதி, பொலிசு மற்றும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் வேறு ஏதேனும் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை எனப் பொருள்படும்;

"வெளிநாட்டு மேற்பார்வை அதிகாரசபை" என்பது, இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவின் பணிகளுக்கு நேரொத்ததான பணிகளைப் பிரயோகிக்கின்ற வெளிநாட்டு அதிகாரசபையொன்று அல்லது இலங்கைக்கு வெளியே ஒழுங்குபடுத்தும் பணிகளைப் பிரயோகிக்கின்ற எவரேனும் ஆள் அல்லது சர்வதேச ஒழுங்கமைப்பு மற்றும் எந்த வெளிநாட்டு அதிகாரசபையொன்று தொடர்பில் அத்தகைய ஒழுங்கேற்பாட்டைச் செய்து கொள்வது அல்லது அத்தகைய உதவியை அளிப்பது பொதுமக்கள் அக்கறைக்கு விரும்பத்தக்கதும் அவசியமானதும் என ஆணைக்குழு கருதுகின்றதோ அந்த வெளிநாட்டு அதிகாரசபையொன்று எனவும் பொருள்படும்; அத்துடன்

"பகிரங்க அலுவலர்" என்பது, அரசியலமைப்பின் 170 ஆம் உறுப்புரையின்மூலம் அச்சொல்லமைப்புக்கு குறித்தளிக்கப்பட்ட கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

172. (1) தொழில்தருநர் ஒருவர், இச்சட்டம் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், விதிகள் அல்லது பணிப்புரைகள் அல்லது சந்தை நிறுவனமொன்றின் ஏதேனும் விதியின் மீறுகைகள் அல்லது நிகழக்கூடிய மீறுகைகள் சம்பந்தமாக ஆணைக்குழுவுக்குத் தகவலை வழங்கியமை காரணமாகத் தொழிலில் உள்ள ஆளொருவரைப் பொறுப்புவிடுவித்தல், முடிவுறுத்தல், பதவிகுறைத்தல் அல்லது அவருக்குத் தொல்லை ஏற்படுத்துதல் ஆகாது. (2) உட்பிரிவு (1) இன் நியதிகளின்படி ஆணைக்குழுவுக்குத் தகவலை வழங்குகின்ற அத்தகைய ஆளுக்குக் எதிராகப் பழிவாங்கும் எவரேனும் தொழில்தருநர், அத்தகைய ஆளுக்குக் கேட்கப்படுவதற்கு வாய்ப்பொன்றை வழங்கியதன் பின்னர் விதிகளின்மூலம் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிருவாகத் தண்டத்திற்கு உட்படுத்தப்படலாம்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "தொழிலில் உள்ள ஆள்" ஒருவர் என்பது, பணிப்பாளர் ஒருவர், பங்காளர், பிரதான நிறைவேற்று அலுவலர், பிரதான நிதி அலுவலர், கம்பெனிச் செயலாளர், உள்ளகக் கணக்காய்வாளர் அல்லது வேறு எவரேனும் ஊழியர் என்போரை உள்ளடக்கும்.

(4) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறியமைக்காக ஆளொருவருக்கெதிராக ஆணைக்குழுவினால் வெற்றிகரமான குற்றவழக்குக்கு அல்லது வேறேதேனும் தடைவிதிப்புக்கு இட்டுச்செல்லும் அத்தகைய தகவலை முதலில் வழங்குகின்ற இடித்துரைப்பாளர் ஒருவருக்கு அது தொடர்பாக ஆக்கப்பட்ட விதிகளின் நியதிகளின்படி ஆணைக்குழு வெகுமதியொன்றை வழங்கலாம்.

173. அமைச்சர், காலத்துக்குக்காலம், ஆணைக்குழுவினால் அந்தரங்கமானது எனக் கருதப்படும் தகவலை வழங்குதல் பின்வருவனவற்றை விளைவிக்கும் என்ற ஏதுக்களின்மீது அத்தகைய தகவல் தவிர, ஆணைக்குழுவின் வேலை தொடர்பிலான விபரத்திரட்டுக்கள், கணக்குகள் மற்றும் வேறு தகவலை அவர் தேவைப்படுத்துகின்றவாறான அத்தகைய படிவத்தில் அவருக்குக் கொடுத்துதவும்படி ஆணைக்குழுவிடம் எழுத்தில் கோரலாம் என்பதுடன் ஆணைக்குழு அத்தகைய தகவலை வழங்கலாம்:-

(அ) சட்டத்தின்கீழ் நடைபெற்றுக்கொண்டிருக்கும் புலனாய்வொன்றுக்குப் பாரதூரமான பங்கத்தை விளைவிக்கும்;

(ஆ) சட்டத்தின்கீழான ஏதேனும் தவறைத் தடுப்பதற்கு அல்லது கண்டவறிவதற்குப் பாரதூரமான பங்கத்தை விளைவிக்கும்; அல்லது

(இ) சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் நடாத்தப்படுகின்ற எவையேனும் விசாரணைகள் அல்லது புலனாய்வுகள் தொடர்பாக அந்தரங்கத் தகவல் மூலத்தின் அடையாளத்தை வெளிக்காட்டும்.

174. (1) ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினருக்கெதிராக அல்லது ஆணைக்குழுவின் எவரேனும் அலுவலருக்கெதிராக, இச்சட்டத்தின்கீழ் அல்லது ஆணைக்குழுவின் பணிப்பின்மீது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டனவாகக் கொள்ளப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட எவையேனும் செயல்களுக்காகத் துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் தொடுக்கப்படுதலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் ஆணைக்குழுவினால் அல்லது அதற்கெதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் ஆணைக்குழுவினால் உறப்பட்ட ஏதேனும் செலவு ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் ஆணைக்குழுவுக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுதொகைகள் ஆணைக்குழுவின் அத்தகைய நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்படுகின்றவாறான ஆளொருவரினால் இச்சட்டத்தின்கீழ் அல்லது ஆணைக்குழுவின் பணிப்பின்மீது செய்யப்படும் அல்லது செய்யப்படுவதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்படும் ஏதேனும் துடர்ச்சி அல்லது குற்றவழக்கில் அவரால் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவுகள் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் அறவிடப்பட்டாலொழிய ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

அத்தியாயம் 2

தண்டனைகளும் வலுவுறுத்தல் பொறிமுறைகளும் தொடர்பான ஏற்பாடுகள்

175. (1) (அ) இச்சட்டத்தின் ஏற்பாடு எதனையும் அல்லது இச்சட்டத்தின் அல்லது அதன்கீழாக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் அல்லது விதிகளின் அல்லது பணிப்புரைகளின் ஏற்பாடுகளின்கீழ் விதிக்கப்பட்ட தேவைப்பாடு எதனையும் மீறுகின்ற;

(ஆ) அவரது அறிவுக்கெட்டியவரை உண்மையற்றதாக அல்லது பிழையானதாக அல்லது பிழைவழியுய்க்கின்ற உள்ளடக்கங்களைக் கொண்டுள்ள ஏதேனும் தகவலை அல்லது ஏதேனும் விபரத்திரட்டு, ஆவணம் அல்லது இலத்திரனியல் பதிவேடு அல்லது கூற்றை இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அல்லது இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி அல்லது ஏதேனும் விதி அல்லது பணிப்புரையின் ஏற்பாடுகளின்கீழ் விதிக்கப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டின் நோக்கங்களுக்காகக் கொடுத்துதவுகின்ற அல்லது காண்பிக்கின்ற;

(இ) ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது ஆணைக்குழுவின் அலுவலரொருவர் அல்லது சேவையாளரொருவர் அல்லது ஆணைக்குழு எவ்வாளுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டுள்ளதோ அந்த எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதியின் அல்லது விதியின்கீழ் அவரது கடமைகளை நிறைவேற்றும்போது அவரை அச்சுறுத்துகின்ற அல்லது பயமுறுத்துகின்ற அல்லது வேண்டுமென்றே தடை செய்கின்ற, அவரின் மதிப்பைக்குறைக்கும் அல்லது அவரை அவதூறுக்குட்படுத்தும் நோக்குடன் எவையேனும் அவமதிப்பான கூற்றுக்களை அளிக்கின்ற மற்றும் ஏதேனும் கூற்றை வெளியிடுகின்ற;

(ஈ) ஏதேனும் தகவலை அல்லது இலத்திரனியல் பதிவேட்டை ஏதேனும் முறையில் பொய்யான தாக்குகின்ற அல்லது சந்தை நிறுவனமொன்றின், சந்தை இடைத்தரகரின் அல்லது நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்றின் அல்லது அதனுடன் தொடர்புபட்ட கம்பெனிகளுள் ஏதேனுமொன்றின் தொழில் தொடர்பாக ஏதேனும் புத்தகம் அல்லது இலத்திரனியல் பதிவேட்டில் ஏதேனும் பிழைவழியுய்க்கும் அல்லது பொய்யான தகவலைத் தேக்கிவைக்கின்ற;

(உ) எவரேனும் ஆளை மோசடி செய்யும் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிப்பதைத் தடுக்கும், தாமதப்படுத்தும் அல்லது தடைசெய்யும் உட்கருத்துடன் இச்சட்டத்தின்கீழ், அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், விதிகள் அல்லது பணிப்புரைகளின்கீழ் வைத்திருக்கப்படுவதற்கு அல்லது பேணப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் புத்தகம், ஆவணம் அல்லது இலத்திரனியல் பதிவேடு அல்லது கணக்குகளை அழிக்கின்ற, மறைத்து வைக்கின்ற, உருவழிக்கின்ற, மாற்றுகின்ற, அனுப்புகின்ற அல்லது அனுப்புவதற்கு எத்தனிக்கின்ற அல்லது அதன் வளவுகளிலிருந்து அகற்றுவதற்கு அல்லது இலங்கைக்கு வெளியே அனுப்புவதற்கு வேறு எவரேனும் ஆளுடன் சதி செய்கின்ற; அல்லது எவரேனும் ஆள், பாகம் V இன் கீழான தவறுகள் தவிர்ந்த தவறொன்றைப் புரிகின்றார்.

(2) இதன் (1) ஆம் உட்பிரிவில் கூறப்பட்டவாறு தவறொன்றைப் புரிவதற்கு உடந்தையளிக்கின்ற அல்லது சதிசெய்கின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் (1) ஆம் உட்பிரிவின் கீழானவொரு தவறுக்காகத் தண்டிக்கப்படற்பாலதாக வுள்ளவாறான அதே முறையில் தண்டிக்கப்படற்பாலவராதலும் வேண்டும்.

(3) பாகம் ஏ இலுள்ள தவறுகள் தவிர்ந்த இச்சட்டத்தின்கீழான எல்லாத் தவறுகளும் நீதிவான் நீதிமன்றத்தில் விளங்கப்படற்பாலனவாதல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின்கீழ் தண்டம் எதுவும் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்படாததான இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்கு குற்றவாளியாகக் காணப்படும் எவரேனுமாள் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மீது பத்து மில்லியன் ரூபாவுக்கு குறையாததும் நூறு மில்லியன் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது பத்து ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை மற்றும் குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(4) இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றினால் புரியப்படுகின்றவிடத்து, தவறு புரியப்பட்ட நேரத்தில் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர், முகாமையாளர் அல்லது வேறு அதையொத்த அலுவலராக இருந்த எவரேனுமாள், அத்தகைய தவறானது அவரது அறிவுக்கெட்டாமல் அல்லது மறைமுக ஆதரவு இன்றிப் புரியப்பட்டது எனவும் அல்லது அவரின் பணிகளின் தன்மையையும் விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு அத்தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு அவர் பிரயோகித்திருக்கவேண்டியவாறான உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் பிரயோகித்தார் எனவும் எண்பித்தாலொழிய, அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

176. (1) ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம், இச்சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்ட எல்லாக் குற்றவழக்குகளையும் நடாத்துவதில் ஏற்புடையற்பாலதாதல் வேண்டுமென்பதுடன் பாகம் ஏ இன்கீழான தவறுகள்தவிர, ஆணைக்குழுவின் சார்பிலான வழக்குநடவடிக்கைகள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தொடுக்கப்படுதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழான குற்றவழக்குகளிலும் குடியியல் வழக்குகளிலும், 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல் சட்டத்தின் ஏற்பாடுகள், இலத்திரனியல் பதிவேடுகள் அல்லது வேறு ஆவணங்களின் சான்றின் ஏல்தகவு தொடர்பாக ஏற்புடையனவாதல் வேண்டும்.

177. இச்சட்டத்தின் பாகம் V இல் நிரற்படுத்தப்பட்ட தவறுகள் தவிர, ஆணைக்குழு, இச்சட்டத்தின்கீழ் தவறானது புரியப்பட்ட சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய தவறுக்கு விதிக்கப்படற்பாலதான அதிகபட்சக் குற்றப்பணத்தின் அரை வாசியை விஞ்சாத பணத்தொகையொன்றுக்காக அத்தகைய தவறை இணக்கலாமென்பதுடன் இப்பிரிவின்கீழ் தவறொன்றை இணக்குவதில் ஆணைக்குழுவினால் பெறப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ஆணைக்குழுவின் நட்டஈட்டு நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

178. (1) பாகம் V இன்கீழான தவறுகள் தொடர்பாகத் தவிர, எவரேனுமாள் -

(அ) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை மீறினால் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் அல்லது விதிகளின் மீறுகையைப் புரிந்தால்;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஓர் உரிமத்தின் அல்லது பதிவின் ஏதேனும் நிபந்தனையை மீறினால் அல்லது அதற்கிணங்கியொழுகத் தவறினால்;

(இ) ஒரு சந்தை நிறுவனத்தின் விதிகளினது ஏதேனும் ஏற்பாட்டுக்கு இணங்கியொழுகத் தவறினால்; அல்லது

(ஈ) ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்ட ஏதேனும் எழுத்திலான அறிவித்தல், வழிகாட்டுநெறி, பணிப்புரை அல்லது நிபந்தனைக்கு இணங்கியொழுகத்தவறினால், ஆணைக்குழுவானது, மீறுகை, இணங்கியொழுகாமை அல்லது முரண்பாட்டின் தன்மையையும் முறையையும் (1) ஆம் உட்பிரிவின் பந்திகள் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட சந்தையின்மீது அத்தகைய மீறுகை, இணங்கியொழுகாமை அல்லது முரண்பாட்டின் தாக்கத்தையும் கருத்திற்கொண்டு பின்வரும் நிருவாக நடவடிக்கைகளுள் ஏதேனும் ஒன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றை எடுக்கலாம்:-

(i) மீறுகையை, இணங்கியொழுகாமையை அல்லது முரண்பாட்டைப் புரிந்துள்ள ஆளை, அத்தகைய ஏற்பாடுகள், ஒழுங்குவிதிகள், விதிகள், எழுத்திலான அறிவித்தல், நிபந்தனை, பணிப்புரை அல்லது வழிகாட்டுநெறிக்கு இணங்கியொழுகும்படி, அதனைப் பின்பற்றும்படி, வலுவுறுத்தும்படி அல்லது அதற்குப் பயன்கொடுக்கும்படி பணிக்கலாம்;

(ii) மீறுகையின், இணங்கியொழுகாமையின் அல்லது முரண்பாட்டின் கடுமையானதன்மை அல்லது பாரதூரமானதன்மையின் விகிதாசாரப்படி, மீறுகையை, இணங்கியொழுகாமையை அல்லது முரண்பாட்டைப் புரிந்துள்ள ஆளின்மீது தண்ட மொன்றை விதிக்கலாமென்பதுடன் அத்தகைய தண்டம் எப்பட்சத்திலும் ஐம்பது மில்லியன் ரூபாவை விஞ்சுதலுமாகாது;

(iii) மீறுகையை, இணங்கியொழுகாமையை அல்லது முரண்பாட்டைப் புரிந்துள்ள ஆளைக் கண்டிக்கலாம்;

(iv) மீறுகையை, இணங்கியொழுகாமையை அல்லது முரண்பாட்டைப் புரிந்துள்ள ஆளை, மீறுகையினால், இணங்கியொழுகாமையினால் அல்லது முரண்பாட்டினால் இன்னலுற்ற வேறெவரேனுமாளுக்கு இழப்பீடு செய்தலுட்பட, அத்தகைய மீறுகையின், இணங்கியொழுகாமையின் அல்லது முரண்பாட்டின் தாக்கத்தைத் தணிப்பதற்கென மீறுகையை, இணங்கியொழுகாமையை அல்லது முரண்பாட்டைப் பரிகரிப்பதற்கு ஆணைக்குழு பணிக்கக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கும்படி தேவைப்படுத்தலாம்;

(v) ஒரு நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியின் ஒரு மேம்படுத்துநரின் அல்லது பணிப்பாளரின் விடயத்தில், பந்திகள் (i) முதல் (iv) வரையின்கீழ் எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகளுடன் மேலதிகமாக, ஆணைக்குழு, நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியின் பிணையங்கள்மீது தவணைநீட்டிப்பு ஒன்றை விதிக்கலாம் அல்லது நிரற்படுத்தப்பட்ட பகிரங்க கம்பெனியின் பிணையங்களில் அல்லது தகுதியானவையென ஆணைக்குழு கருதுகின்ற வேறெவையேனும் பிணையங்களில் மேம்படுத்துநர் அல்லது பணிப்பாளர் அல்லது மேம்படுத்துநருடன் அல்லது பணிப்பாளருடன் சம்பந்தப்பட்ட எவரேனுமாள் வியாபாரஞ் செய்வதனை அல்லது அவற்றைக் கையாள்வதனை தடைசெய்யலாம்;

(2) ஆணைக்குழு, மீறுகையில், இணங்கியொழுகாமையில் அல்லது முரண்பாட்டில் உள்ள ஆளுக்குக் கேட்கப்படுவதற்கான வாய்ப்பொன்றை வழங்காமல் உட்பிரிவு (1) இன்கீழ் ஏதேனும் நடவடிக்கையை எடுத்தலாகாது.

(3) உட்பிரிவு (1) இன் பந்தி (iv) இன் நோக்கங்களுக்காக, மீறுகையில், இணங்கியொழுகாமையில் அல்லது முரண்பாட்டில் உள்ள ஆளொருவரினால் இழப்பீடு செய்யப்பட வேண்டுமா அல்லவா என்பதைத் தீர்மானிப்பதில் ஆணைக்குழு பின்வருவனவற்றைக் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்:-

(அ) மீறுகையில், இணங்கியொழுகாமையில் அல்லது முரண்பாட்டில் உள்ள அத்தகைய ஆளுக்குத் திரண்டுள்ள இலாபங்கள்; அல்லது

(ஆ) மீறுகையின், இணங்கியொழுகாமையின் அல்லது முரண்பாட்டின் விளைவாக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களினால் இழப்பு உறப்பட்டுள்ளதா அல்லது வேறுவகையில் பங்கமான முறையில் பாதிக்கப்பட்டுள்ளார்களா என்றும்.

(4) ஆணைக்குழு, சந்தை நிறுவனமொன்றின் விதிகளின்கீழ் எவரேனும் ஆளுக்கு எதிராக உட்பிரிவு (1) இன்கீழ் ஏதேனும் நடவடிக்கையை எடுக்கின்றவிடத்து, ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் நடவடிக்கையைச் சந்தை நிறுவனத்துக்கு ஆணைக் குழு அறிவித்தல் வேண்டும்.

(5) இப்பிரிவில் உள்ள எதுவும், பின்வருவனவற்றைச் செய்வதிலிருந்து ஆணைக்குழுவைத் தடைசெய்தலாகாது:

(அ) தண்டம் ஒன்றை விதித்தல் உட்பட, சந்தை நிறுவனமொன்றின் விதிகளை மீறியமைக்காக, அவற்றுக்கு இணங்கியொழுகாமைக்காக அல்லது முரணாக நடப்பதற்காக அதன் வியாபாரஞ்செய்யும் பங்குபற்றுநர்கள், தீர்வக உறுப்பினர்கள் அல்லது வைப்பகப் பங்குபற்றுநர்கள், நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி ஒன்று மற்றும் நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்றின் பணிப்பாளருக்கு எதிராக ஏதேனும் ஒழுக்காற்று நடவடிக்கையை எடுப்பதற்கு அச்சந்தை நிறுவனத்தைப் பணித்தல்; அல்லது

(ஆ) மீறுகையை, இணைந்தொழுகாமையை அல்லது முரண்பாட்டைப் புரிந்துள்ள ஆளுக்கு எதிராக இச்சட்டத்தின்கீழ் எடுப்பதற்கு அது தத்துவமளிக்கப்பட்டுள்ள வேறு ஏதேனும் நடவடிக்கையை எடுத்தல்.

(6) (அ) ஓராம் உட்பிரிவின் (ii) ஆம் பந்தியின்கீழ் செய்யப்பட்ட முடிபொன்றினால் இன்னலுறும் எவரேனுமாள், அத்தகைய முடிபு பெற்றப்பட்டதிலிருந்து பதினான்கு நாட்களினுள் அமைச்சருக்கு மேன்முறையீடொன்றைச் சமர்ப்பிக்கலாம்.

(ஆ) பந்தி (அ)வின்கீழ் அமைச்சருக்கு மேன்முறையீடொன்று செய்யப்பட்டமை எவ்வாறிருப்பினும், ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்ட ஏதேனும் நிருவாகத் தடை, அமைச்சர் தமது முடிபை செய்யும்வரை பயனுடையதாகத் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(இ) அமைச்சர், பந்தி (அ) இன்கீழ் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றின்மீது, ஆணைக்குழுவையும் பந்தி (அ) வின்கீழ் மேன்முறையீட்டைச் செய்த ஆளையும் கேட்டபின்னர், அத்தகைய மேன்முறையீடு கிடைக்கப்பெற்றபின்னர் ஒரு மாத காலப் பகுதியினுள்,-

(i) மேன்முறையீட்டை அனுமதித்து தண்டத்தைத் தணிக்கலாம்;

(ii) மேன்முறையீட்டுக்கு அனுமதி மறுக்கலாம்.

(ஈ) ஆணைக்குழு அமைச்சரின் முடிபுக்குப் பயன்கொடுத்தல் வேண்டும்.

(7) உட்பிரிவு (1) இன்கீழ் ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்ட தண்டமொன்றைச் செலுத்துவதற்கு ஆளொருவர் தவறியுள்ள விடத்து, அத்தகைய தண்டமாக வருமதியான பணத்தொகை, நீதிமன்றம் அதன் சாதாரண நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதில் விதிக்கக்கூடிய குற்றப்பணத்தொகையை அத்தகைய பணத்தொகை விஞ்சலாம் என்பது எவ்வாறிருப்பினும் மற்றும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாகவுள்ள ஏற்பாடு எவ்வாறிருப்பினும், ஆணைக்குழுவினால் நீதிவான் நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது அத்தகைய நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்று என்றாற்போன்று அதே முறையில் அறவிடப்படலாம்; அவ்வாறு அறவிடப்பட்ட பணத்தொகை ஆணைக்குழுவுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(8) வேறேதேனும் பரிகாரத்துக்குப் பங்கமின்றி உட்பிரிவு (1) இன் (iv) ஆம் பந்தியின்கீழான நிருவாகத் தடைவிதிப்பு ஒன்று, பணவகையான கொடுப்பனவு என்ற வடிவத்தில் இழப்பீட்டைச் செய்யும்படி மீறுகையில், இணங்கியொழுகாமையில் அல்லது முரண்பாட்டில் உள்ள ஆளைத் தேவைப்படுத்துகின்றவிடத்தும் மீறுகையில், இணங்கியொழுகாமையில் அல்லது முரண்பாட்டில் உள்ள அவ்வாள் இழப்பீடு செய்வதற்குத் தவறுகின்றவிடத்தும், நீதிமன்றம் அதன் சாதாரண நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதில் விதிக்கக்கூடிய குற்றப்பணத்தொகையை அத்தகைய பணத்தொகை விஞ்சலாம் என்பது எவ்வாறிருப்பினும், மற்றும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாகவுள்ள ஏற்பாடு எவ்வாறிருப்பினும், ஆணைக்குழுவினால் நீதிவான் நீதிமன்றத்துக்கு செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது அத்தகைய நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்று என்றாற்போன்று அதே முறையில் அறவிடப்படலாம்; அவ்வாறு அறவிடப்பட்ட பணத்தொகை ஆணைக்குழுவுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(9) உட்பிரிவு (1) இன்கீழ் பெறப்பட்ட பணங்கள் இன்னலுற்ற ஆட்களை நிச்சயித்தல் அல்லது அவர்களுக்கு அறிவித்தல் சிரமமானதாக இருப்பதன் காரணமாகப் பகிர்ந்தளிக்கப்படாதிருக்கின்ற விடத்து அத்தகைய தொகை

(அ) பாகம் VI இன்கீழ் பேணப்படும் ஆணைக்குழுவின் நட்டஈட்டு நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்; அல்லது

(ஆ) ஆணைக்குழு தீர்மானிக்கக்கூடியவாறாகப் பிணையங்கள் சந்தையை ஒழுங்குபடுத்துவதற்கான ஆகுசெலவுகளைக் கொடுத்துத்தீர்ப்பதற்கு ஆணைக்குழுவினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

179. (1) வாடிக்கையாளர்களின் பணங்களை அல்லது சொத்துக்களை கையாளும் அல்லது அப்பணங்களும் சொத்துக்களும் பொறுப்பிக்கப்பட்டுள்ள சந்தை இடைத்தரகரொருவர் அவரது தொழிலின் போது இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதி அல்லது விதி அல்லது பணிப்புரையின் ஏதேனும் ஏற்பாட்டை, மீறுகின்றவிடத்தும் அல்லது தொடர்ந்து தகுதியானவரும் தகுந்தவரும் அல்லவராக இருக்கின்றவிடத்தும், முதலீட்டாளர்கள், சந்தை இடைத்தரகரொருவரின் வாடிக்கை யாளர்கள் அல்லது கூட்டு முதலீட்டுத் திட்டங்களின் கூறு வைத்திருப்பவர்களின் அக்கறைகளுக்குத் தீங்கு விளைவிக்கப்படு வதற்குச் சாத்தியமுள்ளது அல்லது தீங்கு விளைவிக்கப்படுகின்றது என ஆணைக்குழு கருதுகின்றவிடத்தும், ஆணைக்குழு, பின்வரும் நடவடிக்கைகளில் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவற்றை எடுக்கலாம்:-

(அ) ஆணைக்குழு தோதானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய முறையில் எவரேனும் முதலீட்டாளரின் அல்லது அதன் வாடிக்கையாளர்களின் பணங்களையும் ஆதனங்களையும் கையாளாமல் இருப்பதற்கு அல்லது அத்தகைய முதலீட்டாளர்கள் அல்லது அதன் வாடிக்கையாளர்களின் பணங்கள் மற்றும் ஆதனங்கள் அல்லது அத்தகைய பணங்கள் அல்லது ஆதனங்களுடன் தொடர்பான ஏதேனும் ஆவணம் அல்லது இலத்திரனியல் பதிவேட்டை ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான வேறு எவரேனும் ஆளுக்குக் கைமாற்றுவதற்குச் சந்தை இடைத்தரகரைப் பணித்தல்;

(ஆ) பணங்கள் அல்லது ஆதனங்களுடன் தொடர்பான ஏதேனும் ஆவணம் அல்லது இலத்திரனியல் பதிவேட்டை ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான வேறு எவரேனும் ஆளுக்குக் கைமாற்றுவதற்கு நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவரைப் பணித்தல்;

(இ) சந்தை இடைத்தரகரைக் கொடுக்கல்வாங்கல்களைச் செய்து கொள்வதிலிருந்தும், ஆட்களிடமிருந்து தொழிலைப் பரிந்துகேட்பதில் இருந்தும் தடை செய்தல் அல்லது சந்தை இடைத்தரகரை அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளரை ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய முறையில் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்குத் தேவைப்படுத்துதல்; அல்லது

(ஈ) சந்தை இடைத்தரகர் ஒருவரை அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவரை, ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே உள்ள இடமொன்றில் ஆதனத்தைப் பேணுவதற்குத் தேவைப்படுத்துதல்.

(2) ஆணைக்குழு, உட்பிரிவு (1) இன்கீழ் ஏதேனும் நடவடிக்கையை எடுப்பதற்கு முன்னர் கேட்கப்படுவதற்கு வாய்ப்பொன்றை அத்தகைய சந்தை இடைத்தரகருக்கு வழங்காமல் இப்பிரிவின்கீழ் ஏதேனும் நடவடிக்கையை எடுத்தலாகாது.

(3) ஆணைக்குழு, இப்பிரிவின்கீழ் நடவடிக்கையொன்றை எடுப்பதில் ஏதேனும் தாமதமானது, முதலீட்டாளர்களின் அக்கறைக்கு, சந்தை இடைத்தரகரின் வாடிக்கையாளர்களின் அக்கறைக்கு அல்லது பொதுமக்கள் அக்கறைக்குப் பங்கமானதாகவிருக்கும் எனக் கருதினால் உட்பிரிவு (2) ஏற்புடையதாதலாகாது.

180. (1) ஆணைக்குழுவினால் நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் ஒன்று செய்யப்பட்டதன்மீது, எவரேனும் ஆள் இச்சட்டத்தின், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் அல்லது ஏதேனும் விதியின் ஏற்பாடொன்றை மீறியுள்ளார் அல்லது மீறுவதற்கு நியாயமான சாத்தியம் ஒன்று உள்ளது என அல்லது ஆளொருவர் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புரைக்கு இணங்கியொழுகத் தவறியுள்ளார் அல்லது தவறுகின்ற சாத்தியம் உள்ளது என நீதிமன்றத்துக்குத் தோன்றினால் நீதிமன்றம் பின்வரும் கட்டளைகளை ஆக்கலாம்:-

(அ) மீறுகையின் இல்லாதொழிப்பைத் தடைசெய்யும் அல்லது தேவைப்படுத்தும் கட்டளை;

(ஆ) கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள பிணையங்களின் ஏதேனும் வகுப்புத் தொடர்பில், பிணையங்களைக் கையாளுவதிலிருந்து அல்லது அவற்றை வியாபாரஞ் செய்வதிலிருந்து ஆளொருவரைத் தடைசெய்யும் கட்டளை;

(இ) பிணையங்கள் கொடுக்கல்வாங்கல் ஒன்று வறிதாகவிருப்பதாக வெளிப்படுத்தும் கட்டளை;

(ஈ) அத்தகைய ஆள், கொள்ளுவதற்கு, கையுதிர்ப்பதற்கு அல்லது வேறுவகையில் கையாளுவதற்கு நியாயமான முறையில் சாத்தியமுள்ளது என நீதிமன்றம் திருப்திப்படுகின்ற சொத்துக்களைக் கொள்வதிலிருந்தும் கையுதிர்ப்பதிலிருந்தும் அல்லது வேறுவகையில் கையாளுவதிலிருந்தும் அவ்வாளைத் தடைசெய்யும் கட்டளை;

(உ) கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் பிணை யங்களைக் கையுதிர்ப்பதற்கு ஆளொருவரைப் பணிக்கும் கட்டளை;

(ஊ) கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் பிணையங்களுடன் இணைக்கப்பட்ட ஏதேனும் வாக்குரிமை அல்லது வேறு உரிமைகளைப் பிரயோகித்தலைத் தடைசெய்யும் கட்டளை;

(எ) கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் பிணையங்களைக் கிடைக்கக்கூடியனவாக்குவதிலிருந்தும், ஒப்பப்பணத்திற்காக அல்லது கொள்வனவுக்காகக் கொடைமுனைவதிலிருந்தும் அல்லது ஒப்பப்பணம் செலுத்துவதற்கு அல்லது கொள்வனவு செய்வதற்குக் கோரிக்கையொன்றை வழங்குவதிலிருந்தும் அல்லது அவற்றைக் குறித்தொதுக்குவதிலிருந்தும் ஆளொருவரைத் தடைசெய்யும் கட்டளை;

(ஏ) சந்தை இடைத்தரகர் ஒருவரின் ஆதனத்தின்மேல் அல்லது நம்பிக்கைப்பொறுப்பின் மீதாயினுஞ்சரி அல்லது வேறுவகையிலாயினுஞ்சரி இன்னோர் ஆளுக்கு அல்லது இன்னோர் ஆள் சார்பில் அத்தகைய ஆளினால் வைத்திருக்கப்பட்டுள்ள ஆதனத்தின்மேல் பெறுநர் ஒருவரை அல்லது ஒழிப்போன் ஒருவரை நியமிக்கும் கட்டளை; அல்லது

(ஐ) கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட பிணையங்கள் அல்லது அத்தகைய வேறு ஆதனத்தை நீதிமன்றத்தினால் நியமிக்கப்படும் நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவருக்கு உரித்தாக்கும் கட்டளை.

(ஒ) ஆள் ஒருவர் இச்சட்டத்தின்கீழ் செய்வதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் செயலைச் செய்வதற்கு அல்லது ஏதேனும் பணிப்புரைக்கு இணங்கியொழுகுவதற்கு அத்தகைய ஆள் ஒருவர் மறுத்துள்ள அல்லது தவறியுள்ள அல்லது மறுக்கின்ற அல்லது தவறுகின்ற அல்லது மறுப்பதற்கு அல்லது தவறுவதற்கு உத்தேசிக்கின்றவிடத்து அத்தகைய செயலைச் செய்வதற்கு அல்லது அத்தகைய பணிப்புரைக்கு இணங்கியொழுகுவதற்கு அத்தகைய ஆளைத் தேவைப்படுத்தும் கட்டளை.

(ஓ) அத்தகைய மீறுகையினால் இன்னலுற்ற வேறு எவரேனும் ஆளுக்கு இழப்பீடு செய்தல் உட்பட அதனைப் பரிகரிப்பதற்கு அல்லது அதன் தாக்கத்தைத் தணிப்பதற்கு நீதிமன்றம் பணிக்கின்றவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுப்பதற்கு அவ்வாளை அல்லது அறிந்துகொண்டு மீறுகையில் சம்பந்தப்பட்டுள்ளதாகத் தோன்றும் எவரேனும் வேறு ஆளைத் தேவைப்படுத்தும் கட்டளை.

(ஔ) இப்பிரிவின்கீழான வேறு ஏதேனும் கட்டளைக்கு இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காகக் குறித்துரைக்கப்பட்ட செயல் ஒன்றைச் செய்வதற்கு அல்லது செய்யாது தவிர்ப்பதற்கு ஆளொருவரைப் பணிக்கும் கட்டளை.

(க) ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பணிப்புரையொன்றுக்கு இணங்கியொழுகுவதற்கு ஆளொருவரைப் பணிக்கும் கட்டளை. அல்லது

(ங) இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் எவற்றின்கீழும் கட்டளையொன்றை ஆக்குவதன் விளைவாக விரும்பத்தக்கதாகக் கருதப்படும் ஏதேனும் துணைநிலைக் கருமத்தின்மீதான கட்டளை.

(2) விண்ணப்பமொன்று, உட்பிரிவு (1) இன்கீழான கட்டளையொன்றுக்காக நீதிமன்றமொன்றுக்குச் செய்யப்பட்டால், நீதிமன்றம் விண்ணப்பத்தை இறுதியாகத் தீர்மானிக்கும்வரை மறுதிறத்தவர் இல்லா இடைக்காலக் கட்டளையொன்றை ஆக்கலாம்.

(3) நீதிமன்றம் உட்பிரிவு (1) இன்கீழ் கட்டளையொன்றை ஆக்குவதற்கு முன்னர், அது தகுதியானவர்களெனக் கருதுகின்றவாறான அத்தகைய ஆட்களுக்கு விண்ணப்பம் பற்றிய அறிவித்தல் கொடுக்கப்பட வேண்டும் எனப் பணிக்கலாம் அல்லது அது தகுதியானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய முறையில் அல்லது இருவகையிலும் விண்ணப்பம் பற்றிய அறிவித்தல் வெளியிடப்பட வேண்டும் எனப் பணிக்கலாம்.

(4) ஆணைக்குழுவினால் அல்லது ஆணைக்குழுவினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் உட்பிரிவு (1) இன்கீழான கட்டளையொன்றிற்கான விண்ணப்பமொன்று செய்யப்படுகின்றவிடத்து, நீதிமன்றம், ஆணைக்குழுவினால் அல்லது அதன் சார்பில் கொடுக்கப்படவேண்டிய சேதவீடுகள்பற்றிய ஏதேனும் பொறுப்பேற்பை, கட்டளையை வழங்குவதற்கான நிபந்தனையொன்றாகத் தேவைப்படுத்துதலாகாது.

(5) சந்தை இடைத்தரகர் ஒருவரின் ஆதனத்தின் பெறுநர் ஒருவராக, உட்பிரிவு (1) இன்கீழ் நீதிமன்றத்தின் கட்டளையினால் நியமிக்கப்பட்ட ஆளொருவர் -

(அ) எந்த ஆதனத்துக்கு அவர் பெறுநராக நியமிக்கப்பட்டுள்ளாரோ அந்த ஏதேனும் ஆதனத்தை அவருக்கு ஒப்படைப்பதற்கு அல்லது நியாயமான முறையில் தேவைப்படுத்தப்படக்கூடியவாறாக அந்த ஆதனம் சம்பந்தமான எல்லாத் தகவல்களையும் அவருக்குக் கொடுப்பதற்குச் சந்தை இடைத்தரகரைத் தேவைப் படுத்தலாம்;

(ஆ) எந்த ஆதனத்துக்கு அவர் பெறுநராக நியமிக்கப்பட் டுள்ளாரோ அந்த ஏதேனும் ஆதனத்தைக் கொள்ளலாம் என்பதுடன் உடைமையும் கொள்ளலாம்;

(இ) அவரினால் கொள்ளப்பட்ட ஏதேனும் ஆதனத்தை அல்லது எந்த ஆதனத்தை அவர் உடைமை கொண்டுள்ளாரோ அந்த ஏதேனும் ஆதனத்தை வைத்திருப்பவர் எந்த முறையில் ஆதனத்தைச் சட்டமுறையாகக் கையாளலாமோ அந்த ஏதேனும் முறையில் அவ்வாதனத்தைக் கையாளலாம்; அத்துடன்

(ஈ) நீதிமன்றம் கட்டளையில் குறித்துரைக்கின்றவாறு ஆதனம் தொடர்பில் அத்தகைய வேறு தத்துவங்களையும் கொண்டிருக்கிறார்.

(6) இப்பிரிவில், சந்தை இடைத்தரகர் ஒருவர் தொடர்பாக "ஆதனம்" என்பது, பணங்கள், பிணையங்கள் அல்லது வேறு ஆதனம் மற்றும் பிணையங்களுக்கான உரித்தாவணங்கள் அல்லது சந்தை இடைத்தரகரின் தொழிலின்போது அல்லது அத்தொழில் சம்பந்தமாக சந்தை இடைத்தரகரால் அல்லது இன்னோர் ஆளால் எவரேனும் வேறு ஆளுக்குப் பொறுப்பிக்கப்பட்ட அல்லது அவர் சார்பில் பெறப்பட்ட வேறு ஆதனம் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

(7) இப்பிரிவின்கீழ் நீதிமன்றத்தின் கட்டளையொன்றினால் நியமிக்கப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பாளர் -

(அ) கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பிணையத்தை அல்லது அத்தகைய வேறு ஆதனத்தை நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு ஒப்படைப்பதற்கு அல்லது நியாயமான முறையில் தேவைப்படுத்தப்படக்கூடியவாறாகப் பிணையங்கள் சம்பந்தமான எல்லாத் தகவல்களையும் நம்பிக்கைப்பொறுப்பாளருக்குக் கொடுப்பதற்கு எவரேனும் ஆளைத் தேவைப்படுத்தலாம்;

(ஆ) பிணையங்களை அல்லது அத்தகைய வேறு ஆதனத்தைக் கொள்ளலாம் என்பதுடன் உடைமையும் கொள்ளலாம்;

(இ) அது தகுதியானதெனக் கருதக்கூடியவாறான ஏதேனும் முறையில் பிணையங்களை அல்லது அத்தகைய வேறு ஆதனத்தைக் கையாளலாம்; அத்துடன்

(ஈ) கட்டளையில் நீதிமன்றத்தினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறாகப் பிணையங்கள் அல்லது அத்தகைய வேறு ஆதனம் தொடர்பில் அத்தகைய வேறு தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(8) உட்பிரிவு (1) இன்கீழ் பிணையங்களின் கையாளுகையின் அல்லது கையுதிர்ப்பின் வரும்படிகள் நீதிமன்றத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வரும்படிகளின் முழுமைக்கும் அல்லது ஏதேனும் பாகத்துக்கு நன்மை பெறும் முறையில் உரித்துள்ளவரென உரிமைகோரும் எவரேனும் ஆள், நீதிமன்றத்துக்கான அத்தகைய கொடுப்பனவிலிருந்து முப்பது நாட்களினுள் அத்தகைய ஆளுக்கு வருமதியாகவுள்ள வரும்படிகளிலிருந்து கொடுப்பனவுக்காக நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

(9) நீதிமன்றம், இப்பிரிவின்கீழ் அதனால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றை ஒழிக்கலாம், வேறுபடுத்தலாம் அல்லது நிறைவேற்றலாம் அல்லது அத்தகைய கட்டளையொன்றினால் இன்னலுற்ற திறத்தவர் ஒருவரின் விண்ணப்பமொன்று பற்றி ஆணைக்குழுவுக்கான முன்னறிவித்தலுடன் இன்னலுற்றதிறத்தவரின் அத்தகைய விண்ணப்பத்தின் மீது அத்தகைய கட்டளையின் தொழிற்பாட்டை இடைநிறுத்தலாம்.

181. ஆணைக்குழு, பொதுமக்கள் அக்கறைக்காக அல்லது முதலீட்டாளர்களின் பாதுகாப்புக்காக அது அவசியமானது அல்லது உசிதமானது எனக் கருதுகின்றவிடத்தும் அது தகுதியானதென கருதுகின்றவாறான அத்தகைய வடிவத்தில் அல்லது முறையிலும் இச்சட்டம், ஒழுங்குவிதிகள், விதிகள் அல்லது பணிப்புரைகளின்கீழ் ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட ஏதேனும் முடிபு அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பான ஏதேனும் தகவலை வெளியிடலாம்.

182. (1) அமைச்சர், ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது, விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பில் அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப் படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் அடங்கியுள்ள ஏற்பாடுகளின் பொதுமைக்குப் பங்கமின்றி, அமைச்சர், பின்வருவன தொடர்பாக ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:

(அ) சந்தை நிறுவனம் ஒன்றுக்கு உரிமம் வழங்கும் நோக்கத்துக்காகத் திருப்திசெய்யப்படவேண்டிய கட்டணங்கள், நியதிகள் மற்றும் நிபந்தனைகள்;

(ஆ) இலங்கையில் வெளிநாட்டு உருவகமொன்றை நிரற்படுத்துதல் அல்லது தகவலைப் பகிர்தல் தொடர்பில் ஆணைக்குழுவுக்கும் அதன் வெளிநாட்டு சரிநேர் அலுவலருக்குமிடையிலான அல்லது வேறு ஏதேனும் ஒழுங்கமைப்புக்கும் இடையிலான ஏதேனும் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்குப் பயன்கொடுத்தல்; அத்துடன்

(இ) பிணையங்களாக வகுப்பாக்கஞ்செய்யப்படாத உற்பத்தி அல்லது உற்பத்திகளின் வகுப்பு.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியான அளவு விரைவாக அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அத்தகைய அங்கீகார மறுப்புத் தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

183. (1) ஆணைக்குழு, இச்சட்டத்தின்கீழ் எந்தக் கருமம் தொடர்பில் விதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்படு கின்றதோ அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படுவதற்குக் குறிப்பிடப்படுகின்றதோ அல்லது தேவைப்படுத்தப்படுகின்றதோ அக்கருமத்தின்மீது, பின்வருவன உட்பட ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல் விதிகளை ஆக்கலாம்:-

(அ) பரிவர்த்தனை ஒன்றில் பிணையங்களை நிரற்படுத்துதலும் வியாபாரஞ்செய்தலும் மற்றும் நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனிகளால் உரிமைகள் அல்லது மிகையூதியம் என்ற வகையாக அல்லது வேறுவகையாக எவையேனும் மேலதிகப் பிணையங்களின் அடுத்துப்பின்னரான வழங்குகை அல்லது அத்தகைய கம்பெனிகளை நிரலிலிருந்து அகற்றுதல்;

(ஆ) பரிவர்த்தனை ஒன்றில் நிரற்படுத்தல் மற்றும் வியாபாரஞ் செய்தல் தொடர்பில் நிரற்படுத்தப்பட்ட வெளிநாட்டு உருவகங்களை ஒழுங்குபடுத்தலும் மற்றும் அதிலிருந்து எழும் வேறு தொடர்பான கருமங்களும்;

(இ) பிணையங்களைக் கொள்ளுதல் செய்த அல்லது கையுதிர்த்த ஆட்களினால் பிணையக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிச் சந்தை இடைத்தரகர்களினாலும் பிணையக் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிப் பரிவர்த்தனை ஒன்றினாலும் செய்யப்பட்ட வெளிக்காட்டுகைகள்;

(ஈ) சந்தை நிறுவனமொன்றினால், சந்தை இடைத்தரகரினால் புத்தகங்கள், பதிவேடுகள், கணக்குகள் மற்றும் கணக்காய்வுகளை முறையாகப் பேணுதல் மற்றும் அத்தகைய சந்தை நிறுவனம் மற்றும் சந்தை இடைத்தரகர் அவர்களது அலுவல்கள் பற்றி ஆணைக்குழுவுக்குக் கிரமமாக அறிக்கையிடுதல்;

(உ) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றை அல்லது வழங்கப்பட்ட பதிவொன்றை இல்லாதாக்குவதில் அல்லது இடைநிறுத்துவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை;

(ஊ) புத்தகங்கள், பதிவேடுகள், கணக்குகளின் வருடாந்தக் கணக்காய்வு மற்றும் சந்தை நிறுவனமொன்றினாலும் சந்தை இடைத்தரகரினாலும் நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல்;

(எ) கையேற்பு அல்லது ஒன்றிணைவின் இலக்கு நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்றாக விருக்கின்றவிடத்து அத்தகைய கையேற்பு அல்லது ஒன்றிணைவுகளை ஒழுங்குபடுத்தல்;

(ஏ) நம்பிக்கைப்பொறுப்பாளரினாலும் பிணையங்களை வழங்கும் ஒருவரினாலும் கூட்டு முதலீட்டுத் திட்டம் ஒன்றின் முகாமைக் கம்பெனி ஒன்றினாலும் அனுசரிக்கப்படவேண்டிய நடத்தைக் கோவை ஒன்று மற்றும் கூட்டு முதலீட்டுத் திட்டம் ஒன்றின் தொழிற்பாடு மற்றும் அங்கீகாரம் பற்றிய கோவை ஒன்று;

(ஐ) எந்தக் கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தினால் விதிகள் ஆக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்தக் கருமங்கள்;

(ஒ) சந்தை நிறுவனம் ஒன்றினாலும் சந்தை இடைத்தரகரினாலும் பின்பற்றப்படவேண்டிய சாதுரியமான முறையிலான தேவைப்பாடுகள், தகுதியானவையும் தகுந்தவையுமான கட்டளைக்கற்கள், பதிவேடு வைத்திருத்தல் மற்றும் வேறு ஆவணப்படுத்துகை முறைமைகள்;

(ஓ) நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி ஒன்றினால் அல்லது நிரற்படுத்தல் ஒன்றிற்கு விண்ணப்பித்துள்ள பகிரங்கக் கம்பெனி ஒன்றினால் அல்லது நிரற்படுத்தப்பட்ட வெளிநாட்டு உருவகமொன்றினால் வழங்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள முன் விபரணத்தின் வடிவம் மற்றும் உள்ளீடுகள்;

(ஔ) பங்குத்தொகுதித் தரகர் ஒருவரினால் அல்லது எல்லைக் கடன் வசதியளிப்பவர் ஒருவரினால் எல்லைக்கடன் கணக்கொன்றில் பிணையங்களின் தொழிற்பாடு;

(க) நிரற்படுத்தப்பட்ட பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனையில் வியாபாரஞ்செய்யப்பட்ட மூலாதாரப் பிணையங்கள் தொடர்பாகச் சந்தை நிறுவனம் ஒன்றினதும் சந்தை இடைத்தரகர்களினதும் தொழில் அலுவல்கள் மற்றும் செயற்பாடுகள்;

(ங) இச்சட்டத்தின் நோக்கெல்லையினுள் வருகின்ற நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனிகள், நிரற்படுத்தப்பட்ட வெளிநாட்டு உருவகங்கள் மற்றும் வேறு நிரற்படுத்தப்படாத கம்பெனிகள் தகவலை வெளிக்காட்டுதல் மற்றும் அறிக்கையிடல் அத்துடன் வழங்குதல்;

(ச) பரிவர்த்தனை ஒன்றுக்குச் செய்யப்பட்ட நிரற்படுத்தலுக் கான விண்ணப்பங்களை நிராகரித்தல் மற்றும் பரிவர்த்தனை ஒன்றினால் நிரற்படுத்தலை இடை நிறுத்தல் மற்றும் இல்லாதாக்குதல்;

(ஞ) உரிமமளிக்கப்பட்ட மூலாதாரப் பிணையங்கள் பரிவர்த்தனை ஒன்றின் வசதிகளைப் பயன்படுத்தி நிறைவேற்றப்பட்ட மூலாதாரப் பிணைய ஒப்பந்தங்களை வியாபாரஞ்செய்தல் தொடர்பானவை;

(ட) சந்தை ஆக்குநர்கள், பங்குத்தொகுதிக் கடன்கொடுநர்கள் மற்றும் பங்குத்தொகுதிக் கடன்பெறுநர்களின் செயற் பாடுகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் குறை விற்பனையை ஒழுங்குபடுத்தல்;

(ண) பரிவர்த்தனை ஒன்றிற்காக நம்பிக்கை நிதியமொன்றை அல்லது நட்டஈட்டு நிதியத்தைத் தாபித்தலும் தொழிற்படுத்துதலும்; அத்துடன்

(த) வாடிக்கையாளருக்கும் சந்தை இடைத்தரகருக்கும் இடையிலும் முறையான பங்குபற்றுநர்கள் அல்லது உறுப்பினர்களுக்கும் அல்லது சந்தை நிறுவனங்களுக்கு மிடையிலும் பிணக்குகளைத் தீர்த்துவைப்பதற்கான ஏற்பாடு.

(2) உட்பிரிவு (1) இன்கீழ் ஆக்கப்பட்ட விதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

184. வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், பரிவர்த்தனை ஒன்றினூடாக வியாபாரஞ் செய்யப்பட்ட மூலாதாரப் பிணையத்தின் ஒப்பந்தம் ஒன்று, பந்தயம் பிடித்தல் ஒப்பந்தம் ஒன்றாக அல்லது பணயம் வைத்தல் ஒப்பந்தம் ஒன்றாக விருப்பதாகக் கொள்ளப்படுதலாகாது.

185. இச்சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஒரு சந்தைத் தரகராக உரிமமளிக்கப்பட்ட சந்தை ஆக்குநர் ஒருவர், அதன் உரிமமளிக்கப்பட்ட செயற்பாடு தொடர்பான பணிகளை நிறைவேற்றும்போது இச்சட்டத்தின் 128 ஆம் அல்லது 129 ஆம் பிரிவின்கீழ் தவறொன்றைப் புரிகின்றவராகக் கருதப்படுதலாகாது.

186. ஆணைக்குழுவின் முடிபொன்றினால் இன்னலுறும் எவரேனுமாள், அரசியலமைப்பின் 140 ஆம் உறுப்புரையின்கீழ் அளிக்கப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தை வேண்டலாம்.

187. (1) (இதனகத்துப்பின்னர் "நீக்கப்பட்ட சட்டம்" எனவழைக்கப்படும்) 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம் இத்தால் நீக்கப்படுகிறது.

(2) ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் நீக்கம் எவ்வாறிருப்பினும்,-

(அ) (i) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டதும் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று அத்தகையதாகப் பணியாற்றுகின்றதுமான ஆணைக்குழு, இச் சட்டத்தின் பாகம் I இன்கீழ் புதிய ஆணைக் குழுவொன்று தாபிக்கப்படும்வரை இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஆணைக்குழுவாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்கத் தொடர்ந்திருத்தலும் வேண்டும்; அத்துடன்

(ii) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவிவகிக்கும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள், இச்சட்டத்தின்கீழ் அத்தகையவர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்களாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அவர்களது பதவிக்காலம் முடியும்வரை அல்லது இச்சட்டத்தின்கீழ் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படும்வரை தொடர்ந்து பதவிவகித்தலும் வேண்டும்;

(ஆ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் ஏதேனும் பரிவர்த்தனைக்கு, பங்குத்தரகருக்கு அல்லது பங்குத்தொகுதி வியாபாரிக்கு அல்லது கூறு நம்பிக்கைப் பொறுப்பொன்றைத் தொழிற்படுத்தும் நோக்கத்திற்கென முகாமைத்துவக் கம்பெனியொன்றிற்கு வழங்கப்பட்டதும் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முன்னர் வலுவிலுள்ளதுமான ஒவ்வோர் உரிமமும் இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும்;

(இ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் ஏதேனும் தீர்வக இல்லத்துக்கு அல்லது எவரேனும் சந்தை இடைத்தரகருக்கு வழங்கப்பட்டதும் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முன்னர் வலுவிலுள்ளதுமான ஒவ்வொரு பதிவுச் சான்றிதழும் இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஈ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டவையும், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முன்னரான நாளன்று வலுவிலுள்ளவையும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராதவையுமான எல்லா ஒழுங்கு விதிகளும், விதிகளும், பணிப்புரைகளும், வழங்கப்பட்ட அங்கீகாரங்களும் எடுக்கப்பட்ட வேறேதேனும் நடவடிக் கையும் அல்லது வழங்கப்பட்ட அறிவித்தல்களும் இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், விதிகள் மற்றும் பணிப்புரைகளாகவும் வழங்கப்பட்ட அங்கீகாரங்களாகவும் எடுக்கப்பட்ட வேறேதேனும் நடவடிக்கையாகவும் அல்லது வழங்கப்பட்ட அறிவித்தல்களாகவும் கருதப்படுதல்வேண்டும்;

(உ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டவையும் மற்றும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முன்னரான நாளன்று உளதாயுள்ளவையுமான எல்லா ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும் மற்றும் வேறு சாதனங்களும் இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் அல்லது வேறு சாதனங்களாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஊ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப் பட்டவையும், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முன்னரான நாளன்று முடிவுறாதுள்ளவையுமான எல்லாத் துடர்ச்சிகளும் வழக்குகளும் மற்றும் வேறு சட்டவழக்கு நடவடிக்கைகளும், இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் அல்லது அதற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட துடர்ச்சிகள், வழக்குகள் மற்றும் வேறு சட்ட வழக்கு நடவடிக்கைகளாகக் கருதப்படுதல் வேண்டும்;

(எ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டவையும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முன்னரான நாளன்று வலுவிலுள்ளவையும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இராதவையுமான சந்தை நிறுவனங்களின் எல்லா விதிகளும் இச்சட்டத்தின்கீழ் அத்தகைய சந்தை நிறுவனத்தினால் புதிய விதிகள் ஆக்கப்படும்வரை இச்சட்டத்தின்கீழ் அத்தகைய சந்தை நிறுவனங்களினால் ஆக்கப்பட்ட விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஏ) நீக்கப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் உரிமம் ஒன்றிற்காகச் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஆணைக்குழுவுக்கு செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்கக் கையாளப்படுதலும் வேண்டும்;

(ஐ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளவையும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளவையுமான எல்லா அசையும் மற்றும் அசையா ஆதனங்களும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்;

(ஒ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் நிதியங்களின் வரவுக்குள்ளவையும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளவையுமான எல்லாப் பணத்தொகைகளும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து இச்சட்டத்தின் பாகம் VI இன்கீழ் தாபிக்கப்பட்ட ஆணைக்குழுவின் முறையான நிதியங்களுக்குக் கைமாற்றப்பட்டனவாதல் வேண்டும்;

(ஓ) இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னர், நீக்கப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகள், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், விதிகள் மற்றும் பணிப்புரைகளின்கீழான எல்லாத் தவறுகளும் அல்லது தொடங்கப்பட்ட வழக்குநடவடிக்கைகளும், நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் புரியப்பட்டதவறுகளாகவும் அல்லது தொடங்கப்பட்ட வழக்குநடவடிக்கைகளாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க விளங்கப்படுதலும் வேண்டும்;

(ஔ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர், நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் எல்லா அக்கறைகளும், உரிமைகளும், சொத்துக்களும், கடப்பாடுகளும், தனிசுகளும் மற்றும் பொறுப்புக்களும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து ஆணைக்குழுவின் அக்கறைகள், உரிமைகள், சொத்துக்கள், கடப்பாடுகள், தனிசுகள் மற்றும் பொறுப்புக்களாகக் கருதப்படுதல் வேண்டும்;

(க) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் பதவிவகிக்கும் நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியும், எல்லா அலுவலர்களும் மற்றும் சேவையாளர்களும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து, நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் அவர்கள் உரித்துடையவர்களாகவிருந்த தொழில் நியதி நிபந்தனைகளை விட குறைந்த அனுகூலம்வாய்ந்தன வாக இராத நியதிகளின்மீது ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியாகவும் அலுவலர்களாகவும் சேவையாளர்களாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(3) ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் நீக்கம் எவ்வாறிருப்பினும், -

(அ) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்திற்கான ஒவ்வொரு குறிப்பீடும் இச்சட்டத்திற்கான குறிப்பீடு ஒன்றாகப் பொருளமைத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்திற்கான ஒவ்வொரு குறிப்பீடும் இச்சட்டத்தில் அடங்கியுள்ள நேரொத்த ஏற்பாடுகளைக் குறிப்பீடுசெய்வதாகப் பொருளமைத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

188. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய-

"தராதர அங்கீகாரம்பெற்ற முதலீட்டாளர்" என்பது,-

(அ) (i) எந்தத் தனியாளின் தேறிய ஆள்சார் சொத்துக்கள், முதனிலை வதிவிட ஆதனம் புறநீங்கலாக, பெறுமதியில் இருநூறு மில்லியன் ரூபாவை அல்லது ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான உயர்வான பெறுமதியை விஞ்சுகின்றதோ அந்தத் தனியாளையும்; அல்லது

(ii) எந்தத் தனியாளின் சராசரி வருடாந்த வருமானம் முற்போந்த மூன்றாண்டுகளில் முப்பது மில்லியன் ரூபாவுக்கு அல்லது ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான உயர்வான பெறுமதிக்குக் குறைவாக இராதுள்ளதோ அந்தத் தனியாளையும்; அத்துடன்

(iii) முதலீட்டு ஆபத்தை ஏற்பதற்கு எந்தத் தனியாள் அவரது அனுபவம், ஆற்றல் மற்றும் நுட்பங்கள் பற்றிய வெளிப்படுத்துகையொன்றைச் செய்கின்றாரோ அந்தத் தனியாளையும்;

(ஆ) பின்வருவனவற்றினால் தீர்மானிக்கப்பட்டவாறு பெறுமதியில் ஆயிரம் மில்லியன் ரூபாவை விஞ்சுகின்ற தேறிய சொத்துக்களுடனான கூட்டிணைக்கப்பட்ட உருவகத்தையும்:-

(i) உருவகத்தின் மிக்க அண்மைக்காலத்திய கணக்காய்வுசெய்யப்பட்ட ஐந்தொகை; அல்லது

(ii) கணக்காய்வுசெய்யப்பட்ட ஐந்தொகை இல்லாவிடின், ஐந்தொகைத்தேதி முற்போந்த பன்னிரெண்டு மாதங்களினுள்ளானதாக இருக்கவேண்டிய அத்தேதியன்றுள்ளவாறு உருவகத்தின் அலுவல்களினது நிலைமைபற்றி உண்மையானதும் நியாயமானதுமான நோக்கைக் கொடுக்கின்றதாக உருவகத்தினால் சான்றுப்படுத்தப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட உருவகத்தின் மிக்க அண்மைக்காலத்திய ஐந்தொகை;

(இ) ஒரு நம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக்கைப்பொறுப்பாளர் என்ற தன்மையில் செயலாற்றும்போது ஆணைக்குழு குறித்துரைக்கக்கூடியவாறாக அந்நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப்பொறுப்பாளரையும்; அல்லது

ஈ) இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் உருவகத்தையும் அல்லது விதிகளின் மூலம் ஆணைக்குழு குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய வேறு நிறுவனத்தையும், உள்ளடக்கும்.

"இலங்கை மத்திய வங்கி" என்பது, (422 ஆம் அத்தியாயமான) பணச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி என்று பொருளாகும்.

"மத்திய வைப்பகம்" என்பது, ஒரு பரிவர்த்தனையின்மீது பிணையங்களின் மத்தியக் கையாளுகைக்கானவொரு முறைமையைத் தாபித்துத் தொழிற்படுத்துவதற்கெனப் பின்வருமாறுள்ளதும் இச்சட்டத்தின்கீழ் ஆணைக் குழுவினால் உரிமமளிக்கப்பட்டதுமான கூட்டிணைக் கப்பட்ட குழுவொன்று என்று பொருளாகும்:-

(அ) அப்பிணையங்களைக் கையாளும் நோக்கத்துக்காக அத்தகைய எல்லாப் பிணையங்களும் அதன்மூலம் வைப்பீட்டாளரிடம் அல்லது கணக்குவைத்திருப்பவரிடம் அல்லது அவரது அல்லது அதன் நியமத்தரிடம் வைப்பிலிடப்பட்டு அவரினால் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படுகின்றன, அல்லது அவரது பெயரில் பதிவு செய்யப்படுகின்றன அல்லது பங்குச் சான்றிதழ் தொகுதியின் உருப்படியான ஒப்படைப்பின்றிப் பிணையங்களில் கணக்குகளிலான பதிவுகள் மூலம் பயனுறுத்தப்படுகின்றன; அல்லது

(ஆ) பங்குச் சான்றிதழ் தொகுதியின் உருப்படியான ஒப்படைப்பின்றிப் பிணையங்களின் கொடுக்கல்வாங்கல்கள் அல்லது பிணையங்களிலான கையாளுகைகள் தீர்ப்பனவுசெய்யப்படுதலை அனுமதிக்கின்றன அல்லது வசதிப்படுத்துகின்றன; அத்துடன்

(இ) அதன் இடைநேர்விளைவான ஏனைய வசதிகளையும் சேவைகளையும் வழங்குகின்றன, ஆனால்-

(i) இலங்கை மத்திய வங்கியினால் தொழிற்படுத்தப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட மத்திய வைப்பகத்தையும்;

(ii) இலங்கை அரசாங்கத்தினால் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பிணையங்கள் தொடர்பில் தொழிற்படுத்தப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட மத்திய வைப்பகத்தையும்; அல்லது

(iii) விலக்களிக்கப்பட்ட பிணையங்களுக்கான மத்திய வைப்பகத்தை வழங்குகின்ற அல்லது வழங்குபவராகக் காட்டிநிற்கின்ற எவரேனுமாளையும், உள்ளடக்காது.

"தீர்வக செயலிடம்" என்பது, பிணையங்களிலான கொடுக்கல்வாங்கல்களின் தீர்வுக்கான அல்லது தீர்ப்பனவுக்கான ஒரு செயலிடம் என்று பொருளாகும்;

"தீர்வு அல்லது தீர்ப்பனவு" என்பது, ஒரு தீர்வக வசதி தொடர்பாக, பிணையங்களிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் ஆளொருவரினால் வழங்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கேற்பாடு, நடைமுறை, பொறிமுறை அல்லது சேவையை உள்ளடக்கும்; அதன்மூலம்:-

(அ) அப்பிணையங்கள் கொடுக்கல்வாங்கல்களின் நியதிகள் தொடர்பான தகவல்கள் அக்கொடுக்கல்வாங்கல்களை உறுதிப்படுத்துகின்ற நோக்குடன் அத்தகைய ஆளினால் சரிபார்க்கப்படுகின்றன.

(ஆ) அப்பிணையங்கள் கொடுக்கல்வாங்கல்களுக்கான திறத்தவர்கள், மாற்றீடுமூலம் அல்லது வேறுவகையாக, அத்தகைய ஆளின் கடனைத் திறத்தவர்களின் கடனுக்காகப் பதிலீடுசெய்கின்றனர்.

(இ) அப்பிணையங்கள் கொடுக்கல்வாங்கல்களின் கீழான திறத்தவர்களின் கடப்பாடுகள், அத்தகைய கணக்கிடுகைகள் பல்புடைத் தெரிவொழுங்கேற்பாடுகளை உள்ளடக் கினாலுஞ்சரி அல்லவாயினுஞ்சரி, கணக்கிடப்படுகின்றன; அல்லது

(ஈ) அப்பிணையங்கள் கொடுக்கல்வாங்கல்களுக்கான திறத்தவர்கள், திறத்தவர்களிடையே பிணையங்களை வழங்குவதற்கான அல்லது நிதிகளைக் கைமாற்றுவதற்கான அல்லது பிணையங்களுக்கான உரித்தைக் கைமாற்றுவதற்கான கடப்பாடு உட்பட, அத்தகைய கொடுக்கல்வாங்கல்களின்கீழான தமது கடப்பாடுகளை எதிர்கொள்கின்றனர்.

ஆனால் பின்வருவனவற்றை உள்ளடக்காது:-

(i) மேலேயுள்ளவற்றில் குறிப்பீடுசெய்யப்பட்ட பிணையங்கள் கொடுக்கல்வாங்கல்களுக்கான திறத்தவரொருவரின் பின்னலுவலகத் தொழிற்பாடுகள்;

(ii) (இதனகத்துப்பின்னர் "வாடிக்கையாளர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வேறோர் ஆளுடனான ஒழுங்கேற்பாட்டின்கீழ் வாடிக்கையாளரின் பிணையங்களினது உடைமையை அல்லது கட்டுப்பாட்டைக் கொண்டுள்ள ஆளொருவரினால் வழங்கப்பட்ட சேவைகள்; அச்சேவைகள் பிணையங்கள் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவுசெய் தலின் இடைநேர்விளைவானவையாக மட்டுமே இருத்தல் வேண்டும்; அல்லது

(iii) ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான வேறெவையேனும் சேவைகள்;

"தீர்வக உறுப்பினர்" என்பது, உரிமமளிக்கப்பட்ட ஒரு தீர்வக இல்லத்தின் விதிகளின்கீழ் அவரது சொந்தச்சார்பில் அல்லது வேறாட்களின் சார்பில் தீர்வுக்காகவும் தீர்ப்பனவுக்காகவும் உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லத்தினால் தீர்வக உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்படும் ஆளொருவர் என்று பொருளாகும்;

"கூட்டு முதலீட்டுத் திட்டம்" என்பது, எந்த நிபந்தனைகளின்கீழ் ஒரு திட்டம் அல்லது ஒழுங்கேற்பாடு கம்பெனியொன்றினால் பொதுமக்களுக்குச் செய்யப்படுகின்றதோ அல்லது கொடைமுனையப்படுகின்றதோ அந்த நிபந்தனைகளைத் திருப்திசெய்கின்ற ஏதேனும் திட்டத்தை அல்லது ஒழுங்கேற்பாட்டை உள்ளடக்கும்; அதற்காக:-

(அ) எத்தகையதுமான எப்பெயரினாலும் அழைக்கப்படுகின்ற, முதலீட்டாளர்களினால் அளிக்கப்பட்ட உதவுதொகைகள் அல்லது செய்யப்பட்ட கொடுப்பனவுகள் ஒன்றுதிரட்டப்பட்டு திட்டத்தின் அல்லது ஒழுங்கேற்பாட்டின் நோக்கத்துக்காக மட்டும் பயன்படுத்தப்படுகின்றன.

(ஆ) உதவுதொகைகள் அல்லது கொடுப்பனவுகள், அத்தகைய திட்டத்திலிருந்து அல்லது ஒழுங்கேற்பாட்டிலிருந்து இலாபங்களை, வருமானத்தை, உற்பத்திப்பொருளை அல்லது அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் அத்தகைய திட்டத்துக்கு அல்லது ஒழுங்கேற்பாட்டுக்கு முதலீட்டாளர்களினால் அளிக்கப்படுகின்றன அல்லது செய்யப்படுகின்றன.

(இ) ஒரு திட்டத்தின் செயலாக்கமொன்றில் முதலீட்டாளர்களின் பங்குபற்றுகைசார் அக்கறையின் விகிதாசாரத்தில் அல்லது திறத்தவர்களினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான வேறேதேனும் அடிப்படையின்மீது முதலீட்டின் ஆபத்தையும் நன்மையையும் அவர்கள் பகிர்கின்றனர்.

(ஈ) அடையாளங்காணத்தக்கதாயினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி, திட்டத்தின் அல்லது ஒழுங்கேற்பாட்டின் பாகமாகவமைகின்ற ஆதனம், உதவுதொகை அல்லது முதலீடு, முதலீட்டாளர்களின் சார்பில் முகாமை செய்யப்படுகின்றன; அத்துடன்

(உ) திட்டத்தின் அல்லது ஒழுங்கேற்பாட்டின் முகாமை மற்றும் தொழிற்பாட்டின்மீது முதலீட்டாளர்கள் நாளாந்தக் கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதில்லை.

ஆனால் பின்வருவன தொடர்பான நிதிகளின் ஒன்றுதிரட்டுகைகளை உள்ளடக்காது:-

(i) தனிப்பட்ட முதலீட்டு முகாமை ஒழுங்கேற்பாடுகள்

(ii) தொழில்முயற்சி முன்னெடுப்புத் திட்டங்கள்

(iii) தனியான வைப்பு அடிப்படையிலான திட்டங்கள்

(iv) தொழில் என்றவகையாகத் தொழிற்படுத்தப்படாத திட்டங்கள்

(v) கடன்தொகுதிப்பத்திரங்கள், முறிகள் மற்றும் கடன் பங்குத்தொகுதி போன்ற தனிசு வழங்குகைகள்

(vi) ஊழியர் பங்குத் திட்டங்கள்

(vii) அங்கீகார ஒழுங்கேற்பாடுகள்

(viii) காலப்பங்குத் திட்டங்கள்

(ix) தீர்வகச் சேவைகளை வழங்குதல்

(x) காப்புறுதி ஒப்பந்தங்கள்

(xi) தனிப்பட்ட ஓய்வூதியக் கணக்குகள்

(xii) தான்புரிதொழில்சார் மற்றும் ஆள்சார் ஓய்வூதியத் திட்டங்கள்

(xiii) கட்டிடச் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கைத்தொழில் மற்றும் சகாயச் சங்கங்கள் அத்துடன் பதிவுசெய்யப்பட்ட நட்புறவுச் சங்கங்கள் உட்பட, குறித்தசில கூட்டிணைக் கப்பட்ட குழுக்கள்; அல்லது

(xiv) மேற்குறிப்பிடப்பட்ட திட்டங்களுக்கான ஏதேனும் ஒத்த ஒழுங்கேற்பாடு. "கட்டுப்பாட்டாளர்" என்பது, பின்வரும் ஆள் என்று பொருளாகும்:-

(அ) வைத்திருப்பவரிலான வாக்களிக்கும் பங்குகளுடன் இணைந்துள்ள வாக்குகளின் இருபது சதவீதத்துக்குக் குறையாதவற்றைப் பிரயோகிப்பதற்கு அல்லது அவற்றின் பிரயோகத்தைக் கட்டுப்படுத்துவதற்கு உரித்துடையவர்; அல்லது

(ஆ) அத்தகைய வைத்திருப்பவரின் பணிப்பாளர்களுள் பெரும்பான்மையோரை நியமிப்பதற்கு அல்லது நியமிக்கச் செய்வதற்குத் தத்துவ முடையவர்; அல்லது

(இ) சந்தை நிறுவனத்தினதும், கூட்டு முதலீட்டுத் திட்டத்தினதும், சந்தை இடைத்தரகரினதும் தொழில் அல்லது நிருவாகம் தொடர்பிலான முடிபுகளைச் செய்வதற்கு அல்லது செய்விப்பதற்கு மற்றும் அத்தகைய முடிபுகளுக்குப் பயன்கொடுப்பதற்கு அல்லது அவற்றுக்குப் பயன்கொடுக்கப்படுவதனைச் செய்விப்பதற்குத் தத்துவமுடையவர்

"நீதிமன்றம்" என்பது, ஒரு மாகாணத்துக்காக அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்டதும், 1996 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, மாகாணங்களுக்கான மேல் நீதிமன்றம் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம், ஒரு மேல் நீதிமன்றம் எம்மாகாணத்துக்காகத் தாபிக்கப்படுகின்றதோ அம் மாகாணத்தினுள் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதற்குத் தத்துவமளிக்கப்பட்டதுமான அத்தகைய மேல் நீதிமன்றம், அல்லது ஏதேனும் மாகாணத்துக்காகக் குடியியல் நியாயாதிக்கம் உரித்தாக்கப்பட்ட அத்தகைய மேல்நீதிமன்றமெதுவும் தாபிக்கப்படாத விடத்து, மேல் மாகாணத்துக்காகத் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றம் என்று பொருளாகும்

"நிரலிலிருந்து அகற்றுதல்" என்பது, ஒரு பரிவர்த்தனையின் அலுவலகமுறையான நிரலிலிருந்து நிரற்படுத்தப்பட்ட பிணையங்களை அகற்றுதல் என்று பொருளாகும்

"வைப்பகப் பங்குபற்றுநர்" என்பது, ஒரு மத்திய வைப்பகத்தின் செயலிடங்களுக்கு அணுக்கத்தைக் கொண்டவரும் ஒரு மத்திய வைப்பகத்தின் விதிகளின்கீழ் வைப்பகப் பங்குபற்றுநராக அனுமதிக்கப்படுகின்றவருமான ஆளொருவர் என்று பொருளாகும்

"மூலாதாரப் பிணையங்கள்" என்பது, ஒரு சீர்ப்படுத்தல் உடன்படிக்கை, எதிர்நோக்குகள், விருப்புத்தெரிவுகள் மற்றும் தகவுடைய பரிவர்த்தனையின் வியாபாரஞ்செய்யப்பட்ட விருப்புத்தெரிவு அல்லது மூலாதாரப் பிணையமொன்றாகவுள்ளதென ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட உடன்படிக்கைகளின் வகுப்பிலான வேறேதேனும் உடன்படிக்கை என்பவற்றைக் கொண்டுள்ள எதிர்நோக்குகள் ஒப்பந்தங்களை உள்ளடக்கும், ஆனால் மூலாதாரப் பிணையங்களின் பரிவர்த்தனையொன்றின் எதிர்நோக்குகள் சந்தைமீது வியாபாரஞ்செய்யப்படாத மூலாதாரப் பிணைய உடன்படிக்கையொன்றாகவிருப்பதாகக் குறித்துரைக்கப்படுகின்ற உடன்படிக்கையொன்றை விலக்குதல் வேண்டும்

"மூலாதாரப் பிணையங்களின் பரிவர்த்தனை" என்பது, இச்சட்டத்தின்கீழ் மூலாதாரப் பிணையங்களின் பரிவர்த்தனையாக உரிமமளிக்கப்பட்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழு என்று பொருளாகும்

"இலத்திரனியல் பதிவேடு" என்பது, இலத்திரனியல் வழிவகைகள்மூலம் உருவாக்கப்பட்ட, தேக்கி வைக்கப்பட்ட, தோற்றுவிக்கப்பட்ட, பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது அறிவிக்கப்பட்ட எழுத்திலான ஆவணம் அல்லது வேறு பதிவேடு என்று பொருளாகும்

"பரிவர்த்தனை" என்பது, இச்சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட ஒரு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை அல்லது மூலாதாரப் பிணையங்களின் பரிவர்த்தனை என்று பொருளாகும்

"இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு" என்பது, 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தும் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு என்று பொருளாகும்

"வழங்குநர்" என்பது, விற்பனைக்கான பகிரங்கக் கொடைமுனைவு என்றவகையாகப் பிணையங்களை வழங்குகின்ற அல்லது வழங்க உத்தேசிக்கின்ற ஆளொருவர் என்று பொருளாகும்

"உரிமமளிக்கப்பட்ட தீர்வக இல்லம்" என்பது, இச்சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்டதும் அதன் செயற்பாடுகள் அல்லது குறிக்கோள்கள் தீர்வக வசதிகளை வழங்குவதனை உள்ளடக்குகின்றதுமான கூட்டிணைக்கப்பட்ட குழு என்று பொருளாகும்

"நிரற்படுத்தப்பட்ட வெளிநாட்டு உருவகம்" என்பது, இலங்கையில் கூட்டிணைக்கப்படாததும் இரண்டாந் தரநிலை நிரற்படுத்தல் என்றவகையாக இச்சட்டத் தின்கீழ் ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட ஒரு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் அலுவலக முறையான நிரலில் சேர்த்துக் கொள்ளப்பட்டதுமானவோர் உருவகம் என்று பொருளாகும்

"நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி" என்பது, எந்தக் கம்பெனி ஒரு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் மீது அதன் பிணையங்களை நிரற்படுத்தியுள்ளதோ அந்த ஏதேனும் கம்பெனி என்று பொருளாகும் என்பதுடன், இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட ஒரு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின்மீது அதன் பிணையங்கள் நிரற்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தையும் உள்ளடக்கும்

"நிரற்படுத்தப்பட்ட பிணையங்கள்" என்பது, இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட ஒரு பரிவர்த்தனையின்மீது நிரற்படுத்தப்பட்ட ஏதேனும் பிணையம் என்று பொருளாகும்

"முகாமையாளர்" என்பது, ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழு தொடர்பாக, அதன் தொழிலின் ஏதேனும் பாகத்தை முகாமைசெய்வதற்குக் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் நியமிக்கப்படுகின்ற ஆளொருவர் என்று பொருளாகும் என்பதுடன், (பிரதான நிறைவேற்று அலுவலர் தவிர்ந்த) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஊழியரொருவரையும் உள்ளடக்கும்; அவர் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாள ரொருவரின் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலரின் நேரடி அதிகாரத்தின்கீழ் முகாமைசார் பணிகளைப் பிரயோகிப்பவராகவுள்ளார் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணக்குகளை அல்லது வேறு பதிவேடுகளைப் பேணுவதற்குப் பொறுப்பாகவுள்ளார்

"எல்லைக்கடன் கணக்கு" என்பது, கடனுக்காக நிரற்படுத்தப்பட்ட பிணையங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பொதுவாக இணைப்பொருளாக உள்ள நிரற்படுத்தப்பட்ட பிணையங்களை வாங்குவதற்கு அல்லது விற்பனைசெய்வதற்கு முதலீட்டாள ரொருவரை அனுமதிக்கின்ற ஒரு தரகுத்தொழில் கணக்கு என்று பொருளாகும்

"சந்தை நிறுவனம்"என்பது, இச்சட்டத்தின் பாகம் II இன்கீழ் உரிமமளிக்கப்பட்டவொரு பரிவர்த்தனை, தீர்வக இல்லம் அல்லது மத்திய வைப்பகம் என்று பொருளாகும்

"சந்தை இடைத்தரகர்" என்பது, கடன் தரப்படுத்தல் முகவராண்மையாக, கூட்டிணைப்பு நிதி மதியுரைநராக, மூலாதாரப் பிணையங்களின் தரகராக, மூலாதாரப் பிணையங்களின் வியாபாரியாக, முதலீட்டு முகாமையாளராக, முகாமைக் கம்பெனியாக, எல்லைக்கடன் அளிப்பவராக, சந்தை ஆக்குநராக, பங்குத்தொகுதித் தரகராக, பங்குத் தொகுதி வியாபாரியாக, ஒப்புறுதியீட்டாளராக அல்லது ஒத்த செயற்பாட்டைப் பொறுப்பேற்கும் வேறெவரேனுமாளாக உரிமமளிக்கப்பட்டவரும், ஆணைக்குழுவினால் அத்தகைய உரிமம் வழங்கப்படும் நோக்கத்துக்காக விதிகளினால் விவரிக்கப்பட்டவருமான எவரேனுமாளை உள்ளடக்கும்.

இவ்வரைவிலக்கணத்தின் நோக்கங்களுக்காக-

(அ) "கூட்டிணைக்கப்பட்ட நிதி மதியுரைநர்" என்பது, ஒரு கட்டணத்துக்காக அல்லது தரகுக்காகப் பின்வருவனபற்றி மதியுரை வழங்குகின்ற

தொழிலில் ஈடுபடுகின்ற எவரேனுமாள் என்று பொருளாகும்:-

(i) இச்சட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக நிதிதிரட்டுகின்ற தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் அல்லது அதுதொடர்பில்

(ii) இச்சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்டவொரு பரிவர்த்தனையின் நிரற்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு இணங்கி யொழுகுதல்

(iii) நிதிசார் உற்பத்திகளைக் கட்டமைத்தல்; அல்லது

(iv) ஒரு நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியின் ஒழுங்கேற்பாட்டுத் திட்டங்கள், மீளக்கட்டமைத்தல் திட்டங்கள் அல்லது கையேற்றல்கள் ஆனால் பின்வருவனவற்றை உள்ளடக்குதலாகாது:-

(அ) எவரேனும் சட்டத்தரணி அவரது உயர்தொழிலைப் புரிவதன் இடை நேர்விளைவாக மட்டும் மேலேயுள்ளவற்றுள் எவை தொடர்பாகவும் மதியுரையளிப்பதில் ஈடுபடுகின்ற தொழில்புரிகின்ற அச்சட்டத்தரணி;

(ஆ) எவரேனும் கணக்காளர் அவரது உயர்தொழிலைப் புரிவதன் இடைநேர்விளைவாக மட்டும் கூட்டிணைப்பு நிதிமதியுரையில் ஈடுபடுகின்ற தொழில் புரிகின்ற அக்கணக்காளர்; அல்லது

(இ) அதன் நன்மைக்காக மட்டும் அல்லது அதனோடு தொடர்புபட்ட கம்பெனிகளுள் எவற்றுக்காகவும் கூட்டிணைப்பு நிதி மதியுரையில் ஈடுபடுகின்ற ஏதேனும் கம்பெனி;

(ஆ) "கடன் தரப்படுத்தல் முகவராண்மை" என்பது, எவரேனும் வழங்குநரின் அல்லது பிணையங்களின் குறிப்பிட்ட வழங்குகையின் கடன்தீர்நிலையை மதிப்பீடுசெய்து பெறுமதி மதிக்கின்ற தொழிலில் ஈடுபட்டுள்ளவொரு கூட்டிணைக்கப்பட்ட குழு என்று பொருளாகும்;

(இ) "மூலாதாரப் பிணையங்களின் தரகர்" என்பது, ஒரு தரகைப் பெறுவதன் பிரதிபயனாக முதலீட்டாளர்களின் சார்பில் மூலாதாரப் பிணையங்களை வாங்கும் அல்லது விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ள எவரேனுமாள் என்று பொருளாகும்;

(ஈ) "மூலாதாரப் பிணையங்களின் வியாபாரி" என்பது, அவரது சொந்தக் கணக்கில் மூலாதாரப் பிணையங்களில் வியாபாரஞ் செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ள எவரேனுமாள் என்று பொருளாகும்;

(உ) "முதலீட்டு முகாமையாளர்" என்பது, ஒரு கட்டணத்துக்காக அல்லது தரகுக்காக முதலீட்டாளரின் சார்பில் பிணையங்களின் செயலாக்கமொன்றை முகாமைசெய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆளொருவரை உள்ளடக்கும் ஆனால் ஒரு கூட்டு முதலீட்டுத் திட்டத்தின் முகாமையாளரை உள்ளடக்குதலாகாது;

(ஊ) "முகாமைக் கம்பெனி" என்பது, ஒரு கூறு நம்பிக்கைப்பொறுப்புத் திட்டத்தின் ஒரு கூறு, ஒரு நிலைச்சொத்து முதலீட்டு நம்பிக்கைப் பொறுப்பு, பரிவர்த்தனையில் வியாபாரஞ் செய்யப்பட்ட நிதியம் அல்லது ஒரு கூட்டு முதலீட்டுத் திட்டம் என்று பொருளாகும்; அதன்மூலம் அது-

(i) ஒப்பப்பணத்துக்காக வழங்கப்பட்டுள்ளது அல்லது கொடைமுனையப்பட்டுள்ளது அல்லது வழங்கப்படுவதற்கு அல்லது கொடைமுனையப்படுவதற்கு உத்தேசிக்கப்படுகின்றது; அல்லது

(ii) அதுதொடர்பில் ஒப்பப்பணஞ் செலுத்துவதற்கான அல்லது கொள்வனவுக்கான கோரிக்கையொன்று செய்யப்பட்டுள்ளது; அத்துடன் முகாமைக் கம்பெனியொன்றின் பணிகளை அப்போதைக்குப்புரிகின்ற எவரேனுமாளையும் உள்ளடக்கும்;

(எ) "எல்லைக்கடன் அளிப்பவர்" என்பது, இச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட ஒரு பரிவர்த்தனையின்மீது வியாபாரஞ்செய்யப்பட்ட பிணையங்களைக் கொள்வனவுசெய்வதற்கு முதலீட்டாளர்களுக்குக் கடன் வழங்கும் தொழிலிலுள்ள ஆளொருவர் என்று பொருளாகும்;

(ஏ) "சந்தை ஆக்குநர்" என்பது, ஒரு பரிவர்த்தனையினால் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளின் அல்லது விதிகளின் அடிப்படையின்மீது குறித்துரைக்கப்பட்டவொரு பிணையத்துக்காக ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட அத்தகைய பரிவர்த்தனையின் தன்னியக்கப்படுத்தப்பட்ட வியாபாரஞ்செய்யும் முறைமையில் பேணப்பட்ட கட்டளைப் புத்தகத்தில் விலைகோரல் மற்றும் கொடை முனைவு விலைகளைப் பதிகின்ற ஆளொருவர் என்று பொருளாகும்;

(ஐ) "பங்குத்தொகுதித் தரகர்" என்பது, ஒரு தரகைப் பெறுவதன் பிரதிபயனாக முதலீட்டாளர்களின் சார்பில் மூலாதாரப் பிணையங்கள் தவிர்ந்த பிணையங்களை வாங்கும் அல்லது விற்பனைசெய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ள எவரேனுமாள் என்று பொருளாகும்;

(ஒ) "பங்குத்தொகுதி வியாபாரி" என்பது, தனது சொந்தக் கணக்குக்காக மூலாதாரப் பிணையங்கள் தவிர்ந்த பிணையங்களை வாங்கும் அல்லது விற்பனைசெய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ள எவரேனுமாள் என்று பொருளாகும்;

(ஓ) "ஒப்புறுதியீட்டாளர்" என்பது, பிணையங்களின் பகிரங்கக் கொடைமுனைவொன்று சம்பந்தமாக ஒரு கட்டணத்துக்காக அல்லது தரகுக்காக அத்தகைய பிணையங்களின் ஒப்பப்பணஞ்செலுத்தப்படாத பாகத்தைக் கொள்வனவுசெய்வதற்கு உத்தரவாத மளிக்கின்ற அல்லது கொடைமுனைவுக்கு முழுமையாக ஒப்பப்பணஞ்செலுத்தப்படாத பட்சத்தில் அத்தகைய பிணையங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பிணையங்களின் வழங்குநரொரு வருடன் பேச்சுவார்த்தை நடாத்துகின்ற ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழு என்று பொருளாகும்;

"சந்தைத் தொழிற்படுத்துநர்" என்பது, பாகம் IV இல் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக நிரற்படுத்தப்படாத பிணையங்களில் வியாபாரஞ் செய்கின்றமையை, தீர்வை அல்லது தீர்ப்பனவை வசதிப்படுத்துகின்ற சந்தை உட்கட்டமைப்பைத் தாபிக்கின்ற ஆளொருவர் என்று பொருளாகும்;

"அமைச்சர்" என்பது, அரசியலமைப்பின் உறுப்புரை 44 அல்லது 45 இன்கீழ் இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் என்று பொருளாகும்;

"இலங்கைப் பணச்சபை" என்பது, (422 ஆம் அத்தியாயமான) பணச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் பணச்சபை என்று பொருளாகும்;

"கொடைமுனைவு" அல்லது "கொடைமுனைதல்" என்பது, ஒரு முன்விபரணத்தின்மூலம் அல்லது வேறுவகையாகப் பெறுமதிக்காக எவையேனும்

பிணையங்களை அல்லது அத்தகைய பிணையத்திலான அக்கறையைப் பொதுமக்களுக்கு விற்பனைசெய்வதற்கான அல்லது கையுதிர்ப்பதற்கான ஏதேனும் எத்தனத்தை உள்ளடக்கும், ஆனால் அத்தகைய எவையேனும் பிணையங்கள் தொடர்பில் ஒப்புறுதியீட்டு உடன் படிக்கையைச் செய்துகொள்வதற்கு எவரேனுமாளுக்கான நல்லெண்ணத்துடனான கோரிக்கையை உள்ளடக்காது;

"தனிப்பட்ட அமர்த்துகை" என்பது, ஏலவேயுள்ள பங்கு தாரர்களுக்குத்தகவுக்கேற்ப கொடைமுனையப்பட்ட உரிமைகளின் வழங்குகை அல்லது ஒப்பப் பணத்துக்காகப் பொதுமக்களுக்கான பொதுவான கொடைமுனைவு என்றவகையாகவல்லாது வேறு வகையாக அடையாளங்காணப்பட்ட முதலீட்டாளரொருவருக்கு அல்லது வகுதியினரான முதலீட்டாளர்களுக்குப் பிணையங்களின் வழங்குகை என்று பொருளாகும்;

"ஒருமித்துச் செயலாற்றுகின்ற ஆட்கள்" என்பது, விதிமுறையான அல்லது விதிமுறையானதல்லாத உடன்படிக்கையை அல்லது புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பின்பற்றி, ஒரு கம்பெனியிலுள்ள அல்லது வேறேதேனும் கம்பெனியிலுள்ள பங்குகளிலான எவையேனும் அக்கறைகள் ஆட்களுள் எவரினாலும் கொள்ளப்படுவதனூடாக, அல்லது ஒரு கம்பெனிக்கான கொடைமுனைவின் வெற்றிகரமான விளைவை நிலைகுலைப்பதற்கு ஒத்துழைக்கின்ற அந்த ஆட்கள் என்று பொருளாகும். இவ்வரைவிலக்கணத்தின் பொதுவான ஏற்புடைமைக்குப்பங்கமின்றி, ஆணைக்குழுவின் திருப்திக்கு முரணாக நிலைநாட்டப்பட்டாலொழிய, பின்வரும் ஆட்கள், ஒருவரோடொருவர் ஒருமித்துச் செயலாற்றுகின்ற ஆட்களென ஊகிக்கப்படுவர்:-

(அ) எல்லாம் ஒன்றோடொன்றாக, ஒரு கம்பெனி, அதன் தாய்க் கம்பெனி, துணைநிலைக் கம்பெனிகளும் கூட்டுத் துணைநிலைக் கம்பெனிகளும் மற்றும் அவற்றின் இணைக் கம்பெனிகளுள் ஒவ்வொன்றும், அத்துடன் வாக்களிக்கும் உரிமைகளின் கொள்வனவுக்காக மேற்கூறப்பட்ட ஆட்களுள் எவருக்கும் (தொழிலின் சாதாரண நெறியில் இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட ஒரு வங்கி அல்லது அதனால் பதிவுசெய்யப்பட்ட ஒரு நிதிக்கம்பெனிதவிர) நிதியுதவி வழங்கியுள்ள எவரேனுமாளும்.

இப்பந்தியின் நோக்கங்களுக்காக, "இணைக் கம்பெனி" என்பது, 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் நியதிகளின்படி வரைவிலக்கணங்கூறப்பட்டவாறான ஒரு கம்பெனி என்று பொருளாகும்.

(ஆ) அவர்களின் நெருங்கிய உறவினர்களுடன் அதன் பணிப்பாளர்களுள் எவருடனுமான ஒரு கம்பெனி, தொடர்புபட்ட நம்பிக்கைப் பொறுப்புக்கள் மற்றும் அதன் பணிப்பாளர்களுள் எவரினாலும், அவர்களின் நெருங்கிய உறவினர்களினாலும் கட்டுப்படுத்தப்பட்ட கம்பெனிகளும் தொடர்புபட்ட நம்பிக்கைப் பொறுப்புக்களும்;

(இ) அதன் ஓய்வூதிய நிதியங்களுள் மற்றும் ஊழியர் பங்குத் திட்டங்களுள் எவற்றுடனுமான ஒரு கம்பெனி;

(ஈ) ஏதேனும் முதலீட்டுக் கம்பெனியுடனான நிதிய முகாமையாளர், கூறு நம்பிக்கைப்பொறுப்பு அல்லது எந்த வேறு ஆளின் முதலீடுகளை அத்தகைய நிதிய முகாமையாளர் முகாமைசெய்கின்றாரோ அந்த வேறு ஆள்; அத்துடன்

(உ) எல்லாம் ஒருவரோடொருவராக, ஆளொருவர், ஆளொருவரின் உறவினர் மற்றும் அவர்களுள் எவரினதும் தொடர்புபட்ட நம்பிக்கைப் பொறுப்புக்கள்;

இப்பந்தியின் நோக்கங்களுக்காக "உறவினர்" என்பது, பெற்றோர், வாழ்க்கைத்துணை, மாற்றாள் பிள்ளைகளுட்பட்ட பிள்ளை, அவ்வாளின் ஒன்றுவிட்ட சகோதரன் அல்லது ஒன்றுவிட்ட சகோதரியுட்பட்ட சகோதரன் அல்லது சகோதரி அல்லது அவ்வாளின் ஒரு பிள்ளையின் வாழ்க்கைத்துணை;

"முன்விபரணம்" என்பது, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"பகிரங்க அறிவித்தல்" என்பது, இச்சட்டத்தின்கீழ் கொடுக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்ற ஏதேனும் கருமம்பற்றிய அறிவித்தல் என்று பொருளாகும்; அக்கருமம்பற்றிய அறிவித்தலை வர்த்தமானியில் குறைந்தபட்சம் ஒரு பிரசுரத்திலேனும் மற்றும் இலங்கையினுள் புழக்கத்திலுள்ள சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான நாளாந்தச் செய்தித் தாளொன்றில் குறைந்தபட்சம் ஒரு பிரசுரத்திலேனும் வெளியிடுவதன் மூலம் இது கொடுக்கப்படுதல் வேண்டும்;

"பதிவுசெய்யப்பட்ட ஆள்" என்பது, ஒரு சந்தை இடைத்தரகருக்காகவும் அவர் சார்பிலும் வாடிக்கையாளர்களுடன் தொடர்புகொள்கின்ற வரும் இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் பதிவுசெய்யப்படுகின்றவருமான எவரேனுமாள் என்று பொருளாகும்;

"தொடர்புபட்ட கம்பெனி" என்பது, ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஏதேனும் துணைநிலைக்கம்பெனி, இணைக்கம்பெனி அல்லது கொளிக்கம்பெனி அல்லது கொளிக்கம்பெனியின் துணைநிலைக்கம்பெனி என்று பொருளாகும்;

"உரிமைகளின் வழங்குகை" என்பது, அத்தகைய வழங்குகை பணவகையிலான பிரதிபயன் களுக்காக எவ்வாறாயினும் விவரிக்கப்படினும் அல்லது குறிப்பீடுசெய்யப்படினும், அத்தகைய கொடைமுனைவுத் தேதியன்று அத்தகைய கம்பெனியில் அவர்களினால் வைத்திருக்கப்பட்ட பிணையங்களின் வகுப்புக்கான விகிதாசாரத்திலும் நிரற்படுத்தப்பட்ட ஒரு பகிரங்கக் கம்பெனியின் ஏலவேயுள்ள பங்குதாரர்களுக்கு அத்தகைய கம்பெனியின் எதிர்காலத்தில் வழங்கப்படவேண்டிய ஏதேனும் பங்கு அல்லது பங்குகள் என்று பொருளாகும்;

"பிணையங்கள்" என்பது, பின்வருவனவற்றை உள்ளடக்கும்:-

(அ) கடன்தொகுதிப்பத்திரங்கள், பங்குத் தொகுதிகள், பங்குகள், நிதிகள், முறிகள், ஒரு கூட்டு முதலீட்டுத் திட்டத்திலான கூறுகள் அல்லது அதன்கண்ணுள்ள ஏதேனும் உரிமை, விருப்புத்தெரிவுகள் அல்லது அக்கறைகள்; அல்லது

(ஆ) நம்பப்படுகின்ற அடிப்படைச் சொத்தின் தன்மை எதுவாகவிருப்பினும், எதிர்நோக்குகளையும் விருப்புத் தெரிவுகளையும் உள்ளடக்குகின்ற மூலாதாரப் பிணையங்கள்; அல்லது

(இ) ஏதேனும் அரசாங்கத்தினால் அல்லது வேறேதேனும் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவினால் வழங்கப்பட்ட அல்லது வழங்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட பத்திரங்கள்;

ஆனால் நாணயமாற்றுண்டியல்களை அல்லது வாக்குறுதிப்பத்திரங்களை அல்லது ஒரு வங்கியினால் வழங்கப்பட்ட வைப்புக்கள் பற்றிய சான்றிதழ்களை, இலங்கை அரசாங்கத்தினால் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பிணையங்களை அல்லது 182 ஆம் பிரிவின்கீழ் பிணையங்கள் அல்லாதவையாக விதித்துரைக்கப்பட்ட அத்தகைய வேறு உற்பத்தியை அல்லது உற்பத்திகளின் வகுப்பை உள்ளடக்காது;

“பிணையங்கள் சந்தை” என்பது,-

(அ) பிணையங்களை விற்பனைசெய்வதற்கான, கொள்வனவுசெய்வதற்கான அல்லது கொடுத்து மாற்றுவதற்கான கொடை முனைவுகள் கிரமமானமுறையில் செய்யப்படுகின்ற அல்லது ஏற்றுக்கொள்ளப்படுகின்ற;

(ஆ) பிணையங்களை விற்பனைசெய்வதற்கான, கொள்வனவுசெய்வதற்கான அல்லது கொடுத்து மாற்றுவதற்கான கொடை முனைவுகள் செய்யப்படுவதனை அல்லது ஏற்றுக்கொள்ளப்படுவதனை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் விளைவிப்பதற்கு உட்கருதப்படுகின்ற அல்லது விளைவிப்பதற்கு நியாயமானமுறையில் எதிர்பார்க்கப்படக்கூடிய கொடைமுனைவுகள் அல்லது கோரிக்கைகள் கிரமமான முறையில் செய்யப்படுகின்ற; அல்லது

(இ) எந்த விலைகளில் அல்லது எந்தப் பிரதிபயனுக்காகக் குறிப்பிட்ட ஆட்கள் அல்லது குறிப்பிட்ட வகுப்பினரான ஆட்கள் பிணையங்களை விற்பனைசெய்வதற்கு, கொள்வனவுசெய்வதற்கு அல்லது கொடுத்து மாற்றுவதற்கு உத்தேசிக்கின்றனரோ அல்லது நியாயமானமுறையில் அவ்வாறு செய்வதற்கு எதிர்பார்க்கப்படக்கூடுமோ அந்த விலைகள் அல்லது பிரதிபயன் சம்பந்தமான தகவல் கிரமமானமுறையில் வழங்கப்படுகின்ற, ஒரு சந்தை அல்லது வேறு இடம் அல்லது செயலிடம் என்று பொருளாகும்;

ஆனால் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக இலங்கையின் மத்திய வங்கியினால் ஒழுங்கு படுத்தப்பட்ட பிணையங்கள் சந்தையொன்றை உள்ளடக்குதலாகாது;

“பங்கு” என்பது, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் கொடுக்கப்படு கின்றவாறான அல்லது வேறொரு நியாயாதிக்கத்தின் சட்டங்களின்கீழான ஒரு பங்காக அதில் ஏற்றங்கீகரிக்கப்படுகின்றவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

“பங்குத்தொகுதிக் கடன்பெறுநர்” என்பது, பிணையங்களைக் கடனாகப் பெறும் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆளொருவர் என்று பொருளாகும்;

“பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை” என்பது, இச் சட்டத்தின்கீழ் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையாக உரிமமளிக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழு என்று பொருளாகும்;

“குறைநிரப்புச் சேவை வழங்குநர்” என்பது, ஒரு சந்தை நிறுவனத்துக்கு, சந்தை இடைத்தரகருக்கு அல்லது நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனிக்கு அல்லது ஒரு கூட்டு முதலீட்டுத் திட்டத்துக்கு உயர்தொழிற்சார் சேவைகளை வழங்குகின்றவரும் ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவருமான காப்பீட்டு மதிப்பீட்டாளர், கணக்காய்வாளர், கட்டுக்காப்பாளர், நம்பிக்கைப்பொறுப்பாளர், பெறுமதி மதிப்பீட்டாளர் அல்லது அத்தகைய ஆள் என்போரை உள்ளடக்கும்;

“வியாபாரஞ்செய்கின்ற பங்குபற்றுநர்” என்பது, ஒரு பரிவர்த்தனையின் வசதிகளுக்கு அணுக்கத்தையுடையவரும் இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட ஒரு பரிவர்த்தனையின் விதிகளின்கீழ் ஒரு வியாபாரஞ்செய்கின்ற பங்குபற்றுநராகச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றவருமான ஆளொருவர் என்று பொருளாகும்;

“இடித்துரைப்பாளர்” என்பது, இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், விதிகளின் அல்லது பணிப்புரைகளின் அல்லது ஒரு சந்தை நிறுவனத்தின் ஏதேனும் விதியின் ஏற்பாடுகளினது மீறுகை அல்லது நிகழ்தகு மீறுகை தொடர்பான தகவலை வழங்குகின்ற எவரேனும் தனியாள் அல்லது ஆட்கள் தொகுதி என்று பொருளாகும்.

189. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**2021ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிய (திருத்தச்) சட்டம்**

[2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

**1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2021ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிய (திருத்தச்) சட்டம் 2021 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிய (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. ஆயிரத்துத்தொள்ளாயிரத்து ஐம்பத்து எட்டாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 47 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) “ஊழியர்” என்னும் வரைவிலக்கணத்தில், “உள்ளடக்கும்;” என்னும் சொல்லுக்குப் பதிலாக, “உள்ளடக்கும் அத்துடன் தனிவேறான வேலையாளர் ஒருவருக்கு ஏற்புடையற்பாலதான சமூக பாதுகாப்பு உடன்படிக்கையொன்றில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கான அத்தகைய தனிவேறான வேலையாளரை உள்ளடக்காது;” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) “மேவப்பட்ட தொழில்” என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

“தனிவேறான வேலையாள்” என்பது, இலங்கையில் மேவப்பட்ட தொழிலில் தற்காலிக வேலையொன்றில் உள்ளவரும் எந்த நாட்டில் அவர் பிரசை ஒருவராக வுள்ளாரோ அந்த நாட்டில் சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றுக்கு உதவுதொகை யளிப்பவரும் சமூக பாதுகாப்பு உடன் படிக்கையொன்றின் நியதிகளின்படி அத்தகைய உடன்படிக்கையில் தரப்பட்ட வாறான காலப்பகுதிக்கும் அதன் நியதிகளின்படியும் இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் உதவுதொகையளிப்பதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளவருமான சர்வதேச வேலையாளர் ஒருவர் எனப் பொருள் படும்;”

(3) “தொழில்தருநர்” என்னும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப்பின்னர், பின்வரும் புதிய வரை விலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

"சர்வதேச வேலையாளர்" என்பது, இலங்கையைத் தவிர்ந்த நாடொன்றின் பிரசையொருவராகவுள்ள ஊழியர் ஒருவர் எனப் பொருள்படும்"

(4) "ஒழுங்குவிதி" என்னும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப்பின்னர், பின்வரும் புதிய வரை விலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

"சமூக பாதுகாப்பு உடன்படிக்கை" என்பது, எந்த இருபுடை உடன்படிக்கைக்கு இலங்கை திறத்தவரொருவராகவுள்ளதோ மற்றும் தனிவேறான வேலையாளர்களாக தற்காலிக வேலையொன்றில், இன்னொரு நாட்டில் வேலை செய்கின்ற ஒரு நாட்டின் பிரசைகளுக்கு அத்தகைய வேறு நாட்டில் சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்துக்கு உதவுதொகையளிப்பதிலிருந்து விலக் களிப்புகளை வழங்குகின்றதோ அந்த இருபுடை உடன்படிக்கையொன்று எனப் பொருள்படும்".

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**2021 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, ஒதுக்கீடு (திருத்தச்) சட்டம்**

[2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

**2020 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகும்:-

1. இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, ஒதுக்கீடு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இரண்டாயிரத்து இருபதாமாண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்றேழு பில்லியன் ரூபாவை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மூவாயிரத்து முந்நூற்றி தொண்ணூற்றேழு பில்லியன் ரூபாவை" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றது.

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**2021 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, வேலையாளர்களின் குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயதுச் சட்டம்**

[2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

**தொழில்தருநரொருவர் எந்த குறைந்தபட்ச வயதில் எவரேனும் வேலையாளரை ஓய்வுபெறச் செய்யலாமோ அந்த குறைந்த பட்ச வயதுக்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானவொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, வேலையாளர்களின் குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயதுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

பாகம் I

**குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயது**

2. வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின், சேவை ஒப்பந்த மொன்றின், கூட்டு உடன்படிக்கையொன்றின் அல்லது சேவை ஒப்பந்தத்தின் வேறேதேனும் வடிவத்தின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியில் ஐம்பத்திரெண்டு வயதை அடையாதுள்ள அல்லது இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்குப் பின்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற வேலையாளரொருவரின் குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயது அத்தகைய வேலையாளர் (இதனகத்துப்பின்னர் "குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயது" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அறுபது வயதை அடைவதன் மேலானதாக இருத்தல் வேண்டும் :

ஆயின், இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று ஐம்பத்தி ரெண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வயதை அடைந்துள்ள வேலையாளரொருவரின் குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயது, அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்டவாறான வயதாகவிருக்குமெனக் கருதப்படுதல் வேண்டும்.

3. (1) பதினைந்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்களைத் தொழிலுக்கமர்த்துகின்ற தொழில்தருநரெவரும், அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட வேலையாட்களையும் மற்றும் வேலையின் தன்மையைக் கருத்திற்கொண்டு காலத்துக்காலம் ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்பட வேண்டியவாறான ஏதேனும் வியாபாரத்தில் அல்லது வாழ்க்கைத் தொழிலில் ஈடுபடும் எவரேனும் வேலையாளரையும் தவிர்ந்த எவரேனும் வேலையாளரை அத்தகைய வேலையாளர் குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயதை அடைகின்றவரை, ஓய்வுபெறச் செய்தலாகாது:

ஆயின், எவரேனும் தொழில்தருநர் பின்வரும் ஏதுக்களின்மீது, சேவை ஒப்பந்தத்தின் அல்லது கூட்டு உடன்படிக்கையின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி, எவரேனும் வேலையாளரை முன்கூட்டி ஓய்வுபெறச் செய்யலாம்:-

(அ) (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட எவரேனும் பதிவு செய்யப்பட்ட மருத்துவத்தொழிலர், ஒரு வேலையாளர் ஏதேனும் சுகவீனம் காரணமாக வேலையில் ஈடுபடுவதற்கு நிரந்தரமாக இயலாதவராகவுள்ளாரென சான்றுதிப்படுத்தியுள்ள விடத்து;

(ஆ) ஏதேனும் ஒழுக்காற்று விசாரணையின் விளைவாக ஒரு வேலையாளரின் சேவை முடிவுறுத்தப்பட்டுள்ள விடத்தும் அத்தகைய முடிவுறுத்துகைபற்றிய முடிவு சட்டத்தினால் மீளாய்வு செய்யப்பட்டிராதவிடத்தும்;

(இ) ஏதேனும் இயற்கைக் காரணத்தின் காரணமாக தாபனமொன்றின் மூடுகை அல்லது அழிவின்மேல்; அல்லது

(ஈ) 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் வேலையை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியின் எழுத்திலான முன்னங்கீகாரத்துடன்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள், எவரேனும் வேலையாளரின் ஓய்வுக்கு முன்னரான பன்னிரெண்டு மாதங்களினுள் சராசரியாக பதினைந்து அல்லது அதற்குக் குறைந்த வேலையாளர்களைத் தொழிலுக்கமர்த்தியுள்ள எவரேனும் தொழில்தருநருக்கு ஏற்புடையனவாதலாகாது.

(3) குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயதுக்கு முன்னர் தனது தொழிலை வறிதாக்க தானாக விரும்புகின்ற எவரேனும் வேலையாளர், தானாகவே அவ்வாறு செய்யலாம்.

4. இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு முன்னர் அல்லது அத்தேதியன்று அல்லது அத்தேதிக்குப் பின்னர் செய்து கொள்ளப்பட்ட அல்லது செய்துகொள்ளப்படும் சேவை ஒப்பந்தம், கூட்டு உடன்படிக்கை அல்லது சேவை ஒப்பந்தத்தின் ஏதேனும் வடிவமொன்றில் குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயதைப் பார்க்கிலும் குறைவாக குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஓய்வுபெறும் வயது, 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, வெற்றானதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயது அது தொடர்பிலும் ஏற்புடையதாதலும் வேண்டும்.

பாகம் II

**முறைப்பாடுகளும் விசாரணைகளும்**

5. (1) மூன்றாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட முறை தவிர்ந்த வேறுமுறையில் தொழில்தருநரினால் முன்கூட்டியே ஓய்வுபெறச் செய்யப்பட்டுள்ள எவரேனும் வேலையாளர், அத்தகைய ஓய்வுத் தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள், அத்தகைய ஓய்வு தொடர்பில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் முறை யிடலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எவரேனும் வேலையாளர் ஆணையாளர் தலைமையதிபதிக்கு முறைப்பாடொன்றைச் செய்துள்ளவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி விசாரணையொன்றை நடாத்தி அத்தகைய முறைப்பாட்டைப்பெற்ற தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் அம்முறைப்பாட்டின் மீதான அவரது இறுதி முடிபை வழங்குதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான விசாரணையொன்றின்மேல், ஆணையாளர் தலைமையதிபதி-

(அ) வேலையாளரினால் செய்யப்பட்ட முறைப்பாடு ஆதரிக்கும் சான்றுகளினால் மெய்யுறுதிப்படுத்தவில்லையென அல்லது அத்தகைய முன்கூட்டிய ஓய்வு 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கவுள்ளதெனத் திருப்தியுற்றால், ஆணையாளர் தலைமையதிபதி அத்தகைய முறைப்பாட்டைத் தள்ளுபடி செய்தல் வேண்டும்; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக வேலையாளர் அவரது தொழில்தருநரினால் முன்கூட்டியே ஓய்வுபெறச்செய்யப்பட்டுள்ளாரெனத் திருப்தியுற்றால், ஆணையாளர் தலைமையதிபதி, அவரினால் வழங்கப்பட்ட அறிவித்தல்மூலம் தொழில்தருநருக்கு பின்வருவதனைச் செய்யுமாறு பணித்தல் வேண்டும் :-

(i) அத்தகைய ஓய்வுக்கு முன்னர் அவ்வேலையாளர் எப்பதவியில் தொழிலுக்கமர்த்தப்பட்டிருந்தாரோ அப்பதவியில் அத்தகைய அறிவித்தல் தேதியிலிருந்து அவரை மீளப் பணியிலமர்த்துதலும் அத்தகைய ஓய்வுத்தேதியிலிருந்தான அவரது வேதனங்களையும் வேறெல்லா அனுகூலங்களையும் அவருக்கு வழங்குதலும்; அல்லது

(ii) தாபனம் மூடப்படுவதன் காரணமாக அல்லது அத்தகைய வேலையாளர் எந்தத் தாபனத்தில் தொழில் புரிந்தாரோ அந்தத் தாபனத்தை ஒடுக்கும் செயன்முறை தொடங்கப்படுவதன் காரணமாக மீளப்பணியமர்த்தல் நடைமுறைச் சாத்தியமற்றதென ஆணையாளர் தலைமை அதிபதி அபிப்பிராயப்படுகின்றவிடத்து, மீளப் பணியமர்த்தலுக்குப் பதிலாக, கடைசியாகச் செலுத்தப்பட்ட வேதனங்களை அடிப்படையாகக் கொண்டு 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் வேலையை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 6ஈ என்னும் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறாக ஆணையாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்பட்ட சூத்திரத்தின் நியதிகளின் படியான நட்டஈட்டை விடயத்துக்கேற்ப, அத்தகைய தாபனத்தின் மூடுகைத் தேதிவரை அல்லது அத்தகைய தாபனத்தின் ஒடுக்குதல் தொடங்கத் தேதிவரை அத்தகைய வேலையாளருக்குச் செலுத்துதல்.

(4) எவரேனும் வேலையாளர், இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் (131 ஆம் அத்தியாயமான) கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் அல்லது 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் வேலையை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் நியதிகளுக்கமைய, முன்கூட்டிய ஓய்வுபெறலுக்கெதிராக, ஆணையாளர் தலைமையதிபதிக்கு, தொழில் நியாயசபையொன்றுக்கு, நடுத்தீர்ப்பாளர் ஒருவருக்கு அல்லது கைத்தொழில் நீதிமன்றமொன்றுக்கு முறைப்பாடொன்றைச் செய்துள்ளவிடத்தும், அத்தகைய முறைப்பாடு மீதான இறுதி முடிபு ஆணையாளர் தலைமையதிபதியினால், தொழில் நியாயசபையினால், நடுத்தீர்ப்பாளரினால் அல்லது கைத்தொழில் நீதிமன்றத்தினால் ஆக்கப்படாதுள்ளவிடத்தும், ஆணையாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட முறைப்பாடொன்றை விசாரிப்பதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தலாகாது:

ஆயின் வேலையாளர், (131 ஆம் அத்தியாயமான) கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் அல்லது 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் வேலையை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் நியதிகளுக்கமைய, முன்கூட்டிய ஓய்வு பெறலுக்கு எதிரான முறைப்பாடொன்றைச் செய்திருப்பின், அத்தகைய வேலையாளர் இச்சட்டத்தின்கீழான முறைப்பாடொன்றைச் செய்வதற்கு உரித்துடையவராதலாகாது.

6. (1) ஐந்தாம் பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட முடிபொன்றுடன் திருப்தியுறாத எவரேனும் தொழில் தருநர், எழுத்தாணையொன்றின் தன்மையிலான கட்டளையொன்றை வழங்குவதற்காக, அத்தகைய முடிபுக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விண்ணப்பமொன்றைச் செய்யலாம். அத்தகைய விண்ணப்பத்தைச் செய்கின்ற தொழில்தருநர், அத்தகைய விண்ணப்பத்துக்கு அமைந்ததாகவுள்ள கட்டளை பின்வருவனவற்றுக்காகப் பணிக்கின்றவிடத்து, பணத்திலான பிணைப்பொறுப்பொன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்:-

(அ) வேலையாளருக்கு பணத்தொகையொன்றை மாத்திரம் செலுத்தமாறு பணிக்கின்றவிடத்து, அத்தகைய பணத் தொகைக்குச் சமமான தொகையொன்று;

(ஆ) வேலையாளருக்கு பணத்தொகையொன்றைச் செலுத்து மாறும் அவரை மீளப் பணியிலமர்த்துமாறும் பணிக்கின்றவிடத்து, அத்தகைய பணத்தொகைக்குச் சமமான தொகையொன்றும் மற்றும் அத்தகைய வேலையாளரின் சேவை ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்ட நேரத்தில் காணப்பட்ட அவரது மாதாந்தச் சம்பளத்தின் அல்லது வேதனங்களின் பன்னிரெண்டு மடங்கும். நாட்சம்பளம் செலுத்தப்படும் வேலையாளரொருவரின் விடயத்தில், மாதாந்தச் சம்பளம் அல்லது வேதனங்கள், அத்தகைய வேலையாளரின் நாளாந்த வேதனத்தின் இருபத்தாறு மடங்குகளாக இருத்தல் வேண்டும்.

(2) மேன்முறையீட்டு நீதிமன்றம், விண்ணப்பகாரர் பணத்திலான பிணைப்பொறுப்பொன்றைக் கொடுத்துதவியுள்ளாரெனப் பயனுறுத்துவதற்கான ஆணையாளர் தலைமையதிபதியின் சான்றிதழொன்று இணைக்கப்படாது எழுத்தாணையொன்றின் தன்மையிலான கட்டளையொன்றை வழங்குவதற்கான விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளுதலாகாது.

(3) ஆணையாளர் தலைமையதிபதி, இப்பிரிவின்கீழ் பிணைப்பொறுப்பாகக் கொடுத்துதவப்பட்ட எல்லா பணங்களையும் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வங்கியில் வட்டியைக் கொண்டுள்ள கணக்கொன்றில் வைப்பிலிடச் செய்வித்தல் வேண்டும். பிணைப்பொறுப்பானது, விடயத்துக்கேற்ப, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அல்லது உயர் நீதிமன்றத்தின் இறுதித் தீர்மானத்தின் நியதிகளுக்கமைய இயைபான திறத்தவர்களுக்கு விடுவிக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் III

### சட்டத்தின் நிருவாகமும் தொழில் ஆணையாளர் தலைமையதிபதியின் தத்துவங்களும்

7. தொழில் ஆணையாளர் தலைமையதிபதி இச்சட்டத்தின் நிருவாகத்துக்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின்கீழ் அவருக்குள்ள எவையேனும் தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளை அவரினால் அதிகாரமளிக்கப் பட்டவாறான தொழில் திணைக்களத்தின் எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கலாம்.

8. (1) ஆணையாளர் தலைமையதிபதி, 5 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட முறைப்பாடொன்று தொடர்பிலான ஏதேனும் விசாரணையின் நோக்கங்களுக்காக, மாவட்ட நீதிமன்றத்தின் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) சாட்சிகளுக்கு அழைப்பாணைவிடுத்தலும் அவர்களின் வருகையை கட்டாயப்படுத்துதலும்;

(ஆ) ஆவணங்களின் காண்பிப்பை கட்டாயப்படுத்துதல்; அல்லது

(இ) எவரேனும் சாட்சியின் சான்றானது சத்தியத்தின்மீது அல்லது உறுதியுரையின்மீது கொடுக்கப்படுவதனைத் தேவைப்படுத்துதல் அல்லது அத்தகைய ஒவ்வொரு சாட்சிக்கும் சத்தியத்தை அல்லது உறுதியுரையை ஆணையாளர் தலைமையதிபதியினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் எடுத்தோதப்படுவதனைச் செய்வித்தல்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி எவரேனும் தொழில்தருநருக்கு சேர்ப்பித்த எழுத்திலான அறிவித்தல் மூலம் அத்தகைய பணிப்பில் குறித்துரைக்கப்பட்டவாறான தேதிக்கு முன்னர் அத்தொழில்தருநர் பின்வருவனவற்றை தனக்கு கொடுத்துதவுமாறு பணிக்கலாம் :-

(அ) அவரது எல்லா வேலையாட்கள் தொடர்பான விபரத்திரட்டொன்று அல்லது அத்தகைய வேலையாட்களின் வகுப்பு அல்லது விவரணம் மற்றும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஆணையாளர் தலைமையதிபதி தேவைப்படுத்தக்கூடியவாறான எவையேனும் விபரங் கள்;

(ஆ) அத்தகைய தொழில்தருநரினால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டில் குறிப்பிடப்பட்ட எவையேனும் விபரங்கள் தொடர்பில் ஆணையாளர் தலைமையதிபதி தேவைப்படுத்தக் கூடியவாறான அத்தகைய தகவல்கள் அல்லது விளக்கங்கள்; அல்லது

(இ) அத்தகைய தொழில்தருநரினால் பேணப்பட்ட ஏதேனும் இடாப்பு அல்லது பதிவேடு முழுவதினது அல்லது அதன் ஏதேனும் பாகத்தினது சான்றுப்படுத்தப்பட்ட உண்மைப் பிரதிகள்.

(3) (அ) ஆணையாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட அழைப்பாணைகளில் குறிப்பிடப்பட்ட நேரத்திலும் இடத்திலும் ஆணையாளர் தலைமையதிபதிக்கு முன்தோன்றுவதற்கு காரணமின்றி தவறுகின்ற;

(ஆ) ஆணையாளர் தலைமையதிபதிக்கு அல்லது அவர்சார்பில் ஆணையாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு முன் சாட்சியாளரொருவராக சத்தியஞ்செய்வதற்கு அல்லது உறுதிப்படுத்துவதற்கு மறுக்கின்ற;

(இ) உள்நுழைவதற்கு அல்லது சோதனையிடுவதற்கு அல்லது ஆணையாளர் தலைமையதிபதி அவரது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமானவாறாக அவரினால் தேவைப்படுத்தப்பட்ட உதவியை வழங்கமறுக்கின்ற;

(ஈ) ஆணையாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிப்பதில் அவருக்கு முட்டுக்கட்டையிடுகின்ற அல்லது இடையூறு விளைவிக்கின்ற;

(உ) வேதனங்கள் பற்றிய ஏதேனும் இடாப்பை அல்லது பதிவேட்டைக் காண்பிக்க மறுக்கின்ற அல்லது ஆணையாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் அவருக்குக் காண்பிக்குமாறு அல்லது கொடுக்குமாறு அவரினால் தேவைப்படுத்தப்படுகின்ற ஏதேனும் தகவலை கொடுக்க மறுக்கின்ற;

(ஊ) ஏதேனும் முக்கியமான விபரத்தில் பொய்யானதாகவுள்ள வேதனங்கள் பற்றியதுமான ஏதேனும் இடாப்பை அல்லது பதிவேட்டைத் தயாரிக்கின்ற அல்லது தயாரிக்கச் செய்கின்ற அல்லது அத்தகைய ஏதேனும் இடாப்பு அல்லது பதிவேடு பொய்யானதாகவுள்ளதென அறிந்துகொண்டு ஆணையாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்ட தத்துவத்தின்கீழ் செயலாற்றி அவருக்கு அதனைக் காண்பிக்கின்ற அல்லது காண்பிக்கச் செய்கின்ற அல்லது அறிந்துகொண்டு அனுமதிக்கின்ற;

(எ) ஆணையாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் செயற்படுகின்ற ஆணையாளர் தலைமையதிபதிக்கு ஏதேனும் தகவல் பொய்யானதாக இருப்பதாக அறிந்துகொண்டே, அவ்வேதேனும் தகவலை அவருக்குக் கொடுத்துதவுகின்ற; அல்லது

(ஏ) (i) ஆணையாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தில், காரணமின்றி அல்லது நியாயமற்றதாகவுள்ள காரணத்துடன் ஆணையாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட ஏதேனும் அழைப்பாணையில் குறிப்பிடப்பட்ட நேரத்திலும் இடத்திலும் ஆணையாளர் தலைமையதிபதிக்கு முன் தோன்றத்தவறுகின்ற;

(ii) ஆணையாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தில் காரணமின்றி அல்லது நியாயமற்றதாகவுள்ள காரணத்துடன் அவரது உடைமையில் அல்லது தத்துவத்திலுள்ள ஆணையாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தில் ஆணையாளர் தலைமையதிபதியினால் விசாரணை செய்யப்படுகின்ற கருமங்களின் உண்மையைக் கண்டறிவதற்கு அவசியமாகவுள்ளதுமான ஏதேனும் ஆவணத்தை ஆணையாளர் தலைமையதிபதிக்குக் காண்பிப்பதற்கும் காட்டுவதற்கும் மறுக்கின்ற அல்லது தவறுகின்ற;

(iii) ஆணையாளர் தலைமையதிபதியின்முன் சாட்சியொருவராக சத்தியஞ்செய்வதற்கு அல்லது உறுதிப்படுத்துவதற்கு மறுக்கின்ற; அல்லது

(iv) ஆணையாளர் தலைமையதிபதியினால் விடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு இணங்கியொழுகுவதில் தவறுகை புரிகின்ற, அல்லது விபரத்திரட்டொன்றைக் கொடுத்துதவும்படி கோரப்படும்போது பொய்யான ஒரு விபரத்திரட்டை அல்லது ஏதேனும் பொய்யான கூற்றைக்கொண்டுள்ள ஒரு விபரத்திரட்டை அறிந்து கொண்டுதயாரிக்கின்ற அல்லது கொடுத்துதவுகின்ற அல்லது கொடுத்துதவச்செய்கின்ற,

ஒவ்வோராளும், இப்பிரிவின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவானொருவரின் முன் நடாத்தப்படுகின்ற சுருக்க விசாரணையின் பின்னர் அதன்கண் குற்றத்தீர்ப்பளிக்கப்படு வதன்மேல், ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் பொறுப்புடையவராதல் வேண்டும்.

9. எவரேனுமாளுக்கு சேர்ப்பிக்கப்பட அல்லது கொடுக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்ற ஏதேனும் அறிவித்தலானது, அத்தகைய ஆளுக்கு தனிப்பட்ட முறையில் சேர்ப்பிக்கப்படாது அல்லது கொடுக்கப்படாது இருந்தால், அத்தகைய ஆள் தங்கியுள்ள அல்லது தொழில்புரிகின்ற அவரது வழமையான அல்லது இறுதியாக அறியப்பட்ட இடத்தின் முகவரிக்கு பதிவஞ்சல் மூலம் அவருக்கு அனுப்பிவைக்கப்படின், அத்தகைய அறிவித்தல் அத்தகைய ஆளுக்கு முறையாகச் சேர்ப்பிக்கப் பட்டுள்ளதாக அல்லது கொடுக்கப்பட்டுள்ளதாக கருதப்படுதல் வேண்டும்.

10. (1) அமைச்சரானவர், விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது இச்சட்டத்தினால் எவ்வெல்லாக் கருமங்கள் தொடர்பிலும் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அவ்வெல்லாக் கருமங்கள் தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) இப்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டின்மேல் அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியில் நடைமுறைக்குவருதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் அது வெளியிடப்பட்டதிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்தின்முன்கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அத்தகைய அங்கீகாரமளிக்கப்படாத் தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர்செய்யப்பட்ட எவற்றுக்கும் பங்கமின்றி, இல்லாதொழிக்கப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் IV

### தவறுகளும் தண்டனைகளும்

11. மூன்றாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் தொழில்தருநர் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் பொறுப்பாதல் வேண்டும்.

12. (1) ஐந்தாம் பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட பணிப்பொன்றுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனும் தொழில்தருநர், தவறொன்றைப் புரிவதுடன், நீதிவானொருவரினால் நடாத்தப்படும் சுருக்கமுறை விசாரணையின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் பொறுப்புடையவராதல் வேண்டும்.

(2) ஐந்தாம் பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட அறிவித்தலின் பணிப்புகளுக்கு தொழில்தருநர் இணங்கியொழுகியுள்ளார் என்பதை எண்பிக்கும் பொறுப்பு அத்தகைய தொழில்தருநரின் மீதானதாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் தொழில்தருநரொருவருக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், அத்தகைய தொழில்தருநர் பின்வருவனவற்றைச் செய்தல் வேண்டும் :-

(அ) ஓராம் உட்பிரிவின்கீழ் அத்தகைய தொழில்தருநர் செலுத்துவதற்குப் பொறுப்பாகவுள்ள குற்றப்பணத்துக்கு மேலதிகமாக, குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் அத்தகைய பணிப்புக்கு அவர் இணங்கியொழுகாது தொடர்ந்து தவறுகின்ற ஒவ்வொரு நாள் தொடர்பிலும் நூறு ரூபா மேலதிகமாக குற்றப்பணமொன்றைச் செலுத்துதல் வேண்டும்;

(ஆ) ஐந்தாம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியில் தொடங்குகின்றதும் அத்தகைய தொழில்தருநர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தேதியில் முடிவடைகின்றதுமான காலப்பகுதியொன்றுக்கு, அத்தகைய வேலையாளர் ஓய்வுபெறச் செய்யப்படாமல்

தொழிலில் இருந்திருந்தால் அவருக்குச் செலுத்தப்படற்பாலனவாக இருந்திருக்கக்கூடிய 5 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் பந்தி (ஆ) வின்கீழான வேதனங்கள், அனுகூலங்கள் அல்லது நட்டஈடுகளை அத்தகைய வேலையாளருக்குச் செலுத்துதல் வேண்டும்;

(இ) வேலையாளர், அத்தகைய தொழில்தருநர் குற்றத்தீர்ப்பளிக்கப்படும் தேதிக்கு முன்னர் குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயதை அடைகின்றவிடத்து, அவ்வேலையாளர் எத்தேதியன்று குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயதை அடைகின்றாரோ அத்தேதிவரை அவருக்கு வேதனங்கள், அனுகூலங்கள் அல்லது நட்டஈடுகளைச் செலுத்த வேண்டும்.

(4) தொழில்தருநரொருவர் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் செலுத்துவதற்குப் பொறுப்புடையவராகவுள்ள ஏதேனும் பணத்தொகையானது, எந்த நீதிமன்றத்தினால் அத்தகைய தொழில்தருநர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டாரோ அந்த நீதிமன்றத்தினால் அவருக்கு விதிக்கப்பட்ட ஒரு குற்றப்பணத்தைப் போன்று அத்தகைய நீதிமன்றத்தின் கட்டளையொன்றின்மூலம் அறவிடப்படலாம் என்பதுடன், அவ்வாறு அறவிடப்பட்ட தொகையானது வேலையாளருக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

13. இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்பட்டுள்ளவிடத்து, அந்த நேரத்தில் -

(அ) அத்தகைய ஆட்கள் குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருப்பின், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும் ஒவ்வோர் அலுவலரும் அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய ஆட்கள் குழுவானது குழுமமொன்றாக இருப்பின், அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும் அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்;

(இ) அத்தகைய ஆட்கள் குழுவானது தொழிற்சங்கமொன்றாக இருப்பின், அத்தொழிற்சங்கத்தின் ஒவ்வோர் அலுவலரும் அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) அத்தகைய ஆட்கள் குழுவானது, ஒரு குழுமம் அல்லது தொழிற்சங்கம் தவிர்ந்த குழுவொன்றாகவும் மற்றும் கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாகவும் இருப்பின், அத்தகைய குழுவின் தலைவர், முகாமையாளர், செயலாளர் மற்றும் ஒவ்வோர் அலுவலரும் அத்தகைய தவறுக்கு குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், அத்தகைய ஆளெவரும் இச்சட்டத்தின்கீழான தவறொன்று அவர் அறியாமல் புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு உரிய எல்லா விழிப்புக் கவனத்தையும் தாம் பிரயோகித்தார் என அத்தகைய ஆள் எண்பித்தால், அத்தகைய ஆள் அத்தகைய தவறுக்கு குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

14. எவரேனுமாள் -

(அ) இச்சட்டத்தின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் நடாத்தப்பட்ட ஏதேனும் விசாரணையின் போது ஆணையாளர் தலைமையதிபதியை இழிவுபடுத்துகின்ற அல்லது அச்சுறுத்துகின்றவிடத்து; அல்லது

(ஆ) ஆணையாளர் தலைமையதிபதியினால் நடாத்தப்படும் சட்டமுறையான அத்தகைய விசாரணைச் செயன்முறையில் தலையீடு செய்கின்றவிடத்து,

அத்தகைய ஆள், ஆணையாளருக்கெதிரான அவமதிப்புத் தவறைப் புரிகின்றார்.

15. இச்சட்டத்தின்கீழான தவறொவ்வொன்றும், வேலையாளர் கடைசியாக எந்த இடத்தில் தொழில்புரிகின்றாரோ அந்த இடத்துக்கான பிரிவில் நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள நீதிவானொருவரினால் சுருக்கமுறையாக விளங்கப்படத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

16. இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஆணையாளர் தலைமையதிபதியினால் நடாத்தப்படும் ஏதேனும் விசாரணையிலான நடவடிக்கைமுறைகள் இயற்கை நீதி பற்றிய நெறிமுறைகளுடன் முரண்படாத ஏதேனும் முறையில் ஆணையாளர் தலைமையதிபதியினால் நடாத்தப்படுதல் வேண்டும்.

17. (1) எவரேனும் தொழில்தருநர் இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்படுமிடத்து, அத்தகைய தொழில்தருநர், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 136 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அவரினால் உரியமுறையில் செய்யப்பட்ட முறைப்பாட்டின்மேலும் மற்றும் அவரது உட்கருத்துப்பற்றி மூன்று நாட்களுக்குக் குறையாத அறிவித்தலை வழக்குத்தொடுநருக்குக் கொடுப்பதன்மீதும், உண்மையான தவறாளரென அவர் குற்றஞ்சாட்டுகின்ற வேறெவரேனுமாளை நீதிமன்றத்தின் முன்னர் கொணர்வதற்கு அச்சட்டத்தின் அத்தியாயம் XIV இன் ஏற்பாடுகளுக்கமைய உரித்துடையவராதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வேறு ஆளினால் தவறானது புரியப்பட்டமை எண்பிக்கப்பட்டுள்ளபின்னர், தொழில்தருநர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளை வலுவுறுத்துவதற்குத் தாம் உரிய விழிப்புக்கவனம் பிரயோகித்துள்ளாரென்றும் அத்தகைய வேறு ஆள் அவரது அறிவோ, சம்மதமோ அல்லது உட்கையோ இன்றி அத்தவறைப் புரிந்துள்ளாரென்றும் நீதிமன்றத்தின் திருப்திக்கு எண்பித்தால், அப்போது, அத்தகைய வேறு ஆள் அத்தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் தொழில்தருநர் அத்தவறு தொடர்பிலான ஏதேனும் தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் விடயத்தில் தொழில்தருநரினால் வேறெவரேனுமாளுக்கெதிராக முறைப்பாடொன்று செய்யப்படுமிடத்து-

(அ) அத்தகைய வேறு ஆளுக்கெதிரான குற்றவழக்குத் தொடுப்பு தொழில்தருநரினால் அல்லது அவரின் சார்பில் நடாத்தப்படுதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய வேறு ஆளுக்கெதிரான வழக்குநடவடிக்கைகளில் குற்றவழக்குத்தொடுநரினால் அழைக்கப்பட்ட எவரேனும் சாட்சி, ஆணையாளர் தலைமையதிபதியினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் குறுக்குவிசாரணை செய்யப்படலாம்; அத்துடன்

(இ) அத்தகைய வேறு ஆளுக்கெதிரான வழக்குநடவடிக்கைகள் தீர்மானிக்கப்படும் வரை, தொழில்தருநரின் குற்றவழக்குத்தொடுப்பிலான வழக்குநடவடிக்கைகள் ஒத்திவைக்கப்படுதல் வேண்டும்.

18. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய-

"ஆணையாளர் தலைமையதிபதி" என்பது, தொழில் ஆணையாளர் தலைமையதிபதி என்று பொருளாகும் என்பதுடன், எவரேனும் மேலதிகத் தொழில் ஆணையாளர் தலைமையதிபதியையும், தொழில் ஆணையாளரையும், பிரதித் தொழில் ஆணையாளரையும், ஓர் உதவித் தொழில் ஆணையாளரையும் அல்லது எவரேனும் தொழில் அலுவலரையும் உள்ளடக்கும்;

"தொழில்தருநர்" என்பது, எவரேனும் வேலையாளரைத் தொழிலுக்கமர்த்துகின்ற அல்லது வேறெவரேனும் ஆளின் சார்பில் எவரேனும் வேலையாளரைத் தொழிலுக்கமர்த்தச் செய்கின்ற எவரேனுமாள் என்று பொருளாகும் என்பதுடன், அத்தகைய குழு ஒரு குழுமமாக, கம்பெனியாக, கூட்டுத்தாபனமாக, தொழிற்சங்கமாக அல்லது ஒரு கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாக இருந்தாலுஞ்சரி, ஆனால் இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டிலிருந்து அல்லது இச்சட்டத்தின்கீழான ஏற்பாடுகளின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியிலிருந்து தவிர்க்கப்படுகின்ற அரசை அல்லது அரசாங்கத்தை அல்லது அத்தகைய வேறு ஆளை அல்லது அத்தகைய குழுவை உள்ளடக்காது;

"அமய தன்மையினதான தொழில்" என்பது, ஏதேனுமொரு பஞ்சாங்க ஆண்டில் நூற்றியெண்பது நாட்களை விஞ்சாதுள்ள வேலையாளரொருவரின் தொழில் என்று பொருளாகும்;

"நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்கான தொழில்" என்பது, ஒரு தொழில்தருநருக்கும் ஒரு வேலையாளருக்கும் இடையே நாட்களில், மாதங்களில் அல்லது ஆண்டுகளில் குறித்துரைக்கப்பட்ட நிர்ணயிக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கான எழுத்திலானவொரு தொழில் ஒப்பந்தம் என்று பொருளாகும் என்பதுடன், ஏலவேயுள்ள நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்கான தொழில் ஒப்பந்தத்துக்கு ஒத்ததாகவுள்ள காலநீட்சிக்கு நீடித்துள்ளதெனக் கருதப்படவேண்டியதாக, அத்தகைய ஒப்பந்தம் குறிப்பிட்டவொரு பணியின் அல்லது கருத்திட்டத்தின் புரிகையுடன் குறிப்பாக இணைந்துள்ளவிடத்தும் மற்றும் பன்னிரெண்டு பஞ்சாங்க மாதங்களுக்கு மேற்பட்ட புதியவொரு தொழில் ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளாமல் அத்தகைய நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்கான ஒப்பந்தம் முடிவடைந்தபின்னர் அத்தகைய வேலையாளரின் சேவைகளைத் தொழில்தருநர் வைத்திருக்குமிடத்தும் அதே தனியாளுடன் செய்துகொள்ளப்பட்ட தொடர்ச்சியான நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்கான ஒப்பந்தத்தையும் உள்ளடக்கும்;

"தகுதிகாண் நிலையிலுள்ள வேலையாளர்" என்பது, 180 நாட்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு வேலை செய்கின்ற வேலையாளரொருவர் என்று பொருளாகும்; அத்தகைய காலப்பகுதியினுள் தொழில்தருநர், குறிப்பிட்டவொரு பதவிக்கு அத்தகைய வேலையாளர் பொருத்தமானவராக உள்ளாராவென்பதை முடிபுசெய்வதற்குத் தனித்தற்றுணிபைக் கொண்டுள்ளார்; இல்லையெனின் அத்தகைய காலப்பகுதியை நூற்றியெண்பது நாட்களைக்கொண்டவொரு காலப்பகுதிக்கு நீடிப்பதற்கு முடிபு செய்யலாம்; அத்துடன் வேலையாளரொருவர் அதேபதவியில் தொழிலுக்கமர்த்தப்பட்டிருந்தால் அல்லது அத்தொழில்தருநருடன் ஏதேனும் சேவை ஒப்பந்தத்தின்மீது முன்னர் அதே வேலையைப் புரிந்திருந்தால் அத்தகைய வேலையாளரை உள்ளடக்காது;

"பருவகாலத் தொழில் ஒப்பந்தம்" என்பது, குறித்துரை கப்பட்டவொரு பருவகால வேலை தொடர்பில் ஒரு தொழில்தருநருக்கும் ஒரு வேலையாளருக்கும் இடையேயான எழுத்திலான ஒரு தொழில் ஒப்பந்தத்தில் நாட்களில் அல்லது மாதங்களில் குறித்துரைக்கப்பட வேண்டியவொரு காலத்துக்கானதும் உள்ளபடியான அல்லது வேறு அடிப்படையின்மீது செய்துகொள்ளப்பட்டதும் ஒவ்வொரு பன்னிரெண்டு மாதகாலப் பகுதியிலும் ஈடுபடுத்துகைக் காலம் ஆறுமாதங்களை விஞ்சாதிருந்தால் திட்டவட்டமற்ற காலத்துக்கான ஒப்பந்தமெனக் கருதப்படாதிருக்க வேண்டியதுமான அத்தகைய ஒப்பந்தம் என்று பொருளாகும்;

"வேலையாளர்" என்பது, (131 ஆம் அத்தியாயமான) கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தில், "வேலையாளர்" என்ற பதத்துக்குக் குறித்தளிக்கப்பட்ட அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"வேதனங்கள்" என்பது, அடிப்படைச் சம்பளம் அல்லது சம்பளமும் வாழ்க்கைச் செலவுப்படியும் அல்லது வேறேதேனும் ஒத்த படி என்று பொருளாகும்.

19. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**அட்டவணை I** பிரிவு 2

| வேலையாளர்களின் குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயதுச் சட்டம் நடைமுறைக்குவரும் தேதியில் உள்ளவாறு வேலையாளரின் வயது | குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயது |
|---|---|
| 54 அல்லது அதற்கு மேற்பட்டதும் 55 வயதிற்குட்பட்டதும் | 57 வயது |
| 53 அல்லது அதற்கு மேற்பட்டதும் 54 வயதிற்குட்பட்டதும் | 58 வயது |
| 52 அல்லது அதற்கு மேற்பட்டதும் 53 வயதிற்குட்பட்டதும் | 59 வயது |
| 52 வயதிற்குட்பட்ட | 60 வயது |

**அட்டவணை II** பிரிவு 3 (1)

1. பகிரங்க துறையிலுள்ள எவரேனும் வேலையாளர்.
2. எழுத்திலான சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் நியதிச்சட்ட சபையிலுள்ள எவரேனும் வேலையாளர்.
3. 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட அரசாங்கத்துக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளிலுள்ள எவரேனும் வேலையாளர்.
4. ஏதேனும் மாகாணசபையில் அல்லது உள்ஷரதிகாரசபையில் உள்ள எவரேனும் வேலையாளர்.
5. 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட சங்கத்தினால் ஆட்சேர்ப்புச்செய்யப்பட்ட எவரேனும் வேலையாளர்.

6. 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 68 ஆம் பிரிவினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள அறக்கட்டளை நிறுவனமொன்றின் எவரேனும் வேலையாளர்.

7. ஏதேனும் வியாபாரத்தில் அல்லது வாழ்க்கைத் தொழிலில் பயிற்சிக்கான ஏதேனும் சேவை ஒப்பந்தத்தைச் செய்துள்ள எவரேனும் வேலையாளர்.

8. (136 ஆம் அத்தியாயமான) சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் சம்பளச் சபையிலுள்ள எவரேனும் தொழில்பயிலுனர் அல்லது பயிலுனர்.

9. 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்விச் சட்டத்தினால் அல்லது 1978 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, பயிலுனர்களின் தொழில் (தனியார்துறைச்) சட்டத்தினால் உள்வாங்கப்படுகின்ற எவரேனும் தொழில் பயிலுனர் அல்லது பயிலுனர்.

10. நிலையான காலப்பகுதிக்கான தொழில் ஒப்பந்தமொன்றின்கீழ் அல்லது அமையநிலைத் தொழில் ஒப்பந்தமொன்றின்கீழான ஒப்பந்தமொன்றைச் செய்து தொழில்புரிகின்ற எவரேனும் வேலையாளர்.

11. தொழில்தருநரொருவருக்கு நிலையான காலப்பகுதிக்கான தொழில் ஒப்பந்தமொன்றைச் செய்து அதன்கீழ் தொழில்புரிகின்ற எவரேனும் வேலையாளர்.

12. தொழில்தருநரொருவருடன் பருவகாலத் தொழில் ஒப்பந்தமொன்றைச் செய்து அதன்கீழ் தொழில்புரிகின்ற எவரேனும் வேலையாளர்.

13. தொழில்தருநரொருவருடன் சேவை ஒப்பந்தமொன்றைச் செய்கின்ற எவரேனும் பகுதிநேர வேலையாளர்.

14. தொழில்தருநரொருவருடன் சேவை ஒப்பந்தமொன்றைச் செய்கின்ற எவரேனும் தகுதிகாண் நிலையிலுள்ள வேலையாளர்.

15. அமையநிலைத் தன்மையிலான தொழில் ஒன்றில் ஈடுபடுகின்ற எவரேனும் நாட்சம்பளம்பெறும் வேலையாளர்.

16. கற்கை விடுமுறையின்போது ஒரு தற்காலிகக் காலப்பகுதிக்கான தொழில் ஒப்பந்தமொன்றின்கீழ் சேவையாற்றுகின்ற எவரேனும் மாணவர்.

17. எவரேனும் வீட்டு வேலையாளர்.

18. தொழில்தருநருடன் செய்யப்பட்ட, ஒப்படை அடிப்படையிலான தொழில் ஒப்பந்தமொன்றின்கீழ் சேவையாற்றுகின்ற எவரேனும் வேலையாளர்.

## 2021 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, வேலையாட்களின் வேலையை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

[2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

**1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் வேலையை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, வேலையாட்களின் வேலையை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தோராம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் வேலையை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(இ) எவரேனும் வேலையாளின் வேலையை முடிவுறுத்த லானது 2021 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, வேலையாளர்களின் குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயதுச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய வேலையாள் குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயதை அடைகின்றதன்மேல் பயனுறுத்தப்பட்டவிடத்து அவரின் வேலையை முடிவுறுத்துவதற்கு;"

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்

[2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

**2022 ஆம் நிதியாண்டின் சேவைக்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்தகைய சேவையின் நோக்கத்திற்காக இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ கடன்களைத் திரட்டு வதற்கு அதிகாரமளிப்பதற்கும்; அந் நிதியாண்டின் போது அரசாங்கத்தின் குறித்த சில செயற்பாடுகள் தொடர்பில் நிதி ஏற்பாட்டைச் செய்வதற்கும்; அத்தகைய செயற்பாடுகளின் மீதான செலவினத்திற்கு அந் நிதியாண்டின்போது தேவைப்படும் பணங்களைத் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குரிய அல்லது அதன் கையாளுகையிலுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணங்கள் என்ற வகையாகக் கொடுப்பனவை இயலச்செய்வதற்கும்; திரட்டு நிதியத்திற்கு அத்தகைய பணங்களை மீளளிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான தொருசட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (1) ஏதேனும் செலவினத்திற்கு அதிகாரமளிக்கின்ற வேறு ஏதேனும் சட்டத்திலுள்ள எதற்கும் பங்கமின்றியும் இப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்

ஏற்பாடுகளுக்கு அமையவும் (இச்சட்டத்தில் "நிதியாண்டு 2022" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2022, சனவரி 1 ஆம் தேதியன்று தொடங்கி 2022, திசெம்பர் 31 ஆந் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதிக்கான சேவைக்காக மதிப்பிடப்பட்டதான இரண்டாயிரத்து எழுநூற்று தொண்ணூற்றாறு பில்லியன் நானூற்றி நாற்பத்தாறு மில்லியன் ஐந்நூற்று ஐம்பத்தெட்டாயிரம் ரூபாவாகவிருக்கும் அரசாங்கத்தின் செலவினத் தொகையானது

(அ) திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குரிய அல்லது அதன் கையாளுகையிலுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து வழங்கப்படவேண்டுமென இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளிலிருந்து எதிர்கொள்ளப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அரசாங்கத்திற்காகவும் அதன் சார்பிலும் இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ திரட்டப்பட வேண்டிய பணங்களுக்காக இயைபான சட்டங்களின் நியதிகளின்படி இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்ற நிதியாண்டு 2022 இல் செய்யப்பட்ட கடன் பெறுகையிலிருந்து எதிர்கொள்ளப்படுதல் வேண்டும். ஆயின், நிதியாண்டு 2022 இன் போது அல்லது நிதியாண்டு 2022 இன் முடிவில் கொடுக்கப்பட்ட ஏதேனும் நேரத்தில் அத்தகைய கடன் பெறுகையின் நிலுவையாகவுள்ள மீதி மூவாயிரத்து இருநூறு பில்லியன் ரூபாவை விஞ்சுதலாகாது என்பதுடன், அத்தகைய கடன்கள் பற்றிய விபரங்கள் 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தில் 13 ஆம் பிரிவின் கீழ் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படத் தேவைப்படுத்தப்படும் இறுதியான வரவு செலவுத் திட்ட நிலை அறிக்கையில் சேர்க்கப்படுதல் வேண்டும்:

ஆயின், 2022 ஆம் நிதியாண்டின் போது திரட்டப்பட்ட மொத்த குறுகிய கால கடன்பெறுகைக்கும் 2022 ஆம் நிதியாண்டின் போது செய்யப்பட்ட குறுகியகால கடன் பெறுகையின் மொத்த கொடுத்துத்தீர்த்தலுக்கும் இடையிலான வித்தியாசம், இப்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு 2022 ஆம் நிதியாண்டின் போது செய்யப்பட்ட கடன் பெறுகையை கணக்கிடும் நோக்கங்களுக்காக குறுகிய கால கடன் பெறுகையின் தொகையை முடிவு செய்வதில் மட்டும் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட இரண்டாயிரத்து எழுநூற்று தொண்ணூற்றாறு பில்லியன் நானூற்றி நாற்பத்தாறு மில்லியன் ஐந்நூற்று ஐம்பத்தெட்டாயிரம் ரூபா பணத்தொகை இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு செலவிடப்படலாம்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அரசாங்கத்துக்காகவும் அதன் சார்பிலும் கடன்களைத் திரட்டுதலை அதிகாரமளிக்கும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றிப் பயனுடையனவாதல் வேண்டும்.

(4) திரட்டு நிதியத்தின்மீது விதிக்கப்படுவதற்கு சட்டங்களினால் அதிகாரமளிக்கப்பட்ட அரசாங்கத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் 2022, சனவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து ஆரம்பித்து, 2022, திசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடையும் காலப்பகுதியின் சேவைக்காக இரண்டாயிரத்து அறுநூற்று இருபத்து மூன்று மில்லியன் நானூற்று நாற்பத்து இரண்டாயிரம் ரூபாவாகவிருத்தல் வேண்டும். செலவினத் தலைப்புகள் மற்றும் அத்தகைய செலவினம் எச்சட்டங்களின் கீழ் ஆக்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டதோ அச்சட்டங்கள், இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

3\. (1) நிதியாண்டு 2022 இன் போது, இச்சட்டத்திற்கான மூன்றாம் அட்டவணையின் Iஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு செயற்பாட்டிலிருந்துமான அரசாங்கப் பெறுகைகள் அத்தகைய செயற்பாட்டின் கணக்கிற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும். ஆனால், அவ்வாறு வரவு வைக்கப்படும் பெறுகைகளின் கூட்டுமொத்தத் தொகையானது, அவ்வட்டவணையின் III ஆம் நிரையில் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்குறைந்த எல்லைக்குக் குறைவாகவிருத்தலாகாது. அத்தகைய செயற்பாட்டின் தேறிய மேன்மிகை ஏதேனும் இருப்பின், நிதியாண்டு 2022 முடிவுற்ற பின்னர் ஆறு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னதாகத் திரட்டு நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் தேறிய மேன்மிகையைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காகப் பின்வரும் விதிப்பனவுகள் ஒவ்வொரு செயற்பாட்டின் அரசிறைக்கெதிராக எதிரீடு செய்யப்படுதல் வேண்டும்:-

(அ) செயற்பாட்டினது அரசிறைக்கு முறைப்படி விதிக்கப்படற்பாலதான, செலுத்தப்பட்டனவாயினுஞ்சரி அல்லது திரண்டதாயினுஞ்சரி, செயற்பாட்டினது தொழிற்பாட்டு, தாபன மற்றும் ஏனைய செலவுகள்; அத்துடன்

(ஆ) செயற்பாட்டினது அசைவுள்ளனவும் அசைவற்றனவுமான ஆதனத்தினது தேய்மானத்தை மேவுவதற்கான ஏற்பாடு.

(3) நிதியாண்டு 2022 இன்போது இச்சட்டத்திற்கான மூன்றாம் அட்டவணையின் Iஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு செயற்பாட்டின் மீது, அரசாங்கத்தால் உறப்பட்ட செலவினம், அந்த நிதியாண்டின்போது அத்தகைய செயற்பாட்டிலிருந்து, அரசாங்க பெறுகைகளிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும். ஆனால், அத்தகைய செலவினம் அந்த அட்டவணையின் IIஆம் நிரையில் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லையை விஞ்சுதலாகாது.

(4) நிதியாண்டு 2022 இன் முடிவில், இச்சட்டத்திற்கான மூன்றாம் அட்டவணையின் I ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் செயற்பாட்டிலிருந்து நிலுவையாகவுள்ள பற்று மீதி, அவ்வட்டவணையின் IVஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லையை விஞ்சுதலாகாது என்பதுடன் அந்த நிதியாண்டின் இறுதியில் அந்த செயற்பாட்டின் மொத்தப் பொறுப்புக்கள் அவ்வட்டவணையின் V ஆம் நிரையில் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய எல்லையை விஞ்சுதலுமாகாது.

4\. நிதியாண்டு 2022 இன் போது, எப்போதேனும் எந்நேரத்திலும் இச்சட்டத்திற்கான மூன்றாம் அட்டவணையின் I ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் செயற்பாட்டிலிருந்தான அரசாங்க பெறுகைகள், அத்தகைய செயற்பாட்டின்மீது அரசாங்கத்தினால் உறப்பட்ட செலவினத்தை எதிர்கொள்வதற்கு போதியனவாயிராவிடின், அமைச்சர் அத்தகைய செலவினத்தை எதிர்கொள்வதற்கு அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய தொகைகள் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குரிய அல்லது அதன் கையாளுகையிலுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணங்கள் என்ற வகையாக செலுத்தப்படுதல் வேண்டுமெனக் காலத்துக்குக்காலம், கட்டளை மூலம் பணிக்கலாம். எவ்வாறாயினும், அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்படும் பணத்தொகைகளின் கூட்டு மொத்தத் தொகை அவ்வட்டவணையின் II ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய செலவின எல்லையை விஞ்சுதலாகாது. அத்தகைய செயற்பாடு தொடர்பில் அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகை அமைச்சர் கட்டளை மூலம் பணிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் திரட்டு நிதியத்திற்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்.

5. (1) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் ஏற்பாடுகளின் பயனைக் கொண்டு, அவ்வட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் தலைப்பின் கீழ் காணப்படுகின்ற ஏதேனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், மீண்டுவரும் செலவினத்திற்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள, ஆனால் செலவிடப்பட்டிராத அல்லது செலவிடப்படக்கூடிய சாத்தியமிராத எவையேனும் பணங்கள், திறைசேரிச் செயலாளரின் கட்டளை மூலம் அல்லது அவரால் அதன் சார்பில் அதிகாரமளிக்கப்படக்கூடியவாறாக ஒன்றில் திறைசேரி பிரதிச் செயலாளரொருவரின் அல்லது தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியின் கட்டளை மூலம், அந்நிகழ்ச்சித் திட்டத்தினுள்ளான மூலதனச் செலவினத்தின் குறித்தொதுக்குகைக்கு அல்லது அத்தலைப்பினுள் வேறேதேனும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீண்டுவரும் செலவினத்தின் அல்லது மூலதனச் செலவினத்தின் குறித்தொதுக்குகைக்கு கைமாற்றப்படலாம்.

(2) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் தலைப்பின் கீழ் காணப்படுகின்ற ஏதேனும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மூலதனச் செலவினத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள பணங்களெவையும் அந்த நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து அல்லது அந்நிகழ்ச்சித் திட்டத்தின் ஏதேனும் மீண்டுவரும் செலவினத்தின் குறித்தொதுக்குகைக்கு கைமாற்றப்படுதல் ஆகாது.

6. (1) முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட "தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்" என்ற தலைப்பின் கீழ் காணப்படும் "அபிவிருத்திச் செயற்பாடுகள்" என்னும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீண்டுவரும் செலவினத்திற்கு அல்லது மூலதனச் செலவினத்திற்கு குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் பணம், இயைபான ஆண்டுக்காக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அச்சிடப்பட்ட வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் விதிக்கப்பட்ட வழிகாட்டு நெறிகளுக்கு அமைவாக திறைசேரிச் செயலாளரின் கட்டளை மூலம் அல்லது அவரால் அதன் சார்பில் அதிகாரமளிக்கப்படக்கூடியவாறான திறைசேரிப் பிரதிச் செயலாளர் ஒருவரின் அல்லது தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கட்டளையின் மூலம் அவ்வட்டவணையிலுள்ள ஏதேனும் வேறு தலைப்பின் கீழான வேறேதேனும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு கைமாற்றப்படலாம். அவ்வாறு கைமாற்றப்பட்ட பணமானது, குறிப்பான அமைச்சுக்கான குறைநிரப்பு குறித்தொதுக்குகை யொன்றாக கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு கைமாற்றப்பட்ட பணத்தொகையையும், அந்த கைமாற்றத்திற்கான காரணங்களையும் கொண்ட அறிக்கையொன்று சொல்லப்பட்ட கைமாற்றுகை திகதியிலிருந்து இரண்டு மாத காலங்களினுள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்:

எவ்வாறாயினும், இப்பிரிவினைச் செயற்படுத்துகின்ற பொழுது 2022 நிதி வருடத்திற்கு புதிய நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு குறைநிரப்பு ஒதுக்கீட்டினை மேற்கொள்வதற்கு அமைச்சுக்கள், திணைக்களங்கள் அல்லது அரசாங்க நிறுவனங்களினால் கோரிக்கை விடுக்கப்படுதலாகாது.

(2) கைமாற்றங்களுக்கான காரணங்கள் உட்பட (1) ஆம் உட்பிரி வின் கீழ் செய்யப்பட்ட எல்லா கைமாற்றங்களும் பற்றிய விபரங்கள், 2003ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி முகாமை (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட தேவைப்படுகின்ற அரசாங்கத்தின் நிதிச் செயல் நிறைவேற்றம் தொடர்பான அறிக்கைகளில் சேர்க்கப்படுதல் வேண்டும்.

7. அமைச்சரானவர் -

(அ) வரிகளிலிருந்தும் வேறு மூலங்களிலிருந்துமான பெறுகைகள், அதிகாரமளிக்கப்பட்ட செலவினங்களுக்கு நிதி வசதியளிப்பதற்கென எதிர்பார்க்கப்பட்ட தொகைகளையும்விடக் குறைவாக இருக்குமென; அல்லது

(ஆ) ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கு அல்லது நோக்கங்களுக்கு என தொடக்கத்தில் ஒதுக்கப்பட்ட பணத்தொகைகள், மேலும் தேவைப்படுத்தப்படமாட்டாதென, திருப்திப்படுமிடத்து, அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குரிய அல்லது அதன் கையாளுகையிலுள்ள வேறு ஏதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் செலவினத்தை எதிர்கொள்வதற்காக, அவரால் வழங்கப்பட்ட ஆணைப்பத்திரமொன்றின் அதிகாரத்தின் கீழ் செலவினத்திற்காக முன்னர் விடுவிக்கப்பட்ட எவையேனும் தொகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியளவில் அவர் மீளப் பெறலாமென்பதுடன் அத்தகைய எல்லா மீளப்பெறுதல்கள் பற்றிய விபரங்கள் 2003 ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க, நிதி முகாமை (பொறுப்புச்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படத் தேவைப்படுத்தப்படும் இறுதியான வரவுசெலவுத் திட்ட நிலை அறிக்கையில் சேர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

8. (1) அமைச்சரானவர், அரசாங்கத்தின் அங்கீகாரத்தோடு, 2023 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கட்டளை மூலம் இச்சட்டத்திற்கான மூன்றாம் அட்டவணையின் -

(அ) IIஆம் நிரையிலும் IVஆம் நிரையிலும் Vஆம் நிரையிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய எல்லைகளுள் எதனையும்;

(ஆ) IIIஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த எல்லைகளையும்) வேறுபடுத்தலாம் அல்லது மாற்றலாம்.

